Koviloor Digital Library

நகரத்தார் கலைக் களஞ்சியம்



Acc. No. 26653

மெய்யப்பன் தமிழாய்வகம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

36-5

நகரத்தார் கலைக்களஞ்சியம்

பதிப்பாசிரியர்
பதிப்புச் செம்மல்
ச. மெய்யப்பன்

இணையாசிரியர்கள்
கரு. முத்தய்யா
சபா. அருணாசலம்

மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.


KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 26653

Koviloor Digital Library

36-5



இளையாற்றங்குடி



மாற்றூர்



நேமங் கோவில்



இரணியூர்



பிள்ளையார்பட்டி




இலுப்பைக்குடி



சூரைக்குடி



வைரவன் கோவில்



வேலங்குடி

Koviloor Digital Library

முதற்பதிப்பு : 25 ஜூலை, 1998

விரிவாக்கப் பதிப்பு : 3, மே, 2002

திருவள்ளுவர் ஆண்டு : 2033

உரிமை : மெய்யப்பன் தமிழாய்வகம்

மெய்யப்பன் தமிழாய்வக வெளியீட்டு எண் : 53

விலை ரூ. **250-00**

இந்நூலிலுள்ள செய்திகளை விமர்சனத்திற்கும், ஆராய்ச்சிக்கும் மேற்கோளாக எடுத்தாளலாமே தவிர, மற்றபடி வேறு விதத்தில் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இது முற்றிலும் காப்புரிமை உடையது.

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12 -B, மேல சன்னதி, **சிதம்பரம் – 608 001.**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை – 600 108.**

5, சிங்காரவேலு தெரு, பாண்டிபஜார், **சென்னை – 600 017.**

110, வடக்கு ஆவணி மூலவீதி, **மதுரை – 625 001.**

15, ராஜ வீதி, **கோயமுத்தூர் – 641 001.**

28, நந்தி கோயில் தெரு, **திருச்சி – 620 002.**

தொலைபேசி :

சிதம்பரம்	**: 30069**
சென்னை	**: 5361039**
தி. நகர்	**: 4357832**
மதுரை	**: 622853**
கோயமுத்தூர்	**: 397155**
திருச்சி	**: 706450**

ஒளி அச்சு : லட்சுமி லேசர், சென்னை – 600 108.

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 021.

Koviloor Digital Library

36-5

நகரத்தார் வரலாற்று ஆவணம்

(பதிப்புரை)

பதிப்புச் செம்மல், தமிழவேள் ச. மெய்யப்பன்

'தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவருக்கொரு குணமுண்டு' எனத் தேசியக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை தமிழினத்தின் தனிச்சிறப்புகளை வியந்து பாடியுள்ளார். நகரத்தார் என்றொரு சமூகம் உண்டு, அவர்களுக்கெனப் பல நல்ல பண்புகள் உண்டு என்பது மானிடவியல் பண்பாட்டு ஆய்வாளர்களின் மதிப்பீடு. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்த் தமிழ் மரபுகளின் காப்பகங்களாக விளங்குகிற சமூகம் நகரத்தார் சமூகம். மரபுச் செல்வங்களைக் காலந்தோறும் காப்பாற்றி, வழிவழியாக வரும் தலைமுறைகளுக்கு வழங்கிவரும் சமூகம். இச்சமூகம் மக்கட் தொகையில் சிறியது. எனினும் சாதனைகளால் சிறந்தது. பாரதி, பாரதிதாசன், கவிமணி, கவியரசு கண்ணதாசன் ஆகியோரால் பாடல்சால் சிறப்புப்பெற்ற சமூகம்.

நகரத்தார் திருப்பணி, கல்விப்பணி பற்றி மிகுதியும் பேசப்படுகிறதே தவிர அவர்தம் பன்முகப் பங்களிப்பு இதுநாள் வரை சரியாக மதிப்பிடப் பெறவில்லை என்பது என் கருத்து. தமிழ் நாட்டைப் பல்துறைகளில், பல நிலைகளில், பல வழிகளில் வளப்படுத்திய சமூகம் நகரத்தார் சமூகம். திரைகடல் ஓடித் திரவியம் குவித்த இச்சமூகம் செய்த செயற்கரிய செயல்கள் காவியப்புகழ் உடையன.

உலகெங்கும் ஆங்கில அரசின் கொடி அன்று ஓங்கி இருந்தது. முதல் உலகப்போர், இரண்டாம் உலகப்போர், 46இல் பர்மாவின் வீழ்ச்சி, 47இல் இலங்கை சுதந்திரம், மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிதல், மலேசியா சுதந்திரம், இந்தோசீனா விடுதலை முதலிய உலக நிகழ்ச்சிகளால் பெரிதும் அல்லலுற்று அவற்றினின்றும் மீண்டு எழுந்தது இச்சமூகம்.

லேவாதேவி வணிகம் குறித்து 1976இல் இந்திய அரசு பிரகடனம் செய்த அவசரச் சட்டத்தால் அவதிக்குள்ளாகிய இச்சமூகம், தொடர்ந்து அயல் நாடுகளையே நம்பியிராமல், சொந்த நாட்டில் சொந்தத் தொழில் புரிந்து அனைத்து அறைகூவல்களையும் வென்று, வேர் விட்டு விழுது பரப்பி வருகிறது. அரசியல், சமூகம், பொருளியல், பண்பாடு முதலிய பல்வேறு துறைகளில் நிகழ்த்திய சாதனைகள் இங்கு திறனாய்ந்து தெளிந்து கூறப்பட்டுள்ளன.

நீண்ட நெடிய பாரம்பரியம் உடைய நகரத்தார் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளில் அழிந்தவையும் எஞ்சியவையும் இங்கு பதிவு செய்யப்படுகிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் சந்திரசேகர் அவர்கள் 1978இல் நகரத்தார் வரலாறு பற்றி எழுதுவதற்கு ஒரு பெருந்திட்டம் வகுத்து முன்னுரையை மட்டும் எழுதி விட்டுவிட்டார். நகரத்தார் ஆய்வில் அக்கறையுள்ள எனக்கு அதனை விரிவாகச் செய்ய வேண்டும் என்ற வேணவா பல்லாண்டுகளுக்கு முன்னே எழுந்தது. பல்கலைக்கழகப் பணி ஓய்வுக்குப் பின் இத்திட்டம் வேர் கொண்டது. மணிவிழா நாளில் விழுதுவிட்டது.

சமூக உணர்வுடைய நான் செட்டிநாட்டுக்கு வெளியே உள்ள நாற்பதுக்கு மேற்பட்ட நகரத்தார் சங்கங்களின் ஆண்டு விழாக்கள் மற்றும் வெள்ளி விழா, பொன்விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போது இந்தச் சமூகத்தின் சீரிய பண்புகளையும் சிறப்பு மிகு செயல்களையும் சொல்லிச் சொல்லி மகிழ்வேன். அவை பலரின் வரவேற்பைப் பெற்றன. சிலர் அவற்றைத் தொகுத்து நூலாக்கும்படி பல முறை வலியுறுத்தினர். இந்தியத் துணைக்கண்டத்தின் பல மாநிலங்களுக்குப் பல முறை பயணம் செய்ததும் தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டங்களுக்கும் அடிக்கடி பயணம் செய்ததும் தமிழ் நாட்டில் வாழும் ஆறுக்கும் மேற்பட்ட பெரிய சமூக மக்களின் (முக்குலத்தோர், நாடார், வன்னியர், கவுண்டர், யாதவர், அரிசனர்) நட்பும் தொடர்பும் மானிடவியல் பற்றிய படிப்பும் பெரிய அளவில் நகரத்தார் சமூகம் பற்றி ஒரு கலைக் களஞ்சியம் உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் தோற்றுவித்தது.

உலகம் சுற்றிய அறிஞர் சோமலெ அவர்களுக்குப் பின் குடமுழுக்கு விழா மலர் உருவாக்குதலும் நிறுவனங்களுக்கும், பெருமக்களுக்கும் மணிவிழா மலர்கள் உருவாக்குதலும் எனக்கு விருப்பமான செயலாயிற்று. மலர்களுக்குச் சேர்த்த செய்திகளை வகைப்படுத்தி, தொகைப்படுத்தித் துல்லியமாக ஆதாரத்துடன் ஒரு பெருநூல் உருவாக்கவேண்டும் என்ற திட்டத்தின் விளைவே இக்கலைக் களஞ்சியம்.

Koviloor Digital Library

சிதம்பரத்தை வாழ்விடமாகக் கொண்டு, சென்னையில் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு, செட்டிநாட்டில் 75 ஊர்களில் நடைபெறும் விசேடங்களுக்கு வாரந்தோறும் சென்று வரும் வாய்ப்பைப் பெற்றவன். அத்துடன், பல்கலைக்கழகக் கல்வியும் இச்சமூகத்தோடு கொண்டுள்ள உறவும், இடையறாத தொடர் பயணங்களும் இப்பெரிய முயற்சிக்கு வலிவும் பொலிவும் சேர்த்தன.

ஆசை காரணமாக மிகப்பெரிய முயற்சியைத் தொடங்கி விட்டேன். அடக்கமே உருவான நகரத்தார்களிடம் செய்திகள் பெறுவது பகீரதப்பிரயத்தனமாகிவிட்டது. விளம்பரம் விரும்பாத சமூகம். அமைதியை விரும்பும் வணிகச் சமூகம். ஆதலால் தங்களைப் பற்றிய செய்திகளை வெளியிட விரும்பவில்லை.

நல்ல பண்புகளைத் தன்னகத்தே கொண்டவர்கள் நகரத்தார்கள். நல்லாட்சிக்கு உறுதுணை செய்யும் நல்ல குடிமக்கள். இவர்களின் வரலாறு இந்தியச் சமூகங்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும் என்பது என் உறுதியான நம்பிக்கை; எப்பாடுபட்டேனும் இச்சீரிய செயலைத் தொடர்ந்து செய்து வெற்றி காண வேண்டும் என்ற விருப்பத்தினால் இப்பணியைப் பெரு முயற்சி செய்து முடித்தோம்.

இச்சீரிய பணியைச் செம்மையாகச் செய்வதற்கு இருவரைத் தேர்ந்தோம். சிறப்புமிகு சேவுகன் அண்ணாமலை கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள் முனைவர் **கரு. முத்தய்யா**, முனைவர் **சபா. அருணாசலம்** இருவரும் இணைந்து முனைந்து இப்பெரும் பணியை நான் எண்ணிய வண்ணம் முடித்து உதவினார்கள். இப்பெருந்திட்டத்தின் அடிப்படைகளை உள்வாங்கிக் கொண்டு உணர்ந்து செயல்பட்டார்கள். ஊர் ஊராகச் சென்று ஒல்லும் வகையெல்லாம் செய்தி சேர்த்தார்கள். பசி நோக்காது, கண்துஞ்சாது கருத்தோடு இப்பணியை முடித்த இந்நல்லிளைஞர்களுக்கு நகரத்தார் சமூகமும் தமிழ்நாடும் கடமைப்பட்டுள்ளன. இவர்கள் விரதமிருந்து முடித்த இப்பணி நகரத்தார் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். இருவரும் இப்பணி முடியும் வரை கருமமே கண்ணாய்ச் செயலாற்றினார்கள். அரிய நூலகங்களுக்குச் செல்வதிலும், பெரியோரைப் பேட்டி காண்பதிலும் சோர்விலாது திரும்பத் திரும்ப மடல் எழுதுவதிலும் செய்திகளைச் சேகரிப்பதிலும் இவர்கள் பட்டபாடு எழுத்தில் எழுதி முடியாது. இருவரின் நினைவாற்றலும், அறிவாற்றலும் எழுத்தாற்றலும் இக்களஞ்சியத்திற்கு வளம் சேர்த்தன.

இரவும் பகலும் எப்போதும் என்னுள் தோன்றி மறையும் எண்ண அலைகள் பெரும்பாலானவற்றை இவ்விருவரும் பதிவு செய்து விட்டனர் என்றே கருதுகிறேன். இவர் தம் சீரிய செந்தமிழ்ப் பணிக்குச் சிந்தை நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் வழங்கி மகிழ்கிறேன். இருவருமே எடுத்தபணி முடிக்கும் தமிழ்ப்பேராசிரியர்கள் என்னும் தனிச்சிறப்புப் பெற்றவர்கள். இந்தப் பெரியபணி இவர்களை நகரத்தார் சமூகத்திற்கும், நாட்டுக்கும் அடையாளங்காட்டும்.

இச்சீரிய பணியை என் தந்தையார் **குங்கிலியம் பழ. சண்முகனாரின்** தவ வலிமையாலும் தாயார் **மீனாட்சி ஆச்சியின்** அருளாசியாலும்தான் முடிக்க முடிந்தது என்று கருதுகிறேன். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி அவர் சிந்தையில் தோன்றிய ஆயிரம் எண்ணங்களின் வளமான வரலாற்றுத் தொடர்ச்சியினைப் பதிவு செய்யும் பேறளித்த இறைவனையும் இச்சமூகத்தையும் நெஞ்சார வாழ்த்தி வணங்குகிறேன்.

அறிவியல் தெளிவும் ஆய்வில் கடின உழைப்பும் செயலில் செம்மையும் வேண்டும் என்று அடிநாள் தொட்டு வலியுறுத்தி வந்த என் வாழ்முதலாகியவரும் வழிகாட்டியவருமான மூதறிஞர் செம்மல் **வ.சுப. மாணிக்கனாரை** இந்த நல்வேளையில் நினைந்து நன்றி செலுத்துகிறேன். என்று முடியுமோ என்று ஏங்கித் தவங்கிடந்த இந்தப் பெரும்பணி சுதந்திரப் பொன்விழா ஆண்டில் நிறைவுற்றதைக் கண்டு களிபேருவகை அடைகிறேன். இனிய பணியின் நிறைவைக் கண்டு இன்களி மகிழ்நகை அடைகிறேன். இத்திருப்பணிக்கு ஒல்லும் வகையில் உறுதுணையாய் நின்ற மெய்யப்பன் தமிழாய்வக அறங்காவலர் **மெ. மீனாட்சி சோமசுந்தரம்** அவர்களும் வாழ்த்துக்கு உரியவர்.

நூற்றுக்கு மேற்பட்ட நல்லவர்களின் ஆலோசனைகள், கருத்துரைகள் கிடைத்திருந்தாலும் பேரறிஞர்களான முனைவர் **தமிழண்ணல்**, முனைவர் **சுப. அண்ணாமலை** ஆகியோரின் அரிய ஆலோசனைகளுக்கு இப்பதிப்புக் குழு சார்பில் நன்றி செலுத்துகிறேன்.

தனித்தமிழ் நாளேடான 'தமிழ்நாடு' இதழில் பயிற்சி பெற்று, தமிழ்க் கலைக்களஞ்சிய உருவாக்கத்தில் பங்காற்றிய திருமிகு **ச. இராமச்சந்திரன்** இதன் மொழிநடைச் செம்மைக்கும் அமைப்புக்கும், அழகுக்கும் உறுதுணையாக அமைந்தார்கள். அவர்களுக்கு நன்றி! தொடக்க நாள் தொட்டு இதன் பன்முகநலன்களுக்கு அயராது பாடுபட்டு உழைத்த மெய்யப்பன் தமிழாய்வக மேலாளர் **இரா. குருமூர்த்தி** அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

Koviloor Digital Library



பதிப்பாசிரியர்
டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் புதுக்கோட்டை மாவட்டம் இராமச்சந்திரபுரத்தில் 1933இல் பிறந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று அங்கேயே பேராசிரியராகப் பணியாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; தமிழகப் புலவர்குழுவின் துணைத் தலைவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆளவை உறுப்பினராகச் சிறப்புடன் செயலாற்றியவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆளவை உறுப்பினராக ஆளுநரால் நியமிக்கப்பட்டவர். ஆளவையிலிருந்து ஆட்சிக்குழுவிற்குத் **(Syndicate)** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்.

திட்டமிடுதல், முடிவெடுத்தல், வினை முடித்தலில் வல்லவர். உரையாடலிலும் திறன்மிகுந்தவர். தம் தமிழ் உலாத் திட்டத்தின்கீழ் கல்விப் பயணமாக வெளிநாடுகள் பலவற்றுக்குச் சென்றுள்ளார்.

இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பதினாறு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர், துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார்.

இவரது முயற்சியால் மணிவாசகர் பதிப்பகம் இதுவரை 650 நூல்களைச் சிறப்பாக வெளியிட்டுள்ளது. இவற்றுள் 40 நூல்கள் அரசின் பரிசுகள் பெற்றவை. 60 நூல்கள் பல்கலைக் கழகங்களில் பாடநூல்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களைச் சிறந்த முறையில் வெளியிட்டு, தமிழ் மக்களின் இல்லங்களிலும் இதயங்களிலும் நிறைந்திருக்கிறார். பாரதியார், பாரதிதாசன், மறைமலையடிகள், அண்ணா, திரு.வி.க., பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தேவநேயப்பாவாணர், கல்கி முதலியோரின் நூல்களை மிகக் குறைந்த விலையில் வெளியிட்டுள்ளார்.

இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார், **'தமிழவேள்'** என்னும் விருதினை வழங்கியுள்ளார். குளித்தலை கா.சு. பிள்ளை இலக்கியக்குழு, **'தமிழ் நெறிக் காவலர்'** என்னும் விருதினை அளித்துச் சிறப்பித்துள்ளது. இவரது நற்பணிகளைக் கருதி **'திருப்பணிச் செம்மல்'** என்னும் விருதும் வழங்கப்பெற்றுள்ளது. இவர் செய்த பல்வேறு அறப்பணிகளைக் கருதி துலாவூர் ஆதீனம் **'அறமனச் செம்மல்'** என்னும் பட்டத்தினை வழங்கியுள்ளது. **பதிப்புச் செம்மல்** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

Koviloor Digital Library

முன்னுரை

தமிழில் கலைக்களஞ்சியம் உருவாக்கும் முயற்சி 1947இல் இந்திய விடுதலைக்குப்பின் மேற்கொள்ளப்பட்டு 1954இல் முதல் தொகுதி வெளிவந்தது. தொடர்ந்து ஒன்பது தொகுதிகள் வெளிவந்தன. பின்னர் குழந்தைகளுக்கான செய்திகள் தொகுக்கப் பெற்றுக் குழந்தைகள் கலைக்களஞ்சியம் (10 தொகுதிகள்) வெளிவந்தது. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், வாழ்வியற் களஞ்சியம், விவிலியக் களஞ்சியம், இஸ்லாமியக் களஞ்சியம் என்பவை தமிழில் தொடர்ந்து வந்த கலைக்களஞ்சியங்கள் ஆகும். தமிழ்நாட்டில் ஒரு மாவட்டத்தைப்பற்றி [SALEM CYCLOPAEDIA] ஆங்கிலத்தில் ஒரு கலைக்களஞ்சியம் வெளிவந்துள்ளது. சமயம், வாழிடம், குறிப்பிட்ட பொருள் இவைபற்றிக் கலைக்களஞ்சியங்கள் வந்துள்ளனவே தவிர, ஒரு சமூகத்தைப் பற்றிய கலைக்களஞ்சியம் தமிழில் இதுவரை வெளிவந்ததில்லை. அவ்வகையில் நகரத்தாரைப் பற்றி வெளிவரும் இக்களஞ்சியம் முதல் முயற்சியாகும்.

நகரத்தார் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் திரட்டி அவற்றைத் தலைப்புக்களின் அடிப்படையில் அகரவரிசைப்படுத்தித் தருவதே இக்களஞ்சியத்தின் நோக்கம். காவிரிப்பூம்பட்டினத்தில் நகரத்தார் வாழ்ந்த காலத்திலிருந்து நகரத்தார் பற்றிய செய்திகள் பதிவு செய்யப் பெற்றுள்ளன. இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், பட்டயங்கள், வரலாற்று நூல்கள், ஆய்வேடுகள், அண்மைக்காலத்தில் வெளிவந்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், குடமுழுக்கு விழா மலர்கள், மணிவிழா மலர்கள், நிறுவனங்களின் விழாமலர்கள், பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் ஆகிய பல்வேறு நிலைகளில் சிதறிக் கிடக்கும் செய்திகளையும் செவிவழியாகத் திரட்டிய செய்திகளையும் தொகுத்து ஓர் ஆவணமாக உருவாக்குவதே களஞ்சியத்தின் முதன்மை நோக்கமாகும். இப்பொழுதே பல செய்திகள் தொடர்பான சான்றாதாரங்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை. எனவே எதிர்காலத் தலைமுறையினர் நகரத்தார் சமூகம் பற்றிய செய்திகள் அனைத்திற்கும் சான்றாதாரம் என ஏற்கத்தக்க ஆவணமாக இக்களஞ்சியம் உருவாக்கப் பெற்றுள்ளது.

செய்திகள் 551 தலைப்புகளில் தரப்பட்டுள்ளன. அவற்றை ஆறு பெரும்பிரிவுகளாகப் பகுக்கலாம். பிரிவுகளும் அவற்றில் இடம்பெற்றுள்ள தலைப்புகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு அமைந்துள்ளன:

I பெருமக்கள் 293
II ஊர்கள் 88
III பண்பாடும் வரலாறும் 77
IV நிறுவனங்கள் 36
V நினைவுச் சிறப்புக்கள் 29
VI இதழ்கள் 28

பெருமக்கள் என்ற பிரிவில் இடம் பெற்றுள்ளோர் பின்வரும் மூன்று அடிப்படைத் தகுதிகளில் தெரிந்தெடுக்கப் பெற்றுள்ளனர். அவரவர் துறையில் குறிப்பிடத்தக்க சாதனை, நகரத்தார் சமூகத்திற்குச் சிறந்த பங்களிப்பு, சில பெரும் பொறுப்புக்கள் அல்லது பதவிகளில் இருந்தமை ஆகியவையே அவை. வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து இன்று வாழ்பவர் வரை இப்பிரிவில் இடம்பெறுகின்றனர். முந்தையோரைப் பொறுத்தவரை இலக்கியங்கள் மற்றும் வரலாற்று நூல்களிலிருந்தும் அவர்கள் வழிமுறையினரிடமிருந்து தகவல் பெற்றும் செய்திகள் தொகுக்கப் பெற்றுள்ளன. இன்று வாழ்வோருடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவர்களிடமிருந்து பெற்ற குறிப்புக்களின் அடிப்படையில் தகவல்கள் தரப்பெற்றுள்ளன.

மேற்கூறிய தகுதிகள் பெற்றிருந்தும் ஒரு சிலர் எங்கள் கவனத்திற்கு வராமல் விட்டுப் போயிருக்கலாம். மற்றும் சிலர் களஞ்சியத்தில் இடம் பெறவேண்டும் என்று நாங்கள் பல்வேறு வழிகளில் முயன்றபோதும் அவர்களைப் பற்றிய செய்திகள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அதனாலும் சிலர் இப்பிரிவில் இடம்பெற இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

Koviloor Digital Library

பெருமக்களைப் பற்றிய குறிப்புக்களில் ஒரே சீரான முறை பின்பற்றப்பட்டுள்ளது.

பெயரை அடுத்து அடைப்புக்குறிக்குள் பிறந்த நாள்

மறைந்தவராக இருந்தால், பிறந்த நாளை அடுத்து இறந்த நாள்

அவருடைய கோவிலும் உட்பிரிவும்

சொந்த ஊர்

சார்ந்துள்ள துறை

பெற்றோர் பெயர்

இவற்றுக்குப் பிறகு அவரைப் பற்றிய பிற குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. மேலே குறிப்பிடப் பட்டுள்ள செய்திகளுள் ஒன்றோ இரண்டோ கிடைக்கவில்லை எனில் அவை தரப்படவில்லை.

நகரத்தார் வாழும் 75 ஊர்களுக்கும் நேரில் சென்று அவ்வூர்க் கோவில் அறங்காவலரை அல்லது பெருமக்கள் சிலரைச் சந்தித்துத் திரட்டிய செய்திகளின் அடிப்படையில் ஊர்கள் பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன.

பண்பாடும் வரலாறும் என்ற பிரிவில் நகரத்தார் குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகள், வரலாற்றுத் தொடர்புடைய நகரத்தார் பங்களிப்பு, கலை இலக்கிய வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பு, நகரத்தாருக்கேயுரிய விழாக்கள் ஆகியவை பற்றிய தகவல்கள் சமூகப்பண்பாட்டு ஆய்வு நோக்கத்தில் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

நகரத்தார்கள் உருவாக்கிய நிறுவனங்களும் இப்பொழுது நடத்தி வருகின்ற நிறுவனங்களும் பற்றிய தகவல்கள் நிறுவனங்கள் என்ற பிரிவில் இடம் பெறுகின்றன.

நகரத்தார்கள் நடத்திய இதழ்கள், இன்றும் நடத்தி வரும் இதழ்கள் பற்றிய தகவல்கள் இதழ்கள் என்னும் பிரிவில் இடம் பெற்றுள்ளன.

நினைவுச் சிறப்புக்கள் என்னும் பிரிவில் நகரத்தார் பற்றிய நினைவிடங்கள், பொதுமக்களாலோ அரசாலோ நிறுவப்பட்ட நகரத்தார் சிலைகள், நினைவு அஞ்சல் தலைகள், நகரத்தாரால் உருவாக்கப்பட்ட பரிசு அமைப்புக்கள், நகரத்தார் அமைத்த சிறப்பிடங்கள் ஆகியவை பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன.

தலைப்புக்கள் அகரவரிசையில் அமைந்துள்ளன. கிடைத்த செய்திகள் அனைத்தையும் விருப்பு வெறுப்பின்றித் தொகுத்து வகைப்படுத்தித் துல்லியமாகத் தர முயன்றுள்ளோம். எனினும் இது போன்ற தொகுப்பு நூல்களில் அனைத்துச் செய்திகளும் இடம்பெறுவது என்பது இயலாத ஒன்று. களஞ்சியம் என்பது ஒரு தொடர் முயற்சியாகும். இனிவரும் ஆய்வுகளுக்குரிய நிலைக்களமாக இது அமையும்.

இக்களஞ்சியம் போல, நகரத்தார் பற்றிய அனைத்துத் தகவல்களையும் ஒரு நூலாக்கும் முயற்சி முன்னரே பலரால் தொடங்கப் பெற்றுப் பிறகு கைவிடப்பட்டது. இந் நிலையில் பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன், தாம் நீண்ட காலமாக நினைத்திருந்த இத்திட்டத்தைச் செயல்படுத்த விரும்பி, எமக்கு வடிவமைத்துக் கொடுத்தார்கள். அவர்களுக்கு உண்ணும் போதும் உறங்கும் போதும் நகரத்தார் கலைக்களஞ்சியம் பற்றிய எண்ணமே இருந்து வந்தது. மூல விசையாக இருந்து எங்களைப் பயன்படுத்தி இப்பெருந்திட்டத்தை இப்போது நிறைவேற்றி வெற்றி கண்டுள்ளார்கள். அவர்தம் சமூக உணர்வும், சமூகத்தின் ஈடேற்றத்திற்கு ஒல்லும்வகை உதவ வேண்டுமென்ற நல்லெண்ணமும் இப்பெரு முயற்சியின் வெற்றிக்கு அடிப்படையாகும்.

நகரத்தார் சமூகத்தின் சென்ற காலச் சிறப்பு – நிகழ்கால நிலை – எதிர்காலக் குறிக்கோள் இவற்றை உணர்த்துவதாக இது அமைகிறது. இக்களஞ்சியம், நகரத்தார் சமூகத்தைப் பற்றிய ஒட்டு மொத்தமான ஒரு மதிப்பீடாகவும். இச்சமூகத்தின் பெருமையை இனிவரும் தலைமுறையினரும் பிற இனத்தவரும் அறியத் துணை செய்யும் நூலாகவும் உள்ளது. நகரத்தார் பற்றிய எதிர்கால ஆய்வுகட்குரிய சான்றாதாரமாகவும் இது பயன் நல்கும்.

முப்பதாண்டுச் சிந்தனை – நான்காண்டு உழைப்பு – முந்நூறுக்கும் மேற்பட்ட நூல்களிலிருந்து திரட்டிய செய்திகள் – அறுநூறுக்கும் மேற்பட்டோரைப் பேட்டிகண்டு பெற்ற குறிப்புக்கள் ஆகியவற்றால் உருவான இக்களஞ்சியம் நகரத்தார் சிறப்புக்களை நாடறிய உணர்த்தும் நல்லதொரு ஆவணமாகும்.

கரு. முத்தய்யா

சபா. அருணாசலம்

Koviloor Digital Library

நன்றியுரை

நகரத்தார் கலைக்களஞ்சியப் பணி தொடங்கியதிலிருந்து அனைத்து நிலைகளிலும் கருத்துரைகள் வழங்கியும், கையெழுத்துப் படிவங்களைப் படித்துத் திருத்தியும் உதவிய பேராசிரியப் பெருமக்கள் முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை ஆகியோருக்கு நன்றி.

அழகப்பா பல்கலைக் கழக நூலகத்தையும் அத்துடன் இணைந்துள்ள இராய. சொ. நூலகத்தையும் பயன்படுத்திக் கொள்ளப் பெரிதும் உதவிய அப்பல்கலைக்கழக நூலகர் திரு. ஜெயராமன் அவர்களுக்கு நன்றி. இந்து மதாபிமான சங்க நூலகம், கம்பன் கழக நூலகம் ஆகியவற்றுக்கும், மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ள உதவிய முதல்வர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்களுக்கும், சென்னை மறைமலை அடிகள் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ள உதவிய திரு. இரா. முத்துக் குமாரசாமி அவர்களுக்கும் நன்றி. சென்னை முகப்பேரில் அமைந்துள்ள ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தைப் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கு முன்னரே இக்களஞ்சியப் பணிக்காக அதைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்துப் பல்லாற்றானும் உடனிருந்து உதவிய காலஞ்சென்ற நூலகர் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்கும் நன்றி. தமிழ்நாடு சட்டப்பேரவை நூலகத்துக்கு உடன் வந்து அங்கு எமக்கு வேண்டிய தகவல்களைத் திரட்ட உதவிய திரு. ந. முடிகோபதி அவர்களுக்கும் நன்றி.

நகரத்தார் மலர், நகரத்தார் குரல், நகரத்தார் இதழ் ஆகியவற்றின் பழைய படிகளைப் பயன்படுத்திக் கொள்ள இசைவளித்த திருவாளர்கள் இளங்கோவன், எல். சுந்தரம், சுப. செந்தமிழன் ஆகியோருக்கும் நகரத்தார் மலர் இதழ்களின் பழைய படிகள் பெரும்பாலானவற்றைத் தந்துதவிய திரு. தேவ.நா. வெங்கடாசலம் அவர்களுக்கும் நன்றி.

எழுபத்தைந்து ஊர்களுக்கும் சென்று தகவல் திரட்டுவதற்குப் பெருமக்கள் பலர் உதவினர். குறிப்பாகச் சில நண்பர்கள் பல ஊர்களுக்கும் உடன் வந்து பேருதவி செய்தனர். அவ்வாறு உதவிய கண்டவராயன்பட்டி சே. குமரப்பன், பி. அளகாபுரி வ. தேனப்பன், பாகனேரி இராம. சோமசுந்தரம், கீழச்சிவல்பட்டி நா. சுப்பிரமணியன், நாட்டரசன்கோட்டை இராம. சிவசுப்பிரமணியன், கண்டனூர் இராம. ஆவுடையப்பன், கல்லல் ரெ. அண்ணாமலை, சண்முகநாதபுரம் எஸ். வள்ளியப்பன், விரையாச்சிலை ஏஎன். சிதம்பரம் ஆகியோருக்கும் வெற்றி நிறுவனத்தைச் சேர்ந்த ஊர்தி ஒட்டுநர் அறிவழகனுக்கும் நன்றி.

தகவல் திரட்டுவதற்கும் நூல் வடிவமைப்பிற்கும் பெருமக்கள் பலரைச் சந்தித்து உரையாடியபோது மனமுவந்து உதவிய பெருமக்கள் அனைவருக்கும் நன்றி. குறிப்பாகத் தங்கள் அலுவல் நெருக்கடிகளுக்கிடையே தக்கவகையில் உதவிய இதழாளர் எஸ். முத்தையா (டி.டி. மேப்ஸ், சென்னை), பழ. பழநியப்பன் (பொது மேலாளர், முருகப்பா குழுமம், சென்னை) ஆகியோருக்கும் நன்றி.

15–8–95 அன்று பிள்ளையார்பட்டியில் நகரத்தார் கலைக்களஞ்சியம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றபோது அதில் பங்கேற்றுக் கருத்துரைத்த அறிஞர் பெருமக்கள் தமிழண்ணல், சுப. அண்ணாமலை, அரு. சோமசுந்தரம், வெ. பழநியப்பன், சுப. இராமநாதன், வ. தேனப்பன், வ.சுப. சொக்கலிங்கம் செட்டியார் ஆகியோருக்கும் அக்கூட்டத்தை நடத்தப் பெருமளவில் உதவிய பிள்ளையார்பட்டி அறநிலை நிர்வாகிகளுக்கும் நன்றி.


அச்சுப்படிகளைப் படித்துத் திருத்தங்கள் செய்து உதவிய வ.சுப. சொக்கலிங்கம் செட்டியாருக்கும், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொறியியல் துறைப் பேராசிரியர் இராமநாதன் அவர்களுக்கும் நன்றி.

கலைக்களஞ்சியப் பணிகள் அனைத்திலும் தொடர்ந்து துணை நின்ற மணிவாசகர் பதிப்பக அலுவலர்கள் அனைவருக்கும் குறிப்பாக பலரது வாழ்க்கைக் குறிப்புகளைப் பெற்றுத் தந்த திரு. பெரிச்சியப்பன் அவர்களுக்கும் நன்றி.

பதிப்பகத்தார்

Koviloor Digital Library

இணையாசிரியர்கள்



முனைவர். கரு. முத்தய்யா., (23-10-1944)

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார் காரைக்குடி

இராம. கருப்பஞ் செட்டியார் - அழகம்மை ஆச்சியின் மகன். அழகப்பா கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டமும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இதழியல் சான்றிதழும் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் கன்னட மொழியில் சான்றிதழும் பெற்றவர். 'செயகாந்தன் நாவல்களில் பாத்திரப் படைப்பு' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து 1979 இல் ம.கா. பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்.

மதுரை சரசுவதி நாராயணன் கல்லூரியில் 1967 முதல் 72 வரை பணியாற்றியபின், 1972 ஜூலை முதல் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில், இக்கால இலக்கியம் பற்றிய கருத்தரங்கில் பங்கேற்றுச் 'சமூக அமைப்புப் பற்றிய தமிழ் நாவல்களில் உளவியல் சித்திரிப்பு' என்ற ஆய்வுக் கட்டுரையை வழங்கி யுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கா.சு. பிள்ளை அறக்கட்டளை சார்பாக 'வானவில்', 'நீரும் நெருப்பும்' என்ற இரு தலைப்புக்களில் சொற்பொழிவாற்றியுள்ளார். சாகித்திய அகாதமி புதுதில்லியில் 'இந்திய மொழிகளில் இலக்கிய வரலாறு' பற்றி நடத்திய கருத்தரங்கில் கலந்து கொள்ளத் தமிழ் நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற இருவருள் இவரும் ஒருவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்ப்பாடநூல் குழுவில் உறுப்பினராக மூன்றாண்டுக் காலம் பணியாற்றியவர். அப்பல்கலைக்கழகத்தின் கல்விப் பேரவை, ஆட்சிப் பேரவை ஆகியவற்றின் உறுப்பினராகத்தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பணி யாற்றி வருகிறார். பட்டிமன்றங்களிலும், வழக்காடு மன்றங்களிலும் பங்கேற்றுவரும் நல்ல சொற்பொழிவாளர்.



முனைவர். சபா. அருணாசலம்., (23-7-1947)

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார் தேவகோட்டை

இரத்தின சபாபதி செட்டியார் – அலமேலு ஆச்சியின் மகன். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டமும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இதழியல் சான்றிதழும் காந்தியச் சிந்தனையில் பட்டயமும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கன்னட மொழிச் சான்றிதழும் பெற்றுள்ளார். முதுகலை வகுப்பில் பல்கலைக்கழக முதன்மைபெற்றுப் பரிசு பெற்றார். 'தமிழ் நாவல்களில் காந்தியத் தாக்கம்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து 1980 இல் ம. கா. பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்.

1972 முதல் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

'தமிழ் நாவல்களில் காந்தியத்தாக்கம்' என்னும் நூல் தமிழக அரசின் பரிசையும் 'விடுதலைப் போரில் தமிழக முஸ்லீம்களின் பங்கு' என்னும் ஆய்வுக் கட்டுரை வள்ளல் சீதக்காதி அறக்கட்டளைப் பரிசையும் பெற்றுள்ளன. நூற்றுக்கணக்கான கவியரங்கங்களில் பங்கேற்றுள்ள கவிஞரான இவரது கவிதை நாடக நூல் 'விடுதலை வேள்வி'. பட்டி மன்றங்களிலும் வழக்காடு மன்றங்களிலும் கருத்தரங்கங்களிலும் பங்கு கொள்ளும் நல்ல சொற்பொழிவாளர். 1990 முதல் தேவகோட்டைச் 'சேக்கிழார் விழா'க் கழகச் செயலாளராக இருந்து விழாவை முன்னின்று நடத்தி வருகிறார்.

Koviloor Digital Library

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

முதற்பதிப்பு வெளிவந்து (25-7-1998) மூன்றே முக்கால் ஆண்டுகள் ஆகின்றன. ஒரு சமூகத்தின் வரலாற்றில் மூன்றே முக்கால் ஆண்டுக் காலம் என்பது மிகச் சிறு துளியாகும். இந்தச் சிறு கால அளவிற்குள் பெரு மாற்றம் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை என்றாலும் மிகச்சிறிய மாற்றங்களையும் பதிவுசெய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பின் இணைப்பு ஒன்றை இணைத்துள்ளோம். அது ஐந்து பிரிவுகளை உடையதாக அமைகின்றது.

அவை :

1. உயர்வு, சிறப்பு, விருது
2. சேர்க்கை – புதிய கட்டுரைகள்
3. சேர்க்கை – செய்திகள்
4. மறைந்தவர்கள்
5. மாற்றம்

முதற்பதிப்பின் வகைப்படுத்தப்பெற்ற அகரநிரல் ஆறு வகைகளை உடையதாக இருந்தது. இப்போது அது ஏழு வகைகளை உடையதாக மாற்றியமைக்கப் பெற்றுள்ளது. பெருமக்கள் என்ற பிரிவில் இடம் பெற்றிருந்த சிலர் இப்போது அருளாளர் என்ற பிரிவில் இடம் பெறுகின்றனர். அடுத்த பதிப்பை முற்றிலும் திருத்தியமைத்து வெளியிட எண்ணியுள்ளோம். சேர்க்கவேண்டிய, மாற்ற வேண்டிய செய்திகள் பற்றி எங்களோடு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

நாள்: 2-5-2002 — கரு. முத்தய்யா
சென்னை — சபா. அருணாசலம்

நகரத்தார் பற்றிப் பாரதியின் மதிப்பீடு



உத்தமராந் தனவணிகர் குலத்துதித்த
இளைஞர்பலர், ஊக்கம் மிக்கார்,

உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்,
அன்பொன்றே யுறுதி யென்பார்,
வண்மையே குலதர்ம மெனக்கொண்டார்,
தொண்டொன்றே வழியாக் கண்டார்,
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்,
அவ்வன்பின் ஊற்றத் தாலே
திண்மையுறும் ஹிந்துமத அபிமான
சங்கமொன்று சேர்த்திட் டாரே

பலநூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர் பிர
சங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசாலை பலவும்
நாட்டி யுந்தங்
குலமுயர நகருயர நாடுயர வுழைக்கின்றார்,
கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி வாழ்ந்தொளிர்க,
நிலத்தின் மீதே! –1919

Koviloor Digital Library

நகரத்தார் கலைக்களஞ்சியம்

அடைக்கலவன், பெரி.மெ., (4-12-1954)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
விரையாச்சிலை
அரிமா ஆளுநர்

பெரி.மெ. மெய்யப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். திருச்சி தூய வளனார் கல்லூரியில் பயின்று வணிகவியல் பட்டம் பெற்றவர். திருச்சியில் சந்தானலெட்சுமி குழும நிறுவனங்களைச் சிறப்பாக நடத்தி வரும் தொழிலதிபர்.

திருச்சி நகரத்தார் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்; துணைத்தலைவராகப் (1991 – 93) பணியாற்றியவர். விரையாச்சிலையில் தம் தந்தையாரால் தொடங்கப்பெற்ற ஸ்ரீ.பெரி.மெ. மெய்யப்ப செட்டியார் நடுநிலைப் பள்ளியை அதன் தாளாளராக இருந்து நடத்தி வருகிறார்.

திருவரங்க அரிமா சங்கத்தில் 1980 இல் சேர்ந்த இவர், செயலராக (1982 – 84), தலைவராகப் (1985 – 87) பணியாற்றிய காலங்களில் சிறந்த செயலர், சிறந்த தலைவர் விருது பெற்றுள்ளார். 1990 – 91 இல் அரிமா மாவட்டப் பொருளாளராகப் பணிசெய்த போதும் தென்னிந்தியாவின் மிகச் சிறந்த மாவட்டப் பொருளாளர் விருது பெற்றுள்ளார். 1994 – 95 இல் அரிமா மாவட்டம் 324 - A2 இன் ஆளுநர் ஆகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். மிகச் சிறந்த ஆளுநர் என்ற விருதினைப் பெற்றார். 1996 – 97 இல் தென்னிந்திய அரிமா இளைஞர்களின் அமைப்பிற்குக் கூட்டு மாவட்டத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுச் செயல்பட்டுள்ளார். 1995 இல் கண்தான விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்காகத் தமிழக அரசு இவருக்குச் சிறப்பு விருது வழங்கிப் பாராட்டியுள்ளது.

அணிகலம்

இப்பெயரில் ஒரு மாத இதழ் 1941 ஜூன் மாதத்திலிருந்து தொடர்ந்து 9 ஆண்டுகள் வெளிவந்தது. புதுக்கோட்டையிலிருந்து வெளியான இந்த இதழை ஆசிரியராக இருந்து வெளியிட்டவர் தேவகோட்டையைச் சேர்ந்த லெ. கதிரேசன் செட்டியார் (த.க.)*

கிரவுன் அளவில், ஒவ்வோர் இதழும் 40 பக்க அளவில் வெளிவந்தது. தொடக்கத்தில் இதன் விலை ஓரணா (6 காசுகள்). படிப்படியாக உயர்ந்து, இறுதியில் 4 அணா (25 காசுகள்) விலையில் வெளிவந்தது.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்ற பாரதியின் பாடல் வரிகள் குறிக்கோள் தொடராக இவ்விதழில் இடம் பெற்றன.

கதை, கவிதை, கட்டுரை, இலக்கியத் திறனாய்வு, அரசியல், திரைப்படம், சமயம் முதலிய பலதுறைக் களஞ்சியமாக வெளிவந்த 'அணிகலம்', ஆண்டுமலர், பொங்கல் மலர், திரு.வி.க. மணிவிழாமலர், சுதந்திர தினவிழா மலர், மகாத்மா காந்தியடிகள் மறைவு இதழ் என அந்தந்த நிகழ்ச்சி தொடர்புடைய மலராக வெளியிடப்பெற்ற சிறப்புடையது.

'அணிகல'த்தில் அன்றையத் தமிழறிஞர்களும் இலக்கியப் படைப்பாளரும் திறனாய்வாளரும் எழுதினர். அவர்தம் பட்டியல் வருமாறு : அகிலன், கண்ணதாசன், திருலோகசீதாராம், கு.சா. கிருட்டிணமூர்த்தி, புத்தனேரி. ரா. சுப்பிரமணியம், நாரண. துரைக்கண்ணன், தொ.மு. பாசுகரத் தொண்டைமான், தொ.மு.சி. இரகுநாதன், அ. சீனிவாசராகவன், வல்லிக் கண்ணன், சுத்தானந்த பாரதியார்

இரண்டாம் உலகப்போரினால் காகிதப் பற்றாக்குறை இருந்த காலத்தில் ஒரு மாத இதழைத் தொடங்கி, அதனை 9 ஆண்டுகள் திறம்பட நடத்த ஒரு நகரத்தாரால் முடிந்தது என்பதற்கு 'அணிகலம்' சான்றாகும்.

அணிகள்

நகரத்தார் சமூகத்தினர் மன்னர் பின்னோராகச் செல்வ வளத்தோடு வாழ்ந்ததால் தொடக்க காலத்திலிருந்தே தங்கம், வெள்ளி, வைர அணிகலன்களை அன்றாட வாழ்வில் அணிந்து கொள்வதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். இப்பழக்கம் இன்றளவும் தொடர்கிறது.

நகரத்தாரின் திருமணப் பதிவு ஆவணமாகிய இசை பிடிமானத்தில் (த.க.) மணப்பெண் அணியும் சில அணிகலன்களைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிது. பூஷணம், மோதிரம், பொன் வளையல் என்பவை அதில் இடம் பெறுபவை. இவற்றுள் பூஷணம் என்பது கழுத்துரு (த.க.)வைக் குறிக்கும் என்கிறார் சோமலெ.

* (த.க.) தனிக்கட்டுரை உள்ளது.

Koviloor Digital Library

நகரத்தார் சமூக ஆண்கள் கழுத்துச் சங்கிலி, கைச்சங்கிலி, கடிகாரத்துக்குத் தங்கச் சங்கிலி, வைரமோதிரம், தங்கமோதிரம், நவரத்தின மோதிரம், உருத்திராட்ச மாலை, கவுடு, நவகண்டிமாலை ஆகிய அணிகளைப் பயன்படுத்துகின்றனர். முற்காலத்தில் ஆண்கள் கடுக்கனும், தங்க அரைஞாண் கயிறும் அணியும் பழக்கம் இருந்திருக்கிறது. திருமணத்தன்று மணமகன் கழுத்தில் மகரியும் காலில் மிஞ்சியும் அணிவது இச்சமூகத்தின் தனித்தன்மை. அவ்வாறே கவுரிசங்கரம் எனப்படும் சிவகண்டி மாலையை மணிவிழா, பிறையாயிரம் கண்டபெருவிழா போன்றவற்றில் விழா நாயகர் அணிந்து கொள்வார். தந்தை அல்லது தாயாரின் இறப்பின் பொழுதும் அது தொடர்பான சடங்குகளின் போதும் ஆண்மக்கள் கவுரிசங்கரம் அணிந்து கொள்வர்.



மங்கள சரம்

நகரத்தார் சமூகத்தில் பெண்கள் தோடு, டோலக், மாட்டல், மூக்குத்தி, தாலிச்சங்கிலி, தங்கக்காப்பு, வைரமோதிரம், தங்கமோதிரம், தடை, கொலுசு, மிஞ்சி எனப்படும் கால்மோதிரம் ஆகிய அணிகளை அணிகிறார்கள். கணவனை இழந்த பெண்கள் கழுத்தில் வெறும் சங்கிலி மட்டும் அணிந்து கொள்கின்றனர். நெருங்கிய உறவினர் வீட்டு விழாக்களின் போது கண்டசரம், பூச்சரம், மங்களசரம், நீளச்சங்கிலி (Long Chain) போன்ற வைர நகைகளையும் வைரக் காப்பினையும் அணிந்து கொள்வர். திருமணத்தன்று மணப்பெண்ணுக்கு அலங்காரம் செய்கின்ற பொழுது நெற்றிச்சுட்டி, ஒட்டியாணம், போன்ற அணிகளைப் பயன்படுத்துகின்றார்கள். பெண்ணுக்குத் திருப்பூட்டும் கழுத்துரு இச்சமூகத்தின் தனிச்சிறப்புக்குரிய அணிகலனாகும். இக்கழுத்துருவைத் திருமணத்திற்குப் பின்னர் மணிவிழா, பிறையாயிரம் கண்ட பெருவிழா ஆகியவற்றில் விழா நாயகி அணிந்து கொள்வார். மேலப்பத்தூர், மேல வட்டகை போன்ற சில பகுதிகளில் திருமணத்தன்று மணமக்களின் தாய், சகோதரி ஆகியோர் கழுத்துரு அணியும் பழக்கம் உண்டு.

நகரத்தார் சமூகத்தில் குழந்தைகளுக்குத் தோடு, சங்கிலி, காப்பு, மோதிரம், தங்க அரைஞாண் கயிறு, வெள்ளித்தண்டை ஆகிய அணிகளை அணிவிக்கின்றனர். ஐம்படைத்தாலி முற்காலத்தில் குழந்தைகளின் கழுத்தில் அணிவிக்கப் பட்டது. இதில் இடம்பெற்றிருந்த சங்கு, சக்கரம், கதை, கட்கம், வில் ஆகியவை பின்னாளில் தங்க அரைஞாண் கயிற்றில் இடம் பெற்றன. இவை காத்தல் கடவுளாகிய திருமாலின் ஆயுதங்கள். எனவே குழந்தையை இவை காக்கும் என்பது நம்பிக்கை.

நகரத்தார் ஆண்கள் அணியும் மகரி, மிஞ்சி ஆகியவையும் பெண்கள் அணியும் கழுத்துருவும் பிற சமூகத்தினர் பயன்படுத்தாத அணிகலன்கள் ஆகும். அதுபோலவே நகரத்தார் பெண்கள் அணியும் தாலிச் சங்கிலியும் பிற சமூகத்தினரிடமிருந்து வேறுபட்ட இயல்புடையது. பெரும்பாலான சமூகத்தினர் மஞ்சள்கயிற்றில் தாலியைக் கோத்து அணிந்து கொள்வர். ஆனால் நகரத்தார் சமூகத்தில் தங்கச் சங்கிலியிலேயே தாலியைக் கோத்து அணிந்து கொள்வர். திருமணத்தின் போதே பெரிய தாலிச்சங்கிலி, சின்னத் தாலிச்சங்கிலி என இரண்டு தாலிச் சங்கிலிகள் அணிவிக்கப்பெறும். இவற்றுள் ஒன்றை மட்டுமே அன்றாட வாழ்வில் அணிந்து கொள்வர். தாலியின் வடிவமைப்பும் மற்ற சமூகத்திலிருந்து வேறுபட்டது. நடுவில் வீடு போன்ற அமைப்பும் இருபுறமும் மகாலெட்சுமிப் பொட்டும் உடையதாகத் தாலி அமைந்திருக்கும்.

அணிகலன்களின் பெயர்களைக் குறிப்பிடு வதிலும் நகரத்தார் சமூகத்தில் சில தனிமரபுகள் காணப்படுகின்றன. அணிகலன் என்பதை நகை என்றே குறிப்பிடுவர். கழுத்துரு, பூச்சரம் போன்ற வைரநகைகள் ஆகியவற்றைப் பெரிய நகைகள் என்று குறிப்பிடுவர். பிற சமூகத்தினரால் தங்க வளையல், மெட்டி, உருத்திராட்சம் என அழைக்கப்படுபவை நகரத்தார் சமூகத்தினரால் முறையே காப்பு, மிஞ்சி, கவுடு என்றே அழைக்கப்பெறும். அரைஞாண் கயிறு என்பது மருவி அருணாக்கயிறு என வழங்குகிறது. மாப்பிள்ளை திருமணத்தன்று அணியும் மகரி

Koviloor Digital Library

இப்போது மயில்பதக்கம் என அழைக்கப் படுகிறது. இப்போது மயில் வடிவில் இருக்கும் பதக்கம் முன்னர் மீன் வடிவில் இருந்ததால் மகரி என்று பெயர் பெற்றிருக்கலாம்.

அணில்

சக்தி காரியாலயத்தின் உரிமையாளர், இராயவரம் வை. கோவிந்தனால் (த.க.) *1944*ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற குழந்தைகள் இதழ். முதலில் மாதம் இருமுறை இதழாகத் தொடங்கப் பெற்ற இவ்விதழ், பின்னர் வார இதழாக வெளிவந்தது. இதன் ஆசிரியராக தமிழ்வாணன் (த.க.) பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்தினார். சிறுகதைகளும், வேடிக்கைப் படங்களும் கொண்டதாக வெளிவந்த இந்த இதழ் வாரம் 20 ஆயிரம் படிகள் வரை விற்பனையாகிய வெற்றிமிகு இதழாகும்.

தமிழ்வாணன் *1948*இல் 'கல்கண்டு' இதழின் ஆசிரியரான பிறகு கோவிந்தனே இவ்விதழின் ஆசிரியராக இருந்து இதனைத் தொடர்ந்து நடத்தி வந்தார்.

இவ்விதழ் வார இதழாக வந்தபோது, டெம்மி ¼ அளவில், *8* பக்கங்கள் கொண்டதாக வெளிவந்தது. அப்போது அதன் விலை ஆறு காசுகள்.

அண்ணாமலை, காந்தி. அரு., (1918 - . . .)

இரணிக்கோவில்
பள்ளத்தூர்
எழுத்தாளர்

அருணாசலம் செட்டியாரின் மகன். இரங்கூனிலிருந்து வெளிவந்த 'தனவணிகன்' இதழின் அலுவலகப் பொறுப்பாளராக *1939*இல் பர்மாவுக்குச் சென்றார். பின்னர் தம் வாழ்நாளின் இறுதிவரை பர்மாவிலேயே தமிழ்த்தொண்டு செய்து வந்தார். இடையே *1940*இல் சேவா கிராமம் சென்று காந்தியடிகளைச் சந்தித்துத் திரும்பினார். அந்த நாள் முதல் தம் பெயரை 'காந்தி அண்ணாமலை' என மாற்றிக் கொண்டார்.

பர்மாவில் இவர் கலந்து கொள்ளாத தமிழ் விழாவே இல்லை. தமிழகத்தில் உள்ள தமிழறிஞர்களோடு இடைவிடாத தொடர்பு கொண்டிருந்தார். இவர் எழுதிய நூல்கள் நேதாஜி வரலாறு, தாகூர் வரலாறு, முருகன் அர்ச்சனை *1008*, பராசக்தி அர்ச்சனை *1008* ஆகியவை. இரங்கூனில் சிதம்பரநாதன் அன்கோ என்ற பெயரில் ஒரு பதிப்பகத்தை நடத்தி வந்தார். பர்மிய மொழியில் திருக்குறள் வெளிவந்ததில் இவரது பங்கு பாராட்டத்தக்கது.

அண்ணாமலை, சுப. (20-6-1948)

பிள்ளையார்பட்டி
மேலைச்சிவபுரி
அரிமா ஆளுநர்

சுப்பிரமணியன் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். பி.காம். பட்டம் பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதுகலைப் பட்டப்படிப்பிற்கு மூன்றாண்டுகள் பாடநூலாக இருந்ததும், பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றைக் கவிதை வடிவில் தருவதுமான 'ஊன்றுகோல்' காப்பியத்தை வெளியிட, மேலைச்சிவபுரி சன்மார்க்க சபைக்கு முழு உதவியும் செய்துள்ளார். மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் தலைவராகவும் நகரத்தார் சங்கச் செயற்குழு உறுப்பினராகவும் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். *324–பி3* அரிமா மாவட்டத்தின் *1994–95*க்குரிய ஆளுநராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அண்ணாமலை செட்டியார், அரு. (9-1-1918)

இரணிக்கோவில்
பள்ளத்தூர்
புரவலர்

அருணாசலம் செட்டியார் – நாச்சாள் ஆச்சியின் மகன். தாகூர் நிறுவிய சாந்திநிகேதனில், முன்னாள் பிரதமர் அன்னை இந்திராகாந்தியுடன் பயின்ற பெருமைக்குரியவர். கவிஞர் தாகூர், காந்தியடிகள், நேரு முதலானோரைக் கண்டும் கேட்டும் தேசிய உணர்வில் ஈடுபட்டவர்.

பீர்தான் சுகர்மல் வங்கியில் பணி தொடங்கிய இவர் பின் மன்னார் எஸ்டேட்டின் நிர்வாக இயக்குநரானார். அதன் பின், பங்குத் தரகு நிறுவனத்தைத் தொடங்கி, செல்வம் ஈட்டினார்.

திரட்டிய செல்வத்தைத் திருக்கோவில் திருப்பணிகளுக்கும் நியமவழிபாடுகளுக்கும் வழங்கினார். திருச்சி தென்னூர் பெருமாள் கோவில், பள்ளத்தூர் பெருமாள் கோவில் முதலியன இவரது திருப்பணியால் பொலிவு பெற்றன. இராமகிருஷ்ணா தபோவனம், சின்மயானந்தா பள்ளி, திருவள்ளுவர் தவச்சாலை, திருக்குறள் அஞ்சல் வழிக்கல்வி நிலையம் முதலிய கல்வி நிலையங்களுக்கும் நிதி உதவி செய்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தின் தலைவராக உள்ள இவர், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதத்தின் தமிழ் உலாத் திட்டத்தின்கீழ் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கும் சென்றுள்ளார்.

Koviloor Digital Library

இவரது கொடைத் திறனைப் பாராட்டி குன்றக்குடி அடிகளார் இவருக்கு 'வள்ளல் பாரி' என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தார். குளித்தலை கா.சு. இலக்கியக்குழு 'அறம் பேணும் அண்ணல்' என்னும் விருது வழங்கியது. தமிழகப் புலவர்குழு 21-6-98இல் இவருக்கு 'தமிழ்ச் சான்றோர்' என்னும் விருது வழங்கிப் பாராட்டியது.

இவரைப் பற்றிப் பெரும்புலவர் அரங்சாமி 'அண்ணாமலை ஆற்றுப்படை' என்னும் நூலை இயற்றியுள்ளார். செல்வத்துப் பயனே ஈதல் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வரும் நகரத்தார் இவர்.

அண்ணாமலை செட்டியார், இராம (12-11-1912 - 20-2-98)

இரணிக்கோவில்
தேவகோட்டை
விடுதலைப் போராட்ட வீரர்

அண. இராமசாமி செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். தேவகோட்டையில் தியாகிகள் பூங்கா எதிரே உள்ள வளைவு (ஆர்ச்) அருகே இவர் கதர்க் கடை உள்ளது. அங்கேயே எப்போதும் இருப்பதால் 'ஆர்ச் ராஜா' என்றும் ஆர்ச் அண்ணாமலை என்றும் அழைக்கப் படுகிறார். தம் இளவயதில் மலேயா சென்ற இவர் அங்கு மிதிலைப்பட்டி க. எ. நாகப்ப செட்டியார், காரைக்குடி வயி.கரு. அழகப்ப செட்டியார் ஆகியோரோடு இணைந்து 'இந்தியக் காங்கிரசு' எனும் அமைப்பைத் தோற்றுவித்தார். இந்தியாவி லிருந்து கதரை வரவழைத்துக் கதர் கட்டும்படி அங்கு நான்கு ஆண்டுகள் பிரசாரம் செய்தார்.

1928இல் சைமன் குழுப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு, மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை பெற்று, பம்பாய்ச் சிறையில் இருந்தார். காந்தியடிகளின் தண்டி யாத்திரையில் கலந்து கொண்டார். உப்பு வரி ஒழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு, பம்பாய் மத்தியச் சிறையில் 3 மாதங்கள் இருந்தார். தமிழ்நாட்டில் 1930இல் சர்தார் வேதரத்தினம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டு 6 மாதங்கள் சிறைத்தண்டனை பெற்றார். அந்நியத் துணிப் புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியல் போராட்டங்களிலும் ஈடுபட்டுத் தண்டனை அனுபவித்தார். 1939 உலகப்போரில் இந்தியாவைச் சேர்க்கக் கூடாது என்று காந்தியடிகள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக இவருக்கு ஒன்றரை ஆண்டுச் சிறைத் தண்டனை யும் நானூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டன. 1942 ஆகஸ்டில் தேவகோட்டை நீதிமன்றம் எரிக்கப்பட்ட போராட்டத்தில் இவருக்குப் பத்தாண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றது. நாட்டு நன்மைக்காகவே போராடிச் சொந்த வாழ்க்கையில் பல இழப்புகளைச் சந்தித்து, அதற்காக எந்தப் பதவியும் பெறாத தியாகி ஆவார். பாரத விடுதலையின் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவில் செப்புப் பட்டயம் பெற்ற செட்டி நாட்டு வீரர் இவர்.

அண்ணாமலை செட்டியார், சேவு (27-12-1923)

நேமங்கோவில்
தேவகோட்டை
கல்லூரி நிறுவுநர்

உ. வகையினர் என்ற புகழ்மிக்க குடும்பத்தில் உ. இராம. மெ. சுப. சின்னச் சேவுகன் செட்டியார் – முத்துக்கருப்பி ஆச்சியின் மூன்றாவது மகன். பி.காம். பட்டமும், இதழியல் பட்டயமும் பெற்றவர். இவருக்கு மலேசியாவில் பினாங்கு, ஈப்போ, கம்பார் ஆகிய நகரங்களில் தொழிலும், பல நகரங்களில் வீடு, இரப்பர் தோட்டங்களும் உள. இந்தியாவில் மதுரை மாவட்டம் மேகமலைப் பகுதியில் காப்பி, ஏலக்காய்த் தோட்டங்களும், தூத்துக்குடியிலும், எண்ணூரிலும் உப்பளங்களும் உள்ளன. 1953இல் கலைத்தந்தை கருமுத்து. தியாகராசன் செட்டியார் இவரை மதுரை வங்கியின் இயக்குநராக ஆக்கினார். அது முதல் தொடர்ந்து 21 ஆண்டுகள் இவர் இயக்குநராக இருந்தார். கலைத்தந்தை கலந்து கொள்ள இயலாத இயக்குநர் கூட்டங்களுக்கு இவரே தலைமையேற்று நடத்தியுள்ளார். மதுரை தியாகராசர் கல்லூரி அறநிலையிலும், காரைக்குடி பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிலும் உறுப்பினராகவும் பணி புரிந்துள்ளார். இராசபாளையம் மெட்ராசு சிமெண்ட்ஸ் நிறுவனத்தில் தொடக்கம் முதல் இயக்குநராக உள்ளார்.

தேவகோட்டையில் 1970இல் ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி (த.க.)யையும் அதன் பின்னர் ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை ஆயத்தப் பள்ளியையும் நிறுவி நடத்தி வருகிறார். தேவகோட்டையை அடுத்த எழுவங்கோட்டையில் 18–10–1977இல் ஒரு சுகாதார மையம் ஏற்படுத்தி யிருக்கிறார். கோட்டையூர் விசுவேசுவரர் அறகட்டளையை நிறுவிய பதின்மரில் இவரும் ஒருவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பண்டிதமணி. மு. கதிரேசன் செட்டியார் நினைவாகச் சொற்பொழிவுகள் நிகழவும், அப்பொழிவுகள் நூலுருவம் பெறவும் அறக்கட்டளை ஒன்றை இவர் நிறுவியுள்ளார்.

Koviloor Digital Library

அண்ணாமலை செட்டியார், டாக்டர் இராசா சர். மு., (30-9-1881 - 15-6-1948)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
பல்கலைக்கழக நிறுவுநர்

வெ.சா. ராம. முத்தையா செட்டியாருக்கும் மீனாட்சி ஆச்சிக்கும் இளைய மகன். இவரது தந்தையார் தில்லைப் பெருமான் கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்தார். கூத்தப் பெருமானுக்குப் பாவாடைப் படையலை நித்திய கட்டளையாக மேற்கொண்டு சிதம்பரத்தில் அன்ன சத்திரத்தையும் சிறப்பாக நடத்தினார். கரூர்ச் சிவன் கோவிலிலும் திருப்பணி செய்தார்.



இராசா சர். மு. அண்ணாமலை செட்டியார்

அண்ணாமலை செட்டியார் மூல நட்சத்திரத்தில் பிறந்தவர். ஆண் மூலம் அரசாளும் எனும் பழமொழியை மெய்யாக்கியவர். இளமையிலேயே பொலிவுடைய தோற்றமும் ஒளி வீசும் கண்களும் உடையவராகத் திகழ்ந்தார். கரூரில் இவர் தந்தையார் திருப்பணி செய்து வந்தபோது இவர் அங்கு கல்வி பயின்று தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழித்திறன் கைவரப் பெற்றார். நாள்தோறும் தொழில் தொடர்பான கடிதங்கள் நிறைய எழுதியமையாலும், 'சுதேசமித்திரன்' நாளிதழில் அடிக்கடி பல கட்டுரைகள் எழுதியமையாலும் இவரது எழுத்தாற்றல் பெருகியது. அண்ணாமலையார் காலத்தைப் போற்றுபவர். எச்செயலையும் எடுத்து விரைவில் முடிப்பவர். இயற்றலும் ஈட்டலும் வகுத்தலும் வல்லவர். திறமையான ஆட்களை இனங்கண்டு ஆராய்ந்து தேர்ந்தெடுத்து அவரைப் பணிகொள்ளும் சிறந்த நிர்வாகி. வள்ளன்மை மிக்கவர்.

தொழிலை விரிவுபடுத்திப் பொருளீட்டும் ஆர்வம் சிறந்தோங்கியதால் தமது கடைகளை வரைவு நிறுவனமாக்கி பர்மா, மலேயா, இலங்கை, சயாம், கிழக்கிந்தியத் தீவுகள், இந்தியா எனப் பல நாடுகளிலும் பல்வேறு துறைகளில் புதியதொழில்களும் தொடங்கி மிகத் திறம்பட நிருவகித்தார். நாள்தோறும் இரவு 12 மணிவரை விழித்துக் கணக்குகளைப் பார்ப்பது இவர் பழக்கமாகும். 1901இல் இவர் தந்தையார் மறைந்த பிறகு தனது பங்காகச் சில லட்ச ரூபாய்களைப் பிரித்துக் கொண்ட அண்ணாமலையார் 10 ஆண்டுகளில் கோடிக்கணக்கான ரூபாய் குவித்தார். இவர் அத்தகைய திறமையும் அயரா உழைப்பும் கொண்டவர். ஒரு மாதத்தில் ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்வார். தம் தொழிலை நேரடியாகக் கண்காணிப்பார். இவரிடம் குறிப்பேடும் எழுதுகோலும் எப்போதும், இவர் உறங்கும் போதும் பக்கத்தில் இருக்கும். இவரைக் கணக்கில் ஏமாற்ற எவராலும் இயலாது எனப் பழகியோர் கூறுவர். 'இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா' வில் பல ஆண்டுகள் இவர் உறுப்பினராக இருந்துள்ளார்.

இவர் தோற்றுவித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (து.க.)இவருக்குப் பெரும்புகழ் வாய்க்கக் காரணமாக அமைந்தது. வெளிநாடுகள் பலவற்றுக்குப் பயணம் சென்று வந்த அண்ணாமலை செட்டியார் இலண்டனில் உள்ள கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களைச் சுற்றிப் பார்த்தார். கல்விப் பணியில் அவருக்கு ஆர்வம் பிறந்தது. தமிழ் மக்கள் முன்னேற வேண்டுமானால் மேல்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் போல இங்கும் அமைக்க வேண்டும் என்று இவர் கருதினார். தொடக்கத்தில் ஜான் மில்லர் பசுமலையில் செய்து வந்த கல்விப் பணிகளுக்கு உதவி செய்தார். மதுரையில் மதுரைக் கல்லூரி கட்ட இடம் வாங்கித் தந்து, ரூபாய் அறுபதினாயிரம் நிதி உதவியும் செய்தார். பின்னர், சிதம்பரமே கல்லூரி தொடங்க ஏற்ற இடம் என முடிவு செய்து, தமது தமையனார் அமைத்த உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திலேயே தம் தாயார் பெயரால் மீனாட்சி கல்லூரியை 24-6-1920இல் தொடங்கினார். 1927இல் தமிழ்க் கல்லூரியையும் வடமொழிக் கல்லூரியையும் தொடங்கினார். 1929இல் இசைக்கல்லூரி தொடங்கினார். அவ்வத் துறையில் புகழ்பெற்ற வல்லுநரை ஆசிரியராகத் தேர்வு செய்தமை இவரது தனிச் சிறப்பாகும். தமிழ்க் கல்லூரிக்கு டாக்டர் உ.வே. சாமிநாதையர் தேர்வு செய்யப் பெற்றுப் பொறுப்பேற்றார். ஏறத்தாழ 20 இலட்சம் ரூபாய் கல்லூரி தொடங்கச் செலவிட்டார். மேலும் 20 லட்சம் ரூபாய் நன்கொடை தந்து தமது கல்லூரிகளை ஒருங்கிணைத்துப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்க முன்வந்தார். அரசாங்கம் இவரது முயற்சியைப் போற்றியது. 11-10-1928இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவு வதற்கான சட்டம் நிறைவேறியது.

Koviloor Digital Library

அதுவரை திருக்கோவில் அறப்பணிகள் மேற்கொண்டிருந்த நகரத்தார், கல்வி அறப்பணிகளிலும் கவனம் செலுத்தும் வண்ணம் இவரது கல்விப் பணிகள் நகரத்தார் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தன. முன்னரே இராவ்பகதூர், சர் ஆகிய பட்டங்களை வழங்கி இவரைச் சிறப்பித்திருந்த ஆங்கில அரசு, இவர் பல்கலைக்கழகம் தொடங்கிய பிறகு 4–3–1929இல் இவருக்குப் பரம்பரை 'இராஜா' பட்டத்தை வழங்கியது. இவர் தோற்றுவித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவருக்கு 9–12–1947இல் டாக்டர் பட்டம் வழங்கியது.

கல்விப் பணியோடு நகரத்தார் மரபுக்கேற்பத் திருக்கோவில் திருப்பணிகளும் இவர் மேற்கொண்டார். திருவேட்களம் திருக்கோவிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு நிகழ்த்தினார். சிதம்பரம், கரூர், இளையாத்தங்குடிக் கோவில்களிலும் திருப்பணி செய்துள்ளார். தம் சொந்த ஊராகிய கானாடுகாத்தானில் மகளிருக்காக லேடி பெண்ட்லண்ட் மருத்துவமனையைக் கட்டித் தந்துள்ளார். மகளிருக்காகவே வெல்லிங்டன் கிளப் என்ற நிலையத்தை நிறுவினார். இவர் இவ்வகையில் பல்வேறு அறங்களுக்காக ஒன்றரைக் கோடி ரூபாய் செலவிட்டுள்ளார்.

அண்ணாமலை செட்டியார் 1910 முதல் 1913ஆம் ஆண்டு வரை காரைக்குடி ஊராட்சி ஒன்றியத் தலைவராகப் பணியாற்றினார். இவர் 1916 முதல் 1919 வரை சென்னைச் சட்ட சபையில் உறுப்பினராக இடம் பெற்றார். 1921முதல் 1935 வரை தொடர்ச்சியாக 15 ஆண்டுகள் மாநிலங்கள் அவை உறுப்பினராக இருந்தார்.

1917இல் சென்னையில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் தோன்ற இவர் காரணமாக இருந்தார். இவர் முயற்சியால் சென்னை சட்டசபையில் நகரத்தார்க்கென்று ஓர் உறுப்பினர் பதவி ஒதுக்கப் பெற்றது. பர்மாவில் நகரத்தார் அல்லலுற்ற பொழுது அவர்களுக்காக இந்திய நாடாளுமன்றத்தில் இவர் குரல் எழுப்பினார். 1935இல் பர்மா பிரிவுச் சட்டம் வந்தபோது தனவணிகர் சார்பாக இங்கிலாந்து அரசரைச் சந்திக்க இவர் தூது சென்று ஐரோப்பியப் பயணம் மேற்கொண்டார். அண்ணாமலை அரசர், அரசி சீதை ஆச்சியுடன் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரைப் பேட்டி கண்டார். செய்கோன் தன வணிகர்க்காகப் பிரெஞ்சு நாட்டிற்கும் இவர் தூது சென்றார். இவர் 1911இல் இங்கிலாந்தில் வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் நிகழ்ந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவிற்கும் 1912 இல் டெல்லி மாநகரில் நடைபெற்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவிற்கும் சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பெற்றுக் கலந்து கொண்டார்.

கானாடுகாத்தானில் 1912இல் இவர் எழுப்பிய அழகிய மாளிகை அரண்மனை போலத் திகழ்கிறது. சென்னையில் அடையாறு கடலுடன் கலக்கும் இடத்தில் 110 ஏக்கரில் இவர் எழுப்பியுள்ள மாளிகை கலைநலம் சிறந்த அரண்மனையாகத் திகழ்கிறது. செட்டிநாடு புகைவண்டி நிலையம் அருகே 1000 ஏக்கர் நிலம் வாங்கிச் செட்டிநாடு என்னும் புதிய ஊரை உருவாக்கினார்.

தமிழிடத்து அண்ணாமலை அரசர் அளவிலாத பற்றுடையவர். தமிழ்ப் பேரறிஞர்களையும் புலவர்களையும் போற்றி ஆதரித்தார். தமிழிசை மாநாடுகள் கூட்டித் தமிழிசை நாடெங்கும் பரவத் தமிழிசை இயக்கத்தைத் (த.க.) தோற்றுவித்தார்.

அண்ணாமலை அரசர் தம் வாழ்க்கையின் குறிக்கோளை 25–3–1944இல் ஒரு மடலில் எழுதியுள்ளார். "ஸ்ரீ நடராஜ பெருமானைத் தினந்தோறும் வணங்குவேன். அண்ணாமலை சர்வகலாசாலையின் வளர்ச்சியை ஒவ்வொரு நாளும் சிந்திப்பேன். தமிழ்நாடெங்கும் தமிழிசை முழங்க வேண்டும் என்பது எனது ஆவல். ஈட்டலும் காத்தலும் வகுத்தலும் என் வாழ்க்கையின் கொள்கை" எனக் கொண்டிருந்த இலட்சியத்தில் அவர் சிறப்பான வெற்றி பெற்றுள்ளார். திருப்பணிகளாலும் கல்விப் பணிகளாலும் தமிழிசைப் பணிகளாலும் இவர் தமிழர் நெஞ்சில் என்றும் நிலைத்திருப்பார்.

அண்ணாமலை செட்டியார், டிரோஜன், சா.ராம.சித., (3-1-1911 - . . .)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
தமிழ்ப்புரவலர்

சைவசித்தாந்த அறிஞர் சிதம்பர அய்யாவின் மகன். டி.என். சேஷாசலம் நடத்திய 'கலாநிலையம்', தமிழ்ப்பண்ணை லிமிடெட் நடத்திய 'பாரத தேவி' ஆகிய இதழ்கள் இவரது ஆதரவால் வளர்ந்தன. தமிழ்வளர்ச்சிக் கழகத்தைத் தொடங்கியவர்களுள் இவரும் ஒருவர். பாரதி சங்கத்தின் செயலாளராகவும், கம்பர் கழகத்தார் 1954இல் தேரழுந்தூரில் நடத்திய கம்பர் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

Koviloor Digital Library

அண்ணாமலை, டாக்டர். அழகு.

மாத்தூர் - மண்ணூர்
கோட்டையூர்
பல்துறை வித்தகர்

மாண்டிசோரி கல்வி முறையைத் தோற்றுவித்த மாண்டிசோரி அம்மையாரிடம் ஆசிரியர் பயிற்சிக் கல்வி கற்றவர். பாதன் பௌவல் பிரபுவிடம் (Lord Baden Powell) சாரண ஆசிரியர் பயிற்சி பெற்றவர். பக் துரையிடம் சைதாப்பேட்டை உடற்பயிற்சிக் கல்லூரியில் படித்தவர். ஓமியோபதி மருத்துவராகவும், எண்கலை மற்றும் கைரேகை சோதிடம் பார்ப்பவராகவும் பயிற்சி பெற்றுத் தொழில் புரிந்தவர். சொ. முருகப்பா அவர்களால் அமராவதிபுதூரில் தொடங்கப் பெற்ற மகளிர் இல்லப் பள்ளியில் பல ஆண்டுகள் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர். காவிரிப் பூம்பட்டினத்தில் நகரத்தார் நடத்தும் பட்டினத் தடிகள் திருவிழாவில் 1938 முதல் தொடர்ந்து பல ஆண்டுகள் பங்கு பெற்றவர்.

அண்ணாமலை, டாக்டர். சுப., (10-10-1929)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு.
தேவகோட்டை
தமிழ்ப்பேராசிரியர், கல்லூரி முதல்வர்

மு.அ. சுப்பிரமணியன் செட்டியார் – சீதை ஆச்சியின் மகன். தந்தையார் தேசிய இயக்கத்தில் ஆர்வமும் தமிழ்ப்பற்றும் கொண்டவர். ஆகவே இவருக்கு இளமையிலேயே தமிழ்ப்பற்றும் இசை, கலை இலக்கியத்தில் ஈடுபாடும் ஏற்பட்டன.

இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பி.ஓ.எல். (ஹானர்சு) பயின்று பல்கலைக் கழக முதன்மை பெற்றுத் தேறினார். சர். ஜான் லாசரஸ் தங்கப்பதக்கம் வென்றார். 'பழந்தமிழகத்துக் கலைகளும் அறிவியலும்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து 1962இல் எம்.லிட். பட்டமும் இராமலிங்க வள்ளலாரின் நூல்களில் ஆய்வு செய்து 1968இல் டாக்டர் பட்டமும் பெற்றார்.

இவர் கோவை பூசா.கோ கலைக்கல்லூரியில் ஓராண்டும் மதுரை தியாகராசர் கல்லூரியில் 1953 முதல் 1988 வரை முப்பத்தைந்தாண்டு களும் தமிழ்ப்பணியாற்றியுள்ளார். தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகவும் பதினோராண்டுகள் கல்லூரி முதல்வராகவும் பணிபுரிந்துள்ளார். 1981 ஆம் ஆண்டில் தமிழக அரசு இவரைச் சிறந்த கல்லூரி முதல்வர் எனப் பாராட்டி விருது வழங்கிச் சிறப்பித்தது.

'வள்ளலார் வாழ்வும் வாக்கும்' என்னும் இவரது ஆங்கிலநூலை (Life and Teachings of St. Ramalingar) பாரதீய வித்தியாபவன் வெளியிட் டுள்ளது. உருவும் உணர்வும், பண்சுமந்த பாடல், கல்லும் கனியாகும், மக்களை எட்டிய மறைத்தமிழ், திருக்குறள் சிந்தனை, பன்னிரண்டாம் திருமுறை ஆகியன இவர் படைத்த பிறநூல்களாகும். ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ள இவர் 22 முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியாக இருந்து நெறிப்படுத்தியுள்ளார். பணி ஓய்வுக்குப் பின் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் திருமந்திரத்தில் ஆய்வு மேற்கொண்டார். பல்வேறு பாட வேறுபாடுகளை ஆராய்ந்து சிறந்த உரையெழுதி வெளிவந்துள்ள திருமந்திரம் (செவ்விய பதிப்பு) இவரது வாழ்க்கைச் சாதனையாகும்.

'நகரத்தார் குரல்' இதழில் 'குருத்து' எனும் புனைபெயரில் எழுதியுள்ள 'வாழையடி வாழை' என்னும் தொடர் நகரத்தார் சமூக மரபுகள், பண்பாட்டு வளர்ச்சி, சடங்குகள் ஆகியவற்றை ஆய்ந்து விளக்கும் கட்டுரைகளாகும். 'மணிவண்ணன் மடல்' என்னும் தலைப்பில் நகரத்தார் சமூகச் சீர்திருத்தம் குறித்து இவர் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இளமையிலேயே பொதுப்பணியில் ஆர்வம் கொண்ட இவர் தேவகோட்டை சேக்கிழார் திருநாட்கழக விழாவில் ஆர்வமுடன் பணி யாற்றிய சேக்கிழார் தொண்டராவார். (பார்க்க சேக்கிழார் விழா) மதுரை நகரத்தார் சங்கத்தின் செயலராக முப்பது ஆண்டுகட்குமேல் தொண்டு புரிந்துள்ளார். மதுரை இராமலிங்கர் பணிமன்றத் துணைத் தலைவராகவும் மதுரை அண்ணாநகர் சர்வேசுவரர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராகவும் சமயத் தொண்டு செய்து வருகின்றார். பண்ணார் தமிழ் வல்ல அண்ணா மலையார் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் சைவப்பணியும் தமிழ்ப்பணியும் மேற் கொண்டுள்ளார்.

அண்ணாமலை, டாக்டர். ந., (23-12-1949)

மாத்தூர் - அரும்பாக்கூர்
ஆ. தெற்கூர்
மேலாண்மை அறிவுரையாளர்

அ.பழ. நடராசன் செட்டியார் – கல்யாணி ஆச்சியின் மகன். வேதிப் பொறியியலில் முனைவர் பட்டமும், மனித வள மேலாண்மைத் துறையில் பட்டயப் படிப்பும் முடித்தவர். பெல்ஜியம், பிரான்சு, ஆலந்து, சுவிட்சர்லாந்து போன்ற அயல் நாடுகளில் அறிவியல், தொழில் ஆய்வுக் கூடங்களில் பயிற்சி பெற்றவர். கல்கத்தாவில் உள்ள மத்திய கண்ணாடி மற்றும் மட்பாண்டத் தொழில் ஆய்வு நிறுவனத்தில்

Koviloor Digital Library

(Central Glass & Ceramic Research Institute) உயர்நிலை அறிவியற் பொறியாளராக இருபது ஆண்டுகட்கும் மேலாகப் பணிபுரிந்தவர். இப்போது மேலாண்மைத் துறை அறிவுரை யாளராக (Management Consultant) ஏர் இந்தியா, இந்தியப் படைக் கருவித் தொழிற்கூடம் (Indian Ordnance Factories), நெய்வேலிப் பழுப்பு நிலக்கரி நிறுவனம், இந்திய எஃகு மேலாண்மைக் கழகம் (Steel Authority of India), தொழிற்கல்வி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (Technical Teacher Training Institute) ஆகியவை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்குகிறார். உலக அளவிலான அறிவியல் இதழ்களிலும், மேலாண்மை இதழ்களிலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். மேலாண்மை பற்றிய 'Management of Stress' என்ற ஆங்கில நூலின் ஆசிரியர். 'Creativity Sphere' என்று, மேலாண்மை பற்றிய பருவ இதழொன்றையும் ஆசிரியராக இருந்து நடத்தி வருகிறார். அனைத்திந்திய மேலாண்மைக் கழகத்தினுடைய தேர்வாளர்களில் (Examiners) இவரும் ஒருவர்.

கல்கத்தா நகரத்தார் சங்கச் செயற்குழு உறுப்பினராகிய இவர் 'Junior Chamber' எனப்படும் இளையோர் இயக்கத்தில் பல்வேறு பொறுப்புக்களில் இருந்திருக்கிறார். 'இந்தியாவில் குறிப்பிடத்தக்க இளையோர் இயக்க உறுப்பினர்' (Outstanding Jaycee of India) என்ற பட்டமும் அவ்வியக்கத்தின் 'தேசியப் பயிற்சியாளர்' (National Trainer) பட்டமும் பெற்றவர். அமெரிக்க இளையோர் இயக்கத்தால் 'பயிற்சியாளர்களின் பயிற்சியாளர்' (Trainer of Trainers Graduate - TROT graduate) பட்டமும், இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அண்ணாமலை, நடராஜ்., (2-2-1936)

இரணிக்கோவில்
பனையப்பட்டி
அரிமா மாவட்ட ஆளுநர்

சுப.அ. நடராசன் செட்டியார் – ஜானகி ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வணிகவியல் பட்டம் பெற்றவர்.

பள்ளியில் கிரிக்கெட் குழுத் தலைவராகவும் டென்னிஸ் விளையாட்டு வீரராகவும் விளங்கினார். மதுரை சி.எஸ். ராமாச்சாரி அவர்களிடம் தொழில் திறமை பயின்று படிப்படியாக உயர்ந்து இன்று ஆர்க்காடு நூற்பாலையின் நிருவாக இயக்குநராகத் திறம்பட ஆலையை நிருவகித்து வருகிறார்.

1991 ஆம் ஆண்டில் இரணிக்கோவில் குடமுழுக்கு விழா ஐம்பது ஆண்டுகட்குப் பிறகு சிறப்பாக நிகழ இவர் அக்குழுச் செயலராக இருந்து தொண்டாற்றினார். தந்தையார் குழுவின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மதுரை நகரத்தார் சங்கப் புதிய கட்டடப் பணியில் ஆர்வம் கொண்டு உதவியுள்ளார். மதுரை அண்ணாநகர் சர்வேசுவரர் கோவில் துணைத் தலைவராகவும், பக்த சபையின் தலைவராகவும் ஆன்மீகப் பணி செய்து வருகிறார்.

1975 இல் கள்ளக்குறிச்சி அரிமா சங்கத்தை இவர் தொடங்கினார். இவர் நிறுவுநர் தலைவர் ஆவார். இங்கு தட்டம்மை தடுப்பு ஊசித் திட்டம் தொடங்கப் பெற்று இன்றளவும் வாரந்தோறும் நடந்து வருகிறது. 1,50,000 குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர். 1987 – 88 ஆம் ஆண்டில் அம்மாவட்டத்தின் அரிமா ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். கண்தான வங்கி அறக்கட்டளையை இவர்தம் பதவியாண்டில் தொடங்கி வைத்தார். தமிழ் நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் கண்தானம் வழங்குவோரை ஊக்குவித்த பெருமையும், பலருக்குக் கண்ணொளி வழங்கிய சேவையாளர் என்ற பெரும்புகழும் இவருக்குரியவை. இவர், தாயார் ஜானகி ஆச்சி நகரத்தாரில் கண்தானம் வழங்கிய முன்னோடிப் பெண்மணி ஆவார்.

அண்ணாமலை, நாக., (29-8-1936)

சண்முகநாதபுரம்
கல்வியாளர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பொறியியற் கல்வி பயின்ற இவர் கரக்பூரில் உள்ள ஐ.ஐ.டி யிலும் அமெரிக்காவிலும் உயர்கல்வி பயின்று எம்.டெக்., எம்.எஸ்., பி.எச்டி ஆகிய பட்டங்களைப் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மேற்கு வர்ஜீனியாப் பல்கலைக் கழகம், கிளாக்சன் பல்கலைக் கழகம், நார்த் ஈஸ்டர்ன் பல்கலைக் கழகம் போன்ற பல பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றியவர். மின்பொறியியல் துறையில் வல்லுநரான இவர் இப்போது தொடர்ந்து அமெரிக்காவில் அத்துறையில் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளார்.

Koviloor Digital Library

அண்ணாமலை, பழ., (17-1-1925)


இளையாத்தங்குடி - பட்டினசாமி
பள்ளத்தூர்
நகரத்தாரியல் ஆய்வாளர்

பழநியப்ப செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். முருகப்பா நிறுவனங்களில் நாற்பது ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அந் நிறுவனங்களைச் சார்ந்த மு.மு. முத்தையா ஆய்வுத்தளத்தின் சார்பில், நகரத்தார் பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். செட்டிநாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்தும், நகரத்தார் பலருடன் கடித வாயிலாகத் தொடர்பு கொண்டும் செய்திகள் திரட்டி, ஆறு நூல்கள் வெளியிட்டிருக்கிறார்.

நகரத்தார் திருமண நடைமுறை, செட்டிநாடு ஊரும் பேரும், நகரத்தார் கணக்கியல் முறை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், நீத்தார்கடன் என்பன ஆய்வுநூல்கள். நகரத்தார் யார் எவர் – முதல் தொகுதி என்பது தொகுப்பு நூல்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஆசிய நாடுகளிலேயே தனியொரு மனிதரின் பெருங்கொடையால் உருவான முதல் பல்கலைக் கழகம் என்ற சிறப்பினை உடையது. கானாடு காத்தான் மு.அ. அண்ணாமலை செட்டியாரால் சிதம்பரத்தில் 1920இல் நிறுவப்பட்ட மீனாட்சி கல்லூரி, பின்னர் தொடங்கப்பெற்ற தமிழ்க்கல்லூரி, இசைக் கல்லூரி, வடமொழிக் கல்லூரி ஆகியவை ஒன்றாக இணைக்கப்பட்டு 1929 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப் பெற்றது. 1928 இல் தமிழ்நாடு சட்டப்பேரவையில் சிறப்புச் சட்ட முன்வடிவு மூலம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோற்றுவிப்பதற்கு இசைவு வழங்கப் பெற்றது. அண்ணாமலை செட்டியார் 20 லட்சம் ரூபாயும் 600 ஏக்கர் நிலமும் நன்கொடையாக அளித்தார். இம்மாபெரும் கொடையால் அவர் ஆற்றிய கல்விப்பணியைச் சிறப்பிக்கும் வகையில் அந்நாள் அரசாங்கம் அவருக்குப் பரம்பரை 'இராஜா' பட்டம் வழங்க, அதுமுதல் இப்பல்கலைக் கழக நிறுவுநர் இராஜா சர் அண்ணாமலை செட்டியார் என அழைக்கப் பெற்றார். தமிழக ஆளுநர் இப்பல்கலைக் கழகத்தின் வேந்தர். நிறுவிய குடும்பத்தினர் வாரிசுகட்கு இணைவேந்தர் பொறுப்பும் உரிமையும் வழங்கப்பட்டன. நிறுவுநர் இணைவேந்தர் இராஜா சர் அண்ணாமலை செட்டியாரும், பின்னர் அவரது மகன் முத்தையா செட்டியாரும் இப்பொறுப்பு வகித்தனர். இப்போது இராஜா சர் முத்தையா செட்டியாரின் மகன் எம்.ஏ.எம். இராமசாமி இச்சிறப்பைப் பெற்று இப்பல்கலைக் கழகத்தைச் சிறப்பாக வளர்த்துத் தொண்டாற்றி வருகின்றார். சி.பி.



அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

Koviloor Digital Library

இராமசாமி ஐயர், சீனிவாச சாத்திரியார் போன்ற சான்றோர்கள் துணைவேந்தராகப் பொறுப் பேற்று இப்பல்கலைக்கழகத்தை வளர்த் துள்ளார்கள். மிகப்பெரிய உடனுறை பல்கலைக் கழகமாக விளங்கும் இவ்வளாகத்தில் பல்வேறு துறைகளில் ஏறத்தாழப் பத்தாயிரம் மாணவ மாணவியர் தங்கிக் கல்வி பயின்று வருகிறார்கள்.

இப்பல்கலைக்கழகம் 1955இல் வெள்ளி விழாவையும் 1979இல் பொன்விழாவையும் 1989இல் வைரவிழாவையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

கலைத்துறை, அறிவியல் துறை, பொறியியல், வேளாண்மை, கல்வியியல், உடற்பயிற்சியியல், இசை, பல்மருத்துவம், மருத்துவம் எனப் பல்வேறு புலங்களைக் கொண்டுள்ள இப்பல்கலைக் கழகத்தில் மொழியியல் உயராய்வு மையமும், கடல்வாழ் உயிரினங்கள் பற்றி ஆய்வு செய்யும் (Marine Biology) மையமும் அமைந்துள்ளன. அண்ணாமலை நகருக்கு அருகில் இயற்கை யாகவே அமைந்துள்ள பரங்கிப்பேட்டை (Porto Novo) உப்பங்கழியும் பிச்சாவரம் உப்பங்கழிக் கால்வாயும் இப்பல்கலைக்கழக உயராய்வுக்கு உறுதுணையாக விளங்குகின்றன. ஆசியா விலேயே மிகப்பெரிய தொலைதூரக் கல்வி, தொடர்கல்வி நிறுவனத்தை இப்பல்கலைக்கழகம் நடத்தி வருகிறது. தமிழும் தமிழிசையும் வளர்ப்பதைத் தம் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்ட அண்ணாமலையார் மிகச் சிறந்த தமிழறிஞர்களைத் தேடித்தேடி அழைத்து வந்து தமிழ் வளர்க்கச் செய்தார். பாரம்பரியப் புலமை சான்ற தமிழறிஞர்களாகிய விபுலானந்த அடிகளார், சோமசுந்தர பாரதியார், கா.சு. பிள்ளை, பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், வசுப. மாணிக்கனார், க. வெள்ளைவாரணர் போன்ற தமிழ்ச் சான்றோர்கள் தமிழ்த் துறையில் பணியாற்றிச் சிறப்பித்துள்ளனர். பல்வேறு அறக்கட்டளை வாயிலாக ஆண்டுதோறும் ஆய்வுச் சொற்பொழிவுகள் நிகழ்ச்செய்து இப்பல்கல்லக் கழகம் தொடர்ந்து தமிழ்த் தொண்டாற்றி வருகிறது. மிகச்சிறந்த தமிழ் நூல்களை, வரலாற்று நூல்களை இப்பல்கலைக் கழகத்தின் பதிப்புத் துறை வெளியிட்டுள்ளது. திருவருட்பா, பன்னிரு திருமுறை வரலாறு போன்ற அரிய ஆராய்ச்சி நூல்கள் முந்நூறுக்கும் மேல் வெளியிடப் பட்டுள்ளன. பல தொகுதிகளாக வெளிவந்துள்ள கம்பராமாயணப் பாட வேறுபாட்டுப் பதிப்பு இத்துறையின் அரிய முயற்சியாகும். வெள்ளைவாரணர், சதாசிவப் பண்டாரத்தார், தண்டபாணி தேசிகர் ஆகியோருடைய புலமையாற்றலை உலகறியச் செய்தது இப்பல்கலைக் கழகப் பதிப்புத் துறையேயாகும். திருக்குறள் ஆய்வு மையம், சைவசித்தாந்தத் தத்துவத் துறை ஆகியவையும் சிறப்பாகத் தமிழ்த் தொண்டு புரிந்து வருகின்றன. சீர்காழி கோவிந்தராசன், மதுரை சோமு ஆகியோர் தமிழிசைப் புலத்தில் இசை கற்பித்த சிறப்பு இப்பல்கலைக்கழகத்திற்கு உண்டு. தமிழிசைப் பாடல்களைப் பல தொகுதிகளாக இப்பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

மாபெரும் நூலகம், மிக உயர்ந்த தூண்களோடு எழுச்சி மிக்க முகப்போடு இங்கே அமைந்துள்ளது. ஏறத்தாழ ஐந்து லட்சம் நூல்களும் 1000 இதழ்களும் உள்ள நூலகம் இதுவாகும். சாஸ்திரி ஹால் எனப்படும் பட்டமளிப்பு விழா மண்டபமும் நூலக மண்டபமும் பிரமிப்பூட்டும் கட்டடங் களாகும். ஆண்டுதோறும் கொண்டாடப்படும் நிறுவுநர் நாள் விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசுகள் வழங்கப் பெறும். மேனாட்டுக் கலைப் பாணியில் கட்டப்பட்டுள்ள இராஜா முத்தையா மருத்துவக் கல்வி நிறுவனங்களின் கட்டடம் மிகுந்த தோற்றப் பொலிவுடையது. இம்மருத்துவக் கல்லூரியோடு ஆயிரத்துக்கும் அதிகமான படுக்கைகளைக் கொண்ட பெரிய மருத்துவமனை 'நடராசபுரம்' பகுதியில் அமைந்து இப்பகுதி மக்களுக்குத் தொண்டாற்றி வருகிறது. மீனாட்சி கல்லூரியின் பழமைப் பொலிவுடைய முதற் கட்டடமும் காலப் போக்கில் கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களும் அண்மையில் கட்டப்பட்ட புதுமையான மருத்துவக் கல்லூரிக் கட்டடமும் காண்போர்க்குப் பழமையும் புதுமையும் கைகோத்து விளங்குவதைக் காட்டும். இப்பல்கலைக் கழகம் மிகப் பின்தங்கிய இப்பகுதியில் மாபெரும் தொண்டு செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இப்பல்கலைக் கழகத்தைக் கண்ணுற்ற கவிமணி

தில்லைப் பதியுடையான் சிற்றம் பலந்தன்னில்

அல்லும் பகலும்நின் றாடுகின்றான் - எல்லைக்கண்

அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்

கண்ணாரக் கண்டு களித்து

என்று மகிழ்ந்து பாடினார். அவரது பாடலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் என்றும் நிலைபெற்ற உயர்புகழ் உடையனவாகப் பொலிகின்றன.

அண்ணாமலை, மு., (1928 - 90)

இலுப்பைக்குடி

கோனாபட்டு

கவிஞர்

கொத்தமங்கலத்தில் பிறந்து கோனாபட்டுக்குப் பிள்ளைவளர வந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தேர்வில் முதல் மாணவராக வெற்றிபெற்றவர். 'முதல் மூன்று ஆழ்வார்கள்' பற்றி ஆய்வுசெய்து எம்.லிட்., பட்டம் பெற்றவர். 1953 முதல் 1966 வரை

Koviloor Digital Library

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

சிறந்த கவிஞராகிய இவர் 'பொன்னி' இதழ் வாயிலாக அறிமுகமான பாரதிதாசன் பரம்பரையில் மூத்தபுகழ்க் கவிஞர். இவரது கவிதைகளில் இரண்டு சாகித்திய அகாதமி இந்தியில் வெளியிட்டுள்ள 'பாரதீயக் கவிதா' கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தாமரைக்குமரி, நச்சினார்க்கினியர், இலக்கியச் சந்தையில் அதிசயக் காதல், வள்ளுவர் தனித்தன்மை ஆகியவை இவரது நூல்கள். 'தாமரைக் குமரி' கவிதைத் தொகுதி இவரது ஆழமான கவிபுனை ஆற்றலுக்கு அடையாளம். 'வள்ளுவர் தனித்தன்மை' நூலுக்குத் திருக்குறள் ஆய்வில் ஒரு தனியிடம் உண்டு. சிதம்பரத்தில் தொல்காப்பியர் நூலகம் என்னும் பதிப்பகத்தை நடத்திப் பல அரிய நூல்களை வெளியிட்டவர். மரபில் காலூன்றிய புதுமைச் சிந்தனை யாளராகிய இவர் நல்ல கவிஞர், சிறந்த ஆசிரியர், தேர்ந்த ஆய்வாளர்.

அமராவதிபுதூர்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் தேவகோட்டைச் சாலையில் அமைந்துள்ளது.

இவ்வூரில் பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த 29 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூர் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இங்கு பழைமையான வாழவந்த நாயகி – வந்த ருளீசுவரர் கோவில் எனும் சிவன் கோவில் உளது. இவ்வூரைச் சேர்ந்த வயிநாகரம் குடும்பத்தார் இக்கோவிலைப் புதுப்பித்துத் திருப்பணி செய்து 1908 இல் குடமுழுக்குச் செய்தனர். இப்போது இது நகரத்தார் நிருவாகத்தில் உளது.

ஊர்ப் பொதுக்கோவில்களாக உலகநாயகி யம்மன் கோவிலும், திருவநாயகியம்மன் கோவிலும் இவ்வூரில் உள்ளன. இவ்வூர் நகரத்தார் உலகநாயகியம்மன் கோவிலில் சிவன் ராத்திரியன்று தொட்டில் கட்டுதலையும், திருவநாயகியம்மன் கோவிலில் சித்திரை மாதம் செவ்வாய்ப் பொங்கல் வைப்பதனையும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

குளுந்தூருணி எனப்படும் குடிதண்ணீர் ஊருணி இவ்வூரில் உள்ளது. நகரத்தாருக்குப் பொதுவாக நகர மடம் ஒன்றும் உள்ளது. மதுரை யிலுள்ள அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் இவ்வூர் வயிநாகரம் குடும்ப முன்னோர்களுக்கும் குருபூசை நடைபெறுகின்றது.

இவ்வூரிலுள்ள தொடக்கப்பள்ளி விடுதலைப் போராட்ட வீரர் பிச்சப்பா சுப்பிரமணியத்தால் தொடங்கப்பெற்றது. இப்போது ஊராட்சி மன்றத்தால் நடத்தப் பெறுகிறது. சொ. முருகப்பா இவ்வூரில் தொடங்கிய மகளிர் இல்லம், பள்ளத்தூர் நகரத்தார் குடும்பம் ஒன்றினால் ஸ்ரீ சாரதா சேவாசிரமமாக நடத்தப் பெற்று அண்மையில் 'ஸ்ரீ சாரதா சமிதி'யிடம் ஒப்படைக்கப்பெற்று அவர்களால் இவ் வளாகத்தில் 'ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரி' நடத்தப்பெறுகிறது. காரைக்குடி முத்துப்பட்டணம் சா.சு. சுப்பிரமணியம் செட்டியாரால் தொடங்கப்பெற்று, அவரது வழிமுறையினரால் நிருவகிக்கப்பெறும் குருகுலம் உயர்நிலைப் பள்ளி இவ்வூரில் அமைந்துள்ளது.

இவ்வூரைச் சேர்ந்த வயிநாகரம் குடும்பத்தார் பெரும் பொருட்செலவில், காளையார் கோவில், காவிரிப்பூம்பட்டினம், சீர்காழி, திருப்பரங்குன்றம், திருப்புத்தூர், திருவாதவூர், திருவாப்பனூர், மதுரை ஆகிய தலங்களில் சிவன் கோவில் திருப்பணி களைச் சிறப்பாகச் செய்துள்ளர்.

அமெரிக்காவில் நகரத்தார்

இந்தியா விடுதலை பெற்றபின் படித்துப் பட்டம் பெற்ற நகரத்தார் சமூக இளைஞர்கள் வேலைவாய்ப்புக் கருதி அமெரிக்காவிற்குச் செல்லத் தலைப்பட்டனர். அவர்களில் பலர் அந்நாட்டுக் குடியுரிமையைப் பெற்று அங்கேயே குடியேறினர். இவ்வாறு வாழும் நகரத்தார்கள் நகரத்தார் சங்கம் அமைத்தும் தமிழ்ச்சங்கங்களில் பொறுப்புக்களை ஏற்றும் ஆலயத் திருப்பணி களில் முனைந்து முன்னின்றும் அமெரிக்கா விலும் நகரத்தார் பண்பாட்டைப் பரப்பி வருகின்றனர்.

வட அமெரிக்க நகரத்தார் சங்கம் என்ற பெயரில் ஹூஸ்டனைத் தலைநகராகக் கொண்டு இயங்கும் நகரத்தார் சங்கத்தில் இப்போது 115 ஆயுள் உறுப்பினர்களும் 52 உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளார்கள். நகரத்தார்க்கே தனிச்சிறப்பான பிள்ளையார் நோன்பு போன்ற விழாக்களை இணைந்து கொண்டாடுதல், விடுமுறை நாட்களில் நகரத்தார் குடும்பங்கள் கலந்து பழகும் வண்ணம் சுற்றுலாக்களுக்குச் செல்லுதல் ஆகியவை இச்சங்கத்தின் செயற்பாடுகள் ஆகும். சங்கத்தின் சார்பில் 'நாணல்' என்ற பெயரில் காலாண்டு இதழ் ஒன்றும் வெளியிடப் பெறுகின்றது. இவ்விதழ் அமெரிக்காவாழ் நகரத்தார் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் தாங்கி வருகின்றது. அமெரிக்காவாழ் நகரத்தார்களைப் பற்றிப்

Koviloor Digital Library

பிறநாட்டினர் அறிந்து கொள்வதற்கும், இந்தியச் செய்திகளை அமெரிக்காவாழ் நகரத்தார்கள் அறிந்து கொள்வதற்கும் இண்டர்நெட் இணைப்பு வசதிகளை இச்சங்கத்தினர் செய்துள்ளனர். திருமணம், கல்வி ஆகியவற்றுக்குச் செட்டி நாட்டில் உள்ளவர்கள் உதவிகேட்டால் இச்சங்கத்தினர் நிதி உதவி செய்து வருகின்றனர்.

நியூயார்க் தமிழ்ச்சங்கம், சிகாகோ தமிழ்ச் சங்கம், போன்ற சங்கங்களின் வளர்ச்சியில் அமெரிக்காவாழ் நகரத்தார்களுக்குப் பெரும் பங்குண்டு. குறிப்பாக கானாடுகாத்தானைச் சேர்ந்த டாக்டர் அழகப்பா அழகப்பன் (த.க.) அமெரிக்காவில் நடைபெறும் தமிழ்ப்பணிகள் அனைத்திற்கும் உறுதுணையாக இருந்து வருகிறார்.

அமெரிக்காவில் நடைபெற்றுள்ள ஆலயத் திருப்பணிகள் பலவற்றிலும் நகரத்தார் முன்னின்று செயலாற்றியுள்ளனர். முதன் முதலில் நியூயார்க்கில் கட்டப் பெற்ற விநாயகர் கோவில் திருப்பணியில் டாக்டர் அழகப்பா அழகப்பனுக்குப் பெரும் பங்கு உண்டு. இக்கோவிலில் வைத்துப் பூசைசெய்ய ஐம்பொன்னாலான நடராசர், சிவகாமசுந்தரி மாணிக்கவாசகர் திருவுருவச் சிலைகளைக் கோவிலூர் ஆதீனத் தலைவர் அருள்மிகு இராம்நாத தேசிகர் நன்கொடையாக வழங்கியுள்ளார். பிட்சுபர்க்கில் கட்டப்பட்டுள்ள வெங்கடேசுவரர் ஆலயத் திருப்பணியில் தொடக்கத்திலிருந்து ஈடுபட்டவர் கோனாபட்டைச் சேர்ந்த டாக்டர். வள்ளியப்பன் ஆவார். ஹூஸ்டனில் அமைக்கப் பட்டுள்ள மீனாட்சி கோவில் திருப்பணியைத் தொடங்கியவர் நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த எஸ். கண்ணப்பன். தொடர்ந்து அப்பணியில் ஈடுபட்டு வருபவர் அரிமழத்தைச் சேர்ந்த வயி. சுப்பிரமணியம். வாஷிங்டன் சிவா விஷ்ணு ஆலயத் திருப்பணியில் நெற்குப்பையைச் சேர்ந்த டாக்டர். இராம. பனையப்பன், அவரது துணைவி வள்ளி ஆகியோர் ஈடுபட்டுச் செயலாற்றினர்.

செல்வம் கொழிக்கும் அமெரிக்காவின் பரபரப்பான வாழ்க்கைக்கு இடையிலும் சமயப்பணி, தமிழ்ப்பணி ஆகியவற்றால் அங்கு வாழும் நகரத்தார்கள் நகரத்தார் பண்பாட்டைப் பேணிக் காத்து வருகின்றனர்.

அமைச்சன்

இப்பெயரில் திங்கள் இதழ் ஒன்று சென்னையிலிருந்து 1964 முதல் 1966 வரை வெளிவந்தது. ஆசிரியராக இருந்து இவ்விதழை நடத்தியவர் ஸ்டார் பிரசுரத்தின் உரிமையாளரான மதகுபட்டி கண. இராமநாதன். இவ்விதழில் இவரது துணைவியார் கோமதி இராமநாதன் செட்டிநாட்டுச் சமையற்கலைபற்றிப் பல கட்டுரைகள் தொடர்ந்து எழுதியிருக்கிறார்.

இந்த இதழ் டெம்மி 1 × 8 அளவில் 60 பக்கங்களைக் கொண்டதாக வெளிவந்தது. ஓரிதழின் விலை 50 காசுகள்.

அரங்கநாதன் செட்டியார், இராம., (1908 - 9-8-1991)

வைரவன் கோவில்
கருங்குளம்
கல்வியாளர்

இவர், தம் இளவயதிலேயே இராசா சர் அண்ணாமலைச் செட்டியாரிடம் வேலைக்குச் சேர்ந்தார். அவரது பல்வேறு நிறுவனங்களில் தொடர்ந்து எழுபது ஆண்டுகள் பணியாற்றிய சிறப்புடையவர்.

கோயமுத்தூரில் சவுத் இந்தியா கார்ப்பரேசன் பொது மேலாளராகப் பல ஆண்டுகள் பணி யாற்றிய இவர் கோவை நகரத்தார் சங்கத்தில் பல ஆண்டுகள் துணைத் தலைவராகவும் மூன்று ஆண்டுகள் தலைவராகவும் தொண்டாற்றியுள்ளார். கோவை நகரத்தார் கல்வி அறக்கட்டளையின் தலைவராகப் பொறுப்பேற்றுப் பிருந்தாவன் பள்ளிக்குச் சொந்தக் கட்டிடம் உருவாகப் பெரிதும் காரணமாக அமைந்தார். தம் சொந்த ஊரை அடுத்த பட்டமங்கலத்தில் தம் மனைவியின் பெயரால் வள்ளியம்மை ஆச்சி மேல்நிலைப் பள்ளியை நிறுவியுள்ளார். விரைந்து முடிவெடுக்கும் ஆற்றல் கொண்ட இவர் மிகச் சிறந்த நிருவாகியாவார்.

அரண்மனை சிறுவயல்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல் வழியாகக் காளையார்கோவில் செல்லும் சாலையில் 26 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், சூரக்குடி ஆகிய ஐந்து கோவில்களைச் சேர்ந்த 150 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது கல்லல் ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது பாண்டியர்கள் இவ்வூரில் அரண்மனை கட்டி, இதனையே தங்கள் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். சிவகங்கைச் சரித்திரக் கும்மியும், அம்மானையும் மருதுபாண்டியர் இங்கே அரண்மனை கட்டியதை விளக்குகின்றன.

Koviloor Digital Library

மேலும் பாழடைந்த அரண்மனையின் பகுதிகளை இவ்வூரில் இன்றும் காண முடிகிறது. இவ்வாறு இவ்வூரில் அரண்மனை இருந்ததனால் இது அரண்மனை சிறுவயல் என்ற பெயரைப் பெற்றது என்பர். இதனைப் பேச்சுவழக்கில் நகரத்தார் அ. சிறுவயல் என்று குறிப்பிடுவர்.

இங்குள்ள பழைமையான மும்முடீசுவரர், கருணாகடாட்சி ஆலயம் என்ற சிவன் கோவில், பெரிய பெருமாள் கோவில், புலிக்குட்டி அம்மன் கோவில் ஆகியவை சிவகங்கை அரச குடும்பத்துக்குரிய கோவில்களாம். இவற்றுள் சிவன் கோவிலுக்கு நகரத்தார் முயற்சியாலும் நிதியுதவியாலும் திருப்பணி செய்யப்பெற்று 21–4–1995 இல் குடமுழுக்குச் செய்யப்பெற்றது. இப்போது பெருமாள் கோவில் குடமுழுக்குத் திருப்பணியை நகரத்தார் செய்து கொண்டிருக்கிறார்கள். நகரத்தார் பொதுவில் கட்டி நிருவகிக்கும் சித்தி விநாயகர் கோவிலும் இவ்வூரில் உள்ளது.

சென்னை – இராமேசுவரம் இருப்புப் பாதையில் அமைந்துள்ள இவ்வூரில் இருப்புப் பாதை நிலையம் உள்ளது. நகரத்தாரால் நடத்தப்பெறும் தாகூர் நடுநிலைப்பள்ளி உள்ளது. சுற்றுவட்டாரச் சிற்றூர் அனைத்தும் பங்கேற்கும் பாரிவேட்டை என்னும் திருவிழா இவ்வூரில் நடைபெறுகிறது.

நகரத்தார் ஆடிமாதம் முதல் வெள்ளியன்று ஆடிப்பூசையும், தைமாதம் முதல் செவ்வாயன்று அம்மன் கோவிலில் செவ்வாய்ப் பொங்கலும் ஆண்டுதோறும் நடத்தி வருகின்றனர். இவ்வூர்ச் சூரக்குடிப் பங்காளிகள் பொதுப்படைப்பு ஒன்றைப் படைத்து வருகின்றனர்.

அரிமழம்

கீழப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து பள்ளத்தூர், கொத்தமங்கலம், இராயவரம் வழியாக 44 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், இலுப்பைக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய ஏழு கோவில்களைச் சேர்ந்த 680 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். அரி (சந்திரன்) மழவாகி (இளங்குழந்தையாகி) வந்து இவ்வூரில் சாபம் நீங்கப் பெற்றமையால் இப்பெயர் வந்தது எனத் தலபுராணம் கூறுகிறது. இவ்வூர் ஜெயவிளங்கியம்மன் கோவிலில் அரும்பழம் பழுக்கும் ஏறழிஞ்சி மரம் உள்ளது. ஆகவே அரும்பழம் என்ற பெயர் அரிமழம் என மருவியதாகவும் கூறுகின்றனர். இது அரிமழம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பேரூராட்சி.

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் நகரச் சிவன் கோவிலாகும். 1870 இல் முதற்குடமுழுக்கு நடைபெற்றது. பின்னர் கற்கோவிலாக எடுக்கப்பெற்று 5–5–44, 23–5–58, 2–2–75, 21–10–91 ஆகிய நாட்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றன. இங்கு சித்திரைத் திருவிழாவும் மகார் நோன்பும் சிறப்பாகக் கொண்டாடப் பெறும். மு.தெ.இராம. பிச்சப்ப செட்டியார் வகையார் கட்டி நிருவகிக்கும் சீனிவாசப் பெருமாள் கோவில் என்னும் வடகலைப் பெருமாள் கோவிலும் ப.செ.செ.மு.கதி. குடும்பத்தார் கட்டி நிருவகிக்கும் சௌந்தரராசப் பெருமாள் கோவில் என்னும் தென்கலைப் பெருமாள் கோவிலும் உள்ளன. ஜெயவிளங்கியம்மன் கோவில், முருகன் கோவில், ஐயனார் கோவில் ஆகியவையும் உள. புது அரிமழம் செல்வ விநாயகர் கோவில், மீனாட்சிபுரம் பிள்ளையார் கோவில் இரண்டும் செ.சு. இராம. குடும்பத்தாரால் கட்டி நிருவகிக்கப் பெறுகின்றன. கீழப்பனையூர் காமாட்சியம்மன் கோவில் அரிமழம் நகரத்தார் திருப்பணியாகும். செட்டியூருணி மாத்தூர்க் கோவிலாரான ப. செ. செ. மு. கதி. குடும்பத்தாராலும், எட்டாம் மண்டகப்படி ஊருணி இராம.செ. குடும்பத்தாராலும், சிவன்கோவில் ஊருணி பிள்ளையார்பட்டி குட்டையஞ் செட்டியார் வகையாராலும், செல்வவிநாயகர் கோவில் ஊருணியும் மீனாட்சிபுரம் பிள்ளையார் கோவில் ஊருணியும் செ.சு.இராம. குடும்பத்தாராலும், கீழப்பனையூர் பிள்ளையார் கோவில் ஊருணி நேமங்கோவில் நகரத்தாராலும், பெரிய பொற்குடையான் ஊருணி வைரவன் கோவில் காடப்ப செட்டியார் சடையப்ப செட்டியாராலும், சிறிய பொற்குடையான் ஊருணி நேமங்கோவில் நகரத்தாராலும் வெட்டுவிக்கப் பெற்றன. தெப்பத் திருவிழா நடைபெறும் பொற்குடையான் ஊருணியும் புது அரிமழம் ஊருணியும் குடிநீர்க் குளங்கள் ஆகும்.

பிள்ளையார்பட்டிக் குட்டையஞ் செட்டியார் வகையினர் 2 ஆண்டுகட்கு ஒருமுறை சித்ரா பௌர்ணமியை ஒட்டிப் பொதுப்படைப்புப் படைக்கின்றனர். மாத்தூர் மணலூர்ப் பிரிவினரும், அரும்பாக்கூர் ச. இராமன் செட்டியார் வகையாரும் தனித்தனியே பொதுப்படைப்புப் படைக்கின்றனர்.

கண்ணதாசன் இலக்கியப் பேரவை பல ஆண்டுகளாக இவ்வூரில் தமிழை வளர்த்து வருகிறது. மாத்தூர் அரும்பாக்கூர் புதுமனை செ.

Koviloor Digital Library

பழநியப்ப செட்டியார் வகையாரால் 60 ஆண்டுகட்கும் மேலாக, ஒரு மாதம் இராமாயணம் படிக்கப்படுகின்றது. இவர்கள் வீட்டுக்கு இராமாயணக்கார வீடு என்றே பெயர்.

இவ்வூரில் குட்டையஞ் செட்டியார் வகையார் குருபூசை மடம் உள்ளது. இப்போது குருபூசை நடைபெறுவதில்லை. மாத்தூர் அரும்பாக்கூர் ப.செ.செ.கதி.செ. குடும்பத்தாரால் அப்பர் குருபூசை கீழமடத்தில் கொண்டாடப் பெறுகிறது. வைகாசி சுவாதியில் சாத்தப்ப சுவாமி கோவிலிலும், சேவுக சுவாமி கோவிலிலும் நகரத்தார் குருபூசை செய்கின்றனர். அரிமழத்தில் தங்கிச் செட்டிநாட்டில் பக்தி வளர்த்த கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் அதிட்டானத்தில் (த.க.) சோம.சிவ. குடும்பத்தார் ஐப்பசி மாதம் குருபூசை வழிபாடு செய்கின்றனர்.

1941 இல் இராம.குப.பெரி. இராமநாதன் செட்டியார், பெரிய கருப்பஞ்செட்டியார், நா.மு.நா. செல்லப்ப செட்டியார் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்ட பள்ளி அரசுமேல் நிலைப் பள்ளியாக இப்போது நடைபெறுகிறது. அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ப.செ.செ.கதி.செ. குடும்பத்தாரின் தருமமாகும். வ.பெரி. குடும்பத்தார் தொடங்கிய தொடக்கப் பள்ளி இப்போது ஒன்றிய நிருவாகத்தில் நடைபெறுகிறது. கதி. செல்லப்ப செட்டியாரால் இடம் கட்டிடம் நன்கொடை அளிக்கப்பெற்ற செல்லப்பா அரசினர் மருத்துவமனை இவ்வூரில் உள்ளது.

முருகன் கோவிலில் அரிமழம் நகரத்தார் தைப்பூசத்தன்று மகேசுவர பூசை செய்து அன்னதானம் செய்து வருகின்றனர். பிள்ளையார்பட்டி நகரத்தார் ஆடிமாதம் முதல் வாரத்திலும் மாத்தூரார் ஆடிமாதம் திங்கட் கிழமையிலும் அன்னதானம் செய்து வருகின்றனர்.

வைரவன் கோவில் அரு. அண்ணாமலை ஐயா திருப்பெருந்துறையில் திருவாசக மடமும், நந்தவனமும், குளமும், திருநாகேசுவரத்தில் பசுமடமும் காஞ்சிபுரத்தில் தேவார பாடசாலையும் அமைத்துள்ளார். திருநீடூரில் இவர் சிவன் கோவில் திருப்பணி செய்துள்ளார்.

வைரவன் கோவில் சு.மு.கா. இராமன் செட்டியார் திருவேற்காட்டில் நந்தவனமும் திருமழபாடியில் பசுமடமும் வைத்துள்ளார். பிள்ளையார்பட்டி பழ.வயி. வகையார் திருவெண்காட்டில் பசுமடமும், வயி.மு. குடும்பத்தார் கந்தர்வகோட்டையில் சத்திரமும், சிவ.லெ. வகையார் வடலூரில் விடுதியும், பழ. சடையப்பசெட்டியார் வடலூரில் அன்னதான விடுதியும், அ.செ.சு. குடும்பத்தார் கோவிலூரில் வேதபாடசாலையும் நடத்தி வந்தனர். மதுரை செல்லூர் பசுமடம் முரு.இராம. குடும்பத்தார் தருமமாகும்.

புது அரிமழம் செ.சு.வீடு, வங்காளத்தார் வீடு ஆகியவை கலையழகு மிக்க இல்லங்களாகும்.

அரசஞ் சண்முகனார், சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர், மு.ரா. கந்தசாமிக் கவிராயர் ஆகிய புலவர்களை அரிமழம் போற்றி ஆதரித்தது. தொல்காப்பியம் பாயிர விருத்தி, அரிமழம் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அரிமழத் தல புராணம் ஆகியவை இங்கு தோன்றிய நூல்கள்.

ஜெயவிளங்கியம்மன் கோவிலில் உள்ள ஏறழிஞ்சி மரத்தின் கனி தரையில் விழுந்ததும் தானே மீண்டும் மரத்தில் ஒட்டிக்கொள்ளும் தனித்தன்மை உடையது.

அரியக்குடி

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து தென்கிழக்கில் ஆறு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, வைரவன் கோவில் ஆகிய 2 கோவில்களைச் சேர்ந்த 166 புள்ளிகள் வாழ்கின்றனர். இது சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இரத்தினபுரீசுவரர் – சுந்தர பரமேசுவரி அம்மன் கோவில் நகரச் சிவன் கோவில் ஆகும். 1924 இல் முதல் குடமுழுக்கு விழாவும், 1974 ஜூலையில் மூன்றாவது திருக்குட நன்னீராட்டு விழாவும் நடைபெற்றுள்ளன. நவராத்திரி விழா இங்கு சிறப்பாகக் கொண்டாடப்பெறும். வைரவன் கோவிலைச் சேர்ந்தோர் பெரிய பிள்ளையார் கோவிலைக் கட்டியுள்ளனர். செட்டிநாட்டின் ஒரே வைணவத் திருப்பதியான அரியக்குடி தென் திருப்பதி என்று போற்றப்பெறும். இங்குள்ள பெருமாள் கோவில் சேவுகஞ் செட்டியாரால் கட்டப்பெற்றதாகும். சேவுகஞ்செட்டியார் ஆண்டு தோறும் திருப்பதிக்குச் செல்வார். தமது காணிக்கையோடு பிறர் தருவதையும் ஏற்று உண்டியலில் கொண்டு போய்ச் செலுத்துவார். தமது தள்ளாத வயதிலும் அவர் இவ்வாறு நடந்து சென்ற போது பெருமாளே நேரில் தோன்றி அரியக் குடியிலேயே கோவில் கட்டிக் காணிக்கை செலுத்தித் தன்னை வழிபடுமாறு கூறினார் என்பர். திருப்பதியிலிருந்து சடாரியும் திருமயத்திலிருந்து அக்கினியும் ஸ்ரீரங்கத்திலிருந்து பூக்குடலை மூலம் நம்பெருமான் விக்கிரகமும் கொண்டு வரப்பெற்று இக்கோவில் அமைக்கப்

Koviloor Digital Library

பெற்றது. புரட்டாசித் திருவோண நாளில் 'கோவிந்தா போடுதல்' சிறப்பான விழாவாகும். புரட்டாசி சனிக்கிழமை தோறும் ஏராளமான மக்கள் வந்து வழிபடுவர். நகரத்தார் 11 திருவிழா மண்டகப்படி நடத்துகின்றனர்.

வைரவன் கோவிலார் கட்டிய பெரிய பிள்ளையார் கோவில் ஊருணி, சிவன்கோவில் ஊருணி, பிள்ளையார் கோவில் எதிரில் உள்ள ஆதியா ஊருணி ஆகியவை உள்ளன.

சா. இராம. சித. இராம. சிதம்பரம் செட்டியார் வீட்டில் ஒரு மாதம் இராமாயணம் படிக்கப் படுகிறது.

கல்யாண கிருஷ்ணா தொடக்கப்பள்ளி வயி.இராம. கிருஷ்ணன் செட்டியாரால் கட்டப்பெற்று, இப்பொழுது ஊராட்சி ஒன்றிய நிருவாகத்தில் நடைபெறுகிறது. அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கிருஷ்ணன் செட்டியார் இடம் நன்கொடையளித்துள்ளார். நாராயணன் செட்டியார், வெ. இராம. மு. சீ. இராம. வெங்கடாசலம் செட்டியார் பெயரால் பள்ளிக்குக் கட்டிடம் கட்டித் தந்துள்ளார். கல்யாண கிருஷ்ணா மருத்துவமனை அமைந்துள்ள இடம், கட்டிடம், மருத்துவ மனைக் கருவிகள் வயி.இராம.கி. கிருஷ்ணன் செட்டியார் நன்கொடையாகும். அரியக்குடி, கண்டனூரைச் சேர்ந்த வைரவன் கோவில் நாச்சாஞ் செட்டியார் வகைப் பங்காளிகள் ஆண்டு தோறும் பொதுப்படைப்புப் படைக்கின்றனர்.

அரியக்குடி நகரத்தார் ஸ்ரீரங்கத்தில் அமைத்துள்ள புகழ்பெற்ற சித. சத்திரம் ஏழைக் குழந்தைகள் 30 பேருக்கு உணவளித்துப் படிக்க வைக்கிறது; அரியக்குடித் தேர்த் திருவிழாவில் தேரிழுக்கும் கிராம மக்களுக்குச் சாப்பாடு போடுகிறது; வைரவன் கோவிலாரான கா.முரு. குடும்பத்தினர் விடுதியும், இராமசா. குடும்பத்தினர் நந்தவனமும் திருக்கண்ணபுரத்தில் அமைத்துத் தொண்டு செய்து வருகின்றனர். காரைக்குடி வெ.இராம. வகையார் மடமும், கானாடுகாத்தான் க.வெ.சித. குடும்பத்தார் விடுதியும் அரியக்குடியில் அமைந்துள்ளன.

5 குடும்பத்தைச் சேர்ந்த அகுதார் வகையார் சீனிவாசன் சாமிவீடு என்னும் பெரியசாமி வீடு வைத்து வழிபடுகின்றனர். அதிலிருந்து பிரிந்ததே முரு.சா. சாமி வீடாகும். சாமி வீட்டு நிருவாகிகள் நாள் தோறும் நெய்விளக்கேற்றி வழிபடுவர். புரட்டாசி சனிக்கிழமையில் அரியக்குடி வரும் நகரத்தார்கள் சாமி வீட்டில் வந்து மாவிளக்கு வைத்து, அருச்சனை செய்து வழிபடுவர். பல நகரத்தார் குடும்பத்தினர் இந்தச் சாமி வீட்டில் தீர்த்தம் குடிப்பதை மரபாக வைத்துள்ளனர். அரி+ஐ+குடி எனக் கொண்டு பெருமாளும் சிவனும் நிலைபெற்றுக் காக்கும் ஊர் அரியக்குடி என்னும் காரணவழக்கு வழங்கி வருகிறது. பாடுவார் முத்தப்பர் சாபத்தால் புள்ளி பெருகாமல் தேக்க நிலை ஏற்பட்டதாகவும், சிவன் கோவில் குடமுழுக்கில் கவியரசர் கண்ணதாசன் பாடிய பாடலால் சாபம் நீங்கி மீண்டும் புள்ளிகள் பெருகியதாகவும் கூறுகின்றனர். அரியக்குடி அரங்கநாதன் செட்டியார், இராமநாதன் செட்டியார் ஆகியோர் பெருமாள் மீது பல நூல்கள் இயற்றியுள்ளனர்.

அருணாசலம், அ., (19-11-1934)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
வரி - அறிவுரையாளர்

சா.வெ.அரு.அழ. அழகப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் இரண்டாவது மகன் (பார்க்க : அழகப்பன், டாக்டர் அழகப்பா. வள்ளியப்பன், அ.) வரலாற்றில் முதுகலைப் பட்டமும், வழக்கறிஞர் பட்டமும் பெற்றவர். 1959 இல் இந்திய வருவாய்த் துறைப் பணியில் (IRS) சேர்ந்தார். அத்துறையின் வருமான வரிப்பிரிவில் முதல் பிரிவு வருமான வரி அதிகாரியாகத் தொடங்கி வருமான வரி ஆணையாளர் எனும் உயர் பதவி வரை பல்வேறு பொறுப்புக்களில் பணியாற்றினார். இறுதியாக ஆந்திரப் பிரதேசத் தலைநகர், ஐதராபாத்தில் வருமானவரி ஆணையாளராகப் பணியாற்றி 1987 இல் விருப்ப ஓய்வு பெற்றார். அதுமுதல் தனிப்பட்ட முறையில் வரி அறிவுரையாளராகவும், வரி தொடர்பான வழக்கறிஞ ராகவும் செயல்பட்டு வருகிறார்.

போர்டு அறக்கட்டளையின் நிதி உதவி பெற்று, நியூயார்க்கிலுள்ள கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் ஆறு மாதமும், ஐ.நா.வின் வளர்ச்சித்திட்ட நிதி உதவி பெற்று லாசுஏஞ்சல்சில் உள்ள தென் கலிபோர்னியா பல்கலைக் கழகத்திலும் வரி நிருவாகத் துறையில் பயிற்சி பெற்றவர். புது தில்லி பல்கலைக் கழகத்தின் உலக நடைமுறைகள் பற்றிய ஆய்வுத் துறையில் ஐந்தாண்டுகள் பணியாற்றியுள்ளார்.

இந்திய வருவாய்த் துறைப் பணியில் உயர்பதவியில் பணியாற்றி ஓய்வுபெற்ற நகரத்தார் என்ற பெருமையுடையவர் இவர்.

Koviloor Digital Library

அருணாசலம், அ.மு.மு., (1-3-1918)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
பள்ளத்தூர்
தொழிலதிபர்

திவான்பகதூர் அ.மு. முருகப்பசெட்டியார், வள்ளியம்மை ஆச்சியின் மகன். முருகப்பா நிறுவனங்களின் தலைவரான இவர் அவற்றைச் சிறப்பாக நிருவகித்து வருகிறார். ஹெர்குலிஸ் சைக்கிள்கள் தயாரிக்கும் நிறுவனம், கார்போரண்டம் யுனிவர்சல் ஆகிய இவருடைய



அ.மு.மு. அருணாசலம்

நிறுவனங்கள் உலகப் புகழ்பெற்றவை. ஐ.சி.ஐ. இந்தியா லிமிடெட், யுனிவர்சல் கேபிள் நிறுவனங்கள் ஆகியவற்றின் இயக்குநராவார். 1969 ஆம் ஆண்டில் சென்னை தொழில் வணிகச் சங்கத்தின் தலைவராகவும், 1963 – 64 இல் சென்னை உற்பத்திக் குழுமத்தின் தலைவராகவும், 1971 – 73 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம், 1967 இல் சைக்கிள் உற்பத்தியாளர்கள் சங்கம், 1978 – 81 ஆம் ஆண்டுகளில் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் தலைவராகவும் தொண்டு புரிந்துள்ளார். 1968 இல், இலண்டனில் நடைபெற்ற 23ஆவது தொழில் வணிக மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து சென்ற தொழில் வணிகக் குழுவுக்கு இவர் தலைமைப் பொறுப்பேற்றுச் சென்று வந்தமை குறிப்பிடத் தக்கது. ஏ.எம்.எம் மருத்துவ அறக்கட்டளை, ஏ.எம்.எம் கல்வி அறக்கட்டளை ஆகியவற்றை நிறுவிச் சமுகத்துக்குத் தொண்டு செய்து வருகிறார். 1962 – 65 ஆம் ஆண்டுகளில் ஜப்பான் நாட்டின் கௌரவத் தூதுவராக இந்தியாவில் பணியாற்ற ஜப்பானியப் பேரரசரால் நியமிக்கப்பட்டமை இவரது நிருவாகத் திறனுக்கும் மக்கள் சேவைக்கும் கிடைத்த பரிசாகும். கௌரவத் தூதுவராக இவர் நிறம்படப் பணியாற்றியமைக்காக ஜப்பான் மன்னர் 'உதயசூரியன் சிறப்பு விருது' என்னும் விருதினை வழங்கிப் பெருமைப்படுத்தினார். காஞ்சிமாமுனிவரின் ஆணைக்கேற்பக் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோவில் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு தொண்டாற்றியுள்ளார்.

அருணாசலம், சுப., (4-10-1922 - . . .)

வைரவன் கோவில் - தெய்வநாயகர் வகுப்பு
பள்ளத்தூர்
விடுதலைப் போராட்ட வீரர்

காந்தியவாதியாகத் தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர். உடை, குரல், அரசியல் ஈடுபாடு, தமிழ்ப்பற்று ஆகியவற்றில் கம்பன் அடிப்பொடி கணேசனாரைப் பின்பற்றியவர். வீர விவேகானந்தர் என்ற பாராட்டுப் பெற்றவர். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பலமுறை சிறைசென்றவர்.

இவர் மேடை நாடகங்களில் நடித்துப் பல பரிசுகள் பெற்றுள்ளார். வானொலி நாடகங்களிலும் பங்கு பெற்றுள்ளார். சமய இலக்கிய உரைகளைக் கோவை வானொலியில் நிகழ்த்தியுள்ளார். சேலம் ஜவகர் மில்ஸ், பாப்பணசேரி வெஸ்டர்ன் இந்தியா காட்டன் மில்ஸ், நாச்சம்மை காட்டன் மில்ஸ் ஆகியவற்றில் இயக்குநராகப் பணியாற்றியுள்ளார்.

தம் இளமைக் காலத்திலேயே பள்ளத்தூரில் முத்தப்பா நூல்நிலையம் தொடங்கியவர். ஏ.கே. செட்டியாரின் 'குமரிமலர்' இதழின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர். உடுமலைப்பேட்டை தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சியில் இவர் பங்கு குறிப்பிடத்தக்கது. கரூரில் பாரதி கழகம், திருப்புகழ்க் கழகம், தமிழ் எழுத்தாளர் சங்கம், கம்பன் கழகம் ஆகிய அமைப்புக்களைத் தொடங்கித் தொடர்ந்து தொண்டாற்றச் செய்தவர். முத்தமிழ்ச் செல்வர், கற்கண்டுச் சொற்கோ, தமிழ்க்கொண்டல் ஆகியவை இவர் பெற்ற பட்டங்கள். நேபாளம், அமர்நாத் பற்றிய பயணக் கட்டுரைகளையும், 'தமிழன் கண்ட மதம்' என்ற நூலையும் எழுதியிருக்கிறார்.

அருணாசலம் செட்டியார், உ., (அக்டோபர் 1901 - 19-10-1951)

வைரவன்கோவில் - பெரிய வகுப்பு
கடியாபட்டி
இதழாசிரியர்

உத்தமன் செட்டியார் – தெய்வானை ஆச்சியின் மகன். தம் இளம் வயதில் பர்மாவில் நத்தலின் என்னும் ஊரில் உள்ள கடைக்குத் தொழில்பழகச் சென்றார். பின்னர் மலாக்காவிலுள்ள நகரத்தார் கடைகளில் பணியாற்றினார். பின்னர் இன்சூரன்ஸ் தொழிலை மேற்கொண்டார்.

Koviloor Digital Library

1920இல் மலாக்காவில் தனவைசிய ஊழியர் சங்கத்தின் கிளை தொடங்கப்பட்ட பொழுது அதில் உறுப்பினராகிப் பொது வாழ்வைத் தொடங்கினார். அதன் சார்பில் மலாயாவின் பல நகரங்களிலும் சென்று சொற்பொழிவாற்றினார். 1926 இல் இந்தியர் – இலங்கையர் சங்கத்தை நிறுவியதில் இவருக்கும் பெரும்பங்கு உண்டு. 1931, 1937 ஆம் ஆண்டுகளில் அச்சங்கத்தின் தலைவராகவும் இவர் பணியாற்றியிருக்கிறார். 1933இல் மலாக்கா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கம் உருவானதற்கும் இவர்தம் பெருமுயற்சியே காரணம். அச்சங்கத்தின் தொடக்ககாலச் செயலராகவும் இவர் திகழ்ந்தார். நகரத்தார்கள் மேற்கொண்ட சன்னாசிமலை ஆண்டவர் கோவில் திருப்பணியில் இவர் முன்னின்றார்.

1939 இல் 'தமிழ்க்கொடி' என்னும் திங்கள் இதழைத் தொடங்கித் தம் வாழ்நாளின் இறுதிவரை நடத்தினார். தம் இல்லத்தில் திருவள்ளுவர் நூல் நிலையத்தைத் தொடங்கி மலாக்காவில் தமிழ் வளர்த்தார். பின்னர் இவர் பள்ளத்தூர் கா. இராமநாதனுடன் இணைந்து நிறுவிய மலாயா தமிழ்ப்பண்ணை மலாயாவில் பல நகரங்களில் தமிழ் மாநாடுகளை நடத்தியதுடன், திருக்குறள் தமிழ்இலக்கிய வகுப்புக்களையும் நடத்தியது. இவர்தம் பெருமுயற்சியால் திருக்குறள் மலாய் மொழியில் மொழி பெயர்க்கப் பெற்றது. உத்தமநாதன் அல்லது சத்தியபுரி ஜமீந்தார், இந்திரா, பி. ஏ., காரைக்கால் அம்மையார் ஆகிய நாடக நூல்களை இவர் எழுதியுள்ளார்.

இடையில் தமிழகத்தில் காரைக்காலில் சில ஆண்டுகள் வாழ்ந்தபோது காரைக்கால் சைவ சித்தாந்த வித்தியாசிரமத்தில் உறுப்பினராகிச் சைவ சித்தாந்தச் சொற்பொழிவாளராக விளங்கினார். இந்த அமைப்பு தன்னுடைய இரண்டாவது ஆண்டுவிழாவில் இவருக்குத் 'தமிழறம் பேணும் தகைமையாளர்' என்ற பட்டத்தை வழங்கியது. தேசிய இயக்கத்திலும் ஈடுபாடு கொண்ட இவர் 1927 இல் கடியாபட்டி யிலும் 1934இல் காரைக்காலிலும் காந்தியடிகளை வரவேற்பதற்காக அமைக்கப்பட்ட குழுக்களில் உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார்.

தமிழ் உணர்வும் தேசிய உணர்வும் சைவ சித்தாந்த அறிவும் சமூகத்தொண்டில் ஆர்வமும் கொண்ட இவர் மலேயாவில் தமிழ் உணர்வை ஊட்டித் தமிழ்வளர்த்த நகரத்தார்களில் முன்னோடியாவார்.

அருணாசலம் செட்டியார், உ.அ. பெரி.மு.,

இரணிக் கோவில்
பள்ளத்தூர்
கல்லூரி நிறுவுநர்

பள்ளத்தூரில் 1922இல் அருணாசலம் செட்டியார் உயர்நிலைப் பள்ளியைத் தோற்று வித்தார். மேனிலைப் பள்ளியாக வளர்ந்துள்ள இப்பள்ளி இன்றும் இக் குடும்பத்தாரின் நிருவாகத்தில் இருந்து வருகிறது. 1962இல் தம் மனைவி பெயரால் பள்ளத்தூரில் சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரியைத் தொடங்கினார். நகரத்தார் நிருவாகத்தில் உள்ள ஒரே மகளிர் கல்லூரி என்பது இதன் தனிச் சிறப்பு.

பள்ளத்தூர் பேரூராட்சித் தலைவராக ஒருமுறையும், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக மும்முறையும் (1961 – 68) தேர்ந்தெடுக்கப்பட்டுத் தொண்டாற்றியவர். இந்தியன் வங்கி, உடுமலைப் பேட்டை வெங்கடேசுவரா நூற்பாலை மேலும் பல நூற்பாலைகளில் இயக்குநராகப் பணியாற்றி யுள்ளார். ஆங்கிலேய அரசு இவரது கல்வி அறப்பணியைப் பாராட்டி இவருக்கு 'ராவ்பகதூர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

அருணாசலம் செட்டியார், ந., (. . . - 1985)

இலுப்பைக்குடி
தேவகோட்டை
நாடாளுமன்ற உறுப்பினர்

தமது 14ஆவது வயதில் பள்ளியில் படிக்கும் போதே காங்கிரசு இயக்கத்தில் ஈடுபட்டார். நாமக்கல்லில் மூதறிஞர் இராஜாஜி தலைமையில் நடைபெற்ற அந்நியத் துணிகள் புறக்கணிப்பு இயக்கத்தில் பங்கு கொண்டார். அன்று முதல் தாம் இறக்கும்வரை கதராடையே அணிந்து வந்தார். 1942 சுதந்திரப் போராட்டத்தின்போது தேவகோட்டை அரு. சிற்சபேசன் தலைமையில் தேவகோட்டை சப்கோர்ட் இயங்கக் கூடாதென நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டதால் ஓராண்டுக்காலம் தலைமறைவாக வாழ்ந்தார்.

1952 முதல் 1965 வரை 13 ஆண்டுகள் தேவகோட்டை நகராட்சி உறுப்பினராகவும் ஐந்து ஆண்டுகள் துணைத் தலைவராகவும்

Koviloor Digital Library

பொதுத்தொண்டு புரிந்தார். 1952 முதல் 1961 வரை தேவகோட்டை காந்தி ஹரிஜன் மாணவர் விடுதியின் செயலாளராகச் சீரிய பணி யாற்றினார். 1960 முதல் 1967 வரை தேவகோட்டை – திருவாடானைத் தாலுகா சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்கத்தின் தலைவராக இருந்தார்.

1962 இல் இராமநாதபுரம் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராகப் போட்டியிட்டுச் சிறப்பான வெற்றி பெற்றார். காமராசர் மற்றும் மத்திய அமைச்சர்களோடு நெருங்கிய நல்லுறவு கொண்டிருந்தார். இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது செட்டி நாட்டுக்குச் செய்த சேவைகள் மறக்க இயலாதவை. காரைக்குடியில் இயங்கிவரும் மத்திய அரசு நிறுவனமான மத்திய மின் வேதியியல் ஆய்வுநிறுவனம் (சூக.) சென்னைக்கு மாற்றப்பட இருந்தபோது அதைத் தடுத்து இப்பகுதியிலேயே இயங்கச் செய்தார். இலுப்பைக்குடிக் கோவில் நிலங்களை அரசு எடுத்துக்கொள்ள முனைந்த போது அதைத் தடுத்துக் காத்தார். எளிமையும் பிறர்க்கு உதவும் இதயமும் கொண்டவராக எல்லோராலும் பாராட்டப் பெற்றார்.

அருணாசலம் செட்டியார், வைரம், உ.அ.

இரணிக் கோவில்
பள்ளத்தூர்
கலைப் புரவலர்

நாடகக்கலை வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் காரைக்குடியில் ஸ்ரீ ராம பால கான விநோத சபை என்ற நாடகக்குழு ஒன்றை ஏற்படுத்தி, பல ஊர்களுக்குச் சென்று சமூக, வரலாற்று நாடகங்களை நடத்தினார். பின்னர் 1940 இல் வைரம் நாடகசபாவைத் தோற்றுவித்து பல கலைஞர்களை உருவாக்கி நாடகக்கலை வளர்ச்சிக்குத் தொண்டாற்றினார். இவரது இந்த நாடகக் குழுவே நவரச நடிகை மனோரமாவைக் கலையுலகிற்கு அறிமுகப்படுத்தியது. நாடகக் கலையின் வளர்ச்சிக்காக உடலுழைப்போடு, தம் கைப்பொருள் பல இலட்ச ரூபாய்களையும் செலவிட்ட இவரது கலைத் தொண்டினைப் பாராட்டி 1969இல் தமிழக அரசு இவருக்குக் கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்தது.

வைர விற்பனையைத் தம் தொழிலாகக் கொண்ட இவர், காரைக்குடியில் தொடங்கி நடத்தப்பட்ட செட்டிநாடு வங்கியின் நிருவாக இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

அருணாசலம், தே.இரா., (26-11-1915 - 12.1-1979)

இலுப்பைக்குடி
தேவகோட்டை
விடுதலைப் போராட்ட வீரர்

இராமநாதன் செட்டியார் – குப்பாள் ஆச்சியின் மகன். கும்பகோணம் உயர்நிலைப் பள்ளியிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பயின்றவர். காங்கிரசு இயக்கத்தில் ஈடுபட்டு விடுதலைப் போராட்டத்திற்காகப் படிப்பைத் துறந்தார்.

டி.ஆர். என அழைக்கப்பட்ட இவர், 1939 முதல் காங்கிரசில் தீவிரமாகப் பணியாற்றி 1941 இல் தனிநபர் சத்தியாகிரகம் செய்தமைக்காகக் கைது செய்யப்பட்டார். ஆறுமாதம் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் ஒறுப்புத் தொகையும் விதிக்கப்பட்டன. 1942 இல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டார். இவரது தூண்டுதலாலும் இவர் நண்பர்களாலும் அன்று நீதிமன்றம் கொளுத்தப்பட்டது என வழக்குத் தொடரப்பட்டது. மதுரை, அலிப்புரம், வேலூர், தஞ்சாவூர்ச் சிறைச்சாலைகளில் இவர் தண்டனை அனுபவித்தார். விடுதலைக்குப்பின், இந்திய அரசு இவரது நாட்டுத் தொண்டைப் பாராட்டித் தாமிரப்பட்டயம் அளித்துள்ளது. சத்திய மூர்த்திக்கும் இராஜாஜிக்கும் இடையே கடும்போட்டி ஏற்பட்ட காரைக்குடிக் காங்கிரசு மாநாட்டிற்குத் தமிழகக் காங்கிரசுக் கமிட்டித் தலைவராகவிருந்த இவரே தலைமை தாங்கினார்.

தேவகோட்டையில் 1941 அக்டோபர் 25, 26ஆம் நாட்களில் மாபெரும் தமிழிசை மாநாட்டை இராஜா சர். அண்ணாமலை செட்டியார் தலைமையில் இவர் முன்னின்று நடத்தினார். இவர் தோற்றுவித்த தேவகோட்டைத் தமிழ் இசைப்பள்ளியைப் பனையப்பட்டி வினைதீர்த்தான் செட்டியார் திறந்துவைத்தார். இயல், இசை, நாடக முத்தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்த இவர் 1975 – 76 ஆம் ஆண்டில் கந்தர்சஷ்டி விழாக் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். லூயிஃபிஷர் எழுதிய 'நான் கண்ட காந்தி', ஜி. ராமச்சந்திரன் எழுதிய 'காந்திஜி வாழ்க்கையில் சில ரசமான சம்பவங்கள்' முதலிய சில நூல்களை ஆங்கிலத்திலிருந்தும் சில நூல்களை இந்தியி லிருந்தும் இவர் மொழி பெயர்த்துள்ளார். மகாத்மா காந்தியடிகளிடத்தில் கொண்ட ஈடுபாட்டால்

Koviloor Digital Library

இவரது மகனுக்கு மோகன் என்று பெயரிட்டார். சிக்கல் திருக்கோவில் அறங்காவலர் குழுத்தலைவராகத் தொண்டாற்றியுள்ள இவர், தம் முன்னோர்கள் திருப்பணி செய்த திருவிடை மருதூரில் மார்கழித் திருவாதிரைத் தரிசனநாளில் இறைவன் திருவடி நிழல் எய்தினார்.

அருணாசலம், தொண்டர், நா., (11-4-1911 - 24-4-93)

பிள்ளையார்பட்டி
கண்டவராயன்பட்டி
விடுதலைப் போராட்ட வீரர், திருப்பணித் தொண்டர்

பழ.கரு.மு.ப. நாராயணன் செட்டியார் – கல்யாணி ஆச்சியின் மகன். 1936 இலிருந்து இவர் காங்கிரசுப் பேரியக்கத்தில் சேர்ந்து விடுதலைப் போரில் பங்கேற்றார். நேதாஜி சுபாஷ் சந்திரபோசிடம் ஈடுபாடு கொண்ட இவர், அவரால் அமைக்கப் பெற்ற இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்தார். கொள்கை பரப்புத் துறையின் தலைவர் பொறுப்பை நேதாஜி இவருக்கு அளித்தார். இவருடைய செயல் திறனைப் பாராட்டி நேதாஜி இவருக்கு 'நவஜீவன் சர்தார்' எனும் பட்டத்தை வழங்கினார்.

நாடு விடுதலை பெற்ற பின் இவர் ஆன்மீகத் துறையில் முனைந்து செயல்பட்டார். இயல்பாகப் பிள்ளையார்பட்டிக் கோவிலின் பரம்பரை அறங்காவலர்களில் இவர் ஒருவர். அந்த அடிப்படையில் கற்பக விநாயகர் கோவிலின் நடப்பு அறங்காவலராகச் சில முறைகள் இவர் பணியாற்றியுள்ளார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அருள்நெறித் திருக்கூட்டம் என்ற ஆன்மீக அமைப்பை ஏற்படுத்தியபோது, அவ்வமைப்பின் செயலாளர் பொறுப்பை இவருக்கு அளித்தார். தமிழ் அருச்சனை இயக்கத்தைப் பரப்ப முனைந்தவர்களில் இவர் குறிப்பிடத்தக்க ஒருவர்.

சிவ வணக்கம், எங்கள் கணேசன் என்ற இரு நூல்களை எழுதியிருக்கும் இவர், கண்டவராயன் பட்டி ஊராட்சி மன்றத் தலைவராக இருமுறை (1955, 1986) தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றினார். இவரது செயல் திறத்தையும், தொண்டு மனப்பான்மையையும் பாராட்டி இராஜாஜி இவருக்குத் 'தொண்டர்' என்ற பட்டத்தை வழங்கினார்.

அரிசனசேவைக்காகத் தமிழ்நாடு அரசு இவருக்கு 1958 இல் வழங்கிய தங்கப் பதக்கத்தைப் பிள்ளையார்பட்டிக் கற்பக விநாயகர் கோவிலுக்கு வழங்கிய சிறப்புடையவர்.

அருணாசலம், மு., (25-4-1958)

வைரவன் கோவில் - தெய்வ நாயகர் வகுப்பு
கண்டனூர்
ஆணழகர்

முத்துச்செட்டியார் – நாச்சம்மை ஆச்சியின் மகன். மதுரை வங்கியில் பணிபுரிகிறார். சென்னை ஆணழகர் சங்கம் 1982 இல் இவருக்கு 'சூப்பர் மேன்' எனப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. 1984 இல் இந்திய இளைஞர் உடல் அழகுச் சங்கம் தமிழ்நாடு மாநில அளவில் நடத்திய ஆணழகர் போட்டியில் இவர் முதற் பரிசு பெற்றார். இரத்ததான முகாம்களை அமைப்பதில் ஆர்வம் உள்ளவர். இரத்தம் தேவைப்படும் நோயாளிகளுக்கு இரத்தம் பெற்றுத்தரும் பணியை நாள்தோறும் செய்து வருகிறார்.

அருணாசலம், மு.வெ., (19-7-1929 - 4-9-96)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
பள்ளத்தூர்
தொழிலதிபர்

அ.மு.மு. வெள்ளையன் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். சென்னை மாநிலக் கல்லூரியில் நிலவியல் முதுகலைப் படிப்பையும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் நிருவாகத் துறைப் பயிற்சியையும் முடித்தார்.



மு.வெ. அருணாசலம்

இ.ஐ.டி. பாரி, டி.ஐ. டைமன்ட் செயின் நிறுவனங்களின் தலைவரான இவர் பாரதிய வித்தியாபவனின் சென்னை மையத்திற்குத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்தின் நிருவாக இயக்குநராகவும், வேறு பத்து நிறுவனங்களின் இயக்குநராகவும் செயலாற்றினார்.

Koviloor Digital Library

தென்னிந்தியத் தொழில் வர்த்தகக் கழகத்திலும், நியூயார்க்கில் உள்ள ஆசியக் கழகத்தின் பன்னாட்டுக்குழுவிலும் உறுப்பினராகப் பணியாற்றினார். வெள்ளையஞ் செட்டியார் அறநிலையத்தின் நிருவாக அறங்காவலராகவும் அ.மு.மு. அறநிலையம், எம்.வி.ஏ. அறநிலையம் போன்றவற்றிலும், புதுதில்லியிலுள்ள லாலா கிரிதர்லால் நினைவு அறநிலையத்திலும் அறங்காவலராகவும் செயல்பட்டுள்ளார்.

பல்வேறு அரசு சார்புடைய, தொழில் தொடர்புடைய, பொது அமைப்புக்களின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றோ, அரசால் பணி அமர்த்தப் பெற்றோ செயல்பட்டிருப்பது தொழில் துறையில் இவரது இன்றியமையாச் சிறப்பைப் புலப்படுத்தும். அவ்வாறு தலைமைப் பொறுப்பேற்றுச் செயல்பட்ட அமைப்புக்களின் பட்டியல் வருமாறு :

தென்னிந்தியத் தொழில் வர்த்தக சபை (1964–65)

சென்னை நிருவாகிகள் சங்கம் (1964 – 65)

நெய்வேலி நிலக்கரிக் கழகம் (1969 – 70)

பொருளாதார மற்றும் அறிவியல் ஆய்வுக் கழகம், புதுதில்லி (1970 – 80)

மத்திய மின் வேதியியல் ஆய்வுக் கழக ஆட்சிக் குழு, காரைக்குடி (1970 – 72)

பன்னாட்டுத் தொழில் வர்த்தகசங்கத்தின் இந்திய தேசியக் குழு (1972 – 73)

இந்தியத் தொழில் வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு, புது தில்லி (1976 – 77)

இந்தியச் சைக்கிள் உற்பத்தியாளர் சங்கம், புதுதில்லி (1976 – 78)

அமெரிக்காவில் நடைபெற்ற இந்திய – அமெரிக்கத் தொழிற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற இந்தியக் குழு (1977).

மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் (1977 – 78)

தென்மண்டல ஏற்றுமதி, இறக்குமதி ஆலோசனைக் குழு (1981 – 83)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (1981–86).

இந்திய அமெரிக்கக் கூட்டுத் தொழிற் குழுவின் இந்தியப் பிரிவு (1987 – 89)

இந்திய – ஜப்பான் தொழிற் கூட்டுறவுக் குழுவின் இந்தியப் பிரிவு (1993 – 95).

இவ்வாறு தொழில் துறையில் சிறப்பு மிக்கவராகிய இவர் தொண்டு நிறுவனமாகிய சுழற்குழுவிலும் பங்கேற்று 320 ஆவது மாவட்டத்தின் ஆளுநராக 1970 – 71 இல் தேர்ந்தெடுக்கப்பெற்றுத் தொண்டாற்றியுள்ளார்.

அரசு அமைப்புக்களாகிய யூனிட் டிரஸ்ட் (1973 – 76), தொழில் முதலீடு மற்றும் கடன் வழங்கு நிறுவனம் (1975 – 87), இந்திய ரிசர்வு வங்கியின் மையக்குழு (1977 – 94) ஆகிய வற்றின் இயக்குநராக அரசால் பணியமர்த்தப் பெற்ற சிறப்புடையவர். அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் (1992 – 95) இவர் பணியாற்றியுள்ளார்.

இவரது மறைவுக்குப்பின் ஜப்பானிய அரசு தமது உயர் விருதினை வழங்கி இவரைச் சிறப்பித்துள்ளது.

அருணோதயம் அருணன், (18-12-1924)

(இயற்பெயர் : அருணாசலம், லெ.)

மாத்தூர் - அரும்பாக்கூர்
தேவகோட்டை
எழுத்தாளர், பதிப்பாளர்

லெட்சுமணன் செட்டியார் – சீதை ஆச்சியின் மகன். பள்ளி இறுதி வகுப்புவரை பயின்றவர். தேவகோட்டையில் விடுதலைப் போரை முன்னின்று நடத்திய சின்ன அண்ணாமலையின் தொண்டராகிப் பின் அவரது தமிழ்ப் பதிப்பகத்தில் பணியாற்றினார்.

அங்கு தென்றல், சினிமா ரசிகன், கலைஅரசு, நிழல், தினச்செய்தி, தினசரி, தமிழ் முழக்கம், அருணன், திரைக்கலை ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றி எழுத்தனுபவம் பெற்றவர். புதுவாழ்வு, வாழ்ந்து காட்டுங்கள் என்னும் இரு நாவல்களோடு சிறுகதைத் தொகுப்பாகிய நாட்டியக்காரி நூலையும், இல்லற இன்பம், இனிய நினைவுகள் ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார். சில திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதியுள்ளார். 1953 ஆம் ஆண்டில் அருணோதயம் என்ற பெயரில் ஒரு பதிப்பகத்தைத் தொடங்கினார்.

வரிசை நூல் வெளியிடுவது இவரது தனிச் சிறப்பாகும். உலக நீதிக்கதை வரிசை, ஆத்திசூடிக் கதைவரிசை, கொன்றை வேந்தன் கதை வரிசை, வரலாற்றுக்கதை வரிசை, இராமாயணக் கதைவரிசை, மகாபாரதக் கதை வரிசை என வரிசைவரிசையாகத் தமிழ்நூல்கள் வெளியிட்டுள்ளார். திருக்குறள், நந்திக்கலம்பகம், முத்தொள்ளாயிரம், குற்றாலக் குறவஞ்சி முதலிய இலக்கியங்களைக் குறைந்த விலையில் மக்கள் பதிப்பாக வெளியிட்டுப் பரப்பிய இவரது பணி பாராட்டத்தக்கது.

Koviloor Digital Library

பதிப்புக்கலைச் செம்மல், அருந்தமிழ்ச் செம்மல், நூல்நெறிச் செல்வர், நூற்பதிப்புச் செம்மல் ஆகியவை இவரது பதிப்புப் பணியைப் பாராட்டி வழங்கப்பட்ட பட்டங்களாகும். அருணன் என்றால் கதிரவன். பதிப்புலகில் தன் புகழால் ஒளிவிடுபவர் அருணோதயம் அருணன் ஆவார். தமிழ்ப் பதிப்புலகில் புகழ்பெற்ற ஒரு பெயர் அருணோதயம். இதனைத் தோற்றுவித்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிட்டுச் சாதனை புரிந்தவர் அருணன்.

அலவாக்கோட்டை

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், செம்பனூர் மதகுபட்டி வழியில் 35 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய 4 நகரக் கோவில் களைச் சேர்ந்த 236 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

மீனாட்சி சொக்கலிங்கர் கோவில் என்ற சிவன் கோவிலும், சீனிவாசப் பெருமாள் கோவில் என்ற பெருமாள் கோவிலும் இவ்வூரில் உள்ளன. சீனிவாசப் பெருமாள் கோவிலைப் பி.நா. குடும்பத்தினரும், சிவன்கோவிலை ஏனைய நகரத்தாரும் நிருவகித்து வருகின்றனர். சிவன் கோவில் முதன் முறையாக 1924இல் குடமுழுக்குச் செய்யப்பெற்றது. பி.நா. குடும்பத்தினர் சீனிவாசப் பெருமாள் கோவில் கட்டி 1909இலும் 1941இலும் குடமுழுக்குச் செய்துள்ளர். இக் குடும்பத்தாரே இலட்சுமி விநாயகர் கோவில் ஒன்றையும் கட்டி நிருவகித்து வருகின்றனர். இவ்வூர் இலுப்பைக்குடி நகரத்தார் சுப்பிரமணியசாமி கோவிலைக்கட்டி நிருவகித்து வருகின்றனர். ஒரு குடிதண்ணீர் ஊருணி உள்ளிட்ட 3 ஊருணிகள் உள்ளன.

இங்கு ஒரு நகர மடம் உள்ளது. அதில் நகரத்தார் ஆடி மாதம் முதல் வெள்ளிக்கிழமை யன்று மகேசுவர பூசை நிகழ்த்தி வருகின்றனர். செம்புச்சாமி மடம் என ஒரு மடம் உள்ளது. அதில் ஐப்பசி மாதம் குருபூசை நிகழ்கிறது.

மாத்தூர் உறையூர்ப் பங்காளிகள் நாச்சாத்தாள் படைப்பினைத் தங்களுக்குரிய பொதுப் படைப்பாகப் படைத்து வருகின்றனர்.

இவ்வூரில் நா. சுப்பிரமணியன் செட்டியாரால், நாராயணன் செட்டியார் தொடக்கப்பள்ளியும், பாகனேரியைச் சேர்ந்த திருமுறைக் காவலர் இராம. முத்துப் பழநியப்பச் செட்டியாரால் ஒரு மருத்துவமனையும் நடத்தப் பெறுகின்றன.

அழகப்ப செட்டியார், அ.லெ.அழ., புனைபெயர் : இரத்தினம். (1924 - 29-4-1982)

வைரவன் கோவில் - தெய்வநாயகர் வகுப்பு
உ. சிறுவயல்
குழந்தை இலக்கிய எழுத்தாளர்

லெ. அழகப்ப செட்டியார் – பொன்னம்மாள் ஆச்சியின் மகன். பழநியப்பா பிரசுரத்தில் பல்லாண்டுகள் பணியாற்றிப் பதிப்புத்துறை அனுபவம் பெற்றவர். குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பொருளாளராகவும் ஆலோசகராகவும் பணியாற்றிச் சங்கத்தை வளர்த்தவர். குழந்தை எழுத்தாளர் யார்? எவர்? நூலைக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா முதன் முதலாகத் தொகுத்த போது இவரது பங்கும் அதில் மிகுதியாகும். காந்திமதி, இதோ பதில், பறவைகளின் மாநாடு, சிலை சொன்ன கதை, ஜப்பான் பொம்மை, பூனையார் ஆகிய குழந்தை இலக்கிய நூல்களைப் படைத்துள்ள இவர் முயல்குட்டி முத்து என்னும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'பூனையார்' என்னும் நூல் 9ஆம் குழந்தை இலக்கியப் போட்டியில் பரிசு பெற்ற நூலாகும். 1969 இல் இந்நூல் தமிழக அரசின் பரிசையும் பெற்றது. 'இலக்கிய உலகம்' என்னும் தமிழ்மாத இதழின் ஆசிரியராகவும் இவர் பணியாற்றி உள்ளார்.

அழகப்ப செட்டியார், டாக்டர். இராம. (6-4-1909 - 5-4-1957)

மாத்தூர் - மண்ணூர்
கோட்டையூர்
கொடையாளர்

க.வீ.அழ. இராமநாதன் செட்டியார் – உமையாள் ஆச்சியின் இரண்டாவது மகனாகத் தோன்றினார். சென்னை மாநிலக்கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் முதுகலை வகுப்பில் படித்தார். அப்போது அங்கு ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த, தத்துவ மேதை சர்வபள்ளி இராதாகிருட்டிணனோடு இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. 1930 இல் முதுகலைப் பட்டம் பெற்றார். நகரத்தார் சமூகத்தில் முதுகலைப்பட்டத்தை முதன்முதலாகப் பெற்றவர் இவரே என இவரது வாழ்க்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

ஐ.சி.எஸ். படிக்கும் நோக்கத்தோடு இங்கிலாந்து சென்றார். ஆனால் மருத்துவச் சோதனையில் தேர்ந்தெடுக்கப்படாததால் அப்பட்டப் படிப்பில் அவர் சேர இயலவில்லை. மனம் தளராமல் 'மிடில் டெம்பிள்' என்ற சட்டக் கல்லூரியில் சேர்ந்து வழக்கறிஞர் படிப்புப் படித்தார். அவ்வாறு படிக்கும்போதே பகுதி நேரமாக, இலண்டனில் இயங்கிய சார்ட்டர்டு

Koviloor Digital Library

வங்கியில் பயிற்சியாளராகச் சேர்ந்தார். இடையில் விமானம் ஓட்டவும் பயிற்சி பெற்றுச் சிறந்த விமானி ஆனார். 1933இல் வழக்கறிஞர் (Barrister - at - Law) பட்டத்தோடு இந்தியா திரும்பினார்.



டாக்டர் இராம. அழகப்ப செட்டியார்

1937 இல் திருச்சூருக்கு அருகே புதுக்காடு எனும் இடத்தில் 'கொச்சின் டெக்ஸ்டைல்ஸ்' எனும் ஆலையை நிறுவினார். அதுவே பின்னர் 'அழகப்பா டெக்ஸ்டைல்ஸாக' உருவெடுத்தது. அதனைத் தொடர்ந்து கேரளத்திலும், தமிழ்நாட்டிலும் பல ஆலைகளை அமைத்தார். பின்னர் பங்குச் சந்தையில் முழுமூச்சாக ஈடுபட்டார். பம்பாயில் 'ஜுபிடர் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி', 'ஈஸ்ட் அண்டு வெஸ்ட் இன்ஷூரன்ஸ் கம்பெனி', 'ரிட்சு ஒட்டல்' ஆகியவற்றின் நிருவாகப் பொறுப்பை ஏற்றார். 'ஜுபிடர் ஏர்வேஸ்' எனும் விமானப் போக்குவரத்து நிறுவனத்தை நடத்தினார்.

1943இல் தம் ஒரே மகள் உமையாளைத் தம் தமக்கையார் மகனான இராமநாதனுக்கு மணம் செய்து கொடுத்தார். இந்தத் திருமணம் தமிழகமே கண்டு வியந்த திருமணமாக அமைந்தது. இத்திருமணத்தின்போதுதான் அழகப்பரின் மனத்துள் இருந்த வள்ளன்மை உலகறிய வெளிப்படத் தொடங்கியது.

திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை நிறுவுவதற்கென ரூபாய் இலட்சத்தொன்று, மகள் உமையாள் பெயரால் சென்னைச் சேவாதளத்தில் மகளிர் விடுதி கட்ட ரூபாய் 75,000 வழங்குவதாக மகள் திருமணத்தன்று அறிவித்தார். அன்று முதல் இவர் வாழ்நாளின் இறுதிவரை இவரது நன்கொடைகள் தொடர்ந்தன. திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்திற்கு இவர் அளித்த நன்கொடைதான் அங்கு இன்றும் வளர்ந்து செழித்துக் கொண்டிருக்கும் தமிழ்க்கல்வி மற்றும் ஆராய்ச்சி எனும் ஆலமரத்திற்குரிய வித்தாக அமைந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் கல்லூரி ஒன்றை நிறுவத் தாமே முன்வந்து நன்கொடையாக ஐந்து இலட்ச ரூபாய் வழங்கினார். சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ஐந்து இலட்ச ரூபாய் அளித்தார். அதனை ஏற்றுக்கொண்ட பல்கலைக்கழகம் கிண்டியில் 'அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி'யை அவர் பெயரால் நிறுவியது.

1946இல் சென்னை தியாகராய நகரில் உள்ள தக்கர்பாபா வித்தியாலயத்தில், 'அழகப்பா மண்டபம்' கட்ட இலட்சரூபாய் வழங்கினார். இம்மண்டபத்திற்குரிய அடிக்கல்லை காந்தியடிகள் நாட்டினார். புது தில்லியில் தென்னிந்தியக் கல்விக் கழகத்திற்கு ரூ. 25,000, கொச்சி அரசு மாணவர்கள் வெளிநாடு சென்று தொழில் நுணுக்கக் கல்வி பயில உதவும் வைப்புத் தொகையாக ரூபாய் ஓர் இலட்சம், திருச்சூருக்கு அருகே அழகப்பா ஆலைத் தொழிலாளிகள் குடியிருப்பாகிய அழகப்பா நகரில் மகப்பேறு மருத்துவமனை நிறுவ ரூபாய் ஓர் இலட்சம், இந்திய மருத்துவ முறை ஆய்வுக்கென எர்ணாகுளம் மகாராசா கல்லூரிக்கு ரூ. 80,000, கொச்சித் தனியரசில் பள்ளிச்சிறார் பகலுணவு பெற ரூ 1,50,000 ஆகியவை அவர் வழங்கிய கொடை வெள்ளத்தில் சில துளிகள்.

1947 இல் அன்னிபெசண்ட் அம்மையார் நூற்றாண்டு விழாவில் தலைமையேற்ற சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ.எல். முதலியார், அறக் கொடையாளராகிய செல்வர்கள் பின்தங்கிய பகுதிகளில் கல்லூரிகளை நிறுவ முன்வரவேண்டுமென ஒரு வேண்டுகோளை முன் மொழிந்தார். உடனே அழகப்பர் அந்த மேடையிலேயே தாம் காரைக்குடியில் ஒரு கல்லூரி நிறுவுவதாக அறிவித்தார். 15–8–1947 இல் இந்தியா விடுதலைபெற்ற நாளன்று 'அழகப்பா கலைக் கல்லூரி' காரைக்குடி காந்தி மாளிகையில், தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு தி.சு. அவினாசிலிங்கம் செட்டியாரால் தொடங்கி வைக்கப்பட்டது. 1948 இல் கல்லூரிக்கெனத் தனிக் கட்டடங்கள் உருவாகி, கல்லூரி அங்கே மாற்றப்பட்டது.

காரைக்குடியில் ஓர் ஆய்வுக்கூடம் அமைய வேண்டும் எனக் கனவு கண்ட அழகப்பர், மத்திய மின் வேதியியல் ஆய்வுக் கூடம் ஒன்றைக் காரைக்குடியில் அமைக்க இந்திய அரசு இசையுமானால் தாம் அதற்கு 300 ஏக்கர் நிலத்தையும், 15 இலட்ச ரூபாயையும் நன்கொடையாக நல்கத் தயாரென அறிவித்தார். அவரது இடைவிடாத முயற்சியாலும், கொடையினாலும், ஆய்வுக் கூடத்திற்கு 25–7–1949 இல் பண்டித நேரு அடிக்கல் நாட்ட, 14–1–1953 இல் டாக்டர். இராதாகிருட்டிணன் ஆய்வுக்கூடத்தைத் திறந்து வைத்தார்.

Koviloor Digital Library

27–7–1950 இல் 'அழகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி' தொடங்கப்பட்டது. இதன் இணைப்பாக 'மாதிரி உயர்நிலைப்பள்ளி' ஒன்றையும் அழகப்பர் 1951 இல் தொடங்கினார். 1952 ஜூலையில் 'அழகப்பசெட்டியார் பொறியியற் கல்லூரி'யைத் தொடங்கினார். 21–7–1954இல் 'அழகப்பா மகளிர் கல்லூரி'யைத் தொடங்கினார். இக்கல்லூரியை அழகப்பர், தாம் வாழ்வதற்காகக் கோட்டையூரில் கட்டிய 'ஸ்ரீநிவாஸ்' என்ற தம் இல்லத்திலேயே தொடங்கினார். இதனைப் பாராட்டும் வகையில்தான் அறிஞர் வசுப. மாணிக்கனார், 'குடியிருந்த வீடும் கொடுத்த விழுத்தெய்வம்' எனத் தம் 'கொடைவிளக்கில்' குறிப்பிடுகிறார். 1955இல் 'அழகப்பா பல்தொழிற் பயிற்சி நிலையமும்' (Alagappa Polytechnic), 1956இல் 'அழகப்ப செட்டியார் உடற்பயிற்சிக் கல்லூரி'யும் தொடங்கப்பெற்றன.

இவர் தோற்றுவித்த கல்வி நிறுவனங்கள் ஒன்றிணைக்கப் பெற்று 1985 இல் அழகப்பா பல்கலைக்கழகம் (த.க.) உருவாகியது.

இவ்வாறு கல்விக்கு அள்ளிக்கொடுத்த அழகப்பர் சிறந்த தமிழ் ஆர்வலராகவும் விளங்கினார். அவரது முதற்கொடையே திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தொடங்குவதற்குத்தான். இவர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயற் குழுவிலும், தமிழ்க் கலைக்களஞ்சியச் செயற்குழுவிலும் உறுப்பினராகப் பணியாற்றினார். தமிழில் கலைக்களஞ்சியம் வெளியிடுவதற்கு நிதி உதவியாக ரூ 10,001 வழங்கினார். காரைக்குடி 'கம்பன் கழகத்'தின் தலைவராகவும், 'குமுதம்' வார இதழின் கௌரவ ஆசிரியராகவும் இருந்தார்.

'கோடி கொடுத்த கொடைஞனாம்' அழகப்பரைப் பட்டங்களும் பிற சிறப்புக்களும் தாமாகவே தேடிவந்து அடைந்தன. 1943 இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், 1944இல் சென்னைப் பல்கலைக் கழகமும் இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தன. 1953இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற காமன்வெல்த் பல்கலைக் கழகங்களின் மாநாட்டுக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலும், பின்னர் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தின் ஐந்நூறாவது ஆண்டு விழாவிற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலும், 1954இல் ஜப்பானில், கியோட்டோ நகரில் நடந்த 12ஆம் பசிபிக் நாடுகள் உறவுக் கழக மாநாட்டுக்கு இந்திய அரசின் சார்பிலும் அனுப்பி வைக்கப்பட்டார்.

அனைத்திந்திய அறிவியல் ஆராய்ச்சிக் கழகத்தின் செயற்குழுவிலும், தொழில் நுணுக்கக் கல்விக்கான வட்டார விதியமைப்புக் குழுவிலும், சென்னைப் பல்கலைக்கழகப் பொது மேற்பார்வைக் குழுவிலும் உறுப்பினராக அமர்த்தப் பெற்றார். பாரதச் சாரணர் படைக்கும், மத்திய மின் வேதியியல் ஆய்வுக்கூட ஆலோசனைக் குழுவுக்கும், 1954இல் தமிழக அரசால் அமைக்கப்பட்ட தொடக்கக்கல்வி ஆய்வுக் குழுவுக்கும் தலைவராக இருந்து சிறந்த தொண்டு ஆற்றியுள்ளார். சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழுக்களில் இவர் ஆயுட்கால உறுப்பினராக 1946 இல் பல்கலைக்கழக வேந்தரால் அமர்த்தப்பட்டார். காரைக்குடியில் சுழற்குழு (Rotary Club)வின் கிளையை முதன் முதலில் உருவாக்கியவர் இவரே.

ஆங்கிலேய அரசு இவருக்கு 1946இல் 'சர்' பட்டத்தை வழங்கியது. இந்திய அரசு 1957இல் 'பத்மபூசன்' பட்டம் வழங்கியது. பண்டித நேரு 'சமதர்ம முதலாளி' (Socialistic Capitalist) என்றும், அண்ணல் காந்தியடிகள் 'முன்மாதிரியான தர்மகர்த்தா' என்றும் இவரைப் பாராட்டிச் சிறப்பித்தனர்.

அழகப்பர் பிறவிக் கொடைஞராகவும், தன்னேரில்லாத் தமிழ்க் கொடைஞராகவும் திகழ்ந்ததைத் தமிழக வரலாறு பதிவு செய்துள்ளது.

அழகப்பன், அ., (7-7-1956)

வைரவன் கோவில் - தெய்வநாயகர் வகுப்பு
காரைக்குடி
சுழற்குழு ஆளுநர்

க.தெ.க அழகப்ப செட்டியார் என்ற சத்தி செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் இரண்டாவது மகன். காப்பித் தோட்ட உரிமையாளரும், வணிகருமான இவர் பொதுத்தொண்டில் ஆர்வம் உள்ளவர். தஞ்சாவூர் நகரத்தார் சங்கத் தலைவராகவும், தஞ்சாவூர் வணிகர் சங்கத் தலைவராகவும், தஞ்சாவூர் ஊர்க்காவல் படையின் மண்டலத் தளபதி (Area Commander)யாகவும் பணியாற்றும் இவர் சுழற்குழுவின் 2980 ஆவது மாவட்டத்தின் 1994 – 1995 ஆண்டின் ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுத் தொண்டாற்றினார்.

அழகப்பன், எஸ்.வி.எஸ்., (1921)

பிள்ளையார்பட்டி
பி. அளகாபுரி
பாடகர்

நகரத்தார் சமூகத்தில் இசை பயின்று மேடைக் கச்சேரி செய்த மிகச் சிலரில் ஒருவரான அழகப்பன் மானாமதுரை பிடில் வித்வான் இராமச்சந்திர ராவிடம் இசை கற்கத் தொடங்கினார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரியில் இசை

Koviloor Digital Library

பயின்றார், 1949ஆம் ஆண்டு அளகாபுரி பஜனை மடத்தில் அரங்கேற்றம் தொடங்கிய இவர் 1951 வரை தொடர்ந்து பல மேடைகளில் இசைக் கச்சேரி செய்துள்ளார்.

அழகப்பன், சுப., (28-11-1933)

சூரக்குடி
புதுவயல்
புகைப்படக் கலைஞர்

சுப்பிரமணியன் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். இளமையில் ஓவியத்தில் ஆர்வம் கொண்டு பாரதியார், பாரதிதாசன் படங்களை மாதிரியாகக் கொண்டு ஓவியம் வரைந்து பழகினார். புதுக்கோட்டை TELC பள்ளியில் ஓவியக் கண்காட்சி நடத்தியுள்ளார். இயற்கை வண்ணப் புகைப்படச் சுருளும், பிரதியெடுக்கும் இயந்திரங்களும் வருமுன்னர் சாதாரணமாக எடுக்கப்பட்ட கறுப்புவெள்ளைப் புகைப்படத்தை வண்ணப் புகைப்படமாக உருவாக்கித் தருவதில் இவர் வல்லவராகத் திகழ்ந்தார். புதுக்கோட்டை யில் அழகப்பா கலர் ஸ்டுடியோவை நடத்தி வருகிறார். 1972இல் ஜேசி இயக்கத் தலைவராகவும் 1976இல் புதுக்கோட்டைக் கிளை சுழற்குழுத் தலைவராகவும், நான்காண்டுகள் கௌரவ நீதிபதியாகவும் இவர் பொதுநலப் பணிகள் புரிந்துள்ளார். புதுக்கோட்டை பொது மருத்துவமனையில் குழந்தை மருத்துவத்திற்காக ஒரு பிரிவைக் கட்டித் தந்துள்ளார். நகரத்தாரில் தொழில்முறைப் புகைப்படக் கலைஞராகவும், பொதுநல அமைப்புகளில் ஆர்வமுடன் பங்குகொண்டு பொதுப்பணி புரிபவராகவும் இவர் திகழ்கின்றார்.

அழகப்பன், டாக்டர் அழகப்பா., (3-12-1925)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
தமிழ் ஆர்வலர்

சா.வெ.அரு.அழ. அழகப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மூத்த மகன் (பார்க்க : அருணாசலம், அ; வள்ளியப்பன், அ.,) வழக்கறிஞர் (Barrister-at-Law) பட்டமும், முனைவர் பட்டமும் பெற்றவர். ஐக்கிய நாடுகள் சங்கத்தில் 25 ஆண்டுக்காலம் பணியாற்றியவர். இலண்டன், நியூயார்க் போன்ற பல்வேறு நகரங்களில் அச்சங்கத்தின் பல்வேறு பொறுப்புக்களில் இருந்த இவர் 1983 இல் ஓய்வுபெற்ற பின் உலகத்தின் மாபெரும் தொழில் நிறுவனங்களில் ஒன்றான 'வெஸ்ட்பேங்க் ரிசோர்சஸ்' என்ற கனடா நாட்டு நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

'ஆல்ஜி' என்ற புனைபெயருடைய இவர் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் செயலராக இருந்திருக்கிறார். அமெரிக்காவில் நடந்து வரும் தமிழ்ப்பணிகளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறார். இவருடைய முயற்சியினாலேயே நியூயார்க்கில் விநாயகர் கோவில் சென்னையில் அறுபடை வீடு (த.க.) ஆகியவை உருவாயின.

பி.பி.சி. வானொலி நிலையத்தில் தமிழில் பல உரைகளை நிகழ்த்தியிருக்கிறார். 'படிப்பது எதற்கு?' என்ற நூலை எழுதியிருக்கிறார். இவரது கட்டுரைகள் 'தமிழ்நாடு', 'குமுதம்' இதழ்களில் வெளிவந்துள்ளன.

அழகப்பன், டாக்டர். ஆறு., (10-8-1937)

இளையாத்தங்குடி - கழனிவாசற்குடி
ஆத்தங்குடி
தமிழ்ப் பேராசிரியர்

ஆறுமுகம் செட்டியார் – உண்ணாமலை ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றவர். நாட்டுப்புறப் பாடல்களையும், தமிழ் நாடகங்களையும் பற்றி ஆய்வு செய்து எம்.லிட். மற்றும் டாக்டர் பட்டம் பெற்றார்.

1960 முதல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் பணியாற்றிய இவர், தமிழ்த் துறைத் தலைவராகச் சில ஆண்டுகள் திகழ்ந்தார். இடையே, ஓராண்டுக் காலம் சென்னையிலுள்ள தமிழ், வடமொழி, மற்றும் இந்திய மொழிகள் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநராகச் செயலாற்றினார்.

நாடகத் துறையில் மிகுந்த ஈடுபாடுள்ள இவர், ஹெரான் இராமசாமி குழுவினரால் தமிழகமெங்கும் நடிக்கப்பெற்ற 'திருமலை நாயக்கர்' உள்ளிட்ட 13 மேடை நாடகங்களை எழுதியுள்ளார். 'நாடகக் கலை' எனும் திங்கள் இதழை 1971 இல் தொடங்கி ஈராண்டுகள் திறம்பட நடத்தினார். இவரது 'எள்ளல் நாடகம்' என்ற நூல் தமிழக அரசின் முதற் பரிசினைப் பெற்றது.

நாடக நூல்கள் தவிரத் திறனாய்வு நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் சிலவற்றையும் எழுதியுள்ள இவர் பதிப்பாசிரியராக இருந்து பதிப்பித்திருப்பவை பத்துக்கும் மேற்பட்ட மலர்களாகும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவில் பல ஆண்டுகள் உறுப்பினராக இருந்திருக்கிறார். திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் குன்றக்குடி அடிகளார் 'தமிழாகரர்' என்ற பட்டத்தையும், தமிழக அரசு 'கலைமாமணி' என்ற பட்டத்தையும் இவருக்கு வழங்கியுள்ளனர்.

Koviloor Digital Library

அழகப்பன், டாக்டர். சித., (6-8-1939)

மாத்தூர் - அரும்பாக்கூர்
கடியாபட்டி
எலும்பு முறிவு மருத்துவர்

சித. மு. சிதம்பரம் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், சென்னை மருத்துவக் கல்லூரியிலும் பயின்று, எம்பிபிஎஸ், பொது அறுவைத்துறையில் எம்எஸ், மற்றும் எலும்பு முறிவுப்பிரிவில் எம்எஸ், ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.

சென்னை மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் எலும்பு முறிவுத் துறையில் துணைப் பேராசிரியராகவும், கூடுதல் பேராசிரியராகவும் பணியாற்றிப் பேராசிரியராக விளங்குகிறார்.

தமிழ்நாடு எலும்பு முறிவு மருத்துவர் கழகத்தின் இதழில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கும் இவர் அக்கழகத்தின் துணைத் தலைவராகவும் *(1994–96)* தலைவராகவும், *(1996–97)* பணியாற்றி உள்ளார்.

தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், ஆந்திரப் பிரதேச மருத்துவப் பல்கலைக் கழகம், பெங்களூர் பல்கலைக்கழகம், மைசூர்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தேர்வாளர் குழு உறுப்பினரும் ஆவார்.

அழகப்பன், டாக்டர். வெ.சு. (10-1-1934)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு.
காரைக்குடி
கல்லூரி முதல்வர்

சுப்பிரமணியன் செட்டியார் – கண்ணம்மை ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம்.ஓ.எல். பட்டம் பெற்றவர். புறநானூற்றில் ஆய்வு செய்து எம். லிட் பட்டமும், பதினோராந் திருமுறையில் ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றவர். கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய இவர், பின்னர் அழகப்பா கல்லூரி தமிழ்த்துறையில் பணி யாற்றினார். அழகப்பா பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், அஞ்சல் வழிக்கல்வித் துறையில் பொறுப்பு இயக்குநராகவும் பணியாற்றி ஒய்வு பெற்றார். இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை :

1. புறநானூறு
2. பதினோராந்திருமுறைத் திறன்
3. சிலம்பின் முதல் ஒலி.

அழகப்பன், மு.அ., (6-12-1943)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
பள்ளத்தூர்
தொழிலதிபர்

அ.மு.மு. அருணாசலம் செட்டியார் – லெட்சுமி ஆச்சியின் மகன். வணிகவியல் பட்டம் பெற்ற இவர் பர்மிங்காம் ஆஸ்டன் பல்கலைக் கழகத்தில் நிருவாகவியல் பயிற்சியும் பெற்றுள்ளார். 'ஜான் கிரேன் இஞ்சினீயர்ஸ் சீலிங் சிஸ்டம்' என்னும் நிறுவனத்தின் தலைவரான இவர் பாரி நிறுவனங்களின் துணைத் தலைவராகவும் சோழமண்டலம் நிதி நிறுவன நிருவாக இயக்குநராகவும் அம்பாடி எண்டர்பிரைசஸ் முதலிய பல்வேறு நிறுவனங்களின் இயக்குந ராகவும் பணியாற்றி வருகின்றார். தொழில் வணிகக் கழகங்களின் கூட்டமைப்பு, தென்னிந்தியத் தொழில் வணிகக் கழகம் ஆகியவற்றில் செயற்குழு உறுப்பினர். ஏ.எம்.எம். அருணாசலம் டிரஸ்ட், ஏ.ஆர். லெட்சுமி ஆச்சி டிரஸ்ட், ஏ.எம்.எம். பவுண்டேஷன் ஆகியவற்றின் அறங்காவலராகத் தொண்டு செய்து வரும் இவர் தென்னிந்தியாவிற்கான ஹங்கேரிய நாட்டுக் கௌரவத் தூதராக நியமிக்கப்பட்டுப் பணியாற்றி வருகிறார்.

அழகப்பன், மு.வெ.மு., (19-4-1933)

வைரவன் கோவில் - பிள்ளையார் வகுப்பு
பள்ளத்தூர்
தொழில்துறை ஆலோசகர்

மு.வெ. முத்தையா செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் முதுகலைப்பட்டம் பெற்றவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகவும் *(1960–66)* மேலாண்மையியல் பேராசிரியராகவும் *(1990–92)*, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' குழுமத்தின் ஆந்திர மாநிலப் பொது மேலாளராகவும் பணியாற்றியுள்ளார். இப்போது சக்தி குழுமத்தின் மேலாண்மையியல் பயிற்சி நிறுவனம், ஆஸ்திரேலியாவில் உள்ள எஸ்லிங்டன் ஏசியா பசிபிக் நிறுவனம், மலேசியாவில் உள்ள ஸ்பெக்ட்ரம் அசோசியேட்ஸ் நிறுவனம் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் தொழில்துறை ஆலோசகராகச் செயற்பட்டு வருகிறார்.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற பல்வேறு கருத்தரங்குகளில் பங்கேற்று

Koviloor Digital Library

மேலாண்மையியல் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை அளித்துள்ளார். Voice of South, Tears in Teardrop Island என்ற இரு நூல்களையும் எழுதியுள்ளார்.

ராயல் ஏசியாடிக் சொசைட்டியின் உறுப்பினராகவும், இந்துஸ்தான் தொழில் வணிகக் கழகத்தின் தொழில்துறை வல்லுநர் குழுவின் தலைவராகவும் தொண்டாற்றி வருகிறார்.

பள்ளத்தூரில் ஆர்.எம்.எம். மகளிர் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கி நடத்தி வருகிறார். திருமயம் ஆர்.எம்.எம். யசுர்வேத பாடசாலையிலும் பள்ளத்தூர் சேவா சதனத்திலும் அறங்காவலராக விளங்குகிறார்.

அழகப்பா கல்வி நிறுவனங்கள்

கோட்டையூரில் பிறந்த டாக்டர். இராம. அழகப்ப செட்டியார் (தக) தம் கொடைத்திறத்தால் காரைக்குடியைக் கல்விக்குடியாக மாற்றிய வள்ளலாவார். 1947 இல் முதன் முதலில் ஒரு கலைக் கல்லூரியைத் தொடங்கினார். அடுத்தடுத்துப் பல கல்வி நிறுவனங்களைத் தொடங்கும் திட்டம் அவருக்கு இருந்தமையால், அவற்றை நிருவகிக்க ஓர் அமைப்பு தேவை என நினைத்து 'அழகப்பா கல்வி அறநிலையம்' ஒன்றை ஏற்படுத்தினார். அதன் நிறுவுநர் தலைவராக அவர் பொறுப்பு ஏற்றார். அதன் தாளாளராகத் தம் ஒன்றுவிட்ட தமையனார் க.வீ.அழ.மு. இராமநாதன் செட்டியாரைப் பொறுப்பேற்கச் செய்தார். பின்னாளில் இராசா. சர். அண்ணாமலைச் செட்டியாரின் மாப்பிள்ளையும், கானாடுகாத்தானைச் சேர்ந்தவருமான க.வெ.சித.வெ. வெங்கடாசலம் செட்டியாரும், அவர் காலமானபின் அழகப்பரின் மகள் உமையாள் இராமநாதனும் இப்பொறுப்பை ஏற்றனர்.

இந்த அறநிலையத்தின் சார்பாக அழகப்பர் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடங்கிய கல்வி நிறுவனங்கள் வருமாறு :

1. அழகப்பா கலைக் கல்லூரி (1947)
2. அழகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (1950)
3. மாதிரி உயர்நிலைப் பள்ளி (1951)
4. அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரி (1952)
5. அழகப்பா மகளிர் கல்லூரி (1954)
6. அழகப்பா அடிப்படைப் பள்ளி (1955)
7. அழகப்பா ஆதாரப் பள்ளி (1955)
8. அழகப்பா பல்தொழிற் பயிற்சி நிலையம் (1955)
9. அழகப்பா மழலையர் பள்ளி (1955)
10. அழகப்பா இசைப்பள்ளி (1956)
11. அழகப்ப செட்டியார் உடற்பயிற்சிக் கல்லூரி (1956).

அழகப்பரின் மறைவுக்குப் பிறகு 'மகளிர் கல்லூரி'க்குப் பதிலாகப் பெண்களும் 'அழகப்பா கலைக்கல்லூரியிலேயே சேர்த்துக் கொள்ளப் பெற்றனர். அடிப்படைப் பள்ளி, ஆதாரப்பள்ளி ஆகியவற்றிற்கு மாற்றாக அழகப்பா ஆயத்தப்பள்ளி தொடங்கப்பட்டது. பின்னர் ஆயத்தப்பள்ளியும், மழலையர் பள்ளியும் இணைக்கப்பட்டு 'அழகப்பா மெட்ரிக்குலேசன் மேனிலைப்பள்ளி' உருவானது. இது ஒன்று மட்டுமே இப்போது அழகப்பா கல்வி அறநிலையத்தின் நிருவாகத்தில் உள்ளது.

அழகப்பா இசைப்பள்ளி தொடர்ந்து நடைபெறவில்லை. அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரியும், அழகப்பா பல்தொழிற் பயிற்சி நிலையமும் தமிழக அரசிடம் ஒப்படைக்கப்பட்டன. தமிழக அரசு அவற்றை அதே பெயர்களோடு தம் நிருவாகத்தில் நடத்திக் கொண்டிருக்கிறது.

1985 இல் அழகப்பா பல்கலைக்கழகம் (த.க.) உருவாக்கப்பட்டபோது அழகப்பா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, அழகப்பா உடற்பயிற்சிக் கல்லூரி, மாதிரி உயர்நிலைப் பள்ளி இவற்றோடு அழகப்பா கலைக் கல்லூரியின் முதுகலைப் படிப்புத் துறைகளும் இணைக்கப்பட்டு, பிற பல்கலைக்கழகங்களைப் போன்ற தன்னாட்சி அமைப்பாக உருவாக்கப்பட்டது.

அழகப்பா கலைக்கல்லூரியின் இளங்கலை வகுப்புக்கள் 'அழகப்பா அரசினர் கல்லூரி' என்ற பெயரோடு தமிழக அரசால் ஏற்று நடத்தப்பட்டு வருகின்றன.

அழகப்பா நகர்

கொடை வள்ளல் டாக்டர். இராம. அழகப்ப செட்டியார் 1937 இல் திருச்சூருக்கு அருகே புதுக்காடு எனும் இடத்தில் 'கொச்சின் டெக்ஸ்டைல்ஸ்' எனும் ஆலையை நிறுவினார். அதுவே பின்னர் 'அழகப்பா டெக்ஸ்டைல்ஸ்' ஆக உருவெடுத்தது. அந்த ஆலையின் தொழிலாளர் குடியிருப்பு 'அழகப்பா நகர்' என வழங்கப்பட்டது. அந்த 'அழகப்பா நகரில்' இலட்ச ரூபாய் நன்கொடை வழங்கி மகப்பேறு மருத்துவ நிலையம் ஒன்றைக் கட்டினார் அழகப்பர். தமிழ் நாட்டுக்கு வெளியே ஒரு குடியிருப்புப்பகுதி நகரத்தார் ஒருவர் பெயரால் உருவானது என்ற சிறப்பு இந்த அழகப்பா நகருக்கே உரியது.

Koviloor Digital Library

அழகப்பா பல்கலைக்கழகம்

தமிழ்நாட்டின் பிற பல்கலைக் கழகங்களைப் போல, இதுவும் அரசு சார்ந்த ஒரு தன்னாட்சி நிறுவனம்தான் எனினும், இதற்குரிய வித்து ஒரு நகரத்தாரால் விதைக்கப்பட்டது. 'கொடைவிளக்கு' அழகப்பர் ஏற்றி வைத்த கல்வி விளக்கின் புதிய பரிணாமமே இப்பல்கலைக் கழகம்.

கொடைவள்ளல் டாக்டர். இராம. அழகப்பசெட்டியாரால் காரைக்குடியில் தொடங்கப்பெற்ற 11கல்வி நிறுவனங்களுள், அழகப்பா கலைக்கல்லூரியின் நான்கு முதுகலைப்படிப்புத் துறைகள், அழகப்பா உடற்பயிற்சிக் கல்லூரி, அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அத்துடன் இணைந்த மாதிரி உயர்நிலைப் பள்ளி ஆகியவை இணைக்கப் பெற்று, 9–5–1985 இல் இப்பல்கலைக் கழகம் உருவாக்கப்பெற்றது.

தமிழ்நாட்டின் பதினோராவது பல்கலைக் கழகமாகிய இது, தன்னோடு இணைக்கப்பெற்ற கல்லூரிகள் இன்றி இயங்கும், தனி முழுப் பல்கலைக்கழகம் (Unitary University) ஆகும். காரைக்குடியில் 420 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இப்பல்கலைக்கழகம் இப்போது, 12 துறைகளுடனும், 2 உறுப்புக் கல்லூரிகளுடனும், ஒரு மேனிலைப் பள்ளி யுடனும், ஒரு தொலைதூரக் கல்வி மையத்துடனும் இயங்குகிறது.



அழகப்பா பல்கலைக்கழகம்

துறைகள் :

1. இயற்பியல் (Physics)
2. கணிதம் (Mathematics)
3. தமிழ்
4. வணிகவியல் (Commerce)
5. கல்வியியல் (Education)
6. உடற்கல்வியியல் (Physical Education)
7. நிறுவன நிருவாக இயல் (Corporate Secretary-ship)
8. கணிப்பொறிப்பயன்பாட்டியல் (Computer Applications)
9. தொழில் துறை வேதியியல் (Industrial Chemistry)
10. மகளிர் இயல் (Women's Studies)
11. தொழில் மேலாண்மை இயல் (Business Administration)
12. வங்கி மேலாண்மை இயல் (Bank Management)

உறுப்புக் கல்லூரிகள், பள்ளி :

1. அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியற் கல்லூரி
2. அழகப்பா பல்கலைக்கழக உடற்பயிற்சிக் கல்லூரி
3. மாதிரி மேனிலைப் பள்ளி

Koviloor Digital Library

தொலைதூரக் கல்வி மையம் 5 முதுகலைப் பட்டப் படிப்பையும், ஓர் இளங்கலைப் பட்டப் படிப்பையும், 6 பட்டயப் படிப்புக்களையும் (Diploma Courses) நடத்துகிறது.

மைய நூலகம் :

50 இலட்சரூபாய் செலவில் கட்டப்பெற்ற, அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடத்தில் இயங்குகிறது. 100 வெளிநாட்டு இதழ்கள் உள்ளிட்ட 200 பருவ இதழ்கள் வாங்கப் படுகின்றன. இப்போது 50,000 நூல்கள் உள்ளன. நிழற்படப் படி (Xerox) எடுக்கும் வசதியும், கணிப்பொறி வசதியும் உள.

தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கனார் அரிதின் முயன்று சேர்த்த நூல்கள் அடங்கிய நூலகம் இம்மைய நூலகத்தில் தனியே இயங்குகிறது. இந்நூலகத்தில் நகரத்தார் வரலாற்றுக் கருவூலமாக விளங்கக் கூடிய 'ஊழியன்', 'குமரன்', 'குமரி மலர்' போன்ற பழைய இதழ்களின் கட்டுமானம் செய்யப்பெற்ற (Bound) தொகுதிகள் பேணிவைக்கப்பட்டுள்ளன.

முனைவர் வ.சுப. மாணிக்கனாரின் நூலகமும் இம்மைய நூலகத்தில் இணைந்து இயங்குகிறது.

இந்நூலகத்தின் தனிச்சிறப்பு இதனுடைய விடுமுறை நாட்கள் ஆண்டொன்றுக்கு 7 நாட்கள் மட்டுமே என்பது. மற்றபடி ஞாயிறு உட்பட அனைத்து நாட்களிலும் காலை 8 முதல் மாலை 8 வரை இயங்குகிறது.

அழகு சுந்தரம் செட்டியார், லெ.
(16-7-1907 - 20-9-1987)

பிள்ளையார்பட்டி
கண்டரமாணிக்கம்
ஆலை உரிமையாளர்

செ.சி.நா.லெட்சுமணன் செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மூத்த மகன். இவரது ஐயா நாராயணன் செட்டியார் காலத்திலிருந்தே இவர்கள் குடும்பத்துக்கு இலங்கையில் ஓட்டுத் தொழிற்சாலை, ஐஸ் தொழில், தேயிலைத் தோட்டம் முதலியவை இருந்தன. எனவே, இவரது கல்விப்பயிற்சி இலங்கையிலேயே நிகழ்ந்தது. 1932 இல் வழக்கறிஞர் படிப்பை முடித்த இவர் ஏறத்தாழப் பத்து ஆண்டுக் காலம் இலங்கையிலேயே வழக்கறிஞராகத் தொழில் செய்தார். இலங்கை அரசினரால் ஆவணத்துறைப் பதிவாளராகவும் (Notary Public) அமர்த்தப்பட்டார்.

1942 இல் இவர் இந்தியா திரும்பினார். இவரது தந்தையார் லெட்சுமணன் செட்டியாரால் 1926 இல் தொடங்கப்பெற்ற மதுரை மகாலெட்சுமி ஆலையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவர் பொதுப் பணியில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். தமிழ்நாடு இந்து அறநிலைய ஆணைக்குழுவின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் அறங்காவலராகவும், மதுரைத் தமிழிசைச் சங்கத்தின் தலைவராகவும், மதுரை நகரத்தார் சங்கத் தலைவராகவும் பணியாற்றினார். மனநிலை பாதிக்கப்பட்டோருக்காக மதுரையில் நடத்தப் பெறும் 'அன்பகத்'தின் (Home of Mentally Handicapped) தலைவராகவும், செஞ்சிலுவைச் சங்கத்தின் துணைத் தலைவராகவும், இராமநாதபுரம் மாவட்ட சேவாசமாசத்தின் உறுப்பினராகவும் தொண்டாற்றினார்.

1948 முதல் 1958 வரை பத்தாண்டுகள் மதுரை மீனாட்சியம்மன் கோவில் அறங்காவலராகவும், பழமுதிர்சோலைத் திருப்பணிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றிய இவர், மதுரையிலிருந்து வெளியாகும் 'நகரத்தார் குரல்' மாத இதழின் சிறப்பு ஆசிரியர் பொறுப்பிலும் இருந்தவர்.

அளகாபுரி (கண்டனூர்)

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி – அறந்தாங்கிச் சாலையில் காரைக்குடியிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. செட்டிநாட்டில் அளகாபுரி என்ற பெயரில் மூன்று ஊர்கள் உள்ளன. அவற்றைப் பிரித்தறிய அருகே உள்ள ஊர்ப்பெயரை இணைத்து வழங்குவது மரபு. அம் மரபுப்படி, கண்டனூருக்கும் கோட்டையூருக்கும் இடையே அமைந்திருக்கும் இவ்வூர் கண்டனூர் அளகாபுரி என்றும் கோட்டையூர் அளகாபுரி என்றும் க. அளகாபுரி, கோ. அளகாபுரி என்று சுருக்கமாகவும் வழங்கப்படுகிறது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 5 கோவில்களைச் சேர்ந்த 140 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூர் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கோட்டையூர்ப் பேரூராட்சியின் ஒரு பகுதியாகும்.

நகரத்தாருக்குப் பொதுவாக இவ்வூரில் அழகு விநாயகர் கோவில் அமைந்துள்ளது. தொடக்கத்தில் இக்கோவிலையும் இதற்கு எதிரே உள்ள ஊருணியையும் அமைத்தவர்கள் இவ்வூர் இளையாத்தங்குடி பட்டினசாமிப் பங்காளிகளாவர். பின்னர் இது நகரப் பொதுக்கோவில் ஆயிற்று. இக்கோவிலுக்கு 1983, 1995 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நிகழ்ந்துள.

Koviloor Digital Library

பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த இவ்வூர் அழ.அரு. அழகப்ப செட்டியார் மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் என்ற பெயரோடு கூடிய சிவன் கோவில் ஒன்றை இவ்வூரில் கட்டி 7–5–54 அன்று குடமுழுக்குச் செய்தார். இன்றும் இக்கோவில் இவர்தம் வழிமுறையினரால் நிருவகிக்கப்பெற்று வருகிறது. அண்மையில் இவரது பேரன் அழகப்ப செட்டியார் இக்கோவிலுக்கு அருகே ஒரு பிள்ளையார் கோவிலையும் கட்டியுள்ளார்.

சிவகங்கை அரச குடும்ப அறநிலையத்திற்குச் சொந்தமான அழகிய நாச்சியம்மன் கோவிலும் இவ்வூரில் உளது. அக்கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் உத்தரம் முடிந்ததும் வரும் திங்களன்று காப்புக் கட்டி, 10 நாள் திருவிழா நடைபெறும். இந்த 10 நாள் திருவிழாவினை இவ்வூர் நகரத்தார்களே தங்கள் பொருட் செலவில் நடத்துகின்றனர். இக்கோவிலின் நவராத்திரித் திருவிழாவை இவ்வூர் வைரவன் கோவிலைச் சேர்ந்த சித.அ.சித. நாச்சியப்ப செட்டியார் குடும்பத்தினர் நடத்தி வருகின்றனர்.

இவ்வூரில் குடிதண்ணீர் ஊருணி ஒன்றும், வேறு 4 ஊருணிகளும் உள்ளன.

சித.அ.சித. நாச்சியப்ப செட்டியாரால் 1938இல் தொடங்கப்பெற்ற ஸ்ரீ அழகிய தேவி வித்தியாசாலை இவ்வூரின் தொடக்கப் பள்ளியாகும். 1938இலேயே இப்பள்ளியில் பயிலும் மாணவர்கட்கு இக்குடும்பத்தார் மதிய உணவு அளித்து வந்துளர் என்பது குறிப்பிடத்தக்கது. அரசு சத்துணவுத் திட்டம் கொண்டுவந்து, மதிய உணவு அளிக்கத் தொடங்கியவரை ஏறத்தாழ 40 ஆண்டுகள் இலவச மதிய உணவுடன் ஒரு தொடக்கப் பள்ளியை இக்குடும்பத்தார் நடத்தியுள்ர். இப்போதும் பள்ளி இக்குடும்பத்தார் நிருவாகத்திலேயே உள்ளது. சித .அ. சித. நாச்சியப்ப செட்டியார் வேறு சிலருடன் சேர்ந்து இவ்வூரில் நடராசர் மடத்தைக் கட்டினார். இப்போது அம்மடத்தின் நிருவாகம் இவரது வழிமுறையினரிடம் உள்ளது.

அரிமழம், க. அளகாபுரி, கானாடுகாத்தான், தேவகோட்டை, தேனிபட்டி, பலவான்குடி, பள்ளத்தூர் ஆகிய 7 ஊர்களைச் சேர்ந்த இளையாத்தங்குடி பட்டினசாமிப் பிரிவினர் இவ்வூரில் ஆண்டுதோறும் ஆடிமாதம் நாச்சாத்தாள் படைப்புப் படைக்கின்றனர். க. அளகாபுரி, காரைக்குடி, புதுவயல் ஆகிய 3 ஊர்களைச் சேர்ந்த இளையாத்தங்குடி பட்டினசாமிப் பிரிவினர் இவ்வூரில் ஆண்டு தோறும் ஆடிமாதம் கருப்பர் படைப்புப் படைக்கின்றனர். அமராவதி புதூர், க. அளகாபுரி ஆகிய இரு ஊர்ப்பிள்ளையார்பட்டி நகரத்தார் இவ்வூரில் அக்கினியாத்தாள் படைப்புப் படைக்கின்றனர். க. அளகாபுரி, புதுவயல் ஆகிய இரு ஊர் வைரவன் கோவில் பெரிய வகுப்பு நகரத்தார்கள் இவ்வூரில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் ஆண்டாத்தாள் படைப்புப் படைக்கின்றனர்.

இவ்வூருக்கு வடக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் கல்லாங்குடியில் சிவன்கோவிலுக்கு வடகிழக்குத் திசையில் உள்ள விநாயகர் கோவிலை இவ்வூர் சித. அ. சித. குடும்பத்தின் முன்னோர் கட்டினர். அக் கோவிலின் நிருவாகம் இப்போது இக் குடும்பத்தின் வழிமுறையினரிடம் உள்ளது.

இவ்வூர் இரணிக்கோவிலைச் சேர்ந்த கா. இராம. ப. குடும்பத்தினர் சீர்காழியில் சம்பந்தர் மடம் கட்டியுள்ளனர். முன்னர் இம்மடத்தில் ஆண்டு முழுவதும் அன்னதானம் நடைபெற்றது. இப்போது சம்பந்தர் குருபூசையன்று மட்டும் அன்னதானம் நடைபெறுகிறது.

அளகாபுரி (நாட்டரசன்கோட்டை)

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், அரண்மனை சிறுவயல், சாத்தரசன்பட்டி, நாட்டரசன்கோட்டை வழியாக 42 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

செட்டி நாட்டில் மூன்று ஊர்கள் அளகாபுரி என்ற பெயரில் உள. எனவே அவற்றைப் பிரித்தறிய அவற்றுக்கு அருகே உள்ள ஊர்ப்பெயரைச் சேர்த்துக் குறிப்பிடுவது மரபு. அவ்வகையில் இவ்வூர் கொல்லங்குடி அளகாபுரி, நாட்டரசன் கோட்டை அளகாபுரி என்ற பெயர்களாலும், கொ. அளகாபுரி, நா. அளகாபுரி என்றும் வழங்கப்படுகிறது.

இவ்வூரில் இளையாத்தங்குடி கிங்கிணிக் கூருடையார்ப் பிரிவைச் சேர்ந்த 65 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இது, காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொல்லங்குடி ஊராட்சி மன்றத்தினுள் அடங்கிய சிற்றூர்.

இவ்வூரில் சிவன் கோவில் இல்லை. நகரத்தாருக்குப் பொதுவான சித்தி விநாயகர் கோவில் உளது. இக்கோவிலுக்குத் திருப்பணி முடித்து முதல் குடமுழுக்கு 1927 இல் நிகழ்த்தப்பெற்றது. இங்கு இரு ஊருணிகள் உள. அவற்றுள் ஒன்று குடி தண்ணீர் ஊருணி.

Koviloor Digital Library

இவ்வூரை அடுத்துள்ள கொல்லங்குடியில் வெட்டுடைய காளியம்மன் கோவில் உள்ளது. அக்கோவில் திருப்பணியைச் செய்தவர்கள் இவ்வூரைச் சேர்ந்த அம்பலகாரச் செட்டியார் வீடு எனப்பெயர் பெற்ற க.மெ.உ. குடும்பத்தினர். இப்போதும் இக்கோவிலின் நிருவாகத் தலைமைப் பொறுப்பில் இவ்வூர் நகரத்தாரே உளர். பங்குனி மாதம் இக்கோவிலில் நடைபெறும் திருவிழாவில் 10 ஆம் திருவிழாவாகிய பூப்பல்லக்கு இவ்வூர் நகரத்தாரின் மண்டகப்படியாகும்.

இவ்வூர் நகரத்தார் அனைவரும் தைப் பொங்கல் அன்று சித்திவிநாயகர் கோவிலில் கூடி ஊர்ப்பொதுச் செய்திகள் குறித்துப் பேசுவது வழக்கம். உ. வகையாரைச் சேர்ந்த 45 புள்ளிகள் மாங்கல்யகாரி என்ற தேனாத்தாள் படைப்பைத் தங்களுக்குரிய பொதுப் படைப்பாக 3 ஆண்டுகட்கொரு முறை சித்திரை மாதம் வளர்பிறை வெள்ளிக்கிழமை தொடங்கி 3 நாட்கள் படைக்கின்றனர்.

அளகாபுரி (பில்லமங்கலம்)

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து குன்றக்குடி, நேமம் வழியாக 14 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு கோவில்களைச் சேர்ந்த 420 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

செட்டிநாட்டில் வேறு இரு அளகாபுரிகள் இருப்பதால், அவற்றிலிருந்து இதனை வேறுபடுத்தும் பொருட்டு, இவ்வூருக்குக் கிழக்கே அமைந்துள்ள சிற்றூராகிய பில்லமங்கலம் எனும் ஊரின் பெயரையும் இணைத்துப் பில்லமங்கலம் அளகாபுரி என்றும், சுருக்கமாக பி. அளகாபுரி என்றும் வழங்குகின்றனர்.

சில நகர்கள் அருகருகே அமைந்து இரட்டை நகரங்களாக இருப்பது போல் அமைந்திருப்பவை கீழச்சிவல்பட்டியும், அளகாபுரியும். ஒரு கால்வாயை எல்லையாக வைத்து, அதற்கு மேற்கே கீழச்சிவல்பட்டியும், கிழக்கே அளகாபுரியும் அமைந்துள. ஆயினும் இவை இருவேறு வருவாய் மாவட்டங்களில் அமைந்துள. கீழச்சிவல்பட்டி சிவகங்கை மாவட்டத்திலும், அளகாபுரி புதுக்கோட்டை மாவட்டத்திலும் அமைந்துள.

வட்டகைப் பிரிவைக் கூறும் பழைய நூல்கள், இதழ்கள் போன்றவை கீழச்சிவல்பட்டி, பி. அளகாபுரி என இவ்விரு ஊர்களையும் சேர்த்து ஒன்றாகவே குறிப்பிட்டு, மேல வட்டகை எனச் சுட்டுகின்றன. ஆனால் வட்டகைப் பிரிவின் அடிப்படையைச் சொல்லும் போது, புதுக்கோட்டை அரசுப் பகுதியிலிருந்த ஊர்கள் மேலப்பத்தூர், கீழப்பத்தூர் என இரு வட்டகையாகப் பிரிக்கப் பெற்றிருப்பதாகக் கூறுகின்றன. அந்த அடிப்படையில் பார்த்தால் அளகாபுரி மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்தது எனச் சுட்டுவதே முறையாகும்.

மீனாட்சி சுந்தரேசர் திருக்கோவில் என்ற பெயருடன் கீழச்சிவல்பட்டியில் அமைந்திருக்கும் நகரச்சிவன் கோவில் கீழச்சிவல்பட்டி, அளகாபுரி ஆகிய இரு ஊர் நகரத்தார்கட்கும் பொதுவான கோவிலாகும்.

இவ்வூரில் மாத்தூர் மண்ணூர்ப் பங்காளிகளுக்குரிய வெயிலுகந்த விநாயகர் கோவிலும், மாத்தூர் கண்ணூர்ப் பங்காளிகளில் க.தெ.குடும்பத்தாருக்குரிய கலங்காத கண்ட விநாயகர் கோவிலும் உள்ளன.

இவ்வூரில் கமலாலய ஊருணி எனும் குடிநீர் ஊருணியும், புது ஊருணியும் நகரத்தாரால் அமைக்கப் பெற்றவை. இரணிக் கோவில் நா.சொ. குடும்பத்தார் அறுபத்து மூவர் குருபூசை மடத்தையும், க.தெ.நா.அ. குடும்பத்தார் மற்றும் நா.கி.வெ. குடும்பத்தார் இணைந்து ஒரு பசு மடத்தையும் நடத்திவருகின்றனர்.

அளகாபுரி, கீழச்சிவல்பட்டி நகரத்தார் இளைஞர்கள் இணைந்து இவ்வூரில் 1957 இல் தொடங்கிய தமிழ் மன்றம் ஆண்டுதோறும் பொங்கலை ஒட்டி இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்திவருகிறது. ஜெய்ஹிந்த் நடராசன் செட்டியார் இ.தே.ரா.வில் பணியாற்றிய இவ்வூர் நகரத்தாராவார்.

பி. அளகாபுரி, இராயவரம், தேவகோட்டை ஆகிய ஊர்களைச் சேர்ந்த மாத்தூர் கண்ணூருடையார்ப் பங்காளிகள் சிறுகூடற் பட்டியில் நாராயணசாமி கோவில் படைப்பையும், க. அளகாபுரி, பி. அளகாபுரி, கண்டனூர், கீழச்சிவல்பட்டி, தேவகோட்டை, புதுவயல் ஆகிய ஊர்களைச் சேர்ந்த வைரவன் கோவில் பங்காளிகள் கீழச்சிவல்பட்டியில் ஆண்டாத்தாள் படைப்பையும் படைத்து வருகின்றனர். மாத்தூர் கண்ணூருடையார் பிரிவைச் சேர்ந்த தெகி.தெ. குடும்பத்தார் வீட்டில் இராமாயணம் படித்து வருகின்றனர்.

Koviloor Digital Library

இவ்வூர் இரணிக்கோவிலைச் சேர்ந்த நா.சொ. குடும்பத்தார் பில்லமங்கலத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கட்டி அரசிடம் ஒப்படைத்துள்ளர். மாத்தூர் கண்ணூருடையார்ப் பிரிவைச் சேர்ந்த க.தெ. கிருஷ்ணப்பசெட்டியார் இவ்வூரிலிருந்து வைத்தீசுவரன் கோவிலுக்கு ஆண்டு தோறும் செல்லும் நடைப்பயணத்தைத் தொடங்கி வைத்ததோடு, அவர்தம் வழி முறையினர் வைத்தீசுவரன் கோவிலில் ஒரு பசுமடத்தையும் நடத்தி வருகின்றனர்.

இவ்வூர் இராம.மு. சோமசுந்தரம் செட்டியார் பிள்ளையார்பட்டியில் தொடங்கிய பசுமடத்தை அவர்தம் வழிமுறையினர் நடத்திவருகின்றனர். இக்குடும்பத்தார் பிள்ளையார்பட்டியில் கற்பகவிநாயகர் தொடக்கப்பள்ளியையும், காஞ்சிபுரத்தில் நாராயண சேவாசிரமம் என்ற ஆயுர்வேத மருத்துவமனையையும் நடத்தி வருகின்றனர். மேலும் இக்குடும்பத்தினர் 20 ஆண்டுகட்கு முன்பு, மருதங்குடியில் ஆதினமிளகி ஐயனார் கோவில் மற்றும் செங்கிடாக் கருப்பர் கோவிலுக்குக் குடமுழுக்கு நிகழ்த்தியுள்ர்.

அனல்

இது, 1972 இல் மதுரையிலிருந்து நடத்தப் பெற்ற தனித்தமிழ் இலக்கியத் திங்கள் இதழ். டெம்மி 1 × 8 அளவில் 32 பக்கங்களைக் கொண்டதாக வெளிவந்த இந்த இதழ் தேவநேயப் பாவாணரின் தனித்தமிழ் இயக்கத்தால் ஈர்க்கப்பெற்ற நகரத்தார் இளைஞர் ஒருவரின் சிறப்பான முயற்சியாகும். 'பைந்தமிழ்ப் பாசறை' என்ற இயக்கத்தின் செயலராகப் பணியாற்றிய, செவ்வூரைச் சேர்ந்த கரு. சிதம்பரம் என்பவர் இவ்விதழை நடத்தினார்.

அன்பு நிலையம்

தமிழ்ப்புத்தக வெளியீட்டில் புதுக்கோட்டை மாவட்டம் இராமச்சந்திரபுரம், இராயவரம் முதன்மை பெறுகின்றன. இராமச்சந்திரபுரத்தில் 1930களில் சுத்தானந்த பாரதியார் நூல்களை வெளியிடுவதற்கென்றே அன்பு நிலையம் என்ற பதிப்பகத்தை நகரத்தார் இளைஞர்கள் தோற்றுவித்தனர். அரவிந்த ஆசிரமத்தில் மௌனநோன்பிருந்து சுத்தானந்தர் யாத்த அனைத்து நூல்களையும் பெங்குவின் வெளியீடு போலப் பிழையற்ற செம்பதிப்புக்களாக வெளியிட்டது இந்நிறுவனம்.

சுத்தானந்த பாரதியார் பன்மொழி அறிஞர். ஆதலால் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் வழங்கினார்; மேலைப்புலத்தில் மெத்த வளர்ந்த அரசியற் கருத்துக்களையும், உளநூற் கருத்துக்களையும், உள்வாங்கிக் கொண்டு நல்ல தமிழில் நூல் பல யாத்தார். இவர் ஆன்மீகச் செல்வராதலின் இவர் நூல்கள் நகரத்தார் இளைஞரிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தின. சிலர் தம் பிள்ளைகளுக்கு சுத்தானந்தன் எனப்பெயர் சூட்டினர்.

அன்பு நிலையம் சுத்தானந்தரின் பல்துறை நூல்களையும் வெளியிட்டது. காந்தியத் தாக்கத்தால், இந்நூல்களின் அட்டைக் கட்டினைக் கதர்த்துணி யினால் அமைத்து வெளியிட்டது. ஒவ்வொரு நூலிலும் தவக் கோலத்தில் உள்ள சுத்தானந்தரின் படம் இடம் பெற்று, நகரத்தார் இளைஞர்கட்குத் தூண்டுகோலாக அமைந்தது.

திருமணம், புதுமை, கார்த்திகைப் புதுமை, திருவாதிரை, புதுமனை புகுவிழா போன்றவற்றில் அன்புநிலைய வெளியீடுகள் பெரிய அளவில் அன்பளிப்பாக வழங்கப்பெற்றன. இந்நூல்களின் மொழிநடையும், சிந்தனைத் திறமும் நகரத்தார் இளைஞர்களின் நூல் படிக்கும் பழக்கத்தை மிகுதிப்படுத்தியது.

தமிழ் அருச்சனை வழிபாட்டு நூலை 1930களிலேயே இவர் இயற்றித் தர, அன்பு நிலையம் வெளியிட்டுத் தமிழ்வழிபாட்டு முறைக்கு அப்போதே அடிகோலியது. இந்நிறுவனம் வெளியிட்ட நூல்களுள் குறிப்பிடத்தக்கவை :

1. திருக்குறள் இன்பம்
2. சிலம்புச் செல்வம்
3. உடல் உறுதி
4. யோக சித்தி
5. தமிழ் உணர்ச்சி
6. ஏழைபடும் பாடு
7. இளிச்சவாயன்
8. பைந்தமிழ்ச்சோலை
9. உடலோம்பல்

இந்நிறுவனப் பங்குதாரர்கள் நிறுவனப் பணிகளை நிறுத்திவிட முடிவெடுத்த போது, அதன் லாபத்தொகையில் ஒரு குறிப்பிடத்தக்க அளவினை இராமச்சந்திரபுரத்தில் வானொலிப் பெட்டி வைக்கும் கட்டடம் அமைக்கவும், வானொலிப்பெட்டி, ஒலிபெருக்கி அமைக்கவும் நன்கொடையாகக் கொடுத்து மொழிப் பணியோடு சமூகப் பணியையும் இந்நிறுவனம் செய்துள்ளது.

Koviloor Digital Library

அஸ்வின் சிதம்பரம், மு.

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
தொழிலதிபர்

தொழிலதிபர் அ.சி. முத்தையா – தேவகி முத்தையா ஆகியோரின் மகன். இலயோலா கல்லூரியில் பி.காம். பட்டமும் அமெரிக்காவில் எம்.பி.ஏ. பட்டமும் பெற்றவர். குடும்ப மரபின் வழியில் இவரும் சிறந்த தொழிலதிபராக விளங்குகிறார். எம். ஏ. சி (மாக்) நிறுவனங்களைத் திறம்பட நடத்தி வருகிறார். தோட்டத்தொழில், கப்பல்தொழில், உண்டு தங்கும் வசதியுள்ள விடுதிகளின் மேலாண்மை, போன்ற பல துறைகளில் கவனம் செலுத்திவருகிறார். குதிரைச் சவாரியில் ஈடுபாடு கொண்ட இவர் சிறந்த போலோ விளையாட்டு வீரராவார்.

ஆண்டியப்பன், டாக்டர். அண., (20-5-1931)

இரணிக்கோவில்
இராங்கியம்
பொறியியல் புல முதல்வர்

ஆ.அண. அண்ணாமலை செட்டியார் – சிவகாமி ஆச்சியின் மகன்.வேதிப் பொறியியலில் பி.சு., எம்.எஸ்சி., பட்டங்களும் கனடா நாட்டில் அத்துறையில் ஆய்வு செய்து டாக்டர் பட்டமும் பெற்றுள்ளார். பல்வேறு நாட்டு ஆராய்ச்சி இதழ்களில் முப்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் புல முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றபின் சிதம்பரம் இராமசாமி செட்டியார் மேல்நிலைப் பள்ளியில் செயலாளர், தாளாளராகத் தொண்டு செய்து வருகிறார்.

ஆத்தங்குடி

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடியிலிருந்து உசிறுவயல், பலவான்குடி வழியாக 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய நான்கு கோவில்களைச் சேர்ந்த 445 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். கல்லல் ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் அரண்மனைப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் இவ்வூரில் உள்ளது. இவ்வூராட்சி மன்றம் ஆத்தங்குடி, வேட்டங்குடி ஆகிய சிற்றூர்களை உள்ளடக்கியது. ஆவணங்களி லெல்லாம் ஆத்தங்குடி அரண்மனைப்பட்டி என்றே குறிப்பிடப்படுகிறது. பழைய ஓலைச் சுவடிகளில் ‘அரண்மனைப்பட்டி என்ற ஆதித்தன்குடி’ எனக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், நகரத்தார் வழக்கில் இவ்வூர் ஆத்தங்குடி என்றே வழங்கப்படுகிறது.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற நகரச் சிவன்கோவில் உள்ளது. 1928இல் திருப்பணி முடித்துத் திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்ற இக்கோவிலுக்கு 1992இல் திருக்குட நன்னீராட்டு நிகழ்ந்தது. இக்கோவிலில் சித்திரைத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

செ.கா. குடும்பத்தாரால் கட்டி நிருவகிக் கப்படும் பிள்ளையார் கோவில் ஒன்றும், ப.சுப.குடும்பத்தாரால் கட்டி நிருவகிக்கப்பெறும் பிள்ளையார் கோவில் ஒன்றும் இவ்வூரில் உள. ஊராரும், நகரத்தாரில் செ.கா. குடும்பத்தாரும் சேர்ந்து நிருவகித்து வரும் அந்தர நாச்சியம்மன் கோவிலில் மாசிமாதம் மஞ்சு விரட்டு சிறப்பாக நடத்தப் பெறுகிறது. சிவன்கோவில், இருபிள்ளையார் கோவில்கள் ஆகியவற்றுக்குரிய 3 ஊருணிகள் இவ்வூரில் உள.

1920, 1930களில் விவேகவிளக்க வித்தியாசாலை, நாவுக்கரசு நற்சபை என்ற இலக்கிய அமைப்புக்கள் இவ்வூரில் சிறப்பாகத் தொண்டு புரிந்தன. 1945 இல் இவ்வூரில் பெ.க.பெ. செல்லப்ப செட்டியார், சு.சொ. சுப்பிரமணியன் செட்டியார் ஆகியோரால் தொடங்கப்பெற்ற நேரு வித்தியாசாலை இப்போதும் அக்குடும்ப வழிமுறையினரின் நிருவாகத்தில் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனமாக இயங்கிவருகிறது. ஆனால் இப்போது பள்ளிக் கட்டிடம், ஆத்தங்குடி முத்துப்பட்டணத்தையும் தாண்டிப் பலவான்குடி செல்லும் சாலையில் அமைந்துள்ளது.

கா.அரு. பழநியப்ப செட்டியார் 10,000 ரூபாய் நன்கொடை வழங்கி உதவ, இவ்வூரில் ஒரு மருத்துவமனை நடைபெற்று வருகிறது.

இவ்வூரில் வைரவன் கோவில் பிள்ளையார் வகுப்புப் பங்காளிகள் ஆண்டுதோறும் ஆடிமாதம் ஒரு பொதுப் படைப்பினைப் படைத்து வருகின்றனர். இப்படைப்பில் கடியாபட்டி, சொ.புதூர் பள்ளத்தூரைச் சேர்ந்த பங்காளிகளும் கலந்து கொள்வர். இவ்வூர்ப் பிள்ளையார்பட்டிப் பங்காளிகள் கண்டனூர், கோட்டையூர்ப் பங்காளிகளுடன் சேர்ந்து ஆண்டுதோறும் ஆடி மாதம் கண்டனூரில் அக்கினியாத்தாள் படைப்பைப் படைத்து வருகின்றனர். இவ்வூர் மாத்தூர் மணலூர்ப் பங்காளிகள், உசிறுவயல் மற்றும் கொத்தமங்கலம் பங்காளிகளுடன் சேர்ந்து கொத்தமங்கலத்தில் இராயாத்தாள் படைப்பைப் படைத்து வருகின்றனர்.

Koviloor Digital Library

படைப்பைப் படைத்து வருகின்றனர். இவ்வூர் மாத்தூர் மணலூர்ப் பங்காளிகள், உசிறுவயல் மற்றும் கொத்தமங்கலம் பங்காளிகளுடன் சேர்ந்து கொத்தமங்கலத்தில் இராயாத்தாள் படைப்பைப் படைத்து வருகின்றனர்.

இவ்வூரில் இராம.கும.சு. குடும்பத்தினர் வேதபாடசாலையும், பசுமடமும் முன்பு நடத்தி வந்தனர். பெ.க.சு. பெரிச்சியப்ப செட்டியார் குடும்பத்தார் வைத்தீசுவரன் கோவிலில் சம்பாதி நந்தவனத்தையும், இராம.கரு. குடும்பத்தினர் பில்லமங்கலத்தில் ஒரு சத்திரத்தையும், செ.கா. குடும்பத்தினர் குன்றக்குடியில் ஒரு மடத்தையும் நடத்தி வருகின்றனர்.

விகடம் காசிச் செட்டியார் என அழைக்கப் பெறும் நா. இராமநாதன் செட்டியார் இ.தே.ரா.வில் பணிபுரிந்தவர். இவ்வூரைச் சேர்ந்த பெ.க.சு. வீடும், குன்றக்குடியான் செட்டியார் வீடும் கலைநயம் மிக்க வேலைப்பாடுகள் நிறைந்த வீடுகளாகும்.

ஆத்திக்காடு தெற்கூர்

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர் வழியாகத் திருப்புத்தூர் – பொன்னமராவதிச் சாலையில் 36 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வூர் பேச்சு வழக்கில் ஆ.தெக்கூர் எனவும், தெக்கூர் எனவும், தெக்களூர் எனவும் வழங்கப்படுகிறது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இரணிக்கோவில் ஆகிய நான்கு கோவில்களைச் சேர்ந்த 403 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

ஆத்தி மரங்கள் அடர்ந்த காட்டின் தெற்குப் பகுதியை அழித்து, நிலந் திருத்தி, நகரத்தார்கள் வீடுகள் கட்டி இவ்வூரை அமைத்தனர் என்றும் அதனால் இவ்வூருக்கு ஆத்திக்காடு தெற்கூர் எனப் பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற பெயருடன் கூடிய நகரச் சிவன் கோவில் உள்ளது. 1924 இல் கட்டப்பெற்ற இக்கோவிலுக்கு 1941, 1971, 1982, 1996 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நீராட்டு விழாக்கள் நடைபெற்றுள. இவ்வூரில் கச்சேரிக் கூடத்திற்கு அண்மையில் உள்ள முன்னின்ற விநாயகர் கோவில் இவ்வூர் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த நா.பழ. குடும்பத்தாரால் திருப்பணி செய்யப் பெற்ற கோவிலாகும்.

இவ்வூரில் சிவன் கோவிலின் முன்பு அமைந்திருக்கும் புது ஊருணி நா.பழ.பழநியப்ப செட்டியார் குடும்பத்தாராலும், குடிநீர் ஊருணியாகப் பயன்படும் செட்டி ஊருணி நா.பழ.சு. பழநியப்ப செட்டியார் குடும்பத் தாராலும் அரங்கநாதர் கோவில் ஊருணி கரு. முத்து. அழ. கல்யாணசுந்தரம் செட்டியார் குடும்பத்தாராலும் அமைக்கப்பெற்றவை.

ஆலை அரசர், கலைத்தந்தை, கருமுத்து. தியாகராசரால் தொடங்கப்பெற்ற ஸ்ரீ விசாலாட்சி தொடக்கப்பள்ளி (1947), ஸ்ரீ விசாலாட்சி கலாசாலை மேல்நிலைப்பள்ளி (1947), ஸ்ரீ விசாலாட்சி தியாகராசர் மகளிர் உயர்நிலைப் பள்ளி ஆகியவை இவ்வூரில் கல்விப் பணியாற்று கின்றன. இப்பள்ளிகள் இப்போது, தியாகராசர் வழிமுறையினரால் நிருவகிக்கப் பெற்று வருகின்றன. (பார்க்க : தியாகராசர் கல்வி நிறுவனங்கள்)

இவ்வூர்க் கச்சேரிக் கூடத்தில் புரட்டாசி மாதம் ஒரு வாரம் இராமாயணம் படிக்கப்படுகிறது. இவ்வூர் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த இராம.சுப. பழநியப்பச் செட்டியார் இ. தே. ரா. வ்வில் பணியாற்றியவர்.

அரளிப்பாறையில் உள்ள சுப்பிரமணியர் கோவிலை இவ்வூர் இளையாத்தங்குடி ஒக்கூருடையார்ப் பிரிவைச் சேர்ந்த அ.கரு.பழ. குடும்பத்தினர் திருப்பணி செய்துள்ளர். அரளிப் பாறையில் இவ்வூர் சொ.இராம.கரு. முத்தையா செட்டியார், கரு. கண. அரு. குடும்பத்தார், அ.கரு.பழ. குடும்பத்தார் ஆகியோர் சேர்ந்து ஒரு மடம் கட்டி அன்னதானம் செய்து வருகின்றனர்.

இவ்வூர் மாத்தூர் மணலூர்ப் பிரிவைச் சேர்ந்த கரு.முத்து அழகப்ப செட்டியார் சிக்கல் சிங்காரவேலர் கோவிலின் திருப்பணியைச் செய்துள்ளார். இவ்வூரைச் சேர்ந்த அரு.ந. குடும்பத்தார் சிக்கலில் பசுமடம் ஒன்றை நடத்தி வந்தனர்.

இவ்வூரைச் சேர்ந்த சொ. இராம.கரு. முத்தையா செட்டியார் குடும்பத்தினர் ஆத்திக்காட்டுப் பிள்ளையார் கோவிலையும், மது. பழ.சு.சுப்பிரமணியன் செட்டியார் குடும்பத்தினர் சோழம்பட்டிப் பிள்ளையார் கோவில் மற்றும் ஊருணியையும் அமைத்துள்ளர்.

இவ்வூர் மாத்தூர் மணலூர்ப் பிரிவைச் சேர்ந்த கரு.முத்து. தி.சு. சொக்கலிங்கம் செட்டியார் சிதம்பரம் நடராசர் கோவிலில் உள்ள சிவகாமி அம்மன் கோவில், திருமூலநாதர் கோவில்,

Koviloor Digital Library

ஆவிச்சி செட்டியார், ஆவி.க.மெ. (11-12-1923)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
தேவகோட்டை
கடன் வழங்குவோர் கழகத் தலைவர்

தேவகோட்டையில் குறட்கழகம் கண்டு திருக்குறள்விழா நடத்திய ஆவி.க. குடும்பத்தில் மெய்யப்ப செட்டியார் மகன் ஆவார்.

திருச்சியில் வட்டித் தொழிலும், தங்கும் விடுதித் தொழிலும் சிறப்பாகச் செய்து வரும் இவர் 30 ஆண்டுகட்கு மேலாக திருச்சி மாவட்ட அடகு பிடிப்போர், கடன்வழங்குவோர் சங்கச் செயலாளராகப் பணியாற்றி இப்போது அதன் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். திருச்சி நகரத்தார் சங்கத்தில் 1947 முதல் தொடர்ந்து உறுப்பினராக இருக்கும் இவர் தலைவர், செயலர் எனப் பல்வேறு பொறுப்புகள் ஏற்றுச் சிறப்புறத் தொண்டு செய்துள்ளார். திருச்சி நகரத்தார் சங்கக் கட்டிடம் வாங்கவும், பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணங்கள் நடைபெறவும் இவர் முன்னின்று செய்த பணி என்றும் நினைத்தற் குரியது. திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில் அதன் தொடக்கத்தில் இருந்து பொருளாளராகப் பல்லாண்டுகள் பணியாற்றி உள்ளார். 1975 இல் திருச்சிராப்பள்ளி அரிமா சங்கத்தின் தலைவர். திருச்சிராப்பள்ளி வணிகக் கழகச் செயற்குழு உறுப்பினர்; இவ்வாறு தமிழ்த் தொண்டும் நகரத்தார் சமூகத் தொண்டும் எழுபது வயதிலும் இடைவிடாமல் தொடர்ந்து செய்வதால் இவர் தனிச்சிறப்புப் பெற்றுத் திகழ்கிறார்.

ஆவினிப்பட்டி

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடியிலிருந்து நேமம், கீழச்சிவல்பட்டி வழியாக 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், சூரக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய ஐந்து கோவில்களைச் சேர்ந்த 234 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்துள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற நகரச்சிவன் கோவில் உள்ளது. இக்கோவில் 90 ஆண்டுகட்கு முன் கட்டப் பட்டது. இளையாத்தங்குடி ஒக்கூருடையார் பிரிவைச் சேர்ந்த வீரகேசரி செட்டியார் குடும்பத்தினரால் கட்டப்பட்ட சுந்தர விநாயகர் கோவிலும், பட்டினசாமி பிரிவைச் சேர்ந்த தெ.பழ. குடும்பத்தார் கட்டி இன்று ஊர்ப் பொதுவாக விளங்கும் செல்வ விநாயகர் கோவிலும் உள்ளன. இக்கோவில் ஊருணி நகரத்தார் பொது ஊருணியாகும். மாத்தூர் குளத்தூர் பிரிவைச் சேர்ந்த ஆ.க. குடும்பத்துப் பிள்ளையார் கோவிலும், இதே பிரிவினரான காசிதகரு. குடும்பத்தார் கட்டிய தண்ணீர்ப்பந்தல் பிள்ளையார் கோவிலும் உள்ளன. நாட்டார், நகரத்தார்க்குப் பொதுவான மலைநாச்சியம்மன் கோவிலின் மாசி சிவராத்திரி விழாவும் விநாயகர் சதுர்த்தி விழாவும் இவ்வூரின் திருவிழாக்கள் ஆகும்.

பிள்ளையார்பட்டி கோவிலைச் சேர்ந்த பழ.அ. வகையினரால் விவேகானந்தா கல்விக்கழகம் என்னும் பள்ளி 50 ஆண்டுகட்கும் மேலாக 1 முதல் 8ஆம் வகுப்புவரை சிறப்பாக நடத்தப் பெற்று வருகின்றது.

தேவகோட்டை, வலையபட்டி, ஆவினிப்பட்டி ஊர்களைச் சேர்ந்த மாத்தூர் குளத்தூர் பிரிவினர் வழிபடும் குப்பியப்பத்தாள் படைப்பு இவ்வூரில் 2 ஆண்டுகட்கு ஒருமுறை ஆடி மாதத்தில் படைக்கப்படுகின்றது. வைரவன் கோவிலைச் சேர்ந்தோர் கட்டுச்சோத்துக் கருப்பையா படைப்பைப் படைத்துக் கும்பிடுகின்றனர். இவர்கள் இக்கோவிலைத் தவிர வேறு எங்கும் முடி இறக்குவதில்லை.

தண்ணீர்ப்பந்தல் பிள்ளையார் கோவிலில் புரட்டாசி மாதத்தில் இராமாயணம் படிப்பது நிகழ்கிறது. வைரவன் கோவிலைச் சேர்ந்த பி.மு.சுப. குடும்பத்தார் இளையாத்தங்குடியில் குருபூசை நடத்தி ஆவினிப்பட்டியில் தம் வீட்டில் அன்னதானம் செய்து வருகின்றனர். இளையாத்தங்குடி தேவஸ்தான நிர்வாகத்தில் உள்ள காட்டுச் சுப்பையா கோவிலில் பட்டினசாமி பிரிவினைச் சேர்ந்த நாக. வ. வகையார் திருப்பணி செய்துள்ளனர். இளையாத்தங்குடி கோவில் ஒக்கூர் பிரிவைச் சேர்ந்த ப.மு. இராம. குடும்பத்தார் சுவாமி மலையில் தேவார பாடசாலை நடத்தி வந்தனர்.

Koviloor Digital Library

பிரிவினைச் சேர்ந்த நாக. வ. வகையார் திருப்பணி செய்துள்ளனர். இளையாத்தங்குடி கோவில் ஒக்கூர் பிரிவைச் சேர்ந்த ப.மு. இராம. குடும்பத்தார் சுவாமி மலையில் தேவார பாடசாலை நடத்தி வந்தனர்.

ஆவுடையப்பன், இராம., (7-7-1947)

மாத்தூர் - அரும்பாக்கூர்
கண்டனூர்
ஓவியக் கலைஞர்

இராம. சிவ. இராமநாதன் செட்டியார் – நாச்சம்மை ஆச்சியின் மகன். 300 ஆண்டுகளுக்கு முந்திய தஞ்சாவூர்ப் பாணி கண்ணாடி ஓவியம் வரையும் கலையில் வல்லவர். இக்கலையில் இவரது ஆற்றலை அறிந்த தமிழக அரசு, இக்கலை கற்றுக் கொடுக்கும் பயிற்சிப் பள்ளி ஒன்றை நிறுவி நடத்த இவருக்கு நிதி உதவி அளித்து வருகிறது. கோட்டையூர் ஸ்ரீராம் நகரில் இவர் இப்பயிற்சிப் பள்ளியை நடத்தி வருகிறார்.

சென்னை 'விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட்' நிறுவனத்தினர் இவரது கலைத்திறனைப் பாராட்டி, காந்தி நூற்றாண்டு விழா நினைவுப் பரிசினை, 1992இல் வழங்கினர். காரைக்குடிச் சுழற்கழகம் 1994–95 ஆண்டில் பரிசு வழங்கியது.

காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெறும், பட்டினத்தடிகள் திருவிழாவில் ஆண்டுதோறும், பங்கேற்றுத் தொண்டு செய்து வருகிறார்.

19–6–1994 இல் தொடங்கி ஒரு மாதம் பிள்ளையார்பட்டியில் குடும்பத்துடன் தங்கியிருந்து நோன்பு மேற்கொண்டு, 108 கண்ணாடிப் பிள்ளையார் ஓவியங்களை வரைந்து, 'ஓவிய வேள்வி' ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

ஆனந்த நடராசன், ரெ., (26-1-1969)

இரணிக்கோவில்
கடியாபட்டி
விளையாட்டு வீரர்

என். ரெத்தினம் செட்டியார் – வள்ளி ஆச்சியின் மகன். சுங்கத்துறையில் (கஸ்டம்ஸ்) பணியாற்றுகிறார். இந்தியாவின் மிக அதிவேக ஓட்டப்பந்தய வீரரான இவர் திருச்சி ஆர்.எஸ்.கே. பள்ளியில் பயிலும் போதே மாநில அளவில் கூடைப்பந்து, ஹாக்கி விளையாட்டுக்களில் திறமை மிக்கவராயும் பள்ளியின் தடகள வெற்றி வீரராகவும் விளங்கினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மருந்தியல் துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டபொழுது அப்பல்கலைக்கழகம் இவரது திறனறிந்து பயிற்சியளித்து வாய்ப்பு வசதிகளை நல்கி இவரை உலகளவில் பேசப்படும் ஓட்டப்பந்தய வீரராக உருவாக்கியது. இவர் பி.பார்ம் பட்டம் பெற்றுள்ளார்.

1989ஆம் ஆண்டில் உலகளவில் நடைபெற்ற ஓட்டப் பந்தயத்தில் உலகில் முதன்மை ஓட்டப்பந்தய வீரரான கார்ல் லூயிசுடன் நிறைவுப் பந்தயத்தில் கலந்து கொண்டு நான்காம் இடத்தைப் பெற்றார். அப் போட்டிகளில் இவர் சார்ந்திருந்த அணி 4 x 100 மீட்டர் தொடர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப்பதக்கத்தை வென்றது. இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கு இடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் 100 மீட்டர் ஓட்டத்தில் புதிய சாதனையை இவர் ஏற்படுத்தியுள்ளார் (1989–1991). 1991 இல் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும் இவரே வென்றார். 1989 நவம்பரில் பாகிஸ்தான் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 100 மீட்டர் ஓட்டத்தில் புதிய சாதனை படைத்ததோடு 200 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளி, 4 x 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் தங்கம் ஆகிய பதக்கங்களைப் பெற்றார். தேசிய அளவில் அனைவரும் பங்குபெறும் 200 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 21.1. விநாடிகளில் முதலிடத்தில் ஓடிவந்து தேசிய முதன்மை விளையாட்டு வீரராகத் திகழ்கின்றார். இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபெற்ற இவர் 1990, 1993 ஆகிய இரு ஆண்டுகளிலும் தமிழகத்தின் சிறந்த விளையாட்டு வீரர் விருதினைப் பெற்றதோடு 1991இல் குருநாதன் கேடயப்பரிசையும் பெற்றார். 1995 இல் சென்னையில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 200 மீட்டர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் 4 x 100 தொடர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும் வென்றார். 1996 ஜனவரியில் புதுதில்லியில் நடைபெற்ற தேசிய விளையாட்டுப் போட்டிகளில் இவருடைய முந்தைய சாதனையை இவரே வென்று 200 மீட்டர் ஓட்டத்தில் புதிய தேசிய சாதனையைத் தோற்றுவித்துள்ளார். ஆகவே இந்தியாவின் மிக அதிவேக ஓட்டப்பந்தய வீரர் என்ற பட்டத்தைச் சூட்டி இந்தியா இவரைச் சிறப்பித்தது. இதே போட்டிகளில் 100 மீட்டர்

Koviloor Digital Library

இசைபிடிமானம்

நகரத்தார்களின் கலியாண வீடுகளில் எழுதப்பெறும் திருமண ஒப்பந்தத்திற்கு இசைபிடிமானம் என்பது பெயர். மாப்பிள்ளை திருப்பூட்டிய பின்னர் சம்பந்திகள் இருவரும் விளக்கேற்றி வைத்திருக்கும் கல்யாண வீட்டிற்குள் சென்று இந்த ஒப்பந்த வாசகத்தைப் படித்துப் பங்காளி வீட்டுப் பெரியவர் முன்னிலையில் கையெழுத்து இடுவர். இந்த ஒப்பந்தம் முன்னர் பனையோலையில் மஞ்சள் தடவி எழுத்தாணி கொண்டு எழுதப்பெறுவது வழக்கம். ஏட்டில் எழுதுவோர் அருகிவிட்ட காரணத்தால் வெள்ளைத்தாளில் எழுதத் தொடங்கினர். இப்போது அச்சிட்ட படிவங்களாகக் கிடைக்கும் இசைபிடிமானத்தை வாங்கி வந்து வருடம் மாதம் தேதி மாப்பிள்ளை, பெண் வீட்டார் விவரங்களை அதற்கென விடப்பட்டிருக்கும் இடத்தில் நிரப்பிக் கையெழுத்துச் செய்வது வழக்கமாக உள்ளது. இவ்வொப்பந்தம் மணமகனின் தந்தை மணமகளின் தந்தை ஆகிய இருவருக்கும் இடையே அமைவதால் இருவரும் கையெழுத்திடு கின்றனர். மாப்பிள்ளை வீட்டுப் பத்திரத்தில் மாப்பிள்ளையின் தகப்பனார் முதலிலும் அதன்பிறகு பெண்ணின் தகப்பனாரும் கையெழுத்து இடுவர். மணமகள் வீட்டுப் பத்திரத்தில் பெண்ணின் தகப்பனார் முதலிலும் பின்னர் மாப்பிள்ளையின் தகப்பனாரும் கையெழுத்து இடுவர். மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகளில் வயது முதிர்ந்த ஒருவரும், அதேபோல் பெண்வீட்டுப் பங்காளி ஒருவரும் இசைபிடிமானம் எழுதி மணமக்களின் தந்தையர் கையொப்பம் இடுமுன் தத்தம் கோயிற் பிரிவுடன் கையொப்பம் இடுவர். இது திருமணத்திற்கு இருவீட்டாரும் இசைந்து உடன்பட்டதற்கு ஆதாரமாக (பிடிமானமாக) அமைவதால் இசை பிடிமானம் எனப்பட்டது. இசைவுக்குரிய பிடிமானம் ஆதலின் இசைவுப் பிடிமானம் எனவும் வழங்கப் பெறும். இதனை 'இசை குடிமானம்' என்று வழங்குவதும் உண்டு. இங்கு மானம் என்பதைப் 'பிரமாணம்' என்பதன் திரிபாகக் கருதி இசைந்த குடிக்கு உரிய பிரமாணம் என்று கருதுவாரும் உள்ளனர்.

அமைப்பு முறை :

முதலில் கலியாண நாள் தமிழ் முறைப்படி ஆண்டு மாதம் தேதி குறிக்கப் பெற்றிருக்கிறது. பிறகு ஒப்பந்தம் எழுதிக் கொள்ளும் மணமக்களின் தந்தையார் பெயர் கோவிற் பிரிவுடன் எழுதப்பெறும். பிறகு மணமகன் பெயர் மணமகள் பெயர் குறிக்கப் பெற்று இவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டதற்காக இருவரின் தந்தையாரும் கொடுக்கும் நன்கொடைப் பொருட்கள் விவரம் தரப்பெற்றிருக்கும். இறுதியில் இசைபிடிமானம் எழுதியவரின் பெயர் கோவிற் பிரிவுடன் கொடுக்கப் பெறும். பிறகு கையெழுத்து இடப் பெறும்.

மாதிரி இசைபிடிமானம்

ஸ்ரீபவ வருடம் ஐப்பசி மாதம் 13ஆம் தேதி கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகர புரத்தில் பெருமருதூருடையான் திண்ணப்ப செட்டி அருணாசலரோ கேரள சிங்க வள நாடாகிய பிரம்பூர் நாட்டில் மாத்தூரான வீரபாண்டியபுரத்தில் அரும்பாக்கூருடையான் கண்ணப்பசெட்டி நாராயணரோ அவர்மகன் சுப்பிரமணியனுக்கு இவர் மகள் வள்ளி யம்மையைப் பாணிக்கிரகணம் பண்ணிக் கொண்டமைக்கு அவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது ஆறு கல்லெடை; பொன் பதின்முக்கழஞ்சு; இவர் சீதனம் கொடுக்கும் பொன் இம்மாறு இவ்வெடை பொன் ஆறு கழஞ்சு. வெள்ளி ஆறு கழஞ்சு. வெண்கலந் தராப்பலம் ஆறுபத்தொன்று. வெள்ளாட்டிக்கிப் பணம் முப்பது. சீராட்டும் சக்கரம் ஆறுபத்தொன்று இவ்வகைப்படி செய்வோம். அவர் நன்கொடை கொடுக்கும் பொன் ஐம்பது. மோதிரம் விராகனெடை மூன்று. இவர் உகந்துடைமையாய்க் கொடுக்கும் பொன் வளையி ஏழு கழஞ்சு. இவ்வகைப்படி செய்வோம். இந்தநாள் இவரிடும் பொன் இவர் சொற்படி தெரிசனை பதின்முக்கழஞ்சு. இவ்வகைப்படி செய்வோம். இந்த இசைபிடிமானம் எழுதினேன். கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் பெருமருதூருடையான்....

கையெழுத்து

மாப்பிள்ளை வீட்டுக்காரர் கையெழுத்து

பெண்வீட்டுக்காரர் கையெழுத்து...

இசைபிடிமானத்தில் கோவிற்பிரிவுகளைக் குறிப்பிடும் போது வளநாடு, நாடு, ஊர், புரம், உடையார் என்ற வகுப்புமுறை வரிசையைக் காண்கிறோம். ஒன்பது கோவில் நகரத்தார்களில் அவரவர்க்கேற்ற வகுப்பு வரிசை முறை பின்வருமாறு அமையும் :

Koviloor Digital Library

எண் வளநாடு	நாடு	ஊர்	புரம்	உடையார்
1. -	கல்வாசல்	இளையாத்தங்குடி	குலசேகரபுரம்	ஒக்கூர்
2. -	,,	,,	,,	அரும்பாற் கிளையரான பட்டினசாமி
3. -	,,	,,	,,	பெருமருதூர்
4. -	,,	,,	,,	கழனிவாசக்குடி
5. -	,,	,,	,,	கிங்கிணிக்கூர்
6. -	,,	,,	,,	பேரசெந்தூர்
7. -	,,	,,	,,	சிறுசேத்தூர்
8. கேரளசிங்க	பிரம்பூர்	மாத்தூர்	வீரபாண்டியபுரம்	உறையூர்
9. ,,	,,	,,	,,	அரும்பாக்கூர்
10. ,,	,,	,,	,,	மணலூர்
11. ,,	,,	,,	,,	மண்ணூர்
12. ,,	,,	,,	,,	கண்ணூர்
13. ,,	,,	,,	,,	கருப்பூர்
14. ,,	,,	,,	,,	குளத்தூர்
15. கேரளசிங்க	—	ஏழகப்பெருந்திரு	வீரபாண்டியபுரம்	சிறுகுளத்தூர்
16. ,,	—	,,	,,	கழனிவாசல்
17. ,,	—	,,	,,	மருதேந்திரபுரம்
18. கேரளசிங்க	—	நேமம்	குலசேகரபுரம்	இளநலம்
19. கேரளசிங்க	பிரம்பூர்	இலுப்பைக்குடி	புகலிடம் கொடுத்த பட்டணம்	சூடாமணிபுரம்
20. கேரளசிங்க	—	சூரக்குடி	தேசிகநாராயணபுரம்	புகழ்வேண்டியபாக்கம்
21. ,,	பாலையூர்	வேலங்குடி	தேசிக நாராயணபுரம்	கழனிநல்லூர்
22. -	கல்வாசல்	இளையாத்தங்குடி இரணியூர் மருதங்குடி	குலசேகர ராஜநாராயணபுரம்	இரணியூர்த் திருவேட்பூர்
23. -	கல்வாசல்	இளையாத்தங்குடி மருதங்குடி	குலசேகர ராஜநாராயணபுரம்	பிள்ளையார்பட்டியான திருவேட்பூர்

(வைரவன் கோவில் ஏழகப்பெருந்திரு என்ற பெயரால் எழுதப் பெறுகிறது. அதன் உட்பிரிவாகிய சிறுகுளத்தூர்ப் பிரிவில் பெரிய வகுப்பு, தெய்வநாயகர் வகுப்பு, பிள்ளையார் வகுப்பு என மேலும் 3 உட்பிரிவுகள் உள்ளன. உரிய உட்பிரிவு இசைபிடிமானத்தில் குறிக்கப் பெறும்.

Koviloor Digital Library

அடுத்து மாப்பிள்ளை, பெண்ணின் தந்தையார் பெயர்கள் வருகின்றன. திண்ணப்ப செட்டி அருணாசலம் என்பது திண்ணப்ப செட்டியார் மகன் அருணாசலம் என்பதைக் குறிக்கும்.

அவர் மகன் சுப்பிரமணியனுக்கு இவர் மகள் வள்ளியம்மையைப் பாணிக்கிரகணம் பண்ணிக் கொண்டமைக்கு என்று வருகிறது. இங்கு பாணிக்கிரகணம் என்பது கைதொட்டுக் கொடுக்கும் திருமணத்தைக் குறிக்கும். மணமக்கள் கைகளைப் பட்டுத் துணியால் முடிந்து தீவலம் வருதல் மரபு.

அடுத்து இத் திருமணத்திற்கு மணமக்களின் தந்தையார் கொடுக்கும் பொருள்களின் பட்டியல் வருகிறது. இப்பட்டியலில் இவ்வொப்பந்தம் எழுதத் தொடங்கிய காலத்தில் கொடுக்கப் பட்டவையே தொடர்ந்து இடம் பெறுகின்றனவே தவிர இப்போது நடைமுறையில் கொடுப்பவை எழுதப் பெறுவதில்லை.

இசைபிடிமானம் 2 படிகளும் மணமகள் வீட்டில்தான் வைக்கப்பெறும். திருமணத்தை உறுதிசெய்யும் பிடிமானம் பெண்ணுக்குத்தான் இன்றியமையாத தேவை எனக் கருதிப் பெண் வீட்டாரிடம் வைத்தனர் போலும். இப்போது பெண்வீட்டார் எழுதும் இசைபிடிமானத்தை மாப்பிள்ளை வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டார் எழுதும் இசைபிடிமானத்தைப் பெண் வீட்டாரும் வைத்துக் கொள்ளும் வழக்கமும் இருந்து வருகிறது.

நகரத்தார்களின் பண்பாட்டை, மரபு முறையை விளக்குவதாக இசை பிடிமானம் திகழ்கிறது. இன்று கொடுக்கும் சீதனம் பொன் அளவு ஆகியவை மாறினாலும் பழைய அளவைகளை யிட்டு அதே சொற்றொடர்களுடன் இசைபிடிமானம் எழுதுகின்றனர். நகரத்தார் பழமையைப் போற்றும் பான்மையினர் என்பதை இது காட்டுகிறது.

இணைப்பு ஊர்கள்

செட்டிநாட்டுப் பகுதியில் நகரத்தார் ஊர்கள் எழுபத்தைந்து. இவை தவிர நகரத்தார் வாழ்வில் அன்றாடம் தொடர்புடைய இணைப்பு ஊர்களாக, சிவகங்கை, திருப்புத்தூர், திருமயம், புதுக்கோட்டை ஆகிய ஊர்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வூர்களை ஒட்டியுள்ள நகரத்தார் ஊர்களுக்குப் போக்குவரத்துத் தொடர்பு, கல்வி, மருத்துவவசதி, வணிகவாய்ப்பு, பத்திரப்பதிவு, நீதிமன்ற நடவடிக்கைகள் ஏனைய அரசு அலுவல்கள் ஆகிய வசதிகளை இவ்வூர்களே வழங்கி வருகின்றன.

சிவகங்கை : செட்டிநாட்டின் தென் எல்லையாகச் சிவகங்கையும் வட எல்லையாகப் புதுக்கோட்டையும் அமைந்துள்ளன. அரண்மனை சிறுவயல், அலவாக்கோட்டை, நா. அளகாபுரி, ஒக்கூர், காளையார் மங்கலம், கீழப்பூங்குடி, சக்கந்தி, சோழபுரம், நடராசபுரம், நாட்டரசன் கோட்டை, பனங்குடி பாகனேரி, மதகுபட்டி, வெற்றியூர் ஆகிய ஊர்களை இணைக்கும் போக்குவரத்து மையமாகச் சிவகங்கை அமைகிறது. சிவகங்கையில் தொடர்வண்டி நிலையம் அமைந்திருப்பதும் இவ்வூர்களின் போக்குவரத்துக்குத் துணை யாகிறது. 1947இலிருந்து சிவகங்கை மன்னர் துரைசிங்கம் கல்லூரி இப்பகுதி நகரத்தார்களுக்கு உயர்கல்வி வாய்ப்பை வழங்கி வருகிறது. இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்பட்டதும் சிவகங்கை மாவட்டத் தலைநகர் ஆனதால் இங்கு மாவட்ட மருத்துவமனை அமைந்துள்ளது. அதற்கு முன்னரும் இது வட்டத் தலைநகராக இருந்ததால் வட்டாட்சி அலுவலகங்களும், பத்திரப்பதிவு அலுவலகமும் இங்கு அமைந்திருந்தன. இப்போது மாவட்ட நீதிமன்றமும், மாவட்ட ஆட்சியர் அலுவலகமும் இங்கு அமைந்திருப்பதால் சிவகங்கை மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

திருப்புத்தூர் : பி. அளகாபுரி, ஆ. தெற்கூர், ஆவினிப்பட்டி, உலகம்பட்டி, கண்டரமாணிக்கம், கண்டவராயன்பட்டி, கீழச்சிவல்பட்டி, சிறுகூடற்பட்டி, செவ்வூர், நெற்குப்பை, பூலாங்குறிச்சி, மகிபாலன்பட்டி, விராமதி ஆகிய ஊர்களை இணைக்கும் போக்குவரத்து மையமாக திருப்புத்தூர் அமைந்துள்ளது. 1965இலிருந்து ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கலைக் கல்லூரி இப்பகுதி நகரத்தார்களுக்கு உயர்கல்வி வாய்ப்பை வழங்கிவருகிறது. இங்கு நீண்டகாலமாக அமைந்துள்ள சுவீடிஷ் மிஷன் மருத்துவமனை செட்டிநாட்டில் பெரும்பகுதி மக்களுக்கு மருத்துவச் சேவையை வழங்கிவந்துள்ளது. இது வட்டத் தலைநகராக விளங்குவதால் இங்கு வட்டாட்சி அலுவலகமும் பத்திரப்பதிவு அலுவலகமும் அண்மைக் காலமாகக் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் அமைந்துள்ளன. ஆகவே திருப்புத்தூர் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

திருமயம் : அரிமழம், இராயவரம், வி. இலட்சுமிபுரம், கடியாபட்டி, தேனிபட்டி, விரையாச்சிலை ஆகிய ஊர்களை இணைக்கும் போக்குவரத்து மையமாகத் திருமயம் விளங்குகிறது. இது வட்டத் தலைநகராகையால் இங்கு வட்டாட்சி அலுவலகமும் பத்திரப்பதிவு அலுவலகமும் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் அமைந்துள்ளன. இங்கு அமைந்துள்ள சத்தியமூர்த்தி மேல்நிலைப் பள்ளியே தொடக்கத்தில் இப்பகுதி நகரத்தார்களுக்கு உயர்கல்வி வாய்ப்பை வழங்கி வந்தது.

Koviloor Digital Library

புதுக்கோட்டை : இது செட்டிநாட்டின் வடஎல்லையாகவும் செட்டிநாட்டின் நுழைவாயிலாகவும், அமைந்துள்ள நகரமாகும். இராங்கியம், குருவிக் கொண்டான்பட்டி, குழிபிறை, கொப்பனாபட்டி, நற்சாந்துபட்டி, பனையப்பட்டி, புதுப்பட்டி, மிதிலைப்பட்டி, மேலைச்சிவபுரி, வலையபட்டி, வேகுப்பட்டி, வேந்தன்பட்டி ஆகிய ஊர்களை இணைக்கும் போக்குவரத்து மையமாக இவ்வூர் திகழ்கிறது. இங்குள்ள தொடர்வண்டிச் சந்திப்பு நிலையம் இவர்தம் போக்குவரத்துக்கு மேலும் துணை செய்கிறது. நீண்டகாலமாக இங்கு அமைந்துள்ள அரசர் கலைக்கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இப்பகுதி நகரத்தாருக்கு உயர்கல்வி வாய்ப்பை வழங்கி வருகின்றன. இங்கு அமைந்துள்ள மாவட்ட மருத்துவமனையும் மருத்துவ வசதிகள் மிக்க தனியார் மருத்துவமனைகள் பலவும் செட்டிநாட்டு மக்களுக்கு மருத்துவச் சேவையை வழங்கி வந்துள்ளன.

விடுதலைக்குமுன் புதுக்கோட்டை தனி மன்னராட்சிப் பகுதியாக விளங்கியது. மேற்குறிப்பிட்ட ஊர்களோடு அரிமழம், இராயவரம், வி. இலட்சுமிபுரம், கடியாபட்டி, கோனாபட்டு, தேனிபட்டி, விரையாச்சிலை, ஆகிய நகரத்தார் ஊர்களும் புதுக்கோட்டை மன்னர் ஆட்சியிலேயே இருந்தன. தனி மன்னர் ஆட்சிப் பகுதியாக இருந்ததால் பல வரிச் சலுகைகள் வழங்கப்பட்டதாலும் தலைநகராக அமைந்ததாலும் இப்பகுதி நகரத்தார்கள் பலர் இங்கு தொழில் தொடங்கினார்கள்; இதழ்களை நடத்தினார்கள்.

இப்போது மாவட்டத் தலைநகராகையால் மாவட்ட ஆட்சியர் அலுவலகமும் நீதிமன்றமும் பத்திரப்பதிவு அலுவலகமும் இங்கு அமைந்து இவ்வூரின் முக்கியத்துவத்தை அதிகப் படுத்துகின்றன.

முற்காலத்தில் செட்டிநாட்டு ஊர்களாகிய சிற்றூர்களில் திரையரங்குகள் இல்லாமையால் இப்பகுதி நகரத்தார்களுக்குத் திரைப்படம், நாடகம், சர்க்கஸ் காட்சி பார்ப்பதற்கு வாய்ப்பளிக்கும் பொழுதுபோக்கு மையங்களாகவும் இந்த இணைப்பு ஊர்களே விளங்கி வந்தன. இவற்றுள் சிவகங்கையும் புதுக்கோட்டையும் வணிக நிலையிலும் கல்விநிலையிலும் பெருநகரங்களாக அமைந்திருப்பதால் அவற்றை ஒட்டிய செட்டிநாட்டுப் பகுதியைச்சேர்ந்த நகரத்தார் பலர் வீடுகள் வாங்கிக் கொண்டு அல்லது கட்டிக் கொண்டு இந்நகரங்களிலேயே குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இந்திய தேசிய இராணுவத்தில் நகரத்தார்

இந்திய விடுதலைப் போராட்டத்திலும், காங்கிரசு இயக்கத்திலும் பெரும்பங்கு ஏற்ற வங்கம் தந்த சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற நேரத்தில், ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளின் துணையோடு, போர்நடத்தி, ஆங்கிலப்படையை வெற்றி கொண்டு இந்திய விடுதலையைப் பெறத் திட்டமிட்டார். இத்திட்டத்தோடு அவர் உருவாக்கிய படைப்பிரிவிற்கு 'இந்திய தேசிய இராணுவம்' (Indian National Army) என்பது பெயர். இந்தப் படைப்பிரிவில் பர்மா, இந்தோசீனா, மலேசியா நாடுகளில் இருந்த நகரத்தார் இளைஞர்கள் பலரும் சேர்ந்தனர்.

இவர்களுள் மதகுபட்டியைச் சேர்ந்த, தமிழ்ப்புத்தகாலயத்தின் உரிமையாளரான கண.முத்தையா இரண்டாவது லெப்டினன்ட் என்ற உயர்நிலையில் மூன்றாண்டுகள் இப்படைப்பிரிவில் பணியாற்றியுள்ளார். சண்முகநாதபுரம் அண்ணாமலை செட்டியார், நாச்சியாபுரம் நாச்சியப்ப செட்டியார், கண்டனூர் மெய்யப்ப செட்டியார், காரைக்குடி முத்துப்பட்டணம் மெய்யப்ப செட்டியார் ஆகிய நால்வரும், டோக்கியோவில் இருந்த ஜப்பானிய மிலிட்டரி அக்காதமிக்குப் பயிற்சிக்காக அனுப்பப்படும் பொருட்டு, நேதாஜியினால் தேர்ந்தெடுக்கப்பெற்ற 46 பேர்களுள் இடம் பெற்று டோக்கியோ சென்று பயிற்சி பெற்றனர்.

இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய நகரத்தார் இளைஞர்கள் பற்றிய குறிப்புக்கள் செட்டிநாட்டு ஊர்களைப் பற்றிய கட்டுரைகளில் ஆங்காங்கே தரப்பெற்றுள்ளன.

விடுதலைப் போராட்டத்தின் ஒரு கூறாகிய காந்தியப் போராட்டத்தில் ஆர்வத்தோடு பங்கேற்றதைப் போலவே மற்றொரு கூறாகிய இந்திய தேசிய இராணுவத்திலும், நகரத்தார்கள் ஈடுபாட்டோடு பங்கேற்றனர் என்பது வரலாற்றுண்மை.

இந்து மதாபிமான சங்கம்

காரைக்குடியில் தோற்றுவிக்கப்பட்டு, நாட்டுத் தொண்டு, மொழித் தொண்டினைத் திறம்படச் செய்து வரும் நிறுவனம். பிங்கள ஆண்டு ஆவணித்திங்கள் இருபத்தாறாம் நாள் 10–9–1917 "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் அருள் வாக்கைக் குறிக்கோளாகக் கொண்டு நகரத்தார் இளைஞர் பலரால் தோற்றுவிக்கப் பெற்றது இச்சங்கம்.

Koviloor Digital Library

செட்டிநாட்டின் சீர்திருத்தத் தந்தை என்று பாராட்டப்பெறும் சொ. முருகப்பா முன்நிற்க, அவருக்குத் துணையாகத் தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கனார், கானாடுகாத்தான் வை.சு. சண்முகனார், அமராவதிபுதூர் பிச்சப்பா சுப்பிரமணியன், இன்னும் பலர் நின்று ஊக்குவிக்கச் சங்கம் காரைக்குடியில் திருவாசக மடத்தில் தொடங்கப் பெற்றது.

ஏறத்தாழ 35 ஆண்டுகள், பல்வேறு வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்ட இச்சங்கம் 24–10–1952 இலிருந்து சிவன்கோவில் மேலைத் தேர்த் தெருவில் புதிதாகக் கட்டப்பெற்ற சொந்தக் கட்டிடத்தில் செயல்படுகிறது.

சமயப்பற்று, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, நல்லோர் கூட்டுறவு, இலக்கியப்பயிற்சி இவற்றை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு இச்சங்கம் தொடங்கப் பெற்றது. இந்நோக்கம் நிறைவேறும் வண்ணம் முதன்முதலில் 1918இல் இச் சங்கம் இராமகிருட்டிண கலாசாலை என்ற பெயரில் ஒரு கலாசாலையைத் தொடங்கியது. இதில் நகரத்தார் இளைஞர் பலர் தமிழ் இலக்கியம் பயின்றனர்.

தமிழ்க் கடல் இராய. சொ., கம்பனடிப் பொடி சா. கணேசன் போன்றோர்க்கு இக்கலாசாலை தான் பயிற்சிக் களமாக அமைந்தது. இச் சங்கம் 'கம்பநாடார்' என்ற இதழின் ஆசிரியரான மோ.வே. கோவிந்தராச ஐயங்கார் அவர்களைக் கொண்டு வாரந்தோறும் திருக்குறள் வகுப்பும், கம்பராமாயண வகுப்பும் நடத்தியது.

தமிழ்ப்பெரும் புலவர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் மறைந்தபொழுது, அவர் திரட்டி வைத்திருந்த நூல்களை இச்சங்கம் அப்படியே விலைகொடுத்துவாங்கி, 27–8–1918 இல் 'விவேகானந்தா நூல் நிலையம்' என்ற பெயரில் ஒரு நூல்நிலையத்தை அமைத்தது. தொடர்ந்து சங்கம் இந்நூலகத்தை விரிவுபடுத்தி, இன்று ஒரு மிகச்சிறந்த நூலகமாகப் போற்றி வருகிறது.

சங்கம் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை, நாள், கிழமை மற்றும் திங்கள் இதழ்களைப் பொதுமக்கள் படித்துப் பயன்பெறும் வண்ணம், படிப்பகம் ஒன்று நடத்துவது இச்சங்கம் செய்துவரும் சீரிய தொண்டு.

சங்கம் தொடங்கிய காலத்திலிருந்து அவ்வப்போது இலக்கியக் கூட்டம் நடத்துவதும், ஆண்டுதோறும் சிறப்பான முறையில் ஆண்டுவிழா நடத்துவதும் சங்க மரபு. இந்த வகையில் இந்து மதாபிமான சங்கத்திற்கு வராத தமிழறிஞரே இல்லை எனலாம்.

தொடக்கத்திலிருந்து இச்சங்கத்திற்குரிய உறுப்பினர் கட்டணம் வருமாறு:

ஆண்டுக் கட்டணம் – 6 ரூபாய்

ஆயுள் உறுப்பினர் – 100 ரூபாய்

அதற்குக் கூடுதலான தொகையை நன்கொடையாகக் கொடுப்பவர்கள் புரவலர்கள் ஆவர்.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் இச்சங்கத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. 22–9–1921இல் காந்தியடிகள் காரைக்குடிக்கு வந்தபோது, பிறந்து நான்கு ஆண்டுகளே ஆகியிருந்த இ.ம. சங்கம் அவருக்கு ஒரு வரவேற்பு இதழைக் கதர்த் துணியில் தமிழில் அச்சடித்து வழங்கியது. அந்த இதழ் இப்போதும் புதுதில்லியில் காந்தியடிகள் பொருட்காட்சி நிலையத்தில் பேணிக் காக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வ.உ.சி., வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா போன்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவரையும் அழைத்துப் போற்றிய பெருமையுடையது இச்சங்கம். '1930க்கு முன் செட்டி நாட்டில் சங்கம் என்று குறிப்பிட்டாலே அது இந்து மதாபிமான சங்கத்தைத்தான் குறிக்கும்' என எழுதுகிறார் சோமலெ.

இச்சங்கத்தின் மிகப்பெரிய சிறப்பு, மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்கும் இதற்கும் உள்ள தொடர்பு. கானாடுகாத்தான் வை.சு. சண்முகனார் அழைப்பை ஏற்று அவர் இல்லத்திற்கு வந்து சிலநாள் தங்கிய கவிஞர், அங்கிருந்து கடையம் திரும்பும் போது காரைக்குடியில் இரண்டு, மூன்று நாட்கள் தங்கினார். அப்போது இச் சங்கத்திற்கு அவர் வந்தார். சொற்பொழிவாற்றினார். சங்க உறுப்பினர் சிலரோடு அமர்ந்து 9–11–1919 இல் நிழற்படம் எடுத்துக் கொண்டார். இந்தப் படம் தமிழகத்திற்குக் கிடைத்த பாரதியாரின் மிகச் சில நிழற்படங்களுள் ஒன்றாகும்.

மூன்று நாட்கள் தங்கியபோது இந்து மதாபிமான சங்கத்து இளைஞர்களின் சுறுசுறுப்பாலும், நாட்டுப் பற்றினாலும் மொழி அன்பினாலும் ஈர்க்கப்பட்ட பாரதியார், அவர்கள் வேண்டுகோளை ஏற்று இச்சங்கத்தின் மீது ஏழு பாடல்களைப் பாடி இதனை வாழ்த்தினார். இவ்வாறு பாரதியாரின் பாடல்பெற்ற சங்கம் தமிழகத்தில் இது ஒன்றுதான் என்பது நகரத்தார் சமூகத்துக்குப் பெருமை சேர்க்கும் ஒரு செய்தியாகும்.

எழுபத்தைந்து ஆண்டுகளைக் கடந்தும், ஏற்றமுடன் இயங்கிக் கொண்டிருக்கும் நகரத்தார் அமைப்புக்களுள் சிறந்த ஒன்றாகிய இந்து மதாபிமான சங்கத்தின் பெருமையைப் பாரதி கூற்றாகவே காணலாம்.

Koviloor Digital Library

''உண்மையே தாரகம்என்று உணர்ந்திட்டார்.
அன்பொன்றே உறுதி என்பார்.
வண்மையே குலதர்மம் எனக்கொண்டார்.
தொண்டொன்றே வழியாக் கண்டார்.
ஒண்மையுயர் கடவுளிடத்து அன்புடையார்.
அவ்வன்பின் ஊற்றத் தாலே
திண்மையுறும் இந்துமத அபிமான
சங்கம்ஒன்று சேர்த்திட் டாரே''

''பலநூல்கள் பதிப்பித்தும் பலபெரியோர்
பிரசங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசா
லைபலவும் நாட்டி யும்தம்
குலமுயர நகருயர நாடுயர
உழைக்கின்றார் கோடி மேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி
வாழ்ந்தொளிர்க நிலத்தின் மீதே''

இயற்பகை நாயனார்

பெரியபுராணத்தில் இடம்பெறும் 63 நாயன்மார்களுள் நகரத்தார் குலத்தைச் சார்ந்த அடியவர் இவர். இவரது ஊர் காவிரிப் பூம்பட்டினம்.

சிவனடியார்கள் கேட்பது எதுவாயினும் அதை 'இல்லை' என்னாது கொடுப்பதை இயற்பகையார் வாழ்க்கைக் கொள்கையாகக் கொண்டிருந்தார். அவரது பெருமையை உலகத்தார்க்கு உணர்த்த சிவபெருமான் எண்ணினார். வேதியர் வேடங்கொண்டு இறைவன் இயற்பகையார் இல்லம் வந்தார். தொழுது வரவேற்ற இயற்பகையாரிடம் வேதியர் 'உமது திருத்தொண்டின் திறம் அறிந்து வந்தோம். நான் கேட்கும் பொருளைத் தருவதாக உறுதியளித்தால் அது இன்னதெனச் சொல்லுவேன்' என்றார். அன்பிற் சிறந்த நாயனார், 'எப்பொருள் ஆயினும் அஃது என்பால் இருப்பின் அஃது அடியவர் உடைமை. அது என்னவென்று சொல்லியருள்க' என்று விடையளித்தார். மறையவர் சற்றும் யோசியாது 'உமது மனைவியாரை நாடியே நாம் இங்கு வந்தோம்' என்றார். அடியவர் 'என்னிடம் உள்ள பொருளையே விரும்பியது நான் செய்த புண்ணியப் பயன்' என அகமகிழ்ந்தார். உள்ளே விரைந்து மனைவியாரிடம் மறையவர் விருப்பத்தைக் கூறினார். சற்று மனங்கலங்கிய அம்மையார் உடனே தெளிவுற்று நாயனார் விருப்பத்துக்கு இசைந்து அவரை வணங்கினார். நாயனாரும் துணைவியை வணங்கினார். மனைவியாரோடு மறையவர் செல்ல இயற்பகையாரே போர்க்கோலம் பூண்டு காவலராக வந்தார். இச்செயலை எதிர்த்த தம் உறவினரை, ஊராரைப் போரிட்டு விரட்டினார். சாய்க்காடு என்னும் ஊர்வரை அடியவர் காவலாக வந்தார். 'இனி நீர் வீட்டிற்குத் திரும்பலாம்' என்று மறையவர் கூறியதும் மனைவியாரைச் சற்றும் திரும்பிப் பாராது ஊர்நோக்கி நடந்தார், இயற்பகையார். எத்துணையோ அடியாரைச் சோதித்த இறைவனே இவர் செயல்கண்டு துணுக்குற்றார். ''ஓலம், ஓலம், இயற்பகை முனிவா ஓலம்'' என்று இறைவன் குரல் எழுப்பினார். 'வேறுயாரும் எதிர்த்துத் தாக்க வந்தாரோ' என விரைந்தோடி வந்த நாயனார் மங்கையார் மட்டும் நிற்கக் கண்டார். அந்நிலையில் சிவபிரான் உமாதேவியாரோடு விண்ணில் தோன்றி 'நீ உன் மனைவியாரோடு நம்மிடம் வரக் கடவாய்' என்று அருள்புரிந்தார்.

இருவரும் சிவலோகமெய்தி இன்ப வாழ்வு பெற்றனர். இறந்துபட்ட உறவினரும் விண் ணடைந்து பிறவா இன்பப் பெருமை உற்றனர்.

ஊராரும் உறவினரும் 'மறையவரே கேட்டாலும் மனைவியைக் கொடுப்பதா? இவர் என்ன பித்தரா?' என்று இகழ்ந்துரைக்க உலகியலுக்குப் பகையாக, சிவத்தொண்டில் உறுதி கொண்டமையால் இந்நாயனார்க்கு இயற்பகையார் என்ற பெயர் வாய்த்தது போலும். இயற்பகையார் மார்கழித் திங்கள் உத்திர நாளில் முத்திபெற்றார். நகரத்தார் பக்தியோடு போரிடும் வீரமும் கொண்டிருந்தனர் என்பதை இயற்பகையார் வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

இயற்பகை நாயனார் விழா

திருத்தொண்டர் புராணத்தில் போற்றப்படும் நாயன்மார்களுள் நகரத்தார் மரபைச் சேர்ந்தவர், இயற்பகையார். நகரத்தார்களின் பழம்பதியாகிய காவிரிப்பூம்பட்டினத்தைச் சேர்ந்த இவர் அருகே உள்ள திருச்சாய்க்காட்டில் இறையருள் பெற்றார். (பார்க்க : இயற்பகை நாயனார்) இவரது குருபூசை மார்கழித் திங்கள் உத்திர நன்னாள் ஆகும். அந்நாளில் இயற்பகை நாயனார் விழா கொண்டாடப்பெறுகிறது. காவிரிப்பூட்டினம் சாயாவனம் திருக்கோவிலில் இத்திருவிழா ஐந்து நாட்கள் நடைபெறுகிறது. மார்கழி மாதம் உத்திர நட்சத்திரம் கூடியநாள் மூன்றாம் திருநாள் இயற்பகைநாயனார் குருபூசை நாளாகும். முதல்நாள் இயற்பகை நாயனார் திரு அவதாரம், இரண்டாம்நாள் இயற்பகை நாயனாருக்கும் கற்பினுக்கு அரசியாருக்கும் திருமணம், இரவு

Koviloor Digital Library

திருமணமக்கள் முத்துப்பல்லக்கில் திருவீதியுலா, மூன்றாம் திருநாள் காலை ஐம்பெருங்கடவுளர் அபிடேகம், மதியம் குருபூசை, மாலையில் இறைவன் மனைவியைக் கேட்டு வருதல், இல்லையே என்னாது இயற்பகையார் கொடுத்தல், உறவினர் எதிர்ப்பு, இயற்பகையார் உறவினரை எதிர்த்துக் கொல்லுதல், நகர் எல்லைவரை சிவனடியாரையும் மனைவியையும் விட்டுத் திரும்புதல். 'இயற்பகை முனிவா ஓலம்' என்ற இறைவன் குரல்கேட்டு விரைந்து சென்று பார்த்தல், கற்பினுக்கு அரசியார் மட்டும் அங்கு தனித்திருக்க விண்ணில் சிவனடியார் உமையொரு பாகனாகக் கண்ணிற்கினிய காட்சி அளித்தல், இரவு செயற்கரிய செய்த இயற்பகை நாயனார் கற்பினுக்கு அரசியார், உயிர்ப்பிக்கப் பெற்ற உற்றார் உறவினர் அனைவருக்கும் ஐம்பெருங்கடவுளரும் எழுந்தருளிக் காட்சி அளித்து ஆட்கொள்ளுதல் ஆகியவற்றைத் திரு உருவச் சிலைகளை வைத்து நடத்திக் காட்டுகின்றனர். நான்காம் திருநாள் ஐராவதத் திருக்குளத்தில் தீர்த்தம் கொடுத்தல், ஐந்தாம் திருநாள் விடாயாற்றிச் சடங்குகள் நிகழுகின்றன. விழா நாட்களில் கதை சொல்லி நடித்துக் காட்டுவதில் வல்ல காரைக்குடி தெ.லெ. அருணாசலம் செட்டியார் இயற்பகை நாயனார் கதையை நாடகப் பாங்கில் சொல்லி வருகின்றார். இலக்கிய விரிவுரைகளும் நிகழ்த்தப் பெறுகின்றன.

இரகுபதி. சே. (30-7-1950)

இலுப்பைக்குடி
வி. இலட்சுமிபுரம்
அரசியல்வாதி

சேவுகஞ் செட்டியார் – சிந்தாமணி ஆச்சியின் மகன். பி.எஸ்.சி., பி.எல்., பட்டம் பெற்றவர். புதுக்கோட்டையில் வழக்குரைஞராகத் தொழில் செய்தவர். அ.இ.அ.தி.மு.க. தொடங்கப் பட்டதிலிருந்து அதன் உறுப்பினர். 1978இலிருந்து இரண்டாண்டுகள் கட்சியின் புதுக்கோட்டை நகரச் செயலாளராகவும் 1980இலிருந்து புதுக்கோட்டை மாவட்டச் செயலாளராகவும் பணியாற்றினார். 1991இல் புதுக்கோட்டைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 27–2–1992முதல் ஏப்ரல் 1996 முடியத் தமிழக அமைச்சரவையில் தொழிலாளர் நலத்துறை மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சராகப் பணியாற்றினார். இராசா சர் முத்தையா செட்டியாருக்குப் பிறகு தமிழக அமைச்சரவையில் இடம்பெற்ற நகரத்தார் என்ற சிறப்பு இவருக்கு உண்டு.

இரணிக்கோவில்

நகரக்கோவில்கள் ஒன்பதில் ஒன்றான இத்திருக்கோவில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து பிள்ளையார்பட்டி வைரவன்பட்டி வழியாக விராமதி செல்லும் சாலையின் இடதுபுறம் பிரியும் கிளைச்சாலையில் 24 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடிக் கோவிலைச் சார்ந்த திருவேட்பூருடையார் என்னும் பிரிவினரான சகோதரர்களில் மூத்தவர் வழியினர் இரணியூர்க் கோவிலைத் தமக்குரிய தனிக்கோவிலாகக் கொண்டு வாழலாயினர். இளையவர் வழியினர் பிள்ளையார்பட்டிக் கோவிலைத் தமக்குரிய தனிக்கோவிலாகக் கொண்டு வாழலாயினர். இக்காரணத்தாலேயே இவ்விரு கோவிலாரும் தமக்குள் திருமணச் சம்பந்தம் செய்து கொள்வதில்லை. இவர்கள் எழுதும் இசைவுப்பிடிமானத்தில் ''கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராசநாராயண புரத்தில் இரணியூர்த் திருவேட்பூருடையார்'' என்று எழுதுகின்றனர். நரசிம்மாவதாரத்தில் இரணியனைக் கொன்ற பாவம் நீங்கத் திருமால் சிவபெருமானை இத்தலத்தில் வழிபட்டதாகக் கூறும் புராணக் குறிப்பின் அடிப்படையில் இவ்வூர் இரணியூர் என வழங்கப்பட்டது. 13ஆம் நூற்றாண்டில் இரணியூர்க்கோவில் நிருவாகத்தை நகரத்தார்கள் ஏற்றுக் கொண்டனர்.

இப்போது இக்கோவில் சார்ந்த நகரத்தார்கள் 1. அரிமழம் 2. க. அளகாபுரி 3. பி. அளகாபுரி 4. ஆ. தெற்கூர் 5. இராங்கியம் 6. இராயவரம் 7. கொ. இலட்சுமிபுரம் 8. உலகம்பட்டி 9. கடியாபட்டி 10. கண்டனூர் 11. கருங்குளம் 12. காரைக்குடி 13. கானாடுகாத்தான் 14. கீழச்சிவல்பட்டி 15. குருவிக்கொண்டான் பட்டி 16. குழிபிறை 17. கொத்தமங்கலம் 18. கொப்பனாபட்டி 19. கோட்டையூர் 20. கோனாபட்டு 21. செவ்வூர் 22. தேவகோட்டை 23. தேனிபட்டி 24. நாட்டரசன்கோட்டை 25. நெற்குப்பை 26. நேமத்தான்பட்டி 27. பலவான்குடி 28. பள்ளத்தூர் 29. பனையப்பட்டி 30. புதுவயல் 31. பூலாங்குறிச்சி 32. மிதிலைப் பட்டி 33. மேலைச்சிவபுரி 34. வலையபட்டி 35. வேந்தன்பட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றார்கள். மொத்தப் புள்ளிகள் 3057.

இக்கோவிலில் அமர்ந்தருள் செய்யும்

இறைவன் : அருள்மிகு ஆட்கொண்ட நாதர்
இறைவி : அருள்மிகு சிவபுரந்தேவி

Koviloor Digital Library

இக்கோவிலுக்கு 1928, 1944, 1990 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நீராட்டு விழாக்கள் நடைபெற்றுள்ளன. இக்கோவிலைச் சார்ந்து நீலமேகப் பெருமாள் கோவில், பத்திரகாளி அம்மன் கோவில், நகரவிடுதி ஆகியவை அமைந்துள்ளன. சிவன்கோவிலுக்குக் கல்லூருணியும் பெருமாள் கோவிலுக்குப் பெருமாள் ஊருணியும் பத்திரகாளியம்மன் கோவிலுக்கு அம்மன் சேங்கை எனப்படும் திருவேட்பூருடையார் ஊருணியும் என இங்கே 3 ஊருணிகள் உள்ளன.


1926ஆம் ஆண்டு இந்தியக் கல்வெட்டு அறிக்கையில் இரணியூர்க் கல்வெட்டுக்கள் 13 இடம்பெற்றுள்ளன. தற்போது ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்களில் இக்கோவில் கல்வாயிலாண்ட நாயனார் கோவில் என்றும் இங்குள்ள இறைவன் பெயர் ஆட்கொண்ட ஈசுவரமுடைய நாயனார் என்றும் காணப்படுகின்றன.

இரணிக்கோவிலின் தனிச்சிறப்புக்களாகப் பின்வரும் ஆறு செய்திகளை ஒன்பது நகரக் கோவில் ஆய்வாளர் தேனப்பன் எடுத்துக் காட்டுகிறார் :

1. கருவறை அமைப்பு 2. தூண்சிற்பங்கள் 3. கோட்டச் சிற்பங்கள் 4. காலத்திற்கேற்ற புதிய சிற்பங்கள். 5. நிலவறை, கற்சாளரம், கற்குழாய் அமைத்தல் 6. ஐம்பொன் சிற்பங்கள்.

கருவறை அமைப்பு : இரணிக்கோவிலில் கருவறைகள் பளபளப்பான சலவைக் கருங்கற்களால் அமைந்துள்ளன. சலவைக் கற்களினால் அமைந்த தேவகோட்டங்கள் அழுக்குறாதிருக்க அவற்றின் புறச்சுவர்களில் நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, அடிமுடி காட்டா நாதர், பிரம்மா, துர்க்கை, ஆகியோர்களது கற்சிற்பங்களுக்குப் பதிலாக ஐம்பொன் சிற்பங்களையே நிறுவியுள்ளனர்.

தூண்சிற்பங்கள் : இங்கு வழிபாட்டில் உள்ள கற்சிற்பங்களின் மொத்த எண்ணிக்கை 127. தூண் சிற்பங்கள் 71. இவற்றுள் மிக நுட்பமாகச் செதுக்கப்பெற்ற மிகச்சிறந்த சிற்பங்களாகக் காலசம்காரமூர்த்தி சிற்பம், முப்புரம் எரித்தவர் சிற்பம், உமையொருபாகன் சிற்பம் ஆகியன அமைந்துள்ளன. காலசம்கார மூர்த்தி சிற்பத்தில் எமன்வீசும் பாசக்கயிற்றில் உள்ள பிரிகளும், முப்புரம் எரிக்க வந்த மூர்த்தி சிற்பத்தில் கால் நரம்புகளும் கூட நம் கண்ணுக்குத் தோன்று மளவுக்கு மிக நுட்பமாகச் சிற்பி வடித்துள்ளார்.



இரணிக்கோவில்

கோட்டச்சிற்பங்கள் : வேறு எந்தக் கோவிலிலும் காண்பதற்கு அரிதான எட்டுத்திக்கு களுக்குரிய கடவுளரின் சிற்பங்கள் இராசகோபுரத் தளத்திலுள்ள கோட்டங்களில் காணப்படுகின்றன. வாஸ்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சிற்ப

Koviloor Digital Library

இலக்கணப்படி இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வாயு, குபேரன், ஈசானன் ஆகியோரது அரிய சிற்பங்கள் அழகாக அமைந்துள்ளன.

புதிய சிற்பங்கள் : இரணியூர்க் கோவில் சுதந்திரப் போராட்ட காலமான 1944இல் கல்திருப்பணி செய்யப் பெற்றதால் பாரதமாதா, தேசக்கொடி, இராட்டை, காந்தி சிற்பங்கள் இக்கோவிலில் இடம்பெற்றுள்ளன.

நிலவறை, கற்சாளரம் : பிற கோவில்களில் காணப்படாத நிலவறை (Underground room) இங்கு அமைந்துள்ளது. ஓரடி இடைவெளிவிட்டு இரண்டு கற்சுவர்களால் இந்நிலவறை கட்டப்பெற்றுள்ளது. இடையே ஓரடி இடைவெளியில் நீர் நிரப்பப் பெற்றதும் இவ்வறை குளுகுளுப்பாக அமையும். கருங்கல்லினைக் குடைந்து செய்யப் பெற்ற கற்சாளரமும் கற்குழாய்களும் இக்கோவிலில் மட்டுமே காணக்கூடியவை.

ஐம்பொன் சிற்பங்கள் : இங்கு 27 ஐம்பொன் சிற்பங்கள் உள்ளன. பிட்சாடனர் சிற்பம், முத்துக்கந்தர், வீரபாகு, பசுபதிலிங்கம், பதுமலிங்கம் ஆகிய ஐம்பொன் சிற்பங்கள் கலையழகு மிக்கன.

இரணியூர்க் கோவிலின் முன்பகுதியான அஷ்டலெட்சுமி மண்டபம் நகரத்தார் வளர்த்த ஓவியக்கலைக்கும் சிற்பக்கலைக்கும் சான்றாக அமைந்துள்ளது. பேரூர், கிருட்டிணபுரம், சிற்பங்கள் போலச் செட்டிநாட்டின் சிற்பக் களஞ்சியமாக இரணியூர்க் கோவில் திகழ்கிறது.

இரத்தினம் செட்டியார், முரு.பழ. (18-8-1921 - 28-10-93)

மாத்தூர் - மண்ணூர்
விரையாச்சிலை
சைவசித்தாந்த வித்தகர்

முரு. பழநியப்ப செட்டியார் – நாகம்மை ஆச்சியின் மகன். இளமையிலேயே தந்தையுடன் மலேசியா சென்றுவிட்டதால், அங்கு சீனியர் கேம்பிரிட்ஜ் வரை கற்றார். 1940இல் இந்தியா திரும்பிய பிறகு மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுக்குப் படித்துத் தமிழ் இலக்கண, இலக்கிய அறிவு கைவரப் பெற்றார். சித்தாந்த சாத்திரங்களைப் பழுதறக் கற்றார்.

1950முதல் தம் வாழ்நாளின் இறுதிவரை மலேசியாவிலும், தமிழகத்திலும் தனிச்சொற் பொழிவுகளும், தொடர் சொற்பொழிவுகளும் நிகழ்த்திச் சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பரப்பினார். சைவ சித்தாந்த மகாசமாசத்தின் ஏடான 'சித்தாந்தத்'தில் சைவசித்தாந்தம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். சைவ சித்தாந்தக் கடல் என இவரைக் கூறலாம்.

1. கடவுளால் முடியாத செயல்கள்
2. தடைகளும் விடைகளும் I & II பகுதிகள்
3. வாலிவதம் சரியா?
4. புலால் தின்பது தீவினையா?
5. திருவாசகச் சுவை
6. இதோ சைவ சித்தாந்தம்
7. கம்பன் உணர்த்தும் பரம்பொருள் நிலை

என்பன இவர் எழுதிய நூல்கள்.

1959இல் குன்றக்குடி அடிகளார் 'அருள்நெறிச் செல்வர்' என்ற பட்டத்தையும் 1960இல் மலேசியத் தமிழ்ச் சங்கங்கள் அனைத்தும் இணைந்து, 'புலவர் மணி' என்ற பட்டத்தையும் 1962இல் திரு.கா. இராமநாதன் செட்டியார்'சித்தாந்த வித்தகர்' என்ற பட்டத்தையும் 1970இல் சென்னை இந்து பரீட்சத்துச் சபை 'வித்யாரத்னா' என்ற விருதையும் 1978இல் புதுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தார் 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டத்தையும் இவருக்கு வழங்கினர்.

இவரைச் சொற்பொழிவாளராகவும், நூலாசிரியராகவும் தத்துவ மேதையாகவும், சைவசித்தாந்த அறிஞராகவும் தமிழுலகம் ஏற்றுப் போற்றுகிறது.

இரவி தமிழ்வாணன் (11-11-1955)

மாத்தூர் - மணலூர்
தேவகோட்டை
பதிப்பாளர்

புகழ்பெற்ற எழுத்தாளர் தமிழ்வாணன் – மணிமேகலையின் இரண்டாவது மகன் இவர். வணிகவியலில் இளையர் பட்டம் பெற்றவர். தந்தையாரால் தொடங்கி நடத்தப் பெற்ற மணிமேகலைப் பிரசுரத்தின் நிருவாகி.

மணிமேகலைப் பிரசுரம் இதுவரை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழகத்திற்கு வழங்கியுள்ளது. மணிமேகலைப் பிரசுரத்தின் ஆசிரியர் குழு என்பது 45 உறுப்பினர்களைக் கொண்டது. அக்குழுவில் இவரும் ஓர் உறுப்பினர்.

பதிப்பக நிருவாகத்தில் மிகவும் திறம் படைத்தவர். இவர் நிருவாகத்தில் மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்ட நூல்களுள் பல நூல்கள் பரிசு பெற்றுள்ளன.

துறைதோறும் தமிழ் நூல்களைப் பதிப்பித்துத் தொய்வின்றி விற்பனை செய்யும் தொழில் விற்பன்னர் இவர்.

Koviloor Digital Library

இராகவன், டாக்டர். மீ., (15-7-1943)

மாத்தூர் - கருப்பூர்
கல்லல்
ஆராய்ச்சி நிலைய இயக்குநர் - விஞ்ஞானி

அழ.ரெ. மீனாட்சி சுந்தரம் செட்டியார் – கல்யாணி ஆச்சியின் மகன்.

மதுரை தியாகராசர் கலைக்கல்லூரியில் பயின்றபின் தியாகராசர் பொறியியற் கல்லூரியில் படித்து பி.இ. பட்டம் பெற்றார். பின் பெங்களூரிலுள்ள Institute of Science நிறுவனத்தில் எம்.இ. பட்டம் பெற்று, மின்வேதி பொறியியல் துறையில் ஆய்வுசெய்து மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

கிண்டி பொறியியற் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய பின், 'சிக்ரி' (CECRI) என்று அழைக்கப்படும் காரைக்குடி மைய மின்வேதியியல் ஆய்வு நிலையத்தில் 1970ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார். அங்கு 28 ஆண்டுகள் பல்வேறு பொறுப்புக்களை வகித்த இவர் 29-4-1998இல் அந்நிலையத்தின் இயக்குநராக நியமனம் பெற்றார்.

பாட்டரியால் இயங்கும் மின் ஊர்திகளைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை உருவாக்கிய இவர், இப்போது இஸ்ரோ (ISRO) எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்குத் தேவையான ராக்கெட்டுகளின் பாகங்களைத் தயாரித்துக் கொடுப்பதில் ஈடுபட்டுள்ளார்.

மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பத்துறையில் பல்வேறு பொறுப்புக்களை வகித்துவரும் இவர், சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகிறார். காரைக்குடி ஜேஸீஸ் அமைப்பின் தலைவராகவும் காரைக்குடி அரிமா சங்கம், (324-B3) அரிமா மாவட்ட சங்கம், ஆகியவற்றின் தலைவராகவும் பணிபுரிந்துள்ள இவர், இப்போது அரிமா வட்டார சங்கத்தின் தலைவராக உள்ளார்.

வள்ளல் அழகப்பரின் நன்கொடையால் செட்டிநாட்டில் உருவாகி, உலகப் புகழ்பெற்று விளங்கும் 'சிக்ரி' நிலையத்தின் இயக்குநராக நகரத்தார் ஒருவர் முதன்முறையாக நியமனம் பெற்றிருப்பது மிகுந்த பெருமைக்குரியதாகும்.

இராங்கியம்

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து குன்றக்குடி, நேமம், கீழச்சிவல்பட்டி வழியாக 36 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இராசசிங்க மங்கலம் என்பது இவ்வூரின் பழைய பெயர்.

இளையாத்தங்குடி, நேமங்கோவில், இலுப்பைக்குடி, இரணிக்கோவில் ஆகிய 4 நகரக் கோவில்களைச் சேர்ந்த 313 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இவ்வூரில் மிகப்பழைய சிவன்கோவில் ஒன்று உளது. சிவகாமிஅம்மையுடனாய பூமிநாதர் கோவில் என்ற இக்கோவிலில் 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கோவில் தமிழக அரசின் அறநிலையத் துறையால் நிருவகிக்கப்படுகிறது. ஆயினும் இக்கோவிலுக்குரிய ஒருகாலப் படித்தரம் இவ்வூர் நகரத்தாரால் வழங்கப்படுகிறது.

நகரத்தாருக்குப் பொதுவாகச் சுப்பிரமணிய சாமி கோவில் கட்டப்பெற்றுள்ளது. இவ்வூரில் உள்ள பெரிய கருப்பண்ணசாமி கோவிலைப் பல்வேறு ஊர்களைச் சேர்ந்த நகரத்தார்களும் குலதெய்வக் கோவிலாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். இவ்வூர் வ.நா. குடும்பத்தார் சிதம்பர விநாயகர் கோவிலைக் கட்டி 1937இல் குடமுழுக்குச் செய்தனர்.

நகரத்தார் பொதுவில் 1948இல் தொடங்கப் பெற்ற சிவகாமி அம்பிகை வித்தியாசாலை உயர்நிலைப் பள்ளியும், சிவகாமி அம்பிகை தொடக்கப் பள்ளியும் இப்போது நா.அ. குடும்பத்தாரால் நிருவகிக்கப்படுகின்றன.

வ.நா. வள்ளியப்ப செட்டியார் சொந்தமாக ஒரு மருத்துவமனையை 1944இல் தொடங்கி 20 ஆண்டுகள் நடத்திய பின் அதனை அரசிடம் ஒப்படைத்துள்ளார். இப்போது அது அரசு மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

சுப்பிரமணிய சுவாமி கோவிலில் வைகாசி விசாகம் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. இரணிக்கோவிலைச் சேர்ந்த மூன்று நான்கு குடும்பத்தார் வீடுகளில் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப்படுகிறது.

இளையாத்தங்குடி கழனிவாசற்குடிப் பிரிவைச் சேர்ந்த இராங்கியம், கண்டவராயன்பட்டி, குழிபிறை, கொப்பனாபட்டி, பூலாங்குறிச்சி, விரையாச்சிலை, வேகுப்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த நகரத்தார் 2 ஆண்டுகட்கொருமுறை ஆடிமாதம் இவ்வூரில் கூடி வளத்தியம்மன் படைப்பினைப் படைக்கின்றனர்.

இலுப்பைக்குடியைச் சார்ந்த இராங்கியம், குழிபிறை, பனையப்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த நகரத்தார் 2 ஆண்டுகட்கொருமுறை ஆடி மாதம் இங்கே கூடி அடைக்காத்தாள் படைப்பைப் படைக்கின்றனர்.

Koviloor Digital Library

இளையாத்தங்குடி ஒக்கூருடையார் நகரத்தார்கள் பல்வேறு ஊரைச் சேர்ந்தவர்கள் 5 ஆண்டுகட்கொருமுறை ஆடி மாதம் பொன்னமராவதியில் கூடித் துர்க்கையம்மன் படைப்பைப் படைக்கின்றனர். இப்படைப்பில் இராங்கியம் நகரத்தாரும் உள்ளனர்.

இவ்வூரைச்சேர்ந்த மு.நா.நாகப்பன் இ.தே.ரா. வில் பணிபுரிந்தவர் வ.நா.அ.சுப. சுப்பிர மணியன் செட்டியார் தஞ்சாவூர் மாரியம்மன் கோவிலுக்கு இராசகோபுரம் கட்டிக் குடமுழுக்குச் செய்துள்ளார் நா.அ. நாகப்பச் செட்டியார் குடும்பத்தினர் அம்மாப்பட்டி கருப்பர் கோவில் குடமுழுக்கை நிகழ்த்தியுள்ளனர். இவை இவ்வூர் நகரத்தாரின் குறிப்பிடத்தக்க சில அறப்பணிகள்.

இராசா சர் அண்ணாமலை செட்டியார் உருவச்சிலை

இராசா சர் அண்ணாமலை செட்டியாருக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்றும், இவர் போற்றி வளர்த்த தமிழிசைச் சங்கக் கட்டிடமாகிய இராசா அண்ணாமலை மன்றத்தில் ஒன்றும் ஆக இரு உருவச்சிலைகள் அமைந்துள்ளன.

அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் அளித்த நன்கொடைகளால் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளி விழாவின் போது பல்கலைக்கழகத்தில் சி.பி. இராமசாமி அய்யர் நூலகத்துக்கும் மைய நிருவாகக் கட்டிடத்திற்கும் இடையே நிருவாகக் கட்டிடத்தைப் பார்த்துக் கொண்டு நிற்பது போல இவரது உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. 15 அடி உயரப் பீடத்தில் நிறுவப்பட்ட இச்சிலை 9 அடி உயரம் உடையதாகும். இதனை 9–2–1955இல் மைசூர் ஜெயசாமராச உடையார் திறந்துவைத்தார். சிலையின் பீடத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் அவரது அருங்குணங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இராசா அண்ணாமலை மன்றத்திலும் இவரது உருவச்சிலை நின்ற வண்ணத்திலேயே அமைக்கப் பட்டுள்ளது. மன்றத்தின் முகப்பில் எதிரில் உள்ள சாலையை நோக்கி நிற்பது போல இச்சிலை நிறுவப்பெற்றுள்ளது. இச்சிலை சிற்பவல்லுநர் டிபி. ராய் சௌத்திரியால் உருவாக்கப் பெற்றது. 16–11–1964இல் இச்சிலையையும் ஜெயசாமராச உடையாரே திறந்துவைத்தார்.

இவ்வுருவச்சிலைகள் அவருக்கு நினைவுச் சின்னமாக மட்டுமின்றி அவரது கல்விப் பணிக்கும் தமிழகக் கலைப்பணிக்கும் தமிழக மக்கள் செய்யும் நன்றியறிதலாகவும் விளங்கு கின்றன.

இராசா சர் அண்ணாமலை செட்டியார் நினைவு அஞ்சல்தலை

இந்திய அரசின் அஞ்சல் துறையினர் இராசா சர் அண்ணாமலை செட்டியாரின் நினைவைப் போற்றும் வண்ணம் அஞ்சல்தலை வெளியிட்டனர். 35 காசு விலையுள்ள இந்த அஞ்சல் தலையில் அண்ணாமலை செட்டியாரின் மார்பளவு உருவப்படம் இடம் பெற்றுள்ளது. அதற்குக் கீழே இந்தியிலும் ஆங்கிலத்திலும் அவர் பெயர் அச்சிடப்பெற்று அருகே 1881 – 1948 என அவர் வாழ்ந்த ஆண்டுகள் குறிக்கப் பெற்றுள்ளன.

அஞ்சல்தலை வெளியீட்டு விழா சென்னையில் உள்ள இராணி சீதை மன்றத்தில் அண்ணாமலை செட்டியாரின் நூற்றாண்டு விழாத் தொடக்க நாளான 30–9–1980 அன்று நடைபெற்றது. அப்போதைய இந்திய அஞ்சல்துறை அமைச்சர் ஸ்டீபன் அஞ்சல் தலையை வெளியிட இராசா சர் முத்தையா செட்டியார் பெற்றுக் கொண்டார்.

இராசா சர் அண்ணாமலை செட்டியார் பிறந்தநாள் பரிசு

மு.அ.மு. இராமசாமி நிறுவிய இராசா சர் அண்ணாமலை செட்டியார் அறக்கட்டளையின் சார்பில் இப்பரிசு வழங்கப் பெறுகிறது. ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப் பெறும் தமிழிசைக் கலைஞர் ஒருவருக்கு ரூபாய் ஒரு இலட்சம் அண்ணாமலை செட்டியாரின் பிறந்த நாளான செப்டம்பர் 30ஆம் நாள் வழங்கப்படுகின்றது.

இராசா சர் முத்தையா செட்டியார் உருவச்சிலை

இராசா சர் முத்தையா செட்டியாரின் உருவச்சிலை மூன்று இடங்களில் நிறுவப் பெற்றுள்ளது. அண்ணாமலை நகர், சென்னை, மதுரை ஆகிய மூன்று ஊர்களில் இச்சிலைகள் அமைந்துள்ளன.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் இராசா முத்தையா உடற்கூறு மருத்துவ இயல் ஆய்வுமையக் கட்டிடத்திற்கு எதிரே சாலையைப் பார்த்த வண்ணம் இவரது முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப் பெற்றுள்ளது. 12 அடி உயரப் பீடத்தின் மீது 6 அடி உயரச் சிலை அமைந்துள்ளது.

Koviloor Digital Library

சென்னையில் ரிப்பன்மாளிகை என வழங்கும் சென்னை மாநகராட்சி மன்றக் கட்டிட வளாகத்தில் இவரது மற்றொரு சிலை அமைந்துள்ளது. இராசா சர் அண்ணாமலை செட்டியார் நினைவு அறக்கட்டளையினர் இச்சிலையை நிறுவியுள்ளனர். சென்னை மாநகராட்சியின் முதல் தலைவராக இவர் பணியாற்றியமையால் இவரது சிலை மாநகராட்சி மன்றத் தலைவருக்குரிய ஆடை அணிகளுடன் முழு உருவச்சிலையாக அமைக்கப் பெற்றுள்ளது. இச்சிலையை 21–10–1994 அன்று தமிழக முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

மதுரையில் தமிழிசைச் சங்கக் கட்டிடமாகிய இராசா முத்தையா மன்ற வளாகத்தில் கட்டிடத்திற்கு முன்னே மதுரை – மேலூர்ச் சாலையை நோக்கிய வண்ணம் மூன்றாவது சிலை அமைந்துள்ளது. பீடமும் சிலையும் சேர்த்து இதன் மொத்த உயரம் 18 அடி. இச்சிலையை 12–8–1989இல் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி திறந்து வைத்தார்.

இராசா சர் முத்தையா செட்டியார் நினைவு அஞ்சல் தலை

இந்திய அரசின் அஞ்சல் துறையினர் 1987ஆம் ஆண்டில் டாக்டர். இராசா சர் முத்தையா செட்டியார் நினைவைப் போற்றும் வண்ணம் அஞ்சல் தலை வெளியிட்டனர். 60 காசுவிலை உடைய இந்த அஞ்சல் தலையில் வலப்புறம் முத்தையா செட்டியாரின் மார்பளவு உருவப்படம், சென்னை மாநகராட்சித் தலைவர் உடையில் காணப்படுகிறது. பின்னணியில் இடப்புறம் மாநகராட்சிக் கட்டிடமாகிய ரிப்பன் கட்டிடம் இடம் பெற்றுள்ளது. இடதுபுறம் மேல் வரியில் டாக்டர் இராசா சர் எம்.ஏ. முத்தையா செட்டியார் என ஆங்கிலத்தில் அச்சிடப்பெற்று அதனையொட்டி 1905–1984 என அவர் வாழ்ந்த ஆண்டுகள் குறிப்பிடப்பெற்றுள. இடப்புற ஓரத்தில் கீழிருந்து மேலாக டாக்டர் இராசா சர். எம்.ஏ. முத்தையா செட்டியார் என இந்தியில் அச்சிடப்பெற்றுளது.

அஞ்சல்தலை வெளியீட்டு விழா சென்னையில் 21–12–1987 அன்று நடைபெற்றது. மாநில நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் தலைமையில், மத்திய உள்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் அஞ்சல் தலையை வெளியிட்டார். முத்தையா செட்டியாரின் பேரன் மு. அண்ணாமலை அதனைப் பெற்றுக் கொண்டார். சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் சிறப்புரையாற்றினார்.

இராசா சர் முத்தையா செட்டியார் பிறந்தநாள் நினைவுப் பரிசு

மு.அ.மு. இராமசாமி செட்டியாரால் நிறுவப் பெற்ற இராசா சர் அண்ணாமலை செட்டியார் நினைவு அறக்கட்டளையின் சார்பில் இப்பரிசு வழங்கப் பெறுகிறது. இராசா சர் முத்தையா செட்டியார் மறைவிற்குப் பிறகு 1988ஆம் ஆண்டு முதல் அவர் பிறந்த நாளான ஆகஸ்ட் திங்கள் ஐந்தாம் நாளன்று பரிசளிப்பு விழா நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப் பெறும் தமிழறிஞர் ஒருவருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் பரிசாக வழங்கப் பெறுகிறது. 1997ஆம் ஆண்டிலிருந்து இப்பரிசுத் தொகை இலட்ச ரூபாயாக உயர்த்தப் பெற்றுள்ளது.

இராணி மெய்யம்மை ஆச்சி பரிசு

மு.அ.மு. இராமசாமி நிறுவிய இராசா சர் அண்ணாமலை செட்டியார் அறக்கட்டளையின் சார்பில் இப்பரிசு வழங்கப்பெறுகின்றது. சிறந்த சமூக சேவகி அல்லது பெண்கள் முன்னேற்றத் திற்குப் பாடுபடும் தொண்டு நிறுவனத்திற்கு இராணி மெய்யம்மை ஆச்சி பிறந்த நாளான அக்டோபர் 10ஆம் நாள் ரூபாய் ஒரு இலட்சம் பரிசாக ஆண்டுதோறும் வழங்கப் பெறுகிறது.

இராமசாமி, அரு., (7.7.1929)

மாத்தூர் - உறையூர்
கொ. இலட்சுமிபுரம்
சோதிடர்

ஏஎல்.ஏஆர். அருணாசலம் செட்டியார் – அழகம்மை ஆச்சியின் மகன். தொடக்கத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நாகப்ப செட்டியாரது நேர்முக உதவியாளராகவும் பின்னர் இராணுவத்திலும் பணியாற்றிய இவர் 1974முதல் சோதிடத்தை முழுநேரத் தொழிலாக மேற்கொண்டுள்ளார். 1978இல் சோதிடப் பண்டிதர் என்ற பட்டயமும் 1993இல் இலங்கை திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டமும் பெற்றுள்ளார். 1996இல் தில்லியில் சோதிட பூஷணம் என்ற பட்டமும் தங்கப் பதக்கமும் பெற்றார். ராஜ மாதங்கியை நாள்தோறும் அக்கினி வளர்த்து வழிபடும் இவர் 'மாதங்கிதாசன்' என்ற பட்டமும் பெற்றுள்ளார். திருமுருக கிருபானந்தவாரியார் இவரது திறமையைப் பாராட்டி 'அருங்கலை வினோதன்' என்று பட்டம் வழங்கியுள்ளார். பல்வேறு சோதிட மாநாடுகள் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ள இவர் மருத்தவ சோதிடத் துறையில் சிறப்புக் கவனம் செலுத்தி ஆய்வு செய்து வருகிறார்.

Koviloor Digital Library

இராமசாமிச் செட்டியார், இராம.கு. (1863-1953)

வைரவன் கோவில்
பலவான்குடி
இதழாசிரியர்

சிறந்த சைவ சித்தாந்த வித்தகர். தஞ்சாவூருக்குச் சற்று வடக்கே உள்ள திருத்தென்குடித் திட்டைக் கோவிலைத் திருப்பணி செய்தவர். திருவாசகத்தில் ஈடுபாடு கொண்டு தம் ஊரான பலவான்குடியில் திருவாசக மடம் ஒன்றை அமைத்தவர். சிவநேசர் திருக்கூட்டம் (த.க.) என்ற அமைப்பில் சேர்ந்து, அதன் சார்பில் 1927இல் 'சிவநேசன்' (த.க.) என்ற வார இதழைத் தாமே ஆசிரியரும் வெளியிடுபவருமாக இருந்து நடத்தினார். நகரத்தார் கோவில்களுள் ஒன்றாகிய வைரவன் கோவிற் புராணத்தை உரைநடை நூலாக்கியவர்.

இராமசாமிச் செட்டியார், இராம.வீர. (23-7-1901 - 16-6-94)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
காரைக்குடி
கல்வி வள்ளல்

இராம. வீரப்ப செட்டியார் – உமையாள் ஆச்சியின் மூத்த மகன். வீ.ஆர்.எம். செட்டியார் என்ற, காரைக்குடியைச் சேர்ந்த, புகழ்பெற்ற எழுத்தாளராகிய வீர. முத்துக்கருப்பன் செட்டியார், காரைக்குடியில் இவரோடு உடன் பயின்றவர். இவர் திண்ணைப்பள்ளியில் ஐந்தாவது படித்ததோடு தம் படிப்பை நிறுத்தி விட்டுத் தந்தையாருடன் சிங்கப்பூர் சென்றார். தம் பதினான்காவது வயதிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதுமுதல் பல்வேறு தொழில்கள் வாயிலாகத் தம் முயற்சியால் பெரும்பொருள் ஈட்டினார்.

இவர் இரண்டு முறை சிங்கப்பூர் தண்டாயுதபாணி சுவாமி கோவில் அறங்காவலராக இருந்திருக்கிறார். நகரக் கோவில்களுள் ஒன்றான வைரவன் கோவிலில் நிருவாக அறங்காவலராகப் பல ஆண்டுகள் பணி செய்துள்ளார். 'சிங்கப்பூர் நகரத்தார் அறப்பணிக்கழகம்' என்ற அமைப்பை உருவாக்கி, அதன் தலைவராகத் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கும் மேல் பொறுப்பேற்றார்.

இவரது நண்பரும், பங்காளியுமான காரைக்குடி முத்துப்பட்டணத்தைச் சேர்ந்த சா.சு. சுப்பிரமணியன் செட்டியார், சிறாவயலில் நடந்த குருகுலத்தைத் தாம் ஏற்றுக் கொண்டு, சிறிது காலம் காரைக்குடியில் நடத்திய பின்னர், அதற்கான கட்டிடங்களை அமராவதிபுதூரில் கட்ட ஏற்பாடுகள் செய்தபோது அப் பொறுப்பினை இவரிடம் ஒப்படைத்து விட்டுச் சிங்கப்பூர் சென்றார். அவர் அங்கேயே காலமாகிவிட்ட சூழலில், இவர் கட்டிடங்கள் கட்டும் பணியைச் செவ்வனே முடித்ததோடு மட்டுமின்றி, பல ஆண்டுகள் தம் பொறுப்பிலேயே அந்தக் குருகுலத்தை நடத்தி வந்தார். இவர் வாழ்வின் இறுதிக் காலத்தில் மீண்டும் சா.சு.சுப. குடும்பத்தினர் குருகுல நிருவாகப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக் கொண்டனர். (பார்க்க : குருகுலம்)

நகரத்தார் குடும்பங்களில் பாகப்பிரிவினை போன்ற சிக்கல்கள், வழக்குகள் வரும்போது இவர் தாமே தனியாளாக இருந்து, அல்லது தம் தலைமையில் ஓரிருவர் அடங்கிய 'பஞ்சாயத்தார் குழு'வாக இருந்து, அனைத்துத் தரப்பினரும் ஏற்கத்தக்க முடிவுகளைக் கூறி முடித்து வைத்த ஆற்றலாளர்.

1958ஆம் ஆண்டில் 'இராமசாமி செட்டியார் கல்வி அறப்பணிக் கழகம்' என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார். அதன் சார்பாகக் காரைக்குடியில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கட்கு நிதி உதவி செய்யத் தொடங்கித் தம் வாழ்நாளின் இறுதிவரை செய்து வந்தார். தாம் வைரவன்கோவில் நிருவாக அறங்காவலராக இருந்த போது வசதியற்ற நகரத்தார் மாணவர்கள், வைரவன்கோவில் நகர விடுதியில் கட்டணமின்றித் தங்கி, உணவு உண்டு கல்வி கற்க வழிவகுத்தார்.

நகரத்தார்களில் பெண்ணுக்குத் திருமணம் செய்ய இயலாத குடும்பத்தினர் இவர் உதவியை நாடினால், தொடக்கத்தில், தம் வீட்டிலேயே மணமக்களுக்குப் புத்தாடை, தாலி முதலியவை எடுத்துக் கொடுத்து, உறவினர்க்கு விருந்தளித்துத் திருமணம் நடத்தி வைத்தார். இவ்வாறு 20க்கு மேற்பட்ட திருமணங்களை நிகழ்த்தியுள்ளார். பின்னர், பெண் வீட்டாருக்குத் திருமண உதவியாக ஒரு தொகையைக் கொடுப்பது என்ற முறையை வழக்கத்திற்குக் கொண்டு வந்து இவ்வுதவியைத் தொடர்ந்து செய்து வந்தார்.

சிங்கப்பூர் அறப்பணிக்கழகத்தையும் இதே போலக் கல்விக் கொடையும், திருமண நிதி உதவியும் செய்யுமாறு வழிநடத்தினார். அக்கழகம் இவற்றைத் தொடர்ந்து செய்து வருகிறது.

இவரது மணிவிழாவிலும், பிறையாயிரம் காணும் விழாவிலும் பெயருக்கு, முன்னரே திருமணமான ஓர் அந்தண மணமக்களுக்கு மண விழா நிகழ்த்தாமல், நகரத்தார் சமூக ஏழைப் பெண் ஒவ்வொருவருக்குத் திருமணம் செய்து வைத்தார்.

இவரது கல்விக் கொடைகளை முன்னிட்டுக் காரைக்குடிச் சுழற்கழகம் இவருக்குப் பாராட்டு விழா நடத்திச் சிறப்பித்தது.

Koviloor Digital Library

இவரை முனைவர் வ.சுப. மாணிக்கனார்,

"பள்ளிப் படிப்புக்கும் பற்பல ஆயிரம்
அள்ளிக் கொடுக்கும் அறிவுடைக் கையன்
.......
செயற்கைப் புகழைச் சிந்தை செய்யா
இயற்கைக் கொடைஞன் இராம சாமி"

எனப் பாராட்டுவது மிகவும் பொருத்தமான பாராட்டாகும்.

இராமசாமிச் செட்டியார், சி. இராம. (5-11-1903 - 5-2-70)

இளையாத்தங்குடி - கழனிவாசற்குடி
மகிபாலன்பட்டி
சைவசித்தாந்த வித்தகர்

பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரிடம் தமிழ், சைவ நூல்களைப் பயின்றவர். சமயச் சொற்பொழிவாளர். மலேசியாவில் இவர் செய்த தமிழ்ப் பணி, சைவப் பணிகளைக் கண்ட குன்றக்குடி அடிகளார் இவருக்குச் 'சித்தாந்த மணிமொழிச் செல்வர்' என்ற பட்டத்தைச் சூட்டினார். சித்தாந்தம், ஜப்பான் பயணம் குறித்துப் பல கட்டுரைகளை எழுதியுள்ள இவர் வேகுப்பட்டியைச் சேர்ந்த கவிஞர் பெரி. இலக்குமணச் செட்டியார் இயற்றிய 'பூம்புகார் ஆற்றுப்படை' என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இவரது மகன் சி. இராம. நாகப்பசெட்டியார் தம் தந்தையின் நினைவாக மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக்கு 1972இல் மாணவியர் விடுதி ஒன்றைக் கட்டிக் கொடுத்திருக்கிறார். தந்தையார் பெயரால் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழவும் ஏற்பாடு செய்துள்ளார்.

இராமசாமிச் செட்டியார், திவான்பகதூர், (மு., (. . . - 31-10-1918)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
கல்வியாளர்

சா.இராம. முத்தையா செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். 1908 முதல் 1916 வரை சிதம்பரம் நகர்மன்றத் தலைவராகவும் 1910 முதல் 1913 வரை சென்னை மேல்சபை உறுப்பினராகவும் இருந்தார். சென்னை மேல்சபை உறுப்பினராகத் திகழ்ந்த முதல் நகரத்தார் இவரே ஆவார். சிதம்பரம் வட்டாட்சிக் கழகத்தின் தலைவராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவர் சிதம்பரம் நகர்மன்றத் தலைவராக இருந்த போது அந்நகருக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்தது இவரது தனிச் சாதனையாகும். இவருடைய பொதுத் தொண்டைப் பாராட்டிச் சென்னை அரசாங்கம் இவருக்கு திவான்பகதூர் என்னும் பட்டத்தை அளித்தது.

இவர் 1915 இல் சிதம்பரத்தில் 'இராமசாமி செட்டியார் நடுநிலைப் பள்ளி'யைத் தொடங்கினார். 1916 இலேயே அப்பள்ளி உயர்நிலைப்பள்ளி ஆயிற்று. இவர் சிதம்பரம் திருக்கோவிலைப் புதுப்பித்தார்; அருகேயுள்ள திருவேட்களம் கோவிலைக் கட்டி 1915 இல் குடமுழுக்குவிழா நிகழ்த்தினார். இவரது இளவல் இராசா சர் அண்ணாமலை செட்டியார் சிதம்பரத்தில் பல்கலைக் கழகம் நிறுவ இவரது கல்விப் பணிகள் முன்னோடியாக அமைந்தன.

இராமசாமி, டாக்டர் மு.அ.மு. (30-9-1931)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
தொழிலதிபர்

இராசா சர்.மு.அ. முத்தையா செட்டியார் – மெய்யம்மை ஆச்சியின் இரண்டாவது மகன். தமது ஐயா இராசா சர். அண்ணாமலை செட்டியார் பிறந்த மாதம் தேதியில் சரியாக ஐம்பதாண்டுகளுக்குப் பின் இவர் பிறந்தார். ஆகவே, ஐயாவைப்போல் உறுதியான, தெளிவான, விரைவான முடிவுகள் எடுத்து



மு.அ.மு. இராமசாமி

முன்னோர் தொழிலையும், அறங்களையும் காத்து வளர்ப்பதில் சிறப்புற்று விளங்குகிறார். இவர் விவேகானந்தா கல்லூரியில் பயின்றவர். கல்லூரியில் பயிலும்போது பல்கலைக் கழகங் களுக்கிடையேயான டென்னிசு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று மாநில அளவில் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனது பொன் விழாவில் இவருக்கு டாக்டர் பட்டம் அளித்தது.

Koviloor Digital Library

இவர் தம் தந்தையார் பெயரிலும், தாயார் பெயரிலும் அவர்கள் புகழ் விளங்குமாறு சென்னையில் மிகச் சிறந்த மண்டபங்களைக் கட்டியுள்ளார். முத்தையா செட்டியார் நினைவாக ஆண்டுதோறும் தமிழ்ச் சான்றோர் ஒருவருக்கு ரூபாய் 1,00,000 பரிசிலாக அளித்துத் தந்தையார் நினைவைப் போற்றி வருகிறார். இவருடைய மணிவிழா 1991இல் கானாடுகாத்தானில் தமிழகமே வியக்கும் வண்ணம் சிறப்பாக நடைபெற்றது.

முன்னோர் தொடங்கிய கட்டுமான நிறுவனத் தொழில்களைச் சிறப்புற நடத்தி வருவதோடு, செட்டிநாடு சிமெண்டு ஆலையை முன்னணி நிறுவனமாக வளர்த்த பெருமை இவருக்குண்டு. செட்டிநாடு சிமெண்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநரான இவர் மற்றும் பல தொழில் நிறுவனங்களிலும் இயக்குநர் பொறுப்பை ஏற்றுத் திறம்படத் தொழில் வளர்த்து வருகிறார். தென்னிந்தியத் தொழில் வணிகக் கழகத்தின் தலைவராக இருமுறை தேர்ந்தெடுக்கப் பெற்ற பெருமை இவருக்குண்டு.

1984இல் அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் ஆன இவர் அப்பல்கலைக் கழகத்தைப் புதிய புதிய துறைகளில் விரிவடையச் செய்து வருகிறார். மருத்துவப் புலம் தொடங்கியதன் வாயிலாக இவர் தம் தந்தையாரின் விருப்பத்தை நிறைவேற்றியுள்ளார். பெரிய மருத்துவமனையோடு இணைந்த அழகிய மருத்துவக் கல்லூரிக் கட்டிடம் உலகத்தின் கண்கவரும் கட்டிடங்களுள் ஒன்றாகச் சிறப்புற்று விளங்குகிறது. மருத்துவப் புலம் இவரது புகழை என்றும் எடுத்தியம்பும் நிலைச் சான்று ஆகும்.

கல்லூரிப் பருவத்தில் இருந்த விளையாட்டுத் துறை ஆர்வம் இன்றும் தணியவில்லை. விளையாட்டுத் துறைக்கு இவர் பெருந் தொண்டாற்றியுள்ளார். இந்திய ஹாக்கிக் கழகத்தின் தலைவராக இவர் பணியாற்றிய போது, இந்திய அணி 1975இல் உலகக் கோப்பையையும், 1980இல் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தையும் வென்றது. இவ்வாறு ஹாக்கி விளையாட்டில் இந்தியா தலைநிமிர்ந்து நிற்கும் வண்ணம் வழி நடத்திச் சென்ற இவர் பந்தயக் குதிரைகளை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வமும், தேர்ந்த ஞானமும் உடையவர். குதிரைப் பந்தய வெற்றிகளுக்காக இவர் பெயர் 'கின்னசு' சாதனையாளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்டுதோறும் சபரிமலை சென்று வழிபட்டு வரும் வழக்கமுடைய இவர், சென்னையில் சபரிமலை சன்னிதானம் போன்ற அமைப்புடைய அழகான ஐயப்பன் கோவில் ஒன்றைக் கட்டியுள்ளார். இவரது சமயத் தொண்டைப் பாராட்டி சிருங்கேரி சாரதா பீடம் இவருக்குப் 'பக்த பூசணம்'' எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இவரது பல்துறைத் தொண்டுகளைப் பாராட்டித் தமிழக அரசு இருமுறை இவரைச் சென்னைநகரச் செரீபாக அமர்த்திப் பெருமைப்படுத்தியது (1971, 1974). கல்வி, தொழில், விளையாட்டு, கலை வளர்ச்சி, சமயம் எனப் பல்வேறு துறைகளிலும் தொண்டாற்றி வெற்றி கண்ட வித்தகராக விளங்குகிறார் இவர்.

இராமசாமி, டாக்டர் மு.பெரி. மு., (16-5-1935)

மாத்தூர் - உறையூர்
கொ. இலட்சுமிபுரம்
தமிழ்ப் பேராசிரியர்

மு.பெரி. முத்துராமன் செட்டியார் – உமையாள் ஆச்சியின் மகன். தமிழ் முதுகலை, ஆங்கில முதுகலைப் பட்டங்களோடு நக்கீரர் பற்றி ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றவர். அழகப்பா கல்லூரியில் தமிழ் விரிவுரை யாளராகவும் சேலம் சௌடேசுவரி கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றி 1993இல் ஓய்வு பெற்றார். 1996–97 கல்வியாண்டில் தர்மபுரி ஸ்ரீ காமதேனு கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றியுள்ளார். தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினரான இவர் அப்பல்கலைக் கழகத்தின் திட்டக் குழுவிலும் கட்டிடக் குழுவிலும் உறுப்பினராகப் பணியாற்றி வருகிறார். தமிழக முன்னாள் ஆளுநர் சென்னாரெட்டிக்குத் தமிழ் கற்பித்த சிறப்பு இவருக்கு உண்டு. திருக்குறள், திருமுருகாற்றுப்படை, சிவபுராணம் ஆகியவற்றுக்கு உரை எழுதியுள்ளார். கட்டிடக் கலையாகிய வாஸ்து இயலிலும் வல்லுநராக விளங்கும் இவர் வளம் பெருக்கும் வாஸ்து சாஸ்திரம் (அனுபவ மனையடி நூல்) என்னும் நூலை எழுதியுள்ளார்.

இராமசாமி தமிழ்க்கல்லூரி

காரைக்குடி வைரவன் கோவிலைச் சேர்ந்த சேந்தணியார் குடும்பத்தில் தோன்றிய இராம. பெரியகருப்பன் செட்டியார், தம் தந்தையாரும், வள்ளலுமாகிய இராம.வீர. இராமசாமி செட்டியார் பெயரால் தொடங்கிய கல்லூரியாகும் இது.

மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் துணையுடன் 26–1–1964இல் 'இந்தியப் பல்தமிழ்க் கழகம்' என்ற ஓர் அமைப்பைப் பெரியகருப்பனார் நிறுவி, அதன் வாயிலாகத் தமிழை வளர்க்கப்

Koviloor Digital Library

பொருள் செலவும், முயற்சியும் மேற்கொண்டார். நாளடைவில் இவ்வமைப்பு 'இராமசாமி தமிழ்க் கல்லூரி'யாக 18-6-1967இல் முகிழ்த்தது.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்ற இக்கல்லூரி தொடக்கத்தில் புலவர் வகுப்பினை நடத்தியது. 1976-77 கல்வியாண்டு முதல் அவ்வகுப்பிற்குப் பதிலாக இளம் இலக்கியவியல் (பி.லிட்) எனும் படிப்பினை நடத்தி வருகிறது.

கல்லூரிக்கென, காரைக்குடியிலிருந்து இலுப்பைக் குடி செல்லும் சாலையில் 19 ஏக்கர் நிலத்தைத் தமிழக அரசு 1983இல் வழங்கியது. அந்நிலத்தில் நிருவாகத்தார் கட்டியுள்ள புதிய கட்டிடங்களில் 5-2-1993 முதல் கல்லூரி இயங்கி வருகிறது.

இக்கல்லூரி நிறுவுநர் தம் தாயார் பெயரில் 'மீனாட்சி ஆச்சி நினைவுச் சொற்பொழிவு' எனும் அறக்கட்டளைத் தொடர் சொற்பொழிவினை 1978ஆம் ஆண்டில் ஏற்படுத்தினார். அப்போது முதல் ஆண்டுதோறும் பிப்ரவரித் திங்கள் 20, 21, 22 ஆகிய நாட்களில் இச்சொற்பொழிவு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இச்சொற் பொழிவில் பெரும்பாலானவற்றை, கல்லூரி நிறுவுநரே தம் மனைவியின் பெயரால் உருவாக்கியுள்ள மெய்யம்மை பதிப்பகம் நூலாக்கி வெளியிட்டுள்ளது.

செட்டிநாட்டுப் பகுதியில் இரு தமிழ்க் கல்லூரிகள் உள்ளன. அவை இரண்டும் நகரத்தாரால் தொடங்கி நடத்தப் பெறுபவை. இராம. பெரியகருப்பன் செட்டியார் என்ற தனி மனிதரால் தொடங்கப் பெற்ற இத் தமிழ்க் கல்லூரி வெள்ளி விழாவைத் தாண்டியிருக்கும் நிலையில், தொடர்ந்து அவர்தம் மக்களால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

இராமசாமி, ரெ., (10-8-1920)

மாத்தூர் - மணலூர்
கண்டனூர்
வானொலி நாடக ஆசிரியர்

கானாடுகாத்தானில் இராமசாமிச் செட்டியார் – அழகம்மை ஆச்சியின் மகனாகப் பிறந்தார். பின்னர் கண்டனூர் அரங்கநாதன் செட்டியார் – கருப்பாயி ஆச்சி இவரைப் பிள்ளை கூட்டிக் கொண்டனர். 1954இல் இருந்து மலேசியாவில் தொழில் செய்து வருகிறார். நல்ல தமிழ் எழுத்தாளரான இவரது கட்டுரைகள் தொடக்கத்தில் தமிழ் நாட்டு இதழ்கள் சிலவற்றிலும், பின்னர் சோலை, மலைமகள், தமிழ் நேசன், தமிழ் முரசு, தமிழ் மலர் போன்ற மலேசிய இதழ்களிலும் வெளிவந்தன. பின்னர் இக்கட்டுரைகளுள் பலவற்றை நூல் வடிவிலும் வெளியிட்டார். அவ்வாறு பத்துக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்தன.


கட்டுரைகளும், கவிதைகளும் எழுதுவதோடு இலக்கிய நாடகங்கள் எழுதுவதிலும் சிறந்த ஆற்றல் உடையவர். இவரது பத்துக்கு மேற்பட்ட அரைமணி நாடகங்களும், நான்கைந்து ஒரு மணி நேர நாடகங்களும் மலேசிய வானொலியில் ஒலிபரப்பாகின. மேலும், 'கருத்தும் கவியும்' என்ற தலைப்பில், கம்பராமாயணம் முழுவதையும் 51 தொடரில் நாடக வடிவில் இவர் எழுத, அதுவும் மலேசிய வானொலியில் ஒலி பரப்பாகியுள்ளது.

'சாத்தனார் சாதனை' எனும் மேடை நாடகத்தையும், இவர் எழுதியுள்ளார். அது மலேசியாவில் பலமுறை, பலமேடைகளில் நடிக்கப்பட்டுள்ளது.

இராமநாதன். அரு., (7-7-1923 - 18-10-1974)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
கண்டனூர்
இதழாசிரியர், எழுத்தாளர்

'காதல்' மாத இதழைத் தொடங்கி நடத்திய இவர் வயி.ராம. அருணாசலம் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன்.



அரு. இராமநாதன்

தன் முயற்சியால் தமிழ்கற்று வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபாடு உடையவராகவும் விளங்கினார். இவர் வரலாற்று நாடகங்கள் புதினங்கள் எழுதுவதில் வல்லவர். 'கலைமணி', 'காதல்', 'மர்மக்கதை' இதழ்களைத் தொடங்கி நடத்தி அவற்றின் ஆசிரியராகவும் விளங்கினார். 'ராஜராஜ சோழன்' என்னும் வரலாற்று நாடகம், 'வெற்றிவேல் வீரத்தேவன்', 'அசோகன் காதலி', 'வீரபாண்டியன் மனைவி' ஆகிய வரலாற்றுப் புதினங்கள், 'குண்டுமல்லிகை' எனும் சமூகப் புதினம், 'வானவில்' எனும் சமூக நாடகம், அம்பிகாபதி, பழையனூர் நீலி, நாயனம் சௌந்தரவடிவு, கதாநாயகி, முதல் முத்தம்,

Koviloor Digital Library

மனோரஞ்சிதம் ஆகிய சிறுகதைகள் சிந்தனையாளர் பிளேட்டோ, பெஞ்சமின் பிராங்க்ளின் ஆகிய ஆராய்ச்சி நூல்கள், இவரது படைப்புக்களாகும். இவருடைய 'ராஜராஜ சோழன்' டி.கே.எஸ். சகோதரர்களால் நாடகமாக நடிக்கப்பட்டுப் பின்னர் திரைப்படமாகவும், உருப்பெற்றது. தங்கப்பதுமை, பூலோகரம்பை ஆகிய திரைப்படங்களுக்கும் இவர் திரைக்கதை உரையாடல் எழுதியுள்ளார்.

1952இல் 'பிரேமா பிரசுரம்' என்ற நூல் வெளியீட்டு நிறுவனம் தொடங்கி 200க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். டார்வின் சிந்தனைகள், கார்ல்மார்க்சின் சிந்தனைகள், சித்தர் பாடல்கள், விநாயக புராணம், ஸ்ரீதேவி பாகவதம், விக்கிரமாதித்தன் கதைகள், கூளப்ப நாயக்கன் காதல், போன்ற நூல்களை மக்கள் பதிப்பாக இப்பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் முதல் விருது வழங்கும் விழாவில் இவர் 1967ஆம் ஆண்டு 'கலைமாமணி' விருது பெற்றார். இவரது வரலாற்று நாடகம், புதினங்களில் பாத்திரப் படைப்பு மிகச் சிறப்பாக அமைந்திருக்கும். துடிப்பான உணர்ச்சி நிறைந்த தமிழ்நடை இவரது புகழுக்குக் காரணமாகும். (பார்க்க : காதல்)

இராமநாதன், எஸ்.பி., (30-5-1924)

இரணிக்கோவில்
நேமத்தான்பட்டி
திரைப்பட ஒலிப்பதிவாளர்

இந்தியாவில் சிறந்த திரைப்பட ஒலிப் பதிவாளராக நான்குமுறை தேசிய விருது பெற்றுள்ள இராமநாதன் செட்டியார் மலேசியாவிலுள்ள மூவாரில் பள்ளிக்கல்வி பயின்றார். 1941இல் இந்தியாவிற்குத் திரும்பி ரேடியோ இஞ்சினியரிங் கல்வி கற்றார்.

தொடக்கத்தில் ஏ.வி.எம். ஸ்டுடியோ தேவ கோட்டைச் சாலையில் இருந்தபோது ஒலிப்பதிவுத் துறையில் உதவியாளராகச் சேர்ந்தார். 1964 வரை ஏ.வி.எம். மில் ஒலிப்பதிவு உதவியாளராக இருந்த பிறகு கோல்டன் ஸ்டுடியோவில் தலைமை ஒலிப்பதிவாளராகப் பொறுப்பேற்றார். பின்னர் பிரசாத் ஸ்டுடியோவில் தலைமை ஒலிப்பதிவாளராகப் பணியாற்றினார். பெங்களூரில் சாமுண்டீஸ்வரா ஸ்டுடியோஸ் நிறுவனம் நடத்திவரும் இவர் 1000 படங்களுக்கு மேல் ஒலிப்பதிவு செய்துள்ளார்.

இவர் தனியாக முதன் முதலில் ஒலிப்பதிவு செய்த திரைப்படம் வேடா கண்ணப்பா என்னும் படமாகும். தெலுங்கில் பக்த கண்ணப்பா என்னும் பெயரில் வந்த இத்திரைப்படம் சிறந்த ஒலிப்பதிவுக்கான தேசிய விருதை முதலில் இவருக்குப் பெற்றுத் தந்தது. 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' தமிழ்த் திரைப்படம், கோதுனி இந்தி திரைப்படம், ஆதிசங்கரர் சமஸ்கிருதத் திரைப் படம் ஆகிய படங்களுக்காகவும் தேசிய விருது பெற்றுள்ளார். நான்குமுறை கர்நாடக மாநில விருதும் ஒருமுறை ஆந்திர மாநில விருதும் சிறந்த திரைப்பட ஒலிப்பதிவுக்காக இவர் பெற்றுள்ளார். இத்துறையில் ஈடுபட்டுத் தேசிய விருதுகள் பல பெற்றுப் புகழ் பெற்ற நகரத்தார் என்பது இவரது சிறப்பாகும்.

இராமநாதன், கண., (12-5-1924)

இளையாத்தங்குடி - பேரசெந்தூருடையார்
மதகுபட்டி
பதிப்பாளர்

நா. கண்ணப்ப செட்டியார் – உண்ணாமலை ஆச்சியின் மகன். தமிழ்ப்புத்தகாலயம் கண. முத்தையாவின் இளவல். இவர் 1944இல் சென்னையில் ஸ்டார் பிரசுரத்தைத் தோற்று வித்தவர். விந்தன், ரகுநாதன், புதுமைப்பித்தன், ஆகியோரது நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டிருக்கிறார். இப்பதிப்பகத்தின் வாயிலாக ஆயிரம் நூல்களுக்கு மேல் வெளியிட்டுள்ள இவர் பண்புப் புத்தக வரிசை என்ற தொடரில் பல நூல்களை வெளியிட் டுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இலக்கண விளக்க வரிசை, ஆட்சிக்கலை வரிசை, மருத்துவ வரிசை, மரங்கள் வரிசை ஆகியவை. 1964 முதல் 1966 வரை 'அமைச்சன்' என்ற மாத இதழை நடத்திய இவர் சிறந்த எழுத்தாளரும் ஆவார். (பார்க்க : அமைச்சன்)

இராமநாதன், சங்கீத பூஷணம், சோம., (16-3-1928)

இரணிக்கோவில்
புதுவயல்
இசைக் கலைஞர்

புதுவயலில் நாடக நடிகராகவும், இசைக் கலைஞராகவும் திகழ்ந்த எஸ்.பி. வீரப்பா அவர்களிடம் தொடக்கத்தில் இசைபயின்றார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைபயின்று சங்கீத பூஷணம் பட்டம் பெற்றார். உள்நாட்டிலும் மலேசியா, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளிலும் பல மேடைக்கச்சேரிகள் நிகழ்த்தியுள்ளார். இவரே இயற்றிய இசைப் பாடல்களைக் 'கந்த கானாமிருதம்' என்னும் நூலாக வெளியிட்டுள்ளார்.

Koviloor Digital Library

இராமநாதன், சிவ., (26-8-1947)

பிள்ளையார்பட்டி
பூலாங்குறிச்சி
திரையரங்க உரிமையாளர்

வ.செ. சிவலிங்கம் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். பிகா, ஏ.எம்.ஐ.இ, பட்டங்களைப் பெற்றவர். ஓமியோபதி மருத்துவத் துறையிலும் பட்டம் பெற்றவர். சென்னை நகர மாணவர் காங்கிரசின் பொருளாளராக 1967 முதல் 1970 வரை பணியாற்றியுள்ளார்.

சென்னையில் அபிராமி திரையரங்க வளாகத்தில் உள்ள அபிராமி, பால அபிராமி, அன்னை அபிராமி, சக்தி அபிராமி ஆகிய நான்கு திரையரங்கங்களின் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடத்தி வருகிறார். கணிப்பொறி மூலம் நுழைவுச்சீட்டு வழங்குதல், தொலைபேசியில் சொன்னால் வீட்டுக்கே நுழைவுச் சீட்டை அனுப்புதல், DTS, டோல்பை ஸ்டீரியோ என்ற ஒலியமைப்பு முறைகளை அமைத்தல் ஆகிய புதுமைகளைச் சென்னை மாநகரில் முதன் முதலில் இவர் செயற்படுத்தினார். ஈகா, அனுஈகா, கிராண்ட் ஆகிய திரையரங்குகளையும் ஒப்பந்த முறையில் நடத்தி வருகிறார்.

1982இல் தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் செயற்குழு உறுப்பினராகவும், 1995இல் அதன் தலைவராகவும் பணியாற்றிய இவர் இப்போது அச்சபையின் துணைத்தலைவர் ஆவார். இவர் தலைவராக இருந்த வருடத்தில் நாடாளுமன்ற நிலைக்குழுவின் திரைப்படத்துறை ஆலோசனைக்குழுவில் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர்கள் சங்கத்தின் பொருளாளராக எட்டு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். மும்பையில் உள்ள இந்தியத் திரைப்படச் சங்கங்கள் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினராக ஆறு ஆண்டுகளாக, இவர் பணி தொடர்கிறது. 1996முதல் மத்தியத் திரைப்படத் தணிக்கைக்குழு உறுப்பினராக இருந்து வருகிறார்.

சென்னை மத்தியச் சுழற்குழுவின் முன்னாள் தலைவரான இவர் மாநகரக் காவல்துறை ஆணையாளரின் ஆலோசனைக் குழுவிலும் இடம் பெற்றிருந்தார். மருத்துவ முகாம்கள் பல நடத்தியும், கல்வி உதவிகள் அளித்தும் பல்வேறு ஆலயத் திருப்பணிகளில் பங்கேற்றும் சமூகத் தொண்டு புரிந்து வருகிறார்.

இராமநாதன், சுப., (30-11-1922)

மாத்தூர் - மணலூர்
நாட்டரசன்கோட்டை
தமிழ்ப் பேராசிரியர் - சட்டமன்ற உறுப்பினர்

சுப. இராம. சுப்பிரமணியன் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றவர்.

கோனாபட்டு, நாட்டரசன்கோட்டை உயர்நிலைப் பள்ளிகளில் மூன்றாண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்த பிறகு 1947இல் பினாங்கிற்குச் சென்றார். அங்கு வெல்லஸ்லி மாகாணச் சட்டசபையின் இந்திய மக்கள் சார்பாளராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று ஆறு மாதகாலம் பணியாற்றினார்.

மீண்டும் தாயகம் திரும்பிச் சிவகங்கைக் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலுமாக 33 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றி ஓய்வு பெற்றவர்.

இராமநாதன் செட்டியார், இரா., (30-9-1913 - 12-12-95)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
நாடாளுமன்ற உறுப்பினர்

இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் – சீதை ஆச்சியின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவர் தம் பெரிய தந்தையார் திவான் பகதூர் சா. இராம. மு. இராம. இராமசாமிச் செட்டியார் இவரைப் பிள்ளை கூட்டிக் கொண்டார். இவ்வாறு இவரை மகன்மை கொண்ட தந்தையாராகிய இராமசாமிச் செட்டியார்தான் அண்ணாமலை அரசர் குடும்பத்திலிருந்து பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாருடன் முதன் முதலில் தொடர்பு கொண்டவர். இராமநாதன் செட்டியார் இளமையிலேயே பலவெளிநாடுகட்கும் சென்று வந்தவர்.

அமராவதி புதூரைச் சேர்ந்த வயிநாகரம், அ. இராமநாதன் செட்டியார் தொகுத்து வைத்திருந்த செய்திகளைப் பெற்று, பண்டிதமணி அவர்களால் அவற்றைத் திருத்தி விளக்கி அமைக்கச் செய்து, 1953இல் 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற நூலை வெளியிட்டவர் இவரே.

Koviloor Digital Library

சென்னை நகரத்தின் அண்டர் செரீப்பாகவும், (1940–41) செரீப்பாகவும், (1949–50) இந்திய ரிசர்வ் வங்கியின் இயக்குநராகவும், இந்திய அரசின் கைவினைப் பொருள்கள் மேம்பாட்டுக் கழகத் தலைவராகவும், சிறுசேமிப்புத் துறை உறுப்பினராகவும், தேசியக் கப்பல் கழக உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்.

சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராகவும் (1950–51), சென்னைச் சுழற்கழகத் தலைவராகவும் (1953–54); இந்திய மக்களவை உறுப்பினராக இருமுறையும் (1957–1962; 1962–66) தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணிபுரிந்துள்ளார்.

சுழற்கழகத்தில் தொடர்ந்து ஐம்பது ஆண்டு கட்கும் மேலாக உறுப்பினராக இருந்த போது 38 ஆண்டுகள் அனைத்துக் கூட்டங்கட்கும் தவறாது வருகை புரிந்தவர் என்ற பரிசைப் பெற்றுள்ளார்.

இராமநாதன் செட்டியார், கா., (1899 - 4-1-1966)

பள்ளத்தூர்

சைவசித்தாந்த வித்தகர்

சட்டம் பயின்று, சென்னையில் பலஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியவர். சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசத்தின் தலைவராகப் பணி புரிந்தவர்.

1945 அளவில் கோலாலம்பூருக்கு வழக்கறிஞர் கணக்கு ஆய்வாளர் வேலைக்காகச் சென்றார். பின் தம் வாழ்நாளின் இறுதிவரை அங்கேயே தங்கி விட்டார். இந்தக் காலத்தில் அவர் மலேயா வாழ் தமிழரின் தலைவரானார். மலேயா இந்தியர் காங்கிரசு போன்றவற்றில் பெரும் பொறுப்புக் களை ஏற்றார். கோலாலம்பூர்ச் சட்டசபை உறுப்பினராகவும் பணியாற்றினார்.

இலங்கை, பிலிப்பைன்சு, கம்போடியா, தாய்லாந்து ஆகிய பல்வேறு நாடுகட்கும் சென்று சமயச் சொற்பொழிவாற்றியுள்ளார். 1964இல் பிலிப்பைன்சில் நடைபெற்ற ஆசியக் கிறித்தவ இளைஞர் மாநாட்டில் இந்து சமயச் சார்பாளராகக் கலந்து கொண்டார். கோலாலம்பூர் அருள்நெறித் திருக்கூட்டத்தின் தலைவராக இருந்து பலருக்குச் சைவசித்தாந்த சாத்திர – தோத்திர நூற் பயிற்சியை உண்டாக்கினார்.

தாமே ஆசிரியராக இருந்து கோலாலம்பூரில் 'சோலை' என்ற இதழை நடத்திய இவர், எழுதிய நூல்கள் :

1. ஏன் பிறந்தோம்
2. சைவத்தின் சிறப்பு
3. வாழ்க்கையும் சமயமும்
4. ஆழமும் அகலமும்
5. ஞானச் செய்தி
6. பார்ப்பது எது?
7. மலேயா இந்திய யாத்திரை
8. வேலன் விளையாட்டு

என்பனவாம்.

மலேயாத் தமிழ்ப் பண்ணையின் தூண்களில் ஒருவராக விளங்கிய இவர், மலேயாப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பாடத் திட்டக்குழுவிலும், மலேயாப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பகுதி நிதிதிரட்டும் குழுவிலும் உறுப்பினராக இருந்தவர்.

திருவாசகம் பற்றி இவர் எழுதிய கட்டுரைகள் இவர் காலத்திற்குப் பின், இவர் மருகர் டாக்டர், வீர. இராமநாதன் செட்டியாரால் தொகுத்துத் "திருவாசகத்தேன்" என்ற பெயரில் நூலாக வெளியிடப் பெற்றன.

இராமநாதன் செட்டியார், தஞ்சாவூர், சு. இராம., (.... 1954)

இளையாத்தங்குடி-ஒக்கூருடையார்

காரைக்குடி

இதழாளர்

காரைக்குடியைச் சேர்ந்த இவர் தஞ்சையில் நீண்ட காலம் வாழ்ந்து, அங்கு நகராட்சித் தலைவராக 10 ஆண்டுகள் பணியாற்றி யமையால் தஞ்சாவூர் இராமநாதன் செட்டியார் என அழைக்கப் பெற்றார். ஆங்கிலேய அரசின் இராவ் பகதூர் பட்டத்தையும் பெற்றவர். இவர் சிறந்த முருக பக்தராதலின், பழைய நூல்கள், இவரைத் தஞ்சை முருகதாசர் இராமநாதன் செட்டியார் என்றும் சுட்டுகின்றன.

1930இல் காரைக்குடியில் 'செட்டிநாடு' எனும் வார இதழைத் தோற்றுவித்து அ. சேஷாத்திரி சர்மாவை ஆசிரியராகக் கொண்டு பல ஆண்டுகள் நடத்தி வந்தார். தமிழிசை இயக்கத்தில் இவருக்கிருந்த ஈடுபாடு காரணமாகச் 'செட்டிநாடு தமிழிசை மலர்' என ஒரு மலரை உருவாக்கி வெளியிட்டார்.

ஆன்மீகம், அரசியல், கலைத்துறை, இசை, பொதுநலத் தொண்டு எனப் பல்வேறு துறைகளில் சிறப்புப் பெற்றவர். இவரது முன்னோர்கள் பெயரால் சு. இராம. தெரு என ஒரு தெரு இப்போதும் காரைக்குடியில் இருக்கிறது.

Koviloor Digital Library

இவர் தஞ்சாவூரில் கௌரவ நீதிபதியாகப் பணியாற்றினார். தஞ்சாவூர் வட்டக்கழகம் மாவட்டக் கழகம் ஆகியவற்றிலும் உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப் பெற்றுத் தொண்டு செய்துள்ளார். இவர் தஞ்சை நகராட்சித் தலைவராக இருந்த காலத்தில் செய்த பணிகள் பல. கீழவாசல் சந்தை இவர் உருவாக்கியதே. தம் நண்பர்கள் சிலரோடு இணைந்து தஞ்சாவூர் பெர்மனன்ட் வங்கி என்ற வங்கியை உருவாக்கி, அதன் நிறுவுநர் இயக்குநராகப் பணியாற்றினார். பின்னர் இவ்வங்கி தஞ்சாவூர் வங்கி எனப் பெயர் மாற்றப் பெற்று அதற்குப் பின்னர் இந்தியன் வங்கியுடன் இணைக்கப் பெற்றுவிட்டது. 'தஞ்சாவூர் இராமநாதன் செட்டியார் அரங்கு' என்ற பெயரில் தஞ்சையில் ஒரு பெரிய அரங்கைக் கட்டி, அதில் சுதர்சன சபா என்ற அமைப்பின் சார்பில் இசை, நாடக நிகழ்ச்சிகளை நடத்திக் கலைத் தொண்டாற்றினார்.

தமிழ்நாடு மேலவை உறுப்பினராகவும் இருமுறை இவர் பணியாற்றியுள்ளார் (1937–39; 1946–52). அரசியலில் ஈடுபடத் தொடங்கியதிலிருந்து தம் வாழ்நாளின் இறுதிவரை கதருடையே அணிந்து வாழ்ந்தார்.

'சரவணபவா பிக்சர்ஸ்' என்ற நிறுவனப் பெயரில் 'ஏகம்பவாணன்' என்ற திரைப் படத்தையும் எடுத்து வெளியிட்டார்.

தம் சொந்தச் செலவில் இவர் சிதம்பரத்தில் ஒரு வேதாகம பாட சாலையை நிறுவி நடத்தி வந்தார்.

இராமநாதன் செட்டியார், நியூடோன் இளை., (1905-77)

இலுப்பைக்குடி
தேவகோட்டை
திரைப்படத் தொழில் முன்னோடி

இளையபெருமாள் செட்டியாரின் மகனாவார். இளவயதிலேயே வானொலிப் பொறியியல் கற்று ஒலிப்பதிவுப் பொறியியல் நுட்பம் கற்றவர். தியாகராச பாகவதர் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து நேஷனல் மூவிடோன் என்ற சிறிய திரைப்படப் பிடிப்பு நிலையத்தை வாங்கி விரிவுபடுத்தி நியூடோன் ஸ்டுடியோவை நிறுவினார். தமிழறியும் பெருமாள், பணக்காரி, நல்லதம்பி, சக்கரவர்த்தித் திருமகள், சித்தூர் ராணி பத்மினி முதலிய திரைப்படங்களோடு இன்னும் சில திரைப்படங்களையும் இவர் தயாரித்துள்ளார். திரைப்படத் துறையில் முதலில் கால் வைத்த நகரத்தார் என்ற சிறப்பு இவருக்குண்டு.

இராமநாதன் செட்டியார், பாலகவி, வே., (9-7-1915)

(சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்)
பிள்ளையார்பட்டி
தேவகோட்டை
சைவசித்தாந்த வித்தகர்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் என அழைக்கப்படும் இவர் கோனாபட்டில் கோவில் செட்டியார் குடும்பத்தில் மகாதேவ முருகப்ப செட்டியார் – சீதை ஆச்சிக்கு இரண்டாவது மகனாகச் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் சைவ மடங்களோடு தொடர்பு கொண்டிருந்தார். இவரது இரண்டாவது வயதில் தந்தையார் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்று மகா சந்நிதானத்தை வழிபடச் சென்ற போது பண்டார சந்நிதானம் மரபையும் மீறி இவரை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு நெற்றியில் திருநீறு பூசி ''இவன் ஞானசம்பந்தர் போல் வருவான்' என்று வாழ்த்தினாராம்.

தந்தையார் கோனாபட்டில் நிறுவிய கற்பக விநாயக கலாசாலையில் தொடக்கக் கல்வியும், 12ஆவது வயதில் வித்துவான் டி.எஸ். ஆழ்வாரய்யங்காரிடம் தமிழ்ச்சங்கப்பாடத் திட்டப்படி இலக்கண இலக்கியங்களும் ஆங்கிலம் வடமொழி இசை ஆகியனவும் கற்றார். தொடர்ந்த முறையான பயிற்சியால் இவர் கல்வி மேம்பாடடைந்தது. இளமையிலேயே சொற் பொழிவாற்றும் திறன் பெற்றிருந்ததால் தமது 14ஆவது வயதிலேயே கீழச்சிவல்பட்டி சாதுசங்க மகாசபைக்குத் தலைமை வகித்து நடத்தினார். இவரது விரைந்து கவியெழுதும் ஆற்றலைப் பாராட்டி ஆத்தங்குடி சனாதன தர்ம மகாசபையார் நீதிபதி மாண்புமிகு. கேஎஸ். இராமசாமி சாஸ்திரி தலைமையில் இவருக்குப் பாலகவி என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

1934இல் அமராவதிபுதூர் வயிநாகரம் நாகப்ப அய்யா அவர்களின் பேரர் வேங்கடாசலம் செட்டியாருக்கு இவர் பிள்ளை வந்தார். பிள்ளைகூட்டிக் கொண்ட இவரது தாயார் அலமேலு ஆச்சி தேவகோட்டையில் வாழ்ந்து வந்தார்கள். அவ்வூரிலேயே இவர் பாலறா வாயர் இல்லம் என்னும் வளமனை கட்டி, அவ்வில் அமைந்த வீதிக்கும் சம்பந்தர் தெருவெனப் பெயர் சூட்டச் செய்து அங்கு வசிக்கத் தொடங்கினார்.

காரைக்குடி சொக்கலிங்க அய்யா, கொரடாச்சேரி வாலையானந்த சுவாமிகள் முதலியோரிடம் இவர் சைவமும் தமிழும் பயின்றார். பழனி சிவத்திரு ஈசான சிவாசாரியார் சுவாமிகளிடம் சிவ தீட்சைகளை முறையே பெற்று 1947ஆம் ஆண்டு மகாசிவராத்திரியன்று

Koviloor Digital Library

நிர்வாண தீட்சைப் பேறும் பெற்றார். அவரிடம் திருமுறைப் பூசை பெற்று ஆண்டுதோறும் சித்திரை முதல்நாளில் தொடங்கி நாளுக்கு 50 பாடல்கள் வீதம் பாராயணம் செய்து பன்னிரு திருமுறைகளையும் பங்குனி இறுதி நாளில் நிறைவு செய்து வருகிறார். மெய்கண்ட சாத்திரங்களையும் ஆண்டுக்கு நான்குமுறை பாராயணம் செய்து படித்து வருகிறார். இவரிடம் சிவதீட்சை பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ மூவாயிரம். தமிழ் நாட்டிலும் இலங்கை, மலேசியா முதலிய வெளி நாடுகளிலும் சைவசித்தாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். இப்போதும் மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் தொடர்ந்து திங்கள் தோறும் சைவ சித்தாந்தப் பாடம் சொல்லி வருகிறார்.

'செட்டிநாடு' இதழின் ஆசிரியராகவும், பின்னர் அதன் உரிமையாளர் ஆசிரியராகவும் இருந்து இதழ் நடத்தி வந்தார். நற்றிணை முழுவதற்கும் விளக்கவுரை 'செட்டிநாடு' இதழிலும் குமரகுருபரர் பிரபந்தங்கள் முழுவதற்கும் விரிவுரை 'குமரகுருபரன்' இதழிலும் தொடர்ந்து எழுதியுள்ளார்.

தேவகோட்டைக் கந்தர்சஷ்டி விழாவின் தொடக்கத்தில் இவருக்கும் பங்குண்டு. சேக்கிழார் திருநாட்கழகத்தை நிறுவி மிகச்சிறப்பாகச் சேக்கிழாருக்கு விழா எடுத்தார். இன்றும் மாதந்தோறும் சேக்கிழார் திருநட்சத்திரத்தில் தேவகோட்டை நகரச் சிவன்கோவிலில் எழுந்தருளியுள்ள சேக்கிழாருக்கு அபிடேக ஆராதனை வழிபாடு செய்து வருகிறார். தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுச் சைவ சித்தாந்தப் பாடம் நடத்தியுள்ளார். இவருடைய புலமையைப் போற்றித் தருமையாதீனம் இவரை 'ஆதீன வித்வான்' ஆக்கிச் சிறப்பித்தது.

இவர் 37 செய்யுள் நூல்களும் 12 உரைநடை நூல்களும் 3 உரைநூல்களும் எழுதியுள்ளார். சைவ அனுட்டான விதி, பரார்த்த சிவபூஜாவிதி, சிவாலய தரிசன விதி போன்றவை சிவாகம நெறியை உணர்த்தும் தமிழ் நூல்களாகும். சிவஞானபோதம் நூலுக்கு இவர் எளிமையாகவும், சுருக்கமாகவும் தெளிவுரை எழுதியுள்ளார். இசைப்புலமை வாய்ந்த இவர் தமிழில் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். இவரது இசைப்பாடல்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழிசைப் பாடல்கள் 13ஆவது தொகுதியாக வெளிவந்துள்ளன.

இவர் விரிவுரை அரசு, சித்தாந்தப் புலவர் மாமணி, சித்தாந்த சைவ வித்தகர் முதலிய பட்டங்களையும், லெ. நாராயணன் செட்டியார் மணிவிழா அறக்கட்டளையின் தமிழ்ச் சான்றோர்க்கான சிறப்புப் பரிசையும் பெற்றுள்ளார். சைவசித்தாந்த சாத்திர தோத்திரங்களில் இவரளவு வல்லார் எவரும் இலர் என மக்கள் போற்றும் வண்ணம் சைவ சித்தாந்த ஞாயிறாக இவர் விளங்கி வருகிறார்.

(பார்க்க : சிவஸ்ரீதத்புருஷதேசிகர் தமிழகச் சைவநெறிக்கழகம்)

இராமநாதன் செட்டியார், பேராசிரியர், லெ.ப.கரு., (6-11-1915)

நேமங்கோவில்
நெற்குப்பை
கல்வியாளர், தமிழ்ப் பேராசிரியர்

லெ.ப. கருப்பஞ் செட்டியார் – தெய்வானை ஆச்சியின் மகன். இவர் தம் இளமைக் காலத்தில் ஈழத்தில் கருணாலய பாண்டியரிடம் ஆறு ஆண்டுகள் தமிழ் பயின்றார். பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பயின்று பண்டிதப் பட்டம், வித்துவான் பட்டம் முதலியவற்றைப் பெற்றார். தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியப் பயிற்சித் தேர்வை முடித்தார். 1936இல் அப்பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் பணியில் சேர்ந்தார்.

1953இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், கீழைத் திசைக் கல்விப் பகுதியில் புலத் தலைவரானார். ஏறத்தாழ 35 ஆண்டுகள் தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். இந்நீண்ட வரலாற்றில் இவர் ஏறத்தாழ 25 ஆண்டுகள் அப்பல்கலைக் கழகத்தின் பேரவை, கல்விக்குழு, ஆட்சிக்குழு போன்றவற்றில் உறுப்பினராகத் திகழ்ந்துள்ளார்.

8 வெவ்வேறு கால கட்டங்களில் (மொத்தம் 8 திங்கள் காலஅளவு) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிகழ்நிலைத் துணை வேந்தராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டிருக்கிறார். அவ்வாறு ஒருமுறை நிகழ்நிலைத் துணை வேந்தராக இவர் இருந்தபோதுதான் அப் பல்கலைக்கழகத்தில் தொலைதூரக் கல்வி முறையை முதன் முதலாகச் செயல்படுத்தினார்.

சாகித்திய அகாதமியின் தமிழ் ஆலோசனைக் குழு உறுப்பினராகத் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணியாற்றியதோடு, அந்த அகாதமி வெளியிட்ட தமிழ் நூல் விவரப் பட்டியலின் தொகுப்பாசிரியராகவும் திகழ்ந்தார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் கல்விக் குழுவில் ஆயுட்கால உறுப்பினராக இவரை 1985இல் தமிழக ஆளுநர் அமர்த்தினார். தமிழக அரசின் பாடநூற்குழு, மேனிலைப் பள்ளித் தேர்வு வாரியம், நூலகக் குழு ஆகியவற்றில் உறுப்பினராகப் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு.

Koviloor Digital Library

இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசை இயக்கத்தைத் தொடங்கியதிலிருந்து இவருக்கு அவ்வியக்கத்தோடு தொடர்புண்டு. சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சிக்குழுவின் செயலராக 45 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். 1974இல் மதுரைத் தமிழ் இசைச் சங்கம் தொடங்கப் பெற்றபோது அது தொடர்பான ஒரு மலரை அழகாகப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

1958இல் கனடாவின் மான்ட்ரீல் நகரில் நடைபெற்ற காமன்வெல்த் பல்கலைக்கழக மாநாட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சார்பாளராக இவர் பங்கேற்றார். 1966இல் மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாம் உலகத் தமிழ் மாநாட்டில், தமிழ் ஆராய்ச்சிப் பொது அரங்கு அமர்விற்குத் தலைமையேற்ற பெருமை இவருக்குரியது. 1968, 1981 ஆண்டுகளில் சென்னையிலும், மதுரையிலும் இரண்டாவது மற்றும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றபோது அவை தொடர்பான பல்வேறு பொறுப்புக்களைத் தமிழக அரசு இவரிடம் ஒப்படைத்தது.

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை தன் பொன்விழாவின் போது, 1959இல் 'பண்டிதமணி' என்ற பட்டத்தையும், தருமபுர ஆதீனம் 'முத்தமிழ் வித்தகர்' என்ற விருதினையும், மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் 'இலக்கிய வித்தகர்' எனும் பட்டத்தையும், 1975இல் தமிழகக் கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் 'தமிழ் மாமணி' என்ற பட்டத்தையும், 1985இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதினையும் இவருக்கு வழங்கிச் சிறப்பித்தனர்.

1. கட்டுரைக் கோவை
2. அண்ணாமலை அரசர்
3. சோழவேந்தர் மூவர்
4. சங்க காலத் தமிழர் வாழ்வு
5. வாழ்க்கை வளம்
6. தொல்காப்பியச் செல்வம்
7. நோக்கு
8. பத்துப்பாட்டு வளம்
9. எட்டுத் தொகைச் செல்வம்
10. திருத்தக்க தேவர்

ஆகிய 10 திறனாய்வு நூல்களை எழுதியுள்ள இவர், தொகுப்பாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், இருந்து வெளியிட்டிருக்கும் நூல்கள் 60–க்கும் மேற்பட்டவை.

காலந்தவறாமையும், கனிவான பண்பும், தமிழ்ப்பற்றும், தமிழ்ப் புலமையும் மிக்க பேராசிரியரைப் பற்றி பாவேந்தர் பாரதிதாசன்,

"இன்பத் தமிழுக்கு இராமநாதர் போலோர்
அன்பர் இருப்பின் அதுபோதும்"

எனப் பாடிப் புகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இராமநாதன் செட்டியார், வயிநாகரம் அ., (1885-1944)

பிள்ளையார்பட்டி
அமராவதிபுதூர்
நகரத்தார் வரலாற்றாசிரியர்

மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவில் திருப்பணிகள் செய்த வயிநாகரம் குடும்பத்தில் தோன்றிய இவர் தமிழில் ஆர்வம் கொண்டு சைவ நூல்களையும் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் ஆழ்ந்து பயின்றார்.

மதுரை யமக அந்தாதி, மயூரகிரிக் கலம்பகம், நாட்டரசன்கோட்டைக் கண்ணுடையம்மன் பதிகம், கொன்னையூர் மாரியம்மன் பதிகம், அரியக்குடி வாகனக்கவி, திருப்பரங்கிரி மும்மணிக்கோவை ஆகியவை இவர் இயற்றிய நூல்களாகும். இவருடைய தனிப்பாடல்களைத் தொகுத்துக் 'கவிதை மலர்' என சொ. முருகப்பா வெளியிட்டுள்ளார்.

இவர் 'தருமபுரி ஆதீன வித்வத் சிரோமணி' என்று பாராட்டப் பெற்றார். மதுரை மீனாட்சியம்மை திருக்கோவிலின் அறங்காவலராக இருந்துள்ளார்.

நகரத்தார் வரலாற்றை விரிவாக எழுத வேண்டும் என்று இவர் விரும்பித் தொகுத்து வைத்திருந்த குறிப்புக்கள் 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' எனும் நூலாக 1953ஆம் ஆண்டில் பண்டிதமணி அவர்களின் விரிவான பதிப்புரையுடன் வெளியீடு செய்யப் பெற்றன.

இராமநாதன், டாக்டர். பெரி (21-11-1929)

சூரக்குடி
செவ்வூர்
சித்த மருத்துவர்

பெரிய கருப்பன் என்ற காசிவிசுவநாதன் செட்டியார் – நாகம்மை என்ற அன்னபூரணி ஆச்சியின் மகன். இளமைக் கல்வியை இலங்கையில் பெற்றவர். கணக்கியல் (Accountancy) தேர்ச்சி பெற்றவர். பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் பயின்று சித்த மருத்துவத்தில் சான்றிதழ் பெற்றவர்.

Koviloor Digital Library

குளித்தலையில் மருத்துவப் பணியும், சித்த மருந்து தயாரிக்கும் நிறுவனமும் (Siddha Drug House) நடத்தி வருகிறார். 13 வகை நோய்களுக்குச் சித்த மருத்துவ அடிப்படையிலான மருந்துகளைக் கண்டுபிடித்து, தமிழக அரசின், இசைவோடு, தாமே அவற்றைத் தயாரித்து, விற்பனையும் செய்து வருகிறார். 1986இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின், 'அடிப்படை மருத்துவ அறிவியல் முதுகலை ஆய்வு நிறுவனம்' நடத்திய கருத்தரங்கில் பங்கேற்று, கல்லீரல் தொடர்பான நோய்க்குரிய சித்த மருந்து கண்டு பிடித்ததற்காகச் சான்றிதழ் பெற்றிருக்கிறார்.

மதுரையிலிருந்து வெளிவரும் 'நகரத்தார் மலர்' மாத இதழில் 'நலம் தரும் மூலிகைகள்' என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகள் எழுதி உள்ளார்.

இராமாயணம் படித்தல்

நகரத்தார்கள் சைவத்தையும், தமிழையும் போற்றி வளர்த்து வருபவர்கள் என்பது வரலாற்று உண்மை. அதே நேரத்தில் ஆழமான சைவப்பற்றுடைய நகரத்தார்கள் பிற சமய வெறுப்பாளர்கள் அல்லர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். எனவே தான் நகரத்தார் இடையே வைணவத்தின் தாக்கம் ஊடாடி யிருக்கிறது. தாம் வாழும் ஊர்தோறும் நகரச் சிவன் கோவில்களைக் கட்டிய நகரத்தார்களுள், மிகச் சிலர் தத்தம் ஊர்களில் பெருமாள் கோவில்களைக் கட்டியும், நிருவகித்தும் வருவது நினைக்கத்தக்கது.

தென்திருப்பதி எனப் போற்றப்படும் அரியக்குடிப் பெருமாள் கோவிலுக்கும், திருமயம், கொங்கரத்தி ஆகிய வைணவத் தலங்கட்கும் நகரத்தார் குடும்பத்தினர் பலர் ஆண்டுதோறும், புரட்டாசி மாதம் சனிக்கிழமை சென்று வழிபடுவதும் கருதத்தக்கது.

இந்த வைணவத் தாக்கத்தின் மற்றொரு வெளிப்பாடாக, மிக முக்கியமான வெளிப்பாடாக அமைவது 'இராமாயணம் படித்தல்' எனும் பழக்கமாகும். இராமனுடைய வரலாற்றை எளிய உரை நடையும், இடையிடையே நாட்டுப்பாடல் அமைப்பில் பாடல்களும், ஆங்காங்கே கம்பராமாயணச் செய்யுள்களும் கலந்த தமிழில் எழுதிவைத்த ஓலைச் சுவடிகள், செட்டிநாட்டில் பல குடும்பங்களில் புனிதமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தன.

ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் கூடியிருக்கும் அவையில் இந்த ஓலைச்சுவடி, ஆசிரியர் ஒருவரால் அல்லது குடும்பத்தினர் ஒருவரால் படிக்கப்படும்.

இவ்வாறு முதல் தேதி தொடங்கி முப்பது நாட்கள் படிப்பதும் உண்டு. அல்லது ஒரு வார மோ, பதினைந்து நாட்களோ படிப்பதும் உண்டு.

இவ்வாறு படிக்கும் குடும்பத்திற்குக் குழந்தைச் செல்வமும் பிற நலங்களும் பெருகும் என்ற நம்பிக்கை நகரத்தாரிடையில் நிலவுகிறது. கால மாற்றத்திற்கேற்ப ஓலைச்சுவடிகள், காகிதங்களில் கையெழுத்துப் படியாகவோ, அச்சுப் புத்தகங் களாகவோ மாற்றப் பெற்றுவிட்டன.

இந்த 'இராமாயணம்' புத்தக வடிவில் இருந்தாலும் இன்னும் 'ஏடு' என்றே வழங்கப் பெறுகிறது. படைப்பு வீடுகளில் படைப்புக்குரிய பேழையை எவ்வாறு புனிதமாகப் பாதுகாத்து வைத்திருப்பரோ அவ்வாறே இந்த 'இராமாயண ஏடும்' புனிதமாக இராமாயணம் படிப்போர் இல்லங்களில் பாதுகாக்கப்படுகிறது.

புரட்டாசி மாதம் ஒன்றாம் தேதியோ, முதல் சனிக்கிழமையோ 'ஏடு எடுப்பது' என்பது ஒரு புனிதச் சடங்கு போலவே நிகழ்த்தப்படுகிறது. ஏடு எடுத்த நாளிலிருந்து, படித்து முடித்து, ஏடு மீண்டும் வைக்கப்படும் வரை, தீட்டு எனக் கருதப்படும் நிகழ்ச்சிகளில் இராமாயணம் படிக்கும் வீட்டைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளாமையை ஒரு மரபாகக் கொண்டுள்ளனர்.

இராமாயணம் படிக்கும் நாட்களில் தொடக்க நாள், சீதை திருமணம் படிக்கப்படும் நாள், இராமன் அயோத்தி திரும்பும் வழியில், பரத்துவாசர் ஆசிரமத்தில் விருந்துண்ணும் நிகழ்ச்சி படிக்கப்படும் நாள், இறுதியாக இராமன் முடி சூட்டிக் கொள்ளுதல் படிக்கப்படும் நாள் ஆகிய நான்கு நாட்கள் சிறப்புடையன. இந்நாட்களில் வீடு விழாக்கோலம் கொள்ளும்.

குடும்பப் பெரியவர் இல்லாமல், அறிஞர் ஒருவர், இராமாயணம் படிப்பாரேயானால், அக்குடும்பத்தால் பட்டாபிசேகம் படிக்கப்படும் நாளில், அவருக்குச் சிறப்புச் செய்யப்படும்.

இப்பழக்கம் நகரத்தார் ஊர்கள் எல்லா வற்றிலும் சில பல குடும்பத்தினரால் தத்தம் இல்லங்களில் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. சில ஊர்களில் நகரத்தார் செலவில் பெருமாள் கோவிலிலும் நடைபெறுகிறது. இவை குறித்த விவரங்கள் அந்தந்த ஊர்கள் பற்றிய தனிக்கட்டுரைகளில் தரப்பெற்றுள்ளன.

எவ்வளவு காலமாக இது நிகழ்ந்து வருகிறது எனத் திட்டமாகக் கூற இயலவில்லை.

ஆயினும் நற்சாந்துபட்டியில் சாமியாடிச் செட்டியார் என்ற பெயர் பெற்ற ஆண்டியப்ப செட்டியார் வீட்டில் 1843 முதல் இராமாயணம் படிக்கப்படுகிறது என்பது ஆதாரத்துடன் கூடிய உண்மை. அவர்கள் 1993இல் 150 ஆம் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

கம்பனடிப்பொடி சா. கணேசன் அவர்கள், தம் இல்லத்தில், தாம் சிறுவனாக இருக்கும் பொழுது, புரட்டாசி மாதம் தோறும், இராமாயணம் படிக்கும்

Koviloor Digital Library

நிகழ்ச்சியில் பங்கேற்றமையே, தமது கம்ப ராமாயண ஆர்வத்திற்கு அடித்தளமாக அமைந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இது, சைவம் போற்றும் நகரத்தாரிடையே படிந்திருக்கும் ஒரு வைணவப் பண்பாட்டுக் கூறு.

இராயவரம்

கீழப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில், காரைக்குடி யிலிருந்து பள்ளத்தூர், கொத்த மங்கலம் வழியாக 26 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 5 கோவில்களைச் சேர்ந்த 655 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூர், அரிமழம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இங்கு நகரத்தார் பொதுவில் நிருவகிக்கப் பெறும் கோவில் அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவிலாகும். 8–2–1935, 7–2–1946, 22–1–1967, 2–2–1979, 9–2–1992 ஆகிய நாட்களில் இக்கோவில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நிகழ்ந்துள்ளன. இக்கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை மாத இறுதியில் பூச் சொரிதலும், வைகாசி முதல் வாரத்தில் 10 நாள் திருவிழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இவ்வூர் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த வெ.மு. வகையார் இவ்வூரில் மீனாட்சி சொக்கலிங்கர் கோவில் ஒன்றைச் சொந்தத்தில் கட்டி, நிருவகித்து வருகிறார்கள். அக்கோவிலுக்கு 6–2–1870, 5–6–1914, 11–2–1951, 9–2–1981, 28–4–1994 ஆகிய நாட்களில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நிகழ்ந்துள்ளன.

இவ்வூர் இளையாத்தங்குடி கிங்கிணிக் கூருடையார் பிரிவைச் சேர்ந்த சாத.க.அழ. குடும்பத்தினர் இவ்வூரிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மலைக்கொழுந்தீசர் கோவில் என்ற சிவன் கோவிலையும், அதனைச் சார்ந்த விடுதியையும் கட்டி, நிருவகித்து வருகிறார்கள். இக்கோவிலுக்கு 12–2–1986 அன்று திருக்குட நன்னீராட்டு விழா நிகழ்ந்துள்ளது.

இவ்வூர் மாத்தூர் மணலூர்ப் பிரிவைச் சேர்ந்த அ.மு.இராம. அ. குடும்பத்தினர் இவ்வூரிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள செங்கீரை எனும் சிற்றூரில் ஒரு சிவன் கோவிலையும், விடுதியையும் கட்டி நிருவகித்து வருகிறார்கள். இக்கோவிலுக்கு 23–5–1975 அன்று திருக்குட நன்னீராட்டு நிகழ்ந்துள்ளது.

இவ்வூரில் நகரப் பொதுவில் தோண்டப் பெற்ற புது ஊருணி இப்போது ஊராட்சி மன்ற நிருவாகத்தில் உள்ளது. மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச்சேர்ந்த வெ.மு. வகைப் பங்காளிகளால் தோண்டி, நிருவகிக்கப் பெறுபவை பழைய ஊருணி, பொன்னாட்சி ஊருணி, சிவன்கோவில் ஊருணி ஆகியவை.

மாத்தூர் கண்ணூர்ப் பிரிவைச் சேர்ந்த பங்காளிகள் நாராயணஞ்செட்டி ஊருணி என்ற ஊருணியைத் தோண்டி, அதன் கரையில் ஒரு பிள்ளையார் கோவிலையும் கட்டி, அவற்றை நிருவகித்து வருகின்றனர். வைரவன் கோவில் தெய்வநாயகர் வகுப்பைச் சார்ந்த நல்லாஞ் செட்டி வகையார் குடும்பத்தினர் நல்லாஞ்செட்டி ஊருணியைத் தோண்டி நிருவகித்து வருகின்றனர்.

வைரவன் கோவில் தெய்வநாயகர் வகுப்பைச் சேர்ந்த மு.வீ. வகையார், இவ்வூரை அடுத்த ஆயிங்குடியில் உலகங்காத்தாள் ஊருணியைத் தோண்டி, அங்கே ஒரு விடுதியும் கட்டி அவற்றை நிருவகித்து வருகின்றனர்.

இவ்வூர் இளையாத்தங்குடி கிங்கிணிக் கூருடையார்ப் பிரிவைச் சேர்ந்த சு.கதி. கதிரேசன் செட்டியார், தமது அறுபதாண்டு நிறைவு நாளில், அதனை விழாவாக நடத்தாமல், அதன் நினைவாகத் தம் செலவில் கட்டிடம் கட்டி, காந்தி பாடசாலை என்ற பெயரில் ஒரு தொடக்கப் பள்ளியை இவ்வூரில் நிறுவினார். அவரால் சிறப்பாக நடத்தப் பெற்ற இப்பள்ளியை, அவர் காலத்திற்குப் பின், இவ்வூர் மாத்தூர் மணலூர்ப் பிரிவைச் சேர்ந்த மு.அ.மு. குடும்பத்தார் ஏற்றுக் கொண்டு, தங்கள் செலவில் புதிய கட்டிடங்கள் கட்டி, இதனைச் 'சு.கதி. காந்தி உயர்நிலைப்பள்ளி' என்ற பெயரில் உயர்நிலைப் பள்ளி ஆக்கினர். இப்போது மு.அ.மு. குடும்பத்தினர் மேற் பார்வையில், இராயவரம் நகரத்தார் அடங்கிய நிருவாகக் குழுவினரின் நிருவாகத்தில் இவ்வுயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது.

மேலும் இதே குடும்பத்தினர் தாங்கள் சொந்தமாக உருவாக்கிய ''இராயவரம் சுப்பிரமணியன் பல்தொழிற் பயிற்சிநிலையம்'' என்ற சுயநிதிக் கல்வி நிறுவனத்தையும் இவ்வூரில் நடத்தி வருகின்றனர்.

இதே குடும்பத்தின் நிதி உதவியோடு இவ்வூரில் தொடங்கப்பெற்ற சுப்பிரமணியன் செட்டியார் ஆரம்ப சுகாதார நிலையம், இவர்களால் அரசிடம் ஒப்படைக்கப் பெற்று, இப்போது அரசு மருத்துவ மனையாக இயங்கி வருகிறது.

மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த வெ.மு. வகைப் பங்காளிகள், அவர்களுக்குச் சொந்தமான வெ.மு. மடத்தில், சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் நால்வர் குரு பூசையை நடத்தி வருகின்றனர். மேலும் இப்பங்காளிகள் தனியாகவும், இளையாத்தங்குடி கிங்கிணிக்

Koviloor Digital Library

கூருடையார்ப் பங்காளிகள் தனியாகவும் ஆண்டுதோறும் ஆடிமாதம் மகேசுவர பூசை நிகழ்த்தி வருகின்றனர்.

மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த வெ.மு. வகையார் தங்களுக்குரிய சிவன் கோவிலில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் இராமாயணம் படித்து வருகிறார்கள். மாத்தூர், மணலூர்ப் பிரிவைச் சேர்ந்த பெ.நா.பழ. குடும்பத்தினர் தம் வீட்டில் இராமாயணம் படித்து வந்தனர். அண்மைக் காலமாக, இராமாயணம் படிக்காது, புரட்டாசி சனிக்கிழமைகளில், இராமர் படத்திற்குத் தீபாராதனை செய்து வழிபட்டு வருகின்றனர்.

இவ்வூர் இளையாத்தங்குடி கிங்கிணிக் கூருடையார்ப் பிரிவைச் சேர்ந்த பி.எல். பெருமாள் என்பவர் இந்திய தேசிய இராணுவத்தில் கேப்டனாகப் பணியாற்றியவர்.

இவ்வூர் வைரவன் கோவில் தெய்வநாயகர் வகுப்பைச் சேர்ந்த ஒரு பிரிவினர், அவர்களுக்குப் பொதுவான படைப்பு வீட்டில், ஆண்டுதோறும் ஆடி மாதம் முதல் வெள்ளிக்கிழமை அடைக்காத்தாளுக்கும், கருப்பையாவுக்கும் படைப்பு நடத்தி வருகிறார்கள்.

இவ்வூர் இளையாத்தங்குடி கழனிவாசற் குடிப் பிரிவுப் பங்காளிகள் ஆண்டுதோறும் ஆடி மாதம் நல்லாத்தாளுக்கும், கருப்பையாவுக்கும், படைப்பு நடத்தி வருகின்றனர். மாத்தூர் மணலூர்ப் பிரிவுப் பங்காளிகள் ஆண்டு தோறும் ஆடி மாதம் முதல் வெள்ளிக்கிழமை சேவியாரம்மனுக்குப் படைப்பு நடத்துகின்றனர். மாத்தூர் கண்ணூர்ப் பிரிவுப் பங்காளிகள் ஆண்டுதோறும் ஆடி மாதம் ஒரு புதன்கிழமையில், சிறுகூடற்பட்டி சென்று, அங்குள்ள படைப்பு வீட்டில் நாராயணசாமி படைப்பு நடத்தி, மறுநாள் தங்கள் குல தெய்வமாகிய வைரவம்பட்டி மக்கமடை ஐயனார் கோவிலுக்குச் சென்று திரும்பி, மூன்றாம் நாள் வெள்ளிக்கிழமை இராயவரத்தில் முத்தாயிக் கிழவிக்குப் படைப்பு நிகழ்த்தி வருகின்றனர்.

இவ்வூர் இளையாத்தங்குடி கிண்கிணிக் கூருடையார்ப் பங்காளிகள், கல்லல், தேவகோட்டை, நெற்குப்பை, புதுவயல் ஆகிய ஊர்களில் உள்ள தங்கள் கோவில், தங்கள் பிரிவுப் பங்காளிகளுடன் சேர்ந்து, இராயவரத்தில் உள்ள படைப்பு வீட்டில் 3 ஆண்டுகட்கு ஒரு முறை ஆடி மாதத்தில் தெய்வானை அம்மனுக்கு 3 நாட்கள் படைப்பு நிகழ்த்தி வருகின்றனர்.

இவ்வூர் இரணிக்கோவில் பங்காளிகளில் ஒரு பிரிவினர், இராங்கியம், உலகம்பட்டி, காரைக்குடி, குருவிக்கொண்டான்பட்டி, கொப்பனாபட்டி, செவ்வூர், மிதிலைப்பட்டி, வலையபட்டி ஆகிய ஊர்களில் உள்ள தங்கள் பங்காளிகளுடன் சேர்ந்து, இராயவரத்தில் உள்ள படைப்பு வீட்டில், இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை, கார்த்திகை மாதம், செங்கிடாய் கருப்பருக்கு 4 நாட்கள் படைப்பு நடத்தி வருகின்றனர்.

இவ்வூர் இரணிக்கோவில் பங்காளிகளில் மற்றொரு பிரிவினர், கண்டனூர், கானாடு காத்தான், கொ. இலட்சுமிபுரம், கொத்தமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள தங்கள் பங்காளிகளுடன் சேர்ந்து, இராயவரத்தில் உள்ள படைப்பு வீட்டில் ஆண்டுதோறும் ஆடி மாதம் காயாத்தாள் படைப்பை 2 நாட்கள் நடத்தி வருகின்றனர்.

இவ்வூர் இளையாத்தங்குடி பட்டினசாமிப் பிரிவைச் சேர்ந்த மு.அ.சு.அ. பங்காளிகள் விரையாச்சிலையில் அடைக்கலம் காத்தாள் கோவிலுக்கு நந்தவனம், விடுதி ஆகியவற்றை ஏற்படுத்தி நிருவகித்து வருகின்றனர்.

இவ்வூர் மாத்தூர் மணலூர்ப் பிரிவைச் சேர்ந்த மு.அ.மு.சுப. காசிச் செட்டியார் திருச்சியில் 'சுப. காசிச்செட்டியார் மெட்ரிக்குலேசன் ஆக்ஸ்போர்டு பள்ளி'யையும், இவரது சகோதரர் மு.அ.மு. சுப. வைரவன் செட்டியார் புதுக்கோட்டையில் 'வைரம் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி' யையும் நடத்தி வருகின்றனர்.

இலக்கியச் சிந்தனை

கண்டனூரைச்சேர்ந்த ப. இலட்சுமணன், ப. சிதம்பரம் சகோதரர்களும் அவர்தம் நண்பர்களும் சேர்ந்து 28–2–1970இல் தோற்றுவித்த இலக்கிய அமைப்பு இது. தமிழ் இதழ்களில் மாதந்தோறும் வெளிவரும் சிறந்த சிறுகதை ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்குவதும், ஓராண்டில் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற 12 சிறுகதைகளில் இருந்து அந்த ஆண்டிற்குரிய சிறந்த சிறுகதையைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்குவதும் இந்த அமைப்பின் நோக்கம். ஒவ்வோராண்டும் இவ்வாறு தேர்ந்தெடுக்கப் பெற்ற சிறுகதைகள் வானதி பதிப்பகத்துடன் இணைந்து நூலாக வெளியிடப்பெறும்.

சிறந்த நூலுக்கு ஆண்டுதோறும் 5000 ரூபாய் பரிசு வழங்கப்பெறும். அவ்வாறு பரிசுபெறும் நூல் கையெழுத்துப் படியாக இருந்தால் அதனை வெளியிடவும் இவ்வமைப்பு துணை செய்யும்.

ஆண்டுதோறும் ஏப்ரல் திங்களில் நடைபெறும் இலக்கியச் சிந்தனை ஆண்டு விழாவில் இப்பரிசுகள் வழங்கப்பெறும். விழாவில் பிறமொழி இலக்கிய அறிஞர் ஒருவர் பங்கேற்பது மரபு. இந்திய இலக்கியங்களிலிருந்து தேர்வு செய்யப் பெற்ற சிறந்த பகுதி ஒன்றை அச்சிட்டுத் தம் ஆண்டுவிழா அழைப்பிதழோடு

Koviloor Digital Library

இணைத்து வழங்குவது இவ்வமைப்பின் தனிச்சிறப்பு. நகரத்தார்களால் நிறுவப்பெற்ற இந்த அமைப்பு தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு, குறிப்பாகத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குத் தொண்டாற்றி வருகிறது.

இலக்குணமச் செட்டியார், கவிராயர், பெரி., (27-9-1901 - 1973)

வேகுப்பட்டி
கவிஞர்

லெ.பெரி.பெரிய கருப்பஞ் செட்டியார் மகன். முறையான கல்வியை மிகுதியும் பெறாத இவர் தம் இளம் வயதிலேயே இசை நாடகப் புலமைபெற்று, தாமே இசைப் பாடல்களை இயற்றும் ஆற்றல் கைவரப் பெற்றார். எனவே, இவரை அனைவரும் கவிராயர் என்றே அழைக்கத் தொடங்கினர். இவரது கவிதைகள் முதன் முதலில் 1926இல் நூல்வடிவம் பெற்றன. மொத்தம் 34 நூல்கள் வெளிவந்துள்ளன. குறிப்பிடத் தக்கவை 'பூம்புகார் ஆற்றுப் படை' 'உலகியல் நூலறிவுப் பாடல்கள்', 'தமிழ்ப் பூம்பொழில்' என்பனவாம். இவர் பர்மிய மொழியிலும் இசைப் பாடல்கள் எழுதும் ஆற்றல் பெற்றவர்.

இலக்குமணன், நீதியரசர், அரு., (22-3-1942)

இரணிக்கோவில்
தேவகோட்டை
உயர்நீதிமன்ற நீதியரசர்

லெ.அரு. அருணாசலம் செட்டியார் – சொர்ணவல்லி ஆச்சியின் மகன். திருச்சி தூய வளனார் கல்லூரியில் இளங்கலைப் பட்டமும் சென்னை சட்டக்கல்லூரியில் 1966இல் வழக்கறிஞர் பட்டமும் பெற்றார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் 23 ஆண்டுகளாக வழக்கறிஞராகப் பணியாற்றி யுள்ளார். நீதியரசர் ஜி. ராமானுஜம், நீதியரசர் கே. வெங்கடசாமி ஆகியோரிடமும் தமிழ்நாடு அரசு மூத்த வழக்கறிஞர் ஆர். கிருஷ்ணமூர்த்தியிடமும் இவர் இளைய வழக்கறிஞராகப் பணி புரிந்துள்ளார். பொது மற்றும் குற்றவியல் ரிட் மனுக்களைத் திறம்பட வாதாடும் வழக்கறிஞராகப் புகழ்பெற்றவர்.

வங்கிகள், நியூஇந்தியா காப்பீட்டு நிறுவனம் உள்ளிட்ட பல நிறுவனங்கள், அறநிலைக் கழகங் களுக்கு இவர் சட்ட ஆலோசகராகப் பணியாற்றி யுள்ளார். எம்ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், சுற்றுப்புறச் சூழல் மாசுக்கட்டுப்பாடு வாரியம் ஆகியவற்றில் இவர் அழைப்பு ஆலோசகராக விளங்கினார்.



அரு. இலக்குமணன்

நகரத்தாரில் அரசுத் தலைமை வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட முதல்வர் என்ற சிறப்பும், உயர் நீதிமன்ற முதல் நீதிபதி என்ற சிறப்பும் பெற்றுள்ளார். 22–3–1989இல் அரசுத் தலைமை வழக்கறிஞராகப் பதவிபெற்ற இவர் 14–6–1990இல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப் பெற்றார். இப்போது கேரள மாநில உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக விளங்குகிறார்.

சென்னை வழக்கறிஞர் சங்கத்தின் செயலாளராக நான்குமுறை இவரைத் தேர்ந்தெடுத்தமை இவரது தொண்டின் திறம் கூறும். சென்னைத் திரைப்பட ரசிகர் சங்கம், விக்டோரியா தொழில் நுட்பக் கழகம், மணவழகர் மன்றம் ஆகியவற்றின் தலைவராகவும் இந்து தர்மக் கழகத்தின் புரவலராகவும் வேணு கான சபா உதவித் தலைவராகவும் விளங்குகிறார். இரணிக் கோவில் நகரத்தார் நித்திய கட்டளை அறங்காவலருள் ஒருவராகவும் தமிழிசைச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினராகவும் சென்னைப் பல்கலைக் கழக முதுநிலைச் சட்டப் படிப்புப் பாடத் திட்டக்குழு, சென்னைக் குதிரைப் பந்தயச் சங்கம், ஜிம்கானா கிளப், காஸ்மாபாலிட்டன் கிளப், அடையாறு பிரம்மஞான சங்கம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் பொதுத் தொண்டு புரிந்து வருகிறார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நாட்டு வளர்ச்சிக்கும் சிறப்புறப் பணிபுரிந்தமைக்காகத் தமிழக ஆளுநர் வழங்கிய 'சிரோமணி விகாஸ்' விருதும், திறம்வாய்ந்த வழக்கறிஞர் என இவர் தொழில் திறன் உயர்வைப் பாராட்டும் வகையில் டெல்லி பன்னாட்டு நட்புறவுக் கழகத்தினரால் வழங்கப்பட்ட 'விஜய் ஸ்ரீ' விருதும் இவருடைய புகழ் மகுடத்தில் ஒளிவிடும் மணிகளாகும்.

Koviloor Digital Library

காஃபிபோசா (COFEPOSA) (1974) சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம் (1980) ஆகியவற்றின்கீழ் ஆலோசனைக்குழுத் தலைவராகவும் லட்சத் தீவு அரசு சட்டசேவை ஆணையத்தின் நிர்வாக இயக்குநராகவும் இந்திய சட்டக் கழகம், கேரளக் கிளையின் நிர்வாக இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார்.

இலங்கையில் நகரத்தார்

திரைகடல் ஓடித் திரவியம் தேடும் இயல்புடைய நகரத்தார் ஏறத்தாழ 250 ஆண்டுகட்கு முன்னால் இலங்கை செல்லத் தொடங்கினர். அங்கு அரிசி வணிகம், தேயிலைத் தோட்டம், தென்னந் தோட்டம் வளர்த்தல் ஆகிய தொழில்களில் தொடக்கத்தில் ஈடுபட்டனர். பின்னர் வங்கித் தொழிலும் ரப்பர் தோட்டமும் இவர்கள் வணிகத் தொழில்களாக விரிவடைந்தன. இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் மற்றும் பல்வேறு நகரங்களிலும் நகரத்தார் வணிகம் செய்து வந்தனர்.

தாங்கள் வணிகம் செய்யச் சென்ற இடங்களில் எல்லாம் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பது போல இங்கும் தொண்டு செய்துள்ளார்கள். காலி, குருநாக்கல், இரத்தினபுரி, யாழ்ப்பாணம், கம்பளை, நாவலப்பட்டி ஆகிய இடங்களில் கதிர்வேலாயுத சுவாமி கோவில்களைக் கட்டியுள்ளனர். கொழும்பிலும், உபயகதிர்காமம் என அழைக்கப்படும் பம்பலப்பட்டியிலும் பழைய கதிர்வேலாயுத சுவாமி கோவில், புதிய கதிர் வேலாயுத சுவாமி கோவில் என இரண்டிரண்டு கோவில்களைக் கட்டியுள்ளனர்.

நீர்கொழும்பில் முத்துமாரியம்மன் கோவில் ஒன்றைக் கட்டியுள்ளார்கள். கண்டியில் உள்ள செல்வ விநாயகர் கோவில் தேவகோட்டை அரு.லெ. வகையாரின் திருப்பணியாகும். கதிர்காமத்திலும் முனீஸ்வரத்திலும் திருக் கேதீஸ்வரத்திலும் நகரத்தார் மடங்கள் இருந்தன.

தமிழ்நாட்டிலிருந்து தமிழறிஞர்களை இலங்கைக்கு அழைத்துவந்து விழாக்கள் நடத்தித் தமிழ்த் தொண்டாற்றினர். கொழும்புத் தமிழ்ச் சங்கம், மட்டக்கிளப்பு, திரிகோணமலைத் தமிழ்ச் சங்கங்கள், திருக்குறள் மன்றம் ஆகியவற்றின் வளர்ச்சியில் நகரத்தாரின் பங்களிப்பு மிகுதி.

ஆவினிப்பட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியன் செட்டியார் 1930இல் 'வீரகேசரி' என்ற பெயரில் ஒரு நாளிதழைக் கொழும்பு நகரத்தில் தொடங்கி நடத்தி வந்தார். 1952இல் கொழும்பிலிருந்து 'சிறுவர் உலகம்' என்ற திங்களிதழ் பெரி.மீ. சுந்தரம், சி.சே பழநியப்பன் என்ற நகரத்தார் இளைஞர் இருவரால் தொடங்கி நடத்தப் பெற்றது.

இலங்கை இந்தியக் காங்கிரஸ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களுள் கானாடுகாத்தான் மு. சுப்பையா செட்டியார் ஒருவர். இவர் இலங்கை அரசில் இந்தியச் சார்பாளராகவும் கொழும்பு மாநகராட்சியின் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இலங்கை இந்தியக் காங்கிரசின் முதலாவது தலைவராக வலையபட்டி வ.ராம. லெட்சுமணன் செட்டியார் பணியாற்றி யுள்ளார். அனுராதபுரம் நகராட்சி மன்றத் தலைவராக மேலைச்சிவபுரியைச் சேர்ந்த சொக்கலிங்கம் செட்டியார் பணியாற்றியுள்ளார்.

இலங்கையின் தொழில் வணிகம், அரசியல், சைவம், தமிழ் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் தொண்டு செய்து இலங்கையின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்த நகரத்தார்கள் 1948இல் இலங்கை விடுதலை பெற்ற பிறகு அங்கிருந்து தாயகம் திரும்ப வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். எஞ்சியிருந்த சில நகரத்தார் குடும்பங்களும் 1983இல் இனக்கலவரம் வெடித்த பிறகு இந்தியா வரவேண்டிய சூழல் ஏற்பட்டது. இப்போது இலங்கையோடு தொடர்புடைய நகரத்தார் குடும்பங்கள் ஏறத்தாழப் பத்துக்குள்தான் இருக்கும். நகரத்தார்கள் இப்போது அங்கு அதிக அளவில் இல்லையாயினும் இலங்கையின் தலைநகர் கொழும்பில் மைய வணிகத் தெரு செட்டியார் தெரு என அழைக்கப்படுவது நகரத்தார்க்கும் இலங்கைக்கும் இருந்த அழிக்க முடியாத உறவைக் காட்டுகின்றது.

இலட்சுமணன், அரு., (22-5-1929)

மாத்தூர் - மணலூர்

ஆத்தங்குடி

பல்கலைக்கழகப் புலத்தலைவர்

அருணாசலம் செட்டியார் – நாச்சம்மை ஆச்சியின் மகன். 1951 இல் வேளாண் அறிவியல் பட்டம் பெற்ற இவர் 1956 இல் தோட்டக்கலைப் பட்டயமும் 1961 இல் அமெரிக்காவில் வேளாண் பொறியியல் உயர் கல்விப் பட்டமும் பெற்றார். சில ஆண்டுகள் (1951–55) தமிழக அரசின் வேளாண்துறை அலுவலராகப் பணியாற்றிய பிறகு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் துறை விரிவுரையாளராகச் சேர்ந்தார். அங்குப் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று 1982 இல் வேளாண் புலத்தலைவராகப் பொறுப்பேற்றார். 1987 முதல் இந்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தில் அலோசகராகவும் ஆய்வு ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றி 1994இல் ஓய்வு பெற்றார்.

Koviloor Digital Library

வேளாண் பொருளியல் துறையில் 60–க்கும் மேற்பட்ட படைப்புகளைத் தந்துள்ள இவர் நால்வருக்கு முனைவர்பட்ட ஆய்வு வழிகாட்டுநராக இருந்துள்ளார் AU2 என்ற பெயரில் ஒரு புதிய நெல் ரகத்தை இவர் உருவாக்கியுள்ளார். கரும்பாலைக் கழிவுகளைக் கொண்டு நுண்ணுயிர் எரிவாயு மற்றும் அங்கக உரம் தயாரிக்கும் வழிமுறைகளை இவர் கண்டுபிடித்துள்ளார்.

இலட்சுமணன், அரு., (24-10-1929)

மாத்தூர் - உறையூர்
தேவகோட்டை
கல்வியாளர், நடனக்கலைஞர்

அருசிதலெ. இராம. அருணாசலம் செட்டியார் – சிவகாமி ஆச்சியின் மகன். தேவகோட்டை நகரத்தார் உயர்நிலைப்பள்ளி, திருச்சி பிஷப்ஹீபர் பள்ளி ஆகியவற்றில் பள்ளிக் கல்வியும் சென்னை விவேகானந்தா கல்லூரியில் புவியியல் இளங்கலையும், மாநிலக் கல்லூரியில் புவியியல் முதுகலைக் கல்வியும் இவர் கற்றார். காசி இந்து பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் கட்டிடக் கல்வியில் முதுகலைப் பட்டமும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூலகர் பயிற்சிச் சான்றிதழும் பெற்றுள்ளார். திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பரதமும் ஸ்ரீஜத் கோபிநாத் தங்கமணியிடம் கதகளியும் பயின்றார்.

பழநியாண்டவர் பண்பாட்டுக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், பூம்புகார்க் கல்லூரி முதல்வராகவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிவாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். பூம்புகார்க் கல்லூரியில் 14 இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்புக்கள் அமையவும், சிறந்த கட்டிடம் எழுப்பவும் இவர் உறுதுணையாக இருந்தார்.

நகரத்தார்களில் நடனக் கலைஞர் என்பது இவரது தனிச்சிறப்பு. 24–10–1949 அன்று தேவகோட்டை கந்தர்சஷ்டி விழாவில் இவரது நடன அரங்கேற்றம் நடைபெற்றது. மீண்டும் 1981ஆம் ஆண்டு இவர் இம்மேடையில் நடனம் ஆடினார். மயில் நடனம் இவருக்குத் தனிப்புகழ் தந்ததாகும். சமையற்கலையிலும் இவர் வல்லவர். 'அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும்' என்னும் ஆராய்ச்சி நூலை இவர் எழுதி வெளியிட்டுள்ளார். 1980இல் இவர் 'அருங்கலைச் செல்வர்' பட்டம் பெற்றுள்ளார்.

இலட்சுமணன், சித. (6-10-1930)

வைரவன் கோவில் - பிள்ளையார் வகுப்பு
பள்ளத்தூர்
மிருதங்கக் கலைஞர்

சிதம்பரம் செட்டியார் – கருப்பாயி ஆச்சியின் மகன். இவர், தமது 12ஆவது வயதில் கானாடு காத்தானில் இருந்த மலையப்ப ஐயரிடமும் பின்னர் 1944 முதல் 1954 வரை பழநி எம். சுப்பிரமணிய பிள்ளையிடமும் முறையாக மிருதங்கப் பயிற்சி பெற்றார். கஞ்சிரா வாசிக்கவும் கற்றுக் கொண்டார். 1946 முதல் தம் குருநாதரோடு சேர்ந்து பல கச்சேரிகளில் மிருதங்கம் வாசித்துள்ளார். 1954க்குப் பிறகு தனியாக வாசிக்கத் தொடங்கினார். செம்பை வைத்தியநாத பாகவதர், அரியக்குடி இராமானுச அய்யங்கார், ஜி.என். பாலசுப்பிரமணியம், மகாராசபுரம் விசுவநாத ஐயர், மதுரை மணி ஐயர், ஆலத்தூர் சகோதரர்கள், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, எம்.எம். தண்டபாணி தேசிகர், மதுரை சோமு, சீர்காழி கோவிந்தராசன், எம். பாலமுரளி கிருஷ்ணா, டி.என். சேச கோபாலன், மாண்டலின் சீனிவாசன் உள்ளிட்ட பெரிய பாடகர்கள் அனைவர்க்கும் பக்க வாத்தியமாக மிருதங்கம் வாசித்திருக்கிறார்.

சென்னைத் தமிழிசைச் சங்கம் நடத்திவரும் தமிழ் இசைக் கல்லூரியில் 1962 முதல் 1992 வரை மிருதங்க ஆசிரியராகப் பணியாற்றினார். 1986ஆம் ஆண்டு தமிழ் இசைச் சங்கம் நடத்திய பண் ஆராய்ச்சி விழாவில் ''தாளங்களும் பயிற்சி முறையும்'' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை படித்து, செயல்முறை விளக்கம் கொடுத்துள்ளார்.

இலட்சுமணன் செட்டியார், சுப.க.அ. (13-6-1907 - . . .)

மாத்தூர் - உறையூர்
சோழபுரம்
மேலவை உறுப்பினர்

அண்ணாமலை செட்டியார் – கண்ணம்மை ஆச்சியின் மகன். 1932 முதல் 1937 முடிய பர்மா நாட்டுக்கோட்டை செட்டியார் சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றியவர். 1937முதல் காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைந்து இருமுறை சிவகங்கை வட்டக் காங்கிரஸ் அரசியல் மாநாட்டைத் திறம்பட நடத்தியிருக்கிறார். சிவகங்கை வட்டக் காங்கிரசின் தலைவராகவும் இராமநாதபுரம் மாவட்டக் காங்கிரசின் செயலாளராகவும் தமிழக மாநிலக் காங்கிரசின் உறுப்பினராகவும் கட்சியின் பல்வேறு நிலைகளில் பொறுப்பேற்றுத் தொண்டாற்றி யுள்ளார். சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தின்

Koviloor Digital Library

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 1962இல் இராமநாதபுரம் உள்ளாட்சித் தொகுதியின் சார்பாளராகத் தமிழகச் சட்டமன்ற மேலவையில் இடம்பெற்றார்.

1930இல் ஒக்கூர் மின்கழகம் என்ற அமைப்பை உருவாக்கி சிவகங்கை வட்டத்திற்கு மின்னாற்றல் வழங்கினார். அப்பகுதியில் ஒரு போக்குவரத்துக் கழகத்தையும் நடத்தி வந்தார். 64 வீடுகள் கொண்ட இரண்டு ஆதி திராவிடர் குடியிருப்புக்களை உருவாக்கிட நிலம் நன்கொடையாக வழங்கியதோடு பத்தாயிரம் ரூபாய் நிதியும் வழங்கியுள்ளார்.

இலட்சுமணன் ப., (1-3-1938)

நூரக்குடி
கண்டனூர்
தொழிலதிபர்

லெ.சித. பழநியப்ப செட்டியார் – இலட்சுமி ஆச்சியின் மூத்த மகன். பி.ஏ.பட்டம் பெற்ற இவர் தம் தந்தையாரின் தொழில் நிறுவனங்களை நிருவகித்து வருகிறார்.

இவர்தம் தம்பியும் நடுவணரசின் முன்னாள் அமைச்சருமான ப. சிதம்பரம், தம் நண்பர் பாரதி ஆகியோருடன் இணைந்து இலக்கியச் சிந்தனை (த.க.) என்ற அமைப்பை 28–2–1970இல் உருவாக்கினார். அதன் வாயிலாக ஆண்டு தோறும் சிறந்த தமிழ்ச் சிறுகதையையும், நாவலையும் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கி, இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறார்.

இவரது இலக்கியத் தொண்டைப் பாராட்டிச் சென்னைக் கம்பன் கழகத்தினர் 1993ஆம் ஆண்டு 'கம்பன் அடிப்பொடி' பரிசினை வழங்கிச் சிறப்பித்தனர்.

இலட்சுமணன், மு., (1-1-1933)

இலுப்பைக்குடி
தேவகோட்டை
பதிப்பாளர்

புகழ்மிக்க முத்து முரு. குடும்பத்தில் முத்து கரு. முத்தையா செட்டியார் – சீதை ஆச்சியின் ஆறாவது பிள்ளை 1969இல் விழுப்புரத்தில் முத்துப் பதிப்பகத்தைத் தொடங்கினார். பின்னர் மீனா புத்தகப் பண்ணை எனும் நிறுவனத்தையும் தொடங்கினார். இவ்விரண்டு பதிப்பகங்களின் வாயிலாகக் கடந்த 25 ஆண்டுகளில் 1000க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கிறார். அவற்றுள் பெரும்பாலான நூல்கள் புதுவை மாநிலத் தமிழறிஞர்களால் எழுதப்பெற்றவை. எனவே, இவரைப் புதுவை மாநிலப் பதிப்பாளர் எனக் குறிப்பிடுவார் முனைவர் ச. மெய்யப்பன். அதற்கேற்ப, இவருக்குப் 'பதிப்புச் செம்மல்' என்ற பட்டத்தைப் புதுவை முதல்வர் வெ. வைத்தியலிங்கம் வழங்கிச் சிறப்பித்தார். இவரது வெளியீடுகளில் இதுவரை 7 நூல்கள் தமிழக அரசின் பரிசையும், 5 நூல்கள் புதுவை மாநில அரசின் பரிசையும் பெற்றுள.

இலட்சுமணன், லெ.நா., (1-5-1943)

நேமங்கோவில்
வேந்தன்பட்டி
கட்டடத் தொழில் நிபுணர்

லெ.நா.லெ. நாகப்ப செட்டியார் – முத்தாத்தாள் ஆச்சியின் மகன். அழகப்பா கல்லூரியில் பயின்றபின் அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரியில் படித்து பி.ஈ. பட்டம் பெற்றார். அக் கல்லூரியிலேயே 2 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய பின் சொந்தமாகக் கட்டிட சாமான்கள் விற்பனையில் இறங்கினார். இன்று அகில இந்தியக் கட்டுநர் சங்கத்தின் திருச்சி மையத்திற்குத் தலைவர்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் சிங்கப்பூர், மலேசியா முதலிய கீழை நாடுகளிலும் பயணம் செய்துள்ளார்.

திருச்சி அரிமா சங்கத்தின் தலைவராக இருந்த இவர் இன்று அரிமா சங்க (324A2) மாவட்ட ஆளுநராகப் பதவியேற்றுள்ளார்.

திருச்சி நகரத்தார் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்று சமூகத்திற்கு ஒல்லும் வகையெல்லாம் உதவி வருகிறார். இரண்டு ஆண்டுகளில் 29 நகரத்தார் பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்த பெருமை இவருடையது. மாணவர்களுக்குக் கல்லூரிகளில் இடம் பெற்றுக் கொடுத்தும் உதவி வருகிறார்.

வேந்தன்பட்டி நகரச் சிவன் கோவில் திருப்பணிக் குழுவின் தலைவராக இருந்து அதனைச் சிறப்பாகச் செய்துமுடித்து எல்லோருடைய பாராட்டையும் பெற்றவர்.

இலட்சுமிபுரம் (கொத்தமங்கலம்)

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கோட்டையூர், பள்ளத்தூர் வழியாக 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

செட்டிநாட்டில் இலட்சுமிபுரம் என்ற பெயரில் இரண்டு ஊர்கள் உள. அவற்றைப் பிரித்தறிவதற்கு அருகில் உள்ள ஊர்ப் பெயரை இணைத்து வழங்குவது மரபு. அம்மரபுப்படி இவ்வூர் கொத்தமங்கலம் இலட்சுமிபுரம் என்றும், கொ. இலட்சுமிபுரம் என்றும் வழங்கப்படுகிறது.

Koviloor Digital Library

இவ்வூரில் மாத்தூர், இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய மூன்று கோவில்களைச் சேர்ந்த 105 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொத்தமங்கலம் ஊராட்சி மன்றத்தின் ஒரு பகுதியாக இவ்வூர் அமைந்துள்ளது.

இங்கு மீனாட்சி சொக்கலிங்கர் திருக்கோவில் என்ற பெயருடன் கூடிய நகரச்சிவன் கோவில் உள்ளது. மேலும் நகரத்தாரால் பொதுவில் நிருவகிக்கப் பெற்றுவரும் சிதம்பர விநாயகர் கோவில், காளியம்மன் கோவில், முனீசுவரர் கோவில், அனுமார் கோவில் ஆகிய கோவில்களும் இவ்வூரில் உள. க.ப. இராம.சித. குடும்பத்தாரால் நிருவகிக்கப் பெறும் பொன்னம்பல விநாயகர் கோவிலும் பி. இராம. குடும்பத்தாரால் நிருவகிக்கப் பெறும் கல்வி விநாயகர் கோவிலும் இவ்வூரில் உள.

இவ்வூரில் சிவன்கோவில் ஊருணி குடிநீர் ஊருணியாகவும், சிதம்பர விநாயகர் கோவில் ஊருணி, முனீசுவரர் கோவில் ஊருணி ஆகிய வேறு இரு ஊருணிகளும் உள்ளன.

இவ்வூர் ந.சொ.அரு. குடும்பத்தாரால் 1927இல் தொடங்கப்பெற்ற சொக்கலிங்க வித்தியாசாலை எனும் தொடக்கப் பள்ளி இப்போதும் அக் குடும்பத்தின் வழிமுறையினரால் நடத்தப் பெறுகிறது.

இவ்வூர் மாத்தூர் உறையூர் பங்காளிகள் ஆலத்துப்பட்டிப் படைப்பை 3 ஆண்டுகட் கொருமுறை படைத்து வருகின்றனர். இவ்வூர், கொத்தமங்கலம், பள்ளத்தூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த மாத்தூர் கருப்பூர் பங்காளிகள் ஆண்டுதோறும் இவ்வூரில் வடிவியாத்தாள் – கருப்பையா படைப்பைப் படைத்து வருகின்றனர்.

இவ்வூரைச் சேர்ந்த சொ.மு. குடும்பத்தார் 150 ஆண்டுகட்குமுன் கானாடுகாத்தானில் சிவலோக நாத்சாமி ஒப்பிலாள் திருக்கோவிலைக் கட்டி இன்றும் அதனை நிருவகித்து வருகின்றனர்.

இலட்சுமிபுரம் (விரையாச்சிலை)

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியில் இருந்து கோட்டையூர், பள்ளத்தூர், திருமயம் வழியாக 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

செட்டிநாட்டில் இலட்சுமிபுரம் என்ற பெயரில் இரண்டு ஊர்கள் உள்ளன. அவற்றைப் பிரித்தறிவதற்கு அருகில் உள்ள ஊர்ப்பெயரை இணைத்து வழங்குவது மரபு. அம்மரபுப்படி இவ்வூர் விரையாச்சிலை இலட்சுமிபுரம் என்றும் வி. இலட்சுமிபுரம் என்றும் வழங்கப்படுகிறது. நெய்க்கோணம் இலட்சுமிபுரம் என்றும் இவ்வூர் வழங்கப்படுவதுண்டு.

இவ்வூரில் மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி ஆகிய மூன்று கோவில்களைச் சேர்ந்த 96 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூர் திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற பெயருடன் கூடிய நகரச்சிவன் கோவில் உள்ளது. 13–11–1921இலும் 29–1–1993இலும் இக்கோவிலுக்குக் குடமுழுக்கு விழாக்கள் நிகழ்ந்துள்ளன. வ.மு.ப.ராம. குடும்பத்தாருக்குச் சொந்தமான வெள்ளைப் பிள்ளையார் கோவிலும் பா.ராம.பழ. குடும்பத்தாருக்குச் சொந்தமான செல்வ விநாயகர் கோவிலும் இவ்வூரில் உள்ளன.

இவ்வூரில் வைரவன் கோவில் நகரத்தார் களுக்குப் பொதுவான படைப்பு வீட்டில் மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை புதுப்பட்டி, வலையபட்டி ஆகிய ஊர்ப் பங்காளிகளோடு சேர்ந்து பாட்டிமார் படைப்பைப் படைத்து வருகின்றனர்.

இலுப்பைக்குடி

நகரக் கோவில்கள் ஒன்பதில் ஒன்றான இத்திருக்கோவில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கிழக்கே மாத்தூர் செல்லும் சாலையில் 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

இலுப்பை மரங்கள் இப்பகுதியில் நிறைந்திருந் தமையால் இப்பெயர் பெற்றது. கி.பி. 714 இல் பாண்டிய மன்னன் நகரத்தாருக்கு இக்கோவிலை அளித்தான். இலுப்பைக்குடிப் புராணத்தில் நகரத்தார் மரபில் முன்னோராகிய தனபதி என்பவரின் கனவில் சிவபெருமான் தோன்றிச் சூடாமணி ஒன்றை வழங்கி இத்தலத்தில் சிவபுண்ணியங்களைச் செய்யக் கட்டளை யிட்டதாகக் குறிப்பிடப் பெறுகிறது. இதற்கேற்ப இக்கோவில் நகரத்தார் இசைவுப் பிடிமானத்தில் "கேரள சிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் இலுப்பைக்குடியான புகலிடங் கொடுத்த பட்டணத்தில் சூடாமணிபுரம் உடையார்" என்று தம்மைக் குறிப்பிடுவர்.


இக்கோவிலைச் சார்ந்த நகரத்தார்கள் 1. அரிமழம் 2. அலவாக்கோட்டை 3. இராங்கியம் 4. வி. இலட்சுமிபுரம் 5. ஒக்கூர் 6. கடியாபட்டி 7. கண்டரமாணிக்கம் 8. கண்டனூர் 9. காரைக்குடி 10. கீழப்பூங்குடி 11. குழிபிறை 12. கொத்த மங்கலம் 13. கோனாபட்டு 14. சிறாவயல் 15. உ. சிறுவயல் 16. தேவகோட்டை 17. நடராசபுரம் 18. நற்சாந்து

Koviloor Digital Library

பட்டி 19. நாச்சியாபுரம் 20. நேமத்தான்பட்டி 21. பட்டமங்கலம் 22. பள்ளத்தூர் 23. பனங்குடி 24. பனையப்பட்டி 25. புதுப்பட்டி 26. புதுவயல் 27. பூலாங்குறிச்சி 28. மானகிரி 29. வலையபட்டி 30. விரையாச் சிலை 31 வேந்தன்பட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மொத்தம் புள்ளிகள் 2742

சதாவதானம் சுப்பிரமணிய அய்யர் எழுதியுள்ள இலுப்பைக்குடித் தல புராணமும் 1985இல் வெளியிடப்பட்ட இத்திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு விழா மலரும் இக்கோவில் பற்றிய செய்திகளை விரிவாகத் தருகின்றன. பிரமன், திருமால், இந்திரன் ஆகியோரின் விண்ணப்பத்தை ஏற்றுச் சிவபெருமான் வைரவக்



இலுப்பைக்குடிக் கோவில்

கோலம் பூண்டு கும்பாண்டகன் என்னும் அசுரனை அழித்து இங்கே எழுந்தருளியிருப்பதாக இத்தல புராணம் குறிப்பிடுகிறது. அதற்கேற்ப இக்கோவிலில் வைரவர் வழிபாடு தனிச் சிறப்புடையதாக அமைந்துள்ளது.

இத்திருக்கோவிலில் அமர்ந்தருள் செய்யும்

இறைவன் : தான்தோன்றியீசர்

இறைவி : சௌந்தரநாயகி

இக்கோவிலுக்கு 1842, 1882, 1901, 1959, 1985 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. அம்மன் சன்னதிக்கு எதிரே பிரம்மதீர்த்தம், கோவிலுக்கு மேற்கே சிவகங்கைத் தீர்த்தம், கோவிலுக்கு வடக்கே கௌரி தீர்த்தம் என மூன்று ஊருணிகளும் நகர விடுதியும் இங்கு உள்ளன.

1833ஆம் ஆண்டு முதல் தேவகோட்டை அரு.லெ. குடும்பத்தார் தொடர்ந்து அறங் காவலர்களாக இருந்து வந்தனர். 1954ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத் திட்டப்படி அரு.லெ. குடும்பத்தார் ஒருவர் பரம்பரை அறங்காவலராகவும் பிறஊர் இலுப்பைக்குடி நகரத்தார் இருவர் அரசாங்க நியமன அறங்காவலர்களாகவும் இருந்து கோவிலை நிருவாகம் செய்து வருகின்றனர்.

ஒன்பது நகரக்கோவில்களில் இலுப்பைக்குடியில் மட்டும்தான் பிரம்மோற்சவம் ஆண்டு தோறும் சித்திரைமாதம் மிருகசீரிடத்தன்று தொடங்கி 10 நாள் திருவிழாவாக நடை பெறுகின்றது. சித்திரைப் பௌர்ணமியன்று விழா நிறைவு பெறும்.

பெரும்பாலான கோவில்களில் கல்தச்சர் களால் உளிகொண்டு பொளியப்பட்ட லிங்கங்களே உள. இங்கு தானே முளைத்த உளிபடாத சுயம்புலிங்கம் உள்ளது. இக்கோவிலுள் நுட்பமான வேலைப்பாடமைந்த சிற்பங்கள் உள்ளன. நடராசப் பெருமான் சன்னதிக்கு எதிரே உள்ள தூணின் தெற்குப் பகுதியில் இரண்டு கட்டைவிரல் உயரமே கொண்டதாக 3 செ.மீ. சதுரத்துக்குள் மிக

Koviloor Digital Library

நுட்பமாக ஒரு விநாயகர் உருவம் காணப் படுகின்றது. உருவம் மிகச்சிறியது எனினும் தெளிவாக வேழமுகம் மூன்றுகண்கள் ஐந்து கரங்கள் ஆகிய உறுப்புக்களையும் அலங்கார அணிகளையும் காண முடிகிறது. வைரவர் சன்னதியின் கபோத பகுதியின் கூடுகளில் மட்டும் பதினைந்து வகையான வைரவரின் திருக்கோலங்கள் அமைந்துள்ளமை இக் கோவிலின் தனிச்சிறப்பாகும். இக்கோவிலில் தட்சிணாமூர்த்தி மண்டபச் சிற்பங்களும் நுண்ணிய வேலைப்பாடு கொண்டவை. கல்லிலேயே முறுக்குக் கம்பி போலச் செதுக்கி யிருப்பதும், பிள்ளைத் தூண்களைத் தாங்கி நிற்கும் சீறிப்பாயும் சிங்கங்களின் திறந்த வாயினுள் வாயைவிடப் பெரிய கல்உருண்டைகளை வைத்துச் சிற்பி செதுக்கியிருப்பதும் காணத் தக்கதாகும். அந்த கல்உருண்டைகள் உருளும்; ஆனால் வாயிலிருந்து எடுக்க வராது. எப்படிக் கல் உள்ளே செதுக்கப்பட்டது என்பது மிக வியப்பாகும். இக்கோவிலின் தல விருட்சமாகிய இலுப்பை மரத்தின் கற்சிற்பம் கொங்கண சித்தர் வழிபட்டதாகக் கூறப்படும் இடத்தில் அமைந்துள்ளது.

இத்திருக்கோவிலில் 30 செப்புத் திருமேனிகள் உள்ளன. திருவிளையாடல் புராணக் காட்சிகள் அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

வள்ளல் அழகப்பர் வேண்டுகோளுக் கிணங்கக் காரைக்குடியில் கல்லூரி நிறுவுவதற்கு இக்கோவில் நகரத்தார் தங்கள் கோவிலுக்குரிய 450 ஏக்கர் நிலத்தைக் கொடுத்துதவியதோடு 1955இல் ஏறத்தாழ 2 இலட்சம் ரூபாய் மதிப்புடைய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்தனர். திருச்சி சுவாமிகள் தமது பெங்களூர் மடத்துக்குக் கிளையாகக் காரைக்குடியில் ஓர் ஆசிரமம் அமைக்க இவர்கள் 17 ஏக்கர் நிலம் அளித்துள்ளனர்.

சிற்பக் கலையும் ஓவியக் கலையும் சிறந்து விளங்கும் கலைக்கூடமாகவும், கல்விப்பணிக்கு உறுதுணை செய்த அறநிலையாகவும் இலுப்பைக் குடிக்கோவில் விளங்குவது சிறப்புடையதாகும்.

இழவு கூட்டுதல்

நகரத்தார் சமூகத்தில் ஒருவர் இறந்துவிட்டால் அது தொடர்பான ஈமச்சடங்குகள் முன்ன ரெல்லாம் பதினாறு நாட்கள் நடைபெறும். பதினாறாவது நாள் சவண்டி என்னும் சடங்கோடு ஈமச்சடங்குகள் நிறைவெய்தும். இந்தச் சடங்குகள் நடைபெறும் நாட்களெல்லாம் வெளியூர்களிலும் உள்ளூரிலும் இருந்து உறவினர்களும், நண்பர்களும் இறந்தவர் வீட்டிற்கு வந்துகொண்டே இருப்பர்.

சாவு நிகழ்ந்தது குறித்து விசாரித்து விட்டு இறந்தவர் குடும்பத்தாருக்கு இரங்கல் தெரிவித்துத் திரும்புவர். அவ்வாறு வருவோர்க்கெல்லாம் இறந்தவர் வீட்டில் அவர்கள் வரும் நேரத்திற்கேற்பச் சிற்றுண்டியோ சாப்பாடோ வழங்கப்பெறும்.

இவ்வாறு ஒருவர் இறந்ததிலிருந்து சவண்டி முடியும் வரையான ஈமச்சடங்குகளை 'இழவு கூட்டுதல்' என்பர். இறந்தது குறித்து விசாரிக்க வருபவர்கள், இரங்கல் தெரிவித்துப் பேசிக் கொண்டிருத்தல் 'இழவு கேட்டல்' எனப்படும். வந்தவர்களோடு இறந்தவர் குடும்பத்தினர் பேசிக்கொண்டிருப்பது 'இழவு சொல்லுதல்' எனப்படும்.

ஒருவர் இறந்தவுடன் முதலில் செய்யப்படும் சடங்கு 'பசுத்தானம் கொடுத்தல்' என்பது. புரோகிதர் ஒருவர் அழைத்து வரப்படுவார். தெரிந்த வீட்டிலிருந்து ஒரு பசுமாடு கொண்டு வரப்படும். அதை அந்தப் புரோகிதருக்குத் தானம் கொடுப்பதற்குரிய மந்திரங்கள் புரோகிதரால் சொல்லப்பட, இறந்தவர் மகன் அவற்றைத் திரும்பச் சொல்வார். பின்னர் மாடு உரியவரால் ஓட்டிச் செல்லப்படப் புரோகிதருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும். முற்காலத்தில் வீடுதோறும் பசுமாடுகள் வளர்க்கப்பட்ட சூழலில் உண்மையிலேயே பசுத்தானம் கொடுக்கப் பட்டிருக்கலாம். இப்போது சடங்கு அளவில் நிகழ, பசுவிற்குப் பதில் பணம் வழங்கப்படுகிறது.

பிறகு இறந்தவர் உடலில் கைக்கட்டை விரல்கள் இரண்டடையும் இணைத்துக் கட்டி, கால் கட்டைவிரல்கள் இரண்டடையும் இணைத்துக் கட்டி, வாயை மூடிக்கட்டி, மூக்குத் துளைகளில் பஞ்சுவைத்து அடைப்பர். இதற்கு 'வாய்கை கட்டுதல்' எனப்பெயர்.

இது முடிந்ததும் வழக்கமாக அந்த வீட்டில் இறந்தவர் உடல் கிடத்தப்படும் இடத்தில் இந்த உடலையும் கிடத்துவர். பெரும்பாலான வீடுகளில் வளவுக்கும் இரண்டாம் கட்டுக்கும் இடையே உள்ள 'ஹால்'வீட்டில் அல்லது வளவுப் பட்டாலையில் இவ்வாறு உடல் கிடத்தப்படும். உடலின் தலைமாட்டில் குத்து விளக்கு ஏற்றி வைக்கப்பட்டு, ஒரு தேங்காய் உடைத்து வைக்கப்படும்.

பின்னர் உறவினர்கட்கும், பங்காளிகளுக்கும் சொல்லி அனுப்பப் பெறும். வெளியூரில் உள்ள உறவினர்கட்குத் தகவல் கொடுக்கப் பெறும். தகனம் நடைபெறும் வரை சாப்பாடு போடுவதில்லை என ஒரு மரபு வைத்திருப்பதால் அதுவரை வேளைதோறும் சிற்றுண்டி மட்டுமே வழங்கப்பெறும்.

Koviloor Digital Library

வரவேண்டிய முக்கியமான உறவினர்கள், பங்காளிகளெல்லாம் வந்தவுடன் தகனத்திற்கு ஆவன செய்யத் தொடங்குவர். முதலில் இறந்தவர் உடல் குளிப்பாட்டப்படும். நெருங்கிய உறவினரெல்லாம் வந்து எண்ணெய் தொட்டு, உடலின் தலையில் எண்ணெயை வைத்துச் செல்வர். பிறகு இறந்தவர் ஆணாயின் பங்காளிவீட்டு ஆண்களும், பெண்ணாயின் பங்காளிவீட்டுப் பெண்களும் குளிப்பாட்டுவர்.

பின்னர் வளவு வாசலில் பந்தல்கால் ஊன்றப் படும். நான்கு கம்புகள். அவற்றின் மேற்புறத்தை இணைக்கும் வண்ணம் ஒரு வெள்ளைத்துண்டு. இதுவே பந்தல் எனப்படும். வளவு வாசலில் பந்தல் போடப்படுவதால், கால்கள் நிறுத்தப்படக் களிமண் உருண்டைகள் நான்கு வைக்கப்படும். அவற்றில் கால்கள் நான்கையும், பங்காளி வீட்டு ஆண்கள் நால்வர் ஊன்றுவர்.

இவ்வாறு போடப்பட்ட பந்தலுக்கு அருகே, உரலைக் கொண்டுவந்து போட்டு, அதில் சிறிது பச்சை நெல்லைப்போட்டு, இறந்தவரின் மூத்தமகள், அல்லது அங்கே இருக்கும் மகள், அல்லது பேத்தி அல்லது மருமகள் அதனைக் குத்தி அரிசியாக்குவர். இதற்குப் 'பச்சை குத்துதல்' என்று பெயர். பச்சை குத்தித் திரட்டப் பெற்ற அரிசி, பின்னர் சுடுகாட்டில் வாய்க்கரிசி போடும் பொழுது பயன்படுத்தப்படும்.

பச்சை குத்தி முடிந்ததும் இறந்தவரது உடல், பந்தல் உள்ளே விரிக்கப் பெற்ற பாயின் மீது கொண்டு வந்து கிடத்தப் பெறும். உறவினர்கள் அந்த உடலையும் பந்தலையும் மும்முறை சுற்றி வருவர். இதற்குப் 'பட்டம் சுற்றுதல்' எனப் பெயர். இறந்தவர் ஆணாக இருப்பின் பட்டம் சுற்றுதல் நிகழ்ச்சியில் முதலில் ஆண்கள் ஒரு குழுவாகவும், அவர்கள் மும்முறை சுற்றிய பிறகு பெண்கள் ஒரு குழுவாகவும் சுற்றுவர். இறந்தவர் பெண்ணாக இருந்தால், முதலில் பங்காளி வீட்டு ஆண்கள் ஒரு குழுவாகவும் பிறகு இறந்தவரது தாய்வீட்டுப் பங்காளியாகிய ஆண்கள் ஒரு குழுவாகவும் இறுதியில் பெண்கள் ஒரு குழுவாகவும் பட்டம் சுற்றுவர். இறந்தவர் வாழ்வரசியாக இருந்தால் அவரது தாய் வீட்டினர் பட்டம் சுற்றும்போது உடன் பிறந்தவர் பட்டுச் சேலை ஒன்றைத் தோளில் வைத்துக் கொண்டு சுற்றுவார். மூன்றாவது சுற்றின் இறுதியில் அச்சேலையை இறந்தவர் உடல்மீது வைப்பார். இதற்குக் 'கோடி போடுதல்' என்பது பெயர்.

இதனையடுத்துத் தகனத்திற்காக உடல் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும். முன்னரெல்லாம் பச்சை மூங்கில்களால் கட்டப்பெற்ற பாடையில் உடலைக் கிடத்திப் பங்காளி வீட்டு ஆண்கள் தோளில் தூக்கிச் சென்றனர். இப்போது பெரும்பாலான செட்டி நாட்டு ஊர்களில், நகரச்சிவன் கோவிலில் 'சிவரதம்' என்ற பெயரில் ஓர் ஆள் இழுத்துச் செல்லத்தக்க வண்டி ஒன்றைச் செய்து வைத்துள்ளனர். இந்த வண்டிவரை உடலைப் பங்காளி வீட்டு ஆண்கள் கொண்டு போய் வைத்துவிட, வண்டியில் உடல் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லப்படும்.

உடல் வீட்டை விட்டுக் கொண்டு செல்லப்பட்ட உடன், பந்தலில் உடலைக் கிடத்த விரிக்கப்பட்டிருந்த பாயை, இறந்தவரின் இரண்டாவது மகள், அல்லது அங்கே இருக்கும் மகள் அல்லது பேத்தி அல்லது மருமகள் சுற்றுவார். இது 'பாய் சுற்றுதல்' எனப்படும். உடல் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லப்படும் போது, இறந்தவரின் உறவுப் பெண்கள், வீட்டின் முகப்பைத் தாண்டி வீதிவரை வந்து, உடல் கொண்டு செல்லப்படுவதைப் பார்த்தபின் வீட்டிற்குள் திரும்பிக் குளிப்பர். சில ஊர்களில் பெண்கள் அருகே உள்ள ஊருணிக்குச் சென்று குளித்துத் திரும்புவதும் உண்டு. இப்பழக்கத்தைத் தான் கவியரசர் 'வீதிவரை மனைவி' எனத் தம் கவிதையில் குறிப்பிடுகிறார்.

சுடுகாட்டிற்கு உடல் கொண்டு வரப் பெற்றதும், அது தகனம் செய்யப்படுவதற்குரிய மேடையில் வைக்கப்படும். நெருங்கிய உறவினர்கள், பங்காளிகளாகிய ஆண்கள் அனைவரும் சுடுகாடு வந்திருப்பர். அவர்க ளெல்லாம் இறந்தவருக்கு 'வாய்க்கரிசி' போடுவர். பச்சை குத்தித் திரட்டிய அரிசியில் ஒரு பிடியும், காசும் சேர்த்துப் போடுவது மரபு.

கொள்ளி வைக்கும் மகன் அல்லது சில குடும்பங்களில் இறந்தவரின் மகன்கள் அனைவரும் தலையை மொட்டை அடித்துக் கொள்வர். இதற்காக நாவிதர் சுடுகாட்டிற்கே வந்திருப்பார்.

அனைவரும் வாய்க்கரிசி போட்டபிறகு, இறந்தவரின் மூத்த மகன், அல்லது அங்கே வந்திருக்கும் மகன் நீர்க் குடத்தைத் தோளில் சுமந்து, சிதையை மும்முறை சுற்றி வந்த பிறகு, அக்குடத்தை உடைத்துவிட்டு, சிதைக்குத் தீமூட்டிக் கொள்ளி வைப்பான். சிறு குழந்தை (8 அல்லது 9 வயதுக்குள்) இறந்தால் எரியூட்டாமல் புதைப்பது நகரத்தார் மரபாகும்.

தகனம் முடிந்து திரும்பி வரும் வழியில் ஓர் அரசமரம் அல்லது ஆலமரத்தடியில் ஓர் ஊருணிக் கரையில் புரோகிதருக்கு 'நற்கதி தானம்' வழங்கப்படும்.

Koviloor Digital Library

இழவு கூட்டுதல் தொடர்பான, பெரும்பாலான சடங்குகள் நகரத்தாரால் நியமிக்கப்பட்ட தண்டல்காரனால் நடத்தி வைக்கப் பெறும்.

இறந்தவர் புலால் உண்ணாதவராகவும், உபதேசம் கேட்டவராகவும் இருந்தால், இறந்த அன்று, உடல் தகனம் செய்யப்படுமுன் 'அந்தரட்டை' எனும் சடங்கு செய்யப்படுகிறது. அதனை உபதேசம் செய்த மடத்திலிருந்து வரும் தேசிகர் செய்து வைப்பார்.

இறந்தவர் நினைவாக நகரச்சிவன் கோவிலில் மோட்சதீபம் போடக் குடும்பத்தினர் ஏற்பாடு செய்வதும் உண்டு.

இவைதாம் இறந்த அன்று, அல்லது இறந்த மறுநாள் நடைபெறும் சடங்குகள். பின்னர், சவண்டி வரை ஒவ்வொரு நாள் ஒவ்வொரு சடங்காகப் பல சடங்குகள் நடைபெறும். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை வருமாறு :

பெண் இறந்திருந்தாலோ, மனைவியை முன்னரே இழந்த ஆண் இறந்திருந்தாலோ, பங்காளி வீட்டு ஆண்கள் நால்வர், பந்தலின் நான்கு கால்களையும் களிமண் உருண்டைகளிலிருந்து எடுக்கப் 'பந்தல் பிடுங்குதல்' என்னும் சடங்கு மிக எளிமையாக முடிந்துவிடும்.

ஆண் இறந்து, அவர்தம் மனைவி உயிரோடு இருந்தால் இதே சடங்கு இன்னும் சிறிது விரிவாக நடைபெறும். கணவனை இழந்த மனைவிக்கு நகரத்தார் சமூகத்தில் 'சாகக் கொடுத்தவள்' என்பது பெயர். அந்தச் சாகக் கொடுத்தவளை நீராட்டி, ஈரச் சேலையுடன் பந்தலின் நடுவே அமர்த்துவர். அவருக்கு அருகே நிறைநாழி நெல், வெள்ளைப்பூண்டு, ஒரு தண்ணீர்ச் செம்பு ஆகியவை வைக்கப் பெறும்.

முதலில் பங்காளி வீட்டு ஆண்களும், பின்னர், சாகக் கொடுத்தவளின் தாய் வீட்டுப் பங்காளிகளும், பந்தலை மும்முறை சுற்றி வருவர். பங்காளி வீட்டு ஆண்கள் மூன்று சுற்றுச் சுற்றியதும் சாகக் கொடுத்தவளின் மகனும், தாய் வீட்டுப் பங்காளிகள் சுற்றி வந்ததும், தாய் வீட்டுச் சார்பில் உடன்பிறந்தவர் அல்லது அவர் மகனும் ஆளுக்கொரு, கோடி, வெள்ளைப் புடவையைச் சாகக் கொடுத்தவளின் அருகே வைப்பர். இதற்குக் 'கச்சை கொடுத்தல்' என்று பெயர்.

பின்னர் பங்காளி வீட்டைச் சேர்ந்த, வயது முதிர்ந்த கைம்பெண்கள், சாகக் கொடுத்தவளின் தாலிச் சங்கிலியைக் கழற்றித் தண்ணீர்ச் செம்பில் போடுவர். இதற்குத் 'தாலி வாங்குதல்' என்று பெயர். இச்சடங்கு முடிந்ததும் பங்காளி வீட்டு ஆண்கள் பந்தல் பிடுங்குவர்.

தகனம் செய்ததற்கு மறுநாள் இறந்தவரின் மகன், தண்டல்காரனுடன் சுடுகாட்டிற்குச் சென்று எரியூட்டப்பெற்ற உடலின் அஸ்தியை (உடலின் 5 இடங்களிலிருந்து எடுக்கப்பெறும் எலும்புகள்) எடுத்து வருவான். அவ்வாறு அஸ்தி எடுக்கச் செல்லும் போது, எரியூட்டப் பெற்ற உடலின் மீது பால், இளநீர் முதலியவற்றைத் தெளித்த பிறகு அஸ்தி எடுத்து வருவது மரபு. இது 'காடேத்தல்' எனப்படும். 'காடு ஆற்றுதல்' என்பதே இவ்வாறு மருவி வழங்குகிறது. இந்த அஸ்தியைத் திருவரங்கம், திருவையாறு ஆகிய இடங்களில் காவிரியிலோ, திருப்புவனத்தில் வைகையிலோ கரைப்பது மரபு. காசி நகர விடுதிக்கு அனுப்பிக் கங்கையில் கரைப்பதும் உண்டு.

இதற்குப் பின் நடைபெறும் சடங்கு 'கழித்தல்' என்பதும் 'கல் எடுத்துப் புலால் ஊற்றிக் கொள்ளுதல்' என்பதும் ஆகும். இக்காலத்தில் எரியூட்டப் பெற்ற உடலின் எலும்பு, சாம்பல் இவற்றை எடுத்து, புனிதம் எனக் கருதப்படும் ஆற்றங்கரையில் மந்திரங்கள் ஓதி, ஆற்றில் கரைப்பது எனும் வைதீகச் சடங்காகவும் தீட்டைக் கழித்தல் என்பதாகவும் இச்சடங்குகள் அமைந்து நின்றுவிடுகின்றன.

ஆனால் 'கல்லெடுத்துப் புலால் ஊற்றிக் கொள்ளுதல்' என்ற தொடர் சங்ககால நடுகல் மரபை நினைவூட்டுகிறது. இறந்த வீரர்கட்குக் கல்லெடுத்து வழிபடுவதை மரபாகச் சுட்டும் தொல்காப்பியம், 'காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், சீர்த்தகு சிறப்பில் பெரும்படை, வாழ்த்தல்' என்பவை செய்யத்தக்கவை எனக்காட்டும். இவை நகரத்தார் சமூகத்தின் 'கழித்தல்', 'கல்லெடுத்தல்' சடங்குகளில் தம் சுவடுகளைக் காட்டுகின்றன. ஊரின் புறத்தேயுள்ள ஆற்றங்கரை, குளத்தங் கரைக்கு அழைத்துச் சென்று, ஐயர் செங்கல் முதலியவற்றை வைத்துச் செய்யும் சடங்குகள் முற்றிலும் பழைய கல்லெடுத்தல் மரபையே நினைப்பூட்டும்.

பெரும்படை என்பது நகரத்தார் சமூகத்தில், இறந்தோரைத் தெய்வமாக்கி நடத்தும் படைப்போடு ஒப்புமையுடையதாகும் என்பர் ஆய்வறிஞர்.

இவ்வாறு சங்ககால மரபோடு தொடர்புடைய கல்லெடுக்கும் சடங்கின் இறுதியில், விளக்கேற்றி வைத்து, சடங்கு செய்து திரும்பியவரை உறவினரெல்லாம் வணங்கி, அவரிடம் திருநீறு பெற்றுக் கொள்வர். உறவினர் அரிசி முதலியவற்றைக் காணிக்கையாக வைப்பர். அல்லது அரிசிக்கு என ஒரு தொகையைக் கொடுப்பர். பின்னர் உறவினர் அனைவரும் கட்டாயமாக ஒன்றாகஅமர்ந்து, புலாலுடன் அல்லது காய்கறிகளுடன் ஒரே சமயத்தில் உணவருந்துவர்.

Koviloor Digital Library

இழவு கூட்டுதலின் இறுதிச் சடங்கு 'சவண்டி' ஆகும். புரோகிதர் வந்து மூன்று ஐந்து என ஒற்றைப் படையில் இலைகள் போட்டு, அரிசி, பச்சைக் காய்கறிகள் ஆகியவற்றை அவற்றில் பரிமாறி மகன்கள், மருமக்கள் இருந்து மந்திரங்கள் ஓதி, இறந்தவர்க்கும் அவர்தம் முன்னோர்கட்கும் நீர்க்கடன் செய்வதே சவண்டி. இது முடிந்தால் இழவு கூட்டுதல் நிறைவெய்தியதாகப் பொருள்.

சிலர் வீட்டில் சவண்டி கொடுக்காமல், வெளியூர்களில், திருவையாறு, திருவரங்கம், திருப்புவனம், போன்ற புனிதத் தலங்களுள் ஒன்றில் ஆற்றங்கரையில் சவண்டி கொடுத்துத் திரும்புதலும் உண்டு.

முன்னரெல்லாம் சவண்டி பதினாறாம் நாள் நடைபெற்றது. இப்போதும் மிகச் சிலர் வீட்டில் அவ்வாறே பதினாறாம் நாளில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் பெரும்பாலான குடும்பங்களில் பதினொன்றாம் நாள், ஏழாம் நாள், அல்லது ஐந்தாம் நாளே சவண்டி நடத்தி இழவு கூட்டுவதை முடிக்கின்றனர். இதற்கு இரு காரணங்கள். பதினாறு நாட்கள் வரை இழவு கூட்டுதலை நீட்டித்தால் பணம் கூடுதலாகச் செலவாகும். அதனைக் குறைக்க வேண்டும் என்பது ஒன்று. இழவு கூட்ட வேண்டியவர்களாகிய, இறந்தவரின் குடும்பத்தினர், ஆளுக்கு ஓர் ஊரில், ஆளுக்கு ஒரு வேலையில் அல்லது தொழிலில் இருப்பதால் அவர்களனைவரும் விடுப்பு எடுத்துக் கொண்டோ, தொழிலை விட்டு விட்டோ, சொந்த ஊரில் வந்து பதினாறு நாட்கள் இருந்து இழவு கூட்ட முடியவில்லை என்பது மற்றொன்று.

இழவு கேட்க வருபவர்களிடம் இழவு சொல்லும் போது, இறந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், தம் குடும்பப் பெருமை, இறந்தவரின் தனிச்சிறப்பு, அவரை இழந்து நிற்கும் தங்கள் அவலம் இவற்றை வெளிப்படுத்தும் வண்ணம் தாங்களே புனைந்த ஆசுகவி வகையைச் சேர்ந்த ஒப்பாரிப் பாடல்களைப் பாடுவது நகரத்தார் சமூக மரபு. (கு.க.) இம்மரபு இப்போது சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது.

இளங்கோவன், நா., (19-5-1953)

இலுப்பைக்குடி
கோனாபட்டு
இதழாளர்

உ. அரு. சா. நாகப்ப செட்டியார் – தெய்வானை ஆச்சியின் மகன். பல்லாண்டுகளாக மதுரையில் வாழ்ந்து வரும் இளங்கோவன் நகரத்தார் இனத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தினால் 1976 செப்டம்பர் முதல் 'நகரத்தார் மலர்' (கு.க.) இதழை ஆசிரியராக இருந்து வெளியிட்டு வருகிறார்.

இந்த இதழ் வாயிலாகச் செட்டி நாட்டில் இளைஞர்களிடையே இவர் எழுத்தார்வத்தை வளர்த்து வருகிறார். சிவல்புரி சிங்காரத்தை ஆசிரியராகக் கொண்டு 'நல்ல நேரம் வந்தாச்சு' என்னும் ஜோதிட மாத இதழையும் ஓராண்டு இவர் நடத்தினார். மதுரையில் நகரத்தார் பக்தி நெறி மன்றம், விஜயதசமி விழாக்குழு ஆகியவற்றில் பொறுப்பேற்று சமூகத் தொண்டாற்றி வருகிறார். 'சுயம் வரம்' என்னும் அமைப்பின் மூலம் நகரத்தார் சமூகத்தில் திருமணங்கள் விரைந்து நடைபெற 'நகரத்தார் மலர் சுயம்வரக் குழு' வினை நிறுவியுள்ளார். மதுரை, காரைக்குடி, தேவகோட்டை ஆகிய ஊர்களில் சுயம்வர விழா மூலம் பல திருமணங்கள் நடைபெற்றுள்ளன. நீண்டகால இடைவெளிக்குப் பிறகு நகரத்தார் இனத்திற்கென்று இதழ் தொடங்கி அதைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தி வருவது இவரது சிறப்பாகும்.

இளவரசு, சோம., (25-12-1934 - 31-5-1986)

சூரக்குடி
கீழச்சிவல்பட்டி
தமிழ்ப் பேராசிரியர்

சோமசுந்தரம் செட்டியார் – கல்யாணி ஆச்சியின் மூத்த மகன். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் தேர்வில் முதல் மாணாக்கராகத் தேறி, 1957–58இல் அரசர் அண்ணாமலை விருது பெற்றவர். தொடர்ந்து எம்.ஏ. பட்டம் பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 28 ஆண்டுகள் தமிழ்த்துறையில் பணியாற்றிய இவர் சிறந்த மேடைப் பேச்சாளர்; எழுத்தாளர்; நூலாசிரியர்; உரையாசிரியர்.

இவர் எழுதிய நூல்கள் வருமாறு :

1. இலக்கண வரலாறு
2. 20 நூற்றாண்டுகளில் தமிழ்
3. காப்பியத் திறன்
4. பரணி இலக்கியம்
5. நீதி சூடி
6. நன்னூல் உரை – எழுத்ததிகாரம்
7. நன்னூல் உரை – சொல்லதிகாரம்

Koviloor Digital Library

இளையாத்தங்குடி


ஒன்பது நகரக் கோவில்களில் ஒன்றான இத்திருக்கோவில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியில் இருந்து 25 கி.மீ. தொலைவில் குன்றக்குடி, நேமம், கீழச்சிவல்பட்டி வழியாக ஆவினிப்பட்டி செல்லும் சாலையில் அமைந்துள்ளது.

தேவர்களின் இளைப்பினை ஆற்றியதால் இளைப்பாற்று குடி என்று பெயர் கொண்டு பின்னாளில் இளையாத்தங்குடி என வழங்குவதாகத் தலபுராணம் கூறுகிறது. இளைய ஆதன் குடி என்பதே இளையாத்தங்குடி ஆயிற்று என்பார் கம்பன் அடிப்பொடி.

காவிரிபூம்பட்டினத்தில் வாழ்ந்த கீழத்தெரு ஏழு வழியாருக்கு இளையாத்தங்குடி நகரமும் அவ்வூர்க் கோவிலும் பாண்டிய மன்னனால் கி.பி. 707இல் வழங்கப்பட்டன. பின்னர் மற்ற எட்டுக்கோவில் பிரிவுகளாகவும் இவர்கள் பிரிந்தனர். இக்கோவில் சார்ந்த நகரத்தார்கள், 'கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில்' என்று தொடங்கிப் பின்னர் உட்பிரிவுகளைக் குறிப்பிட்டு எழுதுவார்கள். இக்கோவிலார் ஏழு உட்பிரிவுகளை உடையவர்கள். அவை

1. ஒக்கூருடையார்
2. அரும்பாற்கிளையரான பட்டினசாமியார்
3. பெருமருதூருடையார்
4. கழனிவாசற் குடியார்
5. கிங்கிணிக் கூருடையார்
6. பேரசெந்தூருடையார்
7. சிறுசேத்தூருடையார்

இந்த ஏழு உட்பிரிவினரும் சமூக உறவில் தனித்தனிக் கோவில் போலவே நடந்து கொள்வர். அதாவது பிள்ளை கூட்டும்பொழுது தம் பிரிவைச் சேர்ந்த பிள்ளையையே கூட்டுவார்கள். திருமணம் செய்யும் பொழுது ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரோடு சம்பந்தம் செய்து கொள்வார்கள்.



இளையாத்தங்குடிக் கோவில்

இளையாத்தங்குடி நகரத்தார்கள் 1. அரண்மனை சிறுவயல் 2. அரிமழம் 3. அரியக்குடி 4. க. அளகாபுரி 5. நா. அளகாபுரி 6. பி. அளகாபுரி 7. ஆத்தங்குடி 8. ஆ. தெற்கூர் 9. ஆவினிப்பட்டி 10. இராங்கியம் 11. இராயவரம் 12. உலகம்பட்டி 13. ஒக்கூர் 14. கடியாபட்டி 15. கண்டரமாணிக்கம் 16. கண்டவராயன்பட்டி 17. கண்டனூர் 18. கருங்குளம் 19. கல்லல் 20. கல்லுப்பட்டி 21. காரைக்குடி 22. காளையார் மங்கலம் 23. கானாடுகாத்தான் 24. கீழச்சிவல்பட்டி 25. கீழப்பூங்குடி 26. குருவிக்கொண்டான்பட்டி 27. குழிபிறை 28. கொப்பனாபட்டி 29. கோட்டையூர் 30. கோனாபட்டு 31. சக்கந்தி

Koviloor Digital Library

32. சண்முக நாதபுரம் 33. சிறுகூடற்பட்டி 34. உ. சிறுவயல் 35. சொக்கநாதபுரம் 36. தேவகோட்டை 37. தேனிபட்டி 38. நடராசபுரம் 39. நற்சாந்துபட்டி 40. நாச்சியாபுரம் 41. நாட்டரசன்கோட்டை 42. நெற்குப்பை 43. நேமத்தான்பட்டி 44. பட்டமங்கலம் 45. பலவான்குடி 46. பள்ளத்தூர் 47. பனங்குடி 48. பனையப்பட்டி 49. பாகனேரி 50. புதுப்பட்டி 51. புதுவயல் 52. பூலாங்குறிச்சி 53. மகிபாலன்பட்டி 54. மதகுபட்டி 55. மானகிரி 56. மிதிலைப்பட்டி57. ஆ. முத்துப்பட்டணம் 58. மேலைச்சிவபுரி 59. வலையபட்டி 60..விராமதி 61. விரையாச்சிலை 62. வெற்றியூர் 63. வேகுப்பட்டி 64. வேந்தன்பட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகிறார்கள்.

மொத்தம் புள்ளிகள் 6539.

இத்திருக்கோவிலில் அமர்ந்தருள் செய்யும்·

இறைவன் : கைலாசநாதர்

இறைவி : நித்யகல்யாணி

இக்கோவிலின் உட்பிரிவினர் எழுவருக்கும் தனித்தனியே பிள்ளையார் கோவிலும் ஊருணியும் பட்டினசாமியார் பிரிவினர்க்குத் தனியே ஒரு சிவன் கோவிலும் அமைந்துள்ளன. கழனிவாசற்குடியார் ஆதிகேசவப் பெருமாள் கோவிலை இங்கு அமைத்துள்ளனர்.

இங்கு அனைத்துப் பிரிவினருக்கும் பொதுவாக ஒரு நகர விடுதியும் ஒக்கூராருக்கு ஒரு நகரவிடுதியும் அமைந்துள்ளன.

இக்கோவிலுக்கு 1939, 1958, 1985 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நடைபெற்றுள்ளன. இக்கோவிலின் நிருவாகம் 1926ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நடைபெறுகிறது. இதன்படி பரம்பரை அறங்காவலர் நால்வர். இவருள் இருவர்ஒவ்வோராண்டும் மாறிமாறிப் பொறுப்பேற்பர். ஆண்டுதோறும் மூவர் நியமன அறங்காவலர்களாக நியமிக்கப்படுகின்றனர். இந்த ஐவர் கொண்ட குழு நிருவாகத்தைக் கவனித்து வருகிறது.

கணேச பண்டிதர் இயற்றிய இளசைப் புராணம், விசுவநாத அய்யர் இயற்றிய இளையாற்றங்குடி மான்மியம் ஆகியவை இக்கோவில் தொடர்பான இலக்கியங்கள். இவ்வூரில் பழுதுபட்ட பழைய பெருமாள் கோவிலில் 24 கல்வெட்டுக்களும் ஆதிகேசவப் பெருமாள் கோவிலில் 5 கல்வெட்டுக்களும் ஆக 29 கல்வெட்டுக்கள் 1926ஆம் ஆண்டு படியெடுக்கப் பெற்றுள்ளன. இக்கல்வெட்டுக்கள் இக்கோவிலைக் கல்வாயிலாண்ட நாயனார் கோவில் என்றும் இறைவனை ஸ்ரீ கைலாசமுடைய நாயனார் என்றும் இறைவியைத் திருக்காமகோட்ட நாச்சியார் என்றும் பழுதுபட்ட பழைய பெருமாள் கோவிலை விண்ணவர் எம்பெருமான் கோவில் என்றும் குறிப்பிடுகின்றன.

இளையாத்தங்குடி கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் நடராசருக்கான வருடாபிசேக விழா, நால்வர் குருபூசை, சிவராத்திரி, ஆருத்திரா தரிசன விழா ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை பிரதோச விழாவும் வாரந்தோறும் சுக்கிரவார அம்மன் திருவீதி உலாவும் நடைபெறுகின்றன.

இக்கோவிலார் 1939ஆம் ஆண்டு முதல் ஒரு தொடக்கப் பள்ளியை நடத்தி வருகின்றனர். 1949ஆம் ஆண்டில் மகப்பேறு மருத்துவ மனையையும் குழந்தைகள் நலமையத்தையும் கட்டினர். அவை இணைந்து இப்போது அரசுமருத்துவமனையாகச் செயல்படுகின்றது.

முதற்கோவில் என்ற பழமைச் சிறப்புடன் மரபுத் திருவிழாக்களையும் விடாது நடத்திவரும் இக்கோவில் சமூகத் தொண்டும் செய்து வருவது இதன் தனிச்சிறப்பாகும்.

இனமுழக்கம்

இப்பெயரில் வார இதழொன்று 1955 முதல் 1960 வரை சென்னையிலிருந்து வெளிவந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களைப் பரப்பி வந்த இந்த இதழை நடத்தியவர் கல்லலைச் சேர்ந்த கண்ணப்பா வள்ளியப்பன். வாரம் தோறும் நாற்பதாயிரம் படிகள் விற்ற இந்த இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவர் சி.பி. சிற்றரசு. இதன் ஆசிரியர் குழுவில் நாஞ்சில். கி. மனோகரன், செயகாந்தன், மதுரை திருமாறன், ப. நெடுமாறன், டி.கே. சீனிவாசன், ஈ.வெ.கி. சம்பத், எஸ்.எஸ். தென்னரசு, திரைப்பட இயக்குநர் மகேந்திரன், கவிஞர் கா. வேழவேந்தன் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர். 1960இல் கண்ணப்பா வள்ளியப்பன் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகியதால் இந்த இதழ் நிறுத்தப்பட்டது.

உங்கள் உடல்நலம்

மதுரையிலிருந்து இப்பெயரில் உடல்நல அறிவியல் மாத இதழ் ஒன்று 1991 செப்டம்பர் முதல் 1996 முடிய வெளிவந்தது. நெற்குப்பையைச் சேர்ந்த டாக்டர் கரு. சுந்தரம் இதன் ஆசிரியரும் வெளியீட்டாளரும் ஆவார். டெம்மி 1 X 8 அளவில் ஒவ்வோரிதழும் 80 பக்கங்கள் கொண்டு வெளிவந்தது. தொழில்முறை மருத்துவர்கள் பலர் அடங்கிய ஆலோசனைக் குழுவின் துணையுடன்

Koviloor Digital Library

வெளிவந்த இவ்விதழ் பயனுள்ள கட்டுரைகள் பலவற்றைத் தாங்கி வந்தது. தொடக்கத்தில் ஐந்து ரூபாயாக இருந்த விலை 95இல் ஒன்பது ரூபாயாக உயர்ந்தது. மருத்துவம் உடல்நலம் தொடர்பாக மக்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் 'நீங்கள் கேட்டவை' என்னும் பகுதி ஒவ்வொரு இதழிலும் தவறாமல் இடம்பெற்றது. மருந்துகள் பற்றிய குறிப்புக்கள், தனிப்பட்ட நோய் பற்றிய விளக்கக் கட்டுரைகள், மிகுதியான விளக்கப் படங்கள் ஆகியவை இடம்பெற்றமை இவ்விதழின் தனிச்சிறப்பாகும். ''அன்னைத் தமிழிலும் அறிவியல் செய்திகளைச் சுவைபடக் கூறமுடியும்; கூறவேண்டும்'' என்ற முனைப்புடன் தொடங்கப் பட்ட இவ்விதழ் அப்பணியைச் சிறப்பாகவே செய்துவந்தது.

உணவு வகைகள்

காலையில் பலகாரம்; மதியம் சாப்பாடு; இரவு பலகாரம் அல்லது சாப்பாடு என்பது நகரத்தார் குடும்பங்களில் தொன்றுதொட்டு இருந்துவரும் உணவுப்பழக்கம். காலை எழுந்தவுடன் ஒருமுறை, காலைப்பலகாரத்தோடு ஒருமுறை, மாலையில் நொறுக்குத் தீனியாகிய சிற்றுண்டியுடன் அல்லது தனியாக ஒருமுறை என மூன்று முறைகள் காப்பி அருந்துவது அண்மைக் காலமாக நகரத்தார் குடும்பங்களில் நாகரிகக் கலப்பால் வந்து சேர்ந்திருக்கும் புதுப்பழக்கம்.

மற்றபடி காலைப்பலகாரம் என்பது இட்டிலி அல்லது தோசை என ஏதேனும் ஒரு சிற்றுண்டியாக அமையும். மதியச் சாப்பாடு என்பது புழுங்கலரிசிச் சோறு, ஒரு குழம்பு, இரண்டு அல்லது மூன்று தொடுகறிகள், தயிர் அல்லது மோர் என அமையும். சில வீடுகளில் நெய்ச்சோறு குழம்புக்கு முன்னதாக அமையும். தொடுகறிகள் நகரத்தார் பேச்சு வழக்கில் 'வெஞ்சனம்' எனப்படும்.

வீட்டிற்கு விருந்தினர் வந்தாலோ, பொங்கல், புத்தாண்டு போன்ற சிறப்பு நாட்களிலோ, வீட்டில் திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிக்குரிய விருந்து நடந்தாலோ, இவற்றில் சிறப்பு வகைகள் சேர்த்துப் பரிமாறப்படும். காலைப் பலகாரத்திற்கு மூன்று அல்லது நான்கு சிற்றுண்டி வகைகள் பரிமாறப்படும். மதியம் பருப்பு, நெய், குழம்பில் இரண்டு மூன்று வகை, தயிர் அல்லது மோர், ஐந்து அல்லது ஆறு வெஞ்சனத்தோடு விருந்து அமையும். தயிர்ச்சோற்றிற்கு முன் 'சூப்'பும், இறுதியில் பாயசமும் குடிப்பதற்கு வழங்கப்படும். மாலைச் சிற்றுண்டியாக இரண்டு அல்லது மூன்று சிற்றுண்டிகள் வழங்கப்படும்.

நகரத்தார் குடும்பங்களில் மட்டுமே சமைக்கப்படுகின்ற சில உணவு வகைகள் உள. அவற்றுள் சில, நகரத்தாரோடு பழகிய பிற சமூகத்தினராலும் இப்போது சமைக்கப்படலாம். ஆயினும் அவை நகரத்தார் சமூகத்தின் சிறப்பு உணவு வகை என்பதில் ஐயமில்லை. அத்தகு சிறப்பு உணவு வகைகளின் அகர வரிசைப்படுத்தப்பட்ட பட்டியலும், அவை பற்றிய சிறு குறிப்புக்களும் வருமாறு. (குறிப்புக்கள் முழுமையான சமையல் குறிப்புக்கள் அல்ல)

இளங்குழம்பு : திருமணம் போன்ற விருந்துகளில், 'ரசத்'திற்குப் பதிலாகப் பரிமாறப்படுவது. பீன்சு, அவரைக்காய், பாசிப்பயறு போன்ற காய்கறிகளில் ஒன்றைப் பயன்படுத்தி, சாம்பார் போல ஆனால் பருப்பு நிறைய இல்லாமல், மிகவும் தண்ணீர் போலச் சமைக்கப்படும் குழம்பு. இதனாலேயே இதற்குத் 'தண்ணிக் குழம்பு' என்றும் ஒருபெயர் வழங்குகிறது.

உக்காரை : திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் செய்யப்படும் இனிப்புச் சிற்றுண்டி. பச்சரிசியை இயந்திரத்தில் ரவைபோல் உடைத்துக் கொண்டு தண்ணீர் தெளித்து ஊறவைக்கவேண்டும். பாசிப்பருப்பை ஊறவைத்து இரண்டையும் ஆவியில் வேகவைத்து எடுத்துக் கொள்ளவேண்டும். காய்ச்சிய வெல்லப்பாகில் இவற்றைப் போட்டு ஏலக்காய்த்தூள், நெய் சேர்த்து உதிரியாக வரும்வரை கிளறவேண்டும்.

கந்தரப்பம் : தெற்கு வட்டகையில் பெருவழக்காகச் சிறப்பு நிகழ்ச்சிகளில் செய்யப்படும் சிற்றுண்டி. புழுங்கலரிசி, உளுந்து, வெந்தயம் இவற்றை நன்கு ஊறவைத்து வெல்லம் சேர்த்து மாவாக ஆட்டிக் கொள்ளவேண்டும். தேங்காய்த் துருவலையும் ஏலக்காய்த் தூளையும் சேர்த்துக் கரைத்துக் கொண்டு பணியாரம் போல் எண்ணெயில் ஊற்றி வேகவைத்து எடுக்கவேண்டும்.

கருப்பட்டிப் பணியாரம் : நகரத்தார் வீடுகளில் நடைபெறும் படைப்புக்களிலும், பிள்ளையார் நோன்பிலும் சமைக்கப்படும் சிறப்பு இனிப்புச் சிற்றுண்டி. பச்சரிசியை இடித்துச் சலித்து மா தயாரித்துக் கொள்வர். பிறகு கருப்பட்டி, வெல்லம் இவற்றைக் கலந்து காய்ச்சிய பாகினை அந்த மாவில் ஊற்றிக் கெட்டியாகப் பிசைந்து கொள்வர். பின்னர் அதனை உதிர்த்து விட்டு, தண்ணீர் ஊற்றிக் கரைத்துக்கொள்வர். எண்ணெய்ச் சட்டியில் இந்த மாவைக் கரண்டியால் பணியாரமாக ஊற்றி வேகவைத்து எடுப்பர். படைப்பு வீடுகளில் இது படைப்புப் பணியாரம் எனப் பெயர் பெறும்.

Koviloor Digital Library

கல்கண்டு வடை : திருமணம் போன்ற விருந்துகளில் பரிமாறப்படும் இனிப்புச் சிற்றுண்டி. உளுந்தை ஊறவைத்து, தண்ணீரை நன்றாக வடித்து விடவேண்டும். ஊறிய உளுந்தில் கற்கண்டைச் சேர்த்து ஆட்டுரலில் மாவாக ஆட்டிக் கொள்ளவேண்டும். இந்த மாவை வடையாகத் தட்டி, எண்ணெயில் வேகவைத்து எடுத்தால் கல்கண்டு வடை பரிமாறத் தயாராகிவிடும்.

கவணரிசி : கவணரிசி என்றே ஓர் அரிசி விற்கிறது. அதனை வாங்கி ஊறவைத்து, தண்ணீரை வடித்துவிட்டு, அளவாகத் தண்ணீர் வைத்து அவித்துக்கொள்வர். அவிந்த கவணரிசியில், சீனி, தேங்காய்ப்பூ இவற்றைக் கலந்து, திருமணம் போன்ற விருந்தில் ஓர் இனிப்புச் சிற்றுண்டியாக இதனைப் பரிமாறுவர்.

கும்மாயம் : திருமணம் போன்ற விருந்துகளில், மாலைப்பலகாரத்துக்குப் பரிமாறப்படும் ஓர் இனிப்புச் சிற்றுண்டி. உளுந்தை வெதுப்பி அதனோடு பச்சரிசி, பாசிப்பருப்பு இவற்றைச் சேர்த்து இயந்திரத்தில் அரைத்து மாவாக்கிக் கொள்வர். அந்த மாவில் வெல்லத்தைச் சேர்த்துக் கரைத்து, மாவை அடுப்பில் வைத்துக் கிண்டி, கூழ்போல வந்த பிறகு பரிமாறுவர்.

கெட்டிக்குழம்பு : இது இளங்குழம்பிற்கு நேர் எதிரானது. ஏறத்தாழத் திடப்பொருள் போலவே தோற்றம் தரும் குழம்பு. மசாலை சேர்த்து, புளிக்குழம்புக்குரிய பக்குவத்தில் தயாரிக்கப்படும். இதுவும் திருமணம் போன்ற விருந்துகளிலேயே பரிமாறப்படுகிறது. 'மீல்மேக்கர்', தக்காளி, மிளகு, பக்கோடா, கத்தரிக்காய் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றைக் காயாகப் போட்டுக் கெட்டிக்குழம்பு வைப்பது நகரத்தார் விருந்துகளில் மரபு.

சீடைக்காய் : இயல்பான நாட்களில் மாலை வேளையில் குடும்பத்தினர் சாப்பிடும் நொறுக்குத் தீனிச் சிற்றுண்டி வகைகளில் ஒன்று. புழுங்கலரிசி மாவில், பொட்டுக்கடலை மாவைச் சேர்த்து, தேங்காய்ப்பூவும் போட்டு, தண்ணீர் ஊற்றிப் பிசைந்து, அந்த மாவைச் சிறுசிறு உருண்டைகளாக உருட்டி, எண்ணெயில் வேகவைத்து எடுப்பர். ஒருமுறை தயாரித்து, பாத்திரங்களில் வைத்துக் கொண்டால் மாதக் கணக்கில், நாள்தோறும் சிறிது சிறிதாக எடுத்துச் சாப்பிடலாம்.

சீப்புச் சீடைக்காய் : இதுவும் நொறுக்குத் தீனி வகையைச் சேர்ந்ததே. ஆனால் சிறிது கலை நயமும், கூடுதல் சுவையும் உடையது. பச்சிரிசியை இடித்து வறுத்து, அதனுடன் பொட்டுக்கடலை மாவைச் சேர்த்து, அதில் தேங்காய்ப் பால் ஊற்றி மாவாகப் பிசைந்து கொள்வர். சீப்புச் சீடைக்கட்டை என்றே ஒன்று செட்டிநாட்டுப் பகுதியில் விற்கிறது. அதில், மாவை உருண்டையாக உருட்டி வைத்து, நீள நீளமாகத் தாளில் பிழிந்து விடுவர். ஒரு பக்கம் சமமாகவும், மறுபக்கம் சீப்புப் போல மூன்று கோடுகள் உடையதாகவும் அந்த நீள மா அமையும். அதனைக் குறித்த அளவுள்ள சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்வர். ஒவ்வொரு துண்டையும், சீப்புப் பகுதி வெளியில் இருக்கும் வண்ணம், மோதிர வளையமாக இணைத்து இரு நுனிகளையும் ஒட்டுவர். இவ்வாறு ஒட்டியதை எண்ணெயில் வேகவைத்து எடுத்து வைத்துக் கொண்டால் பல நாட்கள் மாலைச் சிற்றுண்டிக்கு உதவும்.

சும்மா குழம்பு : திடீர் விருந்தினர் வரும்போது, நகரத்தார் வீடுகளில் உடனடியாகத் தயாரிக்கப்படும் ஒரு குழம்பு. இதில் காய் எதுவும் போடப்படாத காரணத்தால் இதற்குச் 'சும்மா குழம்பு' அல்லது 'வெறும்குழம்பு' என்று பெயர். ஏறத்தாழ இளங்குழம்பு தயாரிக்கப் படும் பக்குவம்தான் இதற்கும். ஆனால் காய் எதுவும் போடப்படாததோடு, தாளிக்கும்போது நிறைய வெங்காயமும், வெந்தயமும் போடப்படுவது இதன் தனிச்சிறப்பு.

திரட்டுப்பால் : நகரத்தார் குடும்பங்களில் 'பிள்ளையார் நோன்பு' அன்று பரிமாறப்படும் ஓர் இனிப்பு இது. பாலைச் சுண்டக்காய்ச்சி, வெல்லத்தை இடித்து அதில் போட்டு, பாசிப்பருப்பு மாவையும் சேர்த்துத் தயாரிக்கப்படும் இனிப்பு.

தேன்குழல் : இது நொறுக்குத்தீனிச் சிற்றுண்டி வகையைச் சேர்ந்தது. பச்சரிசி, உளுந்து இவற்றைத் தனித்தனியே வெதுப்பி, அவற்றைச் சேர்த்து இயந்திரத்தில் அரைத்து, அந்த மாவில் தண்ணீர் ஊற்றிப் பிசைந்து கொள்வர். பிறகு தேன்குழல் கட்டையில் அந்த மாவை உருண்டையாக உருட்டி வைத்து, எண்ணெய்ச் சட்டியில், வட்ட வடிவமாக, முறுக்குப் போலப் பிழிவர். அது வெந்த பிறகு எடுத்துப் பாத்திரங்களில் வைத்துக் கொண்டால் மாதக்கணக்கில் மாலைச் சிற்றுண்டியாகும்.

இன்று 'முட்டை ஆம்லெட்'டில் அரை வேக்காடு (Half-boil) உணவாகப் பயன்படுவது போலவே, தேன்குழலிலும், அரைவேக்காட்டு நிலையில், வெந்தும் வேகாமல் எடுக்கப்படும் தேன்குழலுக்குப் பச்சைத் தேன்குழல் என்று பெயர். இதனை வேகவைத்த தேன்குழலைப் போல நாட்கணக்கில் பேணி வைத்துக்கொள்ள இயலாது. ஆனால் உடனே சாப்பிடுவதற்குத் தேன்குழலைவிடச் சுவையான சிற்றுண்டியாக இது அமையும்.

Koviloor Digital Library

எனவே, திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளின் விருந்தில், மாலைப் பலகாரத்தில் ஒரு சிற்றுண்டியாக, நகரத்தார் விருந்துகளில், பச்சைத் தேன்குழல் பரிமாறப்படுவது பழக்கமாக இருக்கிறது.

பாசிப்பயத்தம் பணியாரம் : தெற்கு வட்டகை, மேல வட்டகை, மேலப்பத்தூர்ப் பகுதிகளில், திருமணம் போன்ற சிறப்பு விருந்துகளில் பரிமாறப்படும் ஓர் இனிப்புச் சிற்றுண்டி.

பச்சரிசியை ஊறவைத்து நிழலில் காயவைத்து உரலில் இடித்து மாவாக்கி வெல்லப்பாகை ஊற்றிப் பிசைந்து கொள்ள வேண்டும். வேகவைத்த பாசிப்பருப்பை அதிகம் தண்ணீரில்லாமல் பிசைந்த மாவில் ஊற்றி ஓரளவு கெட்டியாகக் கரைத்துக் கொண்டு பணியாரம்போல் ஊற்றி எண்ணெயில் வேகவைத்து எடுக்கவேண்டும்.

பால் பணியாரம் : இதுவும் விருந்துகளில் பரிமாறப்படும் இனிப்புச் சிற்றுண்டியே. பச்சரிசி, உளுந்து சேர்த்து, ஆட்டுரலில் மாவாக ஆட்டி, சிறுசிறு உருண்டைகளாக எண்ணெயில் வேக வைத்து எடுத்துக் கொள்வர். பாலில் சீனி ஏலக்காய் சேர்த்து, அதில் வெந்த பணியாரங்களை ஊற வைத்து, நன்கு ஊறியதும் பரிமாறுவர்.

புளிக்குழம்பு : இயல்பாக நகரத்தார் குடும்பங்களில் மதியச் சாப்பாட்டில் பயன்படும் குழம்பு. சாம்பாருக்குப் பருப்பு மிகுதியாக வேண்டும். இதற்கு அவ்வளவு வேண்டாம். சிறிதளவு வேகவைத்த பருப்புடன், உப்பு, புளி, வெங்காயம், கத்தரிக்காய், வெண்டைக்காய் போன்ற காய் வகைகளில் ஏதேனும் ஒன்று சேர்த்து, கெட்டியாக வைக்கப்படுவதே புளிக்குழம்பு. வாழைக்காய், கருணைக்கிழங்கு இவற்றைப் பயன்படுத்திப் புளிக்குழம்பு வைக்கும் பொழுது பருப்பே சேர்க்காமல் தயாரிப்பர்.

மனகோலம் : பச்சரிசி, உளுந்தம்பருப்பு, பாசிப்பருப்பு, கடலைப்பருப்பு முதலியவற்றைச் சேர்த்து இயந்திரத்தில் அரைத்து மாவாக்கிக் கொள்வர். அதைத் தண்ணீர் ஊற்றிப் பிசைந்து, மனகோலக் கட்டையில் உருண்டையாக உருட்டி வைத்து, எண்ணெயில் வட்டமாக முறுக்குப் போலப் பிழிந்து வேகவைத்து எடுத்துக் கொள்வர். வெந்த முறுக்குகளை உதிர்த்து விட்டு, அவற்றின் மீது, காய்ச்சிய வெல்லப்பாகை ஊற்றி, பொட்டுக்கடலை, பல்பல்லாக நறுக்கப்பட்ட தேங்காய் இவற்றையும் சேர்த்துப் பிசறி வைத்தால், மாதக்கணக்கில் நாள்தோறும் மாலையில் நொறுக்குத் தீனியாகப் பயன்படுத்தக் கூடிய இனிப்புச் சிற்றுண்டி தயார்.

வெள்ளைப் பணியாரம் : பச்சரிசி, உளுந்து இவற்றைச் சேர்த்து ஆட்டுரலில் மாவாக ஆட்டி எடுத்துக் கொள்வர். பிறகு எண்ணெய்ச் சட்டியில் கரண்டியால் அப்பம்போல ஊற்றி வேகவைத்து எடுப்பர். இது நகரத்தார் வீடுகளில் சிறப்பு விருந்தில் பரிமாறப்படும் ஒரு சிற்றுண்டி.

இங்கே குறிப்பிடப்பட்டவை அனைத்தும் நகரத்தாரின் தனிச்சிறப்பு உணவு வகைகளே எனினும், வெள்ளைப்பணியாரம், அவை அனைத்தையும் விட, நகரத்தார் சிறப்புச் சிற்றுண்டியாகக் கருதப்படுகிறது என்றால் மிகையாகாது. புதிதாகத் திருமணமான இளைஞன், மாமியார் வீடு சென்று திரும்பினால், அவனது தாயார் கேட்கும் கேள்வியே "உன் மாமியார் வீட்டில் வெள்ளைப்பணியாரம் சுட்டார்களா?" என்பதுதான்.

ஆகையால் வீட்டுக்கு வந்திருக்கும் ஒருவரை, இன்றியமையாத விருந்தினராகக் கருதும், நகரத்தார் குடும்பத்தினர், கட்டாயமாக வெள்ளைப்பணியாரம் சுட்டுப் பரிமாறுவது பழக்கம் எனலாம்.

நகரத்தார் சிறப்பு உணவு வகைகளாக இங்கு விளக்கப்பட்டிருக்கும் அனைத்தின் பெயர்களும் தனித்தமிழிலேயே அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

உபதேசம் கேட்டல்

நகரத்தார் பண்பாட்டில் அவர்கள் சமய வழிபாட்டிற்குக் கொடுத்திருந்த முதன்மையைக் காட்டுவது 'உபதேசம் கேட்டல்' ஆகும். நகரத்தார்களில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் உபதேசம் கேட்கவேண்டும் என்பது கட்டாய வழக்காக இருந்தது. இப்பொழுதும் அறுபதாண்டு நிறைவு மணிவிழாக் கொண்டாடும் முன்னராவது உபதேசம் கேட்பது என்ற நடைமுறை வழக்கம் உண்டு. ஆனால் பண்டைக்காலத்தில் நகரத்தார்கள் இளமையிலேயே உபதேசம் கேட்டு நாள்தோறும் அனுஷ்டானம் செய்துவந்தார்கள். காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தார் திருவிழாவில் முதல்நாள் பட்டினத்தார் பிறப்பு, இரண்டாம் நாள் உபதேசம் கேட்டல், மூன்றாம் நாள் கல்யாணம் என்ற வரிசையில் விழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. திருமணத்திற்கு முன்பே உபதேசம் கேட்பது நமது வழக்கமாக இருந்தது என்பதை இது காட்டுகிறது.

உபதேசங் கேட்டலின் வரலாறு பற்றி நகரத்தார் சமூகத்தில் பழைய செய்தி ஒன்று உண்டு. காவிரிப்பூம்பட்டினத்தில் வந்து குடியேறிய நகரத்தார்கள் தமது தொன்மை நெறியாகிய சிவதருமங்களை இடையில் சிலகாலம் கைவிட்டனர். (கோவலனைச் சாவக நோன்பி

Koviloor Digital Library

எனச் சமண சமயத்தவராகச் சிலப்பதிகாரம் கூறுவது நோக்கத்தக்கது) அதனால் செல்வமிழந்து துயருற்றனர். ஒரு சமயம் இவர்கள் சிதம்பரம் சென்றிருந்தபொழுது அங்கே உணவின்றித் தவித்தனர். அவ்வேளையில் அகோர சிவாச்சாரியார் இவர்களுக்குத் தமது திருமடத்தில் அன்னமிட்டு உபசரித்தார். சிவதருமங்களைக் கைவிட்டதே அவர்களது துயருக்குக் காரணம் என்று கூறினார். அவர்களும் ஒப்புக்கொண்டு அவரிடம் சிவதீட்சை பெற்று ஊர்திரும்பிச் சிவனருளால் மீண்டும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர். அதுமுதல் அவர்கள் சிதம்பரம் அகோர சிவத்தையே தமது குலகுருவாகக் கொண்டு உபதேசம் பெற்றனர். இச்செய்தி இளையாத்தங்குடி மான்மியத்தில் காணப்படுகிறது.

கி.பி. 585இல் பூவந்திச் சோழன் நகரத்தார் குலப் பெண்களைச் சிறையெடுத்ததால் எண்ணாயிரம் குடும்பத்தினரும் தங்கள் ஆண் பிள்ளைகளை மட்டும் குலகுருவிடம் ஒப்படைத்துவிட்டு உயிர்நீத்தனர். குருநாதர் அவர்களை ஆத்மநாதசாஸ்திரி என்பவர் மூலம் கல்வி கேள்விகளில் வல்லவராக்கிச் சிறப்புற வளர்த்து ஆதரித்தார். கி.பி. 594இல் சோழ மன்னன் தனது மகன் ராஜபூஷணனுக்கு முடிசூட்ட விரும்பி வழக்கம்போல நகரத்தார்களை அழைத்து முடிசூட்டுமாறு வேண்டினான். அதற்கு அவர்கள் பிரம்மச்சாரிகளான நாங்கள் எவ்வாறு முடிசூட்டுவது? எங்கள் குலத்தில் பெண்கள் இல்லை எனக் கூற அரசன் குலகுருவாகிய அகோர சிவாசாரியாரிடம் கலந்தாலோசித்து வேளாளர் பெண்களை நகரத்தாருக்கு மணமுடித்து வைக்க ஏற்பாடு செய்தான். 'எங்கள் குருமார்களே எங்கள் பெண்களுக்குக் குருவாக இருப்பதானால் சம்மதம்' என்று வேளாளர் கூற அனைவரும் சம்மதித்துத் திருமணம் நடைபெற்றது. பின்னர் நகரத்தார்கள் பாண்டிய நாட்டுக்குக் குடிபெயர்ந்தபோது ஆண்கள் குரு அகோர சிவாசாரியாரையும் பெண்கள் குரு நிரம்ப அழகிய தேசிகரையும் உடன் அழைத்துக்கொண்டு கி.பி. 707இல் பாண்டியநாடு வந்தடைந்தனர்.

அகோர சிவாசாரியார் தமக்கு வயதாகி விட்டபடியால் தாம் சிதம்பரத்தில் சிவதவம் இயற்ற விரும்புவதாகவும் தமது நண்பரும் பாண்டிய மன்னனின் குருவுமாகிய ஈசான சிவாசாரியாரிடம் தீட்சை பெற்றுக் கொள்ளுமாறும் கூறித் திருமுகம் அளித்துவிட்டு சிதம்பரம் சென்றுவிட்டார். எனவே பாண்டிய மன்னன் ஈசான சிவாசாரியாருக்குக் கலாமடம் முதலிய ஐந்து கிராமங்களையும் நிரம்ப அழகிய தேசிகருக்குத் துலாவூர் முதலிய கிராமங்களையும் அளித்து மடம் ஏற்படுத்திக் கொடுத்தான். அதுமுதல் நகரத்தார் ஆண்களுக்கு நெற்குப்பை அருகிலுள்ள கலாமடமும் பெண்களுக்குக் குன்றக்குடிக்கு அருகிலுள்ள துலாவூரும் குருபீடங்களாக அமைந்தன.

ஒரு சமயம் காசியாத்திரை சென்ற கலாமடம் சுவாமிகள் நெடுநாட்கள் ஆகியும் திரும்பி வாராமையால் நகரத்தார்களில் சிலர் திருப்புனல் வாயிலிலிருந்த இராமநாதசுவாமி என்பவரிடம் உபதேசம் பெற்றனர். அதன்பிறகு காசி சென்றிருந்த சுவாமிகள் திரும்பி வந்துவிடவே நகரத்தார்கள் அவரிடம் சென்று நடந்ததைக் கூறினர். அதைக்கேட்ட சுவாமிகளும் 'உங்களில் எத்தனைபேர் அவரிடத்தில் உபதேசம் கேட்டீர்களோ அத்தனை பேரும் வமிச பரம்பரையாக அவரிடமே உபதேசம் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று கூறி அனுமதியளித்து கி.பி. 1566இல் இராமநாத சுவாமிக்குப் பாதரக்குடியில் மடாலயமும் மானியமும் விட்டுக் கொடுத்தார். 1975 முதல் கலாமடம், பாதரக்குடி இரண்டும் ஒன்றுபடுத்தப்பட்டு ஆண்கள் குருபீடம் பாதரக்குடியிலும், பெண்கள் குருபீடம் துலாவூரிலும் இயங்கிவருகின்றன. (பார்க்க : துலாவூர், பாதரக்குடி)

சமயம், விசேஷம், நிருவாணம், ஆச்சாரிய அபிஷேகம் என்னும் நான்குவகைத் தீட்சைகளில் தொடக்கநிலையாகிய சமய தீட்சையே உபதேசம் ஆகும். குரு திருவைந்தெழுத்தாகிய மூல மந்திரத்தைச் சீடனுக்கு உபதேசிப்பார். அது முதல் நாள்தோறும் காலை மாலை இருவேளையும் அனுட்டானம் செய்து திருநீறு பூசவேண்டும்.

உபதேசம் கேட்டல் நகரத்தார் இனத்தில் பெருவிழாவாகவும் இல்லத் திருவிழாவாகவும் கொண்டாடப்பட்டது. 'உபதேசப் புதுமை' என்றே அது இல்லத்தில் மங்கல விழாவாகக் கொண்டாடப்பட்டுப் பங்காளிகள் அதற்குப் பணம் எழுதிக் கூடுவதும் நடைபெற்றது.

ஒவ்வொரு நகரத்தார் ஊரிலும் குருவை வரவழைத்து மங்கல இசை வாணவேடிக்கை களுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்று ஊர்கூடி உபதேசம் கேட்பதைத் திருவிழாவாகவே நடத்தினர். 'தனவைசிய ஊழியன்' வார இதழில் 30–6–1922 மற்றும் 7–7–1922இல் வெளிவந்த இதழ்களில் காரைக்குடியில் நடைபெற்ற உபதேசம் கேட்டல் விழா பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. தேவகோட்டை நகரச் சிவன் கோவிலில் மகா மந்திரோபதேசக் கொட்டகை என்று ஒரு பெரிய மண்டபம் இருக்கிறது. அது பாதரக்குடி சுவாமிகளை அழைத்துவந்து உபதேசம் கேட்பதற்காகக் கட்டப்பட்டதாம். கீழப்பூங்குடி நகரத்தார்கள் தங்கள் ஊரில் ஏற்பாடு செய்திருந்த உபதேசம் கேட்டல் விழாவில் உபதேசம் கேட்டுவிட்டுப்

Koviloor Digital Library

பர்மா செல்லவேண்டிய நகரத்தார்களுக்காக, பர்மா செல்ல வேண்டிய கப்பலையே கோர்ட் தடையுத்தரவு பெற்று இரண்டு நாட்கள் நிறுத்தி வைத்தனர் என்ற செய்தி 'நகரத்தாரும் உபதேசமும்' என்ற நூலில் காணப்படுகின்றது.

அயல்நாடு செல்லும் நகரத்தார்களுக்குச் சம்பளச்சீட்டு எழுதும்பொழுது ''உபதேச முத்தி வைத்தால் முதலாளி செலவில் வந்து போகிறது'' என்று எழுதும் வழக்கம் உண்டு.

நகரத்தார் சைவத்தையும் தமிழையும் கண்ணாகப் போற்றி வளர்ப்பவர்கள். அவர்கள் வாழ்க்கையில் உபதேசம் கேட்டல் இன்றியமையாத தனிச்சிறப்புப் பெற்றுள்ளது.

உமையாள் இராமநாதன், டாக்டர். (4-10-1928)

வைரவன் கோவில்
கண்டனூர்
கல்வியாளர்

வள்ளல் அழகப்பர் – வள்ளியம்மை ஆச்சியின் ஒரே மகள். 1943இல் இவரது அத்தை மகன் வயி. இராமநாதன் செட்டியாருக்கும் இவருக்கும் நடைபெற்ற திருமணம் செட்டிநாடே வியந்துபோற்றும் வகையில் நடைபெற்றது.

அழகப்பர் தாம் உடல்நலமற்று இருந்த காலத்தில் தமது கல்விப் பணிகளைத் தொடர்ந்து செய்ய இவருக்குப் பயிற்சியளித்தார். அப்பொழுதே அழகப்ப செட்டியார் கல்வி அறக்குழுவில் உறுப்பினராக இருந்த இவர் அழகப்பர், க.வெசித. வெங்கடாசலம் செட்டியார் ஆகியோருக்குப்பின் அதன் செயலராகி அழகப்பா கல்வி நிறுவனங்களைப் பேணி வளர்த்தார். அழகப்பர் நிறுவிய காரைக்குடி அசோகா அறக்கட்டளை என்னும் அமைப்பு சென்னையில் எம்.சிடி. சிதம்பரம் செட்டியார் ஆயத்தப்பள்ளியை நடத்தி வந்தது. இவர் அதன் அறங்காவலராகப் பொறுப்பேற்றபிறகு 1982இல் சென்னையில் அழகப்பா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியையும் தொடங்கி இரண்டையும் சிறப்பாக நடத்தி வருகிறார்.

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர், சென்னை புரசைவாக்கம் கங்காதீசுவரர் ஆலய நிர்வாக அறங்காவலர், மாநில சமூக நலக்குழு உறுப்பினர், பரிசுக்கான திரைப்படங்களைத் தேர்வு செய்யும் குழு உறுப்பினர் ஆகிய பதவிகள், இவரது பொதுத்தொண்டைப் பாராட்டித் தமிழக அரசால் வழங்கப்பெற்றன. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தனியார் கல்லூரிகளின் நிருவாகக் கழகத்தின் தலைவராகப் பதினைந்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இப்போது அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் ஆயுள் உறுப்பினராக உள்ளார். 1994இல் தேசிய ஒற்றுமை தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்குப் பணிபுரிந்தமைக்காக இந்திய அரசால் வழங்கப்பட்ட 'இந்திரா பிரியதர்சினி விருதும்' 1995இல் இவரது கல்விப் பணிக்காக அழகப்பா பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட கௌரவ டாக்டர் பட்டமும் இவரது சமூக, கல்விப் பணிகளுக்கும் கிடைத்த சிறப்புக்களாகும்.

உலகம்பட்டி

மேலவட்டகையைச் சார்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர், பொன்னமராவதி வழியாக 54 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு கோவில்களைச் சேர்ந்த 201 புள்ளிகள் இவ்வூரில் வாழ்கின்றனர். இது எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

உலகநாயகி அம்மன் உலகநாத சுவாமி கோவில் நகரச் சிவன் கோவிலாகும். இக்கோவிலுக்கு முதலில் 1929 ஜனவரியிலும் பின்னர் 30–8–59, 30–8–76, 28–1–91 ஆகிய நாட்களிலும் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றன. சேவுகானந்த ஞானியார் பூசை செய்த ஞானியார் மடம் தண்டாயுதபாணி கோவில் நூறு ஆண்டுப் பழமைச் சிறப்புடையது.

புது ஊருணிக்கரையில் அமைந்துள்ள சித்திவிநாயகர் கோவில் பெரி. இராம. நாகப்ப செட்டியார், தெநா.நா. லெட்சுமணன் செட்டியார் குடும்பத்தினரால் திருப்பணி செய்யப்பெற்றது. இளையாத்தங்குடி பட்டினசாமிப் பிரிவைச் சேர்ந்த பழ. இராமநாதன் செட்டியார் குடும்பத்தினர் தம்பையா கோவில் திருப்பணி செய்துள்ளனர். புதுஊருணியின் மேற்கு, தெற்குப் பகுதிகள் 1940இல் கும.தே. ஏகம்மை ஆச்சியாலும் கீழ்புறம் கல்கட்டு தருமம் நா.சுப. இராம. இராமாயி ஆச்சியாலும் 1955இல் வடபுறம் கா.கி. வள்ளியம்மை ஆச்சியாலும் கட்டப்பெற்றன. 1926இல் கி.வே. வேலாயுதஞ் செட்டியார் சிவன்கோவில் ஊருணியையும் கரு.பழ. கருப்பஞ்செட்டியார் தம்பையா கோவில் சேங்கை என்னும் குடிநீர் ஊருணியையும் வெட்டுவித்தனர். ஞானியார் மடம் ஊருணியும் இவரது தருமமேயாகும்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் மடம் 1901இல் தோற்றுவிக்கப்பெற்றது. இவ்வூர் நந்தவனம் 1924ஆம் ஆண்டு பழ.சிவ. சிவராமன் செட்டியாரால் ஏற்படுத்தப்பெற்றது. சிவன் கோவில் அக்கிரகாரம் 1929இல் கருநா. நாகப்ப

Koviloor Digital Library

செட்டியாரால் கட்டப்பெற்றது. இவ்வூரில் கல்யாணமண்டபம் கட்டுவதற்காக நகரப் பொதுவுக்குப் பழகரு. குடும்பத்தினர் இடம் வாங்கி நன்கொடையாக அளித்துள்ளனர். இவ்வூரில் இலட்சுமணன் செட்டியார் துறவு பூண்டு, முதலில் ஞானியார் மடத்தில் தங்கியிருந்து, பின்னர், இலட்சுமண சுவாமிகள் தனியே கட்டிய மடத்திற்கு 'சைவ சித்தாந்த நிலையம்' என்று பெயர்.

இவ்வூர்த் தொடக்கப்பள்ளி இளையாத்தங்குடி பட்டினசாமிப் பிரிவைச் சேர்ந்த கருபழ. சுப்பையா செட்டியார், கருநா. கருப்பஞ் செட்டியார், கருமு. பழநியப்ப செட்டியார் ஆகியோரால் **19–8–1958**இல் தொடங்கப் பெற்றுப் பின்னர் அரசினரிடம் அளிக்கப் பெற்றது. அரசு உயர்நிலைப்பள்ளிக்கு நா.கரு. பழநியப்ப செட்டியார் இடம் நன்கொடை அளித்துள்ளார்.

சொர்ணம் சிவலிங்கம் நிலையம் என்னும் மருத்துவமனை **1964**இல் நா.லெ. சிவலிங்கம் செட்டியாரால் நன்கொடையாக வழங்கப் பெற்றது. இளையாத்தங்குடி கிண்கிணிக் கூருடையார் பிரிவினரான சி.லெ. நாராயணன் செட்டியார், இதே பிரிவில் மு.மு. நடராசன் செட்டியார், மாத்தூர் கண்ணூர்ப்பிரிவினரான சு.பெரி. பெரியணன் செட்டியார் ஆகியோர் வீடுகளில் 8நாள் இராமாயணம் படிக்கப் படுகின்றது. ஞானியார் மடத்தில் நடைபெறும் தைப்பூசத் திருவிழா இவ்வூரின் பெரிய திருவிழா ஆகும். வேற்பூசையும் பொது விருந்தும் சிறப்பாக நடைபெறும். நேமங்கோவில் பங்காளிகளான நெற்குப்பை, உலகம்பட்டி ஊர் நகரத்தார்கள் 3 வருடங்கட்கு ஒருமுறை ஆடி மாதத்தில் மாங்கல்யகாரி படைப்பு படைத்து வருகின்றனர். சி.லெ. நாராயணன்செட்டியார் குடும்பத்தினர் தை மாதத்தில் லெட்சுமணசாமி குருபூசை நடத்தி வருகின்றனர். செட்டிநாட்டின் எல்லையில் இவ்வூர் அமைந்துள்ளதால் ஊருக்குக் கடைசி உலகம்பட்டி என்னும் பழமொழி வழங்கி வருகின்றது.

உறவுமுறைப் பெயர்கள்

ஒரு சமுதாயத்தில் உறவுமுறைப் பெயர்கள் வழங்கும் முறையை வைத்தே அச்சமுதாயத்தின் பண்பாடு குறித்துப் புரிந்து கொள்ளலாம். நகரத்தார் சமுதாயத்தில் உறவுமுறைகள் மிக நுணுக்கமாகப் பிரிக்கப்பெற்று, அவற்றைக் குறிக்கத் தனித்தனிச் சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. மேலும், அவை அனைத்தும் தனித்தமிழ்ச் சொற்களே. பழந்தமிழ் இலக்கியங்களில் பயிலும் உறவுமுறைச் சொற்கள் நகரத்தார் சமூகத்தில் இன்றும் வழங்குகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

உறவுமுறைப் பெயர்கள் இருவகைப்படும். உறவினர் ஒருவரை அழைப்பதற்குப் பயன்படுத்தும் விளிச் சொற்கள் ஒருவகை. அவரைப் பற்றிப் பிறரிடம் குறிப்பிடும் பொழுது படர்க்கையில் குறிப்பிடும் சொற்கள் மற்றொரு வகை. இந்த இருவகையிலும் நகரத்தார் மரபில் வழங்கி வரும் உறவுமுறைப் பெயர்களின் அகரவரிசைப் படுத்தப்பெற்ற பட்டியலும், அவற்றுக்குரிய விளக்கங்களும் வருமாறு.

அண்ணன் : உடன் பிறந்தவர்களில் மூத்த ஆண்களைப் படர்க்கையில் குறிப்பிடவும், முன்னிலையில் விளிக்கவும் பயன்படும் சொல். நகரத்தார் குடும்பங்களில் தந்தையின் தம்பியாகிய சித்தப்பாவையும், தாயாரின் தங்கை கணவனாகிய சித்தப்பாவையும்கூட அண்ணன் என்று விளிப்பதுதான் மரபு. அதுபோலவே, சித்தப்பா பெரியப்பா மக்களில் தன்னைவிட வயதில் மூத்த ஆணையும், சின்னத்தா பெரியத்தா மக்களில் தன்னைவிட வயதில் மூத்த ஆணையும் அண்ணன் என்றே அழைப்பர்.

ஆணைப் பொறுத்தவரை தன் மனைவியின் ஆச்சி கணவனை, அதாவது தன்னைவிட வயதில் மூத்த சகலையை, அண்ணன் என்றே அழைப்பர். தன் மனைவிக்கு அத்தான் முறை உள்ள அனைவரையும் அண்ணன் என்றே அழைப்பர்.

பெண்ணைப் பொறுத்தவரை, தன் சம்பந்தியான் தன்னைவிட வயதில் மூத்தவராக இருந்தால், அண்ணன் என்று அழைப்பது மரபு. நாத்தனார் கணவன் மூத்தவராக இருந்தாலும் அண்ணன் என்றே அழைப்பர். பொதுவாகத் தன் கணவருக்கு அத்தான் முறை உள்ள அனைவரையும் அண்ணன் என்றே அழைப்பர்.

பொதுவாகப் புதிய ஆண் யாரோடு பழக நேர்ந்தாலும் அவர்களை அண்ணன் என அழைப்பதே நகரத்தார் மரபு.

அண்ணன் பெண்டிர் : நகரத்தார் சமூகத்தில் 'பெண்டிர்' என்ற சொல் மனைவி என்ற பொருளுடையதாக உறவுமுறையில் வழங்குகிறது. எனவே, அண்ணன் மனைவி 'அண்ணன் பெண்டிர்' ஆகிறாள். ஆனால் வழக்கில் இது மருவி 'அண்ணமுண்டி' என வழங்குகிறது. அண்ணன் முறை உடையவர்கள் அனைவரின் மனைவியையும் 'அண்ணன் பெண்டிர்' என அழைப்பதே நகரத்தார் சமூகத்தில் மரபு. இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கும் உண்டு. சித்தப்பாவை அண்ணன் என அழைப்பராயினும், சித்தப்பா மனைவியை 'அண்ணன் பெண்டிர்' என அழைப்பதில்லை. சின்னத்தாள் என்ற உறவுமுறை வந்துவிடுவதால் அவர்களை 'ஆச்சி' என்றே அழைப்பர்.

Koviloor Digital Library

அத்தான் : பொதுவாக அத்தை மகன், அம்மான் மகன் ஆகியோரை அத்தான் என்று அழைப்பர். இதுவும் வழக்கில் 'அய்த்தான்' என மருவி வழங்குகிறது. ஆச்சி கணவன், ஆச்சி முறை உடையவர்கள் கணவனையும் அத்தான் என்றே அழைப்பர். ஆணைப்பொறுத்தவரை தன் மைத்துனனோ, தன் சம்பந்தியானோ தன்னைவிட வயதில் மூத்தவராக இருந்தால் அவரை அத்தான் என்று அழைப்பர். மனைவிக்கு அண்ணன் முறை உடைய அனைவரையும் அத்தான் என்றே அழைப்பர். பெண்ணாக இருப்பின், தன்னைவிட வயதில் மூத்த கொழுந்தனாரை அத்தான் என்று அழைப்பர். கணவனுக்கு அண்ணன் முறை உடைய அனைவரையும் அத்தான் என்றே அழைப்பர்.

அத்தியாண்டி : பொதுவாக அத்தை மகள், அம்மான் மகள் ஆகியோரை அத்தியாண்டி என அழைப்பர். இது வழக்கில் 'அய்த்தியாண்டி' ஆகியிருக்கிறது. பெண்கள் தங்களைவிட வயதில் மூத்த நாத்தனாரை அத்தியாண்டி என அழைப்பர். கணவனுக்கு ஆச்சிமுறை உடைய அனைவரையும் அத்தியாண்டி எனவே அழைப்பர்.

அத்தை : தந்தையுடன் பிறந்த பெண்ணை அத்தை என அழைப்பது நகரத்தார் சமூக மரபு. 'அய்த்தை' என்பது இச்சொல்லின் மருவிய வழக்கு. பெண்கள் தங்கள் மாமியாரை அத்தை என அழைப்பர்.

அப்பச்சி : தந்தையைக் குறிக்கவும், அழைக்கவும் நகரத்தார் சமூகத்தில் பயன்படும் சொல். இச்சமூகத்தினர் மட்டுமே தந்தையை 'அப்பச்சி' என அழைக்கின்றனர். இதனால் செட்டிநாட்டுப் பகுதியில் வாழும் பிற சமுதாயத்தினர் நகரத்தார் என்ற பொருளைக் குறிக்கவே கூட இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர். அப்பன் என்ற சொல்லோடு 'சி' விகுதியாகச் சேர்ந்து இச்சொல் உருவாகியிருக்க வேண்டும்.

அப்பச்சி பெண்டிர் : இச்சொல் விளிச்சொல்லாகப் பயன்படுவதில்லை. தந்தை இரண்டாவது திருமணம் செய்துகொண்டால், முதல் மனைவியின் மக்கள், இரண்டாவது மனைவியைப் பற்றிப் படர்க்கையில், குறிப்பிடும் போது பயன்படுத்தும் சொல் இது. இதன் மருவிய வடிவம் 'அப்பச்சிவண்டி'. தந்தையின் இரண்டாவது மனைவியை விளிக்கும்பொழுது 'ஆச்சி' என அழைப்பதே பெருவழக்கு.

அப்பத்தாள் : தந்தையின் தாயைக் குறிக்கவும், அழைக்கவும் நகரத்தார் பயன்படுத்தும் சொல் இது. அப்பன் + ஆத்தாள் என்ற சொற்கள் இணைந்து உருவான சொல்லே அப்பத்தாள்.

அம்மான் : தாயுடன் பிறந்த ஆணை, அதாவது தாய் மாமனைக் குறிக்கவும், அழைக்கவும் நகரத்தார் பயன்படுத்தும் சொல் இது. உரையாசிரியர்கள் கரிகாற் சோழனின் தாய் மாமனான இரும்பிடர்த் தலையார் பற்றிக் குறிப்பிடும்போது, 'இரும்பிடர்த் தலையார் என்னும் தம் அம்மானை' எனக் குறிப்பிடுகின்றனர். அப்பழந்தமிழ்ச் சொல் நகரத்தார் சமூகத்தில் இன்றும் வழக்கில் இருக்கிறது என்பது நினைத்துப் பார்க்கத் தக்கது.

அத்தை கணவனையும், மாமனாரையும்கூட நகரத்தார்கள் அம்மான் என்றே அழைப்பர்.

அம்மான் பெண்டிர் : அம்மான் மனைவியை வழங்கவும் அழைக்கவும் நகரத்தார் மரபில் பயன்படும் இச்சொல் 'அம்மாமுண்டி' என வழங்குகிறது.

ஆச்சி : உடன் பிறந்தார்களில் மூத்த பெண்களைப் படர்க்கையில் குறிப்பிடவும், முன்னிலையில் அழைக்கவும் பயன்படும் சொல். நகரத்தார் குடும்பங்களில் சித்தப்பா மனைவியையும், சின்னத்தாளையும்கூட ஆச்சி என்றே விளிப்பது மரபு. சித்தப்பா, பெரியப்பா மக்களில் தன்னைவிட வயதில் மூத்த பெண்ணையும், சின்னத்தா, பெரியத்தா மக்களில் தன்னைவிட மூத்த பெண்ணையும் ஆச்சி என்றே அழைப்பர்.

ஆணைப்பொறுத்தவரை, தன்னைவிட வயதில் மூத்த மைத்துனர் மனைவியையும், சம்பந்தியாளையும் ஆச்சி என அழைப்பர். தன் மனைவிக்கு அத்தியாண்டி, அண்ணன் பெண்டிர் முறை உள்ள அனைவரையும் ஆச்சி என்றே அழைப்பர்.

பெண்ணைப் பொறுத்தவரை, தன்னைவிட வயதில் மூத்த கொழுந்தனார் மனைவியையும், கணவனுக்கு அத்தியாண்டி, அண்ணன் பெண்டிர் முறை உடைய அனைவரையும் ஆச்சி என்றே அழைப்பர்.

பொதுவாகப் புதிய பெண் யாரோடு பேச நேர்ந்தாலும் அவர்களை ஆச்சி என அழைப்பதே நகரத்தார் மரபு.

மேலும் சாதியைக் குறிப்பிடும் சொல்லாகவும் இச்சொல் பயன்படுகிறது. நகரத்தாரில் ஆண்கள் பெயருக்குப் பின் செட்டியார் எனக் குறிப்பிடுவது போல் பெண்கள் பெயருக்குப் பின்னால் 'ஆச்சி' என்றே குறிப்பிடுவர்.

ஆத்தாள் : தாயைக் குறிக்கவும், விளிக்கவும் நகரத்தார் பயன்படுத்தும் சொல். பட்டினத்தார் பாடலில் இச்சொல்லை இப்பொருளிலேயே பயன்படுத்துகிறார்.

"அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்"

என்பது பாடல்.

Koviloor Digital Library

ஆம்பிளையான் : இச்சொல் விளிச் சொல்லாகப் பயன்படுவதில்லை. 'கணவன்' என்ற பொருளில் நகரத்தார் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர். அதுவும்கூட மற்றொரு பெண்ணின் கணவனைக் குறிப்பிடும்போது தான், அப்பெண் பெயரையோ, அவளுக்கும் தனக்குமுள்ள உறவையோ குறிப்பிட்டு, 'அவளது ஆம்பிளையான்' எனச் சுட்டுவர்.

ஒரு பெண்ணே தன் கணவனைப் பற்றிச் சொல்ல நேர்ந்தால் 'என் ஆம்பிளையான்' என்றோ, 'என் கணவன்' என்றோ, 'என் வீட்டுக்காரர்' என்றோ சொல்வதில்லை. யாரோடு பேசிக் கொண்டிருக்கிறாளோ, அவருக்குத் தன் கணவன் என்ன உறவோ அதைச் சொல்லியே சுட்டுவாள். 'உங்கள் மகன்', 'உங்கள் அண்ணன்', 'உங்கள் மாப்பிள்ளை', 'உங்கள் தம்பி' என இப்படியாகச் சுட்டுவதே பெருவழக்கு.

உறவற்ற பொது மனிதர்களிடம் தன் கணவன் பற்றி, நகரத்தார் சமூகப்பெண் குறிப்பிடும்போது, சங்ககால மரபைப் பின்பற்றுவது நினைந்து போற்றத்தக்கது. சங்க இலக்கியங்களில் தலைவி, தலைவனைக் குறிப்பிடப் பயன்படுத்தும் தொடர் 'என் புதல்வன் தந்தை' என்பது. அது போலவே நகரத்தார் சமூகப்பெண் 'என் மக்களுக்கு அப்பச்சி' எனப் பொதுவாகவோ, தன் மகன் அல்லது மகள் பெயர் சுட்டி அவனது அல்லது அவளது அப்பச்சி எனக் குறிப்பாகவோ சுட்டுவது இன்றும் பழக்கத்தில் காணப்படுகிறது.

ஆயாள் : தாயின் தாயைச் சுட்டவும், அழைக்கவும் நகரத்தார் பயன்படுத்தும் சொல்.

ஐயா : தந்தையின் தந்தை, தாயின் தந்தை ஆகியோரை அழைக்கப் பயன்படும் பொதுச் சொல் இது. படர்க்கையில் சுட்டும்போது 'அப்பத்தாள் வீட்டு ஐயா' என்றும் 'ஆயாள் வீட்டு ஐயா' என்றும் பிரித்துச் சுட்டுவது நகரத்தார் மரபு.

கொழுந்தனார் : இச்சொல் விளிச்சொல்லாகப் பயன்படுவதில்லை. கணவனின் உடன் பிறந்த ஆண் 'கொழுந்தனார்' எனச் சுட்டப்படுவார். இது 'கொழுதுனா' என மருவி வழங்குகிறது. கொழுந்தனார் மூத்தவராயின் அத்தான் என்று அழைப்பதும், இளையவராயின் பெயர் சொல்லியோ 'தம்பி' என்றோ அழைப்பதும் மரபு.

கொழுந்தனார் பெண்டிர் : இதுவும் விளிச்சொல் அன்று. கொழுந்தனார் மனைவியைக் குறிக்கும் இச்சொல் 'கொழுதுனாமுண்டி' என மருவி வழங்குகிறது. கொழுந்தனார் பெண்டிர் மூத்தவராயின் 'ஆச்சி' எனவும், இளையவராயின் பெயர் சொல்லியும் அழைப்பது மரபு.

கொழுந்தியாள் : இதுவும் விளிச்சொல் அன்று. மனைவியின் உடன்பிறந்த பெண் கொழுந்தியாள் எனச் சுட்டப்படுவார். கொழுந்தியாள் இளையவராயின் பெயர் சொல்லி அழைப்பர். மூத்தவராயின் பெரும்பாலும் முறைச்சொல் எதனையும் பயன்படுத்தி அழைக்காமலே, செய்திகளை மட்டும் பேசுவர். இதுவே நகரத்தார் குடும்பங்களில் காணப்படும் பழக்கம்.

சகலை : கொழுந்தியாள் கணவனைச் சுட்டப் பயன்படும் சொல். இச்சொல்லும் அழைப்பதற்குப் பயன்படுத்தப்படுவதில்லை. சகலை மூத்தவராயின் 'அண்ணன்' என்றும், இளையவராயின் பெயர் சொல்லியும் அழைப்பர்.

சம்பந்தியாள் : தன் மகன் அல்லது மகளுடைய மாமியார் எனும் உறவைச் சுட்ட மட்டும் பயன்படும் இச்சொல்லும் விளிச்சொல் அன்று. சம்பந்தியாள் மூத்தவராயின் ஆணால் 'ஆச்சி' என்று அழைக்கப்படுவதும் பெண்ணால் 'அண்ணன் பெண்டிர்' என்றோ 'அத்தியாண்டி' என்றோ அழைக்கப்படுவதும் மரபு. இளைய வராயிருந்தால் பெயர் சொல்லி அழைத்தோ, உறவுமுறை எதுவும் சொல்லி அழைக்காமலோ பேசுவர்.

சம்பந்தியான் : தன் மகன் அல்லது மகளுடைய மாமனார் எனும் உறவைச் சுட்டமட்டும் பயன்படும் இச்சொல்லும் விளிச்சொல் அன்று. சம்பந்தியான் மூத்தவராயின் ஆணால் 'அத்தான்' என்றும், பெண்ணால் 'அண்ணன்' என்றும் அழைக்கப்படுவது மரபு. இளையவராயிருந்தால் பெயர் சொல்லி அழைத்தோ, உறவுமுறை எதுவும் சொல்லி அழைக்காமலோ பேசுவர்.

சித்தப்பா : தந்தையின் தம்பி, தாயின் தங்கை கணவர் ஆகிய உறவுமுறைகளைச் சுட்டும் சொல். வழக்கில் இவர்கள் 'அண்ணன்' என்றே அழைக்கப்படுவர்.

சின்னத்தாள் : தந்தையின் தம்பி மனைவி, தாயின் தங்கை ஆகிய உறவுமுறைகளைச் சுட்டும் சொல். வழக்கில் இவர்கள் 'ஆச்சி' என்றே அழைக்கப்படுவர்.

சின்னப்பத்தாள் : அப்பத்தாளின் தங்கை, அப்பத்தாள் வீட்டு ஐயாவின் தம்பி மனைவி, போன்றவர்களைச் சுட்டவும், அழைக்கவும் நகரத்தார் சமூகத்தில் பயன்படும் சொல். தந்தைக்குச் சின்னத்தாள் முறை உள்ள அனைவரையும் சின்னப்பத்தாள் என அழைப்பர்.

Koviloor Digital Library

சின்ன மாமனார் : இது விளிச்சொல் அன்று. மனைவி அல்லது கணவரின் சித்தப்பா முறை உறவுள்ள அனைவரையும் சுட்டப்பயன்படும் சொல். அவர்கள் 'அம்மான்' என்றே அழைக்கப் படுவர்.

சின்ன மாமியார் : இதுவும் விளிச்சொல் அன்று. மனைவி அல்லது கணவரின் சின்னத்தா முறை உறவுள்ள அனைவரையும் சுட்டப் பயன்படும் சொல். பெண்கள் தம் சின்ன மாமியாரை 'அத்தை' என்றே அழைப்பர். ஆண்கள் முறை சொல்லி அழைக்காமலே பேசுவது வழக்கம்.

சின்னாயாள் : ஆயாளின் தங்கை, ஆயா வீட்டு ஐயாவின் தம்பி மனைவி போன்றவர் களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல். பொதுவாகத் தாயாருக்குச் சின்னத்தாள் முறை உள்ள அனைவரையும் சின்னாயாள் என்றே அழைப்பர்.

சின்னையா : ஐயாவின் தம்பி, அப்பத்தாளின் தங்கை கணவர், ஆயாளின் தங்கை கணவர் போன்றவர்களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல். பொதுவாகத் தாயாருக்குச் சித்தப்பா முறை உள்ளவர்கள், தந்தைக்குச் சித்தப்பா முறை உள்ளவர்கள் ஆகிய அனைவரையும் சின்னையா என அழைப்பர்.

தங்கச்சி : இது விளிச்சொல்லாகப் பயன் படுவது குறைவு. உடன் பிறந்த பெண்களுள் இளையவர்களைச் சுட்டப் பயன்படும் சொல். அவளைப் பெரும்பாலும் பெயர் சொல்லியே அழைப்பர். மிகச் சில நேரங்களில் 'தங்கச்சி' என அழைப்பதும் உண்டு. பொதுவாக, வயதில் குறைந்த, உறவற்ற, புதிய பெண்கள் யாரோடு பேச நேர்ந்தாலும், அவர்களைத் 'தங்கச்சி' என அழைக்கும் பழக்கம் நகரத்தார் சமூகத்தில் நிலவுகிறது. மகளையும் சில நேரங்களில் படர்க்கையில் சுட்டும் போது தங்கச்சி எனச் சுட்டுகின்றனர்.

தம்பி : உடன்பிறந்த ஆண்களுள் இளையவர் களைச் சுட்டப் பயன்படும் சொல். அவனைப் பெரும்பாலும் பெயர் சொல்லியே அழைப்பர். மிகச் சில நேரங்களில் 'தம்பி' என அழைப்பதும் உண்டு. பொதுவாக, வயதில் குறைந்த, உறவற்ற ஆண்கள் யாரோடு பேச நேர்ந்தாலும், அவர்களைத் தம்பி என அழைக்கும் பழக்கம் நகரத்தாரிடையே காணப்படும் ஒன்று. மகனைச் சில நேரங்களில் படர்க்கையில் சுட்டும்போதும், சிலநேரங்களில் விளிக்கும் போதும் இச்சொல் பயன்படுகிறது.

தம்பி பெண்டிர் : தம்பி மனைவியைச் சுட்டப்பயன்படும் இச்சொல் விளியாகப் பயன்படுவதில்லை. இதன் வழக்கு வடிவம் 'தம்பி வண்டி' என்பதாகும். தம்பி மனைவி இளையவளாகவே அமைவதால் பெயர் சொல்லியே அழைப்பது பழக்கம்.

தாய பிள்ளைகள் : பங்காளிகள் அல்லாத உறவினர்களைச் சுட்ட நகரத்தார் சமூகத்தில் பயன்படும் சொல். விளிச்சொல் அன்று.

நாத்தனார் : கணவன் உடன்பிறந்த பெண்களைச் சுட்டப் பயன்படும் இச்சொல் விளிச்சொல் அன்று. நாத்தனார் மூத்தவராயின் 'அத்தியாண்டி' என்றும், இளையவராயின் பெயர் சொல்லியும் அழைப்பர். இது 'நாத்தூண்' என்பதன் மரூஉ.

பங்காளி : நகரத்தார் கோவில்கள் ஒன்பதில், ஒருவர் எந்தக் கோவிலை, எந்த உட்பிரிவைச் சேர்ந்தவரோ, அதே கோவிலை, அதே உட்பிரிவைச் சேர்ந்த அனைவரும் அவரது பங்காளிகள் எனச் சுட்டப்படுவர். மிகச்சில நேரங்களில் இது விளிச்சொல்லாகவும் பயன்படுகிறது. பங்காளியை ''மானி' என விளிப்பர்.

பெண்டாட்டி : இது விளிச்சொல் அன்று. மனைவியைச் சுட்டப் பயன்படும் நகரத்தார் சமூகச்சொல். ''பொண்டாட்டி' என்றும் வழங்கும். மனைவி பெண்டு எனக் குறிக்கப்படுவதைச் சங்க இலக்கியங்களில் காணலாம். 'ஊரன்பெண்டு' என்ற தொடர் மருதநிலத் தலைவன் மனைவியை ஐங்குறு நூற்றிலும், 'பெருங்கோப்பெண்டு' எனும் தொடர் புறநானூற்றில் பூதப்பாண்டியன் மனைவியையும் சுட்டுவதை நினைவு கூரலாம்.

பெரியத்தாள் : தந்தையின் அண்ணன் மனைவி, தாயின் ஆச்சி ஆகியவர்களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல்.

பெரியப்பச்சி : தந்தையின் அண்ணனையும், தாயின் ஆச்சி கணவன் ஆகியவர்களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல்.

பெரியப்பத்தாள் : அப்பத்தாளின் ஆச்சி, அப்பத்தாள் வீட்டு ஐயாவின் அண்ணன் மனைவி போன்றவர்களைச் சுட்டவும் அழைக்கவும் பயன்படும் சொல். பொதுவாகத் தந்தையின் பெரியத்தாள் முறை உடைய அனைவரையும் பெரியப்பத்தாள் என்றே அழைப்பர்.

பெரிய மாமனார் : இது விளிச்சொல் அன்று. கணவன் அல்லது மனைவியின் பெரியப்பச்சி முறை உறவுள்ள அனைவரையும் சுட்டப் பயன்படும் சொல். அவர்கள் 'அம்மான்' என்றே அழைக்கப்படுவர்.

பெரிய மாமியார் : இதுவும் விளிச்சொல் அன்று. கணவன் அல்லது மனைவியின் பெரியத்தாள் முறை உறவுள்ள அனைவரையும் சுட்டப் பயன்படும் சொல். பெண்கள் தம் பெரிய

Koviloor Digital Library

மாமியாரை 'அத்தை' என்றே அழைப்பர். ஆண்கள் முறை சொல்லி அழைக்காமல் பேசுவதே மரபு.

பெரியாயாள் : ஆயாவின் ஆச்சி, ஆயா வீட்டு ஐயாவின் அண்ணன் மனைவி போன்றவர்களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல். பொதுவாகத் தாயாருக்குப் பெரியத்தாள் முறை உள்ள அனைவரையும் பெரியாயாள் என்றே அழைப்பர்.

பெரியையா : ஐயாவின் அண்ணன், அப்பத்தாளின் ஆச்சி கணவர், ஆயாளின் ஆச்சி கணவர் போன்றவர்களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல். பொதுவாகத் தாயாருக்குப் பெரியப்பச்சி, தந்தைக்குப் பெரியப்பச்சி முறை உள்ள அனைவரையும் பெரியையா என்றே அழைப்பர்.

பேரன் : மகள் வயிற்றில் அல்லது மகனுக்குப் பிறக்கும் ஆண் குழந்தை பேரன் எனச் சுட்டப்படும். பொதுவாக ஐயாவின் பெயர் அவனுக்குச் சூட்டப்படும் வழக்கம் இருந்ததால், 'பெயரன்' என்ற சொல் தோன்றிப் 'பேரன்' என மருவி இருக்க வேண்டும். இது விளிச்சொல் அன்று.

பேரன் பெண்டிர் : பேரனின் மனைவியைச் சுட்டப் பயன்படும் இச்சொல் வழக்கில் 'பேரமுண்டி'யாகி இருக்கிறது. இதுவும் விளிச்சொல் அன்று.

பேர்த்தி : மகள் வயிற்றில் அல்லது மகனுக்குப் பிறக்கும் பெண் குழந்தை பேர்த்தி எனச் சுட்டப்படுவாள். பொதுவாக அப்பத்தாள் அல்லது ஆயாளின் பெயர் அவளுக்குச் சூட்டப்படும் வழக்கம் இருந்ததால், 'பெயர்த்தி' என்ற சொல் தோன்றிப் 'பேர்த்தி' என மருவியிருக்க வேண்டும். இதுவும் விளிச்சொல் அன்று.

மகள் : தம் பெண் குழந்தையைச் சுட்டப்பயன்படும் சொல். விளிச்சொல் அன்று. 'பெண்' என்ற சொல்லே 'மகள்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுவதும் உண்டு.

மகன் : தம் ஆண் குழந்தையைச் சுட்டப் பயன்படும் சொல். விளிச்சொல் அன்று. 'பையன்', 'அரசு' போன்ற சொற்கள் மகன் என்ற பொருளில் நகரத்தார் சமூகத்தில் பயன்படுத்தப் படுகின்றன.

மகன்பெண்டிர் : மகனுடைய மனைவியைச் சுட்டப்பயன்படும் சொல். விளிச்சொல் அன்று. இது வழக்கில் 'மகமுண்டி'யாக மருவி நிற்கிறது.

மருமகள் : ஆண்கள் தங்கள் உடன்பிறந்த பெண்களின் மகளையும், பெண்கள் தங்கள் உடன்பிறந்த ஆண்களின் மகளையும் சுட்டவும் சில நேரங்களில் அழைக்கவும் பயன்படுத்தும் சொல்.

மாப்பிள்ளை : மகள் கணவன் மாப்பிள்ளை எனச் சுட்டப்படுவார்; அழைக்கப்படுவார். ஆண்கள் தங்கள் உடன் பிறந்த பெண்களின் மகனையும், பெண்கள் தங்கள் உடன்பிறந்த ஆண்களின் மகனையும் சுட்டவும், சில நேரங்களில் அழைக்கவும் பயன்படுத்தும் சொல். ஆண்கள் தம் தங்கை கணவனையும் மாப்பிள்ளை எனச் சுட்டுவர்; அழைப்பர்.

மாமனார் : மனைவி அல்லது கணவனின் தந்தையைச் சுட்டப்பயன்படும் சொல். விளிச்சொல் அன்று. பொதுவாக மாமனார் 'அம்மான்' என்றே அழைக்கப்படுவது மரபு.

மாமியார் : மனைவி அல்லது கணவனின் தாயைச் சுட்டப்பயன்படும் சொல். விளிச்சொல் அன்று. பெண்கள் தம் மாமியாரை 'அத்தை' என்று அழைப்பர். ஆண்கள் முறை சொல்லி அழைக்காமல் பேசுவர்.

மானி : பங்காளிகள் ஒருவரை ஒருவர் 'மானி' என அழைத்துக்கொள்ளும் பழக்கம் நகரத்தார் சமூகத்து ஆண்களிடம் காணப்படும் ஒரு மரபு.

மைத்துனன் : மனைவியுடன் பிறந்த ஆணைச் சுட்டும் சொல். இது விளிச்சொல் அன்று. மைத்துனர் மூத்தவராயின் 'அத்தான்' என்றும், இளையவராயின் பெயர் சொல்லியும் அழைப்பது மரபு.

இவ்வளவு தெளிவான உறவுமுறைகளும், அவற்றுக்கெனத் தனிச்சொற்களும் பயன்படுத்தப் பட்டுவரும் நகரத்தார் மரபில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நாகரிக மோகத்தால், சிறிது சிறிதாக, அப்பச்சி, ஆத்தாள் போன்ற சொற்கள் மறைந்து, அனைத்துச் சமூகத்திற்கும் பொதுவான சொற்களாகிய அப்பா அம்மா, அண்ணி, மாமா முதலிய சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. இன்னும் சில குடும்பங்களில் ஆங்கில மோகம் மீதூர, டாடி, மம்மி, பிரதர், சிஸ்டர், அங்கிள், ஆன்ட்டி போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.


இச்சமூகத்தின் தனித்தன்மையைப் போற்ற நினைப்பவர்கள் இங்கே தரப்பட்டுள்ள உறவுமுறைச் சிறப்புப் பெயர்களை மீண்டும் பெருவழக்கிற்குக் கொண்டு வர முயல்தல் நல்லது.

நகரத்தார் பெண்கள் உறவுமுறை சுட்டும் வழக்கு, மிகுந்த நினைவாற்றலையும் பாசத்தையும் புலப்படுத்த வல்லதாகும். ''என் பெரிய மாமியாரின் மூத்த மருமகளுக்குச் சித்தப்ப முண்டிக்குப் பிறந்த இடத்து அத்தைக்குச் சின்ன மாமனார் மகளுக்கு நாத்தனார்தாண்டி, இன்றைக்கு இங்கே அழைச்சு வருற பொண்ணு'', என்று இதுபோல் சுட்டும் அழகு வேறு எங்கும் காணலரிது.

Koviloor Digital Library

ஊழியன்

இப்பெயரில் வார இதழொன்று 1920 முதல் 1940 வரை காரைக்குடியிலிருந்து வெளிவந்தது. இதன் வரலாறு சுவையானது. காரைக்குடியில் 1917இல் தொடங்கப்பட்டு இன்றும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருப்பது இந்து மதாபிமான சங்கம். இதன் உறுப்பினர்களுள் எண்மர் சேர்ந்து 11-9-1919 அன்று 'தனவைசிய ஊழியர் சங்கம்' என்ற அமைப்பு ஒன்றை உருவாக்கினர். இதன் நோக்கம் நகரத்தார் சமூகத்தில் சீர்திருத்தங்களைக் கொணரப் பணியாற்றுவது.



ஊழியன் - முகப்புப் பக்கம்

இந்த அமைப்பின் சார்பில் அதன் செயலாளராகிய சொ. முருகப்பாவை ஆசிரியராகக் கொண்டு 8-9-1920இல் 'தன வைசிய ஊழியன்' என்ற பெயரில் ஒரு வார இதழ் தொடங்கப்பட்டது. தொடர்ந்து 13 மாதங்களும், பின்னர் ஒரு மாதமும் இப்பொறுப்பைத் திறம்பட நடத்திய சொ. முருகப்பா 7-7-1922இதழ் வெளியானவுடன் இப்பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்.

இடையே சில மாதங்கள் ஆசிரியர் பொறுப் பேற்று இதழை நடத்திய இராய. சொக்கலிங்கம் 14-7-1922 இலிருந்து முழுமையான நிலையில் இதழாசிரியரானார். இந்த இதழ் 1940இல் நிறுத்தப் பெற்ற வரையும், அதன் ஆசிரியராக இருந்து சிறப்பாக நடத்தினார்.

21-10-1924இல் இந்த இதழ் தனவைசிய ஊழியர் சங்கத்திற்குத் தொடர்பற்றதாகி, இராய. சொ.வால் உருவாக்கப் பெற்ற 'ஊழியன் கம்பெனி' என்ற பொது நிறுவனத்தின் இதழாகத் தொடர்ந்து வெளிவந்தது.

15-4-1930இல் பொருள் இழப்பு காரணமாக இப்பொது நிறுவனம் மூடப்பட்டது. அப்போது இராய.சொ. இதழை முழுமையும் தம் உடைமையாக வாங்கிக் கொண்டு தொடர்ந்து நடத்தினார். இவ்வாறு விடாப்பிடியாக இந்த இதழை நடத்தி வந்த இராய. சொக்கலிங்கனார் 21-6-1933 இல் பொருள் இழப்பைக் காரணமாக அறிவித்து நிறுத்திவிட்டார்.

3-1-1936இலிருந்து மீண்டும் இவ்விதழ் வெளிவந்தது. ஆனால் அச்சிட்டு வெளியிடுபவர் ராம. காசிநாதன் (India Publications Ltdக்காக) என்ற குறிப்போடு ஆசிரியராக மட்டும் இராய.சொ.வைக்கொண்டு சென்னையிலிருந்து இதழ் வெளியாயிற்று.

5-5-1938 இலிருந்து மீண்டும் காரைக் குடியிலிருந்து ஆசிரியர், அச்சிட்டு வெளியிடுபவர் என்ற அனைத்துப் பொறுப்புக்களையும் இராய. சொக்கலிங்கனாரே ஏற்க வெளி வரலாயிற்று. 18-7-1940 இல் இறுதியாக இந்த இதழ் நிறுத்தப்பட்டது.

'தனவைசிய ஊழியன்' என்ற பெயரில் தொடங்கப் பெற்ற இந்த இதழ், தனவைசிய ஊழியர் சங்கத்தின் உடைமை என்ற நிலைமாறியவுடன் ஆசிரியர் இராய.சொ. இதன் பெயரை 14-7-1925இலிருந்து 'ஊழியன்' என மாற்றிவிட்டார். பின்னர் இந்த இதழ் நிறுத்தப்படும் காலம் வரை இப்பெயருடனேயே வெளியாயிற்று.

இதழின் ஆசிரியர், உரிமையாளர், வெளியான இடம், பெயர் இவற்றிலெல்லாம் மாற்றங்கள் நிகழ்ந்தது போலவே இதழின் அளவிலும் பலமுறை மாற்றங்கள் நிகழ்ந்தன. தொடக்கத்தில் முழுத்தாள் அளவில் (Foolscap) வெளியாயிற்று. பின்னர் 2-6-25 முதல் டெம்மி அளவில் (இன்றைய நாளிதழ்களின் அளவு) வெளிவந்தது. சென்னையிலிருந்து வெளிவந்த காலத்தில் இன்றைய தினமணி கதிர் அளவில் வெளிவந்தது. மீண்டும் காரைக்குடியிலிருந்து வெளிவந்தபோது டெம்மி அளவில் வந்தது. சென்னையிலிருந்து வெளிவந்த காலத்தைத் தவிர மற்ற அனைத்துக் காலங்களிலும் தனி இதழ் ஒவ்வொன்றும் 16 பக்கங்கள் உடையனவாக வெளிவந்தன. சென்னையிலிருந்து வெளிவந்த காலத்தில் மட்டும் ஒவ்வோர் இதழும் 48 பக்கங்களில் வெளிவந்தன.

இதழ் தொடங்கப்பெற்ற போது தனி இதழின் விலை 1½ அணா (9 காசுகள்). இது 2 அணாவாக (12 காசுகள்) உயர்த்தப்பட்டது. (2-9-1921இல்) மீண்டும் விலை 1½ அணாவாகக் குறைக்கப்பெற்றது. ஏறிய விலை

Koviloor Digital Library

இறங்குவது என்பது இதழியல் வரலாற்றில் இந்த இதழில் மட்டுமே காணப்படுகிறது எனலாம். சென்னைக்குச் சென்ற போது மீண்டும் விலை 2 அணாவாக உயர்ந்தது. ஆனால் மறுபடியும் காரைக்குடிக்கு வந்த போது வியக்கத்தகும் முறையில் விலை 1 அணாவாகக் குறைக்கப் பெற்றுள்ளது. ஆனால் இவ்வாறு குறைந்த விலையிலேயே அமைந்தது இதழ் தொடர்ந்து பொருள் இழப்பிலேயே நடக்கவும், இறுதியில் நிறுத்தப்படவும் காரணமாயிருக்கலாம் என்ற ஐயமும் எழாமல் இல்லை.

'தனவைசிய ஊழியன்' என்ற பெயரோடு தொடங்கப்பெற்ற முதல் இதழில் 'நமது பத்திரிகை சிறப்பாக நமது சமூக முன்னேற்றத்திற்கும், பொதுவாக இந்தியர்களின் முன்னேற்றத்திற்கும் உழைத்துவரும்' என அறிவிக்கப்பட்டது. அதுபோலவே இந்த இதழ் தோன்றிய ஓராண்டுக்குள், 60 ஆண்டுகளாகக் கூட்டப் படாமல் இருந்த 96 ஊர் நகரத்தார் கூட்டத்தைக் கோவிலூரில் 15–7–1921இல் கூட்டியது. நகரத்தார் சமூக முன்னேற்றத்தில் இன்னும் பல சாதனைகளை இவ்விதழ் செய்துளது.

இந்த இதழின் பெயர் 'ஊழியன்' என மாறி, முழுப்பொறுப்பையும் இராய. சொ. ஏற்றபின், இதழின் கொள்கையும் விரிவடைந்தது. காந்திய அடிப்படையில் விடுதலைப் போரில் தொண்டு செய்யும் இதழாக இது வீறுநடைபோட்டது.

இர்வின் பிரபு கொண்டு வந்த அவசர அச்சுச் சட்டம் காரணமாக ஒரு முறையும் (1930இல் 3 மாதங்கள்) ஆசிரியர். இராய.சொ. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றதால் ஒரு முறையும் (1932இல் 10 மாதங்கள்) பொருள் இழப்புக் காரணமாக ஒரு முறையும் (1933 முதல் சில ஆண்டுகள்) இடையிடையே நின்று வெளிவந்த இந்த இதழ் 18–7–1940 இல் இறுதியாக நின்று போயிற்று.

ஆனால் ஒவ்வொரு முறை இதழ் நிறுத்தப் பட்ட போதும், இன்ன காரணத்துக்காக இதழ் நிறுத்தப்படுகிறது என முறையான அறிவிப்பை வெளியிட்டு நிறுத்தி வரலாறு படைத்த இதழ் இதுவாகும்.

பிற்காலத்தில் தமிழ் இதழ் உலகில் முன்னணி வகித்த பலர், 'ஊழியன்' இதழில் பணியாற்றி யுள்ளனர். அவர்கள் வ.ரா; தி.ஜ.ர; பி.ஸ்ரீ; புதுமைப் பித்தன், கொத்தமங்கலம் சுப்பு போன்றோராவர். பாரதி காலத்திலேயே அவரது கவிதைகளையும் கட்டுரைகளையும் 'ஊழியன்' வெளியிட்டுள்ளது. தமிழ் இலக்கியக் கட்டுரைகள் நிறையவே இவ்விதழில் வந்தன. ''நல்ல தமிழுக்கு நவசக்தியும் ஊழியனும்'' என்று 1930இல் தமிழறிஞர்கள் போற்றினர் என்பார் சோமலெ.

நகரத்தார் பலரை எழுத்துத் துறையில் ஈடுபடச் செய்த பெருமையும் பிறமொழி இதழ்க் கட்டுரைகள், பிறமொழி இலக்கியங்கள் ஆகியவற்றை மொழிபெயர்த்து வெளியிட்ட சிறப்பும் இவ்விதழுக்கு உரியது.

தமிழ் இதழியல் வரலாற்றில் சாதனைகள் பல படைத்ததும், முன்னோடியாகத் திகழ்ந்ததும் ஆகிய 'ஊழியன்' நகரத்தார் தொடர்பில் வெளிவந்த இதழ் என்பது, இச்சமூகத்தின் பல்துறைப் பெருமைகட்குச் சான்றாக அமைகிறது.

எஸ்.ஏ.பி. (12-12-1924 - 17-4-94) (இயற்பெயர் அண்ணாமலை, சா.அ.ப.)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
இதழாளர்

சா.அ.பழநியப்ப செட்டியார் – இலட்சுமி ஆச்சியின் ஒரே மகன். இலயோலா கல்லூரியில் பொருளாதார முதுகலைப்பட்டமும், அதனைத் தொடர்ந்து வழக்குரைஞர் பட்டமும் பெற்றார்.



எஸ்.ஏ.பி.

1947 நவம்பரில் வள்ளல் அழகப்பரைக் கௌரவ ஆசிரியராகவும், தம் உடன் பயின்ற நண்பர் பி.வி. பார்த்தசாரதியைப் பதிப்பாள ராகவும் கொண்டு, தாம் ஆசிரியப் பொறுப்பை ஏற்று, 'குமுதம்' இதழை மாதம் இரு முறை இதழாகத் தொடங்கினார். 1994இல் காலமாகும் வரை, தொடர்ந்து 47 ஆண்டுகள், குமுதம் ஆசிரியர் என்ற நிலையில் அந்த இதழின் வளர்ச்சி ஒன்றையே உயிர்மூச்சாகக் கருதிச் செயல்பட்டார்.

Koviloor Digital Library

மாதம் இருமுறை இதழாகத் தொடங்கப்பட்ட 'குமுதம்' விரைவில் மாதம் மும்முறை இதழாகி, பின்னர் வார இதழாயிற்று. ஒரு கால கட்டத்தில் இந்தியாவிலேயே விற்பனையால் முதலிடத்தில் நிற்கும் வார இதழ் குமுதமே என்ற நிலை இருந்தது. நாடு முழுவதும் வழங்கும் ஆங்கிலம், பல மாநிலங்களில் வழங்கும் இந்தி ஆகிய மொழி இதழ்களோடு போட்டியிட்டு, ஒரு தமிழ் இதழ் முதல் இடத்தைப் பிடித்தது என்றால் அதனைச் சாதித்தவர் ஒரு நகரத்தார் என்பது இந்த இனத்தின் சாதனையாற்றலுக்கு ஒரு சான்று.

தொடக்கத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கத் துணைத் தலைவராகவும், பரலி. சு. நெல்லையப்பர் நிதிக்குழுவின் செயலாளராகவும், பொருளாள ராகவும், பணியாற்றிப் பொதுப் பணிகள் செய்தார். ஆனால், பின்னர் குமுதம் வாயிலாகச் செய்யும் சமூகத் தொண்டுகளோடு, நிறுத்திக் கொண்டு, பொது அமைப்பு எதிலும் நேரடியாக எந்தப் பொறுப்பையும் ஏற்காமல் வாழ்ந்தார்.

குமுதத்தில்கூட அவர் பற்றிய செய்திகள், அவரது புகைப்படம் முதலியவை அவர் இறந்த பிறகே வெளியாயின. அதுவரை அவர் 'குமுதத்துக்குத்தான் அடையாளம் உண்டு; எனக்கு இல்லை' என்ற கொள்கையோடு, ஒதுங்கியே வாழ்ந்து உயர்ந்த நெறிகளைப் பின்பற்றினார்.

இவர் ஒரு சிறந்த பேச்சாளர். படிக்கும் போது ஒய்.எம். ஐ.ஏ. பேச்சுப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றவர். ஆனால், பின்னாளில் மேடை ஏறிப் பேசுவதில்லை என்ற கொள்கையோடு வாழ்ந்தவர்.

இவர் சிறந்த எழுத்தாளர். அனைத்து வகையான எழுத்துக்களையும் குமுதத்தில் எழுதியுள்ளார். சிறுகதை, நாவல், கட்டுரை, திரைப்பட விமர்சனம், கேள்வி– பதில் எனப் பல பகுதிகளைச் சுவைபடவும், கருத்துச் செறிவுடனும், புதுமை கமழவும் எழுதியுள்ளார். 16 நாவல்கள் எழுதியுள்ளார். 'அரசு' என்ற புனைபெயரில் கேள்வி – பதில் பகுதியை, வாரந்தோறும் வாசகர் எதிர்பார்க்கும் ஒரு பகுதியாக ஆக்கியவர். 'அரசு பதில்களைப் படித்து முடித்தவுடன் ஒரு பல்கலைக் கழகத்தின் நூல் நிலையத்துக்குள் போய்வந்த உணர்வு எனக்கு ஏற்படும்' என்று சிறந்த எழுத்தாளராகிய சாவி பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

1948இல் தமிழ்வாணனை ஆசிரியராகக் கொண்டு, 'கல்கண்டு' வார இதழைத் தொடங்கியவரும் இவரே. அதன் ஆசிரியர் என்ற நிலையில் தமிழ்வாணனுக்கு முழு உரிமையையும் வழங்கி அந்த இதழை நடத்தியவர். 1977இல் தமிழ்வாணன் காலமானதும், 'கல்கண்டு' ஆசிரியர் பொறுப்பையும் இவரே ஏற்றுக் கொண்டார். அந்த இதழின் துணை ஆசிரியர் பணியைத் தமிழ்வாணனின் மூத்த மகன் லேனா தமிழ்வாணனுக்கு அளித்தார். நடைமுறையில் கல்கண்டின் முழுப்பொறுப்பும் லேனாவுடையது தான் எனினும், ஆசிரியர் என எஸ்.ஏ.பி. பெயர்தான் இடம் பெற்றது.

ஆழமான நாட்டுப்பற்று; அசைக்க முடியாத இறைபக்தி; பிரார்த்தனையில் முழுமையான நம்பிக்கை; இவை இவரது தனி ஆளுமைகள். தமது 14ஆம் வயதிலிருந்து இறுதிக்காலம் வரை கதராடை அணிந்து வாழ்ந்ததும், 'குமுதம்' இதழில் இவர் தோற்றுவித்த 'பிரார்த்தனை கிளப்' பகுதியும் இத்தனி ஆளுமைகட்குச் சான்று.

இதழியல் உலகில் இமயச் சாதனை படைத்தவர் எஸ்.ஏ.பி.

ஏகப்பன், இராம., (18-11-1933)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
தேனிபட்டி
சமூகத் தொண்டர்

கோவையில் நூல் வணிகத்தில் ஈடுபட்டுள்ள இவர் தென்னிந்திய நூல் வர்த்தக சம்மேளனத்தின் செயலராகவும் தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநராகவும் தொண்டாற்றியுள்ளார். கோவை நகரத்தார் சங்கத்தின் நிர்வாகச் செயலாளராக 1976 – 77 இலும் துணைத்தலைவராக 1991 – 95 இலும் சமூகப்பணி புரிந்துள்ளார். கோவை நகரத்தார் சங்க அறக்கட்டளை உறுப்பினராகவும், பிருந்தாவன் வித்யாலய மேல்நிலைப்பள்ளியின் துணைத்தலைவராகவும் விளங்கும் இவர் கோவை நகரத்தார் தொடர்பான பொதுப் பணிகளில் முன்னிற்கும் ஆர்வலர்.

தருமபுரம் ஆதீனம் நிறுவிய இறைபணி மன்றத்தின் கோவைமாவட்டத் தலைவராகவும் கோவை நாகசாயி மந்திர் அறங்காவலர் குழுச்செயலராகவும் பேரூர்க் கோவில் திருப்பணி உறுப்பினராகவும், புதுக்கோட்டைத் திலகவதியார் திருவருள் ஆதீனத்தின் புரவலராகவும் ஆன்மீகத் தொண்டாற்றி வரும் இவருக்குக் கோவை கௌமார மடாலயம் 'திருப்பணிச் செம்மல்' என்றும் புதுக்கோட்டைத் திலகவதியார் மடம் 'சேவைமணி' என்றும் பட்டம் அளித்துச் சிறப்பித்துள்ளன.

Koviloor Digital Library

ஏ.கே. செட்டியார் (இயற்பெயர் கருப்பன் செட்டியார், அ)
(3-11-1911 - 10-9-1983)

இரணிக்கோவில்

கோட்டையூர்

இதழாசிரியர், பயண நூலாசிரியர், திரைப்படத் தயாரிப்பாளர்

இவர் திருவண்ணாமலையில் பள்ளிக்கல்வி பயின்றார். நகைச் சுவையோடு எழுதும் இயல்பான எழுத்தாற்றல் கொண்ட இவர் தமது 19ஆவது வயதில் கோட்டையூரிலிருந்து வெளிவந்த 'தனவணிகன்' மாத இதழின் நிருவாக ஆசிரியராகப் பொறுப் பேற்றார். பின்னர் 1933இல் இவ்விதழை இரங்கூனிலிருந்து வெளியிட ஏற்பாடு செய்து அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்பதற்காக பர்மா சென்றார். வை. கோவிந்தன் நடத்திய 'சக்தி' இதழில் முதல் இதழிலிருந்து இவர் தொடர்ந்து பயணக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவையே பின்னர் 'உலகம் சுற்றும் தமிழன்' என நூலாக வெளிவந்தன. 1943இல் 'குமரிமலர்' மாத இதழைத் தொடங்கி மிகத் தரம்வாய்ந்த அறிவுப் புதையலாக அவ்விதழை நடத்தினார். 'வாயாடி' என்ற புனைபெயரில் இவர் குமரிமலர் இதழில் நகைச்சுவைக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். பயண இலக்கியம் என்னும் புதிய இலக்கியத் துறை தமிழில் தோன்றுதற்கே இவர் முன்னோடியாக விளங்கினார்.

இவருடைய பயண இலக்கியப் பணியைப் பாராட்டும் சோமலெ ''தமிழ்நாட்டு வாசகரிடையே பயணநூல் பசியை உண்டாக்கியவர் ஏ.கே. செட்டியார். இவர்க்கு முன் பலர் பல நாடுகளுக்கும் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஏ.கே.க்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. ஏ.கே. செட்டியார் தமிழன் என்ற கண்ணோட்டத்தோடு பல நாடுகளையும் பார்த்தார். பயண அனுபவங்களை நூலாக எழுதி பயண இலக்கியம் என்ற புதிய துறைக்கு அடி கோலியவர்'' என மதிப்பீடு செய்கிறார். மகாகவி பாரதியார் எழுதிய பயணக் கட்டுரைகளைத் தொகுத்துச் சக்தி காரியாலயத்தினர் நூலாக வெளியிட்டதற்கு ஏ.கே. செட்டியாரே காரணம்.

புகைப்படக் கலை, திரைப்பட ஒளிப்பதிவுக் கலையிலும் ஈடுபட்டுப் பிறநாடுகட்குச் சென்று தொழில் நுட்பப் பயிற்சி பெற்றுவந்தார். 1935–36இல் ஓராண்டுக் காலம் ஜப்பானில் தங்கிப் போட்டோக் கலையில் பயிற்சி பெற்றார். நியூயார்க்கிலுள்ள போட்டோகிராபி இன்ஸ்டி டியூட்டின் பட்டமும் பெற்றுள்ளார். டாகுமெண்டரி, செய்திப்படங்கள் முதலியவற்றைத் தயாரிப்பதில் தனிப் பயிற்சியும் பெற்றவர். திரைப்படத் துறையில் பயிற்சி பெற்ற முன்னோடி நகரத்தாரான இவர் 'டாகுமெண்டரி அண்ட் நியூஸ் பிலிம்ஸ் லிமிடெட்' என்ற பெயருடன் சென்னையில் ஒரு புதிய திரைப்பட நிறுவனத்தைத் தோற்றுவித்தார். இந்நிறுவனத்தின் சார்பாகவே காந்தி திரைப்படம் எடுக்கப்பட்டது.

இவர்தம் வாழ்நாளில் எடுத்த ஒரேபடம் மகாத்மா காந்தியடிகளைப் பற்றியதேயாம். காந்தியடிகளுடைய வாழ்க்கையை ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே இவர் திரைப்படமாக எடுத்தார். அதற்காக இவர் பல ஆண்டுகள் கடுமையாக உழைத்தார். ''20 ஆண்டுகளில் மகாத்மா வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகளைப் பிலிம்களாக எடுத்து மூலைக்கு மூலை வைத்திருந்தார்கள். அந்தப் பிலிம்களை எல்லாம் வாங்க நாடு நாடாகப் போய் ஏராளமாகப் பொருள் கொடுத்துத் திரட்டித் தொகுத்து இப்பொழுது உலகிற்கே ஒரு பொக்கிஷமாகத் தந்திருக்கிறார் ஏ.கே. செட்டியார் என்ற தமிழர்'' எனச் 'சக்தி' இதழ் வெளியிட்டுள்ள குறிப்பு இவரது பெரு முயற்சியைக் காட்டுகிறது. 1937 முதல் 1939 வரை இதற்காக இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கும் சென்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த படங்களைத் திரட்டியும் காந்தியடி களுடன் தொடர்பு கொண்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட அறிஞர்களைச் சந்தித்தும் இப்படத்தை உருவாக்கினார்.

தமது வாழ்க்கையில் இறுதிவரை கொள்கைப் பிடிப்புள்ள காந்தியவாதியாக வாழ்ந்தார். மகாத்மா காந்தி படத்தை 'டுவெண்டியத் செஞ்சுரி பாக்ஸ் கம்பனி'யார் 20 லட்சம் ரூபாய் விலைக்குக் கேட்டபொழுது 'தேசப்பிதாவை விற்க மாட்டேன்' என மறுத்துவிட்டார். இந்திய அரசாங்க செய்தித் திரைப்படப்பிரிவுக்கு அதைப் பணம் எதுவும் பெற்றுக் கொள்ளாமலேயே கொடுத்தார். இவருடைய பயண இலக்கியப் பணிக்காகப் பலர் பாராட்ட முன்வந்தபோதும் பாரதி இலக்கியப் பணிக்காக அரசே பரிசளிக்க முன்வந்த போதும் இவர் அவற்றை ஏற்க மறுத்துவிட்டார்.

நிறையப் படிப்பதிலும் படித்தவற்றில் சிறந்தவற்றைக் குறித்து வைத்துக் கொண்டு தொகுத்து நூலாக வழங்குவதிலும் இவர் தலைசிறந்து விளங்கினார். 'சுதேசமித்திரன்' இதழ்களில் காந்தியடிகள் பற்றி வெளிவந்த செய்திகளைத் தொகுத்துப் 'புண்ணியவான் காந்தி' எனத் தொகுப்பு நூலாக வெளியிட்டார். உணவு, பண்பு, தமிழ்நாடு பயணக் கட்டுரைகள், கொய்த மலர்கள் ஆகியவை இவரது தொகுப்பு நூல்களாகும்.

Koviloor Digital Library

இவற்றை டிவிஎஸ். நிறுவனத்தினர் பல்லாயிரம் படிகள் அச்சிட்டுத் தமிழகப் பள்ளிகளுக்கு வழங்கினர். உலகம் சுற்றும் தமிழன், மலாயா முதல் கனடாவரையில், கரிபியன் கடலும் கயானாவும் முதலிய 11 பயண நூல்கள் இவரது படைப்புகளாகும்.

ஐம்பத்தொன்பது சாந்தி

ஐம்பத்தொன்பது ஆண்டு நிறைந்து அறுபதாவது ஆண்டு பிறந்தநாளை 'உக்ரரத சாந்தி' என்று கொண்டாடுவது நகரத்தார் வழக்கம். இதனைப் பரிகார சாந்தி என்றும் கூறுவர். அந்நாளில் அறுபது அகவை நிறைந்து சாந்தி செய்து கொள்பவர் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. அதனால் ஐம்பத் தொன்பது வயது நிறைவுற்றவுடனேயே பரிகார சாந்தியாக ஆயுள் ஹோமம் முதலியன செய்து கொண்டனர். மார்க்கண்டேயனுக்கு ஆயுள் நீட்டிப்பு அருளிய இடம் திருக்கடவூர் ஆதலால் பலர் இத்தலத்தில் ஐம்பத்தொன்பது சாந்தி செய்து கொள்கின்றனர். பிள்ளையார்பட்டியிலும் அவரவரது கோவிலிலும் செய்து கொள்ளும் வழக்கமும் உண்டு. பெரும்பாலும் வீட்டில் செய்வதில்லை. கோவிலிலேயே நடைபெறுகிறது.

அறுபது சாந்திக்குச் செய்வது போலவே ஆயுள் ஹோமம், நவகிரக ஹோமம், சாந்தி ஹோமம் முதலியனவும், ஜெப பாராயணங்களும் நிகழும். 16 குடங்கள் வைத்து ஹோமம் செய்து, மந்திர நீரால் சாந்தி செய்துகொள்ளும் தம்பதிகளை உற்றாரும் உறவினரும் மங்கல நீராட்டுவர். மங்கல நாண் பூட்டும் சடங்கு நிகழ்வதில்லை.

ஐம்பத்தொன்பது சாந்தி செய்து கொள்ளும் நாயகரின் மனைவியின் பிறந்த வீட்டார் பட்டு கொண்டு வருவார்கள். அறுபது சாந்தியில் தாலியும் சங்கிலியும் கொண்டு வருவதுண்டு. ஆனால் ஐம்பத்தொன்பதில் அவை தவிரப் பிறவற்றைக் கொண்டு வருவார்கள். மங்கல நீராடியதும் விழாக் காண்பவர்கள் மூத்தோரிடம் ஆசி பெறுவர். பின்னர் தம்மை வணங்கும் இளையோர்க்கு வாழ்த்து நல்கித் திருநீறு வழங்குவர். (பார்க்க : சாந்திக் கலியாணம்)

ஒக்கூர்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், செம்பனூர், மதகுபட்டி வழியாக 36 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, வைரவன் கோவில், இலுப்பைக்குடி அகிய 3 கோவில்களைச் சேர்ந்த 129 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

இது சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

இவ்வூரில் சிவாலயம் இல்லை. நகரத்தாருக்குப் பொதுவான சசிவர்ண விநாயகர் திருக் கோவிலும், நாட்டார் நகரத்தாருக்குப் பொதுவான ஐயனார் கோவிலும் உள்ளன. ஏழைகாத்த அம்மன் கோவில் என்ற பெயருடைய அம்மன் கோவில் ஒன்றும் உள்ளது.

சிக. அரு. சோமசுந்தரம் செட்டியார் 1952 இல் தொடங்கிய சோமசுந்தரம் செட்டியார் தொடக்கப் பள்ளி, அவர் மகன் இராமநாதன் செட்டியார் நிருவாகத்தில் 1968இல் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பெற்றது.

ஒக்கூரில் சி.க.அரு.சோம. இராமநாதன் செட்டியார் ஸ்ரீ கண்ணாத்தாள் டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் ஒரு நூற்பாலையையும், மீனாட்சி நெசவாலை என்ற பெயரில் ஒரு நெசவாலையையும் நிறுவி நடத்தி வருகிறார்.

விநாயகர் கோவிலில் தை வெள்ளியில் நகரத்தார் வைக்கும் பொங்கலும், ஏழைகாத்த அம்மன் கோவிலில் நாட்டாரும் நகரத்தாரும் இணைந்து நடத்தும் செவ்வாய்ப் பொங்கலும், சிகரு. சி. மற்றும் சி.கரு.ஆ. குடும்பத்தினர் சித்திரை மாதம் முதல் வெள்ளிக்கிழமை நடத்தும் மகேசுவர பூசையும் இவ்வூரில் குறிப்பிடத்தக்க விழாக்கள் ஆகும்.

ஒக்கூர் வெள்ளையஞ் செட்டியார் மேல் நிலைப்பள்ளி என்ற பெயரில் ஒரு மேல்நிலைப் பள்ளியை மானாமதுரையில், இவ்வூரைச் சேர்ந்த வெள்ளையஞ்செட்டியாரின் வழிமுறையினர் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வூரைச் சேர்ந்த சங்ககாலப் புலவர் ஒக்கூர் மாசாத்தி. அவருக்காக ஒரு நினைவுச் சின்னத்தைத் தமிழக அரசு அமைத்துள்ளது. இவ்வூர் சிக. அருசோம. இராமநாதன் செட்டியார் 1982 இல் தம் மணிவிழாவின் போது ஒக்கூர் மாசாத்தியின் ''கெடுக சிந்தை'' எனும் புறப் பாடலைக் கல்வெட்டாக வடித்துத் திருப்புத்தூர் – சிவகங்கைச் சாலையில் நிறுவியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வூரைச் சேர்ந்த சி. க. அரு. க. அரு. சோமசுந்தரம் செட்டியார் இடமும் கட்டிடமும் நன்கொடையாகக் கொடுக்க அதில் அரசு ஆயுர்வேத மருத்துவமனை செயல்பட்டுவருகிறது.

இவ்வூருக்கு அருகே உள்ள சோழபுரம் சிவன் கோவில் திருப்பணியை இவ்வூர் சி.கரு.சி. குடும்பத்தார் தொடங்கி நடத்த, சி.கரு.சி. கரு. குடும்பத்தார் அப்பணியை நிறைவு செய்தனர். பாம்பணி சிவன்கோவில் திருப்பணி இவ்வூர்

Koviloor Digital Library

சி.கரு. சி.லெ. குடும்பத்தாரால் செய்யப் பெற்றது. அதே குடும்பத்தினரே திருக்காளவாசலில் தேவாரபாடசாலையையும், மதுரையில் வேத பாடசாலையையும் நிறுவியவர்களாவர். திருவில்லிபுத்தூர் ஆலயச்சுற்றுச் சுவர் இவ்வூர் சி.கருசி.சித. குடும்பத்தாரால் கட்டப்பெற்றதாகும்.

இவ்வூரைச் சேர்ந்த சி.கருசி.கரு. கருப்பஞ் செட்டியார் ஸ்ரீலங்காவிலுள்ள மாதம்பை எனுமிடத்தில் **5–8–1950**இல் ஓர் ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்கி, அங்கே **30,000** ரூபாய் செலவில் சரசுவதி வித்யாலயம் என்ற பௌத்த பாடசாலையை நிறுவியிருக்கிறார்; மேலும் கட்டுநேரிய லஞ்சிகம என்ற இடத்தில் இருந்த முதியோர் இல்லம் ஒன்றிற்கும், ஆனந்தா கல்லூரிக் கட்டிட நிதிக்கும் பெருந்தொகைகளை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஒப்பாரி

செட்டிநாட்டுப் பெண்களின் உணர்ச்சி இலக்கியம் ஒப்பாரி ஆகும். இழவு கேட்கப் பெண்கள் வரும்போது சாகக் கொடுத்த பெண் தன் உணர்ச்சிகளை மடைதிறந்த வெள்ளம்போல் பாடித் தன் துன்பஉணர்வை வெளிப்படுத்துகிறார். இழவு கேட்க வருகின்ற பெண்களும் ஒப்பாரி வைப்பதுண்டு. மகனையோ மகளையோ கணவனையோ தாய்தந்தையரையோ சாகக் கொடுத்த பெண்ணின் அவலத்தைத் தாங்களும் உணர்ந்து அவள்நிலை ஒத்த உணர்வில் கேட்கும் பெண்களும் பாடுவதால் ஒப்பாரி என்ற பெயர் வழங்கியிருக்கலாம். 'கட்டி அழுதல்' என்ற சொல்வழக்கு இப்பகுதியில் உண்டு. சாகக் கொடுத்த பெண்ணை மற்ற பெண்கள் கட்டிக் கொண்டு அழுதல் என இதற்குச் சிலர் விளக்கம் கூறுவர். ஆனால் இழவு சொல்லும் பெண்ணும் கேட்கும் பெண்களும் பாட்டுக்கட்டி அழுதல், ஒப்பாரி வைத்தல் என்பதே இச்சொல் வழக்குக்குப் பொருத்தமான பெயர். வாய்மொழி இலக்கியக் கூறுகள் உடைய்ன ஒப்பாரிப் பாடல்கள். நாமக்கல் கவிஞர் செட்டிநாட்டுப் பெண்களைப்பற்றிக் கூறும்போது,

'இழவில் அழுதிடும் பெண்கூட
இசையோடு அழுதல் கண்கூடு'

என ஒப்பாரி வைக்கும் கவிதை உள்ளத்தை எடுத்துக் காட்டுகிறார். தாலாட்டுப் பாடல்கள் கூட முன்னோர் பாடியதை அப்படியே பின்பற்றிப் பாடுதல் உண்டு. ஆனால் ஒப்பாரிப் பாடல்கள் சூழ்நிலைக்கேற்ப அவலத்தின் உணர்ச்சி வேகத்திற்கேற்பப் புதிது புதிதாகப் பிறந்து வருகின்றன.

நகரத்தார் பண்பாடு, பழக்கவழக்கங்கள், குல வரலாறு, தொழில்திறம் ஆகிய அனைத்துச் செய்திகளும் ஒப்பாரிப் பாடல்களின் வாயிலாக அறியக் கிடைக்கின்றன. தொலைக்குக் கொண்டு விற்கப் போனவர்கள் பெட்டியடி உதவி யாளராகச் சென்று கூட்டாளி என உயர்ந்து பல கடைகளை மேற்பார்ப்பார்கள். இத்தகைய ஒரு கணவரை இழந்த பெண்,

"எட்டுக்கடை பார்ப்பார்
எதிர்த்தகடை மேப்பார்ப்பார்
எட்டு லட்சம் கொண்டுவரும்
இந்திரரைத் தப்பவிட்டேன்

"பத்துக்கடை பார்ப்பார்
பழையகடை மேல்பார்ப்பார்
பத்துலட்சம் கொண்டுவரும்
பாண்டியரைத் தப்பவிட்டேன்

என்று தன் கணவருடைய நிருவாகத் திறமையைப் பாடுகிறாள். இறந்த தன் கணவருடைய அன்பை எண்ணி யெண்ணி இப்படி அழுகிறாள் ஒரு பெண்,

தள்ளியிருன்னு சொல்லாத
தங்கராசன் பொயிட்டாரே
போய் இருன்னு சொல்லாத
பொன்னரசன் பொயிட்டாரே
ஒதுங்கியிருன்னு சொல்லாத
உத்தமரும் பொயிட்டாரே!

கணவனை இழந்த விதவையான பெண்ணுக்கு வெள்ளைச் சேலை தருவது வழக்கம். பொன்னிழந்து பூவிழந்து புதுவண்ண உடைதுறந்து வெள்ளைக் கச்சை கட்டும் காலம் வந்ததென்று இழவுச் சடங்குகளைப் பாடுகிறார் ஒரு மனைவி.

ஒரு கோடி தங்கநகை
உருவிவைக்கச் சொன்னீரே
கால்கோடி தங்கநகை
கழற்றிவைக்கச் சொன்னீரே!

என்று பந்தலில் நகை வாங்கியதையும்

கந்தையிது கந்தையிது
கால்பணத்துக் கந்தையிது
ஆக்குகிற பெண்களுக்கு
அடைபிடி கந்தையிது
பொங்குகிற பெண்களுக்கு
பிடிச்சிறக்கும் கந்தையிது
காசிப் பரதேசி
கைதுடைக்கும் கந்தையிது
மடத்துப் பரதேசி
வாய்துடைக்கும் கந்தையிது

Koviloor Digital Library

என்று வெள்ளைக்கச்சை கட்டநேர்ந்த அவலத்தையும் அப்பெண் பாடுகிறாள். கணவர் நோய்வாய்ப்பட்ட பொழுது பல மருத்துவர் வந்து பார்த்தும் குணப்படுத்த இயலாமல் அவர் இறந்ததை இழவு கேட்பவர்க்குச் சொல்கிறாள் மனைவி;

"மலையாள வைத்தியனை மடிவசமாய்க்
கூட்டி வந்தோம்
மலையாள வைத்தியனும் மருந்தறிய
மாட்டலையே
சீமை வைத்தியனைச் சீக்கிரமாய்க்
கூட்டிவந்தோம்
சீமை வைத்தியனும் சீக்கறிய மாட்டலையே"

என்று முயற்சி செய்தும் கணவர் உயிரைக் காப்பாற்ற முடியாத வேதனையை மனைவி பாடுகிறாள். இன்னொரு பெண் தன்னுடைய வாழ்க்கை இழப்புக்கு யாரைக் குறை சொல்வது என்று பாடுகிறாள்.

தாலிக்கு அரும்பெடுத்த தட்டானும்
கண்குருடோ?
சேலைக்கு நூலெடுத்த சேணியனும்
கண்குருடோ?
பஞ்சாங்கம் பாக்கவந்த பாப்பானும்
கண்குருடோ?
எழுதினவன்தான் குருடோ? எழுத்தாணி
கூரிலையோ?
சிதம்பரத்துத் தட்டான் சீர்காழி ஆசாரி
பட்டறையைக் கிட்டவச்சுப் பண்ணும்
சிறுதாலி
தாலி பொருத்தமில்லே தட்டான்கை
ராசியில்லே
மாலை பொருத்தமில்லே வயிராவி கை
ராசியில்லே
சேலை பொருத்தமில்லே சேணியன்கை
ராசியில்லே

என்று இறைவனையே கண்குருடோ என்று கேட்பதும் என் விதியை இறைவன் அழுத்தமாக எழுதவில்லையா என்று பாடுவதும் எதிலும் கைராசிப் பொருத்தம் பார்க்கும் பண்பாட்டைப் பாடுவதும் அவள் துன்பத்துக்குக் காரணம் தேடி அழுவதை உணர்த்துகிறது. காரணம் சொல்ல முடியாதபோது விதி, ராசி என அமைதிப்படுத்திக் கொள்ளும் மனப்பான்மையை இப்பாடல்கள் காட்டுகின்றன.

ஒரு பெண் திருமணம் ஆகி இரண்டு மூன்று நாட்களில் கணவனை இழந்தாள். ஆகவே தனது திருமண நாள், வருடம் மாதம் கூறிப் பாடுகிறாள்.

"மாது நல்லாள் என்னை மாலை டிப்
பார்ப்பதற்கு
அஞ்சாறு ஊர்ப் பஞ்சாங்கக் காரரிடம்
நல்ல நாள் எப்பவென்று எங்களய்யா
நடுவிருந்து பார்த்தார்கள்
அச்சுத வருசம் அர்ப்பசி மாதம்
அஞ்சாம் தேதியிலே ஆயில்ய நட்சத்திரத்தில்
கொஞ்சமும் தவறாமல் கொம்பனையாள்
என்னைக்
குணமுள்ள மாதென்று மாலை டிப்
பார்ப்பதற்கு
கல்யாண முகூர்த்தமென்று கடலேறிப்
பாக்குவைத்து
சீமந்த மென்று சீமையெங்கும் பாக்குவைத்தார்!
உங்களைக் குதிரையிலே வைத்துக் கூட்டி
வரும் வேளையிலே
நீங்கள் சௌக்கியம் இல்லையென்று என்
அண்ணனிடத்தில் சொல்லாமல்
மனையிலே இருக்கையிலே மயக்கமாய்
வருகுதென்று
உங்களய்யா இடத்தில் வருத்தமாய்ச்
சொன்னீராம்...
கட்டின காப்புக் களத்துவ தற்குள்ளாக
காப்புக் களத்தித் கால்மோதிரம் இடுவதற்குள்
நீராட்டு அன்றைக்குச் சீக்கென்று சொல்லிச்
சிவலோகம் சேர்ந்தீரே!
நாளோ சரியாச்சோ நடப்பதற்கு நாளாச்சோ
பொழுதோ சரியாச்சோ போவதற்கு
நாளாச்சோ"

நல்லநாள் பார்த்து நடைபெற்றதெல்லாம் இருந்து மகிழ்வதற்காகவா? எண்ணி எண்ணி அழுவதற்காகவா? என்று பாடும் இப்பெண் சாவு எல்லோர்க்கும் வருவதுதான்; ஆனால் தாலிகட்டிய மறுநாளே இப்படி அநியாயச் சாவு வரலாமா என்று அழுது புலம்புகிறாள்.

"விதிவந்தா லென்ன கொஞ்சம் விலகி
வந்தா லாகாதோ
சாவு வந்தா லென்ன கொஞ்சம் தள்ளி
வந்தா லாகாதோ
உங்களைப் பார்க்க வருவமின்னா
நீங்களிருக்கும் பள்ளியறை தூரமில்லோ
உங்களைக் காண வருவமின்னா
நீங்களிருக்கும் கயிலாயம் தூரமில்லோ
தாலி கொண்டுவந்த தட்டானும் போகலியே
மாலை கொண்டுவந்த வயிராவி போகலியே
சேலை கொண்டுவந்த சேணியனும் போகலியே
பந்தல் பிரிக்கலியே வந்தசனம் போகலியே
கல்யாணப் பானைகளும் கழுவிக் கவுக்கலியே
பணியாரம் சுட்ட சட்டி பாதிமணம் போகலியே"

Koviloor Digital Library

என்று திருமண வாசம் மாறா நிலையில் கணவனை இழந்த பெண் கதறுகிறாள். தேடித்தேடி மாப்பிள்ளை தனக்குப் பார்த்த கதையை நகரத்தார் குலமரபு கோவில் பிரிவுகள் ஆகியவற்றைக் கூறிப் பாடுகிறாள் அவள்.

"என் அப்பச்சி இலுப்பக்குடி மாப்பிள்ளையை
இணக்கமில்லை என்றார்கள்
மாத்தூர் கோவில் மாப்பிள்ளையை
மணமில்லை என்றார்கள்
வேலங்குடிக் கோவில் மாப்பிள்ளையை
விவஸ்தையில்லை என்றார்கள்
சூரக்குடிக் கோவில் மாப்பிள்ளையை நம்பள்
சொந்தமில்லை என்றார்கள்
நேமங்கோவில் மாப்பிள்ளையை நமக்கு
நேர்மையில்லை என்றார்கள்
பிள்ளையார்பட்டிக் கோவில் மாப்பிள்ளையைப்
பெலமில்லை என்றார்கள்
வயிரவன் கோவில் மாப்பிள்ளையை வாயில்லை
என்றார்கள்
இரணியூர்க்கோவில் மாப்பிள்ளையை நமக்கு
இணையில்லை என்றார்கள்
இளையாத்தக்குடி மாப்பிள்ளைக்கு
இணக்கமென்று சொல்லி
என்னை ஏங்கவைத்துப் பார்த்தீரே!"

பிள்ளையை இழந்து தாய் பாடும் ஒப்பாரி யிலும் உணர்ச்சி கொப்புளித்து வரக் காணலாம்.

"ஈச்சன் குருத்துல எடுத்த நல்ல தங்கமில்ல
வாழைக் குருத்துல வளர்த்த நல்ல தங்கமில்ல
கையில் செபமாலை கக்கத்துப் பூமாலை
மடியில் செபமாலை வச்சாடும் பூமாலை
கால் அழகும் கை அழகும்
சுட்டைவிரல் லெட்சணமும்
தோள் அழகும் கால் அழகும்
சுண்டுவிரல் லெட்சணமும்
நீலமுழிக் கண்கள் ரெண்டும்
நிலக்கறையான் திங்க விட்டம்
மைலமுழிக் கண்கள் ரெண்டும்
மண்கறையாள் திங்க விட்டம்
கோலமுழிக் கண்கள் ரெண்டும்
குழிக் கறையான் திங்க விட்டம்"

என்று மகன் அழகுமேனியை மண்ணில் புதைத்த துயரத்தை மனம் ஆறாமல் பாடும் தாய், அவனைக் கண்ணுள் மணிபோல் வைத்துக் காத்தும் எவரும் அறியாமல் எமன் கவர்ந்து போனானே எனத் துயரத்திலும் கவிதை பாடுகிறாள்

சுத்தித் திரை வளைச்சம்
ரியனைக் காவல் வைச்சம்
பக்கம் திரை வளைச்சம்
பகவானைக் காவல் வைச்சம்
எங்கும் திரை வளைச்சம்
இந்திரனைக் காவல் வைச்சம்
நடுவே திரை வளைச்சு
நானும் ஒரு காவல் நின்னேன்
இத்தனைபேர் காவலிலே
எமன்வந்தான் காணலியே
தொண்ணூறுபேர் காவலிலே
தூதன் வந்தான் காணலியே!

என்று எவரும் அறியாமல் எமன் வந்தான் எனப் பாடும் தாய் எமனின் இயல்புகளையும் பாடுகிறாள்,

கொல்லவந்த எமனுக்கு
கோடி திரவியமும்
குருதைவிடாய் தாரமின்னம்
கோப்பான மஞ்ஞனைக்
கொன்னே விடுவ மின்னான்
பிடிக்கவந்த எமனுக்கு
புள்ளையைப் போல பிள்ளை
பொம்மை பண்ணித் தாரமின்னம்
பொம்மையின்மேல் சிந்தை இல்லை
புடிச்சால் விடுவ மின்னான்
வாங்கவந்த எமனுக்கு
மைந்தனைப்போல் மைந்தன்
மதலை பண்ணித் தாரமின்னம்
மதலையுமே தேவை இல்லை
மைந்தன் வந்தால் விடுவ மின்னான்
கூட்டிப் போய்விட்டவன்
குதிரைமெடல் பெற்றானா
அழைத்துப் போய்விட்டவள்
ஆனைமெடல் பெற்றானா.

என்று தாய் பாடும்போது என் பிள்ளையைப் பிடித்துப் போனதால் எமனுக்கு என்ன மெடல் கிடைத்ததா என்று இகழ்ச்சி அவலம் தோன்றப் பாடுகிறாள். ஒப்பாரிப் பாடல்கள் சூழ்நிலைக்கேற்பப் பாடப்படும் உணர்ச்சி இலக்கியம். நகரத்தார் வீட்டுப் பெண்களின் உள்ளத்தில் கவிதை குடியிருந்து வாழ்கிறது என்பதைக் காட்டும் காலக்கண்ணாடி. வாழ்க்கையை எதிர்கொள்ளும் உணர்ச்சிகளின் வடிகாலான வாழ்க்கை இலக்கியம் ஒப்பாரிப் பாடல்கள். ஆயினும் இப்போது இழவு வீட்டில் ஒப்பாரிப் பாடல்கள் ஒலிப்பது படிப்படியாகக் குறைந்து வருகிறது.

Koviloor Digital Library

கடியாபட்டி

கீழப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து கோட்டையூர், பள்ளத்தூர், கொத்தமங்கலம் வழியாக 24 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார் பட்டி ஆகிய 6 கோவில்களைச் சேர்ந்த 718 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இது, அரிமழம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம். இவ்வூர் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. அவை காடத்தான்பட்டி, விசுவநாதபுரம், இராமச்சந்திரபுரம். இவற்றுள் காடத்தான்பட்டி பழமையானது. எனவே அப்பகுதி பழையூர் என்றே வழங்குகிறது. அஞ்சல் நிலையம் இராமச்சந்திரபுரம் என்ற பெயரால் அமைந்துள்ளது.

பிரம்மவித்யாம்பாள் உடனாய பூமீஸ்வரர் திருக்கோவில் இவ்வூர் நகரச்சிவன் கோவில். இதற்கு 1893, 1934, 1945, 1963, 1978, 1997 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழாக்கள் நிகழ்ந்துள்ளன. இளையாத்தங்குடி கழனிவாசற்குடி ஆ.பெ. குடும்பத்தாருக்குரிய முத்துவிநாயகர் கோவிலும் வைரவன்கோவில் பி.கு.நா. குடும்பத்தாருக்குரிய சித்தி விநாயகர் கோவிலும் வைரவன்கோவில் தீ.சொ.நா.சொ. குடும்பத்தாருக்குரிய கூட்டப்புளிப் பிள்ளையார் கோவிலும் இரணிக்கோவில் கு.தெ. குடும்பத்தாருக்குரிய சுப்பையா கோவிலும் இவ்வூரில் உள்ளன. சிவன்கோவில் ஊருணி, கும்பளாங்குண்டு ஊருணி, கூட்டப்புளி ஊருணி ஆகிய 3 ஊருணிகள் நகரத்தாரால் வெட்டப்பெற்றவை.

வைரவன் கோவில் தீ.சொ. நாகப்ப செட்டியாரால் 1917இல் ஸ்ரீ பூமீஸ்வர ஸ்வாமி தொடக்கப்பள்ளி நிறுவப்பெற்றது. 1986இல் மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பெற்ற இப்பள்ளியின் பெயர் 1987இல் உலகப்பர் மேல்நிலைப்பள்ளி என மாற்றப்பெற்றது. இப்போதும் அக்குடும்பத்தார் நிருவாகத்தில் அப்பள்ளி இயங்கிவருகிறது. வைரவன் கோவில் பி.கு. குடும்பத்தினர் கணேசர் நடுநிலைப் பள்ளியை நிறுவி நடத்திவருகின்றனர். இரணிக்கோவில் மு.சித. குடும்பத்தினர் ஒரு தொடக்கப்பள்ளியை நிறுவி நடத்தி வருகின்றனர். தீ.சொ. குடும்பத்தினர் நன்கொடையாகக் கொடுத்த இடத்தில் பி.கு. குடும்பத்தினர், உ.ராம. குடும்பத்தினர், நா.மு. குடும்பத்தினர் ஆகியோர் நன்கொடையால் உருவான கட்டிடத்தில் அரசு மருத்துவமனை நடைபெற்று வருகிறது.

இளையாத்தங்குடி கழனிவாசற்குடிப் பங்காளிகள் பெரியசாமி படைப்பையும், மாத்தூர் அரும்பாக்கூர்ப் பங்காளிகள் ஒரு பொதுப் படைப்பையும், வைரவன்கோவிலில் ஒரு வகையினர் கருப்பர் படைப்பையும் மற்றொரு வகையினர் ஒரு பொதுப் படைப்பையும் படைத்து வருகின்றனர். இரணிக்கோவில் முணசந்தியார் வீட்டிலும் வைரவன் கோவில் பி.கு.பிசு. வீட்டிலும் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப்படுகிறது.

இரணிக்கோவில் உ.மு.உ. முத்துவீரப்ப செட்டியார் உ.மு.உ. இராமசாமிச் செட்டியார் இருவரும் 1937இல் உ.மு.உ. அறுபத்துமூவர் குருபூசை மடத்தைக் கட்டினர். அறுபத்து மூவருக்கும் மாணிக்கவாசகருக்கும் இங்கு குருபூசை நடைபெறுகிறது. இரணிக்கோவில் பங்காளிகளில், பள்ளத்தூர் அழகஞ்செட்டியார் படைப்புப் பங்காளிகள் மு.சி.அழ. அன்னசத்திரத்தை நிறுவி ஆடி மாதம் மூன்றுநாட்கள் மகேசுவரபூசை நடத்தி அன்னதானம் செய்து வருகின்றனர். இளையாத்தங்குடி கழனிவாசற்குடி ஆ.பெ. வகையினர், ஆ.சா. வகையினர், மாத்தூர் உ.ராம.சித.மு. வகையினர், வைரவன்கோவில் தீ.சொ. வகையினர், பி.கு. வகையினர் உ.ராம.நா.லெ. வகையினர், இரணிக்கோவில் கு. தெ. வகையினர், மு.நா. வகையினர் ஆகியோர் தனித்தனியே மகேசுவரபூசை நடத்தி அன்னதானம் செய்துவருகின்றனர்.

அ.அழ.இராம. இளையபெருமாள் (இளை. பட்டினசாமி) பி.க.வ.அ. அண்ணாமலை (வைரவன் கோவில்) ஆகிய இவ்வூர் நகரத்தார்கள் இ.தே.ராவில் பணிபுரிந்தவர் களாவர்.

வைரவன்கோவில் தீ.சொ. முருகப்ப செட்டியார் தீ.நா. முத்தையா செட்டியார், தீ.அ. சிதம்பரம் செட்டியார் மூவரும் திருப்பாதிரிப் புலியூர் சிவன்கோவில் திருப்பணி செய்துள்ளனர். அவ்வூரில் தீ.சொ. குருபூசைமடம், தேவாரப்பாடசாலை முதலியவற்றை அமைத்தார். தீ.நா. முத்தையா செட்டியார் அன்ன சத்திரமும் ஆகம பாடசாலையும் அமைத்தார். திருவண்ணாமலையில் தீ.சொ.நா. வும், தீ.அ.வும் அண்ணாமலையார் கோவிலில் இராசமண்டபம் கட்டியுள்ளனர். தீ.நா. முத்தையா செட்டியார் கடியாபட்டியை அடுத்த உமையாள்புரத்தில் சிவன்கோவில் திருப்பணி செய்துள்ளார்; திருமயத்தில் சத்யகிரிப் பெருமாள்கோவில் திருப்பணியும் செய்து ஊருணி ஒன்றும் வெட்டி சத்யமூர்த்தி உயர்நிலைப்பள்ளியும் நிறுவினார்.

வைரவன்கோவில் பி.கு.நா. நாகப்ப செட்டியார் திருச்சாத்தமங்கை சிவன்கோவில் திருப்பணி செய்துள்ளார். திருக்கண்ணங்குடி

Koviloor Digital Library

சிவன்கோவில் திருப்பணி செய்த நகரத்தார்களுள் இவ்வூர் இரணிக்கோவில் அழ.அ. அழகப்பசெட்டியாரும் ஒருவர்.

தீசொகிவீடு, தீசொ. நா.வீடு, தீசொ.ராம.வீடு, தீ.நா.மு. வீடு, பி.கு.நா. வீடு ஆகியவை இவ்வூரிலுள்ள கலைநயம் சார்ந்த மிகப் பெரிய வீடுகள் ஆகும்.

கணபதி, செல்ல (10-2-1941)

பிள்ளையார்பட்டி
கண்டனூர்
குழந்தை எழுத்தாளர்

அரிமழத்தில் சுப. இராமசாமி செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகனாகப் பிறந்தவர். கண்டனூர் சி.வெ.நா.சோம. செல்லப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியால் பிள்ளைகூட்டிக் கொள்ளப்பட்டவர். பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றவர். கோவையில் பழனியப்பா பிரதர்ஸ் கிளை நிறுவனத்தையும், பழனியப்பா சீட்டு நிதி நிறுவனத்தையும், ஏசியன் பேரிங் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருட்களை விநியோகம் செய்யும் நிறுவனத்தையும் நிருவகித்து வருகிறார்.

தம் இளம் வயதிலிருந்தே கவியரங்குகளில் பங்கேற்று வந்த இவர், அழ. வள்ளியப்பாவின் தொடர்பு ஏற்பட்டபின் குழந்தைக் கவிஞராக உருவெடுத்தார். குழந்தைகளுக்காக 8 கவிதை நூல்களையும், 5 கதை நூல்களையும் படைத்துள்ள இவர், பெரியவர்களுக்காகவும் கவிதை நூல்கள் நான்கினைப் படைத்துள்ளார்.

'பாப்பா! பாட்டுப் பாடுவோம்!' எனும் இவரது நூலுக்கு, குழந்தை எழுத்தாளர் சங்கம், 1990இல் சிறந்த குழந்தை இலக்கியத்திற்கான முதற்பரிசை வழங்கிச் சிறப்பித்தது. 'சிறுவர் இலக்கிய மாமணி' என்ற பட்டத்தை அரிமாசங்கம் இவருக்கு வழங்கியுள்ளது.

இவர் கண்டனூர்ப் பேரூராட்சித் தலைவராகவும், கோவை நகரத்தார் சங்கப் பொதுச்செயலராகவும் பொறுப்பேற்றுச் சமூகத் தொண்டுகள் செய்திருக்கிறார். குழந்தை எழுத்தாளர் சங்க ஆலோசகராகவும், கோவை புத்தக வியாபாரிகள், பதிப்பாளர்கள் சங்கத் தலைவராகவும், கோவை மாவட்ட பேரிங் விற்பனையாளர் சங்கத் தலைவராகவும், வள்ளியப்பா இலக்கிய வட்ட அமைப்பாள ராகவும் பணியாற்றுகிறார்.

இவரது பாடல்கள் தமிழ்நாடு அரசு, கர்நாடக அரசு, சிங்கப்பூர் அரசு ஆகியவற்றால் தத்தம் தொடக்கப்பள்ளிப் பாடநூல்களில் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

இவரது 'பாப்பா! பாட்டுப் பாடுவோம்!' நூலிலுள்ள பாடல்கள் சங்கர் – கணேசின் இசையமைப்பில் ஒலிப்பேழைகளாக வெளி வந்துள்ளன.

''செல்லகண பதிதிறமை செந்தமிழை ஏற்றும்'' எனக் கவியரசர் கண்ணதாசன் பாராட்டியிருப்பது, இவர்தம் கவிச்சிறப்பைப் புலப்படுத்தும்.

கணபதி, சொ., (12-7-1944)

பிள்ளையார்பட்டி
வலையபட்டி
பொறியியல் வல்லுநர்

நா.இராம. சொக்கலிங்கம் செட்டியார் – சானகி ஆச்சியின் மகன். மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரியில் பி.ஈ. பட்டம் பெற்றார். கூடுதல் அழுத்தமுள்ள தண்ணீரைக் கருவியாகப் பயன்படுத்திப் பொருட்களை அறுத்தெடுக்கும் துறையில் (Fluid jet cutting) அமெரிக்கா சென்று சிறப்புப் பயிற்சி பெற்றுத் திரும்பினார். பொறியியல்துறை பற்றி உலகத்தமிழ் மாநாடு களில் ஆய்வுக் கட்டுரை வழங்கியுள்ளார்.

எண்ணூர் அனல்மின் நிலையத்திலும், திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலும், ஸ்ரீஹரிகோட்டா ஏவுகணைத் தளத்திலும் பணியாற்றியவர். இப்போது திருவனந்தபுரத்தில் ஆர்.பி.பி.வி.எஸ்.எஸ்.சி. நிறுவனத்தில் நிருவாகியாகப் பணியாற்றுகிறார். அங்குள்ள நகரத்தார் சங்கத்தில் பல்வேறு பொறுப்புக் களையும் ஏற்றுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி

மேலைச்சிவபுரியில் வ.பழ.சா. பழநியப்ப செட்டியார், அவர் தம்பி அண்ணாமலை செட்டியார் ஆகியோர் பண்டிதமணி கதிரேசன் செட்டியாரின் தொடர்பினால் தமிழ் வளர்ச்சிக்கும், சைவசமய வளர்ச்சிக்கும் ஒரு நிறுவனம் தொடங்க எண்ணினர். அதன் விளைவாகத் தோன்றியதே சன்மார்க்க சபை. (கக.)

இச்சபையின் ஓர் உறுப்பாகக் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, சபை தொடங்கப்பெற்ற ஆண்டாகிய 1909இலேயே தொடங்கப்பெற்றது. தொடக்கத்தில் பயிலவந்த மாணவர்கட்குத் தமிழ் இலக்கண, இலக்கியப் பயிற்சியை மட்டும் அளித்து வந்தது.

1915இலிருந்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் நடத்திய பிரவேசம், பாலபண்டிதம், பண்டிதம் ஆகிய தேர்வுக்குரிய பாடத்திட்டத்தில்

Koviloor Digital Library

மாணவர்கட்குப் பாடம் நடத்தி, அவர்கள் அத்தேர்வில் கலந்துகொள்ளச் செய்தது.

1939ஆம் ஆண்டில் இக்கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பெற்றது. அப்பல்கலைக்கழகத்தின் வித்துவான் வகுப்புக் களை இக்கல்லூரி நடத்தியது. திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய பிரிக்கப்படாத அப்போதைய தென்மாவட்டங்களில் வித்துவான் வகுப்பு தொடங்கிய முதல் கல்லூரி என்ற பெருமை இக்கல்லூரிக்கு உண்டு.

1982இல் சென்னைப் பல்கலைக் கழகத்தி லிருந்து பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சியில் உருவாக்கப்பெற்றபோது, இக்கல்லூரி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றது. அப்பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்ட வகுப்புக்கள் இங்கே நடைபெற்று வருகின்றன.

1987இல் இக்கல்லூரியில் எம்.ஏ. வகுப்புக்களும், அதனைத் தொடர்ந்து எம்.பில் ஆய்வு வகுப்புக்களும் தொடங்கப்பெற்றன. 1994இல் மாலைநேரக் கல்லூரியில் பி.காம்; பி.எஸ்ஸி பட்ட வகுப்புக்களும் தொடங்கப் பெற்று நடந்து வருகின்றன.

கல்லூரி சபைக் கட்டிடத்தில் அலுவலகத் தையும், நூலகத்தையும் பெற்று இலங்குகிறது. வகுப்பறைகள் தனியே கட்டப்பெற்றுள. மேலைச் சிவபுரி ஆ.நாகப்ப செட்டியார் 1966இல் மாணவர் விடுதியையும், மகிபாலன்பட்டி சி.இராம. நாகப்ப செட்டியார் 1972இல் மாணவியர் விடுதியையும் கட்டிக் கொடுத்துள்ளர்.

டாக்டர். மெ.சுந்தரம், டாக்டர். தமிழண்ணல், கவிஞர் முடியரசன் ஆகியோர் இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் ஆவர்.

கணேசன், கம்பன் அடிப்பொடி சா.
(6-6-1908 - 28-7-82)


பிள்ளையார்பட்டி

காரைக்குடி

பல்துறை வித்தகர் - கம்பன் கழக நிறுவுநர்

முருவீர. சாமிநாதன் செட்டியார் – நாச்சம்மை ஆச்சியின் மகனாகத் தோன்றினார். முறையான பள்ளிப்படிப்பு மிகக்குறைவே. இளமையில் தந்தையுடன் பர்மாவிற்குச் சென்று தொழில் கற்றுக் கொண்டார். ஆனால் இரண்டுமுறை பர்மா சென்று திரும்பிய பிறகு இவர் தாய்நாட்டிலேயே தங்கிவிட்டார்.

இளமையில் துடிப்பு மிக்க நிலையில், காந்தியத்தால் ஈர்க்கப்பட்டு, நாட்டு விடுதலைப் போரில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். காரைக்குடியில் சொ. முருகப்பா, இராய. சொக்கலிங்கம் ஆகிய இருவருடன் இணைந்து பொதுப்பணிகள் அனைத்திலும் பங்கேற்றார். 1941இல் காரைக்குடியில் தமிழ்இசைச் சங்கம் தொடங்கினார். காரைக்குடியில் நவயுகப் பிரசுராலயம் என்ற பதிப்பகத்தைத் தொடங்கிய சிலருள் இவரும் ஒருவர்.



சா. கணேசன்

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதன் விளைவாகச் சிறைப்பட்டு அலிபுரம் சிறையில் இரண்டாண்டுகள் இருந்தார். மூதறிஞர் இராஜாஜி 1959இல் சுதந்திராக் கட்சி தொடங்கியபோது, அதில் இன்றியமையாத பொறுப்புக்களை ஏற்றார். அக்கட்சியின் சார்பாகக் காரைக்குடிச் சட்டமன்ற உறுப்பினராகத் (1962–1967) தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பணியாற்றினார். பின்னர் 1968இலிருந்து 1974முடியச் சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தொண்டாற்றினார். விடுதலைப் போராட்டக் காலத்திலிருந்து இறுதிவரை சட்டை போடாமலே வாழ்ந்தார்.

முறையான கல்வி குறைவெனினும் தாமாகவே, தமிழ் இலக்கிய, இலக்கணங்களைத் தக்க ஆசிரியர்களிடம் பாடம் கேட்டும், நுணுகிப் படித்தும், தமிழில் மிகச்சிறந்த அறிஞராக ஆனதோடு, வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றிலும் வல்லமை உடையவராக வளர்ந்தார்.

சிறந்த பேச்சாளர். நல்ல எழுத்தாளர். பல்வேறு மலர்களிலும், தொகுப்பு நூல்களிலும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். 'பிள்ளையார்பட்டித் தலவரலாறு', 'நூற்பவர்க்கு', 'இராஜராஜன்', 'தமிழ்த்திருமணம்' போன்ற நூல்களை எழுதியிருக்கிறார். இவர் ஒரு கவிஞரும் கூட. 'தமிழ்த்தொண்டர் தொகை', 'மலர் வழிபாட்டுப் போற்றிப்பதிகம்' போன்ற சிறு கவிதை நூல்களை இவர் படைத்துள்ளார். பிள்ளையார்பட்டிக் கற்பக விநாயகர்பால் கனிவான பாடல்கள் பல பாடியுள்ளார்.

Koviloor Digital Library

கம்பனடிப்பொடி சிறந்த முறையில் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் ஆற்றல் படைத்தவர். மர்ரே ராஜம் அவர்களின் தமிழிலக்கிய வெளியீடுகள் ஒழுங்காகவும், பிழையின்றியும் வெளிவந்ததில் இவருக்குப் பெரும்பங்கு உண்டு. காந்தியடிகளின் வழிபாட்டில் இடம்பெறும் வேத, உபநிடதப் பாடல்களைத் தமிழ்ப் பாடல்களாக ஆக்கி வெளியிட்டுள்ளார். தமிழ்க்கலைக்களஞ்சியத்தில் சில கட்டுரைகளை எழுதியுள்ளார்.

தமிழக வரலாறு, ஆகம நூல்கள், சிற்பக்கலை, கட்டடக்கலை, கல்வெட்டு ஆய்வு ஆகியவற்றிலும் இவர் நுட்பமான புலமை படைத்தவர். மாமல்லபுரம் சிற்பக்கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய வை. கணபதி சிற்பியுடன் இணைந்து இவர் எழுதிய 'சிற்பச்செந்நூல்' எனும் நூல் அனைவராலும் போற்றப்படும் ஒன்று. இத்துறைகள் அனைத்தோடும் தொடர்புடைய கட்டுரைத்தொடர் ஒன்றை 1956இல் 'கலைமகளி'ல் 'கல்சொல்லும் கதை' என்ற தலைப்பில் எழுதினார்.

தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் இராசராசன் நினைவாகச் சதயவிழாக் கொண்டாடும் திட்டத்தைத் தமிழக அரசுக்கு வழங்கியவர் இவரே. 1958இல் இளையாத்தங்குடியில் காஞ்சி காமகோடி பீடத்தார் நடத்திய ஆகமக்கலை விழாவைச் சிறப்புற நடத்திக் கொடுத்தமையால் இவருக்குக் காஞ்சிப்பெரியவர் சந்திரசேகரேந்திர சரசுவதி 'தொண்டர்குல சேகரன்' என்ற பட்டத்தை வழங்கினார்.

1966இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத்தமிழ் மாநாட்டில் தமிழக அரசின் பேராளராகப் பங்கேற்றார். 1968இல் சென்னையில் இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றபோது, முதல்வர் அண்ணாதுரையின் வேண்டுகோளை ஏற்று, 'கலைக்காட்சிக் குழுவின்' தலைவராக இருந்து சிறப்பான ஒரு கலைக்காட்சியை நடத்தியதோடு, பயன்தரும் ஒரு சிறந்த கையேட்டினையும் தயாரித்து வெளியிட்டார். 1981இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ்மாநாட்டின் இறுதி நாளில் தமிழக அரசு பாராட்டிய தமிழறிஞர் பதின்மருள் இவரும் ஒருவர்.

அழகப்பா கல்வி அறநிலையத்தின் தொடக்கத்திலிருந்து அதன் உறுப்பினராகப் பணியாற்றிய இவர் தமிழ் வெளியீட்டுக்கழகம், மாநிலத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை, மதுரைப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு குழுக்கள், இந்துசமய அறக்கட்டளை ஆட்சிக்குழு ஆகியவற்றிலும் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.

இவ்வாறு கணேசனார் பல்துறை ஆற்றலராகத் திகழ்ந்தாலும், அவரது வாழ்க்கைப்பணி என்பது, கம்பனுக்குத் தமிழ்நாட்டில் ஓர் இயக்கத்தை ஏற்படுத்திக் கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்த்த கவின்மிகு பணிதான்.

தம் இளமைக் காலத்தில், தம் இல்லத்தில் புரட்டாசி மாதம் தோறும் நிகழும் 'இராமாயணம் படித்தல்' தம்மைக் கம்பன்பால் ஈர்த்த முதல் தூண்டுகோல் என்று இவர் ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார். அடுத்துக் காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தின் சார்பில் இராமகிருஷ்ணா கல்விச் சாலையில், மோகனூர் கோவிந்தராஜ ஐயங்கார் நிகழ்த்திய கம்பராமாயணச் சொற்பொழிவுகள் இவரது கம்பன் ஈடுபாட்டை மேலும் வளர்த்தன.

இப்பின்னணியுடன், சொ. முருகப்பா, இராய.சொ. போன்றோர் துணையுடன் 1938ஆம் ஆண்டு இறுதியில் காரைக்குடியில் 'கம்பன் கழகம்' (த.க.) என்ற அமைப்பை உருவாக்கினார். கம்பன் பற்றிய வரலாறு தெளிவின்றி இருந்த நிலையில், சா. கணேசனார் தம் ஆய்வின் முடிவாக, கி.பி. 886க்குச் சமமான விசுவாவசு ஆண்டு பங்குனித் திங்கள் 4ஆம் நாள் புதன்கிழமை அத்த நட்சத்திரம் கூடிய நாளில் கம்பன் இராமாயணத்தை அரங்கேற்றினான் என உறுதியாக வெளியிட்டார்.

அந்த அடிப்படையில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் மகம், பூரம், உத்தரம் ஆகிய நட்சத்திரங்கள் கூடிய மூன்று நாட்களில் காரைக்குடியிலும், அத்த நட்சத்திரம் கூடிய நாளில், கம்பன் சமாதி அமைந்திருக்கும் நாட்டரசன்கோட்டையிலும் கம்பன் விழாவை நடத்துவது எனக் கம்பன் கழகத்தினர் முடிவெடுத்தனர்.

இம்முறையில் முதல் கம்பன் விழா 2–4–1939 அன்று காரைக்குடியில் தொடங்கியது. அப்போதிலிருந்து, அரசியல் முதலிய புறக் காரணங்களாலோ, அமைப்பாளராகிய கணேசனார் குடும்ப நிகழ்வுகள், அவர் சிறைப்படுதல் போன்ற தனிக் காரணங்களாலோ எதனாலும் தடைப்படாமலும், மாறுதலின்றியும், ஒரே முறையில் ஆண்டுதோறும் நான்கு நாட்கள் விழாவாகக் கம்பன் விழா நடந்து வருவது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ்வாறு இவர் தோற்றுவித்த கம்பன் கழகமும், அது ஆண்டுதோறும் நடத்திய விழா நிகழ்ச்சிகளும், அறிஞர் பலருக்கும் செட்டிநாட்டுத் தொடர்பை ஏற்படுத்தின. வந்தவர்கள் விழாவின் சிறப்பையும், பயனையும் கண்டு வியந்து, தத்தம் ஊர்களில் 'கம்பன் கழகம்' தொடங்க முற்பட்டனர்.

Koviloor Digital Library

தொடக்கத்திலிருந்து நகரின் மத்தியில் அமைந்துள்ள மீ. சு. பெண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத்திடலில் கொட்டகை போட்டு விழா நடத்திக் கொண்டிருந்த சா.க. தம் மணிவிழாவிற்குப் பிறகு, காரைக்குடியில் கம்பன் மணிமண்டபம் (த.க.) ஒன்றுகட்டி, கம்பன் விழாவினை, அதில் நடத்தவேண்டும் என விரும்பி, அப்பணியினை அன்பர்கள் துணையோடு தொடங்கினார். 1972 இலிருந்து, காரைக்குடி, செக்காலையில் அமைந்திருக்கும், 'கம்பன்மணி மண்டபத்'தில் கம்பன்விழா நடைபெற்று வருகிறது.

தமிழன்னைக்கு ஒரு திருவுருவம் சமைத்து, ஒரு திருக்கோவில் கட்டவேண்டும் என்ற முயற்சியை அடுத்து மேற்கொண்டார் கணேசனார். தமிழக அரசின் நிதி உதவியோடு, சிற்பக்கலை வல்லுநர் கணபதி ஸ்தபதியின் உழைப்பால், கம்பனடிப் பொடியின் கனவு கம்பன் மணிமண்டப வளாகத்தில் வடிவம் கொள்ளத் தொடங்கியது. அவர் வாழ்நாளில் நிறைவெய்தாத 'தமிழ்த்தாய் கோவில்' (த.க.) பின்னர் நிறைவெய்தித் திறந்து வைக்கப்பட்டது.

1970ஆம் ஆண்டு நடைபெற்ற கம்பன் விழாவில் நீதிபதி எஸ். மகராசன், கணேசனாருக்குக் கம்பன் அடிப்பொடி என்ற பட்டத்தை வழங்கினார். அப்போதிருந்து கம்பன் அடிப்பொடி. சா. கணேசன் என அவர் பெயர் வழங்கியது. ஆனால் 1977இல் அவர் தம் பெயரை இனி, 'கம்பன் அடிப்பொடி' என மட்டும் குறித்தாலே போதும் எனக் கூறிவிட்டார். இது கம்பன்பால் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டையும், பக்தியையும் புலப்படுத்தும்.

கம்பனடிப்பொடி தனித்தன்மைகள் மிக்கவர். காலந்தவறாமை, விழா நடத்துவதில் பேராற்றல், கொள்கையில் உறுதி, தரம் தாழாமல் நிகழ்ச்சிகளை அமைக்கும் கவனம், அறிஞர் கூட்டுறவில் ஆர்வம் போன்றவை அவர்தம் தனித்தன்மைகள். காந்தியம், இராமகிருஷ்ணா இயக்கம் போலக் கம்பனுக்காக ஓர் இயக்கத்தை உருவாக்கிப் பரப்பியவர் என இவரை வரலாறு போற்றும்.

கண்டரமாணிக்கம்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து, கல்லல் சாலையில் ஆலங்குடி தாண்டியதும் வலப்புறம் பிரியும் கிளைச்சாலையில் 18 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, சூரக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய 6 நகரக்கோவில்களைச் சேர்ந்த 461 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இவ்வூரில் நகரத்தாருக்குப் பொதுவான மாணிக்க நாச்சியம்மன் கோவில் உள்ளது. ஏறத்தாழ 90 ஆண்டுகட்கு முன் கட்டப்பெற்ற இக்கோவிலுக்கு இதுவரை 4 குடமுழுக்கு விழாக்கள் நிகழ்ந்துள. சிவகங்கை அரசர் குடும்ப அறநிலையத்திற்குச் சொந்தமான சிவன்கோவில் ஒன்றும் இவ்வூரில் உள்ளது. இவ்வூரில் இரண்டு ஊருணிகள் உள.

வைரவன் கோவிலைச் சேர்ந்த பெரி.சுப.பெரி குடும்பத்தார் 60 ஆண்டுகட்கு முன் தொடங்கிய தெண்டாயுதபாணி உயர்நிலைப்பள்ளி, தெண்டாயுதபாணி தொடக்கப்பள்ளி ஆகியவையும், இலுப்பைக் குடியைச் சேர்ந்த நா.பிச.வெ. குடும்பத்தார் தொடங்கிய மெய்யம்மை ஆச்சி – பிச்சைக்குட்டி பெண்கள் உயர்நிலைப்பள்ளியும் இவ்வூரில் கல்விப் பணியாற்றி வருகின்றன.

சூரக்குடியைச் சேர்ந்த முரு.அரு.சுப. குடும்பத்தார் தொடங்கி நடத்திய மருத்துவமனை அவர்களால் நன்கொடையாக வழங்கப்பெற்று, இப்போது அரசு மருத்துவமனையாக நடந்து வருகிறது.

மாத்தூர் கருப்பூர்ப் பிரிவைச் சேர்ந்த தியாகி இலட்சுமணன் செட்டியார் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற இவ்வூர் நகரத்தாராவார்.

கண்டவராயன்பட்டி

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர் வழியாகச் சிங்கம்புணரி செல்லும் சாலையில் 30 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய நான்கு கோவில்களைச் சேர்ந்த 520 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற நகரச்சிவன் கோவில் உள்ளது. 1903இல் கட்டப்பெற்ற இக்கோவிலுக்கு, 1903, 1922, 1948, 1972, 1991 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நடைபெற்றுள. இங்குள்ள சிதம்பரம் செட்டியார் ஊருணியின் வடகரையில் நகரத்தாருக்குப் பொதுவான பிள்ளையார்கோவில் ஒன்றும் உள்ளது.

Koviloor Digital Library

தெ.சி.நா. குடும்பத்தாரால் கட்டி, நிருவகிக்கப்படும் தண்டாயுதபாணி கோவிலும் இவ்வூரில் அமைந்துள்ளது. இக்கோவிலில் ஒவ்வொரு கார்த்திகை நாளிலும் அன்னதானம் நடைபெறுகிறது. இக்கோவிலின் பின்புறம் அமைந்துள்ள தெ.சி.நா. சொக்கலிங்கம் செட்டியார் சமாதியில் ஆண்டுதோறும் குரு பூசையும் நிகழ்ந்து வருகிறது.

இவ்வூரின் வடக்கே மணிமுத்தாறு, சின்ன ஆறு ஆகிய இரு ஆறுகள் ஓடுகின்றன. இவ்வூரின் நான்கு பக்கங்களிலும் பெரிய கண்மாய்கள் அமைந்துள. இவை தவிரக் கோவில்களை ஒட்டியும், சில தனிப்பட்ட குடும்பங்களின் அறப்பணியாகவும் இவ்வூரில் ஏறத்தாழப் பத்து ஊருணிகள் உள்ளன.

'ஸ்ரீ பணிச்சாருடையவர் தருமகலாசாலை' என்ற பெயரில் ஒரு நடுநிலைப்பள்ளி சி.உ. இராம. இராமசாமி செட்டியாரால் 8–6–1930 இல் தொடங்கப்பெற்றது. இதற்கெனச் சொந்தக் கட்டிடங்கள் 1940 இல் கட்டப்பெற்றன. இப்போது இப்பள்ளி சி.உ. இராம. கணபதி செட்டியாரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

கண்டவராயன்பட்டி சிவராமன் செட்டியார் வீட்டில் கடந்த 100 ஆண்டுகளாக ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப்படுகிறது. நான்கு சனிக்கிழமைகளிலும் பகலில் பூசைபோட்டு அன்னதானம் செய்யப்படுகிறது.

இவ்வூரில் இளையாத்தங்குடி கழனிவாசல்குடி நகரத்தாரின் ஒரு பிரிவினர் பத்தினி நாச்சியம்மன் படைப்பையும், மற்றொரு பிரிவினர் மேடைக்காளி படைப்பையும், மாத்தூர் மணலூர் நகரத்தார் தேவியாரம்மன் படைப்பையும், பிள்ளையார்பட்டி நகரத்தார் பத்தினி நாச்சியம்மன் படைப்பையும் தங்களுக்குரிய பொதுப் படைப்புக்களாகப் படைத்து வருகின்றனர்.

கண்டவராயன்பட்டி – திருப்புத்தூர்ச் சாலையைத் தம் சொந்தச் செலவில் அமைத்துக் கொடுத்தவர் இவ்வூர் தெசி.நா. சொக்கலிங்கம் செட்டியார் ஆவார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் இவ்வூரைச் சேர்ந்த தொண்டர் நா.அருணாசலம் செட்டியார் ஆற்றியுள்ள பங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வூரில் திருவிழாக்கள் பல நிகழ்கின்றன. வைகாசி மாதம் கிணற்றடிக் காளியம்மன் கோவிலில் நடைபெறும் பூத்திருவிழாவும், ஆனிமாதம் வல்லநாட்டுக் கருப்பர், காடப்பிள்ளை ஐயனார் கோவிலில் நடைபெறும் புரவி எடுப்புத் திருவிழாவும் சிறப்பானவை.

நகரத்தார்க்குரிய சிறப்பு நிகழ்ச்சி, கண்டவராயன்பட்டிக்குத் தைப்பூசப் பழநிக் காவடிகள் வரும் நிகழ்ச்சி ஆகும். கடந்த முந்நூறு ஆண்டுகளாக, கண்டனூர், காரைக்குடி, தேவகோட்டைக் காவடிகளும், மற்றும் குன்றக்குடி வழியாக வரும் பிற செட்டிநாட்டு ஊர்க்காவடிகளும் கண்டவராயன்பட்டி பிலாவாய்க் கண்மாய்க் கரைக்கு வந்து நவமி திதியன்று தங்கும். இங்குள்ள கண்டசித்தி விநாயகர் கோவிலில் காவடிகளுக்குப் பகல் நைவேத்தியம் நிகழும். இவ்விழாவின் சிறப்பு, கண்டவராயன்பட்டி என்றாலே, பழநிக்காவடி தங்கும் இடம் என்ற எண்ணத்தை நகரத்தார் அனைவருக்கும் நினைவூட்டும் வண்ணம் அமைந்ததாகும்.

கண்டனூர்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடி – அறந்தாங்கிச் சாலையில், காரைக்குடியிலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், இலுப்பைக்குடி, சூரக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 8 கோவில்களைச் சேர்ந்த 750 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பேரூராட்சி மன்றம்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற பெயருடன் கூடிய நகரச் சிவன் கோவில் உள்ளது. இக்கோவில் 1892இல் கட்டப்பெற்று முதல் குடமுழுக்கு நிகழ்ந்தது. பின்னர் 1952, 1978, 1992 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நிகழ்ந்துள.

நாட்டாருக்கும், நகரத்தாருக்கும் பொதுவான செல்லாயி அம்மன் கோவில், பிள்ளையார்பட்டி நகரத்தாருக்குப் பொதுவான கற்பக விநாயகர் கோவில், மாத்தூர் உறையூர்ப் பிரிவைச் சேர்ந்த சி.நெ.வீர. குடும்பத்தாரால் கட்டி, நிருவகிக்கப்பெறும் சீனிவாசப் பெருமாள் கோவில், மெ.ப.வெ. அழகப்பசெட்டியார் (இளை. பெரு), வி.பி. தியாகராசன் செட்டியார் (மா.அரும்) லெ.சித.சுப.லெ. சுப்பிரமணியன் செட்டியார் (சூரக்குடி), ப.கு.அரு. லெட்சுமணன் செட்டியார் (பிள்ளையார்பட்டி) ஆகியோர் சேர்ந்து கட்டிய சண்முகநாதன் கோவில் ஆகியவையும் இவ்வூரில் உள.

இவ்வூர்க் குடிநீர் ஊருணியாகிய பெருமாள் கோவில் ஊருணி மாத்தூர் உறையூர்ப் பிரிவைச் சேர்ந்த சி.நெ.வீர. குடும்பத்தாராலும்,

Koviloor Digital Library

சிவன்கோவில் ஊருணி இவ்வூர்ப் பிள்ளையார்பட்டி நகரத்தாராலும், நெல்லிமரத்து ஊருணி சூரக்குடிக் கோவிலைச் சேர்ந்த நா.பெ.வெ. இராமசாமி குடும்பத்தாராலும் அமைக்கப் பெற்றவை.

மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த வீ.தெ.வீரப்ப செட்டியாரால் 1942 இல் தொடங்கப் பெற்ற சிட்டாள் ஆச்சி நினைவுத் தொடக்கப் பள்ளியும், சிட்டாள் ஆச்சி நினைவு உயர்நிலைப் பள்ளியும் இப்போது அவர் வழி முறையினரால் நிருவகிக்கப் பெற்றுவருகின்றன. மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த எஸ்.வி. இராமையா குடும்பத்தினர் ஒரு பாலர் பள்ளியையும், புதுவயலைச் சேர்ந்த புலவர் இராம. வீரப்பன் (இளை.பெரு) செல்லாத்தாள் பாலர் பள்ளியையும் இவ்வூரில் நடத்தி வருகின்றனர்.

சூரக்குடிக்கோவிலைச் சேர்ந்த லெ.சித. லெ.பழ. குடும்பத்தினர் காந்திமதி மருத்துவமனை என்ற பெயரில் ஒரு மருத்துவமனையினைக் கடந்த 10 ஆண்டுகளாக நடத்தி வருகின்றனர். இவ்வூரில் உள்ள அரசினர் மருத்துவமனைக்கு இடம், கட்டிடம் முதலியவற்றை நன்கொடையாக வழங்கியவர்கள் சித.அரு. (மா.உறை.), சித.பழ.இராம. (மா.மண்), அ.சி.நா.சி.சித. (வை.தெய்வ) ஆகியோராவர்.

நகரச்சிவன் கோவிலுக்கு அருகில் இவ்வூர்ப் பிள்ளையார்பட்டி நகரத்தார்களுக்குரிய மடம் ஒன்று உள்ளது. இங்கிருந்துதான் வெளியூர் மாப்பிள்ளைகள் அழைக்கப்படுவது இவ்வூர் வழக்கம். இரணிக்கோவில் நகரத்தாருக்குச் சொந்தமான மடம் அருணாசலய்யா மடம். இம்மடத்தில் ஆண்டுதோறும் குருபூசை நடத்தி அன்னதானம் வழங்குகின்றனர்.

சூரக்குடிப் பிரிவைச் சேர்ந்த லெ.சுப. வகையினர் முத்துராமய்யா குரு பூசையையும், இரணிக்கோவிலைச் சேர்ந்த கு.ப.சுப.சு.சுப. குடும்பத்தார் மாசி மாதத்தில் மகேசுவர பூசையையும், அதே கோவிலைச் சேர்ந்த சி.இராம. குடும்பத்தார் ஆடி மாதத்தில் மகேசுவர பூசையையும் நடத்துகின்றனர்.

கண்டனூரின் தென்பகுதியில் அமைந்திருக்கும் வையைக்கரையில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் பெரிய அளவில் சிறப்பான கருப்பர் பூசை நடத்தப்பெறுகிறது. கண்டனூர் நாட்டாரும், பல ஊர் நகரத்தாரும் சேர்ந்து இப்பூசையை நடத்திவருகின்றனர்.

ஆத்தங்குடி, கண்டனூர், கோட்டையூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த பிள்ளையார்பட்டிப் பங்காளிகள் இவ்வூரில் ஆண்டுதோறும் ஆடிமாதம் அக்கினியாத்தாள் படைப்பைப் படைத்து வருகின்றனர். வைரவன் கோவில் தெய்வநாயகர் வகுப்பு வடகாட்டுப்பட்டியார் வகையினர் ஆண்டுதோறும் கருப்பர் படைப்பையும், இலுப்பைக்குடியினர் ஆண்டுதோறும் முத்தழகிஆயா படைப்பையும், நேமங்கோவிலார் இரண்டு ஆண்டுகட்கொரு முறை ஒரு பொதுப் படைப்பையும் படைத்து வருகின்றனர்.

இவ்வூர் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த பெ.அழ. குடும்பத்தார் திருத்துறைப்பூண்டி, திருத்தெங்கூர் ஆகிய ஊர்களின் சிவன் கோவில் திருப்பணிகளைச் செய்துளர். வைரவன் கோவிலைச் சேர்ந்த வயி.இராம. குடும்பத்தார் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில், மற்றும் குமரகோட்டக் கோவில் திருப்பணிகளைச் செய்ததோடு காஞ்சிபுரத்தில் வேதபாடசாலை ஒன்றையும் நடத்தினர்.

பிள்ளையார்பட்டிக்கோவிலைச் சேர்ந்த மு. நா. குடும்பத்தார் குன்றக்குடியில் ஒரு பிள்ளையார் கோவில் கட்டியுள்ளனர். அங்கே மு.நா. வேதபாடசாலை என்ற வேதபாடசாலையையும் நடத்தினர். இவ்வூரைச் சேர்ந்த நேமங்கோவில் தெ.அருசித. அருணாசலம் செட்டியார், வைரவன் கோவில் அ.சி.நா.சி. நாச்சியப்ப செட்டியார், சிதம்பரம் செட்டியார் ஆகியோர் இணைந்து திருக்கண்ணார் கோவில் சிவன்கோவில் திருப்பணியினைச் செய்துளர்.

இரணிக்கோவிலைச் சேர்ந்த சி. இராம. சொ. குடும்பத்தார் இராமேசுவரத்தில் சதாவிருத்திச் சத்திரத்தையும், சூரக்குடிக் கோவிலைச் சேர்ந்த லெ.சித. குடும்பத்தார் திருநெல்வேலியில் ஒரு சத்திரத்தையும் நடத்தி வருகின்றனர்.

வைரவன் கோவில் தெய்வநாயகர் வகுப்பைச் சேர்ந்த அ.நா. குடும்பத்தார் மயிலாடுதுறையில் அ.நா. அன்னசத்திரத்தையும், அதே பிரிவைச் சேர்ந்த அ.சி.நா. குடும்பத்தார் மயிலாடுதுறையில் அ.சி. வேதபாடசாலையையும் நடத்தி வருகின்றனர்.

மாத்தூர் அரும்பாக்கூரைச் சேர்ந்த பெ.அள. வகையினர் புதுவயலில் ஒரு பிள்ளையார் கோவில் கட்டியுள்ளனர். அதே கோவிலைச் சேர்ந்த கு.மு. வகையினர் சாக்கோட்டையில் ஒரு சத்திரத்தை நடத்தி வருகின்றனர்.

கண்டனூருக்கும் புதுவயலுக்கும் இடையில் ஒரு தொடர்வண்டி நிலையம் அமைந்துளது. காரைக்குடியிலிருந்து அறந்தாங்கி வழியாகச் சென்னை செல்லும் கம்பன் விரைவுத் தொடர் வண்டி நின்று செல்லும் இந்நிலையத்திற்குக் கண்டனூர் – புதுவயல் தொடர்வண்டி நிலையம் என்பது பெயர்.

Koviloor Digital Library

நகரத்தார் நானூறு ஆண்டுகளாக நடத்திவரும் பழநி நடைப்பயணத்தில் வேல்தாங்கிச் செல்லும் அருளாடியார் கண்டனூரைச் சேர்ந்தவரே. முதன்முதலில் இப்பணியைச் செய்தவர் நகரத்தார் அறப்பட்டயத்தில் இடம்பெறும் குட்டைஐயா ஆவார். அவர் வழிமரபில் ஒன்பதாவது தலைமுறையினரான பழநியப்பன் இப்போது இப்பணியைச் செய்து வருகிறார்.

ஒன்பது நகரக்கோவில்களுள் ஏழுநகரக் கோவில் அறங்காவலர் குழுவில் இடம்பெறும் பரம்பரை உறுப்பினர்கள் கண்டனூரில் உள்ளனர் என்பது இவ்வூருக்குள்ள சிறப்பு.

கண்ணகி

சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவி. காவிரிப் பூம்பட்டினத்து வணிகர் மாநாய்கனின் மகள். மாசாத்துவான் மகன் கோவலனின் வாழ்க்கைத் துணைவி. இளங்கோவடிகள் நகரத்தார் குலத்துப் பெண்ணின் கற்பு வீரத்தால் ஈர்க்கப்பட்டே சிலப்பதிகாரத்தை இயற்றினார். பத்தினித் தெய்வமாகச் சேரன் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்துக் கோவில் கொண்டாடும் அளவு சிறப்புடையவள் இப்பெண்.

கணவன் முதன் முதலில் பலபடப் பாராட்டிப் பேசும்போதும் இவள் எதுவும் பேசவில்லை. கணவன் மனையகம் மறந்து மாதவி வீட்டிலேயே தங்கியபோதும் இவள் எதுவும் பேசவில்லை. மேலும் மாமனார் மாமியார் இவள் துயர்முகம் கண்டால் வருந்துவரே என்று அவர்கள் பார்க்கும்போது சிரிப்பதுபோல் பொய்யாக வாய்முறுவல் பூத்துத் தன் துயரத்தை மறைத்துக் கொள்ளும் இயல்பினள். கொங்கை முன்றில் குங்குமம் எழுதாது மங்கல அணியாம் தாலியன்றிப் பிற அணிகள் அணியாது வாழ்ந்தனள். அவளது தோழி தேவந்தி சோமகுண்டம் சூரியகுண்டம் ஆகியவற்றில் நீராடிக் காமவேள் கோட்டம் கைதொழுதால் கணவனை மீண்டும் பெறலாம் எனக் கூறிய போது கண்ணகி 'பீடன்று' என மறுத்து விடுகிறாள். இதுவே அவள் பேசும் முதல் சிறுதொடர். குலமானம் பேணுவதில் அவள் கொண்ட உறுதிப்பாட்டை இது புலப்படுத்தும். ஆகவேதான் பின்னர் கணவன் மானம் காக்க மதுரை நகரில் பொங்கியெழுந்து அஞ்சா நெஞ்சினளாகப் பாண்டியன் அவையிலே வழக்குரைக்கிறாள். கோவலன் இவளெதிர் வந்து 'குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த இலம்பாடு நாணுத்தரும்' என்றபோது அவன் கவலை நீக்கச் 'சிலம்புள கொண்ம்' என்றாள். சிலம்பு முதலாக மதுரை சென்று பொருளீட்டுவோம் வா எனக் கணவன் அழைத்ததும் உடனே மறுக்காமல் அவனைப் பின்தொடர்ந்தாள்.

கவுந்தியடிகள் அவர்கட்கு வழித்துணையாக வாய்த்தார். புகார் எல்லை தாண்டியதும் மதுரை வந்ததா? என்கிறாள். ஏனெனில் வண்ணச் சீறடி மண்மகள் அறியா வண்ணம் வாழ்ந்தவள் கண்ணகி. 'ஆறைங்காதம் அணித்து' எனக் கோவலன் கூற வெகுளிப்பெண்ணாய் உடன்பட்டுச் செல்கிறாள். மண்ணில் நடந்து பழக்கம் இல்லாதவள் காட்டிலும் மேட்டிலும் குழியிலும் கல்லிலும் முள்ளிலும் முந்நூறுமைல் நடக்கிறாள். அப்போதும் கோவலன் மேனி வாடுவது கண்டு அவள் வருந்தினாளே ஒழியத் தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடியாகத் திகழ்ந்தாள். மாதரி வீட்டில் கோவலன் 'நான் அழைத்ததும் சிந்தியாமல் உடன் எழுந்து வந்தாயே! ஏன்?' என்று கேட்க 'யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலில் ஏற்று எழுந்து வந்தேன்' என்று கூறும் கண்ணகி 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' எனக் கோவலன் தவறுகளையும் சுட்டிக் காட்டுகிறாள். பேசவேண்டிய நேரத்தில் சொல்ல வேண்டியதை மனத்தில் பதியும் வண்ணம் சொல்வதில் வல்லவள். கோவலன் கைச் சிலம்பு பாண்டிமாதேவி காற்சிலம்பு என்று கருதிக் கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டான் என்றவுடன் பொங்கி யெழுகிறாள் கண்ணகி. கோவலனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சிலம்பில் மாணிக்கப் பரல் உள்ளன என மன்னவன் முன் உடைத்துக் காட்டித் தன் கணவன் குற்றமற்றவன் என்பதை நிலைநாட்டுகிறாள். நல்லோரைத் தவிர்த்து மற்றோரை மதுரை நகரில் தீக்கிரையாக்குகிறாள் சேரநாடு சென்று அங்கு கோவலன் வந்தழைக்க விண்ணகம் செல்கிறாள். சேரன் செங்குட்டுவன் இப்பத்தினித் தெய்வத்திற்குக் கற்கோவில் எடுத்து வழிபடுகிறான்.


இளங்கோவடிகள் கண்ணகியை அறிமுகப் படுத்தும் பொழுதே 'தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் என மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் கண்ணகி' என அறிமுகப் படுத்துகிறார். கவுந்தியடிகள் 'கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்' எனப் பாராட்டுகிறார். சாலினி 'ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி' என வருவது முன்னுரைக்கிறாள். சேரன் செங்குட்டுவன் கற்கோவிலும் அவன் தம்பி இளங்கோ சொற்கோவிலும் எடுத்துக் கண்ணகியாம் பத்தினித் தெய்வத்தின் புகழ் பரவினர்.

Koviloor Digital Library

கண்ணதாசன், கவியரசர் (24-6-1927 - 17-10-81)

மாத்தூர் - அரும்பாக்கூர்
காரைக்குடி
கவிஞர்

சிறுகூடல்பட்டியில் சாத்தப்பசெட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் எட்டாவது பிள்ளையாகத் தோன்றினார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முத்தையா. இவரைக் காரைக்குடி முத்துப்பட்டணத்தைச் சேர்ந்த அ.நா.பழநியப்ப செட்டியார் – சிகப்பி ஆச்சி குடும்பத்தார் பிள்ளை கூட்டிக் கொண்டனர். அவர்கள் இவருக்குச் சூட்டிய பெயர் நாராயணன். இவ்விரு பெயர்களும் மறைந்து இவரே சூட்டிக் கொண்ட புனைபெயராகிய கண்ணதாசன் என்ற பெயர் நிலைத்துள்ளது.



கவியரசர் கண்ணதாசன்

இவர் அமராவதி புதூரில் உள்ள குருகுலத்தில் எட்டாவது வரை பயின்றார். அப்போது ஏற்பட்ட எழுத்தார்வத்தால் படிப்பை நிறுத்திக் கொண்டு இதழியல் உலகில் நுழைந்தார். 1944இல் இராமச்சந்திரபுரத்திலிருந்து வெளியான 'திருமகள்' எனும் இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். அப்போதுதான் இவர் தம் பெயரைக் கண்ணதாசன் என மாற்றிக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து கண்ணதாசன் இதழியல் உலகிலிருந்து அரசியலுக்கும், பின்னர் திரை உலகுக்கும் இறுதியில் ஆன்மீக உலகுக்கும் சென்றார். சென்ற உலகிலெல்லாம் வெற்றிக் கொடி நாட்டினார்.

இவர் ஆசிரியர் பொறுப்பேற்று நடத்திய இதழ்கள் பல. அவை திரைஒலி, மேதாவி, சண்டமாருதம், தென்றல், தென்றல் திரை, முல்லை, கடிதம், நவசக்தி, கண்ணதாசன் ஆகியவையாம். இவற்றுள் நாளிதழ், வார இதழ், மாத இதழ் என்பன உள. அது போல அரசியல் சார்ந்த இதழ்கள், திரைஉலகம் சார்ந்த இதழ்கள், இலக்கிய இதழ்கள் என்பன உள. பிறரால் நடத்தப்பட்ட இதழ்கள், தாமே நடத்திய இதழ்கள் என்பன உள.

இந்த அனைத்து இதழ்களும் இவர் பொறுப்பேற்றிருந்த காலங்களில் வாசகரால் எதிர்பார்க்கப்பட்டவையாகவும், மிகுதியாக வாங்கிப் படிக்கப்பட்டவையாகவும், மக்களைக் கவர்ந்தன என்பதில் ஐயமில்லை. 'தென்றல்' வார ஏட்டில், பழைய 'குமரன்' இலக்கிய இதழின் அடிச்சுவட்டில், இவர் ஈற்றடி கொடுத்து வெண்பா எழுதச் சொல்லி நடத்திய வெண்பாப் போட்டி செட்டிநாட்டில் மிகப்பல கவிஞர்களை உருவாக்கியது.

'சண்டமாருதம்' இதழைச் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தார் நடத்தினர். 1948இல் அவர்கள் இதனை நிறுத்த நேர்ந்தது. அப்போது இதன் ஆசிரியராக இருந்த கண்ணதாசனைத் தங்களுடைய கதைத்துறையில் பணியாற்றும்படி கேட்டுக் கொண்டனர். இதுதான் கண்ணதாசன் திரைஉலகில் நுழைய நேர்ந்த சூழல்.

திரை உலகில் கலைஞர் கருணாநிதியுடன் இவருக்கு ஏற்பட்ட தொடர்பின் காரணமாக இவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார். இயல்பான இவரது கவிதையாற்றலை இனம் கண்டு கொண்ட கலைஞர் இவருக்குக் 'கவிஞர்' என்ற பட்டத்தை வழங்கி, இயக்கத்தின் வாயிலாக, இவர் புகழைப் பரப்பினார்.

பின்னாளில் இவர் தி.மு.க.வை விட்டு விலகி, காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்தாலும், இவருடைய வாழ்நாளின் இறுதிக்காலம் வரை கலைஞர் கருணாநிதி, எம்.ஜி. இராமச்சந்திரன் போன்றோரோடு இவருக்கிருந்த நட்போ, அவர்கள் இவரிடம் கொண்டிருந்த மதிப்போ மாறவேயில்லை என்பது இவரது தமிழுக்குக் கிடைத்த தனிச் சிறப்பாகும்.

இவர் மிகச் சிறந்த பேச்சாளராவார். குட்டிக் கதைகள், உவமைகள், நகைச்சுவைத் துணுக்குகளோடு, கடல் மடை திறந்தது போன்ற வேகத்தில், இனிய நடையில், எளிய சொற்களோடு அமையும் இவரது மேடைப் பேச்சு கேட்போரைப் பிணித்தது; கேளாரையும் ஈர்க்கத் தக்கது.

எழுத்தாளர் என்ற நிலையிலும் இவர் பெரும்புகழ் பெற்றவராவார். தொடக்கத்தில் கவிஞராக அறிமுகமானாலும், பின்னர் இவர் எழுதாத இலக்கிய வகையே இல்லை எனும்படி அனைத்துத் துறைகளிலும் எழுதினார். தனிக் கவிதைகள், திரைப்படப் பாடல்கள், கவிதை வடிவிலான காப்பியங்கள், கட்டுரைகள்.

Koviloor Digital Library

சிறுகதைகள், நாவல்கள் என அனைத்துத் துறைகளிலும் இவரது நூல்கள் வெளி வந்துள்ளன.

மாங்கனி, ஆட்டனத்தி—ஆதிமந்தி, தைப்பாவை போன்றவை இவரது காப்பியங்கள். இவருடைய கவிதைகள் ஏழு தொகுதிகளாக வெளிவந்துள. இவருடைய ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள். 'திரை இசைப்பாடல்கள்' என்ற பெயரில் தனி நூலாக வெளிவந்துள்ளன. ஆதிசங்கரர் இயற்றிய கனகதாரா தோத்திரத்தைத் தமிழில் 'பொன்மழை' யாகப் பொழிந்திருக்கிறார் கவியரசர். இறுதியாக இவர் படைத்தது 'ஏசுகாவியம்'. ஏசுவின் வரலாற்றை எளிய, இனிய தமிழில் இலக்கிய உத்திகள் பலவும் பளிச்சிடும் வண்ணம் கவியரசர் எழுதியிருப்பதைக் கிறித்தவ உலகும், தமிழ் உலகும் என்றென்றும் நினைந்து போற்றும்.

கட்டுரை வடிவில் இவர் படைத்த நூல்கள் பலப்பல. குறிப்பிடத்தக்கவை 'வனவாசம்' என்ற பெயரில் இவர் எழுதிய தன் வரலாற்று நூலும், 'அர்த்தமுள்ள இந்துமதம்' (10பாகங்கள்) எனும் பெயரில் எழுதிய ஆன்மீகக் கட்டுரை நூலும் ஆகும். 'அர்த்தமுள்ள இந்துமதம்' நூலைக் காஞ்சி காமகோடி பீடத்தின் பெரியவர்கள் சந்திரசேகரேந்திர சரசுவதி அவர்களே பன்முறை பாராட்டியுள்ளார்கள். 45 மணித்துளிகள் ஓடும் ஒலிப்பேழைகளாக இந்நாலின் சில பகுதிகளைக் கவியரசரே பேசி வெளியிட்டுள்ளார்.

நாவல்களாக இவர் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் வேலங்குடித் திருவிழா, விளக்கு மட்டுமா சிவப்பு, சேரமான் காதலி போன்றவை குறிப்பிடத் தக்கவை. சேரமான் காதலிக்குச் சாகித்திய அக்காதமி 1979இல் பரிசு வழங்கியது. 1980இல் இவர் அண்ணாமலை அரசர் நினைவுப் பரிசையும் பெற்றார்.

'அழகி' என்ற இவருடைய கவிதை இந்திய மொழிகள் பதினான்கில் மொழி பெயர்க்கப் பட்டது. 'பாடாய்தும்பீ! மணவறைப் பாட்டு' எனும் கவிதையும் சாகித்திய அக்காதமியால் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டது. இவரது 'குட்டிக்கதைகள்' கன்னடத்திலும், 'விளக்கு மட்டுமா சிவப்பு' மலையாளத்திலும் மொழி பெயர்க்கப்பட்டன. 'புஷ்ப மாலிகா' மலையாளத்திலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டது.

திரைஉலகில் முதலில் பாடல்கள் எழுதுபவராக நுழைந்த கவியரசர், பிறகு கதை, உரையாடல் எழுதவும் தொடங்கினார். இவ்வகையில் 25 திரைப்படங்களுக்கு உரையாடல் எழுதியுள்ளார்.

சரச்சந்திர சாட்டர்ஜி வங்கமொழியில் எழுதிய 'சந்திரநாத்' எனும் நாவலை, இவர் திரைக்கதை, உரையாடல் எழுதி, 'மாலையிட்ட மங்கை' என்ற பெயரில் சொந்தப் படமாக எடுத்தார். இவரது 'சிவகங்கைச் சீமை' தமிழ்த்திரை உலகில், தமிழ்ப் பண்பாட்டைப் படம்பிடித்துக் காட்டும் நன்முயற்சி என்ற பாராட்டைப் பெற்ற படமாகும்.

'பராசக்தி' போன்ற படங்களில் ஓரிரு காட்சிகளில் தோன்றி நடித்த கவியரசர், தமது சொந்தப் படமாகிய 'கறுப்புப் பணத்'தில் முழுநீளப் பாத்திரம் ஒன்றை ஏற்று நடித்து, தமக்கு அந்த ஆற்றலும் இருக்கிறது எனக் காட்டியுள்ளார்.

திரைப்படப் பாடல்களில் இலக்கிய மணம் கமழச் செய்ததும், ஓரிரு பாடல்களின் வாயிலாகப் படத்தின் கதையையே உணர்த்தியதும், இவரது திரைப்பாடல் சாதனைகள் எனலாம். சிறந்த திரைப்படப் பாடலாசிரியருக்குரிய பரிசை, மாநில, மத்திய அரசுகள் 1970இல் இவருக்கு வழங்கின.

இவரது கவிதையாற்றலுக்கு அதிகாரப் பூர்வமான ஏற்பினை அளிக்கும் வண்ணம், எம்.ஜி.ஆர். தலைமையிலான தமிழக அரசு 1978இல் இவரைத் தமிழக அரசவைக் கவிஞர் என அறிவித்தது. நாடுவிடுதலை பெற்றவுடன் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கவிதைகள் பாடிய தேசியக் கவி நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் தமிழக அரசவைக் கவிஞர் ஆக்கப்பட்டார். அவர் மறைவிற்குப் பின் அச்சிறப்பு நீண்ட காலம் வேறு எந்தக் கவிஞருக்கும் வழங்கப்படாமல் இருந்தது.

1981இல் அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் அழைப்பிற்கு இணங்கிக் கவியரசர் இலக்கியச் சொற்பொழிவுகட்காக அங்கே சென்றார். சென்ற இடத்தில் நோய் வாய்ப்பட்டார். மருத்துவம் பயனளிக்காத நிலையில், சிக்காகோ மருத்துவ மனையில் உயிர் நீத்தார்.

அவருக்குக் காரைக்குடியில் மணிமண்டபம் அமைக்கப் பெறும் என எம்.ஜி.ஆர். அறிவித்தார். பின்னர் முதல்வரான கலைஞர் அடிக்கல் நாட்டினார். அவரை அடுத்து முதல்வரான ஜெயலலிதா அம்மண்டபத்தைத் திறந்து வைத்தார். அம்மண்டபத்தின் வளாகத்தில் ஒன்றும், தமிழகத்தின் தலைநகரான சென்னையில் ஒன்றுமாக இரு சிலைகள் அவருக்கு அமைக்கப் பெற்றுள்ளன. இவையெல்லாம் தமிழ் நாட்டு மக்களும், தமிழக அரசும் அவருக்குச் செலுத்தும்

Koviloor Digital Library

அன்புக் காணிக்கைகளாம். (பார்க்க கவியரசர் கண்ணதாசன் உருவச்சிலை, கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம்)

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிஞர் வரிசையில், பாரதிக்குப் பிறகு நிகரற்ற புகழ் பெற்றவர் கவியரசர். தம் கவிதைகளைப் பற்றிப் பாரதி பெருமிதத்தோடு, 'சோதி மிக்க நவகவிதை' எனக் கூறியதைப் போலக் கவியரசரும்,

"இலை புதிது மலர்புதிது
எனுமாறு என்றென்றும்
என்கவிதை ஓங்கி நிற்கும்"

எனக் கூறியுள்ளார். இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை. கவியரசர் கண்ணதாசன் எனும் இலக்கியக் கற்பகத்தின் கவிதைகள் காலத்தை வென்று ஓங்கி நிற்கும் என்பது உறுதி.

கண்ணதாசன் (மாத இதழ்)

இப்பெயரில் இலக்கிய மாத இதழ் ஒன்று *1969* முதல் *1977* வரை வெளிவந்தது. கவியரசர் கண்ணதாசன், தாமே ஆசிரியராக இருந்து, இவ்விதழை நடத்தத் தொடங்கினார். ஆனால் இவ்விதழ் தொடர்ச்சியாக, வெளிவருவதில், பல தடைகள் இருந்தன. எனவே, மாறி மாறி இது வெளிவந்தும், நிறுத்தப்பட்டும், வெளிவந்து கொண்டும் இருந்தது. இறுதியாக *1977*இல் நின்றுவிட்டது.

தொடக்கத்தில் கண்ணதாசன் அவர்களே தம் சொந்த இதழாக இதனைத் தொடங்கினாலும், இடையே அவரால் இதனைத் தொடர்ந்து நடத்த இயலாத போது, அவரை ஆசிரியராகக் கொண்டு, கீழச்சிவல்பட்டியைச் சேர்ந்த ஆர். இராசேந்திரன் இவ்விதழை நடத்தினார்.

இந்த இதழின் இணை ஆசிரியராகக் கவியரசரின் உறவினரும், உதவியாளருமான இராம. கண்ணப்பன் பணியாற்றினார். வெளிவந்த காலங்களில் இவ்விதழ் மிகச்சிறந்த இலக்கிய இதழாக, மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுச் சிறப்பாக வெளிவந்தது.

கண்ணதாசனின் செப்பு மொழிகள், சில குறுங்காவியங்கள், அர்த்தமுள்ள இந்து மதத்தின் சில பகுதிகள், சில மொழி பெயர்ப்புப் படைப்புக்கள் ஆகியவை இவ்விதழில்தான் வெளியாயின.

டெமி *1 x 8* அளவில், *96* பக்கங்களில் வெளியான இந்த இதழின் விலை ரூ 2. தரம் உயர்ந்த இலக்கியப் படைப்புக்களும், திறனாய்வுகளும், மொழி பெயர்ப்புக்களும் இடம்பெற்றது இவ்விதழின் சிறப்பாகும்.

கண்ணப்பன், அழ.சீ., (16-11-1953)

மாத்தூர் - அரும்பாக்கூர்
சிறுகூடல்பட்டி
தொலைக்காட்சித்தொடர் தயாரிப்பாளர்

அழ. சா. சீனிவாசன் – அழகம்மை ஆச்சியின் மகன். இலயோலாக் கல்லூரியில் வணிகவியல் பட்டம் பெற்றவர். கல்லூரியில் பயிலும் போதே மேடைப் பேச்சு, நாடகம், கவிதை எனப் பல்வேறு கலைத்துறைகளில் ஈடுபாடு கொண்டு விளங்கினார். இந்தோ – சோவியத் பண்பாட்டுக் கழகத்தில் இளைஞரணித் தலைவராக இரண்டாண்டுகள் இருந்தார். 'தாமரை'யில் ரஷியக் கவிதைகள் பலவற்றை மொழி பெயர்த்துத் தந்துள்ள இவர் சென்னை வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் பல நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.

தமிழ்த்திரையுலகில் புகழ்பெற்ற தந்தை 'ஏ.எல்.எஸ்.'சின் வழியில் திரையுலகில் நுழைந்த இவர் 'கனவுகள் கற்பனைகள்' என்ற படத்தைத் திரைக்கதை எழுதித் தயாரித்து இயக்கினார். *1982* இல் மாஸ்கோவில் நடைபெற்ற திரைப்பட விழாவில் இப்படம் இடம் பெற்றது. அவ்விழாவில் கலந்துகொண்ட இந்தியக் குழுவில் இவரும் ஒருவர். 'தென்னிந்தியத் திரைப்பட வெளிப்புறப் படப்பிடிப்புக் கருவி வழங்குவோர் சங்க'த்தின் துணைத் தலைவராகவும், செயலாளராகவும் இருந்துள்ளார். தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் செயற்குழுவிலும் இடம் பெற்றிருந்தார். தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளராகப் பணியாற்றி அதன் சார்பாக ஜெனீவா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற உலகத் தொழிலாளர் மாநாடுகளில் பங்கேற்றுள்ளார்.

அனுபவ் நிறுவனங்களின் இயக்குநர்களில் ஒருவராகிய இவர் 'அனுபவ் மக்கள் தொடர்பு மற்றும் விளம்பர நிறுவன'த்தைத் தொடங்கி அதன் மேலாண்மை இயக்குநராக விளங்குகிறார். சன் தொலைக்காட்சியில் *150* வாரங்கள் இடம்பெற்ற 'அனுபவம் பலவிதம்' என்ற தொடரையும் விஜய் தொலைக்காட்சியில் கவியரசு கண்ணதாசன் பற்றிய தொலைக்காட்சித் தொடரையும் தயாரித்து இயக்கி வழங்கியுள்ளார்.

கண்ணப்பன், சொ., (28-12-1943)

மாத்தூர் - மணலூர்
நாட்டரசன்கோட்டை
பொறியாளர் கணிப்பொறி வல்லுநர்

அமெரிக்காவில் பிலெடெல்பியா மாநிலத்தில் ஜெனரல் எலக்ட்ரிக் கம்பனியை நிறுவியுள்ளார். கணிப்பொறியியல் துறையில் ஆய்வு மேற்கொண்டு கணிப்பொறியில் தமிழ் ஒலி வடிவு அமைத்துள்ளார். சொசைட்டி ஆப்

Koviloor Digital Library

பைப்பிங் இஞ்சினியர்ஸ் என்னும் அமெரிக்கக் கணிப்பொறிப் பொறியாளர் அமைப்பின் தொடக்ககால உறுப்பினர் ஆவார்.

Introduction to Pipe Stress Analysis, Advances in Piping Designs என்னும் இவரது நூல்கள் இத்துறையில் முன்னோடியானவை. ஜான்விலி நிறுவனம் இவற்றை வெளியிட்டுள்ளது. அயல்நாட்டுத் தமிழர்க்காக வெளியிடப்பெறும் 'வாழும் தமிழ் உலகம்' இதழின் அமெரிக்கத் தொடர்பாளராக இவர் உள்ளார். ஆயிரம் கணிப்பொறிக் கலைச் சொற்களை இவர் தமிழாக்கி வெளியிட்டுள்ளார்.

இளைஞர் நிகழ்ச்சித் திட்டங்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளராகவும் வாஷிங்டன் தமிழ்ச் சங்க உறுப்பினராகவும் தொண்டு செய்து வருகிறார். ஹூஸ்டனில் யார்? எவர்? நூல் வெளியீடு, நோட்டரி பப்ளிக் ஆகப் பணியாற்றுவது, ஹூஸ்டன் மீனாட்சி கோவில், வாஷிங்டன் முருகன் கோவிலின் செயலராகச் சமயத்தொண்டு புரிவது ஆகியவை இவருடைய சிறப்புக்களாகும். அமெரிக்காவில் தமிழ்ப் பற்றோடு தமிழ்மரபு பண்பாடு ஆகியவற்றைக் காக்கும் வகையில் செயல்படும் கணிப்பொறி வல்லுநராக, தொழிலதிபராக இவர் திகழ்கிறார்.

கண்ணப்பன், டாக்டர் நா.நா., (19-11-1949)

வைரவன் கோவில்
பாகனேரி
மருத்துவர், சமூகநலத்தொண்டர், நூலாசிரியர்

நா. நாச்சியப்ப செட்டியார் – காந்திமதி ஆச்சி ஆகியோரின் மகன். மருத்துவப் பட்டப்படிப்பு (எம்.பி.பி.எஸ்) முடித்த இவர் ஹோமியோபதி, அக்குபஞ்சர் மருத்துவங்களும் பயின்றுள்ளார். பால்வினை நோய்களில் சிறப்புக்கவனம் செலுத்தி அந்நோய்க்கு மருத்துவம் செய்வதுடன் அந்நோய் மக்களிடம் பரவுவதைத் தடுக்கவும் பல்வேறு வழிகளில் தொண்டாற்றி வருகிறார்.

இருபது சேவை நிறுவனங்களில் உறுப்பினர். அரிமா 324 பி2 மாவட்டத்தில் மாவட்டத் தலைவராக இருந்தபொழுது உடல் உறவால் பரவும் நோய்களைத் தடுக்கும் வகையில் பல்வேறு கருத்தரங்குகளையும் 200க்கும் மேற்பட்ட இலவச மருத்துவ முகாம்களையும் நடத்தியுள்ளார். தேசியப் பார்வையற்றோர் சேவைச் சங்கத்தின் புரவலர்.

சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு கல்லூரிகள், சங்கங்கள், இளைஞர் அமைப்புக்கள், வானொலி ஆகியவற்றில் உரையாற்றியும் நூல்கள் எழுதியும் தொண்டு செய்து வருகிறார். மானிட வாழ்க்கையின் மறைமுகப் பிரச்சனைகள், எய்ட்ஸ் – பாலியல் உடலுறவால் பரவும் வியாதிகள் ஆகிய இவரது நூல்கள் பல பதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

மதுரை அரிமா சங்கத்தில் இவரது மிகச்சிறந்த சேவைக்காக அகில உலக அரிமா தலைவரின் விருதும் பதக்கமும் பெற்றார். ஜேசீஸ் சங்கத்தின் மிக உயரிய விருதான 'கமல்பத்ரா' விருதும் 'சேவையிற் சிறந்த இளைஞர்' பட்டமும் இவருடைய தொண்டுக்குக் கிடைத்த சிறப்பாகும். இளைய வயதில் விரிந்த அளவில் சேவை செய்து புகழ் பெற்றுள்ளார்.

கண்ணப்பன், லெ. (வி.கே.என். கண்ணப்பன்)

சூரக்குடி
கண்டரமாணிக்கம்
தொழிலதிபர்

முரு.லெ.நா. லெட்சுமணன் செட்டியார் – கல்யாணி ஆச்சியின் மகன். பொறியியல் பட்டம் பெற்ற இவர் வேறொருவருடன் கூட்டாகச் சேர்ந்து, திருச்சி துவாக்குடியில், பாரதமிகு மின் நிறுவனத்துக்கு வேண்டிய துணைப் பொருட்களைத் தயாரித்து வழங்கும் தொழில் நிறுவனங்களை விகேஎன். எனும் பெயரில் தொடங்கித் திறம்பட நடத்தி வருகிறார். அந்த அடிப்படையில் இப்போது நகரத்தாரிடையே இவர் விகேஎன். கண்ணப்பன் என்றே வழங்கப்பட்டு வருகிறார்.

தம் இளம் வயதிலிருந்தே தி.மு.க. கொள்கைகளால் ஈர்க்கப் பெற்று, அக் கட்சியோடு பல நிலைகளில் தொடர்பு கொண்டவர். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆளவை உறுப்பினரும் ஆவார்.

நீரின்றி அமையாது உலகு என்னும் வள்ளுவர் வாய்மொழியை உணர்ந்து தன் ஊராகிய கண்டரமாணிக்கத்தில் ஆழ் குழாய்க் கிணறுகள் பல அமைத்துத் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்கியவர். தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், இப்பொழுது வீற்றிருக்கும் தவத்திரு பொன்னம்பல அடிகளார் ஆகியோரின் பாராட்டைத் தொடர்ந்து பெற்று வரும் கொடைஞர்.

தம் ஊழியர்களுக்கு வேண்டிய வசதிகளைச் சிறப்பாகச் செய்து கொடுக்கும் தொழில் அதிபர் எனப் பாராட்டப்படுபவர். நகரத்தார் பெண்களுக்குத் திருமண நிதிஉதவியும், இருபாலாருக்கும் கல்வி நிதிஉதவியும் பெருமளவில் செய்து வரும் சமூகநோக்குடைய செல்வர் இவர்.

Koviloor Digital Library

கதிரேசன், அ.மு., (24-2-1918)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
பள்ளத்தூர்
வங்கியாளர்

முருகப்ப செட்டியாரின் மகன். இவர் 1947 முதல் 1979 வரை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணியாற்றினார். வெளிநாட்டுக் கிளைகளில் தலைமைப் பொறுப்பில் இருந்தார். பின்னர் பாரத் ஓவர்சீஸ் வங்கியின் தலைவராக 1983 வரை பணியாற்றி ஓய்வு பெற்றார். இவர் வங்கித் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் நகரத்தார் இளைஞர்கள் அவ்வங்கியில் வேலைவாய்ப்புப் பெறப் பெரிதும் துணை செய்துள்ளார். மிகச்சிறந்த வங்கியாளர் எனச் சிறப்புப் பெற்றுள்ளார்.

கதிரேசன், குழ., (17-10-1949)

இளையாத்தங்குடி - கிங்கிணிக்கூருடையார்
இராயவரம்
குழந்தைக் கவிஞர் - பதிப்பாளர்

சு.கதி. குழந்தையன் செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். மதுரை தியாகராசர் கல்லூரியில் இளங்கலைப்பட்டம் பெற்றவர். 1973இலிருந்து பதிப்புத் துறையில் இருக்கிறார். ஐந்திணைப் பதிப்பகத்தின் உரிமையாளரான இவர் இதுவரை நூற்றுக்கும் அதிகமான நூல்களை வெளியிட்டிருக்கிறார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், புதுமைப்பித்தன் சிறுகதைத் தொகுப்பு, தி. சானகிராமன் சிறுகதைத் தொகுப்பு, ஐந்திணை ஆய்விதழ் போன்றவை.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவுடைய ஊரில் பிறந்து, அவரோடு நெருங்கிப் பழகிய இவர் தாமும் அத்துறையில் முயற்சி மேற்கொண்டார். 1980இல் முதல் கவிதை நூலாக 'எலிகடித்த பூனை' என்னும் நூலை எழுதி வெளியிட்டார். இன்றுவரை 11 நூல்கள் வெளியிட்டிருக்கிறார். அவற்றுள் 3 நூல்களில் உள்ள பாடல்களை ஒலிப்பேழைகளாகவும் வெளியிட்டிருக்கிறார்.

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஆயுள் உறுப்பினரான இவர் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் குழந்தைக் கவியரங்கு களிலும் பங்குபெற்று, குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு அயராது தொண்டாற்றுகிறார். இவரது குழந்தைப் பாடல்கள், சில தனியார் பள்ளிகளிலும், தமிழ்நாடு அரசுப் பாடத் திட்டத்திலும் மலையாளம், கன்னடம் ஆகியவற்றில் மொழி பெயர்க்கப்பட்டும், மலேசியாவிலும் தொடக்கப் பள்ளிகளில் பாடமாக இடம் பெற்றுள.

மலையாள எழுத்தாளர் பையனூர் பாஸ்கரன் என்பவர் இவரது மூன்று நூல்களை முழுமையாகவும், ஏனைய நூல்களில் இருந்து 50க்கும் மேற்பட்ட பாடல்களையும் மலையாளத்தில் மொழி பெயர்த்துள்ளார். வானொலி இவரது குழந்தைப் பாடல்கள் மூன்றைத் தேர்வு செய்து, அவற்றை இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்த்துள்ளது.

இவரது 'எலிகடித்த பூனை' நூலுக்கு 1980 இலும், 'பேசும் கிளியே' நூலுக்கு 1992 இலும் தமிழக அரசு முதற்பரிசு அளித்தது. 1989 இல் வி.ஜி.பி. நிறுவனம் இவருக்குச் 'சிறந்த பதிப்பாளர்' விருது வழங்கியது. 1990இல் நகரத்தார் பண்பாட்டுக் கழகம் 'குழந்தைக் கவிஞர்கோ' பட்டத்தை வழங்கியது. 1994இல் சேலம் கே.ஆர். ஜி. அறக்கட்டளை 'குழந்தை இலக்கியச் சாதனையாளர்' எனப் பட்டம் வழங்கியது.

சின்னஞ்சிறு குழந்தைகட்கான பாடல்களை மிகுதியாகப் பாடுவதால் இவர் மழலைக் கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார்.

குழந்தை இலக்கியத்துறையிலும், பதிப்புத் துறையிலும் ஆற்றலோடும், துடிப்போடும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இளைஞர் இவர்.

கதிரேசன், சு., (12-8-1953)

வைரவன் கோவில்
பலவான்குடி
வங்கியாளர்

பெரி.மீ. சுந்தரம் – அழகம்மை ஆச்சியின் மகன். வணிகவியல் முதுநிலைப்பட்டமும், எப்சி.எஸ்., சி.ஏ.ஐ.ஐ.பி., ஐசி. டபிள்யூ. ஏ (ஐ) ஆகிய வங்கியியல் தொடர்பான பட்டங்களும் பெற்றவர்.

தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் 1976 முதல் 1982 வரை வணிகவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். அப்போது உடன் புணியாற்றிய ஆசிரியருடன் இணைந்து இவர் எழுதிய நூல்கள் இன்றும் வணிகவியல் மாணவர்களால் பெருமளவில் பயன்படுத்தப் பெறுகின்றன. 1982இல் மதுரை வங்கியின் நிறுவனச் செயலாளராகப் பொறுப்பேற்றார். தம் திறமையால் 1995இல் அவ்வங்கியின் பொது மேலாளராகப் பதவி உயர்வு பெற்றார். அழகப்பா பல்கலைக் கழகத்தின் வங்கி மேலாண்மையியல் பாடத்திட்டக் குழுவிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வங்கியியல் வல்லுநர் குழுவிலும் இவர் இடம் பெற்றுள்ளார்.

Koviloor Digital Library

கதிரேசன் செட்டியார், பண்டிதமணி மு., (6-10-1881 - 24-10-1953)

வைரவன்கோவில்
மகிபாலன்பட்டி
தமிழறிஞர், சைவசித்தாந்த வித்தகர்

முத்துக்கருப்பன் செட்டியார் – சிகப்பி ஆச்சியின் மகனாகத் தோன்றினார். இளமையிலேயே நிகண்டு, நீதிநூல், அந்தாதி, பிள்ளைத் தமிழ், நூல்களையும் கம்பராமாயணம், திருத்தொண்டர் புராணம் ஆகிய காப்பியங் களையும் ஆர்வத்துடன் மனப்பாடம் செய்தார்.

வணிகத்தின் பொருட்டு இலங்கை சென்றிருந்த கதிரேசனார் தந்தையார் மறைவினால் ஊருக்கு வந்து 14 வயதில் குடும்பப் பொறுப்பை ஏற்றார். இளமையில் வந்த இளம்பிள்ளை வாத நோயால் இடது காலும் இடது கையும் செயலிழந்தன. உள்ள உறுதி மிக்க கதிரேசனார் நன்னூல், சீவகசிந்தாமணி முதலிய நூல்களைத் தாமே ஆழ்ந்து கற்கலாயினார். கவிதைகள் இயற்றும் புலமை கைவரப் பெற்றார்.



பண்டிதமணி கதிரேசன் செட்டியார்

மேலைச்சிவபுரி வ.பழ.சா. பழனியப்பரின் நட்பு கதிரேசரின் வாழ்க்கையில் திருப்பு முனையாயிற்று. அதே வேளையில் அரசன் சண்முகனாரின் நட்பும் கிடைத்தது. அரசன் சண்முகனாரைத் தம் ஆசானாகவே கதிரேசர் கருதினார். தொல்காப்பிய இலக்கண விரிவுரையும் இலக்கிய விவாதமும் மேலைச்சிவபுரியில் அடிக்கடி நிகழும். அது சன்மார்க்க சபையின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று. 13–5–1909 அன்று திருநாவுக்கரசர் திருநாளாகிய சித்திரைச் சதயநாளில் அரசஞ் சண்முகனார் தலைமையில் சன்மார்க்க சபைத் தொடக்கவிழா நடைபெற்றது. மு.ரா. கந்தசாமிக் கவிராயர், இரா. இராகவ அய்யங்கார், நாகை மறைமலையடிகள் முதலிய தமிழ்ச்சான்றோருடன் பண்டிதமணிக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. (பார்க்க : சன்மார்க்க சபை)

வடமொழி வித்துவான் தருவை நாராயண சாத்திரியாரிடம் வடமொழியும் காரைக்குடி சொக்கலிங்க அய்யாவிடம் சைவசித்தாந்த சாத்திரமும் பாடம் கேட்டார். இருமொழிப் புலமையால் கதிரேசர் வடமொழியிலுள்ள சுலோசனை, மிருச்சகடிகம் (மண்ணியல் சிறுதேர்) சுக்கிரநீதி முதலியவற்றைத் தமிழாக்கினார். தமிழகத்திலும் ஈழநாட்டிலும் சைவசித்தாந்த மேடைகளிலும் இலக்கிய மேடைகளிலும் சொற்பொழிவாற்றிப் புகழ்பெற்றார். நகைச்சுவை மிளிரச் சிலேடை நயத்தோடு பேசுவதில் வல்லவர். இவருடைய ஆற்றல் அறிந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவரை அழைத்தது. அங்கு தமிழ்ப் பேராசிரியராக 1934 முதல் 1946 வரை பணியாற்றினார். சாணக்கியர் எழுதிய கௌடிலியம் நூலை அங்கு இவர் தமிழில் மொழி பெயர்த்தார்.

தமிழகத்தில் தனித்தமிழ்ப்புலவர் வகுப்பும் பல்கலைக்கழகத்தில் தமிழ் வித்துவான் படிப்பும் ஏற்படப் பண்டிதமணியே காரணம் ஆவார். செட்டிநாட்டு இளைஞர் பலர் தமிழ்க்கல்வி பெற்று இன்று புகழ்பெற்று விளங்குவதற்கும் பண்டிதமணியும் அவர் உருவாக்கிய கணேசர் செந்தமிழ்க் கல்லூரியுமே காரணம் எனலாம். நகரத்தார் இனத்தின்பால் பற்றுக்கொண்ட கதிரேசனார் நாட்டுக்கோட்டை நகரத்தார் சீர்திருத்தம், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு ஆகிய நூல்களைப் படைத்துள்ளார். உரைநடைக் கோவை இரு தொகுதிகள், இலக்கியநயம் முதலியன இவரது கட்டுரை நூல்கள் ஆகும். உதயண சரிதம், சுலோசனை, மண்ணியல் சிறுதேர், சுக்கிரநீதி, மாலதி மாதவம் ஆகியவை இவர் மொழி பெயர்த்த நூல்களாகும்.

திருவாசகம் திருச்சதகம், நீத்தல்விண்ணப்பம், திருவெம்பாவைப் பகுதிகட்கு இவர் எழுதிய 'கதிர்மணி விளக்கம்' உரை நூல்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் இவரின் கொடையாகும். நச்சினார்க்கினியர், பரிமேலழகர் உரைநெறியில் உரைவகுத்துப் பேரும் புகழும் பெற்றார். இவரது உரைநுட்பம், இவர்கண்ட புதிய நயங்கள் இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களில் இவருக்குத் தனிச்சிறப்பைத் தந்தன.

27–8–1925 அன்று உ.வே.சாமிநாத அய்யர் தலைமையில் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் இவருக்குப் பண்டிதமணி பட்டம் வழங்கப் பெற்றது. 1942இல் அரசு இவருக்கு 'மகாமகோபாத்தியாய' பட்டம் வழங்கியது. 7.7.1940 இல் இவரது திருவுருவப்படம் சன்மார்க்க சபையில் திறந்துவைக்கப் பெற்றது. அவ்விழாவில் 'இச்சபையின் முதல் மாணவன்

Koviloor Digital Library

நான்தான். சபையினால்தான் நான் வளர்ந்தேன்' என நன்றி பாராட்டினார். 3-4-1974 அன்று மகிபாலன்பட்டியில் இவரது திருவுருவச்சிலை திறந்து வைக்கப் பெற்றது. (பார்க்க : பண்டிதமணி உருவச்சிலை)

தன் முயற்சியால் தமிழும் வடமொழியும் கற்று, உள்ள உறுதியால் உடற்குறையை வென்று, தம் இனத்தார் தமிழ் பயில முன்னோடியாகத் திகழ்ந்து வழிகாட்டியவர் பண்டிதமணி. மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையும் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியும் என்றென்றும் பண்டிதமணியை நினைவூட்டும் நிலையான சின்னங்களாகும்.

கதிரேசன் செட்டியார், லெ., (1-5-1905 - . . .)

மாத்தூர் - கருப்பூர்
தேவகோட்டை
இதழாளர்

இலட்சுமணன் செட்டியார் – காவேரி ஆச்சியின் மூத்த மகன். இவரது முறையான கல்வி எட்டாம் வகுப்புவரை மட்டுமே. ஆயினும் இவர் சொந்த முயற்சியால் பெற்ற இலக்கிய அறிவு இவரை இதழாசிரியர் ஆக்கியது.

1941 இலிருந்து 1949 முடிய ஒன்பது ஆண்டுகள் புதுக்கோட்டையிலிருந்து 'அணிகலம்' என்ற மாத இதழைத் தாமே ஆசிரியராக இருந்து, வெளியிட்டு வந்தார். (பார்க்க : அணிகலம்)

அதற்கு முன்னர் இவர் தேவகோட்டையில் 'இந்தியன் கதர் ஸ்டோர்' என்ற பெயரில் கதர்க்கடையும், காரைக்குடியில் 'கதிரேசன் கம்பெனி' என்ற பெயரில் பங்கு விற்பனை நிறுவனமும் நடத்தியுள்ளார்.

புதுக்கோட்டையில் இதழ் நடத்திய காலத்தில் இவர் 'தமிழ் எழுத்தாளர் சங்கம், 'அச்சுத் தொழிலாளர் சங்கம்', 'சோப்புத் தொழிலாளர் சங்கம்' ஆகிய அமைப்புக்களின் தலைவராகவும், 'டி.வி.எஸ். தொழிலாளர் சங்கத்'தின் துணைத் தலைவராகவும், பணியாற்றியுள்ளார். தேவகோட்டை 'சொர்ணமூர்த்தி பெண் பாடசாலை' என்ற அமைப்பின் தாளாளராக 1975இலிருந்து பணியாற்றியுள்ளார்.

கதிரேசனார் தம் வாழ்நாளில் அறுபடைவீடு, குறிப்பிடத்தக்க வைணவத் தலங்கள் என்பவற்றோடு ஏறத்தாழ 200 சிவத்தலங் களுக்கும் சென்று வழிபட்டு வந்த மெய்யன்பர்.

கதர் இயக்கம், தொழிற்சங்கம், இதழ் உலகம், பத்திநெறி ஆகிய அனைத்திலும் தடம் பதித்த நகரத்தார்.

கந்தர் சஷ்டி விழாக் கழகம்

இறைபக்தியும் இசை இலக்கியப் பற்றும் நகரத்தார் இரத்தத்துடன் கலந்தவை. இசையால், கலையால் இறைவழிபாடு செய்யும் நோக்கத்துடன் தேவகோட்டையில் 1946ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் தோற்றுவிக்கப் பட்ட கந்தர் சஷ்டி விழாக்கழகம் 1995இல் தனது பொன்விழாவைக் கொண்டாடியது. சோம. இராமநாதன் செட்டியார், கரு. காசிச் செட்டியார், உ.மு.அ.லெ. லெட்சுமணன் செட்டியார் ஆகியோர் தோற்றுவித்த இக்கழகம் நகரத்தார் முன்னின்று வளர்க்க நாளும் உயர்ந்தோங்கி நல்ல தமிழ்ப்பணி செய்துவருகிறது. ஐப்பசித் திங்களில் அமாவாசைக்கு மறுநாள் தொடங்கி ஆறு நாட்கள் கந்தர் சஷ்டி விரதம் மேற்கொள்ளும் நாட்களாகும். இந்த . ஆறு நாட்களோடு தெய்வானை கல்யாணம், வள்ளி கல்யாணம் ஆகிய திருவிழாக்களையும் சேர்த்து 8 நாட்கள் விழா நடத்தத் திட்டமிட்டனர். கிருபானந்த வாரியார் சுவாமிகள் கந்தர் சஷ்டி விரத நாட்களில் வர இயலாததால் அவருக்காகவே விரதம் தொடங்குவதற்கு முந்தியநாள் அமாவாசை அன்றே விழாத் தொடங்குவது வழக்கமாயிற்று. வாரியார் சுவாமிகள் தொடர்ந்து விழாவில் கலந்து கொண்டமையை நினைவு கூர்ந்து அவர் மறைவுக்குப் பின் 1993இல் அவரது படத்திறப்புவிழா நடைபெற்றது.

முதல்நாள் தொடக்கவிழா, வாரியாரின் இலக்கியப் பேருரை, மூன்றுநாள் சொற்பொழிவு, மூன்றுநாள் இசைநிகழ்ச்சி, சூரசம்மார நாளில் காலை மாலை இருவேளையும் புலவர் அவையாகிய பட்டிமண்டபம், இறுதிநாள் நடனநிகழ்ச்சி என ஒன்பது நாள் விழா அமையும். நகரச்சிவன் கோவிலிலுள்ள தண்டாயுத பாணிக்கு ஆறுநாள் லட்சார்ச்சனையும் அபிஷேக அலங்காரங்களும் மிகச் சிறப்பாக நடைபெறும். முதல்நாள் தண்டாயுதபாணி சன்னதியிலிருந்து படம் எடுத்துச் சென்று எழுந்தருளல் செய்வதிலிருந்து விழா தொடங்கும். பத்தாம் நாள் சன்னதியில் விடையாற்றியுடன் விழா நிறைவெய்தும். இவ்வமைப்பில் நகரத்தார்கள் மட்டுமே மகாசபை உறுப்பினராக இடம் பெறுவர். ஆண்டுதோறும் மகாசபைக் கூட்டத்தில் தலைவர், இருசெயலர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர் தேர்வு செய்யப் பெறுவர். செயலர்கள் ஈராண்டு பணியாற்றுவர். கந்தரலங்காரம், அனுபூதி, அபிராமி அந்தாதி போன்ற நூல்களில் குழந்தைகட்கு ஒப்புவித்தல் போட்டி நடத்திப் பரிசு வழங்கப் பெறுகிறது. இவ்விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாத தமிழறிஞரோ கலைஞரோ இல்லையெனலாம்; பல ஆண்டுகள் இசைநிகழ்ச்சி

Koviloor Digital Library

வானொலியில் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது. ஊர்கூடித் தமிழ் வளர்க்கும் திருவிழா தேவகோட்டைக் கந்தர் சஷ்டி விழா.

கம்பன் கழகம்

காரைக்குடியைச் சேர்ந்த கம்பனடிப்பொடி. சா. கணேசன் (நக.)1938இல் 'கம்பன் கழகம்' என்ற அமைப்பைக் காரைக்குடியில் தொடங்கினார். பங்குனி மாதம் தோறும், மகம், பூரம், உத்தரம் ஆகிய மூன்று நாட்களில் காரைக்குடியிலும், அத்த நாளில் நாட்டரசன் கோட்டையில் கம்பன் சமாதியிலும் கம்பன் திருநாள் கொண்டாடுவது என்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்டதே இக்கழகம்.

அதன்படி 1939 ஏப்ரலில் முதல் முறையாகக் 'கம்பன் திருநாள்' நடைபெற்றது. அன்று தொடங்கி இன்றுவரை, அதே முறையில், மாற்றம் ஏதும் இன்றி, ஆண்டுதோறும் கம்பன் திருநாள் நடத்தப்படுகிறது. இப்போது, இலங்கை, மலேசியா, கல்கத்தா போன்ற வெளியிடங் களிலும், தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களிலும், பாண்டிச்சேரியிலுமாக மொத்தம் 47 கம்பன் கழகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை அனைத்தும் காரைக்குடிக் கம்பன் கழகத்தையே தங்கள் தாய்க்கழகமாக மதித்துப் போற்றுகின்றன.

கம்பன் கழகம் கம்பன் திருநாள் நடத்துவது என்பது, பல்வேறு அமைப்புக்கள் நடத்தும் பல்வேறு விழாக்களைப் போலப் பத்தோடு பதினொன்றாகக் கருதப்படத்தக்கதன்று; தனக்கெனப் பல்வேறு தனித்தன்மைகளைப் பெற்றது.

விழாவை நடத்துபவர், விழாவில் கலந்து கொள்பவர், ஆகியோரில் யாருடைய நலனுக்காகவோ திட்டங்களுக்கேற்பவோ விழா நிகழ்ச்சியில் மாறுதல் செய்யப்படுவதே இல்லை. எத்தகைய இடையூறுகள் ஏற்படினும் கம்பன் திருநாள் பங்குனி அத்தத்தில் முடிவுறும் வண்ணம் நான்கு நாள் விழாவாக நடந்து தீரும். கம்பனடிப்பொடி விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு தலைமறைவாக இருந்தபோதும், சிறையிலிருந்தபோதும்கூட இத்திருநாள் நிகழ்ச்சிகள் இடையீடின்றி, மாற்றம் இன்றி நிகழ்ந்தன என்பது நினைந்து போற்றத்தக்கது. மேலும், கம்பனடிப்பொடிக்குப் பின்னும் இத்திருநாள் நிகழ்ச்சிகள் வழக்கம் போல நடைபெறுகின்றன என்பது, அவர் வாழ்நாளில் பதித்த அழுத்தமான தடத்தினாலும், மரபைப் பின்பற்றுவதில் நகரத்தார் இனத்திற்கு இருக்கும் பற்றுதலினாலும்தான் எனலாம்.

கம்பன் திருநாளின் அடுத்த தனித்தன்மை அதன் நிகழ்ச்சி நிரல் அச்சிடும் முறையாகும். இவ்விழாவில் பங்கேற்காத தமிழ் அறிஞர்களே இல்லை எனக் கூறும் வண்ணம், அனைவரும் பங்கேற்றுள்ளர். ஆயினும் நிகழ்ச்சி நிரலில், பங்குபெறுபவர் பெயர் மட்டும் இடம்பெறுமே தவிர அவருக்கு வழங்கும் பட்டங்களோ, பதவிகளோ குறிக்கப்பெற மாட்டா. தனிப் பட்டவர்கட்கு இன்றியமையாமை கொடுக்காத இம்முறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருவது பாராட்டத்தக்கது.

கம்பன் திருநாள் என்றாலே 'காலந்தவறாமை' என்பது தமிழ் உலகம் அறிந்த ஒன்று. மிகச் சரியாக ஒரு நொடி கூடத் தவறாமல் நிகழ்ச்சிகளைத் தொடங்குவதும், ஒவ்வொரு பேச்சாளருக்கும் குறித்த நேரம் ஒதுக்குவதும், அந்த நேரம் முடியும்போது, பேச்சாளருக்கு முன்னே உள்ள ஒலிபெருக்கிக்கு அருகே சிவப்பு விளக்கு எரியும் படியான அமைப்பும்,அவற்றின் விளைவாகக் குறித்த காலத்தில் நிகழ்ச்சிகளை நிறைவு செய்வதும் கம்பன் திருநாளின் காலம் போற்றும் பண்பாகும்.

கம்பனுக்குப் படம் ஒன்று உருவாக்கியதும், கம்பன் திருநாள் தொடக்க நாளன்று கம்பனுக்கு மலர் வழிபாடு நிகழ்த்துவதும் காரைக்குடிக் கம்பன் கழகம் உருவாக்கிய நன்மரபுகள். தமிழகத்தின் தனிப்பெரும் இலக்கிய விழாவாகக் காரைக்குடிக் கம்பன் திருநாள் அமைந்து, அதற்குப் பிறகு தமிழ்நாட்டில் அமைக்கப் பெற்ற இலக்கிய அமைப்புக்கள் அனைத்திற்கும் விழா நடத்துவது எப்படி என்பதைக் கற்றுக் கொடுத்து வழிகாட்டியது.

இலக்கிய விழாக்களில் கவியரங்கம், பட்டிமன்றம், மேல் முறையீட்டுப்பட்டி மன்றம், வழக்காடு மன்றம், இவர்கள் சந்தித்தால், நற்றமிழ் முற்றம் போன்ற பல்வேறு புதிய நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தியதும், இலக்கியத்தரம் குன்றாமல் நிகழ்ச்சிகளை அமைத்ததும், ஆய்வுப் போக்கில் தலைப்புக்கள் கொடுத்ததும் காரைக்குடிக் கம்பன் கழகத்தின் தனிப்பெரும் சாதனைகளாகும்.

கம்பனது இராமாயணத்தைச் சமயக் காப்பியமாக, பக்தி நூலாகப் பார்க்கும் போக்கிலிருந்து விலகி, அதனை ஓர் இலக்கியமாகப் பார்ப்பதற்கும், ஆய்வதற்கும், அதில் தோய்வதற்கும், சுவைப்பதற்கும் காரைக்குடிக் கம்பன் கழகம் வழிவகுத்தது. 'கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்' என்ற குறிக்கோளுடன் கம்பன் இயக்கம் ஒன்றைத் தமிழ் வழங்கும் இடத்திலெல்லாம் கால் கொள்ளச் செய்த பெருமை காரைக்குடிக் கம்பன் கழகத்திற்கும்,

Koviloor Digital Library

அதனை நிறுவிய கம்பனடிப் பொடிக்கும், அவர் தோன்றிய நகரத்தார் இனத்திற்கும் உரிய தனிப்பெருமையாம்.

காரைக்குடியில் 'கம்பன் மணி மண்டபம்' ஒன்று அமைத்ததும், அந்த வளாகத்தில் 'தமிழ்த்தாய் கோவில்' ஒன்று சமைத்ததும் கம்பன் கழகத்தின் நிலையான பணிகளாகும். கம்பனடிப்பொடிக்குப் பின்னும் கம்பன் கழகம் முறைப்படியும் சிறப்பாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்போது கம்பன் கழகத்தைச் சார்ந்து 'கம்பன் அறநிலை' என ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்பின் சார்பில் 'கம்பன் – கற்பகம் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி' என்ற பெயரில் மேல்நிலைப் பள்ளி ஒன்றும் நடத்தப்படுகிறது.

கம்பன் சமாதி

கவிச் சக்கரவர்த்தி கம்பர் தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் செட்டிநாட்டில்தான் வாழ்ந்தார் என்றும், அவர் உயிர் நீத்தது செட்டி நாட்டைச் சேர்ந்த நாட்டரசன்கோட்டையில் தான் என்றும் நம்பப்படுகிறது. இதனை உறுதி செய்யும் சான்றுகள் பல கிடைத்துள்ளன.

கம்பன் சமாதி தவிர நாட்டரசன் கோட்டையில் கம்பன் பற்றிய நடுகல், கம்பன் செய், கம்பன் குளம், கம்பன் ஊருணி ஆகியவையும் அமைந்துள. மேலும் சமாதி அமைந்துள்ள இடத்தை ஒட்டிய இடங்கள் பத்திரங்களில் குறிப்பிடப்படும்போது 'கம்பன் செய்க்கழிவு' என்ற சொற்றொடர் சில நூற்றாண்டுகட்கு முன்பிருந்தே பயன்படுத்தப் படுகிறது.

கம்பன் சமாதி அமைந்திருக்கும் இடத்தின் உரிமையாளர்கள், நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த ஒரு நகரத்தார் குடும்பத்தினரே. அவர்கள் கடந்த 200 ஆண்டுகளாக இவ்விடத்தில் ஆண்டுதோறும் கம்பனுக்குப் பூசைகள் நடத்தி வருகின்றனர்.

அக்குடும்பத்தின் வழிவந்தவரும் கம்பன் இராமநாதன் செட்டியார் என்ற பட்டப்பெயர் உடையவருமான ஆவி. அரு. இராமநாதன் செட்டியார் 1925ஆம் ஆண்டில் 40,000 ரூபாய் செலவு செய்து, கம்பன் சமாதியை எழில்மிக்க சோலை சூழ்ந்த கோவிலாக அமைத்தார்.

மேலும் 1939 இலிருந்து பங்குனி அத்தநாளில், காரைக்குடிக் கம்பன் கழகத்தாரின் நான்காம் நாள் கம்பன் திருநாள் விழா நிகழ்ச்சிகள் இத்திருக்கோவிலிலேதான் நடைபெற்று வருகின்றன. சமாதி இருக்கும் இடத்தின் உரிமையாளர்கள் 1939 இலிருந்து தாங்கள் நடத்தும் ஆண்டுப் பூசையை இந்தப் பங்குனி அத்த நாளன்றே நடத்தி வருகின்றனர்.

கம்பன் மணிமண்டபம்

கம்பன் அடிப்பொடி சா. கணேசன் 1939 இல் கம்பன் கழகத்தைக் காரைக்குடியில் நிறுவினார். ஆண்டுதோறும் பங்குனி மாதம் நான்கு நாட்கள் கம்பன் விழாவைச் சிறப்பாக நடத்திவந்தார். அவரது அறுபதாண்டு நிறைவின் பொழுது 1968இல் சா.நா.அ.சொ. அண்ணாமலை செட்டியாரைத் தலைவராகக் கொண்ட மணிவிழாக் குழு கம்பனடிப் பொடிக்குப் பணமுடிப்பு ஒன்றை வழங்கத் திட்டமிட்டது. தமக்கென நிதிஉதவி பெற்றுக்கொள்ள, சா. கணேசன் இசையாததால் மணிவிழாக்குழு கம்பன் மணிமண்டபம் ஒன்றைக் கட்ட அந்நிதியைப் பயன்படுத்துவது என முடிவெடுத்தது. அது தொடர்பான நிருவாகங்களைக் கவனிப்பதற்குக் 'கம்பன் அறநிலை' என்ற அமைப்பு பதிவு செய்யப் பெற்றது. இவ்வமைப்பின் நிறுவுநர் தலைவர் சா. கணேசன். இவ்வமைப்பில் ஓர் உறுப்பினரான க.வெ.சித. வெங்கடாசலம் செட்டியார் தம் பெருமுயற்சியால் அதிக நிதி திரட்டி இம் மணிமண்டபம் நிறைவெய்தப் பெருந் துணையாக அமைந்தார்.

காரைக்குடி செக்காலைச் சாலையில் மூன்று ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் 1970 மார்ச்சில் மணிமண்டபப் பணிகள் தொடங்கின. வளாகத்தின் மையப் பகுதியில் ஏறத்தாழ 5000 பேர் அமரக்கூடிய 200 × 130 அடி அளவுள்ள மணிமண்டபம் கட்டப்பெற்றது. 1973 இலிருந்து கம்பன் விழா இம்மணி மண்டபத்திலேயே நடைபெற்று வருகிறது.

மணிமண்டபத்திற்கு இடப்புறம் சமையற் கட்டும் கொத்தமங்கலம் கே.எம்.எஸ். வள்ளியம்மை ஆச்சி அறநிலை கட்டித்தந்த உணவுச்சாலையும், அ.சொ. அண்ணாமலை செட்டியார் கட்டிக் கொடுத்த 'நம்பி திருமனை' என்னும் விருந்தினர் இல்லமும் அமைந்துள்ளன. கம்பன் அறநிலை இவ்வளாகத்தில் 'கம்பன் கற்பகம்' மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியை நடத்தி வருகிறது. தமிழ்த்தாய் கோவில் ஒன்றையும் கட்டியுள்ளது.

கம்பை தனவைசியர் கல்விக் கழகம்

பர்மாவில் தொழில் புரியச் சென்ற நகரத்தார் பிள்ளைகளின் முன்னேற்றம் கருதிப் பர்மா தனவைசிய இளைஞர் சங்கத்தினர் இக்கல்விக் கழகத்தை இரங்கூனில் 1928 இல் தோற்றுவித்தனர். பர்மா நகரத்தார்கள் சமூக இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்கு நன்கொடை களை வாரி வழங்கவே இக்கல்விக்கழகம்

Koviloor Digital Library

விரைவில் பெருவளர்ச்சியுற்றது. ''நமது நாட்டுக்கோட்டைச் செட்டியார் சமூகப் பிள்ளைகளுக்கு, மதானுசார தேசானுபவ முறைகளைப் பயிற்றுவிக்கும் பாடசாலைகளைப் பர்மாவிலாவது இந்தியாவிலாவது ஸ்தாபிப்பது,'' இக்கழகம் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கமாகும்.

இக்குறிக்கோளுக்கேற்ப, பர்மாவின் தலைநகராகிய இரங்கூனில் மூன்றாம் வகுப்பு வரையிலுள்ள ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடம் நிறுவி ஆங்கிலம், தமிழ்ப்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இக்கல்விக் கூடத்தை உயர்கல்வி மையமாகச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் தலைநகரிலிருந்து ஏறத்தாழ ஒன்பது கி.மீ. தூரத்தில் உள்ள கம்பை என்ற ஊருக்கு இது மாற்றப்பெற்றது. மாணவர்களின் எண்ணிக்கை கூடியது. அதற்கேற்ப நிறைந்த வகுப்பறை களுடன் பள்ளிக்கட்டிடமும் தங்கிப்படிக்க வசதியுடைய விடுதியும் கட்டப்பெற்றன. ஒருபுறம் அருள்மிகு முருகப்பெருமானின் ஆலயம், இருபுறங்களிலும் பெரிய நீர்த் தடாகங்கள், ஒருபுறம் மரங்கள் நிறைந்த சோலை ஆகியவற்றை நான்கெல்லையாகக் கொண்டு 16 ஏக்கர் பூங்காவில் அழகான கட்டிடங்கள் நிறைந்ததாகப் பள்ளி அமைந்திருந்தது. தமிழ், பர்மா, ஆங்கிலம் ஆகியமொழிகள் கற்பிக்கப்பட்டன. பள்ளிக்கூடம் தொடங்கிய இரண்டாம் ஆண்டிலேயே உயர்நிலைப்பள்ளி ஆயிற்று. 1933 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ''செட்டியார்ஸ் ரெசிடென்சியல் ஹைஸ்கூல்'' என்ற பெயரால் அரசாங்கக் கல்வித்துறையினரிடம் பதிவுசெய்து கொள்ளப் பெற்றது.

காலப்போக்கில் இந்திய, பர்மிய ஏனைய சமூகச் சிறுவர்களும் சேர்த்துக் கொள்ளப் பெற்றனர். இரண்டாம் உலகப் போரின் காரணமாகப் பள்ளியைத் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளியாக நடத்திவர இயலவில்லை. நடுநிலைப் பள்ளியாக நடைபெற்றது. விடுதி வசதி நிறுத்தப்பட்டது. 1952 இல் பர்மா அரசாங்கம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை அமைக்க இப்பள்ளி வளாகத்தை எடுத்துக் கொண்டது. 21-6-1952 முதல் கழகக் கட்டிடங்கள் அரசாங்கப் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. நகரத்தார்களின் விருப்பத்திற்கேற்ப நடுநிலைப் பள்ளியை அரசு 'ஸ்டேட் மிடில் ஸ்கூல்' என்ற பெயரில் சிலகாலம் நடத்தி வந்தது.

பள்ளி கையைவிட்டுப் போனாலும் கல்விக் கழகம் நகரத்தார் மாணவர்களுக்குப் படிப்பு உதவித்தொகை வழங்குவதன் வாயிலாகத் தனது தொண்டைத் தொடர்ந்து செய்து வருகிறது. சென்னையிலும் இலண்டனிலும் படிக்கச் செல்லும் நம் இளைஞர்க்கு வழங்கப்பட்ட உதவித் தொகை அரசாங்க அனுமதி மறுக்கப்பட்டதால் நிறுத்தப்பட்டது. பர்மாவிலேயே கல்வி பயில் வோர்க்குத் தொடர்ந்து உதவி வழங்கப்படுகிறது.

இரங்கூன் அருகே 'வட ஓவ்கலாபா' என்னும் நகரில் அரசாங்கப் பள்ளிக்கட்டிடத்திற்குக் கழகம் 20000 கியா நன்கொடை வழங்கியுள்ளது. சைவசமயக் கல்வி வளர்ச்சிக்கென, காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்திற்கு நன்கொடையாக ஒரு லட்சம் கியா 1962 இல் வழங்கப்பட்டது.

1933 இல் அண்ணல் காந்தியடிகள் கம்பைக் கல்விக் கழகப் பள்ளிக்கு வந்து இதன் பணிகளைப் பாராட்டியுள்ளார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தம் படை முகாமின் தலைமை நிலையத்தைக் கம்பைக் கல்வி நிலையத்தில்தான் நடத்தி வந்தார். தெய்வத் தமிழ்மறையாம் திருக்குறள் நூலைப் பர்மிய மக்களும் படித்துப் பயன்பெறும் வண்ணம் 1964 ஆம் ஆண்டு பர்மிய மொழியில் மொழிபெயர்த்து அன்பளிப்பாக வெளியிடச் செய்தமை கழகம் ஆற்றிய கல்விப் பணிகளில் காலத்தால் அழியாத, ஞாலம் போற்றும் நற்பணியாகும். 1962 இல் பர்மியப் புரட்சி அரசு ஏற்பட்டபின் தொடர்ந்து இயங்க இயலாத சூழ்நிலையில் 1976 இல் கழகம் கலைக்கப் பெற்றுவிட்டது.

கருங்குளம்

தெற்குவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது. காரைக்குடி – கல்லல் சாலையிலிருந்து ஆலங்குடி அருகே பிரியும் விலக்குச் சாலையில் கண்டர மாணிக்கம், பட்டமங்கலம் வழியே 27 கிலோ மீட்டர் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், வேலங்குடி, இரணிக்கோவில் ஆகிய ஐந்து நகரக்கோவில்களைச் சேர்ந்த 62 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

நகரத்தார் பொதுவில் முன்னர்க் கட்டப்பெற்ற செல்வ விநாயகர் கோவிலில், சிவன், அம்மன் மற்றும் பரிவார தெய்வங்கள் நிறுவப் பெற்றுச் செல்வ விநாயகர் சிவன் கோவில் என்ற பெயருடன் 4-7-1985 இல் குடமுழுக்குச் செய்யப் பெற்றது. மேலும் ஊர்ப் பொதுவில் பரநாச்சியம்மன் கோவிலும், ஐயனார் கோவிலும் உள.

இங்குள்ள நகரத்தார் மடத்தில் உள்ள வேலுக்கு ஆடி மாதம் வேற்பூசை முன்னர் சிறப்பாக நடந்தது. இப்போது நகரத்தார் 2 ஆண்டுகட்

Koviloor Digital Library

கொருமுறை பங்குனி மாதம் நடைபெறும் பரநாச்சியம்மன் திருவிழாவையே சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

கருங்குளம், நேமத்தான்பட்டியைச் சேர்ந்த இளையாத்தங்குடி கழனிவாசற்குடிப் பிரிவுப் பங்காளிகள், ஆடிமாதம் கருங்குளத்தில் கூடிப் பதினெட்டாம்படிக் கருப்பர் படைப்பைப் பொதுப்படைப்பாகப் படைத்து வருகின்றனர்.

கருங்குளம் அரங்கனாதன் செட்டியார் குடும்பத்தார் வள்ளியம்மை ஆச்சி தொடக்கப் பள்ளியை இவ்வூரிலும், வள்ளியம்மை ஆச்சி மேல் நிலைப் பள்ளியைப் பட்டமங்கலத்திலும் நடத்தி வருகின்றனர்.

வேலங்குடிக் கோவிலைச் சார்ந்த வயி. அண்ணாமலை செட்டியாரும், வயி. செல்வநாயகம் செட்டியாரும் இ.தேரா. வில் பணிபுரிந்தவர்களாவர்.

கருணாநிதி, டாக்டர், இராம., (11-3-1936)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
தேவகோட்டை
மருந்தியல் துறைப் பேராசிரியர்

சித.சொ. இராமசாமி செட்டியார் – ஏகம்மை ஆச்சியின் மகன். திருச்சி தூய வளனார் கல்லூரியில் பட்டப்படிப்பும், சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தில் மருந்தியல் துறை முதுகலைப் படிப்பும் பயின்று சிங்கப்பூர் பல்கலைக் கழகத்திலேயே மருந்தியல் துறை விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்தார். பணிக்காலத்தில் இலண்டன், லீட்சு பல்கலைக் கழகத்தில் உணவு மற்றும் போதைப் பொருள்கள் பற்றி ஆய்வு மேற்கொண்டு டாக்டர் பட்டம் பெற்றார். இத்துறை தொடர்பான நூற்றுக்கும் மேலான ஆய்வுக்கட்டுரைகளை மாநாடுகளிலும் ஆய்வுநூல்களிலும் இவர் வழங்கியுள்ளார். கதிரியக்கம் பற்றி இவர் எழுதிய நூல் மிகவும் புகழ் பெற்றதாகும்.

திருமணப் பதிவுச் சான்றிதழ் வழங்கும் துணைப் பதிவாளராகவும் போதைப் பொருள் தடுப்புச் சங்கத்தின் ஆலோசனைக் குழுத் தலைவராகவும் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களை விசாரிக்கும் நடுவராகவும் சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் உணவுத் துறை ஆலோசகராகவும் சிங்கப்பூர் அரசு இவரைப் பணியமர்த்திச் சிறப்பித்துள்ளது.

ருத்ரகாளியம்மன் கோவில் நிர்வாகக்குழுத் தலைவராகிய இவர் திருமுறைகளில் மிகுந்த ஈடுபாடுடையவர். திருமுறை மாநாட்டில் 13 ஆண்டுகளாகத் தொடர்ந்து துணைத்தலைவராகச் சிங்கப்பூரில் திருமுறைகளைப் பரப்பி வருகிறார்.

கருப்பன் செட்டியார், ஐயா

இளையாத்தங்குடி - கழனிவாசற்குடி
நாட்டரசன்கோட்டை
புலவர்

ஏறத்தாழத் தொண்ணூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். நாராயணன் செட்டியார் மகன். சிறந்த தமிழ்ப்புலவராக விளங்கிய இவரை ஐயா கருப்பன் செட்டியார் என்றே அனைவரும் குறிப்பிடுவர்.

இவர் நாட்டரசன்கோட்டைத் தெய்வங்களின் மீது எட்டு நூல்களும், அ. சிறுவயல், குன்றக்குடி, பாகனேரித் தெய்வங்கள் மீது ஒவ்வொரு நூலும் ஆக மொத்தம் 11 நூல்கள் எழுதியுள்ளார். அவை தனித்தனியாகவும், 'ஏகாதசப் பிரபந்தம்' என்ற தொகுப்பு நூலாகவும் அச்சிட்டு வெளியிடப் பெற்றுள.

அந்நூல்கள் வருமாறு :

1. கண்ணுடைய நாயகியம்மை மாலை
2. கண்ணுடைய நாயகியம்மை பதிகம்
3. கண்ணுடைய நாயகியம்மை கும்மி
4. சோழீசர் மாலை
5. சோழீசர் பதிகம்
6. வேங்கடாசல மாலை
7. இராமானுச திரிதச வெண்பா
8. பெரிய கருப்பண்ண சுவாமி பதிகம்
9. சிறுவயல் மும்முடிநாத ஈசுவரர் பதிகம்
10. குன்றக்குடி முருகக் கடவுள் பதிகம்
11. பாகனேரி புல்வநாயகி அம்மன் பதிகம்

கருப்பையா, பழ. (2-4-1943)

இளையாத்தங்குடி - கழனிவாசற்குடி
காரைக்குடி
திரைப்படத் தயாரிப்பாளர் - சொற்பொழிவாளர்

ஆ. மு. ஆறு. பழநியப்ப செட்டியார் – மெய்யம்மை ஆச்சியின் மகன். முறையான கல்வி என்பது பள்ளி இறுதி வகுப்பில் வெற்றி பெற்றது தான். ஆனால் தனிப்பட்ட ஆர்வத்தால் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும், தத்துவங்கள் மற்றும் பல்வேறு துறை பற்றிய தமிழ், ஆங்கில நூல்களையும் நுணுகிப் படித்துத் தேர்ந்தவர்.

பெரியாரின் தொண்டராகப் பொது வாழ்க்கையைத் தொடங்கிய இவர், காந்தியத்தால் ஈர்க்கப்பட்டுக் காங்கிரசுப் பேரியக்கத்தில் சேர்ந்தார். அது இரண்டாகப் பிரிந்தபோது, இவர் பழைய காங்கிரசு என வழங்கப்பெற்ற காமராசர் தலைமையிலான கட்சியில் இருந்தார். காமராசரோடு இவருக்கு நெருங்கிய தொடர்புண்டு. அக்கட்சியின் இராமநாதபுர மாவட்டத் தலைவராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

Koviloor Digital Library

காமராசர் காலத்திற்குப் பிறகு பழைய காங்கிரசுக் கட்சி வேறு சில கட்சிகளுடன் இணைந்து ஜனதா கட்சியாக உருவெடுத்து மத்திய ஆட்சியைப் பிடித்தபோது, தமிழகத்திலிருந்து நடுவண் அரசின் அமைச்சராக இருந்த பா. இராமச்சந்திரனுடன் இவர் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார். அப்போதைய இந்தியத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய், தமிழகம் வரும் போதெல்லாம், அவரது ஆங்கில மேடைப் பேச்சுக்களைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்கியவர் இவரே.

1983 இல் ஈழத்தமிழர் சிக்கல் வந்தபோது, தேசிய அணுகுமுறை சரியில்லை என இவர் கருதியதாலும், தமிழ் உணர்வு இவருக்கு இயல்பாகவே மிகுதி ஆகையினாலும், ஜனதாவிலிருந்து விலகி, தி.மு.க.வில் தம்மை இணைத்துக் கொண்டார். அண்மையில் தி.மு.க பிளவு பட்டபோது, வை. கோபால்சாமி தலைமையிலான மதி.மு.க. வில் இணைந்தார்.

காரைக்குடி காவல்நிலையத்தில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டதை எதிர்த்து நடத்திய போராட்டத்திலும், கள்ளுக்கடை மறியல் போராட்டத்திலும், விவசாயப் போராட்டத்திலும், காரைக்குடிக் குடிநீரைத் திருப்புத்தூருக்குக் கொண்டு செல்வதை எதிர்த்து நடத்திய போராட்டத்திலும் எனப் பல முறை அரசியல் காரணங்களுக்காகச் சிறை சென்றவர்.

தனி வாழ்க்கையில் திரைப்படத் தயாரிப்பைத் தனக்குரிய தொழிலாகக் கொண்டவர். 'இன்று நீ நாளை நான்', 'அந்த ஒரு நிமிடம்', 'தீர்த்தக் கரையினிலே', 'மாமியார்கள் ஜாக்கிரதை', 'பொறுத்தது போதும்', என்ற ஐந்து படங்களைத் தயாரித்த இவர் ஆறாவதாக 'வா வா வசந்தமே' என்ற படத்தைத் தாமே கதை, உரையாடல் எழுதி, இயக்கித் தயாரித்தார்.

கலைத் துறையிலும், அரசியல் துறையிலும் இவர் பணியாற்றுவதோடு, அடிப்படையில் இவர் தமிழ் உணர்வு மிக்கவர். மிகச்சிறந்த மேடைப் பேச்சாளர். அழுத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தும் எழுத்தாளர். பல்வேறு இதழ்களில் அரசியல், சமுதாயம், மொழி பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

தனித்தமிழ் ஆர்வம் மிக்கவர். இவர் ஜனதாக் கட்சியில் இருந்தபோது, இவர் அடிக்கும் சுவரொட்டிகள், கூட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றில் 'சனதா', 'மொரார்சி' என்பது போன்ற தனித்தமிழ் எழுத்து முறையிலேயே எழுதி வெளியிட்டவர். தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்திரனார், வ.சுப. மாணிக்கனார் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தனித்தமிழ் உணர்வையும், அறிவையும் வளர்த்துக் கொண்டவர்.

கடைத்தெருக்களில் தமிழ்ப்பெயர்ப் பலகைகள் வைக்கப்பட வேண்டும் என்ற இயக்கத்தை நடத்தி, காரைக்குடியிலும், மதுரையிலும் அதனைப் பெருமளவில் செயற்படுத்தியவர். அதுபோலவே தமிழ் அருச்சனைக்கு ஓர் இயக்கம் நடத்தி, மீனாட்சி கோவிலில் தக்காராக வ.நா. சிதம்பரம் செட்டியார் இருந்தபோது, தமிழ் அருச்சனையை இயல்பாக்கி, விரும்புவோருக்கு மட்டுமே வடமொழியில் அருச்சனை செய்யப்படும் என்ற நிலையை உருவாக்கியவர்.

இவர் தமிழ் உணர்வோடு சமுதாயப் பணி ஆற்றிவருபவர். அரசியல், கலைத் துறையில் ஆற்றல் மிக்கவர்; சொல்லாற்றலும், செயலாற்றலும் வாய்க்கப் பெற்றவர்; சிந்தனைத் திறம் மிக்கவர்.

கலியாணம்

நகரத்தாருடைய வாழ்க்கையில் கலியாணம் மிகச் சிறப்பாக நடைபெறுவதாகும். பல நாள் சிக்கனமாகச் சேமித்து ஒருநாளில் ஆடம்பரமாகச் செலவழிப்பர் என்று கூறுவதுண்டு. அவ்வாறு சீர்வரிசை, விருந்து ஆகியவற்றில் பெருஞ்செலவு செய்து கலியாணம் செய்வார்கள். முன்பு ஏழுநாள் கலியாணம் நடைபெற்றது. பின்பு மூன்று நாள் நடைபெற்றது. இப்பொழுது பெரும்பாலும் ஒருநாள் கலியாணமே நடைபெறுகின்றது.

நகரத்தார்களை ஏனைய செட்டியார்களில் இருந்து இனம் பிரித்துக் காட்டுவது அவர்கள் சார்ந்துள்ள கோவிற்பிரிவுகளேயாகும். ஒன்பது கோவில் பிரிவுகளில் இளையாத்தங்குடிக் கோவிலில் ஏழு உட்பிரிவுகள், மாத்தூரில் ஏழு உட்பிரிவுகள் உள்ளன. இவற்றோடு ஏனைய ஏழு கோவில்களையும் சேர்க்க மொத்தம் 21 பிரிவுகளாகும். இப்பிரிவினர் ஒவ்வொருவரும் தமது பிரிவினருக்குள் திருமணம் செய்து கொள்வதில்லை. பிள்ளையார்பட்டிக் கோவிலாரும் இரணிக் கோவிலாரும் ஒருவர் பிரிவில் மற்றவர் திருமணம் செய்து கொள்வதில்லை.

இந்தப் பெண்ணுக்கு இந்த மாப்பிள்ளை என உறுதி செய்து கொண்டவுடன் பேசி முடித்துக் கொள்ளுதல் (தக.) என ஒரு சடங்கு நிகழும்.

கலியாணச் சடங்குகள்

1. முகூர்த்தக் கால் ஊன்றுதல்
2. கலியாணம் சொல்லுதல்
3. கோவிலில் பாக்கு வைத்தல்
4. கூடி ஆக்கி உண்ணுதல்
5. மணை போடுதல்

Koviloor Digital Library

6. மாப்பிள்ளைக்கு மிஞ்சி போடுதல்

7. முதல்சீர் வைத்தல்

8. மறுசீர் வைத்தலும் கலியாண வேவும்.

9. அரசாணிக்கால் கட்டுதலும் கோலமிடுதலும் தும்புபிடித்தலும்.

10. மாற்றுக்கட்டுதல்

11. கழுத்துரு வாங்கப் போதல்

12. தலைச் சீலையில் முடிதல்

13. மாம வேவு

14. முகூர்த்தம் வைத்தல் அல்லது கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல்.

15. பூரம் கழித்தல்

16. மாப்பிள்ளை அழைத்தல்

17. பகவணமும் காப்புக் கட்டுதலும்

18. மாப்பிள்ளை கோவிலுக்குப் போய்வருதல்

19. மாப்பிள்ளை திருப்பூட்டச் செல்லுதல்

20. பெண்ணெடுக்கிக் காட்டுதல்

21. கழுத்துரு – ஆசி வாங்குதல்

22. திருப்பூட்டுதல்

23. இசைபிடிமானம் எழுதுதல்

24. திருப்பூட்டிய சடங்கு

25. மணவறைச் சடங்கு

26. சாப்பாடு போடுதல்

27. பணம் எழுதுதல்

28. கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்

29. மஞ்சள் நீராடுதல்

30. காப்புக் கழற்றிக் கால்மோதிரம் இடுதல்

31. பிள்ளை எடுக்கிக் கொடுத்தல்

32. பெண் சொல்லிக் கொள்ளுதல்

33. பெண் அழைப்பும் சடங்கும்

34. குலம் வாழும் பிள்ளை எடுத்தல்

35. சீராட்டுக் கொடுத்தலும் பாக்குச் சுருளும்

36. பால் வருஷ வேவு, பொங்கல் வேவு

37. தும்பு கட்டுதல்

38. பால்பழம் சாப்பிட உறவினர் வீடு சென்று வருதல்.

முகூர்த்தக் கால் ஊன்றுதல் : திருமணத்திற்கு முன் ஒரு நல்ல நாளில் இரு வீட்டிலும் வளவு வாசலின் ஈசானிய மூலையாகிய வடகிழக்கு மூலையில் கொட்டகைக்காரரைக் கொண்டு முகூர்த்தக் கால் ஊன்றுதல் நிகழும். ஒரு மூங்கிலில் மஞ்சள் தடவிப் பொட்டு வைத்து மாங்குழை கட்டியிருப்பார்கள். அதுவே முகூர்த்தக் காலாகும் அதற்குத் தேங்காய் உடைத்துக் கற்பூரம் காட்டுவார்கள். இதன்பிறகு காய்ச்சி ஊற்றிக் கொள்ளும்வரை எந்தவிதமான தீட்டு நிகழ்ச்சி களிலும் கலந்து கொள்ள மாட்டார்கள். (பார்க்க : காய்ச்சி ஊற்றுதல்)

கலியாணம் சொல்லுதல் : மாப்பிள்ளை வீட்டார் மாப்பிள்ளைக்கு ஆயா, அப்பத்தா வீட்டிலும் பெண் வீட்டார் பெண்ணுக்கு ஆயா, அப்பத்தா வீட்டிலும் கலியாணம் சொல்வார்கள். மணமக்களின் சகோதரி வீட்டிலும் கலியாணம் சொல்வதுண்டு. மணமக்களின் தந்தை அல்லது மூத்த சதோதரர் தேங்காய்ச் சட்டி கொண்டு சென்று கலியாணம் சொல்லும் வீட்டில் தடுக்கில் உட்கார்ந்து 'என் மகன் அல்லது மகளுக்கு இன்ன நாளில் கலியாணம்' என்று சொல்லி அழைப்பார். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு வெற்றிலை பாக்குடன் ரூபாய் வைத்துத் தருவார்கள். அதுவே பாக்குப் பணம். முகூர்த்தக்கால் ஊன்றும் நாளில் கலியாணம் சொல்லுவார்கள். மணவீட்டின் பக்கத்து வீடுகட்குச் சிறுவர்கள் பட்டுக் கட்டிக் கொண்டு சங்கு முழங்கிக் கொண்டு சென்று கூடியாக்கும் நாளன்று கலியாணம் சொல்லுவார்கள். ஊர்க்கலியாணம் சொல்லுதல் என்ற இது கூறப்பட்டது. இவ்வாறு கலியாணம் சொல்லுதலையே ''மாநகர்க்கு ஈந்தார் மணம்'' எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

கோவிலில் பாக்குவைத்தல் : இருவீட்டாரும் அவரவர்கள் நகரக்கோவிலில் 3 நாள் முன்பாகப் போய்ப் பாக்கு வைக்கவேண்டும். எடுத்துக் காட்டாக, 13 ஆம் தேதி கலியாணம் என்றால் 10 ஆம் தேதி காலைமுதல் மாலைக்குள் பாக்கு வைக்கவேண்டும். மணமகன் மணமகள் இருவரின் கோவில் பிரிவு, வகை, மணமக்கள் பெயர் தகப்பனார் பெயர், வீட்டு விலாசம், கலியாணம் நடைபெறும் நாள், நேரம், இடம் ஆகியவற்றைக் குறித்துக் கொண்டு பங்காளிகளில் யாரேனும் ஒருவர் போய்ப் பாக்கு வைத்து வருவார். இரணிக்கோவில், பிள்ளையார்பட்டிக் கோவிலார் இருவரும் தத்தம் கோவிலில் பாக்கு வைப்பதோடு இளையாத்தங்குடியிலும் பாக்கு வைப்பது மரபு. திருமணத்திற்கு முதல்நாள் அந்தந்தக் கோவிலிலிருந்து மணமக்கள் வீட்டிற்கு இரண்டிரண்டு மாலைகள் வரும். அதைப் பெண்கள் சங்கு ஊதி வாங்கி வைப்பார்கள். இது நகரத்தார் சமூகத்தில் திருமணத்தைப் பதிவு செய்யும் முறையாகும், மாப்பிள்ளை வீட்டில் வாங்கிவைத்த மாலைகள் இரண்டில் ஒன்றை மாப்பிள்ளை திருமணத்தன்று அணிந்து கொள்ளுவார். மற்றொன்றைத் திருப்பூட்டச் செல்லும் போது கொண்டு சென்று முதலில் மாப்பிள்ளை பெண்ணுக்கு அம்மாலையையே

Koviloor Digital Library

அணிவிப்பார். பெண்வீட்டில் வாங்கிவைத்த மாலைகளில் ஒன்றைத் திருமணத்தன்று பெண் பகவணம் செய்து கொள்ளும்போது அணிந்து கொள்வது வழக்கம். மற்றொன்றை அரசாணிக்காலில் கட்டிவிடுவர்.

கூடி ஆக்கி உண்ணுதல் : திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் உறவினர்கள் திருமண வீட்டிற்கு வந்து விருந்துண்ணுதல் கூடியாக்கி உண்ணுதல் என வழங்கப்படுகிறது. சில வீடுகளில் அந்த நாளில் சாமிக்குப் படைப்பார்கள்.

மணைபோடுதல் : கூடி ஆக்கி உண்ணும் நாளன்று மாலையில் மணை போடப்படும். வெளியூர்த் திருமணமாக இருந்தால் பெண் வீட்டில் மட்டுமே இச்சடங்கு நிகழும். உள்ளூர்த் திருமணமாக இருந்தால் இருவீட்டிலும் நிகழும்.

வளவுக்குள் திருமண வீட்டிற்கு எதிரே பத்தியில் மணை போடுவர். தெற்கு வட்டகையில் திருமண வீட்டின் உள்ளேயே மணை போடப்படுகிறது. பங்காளி மற்றும் உறவினர் வீட்டுப் பெண்கள் மணை போடுவர். சில ஊர்களில் மணை போடுதல் திருமணத்திற்கு முதல்நாள் மாலையிலும் நிகழ்கிறது. பளிங்கினால் அல்லது மரத்தினால் ஆன மணை பயன்படுத்தப்படுகிறது. அதனை உரிய இடத்தில் வைப்பதற்கு முன், அந்த இடத்தில், பங்காளி மற்றும் உறவினர் வீட்டுப் பெண்கள் செங்கல் எடுத்து வைத்து, குழைத்த மண்ணை அதன் மீது பூசுவர். மணைபோடுதல் என்ற இச் சடங்கிற்குப் பின் பளிங்குமணை அதன் மீது வைக்கப்படும். பெண் வீட்டில் இரட்டை மணையும், மாப்பிள்ளை வீட்டில் ஒற்றை மணையும் வைப்பது மரபு.

மிஞ்சி போடுதல் : கூடி ஆக்கி உண்ணும் நாளன்று மாலையில் மாப்பிள்ளைக்கு அவரது தாய்மாமன் காலில் மிஞ்சி அணிவிப்பது ஒரு சடங்காக நிகழ்கிறது.

நகரத்தார் கலியாணத்தில் தாய்மாமன் பங்கு குறிப்பிடத்தக்கது. மிஞ்சிபோடுவதில் தொடங்கி, பெண்ணழைப்பு முடியும் வரை அனைத்துச் சடங்குகளிலும் இவர் இடம் பெறுவார். தாய் மாமனோ, அவரது மகனோ, மாமப் பட்டு அணிந்து கொண்டு இச்சடங்குகளைச் செய்வது மரபு.

முதல்சீர்வைத்தல் : கலியாணத்திற்கு முதல் நாள் காலையில் பெண் வீட்டிலிருந்து பெண்கள் மட்டும் மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று வருவார்கள். பித்தளைக் குடம் 2, செம்பு 2, விளக்கு 1 ஆகியவற்றுடன் மஞ்சள், உப்பு, புளி, பஞ்சு, விபூதி, பச்சரிசி, பாக்கு ஆகிய ஏழு சாமான்களும் கொண்டு போக வேண்டும். இதற்குச் சில ஊர்களில் உப்புப்புளி வைக்கச் செல்லுதல் என்ற பெயர் வழங்குகிறது. வெளியூர்த் திருமணத்தில் இச்சடங்கு நிகழ்வதில்லை.



மணமகளுக்கான சீர்வரிசை

மறுசீர்வைத்தலும் கலியாண வேவும் : கலியாணத்திற்கு முதல்நாள் மாலையில் பெண் வீட்டிலிருந்து மறுசீர் வைக்க ஆண்களும் பெண்களும் செல்வார்கள். ஆண்கள் தேங்காய்ச் சட்டி, சரிகை வேட்டி, துண்டு, கழுத்துச் சங்கிலி, கைக்கடிகாரம், சங்கிலி, மோதிரம், எலுமிச்சம் பழம், பூச்செண்டு ஆகியவற்றைக் கொண்டு போவார்கள். பெண்கள் வெள்ளிவிளக்கு, குடம், செம்பு ஆகியவற்றை எடுத்துச் செல்வார்கள். குடத்தில் தண்ணிர் நிரப்பிச் செல்வார்கள்.

சீர்வைக்க மாப்பிள்ளை வீட்டுக்குப் போனதும் மாப்பிள்ளைக்கு வேஷ்டி துண்டு அணிவித்து நகைகளையும் பெண் வீட்டுப் பெரியவர்கள் அணிவித்தபின் கலியாணவேவு இறக்குவார்கள். வெளியூர்த் திருமணமாக இருந்தால் திருமணத்தன்று காலையில் மாப்பிள்ளை அழைப்பின்போது இவை நிகழும்.

அரசாணிக்கால் கட்டுதலும் கோலமிடுதலும் தும்பு பிடித்தலும் : அரசன் ஆணைக்கால் என்பதே மருவி அரசாணிக்கால் என வழங்குகிறது. அரசன் நேரில் வர இயலா நிலையில் அரசன் ஆணையை முன்னிறுத்தித் திருமணம் நடத்தியதாகக் கூறுவர். சங்கு ஊதச் சொல்லி அரசாணி மேடையில் உள்ள குழியில் சிறிது பால்விட்டுப் பவளத்தைப் போடுவார்கள். அதன்பின் அதில் ஒரு கழியை ஊன்றி அதில் கிளுவை பாலைக் குச்சிகளை இணைத்துக் கட்டுவார்கள். அந்தக் குச்சிகள் தெரியாமல் அதன்மேல் மாவிலைகளையும் அரசு இலைகளையும் சுற்றிக் கயிற்றால் கட்டுவார்கள். இருவீட்டிலும் இதை அவரவர் பங்காளி வீட்டு ஆண்கள் கட்டுவார்கள். வெளியூர்த் திருமணமாக இருந்தால் பெண்வீட்டில் மட்டுமே அரசாணிக்கால் கட்டப்படும். பகவணம் செய்யும்

Koviloor Digital Library

போது புரோகிதர்களால் அரசாணிக் காலுக்கு மரியாதை செய்யப்படும். திருமணம் முடிந்ததும் அரசாணிக்காலுக்குப் பொங்கலிட்டுப் படைப்பார்கள். பெண்ணழைப்பு முடிந்த பின்னரே அரசாணிக் காலை அவிழ்க்க வேண்டும். பங்காளி வீட்டுப் பெண்கள் திருமணம் நடைபெறும் வளவு வீட்டிற்குள் தும்பு பிடித்துக் கோலம் இடுவார்கள். வளவுக்குள் திருமண வீட்டின் உட்புறச்சுவரில் ஏட்டுக் கயிற்றால், கோல மாவைத் தொட்டு வீடு போன்ற அமைப்புடன் ஒரு கோலமிடுவர். இதுவே 'தும்பு பிடித்தல்' ஆகும். ஏட்டுக் கயிறே தும்பு ஆகும்.

மாற்றுக் கட்டுதல் : திருமண மேடைக்கு மேல் கறுப்பு நிறம் இல்லாத, மாற்றுச் சேலை இரண்டைச் சலவைத் தொழிலாளிகள் கட்டிவிடுவார்கள். இந்நாளில் பங்காளிகளே கட்டி விடுகின்றனர். மரத்தடியில் திருமணம் நடைபெற்ற தொடக்க காலத்தில் பறவை எச்சம் முதலியவை விழாமல் இருக்கவும் பின்னர் வீட்டின் மேல்தளத்திலுள்ள தூசி சிறுபூச்சிகள் முதலியன மணமக்கள் மீது விழுந்துவிடாமல் இருப்பதற் காகவும் இவ்வாறு மாற்றுக் கட்டும் வழக்கம் தோன்றியது. இதனையே ''நீல விதானத்து நித்திலப் பூம்பந்தர்' என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

கழுத்துரு வாங்கப் போதல் : மாப்பிள்ளை வீட்டார் உப்புக்கடகம், ஏட்டோலை, முளைப்பாரி முதலியவற்றை எடுத்துக்கொண்டு பெண் வீட்டிற்குச் செல்வர். பெண் வீட்டார் திருமணம் நடைபெறும் வளவு வீட்டிற்குள் மாப்பிள்ளை வீட்டுப் பெரியவர்களிடம் கழுத்துரு உருப்படி களையும் தாலிச் சங்கிலிகளையும் கொடுப்பார்கள். எல்லாவற்றையும் பட்டுத் துண்டில் வைத்து அத்துடன் விரலிமஞ்சள், வெற்றிலைபாக்கு, மல்லிகைப்பூ ஆகியவற்றையும் வட்டுவப்பையில் வைத்துக் கொண்டுவர வேண்டும். பின்பு மாப்பிள்ளை வீட்டில் பங்காளிவீட்டு ஆண்கள் கழுத்துருவைக் கோத்து வைப்பார்கள்.

தலைச் சீலை முடிதல் : உள்ளூர்த் திருமணமாக இருந்தால் திருமணத்திற்கு முதல்நாள் மறுசீர் வைக்கச் செல்லும்போது திருமணம் நடைபெறும் வளவு வீட்டில் மாப்பிள்ளையை அமரச் செய்து பெண்ணின் சகோதரரோ தகப்பனாரோ ஒரு தொகையைத் தலைப்பாகையின் மேல் வைப்பர். இதை மாப்பிள்ளையின் மாமக்காரர் எடுத்து மணமகன் தந்தையிடம் கொடுத்துப் பின்னர் அதைச் சீதனத்துடன் சேர்த்துக் கொள்வர். மாப்பிள்ளையின் சகோதரி கணவர்களும் தலைச்சீலை முடிவதுண்டு. மாப்பிள்ளைக்குத் தலைச் செலவுக்குக் கொடுத்தல் என்பதே தலைச்சீலை முடிதல் என மருவிவந்ததாகக் கூறுவர். வெளியூர்த் திருமணத்தில் இச்சடங்கு திருமணத்தன்று காலையில் திருப்பூட்டுவதற்கு முன் நிகழும்.

மாமவேவு : மாப்பிள்ளையோ பெண்ணோ தலைப்பிள்ளையாக இருந்தால் அவர்களது ஆயா வீட்டிலிருந்து வேவு இறக்குவார்கள். (பார்க்க : வேவு இறக்குதல்) இச்சடங்கு திருமணத்திற்கு முதல்நாள் மாலையிலோ திருமணத்தன்று காலையிலோ நிகழும்.

முகூர்த்தம் வைத்தல் அல்லது கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல் : மாப்பிள்ளை வீட்டார் தேங்காய், பழம், பூ, வெற்றிலை பாக்கு, பேரீச்சம்பழம், எலுமிச்சம்பழம், கற்கண்டு, மஞ்சள் முதலியவற்றைத் தாம்பாளங்களில் வைத்தும் சடங்குத்தட்டில் பூ, சந்தனம், மஞ்சள், குங்குமம், விபூதி, எலுமிச்சம் பழம் ஆகிய மங்கலப் பொருள்களோடு பவுனையும் தேங்காய்ச் சட்டியையும் எடுத்துக் . கொண்டு பெண் வீட்டிற்குச் செல்வர். பெண்வீட்டில் மாப்பிள்ளை வீட்டார் கொண்டுவரும் பவுனை ஆசாரியிடம் கொடுத்துத் தட்டச் செய்வர். இச்சடங்கு இப்போது பெரும்பாலும் திருமணத்தன்று காலையில்தான் நடைபெறுகிறது.

பூரம் கழித்தல் : மணமகளின் கன்னித் தன்மையை நீக்கி அவளை இல்லறத்திற் குரியவளாக மந்திரப் பூர்வமாக ஆக்குதலே இதன் நோக்கம். திருமணத்தன்று அதிகாலையில் மணமகளை நீராடச்செய்து ஒரு சரமாலை மட்டும் கழுத்தில் அணிவித்து மணமேடைக்குப் பக்கத்தில் தடுக்கில் நிற்கச் செய்து பெண்ணின் அம்மான் பெண்டிர் பூரம் கழிப்பார்கள். மணமகளின் உடலில் ஏழு இடங்களில் அதாவது தலையிலும் தோள்பட்டைகள் இரண்டிலும் இடுப்பில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பாதங்களிலும் வேப்பிலையை வைத்து இரும்புச் சத்தகத்தினால் அதைத் தட்டிவிடுவார்கள். பிறகு புரோகிதர் விநாயகர் பூசை செய்து வர்ண கும்ப பூசையும் செய்து பூரம் கழிப்பார்.

மாப்பிள்ளை அழைத்தல் : வெளியூர்த் திருமணத்தில் திருமணத்தன்று காலையில் நிகழும் சடங்கு இது. பெண்ணின் ஊரில் ஒரு பொது இடத்தில் மாப்பிள்ளை காலையில் வந்து தங்கியிருப்பார். பெண் வீட்டார் மேளதாளத்துடன் வந்து மாப்பிள்ளையைத் தமது இல்லத்திற்கு அழைத்துச் செல்வர். அவ்வாறு அழைக்க வரும் போது உள்ளூர்த் திருமணத்தில் மறுசீர் வைக்கச் செல்லும்போது செய்வது போல மாப்பிள்ளைக் குரிய அணிகளைப் பெண் வீட்டைச் சேர்ந்த பெரியவர்கள் அணிவிப்பார்கள்.

Koviloor Digital Library

பகவணமும் காப்புக் கட்டுதலும் : திருமணத்தன்று காலையில் பெண்ணுக்குத் தனியாகவும் மாப்பிள்ளைக்குத் தனியாகவும் இச்சடங்கு நிகழும். புரோகிதர் விநாயகர் பூசை செய்து சங்கல்பம் செய்துவைத்து மாமக்காரரைக் கூப்பிட்டுக் காப்புக் கட்டச் செய்வார். மாப்பிள்ளைக்கு உள்ளூர்க் கலியாணமாக இருந்தால் மாப்பிள்ளை வீட்டிலும் வெளியூர்க் கலியாணமாக இருந்தால் மாப்பிள்ளை அழைப்புக்குப்பின் பெண் வீட்டிலும் இச்சடங்கு நிகழும். 'பகவத் தியானம்' என்பதே பகவணம் என மருவியது என்பர்.

மாப்பிள்ளை கோவிலுக்குப் போய்வருதல் : உள்ளூர்த் திருமணமாக இருந்தால் மாப்பிள்ளை திருமணத்தன்று காலையில் பங்காளிகள் உறவினர்களுடன் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று அருச்சனை செய்து சாமி கும்பிட்டுத் திரும்புதல் மரபு. வெளியூர்த் திருமணமாக இருந்தால் மாப்பிள்ளை அழைப்பு நிகழும் கோவிலிலேயே இந்த அருச்சனை வழிபாடுகள் நிகழும்.

திருப்பூட்டச் செல்லுதல் : உள்ளூர்த் திருமணத்தில் மாப்பிள்ளை வீட்டார் உற்றார் உறவினர் பங்காளிகளுடன் ஆண்கள் தேங்காய்ச் சட்டி, சிலேட்டு விளக்கு 2, கடகத்தில் வெற்றிலைபாக்கு, கோட்டை நெல் (விவரம் பின்னர்) முதலியவற்றையும் பெண்கள் மணமகளுக்குரிய சேலை, சட்டை, கழுத்துரு, தாலி, கோவில் மாலை, விபூதி, குங்குமம் ஆகியவற்றை ஒரு தாம்பாளத்திலும் கொண்டு போவார்கள். இத்தாம்பாளத்திற்குத் திருப்பூட்டும் தட்டு என்பது பெயர். பெண் வீட்டுக்குள் நுழைந்ததும் பெண்கள் கொண்டு போகும் தாம்பாளத்தைப் பெண்ணின் தாயார் பெற்றுக் கொள்ளுவார். வெளியூர்த் திருமணத்தில் மாப்பிள்ளை அழைத்துச் செல்வதே திருப்பூட்டச் செல்வதும் ஆகும்.

மாப்பிள்ளை அழைக்கும் பொழுதும், மாப்பிள்ளை கோவிலுக்குச் செல்லும் போதும், திருப்பூட்டச் செல்லும் போதும் குதிரையில் செல்லும் பழக்கம் முன்னர் இருந்தது.

பெண்ணெடுக்கிக் காட்டுதல் : மாப்பிள்ளை பெண்வீட்டிற்குள் நுழையும் பொழுது பெண்ணைப் பெண்ணின் அத்தை, அழைத்து வந்து மாப்பிள்ளைக்குக் காட்டுதல் இச்சடங்கு ஆகும்.

கழுத்துரு – ஆசி வாங்குதல் : திருப்பூட்டு வதற்கு முன் திருப்பூட்டும் தட்டில் கழுத்துரு, தாலிச்சங்கிலி, கோவில்மாலை, மஞ்சள், விபூதி, குங்குமம் ஆகியவற்றை வைத்துப் பெண்ணின் மாமக்காரரும் அவர் தம் மனைவியும் அந்தத் தாம்பாளத்தைப் பெரியோரிடம் காண்பித்து ஆசி வாங்குவார். பெரியவர்கள் தம் கைகளால் தாம்பாளத்தைத் தொட்டு ஆசி வழங்குவார்கள். இளங்கோவடிகள் 'அகலுள் மங்கல அணி எழுந்தது' எனக் குறிப்பிடுவது இச்சடங்காக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

திருப்பூட்டுதல் : மாப்பிள்ளை வீட்டார் கொண்டுவந்த திருப்பூட்டும் சேலை, சட்டை ஆகியவற்றை மணப்பெண் அணிந்துகொண்டு மணையில் கிழக்கு முகமாக நிற்பாள். மணமகன் தடுக்கில் கீழே மணமகளுக்கு எதிரே நிற்பார். அருகில் இருவீட்டுப் பெரியோரும் சூழ்ந்திருப்பர். மணப்பெண் கையில் தேங்காய், வெற்றிலை பாக்கு, மஞ்சள், பச்சரிசி ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும். அவற்றை இரண்டு கையாலும் ஏந்தித் தேங்காயின் குடுமிப்பகுதி மணமகனை நோக்கி இருப்பது போல் வைத்துக் கொள்வாள். முதலில் மணமகன் கோவில் திருநீற்றைத் தான் பூசிக்கொண்டு பின்னர் மணமகளுக்கும் பூசுவார். பிறகு கோவில் மாலையை எடுத்து மணமகளுக்கு அணிவிப்பார். பின்னர் கழுத்துருவைக் கவனமாக எடுத்து மேல்பாகத்தில் திருமாங்கல்யம் உள்ள பகுதி வருமாறு மணமகளுக்கு அணிவித்துப் பின்புறம் மூன்று முடிச்சுப் போடுவார். முதல் இரண்டு முடிச்சுக்களை மாப்பிள்ளையும் பின் மூன்றாம் முடிச்சை நாத்தனாரும் போடுவது வழக்கம். பிறகு தாலிச் சங்கிலிகளை அணிவிப்பார். அதன்பின் கழுத்துரு திருமாங்கல்யத்திலும் பின்புறம் உள்ள மூன்று முடிச்சுக்களிலும் சிறுதாலியிலும் கோவில் விபூதி சந்தனம் குங்குமம் ஆகியவற்றை ஒவ்வொன்றாக வைப்பார். பின்னர் மணமகள் கையிலிருக்கும் தேங்காய் முதலியவற்றைத் தாம்பாளத்தில் வைக்கச் சொல்லிவிட்டு மூன்றுமுறை மாலை மாற்றிக் கொள்வர். முதலில் பெண்தான் மாப்பிள்ளைக்கு மாலையிடுவாள். பிறகு மணமக்கள் வளவுவாசல் முகப்புவரை சென்று பெரியவர்களிடம் ஆசி பெறுவர். நகரத்தார் திருமணத்தில் திருப்பூட்டும் சடங்கில் புரோகிதருக்கு எந்தப் பங்கும் இல்லை. இருவீட்டையும் சேர்ந்த பெரியவர்களே நின்று இச்சடங்கினை நிகழ்த்துவர்.

இசைபிடிமானம் எழுதுதல் : (பார்க்க : இசைபிடிமானம்)

திருப்பூட்டிய சடங்கு : மணப்பெண்ணைக் கிழக்கு முகமாக மணையின் மீது நிற்கச் செய்து பெண்ணுக்கு நேர் எதிரில் சடங்கு செய்பவர்கள் நின்று கொண்டு சடங்குகளைச் செய்வர். முதலில் சடங்குத்தட்டில் உள்ள விபூதியை வலது கரத்தால் எடுத்துச் சடங்கு செய்பவர் தானும் பூசிக்கொண்டு பெண்ணுக்கும் பூசுவார். சடங்குத் தட்டில் உள்ள ஏழு கிண்ணங்கள் ஒவ்வொன்றையும் மூன்று

Koviloor Digital Library

மூன்று முறை தொட்டு விபூதியைத் தானும் கழுத்தில் பூசிக்கொண்டு பெண்ணுக்கும் கழுத்தில் பூசுவார். இவ்வாறு இருபத்தியொரு முறை பூசியதும் வலது கரத்தில் கெண்டிச் செம்பை எடுத்துக் கொண்டு மணமகள் கையில் ஒரு வெற்றிலையைக் கொடுத்து முதலில் நிறை நாழியை (படியில் நெல்லும் அதன் மேல் கத்திரிக்காயும் இருக்கும்) சடங்கு செய்பவர் இடது கையால் பிடித்துக் கொண்டு வலது கையினால் கெண்டிச் செம்புத் தண்ணீரை மணமகள் கையில் உள்ள வெற்றிலையில் ஊற்றுவர். மணமகள் அந்த நீரைப் பாதங்களில் வடித்துவிட்டு இரு கைகளினாலும் வெற்றிலையை நெற்றியில் வைத்து வணங்குவாள். இச்சடங்கு மூன்று முறை நிகழும் இதுபோலச் சிலேட்டு விளக்கு, பிள்ளைக் குழவி முதலியவற்றை வைத்துக் கொண்டு சடங்கு செய்வர். சடங்குகள் முடிந்ததும் சிலேட்டு விளக்கை நேராக வீட்டுக்குள் வைப்பர். மற்றபொருள்களை மணமகளின் பின்புறமாகச் சுற்றி இடவலமாகக் கொடுத்து வீட்டுக்குள் வைப்பர்.

மணவறைச் சடங்கு : புரோகிதர் இச்சடங்கை நடத்தி வைப்பார். விநாயகர் பூசை, வர்ணகும்ப பூசை, அக்கினி வளர்த்து நவக்கிரக ஓமம், ஆயுள் ஓமம், தீவலம் வருதல், அரிமணம் இடுதல் பூமணம் இடுதல் ஆகியவை நிகழும்.

முளைப்பாலிகைக் கிண்ணங்கள் ஐந்திலிருந்து முளைவிட்ட நெல் முதலிய தா்னியங்களைக் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துப் போட்டுப் பெரியவர்கள் வாழ்த்துதல் அரிமணம் இடுதல் எனப்படும். இச்சடங்கு பகவணத்தின் போதும் நடைபெறும்.

மலர்களை எடுத்துப் பசும்பாலில் நனைத்து மணமக்கள் உடலில் மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய மூன்று இடங்களிலும் தொட்டு வாழ்த்துதல் பூமணம் இடுதல் ஆகும். இப்படி மூன்று முறை செய்வர். முதலில் மாமக்காரர்தான் செய்வார். பகவணத்தின்போது மாப்பிள்ளை வீட்டில் மாப்பிள்ளைக்கு மட்டும் பூமணம் இடுவார்கள்.

சாப்பாடு போடுதல் : சடங்கு முடிந்ததும் பெண் தன்கையால் மாப்பிள்ளைக்குச் சாப்பாடு பரிமாறுவாள். அவர் உண்டு முடிந்ததும் அதே இலையில் பெண் உணவருந்துவது இச்சடங்காகும்.

பணம் எழுதுதல் : மணவறைச் சடங்குக்குப் பின் பணம் எழுதுதல் நிகழும் (பார்க்க : பணத்திருப்பு)

கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல் : மணமக்கள் வளவு வாசலில் கிழக்கு முகமாக நிற்க உறவினர், பங்காளிகள் வரிசையாக வருவர். மணமக்கள் அவர்களை வணங்கி ஆசி பெற்றுக் கொள்வர். அப்போது உறவினர்களும், நண்பர்களும் மணமக்களுக்குப் பரிசளிப்பர்.

மஞ்சள் நீராடுதல் : பெண் வீட்டில் வளவு வாசலில் மணமக்கள் நாற்காலியில் அமர்ந்திருக்க; தண்டல்காரன் இருவருக்கும் எண்ணெய், சீயக்காய், மஞ்சள் கொடுத்து நீராடச் சொல்வது வழக்கம். இப்போது மஞ்சள் கலந்த நீரில் ஆடை நுனிகளைமட்டும் நனைத்துக் கொள்வது இச்சடங்கின் எச்சமாக இருக்கிறது.

காப்புக் கழற்றிக் கால் மோதிரம் இடுதல் : மணமகனின் தாயார் அல்லது நாத்தனார் மணமகளின் வலது கையில் தான் அணிந்திருக்கும் காப்பை அணிவித்து அவளது இரண்டு கால்களிலும் மிஞ்சி அணிவிப்பார்கள். மருமகளுக்குத் தன் அணிகலன்களையும் உடைமைகளையும் குடும்பப் பொறுப்பினையும் கொடுப்பதுவே இதன் கருத்து. பகவணத்தின் போது மணமக்கள் கையில் கட்டிய காப்பு இதன்பிறகு அவிழ்க்கப்பெறும்.

பிள்ளை எடுக்கிக் கொடுத்தல் : பெண்வீட்டில் மாப்பிள்ளை அமர்ந்திருக்க, அவர் பக்கத்தில் இருவீட்டுப் பெரியவர்களும் ஒவ்வொருவராய் வந்து அமர்வார்கள். பெண் தன் கையில் செந்நிறப் பட்டுத்துணியில் வைத்திருக்கும் பிள்ளைக் குழவியை அந்தப் பெரியவரிடம் கொடுத்து அவரை வணங்கித் திரும்பப் பெற்றுக் கொள்வாள்.

பெண் சொல்லிக் கொள்ளுதல் : பெண் வீட்டுப் பெரியவர்களிடம் பெண் வெற்றிலை பாக்குத் தாம்பாளத்தைக் கையில் வைத்துக் கொண்டு சொல்லிக் கொண்டு விடை பெறுவது இச்சடங்காகும்.

பெண்ணழைப்பும் சடங்கும் : உள்ளூர்த் திருமணமாக இருந்தால் பெண் வீட்டிலிருந்து மணமக்களை மேளதாளத்துடன் நல்ல நேரத்தில் மாப்பிள்ளை வீட்டிற்கு இருவீட்டு உறவினர், பங்காளிகள் சூழ அழைத்துச் செல்வர்.

வெளியூர்த் திருமணமாக இருப்பின் மணமக்களை மாப்பிள்ளையின் ஊரில் அவர்கள் பங்காளி அல்லது உறவினர் ஒருவர் வீட்டில் அல்லது ஒரு பொது இடத்தில் இருக்கச் செய்து குறித்த நேரத்தில் மேள தாளத்துடன் அழைத்துச் செல்வர்.

பெண்ணழைப்பு நிகழ்ந்தவுடன் மாப்பிள்ளை வீட்டில் பெண்ணுக்கு மாமியார் நாத்தனார் ஆகியோர் திருப்பூட்டிய சடங்கு செய்ததைப் போலவே பெண் அழைத்த சடங்கினையும் செய்வார்கள்.

குலம் வாழும் பிள்ளை எடுத்தல் : மாப்பிள்ளை வீட்டில் ஒரு குடத்தில் குலம்வாழும் பிள்ளை (சிறிய வெள்ளியாலான குழந்தைச் சிலை) தண்ணீருக்குள் இருக்கும். பெண்ணழைப்பு முடிந்ததும் மாப்பிள்ளையும் பெண்ணும்

Koviloor Digital Library

மணைக்குமுன் வைக்கப்பெற்றிருக்கும் அக்குடத்தைச் சுற்றிவந்து குடத்திற்குள் கைவிட்டுக் குலம் வாழும் பிள்ளையைப் பெண் எடுப்பது மரபு.

சிராட்டுக் கொடுத்தலும் பாக்குச் சுருளும் : மணமகளுக்கு அவள் தகப்பனாரும் சகோதரர்களும் பாக்குச் சுருளில் வைத்துத் தருகின்ற பணந்தான் சிராட்டு. கணக்குப் பார்த்துப் பணம் கொடுக்கும்போது பெண்வீட்டார் ஒரு தொகையினைச் சிராட்டுக்காகக் கொடுக்க அது சீதனத்துடன் சேர்த்துக் கொள்ளப் பெறும்.

பாக்குச் சுருள் எழுதும் முறை :

— வருஷம் — மீ — வ — மகள் — கல்யாணத்தில் பாக்குச் சுருள் வைத்த விவரம்.

(பெண்ணின் தகப்பனார், வாரிசுதாரர்கள் மட்டும்)

1. செட்டிமகன் செட்டி

2. செட்டிமகன் செட்டி

பால்வேவும் பொங்கல் வேவும் : பெண்ணழைப்பு முடிந்ததும் இந்த வேவுகள் இறக்கப்படும். (பார்க்க : வேவு)

தும்புகட்டுதலும் நீர்ச்சோறு இடுதலும் : மணமகளை மணையில் நிற்கவைத்து மாப்பிள்ளையின் தாயார், சகோதரி அல்லது அத்தை, பிள்ளைச் சரட்டில் கோக்கப்பட்டிருக்கும் ஒற்றைத் தும்பை மணமகளின் கழுத்தில் கட்டுவார்கள். அதன்பின் பெண்ணின் தாய்வீட்டிலிருந்து கொண்டுவந்த நீர்ச்சோறு, பணியாரம், வள்ளிக்கிழங்கு ஆகியவற்றைப் பெண்ணுக்குப் பரிமாறுவார்கள்.

பால்பழம் சாப்பிட உறவினர் வீடு சென்றுவருதல் : மணமக்களை உறவினர்கள் தத்தம் வீடுகட்கு அழைத்துச் சென்று பாலும் பழமும் ரூபாயும் கொடுப்பது இச்சடங்கு. குறிப்பாக ஆயாள் வீட்டுக்குச் சென்று வருவது இன்றியமையாதது.

கணக்குப் பார்த்தல் : பெண்ணழைப்பு, வேவு முதலியவை முடிந்ததும், இருவீட்டுப் பங்காளிகளும் அமர்ந்து, சீதனப் பணத்தைப் பெண்ணின் தந்தை மாப்பிள்ளையிடம் கொடுப்பது 'கணக்குப் பார்த்தல்' என வழங்குகிறது. சீதனப் பணத்தை வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பூ ஆகிய மங்கலப் பொருள்களோடு ஒரு தாம்பாளத்தில் வைத்து அத்தாம்பாளத்தைப் பெண் வீட்டுப் பெரியவர்கள் ஒவ்வொருவராகக் கொடுக்க மாப்பிள்ளை வணங்கிப் பெற்றுக் கொள்வார். பின்னர், மாப்பிள்ளை அத்தாம்பாளத்தைத் தம் வீட்டுப் பெரியவர்களிடம் ஒவ்வொருவரிடமாகக் கொடுத்து வணங்கிப் பெற்றுக் கொண்டபின், இறுதியாக மாப்பிள்ளையின் தம்பி அல்லது அவர்கள் உறவுச்சிறுவன் ஒருவன் மாப்பிள்ளையை வணங்கிப் பெற்றுக் கொள்வான். பின்னர் அத்தாம்பாளம் மாப்பிள்ளை வீட்டில் சாமி வீட்டில் கொண்டு போய் வைக்கப்பெறும்.

கலியாணத்திற்கு முன்கூட்டியே எடுத்து வைக்க வேண்டிய சாமான்கள்.

1. விரலிமஞ்சள்
2. நிலைவிளக்கு (வெள்ளி)
3. சரவிளக்கு
4. அரசாணி மேடை
5. அரசாணி அடுப்பு
6. அரசாணிக்கால் கட்டக் கழி, பாலைக்குச்சி கிளுவைக் கம்பு
7. பவளம், கால்ரூபாய், வெள்ளிக்காசு
8. மாவிலை
9. அரச இலை
10. மணவறை மேல்கட்டும் சேலை (மாற்று)
11. முளைப்பாலிகைக் கிண்ணங்கள் 5
12. சிலேட்டு விளக்கு
13. பெரிய தாம்பாளம்
14. முக்காலி 2
15. சருவச் சட்டி 2
16. செம்பு
17. கெண்டிச் செம்பு
18. சடங்குத்தட்டு (7 கிண்ணங்களுடன்)
19. படி
20. சிறிய பளிங்கு அல்லது வெள்ளிக்குழவி (பட்டுடன்)
21. கத்தரிக்காய்
22. நவதானியம்
23. குலம் வாழும் பிள்ளை
24. தவலைகள்
25. வட்டுவப்பை
26. வெள்ளைக் கம்பளி
27. எழுத்தாணி
28. பாக்குச் சுருள்
29. ஓலைக் கடகம்
30. வேவுக்கடகம், கத்தரிக்காய்
31. ஏட்டு ஓலை
32. பச்சரிசி
33. 10 நிர் நூல்கண்டு
34. கழுத்துரு கோக்க 10 மார்க் களிநூல்
35. மாமப்பட்டு

Koviloor Digital Library

36. சங்கு
37. ஆலத்தித் தாம்பாளம்
38. விபூதித்தட்டு
39. இசைபிடிமானம் (புத்தகம்)
40. மொய்ப்பண ஏடு (புத்தகம்)
41. தடுக்கு 3
42. மணவறை விரிப்பு
43. பால்செம்பு
44. பால்வேவுக்கு நெல்கடகம்
45. மணை
46. மாதாவி (பட்டு அங்கி) (மாப்பிள்ளை வீடு)
47. தலைப்பாகை (மாப்பிள்ளை வீடு)

பூரம் கழிக்க வேண்டிய பொருட்கள் : அரைத்த மஞ்சள், சந்தனம், பூ, நெல்படி – 1, அரிசி படி – 1, உப்பு படி – 1, இலை அடுக்கு – 1, கத்தரிக்காய் – 5, தேங்காய் – 3, பழம் – 6, வெற்றிலை பாக்கு, பால், செம்பு, முக்காலி, சருவச்சட்டி, சத்தகம், மாவிலை, வேப்பிலை.

அரசாணிக்கு முன்னால் கோலம்போட்டு வைக்க வேண்டியது. பெண்ணுக்கு அம்மான் மனைவி பூரம் கழிக்க இருக்க வேண்டும்.

காப்புக்கட்டுச் சாமான்கள் : (இருவீட்டிலும்) அரைத்த மஞ்சள், முனை முறியாத விரலி மஞ்சள், நூல்கண்டு, கரைத்துணி, மாமப்பணம் ரூ. 2, தேங்காய் – 3, வாழைப்பழம் – 10, இலை அடுக்கு – 1, வெற்றிலை பாக்கு, சந்தனம், கதம்பம், மாங்கொம்பு, நெல்படி – 1, பச்சரிசி – 1 படி., பால்உழக்கு – 2, நெய்உழக்கு 1, மணல், உமி, சமித்து, சூடன், முக்காலி – 2, சருவசட்டி – 2, தாம்பாளம் – 2, பாலிகை கிண்ணம் – 5, முளை திரவியம், சிகப்பு பட்டு – 1, செம்பில் தண்ணீர்.

(மாப்பிள்ளை வீட்டில் திருமாங்கல்யம் சேர்த்து வைக்கவும்) அரிமணம் பூமணம் இட மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கும் பெண்விட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கும் முன் கூட்டியே தகவல் சொல்லிவிட வேண்டும்.

சில விளக்கங்கள் :

கொழுமேளம் : கலியாணத்திற்கு முதல் நாள் அதிகாலையில் மேளகாரர் வந்ததும் நகரத்தார் வீட்டுச் சிறுமி ஒருத்தி சங்கு ஊத மேளகாரர் கொழுமேளம் வாசிப்பார்.

ஆலத்தி எடுத்தல் : நகரத்தார் கலியாணத்தில் ஆலத்தி எடுத்தல், சிலேட்டு விளக்கு வைத்தல் ஆகியவை அத்தைமார் செய்யும் முக்கியச் சடங்காகும். வடித்த சாதத்தில் குங்குமத்தையும் சுண்ணாம்பையும் சேர்த்துத் திரியைவைத்து ஆலத்தி பிடிப்பார்கள். ஆலத்தியைச் சதுர வடிவத்தில் 4 திரிகள் வைத்தும் கூம்பு வடிவத்தில் ஒரு திரிவைத்தும் பிடிப்பார்கள்.

பெண் வீட்டில் : (5 ஆலத்தி பிடிப்பார்கள்) மாப்பிள்ளை திருப்பூட்ட வருகையில் பெண்ணுக்கு அப்பத்தாள் அல்லது அத்தை மாப்பிள்ளையை வீட்டு முகப்புக் கோலத்தின் முன் நிறுத்திச் சிலேட்டு விளக்கு வைத்து ஆலத்தி எடுத்து விபூதி பூசுவார்கள். பெண் அழைத்துப் போகும்போது மாப்பிள்ளையையும் பெண்ணையும் நிற்கவைத்து மேலே சொன்னதுபோல் அப்பத்தாளோ அத்தையோ ஆலத்தி எடுத்து அனுப்பி வைப்பார்கள்.

மாப்பிள்ளை வீட்டில் : (7 ஆலத்தி பிடிப்பார்கள்) காலையில் மாப்பிள்ளை கோவிலுக்குப் போகும்போதும் திரும்ப வரும் போதும் மாப்பிள்ளை திருப்பூட்டப் புறப்படும் பொழுதும் திரும்பப் பெண்ணழைத்துக் கொண்டு வரும்போதும் மாப்பிள்ளையின் அப்பத்தாள் அல்லது அத்தை ஆலத்தி எடுத்து விபூதி பூசி வாழ்த்துவார்கள், வரவேற்பார்கள்.

சடங்குத்தட்டு : 7 கிண்ணங்கள் கொண்டது. வட்டவடிவச் சடங்குத் தட்டில் சிறு சிறு கிண்ணங்கள் இருக்கும். 1. பிள்ளையார் வெற்றிலை பாக்கு 2. மஞ்சள் 3. விபூதி 4. பச்சரிசி 5. உப்பு 6. புளி 7. பஞ்சு ஆகியவற்றை வைக்க வேண்டும்.

முளைப்பாலிகை : இதைக் கலியாணத்துக்கு 3 நாட்கள் முன்பே தயார் செய்ய வேண்டும். மணமகள் வீட்டில் முளைக்கும் திறனுள்ள நெல்படி அரையும், உழுந்து துவரை பாசிப்பயறு மொச்சை பருத்தி கேப்பை ஆகிய தானியங்களில் தலா ஒரு உழக்கு வீதமும் ஒரு தவலையில் போட்டு ஊருணித் தண்ணீர் ஊற்றி வைக்கவேண்டும். பிறகு அந்தத் தண்ணீரை வடித்துவிட்டு வேறு தண்ணீர் ஊற்றிவைக்க வேண்டும். திருமணத்திற்கு முதல்நாள் ஒரு பாத்திரத்தில் சிகப்புத் துணியை வைத்து அதில் இந்தத் தானியங்களை வைத்து இறுகக் கட்டி வைக்க வேண்டும். இப்படிச் செய்யும் பொழுது அவை முளை விட்டிருக்கும். அதில் ஒரு பகுதியை முதல் நாள் கழுத்துரு வாங்க வருகையில் மணமகன் வீட்டிற்குக் கொடுத்துவிட வேண்டும். திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகள் முளைவிட்டுச் சந்ததி வளர வளத்தோடு வாழவேண்டும் என்பதே இவ்வாறு முளைப்பாலிகை வளர்ப்பதன் நோக்கம். உப்புக்கடகம், ஏட்டோலை முதலியவற்றுடன் முளை திரவியத்தையும் கொண்டு போக வேண்டும். பெண் அழைப்பு முடிந்ததும் அரசாணிக்கால் அவிழ்க்கப் பெற்றபிறகு முளை திரவியத்தை ஊருணிக் கரையில் உள்ள அரச மரத்தடியில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

Koviloor Digital Library

கோட்டை கட்டுதல் : ஒரு மரக்கால் நெல்லை உள்ளே வைத்து வைக்கோல் பிரியால் பந்துபோல் கட்டுதல். இதைத் திருப்பூட்டப் போகும் பொழுது மணமகள் வீட்டுக்கு எடுத்துப் போகவேண்டும். அதைச் சாமி வீட்டில் நடுவில் வைப்பார்கள். மாப்பிள்ளை அரசாணிக்கால் முதலியவற்றை வலம் வந்த உடன் இந்தக் கோட்டையைத் தாண்டிச் சாமி வீட்டிற்குள் செல்லவேண்டும்.

ஸ்ரீதன உண்டியல் (மாதிரி)

உ

சிவமயம்

_________ வருடம் _________ மாதம் _________ தேதிக்கு _________ 19_______ குமாரர் _________________ மேற்படியார் மனைவி _____________ ஆக இருபேர்கள் வரவு _________ குமாரர் ___________________ பற்று நாளது தேதியில் தங்கள் கலியாணத்தின் போது ஸ்ரீதனமாகக் கொடுத்தது ரூ. _________ தலைச்சிலையில் முடிந்தது ரூ _________ பாக்குச் சுருளில் வைத்தது ரூ _________ உரிச் செம்பில் வைத்தது ரூ _________ ஆக ரூ _________ இந்த ரூபாய் _________க்கும் வருடம் ஒன்றுக்கு ரூ 100/ க்கு வட்டி ரூபாய் _________ வீதம் தருவதாக ஒப்புக் கொண்டு வரவு வைத்துக் கொண்டேன்.

(ஈடு பொன்தொகை இருவீட்டாரும் கொடுத்து ஸ்ரீ தனத்துடன் அதையும் சேர்த்து டெபாசிட் செய்ய வேண்டும்.)

ஸ்ரீதன உண்டியல் (பின்புறம்)

செல்எழுத வேண்டிய மாதிரி

உ

சிவமயம்

_________ வருடம் _________ மாதம் _________ தேதிக்கு _________ 19_________ இந்த உண்டியலில் கண்டபடி ரூபாய் _________ (ரூபாய் _____________________) நாளது தேதியில் ரொக்கமாகப் பெற்றுக்கொண்டோம்.

மாப்பிள்ளை கையெழுத்து

பெண் கையெழுத்து

தகப்பனார் பெயரின் முதல் எழுத்தை முன் எழுத்தாகக் கொண்டிருந்த பெண் அதற்குப் பதிலாகக் கணவன் பெயரின் முதல் எழுத்தை முன் எழுத்தாகப் பயன்படுத்திக் கையெழுத்து இடுவாள்.

மன்னர் பின்னோர் என்று அழைக்கப் பட்டதற்கேற்ப அரசாணிக்கால் நட்டு நகரத்தார் கலியாணம் செய்கின்றனர். நகரத்தார் மரபு பிறழாது பண்பாட்டைப் பேணிக் காப்பவர்கள் என்பதைக் கலியாணச் சடங்குகள் சிலப்பதிகார காலத்திலிருந்து ஒரே மாதிரியாக இருப்பது உறுதி செய்கிறது. மாப்பிள்ளை குதிரையேறி வருதல், தண்டல்காரன் மஞ்சள் நீராட்டல் ஆகிய சில சடங்குகள் காலப் போக்கிற்கு ஏற்ப மாற்றம் பெற்றுள்ளன. இவ்வாறு பண்பாட்டு மரபை விடாது பேணியும் காலத்திற்கேற்பச் சில நெகிழ்ச்சிகளை ஏற்றுக் கொண்டும் நகரத்தார் சமூகம் வளர்ந்து வருவதைக் கல்யாணச் சடங்குகள் காட்டுகின்றன.

கல்கண்டு

தமிழில் வெளியாகும் வார இதழ். 'குமுதம்' இதழின் உரிமையாளர் எஸ்.ஏ.பி. அண்ணாமலை யால் 1948இல் தொடங்கப்பட்டது. 1994 இல் அவர் காலமான பிறகு, அவரது மகன் ஜவஹர் பழநியப்பன் இதன் உரிமையாளர் ஆனார்.

தொடக்கத்திலிருந்து 10–11–1977 வரை தமிழ்வாணன் இதன் ஆசிரியராக இருந்தார். அவர் காலமான பிறகு, ஆசிரியர் என்ற பொறுப்பை எஸ்.ஏ.பி. யே எடுத்துக் கொண்டார். ஆனால், துணை ஆசிரியர் என்ற பொறுப்பினைத் தமிழ்வாணனின் மூத்த மகன் லேனா தமிழ்வாணனுக்கு வழங்கியதோடு, நடைமுறையில் 'கல்கண்டி'ன் தயாரிப்புப் பொறுப்பு முழுவதையும் லேனாவுக்கே வழங்கினார். எஸ்.ஏ.பி. க்குப் பிறகு இப்போது 'கல்கண்டு' இதழில் ஆசிரியராக பி.வி. பார்த்தசாரதி பொறுப்பேற்றிருக்கிறார்.

துணை ஆசிரியர் பொறுப்பில் லேனா தமிழ்வாணன் தொடர்கிறார். ஆனாலும் 'கல்கண்டு' என்றால் லேனா நடத்தும் இதழ் என்று தான் தமிழக மக்களால் எண்ணப்படுகிறது.

தொடக்கத்திலிருந்தே வார இதழாகத் தொடர்ந்து வெளிவரும் 'கல்கண்டு' டெம்மி 1 × 8 அளவில் இப்போது 40 பக்கங்களுடன் வெளிவருகிறது. தொடக்கத்தில் இதன் விலை அணா 2. (12 காசுகள்) படிப்படியாக விலை உயர்ந்து இப்போது ரூ. 1.50 ஆக இருக்கிறது.

40 பக்கங்களில் பெரும்பாலானவை, உலகெங்கிலும் நடக்கும் பல்வேறு நிகழ்வுகளைப் பற்றிய துணுக்குச் செய்திகளால் நிரப்பப்பட்டு வெளிவருவது இவ்விதழின் தனித்தன்மை. இன்றைக்கு வெளியாகும் தமிழ் இதழ்கள் அனைத்திலும் தவறாது இடம்பெறும் 'கேள்வி – பதில்' பகுதியை முதன் முதலில் தொடங்கி, சுவையும், எதிர்பார்ப்பும் நிறைந்த பகுதியாக அதனை உருவாக்கிய பெருமை கல்கண்டையும் அதன்

Koviloor Digital Library

தொடக்க கால ஆசிரியர் தமிழ்வாணனையும் சாரும். இப்போது ஜூனியர் என்ற பெயரில் லேனா இப்பகுதியைத் தொடர்கிறார்.

இன்றும் இந்த இதழ் தனக்குரிய தனித் தன்மையை இழக்காமல், விற்பனை குறையாமல், தொடர்ந்து சிறப்பாக வெளிவந்து கொண்டிருக் கிறதென்றால், அது துடிப்பு மிக்க துணை ஆசிரியர் லேனா தமிழ்வாணனின் ஆற்றல் நிறைந்த தயாரிப்பினால்தான் எனலாம்.

கல்யாணி, சேவு., (13-10-1965)

இலுப்பைக்குடி
காரைக்குடி
இதழாளர்

மெ.பழ. சேவுகன் செட்டியார் – நாச்சம்மை ஆச்சியின் மகள். தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர் 'தினமலர்' நாளிதழில் உதவியாசிரியராகப் பணியாற்றி வருகிறார். நகரத்தார் சமூகப் பெண்களில் இதழியலாளராகத் திகழும் குறிப்பிடத்தக்க பெண்மணி இவர். கதை, கட்டுரை, கவிதை, புதுக்கவிதை போன்ற இவரது பல படைப்புக்கள் பல்வேறு தமிழ் இதழ்களில் வெளிவந்துள்ளன.

கல்லல்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடிக்குத் தென்மேற்கில் 22 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர் செல்லாமல் சிவகங்கை செல்வதற்குரிய சாலை, காரைக்குடி – கல்லல் – செம்பனூர் – மதகுபட்டிச் சாலை ஆகும்.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், சூரக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு கோவில்களைச் சேர்ந்த 414 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

இங்கு சௌந்தர நாயகி அம்மன் உடனாய சோமசுந்தரர் ஆலயம் எனும் சிவன் கோவில் சிவகங்கை அரசர் குடும்ப அறநிலையத்தின் நிருவாகத்தில் உள்ளது. அதே நிருவாகத்தில் உள்ள குன்னம்மா காளியம்மன் கோவிலும், நாட்டார் – நகரத்தாராகிய ஊரார் அனைவருக்கும் பொதுவான நற்கனி அம்மன் கோவிலும், நகரத்தார் அனைவர்க்கும் பொதுவான பிள்ளையார் கோவிலும், நகரத்தார்களுள், இளையாத்தங்குடி – கழனிவாசற்குடிப் பங்காளிகட்கு மட்டும் பொதுவான பெருமாள் கோவிலும் இவ்வூரில் அமைந்துள்ளன.

இவ்வூர் மணிமுத்தாற்றின் கரையில் அமைந்துள்ளது. மேலும் இவ்வூரில் ஊருணிகளும் நிறைய உள. காரைக்குடி, வெற்றியூர், பாகனேரி, நாட்டரசன்கோட்டை, தேவகோட்டை எனப் பல ஊர்களுக்கும் கல்லல் வழியாகப் பேருந்துகள் சென்று வருவதால் போக்குவரத்து வசதி குறைவின்றி உளது. மேலும் இவ்வூரில் தொடர்வண்டி நிலையமும் உள்ளது. சென்னை – இராமேசுவரம் இருப்புப்பாதை இவ்வூர் வழியே செல்கிறது.

வைரவன் கோவில் பெரிய வகுப்பைச் சேர்ந்த ஆ.மு.ஆ. பொதுக்குடும்பத்தினரால் தொடங்கி நடத்தப்படும் 'முருகப்பா மேல்நிலைப் பள்ளி' இவ்வூரில் கல்விப்பணி செய்து வருகிறது.

இவ்வூர்ப் பெருமாள் கோவிலில் ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப் படுகிறது. வைரவன் கோவில் பிள்ளையார் வகுப்பினர் ஒப்பிலிக்கருப்பர் படைப்பையும், மாத்தூர் சுருப்பூர்ப் பிரிவினர் பதினெட்டாம்படிக் கருப்பர் படைப்பையும் தங்களுக்குரிய பொதுப்படைப்புக்களாகப் படைத்து வருகின்றனர். இவ்வூர்ச் சிவன் கோவிலில் மாசி மகத்திருவிழா சிறப்பாக நடைபெறும்.

கல்லுப்பட்டி

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடிக்குத் தென் கிழக்கில் 9 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. காரைக்குடி – தேவகோட்டைச் சாலையில் அமராவதி புதூரைத் தாண்டியவுடன் வலப்புறம் செல்லும் கிளைச் சாலையில் இவ்வூர் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், பிள்ளையார்பட்டி ஆகிய மூன்று கோவில்களைச் சேர்ந்த 240 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி மன்றம். பழைய ஆவணங்களில் எல்லாம் இவ்வூர் சுப்பிரமணியபுரம் என்றே குறிப்பிடப் பெற்றுளது.

1938 இல் கட்டி, குடமுழுக்குச் செய்யப் பெற்ற நித்யகல்யாணி உடனாய கைலாசநாதர் கோவிலும், நகரப்பிள்ளையார் கோவிலும் இவ்வூரில் உள. இளையாத்தங்குடி பெரு மருதூருடையார்ப் பிரிவைச் சேர்ந்த வ. முத்தையா செட்டியார் 120 ஆண்டுகட்கு முன் கட்டிய அரங்கநாதப் பெருமாள் கோவிலை, வ.மு.சொ. சீனிவாசன் செட்டியார் குடும்பத்தார் நிருவகித்து வருகின்றனர். 1959, 1994 ஆண்டுகளில் இக்கோவிலுக்குக் குடமுழுக்கு விழாக்கள் நிகழ்ந்துள. சிவனடியான் செட்டியார் கட்டிய

Koviloor Digital Library

பிள்ளையார் கோவிலை அவர் வழிமுறையினர் நிருவகித்து வருகின்றனர். இவ்வூரில் மூன்று ஊருணிகள் உள.

பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த பழ.மெ. சாமிநாதன் செட்டியார் 1935 ஆம் ஆண்டு தொடங்கிய மெய்யப்பா தொடக்கப் பள்ளி, இப்போது நடுநிலைப் பள்ளியாக, அவர் தம் வழி முறையினரால் நடத்தப்படுகிறது.

இவ்வூர்ப் பிள்ளையார்பட்டிப் பங்காளிகள் மெய்யாத்தாள் படைப்பைத் தங்களுக்குரிய பொதுப்படைப்பாகப் படைத்து வருகின்றனர். தமிழ்ப்புத்தாண்டன்று நகரச் சிவன் கோவிலில் பஞ்சாங்கம் படிக்கப்படுகிறது.

மாத்தூர்க்கோவிலைச் சேர்ந்த எஸ்.எம். சீனிவாசகன் செட்டியார் பிள்ளையார்பட்டியைச் சேர்ந்த எஸ்.என்.எஸ். சுப்பையா செட்டியார் ஆகியோர் இ.தே.ரா.வில் பணியாற்றிய இவ்வூர் நகரத்தார்களாவர்.

கவிமணி மன்றம்

தமிழ்ச் சான்றோரையும் கவிஞர்களையும் போற்றிப் பரவும் செட்டிநாட்டின் செந்தமிழ்ப் பற்றுக்கு இம்மன்றமும் ஓர் எடுத்துக்காட்டாகும். 'குமரன்' இதழ் கவிமணியின் கவிதைகளை வெளியிட்டுத் தமிழ்நாடெங்கும் அவர் புகழைப் பரப்பியது. செட்டிநாட்டில் நடந்த உயிர்ப்பலித் தடுப்பு இயக்கத்திற்காக, சீவகாருணியத்தை வலியுறுத்திக் கவிமணி எழுதிய பாடல்கள் செட்டி நாடெங்கும் அவர் பெயரைப் பரவச் செய்தன. நாஞ்சில் நாட்டைவிட்டுக் கவிஞர் என்ற முறையில் கவிமணி முதன்முதலாக வருகைபுரிந்தது செட்டிநாட்டுக்கே. 1943 மே 12 ஆம் நாளில் ஆத்தங்குடி நா.அரு. மண்டபத்தில் இராசா சர் அண்ணாமலை செட்டியார் தலைமையில் கவிமணிக்கு மாபெரும் பாராட்டுவிழா நடைபெற்றது. கவிமணியின் கவிதை இன்பத்தில் திளைத்த அன்பர்கள் குருவிக்கொண்டான்பட்டியில் 15–8–1958 இல் கவிமணி படிப்பகத்தைத் தோற்றுவித்தனர். பத்தாம் ஆண்டில் படிப்பகம் கவிமணி மன்றமாகப் பெயர்மாற்றம் பெற்றது. இன்று நூறுபேர் இம்மன்றத்தில் உறுப்பினர். ஒவ்வொரு ஆண்டும் கீரணிப்பட்டி அருள்மிகு முத்துமாரியம்மன் தேர்த் திருவிழாவை ஒட்டி இரண்டு நாள் இலக்கிய நிகழ்ச்சிகளுடன் மன்றத்தின் ஆண்டுவிழாவைக் கொண்டாடி வருகின்றனர். தமிழ்வளர்க்கும் இம்மன்றம் கவிமணிக்கு வாழும் நினைவுச் சின்னமாகத் திகழ்கிறது.

கவியரசர் கண்ணதாசன் உருவச்சிலை

காரைக்குடியில் கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபத்தில் ஒன்றும் சென்னை தி. நகர், ஜி.என். செட்டி சாலையில் ஒன்றும் என இரு இடங்களில் கவியரசரின் சிலை நிறுவப் பெற்றுள்ளன.

கவியரசர் நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு அமைத்துள்ள மணிமண்டப வளாகத்தில் இரு நுழைவாயில்களுக்கும் இடையில் மார்பளவு உருவச்சிலை அமைக்கப் பெற்றுள்ளது. இச்சிலை 24–7–1994 அன்று செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் தென்னவன் தலைமையில் பொதுப்பணித் துறை அமைச்சர் கண்ணப்பனால் திறந்துவைக்கப் பெற்றது.

சென்னை மாநகரத் திரைப்பட ரசிகர் சங்கம் என்ற அமைப்பின் சார்பில் ஜி.என். செட்டி சாலையில் கலைவாணர் சிலைக்கு அருகில் கவியரசரின் முழுஉருவச்சிலை அமைக்கப் பெற்றுள்ளது. இதனை 9–12–1994 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம்

அண்மைக் காலத்தில் வாழ்ந்து மறைந்த அரசவைக் கவிஞர் கவியரசர் கண்ணதாசன் நகரத்தார் சமூகத்துக்குப் பெரும்புகழ் சேர்த்தவர் அவரது மறைவுக்குப்பின் தமிழக அரசு காரைக்குடியில் அவருக்காக ஒரு நினைவு மண்டபத்தை அமைக்கும் என்று அந்நாள் முதலமைச்சர் எம்ஜிஆர். 1981 இல் அறிவித்தார். 30–1–1990 இல் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இம்மண்டபத்திற்கான இடத்தைத் தேர்வு செய்து அடிக்கல் நாட்டினார். கட்டிட வேலைகள் முடிந்து 21–10–1992 இல் முதலமைச்சர் ஜெயலலிதாவால் மணிமண்டபம் திறந்துவைக்கப் பெற்றது.

54.4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட இம்மணி மண்டபம் காரைக்குடி புதிய பேருந்து நிலையத்துக்கு எதிரே அமைந்துள்ளது. மண்டபத்திற்கு இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. அந்நுழைவாயில் களுக்கு இடையே கவியரசரின் மார்பளவுச் சிலை ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது. மண்டபம் இரண்டு தளங்களை உடையதாகும். கீழ்த்தளத்தின் பரப்பளவு 660 சதுர மீட்டர். மேல்தளம் 260 சதுரமீட்டர்.

Koviloor Digital Library

கீழ்த்தளத்தில் நூலகம் ஒன்றும் அலுவலக அறையும் அமைந்துள்ளன. மேல்மாட இருக்கைகளுடன் கூடிய கலையரங்கம் ஒன்றும் அமைந்துள்ளது. இடையே உள்ள முன் மண்டபத்தில் கவியரசரின் வாழ்க்கை தொடர்பான புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. நூலகத்தில் ஏறத்தாழ 2500 நூல்கள் உள்ளன. கவியரசரின் நூல்கள் 110 ஆகும். செய்தித்தாள்களும் வார மாத இதழ்களும் வருகின்றன. வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.45 வரை பொதுமக்கள் மண்டபத்தைப் பார்க்கவும் நூலகத்தைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த கவிஞர் ஒருவருக்கு அரசே முன்வந்து நினைவக மணி மண்டபம் அமைத்திருப்பது வரலாற்றுச் சிறப்புடையதாகும்.


கழுத்துரு

இது நகரத்தார்களுக்கு மட்டுமே உரிய மங்கல அணிகலனாகும். கழுத்துருவைப் பெரிய நகை என்று கூறுவது மரபு. இப்பெயருக்கு டாக்டர். சுப. அண்ணாமலை பின்வருமாறு விளக்கம் கூறுகிறார்:

'திருப்பூட்டுதல்' என்ற சொல்லை நோக்கும் பொழுது கழுத்துத் திரு என்பதே சரியான சொல் என்று அறியலாம். 'திரு' என்பது இலக்குமி. கழுத்துத் திருவின் நடுநாயமாக மாங்கல்யம் இருக்கும். லெட்சுமி ஏத்தனம் என்பது இதன் உறுப்புக்களுள் ஒன்று ஆகும். நகையைப் பூண் என்பர். பூணைப்பூட்டுதல் என்பதே சரியான தொடர். ஆதலின் திருப்பூட்டுதல் என்பது நல்ல இலக்கிய வழக்கு. இதனை இன்று வரை நகரத்தார் மட்டுமே வழங்குகின்றனர்''.

கழுத்துத் திருவில் திருமாங்கல்யத்துள் உருத்திராட்சம் வைப்பது முற்கால வழக்கம் எனப் பெரியோர் குறிப்பிடுகின்றனர். பிள்ளையார் நோன்பில் இழை வாங்கும்போது பெண்கள் கழுத்துத்திரு அணிந்து கொள்வது உண்டு என்றும் கூறுகின்றனர்.

கலியாணத்திற்கு முதல்நாள் கழுத்துரு வாங்கப் போவது ஒரு சடங்காகும். அப்பொழுது மாப்பிள்ளை வீட்டார் பெண்வீட்டிலிருந்து கழுத்துருவின் உருப்படிகளை வாங்கிவந்து பெரியவர்கள் இருந்து சரடுபின்னிக் கோப்பது வழக்கம். பின்வரும் 31 உருப்படிகளோடு குச்சி, தும்பு, துவாளை, ஒற்றைத்தும்பு ஆகியவற்றைச் சேர்த்து 35 உருப்படிகளை வாங்கி வருவர்.



கழுத்துரு உருப்படிகள்

மேல் பாகம் : 1, 2, 3 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16

கீழ்ப் பாகம் : 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31,

1, 16, 17, 31 கடைமணி

2, 3, 4, 6, 8,
10, 12, 14, 15, 18,
19, 20, 22, 23, 25,
26, 28, 29, 30,] உரு

5, 13, 21, 27, ஏத்தனம் 24 லெட்சுமி ஏத்தனம் 7, 11 சரிமணி 9, திருமாங்கல்யம்

கழுத்துருவைக் கோப்பதற்கு 10 நிர் வெள்ளை நூல் கண்டு வாங்க வேண்டும். இரு பெரியவர்கள் அந்த நூலில் 21 பாகம் எடுத்து அதை மூன்றாக மடித்து ஒரு மடிப்புக்குள் இன்னொரு மடிப்பைப் பின்னலாகக் கொடுத்து வாங்கி, சங்கிலிப் பின்னல் போலப் பின்னி, நன்றாக இறுக்கமாகத் திரித்துக் கொண்டு, பட்டணம் மஞ்சளை நீரில் நனைத்துக் கொண்டு அந்த நூலில் நன்றாகத் தேய்த்து, மஞ்ச்ள் நன்றாக ஏறும்படி செய்து, முறுக்கு விடாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிக் கிடைப்பது 7 பாகமாக இருக்கும். அதை இரண்டாக மடித்துக் கழுத்துருவின் 31 உருப்படிகளையும் கோக்க வேண்டும்.

மேல்பாகம் கீழ்ப்பாகம் இரண்டிலும் கோத்தபின் இரண்டையும் இருமுனைகளிலும் தனித்தனியே, உருவிவராத வகையில் நன்றாக முடிச்சுப் போடவேண்டும்.

Koviloor Digital Library

பிள்ளைச்சரடு இழைதல்

7 பாகம் நூல் எடுத்து 3 இல் ஒரு பங்காகச் சங்கிலிப் பின்னல் போலப் பின்னி மஞ்சள் ஏற்றி அதில் ஒற்றைத் தும்பைக் கோக்க வேண்டும். இதை மணமகள் கழுத்தில் கட்டுவதே தும்பு கட்டுதல் என்னும் சடங்காகும். திருமணத்திற்கு மறுநாள், மணமகள் வீட்டுப் பெரியவர் ஒருவர் கழுத்துருவின் இடப் பக்கத்தில் இரண்டு கயிற்றிலும் சேர்த்து குச்சி, தும்பு, துவாளையைக் கோத்து வைப்பர்.

கழுத்துரு இறப்புச் சடங்கிலும் பயன்படுத்தப் படுவதுண்டு. மனைவி உயிரோடு இருக்கக் கணவன் இறக்க நேரிட்டால் இறந்தவரின் மனைவி இதை அணிந்து கொண்டு கழற்றிப் போடச் செய்வர்.

முற்காலத்தில் கழுத்துரு 100 பவுன் எடையிலும் செய்யப்பட்டது. இந்நாளில் 30 பவுன், 10 பவுன் எடையில் கூடக் கழுத்துரு செய்கின்றார்கள்.

செட்டிநாட்டின் சில பகுதிகளில் திருமணத் தன்று மாப்பிள்ளையின் தாயார், சகோதரி, பெண்ணின் தாயார், சகோதரி ஆகியோர் கழுத்துரு அணிந்துகொள்வது பழக்கமாக இருக்கிறது.

கற்பகக் கணபதி, டாக்டர். பெரி., (7-10-1938)

பிள்ளையார்பட்டி
நற்சாந்துபட்டி
கல்வியாளர்

பெரிய கருப்பஞ் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். எம்எஸ். சி.யில் பல்கலைக்கழக முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று கிருஷ்ணமேனன் பரிசு பெற்றுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விலங்கியல் துறை விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்து துறைத் தலைவரானார். பின்னர் அப்பல்கலைக் கழகத்தின் பதிவாளராகவும் சிறப்பாகப் பணி புரிந்தார். விலங்கியல் ஆராய்ச்சியில் இவர் வெளியிட்டுள்ள 35 கட்டுரைகள் அனைத்துலக விலங்கியல் அறிஞர்களால் பாராட்டப் பெற்றுள்ளன. இங்கிலாந்து, பிரான்சு, ஹாலந்து, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் நடைபெற்ற பல்வேறு அறிவியல் ஆய்வுக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டுள்ளார். பல்வேறு ஆய்வுக் கருத்தரங்குகளை அமைப்புச் செயலராக இருந்து நடத்தியுள்ளார். இவரது வழிகாட்டுதலில் பலர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

காசிச் செட்டியார், சுப., (22-9-1927)

மாத்தூர்
இராயவரம்
அரிமா ஆளுநர்

எம்.ஏ.எம். சுப்பிரமணியன் செட்டியார் – முத்தாயி ஆச்சியின் மகன். மலேசியாவில் கல்வி பயின்றவர். இளம் வயதிலேயே குடும்பத் தொழில்களில் ஈடுபட்டு இன்று சிறந்த தொழிலதிபராக விளங்குபவர். தமிழ்நாடு, கேரளா, கர்நாடக மாநிலங்களில் இவருக்குக் காப்பி மற்றும் இரப்பர்த் தோட்டங்கள் உள்ளன. கேரளத் தோட்ட உரிமையாளர் சங்கத்தில் இவர் ஓர் உறுப்பினர். திருச்சி உற்பத்தியாளர் சங்கத்திலும் உறுப்பினராகத் திகழும் இவர் தம் ஊரில், தம் குடும்பத்தாரால் தொடங்கப்பெற்ற சுப்பிரமணியம் பல்தொழிற்பயிற்சி நிலையத்தின் செயலராகப் பணியாற்றி வருகிறார். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழத் தமது எஸ்.பி.கே. அறக்கொடை நிறுவனத்தின் சார்பாக அறக்கொடைகள் வழங்கியுள்ளார்.

இராயவரம் – அரிமழம் அரிமா சங்கத்தில் 1971 இல் சேர்ந்த இவர், திருச்சி அரிமா சங்கத்தில் துணைத்தலைவர், தலைவர் எனப் பல பொறுப்புக்களிலும் செயல்பட்டுச் சிறந்த விருதுகளைப் பெற்றவர். 1983 – 84 இல் அரிமா மாவட்டம் 324 – A2 முதன் முதலில் அமைக்கப்பெற்ற போது அதன் ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பணியாற்றியவர்.

காசிவிசுவநாதன் செட்டியார், மு., (15-9-1898 - 14-11-1986)


பிள்ளையார்பட்டி
பாகனேரி
நூல் சேகரிப்பாளர் - நூல் வெளியீட்டாளர் - நூற்பதிப்பு நன்கொடையாளர்

வெ.பெரி.பழ. முத்தையா செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகனாகத் தோன்றினார். தமது ஏழாவது வயதிலிருந்து இவருக்கு நூல்களைப் படிப்பதிலும், வாங்கிச் சேர்ப்பதிலும் ஆர்வம் ஏற்பட்டது. 1911 இல் இவர் தொழில் தொடர்பாக இரங்கூன் சென்றார். அங்கும் இவர் நிறைய நூல்களை வாங்கிச் சேர்த்தார்.

1914 இல் தாயகம் திரும்பினார். 1920 இல் பாகனேரியில் நகரத்தார் பலரைத் தூண்டி, அவர் தம் ஆதரவோடு 'கருணாகடாட்சி வாசகசாலை' என ஒரு நூல் நிலையத்தைத் தொடங்கினார். அதற்குத் தம் சொந்தத் தொகுப்பிலிருந்து மூவாயிரம் ரூபாய் மதிப்புள்ள 1500 நூல்களை நன்கொடையாக வழங்கினார்.

Koviloor Digital Library

1922 இல் இவருக்குத் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துடன் தொடர்பு ஏற்பட்டது. அக்கழகத்தின் நூறு பங்குகளை விலைக்கு வாங்கினார். அக்கழகத்தின் ஆட்சியாளர் வ. சுப்பையா பிள்ளையின் நெருங்கிய நண்பராகவும் ஆனார். இத்தொடர்பு இவரது இறுதிக்காலம் வரை தொடர்ந்தது. கழகத்தின் செயற்குழு உறுப்பினரானதோடு, ஏறத்தாழ நாற்பதாண்டுக்காலம் செயற்குழுக் கூட்டத்தின் தலைவராகவும் செயல்பட்டார்.



மு. காசிவிசுவநாதன் செட்டியார்

1924 இல் காரைக்குடி தனவைசிய ஊழியர் சங்கத்திலும், இந்துமதாபிமான சங்கத்திலும் உறுப்பினராகச் சேர்ந்தார். 1934இல் பாகனேரியில் 'தனவைசிய இளைஞர் சங்கம்' என்ற அமைப்பையும் 'திருவள்ளுவர் நூல் நிலையம்' என்ற அமைப்பையும் நிறுவினார். திருவள்ளுவர் நூல்நிலையத்தோடு கருணா கடாட்சி வாசகசாலையையும் இணைத்ததோடு, புதிதாக 3,500 நூல்களைத் தம் சொந்தத் தொகுப்பில் இருந்து நன்கொடையாகக் கொடுத்தார்.

இவ்வாறு காசிவிசுவநாதன் செட்டியாரால் தொடங்கி நடத்தப்பெற்ற நூல் நிலையத்தின் பணி மிகவும் போற்றுதற்குரியது என, தமிழ்நாட்டில் நூலக இயக்கத்தின் தந்தை எனக் கருதப்படும் டாக்டர் எஸ். அரங்கநாதன் அவர்கள் பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவர் சேகரித்த நூல்கள் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளில், பல்வேறு துறைகளைச் சேர்ந்தவையாக அமைகின்றன. இவர் காலத்திற்குப் பின் இந்நூலகம், மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கிளை நூலகமாக இயங்கிவருகிறது.

நூல் சேகரிப்பாளராக விளங்கிய காசிவிசுவநாதன் செட்டியார் சிறந்த தமிழ் நூல்கள் உரையுடன் வெளிவர வேண்டும் எனப் பெரும் விருப்பம் கொண்டிருந்தார். எனவே, தம் அன்னையார் வள்ளியம்மை ஆச்சி நினைவாக, பாகனேரி தனவைசிய இளைஞர் சங்கத்தின் சார்பில் என்றெல்லாம் குறிப்பிட்டு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வாயிலாகத் தம் சொந்தச் செலவில் நூல்களை வெளியிடத் தொடங்கினார்.

இந்த வரிசையில் சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, கலித்தொகை ஆகிய நூல்கள் உரையோடும், திருவாசகம், தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல், திருமுக விலாசம், செயங்கொண்டார் சதகம், நாலடியார் போன்ற நூல்களின் மூலம் மட்டும் காசிவிசுவநாதன் செட்டியார் பொருளுதவியால் வெளிவந்தன.

1937 இல் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போர் நடைபெற்ற போது, மறைமலையடிகளார் எழுதிய 'இந்தி பொது மொழியா?' எனும் வெளியீட்டினைப் பதினையாயிரம் படிகள் அச்சிட்டு நன்கொடையாக வழங்கினார் இவர். தொடர்ந்து 1938இல் 'தமிழும் இந்தியும்', 'இந்தி மொழிப் பயிற்சியா?', 'தமிழருக்கு இந்தி வேண்டுமா?' போன்ற வெளியீடுகளையும் பல்லாயிரம் படிகள் அச்சிட்டு விலையின்றிப் பரப்பினார். இவை இவர்தம் தமிழ்ப் பற்றுக்கும், உணர்வுக்கும் சான்றாம்.

பிறையாயிரம் கண்ட பெருந்தகையாக 88 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த இவர் நூல் வெளியீட்டிலும், நூல் சேகரிப்பிலும் காட்டிய ஆர்வமும், செய்த பணிகளும், சமூக வரலாற்றிலும், மொழி வரலாற்றிலும் அவருக்கு நிலையான இடத்தைப் பெற்றுத் தந்துள.

காசிவிசுவநாதன், வீர., (23-11-1944)

வைரவன் கோவில்
சொக்கலிங்கம் புதூர்
சமூகத்தொண்டர்

சு.வீர. வீரப்ப செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். அச்சுக் கலைப் பட்டயப் படிப்பைப் படித்தவர். 1969 இல் புதுக்கோட்டை யில் 'மதராஸ் ரிப்பன் அச்சக' நிருவாகியாகப் பொறுப்பேற்றார். புதுக்கோட்டையில் பல்வேறு அமைப்புக்களில் பொறுப்பேற்றுச் சமூகசேவை செய்து வருகிறார்.

1974 – 75 இல் புதுக்கோட்டை ஜூனியர் சேம்பரின் செயலாளராகவும், 1979 – 80 இல் அதன் தலைவராகவும், 1978 – 79 இல் புதுக்கோட்டைச் சுழற்கழகச் செயலாளராகவும் 1981 – 82 இல் அதன் தலைவராகவும் 1993 இல் புதுக்கோட்டை மாவட்ட ஊர்க்காவல் படையின் மண்டலத் தளபதியாகவும் புதுக்கோட்டை மாவட்டச் சிறுதொழில் அதிபர்கள் சங்கப்

Koviloor Digital Library

பொருளாளராகவும் பல பொறுப்புக்களில் இருந்தபோது புதுக்கோட்டை நகர மக்களுக்குப் பல்வேறு சேவைகளைச் செய்துள்ளார்.

புதுக்கோட்டைக் கம்பன் கழகத்தின் துணைத்தலைவராகவும் மாவட்டத் திருவருட் பேரவையின் துணைத்தலைவராகவும் மாவட்டச் செஞ்சிலுவைச் சங்கத்தின் இணைச் செயலாள ராகவும் தொடர்ந்து தொண்டாற்றி வருகிறார்.

கா.சு. மணியன் (13-10-1950)
(இயற்பெயர்: சுப்பிரமணியன், கா)

வைரவன் கோவில் - தெய்வநாயகர் வகுப்பு
ஆத்தங்குடி
கவிஞர்

ப.மு.ப. காசி செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். தமிழார்வம் மிக்க மரபுக் கவிஞரான இவர் நூற்றுக்கும் மேற்பட்ட கவியரங்கங்களில் பங்கு பெற்றுள்ளார். இவரது கவிதைத் தொகுப்பு 'கா.சு. மணியன் கவிதைகள்' நூலாகும்.

சவுத் இந்தியா கார்ப்பரேஷன் ஏஜன்சீஸ் நிறுவனத்தில் *1970* முதல் 20 ஆண்டுகள் கல்கத்தாவில் பணியாற்றினார். அங்கு கல்கத்தா தமிழ் மன்றத்தின் தலைவராகவும், கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாள ராகவும் பொறுப்பேற்றுத் தமிழ்ப்பணி புரிந்தார். தென் கல்கத்தாவின் லேக்ரோடு என்ற சாலைக்குக் 'கவிபாரதி சாரணி' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கு இவரது பெரு முயற்சியே காரணம் ஆகும். மேலும் அச்சாலையில் உள்ள விவேகானந்தர் பூங்காவில் பாரதியின் முழு உருவச்சிலை அமைக்கப் பட்டதும் இவர் முயற்சியின் விளைவே.

*1990*க்குப் பின் தமிழகம் திரும்பிய இவர் கோவையில் நகரத்தார் சங்கப் பணிகளிலும் சங்கப் பலகை என்ற இலக்கிய அமைப்பிலும் ஈடுபட்டுத் தொண்டு செய்து வருகிறார்.

கா.செ. வேதாந்த மடாலயம்

தேவகோட்டைக்கு அருகில் உள்ள காளையார் கோவிலில் அமைந்துள்ளது இவ் வேதாந்த மடம். காளையார்கோவில் செல்லப்ப சுவாமிகள் மடம் என்பது முழுப் பெயர். தேவகோட்டை ஜமீந்தார் ஏஎல். ஏஆர். அருணாசலம் செட்டியார் செல்லப்ப சுவாமிகட்காக உருவாக்கியது இம்மடம்.

தஞ்சை பால்சாமி மடம், மதுரை குட்டையய்யா சுவாமி மடம் ஆகியவற்றின் மடாதிபதியாக இருந்த செல்லப்ப சுவாமிகளை ஜமீந்தார் காளையார்கோவிலுக்கு அழைத்துவந்து மடாதிபதி ஆக்கினார். தொடர்ந்து கொல்லங்குடி அளகாபுரி முத்தையா சுவாமி, உலகம்பட்டி லெட்சுமண சுவாமி, அரிமழம் அருணாசல சுவாமி, அரிமழம் ராமநாத சுவாமி, கல்லல் ராசாராம் சுவாமி, கண்டனூர் சிவானந்த சுவாமி ஆகியோர் மடாதிபதிகளாக வீற்றிருந்தனர். இப்போது எட்டாவது பட்டமாக அரியக்குடி நாராயண சுவாமி ஆட்சி புரிந்து வருகிறார். இம்மடம் வேதாந்தம் கற்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டதாகும். இன்றும் பல துறவியர் இங்கு வேதாந்தம் கற்று வருகின்றனர். தேவகோட்டை ஜமீந்தார் அருணாசலம் செட்டியார் துறவு பூண்டு ஸ்ரீலஸ்ரீ அருணாசல ஞான தேசிக சுவாமிகள் என்றழைக்கப்பட்டு இம் மடத்திலேயே வேதாந்தத்தில் ஆழ்ந்து *9.1.1938* இல் முத்தியடைந்தார். அவருக்கு இங்கு அதிஷ்டானம் அமைந்துள்ளது. *1988* இல் அதற்குக் குடமுழுக்கு நடைபெற்றது. ஆண்டுதோறும் குருபூசை நடைபெற்று வருகின்றது.

காதல்

கண்டனூரைச் சேர்ந்த அரு. இராமநாதன் (த.க.)*1947* இல் திருச்சியில் இருந்து 'காதல்' என்னும் மாத இதழைத் தொடங்கினார்.

"காதல் இருவர் கருத்தொருமித்து –
ஆதரவு பட்டதே இன்பம்"

என்ற ஔவையாரின் பாடல் அடிகளை இதழின் குறிக்கோள் வரிகளாகக் கொண்டு இவ்விதழ் வெளிவந்தது. முதல் இதழில் எங்கள் நோக்கம் என்ற தலைப்பில்,

"ஆண் பெண் எல்லையைப் பற்றி எழுதப் பத்திரிகை இல்லை. காதலர்களிடையே ஏற்படும் புதிர்களை விடுவிக்கப் பத்திரிகை இல்லை. ஆண் பெண் தூய்மையாக மனமொத்து வாழ வழிகாட்டக் காதலர்களுக்கென்று ஒரு தனிப்பத்திரிகை தமிழ்நாட்டில் இதுவரை தோன்றவில்லை. அந்தக் குறையைப் பூர்த்திசெய்யும் ஆவலுடன் முன்வந்திருக்கிறோம்."

என்று குறிப்பிட்டிருப்பது இவ்விதழின் போக்கை நமக்குப் புலப்படுத்தும். இந்த நோக்கத்திற்கேற்பக் காதலைக் கொச்சைப் படுத்தாமல் காதல் ஆண்பெண் உறவு தொடர்பான செய்திகளைக் கதை கட்டுரைகளின் வாயிலாகத் தந்த ஒரு தரமான இதழ் இது.

டெம்மி 1×8 அளவில் ஒவ்வொரு இதழும் *80* பக்கங்கள் கொண்டு வெளிவந்தது. *1952* வரை திருச்சியில் இருந்து வெளிவந்த இவ்விதழ் *1952* பிற்பகுதி முதல் சென்னையை இடமாகக்கொண்டு வெளிவரத் தொடங்கியது.

Koviloor Digital Library

தொடக்கத்தில் ஐம்பது காசுகளாக இருந்த விலை பின்னர் ஒரு ரூபாய் ஆயிற்று. அரு. இராமநாதன் மறைவுக்குப்பின் அவர் மகன் இராம. கண்ணப்பனை ஆசிரியராகக் கொண்டு சில ஆண்டுகள் இவ்விதழ் வெளிவந்தது.

காய்ச்சி ஊற்றுதல்

ஒரு நகரத்தார் குடும்பத்தில் சிறப்பான நிகழ்ச்சி ஒன்று நடந்து முடிந்தால், அக்குடும்பத் தலைவியாகிய ஆச்சியின் பிறந்த வீட்டினர் அக்குடும்பத்தினருக்கு ஒரு விருந்து கொடுப்பர். அதற்குக் 'காய்ச்சி ஊற்றுதல்' என்பது பெயர்.

நிகழ்ச்சி இன்பமானதாகவும் அமையலாம். துன்பமானதாகவும் அமையலாம். துன்ப நிகழ்ச்சி என்பது சாவு ஒன்று தான். சாவு நிகழ்ந்தவுடன் உறவினர், பங்காளிகளுக்கெல்லாம் இழவு சொல்லும் நிகழ்ச்சிகளின் இறுதிச் சடங்காகச் சவண்டி நடைபெற்ற பின், காய்ச்சி ஊற்றுதல் நிகழும். சாகக் கொடுத்த துன்பத்திலிருக்கும் தங்கள் வீட்டில் பிறந்த பெண்ணுக்கு, ஆறுதல் சொல்வதும், 'உன் வாழ்வில் எங்களுக்குத் தொடர்ந்து அக்கறை இருக்கிறது' என அப்பெண்ணுக்கு உணர்த்துவதும் இந்நிகழ்ச்சி யின் நோக்கம்.

இன்ப நிகழ்ச்சி என்பது முற்காலத்தில் புதுமை, கார்த்திகைப் புதுமை அல்லது சூப்பிடி, திருவாதிரை, பெண் சமைவது, திருமணம், மணிவிழா அல்லது சாந்தி, ஆயிரம் பிறை காணும் விழா அல்லது சதாபிசேகம், புதுமனை புகுவிழா என்பவையாக அமைந்தன. இப்போது புதுமை, சூப்பிடி, திருவாதிரை என்பவை நடைபெறவில்லை.

எனவே, இன்றைய நிலையில் ஒரு குடும்பத்தில் ஒரு பெண் சமைந்தால், அதற்குரிய சடங்கு கழிப்பது எனும் நிகழ்ச்சி முடிந்தவுடன், சமைந்த பெண்ணின் ஆயா வீட்டினர் காய்ச்சி ஊற்றுவர். அதுபோலத் திருமணம் நிகழ்ந்தால், மணமகன், மணமகள் இருவரது ஆயா வீட்டினரும் தனித்தனியாகக் காய்ச்சி ஊற்றுவர். மணமகனுடைய ஆயாவீடு காய்ச்சி ஊற்றுவது அவனது தாயாரின் குடும்பத்துக்கு; மணமகளுடைய ஆயாவீடு காய்ச்சி ஊற்றுவது அவளது தாயாரின் குடும்பத்திற்கு என அமையும். காவடி எடுப்பதற்கும் காய்ச்சி ஊற்றும் பழக்கம் நடைமுறையில் உள்ளது.

மணிவிழா, ஆயிரம் பிறை கண்ட விழா புதுமனை புகுவிழா என்பன நிகழ்ந்தால் விழாநாயகியின் தாய் வீட்டினர் காய்ச்சி ஊற்றுவர். இன்பநிகழ்ச்சியின் இறுதியில் காய்ச்சி ஊற்றுவது நல்ல நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தி முடித்த, தங்கள் வீட்டில் பிறந்த பெண்ணைப் பாராட்டும் நோக்கமுடைய நிகழ்ச்சியாகும்.

ஓர் ஆச்சியின் தாய், தந்தையர் உயிரோடு இல்லையெனின், உடன் பிறந்தோர் காய்ச்சி ஊற்றுவர். உடன் பிறந்தோரும் இல்லையெனின் உடன் பிறந்தோரின் ஆண் மக்கள் காய்ச்சி ஊற்றுவர். ஆகக் காய்ச்சி ஊற்றும் சடங்கு மிகக் கட்டாயம் நகரத்தார் இல்லங்களில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாக அமைகிறது.

இன்ப நிகழ்ச்சிக்குப் பின், காய்ச்சி ஊற்றும் சடங்கு முடியும் வரை, அக் குடும்பத்தினர், அமங்கல நிகழ்ச்சிகள் எதற்கும் செல்ல மாட்டார்கள். அதுபோலவே துன்ப நிகழ்ச்சிக்குப் பின் காய்ச்சி ஊற்றும் சடங்கு முடியும் வரை, அக்குடும்பத்தினர் பிற நிகழ்ச்சிகள் எதற்கும் செல்லமாட்டார்கள்.

காரைக்காலம்மையார்

திருத்தொண்டர் புராணத்தில் விரித்துரைக்கப் படும் 63 நாயன்மார் வரலாற்றில் நகரத்தார் இனத்தைச் சார்ந்த பெண் அடியார் காரைக்காலம்மையார். காரைக்கால் வணிகர் குலத் தலைவன் தனதத்தன் என்பாரது திருமகளார் புனிதவதி. இளமையில் விளையாட்டுப் பருவந் தொட்டே சிவபெருமானிடத்தும் சிவனடி யாரிடத்தும் மிகுந்த அன்பு கொண்டிருந்தார் புனிதவதியார்.

உலகத்து அழகெலாம் ஒன்று திரண்டது போன்ற வனப்புடைய வடிவத்தோடு மங்கைப்பருவம் எய்தினார் புனிதவதி. நாகப்பட்டினத்தைச் சேர்ந்த வணிகர் குலத் தலைவர் நிதிபதி என்பாரின் மகன் பரமதத்தனுக்கும் புனிதவதிக்கும் காரைக்காலில் கலியாணம் நடைபெற்றது. நகரத்தார் வழக்கில் திருமணம் கலியாணம் என்ற சொல்லாலேயே அழைக்கப்படும். அம்மையின் திருமணத்தைக் கலியாணம் என்ற சொல்லாலேயே

தளிர் அடிமென் நகைமயிலைத்
தாது அவிழ்தார் காளைக்கு
களிமகிழ் சுற்றம் போற்றக்
கலியாணம் செய்தார்கள்

என்று சேக்கிழார் பாடுகிறார். ஒரேமகள் ஆகையினால் தனதத்தன் விரும்பிய வண்ணம் புனிதவதியும் பரமதத்தனும் காரைக்காலிலேயே வாழ்ந்தனர். தனி வளமனையில் மகிழ்வோடு வாழ்ந்த காலத்து, சிவனடியார் வந்தணைந்தால் வேண்டுவன குறைவறச் செய்து பக்தி வளர வாழ்ந்து வந்தார் புனிதவதி. ஒருநாள் பரமதத்தன் கடைக்கு வந்தவர்கள் தந்த இரு மாங்கனிகளை வீட்டுக்குக் கொடுத்தனுப்பினான். அவ்வேளை யில் வழிநடையால் களைப்புற்று வயது முதிர்ந்த சிவனடியார் ஒருவர் அம்மையாரின் திருமனையை அடைந்து பசி மிகுதி தோன்றக்

Koviloor Digital Library

களைப்புடன் நின்றார். அடியார் பசியை உடனே தீர்ப்பது கடன் எனப் புனிதவதியார் திருவமுதுடன் ஒரு மாங்கனியை உடன் வைத்து அடியவர்க்கு அன்னம் பாலித்தார். அடியவர் உண்டு வேட்கை தீர்த்து வாழ்த்திச் சென்றார். மதியம் உணவு உண்ணும்போது கணவனுக்கு மற்றொரு மாங்கனியை வைத்தார். அதன் சுவை அயின்ற பரமதத்தன் 'இன்னொரு மாங்கனி இருக்குமே எடுத்து வா' என்றான். அம்மையார் கனி கொண்டு வருவார் போல வீட்டினுள் சென்று மெய்ம்மறந்து 'உற்றவிடத்து உதவும் பெருமானே' என்று ஆண்டவனை நினைத்தார். இறைவன் திருவருளால் ஒரு மாங்கனி அம்மையார் கையில்வந்து நின்றது. அதைக் கொண்டு வந்து கணவனுக்கு இட்டார். அதை உண்ட அவன் தான் இதுவரை உண்ணாத சுவையுடையதாய் இம்மாங்கனி இருப்பதை உணர்ந்து வியப்புற்று 'என்னே இதன் சுவை! மூவுலகிலும் பெறற்கரியது. நீ எங்கே பெற்றாய்?' என்று கேட்டான். திருவருள் உதவிய திறத்தை வெளியிடலாகுமோ என அம்மையார் ஒரு கணம் தயங்கினார். கணவனிடம் உண்மையை மறைத்தல் தவறன்றோ என மறுபுறம் எண்ணினார். தெளிந்து உண்மையைக் கூறினார். 'இறைவன் திருவருள் இதுவாயின் இன்னொரு பழம் கொண்டுவா பார்ப்போம்' என்றான் கணவன். அம்மையார் ஆண்டவனைச் சிந்தித்து 'இன்னுமொரு பழம் தந்தருள வில்லையெனில் என் உரை பொய்யாகும்' என்று வேண்டிநின்றார். சிவனருளால் அவர் கையில் மாங்கனி ஒன்று வந்து நின்றது. அதைக் கொண்டு வந்து கணவரிடம் கொடுத்தார். அவன் வியப்புற்று அதை வாங்கினான். அவன் கையிலிருந்து அது உடனே மறைந்தது. கணவன் திகைப்புற்றான். தெய்வத்தன்மை உடையவர் என அம்மையாரைக் கண்டு அஞ்சினான்.

வணிகத்தின் பொருட்டுச் செல்பவன்போல வேறு புலம் சென்றவன் திரும்பி வரவே இல்லை. பாண்டிய நாடுசென்று அங்கேயே தங்கி வணிகம் செய்து வேறு ஒரு பெண்ணையும் திருமணம் செய்து கொண்டு பரமதத்தன் வாழ்வதாகக் காரைக்காலுக்கு வந்தோர் கூறினர். அதை உறுதி செய்துகொண்ட அம்மையாரின் பெற்றோர் கணவரிடத்து மனைவியைக் கொண்டு சேர்ப்பது நம் கடமை என அம்மையாரை அழைத்துக்கொண்டு பாண்டிநாடு சென்றனர். இவர்கள் வருகையை அறிந்த பரமதத்தன் ஊர் எல்லையில் சந்திக்க வந்தான். ஓர் இளம் பெண்ணும் ஒரு குழந்தையும் அவன் கூட வந்தனர். அவன் நேரே வந்து புனிதவதியார் காலில் விழுந்து வணங்கினான். குழந்தையை அவர் முன்பு வணங்கச் செய்தான்.

'இக்குழந்தைக்கு உமது பெயரே இட்டுள்ளேன். உமது அருளால் வாழ்கின்றேன்' என்றான். புனிதவதியார் அச்சமுற்று ஒதுங்கி நின்றாள். உறவினர் நாணமுற்று 'பரமதத்தா, கணவன் இவ்வாறு மனைவியை வணங்கலாமா?' என்றனர். உடனே பரமதத்தன் ''இவர் சாதாரணப் பெண் அல்லர்; தெய்வம். அது கருதியே நான் இவரைப் பணிந்தேன். நீங்களும் பணிந்து வணங்குங்கள்'' என்றான். உறவினர் இது என்ன மாயம் என்று திகைத்தனர். அம்மையார் சிவபெருமானை வணங்கி 'ஈங்கிவன் குறித்த கொள்கை இதுவானால் இவனுக்காகத் தாங்கிய ஊன்பொதி தசைவடிவம் இனி வேண்டாம். அடியேனுக்குப் பேய் வடிவம் அளித்தருள வேண்டும்' எனக் கேட்டார். ஆண்டவன் திருவருளால் அவ்வாறே நிகழ்ந்தது. எலும்பு உடலானார். மண்ணும் விண்ணும் வணங்கும் பேய் வடிவம் பெற்றார். பேய் வடிவத்துடன் தலை கீழாக நடந்து சென்று கைலாய மலையில் ஏறிச் சிவனருட் காட்சி காணச் சென்றார். இவர் வருவது கண்டு உமையம்மை இறைவனிடம் இவர் யாரென வினவ, 'வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண்' என்றார். முதலும் முடிவும் இலாத, பிறப்பு இறப்பு இலாத, தாய் தந்தை இலாத சிவபெருமானே இவரைத் தாய் என்று கொண்டு போற்றினன் எனில் அம்மையாரின் பக்தித் திறத்தை அளவிட இயலுமோ?

'என்ன வரம் வேண்டும்?' என இறைவன் கேட்டபோது 'பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்பு உண்டேல் உனை என்றும் மறவாமை வேண்டும். இறைவனே நீ நடம்புரியும் போது உன்னடியின் கீழிருந்து கண்டுகளிக்கும் பேறு வேண்டும்' எனக் கேட்டார். 'திருவாலங்காட்டில் நாம் நடம் புரியும் போது நீ என்றும் நம் பக்கமிருந்து கண்டு களிப்பாயாக' என்று சிவ பெருமான் வர மருளினான். காரைக்காலம்மையார் இறைவன் கொட்டி எனும் நடமிடும்போது கண்டு களித்து இறையருளை வியந்து திருவாலங்காட்டுத் திருவந்தாதி, மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை ஆகிய பாடல் நூல்களை இயற்றி யருளினார். திருமுறை பாடியோரில் காலத்தால் மூத்தவர் காரைக்காலம்மையார். அறுபத்து மூன்று நாயன்மாரில் அமர்ந்திருக்கும் திருக்கோலம் அம்மையார் மட்டுமே பெற்றிருப்பது தனிச் சிறப்பாகும்.

Koviloor Digital Library

காரைக்குடி

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் திருச்சி – இராமேசுவரம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு நகரத்தார்கள் என்பது பெயராயினும், அவர்கள் வாழ்ந்து வரும் 75 ஊர்களில் நகராட்சி மன்றங்கள் இரண்டுதான். ஏனையவை அனைத்தும் பேரூராட்சி அல்லது ஊராட்சி மன்றங்கள் அமைந்துள்ள சிற்றூர்களே. இந்த இரு நகரங்கள் காரைக்குடியும், தேவகோட்டையுமே. அவற்றுள்ளும் காரைக்குடி பரப்பளவாலும், பல்துறை வளர்ச்சியாலும் தேவகோட்டையை விடப் பெரிய நகரமாக இலங்குகிறது. இக்காரணங்களினால் காரைக்குடி, செட்டி நாட்டின் அறிவிக்கப்படாத தலைநகரமாக விளங்குகிறது எனலாம்.

காரைச் செடிகள் நிறைந்த பகுதியாக இது இருந்தமையால் காரைக்குடி எனப் பெயர் வந்தது என்பர். தொடக்கத்தில், பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடி ஒரு சிற்றூராகவே இருந்தது. திருப்புத்தூரும், தேவகோட்டையும் இதனைவிடப் பேரூர்களாக இருந்தன. எனவே தான் திருப்புத்தூரில் வட்ட ஆட்சி அலுவலகமும், தேவகோட்டையில் கோட்ட ஆட்சி அலுவலகமும் அமைந்தன.

ஊராட்சி மன்றமாக இருந்த காரைக்குடி 1928 இல் நகராட்சி மன்றமாக உயர்த்தப்பட்டது. 1930 இல் காரைக்குடிக்கு இருப்புப் பாதை வசதியும், தொடர்வண்டிப் போக்குவரத்தும் வந்து சேர்ந்தன. இவற்றால் வளரத் தொடங்கிய காரைக்குடி, 1947 இல் வள்ளல் அழகப்பரால் (த.க.) கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப் பெற்ற பின், மிக விரைவாகப் பெருவளர்ச்சி எய்தியது.

இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படும் போது, புதிய மாவட்டத்தின் தலைமை இடமாகக் காரைக்குடி அமைய வேண்டும் என வேண்டுகோள்விடும் அளவு இதன் வளர்ச்சி பெருகியிருந்தது. இது இப்போது முதல் வரிசை நகராட்சி மன்றங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

நகரத்தார் வாழும் ஊர்களில் காரைக்குடி நடுநாயகமாகத் திகழ்கிறது. நகரத்தார்களுக்குரிய ஒன்பது நகரக் கோவில்களும் காரைக்குடியை மையமாகக் கொண்டு, காரைக்குடியிலிருந்து 20 கிலோமீட்டர் சுற்றளவுக்குள் அமைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. ஒன்பது கோவிலைச் சேர்ந்த புள்ளிகளும் வாழ்ந்து வரும் ஊர், நகரத்தார் வாழ்ந்து வரும் 75 ஊர்களில் காரைக்குடி ஒன்று மட்டும்தான் என்பது இவ்வூரின் மற்றொரு சிறப்பு. புள்ளி எண்ணிக்கையில் மட்டும் முதல் இடத்தைத் தேவகோட்டை பெறக் காரைக்குடி இரண்டாவது இடத்தில் நிற்கிறது. இங்கு ஒன்பது கோவில்களையும் சேர்த்து 3,000 புள்ளிகள் வாழ்ந்து வருகிறார்கள்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற பெயருடன் கூடிய நகரச்சிவன் கோவில் உள்ளது. சென்ற நூற்றாண்டின் இறுதியில் (1872) கட்டப்பெற்ற கோவில். நகரச் சிவன் கோவிலைச் சார்ந்து அறுபத்து மூவர் குருபூசை மடம் ஒன்றும், 108 பிள்ளையார் கோவில் ஒன்றும் உள்ளன.

செக்காலை என்பது காரைக்குடி நகரின் வடகிழக்கில் அமைந்துள்ள ஒரு குடியிருப்புப் பகுதி. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், நகரத்தார் வாழும் ஊர்ப்பட்டியல்கள் குறிப்பிடப்படும் போது, ஜெயங்கொண்டபுரம் என்ற செக்காலை என இப்பகுதி தனி ஊராகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆனால் இப்போது இது காரைக்குடியின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டது. இங்கு வாழும் நகரத்தார்களும் காரைக்குடி நகரச் சிவன் கோவிலுக்குப் புள்ளி வரி செலுத்துகின்றனர். அதே நேரத்தில், செக்காலை நகரத்தாருக்குப் பொதுவாக, அவர்களால் கட்டப்பெற்று, நிருவகிக்கப்பட்டு வரும் தையல்நாயகி வைத்தியநாதர் திருக்கோவில் என்ற சிவன் கோவில் செக்காலையில் உள்ளது.

காரைக்குடியின் தென்பகுதியில், இளையாத்தங்குடி பெருமருதூருடையார்ப் பிரிவைச் சேர்ந்த நாகப்ப செட்டியார் என்பவர் சௌந்தரநாயகி – நாகநாதர் திருக்கோவில் என்ற பெயரில் ஒரு கோவிலைக்கட்டினார். இது காலத்தால் நகரச்சிவன் கோவிலுக்கும் முந்தியது எனக் கூறுகின்றனர். இக்கோவிலின் சிறப்பு என்னவென்றால், ஒரே வளாகத்தில், வடக்கே ஒரு சிவன் கோவில், தெற்கே ஒரு பெருமாள் கோவில், நடுவே ஒரு பிள்ளையார் கோவில் என மூன்று கோவில்களையும் நாகப்ப செட்டியார் கட்டினார் என்பதே. இம்மூன்று கோவில்களும் நாகப்ப செட்டியாரின் வழித் தோன்றல்களாக வந்த மூன்று குடும்பத்தாரின் பொது நிருவாகத்தில் அண்மைக் காலம் வரை இருந்தன; இப்போது நா. புதூர், சி.மெ.புதூர் நகரத்தார்களின் பொது நிருவாகத்தில் இருந்து வருகின்றன.

இதுபோலவே காரைக்குடியின் வடமேற்கே அமைந்துள்ள ஒரு குடியிருப்புப் பகுதி முத்துப்பட்டணம். இங்கு வாழும் நகரத்தார்கள் தங்களுக்குப் பொதுவாக மீனாட்சி அம்மன் கோவிலைக்கட்டி, நிருவகித்து வருகிறார்கள்.

Koviloor Digital Library

காரைக்குடியின் மையப் பகுதியாக அமைவது கல்லுக்கட்டி. இக்கல்லுக்கட்டி மேற்குத் தெருவில், இளையாத்தங்குடி கழனிவாசற்குடிப் பிரிவைச் சேர்ந்த வெ.இராம. பொதுக் குடும்பத்தினர் கிருஷ்ணன் கோவிலைக் கட்டி நிருவகித்து வருகின்றனர். பிள்ளையார்பட்டிக் கோவிலாரின் ஒரு வகையினர் முனீசுவரர் கோவிலைக் கட்டி நிருவகித்து வருகின்றனர். இவை தவிர, நகரத்தார் களில் சில குடும்பங்களின் நிருவாகங்களில், நகரின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பிள்ளையார் கோவில்கள் அமைந்துள்ளன. நகரத்தார், நாட்டார் அனைவருக்கும் பொதுவான கோவில், இப்போது இந்து அறநிலையக் குழுவின் நிருவாகத்தில் இருந்து வருவதும், காரைக்குடியின் மையப்பகுதியான கல்லுக்கட்டியில் அமைந்திருப்பதுமான, கொப்புடையம்மன் கோவில். இவ்வம்மனின் மூலஸ்தானம், காரைக்குடிக்குத் தென்மேற்கில் அமைந்துள்ள காட்டம்மன் கோவில் ஆகும்.

முத்துப்பட்டணத்தில் உள்ள முத்துமாரியம்மன் கோவில், நகரச் சிவன் கோவிலுக்கு அருகே அமைந்துள்ளதும் சேணியர்கள் நிருவாகத்தில் உள்ளதுமான முத்தாளம்மன் கோவில், அவர்கள் நிருவாகத்தில் உள்ள மார்க்கண்டேயர் கோவில், ஊரின் தென் மேற்கில் அமைந்திருப்பதும், நகரத்தார்களால் எல்லைக் காவல் தெய்வமாக வணங்கப் பெறுவதும், வேளார்கள் நிருவாகத்தில் இருப்பதுமாகிய பொய்சொல்லா மெய்யர் எனும் ஐயனார் கோவில் ஆகியவை இவ்வூர் நகரத்தார் வாழ்வில் சிறப்பிடம் பெறும் கோவில்கள் ஆகும்.

காரைக்குடியின் தெற்கே தேனாறு என்ற பெயரில் ஒரு சிற்றாறு உண்டு. ஆனால் பெருமழை பெய்யும் காலங்களில் மட்டுமே அதில் தண்ணீரைப் பார்க்கலாம். காரைக்குடிக் கண்மாய், குறிச்சிக் கண்மாய், வீரியங்கண்மாய் என்ற கண்மாய்களும், இருபதுக்கும் மேற்பட்ட ஊருணிகளும் இவ்வூரில் உள்ளன. என்றாலும் இவ்வூரின் நீர்வளம் என்பது நிலத்தடி நீரையே சார்ந்துள்ளது. பெரும்பாலும் அனைத்து வீடுகளிலும் நீர்வளம் மிக்க கிணறுகள் உள. எல்லாவற்றுக்கும் மேலாக இவ்வூரின் மேற்கு எல்லையில் அமைந்துள்ள சம்பை ஊற்று எனும் ஊற்றுக் கிணறுதான் கடந்த பல ஆண்டுகளாகக் காரைக்குடியின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வூரின் நான்கு எல்லைகளைக் குறிக்க நான்கு கான்கிரீட் வளைவுகள் கட்டப் பெற்றிருப்பது காரைக்குடியின் தனிச்சிறப்பு. வடக்கு எல்லையைக் குறிப்பதாக அமைக்கப்பெற்ற வளைவு மட்டும் இப்போது சிதைந்து விட்டது. ஏனைய மூன்று வளைவுகளும் இன்றும் உள.

செட்டிநாட்டு ஊர்களுள் போக்குவரத்து வசதியால் மிகச் சிறப்புடைய ஊர் காரைக்குடி. தமிழ்நாட்டின் பெருநகரங்கள் பலவற்றிற்கும் காரைக்குடியிலிருந்து பேருந்து வசதி உண்டு.

தொடர் வண்டிப் போக்குவரத்தைப் பொறுத்த வரை, காரைக்குடித் தொடர் வண்டி நிலையம், ஒரு சந்திப்பு நிலையமாகும். காரைக்குடி – மானாமதுரை; காரைக்குடி – திருச்சி; காரைக்குடி – அறந்தாங்கி ஆகிய மூன்று இருப்புப் பாதைகளின் சந்திப்பு இது.

கல்வித்துறையிலும், நகரத்தார் வாழும் ஊர்களுள், சிறந்த ஊராகக் காரைக்குடி அமைகிறது. மழலையர் பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரையான கல்வி வசதிகளை உடையது காரைக்குடி. இப்பெருமைக்கு இன்றியமையாத காரணராக அமைபவர் வள்ளல் அழகப்பர்.

நகரத்தார் பலர் சேர்ந்து நிருவகித்து நடத்தி வரும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலை மேல்நிலைப்பள்ளி, முத்த.வெ. வெள்ளையன் செட்டியாரால் **1913** இல் தொடங்கப் பெற்றது. இது, பிரிக்கப்படாத இராமநாதபுர மாவட்டத்தில் தொடங்கப் பெற்ற முதல் உயர்நிலைப். பள்ளி என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்ற பள்ளியாகும்.

மெ.செ.மெ. குடும்பத்தினரால் **1917**இல் தொடங்கப்பெற்று நிருவகித்து வரப்பெறுவது ஸ்ரீ மீனாட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி. வள்ளல் அழகப்பரால் தொடங்கப்பெற்று, இப்போது அழகப்பா பல்கலைக்கழகத்தால் நடத்தப் பெறுவது மாதிரி மேல்நிலைப்பள்ளி. அழகப்பர் காலத்திற்குப் பின், அழகப்பா கல்வி அறநிலையத்தினரால் தொடங்கப்பெற்று, நடத்தப் பெறுவது அழகப்பா மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி. கம்பனடிப்பொடியால் உருவாக்கப்பெற்ற கம்பன் அறநிலை தொடங்கி, நடத்தி வருவது கம்பன் கற்பகம் மெட்ரிக் குலேசன் மேல்நிலைப்பள்ளி.

இராம. பெரியகருப்பன் செட்டியாரால் தொடங்கப்பெற்று, இப்போது, அன்னார் குடும்பத்தின் நிருவாகத்தில் இயங்கி வருகிறது இராமசாமி தமிழ்க் கல்லூரி.

அழகப்பரால் தொடங்கப்பெற்ற அழகப்பா கலைக்கல்லூரி, அழகப்பா பல்தொழிற் பயிற்சி நிலையம், அழகப்பா பொறியியற் கல்லூரி ஆகியவை இப்போது அரசு நிறுவனங்களாக நடந்து வருகின்றன. அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அழகப்பா உடற்பயிற்சிக் கல்லூரி ஆகியவை அழகப்பா பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக

Koviloor Digital Library

இயங்குகின்றன. கோடி கொடுத்த கொடைஞனின் கனவை நினைவாக்கும் வண்ணம் தமிழக அரசு அமைத்த அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடியின் கல்வி வளர்ச்சியின் மணிமுடி.

மேற்கூறப்பட்ட நகரத்தார் தொடர்புடைய கல்வி நிறுவனங்களைத் தவிர, இன்னும் பல்வேறு கல்வி நிறுவனங்களும் காரைக்குடியில் செயல்பட்டு வருகின்றன. மின்வேதியியல் ஆய்வுக்கூடம் அழகப்பரின் பெருமுயற்சியால் காரைக்குடியில் அமைந்து, செயல்பட்டு வருகிறது.

நகரத்தார் தொடர்பாகப் பார்த்தால், காரைக்குடியில் பல கோவில் பிரிவினர் பொதுப் படைப்புக்கள் படைத்து வருகின்றனர். குறிப்பிடத்தக்கவை பிள்ளையார்பட்டிக் கோவிலாரின் மெய்யாத்தா படைப்பு, நேமங்கோவிலாரில் ஒரு வகையினரின் சோணையா படைப்பு, மற்றொரு வகையினரின் அக்கினியாத்தா படைப்பு, இளையாத்தங்குடி ஒக்கூருடையாரின் திருமாத்தா படைப்பு, மாத்தூர் அரும்பாக்கூருடையாரில் ஒரு வகையினரின் மறத்தி படைப்பு ஆகியவை.

நகரத்தார் வீடுகள் பலவற்றில் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கும் நிகழ்ச்சி காரைக்குடியில் நடைபெறுகிறது. பழநி நடைப்பயணத்தில் காரைக்குடிக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. நகரத்தார் அறப்பட்டயங்களில், தெய்வ அருள் பெற்ற நால்வர் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களுள் மூன்றாவது இடம் பெறுபவர் காரைக்குடியைச் சேர்ந்த வைரவன் கோவில் வேலப்பசெட்டி வைரவன் செட்டியார். இவர் மரபினர் இன்று அரண்மனைப் பொங்கல் எனச் சிறப்புடன் அழைக்கப்பெற்றுப் பழநி நடைப்பயணத்தில் அன்னதானம் செய்து வருகிறார்கள்.

காரைக்குடியில் திருவிழாக்கள் பல நடைபெறுகின்றன. நகரத்தார் சிறப்பாகக் கருதிக் கொண்டாடுவது கொப்புடையம்மன் கோவிலின் செவ்வாய்த் திருவிழா. ஆண்டுதோறும் சித்திரை மாதம் இறுதிச் செவ்வாயன்று காப்புக்கட்டி அன்று முதல் அடுத்த வியாழன் வரை 9 நாட்கள் கொப்புடையம்மன் கோவில் திருவிழாவும், 10 ஆவது நாளாகிய வெள்ளிக்கிழமை முத்தாளம்மன் கோவில் பொங்கலும் நகரத்தாரால் சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.

அடுத்தபடியாக மாசிமாதம் சிவன் ராத்திரியன்று ஐயனார் கோவிலுக்குப் பெரும் அளவில் நகரத்தார் குடும்பங்கள் செல்லுவர். குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டுவர்; அவ்விழாவையும் சிறப்பாகவே கொண்டாடுவர். மகார் நோன்பன்று, கோவிலூர்த் திருநெல்லையம்மன், காரைக்குடி கொப்புடையம்மன், சுந்தரேசுவரர், நாகநாதப் பெருமாள் ஆகிய நான்கு சுவாமிகளும் காரைக்குடியின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் மகார் நோன்புத் திடலில் எழுந்தருளி அம்பு போடுவதையும் நகரத்தார்கள் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

அபிசீனியா பழ. நாச்சியப்ப செட்டியார், பழ.தெலெ. தேனப்ப செட்டியார், தேவராஜன் செட்டியார் ஆகியோர் இ.தே.ரா. வில் பணியாற்றியவர்கள்

நகரத்தாரின் அண்மைக் கால வரலாற்றில் காரைக்குடி மிக இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. சமூக சீர்திருத்த நோக்குடன் தொடங்கப் பெற்றதும், பாரதியாரால் பாராட்டப்பெற்றதும், இன்றும் சிறப்பாக இயங்கி வருவதுமான இந்துமதாபிமான சங்கம் (த.க.) அமைந்திருப்பது காரைக்குடியில்தான்.

'கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்' என்ற குறிக்கோளுடன் தொடங்கப்பெற்றதும், தனது கிளைகளாக 47 கழகங்களைக் கண்டதும், இலக்கிய விழா நடத்துவதில் தமிழகத்துக்கே முன்னோடியாக அமைந்ததும், இப்போதும் மரபுமாறாமல் விழா நடத்தி வருவதுமான கம்பன் கழகம் (த.க.) அமைந்திருப்பதும் காரைக்குடியில்தான்.

விடுதலைப் போராட்டவரலாறு, சுயமரியாதை இயக்க வரலாறு போன்றவற்றில் காரைக்குடியைச் சேர்ந்த நகரத்தார்கள் பலர் பெரும் பணியாற்றியுள்ளர். நகரத்தார் தொடர்புடைய வரலாற்றுச் சிறப்புடைய அமைப்புக்களாக, தமிழ்த்தாய் கோவில், கம்பன் மணி மண்டபம், வள்ளல் அழகப்பர் சிலை, தமிழ்க்கடல் இராய.சொ. சிலை, கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், கண்ணதாசன் சிலை ஆகியவை காரைக்குடியில் அமைந்துள.

காரைக்குடி நகரத்தார் வெளியூர்களில் செய்துள்ள அறப்பணிகள் வருமாறு :

திருக்கலயநல்லூர்ச் சிவன் கோவில் திருப்பணியை முத்த.வெ. வெள்ளையஞ் செட்டியாரும், திருச்செங்காட்டங்குடிச் சிவன்கோவில் திருப்பணியை மெ.செ. குடும்பத்தினரும், திருப்பேரெயில் சிவன் கோவில் திருப்பணியை அ. இராம.கதி. இராமசாமி செட்டியாரும், திருவெறும்பியூர்ச் சிவன் கோவில் திருப்பணியை இராம. வீர.மு. வீரப்ப செட்டியாரும், புலீச்சுரக்கோவில் திருப்பணியை

Koviloor Digital Library

பெரி.க. குடும்பத்தினரும், பொருள் வைத்த சேரிச் சிவன்கோவில் திருப்பணியை சா.நா. சொக்கலிங்கம் செட்டியார், நா.வ. மெய்யப்ப செட்டியார் ஆகியோரும், மட்டையாந்திடல் சிவன் கோவில் திருப்பணியை அ.மு.க. பொதுக்குடும்பத்தினரும், வன்னியன் சூரக்குடிச் சிவன்கோவில் திருப்பணியை முரு.லெ. கிருஷ்ணன் செட்டியாரும் செய்துள்ளனர்.

அவளிவள் நல்லூர்ச் சிவன்கோவில் திருப்பணியாளர்களுள் மெ. மெய்யப்பச் செட்டியாரும் ஒருவர். திருக்கழுக்குன்றச் சிவன்கோவில் திருப்பணியாளர்களுள் நா.லெ. நாராயணன் செட்டியாரும் ஒருவர். திருநெல்வாயில் சிவன்கோவில் திருப்பணியாளர்களுள் முத்து.அரு.மு. அருணாசலம் செட்டியாரும் ஒருவர். திருவாவினன்குடிச் சிவன் கோவில் திருப்பணியாளர்களில் நா.மு. சுப்பிரமணியன் செட்டியாரும் ஒருவர்.

இளங்குடியில் பிள்ளையார் கோவிலும் ஊருணியும் அமைத்தவர் பி.அ. குடும்பத்தினர். ப. இராம. இலக்குமணன் செட்டியார் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் கோவில் திருப்பணியையும், முத்துப்பட்டணம் பெரி.நா.நா. குடும்பத்தினர் தில்லைவிளாகம் நடராசர் கோவில் திருப்பணியையும் செய்துள்ளனர். நேமங் கோவிலில் பிள்ளையார் கோவிலும் ஊருணியும் அமைத்தவர் அரு.அ. குடும்பத்தினர்.

பெரி. நாராயணன் செட்டியார் திருநல்லூர்ப் பெருமணச் சிவன் கோவிலினுள் ஞானசம்பந்தர் கோவிலையும், க.தெ. குடும்பத்தினர் திருமயம் சத்தியகிரிப் பெருமாள் கோவிலினுள் இராமசாமி சன்னதியையும் அமைத்தனர்.

சா.நா. சாத்தப்ப செட்டியார் குடும்பத்தினர் திருவண்ணாமலையில் சாதுக்கள் மடத்தையும், சி.மு.அரு.நா. குடும்பத்தினர் திருவானைக்காவில் பசுமடத்தையும் அமைத்தனர்.

தில்லையில் சு.இராமசு.அ.சு.நா. குடும்பத்தினர் ஒரு வேத பாடசாலையையும், மெ.செ.மெ. குடும்பத்தினர் ஒருவேத பாடசாலையையும் அமைத்துள்ளனர்.

தில்லையில் மெய்கண்ட சித்தாந்த வித்தியா சாலையை அமைத்தவர் காரைக்குடிச் சொக்கலிங்க ஐயா.

அமராவதி புதூரில் மகளிர் இல்லத்தை சொ. முருகப்பாவும், குருகுலம் உயர்நிலைப்பள்ளியை முத்துப்பட்டணம் சா.சு. சுப்பிரமணியன் செட்டியாரும் நிறுவினர்.

கார்த்திகைப் புதுமை

நகரத்தார் குடும்பங்களில் முன்னர் நடந்ததும், இப்போது நின்று போய்விட்டதுமான ஒரு சிறப்பு நிகழ்ச்சி. குடும்பத்தில் உள்ள ஆண் மக்களுக்கு இச்சிறப்பு நிகழ்ச்சியும், பெண் மக்களுக்குத் திருவாதிரை எனும் சிறப்பு நிகழ்ச்சியும் நடத்துவது பழக்கம். இவ்விரு நிகழ்ச்சிகளின் நோக்கம், திருமண வயதில் தங்கள் வீட்டில் மணமகன் இருக்கிறான் அல்லது மணமகள் இருக்கிறாள் என்ற செய்தியை ஊரில் உள்ள அனைவர்க்கும் தெரிவிப்பதே ஆகும். அந்த அடிப்படையில்தான் இச்சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பது இவை இரண்டிற்கும் 'அரைக் கலியாணம்' என்ற பெயரும் வழங்கியமையால் உறுதியாகிறது.

பத்து வயதைத் தாண்டிய ஆண்பிள்ளைகளுக்குக் கார்த்திகைப் புதுமை செய்வது வழக்கம். இது கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை நட்சத்திரத் தன்று நடத்தப்பெறும். திருக்கார்த்திகை முருகப் பெருமானுக்குரிய விண்மீன் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சிறப்பு நிகழ்ச்சியன்று, நிகழ்ச்சியின் நாயகனாகிய மைந்தன், மணக்கோலத்தில் அணிகள் செய்யப்பெற்றுக் குதிரைமீதேறி, வீட்டிலிருந்து உறவினர், பங்காளிகள் சூழ ஊர்வலமாகச் சிவன் கோவிலுக்குச் சென்று, வழிபட்டுத் திரும்புவான்.

'கார்த்திகைப் புதுமை'க்குச் 'சூப்பிடி' என்றும் ஒரு பெயர் உண்டு. அது 'சூள் பிடி' என்பதன் மருவிய வடிவம் என்பர். சுளுந்து அல்லது சூள் என்பது ஒரு காட்டுமரம். அதில் தீவட்டிபோல, விளக்கு ஒன்று அமைத்து, அதனைக் குதிரையேறிச் செல்லும் பிள்ளைக்கு முன்னே பிடித்துச் சென்றமையால் இதற்குச் சூப்பிடி எனப் பெயர் வந்தது என்பர்.

அந்தணர் இனத்தில் 'உபநயனம்' என்ற சடங்கு பெறும் இடத்தை இந்நிகழ்ச்சிபெறும் என்பர் சிலர். மன்னர் பின்னோராகிய வணிகமரபு இளைஞர்கள், குதிரையேற்றம் பழகியபின், ஊரறிய நிகழ்த்திய அரங்கேற்ற நிகழ்ச்சியின் எஞ்சிய நிலை என்பர் வேறு சிலர்.

எவ்வாறாயினும், உறவினரையும், பங்காளிகளையும் அழைத்து விருந்து நடத்திச் செய்யும் சிறப்பு நிகழ்ச்சிகள் நாளடைவில் பொருளாதாரக் காரணங்களால் குறைக்கப்பட்ட போது, திருமணம் போன்ற இன்றியமையாத நிகழ்ச்சிகள் தவிர ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள் நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டது. அவ்வாறு நின்று போன சிறப்பு நிகழ்ச்சிகளுள் கார்த்திகைப் புதுமையும் ஒன்று.

Koviloor Digital Library

காளையார் மங்கலம்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடியிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. திருப்புத்தூர் – சிவகங்கைச் சாலையில் உள்ள ஒக்கூரிலிருந்து தென்கிழக்கே மூன்று கிலோமீட்டர் தொலைவில் இவ்வூர் உள்ளது.

இளையாத்தங்குடி, வைரவன் கோவில், சூரக்குடி ஆகிய மூன்று கோவில்களைச் சேர்ந்த 140 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற பெயருடன் கூடிய நகரச்சிவன் கோவில் உள்ளது. 1920 இல் கட்டப்பெற்ற இக் கோவிலுக்கு திருக்குட நன்னீராட்டு விழாக்கள் பல நடந்துள. அண்மையில் 1994 இல் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது.

ஐயனார் கோவில், பூமாலையம்மன் கோவில், சேவாத்தாள் கோவில் ஆகிய கோவில்களும் இவ்வூரில் அமைந்துள்ளன. இவ்வூரில் இரு ஊருணிகள் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று குடிதண்ணீர் ஊருணியாகும்.

சித்திரைத் திங்கள் கடைசி வெள்ளியில் நகரத்தார் பொங்கலும், தைத்திங்கள் கடைசி வெள்ளியில் நாட்டாரும் நகரத்தாரும் கூடிப் பூமாலையம்மன் கோவிலில் நடத்தும் பூச்சொரிதல் விழாவும் இவ்வூரின் சிறப்புத் திருவிழாக்கள் ஆகும்.

இங்குள்ள சூரக்குடிக் கோவில் பங்காளிகள் உல.வ.வ. பொதுப் படைப்பை 3 ஆண்டுகட் கொருமுறை படைத்து வருகின்றனர். இவ்வூரைச் சேர்ந்த உல.வ.வ. குடும்பத்தினர் குன்றக்குடியில் ஒரு விடுதி கட்டி, நிருவகித்து வருகின்றனர்.

இவ்வூரைச் சார்ந்த சூரக்குடிக் கோவில் பங்காளிகளில் ஒருவரான சித.சா. வள்ளியப்பன் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றி யவராவார்.

இவ்வூரில் நகரத்தார் நன்கொடையுடன் தொடங்கப் பெற்ற அரசு மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது.

கானாடுகாத்தான்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி – திருச்சிச் சாலையில் காரைக்குடியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், இரணிக்கோவில், ஆகிய 5 கோவில்களைச் சேர்ந்த 437 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இது, சாக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த பேரூராட்சி மன்றம்.

நகரப் பிள்ளையார் கோவில் நகரத்தார் பொதுக் கோவிலாகும். தை மாதம் 2ஆம் நாள் நகரக் கூட்டம் நடைபெறும். விநாயகர் சதுர்த்தி விழாவும் திருக்கார்த்திகையும் சிறப்பாகக் கொண்டாடப்பெறும். 5.9.1974, 7.12.1994 ஆகிய நாட்களில் குடமுழுக்கு நடைபெற்றது. ஊர் அருகில் நேமத்தான்பட்டி, கொ. இலட்சுமிபுரம் ஊரினருக்கும் பொதுவான பெரிய கோவில் எனப்படும் சிவன்கோவில் உள்ளது. கானாடு காத்தானுக்கு அருகே உள்ள செட்டிநாட்டில் மு. அண்ணாமலை செட்டியார் குடும்பத்தினர் மீனாட்சி சொக்கலிங்கேசுவரர் சிவன் கோவில் கட்டியுள்ளனர். அண்மையில் இக்கோவிலுக்கு 1995இல் குடமுழுக்கு நடைபெற்றது. சுந்தரமூர்த்திப் பிள்ளையார் கோவில், வைரவன் செட்டியார் ஊருணிப் பிள்ளையார் கோவில் ஆகிய கோவில்களும் உள்ளன.

மாட்டா ஊருணி, வைரவன் செட்டி ஊருணி, செட்டியா ஊருணி ஆகியவை குடிநீர்க் குளங்கள் ஆகும். செட்டிநாடு கோவில் ஊருணி, பெரியகோவில் ஊருணி, சுந்தரமூர்த்தி ஊருணி, அழகப்ப ஊருணி, கொறட்டியார் ஊருணி ஆகிய ஊருணிகளும் உள.

மாத்தூர் கருப்பூர் நகரத்தார் பாப்பாத்தாள் படைப்பையும் இரணிக்கோவில் நகரத்தார்கள் ஆடிமாதம் நாச்சத்தாள் படைப்பையும் மாத்தூர் அரும்பாக்கூர் நகரத்தார்கள் வெ.ப. படைப்பையும் படைத்து வருகின்றனர். இளையாத்தங்குடி பட்டினசாமி நகரத்தார் ஆடி மாதத்தில் அளகாபுரியிலும், நேமங்கோவில் நகரத்தார் மாசி மாதத்தில் பள்ளத்தூரிலும் மாத்தூர் அரும்பாக்கூர் க.பெ. வீட்டார் ஆடி மாதத்தில் உசிறுவயலிலும் பிற ஊர் நகரத்தார்களோடு சேர்ந்து பொதுப்படைப்பு படைத்து வருகின்றனர்.

மாத்தூர்க் கோவிலைச் சேர்ந்த அ.பழ. குடும்பத்தார், க.வெ. குடும்பத்தார் 100 ஆண்டுகளாகப் புரட்டாசி மாதத்தில் இராமாயணம் படித்து வருகின்றனர்.

இளை(பட்)பிரிவைச் சார்ந்த மு.சித.மு. குடும்பத்தார் நடத்தும் எம்.சிடி.எம். தொடக்கப் பள்ளி (1956), எம்.சிடி.எம். உயர்நிலைப்பள்ளி (1973) ஆகிய பள்ளிகளும் சி.வி.சிடி. அற நிலையால் நடத்தப்பெறும் மீனாட்சி ஆச்சி ஆங்கிலப்பள்ளி (1972)யும் இவ்வூரில் உள்ளன. எம்.சிடி.எம். குடும்பத்தார் சென்னையில்

Koviloor Digital Library

எம்.சிடி.எம். உயர்நிலைப் பள்ளியையும் சிதம்பரத்தில் மு. ராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியையும் நடத்தி வருகின்றனர். கொழும்பு சுப. குடும்பத்தார் நாட்டரசன்கோட்டையில் கானாடு காத்தான் முத்தையா சுப்பையா செட்டியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியை நிறுவி யுள்ளனர். இராஜா குடும்பத்தாரால் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முத்தையா பாலிடெக்னிக், சென்னை அடையாற்றில் சில பள்ளிகள், செட்டி நாட்டில் அண்ணாமலை பாலிடெக்னிக் ஆகியவை தோற்றுவிக்கப் பட்டுள்ளன. இவ்வூரைச்சார்ந்த யோகி ராமையா நேமத்தான்பட்டியில் உடற்பயிற்சி மருத்துவ நிலையம் (Physio Therapy) ஒன்றை நடத்தி வருகிறார். சா.அ. குடும்பத்தாரால் 1925 இல் சா.அ. மருத்துவ மனை தோற்றுவிக்கப்பட்டு அரசு மருத்துவமனையாக இன்று நடைபெறுகிறது. இராஜா குடும்பத்தாரால் லேடி பெண்ட்லண்ட் பெண்கள், குழந்தைகள் மருத்துவமனை நிறுவப்பட்டு 1925 முதல் செயல்பட்டு வருகிறது. ஸ்பிக் அறக்கட்டளை நேமத்தான்பட்டி சூரக்குடியில் மருத்துவமனை கட்டித் தந்துள்ளது.

இவ்வூரினரான தெச. சிதம்பரம் செட்டியார் இ. தேரா. விலும் பாரதியாரின் புரவலரான வைசு. சண்முகம் செட்டியார் சுயமரியாதை இயக்கத்தி லும் பணியாற்றினர்.

இவ்வூரைச் சேர்ந்த வெ.வீர. குடும்பத்தார் திருப்பராய்த்துறையிலும், சா.இராம.சித. குடும்பத்தார் திருவானைக் கோவிலிலும் தூ.கரு. குடும்பத்தார் திருப்புன்கூரிலும் க.வெ. இராம. குடும்பத்தார் பெரிய கோவிலிலும் கா.பெ.அ.பெ. குடும்பத்தார் திருவேட்களத்திலும் ஏ.சி. முத்தையா திருக்கடவூர் அபிராமி கோவிலிலும் திருப்பணி செய்துள்ளனர். ஸ்பிக் நிறுவனம் திருக்கடவூரில் பெரிய மண்டபம் அமைத்துள்ளது. தூ.கரு. குடும்பத்தார் வைத்தீசுவரன் கோவிலில் சத்திரமும், கா.அ.மு. குடும்பத்தார் குன்றக்குடியில் மடமும் நிறுவியுள்ளனர்.

இரணிக்கோவில் நகரத்தார் அரண்மனைப் பட்டியில் பிள்ளையார் கோவில் கட்டியுள்ளனர். நியூயார்க்கில் பணியாற்றிய அழகப்பா அழகப்பன் அமெரிக்காவில் திருக்கோவில்கள் அமைக்கும் பணியில் முன்நின்றுள்ளார்.

தமிழகத்தின் கல்வி, தொழில் வளர்ச்சியில் இவ்வூரினர் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றனர் என்ற சிறப்பு கானாடுகாத்தானுக்கு உரியது.

ராஜா சர் வீடு, ஜலண்ட் வீடு, சி.வி.சி.டி. வீடு, எம்.சி.டி.எம். வீடு ஆகியவை கலைநயம் மிக்க அழகிய வீடுகளாகும்.

கிருஷ்ணன், சோனா., (14.11.1938)

இளையாத்தங்குடி - ஒக்கூருடையார்
மதகுபட்டி
தோட்டக்கலை வல்லுநர், பேராசிரியர், கலைஞர்

எஸ்.பி. சோனா – கமலம் ஆச்சியின் மகன். இவர் பள்ளியில் பயிலும் காலத்திலேயே தமிழார்வம் கொண்டவர். இவரது 18 ஆவது வயதில் 'தென்றல்' வார இதழ் நடத்திய வெண்பாப் போட்டியில் கலந்து கொண்டு பரிசுபெற்றார். இவரது பல கவிதைகள் வார இதழ்களில் வெளிவந்துள்ளன. அம்பத்தூர் இலக்கியப் பேரவையின் செயலராகப் பணிபுரிந்துள்ளார்.

முப்பது ஆண்டுகளாகத் தோட்டக்கலையில் மிகுந்த ஆர்வம் கொண்டு ஜப்பானிய நாட்டுப் போன்சாய் முறையில் செடிகள் வளர்த்து வருகிறார். அக்கலைபற்றித் 'தரையைத் தொடாத தருக்கள்' என இவர் எழுதியுள்ள நூல் இத்துறையில் இந்திய மொழிகளிலேயே முதன் முதலாகத் தமிழ் மொழியில் வெளிவந்துள்ள நூலாகும். 1987இல் இந்நூல் வெளிவந்தது. இந்நூலின் தமிழ் நடைக்காகவும் சிறந்த தமிழ்ச் சொல்லாட்சிக்காகவும் டாக்டர். வ.சுப. மாணிக்கனார் ''தூய தமிழாக இவ்வறிவியல் இருப்பது கண்டேன். சொல்லும் தனித்திறமை தூய தமிழுக்குண்டு என்ற தமிழ்ப் பேராண்மையை உங்கள் நூல் யாரையும் உணரச் செய்யும்'' எனப் பாராட்டியுள்ளார்.

தமிழக அரசின் தோட்டக்கலைத் துறை, சென்னை தோட்டக்கலை விவசாயச் சங்கம் முதலியன நடத்திய போட்டிகளில் தொட்டிக் காய்கறிச்செடி, போன்சாய் ஆகியவற்றுக்காகப் பல பரிசுகள் பெற்றுள்ள இவர் சென்னைத் தொலைக் காட்சியில் இக்கலைபற்றிப் பலமுறை விளக்கிப் பேசியுள்ளார்.

தமிழில் தோட்டக்கலை அறிவியல் நூல் படைத்து வ.சுப. மாணிக்கனாரால் இவர் பாராட்டப் பெற்றது பெருஞ் சிறப்பாகும்.

கிருஷ்ணன், லெ., (26-11-1921)

மாத்தூர் - அரும்பாக்கூர்
உ. சிறுவயல்
வங்கியாளர்

லெட்சுமணன் செட்டியார் – அழகம்மை ஆச்சியின் மகன். இவர் வங்கிப் பணியில் புகழ்பெற்றவர். ரிசர்வ் வங்கியில் 30 ஆண்டுகளும் மதுரை வங்கியில் 5 ஆண்டுகளும் பணியாற்றியுள்ளார். தொடக்கத்தில் மதுரை வங்கியில் 1945 முதல் 1950 வரையும் பிறகு

Koviloor Digital Library

ரிசர்வ் வங்கியில் 1951 முதல் 1970 வரையும் மீண்டும் ரிசர்வ் வங்கியில் 1976 இலிருந்து 1981 வரையும் பணியாற்றினார். இடையே 1971 முதல் 1976 வரை 6 ஆண்டுகள் மதுரை வங்கியின் தலைவராகப் பணியாற்றினார். மதுரை வங்கித் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் இவருடைய பல்வேறு புதிய திட்டங்களால் வங்கி பெரும் வளர்ச்சியடைந்தது. நிறையக் கிளைகள் திறக்கப்பட்டன. நகரத்தார் இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு மதுரை வங்கியில் நிறைய வேலைவாய்ப்புகளை இவர் ஏற்படுத்திக் கொடுத்தார். ஏராளமான குடும்பங்கள் இவரால் வாழ்வு பெற்றன. மதுரை வங்கியின் வளர்ச்சி வரலாற்றில் இவரது பணி குறிப்பிடத்தக்கதாகும்.

கிலுக்கி எடுப்பு

புரட்டாசி மாதம் அமாவாசை நாளில் தொடங்கிப் பத்து நாட்கள் இந்தியா முழுவதும் விசயதசமி என்றும், தசரா என்றும் கொண்டாடுகிறார்கள். இந்தப் பத்து நாட்கள் விழா செட்டிநாட்டுப் பகுதியில் நவராத்திரி விழாவாக நடைபெறுகிறது. இவ்விழாவின் தொடக்க நாளைக் 'கிலுக்கியெடுப்பு' என்றும், இறுதி நாளை 'மகார்நோன்பு' என்றும் நகரத்தார் குடும்பத்தினர் கொண்டாடுவது மரபு.

மகார் நோன்பு அன்று ஊர்ப்பொது இடத்தில், ஒரு திடலில், அவ்வூர் ஆலயத்திலிருந்து சாமி எழுந்தருளி அம்பு போடும். அதனைத் தொடர்ந்து அங்கு கட்டப்பெற்றுள்ள வாழை மரத்தில் நகரத்தார் குடும்பங்களைச் சேர்ந்த ஆண் பிள்ளைகள் 'அம்பு போடுதல்' எனச் சொல்லி, ஓர் ஆயுதத்தால் குத்துவார்கள். அந்த ஆயுதத்திற்குக் 'கிலுக்கி' என்பது பெயர்.

இந்தக் 'கிலுக்கி' வெள்ளியில் அல்லது எவர்சில்வரில் செய்யப்பெற்று நகரத்தார் குடும்பங்கள் தோறும் இருக்கும். தொடக்கத்தில் இது மரக்கிலுக்கியாக இருந்திருக்கிறது. அப்போது அதற்கு பட்டுக்குஞ்சம் கட்டும் வழக்கமும் இருந்திருக்கிறது. மகார் நோன்பு விழா தொடங்கும் நாளில் குடும்பத்தில் உள்ள ஆண்பிள்ளைகள் கையில் இந்த ஆயுதத்தை எடுத்துக் கொண்டு சென்று கோவிலில் வழிபட்டுத் திரும்புவர். இவ்விழாவிற்குக் 'கிலுக்கியெடுப்பு' என்பது பெயர்.

கீழச்சிவல்பட்டி

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து குன்றக்குடி, நேமம் வழியாக 24 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், சூரக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய ஏழு கோவில்களைச் சேர்ந்த 500 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இது, திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இவ்வூருக்கும் பி.அளகாபுரிக்கும் பொதுவான அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் நகரச் சிவன்கோவிலாகும். இக்கோவிலுக்கு 21–10–1877, 20–4.–1970, 8–9–1994 ஆகிய நாட்களில் திருக் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. இக்கோவிற் சிறப்பை ஒட்டிக் கீழச்சிவல்பட்டியைச் சிறுமதுரை என்றும் அழைப்பர். நகரத்தார் பொதுவில் கட்டப்பட்டுச் சிவன்கோவில் நிருவாகத்தில் இருந்துவரும் மாரியம்மன் கோவிலுக்கு 27–1–1989இல் முதற்குடமுழுக்கு விழா நடைபெற்றது. சுந்தரராசப் பெருமாள் கோவில் வெ.கரு. குடும்பத்தாருக்குச் சொந்தமானதாகும். கல்லுக்கட்டி, சிவகங்கை, சந்தைப்பேட்டை ஊருணி ஆகிய மூன்று குளங்கள் இவ்வூரில் உள்ளன.

சூரக்குடி நகரத்தார் ஆண்டுதோறும் ஆடிமாதம் வியாழன், வெள்ளிக் கிழமைகளில் அழகாத்தாள் கோவில் வீட்டில் அழகாத்தாள் படைப்புப் படைக்கின்றனர். மகேசுவர பூசையும் இதில் உண்டு. மகேசுவர பூசைக்காக வேல்முருகன் அலங்கார மண்டபம் இக்கோவில் வீட்டில் கட்டப் பெற்றுள்ளது. கீழச்சிவல்பட்டி, பி. அளகாபுரி, தேவகோட்டை, கண்டனூர், புதுவயல், க. அளகாபுரி ஊர்களைச் சேர்ந்த வைரவன் கோவில் பங்காளிகள் மூன்றாண்டுகட்கு ஒருமுறை மாசி மாத முதல் வெள்ளியில் ஆண்டாத்தாள் படைப்புப் படைக்கின்றனர். மாத்தூர் கோவிலாரால் மாசி மாத வளர்பிறை வெள்ளியில் கண்ணத்தாள் படைப்புப் படைக்கப்படுகின்றது. ஆடிமாதம் முதல் திங்கட்கிழமையன்று வைரவன் கோவில் நகரத்தார் மாங்கல்யகாரிப் படைப்புப் படைக் கின்றனர். நேமங்கோவில் நகரத்தார் ஆடிமாதக் கடைசி வெள்ளியில் மாங்கல்யகாரிப் படைப்புப் படைத்து வருகின்றனர். சிறுகூடற்பட்டிப் பங்காளிகளோடு சேர்ந்து கீழ்ச்சிவல்பட்டிப் பிள்ளையார்பட்டிக் கோவிலாரில் ஒரு பிரிவினர் நாகம்மாள் செங்கிடாய்க் கருப்பர் படைப்பை மாசி மாதத்தில் படைத்து வருகின்றனர். மாத்தூர் நகரத்தார் கி.ப.கா, கி.பழ.கி. இருவகையினரும்

Koviloor Digital Library

சேர்ந்து பழநியப்பய்யா படைப்புப் படைக்கின்றனர். வேலங்குடித் திருவிழா முடிந்தவுடன் வரும் திங்கள், புதன், வெள்ளியில் ஏதாவதொரு நாளில் இப்படைப்பு நடைபெறும்.

கீழச்சிவல்பட்டி பி. அளகாபுரித் தமிழ்மன்றம் 40 ஆண்டுகளாகத் தை மாதம் பொங்கலை ஒட்டித் தமிழர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. இலக்கிய நிகழ்ச்சிகளோடு உள்ளூர் இளைஞர்கள் பங்கு பெறும் நாடகம் இப்பகுதியின் கலைவளர்ச்சியையும் மக்கள் ஆர்வத்தையும் புலப்படுத்துகிறது. இவ்வூரைப்பற்றி 9 பிரபந்தங்கள் பாடப் பெற்றுள்ளன.

பாடுவார் முத்தப்பர் (த.க.) தோன்றிய இவ்வூரில் பாடுவார் முத்தப்பர் கோட்டம் (த.க.) அமைந்துள்ளது. ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் சஷ்டி நாளில் முத்தப்பய்யா குருபூசை இங்கு கொண்டாடப் பெறுகின்றது. எ.நா.மு. முத்தையாச் செட்டியார், லெ. அங்கப்ப செட்டியார், செ.வெ. ராம. வெள்ளையஞ் செட்டியார் ஆகியோரது வீடுகளில் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப்பெறும்.

கீழச்சிவல்பட்டி பி. அளகாபுரி நகரத்தார் பொதுவான ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கலாசாலை 1923இல் தொடக்கப் பள்ளியாகத் தொடங்கப்பெற்று 1928இல் உயர் தொடக்கப் பள்ளியாகி 1949இல் உயர்நிலைப் பள்ளியாக உயர்வு பெற்று 1981 முதல் மீனாட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப் பள்ளியாக இப்போது நடைபெற்று வருகிறது.

இவ்வூரினரான வைரவன் கோவில் சொ. மாணிக்கம் செட்டியார், இளையாத்தங்குடி சுகரு. சோம. சொ. சொக்கலிங்கம் செட்டியார் ஆகியோர் இ.தே. ரா.வில் பணியாற்றியுள்ளனர். எ.நா.மு.நா. குடும்பத்தாரும் சித.மு.ராம.மு. குடும்பத்தாரும் தண்ணீர்ப் பந்தல் வைத்துத் தருமம் செய்து வருகின்றனர். இவ்வூரில் எ.நா.வீடு. இடிதாங்கி வீடு, தாக்ளா வீடு, மு.லெ. வீடு, ஐந்துவீடு ஆகிய வீடுகள் காண்பார் கண்ணைக் கவரும் கலையழகு மிக்க வீடுகளாகும்.

கீழப்பூங்குடி

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், செம்பனூர், சொக்கநாதபுரம், மதகுபட்டி, ஒக்கூர் வழியாக 40 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், இலுப்பைக்குடி ஆகிய மூன்று நகரக்கோவில்களைச் சேர்ந்த 117 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் என்ற சிவன் கோவில் இவ்வூர் கூராண்டான் செட்டியார், தீர்த்தப்ப செட்டியார் வகையினரால் 1870இல் கட்டி முடிக்கப் பெற்றுக் குடமுழுக்குச் செய்யப் பெற்றது. 1932இல் திருக்குட நன்னீராட்டு நிகழ்ந்தது. இப்போது இக்கோவில் கூராண்டான் வகையினரின் நிருவாகத்தில் இருந்து வருகிறது. இங்கு நவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

தீர்த்தப்ப செட்டியார் வகையினர் நிருவாகத்தில் சின்ன ஊருணியும், அதன் மேல்புறத்தில் அவர்களால் கட்டப் பெற்ற பிள்ளையார் கோவிலும் உள. இதே ஊருணியின் வடகரையில் இவ்வூர் இராம.நா. குடும்பத்தார் சித்தி விநாயகர் கோவில் கட்டி 1935இல் குடமுழுக்குச் செய்து இன்றும் நிருவகித்து வருகின்றனர்.

கூ.அரு.க., கூ.அரு.சித., கூ. அரு.சொ., கூ. கண. நா.சொ., கூ. கண.க., கூ. கண.வெ.சித. ஆகிய 6 குடும்பத்தினர் சேர்ந்து புதூருணி செல்வ விநாயகர் கோவில் என்ற கோவிலைக் கட்டி நிருவகித்து வருகின்றனர்.

இவ்வூரில் திருவருட் சமாதி கொண்ட மிளகாய்ச் சாமிக்கு ஒரு நினைவாலயம் எழுப்பப்பட்டு, கூராண்டான் வகையினரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இம்மடத்தில் ஆண்டுதோறும் சித்திரைமாதம் கடை ஞாயிறன்று குருபூசையும் அன்னதானமும் நிகழ்ந்து வருகிறது. இம் மிளகாய்ச் சாமியின் வரலாறு உரைநடை வடிவிலும் செய்யுள் வடிவிலும் 1931இல் நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளது.

இவ்வூரில் அரசினர் உயர்நிலைப்பள்ளி 1961 முதல் நகரத்தாருக்குச் சொந்தமான மிளகாய்ச் சாமி மடவிடுதியில் வாடகை இல்லாமல் நடந்து வந்தது. பின்னர் இதற்குத் தனிக் கட்டிடம் கட்ட இவ்வூரைச் சேர்ந்த கண.வேதாம்பாள் ஆச்சி 2 ஏக்கர் மனையிடமும், நிதி உதவியும் அளித்தார். அக்கட்டிடத்தில் 1993முதல் அரசினர் மேல்நிலைப்பள்ளி நடைபெற்று வருகிறது.

இவ்வூர் கூ.அரு.க. குடும்பத்தார் நிலமும், கட்டிடமும் நன்கொடை அளிக்க அங்கு அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம், தாய்சேய் நல விடுதி ஆகியவை நடந்து வருகின்றன.

இவ்வூர் கூ.க.வயி.மகள் விசாலாட்சி ஆச்சியால் நன்கொடையாக வழங்கப்பெற்ற கட்டிடத்தில் அரசினர் தொடக்கப்பள்ளி நடைபெற்று வருகிறது.

இவ்வூரிலும் பிள்ளையார் நோன்பன்று நகரத்தார் பொதுவாக இழையெடுத்துக் கொள்ளும் மரபு உள்ளது.

Koviloor Digital Library

இவ்வூர் கூ.க.அரு. குடும்பத்தாரால் கடந்த 100 ஆண்டுகட்கும் மேலாக மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மேலஆடி வீதியில் ஒரு பசுமடம் நடத்தப்பட்டு வருகிறது. கும.சுப.சு.சொ. குடும்பத்தினர் மேலூருக்கு அருகில் உள்ள கோட்டனத்தம்பட்டியில் ஒரு பிள்ளையார் கோவில் கட்டியுள்ளனர்.

இவ்வூர் கூ.கண. குடும்பத்தார் இவ்வூருக்கு அருகே உள்ள கள்ளராதினிப்பட்டி என்ற சிற்றூரில் குடிதண்ணீர் ஊருணி அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இவ்வூர் கூஅருக., கூகணக., கூகண. நா.சொ., ஆகிய குடும்பத்தினர் சேர்ந்து சோழபுரத்தில் யசுர்வேத பாடசாலை ஒன்று நடத்திவந்தனர். இப்போதும் அக்கட்டிடம் இவர்கள் பொறுப்பில் உளது. இவை இவ்வூர் நகரத்தாரின் குறிப்பிடத்தக்க சில அறப்பணிகளாம்.

குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகள்

ஒரு குழந்தை தாய் வயிற்றில் கருவானதிலிருந்து, அக்குழந்தை, பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, மறையும் வரை, ஏன், மறைந்த பின்னும் கூட அது தொடர்பான சிறப்பு நிகழ்ச்சிகள் குடும்பங்களில் நிகழ்வது என்பது சமூக இயல்பு. நகரத்தார் சமூகத்தில் இவ்வாறான சிறப்பு நிகழ்ச்சிகளைப் பிறப்பு முதல் இறப்பு வரை வரிசைப் படுத்தித் தருகிறது இக்கட்டுரை. இவற்றுள் பெரும்பாலான வற்றிற்கு அவற்றின் உட்பொருள், நடைமுறை ஆகியவற்றை விளக்கும் தனிக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஆகவே, ஒரே மனிதனின் வாழ்க்கையில் இவை எந்த வரிசை முறையில் எவ்வெப்போது நிகழ்கின்றன என்பதே இங்கு சிறப்பிடம் பெறுகிறது.

தீர்த்தம் அல்லது மருந்து குடித்தல் : தாயின் வயிற்றில் கரு உருவாகும் போது, அது அத்தாயின் முதற் கருவாக இருந்தால், குழந்தை கருவில் இருக்கும் பொழுதே அது தொடர்பான குடும்பச்சிறப்பு நிகழ்ச்சிகள்,நகரத்தார் சமூகத்தில் தொடங்கிவிடுகின்றன. அந்தந்தக் குடும்பத்தின் பழக்கத்திற்கேற்ப, முதன் முறையாகக் கருவுற்ற நிலையில் கருவின் ஐந்தாவது அல்லது ஏழாவது திங்களில் தாய் தீர்த்தம் அல்லது மருந்து குடிப்பாள் (பார்க்க. தீர்த்தம் குடித்தல்).

பிள்ளை பெறக் கூட்டுதல் : கரு இன்னும் சிறிது வளர்ந்தபிறகு அதன் ஏழு அல்லது ஒன்பதாவது திங்களில், கருவுற்ற தாயை அவளது தாய்வீட்டார் பிள்ளைபெற அழைத்துச் செல்வர். இதுவும், பிறக்கப்போவது தலைப்பிள்ளையாயின், ஓரளவு சிறப்பு விழாவாக நிகழும். இல்லையேல், கருவுற்ற தாயின் பெற்றோர் மட்டும் அவள் வீட்டிற்கு வந்து அவளை அழைத்துச் செல்வர். இரண்டு அல்லது மூன்று குழந்தைகட்குப் பின்னர், இச்சடங்கு நிகழாமல், கருவுற்ற தாய், பிள்ளைப்பேற்றைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொள்வதும் உண்டு.

பேறு சொல்லல் – கேட்டல் : பிள்ளை பிறந்தவுடன், பிள்ளையின் ஆயாள் வீட்டினர் தம் உறவினர், பங்காளிகட்குத் தம் வீட்டில் மிட்டாய்த் தட்டு வைத்துப் பேறு சொல்வர். அவர்கள் வந்து பேறு கேட்டுச் செல்வர். பிள்ளையின் அப்பத்தாள் வீட்டினர் தம் உறவினர், பங்காளிகட்குத் தம் வீட்டில் மிட்டாய்த்தட்டு வைத்துப் பேறு சொல்வர். அவர்கள் வந்து கேட்டுச் செல்வர். இந்நிகழ்ச்சியும் தலைப்பிள்ளை என்றால் மிகச் சிறப்பாக நிகழும். அடுத்தடுத்த பிள்ளைகட்கும், சிறப்பாக இல்லையெனினும், இயல்பாக நிகழும். (பார்க்க : பேறு கேட்டல்).

பிள்ளை பார்க்க வருதல் : பிறந்தது தலைக் குழந்தையாக இருப்பின், பிள்ளையின் அப்பத்தாள் வீட்டினர், தமக்கு மிக நெருங்கிய உறவினர் சிலரை அழைத்துக் கொண்டு பிள்ளையைப் பார்ப்பதற்காக, பிள்ளையின் ஆயாள் வீட்டிற்கு வருவர். அவர்கட்கு அங்கே விருந்து நடைபெறும்.

பிள்ளையை அழைத்துச் செல்லுதல் : பிள்ளை பிறந்து ஒரு திங்கள் ஆனதும், பிள்ளையையும், தாயையும் ஆயாள் வீட்டிலிருந்து அப்பத்தாள் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். பிறந்தது தலைப்பிள்ளையாக இருப்பின், இதுவும் சிறப்பான நிகழ்ச்சியாக, இருபக்கத்திலும் நெருங்கிய உறவினர்கள் அழைக்கப்பட்டு, விருந்து முதலியவற்றோடு நிகழும். அடுத்தடுத்த பிள்ளைகளாயின், பிள்ளை ஆயாள் வீட்டில் பிறந்திருந்தால், இந்நிகழ்ச்சி நடைபெறும். ஆனாலும் சிறப்பு நிகழ்ச்சியாக இராது.

பிள்ளைக்குக் காது குத்துதல் : பிள்ளை பிறந்து பதினாறாவது அல்லது இருபத்தோராவது நாளில் அதற்குக் காது குத்தித் தோடு அணிவிக்கப்பெறும். எனவே பெரும்பாலும் இந்நிகழ்ச்சி ஆயாள் வீட்டில் நிகழும். ஆயினும் நகரத்தார் சமூகத்தைப் பொறுத்தவரை இதற்கு உறவினர்களோ, பங்காளிகளோ அழைக்கப்பெறுவதில்லை. இது ஒரு சடங்காக நிகழுமே தவிர, ஒரு சிறப்பு விழாவாக நிகழ்வதில்லை.

பெயர் வைத்தல் : பிள்ளைக்குப் பெயர் வைப்பது, வெளியாரை அழைத்து விழாவாக நடத்தப் பெறுவதில்லை. ஆயினும் ஒரு சடங்காக அந்தந்தக் குடும்ப மரபிற்கேற்ப நடத்தப் பெறுகிறது. சிலர் குலதெய்வக் கோவிலுக்குப் பிள்ளையைக் கொண்டு சென்று அங்கே அர்ச்சகரால் முதன் முதலில் பெயர் சொல்லிக் கூப்பிடச் செய்வர். பெரும்பாலானவர்கள் தம்

Koviloor Digital Library

இல்லத்திலேயே, குடும்பப் பெரியவரால் பெயர் சொல்லி அழைக்கச் செய்வர். இச்சடங்கு பெரும்பாலும் முப்பதாவது நாள் நடைபெறும்.

முதல் முடி எடுத்தல் : அந்தந்தக் குடும்பத்தின் பழக்கத்திற்கு ஏற்ப, பிள்ளை பிறந்து ஒரு திங்கள் அல்லது ஆறு திங்கள் அல்லது ஓராண்டு முடிந்ததும் பிள்ளைக்கு முதல் முறையாக முடி எடுப்பார்கள். இது நிகழும் இடமும் அக்குடும்பப் பழக்கத்தைப் பொறுத்ததே. குலதெய்வக் கோவிலில், உள்ளூர்க் கோவிலில், அல்லது குறிப்பிட்ட ஏதோ ஒரு கோவிலில் என இது நிகழும். இந்நிகழ்ச்சிக்கும் உறவினர், பங்காளிகள் அழைக்கப்பெறுதல் இல்லை.

தொட்டில் கட்டுதல் : நகரத்தார் வாழும் ஊர்களிலெல்லாம் கோவில் திருவிழாக்களில் பிள்ளைகளுக்குத் தொட்டில் கட்டுதல் என்பது ஒரு சிறப்பு நிகழ்ச்சி. பணியாளர்கள் கரும்பைத் தூக்கிக் கொள்ள, அக்கரும்பில் சேலைபோட்டுத் தொட்டில் கட்டப்பெறும். அத்தொட்டிலில் பிள்ளையைப் போட்டு, தொட்டிலைத் தூக்கிக் கொண்டு, மேளதாளத்துடன் கோவிலை வலம் வருவது இந்நிகழ்ச்சி ஆகும். பிள்ளையின் அப்பத்தாள் ஊர்த் திருவிழா, ஆயாள் ஊர்த் திருவிழாக்களில் இந்நிகழ்ச்சி நிகழ்வதோடு, அக்குடும்பத்தினரின் வேண்டுதல்களைப் பொறுத்து, வேறு பல ஊர்களிலும் கூட இது நிகழலாம். இதுவும் விருந்து வைத்து நடத்தப்பெறும் விழாவன்று.

விளையாட்டுப் பெட்டி வேவு : இது தலைப் பிள்ளைக்கு மட்டுமே நிகழும் ஒரு சிறப்பு நிகழ்ச்சி. தலைப்பிள்ளை பிறந்து சில திங்கள்கட்குப் பிறகு, ஆயாள் வீட்டினர், நெருங்கிய உறவினர்கள், பங்காளிகளோடு, அப்பத்தாள் வீட்டிற்கு வந்து, விளையாட்டுப்பெட்டி வேவு எடுப்பர். அப்பத்தாள் வீட்டிலும் நெருங்கிய உறவினர்கள், பங்காளிகள் அழைக்கப் பெற்றுக் குழுமியிருப்பர். அவர்கள் வேவு இறக்கிக் கொள்வர். (பார்க்க : வேவு)

புதுமை : பிள்ளை தலைப்பிள்ளையாக இருந்தால், அதன் முதலாண்டு நிறைவு நாள், புதுமை என்ற பெயரோடு ஒரு சிறப்பான விழாவாகக் கொண்டாடப் பெற்று வந்தது. இப்போது இவ்விழா நிகழ்வதில்லை. (பார்க்க. புதுமை)

பிறந்த நாள் விழா : ஆயினும் ஆங்கில நாகரிகத் தாக்கத்தின் விளைவாக, பிறந்த நாள் விழா கொண்டாடுவது, இப்போது அனைத்துச் சமூகங்களிலும் ஒரு பழக்கமாக ஆகிவிட்டது. அந்த அடிப்படையில், நகரத்தார் சமூகத்திலும், தலைப்பிள்ளையின் முதலாண்டு நிறைவு நாள், ஓரளவு சிறப்பாக, உறவினர்கள், நண்பர்களை அழைத்துக் கொண்டாடப் பெறுகிறது என்பது உண்மை. தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளிலும், அடுத்தடுத்த பிள்ளைகட்கும் கூடப் பிறந்த நாட்கள் நினைவு கொள்ளப் பெற்று, புத்தாடை, மிட்டாய் முதலியவற்றோடு கொண்டாடப் பெற்றாலும், வெளியார் அழைக்கப்பெறுவதில்லை; விருந்து நிகழ்வதில்லை.

கிலுக்கி எடுத்தல் – அம்பு போடுதல் : பிறந்த பிள்ளை ஆண்பிள்ளையாக இருப்பின், அதன் இளமைக்காலம் முழுவதும் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம், மகார் நோன்பு விழாவின் தொடக்க நாளன்று கிலுக்கியெடுப்பும், இறுதி நாளன்று அம்பு போடுதலும் நடைபெறும். (பார்க்க : கிலுக்கியெடுப்பு).

கொப்பி கொட்டுதல் : பிறந்த பிள்ளை பெண் பிள்ளையாக இருப்பின், அதன் இளமைக் காலம் முழுவதும், ஆண்டுதோறும், தை மாதம் மாட்டுப் பொங்கலன்று, கொப்பி கொட்டுதல் நடைபெறும். (பார்க்க : கொப்பி கொட்டுதல்)

பள்ளியில் வைத்தல் : முற்காலத்தில் நகரத்தார் சமூகத்தில், பிள்ளைக்கு ஐந்து வயது நிறைந்தவுடன் பள்ளியில் வைத்தல் என்பது ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகவே நடைபெறும். புரட்டாசி மாதம், விசயதசமி அன்று, பிள்ளையைச் சேர்க்க நினைக்கும் பள்ளியிலிருந்து, ஆசிரியர், பிள்ளைகள் (இருபது, முப்பது பேர்கள்) ஆகியோரை வீட்டிற்கு அழைத்து வந்து, அவர்கட்குச் சிற்றுண்டி கொடுத்து, அவர்களோடு பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்புவர். பள்ளிப்பிள்ளைகள் வந்து கோலாட்டம், கும்மி என ஆடிப்பாடி ஊர்வலமாக அழைத்துச் செல்வர். பெற்றோரும், நெருங்கிய உறவினரும் கூடச் செல்வர். பள்ளியில் நெல் கொட்டி, அதில் ஆசிரியர், பிள்ளையின் கையைப் பிடித்து ‘அ’ எழுதிக் கல்வியைத் தொடங்கி வைப்பார். இது அக்கால மரபு. இப்போது மூன்றாவது ஆண்டு நிறைவில் பிள்ளைகள் மழலையர் பள்ளிக்கு அனுப்பப்பெற்று விடுவதால் இவ்விழாவிற்கு இப்போது வாய்ப்பே இல்லை.

கார்த்திகைப் புதுமை : பிறந்த பிள்ளை ஆண் பிள்ளையாக இருந்தால் அதன் இளமைப் பருவத்தில், கார்த்திகைத் திங்களில், சூப்பிடி என்ற பெயரில் இச்சிறப்பு நிகழ்ச்சி பெரிய விழாவாக முன்னர் நடத்தப் பெற்றது. (பார்க்க : கார்த்திகைப் புதுமை)

திருவாதிரை : பிறந்த பிள்ளை பெண் பிள்ளையாக இருந்தால் அதன் இளமைப் பருவத்தில், மார்கழித் திங்களில், திருவாதிரை விழா சிறப்பாக முன்னர் நடத்தப் பெற்றது (பார்க்க : திருவாதிரை)

Koviloor Digital Library

சடங்கு கழித்தல் : பிறந்த பிள்ளை பெண் பிள்ளையாக இருந்தால், அது வயதுக்கு வந்தவுடன், நிகழும் சிறப்பு நிகழ்ச்சி இது. (பார்க்க : சடங்கு கழித்தல்)

திருமணம் – பேசி முடித்துக் கொள்ளுதல் : பிறந்த பிள்ளை திருமண வயதை அடைந்தவுடன், திருமணம் முடிவு செய்யப்பெற்றதும், இச்சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும். (பார்க்க : பேசி முடித்துக் கொள்ளுதல்)

முகூர்த்தக் கால் ஊன்றுதல் : திருமணத்திற்குச் சில நாட்கள் முன்பு, வீட்டின் வளவு வாசலில், முகூர்த்தக் கால் ஊன்றப் பெறும். இந்நிகழ்ச்சி திருமணத்திற்கு மட்டுமின்றி, மணி விழா, பிறையாயிரம் கண்ட பெருவிழா ஆகிய வற்றுக்கும், அவை வீட்டில் நடத்தப் பெற்றால், உரிய ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும். (பார்க்க : கலியாணம்)

திருமணம் : அடுத்துத் திருமணம் மிகச் சிறப்பான விழாவாக நிகழும் (பார்க்க : கலியாணம்)

மாம வேவு : திருமணம் நிகழும் மாப்பிள்ளை, பெண் இருவரில் யாராவது தலைப்பிள்ளையாக இருந்தால் அப்பிள்ளையின் ஆயாள் வீட்டினர் மாமவேவு எடுப்பர். (பார்க்க : வேவு)

காய்ச்சி ஊற்றுதல் : திருமணம் நிகழ்ந்த மணமக்களில், மாப்பிள்ளையின் ஆயாள் வீட்டினர் மாப்பிள்ளையின் தாய் வீட்டிற்கும், பெண்ணின் ஆயாள் வீட்டினர் பெண்ணின் தாய் வீட்டிற்கும் காய்ச்சி ஊற்றுவர். (பார்க்க : காய்ச்சி ஊற்றுதல்)

பழந்தேங்காய் கொடுத்தல் : திருமணம் நிகழ்ந்த பின், மாப்பிள்ளையின் ஊரில் அல்லது பெண்ணின் ஊரில் கோவிலில் செவ்வாய் எனப்படும் தேர்த்திருவிழா நிகழும் போது, பெண்ணின் தாய் வீட்டினர் பிள்ளையின் தாய் வீட்டினருக்குப் பழமும், தேங்காயும் கொடுத்து, விருந்து நிகழ்த்திச் சிறப்பிப்பர். (பார்க்க : பழந்தேங்காய் கொடுத்தல்)

முதலாண்டு தீபாவளிக்கு வருதல் : திருமணம் நிகழ்ந்த பின் வரும் முதலாண்டு தீபாவளிக்கு, மணமக்களை, பெண்ணின் தாய் வீட்டினர் அழைத்து, அவர்களுக்குப் புத்தாடை முதலியன கொடுத்து, விருந்து வைத்துச் சிறப்பிப்பர். இது, பிற சமூகத்தினர், குறிப்பாக அந்தணர் தொடர்பால் ஏற்பட்ட நிகழ்ச்சி என்று தோன்றுகிறது.

பொங்கற்பானை கொடுத்தல் : திருமணம் நிகழ்ந்த பின் வரும் முதற்பொங்கலிலிருந்து ஆண்டு தோறும் பொங்கலை முன்னிட்டுத் தாய் வீட்டிலிருந்து பெண்ணுக்கு அளிக்கப்படும் சிறப்புச் சீர். (பார்க்க : பொங்கற் பானை கொடுத்தல்). இது நகரத்தார் சமூகத்தில் தொன்று தொட்டு வரும் தமிழ் மரபு தழுவிய சிறப்பு நிகழ்ச்சி ஆகும்.

வேறு வைத்தல் : திருமணம் நிகழ்ந்து ஓராண்டு முடிந்தவுடன், அல்லது சிறிது காலம் சென்றபின், புதுமணமக்களைத் தனிக் குடும்பமாக அமைப்பதற்காக ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும். முன்பெல்லாம் நெருங்கிய உறவினர்கள், பங்காளிகள் அழைக்கப்பெற்று ஒரு விழாவாக இது நிகழ்ந்தது. (பார்க்க : வேறு வைத்தல்)

திருமண நாள் : ஆங்கில நாகரிகத்தின் விளைவாக, அனைத்துச் சமூகத்தாரிடமும் ஏற்பட்டிருக்கும் ஒரு பழக்கம், ஆண்டு தோறும் திருமண நாளைக் கொண்டாடுவது. இது, இப்போது நகரத்தார் சமூகத்திலும் கொண்டாடப் பெறுகிறது. ஆயினும் வெளியாரை அழைத்து விருந்து வைத்துப் பெரிய விழாவாகக் கொண்டாடுவது இல்லை.

ஐம்பத்தொன்பது சாந்தி : தாயின் வயிற்றில் கருவாக உருவானதிலிருந்து திருமணம் வரை ஒருவரது வாழ்வில், நகரத்தார் சமூகத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. ஆனால் திருமணத்திற்குப் பின், அவருக்குப் பிள்ளை உருவானது முதல் சிறப்பு நிகழ்ச்சிகள் அப் பிள்ளையை மையம் கொண்டனவாக மறுபடி தீர்த்தம் குடித்தலில் தொடங்கி நிகழுவதே இயல்பு. இச்சூழலில், வரிசையாகச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்த ஒருவரது வாழ்வில், மீண்டும் அவரை மையமாகக் கொண்டு நிகழும் சிறப்பு நிகழ்ச்சி ஐம்பத்தொன்பது சாந்தியாகும். அந்த ஒருவர் ஆணாயின் அவரது ஐம்பத்தொன்பதாவதாண்டு நிறைவு நாளன்றும், பெண்ணாயின் அவர் கணவரது ஐம்பத்தொன்பதாவதாண்டு நிறைவு நாளன்றும் இவ்விழா நிகழும். (பார்க்க : ஐம்பத்தொன்பது சாந்தி).

மணி விழா : ஐம்பத்தொன்பது சாந்தி செய்து கொண்டவரின் அறுபதாம் ஆண்டு நிறைவு நாளன்று நடைபெறுவது மணிவிழா எனப்படும், சாந்திக் கலியாணம். (பார்க்க : சாந்திக் கலியாணம்).

பீமரத சாந்தி : மணிவிழாக் கண்டவரின் எழுபதாவதாண்டு நிறைவு நாளைக் கொண்டாடும் விழா. இதனைப் பெரும் விழாவாகக் கொண்டாடுபவர்களும் உண்டு; கொண்டாடாதவர்களும் உண்டு. இவ்விழா ஏறத்தாழ மணிவிழாவின் நடைமுறை களுடனேயே கொண்டாடப்பெறும்.

பிறையாயிரம் கண்ட பெருவிழா : பீமரத சாந்தி செய்து கொண்டவருக்கு 82 ஆண்டுகள் நிறையும் போது, 1008 மூன்றாம் பிறை நாட்கள் அவர், வாழ்வில் எப்போது கடக்கின்றன எனக்

Koviloor Digital Library

கணக்கிட்டு, அது கடந்த உடன் நிகழ்த்தப்படும் இவ்விழாவைச் சதாபிஷேகம் என்பர். (பார்க்க : சதாபிஷேகம்).

தாலி கொண்டு வருதல் : ஐம்பத்தொன்பது சாந்தி, பீமரத சாந்தி, சதாபிஷேகம் ஆகிய விழாக்களில் ஒன்றை ஒரு குடும்பத்தினர் கொண்டாடினால், அவ்விழா நாயகியாகிய ஆச்சியின் தாய் வீட்டினர், சீராக, பொற்றாலி, புத்தாடை முதலியவற்றைக் கொண்டு வந்து கொடுப்பது நகரத்தார் சமூக மரபு. மேலே சுட்டப்பெற்ற நான்கு விழாக்களிலும், இச் சிறப்பு நிகழ்ச்சி இணைந்ததாகும்.

இழவு கூட்டுதல் : வாழ்ந்து சிறந்த போது குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்தது போல, ஒருவர் இறந்தாலும், சமூகம் பங்கு கொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவது நகரத்தார் மரபு. அதனை இழவு கூட்டுதல் என்பர். (பார்க்க : இழவு கூட்டுதல்).

தலைத் திதி : ஒருவர் இறந்து ஓராண்டு நிறைவெய்தியதும், அவரது நினைவு நாள், குறிப்பிட்ட தமிழ் மாதம், குறிப்பிட்ட திதியன்று கொண்டாடப் பெறும். இதனைத் தலைத் திவசம் அல்லது தலைத்திதி என்பர். இந்தத் திவசம், அல்லது திதி பின்னரும் ஆண்டு தோறும் குறிப்பிட்ட மாதம், திதியில் நிகழும். ஆனால் தலைத்திதி உறவினர், பங்காளிகளையெல்லாம் அழைத்து, அவர்கட்கு விருந்தளித்து விழாவாக நிகழும். பின்னர் இறந்தவரின் மக்கள் மட்டும் ஆண்டுதோறும் திதி கொடுப்பர். (பார்க்க : திதி கொடுத்தல்).

படைத்தல் : இறந்தவருள் சிலர், அவர் தம் வழி முறையினரால் தெய்வமாக ஏற்றுக் கொள்ளப் பெறுவர். பின்னர் அத்தெய்வத்தை வழிபடுவதற்காகப் படைப்பு நிகழ்த்துவர். இது இறந்தவர் நினைவாக நடைபெறும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும். (பார்க்க : வீட்டுப் படைப்பு).

குமரப்பன், சே., (14-2-1949)

இளையாத்தங்குடி - கழனிவாசற்குடி
கண்டவராயன்பட்டி
அறிவொளி இயக்க ஒருங்கிணைப்பாளர்

நா.சொ. சேதுராமன் செட்டியார் – தெய்வானை ஆச்சியின் மகன். விலங்கியல் துறையில் எம்.எஸ்ஸி. பட்டம் பெற்றுத் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் கடந்த 20 ஆண்டுகட்கும் மேலாகப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இப்போது விலங்கியல் துறைத் தலைவராக இருக்கிறார்.

கல்வியறிவற்றவர்கட்குக் கல்வியறிவு உண்டாக்க, கேரளத்தின் அடிச்சுவட்டில், தமிழ்நாட்டில் 'அறிவொளி இயக்கம்' தொடங்கப் பட்ட போது, சிவகங்கை மாவட்ட அறிவொளி இயக்க ஒருங்கிணைப்பாளராக இவர் பொறுப்பு ஏற்றார்.

பொதுப்பணியில் ஆர்வம் மிக்க இவர், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தில் (மூட்டா) பல்வேறு பொறுப்புக்களிலும், ஆசிரியர் – அரசு ஊழியர் கூட்டமைப்பில் (ஜேக்டீ) பல்வேறு பொறுப்புக்களிலும் இருந்து திறம்படச் செயலாற்றியவர்; செயலாற்றி வருபவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவையிலும் (செனட்) உறுப்பினராக இருந்தார்.

விலங்கியல் துறையில் வேறு மூன்று பேராசிரியர்களுடன் இணைந்து இவர் எழுதியிருக்கும் நூல் மகா. பல்கலைக்கழகத்தில் பாடநூலாகப் பயன்படுகிறது.

அறிவொளி இயக்கத்தில் இவரது தொண்டும், பணியும் போற்றத் தக்கவை. தமிழ் நாட்டில், முதன் முதலில் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக சிவகங்கை மாவட்டம் உருவாகக் காரணமாக அமைந்த முன்னோடிகளில் இவர் ஒருவர். அறிவொளி இயக்கக் கற்போருக்கான கையேடுகள், பாடநூல்கள் பலவற்றை இவர் உருவாக்கியுள்ளார். இவை இப்போது தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பின்பற்றப்படுகின்றன.

மாநில அளவிலும், தேசிய அளவிலும் அறிவொளி இயக்க மாநாடுகள் பலவற்றில் கலந்து கொண்டு கருத்துத் தாள்கள், கட்டுரைகள் வழங்கி உரையாற்றியுள்ளார். 'தினத்தந்தி' நாளிதழில் வளர்கல்வி இயக்கத்திற்காக 'அறிவொளிப் பூங்கா' எனும் பகுதியில் தொடர்ந்து எழுதி வருகிறார். வானொலி, தொலைக்காட்சியிலும் அறிவொளி இயக்கத் தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

பொதுவாகக் கல்வித்துறையில் நகரத்தார் பெரும்பணி ஆற்றியவர்கள் என்பது வரலாற்றுண்மை. எழுத்தறிவு பெறாத பாமர மக்கள் அறிவொளி பெறத் தொடங்கப்பெற்ற இயக்கத்திலும் நகரத்தார் சமூகத்தின் பங்கு சிறப்பானது என்பதை இவர் சேவையால் அறியலாம்.

Koviloor Digital Library

குமரன் (மாத இதழ்)

இப்பெயரில் மாத இதழொன்று 1922 இல் தொடங்கப்பட்டுச் சில ஆண்டுகள் காரைக்குடியிலிருந்து வெளிவந்தது. சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா, தனவைசிய ஊழியர் சங்கத்தோடு கருத்து வேறுபாடு கொண்ட காலத்தில், 17–3–1922 இல் 'காரைச் சிவனடியார் திருக் கூட்டம்' என்ற அமைப்பைத் தொடங்கினார். இவ்வமைப்பின் சார்பில், அமைப்பின் தலைவராகிய சொ. முருகப்பாவையே ஆசிரியராகக் கொண்டு 'குமரன்' மாத இதழ் துந்துபி ஆண்டு வைகாசித் திங்கள் முதல் வெளிவரத் தொடங்கியது (மே, 1922).

இதன் தனி இதழ் விலை 4 அணா (25 காசுகள்). ஆண்டுச் சந்தா ரூபாய் மூன்று.

இவ்விதழ் முற்றிலும் இலக்கிய இதழாக, தமிழறிஞர் பலரின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது. தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் 'முருகன் அல்லது அழகு' இவ்விதழின் முதல் மாத இதழில் வெளியான கட்டுரையின் நூல்வடிவமே ஆகும்.

குமரன் (வார இதழ்)

இப்பெயரில் வார இதழொன்று 1923 இலிருந்து தொடர்ந்து 25 ஆண்டுகள் காரைக்குடியிலிருந்து வெளிவந்தது. சொ. முருகப்பா தாமே ஆசிரியராக இருந்து, இவ்விதழை வெளியிட்டார். 22–8–1923 இல் முதல் இதழ் வெளிவந்தது. புதன் கிழமைதோறும் எனத் தொடக்கத்திலும், பின்னர் 1926 இலிருந்து வியாழக்கிழமை தோறும் என்றும் வெளிவந்தது. தொடக்கத்தில் முழுத்தாள் அளவில் (Foolscap) வெளியான இவ்விதழ், 1926 இலிருந்து இன்றைய செய்தித்தாள் அளவில் (டெம்மி) வெளிவந்தது.



குமரன் முகப்புப் பக்கம்

தொடங்கும் போது தனி இதழ் விலை 1½ அணா (9காசுகள்). ஆண்டுச் சந்தா ரூ. 4. 1926இல் தனி இதழ் விலை 2 அணா (12 காசுகள்) வாகவும், ஆண்டுச் சந்தா ரூ 5 ஆகவும் உயர்ந்தது.

முதல் இதழில் ''சமூக வளர்ச்சியொரு கண்ணும், சமய வளர்ச்சியொரு கண்ணுமாகவே குமரன் கருதி ஊழியம் புரிந்து வருவான்'' என்றும், ''தேசீய விஷயங்களுள் மிகச் சிறந்ததான கதரியக்கத்தில் முற்றும் கலந்துழைப்பதும், சமய வழியில் அஹிம்சா தருமத்தையே கண்மணியாகக் கருதியுழைப்பதும் குமரனது நோக்கங்களாகும்'' என்றும் குறிப்பிட்டுள்ளார் இதன் ஆசிரியர்.

முதல் இரு ஆண்டுகள் வெளியான இதழ்களின் முதற் பக்கத்தில்

''என் கடன் பணி செய்து கிடப்பதே''

நாட்டுக்கோட்டை செட்டியாரின் நலங்கருதி உழைப்பது

''ஆலயந் தொழுவது சாலவும் நன்று''

''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு''

எனும் குறிக்கோள் தொடர்கள் காணப்பெற்றன. 1926 இல், இவற்றுக்குப் பதிலாக, 'கதரே உயிர்' 'கருணையே தெய்வம்' என்ற தொடர்கள் இடம் பெற்றன. 1930 இலிருந்து, இவையும் இடம் பெறாமல், இவற்றுக்குப் பதிலாக

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்ற குறட்பாக்கள் இடம் பெற்றன.

இவை ஆசிரியரின் கொள்கை மாற்றப் போக்குகளையும், அவற்றின் விளைவான, இதழின் பணி நோக்கில் நிகழ்ந்த மாற்றங்களையும் குறிப்பன. தொடக்கத்தில் நகரத்தார் சமூக சீர்திருத்தத்திற்காகவே முருகப்பா இவ்விதழைத் தொடங்கினார் என்றாலும், பின்னர் அவருக்குப் பெரியார் ஈ.வெ.ரா. வுடன் தொடர்பு ஏற்பட்டு, அவர் சுயமரியாதை இயக்கத் தலைவரான பிறகு, குமரனையும் சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்பப் பயன்படுத்தத் தொடங்கினார் என்பதையே இம்முதற் பக்கக் குறிக்கோள் தொடர் மாற்றங்கள் புலப்படுத்தும்.

Koviloor Digital Library

குமரன் மாத இதழ் நிறுத்தப்பட்ட பிறகு, இலக்கியக் கட்டுரைகளும் வார இதழிலேயே இடம் பெறத் தொடங்கின. பாரதியாரது கவிதைகளையும், கட்டுரைகளையும் குமரன் வெளியிட்டது. மற்றும், திரு.வி.க., இரா.பி. சேதுப்பிள்ளை, விபுலானந்த அடிகள், டி.கே.சிதம்பரநாத முதலியார் போன்றோரின் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்கள் முதலில் பத்திரிகையில் வெளிவந்தது சொ. முருகப்பா அவர்களது பத்திரிகையான குமரனில்தான். "ஆசியஜோதி நூலை வெளியிடத் தூண்டி, அதற்கான ஆங்கில முதல் நூலை எனக்கனுப்பி ஊக்குவித்தவர்களும் அவர்களே" எனக் கவிமணி குறிப்பிடுகிறார்.

ஈற்றடி கொடுத்து வெண்பா எழுதச் சொல்லும் வெண்பாப் போட்டியை நடத்தி, செட்டிநாட்டில் கவிஞர்கள் பலரை உருவாக்கியது குமரன் இதழே. இவ்விதழில் பணியாற்றிய பலர் பின்னாளில் தமிழகத்தில் இதழியல் துறையிலும், எழுத்துலகிலும் பெரும்புகழ் பெற்றனர். பி.ஸ்ரீ., திரைப்பட இயக்குநர், ப. நீலகண்டன், 'பொன்னி' இதழைப் பின்னாளில் நடத்திய முருகு. சுப்பிரமணியம் போன்றோர் குமரனில் உதவி ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களே.

இவ்வளவு சிறப்பாக இவ்விதழ் வெளிவந்ததற்கு இன்றியமையாத காரணம், 'குமரன் தான் முருகப்பா, முருகப்பாதான் குமரன்' எனக் கருது மளவு ஆசிரியர் சொ. முருகப்பா தம் இதழுடன் இரண்டறக் கலந்து இதழை நடத்தியதே ஆகும்.

ஏறத்தாழ ஒரே காலத்தில், காரைக்குடியிலிருந்து, 'ஊழியன்', 'குமரன்' என்ற இரண்டு இதழ்கள், பல இதழியல் உத்திகளைத் தமிழ் இதழியல் உலகிற்கு வழங்கி, தமிழ் இதழியலின் முன்னோடிகளாக, இரு நகரத்தார்களால் நடத்தப்பட்டு வெளிவந்தன என்பது நகரத்தார் வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட, பெருமை சேர்க்கும் உண்மையாகும்.

குமரிமலர்

'உலகம் சுற்றும் தமிழர்' எனச் சிறப்புப் பெற்ற தமிழ்ப் பயணக் கட்டுரை நூல்களின் முன்னோடியான அ. கருப்பஞ் செட்டியார் (ஏ.கே. செட்டியார்) தொடங்கி ஆசிரியராக இருந்து 40 ஆண்டுகள் நடத்திவந்த திங்கள் இதழ் 'குமரிமலர்' ஆகும். 'தனவணிகன்' இதழ் ஆசிரியராகவும், 'சக்தி' இதழில் கட்டுரையாளராகவும் இதழ்ப்பணி அனுபவம் பெற்றிருந்த ஏ.கே. செட்டியார் இலட்சிய உணர்வோடு தொடங்கிய இதழ். 1943 இல் குமரிமலர் இதழைத் தொடங்கியபோது இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் புதிய இதழ்கள் வெளி வருவதை அரசினர் தடை செய்திருந்தனர். ஆகவே Penguin New Writing என்ற ஆங்கில வெளியீட்டைப் பின்பற்றி மாதம் ஒரு புத்தகம் என்று விளம்பரம் செய்து குமரிமலரை மாதந்தோறும் வெளியிட்டார்.

தொகுப்புக் கலையில் ஏ.கே. செட்டியார் கொண்டிருந்த ஆர்வத்தையும் ஆற்றலையும் குமரிமலர் இதழ்களில் காணலாம். அரிய செய்திகளைத் தேடியலைந்து சேகரித்துத் தொகுத்து வெளியிட்டார். பாரதியார் எழுதிய அரிய கட்டுரைகள் யார் கண்ணிலும் படாதவற்றைத் தேடிப்பிடித்துக் குமரிமலரில் வெளியிட்டார். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா, தமிழ்த் தென்றல் திரு.வி.க. போன்ற அறிஞர்களின் கட்டுரைகளையும் குமரிமலரில் வெளியிட்டார். மிகத்தூய பற்றுடைய காந்தியவாதியான இவர் 1978 ஏப்ரல் முதல் 1979 ஏப்ரல் வரை குமரிமலர் இதழில் 'அண்ணல் அடிச்சுவட்டில்' என்னும் கட்டுரைத் தொகுப்பை எழுதியுள்ளார். பாரதியாரின் கடிதங்கள் பலவற்றையும் இவர் குமரிமலரில் வெளிவரச் செய்தார். வாயாடி என்ற புனைபெயரில் ஏ.கே. செட்டியாரின் கட்டுரைகளும், காகன் என்ற புனைபெயரில் சா. கணேசன் எழுதியுள்ள கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இலக்கிய வரலாற்றாசிரியர் மு. அருணாசலம் குமரிமலரில் தான் தனது எழுத்துப் பணியைத் தொடங்கினார்.

புகழ்பெற்ற பத்திரிகையாளர் இந்து ஜி. சுப்பிரமணிய அய்யர் நினைவாக ஒரு சிறப்பிதழ் வெளியிட்ட பெருமை குமரிமலருக்கு உரியது. முதன்முதலில் தமிழ் இதழியல் உலகில் போட்டோ ஆப்செட்டில் 1944இல் குமரிமலர் வண்ணப் படங்களை அச்சிட்டு வெளியிட்டது.

1943இல் தொடங்கப்பட்ட குமரிமலர் இதழைத் தாம் இவ்வுலகை நீத்த ஆண்டாகிய 1983 ஆகஸ்ட் வரை ஏ.கே. செட்டியார் தொடர்ந்து வெளியிட்டார். அதன்பிறகு சிலகாலம் அவரது நண்பர் எஸ். கோபாலன் வெளியிட்டு வந்தார்.

Koviloor Digital Library

குமாரராஜா மு.அ.மு. முத்தையா செட்டியார் பிறந்தநாள் நினைவுப் பரிசு

மு.அ.மு. இராமசாமி அவர்களால் அமைக்கப் பெற்றுள்ள இராசா சர் அண்ணாமலை செட்டியார் நினைவு அறக்கட்டளை இப்பரிசை வழங்குகிறது.

ஆண்டுதோறும் சிறந்த சமூக சேவை நிறுவனம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பரிசுத்தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படுகிறது. குமாரராஜா முத்தையா செட்டியார் பிறந்த நாளாகிய செப்டம்பர் ஆறாம் நாள் இப்பரிசளிப்பு விழா நடைபெறுகிறது.

குமுதம்

ஆசியாவிலேயே மிக அதிகமாக விற்பனை யாகும் வார இதழ் என்ற சாதனை நிகழ்த்திய இதழ் 'குமுதம்'. கானாடுகாத்தானில் புகழ்மிக்க ஏரோப்பிளேன் அண்ணாமலை செட்டியார் குடும்பத்தில் பிறந்த சா.அ.பெ. அண்ணாமலை (எஸ்.ஏ.பி.) இம்மாபெரும் சாதனை நிகழ்த்திய இதழாசிரியர் ஆவார்.

இவர் தம் நண்பர் பார்த்தசாரதியுடன் இணைந்து குமுதம் இதழைத் தொடங்கினார். இவ்விதழ் 1947 நவம்பரில் தொடங்கப்பட்டது. டாக்டர் அழகப்ப செட்டியார் கௌரவ ஆசிரியராக இருந்தார். மாத இதழாகத் தொடங்கப்பெற்ற குமுதம் பிறை இதழாகிப் பின்னர் மாதம் மும்முறை இதழாக வெளிவந்து பிறகு தொடர்ந்து வார இதழாக வெளிவருகிறது.

குமுதம் இதழ் தொடங்கிய அண்ணாமலை மன உறுதி மிக்கவர். தொடக்க காலத்தில் அச்சிட்ட 5000 இதழ்களில் 3000 இதழ்கள் விற்பனையாகாமல் திரும்பிவந்த போதும் மனந்தளராமல் உறுதியுடன் இதழை நடத்தி இந்தியாவில் மட்டுமன்றி ஆசியாவிலேயே அதிகம் விற்பனையாகும் இதழ் என்ற சாதனையைப் புரிந்தார்.

நான்கணா (25 காசு) விலையில் தொடங்கப்பட்ட குமுதம் இப்போது 3 ரூபாய் 50 காசுகள் விலையாகும். இப்போதும் கூட பிற தமிழ் வார இதழ்களை நோக்க இதன் விலை குறைவானதேயாகும். பல இலவச வெளியீடு களை இணைப்பாகக் கொடுக்கும் உத்தியை முதன் முதலில் பயன்படுத்தியது குமுதமே.

எஸ்.ஏ.பி. காலமான பிறகு குமுதம் இதழில் அவர் மகன் ஜவகர் பழநியப்பன் நிருவாக ஆசிரியராகவும் சுஜாதா பொறுப்பாசிரியராகவும் இருந்தார்கள். இப்போது மாலன் பொறுப் பாசிரியராகப் பணியாற்றுகிறார். தொடக்கத்தில் இதழின் கௌரவ ஆசிரியராக இருந்த டாக்டர் அழகப்ப செட்டியார் நினைவாக ஆண்டுதோறும் ஏப்ரல் முதல் வாரத்தில் குமுதத்தில் கட்டுரைகள் வெளிவருகின்றன.

புதுமைகள் செய்து கொண்டேயிருப்பது குமுதத்தின் வெற்றிக்குக் காரணம். துணிந்து எழுதும் எழுத்துக்கள் வெளிவருவதும் இதன் சிறப்பு. குமுதத்தின் திரைப்பட விமரிசனங்கள் அரசியல் விமரிசனங்கள் தெளிவாகவும் துணிவாகவும் சுவையாகவும் எழுதப்பட்டு வெளிவரும். அரசு கேள்வி பதில் அண்ணாமலை தம் முகம் காட்டாமலேயே அனைவரது சுவைக்கேற்பவும் எழுதிய பகுதி. வாரா வாரம் இதற்காகவே வாசகர் காத்திருக்கும் வண்ணம் ஆவலைத் தூண்டும் பகுதியாக இது அமைந்தது. கேலிச் சித்திரங்கள், எக்ஸ் – ரே, பயோடேட்டா எனப் பிரபலமானவர்களைப் பற்றி எழுதிய பகுதிகள், கிசு கிசு பகுதி, ஆறு – வித்தியாசங்கள் பகுதி எனச் சிறுவர் இளைஞர் முதியோர் என அனைவரது சுவைக்கேற்பவும் ஒரு பக்கம் கூட விடாமல் படிக்கவேண்டும் என்ற உணர்வைத் தூண்டுவதாக அமைவது குமுதத்தின் தனிச்சிறப்பு. கண்ணதாசன் கவிதைகளும் சாண்டில்யன் கதைகளும் குமுதத்தின் வளர்ச்சிக்குக் காரணமானதுபோல அவர்தம் படைப்புக்கள் ஏராளமான மக்களுக்குப் போய்ச் சேர்ந்து அவர்கள் புகழ்பெறவும் குமுதம் காரணமாயிற்று. அரசியல் விமர்சனங்களால் தாக்குதலுக்கு உள்ளானபோதும் கூடக் குமுதம் தன் போக்கில் பிறழாமல் உறுதியுடன் நின்றது.

ஊழியன், சக்தி இதழ்கள் இதழியல் உலகில் முன்னோடியாக விளங்கியது போலப் பின்னர் வந்த வார இதழ்களுக்குக் குமுதமே முன்னோடி யாகத் திகழ்ந்தது. குமுதத்தை எட்டிப்பிடிக்க வேண்டும் என்பதே பல இதழ்களின் இலட்சியக் கனவாக அமைந்தது. ''அண்ணாதுரை ஆட்சிக்கு வந்து 'தமிழ்நாடு' என்ற பெயரைச் சட்ட மன்றத்தில் பிரகடனப்படுத்துவதற்கு முன்பே அதைத் தம் பத்திரிகையின் முகவரியில் பிரபலப்படுத்தியவர் எஸ்.ஏ.பி. அண்ணாமலை. அது மட்டுமல்ல, அதுவரை எல்லாப் பத்திரிகை களிலும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு வந்த முகவரியை முதன்முதலில் தமிழில் வெளியிட்ட வரும் இவர்தான். தமிழ் வாரப் பத்திரிகையின் போக்கிலிருந்து முற்றிலும் மாறுபட்டுத் தனித்தன்மையுடன் புதுமைப் புரட்சிகள் பல செய்து அவற்றில் வெற்றியும் கண்டுவருவது குமுதம்'' என மற்றொரு வாரப்பத்திரிகையான ''தினமணி கதிர்'' எழுதியது எனில் மற்ற இதழ்களுக்குக் குமுதம் முன்னோடி தானே!

Koviloor Digital Library

குருகுலம்

காரைக்குடியில் சொ. முருகப்பாவால் தொடங்கப்பெற்ற தனவைசிய ஊழியர் சங்கம், 1925 இல் தனவைசிய நாட்டுத் தமிழ்க் கல்விக் கழகம் (த.க.)என ஓர் அமைப்பை ஏற்படுத்தியது. அவ்வமைப்பின் சார்பில் செட்டிநாட்டின் பல பகுதிகளில், ஆர்வமும், அமைப்பின் கொள்கையில் பிடிப்பும் உள்ள பலர் கல்வி நிலையங்களை ஏற்படுத்தினர். அவ்வாறு சிறா வயலில் ஒரு குருகுலக் கல்விநிலையம் ஏற்படுத்தப்பட்டு நடந்து கொண்டிருந்தது.

அதனை நடத்தியவர் 1930 இல், தொடர்ந்து கல்வி நிலையத்தை நடத்த இயலாமல் இருந்தார். அப்போது, தனவைசிய ஊழியர் சங்க உறுப்பினரும், காரைக்குடி முத்துப்பட்டணத்தைச் சேர்ந்தவரும், வைரவன் கோவிலைச் சேர்ந்தவருமான சா.சு. சுப்பிரமணியன் செட்டியார் அக்குருகுலத்தை ஏற்றுக்கொண்டு அதனைக் காரைக்குடி முத்துப்பட்டணத்தில் நடத்தத் தொடங்கினார்.

1936 இல் இப்பள்ளிக்குச் சொந்தத்தில் கட்டிடம் கட்டக் கருதி அமராவது புதூரில் இடம் வாங்கினார். கட்டிடம் கட்டும் பொறுப்பைத் தம் நண்பரும், பங்காளியும் ஆன காரைக்குடிக் கல்வி வள்ளல் இராம. வீர. இராமசாமிச் செட்டியாரிடம் ஒப்படைத்து விட்டுச் சிங்கப்பூர் சென்றார் இவர். இவர் அங்கேயே காலமாகிவிட்டார்.

இராம.வீர. இராமசாமிச் செட்டியார் கட்டிடத்தைக் கட்டி முடித்து 1936 ஆம் ஆண்டு இறுதியில், பள்ளி அமராவதி புதூரில் சொந்தக் கட்டிடத்தில் இயங்கும் வண்ணம் செய்ததோடு, நீண்ட காலம் தாமே நிருவாகத்தையும் ஏற்று நடத்தினார். தம் வாழ்நாளின் இறுதிக்காலத்தில், சுப்பிரமணியன் செட்டியார் குடும்பத்தாரிடம் ஒப்படைத்தார்.

தொடக்கத்தில் ஐந்தாம் வகுப்பு வரை நடைபெற்று வந்த பள்ளி, 1936 இல் எட்டாவது வரை என உயர்வு பெற்றது. 1958 முதல் இது உயர்நிலைப் பள்ளியாக நடைபெற்று வருகிறது. உயர்நிலைப் பள்ளியாக உருவான போது, 'சுப்பிரமணியன் செட்டியார் குருகுல உயர்நிலைப் பள்ளி' எனப் பெயர் பெற்றது. இன்றும் இப்பள்ளியின் விடுதி 'குருகுலம்' என்ற பெயரில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

இப்பள்ளி சிறாவயலில் இருந்த போது ப. ஜீவானந்தம் இதில் பணியாற்றியிருக்கிறார் என்பதும், இது அமராவதி புதூருக்கு வந்த பிறகு இதில் கவியரசர் கண்ணதாசன் எட்டாவது வரை படித்திருக்கிறார் என்பதும் இப்பள்ளியின் சிறப்புக்கள்.

தனவைசிய ஊழியர் சங்கத்தின் பல்வேறு பயன்தரும் விளைவுகளில் ஒன்றாகி, இன்றும் கல்விப் பணியாற்றி வரும் நகரத்தார் நிறுவனம் இக் குருகுலப் பள்ளி.

குருபூசை மடங்கள்

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் பெருமக்களால் தமிழகத்தில் பக்தி இயக்கம் பரவித் தழைத்துச் சைவசமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. சிவவழிபாட்டை மறந்தமையே நகரத்தார்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்குக் காரணம் எனச் சிதம்பரம் அகோரசிவாச்சாரியார் குறிப்பிட அவரிடமே உபதேசம் கேட்டுச் சிவவழிபாட்டை மீண்டும் முனைப்பாக நகரத்தார் மேற் கொண்டனர். (பார்க்க : உபதேசங் கேட்டல்)

அதன் தொடர்பாகச் சிவாலயங்களைப் புதுப்பித்தல், நந்தவனம், பசுமடம், தேவாரப் பாடசாலைகள் ஏற்படுத்துதல், சமய ஆசாரியர்கள் நால்வருக்கும் சேக்கிழார் பாடிய அறுபத்து மூவருக்கும் குருபூசை மடங்கள் கட்டிக் குருபூசை நடத்துதல் ஆகிய சைவத் திருப்பணிகளைச் செய்தனர். மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் திருப்பணி செய்த வயிநாகரம் குடும்பத்தார் ஏறத்தாழ 175 ஆண்டுகட்கு முன் மதுரை அறுபத்துமூவர் குருபூசை மடத்தை ஏற்படுத்தி வழிபாடு செய்து வரலாயினர். ஏறத்தாழ 130 ஆண்டுகட்கு முன்னர் சத்திரம் சோம குடும்பத்தினர் தேவகோட்டை கருதாவூருணிக்கரையில் அறுபத்து மூவர் குருபூசை மடம் கட்டிப் பூசை செய்யத் தொடங்கினர். 120 ஆண்டுகட்கு முன்பு கட்டை முருகப்ப செட்டியார் குடும்பத்தினர் தேவகோட்டை எல்லையில் காட்டுத் தண்ணீர்ப் பந்தல் வைத்து அங்கு கட்டப் பெற்ற கல்மண்டபத்தில் நால்வர் குருபூசை செய்து வழிபட்டனர். ஏறத்தாழ இதே காலத்தில் காரைக்குடியில் நகரச்சிவன் கோவில் அருகில் ஊருணி மேல்புறத்தில் அறுபத்து மூவர் குருபூசை

Koviloor Digital Library

மடம் அமைக்கப்பட்டது. சைவச் சான்றோராகிய சொக்கலிங்கய்யா இங்கு 30 ஆண்டுகட்கு மேல் வாழ்ந்திருந்து சமயத்தொண்டு புரிந்தார். இக்குருபூசை மடத்திற்கு 1874 இல் வருகை புரிந்த திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை 'குருபூசை மான்மியம்' என்னும் நூலை இங்கே இயற்றி வழங்கினார்.

செட்டிநாட்டுக்கு வெளியே திருவாரூரில் தேவகோட்டையைச் சேர்ந்த மேனா வகையார் கட்டியுள்ள குருபூசை மடம் நூற்றாண்டு விழாக்கண்ட மடமாகும்.

செட்டிநாட்டின் பல ஊர்களிலும் நகரத்தார்கள் குருபூசை மடங்கள் அமைத்துள்ளனர். மேலும் தங்கள் காலத்தில் வாழ்ந்து மறைந்த சிவனடியார் களுக்கும் அதிட்டானம் அல்லது சமாதி அமைத்துக் குருபூசை நடத்தி வருகின்றனர். குருபூசை மடங்கள் அமைந்துள்ள ஊர்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

குருபூசை மடங்கள்

(அறுபத்து மூவர், மாணிக்கவாசகர், சேக்கிழார்)

ஊர்	குருபூசை மடமும் நிறுவியவரும்	நடைபெறும் குருபூசைகள்
1. அரிமழம்	கீழமடம் (ப.செ.செகதி.செ. குடும்பம்)	திருநாவுக்கரசர்
2. பி. அளகாபுரி	அறுபத்து மூவர் குருபூசை மடம் (நா.சொ. குடும்பம்)	நால்வர்
3. இராயவரம்	வெ.மு. மடம்	நால்வர்
4. கடியாபட்டி	அறுபத்து மூவர் குருபூசை மடம் (உ.மு.உ. முத்து வீரப்ப செட்டியார் உ.மு.உ. ராமசாமி செட்டியார்)	அறுபத்து மூவர் மாணிக்கவாசகர்
5. காரைக்குடி	அறுபத்து மூவர் குருபூசை மடம் (நகரத்தார் பொது)	அறுபத்து மூவர்
6. சண்முகநாதபுரம்	பெ.சித. குடும்பத்தார்.	மாணிக்கவாசகர்
7. சாக்கோட்டை	அறுபத்து மூவர் குருபூசை மடம் (புதுவயல் நகரத்தார்)	நால்வர்
8. உ. சிறுவயல்	மெசு. மடம்	நால்வர், சேக்கிழார்
9. திருவாரூர்	தேவகோட்டை ராம.மெ. வகையார் குருபூசைமடம்	அறுபத்து மூவர்
10. தேவகோட்டை	நகரத்தார் குருபூசை மடம் (வெ. ஊருணி)	நால்வர், சேக்கிழார்
11. தேவகோட்டை	கட்டை முருகப்ப செட்டியார் காட்டுத் தண்ணீர்ப் பந்தல் (கட்டை முருகப்ப செட்டியாரின் வழிமுறை யினரான அரு. சோமசுந்தரம் இதனை நால்வர் கோவிலாகத் திருப்பணி செய்துள்ளார்)	நால்வர்
12. தேவகோட்டை	பள.செ. குருபூசை மடம்.	நால்வர்
13. தேவகோட்டை	ராம.மெ. வகையார் குருபூசை மடம்	நால்வர், சேக்கிழார்
14. நேமத்தான்பட்டி	அறுபத்து மூவர் குருபூசை மடம். (வைரவன் கோவில் நகரத்தார்)	நால்வர்
15. பலவான்குடி	கோவிந்தசாமி சொக்கலிங்கசாமி சமாதிக் கோவில். (ராம.கு. பொதுக் குடும்பம்)	நால்வர்
16. மதுரை	அறுபத்து மூவர் குருபூசை மடம் (அ.புதூர் வயிநாகரம் குடும்பம்)	அறுபத்துமூவர்

Koviloor Digital Library

குருபூசை மடங்கள் [பிற சிவனடியார்கள்]

ஊர்	குருபூசை மடமும் நிறுவியவரும்	நடைபெறும் குருபூசைகள்
1. அரிமழம்	கோடகநல்லூர் சுந்தரசாமிகள் அதிட்டானம். (சோமசிவ. குடும்பம்)	சுந்தரசாமிகள்
2. அரிமழம்	சாத்தப்பசாமி கோவில்	சாத்தப்பசாமி
3. அரிமழம்	சேவுகசாமி கோவில்	சேவுகசாமி
4. அலவாக்கோட்டை	செம்புச்சாமி மடம்	செம்புச்சாமி
5. உலகம்பட்டி	சைவ சித்தாந்த நிலையம் (சி.லெ. நாராயணன் செட்டியார் குடும்பம்)	லெட்சுமண சாமி
6. கண்டவராயன்பட்டி	சொக்கலிங்கசாமி சமாதிக் கோவில் (தண்டாயுதபாணி கோவில் வளாகம்)	சொக்கலிங்கசாமி
7. கண்டனூர்	அருணாசல அய்யாமடம் (இரணிக் கோவில் பங்காளிகள்)	அருணாசல அய்யா
8. கண்டனூர்	முத்துராம ஐயா மடம். (லெசுப. வகையார்)	முத்துராம ஐயா
9. காளையார்கோவில்	ஜமீந்தார் சாமிகள் சமாதிக் கோவில் (கா.செ. மடாலயம்)	ஜமீந்தார் சாமிகள்
10. கீழச்சிவல்பட்டி	பாடுவார் முத்தப்பர் சமாதிக் கோவில்	பாடுவார் முத்தப்பர்
11. கீழப்பூங்குடி	மிளகாய்ச்சாமி மடம்	மிளகாய்ச் சாமி
12. கோவிலூர்	கோவிலூர் மடாலயம் (முத்துராமலிங்க ஆண்டவர் குருபூசை கோவிலூர் மடத்தினராலும் ஏனையோர் குருபூசை அவரவர் பூர்வாசிரம குடும்பத்தின் வழிமுறையினராலும் நடத்தப் பெறுகின்றன.)	முத்துராமலிங்க ஆண்டவர், அருணாசல ஞானதேசிகர் (துறவு ஆண்டவர்), கருணாநிதி சுவாமிகள், இராமசாமி ஞான தேசிகர், அண்ணாமலை ஞான தேசிகர், மகா தேவஞான தேசிகர், சோமசுந்தர ஞான தேசிகர், இராமநாத ஞான தேசிகர் அரு. இராமநாத ஞான தேசிகர், காசிவிசுவநாத ஞான தேசிகர்
13. சாக்கோட்டை	வேதாந்தமடம் (புதுவயல் நகரத்தார்)	புதுவயல் வீரப்பசாமி
14. திருக்களர்	திருக்களர் ஆண்டவர் சமாதிக்கோவில் (கோவிலூர் மடம்)	வீரசேகர ஞான தேசிகர் (திருக்களர் ஆண்டவர்)
15. துலாவூர்	துலாவூர் மடம்	நிரம்ப அழகிய தேசிகர்
16. தேவகோட்டை	வீரப்பசாமிகள் சமாதிக் கோவில் (சித. முரு. வீர. குடும்பம்)	வீரப்பசாமிகள்
17. நெற்குப்பை	முத்தானந்தசாமி சமாதிக் கோவில் (தெ.சொ. சொக்கலிங்கம் செட்டியார் குடும்பம்)	முத்தானந்த சாமி
18. பட்டமங்கலம்	அடைக்கப்பசாமி சமாதிக்கோவில் (அ.வீர. குடும்பம்)	அடைக்கப்ப சாமி
19. பலவான்குடி	கோவிந்தசாமி சொக்கலிங்கசாமி சமாதிக் கோவில் (ராம.கு. குடும்பம்)	கோவிந்தசாமி சொக்கலிங்க சாமி
20. மதுரை	அறுபத்துமூவர் குருபூசைமடம்	வயிநாகரம், நாகப்ப ஐயா வேங்கடாசல ஐயா
21. மதுரை	குட்டை ஐயாமடம்	குட்டை ஐயா
22. மயிலாடுதுறை	வீரப்பசாமி அதிட்டானம் (தேவகோட்டை அள.வீர.பெ. குடும்பம்)	வீரப்பசாமி.

Koviloor Digital Library

குருவிக்கொண்டான்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து நேமம், கீழச்சிவல்பட்டி, ஆவினிப்பட்டி வழியாக 33 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், சூரக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு கோவில்களைச் சேர்ந்த 250 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இது திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

மீனாட்சி சொக்கலிங்கம் திருக்கோவில் நகரச் சிவன் கோவிலாகும். இத்திருக்கோவில், குடமுழுக்கு விழா சிவ.கரு. முத்தையா செட்டியாரால் நடத்தப்பெற்றது. சூரக்குடிக் கோவிலைச் சேர்ந்த கரு.மு.சி. சதாசிவம் செட்டியார் கட்டியுள்ள ஆத்திரம்பட்டி செல்வவிநாயகர் கோவில் இவ்வூரில் உள்ளது. அண்மையிலுள்ள கீரணிப்பட்டி முத்துமாரி யம்மன் கோவில் இளையாத்தங்குடி தேவஸ்தானத்தின் நிருவாகத்தில் உள்ளது. கீரணிப்பட்டித் திருவிழா இப்பகுதியில் புகழ்பெற்ற பெரிய திருவிழா ஆகும். இத்திருவிழாவில் முதல் 5 நாட்களில் சூரக்குடிக் கோவிலைச் சேர்ந்த கரு.மு.சி. முத்துக்கருப்பன் செட்டியார் பசுமடத்திலும், பின் 5 நாட்களில் இதே கோவிலைச் சேர்ந்த சிவ.கரு. முத்தையா செட்டியார் பசுமடத்திலும் நகரத்தார் விருந்து நடைபெறும். ஆனை விழுந்தான் ஊருணி குடிநீர்க் குளமாகும். மற்றொரு ஊருணியும் உள்ளது.

கவிமணி மன்றம் 40 ஆண்டுகட்கு மேலாக இவ்வூரில் சிறப்பாகப் பணியாற்றிவரும் இலக்கிய அமைப்பாகும். ஒன்று முதல் எட்டு வகுப்புக்கள் வரை நடைபெறும் சொக்கலிங்கம் மீனாட்சி வித்தியாசாலை நகரத்தார் சிலரால் 1950 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. நகரத்தார் குடும்பத்தால் கட்டட நன்கொடை அளிக்கப்பெற்ற அ.சொ. சொக்கலிங்கம் செட்டியார் அரசு மருத்துவமனை இவ்வூரில் தொண்டாற்றுகிறது.

ஐயனார் கோவிலில் பிள்ளையார்பட்டி நகரத்தாராலும் மற்றும் சில நகரத்தார் வீடுகளிலும் இராமாயணம் படிக்கப்படுகின்றது. வைரவன் கோவிலாரும், பிள்ளையார்பட்டிக் கோவிலாரும் இவ்வூரில் அவர்களுக்குள் பொதுப்படைப்புப் படைத்து வழிபடுகின்றனர். திருச்சி மன்னார்புரத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோவில் மண்டபத் திருப்பணியைச் செய்தவர்கள் இவ்வூரினரான கருமுகி. சதாசிவம் செட்டியார் குடும்பத்தார் ஆவர். பாடல்பெற்ற தலமாகிய திருக்கோளக்குடியில் இவ்வூர் பிள்ளையார்பட்டிக் கோவிலாரான அ.சொ. குடும்பத்தாரும் பி. அளகாபுரி மாத்தூர்க் கோவிலாரான மு.தெ. குடும்பத்தாரும் இணைந்து திருமடம் நடத்தித் தொண்டு செய்தனர். கவிமணியின் புகழைப் பரப்பிக் கன்னித்தமிழ் வளர்ப்பது இவ்வூரின் தனிச்சிறப்பு.

குழந்தையன் செட்டியார், ப.வ. இராம., (7-11-1918 - 7-1-1986)

வைரவன் கோவில் - தெய்யனார் வகுப்பு
இராயவரம்
தமிழ்ப் புரவலர்

ப.வ. இராமன் செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். பல நூற்பாலைகளின் இயக்குநராக விளங்கிய இவர் 1950 முதல் 1969 முடிய இந்தியன் வங்கியின் இயக்குநராகப் பணியாற்றியுள்ளார்.

சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் நிறுவன உறுப்பினரான இவர் மலாக்கா நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத் தலைவராகவும் வைரவன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இவர் தலைவராக இருந்தபோது 1982 இல் வைரவன் கோவில் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது.

காரைக்குடிக் கம்பன் கழகத்தின் உறுப்பின ராகவும் சென்னைக் கம்பன் கழகத்தின் துணைத் தலைவராகவும் தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார். இரசிகமணி டி.கே.சி, தமிழ்க்கடல் இராய.சொ. ஆகியோரின் நெருங்கிய நண்பர்.

டி.கே.சி. இராமாயணத்தின் மறுபதிப்பு வெளிவரவும், காரைக்குடியில் தமிழ்க்கடலின் உருவச்சிலையை அமைப்பதற்கும் இவர் பெரும் பொருளுதவி செய்துள்ளார்.

குழிபிறை

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. காரைக்குடியிலிருந்து திருமயம், வி. இலட்சுமிபுரம், விரையாச்சிலை, பனையப்பட்டி வழியாக 45 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு நகரக் கோவில்களையும் சேர்ந்த 648 புள்ளிகள், இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

Koviloor Digital Library

இவ்வூர் மீனாட்சிசுந்தரேசுவரர் நகரச்சிவன் கோவில் திருப்பணி செய்து முடிக்கப்பெற்று 1905 இலும், பின்னர் 1976, 1994 ஆம் ஆண்டுகளிலும் திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்றுளது. இங்கு ஆருத்ராதரிசனமும், நவராத்திரி விழாவும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன.

நகரத்தார் நிருவாகத்தில் சுப்பையா கோவில் ஒன்றும் இவ்வூரில் உளது. அதில் நான்காண்டு கட்கொருமுறை சிறப்பாகப் பூசை நடத்தப் பெறுகிறது. ஒரு குடிதண்ணீர் ஊருணி உள்ளிட்ட 3 ஊருணிகள் இவ்வூரில் உள. ஏகப்பசெட்டியார் வகையாரால் முத்து விநாயகர் கோவிலும் நாராயணன் செட்டியார் வகையாரால் உலகுடை விநாயகர் கோவிலும் கட்டி நிருவகிக்கப் பெறுகின்றன. எம்சிடிஆர்எம். தொடக்கப் பள்ளி, எம்சிடிஆர்எம். மேல்நிலைப்பள்ளி இரண்டும் 40 ஆண்டுகளாக நகரத்தார் குடும்பத்தால் நடத்தப் பெறுகின்றன. வள்ளுவர் நடுநிலைப் பள்ளியும் 25 ஆண்டுகளாக நகரத்தாரால் நடத்தப் பெற்று வருகிறது. மு.மு.ராம. குடும்பத்தினரால் மீனாட்சி மகப்பேறு மருத்துவமனை 40 ஆண்டுகளாக நடத்தப் பெற்று வருகிறது.

ஏகப்பசெட்டி வகையார் இராமர் நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றனர். நகரப் பொதுவில் ஒரு நகரத்தார் மன்றக் கட்டிடம் உள்ளது.

மாத்தூர் மணலூர்ப் பங்காளிகள் தேவியாரம்மன் படைப்பையும், இளையாத்தங்குடி பெருமருதூருடையார்ப் பங்காளிகள் அடைக் காத்தாள் படைப்பையும், கிங்கிணிக் கூருடையார்ப் பங்காளிகள் அடைக்கப்பத்தாள் படைப்பையும் தங்களுக்குரிய பொதுப் படைப்பாகப் படைத்து வருகின்றனர்.

ஆண்டுதோறும் புரட்டாசிமாதம் நகரப் பொதுவில் நகரத்தார் மன்றத்திலும் தனிப்பட்ட முறையில் மூன்று குடும்பத்தாரால் தத்தம் இல்லங்களிலும் இராமாயணம் படிக்கப்படுகிறது. இது, கடந்த 100 ஆண்டுகட்கும் மேலாகத் தொடர்ந்து வரும் மரபாகும்.

மீனாட்சி இலக்கியச் சங்கம் கடந்த 25 ஆண்டுகளாகவும், முத்தமிழ் மன்றம் 15 ஆண்டுகளாகவும், கவின் கலை மன்றம் 10 ஆண்டுகளாகவும் இவ்வூரில் இலக்கியப்பணி ஆற்றி வருகின்றன.

இவ்வூரைச் சேர்ந்த நா.அரு. சின்னையா செட்டியார், கு.பெரி.மா.மாணிக்கம் செட்டியார் ஆகியோர் இ.தேரா.வில் பணிபுரிந்தவராவர்.

குன்றக்குடி

அருள்தரும் ஆறுமுகப் பெருமான் வீற்றிருக்கும் குன்றக்குடி செட்டிநாட்டின் மையப்பகுதியாகும். செட்டிநாட்டின் வட்டகைப் பகுப்புமுறை குன்றக்குடியை மையமாகக் கொண்டே அமைந்துள்ளது. செட்டி முருகன் என்றழைக்கப்படும் சண்முகநாதன் நகரத்தார் களால் போற்றப்படும் தெய்வம்.

குன்றக்குடி சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது. காரைக்குடி – திருப்புத்தூர்ச் சாலையில் காரைக்குடியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது.

ஊருக்கு நடுவே வடபால் முகமும் தென்பால் தோகையும் கொண்டு நிற்பதொரு மயிலின் வடிவாகக் குன்றக்குடி மலை அமைந்துள்ளது. இம்மலைமேல் தென்முகம் நோக்கிய இராச கோபுரத்துடன் கம்பீரமாகத் திருக்கோவில் அமைந்துள்ளது. மலையின் மேல் தென்கிழக்கு முகமாக "ஆறுமுக அப்பா" என்ற மந்திரமொழி எழுத்துக்கள் ஒளியெழுத்துக்களாக அமைந்து தூரத்தே வருவோர்க்குக் குமரன் அருள்திசை காட்டி நிற்கிறது. மலையின் உயரம் அடிவாரத்தில் இருந்து 40 மீட்டர். மலைமீதுள்ள இராச கோபுரத்தின் உயரம் 16.15 மீட்டர். ஆக மலைக் கோவிலின் உயரம் 56.15 மீட்டர். கோவில் அமைந்துள்ள மலையின் பரப்பளவு ஆறேமுக்கால் ஏக்கர். இந்தத் திருக்கோவில் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. ஒன்று மலைக்கோவில் என்றும் மற்றொன்று கீழ்க்கோவிலென்றும் அழைக்கப் பெறுகின்றது.

மலைக்கோவிலின் மூலவர் அருள்தரு சண்முகநாதப் பெருமான் சன்னதிக்கு நேர்கிழக்கே மலையடிவாரத்தில் சன்னதி விநாயகர் கோவில் உள்ளது. அதற்கு நேர்கிழக்கே அழகிய ஒற்றைக் கால் மண்டபமும் அருகில் சண்முகநதி என்ற அழகிய திருக்குளமும் அமைந்துள்ளன. அடிவாரத்தில் திருக்கோவில் நுழைவு முகப்புப் பெருவாயில் அலங்கார வளைவு அமைந்துள்ளது. அங்கு நுழையும் போதே நேர் எதிரே நகரத்தார் அன்னதான மடத்தில் அமைந்துள்ள அழகிய தண்டபாணி அருட்காட்சி அளிக்கின்றான். அலங்கார வளைவமைந்த பெரிய தகரக் கொட்டகையின் வடமேற்கு மூலையில் மலையடிவாரத்தில் தோகையடி விநாயகர் கோவில் உள்ளது. மலையின் நுழைவாயில் தோகைவடிவமாதலால் அதனருகில் வீற்றிருக்கும் விநாயகருக்குத் தோகையடி விநாயகர் என்று பெயர். அதற்குத் தென்பால் திட்டி சுற்றி மண்டபமும் மேற்கே யானை மகாலும் உள்ளன. அவற்றிற்கு மேற்கே நகரத்தார்களால் கட்டி அமைக்கப்பெற்ற

Koviloor Digital Library

தண்டாயுதபாணி சுவாமி கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு மேற்கே சரவணப் பொய்கைத் தீர்த்தம் உள்ளது.

தோகையடி விநாயகரை வணங்கி மலையில் ஏறுவது மரபு. கார்த்திகை விநாயகர், இடும்பன், வல்லபகணபதி ஆகியோரை வழியில் வணங்கி மலைக்கோவிலை அடையலாம். 149 படிகள் ஏறி மலையின் மேல்சமதளமாகிய துரைராசு மண்டபம் வந்ததும் வீரபாகு சன்னதியையும் நால்வர் சன்னதியையும் காணலாம். மலைக்கோவிலின் பரப்பளவு 1118 சதுரமீட்டர். மலையின்மேல் மூலவராகிய சண்முகநாதர் ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் கொண்டு வடபால் முகமும் தென்பால் தோகையும் கொண்ட மயில் வாகனத்தில் 'என்று வந்தாய்' என்னும் திருக்குறிப்போடு இறங்கி வந்தருளும் ஆயத்தநிலையில் வேண்டுவார் வேண்டுவதே ஈயும் அருள் வள்ளலாகக் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கின்றார். இப் பெருமானின் வலப்பக்கத்தில் தனிமயில் வாகனத்தில் வள்ளியம்மையும் இடப்பக்கத்தில் தனிமயில் வாகனத்தில் தெய்வயானை அம்மையாரும் எழுந்தருளியிருக்கின்றனர். கருவறையில் இவ்வாறு தனித்தனி வாகனத்தில் தேவிமார் வீற்றிருக்கும் காட்சி காணற்கரியது.

மலையடிவாரத்தில் தென்மேற்குத் திசையில் கீழ்க்கோவில் அமைந்துள்ளது. இங்கு தேனாற்றுநாதரும் அழகம்மையும் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளனர். கிழக்கு மேற்காக நான்கு குடைவரைக் கோவில்கள் உள்ளன. மேற்கேயிருந்து கிழக்கே வரிசையாகச் சுந்தரேசுவரர் கோவிலும் அண்ணாமலையார் (மாசிலீச்சுரம்) கோவிலும் மலைக் கொழுந்தீசர் கோவிலும் அடுத்துச் சண்டேசர் கோவிலும் அமைந்துள்ளன. மேற்கே மலையின் மேல் ஞானியார் மலை என்று வழங்கப்பெறும் இடம் உள்ளது.

சரவணப் பொய்கை, தேனாறு, மயில்தீர்த்தம், சக்தி தீர்த்தம், பாண்டவர் தீர்த்தம், சண்முகநதி ஆகிய தீர்த்தங்கள் குன்றக்குடியில் உள்ளன.

நகரத்தார்களுக்குக் குன்றக்குடி முக்கியமான தலமாகும். குன்றக்குடிச் சண்முகநாதன் நகரத்தார்களில் பல குடும்பங்களுக்குக் குலதெய்வம் ஆவான். இத்தலத்திற்குக் கிழக்கே, மேற்கே, தெற்கே உள்ள நகரத்தார்களின் ஊர்கள் முறையே கீழவட்டகை, மேலவட்டகை, தெற்கு வட்டகை என்று வழங்கப்படுகின்றன.

நான்கு ரத வீதிகளிலும் பல்வேறு ஊர் நகரத்தார் கட்டியுள்ள மடங்கள் சத்திரங்கள் விடுதிகள் அமைந்துள்ளன. திருவிழாக்களில் மண்டகப்படி நடத்துவோரும், வருடப்பிறப்பு, கார்த்திகை, பூசம், உத்திரத் திருநாளில் சோறு வடித்து அன்னதானம் செய்வோரும் இவ்விடுதிகளில் தங்குவர். தைப்பூசத்திற்கு நகரத்தார் காவடி எடுத்து வருவர். தைப்பூசக் காவடிகள் முதல்நாள் புறப்பட்டு வந்து அன்னதான மடத்தில் வைக்கப்பெற்று மறுநாள் கிரிவலம் வந்து சண்முகநாதன் சன்னதியில் செலுத்தப்பெறும். காவடி எடுப்போர் சுற்றியுள்ள நகரத்தார் விடுதிகளில் தங்கிச் சோறு வடித்துப் போட்டு அன்னதானம் செய்வர். ஏராளமான நகரத்தார்கள் பால்குடம் எடுப்பர். குழந்தைகளைக் கரும்புத் தொட்டில் கட்டி அதில் இட்டுக் கிரிவலம் வருவர். பூசத்தன்று இரவு சண்முகநாதனுக்கு நகரத்தார் அபிசேகம் சிறப்பாக நடைபெறும். பழநிக்குச் செல்லும் பல்வேறு ஊர்க்காவடிகள் குன்றக்குடி அன்னதான மடத்தில் தங்கி இங்கிருந்து ஒன்றுசேர்ந்து செல்லும். குன்றக்குடி அன்னதானமடம் கண்டனூர் அருளாடியார் செட்டியார் குடும்பத்தின் நிருவாகத்தில் இருக்கிறது. இரத்தினவேல் இங்குதான் வைத்துப் பாதுகாத்து வழிபடப் பெற்று வருகிறது. தேவகோட்டையில் நிகழும் மகேஸ்வர பூசையில் இரத்தினவேலைக் குன்றக்குடியிலிருந்து கொண்டுவந்து வேற்பூசை செய்து வழிபட்டு வருகின்றனர். பழநிக்குச் சென்று திரும்பும் நகரத்தார் காவடிகள் குன்றக்குடி அன்னதான மடத்திற்கு வந்து அங்கு பூசையிற் கலந்து வழிபட்டுப் பின்னரே சொல்லிக்கொண்டு தத்தம் ஊர்களுக்குச் சென்று சேரும். அன்னதான மடத்தில் சித்திரைப் பூசைவிழா ஐந்து நாள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

குன்றக்குடி மலையில் துரைராசு மண்டபத்திற்குக் கீழேயுள்ள வல்லப விநாயகர் கோவில், இடும்பன் கோவில் தண்ணீர்ப்பந்தல் மண்டபம், அதற்குக் கீழேயுள்ள மண்டபங்கள் ஆகியவை நகரத்தார் திருப்பணிகளாகும். மலைக் கோவில் மேல்தளத்தில் அமைந்துள்ள 14 மீட்டர் மெர்க்குரி விளக்கு ஆத்தங்குடி அரு. வள்ளியப்ப செட்டியார் குடும்பத்தினர் அமைத்ததாகும். கண்டனூர் லெ.சித.லெ. குடும்பத்தினர் சண்முகநாதர் சன்னதித் திருநிலைத் திருக்கதவுகளை வெள்ளித் தகட்டால் பொலிவுறச் செய்துள்ளனர். உற்சவர் சன்னதி நிலைக்கதவுகள் வெள்ளித் தகடமைத்தோர் உ. சிறுவயல் கா.சி.ராம.அழ. குடும்பத்தார். கண்டரமாணிக்கம் சுப.பெரி.மு.கரு. குடும்பத்தார் இன்றும் தண்ணீர்ப்பந்தல் மண்டபத்தில் தண்ணீர் தருமம் செய்து வருகின்றனர். காரைக்குடி அண.சா.இராம. வகையினர் சண்முகநதித் திருக்குளத்தையும் அருகிலுள்ள மண்டபத்தையும்

Koviloor Digital Library

அமைத்துள்ளனர். இவர்களது முன்னோராகிய வெள்ளச்சி ஆச்சி சண்முகநாதனுக்கு அழகிய தங்கத்தேர் செய்து வைத்துள்ளார். மேற்கேயுள்ள குடிதண்ணீர் ஊருணி குஞ்சான்செட்டியார் வகையினர் தருமமாகும். வையாபுரித் திருக் குளத்தைப் பேணி வருபவர்கள் தேவகோட்டை சி.சுபழ. குடும்பத்தார். தேவத்தானத்தில் வெள்ளி பெற்று வெள்ளி ரதம் தம் சொந்தச் செலவில் இவர்கள் செய்து கொடுத்துள்ளனர். இராயவரம் வெ.மு.முருசு.சுசுப. குடும்பத்தினர் தைப்பூசத் தேர் செய்து வைத்துள்ளனர். கோனாபட்டு சு.மு.சு.பழ. குடும்பத்தார் தங்கக் கவசமும் திருவாச்சியும் ராம.சோ. குடும்பத்தார் தங்கத்தால் வேலும் செய்து வைத்துள்ளனர். குன்றக்குடியில் 10 கி.மீ. தொலைவு ஒலிக்கும் கம்பீரமான வெண்கல மணியைச் செய்து வைத்தவர்கள் உ. சிறுவயல் ராம.சி.சிவ. குடும்பத்தார். நியான் விளக்கு அமைத்துத் தந்தவர் காரைக்குடி ஏவி.எம். ஆவார்.

கண்டரமாணிக்கம் மெ.கி.பெரி. சோம குடும்பத்தார் 1940 இல் இத்திருக்கோவிலில் சில்லரைப் பழுதுகள் பார்த்து 24–6–1940 இல் திருக்குட நீராட்டு விழா நடைபெறச் செய்தனர். 1978இல் நடைபெற்ற திருப்பணிக் குழுவிலும் நகரத்தார்கள் செயலாளர்களாக இருந்து தொண்டு செய்தனர். திருக்குட நீராட்டுவிழா சிறப்பாக நடைபெற்றது.

குன்றக்குடிக் கீழ்க் கோவிலில் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டு வரையுள்ள பல்வேறு காலகட்டங்களில் செதுக்கப்பெற்ற 23 கல்வெட்டுக்கள் உள்ளன. கீழ்க்கோவில் 'மாசிலீச்சுரம்' என்று வழங்கப் பெற்றதாக இக்கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் அருளாட்சிக்குட்பட்ட பிரான்மலை வகை ஐந்து கோவில்களில் ஒன்றாக விளங்குவது இத்திருக் கோவில். குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீன கர்த்தர் குன்றக்குடி அருள்தரு சண்முக நாதப்பெருமான் திருக்கோவிலின் பரம்பரைத் தருமகர்த்தா ஆவார். 45 ஆவது மகாசந்நிதானம் திருவருள் தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார்) 16–6–1952 அன்று அருளாட்சிக்கு வந்தார். அவர் 15–4–95 அன்று சித்திரைத் திருநாளில் முத்தி அடைந்தார். 46 ஆவது ஆதீன கர்த்தராக அருள்திரு பொன்னம்பல தேசிக சுவாமிகள் 24–4–95 அன்று ஞானபீடம் எழுந்தருளி அருளாட்சி செய்து வருகின்றார்.

குன்றக்குடியைச் சூழ்ந்து செட்டிநாட்டு ஊர்கள் அமைந்திருப்பது போல ஆறுமுகப் பெருமான் அருட்காவல் சூழவே நகரத்தார்கள் பக்தி செய்து வாழ்கின்றனர்.

கூட்டுத் திருமணம்

காலமாற்றங்களுக்கேற்பப் புதிய முடிவு களுடன் செயல்பட்டு நிலைத்திருக்கும் இனம் நகரத்தார் இனம். திருமணம் மிகுந்த செலவுடையதாகும். அதுவும் பெண்கள் திருமணம் எனில் மிக அதிகம் செலவழிக்க வேண்டிய நிலை. உரிய காலத்தில் திருமணமின்றிப் பெண்கள் வாடும் நிலை. பெண்கள் திருமணத்திற்கு வசதி படைத்த தனவணிகரும் அறக்கட்டளைகளும் உதவுவ துண்டு. தமிழகத்தில் நகரத்தார் சங்கங்கள் கூட்டங்களில் இது பற்றிப் பேசுவதுண்டு. இவ்வகையில் முன்னோடியாகத் திருச்சி நகரத்தார் சங்கம் கூட்டுத் திருமணம் என்னும் புதிய திட்டத்தை வகுத்துச் செயற்படுத்தியது. மற்ற சங்கங்களையும் இணைத்துக் கொண்டு இக்கூட்டுத் திருமணங்களைப் பிள்ளையார்பட்டி நகரவிடுதியில் திருச்சி நகரத்தார் சங்கம் நடத்தி வருகிறது.

திருச்சி நகரத்தார்கள் 1972 ஆம் ஆண்டிலிருந்தே வசதி குறைவாக உள்ள நகரத்தார் இல்லத்துப் பெண்களின் திருமணங்களுக்கு உதவி வந்துள்ளனர். திருச்சி நகர விடுதியில் அத்தகைய திருமணத்தை நடத்தி வைப்பார்கள். தொடக்கத்தில் ஏழு பவுன் தாலிச் சங்கிலி காப்பு செய்து கொடுத்துப் புத்தாடைகள் வாங்கிக் கொடுத்துத் தாங்களே முன்னின்று சாப்பாட்டுச் செலவையும் ஏற்றுத் திருமணம் நடத்திவைத்தனர். இவ்வாறு 25 திருமணங்கள் நடத்திவைத்தனர். இத்திட்டத்தின் வளர்ச்சியாக மற்ற சங்கங்களோடு இணைந்து நிறைய மணமக்களுக்குக் கூட்டாகத் திருமணம் நடத்திவைக்கும் திட்டம் தோன்றியது. இவ்வகையில் நான்கு திருமணங்கள் 24–11–85 அன்று பிள்ளையார்பட்டியில் நடைபெற்றன. நான்கு மணை போட்டு நான்கு அரசாணிக்கால் கட்டி நகரத்தார் திருமண நடைமுறைப்படி நான்கு திருமணங்களும் நடைபெற்றன. காலை 9 மணிக்குக் கற்பகப் பிள்ளையார் சன்னதி யிலிருந்து மாப்பிள்ளை அழைப்பு நடைபெற்றது. திருச்சி நகரத்தார் சங்கத்தினர் முன்நின்று பந்தி விசாரிக்க, காலை மதியம் விருந்து நடைபெற்றது.

கரூர், புதுக்கோட்டை, நெய்வேலி, ஈரோடு, தஞ்சாவூர், மதுரை, நாமக்கல், விழுப்புரம், திருநெல்வேலி நகரத்தார் சங்கச் சார்பாளர்கள் வந்து தங்களால் இயன்ற பணிகளைத் திறம்படச் செய்தனர். கூட்டுத் திருமணம் பலரது கூட்டு முயற்சியால் நடைபெற்றது சிறப்பாகும். சமூகத்தின் நலம் காப்பது பற்றி அக்கறை கொள்ளும் மாநாடாக அது இருந்தது. மூன்று

Koviloor Digital Library

பவுன் தாலிச் சங்கிலியும் 1000 ரூபாய் ஆடைகளும் ஒவ்வொரு மணமக்களுக்கும் வழங்கப்பட்டன. பல்வேறு சங்கங்களும் நன்கொடை வழங்கின. பிள்ளையார்பட்டி கோவிலார் விடுதி, பாத்திரங்கள் ஆகியவற்றை வாடகையின்றி வழங்கினர். கூட்டுத் திருமண முயற்சி 'நகரத்தார் வரலாற்றில் ஒரு திருப்பம்' என 'நகரத்தார் மலர்' இதழ் கட்டுரை தீட்டியது. ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து இதுபோல் எளிமையாகக் கூட்டு முயற்சியாகத் திருமணம் நடத்தும் செயலுக்குச் சமூகம் ஆதரவு காட்டத் தொடங்கிவிட்டது. தொடர்ந்து பிள்ளையார் பட்டியில் திருச்சி நகரத்தார் சங்க முயற்சியால் நகரத்தார்களின் ஆதரவில் வரிசைவரிசையாகக் கூட்டுத் திருமணங்கள் நடைபெற்றுவருகின்றன. பிற நகரங்களில் உள்ள சங்கங்களும் இதுபோல் அந்தந்த நகரங்களில் நடத்த முன்வந்தனர். பொள்ளாச்சியில் நகரத்தார் சங்க முயற்சியால் 31–8–86 இல் இரண்டு திருமணங்களும் கோவையில் 1–11–87 அன்று கூட்டுத் திருமணமும் நடைபெற்றன.

கொத்தமங்கலம்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கோட்டையூர், பள்ளத்தூர், கொ. இலட்சுமிபுரம் வழியாக 18 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 5 கோவில்களைச் சேர்ந்த 316 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இது, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

சிவகங்கை அரசகுடும்பத்துக்குரிய சௌந்தர நாயகி உடனாய மாங்காட்டீசர் கோவில் திருப்பணியை இவ்வூர் நகரத்தார் செய்து குடமுழுக்கு விழாக்களும் நிகழ்த்தியுள்ளனர். இக்கோவிலின் கௌரவக் கண்காணிப் பாளராகத் தொடர்ந்து இவ்வூர் நகரத்தார்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். புதுக்கோட்டை அரச குடும்பத்துக்குரிய ஆவுடை நாயகி உடனாய திருவீசர் கோவில் திருப்பணியை இவ்வூர் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பங்காளிகள் செய்து குடமுழுக்கு விழாக்களும் நிகழ்த்தியுள்ளனர். எனவே இக்கோவிலின் நிருவாகப் பொறுப்பு அவர்களிடமே தொடர்ந்து இருந்து வருகிறது. இரணிக்கோவிலைச் சேர்ந்த சி.அ.சு.செ. செல்லப்ப செட்டியார் வாசுதேவப் பெருமாள் கோவிலைக் கட்டி 1946 ஆம் ஆண்டு குடமுழுக்குவிழா நிகழ்த்தியுள்ளார். இப்போது அக்குடும்பத்தின் நிருவாகத்திலேயே இக்கோவில் உள்ளது. இரணிக்கோவில் பங்காளிகளுக்குரிய பிள்ளையார் கோவில் ஒன்றும் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பங்காளிகளுக்குரிய பிள்ளையார் கோவில் ஒன்றும் இவ்வூரில் உள்ளன. நகரத்தாரால் வெட்டப்பட்ட ஆறு ஊருணிகள் இவ்வூரில் உள்ளன.

நகரத்தார் நிருவாகத்தில் செல்வநாயகி நடுநிலைப் பள்ளியும், இரணிக்கோவிலைச் சேர்ந்த ஆர்எம். எஸ்பி. உமையாள் ஆச்சி குடும்பத்தார் நிருவாகத்தில் ஆங்கிலவழித் தொடக்கப்பள்ளியும் இவ்வூரில் நடைபெற்று வருகின்றன. இரணிக்கோவிலைச் சேர்ந்த எம்.ஆர். குடும்பத்தாரின் எம்.ஆர். அறநிலையம் ஒரு மருத்துவமனையை நடத்திவருகிறது.

இவ்வூரில் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பங்காளிகள் ஆத்தங்குடி, இராயவரம், கண்டனூர், கோட்டையூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த பங்காளிகளுடன் இணைந்து தாயாத்தாள் படைப்பை ஆண்டுதோறும் படைத்து வருகின்றனர். இரணிக்கோவில் பங்காளிகளின் இருவகையாரும் தனித்தனியே ஆண்டுதோறும் சித்திரை மாதம் மகேஸ்வர பூசை நடத்தி அன்னதானம் செய்து வருகிறார்கள். இங்குள்ள நகரத்தாருக்குப் பொதுவான சித்தூரணி மடத்தில் புரட்டாசி மாதம் நகரத்தார் பொதுவில் இராமாயணம் படிக்கப்பட்டு வருகிறது. இவ்வூர் மு.கி. குடும்பத்தைச் சேர்ந்த மு.கி. அறநிலையம் சுவாமிமலையில் பல அறப்பணிகளைச் செய்துவருகிறது.

இவ்வூரில் உள்ள இராவ்பகதூர் வீடு, செல்லப்ப செட்டியார் வீடு, சி.வி.சி. வீடு ஆகியவை கலைநயம் சார்ந்த பெரிய வீடுகள் ஆகும்.

கொப்பனாபட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர் பொன் னமராவதி வழியாக 55 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, வைரவன்கோவில், இரணிக்கோவில், ஆகிய 3 கோவில்களைச் சேர்ந்த 347 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்துள் அடங்கிய ஊராட்சி மன்றம்.

1934 இல் திருக்குட நன்னீராட்டு நடைபெற்ற முத்து விநாயகர் கோவில் நகரத்தார் பொதுக் கோவிலாகும். இக்கோவிலில் விசுவேசுவரர்,

Koviloor Digital Library

விசாலாட்சி சன்னதிகள் அமைக்கப்பெற்று 1955 ஆம் ஆண்டில் முதற் குடமுழுக்கும் 1985 ஆம் ஆண்டில் 3 ஆவது குடமுழுக்கு விழாவும் நடைபெற்றன. அழகி ஆச்சி ஊருணி, நல்லூருணி ஆகியவை குடிநீர்க் குளங்களாகும். பிள்ளையார் கோவில் முன் உள்ள புது ஊருணியும் அம்மன் சேங்கையும் பிற ஊருணிகளாம்.

இவ்வூரில் முத்து விநாயகர் கோவிலில் ஒரு வாரம் இராமாயணம் படிப்பது நிகழ்கின்றது; இது மு.ப.மு.பழ. குடும்பத்தாரால் நடத்தப்படுகின்றது. சில நகரத்தார் வீடுகளிலும் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப்படுகின்றது.

பழ.லெ. குடும்பத்தார் நன்கொடையான லெ. மெய்யம்மை ஆச்சி தொடக்கப்பள்ளியும், மு.நா. நாராயணன் செட்டியார் உயர்நிலைப் பள்ளியும் அரசினர் பள்ளியாக இயங்குகின்றன. அ.மெ. மெய்யப்ப செட்டியார் பேரன்களால் நிருவகிக்கப்படும் கலைமகள் கல்லூரி மிகவும் புகழ்பெற்ற பெண்கள் பள்ளியாகும். 'கலைச்செல்வி' என்ற பட்டம் தந்து, நல்லதொரு கல்வி வழங்கிய, புகழ்பெற்ற நிறுவனம் இது.

மு.நா. குடும்பத்தாரால் கட்டிடம் நன்கொடையாக வழங்கப்பெற்ற மு.நா. நாச்சம்மை ஆச்சி மருத்துவமனை அரசினரால் நடத்தப் பெறுகிறது. நகரத்தார் நிருவாகத்தில் செ.கரு. கல்யாணமண்டபம் ஏற்படுத்தப் பெற்றுளது.

செங்கிடாய்க் கருப்பர் படைப்பு இரண்டு ஆண்டுக்கொருமுறை கார்த்திகை மாதத்தில் இராயவரத்தில் நிகழும். கொப்பனாபட்டி இரணிக்கோவில் நகரத்தார் இப்படைப்பில் கலந்து கொள்வர். கொப்பனாபட்டி இளையாத்தங்குடிக் கோவில் நகரத்தார்கள் இராங்கியத்தில் வளத்தியம்மன் படைப்பில் கலந்து கொள்கின்றனர்.

பழநி அடிவாரத்தில் அமைந்துள்ள நகரத்தார் இராக்கால மடம் இவ்வூர் மு.ப.மு. நாராயணன் செட்டியார், மு.ப.மு. இராமசாமி செட்டியார், மு.ப.மு. பெரியகருப்பன் செட்டியார், மு.ப.மு. பழநியப்ப செட்டியார் குடும்பத்தாரின் தருமமாகும். இவ்வூரினரான எம். பழநியப்பன், வி. சிங்காரம் ஆகிய நகரத்தார்கள் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றியுள்ளனர்.

கொன்னையூர் மாரியம்மன் கோவில் தக்காராகப் பணியாற்றிய மு.ராம. சேதுராமன் செட்டியாரால் இவ்வூரில் பொறியியற் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

கொப்பி கொட்டுதல்

பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதன் ஒரு பகுதியாக நகரத்தார் பெண்கள் முன்னாளில் கொப்பி கொட்டுதலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பொங்கலின்போது வீட்டுக்குள் விளக்குச்சட்டியில் தேங்காய் பழம், கரும்பு, இரண்டு பனங்கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, நெல் கொத்து, கண்ணுப்பூ எனப்படும் சிறுபூளை ஆகியவற்றை வைப்பார்கள். கத்தரிக்காய், வாழைக்காய் ஆகியவற்றையும் சில பகுதிகளில் வைப்பதுண்டு. பொங்கலன்று வைத்துக் கும்பிடும் இப் பொருட்களை மறுநாள் மாட்டுப் பொங்கலன்று இளம் பெண்கள் கொப்பிப் பொட்டலுக்கு எடுத்துச் செல்வார்கள். பொதுவாகச் சிவன்கோவிலுக்கு எதிரில் உள்ள பரந்த வெளியே கொப்பிப் பொட்டல் ஆகும். பெண்கள் இப்பொருளோடு கொப்பித்தட்டு எடுத்துச் செல்வதுண்டு. பொங்கலின்போது வைத்து வழிபடும் பொருள்களைப் போல வெள்ளியில் செய்து சிறிய வெள்ளிக் கொட்டானும் செய்து கொப்பிப் பொட்டி, கொப்பித் தட்டு என முன்னாளில் சீர்வரிசை பரப்பும் சாமான்களில் பெண்களுக்கு வைப்பதுண்டு. நகரத்தாரின் செல்வ வளத்தை இதுகாட்டுகிறது. அங்கு வரும் இளம் பெண்கள் எல்லாம் ஒன்று கூடித் தாம் கொண்டு வந்த பொருட்களை நடுவில் வைத்து வட்டமாகச் சுற்றி வந்து கும்மி கொட்டுவர். கும்மியே மருவிக் 'கொப்பி' எனப்பட்டிருக்கலாம். கிராமத்துப் பெண்கள் திருவிழாவில் இன்றும் கும்மி கொட்டுவதுபோல நகரத்தார் பெண்கள் பொங்கலை ஒட்டிக் கொப்பி கொட்டினார்கள். அப்பொட்டலுக்குக் குடிவண்ணாரும் வந்திருப்பர். பெண்கள் தாம் கொண்டு வந்த தேங்காய் பழம் காய் கிழங்கு முதலியவற்றைத் தமது குடிவண்ணார் முன் விரித்துள்ள துண்டில் போட்டுவிட்டுப் பின்னர் கோவிலுக்குச் சென்று வழிபட்டுத் திரும்புவது வழக்கமாக இருந்தது.

கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் அதிட்டானம்

துறவுநெறி நின்ற தூயவர்; பல வியக்கத்தக்க செயல்களைச் செய்த சித்தர்; செட்டிநாட்டில் பல சிவன்கோவில்களைப் புதுப்பிக்கச் செய்து குடமுழுக்குக் கண்டவர் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள். இவர் அரிமழத்தில் சமாதியடைந்தார். அங்கே இவருடைய அதிட்டானம் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

தாமிரபரணிக் கரையிலமைந்த கங்கை கொண்டான் கிராமத்தில் யக்ஞேஸ்வரசிவன் – காமாட்சி அம்மாள் ஆகியோரின் இரண்டாவது மகனாக 1831 டிசம்பர் முதல் நாள் சுந்தர சுவாமிகள் பிறந்தார். பெற்றோரை இளமையில் இழந்தார். மாமா வீட்டில் பத்தமடையில் வளர்ந்தார். இளமையிலே ஆன்மீக நாட்டம் கொண்டிருந்த இவரைச் சுந்தரசிவன் என்றே அங்கே அழைத்தனர்.

சுவாமிகள் பிறந்த ஊர் கங்கை கொண்டான் ஆயினும் கோடக நல்லூரே அவரது துறவு யோகத்துக்கு நிலைக்களம் ஆனதால் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் என்றே அழைக்கப் பட்டார். தமது யோக சாதனையால் இறந்த ஒரு சிறுவனைப் பிழைக்கவைத்தது முதலிய வியத்தகு செயல்களை இவர் செய்துள்ளார். இவரது சீடர்களில் குறிப்பிடத்தக்கவர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையாவார்.

சுவாமிகள் சமயப்பணி செய்வதற்கு புதுக்கோட்டைப் பகுதிக்கு வந்தபொழுது அரிமழம் சிவராமன் செட்டியாரும் புதுவயல் அழகப்ப செட்டியாரும் புதுக்கோட்டை சென்று சுவாமிகளை வணங்கி அவர் சீடராயினர். அவர்கள் அழைப்பிற்கேற்ப அரிமழம் வந்த சுவாமிகள் அங்குள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் சிதிலம் அடைந்திருப்பதைக் கண்டு கோவிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு நடத்த வேண்டும் என ஊராரிடம் பேசினார். ஆலயங்களால் மக்கள் முழுப்பயனை அடைய வேண்டுமானால் அவை தூய்மை ஆக்கப்பட்டு நல்ல முறையில் அஷ்டபந்தன கும்பாபிஷே கங்களை நடத்துவதுதான் வழி என்று எண்ணி அதில் மக்களை ஊக்கப்படுத்தினார். சுந்தர சுவாமிகளின் தலைமையில் அரிமழம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தின் முதல் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. சுவாமிகள் தம் வாழ்நாளில் நடத்திய 22 ஆலயக் குடமுழுக்கு நீராட்டு விழாக்களுள் இதுதான் முதலாவதாகும். அரிமழத்திற்கு வரும் பயணிகள் தங்குதற்குச் சத்திரம் ஒன்று கட்டவேண்டும் எனச் சுவாமிகள் விரும்பினார். ஊர்மக்கள் இதில் அதிக அக்கறை செலுத்தாதபொழுது சத்திரம் கட்டும் வரை தாம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகச் சுவாமிகள் கூறினார். மக்கள் உடனே முன்வந்து சத்திரம் கட்டி முடித்தனர்.

சுவாமிகள் தம்மிடம் இருந்த நர்மதை பாணலிங்கத்தைச் சீடர்களிடம் கொடுத்துவிட்டு 1878 அக்டோபர் 21 ஆம் நாள் திங்கட்கிழமை அரிமழத்தில் சித்தியடைந்தார். அவர் சமாதி மீது கோவில் கட்டி அதில் பாணலிங்கத்தை எழுந்தருளச் செய்து சீடர்கள் அதிட்டானம் அமைத்தனர். அன்று முதல் இன்றுவரை அக்கோவிலில் தவறாமல் பூசைகள் நடைபெற்று வருகின்றன. சமயப்பணி செய்த சான்றோருக்குச் செட்டிநாடு செய்த மாபெரும் சிறப்பு இவ்வழிபாடாகும்.

கோட்டையூர்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி – அறந்தாங்கிச் சாலையில் காரைக்குடியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், நேமங்கோவில், இரணிக் கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 5 கோவில்களைச் சேர்ந்த 616 புள்ளிகள் இவ்வூரில் வாழ்கிறார்கள். இது, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பேரூராட்சி மன்றம்.

மீனாட்சி சோமசுந்தரர் திருக்கோவில் என்ற நகரச் சிவன் கோவில் இவ்வூரில் உளது. இப்போதைய கற்கோவில் கட்டப்பெற்று முதல் குடமுழுக்கு 1940 இல் நிகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து 1962, 1980, 1996 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நிகழ்ந்துள. இக்கோவிலின் தென்புறம் உள்ள ஜெயங்கொண்ட விநாயகர் கோவிலும், ஊருணியும் இவ்வூர் நேமங்கோவில் நகரத்தார் களால் அமைக்கப் பெற்று இப்போது நகரச் சிவன் கோவில் நிருவாகத்தில் இருக்கின்றன.

ஒன்பது நகரக்கோவில்களில் ஒன்றான வேலங்குடிக்கோவில் இவ்வூரை ஒட்டி அமைந்துளது. அக்கோவிலின் நிருவாகத்தில் சொற்கேட்டான் விநாயகர் கோவிலும், அதன் ஊருணியும், தேசிக நாராயணப் பெருமாள் கோவிலும் அமைந்துள.

மாத்தூர் மண்ணூர்ப் பிரிவைச் சேர்ந்த மெக. குடும்பத்தார் ஒரு பிள்ளையார் கோவிலும், ஊருணியும் அமைத்துளர். இரணிக்கோவிலைச் சேர்ந்த க.பெ. குடும்பத்தார் மரகத விநாயகர் கோவிலையும், ஊருணியையும் அமைத்துளர். இவ்வூரைச் சேர்ந்த இராம.பெ.இராம. அழகப்ப செட்டியார், உ.லெ. அண்ணாமலை செட்டியார், உ.லெ.உ. அழகப்ப செட்டியார், உ.இராம. அண்ணாமலை செட்டியார் ஆகிய நால்வரும் சேர்ந்து அழகப்பா உடற்பயிற்சிக் கல்லூரிக்கு அருகே சுந்தரவிநாயகர் கோவிலை அமைத்தனர். இந்த நான்கு குடும்பத்தாரும் இக்கோவிலை நிருவகித்து வருகின்றனர். மாத்தூர் மண்ணூர்ப் பிரிவைச் சேர்ந்த க.வீ.சொ. அழகப்ப ஐயா சனாதன தரும வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு

Koviloor Digital Library

தொடக்கப் பள்ளியை 1940 இல் நிறுவினார். 1972 வரை தங்கள் சொந்தச் செலவிலேயே அவர்தம் வழிமுறையினர் இப்பள்ளியை நடத்தி வந்தனர். அதற்குப் பின் அவர்கள் நிருவாகத்தில் அரசு உதவிபெறும் தனியார் பள்ளியாக இப்பள்ளி இயங்கிவருகிறது.

இளையாத்தங்குடி பெருமருதூர்ப் பிரிவைச் சேர்ந்த வெ.சி.அரு.அழ.அரு.அழ. (தஞ்சாவூர்) அருணாசலம் செட்டியார் நன்கொடையால் தஞ்சாவூர் அருணாசலம் செட்டியார் அரசினர் உயர்நிலைப்பள்ளி 1958 இல் தொடங்கப் பெற்று நடந்து வருகிறது.

மாத்தூர் மண்ணூர்ப் பிரிவைச் சேர்ந்த அக.அசிதஅழ. சிதம்பரம் செட்டியார், 1965 இல் சிதம்பரம் செட்டியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் தொடங்கினார். தேவகோட்டை கல்வி மாவட்டத்தின் சிறந்த பள்ளிகளுள் ஒன்றாக இப்பள்ளி இயங்கி வருகிறது.

மாத்தூர் மண்ணூர்ப் பிரிவைச் சேர்ந்த கவீ.அழமு.அழ. முத்தையா செட்டியார் 1974 இல் முத்தையா அழகப்பா மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளியைத் தொடங்கினார். அன்னார் நிறுவிய சாமுண்டி அறக்கட்டளை இப்பள்ளியை நடத்தி வருகிறது. அரசு உதவி பெறாத தனியார் பள்ளியாகிய இதுவும் தேவகோட்டை கல்வி மாவட்டத்தின் சிறந்த பள்ளிகளுள் ஒன்றாகத் திகழ்கிறது.

இவ்வூரைச் சேர்ந்த அ.சு. நாராயணன் செட்டியார் 1969 இல் மேநாடு மெமோரியல் ஆயத்தப் பள்ளியை நிறுவினார். 5 ஆம் வகுப்பு வரை உள்ள இப்பள்ளி அரசு உதவி பெறாத தனியார் பள்ளியாகும்.

இவ்வூர் மாத்தூர் மண்ணூர்ப் பிரிவைச் சேர்ந்த வள்ளல் அழகப்பர் செய்திருக்கும் கல்வி அறப்பணிகள் வரலாற்றுச் சிறப்புடையவை.

மாத்தூர் மண்ணூர்ப் பிரிவைச் சேர்ந்த க.வீ.அழ.இராம.மு. இராமநாதன் செட்டியார் 1928 இல் தம் தந்தையார் நினைவாக கவீ.அழமு. இலவச மருத்துவமனையைத் தொடங்கினார். இப்போதும் அவரது குடும்பத்தாரால் இம்மருந்துவமனை தொடர்ந்து சிறப்பாக நடத்தப் பெற்று வருகிறது.

நகரத்தார் பெருமக்கள் பலர் சேர்ந்து அமைத்துள்ள விசுவேசுவரா அறக்கட்டளையினால் இவ்வூரில் விசுவேசுவரா மருத்துவமனை தொடங்கப்பெற்று, சொந்தக் கட்டிடத்தில் அனைத்து மருத்துவ வசதிகளுடனும் இயங்கிவருகிறது. இவ்வூரில் வீர.வீர.இராம. வீரப்ப செட்டியார் (மா.மண்), அ.லெ.அண.லெ. அங்கப்ப செட்டியார் (இரணி), மு.வெ.சா.இராம. (இரணி) ஆகிய மூவர் இல்லங்களிலும் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப் பெறுகிறது.

இவ்வூர் இளையாத்தங்குடி கழனிவாசற்குடிப் பங்காளிகள் ஆத்தங்குடி, காரைக்குடி, கோனாபட்டு, நேமத்தான்பட்டி, பள்ளத்தூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த தங்கள் பங்காளிகளுடன் இணைந்து ஆண்டு தோறும் ஆடி மாதம் 2ஆவது வெள்ளியன்று பூமணப் பிச்சாத்தாள் படைப்பைப் படைத்து வருகின்றனர்.

மாத்தூர் மண்ணூர்ப் பிரிவைச் சேர்ந்த மெக. குடும்பத்தார் ஒரு மடத்தையும், இரணிக் கோவிலைச் சேர்ந்த க.பெ. குடும்பத்தார் ஒரு மடத்தையும் இவ்வூரில் நடத்தி வருகின்றனர். இவ்வூர் இளையாத்தங்குடிப் பெருமருதூருடையார்ப் பங்காளிகள் ஆண்டு தோறும் ஆடிமாதம் தெண்டாயுதபாணி பூசையும் அன்னதானமும் செய்து வருகின்றனர்.

இவ்வூர் இராம.பெ.நா. குடும்பத்தார் கர்நாடகத்தில் குடகுமாவட்டத்தில் குட்டா எனும் ஊரில் விஜய கணபதி கோவில் கட்டி நடத்தி வருகிறார்கள். இவ்வூர் க.வீ.சொ. அழகப்ப ஐயா களத்தூர்ச் சிவன் கோவில் திருப்பணியைச் செய்தார். கல்லாங்குடிச் சிவன்கோவில் திருப்பணியைச் செய்து அக்கோவிலுக்கு இரண்டாவது குடமுழுக்கைச் செய்தார். வேறு சிலருடன் சேர்ந்து திருநெல்வாயில், திருநாரையூர், திரு அவளிவள் நல்லூர் ஆகிய பாடல் பெற்ற தலங்களில் சிவாலயத் திருப்பணி செய்துள்ளார்.

இவ்வூரைச் சேர்ந்த வெ.சி.அ.இராம. குடும்பத்தினரான அண.வள்ளியம்மை ஆச்சி, சொ. காவேரி ஆச்சி இருவரும் சேர்ந்து கச்சணம் பெருமாள் கோவிலைப் புதுப்பித்துள்ளர். பெ.மு.அ. குடும்பத்தார் திருவாலங்காட்டுச் சிவன் கோவிலையும், நடராசர் கோவிலையும் புதுப்பித்துள்ளர். வெ.சி.அ.இராம. அலமேலு ஆச்சி இராமேசுவரத்தில் துவாதசிமடம் ஏற்படுத்தி நடத்தி வருகிறார். வெ.சி.அ.இராம. இராமசாமி செட்டியார் குடும்பத்தார் சிதம்பரம் அனந்தீசுவரர் கோவிலில் திருப்பணி செய்து குடமுழுக்கும் நடத்தியுள்ளர். இவ்வூர் அண்ணாமலை செட்டியார் திருவெண்காட்டில் ஒரு பசுமடம் கட்டியிருக்கிறார்.

திருவண்ணாமலையில் கோட்டையூர் நகரத்தார் பல்வேறு அறப்பணிகளைச் செய்துளர். இவ்வூர் மெ.க. குடும்பத்தார் திருவண்ணாமலையில் மெக. அன்னசத்திரத்தை 1872 முதல் தொடர்ந்து நடத்திவருகின்றனர். 1903 இலும், 1944 இலும் மெக. குடும்பத்ினரே அண்ணாமலையார் கோவில் குடமுழுக்கு விழாக்களை நடத்தியிருக்கிறார்கள்.

Koviloor Digital Library

கோவலன்

சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவன். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இருந்த நகரத்தார் ஆண்மகனை நம் கண்முன் கொண்டு வந்த நிறுத்துகின்ற இளைஞன். காவிரிப்பூம் பட்டினத்து வணிகர் மாசத்துவான் மகன். செவ்வேள் என்று பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிப் பேசக்கூடிய உருவழகும். குலந்தரு வான்பொருட் குன்றத் திருவும் நிரம்பியவன். யாழ் வாசிப்பதில் வல்லவன். மணிகளை ஆய்ந்து தரம் காண்பதிலும் அறிவு சான்றோன். கொடையுள்ளம் படைத்தவன். உணர்ச்சி வயப்பட்டவன். தெய்வபக்தி உடையவன். இத்தனையும் நகரத்தார் குல இளைஞரிடம் இன்றும் இருப்பதைக் காணலாம். பல்வேறு நிகழ்ச்சிகளால் இளங்கோவடிகள் இப்பண்புகளை விளக்குகிறார்.

சிலப்பதிகாரக் காப்பியம் கோவலன் – கண்ணகி திருமணத்துடன் தொடங்குகின்றது. முதலிரவில் கண்ணகியை மாசறு பொன்னே என்றும் வலம்புரி முத்தே என்றும் முருகன் வேல் விழியானது என்றும் உலவாக்கட்டுரை பாராட்டுகிறான். பொன்னும் மணியும் முத்தும் குலவணிகப் பொருட்கள். வேல் வழிபாடு நகரத்தார் இயல்பு. முருகன்வேல் அவன் சிந்தையில் முன்நிற்கிறது.

மாதவியின் நடன அரங்கேற்றம் மன்னர் அவையில் நிகழும்போது அதற்கு அழைக்கப் படும் சிறப்பினை உடையவன். அங்கு நடனம் ஆடிய மாதவியின் மாலையை 1008 கழஞ்சு பொன்கொடுத்து வாங்குநர் மாதவியை உரிமை கொள்ளலாம் என்று கூறியபோது உடனே பொன்கொடுத்து மாதவி மனையகம் புகும் செல்வ வளம் நிறைந்தவன். வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்ததுதான் அவன் செய்த முதல் தவறாகும். மாதவிக்கு மகள் பிறந்தபோது கடல்வணிகம் மேற்கொண்டு கலமேறிச் சென்ற தன் முன்னோரைக் கலங் கவிழ்ந்த போது காத்த மணிமேகலை தெய்வத்தின் பெயரிடுமாறு கோவலன் கூறுகிறான். நகரத்தாரின் தொழில், தெய்வபக்தி, நன்றி பாராட்டுதல், குழந்தைகட்குப் பெயரிடும் முறை ஆகியவற்றைக் கோவலன் வாயிலாக இளங்கோவடிகள் காட்டுகிறார்.

மணிமேகலை பிறந்தபோது வருவோர்க்குப் பொன்னும் மணியும் வாரி வழங்கிய வள்ளல்தன்மை உடையவன். மனைவியைப் பிரிந்து காடு சென்ற மறையவரையும் அவர் மனைவியையும் சேர்த்து வைக்கப் பெரும் பொருள் கொடுத்து யாகம் செய்ய உதவுகிறான். பொய்கூறிய மகனைச் சதுக்கபூதம் இழுத்துச் சென்றபோது கதறியழுத தாயின்நிலை கண்டு வருந்தித் தன்னுயிரைக் கொடுத்தும் அவனைக் காக்க முனைகிறான். பிறருக்கு உதவும் தியாக மனப்பான்மை உடையவன். அவன் பெருவீரன். மணிமேகலை பிறந்த நாளில் பரிசு பெற வந்த கிழவரை மதங்கொண்ட யானை வளைத்தபோது யானையோடு பொருது அவரை விடுவித்த கடக்களிறடக்கிய கருணை மறவன்.

உணர்ச்சி வசப்பட்டு முடிவெடுக்கும் இயல்புடையவன் கோவலன். மாதவியுடன் யாழ்வாசித்துப் பாடும்போது கண நேரத்தில் ஏற்பட்ட கருத்து மாறுபாட்டால் மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள் என்றும் சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிக் குலந்தருவான் பொருட்குன்றம் தொலைத்தேன் என்றும் மனம் வருந்திக் கண்ணகியிடம் பேசுகிறான். அதுபோல் சிலம்புள கொண்ம் என்று கண்ணகி கூறியதும் சிலம்பு முதலாக இழந்த பொருள் ஈட்டுதல் உற்றேன் என மதுரைக்குச் செல்ல நொடியில் முடிவெடுக்கிறான்.

தன் முடிவைத் தானே திறனாய்வு செய்கிறான். வறுமொழியாளரொடும் வம்பப் பரத்தரொடும் குறுநகை கோட்டிச் சிறுமுது குறைவிக்குச் சிறுமை செய்தேன். எழுக என எழுந்தாய் என் செய்தனை எனத் தன் அவசர முடிவுக்குக் கண்ணகி இணங்கியது ஏன் என வினவுகிறான். தன்னைத் திறனாய்வு செய்து மனமாற்றம் நிகழும் வேளையில் பொற்கொல்ல னுடைய சூழ்ச்சியால் பாண்டியனது அவசரத் தீர்ப்பால் கொலைப்படுகிறான். சேர நாட்டிற்கு வந்து சேரும் கண்ணகியை வானூர்தியில் வந்து அழைத்துச் செல்கிறான். நகரத்தார் குலத்திற்குரிய பண்புகளின் முத்திரைப் பாத்திரமாகக் கோவலன் விளங்குகிறான்.

கோவிந்தன், சக்தி வை.,
(26-6-1912 - . . .)

வைரவன் கோவில் - தெய்வநாயகர் வகுப்பு
இராயவரம்
இதழாசிரியர், பதிப்பாளர்

வை. கோவிந்தனுடைய இல்லத்துச் சூழல் இளமையிலேயே அவருக்குத் தமிழ்ப் பற்றையும் தமிழ் ஆர்வத்தையும் ஊட்டி வளர்த்தது. தந்தையார் இராமநாதன் செட்டியார் இலக்கிய ஆர்வலர். அவரிடம் மிகச்சிறந்த பெரிய நூலகம் இருந்தது. உ.வே.சாமிநாத ஐயர் போன்ற தமிழறிஞர்களை அழைத்துப் பாராட்டி அவர் நட்புக் கொண்டார். இத்தகைய சூழல் இவருக்கு நிறையப் படிக்க வாய்ப்பளித்தது. அதனால் தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற குறிக்கோள் வை.கோ. உள்ளத்தில் உருவாயிற்று.

Koviloor Digital Library

வை.கோ. ஒரு செல்வக் குடும்பத்தால் பிள்ளை கூட்டிக் கொள்ளப் பெற்றார். அந்தச் செல்வத்தின் பயனாக, அழகிய தமிழ்நூல் வெளியீட்டுக்கு முன்னோடி என்ற அரும்புகழை வை.கோ. பெற்றார். 'தனவணிகன்' இதழில் வெளிவந்த 'ஏழைபடும் பாடு' புதினத்தை மிக விரும்பிப்படித்த



சக்தி வை. கோவிந்தன்

வை.கோ. கவியோகி சுத்தானந்த பாரதியின் நூல்களை வெளியிடுவதற்கென்றே 'அன்பு நிலையம்' நிறுவனத்தை நண்பர்களுடன் கூட்டு நிறுவனமாகத் தோற்றுவித்தார். 'ஏழைபடும்பாடு' இதன் முதல் வெளியீடாகும். தமிழில் புதிய புதிய துறைகளில் புத்தம்புது நூல்கள் வெளியிட வேண்டும் என்ற பெருவிருப்பத்துடன் சக்தி காரியாலயம் தொடங்கப்பெற்றது. 'பெங்குவின், பெலிகன் போன்ற வெளிநாட்டுப் பதிப்பக வெளியீடுகள் போலச் சிறந்த அமைப்பு, எடுப்பான தோற்றம், கண்ணைக் கவரும் கட்டமைப்புக் கொண்டதாகச் சக்தி வெளியிட்ட நூல்கள் அமைந்தன. போர்க்காலத்தில் ரஷ்யாவைப் பற்றியும் அரசியல் பிரச்சனைகள் குறித்தும் துணிந்து பல நூல்களை வெளியிட்டார். டால்ஸ்டாயின் நூல்கள் பலவற்றைத் தமிழில் வெளியிட்டார். வீரசவர்க்காரின் 'எரிமலை'யை மிகுந்த துணிவோடு தமிழில் வெளிவரச் செய்தார். மு. அருணாசலம் உலோகங்கள், காய்கறிகள் போன்ற புதிய துறைகளில் நூல்கள் எழுத அவற்றைப் பெரும் பொருட் செலவு செய்து வெளியிட்டார்.

மலிவுப் பதிப்புக்களின் முன்னோடியாக வழிகாட்டியவர் புத்தக வெளியீட்டு வேந்தர் வை.கோ. மகாகவி பாரதியார் கவிதைகள் முழுவதையும் 500 பக்கங்களில் அச்சிட்டு ஒன்றரை ரூபாய் விலைவைத்து வெளியிட்டார். 550 பக்கங்கள் கொண்ட திருக்குறள் பரிமேலழகர் உரையை ஒன்றரை ரூபாய்க்கு வழங்கினார். கம்ப ராமாயணத்தைக் காண்டம் காண்டமாக வெளியிடும் திட்டம் தொடங்கி இரண்டு காண்டங்களை ஒவ்வொன்றும் இரண்டு ரூபாய்க்கு வெளியிட்டார். முக்கால் ரூபாய் விலையில் நாவல்களை வெளியிட்டார்.

அவர் தொடங்கி நடத்திய 'சக்தி' மாத இதழ் வெளிநாட்டு வெளியீடுகளை விஞ்சும் வகையில் அழகிய அமைப்பு, உயர்ந்த தாள், தெளிவான அச்சு, கண்ணைக் கவரும் படங்களுடன் வெளிவந்தது. இன்றும் புதிது போல் தோன்றும் எழிலும் தரமும் உடையதாகச் சக்தி மாத இதழ் அமைந்துள்ளது.

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் முதல் தலைவராகவும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைத்தலைவராகவும் வை.கோ. தொண்டாற்றினார். நிறையப் படிக்கும் இயல்புடைய அவர் தென் இந்தியப் புத்தகத் தொழில் கழகத்தின் பொருளாளராகவும் தலைவராகவும் இருந்த காலத்தில், தமிழகத்தில் ஒவ்வொரு இல்லத்திலும் ஒரு நூல் நிலையம் இருக்க வேண்டும் என்ற குறிக்கோளை நிறைவேற்றப் பெரிதும் முயற்சி செய்தார்.

வை.கோ. தம் வாழ்நாளையெல்லாம் தமிழ் வளர்ச்சிக்காகச் செலவிட்டார். அவருடைய மூச்சிலும் பேச்சிலும் தமிழ்மணம் கமழ்ந்தது. தமிழ்ப்புத்தக வெளியீட்டில் 'சக்தி' காலம் முன்னோடிக் காலம் என்பது தேற்றம்.

கோவிலூர்த் திருமடம்

சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடியிலிருந்து மதுரைச் சாலையில், 2 கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் ஒரு சிற்றூர் கோவிலூர். இவ்வூருக்குச் சமிவனக்ஷேத்திரம், ஸ்ரீ வல்லபம் என்ற வடமொழிப் பெயர்களும், வன்னிவனம், கழனிவாயில், சாலிவாடி என்ற தமிழ்ப் பெயர்களும் முன்னர் வழங்கின.

இவ்வூரின் வரலாற்றைப் புராண அடிப்படையில் காட்டுவன இருநூல்கள். ஒன்று, திருவிடைமருதூர் பிச்சு சாத்திரிகள் பாடிய சமிவன மான்மியம். மற்றொன்று, மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய கோவிலூர்ப் புராணம்.

இங்கு கோவில் கொண்டருளும் பெருமான் 'திரிபுவனேசுவரர்', 'இராசகட்க பரமேசுவரர்' என்னும் வடமொழிப் பெயர்களாலும், கொற்றவாளீசர் என்ற தமிழ்ப் பெயராலும் போற்றப்படுகின்றார். அம்பிகையின் திருநாமங்கள் 'திரிபுவனேசுவரி', 'சாலிவாடீசுவரி', 'திருநெல்லை நாயகி' என்பனவாம்.

Koviloor Digital Library

சுயம்பு லிங்கமாகிய கொற்றவாளீசருக்குச் செம்புறாங் கல்லினால் திருவுண்ணாழி (கருவறை) மட்டும் கட்டி, முன்னே கூரைக் கொட்டகை அமைத்து, இதனை ஒரு கோவிலாக முதன்முதலில் வீரபாண்டியன் எனும் மன்னன் அமைத்தான் எனத் தலபுராணம் கூறுகிறது.

இன்றையக் கருங்கற்கோவிலின் வரலாறும், கோவிலூர்த் திருமடத்தின் வரலாறும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. அவை, பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தொடங்குகின்றன.

*1791*இல் காரைக்குடியில் பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த மெய்யப்ப செட்டியார் – வள்ளியம்மை ஆச்சிக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அப்பிள்ளைக்கு முத்துராமலிங்கம் என்று பெற்றோர் பெயரிட்டனர். ஆனால் இளமையிலேயே, ஞானநெறியில் நாட்டம் கொண்டவராக விளங்கிய முத்துராமலிங்கரைக் கண்ட, வடநாட்டில் இருந்து வந்த யோகி ஒருவர், 'இவரைக் குழந்தையென நினைக்க வேண்டாம். உலகினர்க்கு உபதேசிக்கவும், ஞான அனுக்கிரகம் செய்யவுமே அவதரித்த ஆண்டவர் இவர்' என்று இவரைப் பற்றிக் கூறினாராம்.

அதுமுதல் நகரத்தார் அனைவரும் இவரை இயற்பெயர் சுட்டாது 'ஆண்டவர்' என்றே அழைக்கத் தொடங்கினர். ஆண்டவரின் தந்தை மெய்யப்ப செட்டியார் தஞ்சை மாவட்டம் சிக்கலில் தொழில் செய்து கொண்டிருந்தார். சிக்கலுக்கு அருகே உள்ள பொருள்வைத்த சேரியில் உகந்தலிங்க சுவாமிகள் என்ற ஞானச் செல்வர் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஆண்டவர் அவரைக் குருவாகக் கொண்டு, அவரிடம் ஞானநூல்கள் அனைத்தையும் முறையாக மூன்றாண்டுகள் பாடம் கேட்டுத் தம் பதினாறாவது வயதிலேயே வேதாந்த வித்தகராக விளங்கினார்.

ஒரு முறை ஆண்டவர் சிக்கலில் இருந்து காரைக்குடி செல்ல நேர்ந்தபோது, தம் குருவிடம் விடைபெறச் சென்றார். அப்போது உகந்தலிங்க சுவாமிகளின் மனைவியார் 'காரைக்குடிக்கு அருகே உள்ள காடுகளில் மயில்கள் மிகுதி எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே, நீ காரைக்குடி சென்று திரும்பும்போது 2 மயில் குஞ்சுகள் கொண்டுவா' என ஆணையிட்டார்.

இவ்வாணையை நிறைவேற்றுவதற்காக, ஆண்டவர், தம் நண்பர் ஒருவருடன் காரைக்குடிக்கு மேற்கே இருந்த கழனிவாயில் காட்டிற்கு மயில் குஞ்சுகள் பிடிக்கச் சென்றார். அப்போது காட்டிற்குள் தனியாக இருந்த திருநெல்லை அம்மன் உடனாய கொற்றவாளீசர் கோவிலை அவர் கண்டு வழிபட்டார். அக்கோவில் அவரை மிகுதியும் ஆட்கொண்டது.

எனவே, அதன் பிறகு அவர் காரைக்குடியில் இருந்த காலத்திலெல்லாம், திங்கள், வெள்ளிக் கிழமைகளில் அக்கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்து வருவதை வழக்கமாகக் கொண்டார். ஒரு முறை பெருமழைபெய்த காரணத்தால் ஆண்டவர் ஊருக்குத் திரும்ப இயலாமல் அங்கேயே தங்க நேர்ந்தது. அப்போது மழை காரணமாகக் கோவில் கொட்டகை சரிந்தது. அதனைக் கண்ட ஆண்டவர் அக்கோவிலைக் கருங்கற் கோவிலாகத் திருப்பணி செய்து கட்டி முடிக்க அப்போதே முடிவு செய்து கொண்டார்.

ஆண்டவர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டவுடன் கோவிலூரில் ஒரு மடத்தை நிறுவி, அம்மடத்தில் பயில விரும்புவோர்க்கு வேதாந்தம் சொல்லித் தரத் தொடங்கினார். தமிழ்நாட்டில் சைவ – வைணவங்களுக்குப் பல மடங்கள் இருக்கின்றன. ஆனால் வேதாந்தக் கொள்கைக்கு, அதுவும் தமிழில் வேதாந்தக் கொள்கையை விளக்கி உரைத்துப் பரப்புவதற்கு மடம் இல்லை. இக்குறையை இக்கோவிலூர்த் திருமடம் நிறைவு செய்து, ஒரு சிறந்த மடமாக விளங்கி, வேதாந்த தத்துவ வரலாற்றில் தனி இடம் பெற்று மிளிர்கிறது.

இங்கு வேதாந்தம் பயில வரும் மாணாக்கருக்கு 'நாநாஜீவவாதக் கட்டளை'யில் தொடங்கி 'ஞான வாசிட்டம்' ஈறாகப் பதினாறு வேதாந்த நூல்களைப் பயில்விப்பது என ஒரு பாடத்திட்டத்தைக் கோவிலூர்த் திருமடம் வரையறை செய்துள்ளது. இவ்வாறான ஓர் ஆதீனத்தையும், திருமடத்தையும் நிறுவிய ஆண்டவர், தம் நீண்டநாள் திட்டமாகிய கோவிற் கருங்கல் திருப்பணி, மடத்திற்கு வேண்டிய கட்டிடத் திருப்பணிகள் ஆகியவற்றை நகரத்தார் பொருளுதவியோடு *1808*இல் தொடங்கினார். மேலும், இயல்பாகவே ஆலயத் திருப்பணியில் ஈடுபாடு மிக்க நகரத்தாரை, இவர் தம் அருளாணையினால் நெறிப்படுத்தி, அவர்கள் வாழும் ஊர்களெங்கும் சிவன் கோவில் கட்டி வழிபடுமாறு தூண்டினார். அவர் காலத்திலேயே கல்லல், கானாடுகாத்தான், சாக்கோட்டை போன்ற பல ஊர்களில் கற்கோவில் திருப்பணிகள் செய்திருக்கிறார்.

இன்று செட்டிநாடெங்கும் சிவாலயங்கள் காணப் பெற ஆண்டவரே அடிப்படைக் காரணம். இதனை, இவரது மாணவராகிய, சேந்தினி பழநியப்ப ஐயா எழுதிய,

"மடம் உண்டோ? சிவாலயங்கள் மிகுதி உண்டோ?
———————————————————
வடகயிலைக்கு இறைவனெனும் முத்துராம
வள்ளல்திருக் கழநிநகர் வாராமுன்னம்"

என்ற பாடல் தெளிவு படுத்தும்.

Koviloor Digital Library

ஆண்டவரால் நிறுவப் பெற்ற கோவிலூர் ஆதீனத்தின் தலைமைப் பொறுப்பை, நகரத்தார் மரபில் பிறந்த துறவிகளே ஏற்று நடத்துவது மரபாயிருக்கிறது. ஆண்டவர் தம் இறுதிக் காலத்தை முன்கூட்டியே அறிந்து, தாம் முத்தி அடைவதற்குச் சிறிது காலம் முன்னதாகவே ஆதீனத் தலைமைப் பொறுப்பைத் துறவு ஆண்டவர் எனப் பெயர் பெற்ற அருணாசல ஞானதேசிகரிடம் ஒப்படைத்தார். அதன் பின்னர் ஆண்டவர் 1848 இல் பங்குனி உத்தரத்தன்று பரிபூரண மடைந்தார்.

தேவகோட்டையில் 1815இல் இலுப்பைக் குடிக் கோவில் பிரிவைச் சேர்ந்த வினைதீர்த்தான் செட்டியார் – முத்தாத்தாள் ஆச்சியின் இரண்டாவது மகனாகப் பிறந்தார் அருணாசலம். இவர் தமது 19 ஆவது வயதிற்குள் கோவிலூர் ஆண்டவரிடம் சீடராகி, வேதாந்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். அதன் விளைவாகத் தம் 19 ஆவது வயதில் துறவு பூண்டார். தமது 32 ஆவது வயதில் 1847 இல், தமது குருவின் ஆணையை ஏற்று, ஆதீனத்தின் இரண்டாவது மடாதிபதி யானார். தம் 34ஆவது வயதில், ஆடிப் பூரத்தன்று 1849 இல் பரிபூரணமடைந்தார் துறவு ஆண்டவர்.

துறவு ஆண்டவரின் பெற்றோருக்கு 1823இல் ஓர் ஆண் மகவு பிறந்தது. சிதம்பரம் என்ற பெயரோடு வளர்ந்த அவர், தம் அண்ணனாகிய துறவு ஆண்டவரின் வாழ்க்கை நெறியைப் பின்பற்றித் தாமும் இளமையிலேயே ஞான நாட்டம் கொண்டவராகிக் கோவிலூர் சென்றார். கோவிலூர் ஆண்டவரிடம் மாணவராகி, 12 ஆண்டுகள் வேதாந்த நூல்களைப் பயின்றார். 1848 இல் துறவு பூண்டு மடத்திலேயே தங்கிவிட்டார். அப்போது அவர் கருணாநிதி சுவாமிகள் எனும் திருப்பெயரைச் சூட்டிக் கொண்டார்.

துறவு ஆண்டவர் பரிபூரணமடைந்ததும் 1849இல் இவர் மூன்றாவது ஆதீனகர்த்தர் ஆனார். இருபத்தேழாண்டுகள் அருளாட்சி செய்த கருணாநிதி சாமிகள் 1876 இல் பரிபூரணம் அடைந்தார். இவரது ஆட்சிக்காலத்தில் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகளைக் கோவிலூர் மடத்திற்கு அழைத்து, அவர்கள் அங்கிருந்த வண்ணம் செட்டிநாடெங்கும் சென்று சைவம் பரப்பத் துணை செய்தார். மேலும், இவரது ஆட்சிக் காலத்தில்தான் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அழைத்துக் 'கோவிலூர்ப் புராணம்' எழுதச் செய்து அரங்கேற்றினார்.

காரைக்குடியைச் சேர்ந்த, 1838 இல் பிறந்து, கோவிலூர்த் திருமடத்தில் மாணவராகி, வேதாந்தம் கற்று, துறவு மேற்கொண்ட இராமசாமி ஞானதேசிகர் இம்மடத்தின் நான்காவது பட்டமாக 1876 இல் அமர்ந்து ஏழு ஆண்டுகள் அருளாட்சி செய்து 1883 இல் பரிபூரணமடைந்தார்.

புதுவயல் அருணாசலம் செட்டியார் – உமையாள் ஆச்சிக்கு 1848இல் பிறந்தவர் வீரப்பன். இவர் தம் சிறு வயதிலேயே ஞான நாட்டம் மிகுந்து, கோவிலூரரை அடைந்து, கருணாநிதி சுவாமிகளிடம் மாணவராகி வேதாந்த நூல்களைப் பயின்று, துறவு மேற்கொண்டார். 1883 இல் இவர் கோவிலூர்த் திருமடத்தின் ஐந்தாவது மடாதிபதியானார். 28 ஆண்டுகள் அருளாட்சி செய்த இவரது ஆட்சிக்காலம் கோவிலூர்த் திருமடத்தின் பொற்காலம் எனலாம்.

1808 இல் ஆண்டவரால் தொடங்கப்பெற்ற கோவிலூர்த் திருக்கோவில் மற்றும் திருமடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள், அடுத்தடுத்த மடாதிபதிகள் காலத்தில் மெதுவாக வளர்ந்து கொண்டிருந்தன. வீரசேகர ஞானதேசிகர் என்ற திருநாமத்துடன் அருளாட்சி செய்த திருக்களர் ஆண்டவர் காலத்தில் இத்திருப்பணிகள் விரைவு படுத்தப்பட்டு முற்றுப் பெற்றன.

இவரது ஆட்சிக் காலத்தில் திருநெல்லை அம்மன் உடனாய கொற்றவாளீசர் கோவிலுக்கு முதல் திருக்குட நன்னீராட்டு விழா 1908 இல் சிறப்பாக நடைபெற்றது. தாமே சிற்பக்கலை வல்லுநராகத் திகழ்ந்த இவர், தம் மேற்பார்வை யாலும், ஆலோசனைகளாலும், இவ்வாலயத்தைச் சிற்பக்கலைத்திறம் செறிந்த ஒருகலைக் கோவிலாக்கினார் எனத் தமிழ்க்கடல் இராய.சொ. எழுதுகிறார்.

தமிழ்நாட்டில் வேறு எந்தக் கோவிலிலும் இல்லாத வண்ணம், இக்கோவில் திருப்பணிக்கு மூல முதல்வரான முத்துராமலிங்க ஆண்டவர் வடிவத்தை, அவர் தரையில் விழுந்து வணங்கிய நிலையில், கொடி மரத்திற்கு அருகே சிலையாக அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் தனித்தன்மையைக் காஞ்சி காமகோடி பீடாதிபதி செயேந்திர சரசுவதியே பாராட்டியிருக்கிறார்.

கோவிலூர்த் திருமடம் தொடங்கியதிலிருந்தே, கர்நாடகத்தில் இருப்பதும், ஆதிசங்கரரால் நிறுவப்பட்டதுமாகிய சிருங்கேரி மடத்தைக் குருபீடமாகக் கருதி வருவது மரபு. திருக்களர் ஆண்டவர், நகரத்தாரிடம் நன்கொடை பெற்றுச் சிருங்கேரி மடத்தில் சாரதாம்பாள் திருக் கோவிலைக் கருங்கற் கோவிலாகக் கட்டச் செய்தார்.

மேலும், சோழநாட்டில் உள்ளதும், திருஞான சம்பந்தரால் பாடல் பெற்றதுமான திருக்களர் ஆலயத்தைப் புதுப்பிக்கும் பணியிலும் இவர் மிகுந்த ஆர்வம் காட்டி, நகரத்தார் பொருள்

Koviloor Digital Library

உதவியோடு அப்பணியைச் செய்து முடித்தார். அதனால் தான் இவருக்குத் திருக்களர் ஆண்டவர் என்ற பெயர் ஏற்பட்டது. இவர் 1911இல் வைகாசி விசாகத்தன்று திருக்களரில் பரிபூரணமடைந்தார்.

1870இல் இராயவரம் நாச்சியப்ப செட்டியார் – ஏகம்மை ஆச்சி மகனாகப் பிறந்து, தேனிபட்டி அருணாசலம் செட்டியார் – உமையாள் ஆச்சியால் பிள்ளைகூட்டிக் கொள்ளப்பட்டவர் அண்ணாமலை. இவரைப் பிள்ளை கூட்டிக் கொண்ட தந்தை அடிக்கடி கோவிலூர் மடத்திற்குச் செல்வார். அவரோடு சென்ற அண்ணாமலை, திருக்களர் ஆண்டவரிடம் மாணவராகி வேதாந்தம் கற்றுத் துறவு பூண்டார். இவர் 1911இல் ஆறாவது பட்டமாக அமர்ந்து 1919 வரை அருளாட்சி செலுத்திப் பின்னர் பரிபூரணமடைந்தார்.

தேவகோட்டையில் 1882 இல் சுப்பிர மணியன் செட்டியார் – சிட்டாள் ஆச்சி மகனாகப் பிறந்தவர் மகாதேவன். இவருக்குத் திருமணமாகி, ஓர் ஆண் மகவும், பெண் மகவும் பிறந்த பின், இவர் கோவிலூர் சென்று, அப்போது பட்டத்திலிருந்த திருக்களர் ஆண்டவரின் சீடரானார். இவர் மகாதேவ ஞானதேசிகர் எனும் பெயரோடு 1919 இல் கோவிலூரின் ஏழாவது பீடாதிபதியானார். 27 ஆண்டுகள் அருளாட்சி செலுத்திய இவர், தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் சோமசுந்தர ஞானதேசிகரை எட்டாவது பட்டமாக 1946 இல் அமர்த்தினார். அதன் பின்னர் 1947 இல் இவர் பரிபூரணமடைந்தார்.

1890 இல் பள்ளத்தூரில் பிறந்து, காரைக்குடிக்குச் சுவீகாரம் சென்றவர் சோமசுந்தரம். 1946 இல் எட்டாவது பட்டமாக அமர்ந்த இவர் 25 ஆண்டுகள் அருளாட்சி செய்த பின் 1971 இல் பரிபூரணமடைந்தார்.

1908 இல் நாட்டரசன்கோட்டையில் பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த வேலாயுதம் செட்டியார் – முத்துக்கருப்பி ஆச்சிக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் கருப்பையா. 1917 இல் இவர் காரைக்குடி வீ.சித.இராம. சிதம்பரம் செட்டியாருக்குப் பிள்ளையாக வந்தார். இங்கே இவருக்குச் சூட்டப் பெற்ற பெயர் இராமநாதன்.

இவருடைய இளமைக்காலத்தில் காரைக் குடியில் தொடங்கப்பெற்ற இந்து மதாபிமான சங்கம், தனவைசிய ஊழியர் சங்கம், காரைச் சிவனடியார் திருக்கூட்டம் ஆகியவற்றில் சேர்ந்து சமுதாயத் தொண்டாற்றினார். காரைச் சிவனடியார் திருக் கூட்டத்தின் செயலாளராகவும் பணியாற்றினார். தமிழ்க்கடல் இராய.சொ.வுடன் சேர்ந்து காங்கிரசு இயக்கத்தில் உறுப்பினர் ஆகி நாட்டுத் தொண்டாற்றினார். வள்ளல் அழகப்பரிடம் தனி உதவியாளராகவும் சிலகாலம் செயல்பட்டிருக்கிறார்.

சிறிது காலம் இல்வாழ்வில் இருந்த பின்னர் 1943 இல் துறவு பூண்டார். 1948 இல் இராமநாதஞான தேசிகர் என்ற திருநாமத்துடன், கோவிலூரின் கிளைமடமான திருவண்ணாமலை ஈசான்ய மடத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அங்கு 1958 இல் சேவாசிரமம் என்ற கல்வி நிறுவனத்தை ஏற்படுத்தினார். இதன் சார்பில் 1960 இல் ஓர் உயர் தொடக்கப் பள்ளியையும் ஏற்படுத்தினார். இவர் காலத்தில் ஈசான்ய மடத்தில் சிறந்த நூலகம் ஒன்றை உருவாக்கினார்.

16–2–1971 இல் இவர் கோவிலூரின் 9 ஆவது மடாதிபதி ஆனார். இவரது அருளாட்சிக் காலத்தில் திருக்கோவில், மடம் ஆகியவற்றின் நிருவாகத்தைச் சீரமைத்த பெருமை இவருக்குரியது. 'கோவிலூர் ஆண்டவர் மன்றம்' என்ற அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி நிருவாகத்தை அதன் வசம் ஒப்புவித்தார். அம்மன்றத்தின் தலைவர் மடாதிபதி, இரு துணைத் தலைவர்கள், ஒரு செயலர், ஒரு துணைச் செயலர், ஒரு பொருளாளர், எட்டு உறுப்பினர் கொண்ட இந்த அமைப்பு 1972 முதல் நிருவாகத்தை மேற்கொண்டு நடத்திவருகிறது.

கோவிலூர்த் திருக்கோவில் சிவகங்கை மன்னர் குடும்ப அறநிலைய ஆளுகைக் குட்பட்டது. இராமநாத ஞான தேசிகர் காலத்தில் சிவகங்கை மன்னரிடம் இசைவு பெற்றுக் காரைக்குடி மு.மெ. முத்துராமன் அவர்களைக் கௌரவக் கண்காணிப்பாளராக அமர்த்திக் கோவில் அலுவல்களைக் கவனித்து வரச் செய்தார்.

மேலும் இவர் ஆட்சிக் காலத்தில் கோவிலூர்த் திருக்கோவிலைப் பழுது பார்த்து, 1978 இல் இரண்டாவது திருக்குட நன்னீராட்டு விழாவைச் சிறப்பாக நடத்தினார்.

அரிமழத்தில், பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த செல்லப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகனாக 1928 இல் பிறந்தார் இராமநாதன். இவர் 1968 இல் துறவு பூண்டார். இராமநாத ஞான தேசிகருக்குப் பின் கோவிலூரின் 10 ஆவது பட்டம் ஆனார்.

தேவகோட்டையில் இளையாத்தங்குடி ஒக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த குடும்பத்தில் பிறந்த சாத்தப்பன், சிவஞான தேசிக சுவாமிகள் எனும் திருநாமத்துடன் சிறிது காலம் பொறுப்பேற்றிருந்தார்.

Koviloor Digital Library

பள்ளத்தூர் இரணிக் கோவில் குடும்பத்தைச் சேர்ந்த அண்ணாமலை, காசிவிசுவநாத ஞானதேசிகர் என்ற பெயருடன் 28–9–86 இல் கோவிலூரின் 11 ஆவது பட்டமாகப் பொறுப்பேற்று 9 ஆண்டுகள் அருளாட்சி நடத்தினார். இவர் 'சிந்தனைப் பூங்கா' எனும் ஆன்மீக இலக்கிய அமைப்பு ஒன்றை உருவாக்கி, அதனை நடத்தும் பொறுப்பினைப் பொற்கிழிக் கவிஞர் காசிஸ்ரீ அரு சோமசுந்தரம் அவர்களிடம் ஒப்படைத்தார்.



நாச்சியப்ப ஞான தேசிகர்

காசிவிசுவநாத ஞான தேசிகர் 1995 ஆம் ஆண்டு ஜூன்மாதம் முத்தியடைந்தார். 5–7–1995 அன்று ஆதீனகர்த்தராகப் பெறுப்பேற்றுக் கொண்டிருப்பவர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளாவார். காரைக்குடியில் முத்துராமலிங்க ஆண்டவர் குடும்பத்தைச் சேர்ந்த ஆறாவது தலைமுறைப் பேரன் தான் நாச்சியப்பராவார். இவர் தம் 15 ஆவது வயதில் சென்னை சென்று கலாசேத்திரா நிறுவனர் ருக்மணி அருண்டேல் ஆதரவில் கல்வியும், பின்னர் அச்சுத் தொழிலும் கற்று, கலாசேத்திராவின் புத்தக வெளியீட்டுத் துறையில் பணியாற்றினார். பின்னர் அம்மையார் இவரையே அத்துறையின் உரிமையாளராக்கி விட்டார். அச்சுக் கலையிலும், நிழற்படக் கலையிலும் கைதேர்ந்த இவர் உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று வந்தவர். புத்தக வெளியீட்டால் பெரும் பொருள் ஈட்டியவர்.

5–7–95 அன்று பதவி ஏற்ற போதே ஒரு மழலையர் பள்ளியைக் கோவிலூரில் இவர் தொடங்கினார். 31–7–95 முதல், இடையே நீண்ட காலமாக நடைபெறாதிருந்த வேதாந்தப் பாட வகுப்புக்களை நடத்த ஆவன செய்தார். "சனாதன தரும உலகப் பல்கலைக் கழகம்" ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டு, அதன் உறுப்புக்களாக, திருமுறைக் கல்லூரி, நாதசுர இசைக்கல்லூரி, வேத ஆகமக் கல்லூரி ஆகியவற்றை 5–10–95 அன்று கோவிலூர் வளாகத்தில் தொடங்கியுள்ளார்.

இவர் தாமே திரட்டிய பெரும் பொருளை இப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளார்.

நகரத்தார் சமூகத்திற்கு இன்றியமையாத திருமடம் கோவிலூர். தங்கள் முன்னேற்றம் கருதியும் வாழ்க்கை முறையில் மாறுதல்கள் குறித்தும் 96 ஊர் நகரக் கூட்டங்களைக் கோவிலூரில் கூட்டுவதே மரபு எனச் செவி வழிச் செய்திகள் கூறுகின்றன. அம்மரபை யொட்டிக் காரைக்குடித் தனவைசிய ஊழியர் சங்கத்தின் முயற்சியால் 1929 இல் ஒரு முறையும், காசி நகரச் சத்திர நிருவாகம் குறித்து 1969 இல் ஒரு முறையும், நகரத்தார் திருமண நடைமுறை பற்றிக் கலந்து பேச 1973 இல் ஒருமுறையும், இராமேசுவரம் நகரச் சத்திர நிருவாகம் குறித்து 1975 இல் ஒருமுறையும் அனைத்து ஊர் நகரத்தார் கூட்டம் கோவிலூரில் நடைபெற்றுள.

கோவிலூர் மடாலயம், கீழ்க்கண்ட மடாலயங்களைக் கிளை மடாலயங்களாகப் பெற்றுளது.

1. பொருள் வைத்தசேரி – கோ.ஆ.பொ. மடாலயம். (தஞ்சாவூர் மாவட்டம்)
2. திருவண்ணாமலை – ஈசான்ய மடாலயம்.
3. திருக்களர் – கோ.ஆ. வீரமடாலயம்.
4. சிதம்பரம் – கோ.சித. மடாலயம் என்ற பொன்னம்பல சுவாமிகள் மடாலயம்.
5. திருப்பூவணம் – வேதாந்த மடாலயம். (இராமநாதபுரம் மாவட்டம்)
6. வளவனூர் – சண்முக சுவாமிகள் மடாலயம். (கடலூர் மாவட்டம்)
7. மேட்டுப்பாளையம் – சபாபதி சுவாமிகள் மடாலயம். (வேலூர் மாவட்டம்)
8. எறும்பூர் – கோ.சித. மடாலயம் என்ற தத்துவராய (கடலூர் மாவட்டம்) சுவாமிகள் மடாலயம்.
9. எறும்பூர் – கோ.ஆ. மடாலயம்.
10. திருவண்ணாமலை – பவழக் குன்று மடாலயம் என்ற அழகானந்த சுவாமிகள் மடாலயம்.
11. காரியானூர் – சாந்தி ஆசிரமம். (திருச்சி மாவட்டம்)

கோவிலூர்த் திருமடத்தில் ஒரு சிறந்த நூல்நிலையம் இருக்கிறது. பழங்கால நூல்கள் பல இங்கு பேணி வைக்கப்பெற்றுள. ஏட்டுச் சுவடிகள் பலவும் பாதுகாக்கப்படுகின்றன. வேதாந்த நூல்கள் பலவற்றுக்குத் தமிழாக்கமும், தமிழ் விளக்கவுரையும் நூல் வடிவில் வெளிவரக் கோவிலூர் மடம் துணைபுரிந்துளது.

Koviloor Digital Library

நகரத்தாரால் நிறுவப்பட்டதும், நகரத்தாரே தொடர்ந்து ஆதீனத் தலைமை ஏற்கும் மரபுடையதும், நகரத்தார் வரலாற்றில் சிறப்பிடம் பெறுவதுமான, இருநூற்றாண்டு வரலாறு உடைய ஒரு மடாலயம் கோவிலூர்த் திருமடமாகும்.

கோவை நாட்டுக்கோட்டை நகரத்தார் தர்மநிதி

கோயம்புத்தூரில் வாழ்ந்து வந்த நகரத்தார் அண்மையில் உள்ள பேரூர் சிவபெருமானுக்குத் தொண்டு செய்து வழிபட ஏறத்தாழ நூறு ஆண்டுகட்கு முன் இந்த அமைப்பை ஏற்படுத்தினர். நந்தவனம், பசுமடம், விடுதி ஆகியவற்றை உருவாக்கிப் பச்சை நாயகியுடன் இருந்தருள் செய்யும் பட்டீஸ்வரப் பெருமானுக்கும் மற்றும் உள பரிவார தெய்வங்கட்கும் நாள் தோறும் சாயரட்சை பூசைக்கு மலர்கள் கொடுத்து வழிபட்டு வந்தனர். தொடக்கத்தில் சில குடும்பத்தார் நிதியைக் காத்து இடையறாது அறம் ஓம்பி வந்தனர். 1955 இல் கோவையிலுள்ள அனைத்து ஊர் நகரத்தார்களிடம் பொதுவாக இந்நிதி ஒப்படைக்கப் பெற்றது. அன்று முதல் ஆண்டுக்கு இருவர் செயலராகத் தேர்ந்தெடுக்கப் பெறுகின்றனர். ஒருவர் தலைமைப் பொறுப்பும் மற்றவர் துணைப் பொறுப்பும் ஏற்றுச் செயல்படுகின்றனர். அடுத்த ஆண்டு துணைப் பொறுப்பாளர் தலைமைப் பொறுப்பேற்க, புதிதாகத் தேர்வு செய்யப்படும் செயலர் துணைப் பொறுப்பாளராகப் பணியாற்றிப் பொது அறம் பேணி வருகின்றனர்.

பிள்ளையார் நோன்புக்கு நகரத்தார்களுக்கு ஆவாரம்பூ, கண்ணுப்பூக் கட்டிக் கொடுக்கின்றனர். கோவையில் ஏறத்தாழ 1200 நகரத்தார் குடும்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் பூ வழங்கப் பெறுகின்றது. ஆருத்திரா தரிசனத்தன்று நகரத்தார்களை மடத்தில் தங்கவைத்து விருந்தளித்து சுவாமி தரிசனம் செய்ய உதவுகின்றனர். பங்குனி உத்தர விழாவில் சந்திரசேகரர் சௌந்தரவல்லி அம்மையோடு மடத்துக்கு எழுந்தருள அபிஷேகமும் வழிபாடும் நடைபெறும். மகார் நோன்பு உற்சவத்தில் சுவாமி அம்மன் பெருமாள் ஆகியோரை எழுந்தருளச் செய்து அம்புபோட வைத்தல் நிகழும். எல்லா நிகழ்ச்சிகளிலும் நகரத்தார்க்கு விருந்து நடைபெறும். 1980 முதல் தெப்ப உற்சவமும் நடைபெற்று வருகிறது. கனகசபை நடராசருக்குக் கருங்கல் பீடம் இலட்ச ரூபாய் மதிப்பில் உருவாக்கப் பெற்றது. ஆண்டு தோறும் பங்குனி உத்தர அபிஷேக விழாவன்று இரவு ஏலம் நடைபெறும். நகரத்தார்கள் இவ்வகையில் தர்மநிதியைப் பெருக்கி வருகின்றனர்.

கோனாபட்டு

நீண்டகரைப் பிரிவைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து உ. சிறுவயல், பலவான்குடி, ஆத்தங்குடி வழியாக 20 கிலோ மீட்டர் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 6 கோவில்களைச் சேர்ந்த 463 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற நகரச் சிவன் கோவில் உள்ளது. 1888 இல் சொக்கப்ப செட்டியார் குடும்பத்தாரால் திருப்பணி செய்யப்பெற்றது. இக்கோவிலில் பட்டினத்தார் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிற்பங்கள் அமைந்திருப்பது சிறப்பாகும். நகரத்தாரால் கட்டப்பெற்று 6–9–1995 அன்று குடமுழுக்கு நிகழ்த்தப் பெற்ற ஐயப்பன் கோவில் ஒன்றும் இவ்வூரில் உள்ளது. பெருமாள் கோவில் கட்ட இவ்வூர் மு.பெ.மு. குடும்பத்தார் இடம் கொடுத்துள்ளனர். அக்கோவிலில் நிறுவ இருக்கும் சிலை இப்போது திருமயம் பெருமாள் கோவிலில் இருக்கிறது.

பிள்ளையார்பட்டி நகரத்தார் கட்டி நிருவகித்து வரும் கற்பக விநாயகர் கோவில், இலுப்பைக்குடி நகரத்தார்கள் கட்டி நிருவகித்து வருகின்ற தான்தோன்றியீசர் பிள்ளையார் கோவில், ஊரார் நகரத்தாருக்குப் பொதுவான சுப்பிரமணியர் கோவில், கொப்புடையம்மன் கோவில் ஆகியவையும் இவ்வூரில் உள. கொப்புடை யம்மன் கோவிலில் அம்மன் அருவ நிலையிலேயே வழிபடப் பெறுவது தனிச்சிறப்பு.

இங்கு குடி தண்ணீருக்குப் பிள்ளையார்பட்டி நகரத்தாரின் அழகப் பெருமாள் ஊருணியும், பிற தேவைகட்கு இளையாத்தங்குடி நகரத்தாரின் அம்மன் சேங்கை, இலுப்பைக் குடிநகரத்தாரின் புது ஊருணி ஆகியவையும் பயன்படுகின்றன. அழகப் பெருமாள் ஊருணிக்கு ஏறத்தாழ ஒருகிலோ மீட்டர் நீளம் மூடப்பெற்ற கற்குழாய் அமைத்து, பாதுகாக்கப்பெற்ற குடிநீர் கிடைக்கும் வண்ணம் அக்காலத்திலேயே அமைத்துள்ளமை நினைந்து போற்றத் தக்கது.

இவ்வூர்க் கொப்புடையம்மன் கோவிலில் ஆண்டுதோறும் வைகாசிமாதம் நடைபெறும்

Koviloor Digital Library

தேர்த்திருவிழா நகரத்தாரின் சிறப்பான திருவிழாவாகும். இதில் இறுதி நாள் சத்தாகர்ண மண்டகப்படி நகரத்தார் உபயமாகும்.

நகரத்தார் பொருளுதவியுடன் சு.மு. மகாதேவ முருகப்ப செட்டியார் 1912 இல் கற்பக விநாயக கலாசாலை, ஞானசம்பந்த நற்சபை, வாணி மந்திர புத்தகசாலை என்ற மூன்றும் இணைந்த பள்ளி ஒன்றைப் பண்டிதமணியைக் கொண்டு திறந்து வைக்கச் செய்து நடத்தி வந்தார். 1950 க்குப் பிறகு அவரது வழிமரபில் வந்த சு.மு.இராம.முரு. முருகப்ப செட்டியார் முயற்சியில், நகரத்தார் பொருளுதவியுடன் இப்பள்ளியே சரசுவதி உயர்நிலைப்பள்ளியாக ஆக்கப் பெற்று நடந்து வருகிறது.

இவ்வூரில் இலுப்பைக்குடி நகரத்தாருக் குரியதாக கு.மெ. கோவில் வீடும், பிள்ளையார் பட்டி நகரத்தாருக்குரியதாக செ.அ. மடமும், கி.நா. மற்றும் உ.அரு. வகையினருக்குரியதாகக் கஞ்சிமடமும், சு.முரு. முருகப்ப செட்டியாருக்கு உரியதாகத் துவாதசி மடமும் உள்ளன.

புரட்டாசி மாதம் கி.நா. குடும்பத்தாரால் இராமாயணம் படிக்கப்படுகிறது. கடைசிச் சனிக்கிழமை பூசை போட்டு, அன்னதானம் நடத்துகின்றனர். தொடர்ந்து இப்போது ஏழாவது தலைமுறையினர் படித்து வருகின்றனர்.

இவ்வூர் வைரவன் கோவில் பங்காளிகளுள் துவார் கும்பிடும் குடும்பத்தார் மாசிமாதம் அடைக்காத்தாள் படைப்பையும், இலுப்பைக்குடிப் பங்காளிகள் சித்திரை மாதம் கு.மெ. கோவில் வீட்டில் ஒரு படைப்பையும், பிள்ளையார்பட்டிப் பங்காளிகள் ஆத்தங்குடிப் பங்காளிகளுடன் சேர்ந்து ஆடிமாதம் பூமணப் பிச்சாத்தாள் படைப்பையும், மாத்தூர்ப் பங்காளிகள் ஒரு படைப்பையும் தங்களுக்குரிய பொதுப்படைப்பாகப் படைத்து வருகின்றனர். இலுப்பைக்குடி நகரத்தார் ஆண்டுதோறும் தைமாதம் புனர்பூசத்தன்று குன்றக்குடியில் காவடிப் பூசை நடத்தி, அன்னதானம் செய்து, காவடி செலுத்துகின்றனர்.

முன்னர், இவ்வூரில் இளைஞர் ஒற்றுமைக் கழகம், முத்தமிழ் மன்றம் போன்ற இலக்கிய அமைப்புக்கள் நகரத்தார் முயற்சியால் சிறப்பாகச் செயல்பட்டு வந்தன. ஜெய்ஹிந்த் சேதுராமன் செட்டியார், விசுவநாதன் செட்டியார் ஆகியோர் இ.தே.ரா.வில் பணிபுரிந்தவர்களாவர்.

இவ்வூர் சுப.கு. குடும்பத்தார் திருக்கடவூரில் பசுமடம், நந்தவனம், நகரவிடுதி ஆகியவற்றை நடத்தி வருகின்றனர். இவ்வூரிலிருந்து 3 கிலோ மீட்டர்த் தொலைவில் உள்ள வெங்களூரில் இவ்வூர் இலுப்பைக்குடி நகரத்தார் ஒரு பிள்ளையார் கோவில், ஊருணி, நகர விடுதி ஆகியவற்றை அமைத்துள்ளர். இவ்வூரைச் சேர்ந்த சு.முரு. நாச்சியப்ப செட்டியார் புதுக்கோட்டை – தஞ்சாவூர்ச் சாலையில் உள்ள இச்சடியில் ஒரு பிள்ளையார் கோவில் கட்டியுள்ளார்.

இவ்வூரிலுள்ள பெ.சு. வீடும், உ.அரு.வீடும் கலைநயம் செறிந்த வேலைப்பாடுகள் நிறைந்த வீடுகளாகும்.

சக்கந்தி

தெற்குவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடியிலிருந்து 56 கிலோ மீட்டர் தொலைவில், சிவகங்கை – மேலூர்ச் சாலையில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி பேரசெந்தூருடையார் பிரிவைச் சேர்ந்த 26 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இவ்வூரில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் என்ற சிவன் கோவிலும், கைலாச விநாயகர் கோவில் என்ற பிள்ளையார் கோவிலும் கல் திருப்பணி முடிக்கப் பெற்று 1936 இல் குடமுழுக்குச் செய்யப்பெற்றன.

நாராயணன் செட்டியார் நன்கொடை வழங்க, நாராயணன் செட்டியார் – சிட்டாள் ஆச்சி தொடக்கப்பள்ளி என்ற பெயரில் ஊராட்சி மன்றம் 1970 இலிருந்து ஒரு தொடக்கப்பள்ளியை நடத்தி வருகிறது.

சிவகங்கை – மேலூர்ச் சாலையில் நைத்தான் பட்டி விலக்குச் சாலையில் உள்ள வல்லடியார் கோவில் இவ்வூர் நகரத்தாரின் குலதெய்வக் கோவிலாகும். அக்கோவிலில் சிவன்ராத்திரியை ஒட்டித் தொடங்கி, பௌர்ணமியில் நிறைவு பெறும் வண்ணம் 10 நாள் திருவிழா ஆண்டுதோறும் நடைபெறுகிறது. அதில் எட்டாம் திருவிழாவன்று சக்கந்தி நகரத்தார் அனைவரும் அங்கே கூடிப் பாற் பொங்கலிட்டு வழிபடுவது மரபு.

செம்பனூரைச் சேர்ந்த கும.நா.சுப.நா. இராமசாமி செட்டியார் இவ்வூரில் ஸ்ரீ வடிவாம்பிகை மில்ஸ் என்ற ஆலையினை நிறுவியுள்ளார். இவ்வூரைச் சேர்ந்த உலக.க.கண. குடும்பத்தார் திருவாரூர் கமலாலயத் தெப்பக் குளத்தின் மைய மண்டபத்தைக் கட்டியவர் களாவர்.

Koviloor Digital Library

சக்தி

இப்பெயரில் மாத இதழொன்று 1939 இல் தொடங்கப் பெற்று, 10 ஆண்டுகட்கும் மேலாக, சென்னையிலிருந்து வெளிவந்தது. இராய வரத்தைச் சேர்ந்த வை. கோவிந்தன், கவியோகி சுத்தானந்த பாரதியாரவர்களின் யோசனைப்படி, இவ்விதழைத் தொடங்கினார். இதற்காகவே, சென்னை, அரண்மனைக்காரத் தெருவில் அவர் ஓர் அச்சகத்தையும் தொடங்கினார்.

''அ. கிருஷ்ணமூர்த்தியால், சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸ்), 52, அரண்மனைக்காரத் தெரு, சென்னையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிருவாக ஆசிரியர் வை. கோவிந்தன்'' என்ற குறிப்போடு பிரமாதி ஆண்டு ஆவணித் திங்களில் (ஆகஸ்டு, 1939) முதல் இதழ் வெளிவந்தது.

பின்னர் இதன் ஆசிரியராக தி.ஜ.ர. அவர்கள் 5 ஆண்டுகள் பணியாற்றினார். அவரை அடுத்துக் கல்லுப்பட்டியைச் சேர்ந்த சுப. நாராயணன் இவ்விதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

தொடக்கத்தில் இவ்விதழ் டெம்மி 1 × 4 அளவிலும், 1945 க்குப் பிறகு டெம்மி 1 × 8 அளவிலும் வெளிவந்தது. தனி இதழின் விலை 4 அணா (25 காசுகள்). ஒவ்வோரிதழும் பெரும்பாலும் 48 பக்கங்கள் உடையதாக வெளிவந்தது. பக்க எண்களைக் குறிப்பிடுவதில் இவ்விதழ் ஒரு புதுமை செய்தது. ஓராண்டுக்குரிய இதழ்கள் அனைத்தின் பக்கங்களும் தொடர்ச்சியாக எண்ணிடப் பெற்றன. ஆவணி இதழ் 48 பக்கத்தோடு முடிந்தால் புரட்டாசி இதழ் 49 எனத் தொடங்கும். தை மாதத்தை ஆண்டுத் தொடக்கமாகக் கணக்கிட்டு, முதல் 5 இதழ்களை மலர் 1 இதழ் 5 என்பது வரை வெளியிட்ட பின் பிரமாதி ஆண்டு தை மாத இதழை மலர் 2 இதழ் 1 எனக் குறிப்பிட்டு, அதன் பக்கங்கள் மீண்டும் 1 இல் தொடங்கும் வண்ணம் எண்ணிட்டிருக்கின்றனர். பின்னர் ஒவ்வொரு முறையும் தை இதழில் பக்க எண்ணிக்கை தொடங்கி மார்கழி இதழில் நிறைவு பெற்றுளது. இம்முறை பின்னாளில் மஞ்சரி, கலைமகள் போன்ற இதழ்களில் சிறிது காலம் பின்பற்றப் பெற்றது.

முதல் இதழில் ''தமிழகம் உலகின் சுத்த சன்மார்க்கக் கோயிலாக விளங்க வேண்டும். தமிழர் கூட்டம் உலகம் மதித்துப் போற்றும் தீரர் கூட்டமாக வேண்டும். நமது பாரத தேசம், பூரண சுதந்திரம் பெற்று, உலகில் ஒரு வல்லரசாக விளங்க வேண்டும்'' என்பதாகச் 'சக்தி' தம் குறிக்கோளை வெளியிடுகிறது.

விக்ரம ஆண்டு ஆடித்திங்களில் (ஜூலை, 1940), ஆசிரியர் கீழ்வருமாறு எழுதுகிறார்.

''சக்தியின் ஒவ்வொரு இதழும் ஒரு பரீட்சையில் தேற வேண்டும் என்பது நமது திட்டத்தின் அடிப்படையான கருத்து. அதாவது, ஒரு இதழைப் படித்த ஒருவர், இந்த இதழ்,

(1) கேவல உணர்ச்சிகளை எழுப்பாமல் மனத்திற்கு இன்பமூட்டிற்றா?

(2) ஏதாவது ஒரு புதிய பொருளையாவது நமக்குப் புலப்படுத்தி அறிவை விசாலமாக்கிற்றா?

(3) உள்ளத்தைத் தூண்டி, உணர்ச்சியைக் கிளறி, நமது குணவளர்ச்சிக்குச் சிறிதாவது உதவிற்றா?'

என்ற கேள்விகளை ஒருவர் தமக்குத்தாமே கேட்டுக் கொள்ளுவாரானால், ஒன்றுக்கேனும் 'ஆம்' என்ற திடமான பதில் அவருக்குக் கிடைக்க வேண்டும்.''

இவை 'சக்தி' இதழ் வெளிவந்த நோக்கத்தையும், செயல்பட்ட முறையையும் விளக்கும். இவ்வாறு தரத்தைச் சிறப்பிக்க எண்ணிய 'சக்தி' அழகிற்கும் இடம் கொடுத்தது. தமிழில் பல வண்ண அழகிய அட்டையோடு முதன் முதலில் வெளிவந்த இதழ் 'சக்தி' தான் என்பது குறிப்பிடத்தக்கது. தரமான படங்களை, பல வண்ணங்களில், கலை அழகுடன் வெளியிட்டது. நல்ல தாளில், அச்சும் எழுத்தின் அமைப்பும் சிறந்த தரமுடையனவாக அமையும் வண்ணம் வெளிவந்த இதழ் 'சக்தி'.

ஒவ்வோர் இதழிலும் குட்டிக் கதைகள், சிறு கதைகள், நாடகங்கள், பிறமொழி இலக்கியங்களின் மொழி பெயர்ப்புக்கள், தரமான இலக்கியக் கட்டுரைகள் என்பன வெளிவந்தன. ஆங்கிலத்தில் வெளிவரும் 'ரீடர்ஸ் டைஜஸ்டு' பாணியில் தமிழில் முதன்முதலில் வெளியான இதழ் என்று இதனைக் கூறலாம்.

பாரதியாரின் மனைவி செல்லம்மாள் பாரதி எழுதிய, பாரதியார் வாழ்வு பற்றிய கட்டுரைகளை இவ்விதழ் வெளியிட்டது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் முதல் கவிதை 'குமரன்' இதழில் வெளிவந்தது. ஆனால் அவர் குழந்தைகளுக்காக எழுதிய முதல் கவிதை 'சக்தி' இதழில்தான் வெளிவந்தது.

கவியோகி சுத்தானந்த பாரதி 'சக்தி'யில் நிறைய எழுதினார். மேலும், சக்தியில் எழுதியவர்கள் வருமாறு : ஏ.கே. செட்டியார், கொத்தமங்கலம் சுப்பு, குழந்தைக் கவிஞர்

Koviloor Digital Library

அழ. வள்ளியப்பா, தமிழ்வாணன், முல்லை முத்தையா, தி.நா. சுப்பிரமணியன், கு. அழகிரிசாமி, சிதம்பர ரகுநாதன், லா.ச. ராமாமிர்தம், கு.ப. ராச கோபாலன், ந. பிச்சமூர்த்தி, சோமலெ.

புதிய இதழியல் உத்திகளோடு, தரமான இதழொன்றை நடத்தும் முயற்சியில் சென்னையில் ஒரு நகரத்தார் இறங்கி வெற்றி பெற்ற வரலாற்றிற்குச் சான்றே 'சக்தி'.

சடங்கு கழித்தல்

நகரத்தார் சமூகத்தில் ஒரு பெண் பூப்பெய்தியவுடன் அவளுக்கு நீராட்டி வீட்டுக்குள் தனியே ஓரிடத்தில் வைத்திருப்பர். பதினாறாவது நாள் அவளுக்கு உள்ள தீட்டைக் கழிப்பதற்காக நிகழ்த்தும் சடங்கே இது. அன்று அவள் குளித்ததும் அவளுடைய அத்தை இச்சடங்கைச் செய்வாள். வளவில் அவர்களது வீட்டுக்கு எதிரே பெண்ணைக் கிழக்கு முகமாக நிறுத்தி அவளது தலை, இரு தோள்பட்டைகள், இரு கைகள், இடுப்பின் இருபக்கங்கள் ஆகிய ஏழு இடங்களில் கேப்பை அல்லது கோதுமையில் இதற்காகவே சுட்ட ரொட்டியையும் பிறகு அதே இடங்களில் வேப்பங்குழையையும் வைத்து வேப்பங்குச்சியால் தட்டி விடுவார்கள். பிறகு பெண்ணுக்கு ஆரத்தி எடுத்து அவளை மீண்டும் குளிக்கச் செய்து வீட்டுக்குள் அழைத்துக் கொள்வர். பூப்பெய்திய பெண் குடும்பத்தின் முதல் பெண்ணாக இருந்தால் உறவினர் பங்காளிகளை அழைத்துச் சிறப்பு நிகழ்ச்சியாக இதனை நடத்துவர்.

சண்முகநாதபுரம்

கீழவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியில் இருந்து 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. காரைக்குடி – தேவகோட்டைச் சாலையில் அமராவதி புதூரைத் தாண்டியவுடன் இடப்புறம் செல்லும் கிளைச் சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், நேமங்கோவில், சூரக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய ஐந்து கோவில்களைச் சேர்ந்த 426 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி மன்றம். இவ்வூர் நகரத்தார்பேச்சுவழக்கில் ஆறாவயல் என்று குறிப்பிடப்படுகிறது.

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கே வில் என்ற பெயருடைய இவ்வூர் நகரச் சிவன்கோவில் 1879 இல் கட்டிக் குடமுழுக்குச் செய்யப் பெற்றது. இடையில் பல குடமுழுக்குகளுக்குப் பிறகு அண்மையில் 1989 இல குடமுழுக்கு நிகழ்ந்துள்ளது. இளையாத்தங்குடிப் பட்டினசாமிப் பங்காளிகளுக்குரிய பிள்ளையார் கோவில் ஒன்றும் பெருமருதூருடையார்ப் பங்காளிகளான சி.சு.செ. வகையினருக்குரிய பிள்ளையார் கோவிலொன்றும் மாத்தூர் உறையூரைச் சேர்ந்த தெ.பெ. குடும்பத்தாருக்குரிய பிள்ளையார் கோவில் ஒன்றும் அரும்பாக்கூரைச் சேர்ந்த சுப.இராம. வகையினருக்குரிய பனந்தமுடையார் கோவிலும் இவ்வூரில் உள்ளன.

நகரத்தார் பொதுவில் சிவன்கோவில் ஊருணியும் இளையாத்தங்குடிப் பட்டினசாமிப் பங்காளிகளுக்குரிய சிதம்பர விநாயகர் கோவில் ஊருணியும், அவர்களில் வங்காளத்தார் வகையாருக்குரிய ஆறாவயல் ஊருணியும் இவ்வூரில் உள்ளன.

தேவகோட்டையைச் சேர்ந்த பெரி.சோம. சாத்தப்ப செட்டியாரால் எஸ்.ஆர்.எம். சாத்தப்பசெட்டியார் நடுநிலைப்பள்ளி 1935 இல் தொடங்கப் பெற்றது. அவரது மகன் சோம சுந்தரம் செட்டியார் 1963 இல் இதனை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தினார். அப்போது பள்ளியின் பெயரையும் பி.எஸ். சாத்தப்ப செட்டியார் உயர்நிலைப்பள்ளி என மாற்றினார். அதே பெயரில் தொடக்கப்பள்ளி ஒன்றும் தனியே இயங்குகிறது. இவ்விரு பள்ளிகளும் இவர் நிருவாகத்திலேயே இயங்கி வருகின்றன. நகரத்தார் பொதுவில் இடமும் கட்டிடமும் நன்கொடையாக வழங்க அதில் அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. இவ்வூரிலிருந்து மேற்கே காரைக்குடி – தேவகோட்டைச் சாலை வரையிலும் கிழக்கே கண்டதேவிச் சாலை வரையிலும் அமைந்துள்ள 8 கி.மீ. சாலையை 1922 இல் இவ்வூர் நகரத்தார்கள் அமைத்தனர்.

இவ்வூரில் சூரக்குடிப் பங்காளியினர் காரைக்குடிப் பங்காளிகளோடு இணைந்து ஒரு பொதுப்படைப்பைப் படைத்து வருகின்றனர். இளையாத்தங்குடி ஒக்கூருடையார், பட்டின சாமியார், பெருமருதூருடையார், கழனிவாசற் குடியார், மாத்தூர், உறையூர், அரும்பாக்கூர்ப் பங்காளிகள் தனித்தனியே தமக்குள் பொதுப்படைப்பைப் படைத்து வருகின்றனர். இளையாத்தங்குடி பட்டினசாமிப் பிரிவைச் சேர்ந்த பெ.சித. குடும்பத்தார் ஆண்டுதோறும் மாணிக்கவாசகர் குருபூசையை நடத்தி வருகின்றனர்.

இவ்வூரைச் சேர்ந்த அ.இராம. அண்ணாமலை (இளை. ஒக்கூர்) செ.பழ. பழநியப்பன் (இளை – பட்டினசாமி) உ.சொ.பெ. மெய்யப்பன் (இளை.

Koviloor Digital Library

பட்டினசாமி) ஆகியோர் இ.தே. ராவில் பணிபுரிந்தவர்கள். இவ்வூர் செ.ராம. ராமசாமி செட்டியார் காரைக்குடி நா.லெ. நாராயணன் செட்டியாருடன் இணைந்து திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரர் ஆலயத் திருப்பணியைச் செய்துள்ளார். மயிலாடுதுறையில் இவ்வூர் சு.எ.அரு. வகையினரின் பசுமடம் உள்ளது.

குருணி வீடு, உ.பழ. வீடு, மெ.நா. வீடு வங்காளத்தார் வீடு ஆகியவை இவ்வூரிலுள்ள கலைநயம் சார்ந்த பெரிய வீடுகள் ஆகும்.

சண்முகம், எம்.எஸ்.பி., (18-7-1921 - 15-10-88)

இலுப்பைக்குடி
கொத்தமங்கலம்
இதழாளர்

சுப்பிரமணியன் செட்டியார் – பார்வதி ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றவர். ஆ. தெற்கூர் விசாலாட்சி கலாசாலை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகச் சில காலம் பணியாற்றினார். பின்னர் 1952 இலிருந்து 'தமிழ்நாடு' நாளிதழில் துணை ஆசிரியராக ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். இடையில் சிலகாலம் சித்தூர்க் கொச்சியிலிருந்து வெளியான 'சுயராஜ்யம்' எனும் திங்கள் இருமுறை இதழின் ஆசிரியராகச் செயல்பட்டிருக்கிறார்.

1960 இல் புதுதில்லியில் வேளாண்மை அமைச்சகத்தில் இருந்து, வேளாண்துறை ஆய்வுகள் பற்றி வெளியிடப் பெற்ற இதழின் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இருபது ஆண்டுகட்கும் மேல் அப்பணியைச் செவ்வனே செய்து வந்தார்.

தில்லைச் செல்வன் என்ற புனைபெயரில் 'இமயத்தின் எல்லையில்' என்ற பயண நூல், 'குன்றக்குடி அடிகளார் வரலாறு' என்ற வாழ்க்கை வரலாற்றுநூல் ஆகியவற்றை எழுதியுள்ளார். சிதம்பரம் குடமுழுக்குவிழா மலரின் பதிப்பாசிரியராக இருந்து அம்மலரைச் சிறப்பாக வெளியிட்டிருக்கிறார்.

புதுதில்லியில் பணியாற்றிய காலத்தில் தில்லித் தமிழ்ச் சங்கத்தின் செயலர்; தண்டாயுதபாணி கோவில் தலைவர்; தில்லிச் சைவப் பேரவையின் தலைவர் ஆகிய பொறுப்புக்களை அவ்வப்போது திறம்படத் தாங்கிச் செயல்பட்டிருக்கிறார். புதுதில்லி நகரத்தார் சங்கத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்டு, தொடக்க நிலைத் தலைவராகவும் பொறுப்பேற்றுச் செயல்பட்டார்.

சண்முகம், சுப., (24-3-1925)

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார்
கண்டனூர்
சமூகத் தொண்டர்

1944 இல் மலாயாவில் மலாக்கா செட்டியார் இளைஞர் சங்கத்தின் துணைச் செயலாளராகத் தமது இனத்திற்காகச் சேவை செய்யும் பொதுவாழ்வைத் தொடங்கிய இவர் இன்றளவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றிய போது நேதாஜி சுபாஷ் சந்திரபோசினால் ராணுவத் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

தாயகம் திரும்பியதும் சென்னை, திருச்சி நகரத்தார் சங்கங்களில் பல்வேறு பொறுப்புக் களை ஏற்று நகரத்தார் சமூக வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளார். சென்னை நகரத்தார் சங்கத்தில் வேலை வாய்ப்புப் பிரிவு ஏற்படுத்தி அதன்மூலம் ஏராளமான இளைஞர்கட்கு வேலைவாய்ப்புக் கிடைக்கச் செய்துள்ளார்.

செட்டி நாட்டரசருடன் நெருங்கிய நட்புக் கொண்ட இவர் நகரத்தார் ஐக்கிய சங்கத்தை ஏற்படுத்தி முத்தையவேளின் தலைமையில் செயலராகப் பணியாற்றிக் கல்வி உதவித் திட்டம் உருவாகச் செய்தார். திருச்சி நகரத்தார் சங்கத்தின் வாயிலாக நம்மினப் பெண்களுக்குத் திருமணம் செய்துவைக்கவும் பல்வேறு அமைப்புக் களிலிருந்து கல்வி நிதி உதவி, பெண்களுக்குத் திருமணநிதி உதவி, கிடைக்கவும் முன்னின்று வழிகாட்டி உதவியுள்ளார். திருச்சி மேலப்புதூரில் முன்பு நகரத்தார்களால் கட்டப்பெற்று இடையில் பராமரிப்பின்றி இருந்த பாலதண்டாயுதபாணி கோவிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு நடைபெறச் செய்தார். தொடர்ந்து 25 ஆண்டுகளாகக் காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தில் பணியாற்றி, இப்போது தலைவராகத் தொண்டு செய்து வரும் இவர் காசி விசாலாட்சி அம்மன் கோவில், காசி நகரேசுவரர் கோவில், நாசிக் கார்த்திக் சுவாமி கோவில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெறச் செய்ததோடு காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரக் கட்டிடத்தைப் புதிது போலச் சிறப்பாகக் கட்டியுள்ளார். காரைக்குடியில் இக்கழகத்தின் சார்பில் நகர விடுதியை அழகான மாளிகைபோல உருவாக்கி நகரத்தார்கள் வந்து தங்கிச் செல்ல வசதி செய்து தந்துள்ளார். கன்னியர்க்கு மாலை, காளையர்க்கு வேலை என நகரத்தார் சமூக வளர்ச்சிக்கு இடையறாது இவர் தொண்டாற்றி வருகிறார்.

Koviloor Digital Library

சண்முகம், நாக., (28-11-1930)

பிள்ளையார்பட்டி
வேகுப்பட்டி
எழுத்தாளர், இதழாளர்

நாகப்ப செட்டியார் – தேனம்மை ஆச்சியின் மகன். மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்றவர். அக்கல்லூரியிலேயே 1953 இலிருந்து நான்கு ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1990 இல் சிறிது காலம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெளியீட்டுத் துறையில் சிறப்பு அதிகாரியாகப் பணிபுரிந்தார்.

1969 ஏப்பிரலில் தொடங்கிப் பத்தாண்டு கட்கும் மேலாகச் சிறப்பான முறையில் வெளிவந்த 'நகரத்தார்' இதழுக்கு ஆசிரியராக இருந்ததோடு, அதனை நடத்தும் பங்குதாரராகவும் விளங்கினார். பின்னர் 'அர்த்தமுள்ள இந்துமதம்' என்ற மாத ஏட்டின் நிருவாக ஆசிரியராகவும் பொறுப்பேற்றிருந்தார்.


எழுத்துத் துறையில் இவரது சாதனைகள் பல. நூற்றுக்கும் அதிகமான நூல்களை எழுதியிருக்கும் இவர், தனிப்பட்டவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் மட்டும் ஐம்பதுக்கும் மேல் எழுதியுள்ளார். 'பாஞ்சாலி', 'ஆயிரங்காலத்துப் பயிரு' என்ற இரு திரைப்படங்களுக்கு உரையாடல் எழுதியிருக்கிறார். நேஷனல் தியேட்டர் நாடகக் குழுவின் உரிமையாளர் ஆர்.எஸ். மனோகர் நடித்து அரங்கேற்றிய 'அங்கயற்கண்ணி' நாடகத்திற்குக் கதை, உரையாடல், பாடல்கள் எழுதியுள்ளார். 'மனக்கோயில்', 'வாழைமரம்', போன்ற புதினங்களையும், 'பழனிமலைக் காவடி' என்ற நகரத்தார் மரபு சார்ந்த புதினத்தையும் எழுதியுள்ளார். பல்வேறு மலர்களையும், நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

சண்முகனார், குங்கிலியம் பழ., (25-5-1915)

வைரவன் கோவில் - பிள்ளையார் வகுப்பு
கடியாபட்டி
ஆன்மீகச் செல்வர்

பழநியப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். இவர் 1932 முதல் 1964 வரை இரங்கூனில் வணிகம் செய்தார். தாய்நாடு திரும்பியபின் சிதம்பரத்தில் நடராசப் பெருமானுக்குக் குங்கிலியத் தூபமிடும் திருப்பணியைச் செய்தார். அதனால் இவருக்குக் 'குங்கிலியம்' சண்முகனார் என்ற பெயர் வழங்குகிறது.

இளமையிலிருந்தே வள்ளலாரின் கொள்கைகளிலும், பாடல்களிலும் ஈடுபாடு மிக்கவர். இரங்கூனில் வாழ்ந்த போது அருகில் உள்ள 'பீலிக்கான்' எனும் சிற்றூரில் நடந்துவந்த ஆயிரம் கடாப் பலியினை நிறுத்தப் பெருமுயற்சி எடுத்து வெற்றி பெற்றார். அங்குக் கோவில் கொண்டுள்ள அங்காள ஈசுவரி மீது அந்தாதி ஒன்றும் பாடியுள்ளார்.



குங்கிலியம் பழ. சண்முகனார்

இல்லறக் கடமைகளை நிறைவேற்றிய பின், வடலூர் சென்று, வள்ளலார் தொடங்கிய சமரச சுத்த சன்மார்க்க சத்தியசங்கத்தில் இணைந்து, அச்சங்கத்தின் உலகமையம் 1983 இல் தொடங்கப் பெற்றதிலிருந்து அதன் நிருவாகத் தலைமையை ஏற்றுத் திறம்பட நடத்தினார். இப்போது பெண்ணாகடத்தில் வள்ளலார் அறநிலையத்தில் நிருவாகப் பொறுப்பில் இருக்கிறார்.

'சன்மார்க்கம்' இதழில் இவர் எழுதிய கட்டுரைகளையும், வானொலியில் இவர் ஆற்றிய உரைகளையும் திரட்டி, 'அருட் பிரகாச வள்ளலார்' என்ற பெயரில் நூலாக்கி, இவரது மூத்த மகன், பதிப்புச் செம்மல், டாக்டர் ச.மெய்யப்பன் வெளியிட்டுள்ளார். 'தலவுருவ அருளாளத் தமிழ்மகன்' என்ற பெயரில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை ஆறாம் உலகத் தமிழ்மாநாட்டில், மலேசியாவில் இவர் படித்துள்ளார். சிறந்த சிந்தனையாளர் ஜே. கிருஷ்ணமூர்த்தியின் 'மெடிட்டேஷன்' என்ற சிறு ஆங்கில நூலைத் 'தியானம்' என்ற பெயரில் தமிழாக்கம் செய்துள்ளார்.

நகரத்தார் அனைவரும் இறைபக்தி உடையவர் என்றாலும், துறவுவாழ்வினை மேற்கொண்டு, சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் ஆன்மீகம் பரப்பும் நகரத்தார் சிலரே. அவருள் குறிப்பிடத்தக்க ஒருவர், வடலூர்த் தரும சபைத் திருப்பணியிலும், ஞான சபைத் திருப்பணியிலும் பெரும் பங்காற்றியிருக்கும் குங்கிலியம் சண்முகனார்.

Koviloor Digital Library

''நம் காலத்து வாழும் நாயனார் இவர். சுந்தரர் மீண்டும் பிறந்து பாடினால், அப்புதிய திருத்தொண்டத் தொகையில் அன்பர் சண்முகனார் வரிசை பெறுவர்'' என்று வசுப. மாணிக்கனார் இவரைப் பாராட்டுவது முற்றிலும் பொருத்தமான பாராட்டாகும்.

சண்முகனார், சீர்திருத்தச் செம்மல் வை.சு., (19-9-1884 - 19-6-1962)

வைரவன்கோவில்
கானாடுகாத்தான்
சீர்திருத்தவாதி, வள்ளல்

வை. சுப்பிரமணியன் செட்டியார் – அழகம்மை ஆச்சியின் மகன். இவர் முறையாகக் கற்ற கல்வி என்பது மூன்றாவது வரைதான். ஆயினும் தாமாகவே தமிழ் இலக்கிய இலக்கணங்களையும், ஆங்கில மொழியையும் கற்றுத்தேர்ந்தவர். இளமையிலேயே இவரது குடும்பத்தின் தொழிலைக் கவனிக்க மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகட்குச் சென்றார். இவருடைய தந்தையார் காலமானபின், தொழிற் கூட்டாளிகளுக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பிரிந்தனர். அது தொடர்பாக இவர் தம் பதினெட்டாவது வயதில் தொடர்ந்த வழக்கு இவர் வாழ்நாள் இறுதிவரை நடைபெற்றது. இவ்வழக்கு அக்காலத்தில் செட்டிநாட்டில் மிகவும் பரவலாக அனைவராலும் பேசப்பட்டு வந்த வழக்காகும்.



சீர்திருத்தச் செம்மல் வை.சு. சண்முகனார்

இளமையிலிருந்தே இவரிடம் புரட்சி மனப்பான்மையும், சீர்திருத்தச் சிந்தனையும் மேலோங்கியிருந்தன. நினைப்பதைச் செயற் படுத்தும் இயல்புடையவர். பெண்களுக்குச் சம உரிமை கொடுக்க வேண்டும் எனச் சிந்தித்த இவர் தம் மகனுக்கு ச. சோலை எனப் பெயரைப் பதிவு செய்தது போல, மகளுக்குத் தம் மனைவி பெயராகிய 'லெட்சுமி' என்பதில் உள்ள முதல் எழுத்தையே முன்னெழுத்தாக்கி லெ. பார்வதி எனப் பதிவு செய்தார்.

தொடக்கத்தில் சண்முகனார் காந்தியத்தால் ஈர்க்கப்பட்டுக் காங்கிரசுக்கட்சியில் உறுப்பினரானார். 1927 இல் காந்தியடிகள் தென்னாட்டுப் பயணம் மேற்கொண்டபோது கானாடு காத்தானில் இவர் வரவேற்பளித்ததோடு, காந்தியடிகள், கஸ்தூரிபாய், இராஜாஜி ஆகியோர் இவரது வளமனையாகிய 'இன்பமாளிகை' யில் சில நாட்கள் தங்கியிருந்தனர். '1927 இல் காந்தியடிகள் தமிழகத்துக்கு வந்தபொழுது செட்டிநாடு சென்று கானாடுகாத்தான் வை.சு. சண்முகம் இல்லத்தில் இராஜாஜியுடன் தங்கியிருந்த செய்தி நகரத்தார் வரலாற்றில் இடம்பெற வேண்டிய ஒன்று' என்று முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் எழுதியுள்ளார்.

மேலும் அச் சுற்றுப்பயணத்தின் போது, காரைக்குடி மகார் நோன்புத் திடலில், காந்தியடிகள் தாமே நூற்ற கதர்த் துணியை ஏலம் விட்டபோது, அதனை சண்முகனார், அப்போதே ரூபாய் ஆயிரத்தொன்று வழங்கி ஏலத்தில் எடுத்தார். பின்னாளில் அதனைக் காந்தி காட்சிக் கூடத்திற்கு நன்கொடையாக வழங்கிவிட்டார். காங்கிரசுக் கட்சியின் இராமநாதபுரம் மாவட்டத் தலைவராகவும் இவர் இருந்திருக்கிறார்.

தந்தை பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறிய போது, அவரது சுயமரியாதைக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட சண்முகனார், தாமும் காங்கிரசிலிருந்து விலகிச் சுயமரியாதை இயக்கத்தின் பொருளாளராகி, அவ்வியக்கப் பணிகளில் தம்மை முழுமூச்சுடன் ஈடுபடுத்திக் கொண்டார். செட்டிநாட்டுப் பகுதிக்கு வரும் சுயமரியாதை இயக்கத் தலைவர் எவரும் 'இன்ப மாளிகை'க்கு வருகை புரியாமல் இருந்ததில்லை எனலாம். தந்தை பெரியாருக்கு இவர் ஒரு மகிழுந்தை (ஸ்டுடிபேக்கர் வண்டி) அன்பளிப்பாக வழங்கினார்.

வ.வே.சு.ஐயர் 'குருகுலம்' தொடங்க எண்ணிய போது சண்முகனார் முதல் நன்கொடையாக ஆறாயிரம் ரூபாய் வழங்கினார். அத்தொகையில் தான் ஐயர் சேரன்மாதேவியில் நிலம் வாங்கினார். மேலும் அக்குருகுலத்திற்குச் செட்டிநாட்டு அன்பர்கள் பெரும் நன்கொடை களை வழங்குவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் காரணமாக இருந்தார்.

ஆனால் குருகுலத்தில் பந்தி நடத்தும் முறையில் சாதி வேற்றுமை பின்பற்றப்படுவதை அறிந்ததும், தம் வீட்டு இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் அப்போதே சமபந்தி உணவு முறையைப் பின்பற்றிப் புரட்சி

Koviloor Digital Library

செய்த சண்முகனாரால் அதனை ஏற்க இயலவில்லை. எனவே, குருகுலத்தை எதிர்த்து ஈ.வெ.ரா, வரதராசுலு நாயுடு, திரு.வி.க. போன்றோர் தொடங்கிய போராட்டத்தில் இவரும் முழுமூச்சாக இறங்கினார்.

இவ்வாறு இவர், பொதுவாழ்வில் தாம் நினைத்தவற்றை உடனுக்குடன் செயல்படுத்தியது போலவே, தம் சொந்த வாழ்க்கையிலும், கொள்கையைச் செயல்படுத்தும் செயல் வீரராகத் திகழ்ந்தார். கலப்பு மணத்தையும், மாதர் மறுமணத்தையும் ஆதரித்துப் பிரசாரம் செய்த இவர், தம் மனைவியை இழந்த பின்னர், தஞ்சை மராட்டியர் குடும்பத்தைச் சேர்ந்தவரும், சுயமரியாதை இயக்கத் தொண்டரும், பெரியாரின் அணுக்கத் தொண்டருமான மஞ்சுளாபாய் அம்மையாரை, பெரியார் இசைவோடு மணந்தார்.

புரோகித மறுப்புக் கொள்கையைப் பரப்பிவந்த சண்முகனார், தம் மகள் பார்வதியைக் காரைக்குடியைச் சேர்ந்த நடராசனுக்குத் திருமணம் செய்து கொடுத்த போது, புரோகிதர் இல்லாமல், சர்.பி.டி. இராசன் தலைமையில், சீர்திருத்தத் திருமணம் ஒன்றை 1935 இலேயே நடத்தி நகரத்தார் சமூகத்தில் ஒரு புரட்சியை உண்டாக்கினார். இதற்குப் பின்னர் செட்டிநாட்டில் சீர்திருத்தத் திருமணங்கள் பல நிகழ இது காரணமாக அமைந்தது.

சண்முகனார் சாதிப்பற்று அற்றவர். சண்முகம் செட்டியார் எனக் கையெழுத்திடாமல் 'சண்முகம்' என்றே கையெழுத்திடுவார். பொதுவாகத் தமிழ்ச் சமுதாயத்தைச் சீர்திருத்த எண்ணியதைப்போல, நகரத்தார் சமுதாயத்தையும் சீர்திருத்தப் பெரிதும் விரும்பினார். எனவே, சொ. முருகப்பா, இராய.சொ. போன்றோரோடு சேர்ந்து காரைக்குடியில் இந்து மதாபிமான சங்கத்தையும், பின்னர் தனவைசிய ஊழியர் சங்கத்தையும் தோற்றுவித்தார்.

இவ்வாறு சீர்திருத்தச் செம்மலாக விளங்கிய சண்முகனார் தமிழ்ப் புலவர்களைப் போற்றும் புரவலராகவும் திகழ்ந்தார். 1918 இல் இவர் சுப்பிரமணிய பாரதியாருடன் கடிதத் தொடர்பு கொண்டார். பின்னர் பாரதியார் 1919 இல் கடையத்தில் வாழ்ந்த போது, இவர் கடையம் சென்று அவரை நேரில் சந்தித்தார். அவரைக் கானாடுகாத்தான் வருமாறு அழைத்தார்.

அதன்படி 28–10–1919 அன்று கானாடு காத்தான் வந்தார் பாரதியார். அவரை வரவேற்றுச் சிறப்பித்த சண்முகனார், 'நீங்கள் இங்கேயே வந்து விடுங்கள். ஒரு குறையுமின்றிக் கவனித்துக் கொள்கிறேன்' என்று கூறினார். தமக்குத் தக்க புரவலர் ஒருவர் கிடைத்து விட்டார் என மகிழ்ந்த பாரதியார் தம் மனைவியை அழைத்து வருமாறு கடையத்திற்கு ஆள் அனுப்பினார். அம்மையார் வர இசையவில்லை. மனைவியைப் பிரிந்து வாழ விரும்பாத பாரதியார் 6–11–1919 வரை கானாடுகாத்தானில் தங்கியிருந்த பின் கடையம் திரும்பிவிட்டார்.

தாம் விரும்பியது போல் தம்வீட்டில் பாரதியார் தங்க இயலாமல் போனது குறித்து வருந்திய சண்முகனார் அன்று தொடங்கி, பாரதியின் இறுதிக் காலம் வரை, அவருக்கு மாதம் ஒன்றுக்கு நாற்பது ரூபாய் அனுப்பி வந்தார். இந்நிகழ்ச்சிகள் 'சித்திரபாரதி' எனும் நூலில் ரா.அ. பத்மநாபனால் விளக்கப்படுகின்றன. மேலும் பாரதியின் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு முதலியவை அச்சிடப்பட்டதற்கும் சண்முனாரே காரணம். இவை பற்றித் திரு.வி.க., 'வை.சு. சண்முகம் செட்டியார் பாரதிப் பித்தர். செட்டி நாட்டில், பாரதியத்துக்குக் கால் கொண்டவர் அவரே' என எழுதுகிறார்.

அதுபோலவே, பின்னாளில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனையும் வள்ளலாக நின்று புரந்தவர் சண்முகனார். இவருடைய முயற்சியினால், பாவேந்தர் நூல்களை வெளியிடுவதற்காக வென்றே, முத்தமிழ் நிலையம் என ஒரு நிறுவனம் செட்டிநாட்டு அன்பர்களால் தொடங்கப்பட்டது. 'இசையமுது', 'இருண்டவீடு', 'கற்கண்டு' நூல்களின் முதற்பதிப்புக்கள் இந்நிறுவனத்தால் வெளியிடப்பெற்றன. பாவேந்தரின் மூத்தமகள் திருமணத்தைப் பொறுத்தவரை, மாப்பிள்ளை பார்த்ததிலிருந்து, திருமணம் நடந்து முடியும் வரை பல்லாற்றானும் துணைநின்றவர் சண்முகனார்.

சித்த மருத்துவத் துறையிலும் சண்முகனாருக்கு ஈடுபாடு இருந்து வந்தது. அவர் வீட்டில் ஓர் அலமாரி முழுவதும் மருந்துகள், பஞ்சு, தேள்கடிமருந்து முதலியவை இருக்கும். கானாடு காத்தனைச் சேர்ந்த ஏழை எளியோர் எப்போது வேண்டுமானாலும் இன்ப நிலையத்திற்கு வந்து நோயைக் கூறி மருந்து பெற்றுச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

கொள்கைக் குன்றாகவும், செயல் வீரராகவும், நகரத்தார் சமூகத்தில் சீர்திருத்த முன்னோடியாகவும், தமிழ் வள்ளலாகவும் வாழ்ந்த வரலாற்றுச் சிறப்புடைய நகரத்தார் வை.சு. சண்முகனாரின் நினைவு மையம் ஒன்று கானாடுகாத்தானில் அமைக்கப்பட்டுள்ளது.

இவர் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி நகரத்தார் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும். 1919 இல் இவரது இல்லத்திற்கு வந்திருந்த பாரதியார் 'செட்டிமக்கள் குலவிளக்கு' என்ற தலைப்பில், சண்முகனாரின் பெருமைகளை 7 அறுசீர்

Koviloor Digital Library

விருத்தங்களாகத் தம் கையெழுத்திலேயே எழுதி, **31–10–1919** என்று தேதியிட்டுக் கையொப்பமும் போட்டுக் கொடுத்திருக்கிறார்.

ஆனால், அப்பாடல் தம்மை அதிகமாகப் புகழ்ந்திருப்பதாகக் கருதியதாலும், இயல்பாகவே விளம்பரம் விரும்பா இயல்புடையவராகையாலும், சண்முகனார் அப்பாடல்களை அச்சிடாமல் தம் பெட்டியிலேயே வைத்துப் பூட்டி வைத்திருந்தார். நீண்ட காலத்திற்குப் பின், இந்நிகழ்ச்சியைப் பிறர் வாயிலாகக் கேள்விப்பட்ட முடியரசனும், தமிழண்ணலும், மஞ்சுளா அம்மையார் துணையுடன் வைசு.ச. அறியாமல், அவ்வாழ்த்துப் பாவை எடுத்துச் சென்று தாங்கள் நடத்தி வந்த 'எழில்' எனும் திங்கள் இதழின் ஏவிளம்பி ஆண்டு மாசித் திங்கள் இதழில் (பிப்ரவரி, **1958**) வெளியிட்டனர். அப்பாடலின் சில வரிகள் வருமாறு :

.. "கானாடு
காத்தநகர்ப் பரிதி போன்றாய்
சொல்லாண்ட புலவர்தம் உயிர்த்துணையே
தமிழ்காக்கும் துரையே....
.. சன்முகநா
மம்படைத்த வள்ளற் கோவே"
"செட்டிமக்கள் குலத்தினுக்குச் சுடர்விளக்கே"
..
"யாரறிவார் நின்பெருமை? யாரதனை
மொழியினிடை அமைக்க வல்லார்?"
..
"நிலமீது நின்போலோர் வள்ளலையாம்
கண்டிலமே"..
..
"உன்னிடத்தே இமையோர்க்கு உள்ள
வன்னமெலாம் கண்டுநினைத் தமிழ்பாடிப்
புகழ்தற்கு மனம் கொண்டோமே"
..
"கானாடு காத்தநகர் அவதரித்தாய்
சண்முகனாம் கருணைக் கோவே".

பாரதியின் பாடல் பெற்ற நகரத்தார் அமைப்பு என்ற பெருமை. இந்து மதாபிமான சங்கத்திற்கும், அவரது பாடல் பெற்ற நகரத்தார் வள்ளல் எனும் பெருமை வை.சு. சண்முகனாருக்கும் கிடைத்த பெறற்கரிய பேறாகும். (பாக்க : வை.சு.ச. நினைவு மையம்)

சதாபிஷேகம்

நகரத்தார் இனத்து ஆண்கள் தமது எண்பத்து இரண்டாவது வயதில் கொண்டாடும் சாந்தி விழா சதாபிஷேகம் ஆகும். இது பிறை ஆயிரம் கண்ட பெருவிழா என்றும் அழைக்கப்பெறும். விழா நாயகர் பிறந்த மாதத்திலிருந்து அமாவாசையைத் தொடர்ந்து வரும் **1008** மூன்றாம் பிறைகளைக் கண்டு பெருவாழ்வு வாழ்ந்த நிலையில் மேலும் நீடாயுளுக்கும் நிறைசெல்வத்துக்கும் மேற்கொள்ளும் கிரக சாந்தியே சதாபிஷேகம் ஆகும். ஒருவர் **81** வருடம் **5** திங்கள் வாழ்ந்தால் அவர் தமது வாழ்நாளில் **1008** மூன்றாம் பிறைகளைக் கண்டிருப்பார். ஆகவே அப்போதுதான் இவ்விழாவைக் கொண்டாடவேண்டும். மனைவியும் உடனிருந்து தம்பதிகளாக இவ்விழாவைக் கொண்டாடினால் பேரன் பேத்தியர் உறவினரால் இவ்விழா மிக உற்சாகமாகக் கொண்டாடப்பெறும். அறுபதாண்டு மணிவிழா சாந்தியில் செய்வது போலவே அந்தணர்கள் குடங்கள் வைத்து நவகிரக ஹோமம், ஆயுள் ஹோமம், சர்ந்தி ஹோமம் முதலியவற்றோடு பல்வேறு தெய்வங்களை வழிபடும் ஜபம் செய்வர். மந்திர உருவேற்றப்பட்ட குடத்து நீரால் உறவினர்கள் நீராட்டி வணங்கி மகிழ்வர். விழா நாயகர் மனைவியின் கழுத்தில் திருப்பூட்ட அனைவரும் வணங்கி வாழ்த்தி, திருநீறு குங்குமம் அட்சதை பெற்றுக் கொள்வர். விழா நாயகரின் மாமியார் வீட்டிலிருந்து தாலி கொண்டு வருவார்கள். மாலையில் விழா நாயக நாயகியர் உறவினர்களுடன் கோவிலுக்குச் சென்று வருவார்கள். சடங்குகள் எல்லாம் அறுபதாண்டு நிறைவு மணிவிழாவில் நடைபெறுவதுபோலவே சதாபிஷேகத்திலும் நடைபெறும்.

சத்தியமூர்த்தி, ஏ., (17-8-1928)

மாத்தூர் - மணலூர்
நாட்டரசன்கோட்டை
கணக்குத் தணிக்கையாளர்

இராயவரத்தில் இராம. அரு. லெட்சுமணன் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகனாகப் பிறந்து நாட்டரசன்கோட்டை ஏகப்ப செட்டியார் குடும்பத்துக்குப் பிள்ளை வளரச் சென்றார். பி.காம்., ஏ.சி.ஏ., பட்டங்கள் பெற்றுக் கணக்குத் தணிக்கையாளர் பெரி. தியாகராசன் அலுவலகத்தில் **1953** இல் பணியில் சேர்ந்தார். அவரது சென்னை அலுவலகத்தின் பொறுப்பாளராக **30** ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தபின் **1985**இல் இருந்து தன்மகன் திருஞானமூர்த்தியோடு சேர்ந்து 'திருஞானம் & கோ' என்ற பெயரில் சென்னையில் கணக்குத் தணிக்கை அலுவலகம் நடத்திவருகிறார். **1956** முதல் **1985** வரை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கணக்குத் தணிக்கைத் துறையில் பகுதி நேரப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். தன் மாப்பிள்ளை டாக்டர் கே. மோகனோடு சேர்ந்து நாட்டரசன்கோட்டையில் 'சத்தியமூர்த்தி அண்ட் மோகன் தொழிற்பயிற்சி நிலையம்' என்ற பயிற்சி நிலையத்தை அரசு அங்கீகாரத்துடன் தொடங்கிச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

Koviloor Digital Library

சந்திரமௌலி, அழ., (7-8-1946)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
வங்கியாளர்

அழகப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். எம்எஸ்சி. பட்டம் பெற்ற இவர் 1967 இல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் அதிகாரியாகப் பணியில் சேர்ந்தார். படிப்படியாக வங்கியின் பல்வேறு நிலைகளிலும் பணியாற்றி 1997 இல் இவ்வங்கியின் பொது மேலாளராகப் பதவி உயர்வு பெற்றார். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற பல்வேறு வங்கிப் பயிற்சியரங்குகளில் பங்கேற்ற சிறப்புடையவர் இவர்.

சபாபதி, சுப., (14-2-1936)

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார்
அரண்மனை சிறுவயல்
வங்கியாளர்

சிந்த சுப்பிரமணியன் செட்டியார் – தெய்வானை ஆச்சியின் மகன். அழகப்பா கல்லூரியில் பிகாம். பட்டப் படிப்பும், பின்னர் சி.ஏ.ஐ.ஐ.பி. எனும் வங்கித் துறைப் படிப்பும் படித்தவர்.

1956 இல் மதுரை வங்கியில் எழுத்தராகப் பணியில் சேர்ந்தார். தம் உழைப்பால் படிப்படியாக முன்னேறி 1981 இல் உதவிப் பொது மேலாளராகவும், 1984 இல் பொது மேலாளராகவும், 1986 இல் முதன்மைப் பொது மேலாளராகவும் உயர்ந்தார். 1989 இல் மதுரை வங்கியின் தலைவராக ஆனார். தாம் எழுத்தராகச் சேர்ந்த வங்கிக்கே 30 ஆண்டுகளில் தலைவராக ஆனது இவர் செய்த சாதனை ஆகும்.

இந்தியாவில் உள்ள அனைத்துத் தனியார் வங்கிகளின் கூட்டமைப்புக்குத் தலைவராக இரண்டாண்டுகள் பணியாற்றியிருக்கிறார்.

மூன்று ஆண்டுகள் மதுரை வங்கியின் தலைவராகப் பணியாற்றிய பின் ஓய்வு பெற்றார்.

சபாரத்தினம், டாக்டர். பழ., (29-6-1942)

மாத்தூர் - அரும்பாக்கூர்
காரைக்குடி
கல்வியாளர்

ஆறு.பழ.சி.ப. பழநியப்ப செட்டியார் – தெய்வானை ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வேதிப்பொறியியல் பட்டம் பெற்றார். 1967 முதல் அப்பல்கலைக்கழக வேதிப் பொறியியல் துறையில் விரிவுரையாளராகப் பணியேற்றார். அத்துறையில் உயர்பட்டங்களைப் பெறுவதும், அதற்கேற்பப் பதவி உயர்வு பெறுவதுமாக அவர் நிலை உயர்ந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் துறையினரால் முதன் முதலாக டாக்டர் பட்டம் வழங்கப் பெற்ற இவர், 31–3–1994 இல் அப்பல்கலைக் கழகத்தின் பதிவாளராகப் பணியமர்த்தப்பட்டுச் செயலாற்றி வருகிறார்.

வேதிப் பொறியியல் துறையில் 30க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பல்வேறு இதழ்களில் எழுதியிருக்கும் இவர், தமிழில் ஈடுபாடும், ஆற்றலும் மிக்கவர். பள்ளிப் பருவத்தில் தமிழ்ப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் நிறையப் பரிசுகள் பெற்றவர்.

சபாரத்தினம், லெ., (19-6-1940)

இலுப்பைக்குடி
உ. சிறுவயல்
நிருவாகி

லெட்சுமணன் செட்டியார் – அடைக்கம்மை ஆச்சியின் மகன். பிகாம்., எம்.பி.ஏ. பட்டங்களைப் பெற்றிருக்கும் இவர் செட்டிநாடு சிமிண்ட் கார்ப்பரேசன் தொடங்கப் பெற்ற காலத்திலிருந்தே பல்வேறு நிருவாக நிலைகளில் பணியாற்றிச் செயல் இயக்குநர் என்னும் முதன்மை நிலைக்கு உயர்ந்தவர். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு, நிதிக்குழு ஆகியவற்றின் உறுப்பினர். பல்வேறு தொழில் நிறுவனங்களின் இயக்குநர். அண்ணாமலை அரசர் குடும்பத்தினர் நிறுவியுள்ள பல்வேறு அறக்கட்டளைகளிலும் உறுப்பினர். இவரது நுண்ணிய அறிவும் சிறந்த செயலாற்றலுமே செட்டிநாடு சிமிண்ட் நிறுவனத்தை ஏற்றுமதித் தரம் வாய்ந்த உலகப்புகழ் மிக்க நிறுவனமாக உயர்த்தியுள்ளது.

சம்பந்தம், இராம. திரு (23-5-1935) (இயற்பெயர் : திருஞான சம்பந்தம், இராம)

தூரக்குடி
நெற்குப்பை
இதழாளர்

மாணிக்கம் செட்டியார் என்ற இராமனாதன் செட்டியார் – முத்தாத்தாள் ஆச்சியின் மகன். மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையிலும், பின்னர் தியாகராசர் கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்ற இவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல புலமை வாய்க்கப் பெற்றவர். கல்லூரியில் தேசியப் பயிற்சிப் படையில் சேர்ந்து, அதில் மாணவர்களில் முதன்மையராய்த் திகழ்ந்தவர். விளையாட்டில் ஆர்வம் மிக்கவர்.

Koviloor Digital Library

மதுரையிலிருந்து வெளிவந்த 'தமிழ்நாடு' நாளிதழில் பணியாற்றி இதழியல் துறைப்பயிற்சி பெற்றவர். பின்னர் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழில் சேர்ந்து 20 ஆண்டுகட்கும் மேலாகத் தலைமைச் செய்தியாளராகப் பணியாற்றியவர்.

இப்போது 'தினமணி' நாளிதழின் ஆசிரியர் பொறுப்பினை ஏற்று, தமிழர்க்கும் தமிழுக்கும் அளவற்ற நன்மைகள் விளையுமாறு செயலாற்றி வருகிறார். மனித நேயம் மிக்க இவருக்கு, பெரியார் கோட்பாடுகளில் ஈடுபாடு உண்டு. புகழ் வேண்டா மனமும், தான் வெளிப்படாது த்ன் செயலே வெளிப்படுமாறு பயனுள்ள பணிசெய்யும் நிறையுணர்வும் இயல்பாக வாய்க்கப் பெற்றவர். இவரது உறுதி படைத்த, நடுநிலை சார்ந்த பணிகள், தமிழ் இதழியல் உலகில் பெருமாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன.

சரசுவதி நாராயணன் கல்லூரி

கலைத்தந்தை கருமுத்து தியாகராசரின் மாப்பிள்யையான கண்டரமாணிக்கம் லெ. நாராயணன் செட்டியார் 'நாராயணன் செட்டியார் அறநிலை'யை 1957 இல் நிறுவினார். மதுரை – அருப்புக்கோட்டைச் சாலையில் மதுரை விமான நிலையத்திற்கு அருகே 64 ஏக்கர் நிலப்பரப்பில் இக்கல்லூரியை அந்த அறநிலை தொடங்கி நடத்திவருகிறது.

கருமுத்து தியாகராசர் 8–7–1966இல் குத்து விளக்கேற்றிக் கல்லூரியைத் தொடங்கி வைத்தார். வரலாறு, ஆங்கிலம் ஆகிய துறைகளில் இளங்கலை வகுப்பும் கணிதம், இயற்பியல், வேதியியல், பயிரியல் ஆகிய துறைகளில் இளம் அறிவியல் வகுப்பும் இளம் வணிகவியல் வகுப்பும் இங்கே நடைபெறுகின்றன. பட்டமேற்படிப்பு நிலையில் பொருளியல், ஆங்கிலம், வேதியியல், பயிரியல், கணிதம், வணிகவியல் ஆகியன கற்பிக்கப் பெறுகின்றன. இயற்பியல் மூதறிவியல் வகுப்பு மாலை நேரக் கல்லூரியாகச் சுயநிதி முறையில் நடைபெறு கிறது. பயிரியல், வணிகம், வேதியியல் ஆகியவற்றில் எம்.பில். ஆய்வும் பயிரியலில் பிஎச்.டி. ஆய்வும் மேற்கொள்ளும் ஆய்வு மையமாக மதுரை காமராசர் பல்கலைக் கழகம் இக்கல்லூரியை அங்கீகரித்துள்ளது. 1989 இலிருந்து இங்கு ஒரு கணிப்பொறி மையமும் இயங்கி வருகிறது.

கல்லூரி வெள்ளி விழாவை ஒட்டி 25 இலட்சரூபாய் செலவில் கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் – விசாலாட்சி ஆச்சி நினைவு நூலகக் கட்டிடத்தை நிறுவுநரின் துணைவியார் சரசுவதி ஆச்சி கட்டி வழங்கி யுள்ளார்கள். தொடங்கப்பட்ட குறுகிய காலத்திலேயே உயராய்வு மையமாக இக்கல்லூரியை வளர்த்து, கலைத்தந்தை வழியிலேயே அவரது மாப்பிள்ளை நாராயணன் செட்டியாரும் மதுரை நகரின் உயர்கல்வி வரலாற்றில் தனிமுத்திரையைப் பதித்துள்ளார்.

சரசுவதி நாராயணன் மணிவிழா அறக்கட்டளைப் பரிசு

கலைத்தந்தையின் மாப்பிள்ளையும் சரசுவதி – நாராயணன் கல்லூரி நிறுவுநரும் ஆகிய லெ. நாராயணன் செட்டியாரின் மணிவிழா நாளாகிய 11–2–1986 இல் அவர் பிள்ளைகள். ரூபாய் இரண்டு இலட்சத்தை வைப்பு நிதியாகக் கொண்டு சரசுவதி – நாராயணன் மணிவிழா அறக்கட்டளை என்ற அமைப்பை உருவாக்கினர். இதன் நோக்கம் இத்தொகையிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு ஆண்டுதோறும் பிப்ரவரித் திங்கள் பதினோராம் நாள் சிறந்த தமிழிலக்கியப் படைப்புக்கும் அறிவியல் கண்டுபிடிப்புக்கும் தனித்தனியே பரிசுகள் வழங்குதல் ஆகும்.

முதன் முதலாக 4–4–1994 அன்று சரசுவதி நாராயணன் கல்லூரி வெள்ளிவிழா நிகழ்ச்சியில் இப்பரிசுகள் வழங்கப் பெற்றன.

சன்மார்க்க சபை

மேலைச்சிவபுரியைச் சேர்ந்த புரவலர்கள் வ. பழ. சா. பழநியப்ப செட்டியார், அவர் தம்பி அண்ணாமலை செட்டியார் ஆகியோர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரின் நண்பர்கள். இவர் தம் வள்ளன்மையையும், தமிழ்ப் பற்றையும் கண்ட கதிரேசனார், இப்பண்புகள் ஒரு நிலைத்த வடிவம் பெற வேண்டும் என விரும்பியதால், சன்மார்க்க சபை என ஓர் அமைப்பை மேலைச்சிவபுரியில் தொடங்கலாம் என்று தம் நண்பர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

அதனை அவர்கள் ஏற்கவே, 1909 ஆம் ஆண்டு சபை உருவாயிற்று. சித்திரைத் திங்கள் சதய நாளில் (13–5–1909) அப்பர் குருபூசையோடு சன்மார்க்க சபைத் தொடக்க விழா சோழவந்தான் மகாவித்துவான் அரசஞ் சண்முகனார் தலைமையில் நடைபெற்றது.

சபையின் நோக்கங்கள் பின்வருமாறு குறிப்பிடப் பெற்றன. ''ஒழுக்கம் கல்வி முதலிய பல விஷயங்களைப் பற்றி உபந்நியாசங்கள் புரிவித்தலும், தக்க பண்டிதர் ஒருவரை இச்சபையின் உபாத்தியாயராக நியமனம் செய்து ஆங்குச் சேரும் சிறுவர்களுக்குக் கல்வி

Koviloor Digital Library

பயிற்றுவித்தலும், சபையில் வந்து படிப்பார் பலருக்கும் உபயோகமாகும்படி தமிழ் சமஸ்கிருத பாஷைகளிலுள்ள முக்கியமான எல்லாப் புத்தகங்களையும் தொகுத்து வைத்தலும், இலௌகிக சம்பந்தமானவும், இலக்கண இலக்கிய சாஸ்திர சம்பந்தமானவும் ஆகிய பத்திரிகை களைத் தருவித்தலும் பிறவுமாம்''.

இந்நோக்கங்களில் முதலாவது, அறிஞர்களின் சொற்பொழிவுகள் வாயிலாகத் தமிழும் சைவமும் வளர்த்தல். சபை தொடங்கியதிலிருந்து ஆண்டுதோறும் மூன்று நாட்கள் இலக்கியத் திருவிழாவாகச் சபையின் ஆண்டு விழா கொண்டாடப் பெற்றது வரலாற்றில் இடம் பெற்ற பசுமையான நிகழ்ச்சி. இவ்விழாவிற்கு, போக்குவரத்து வசதிகள் பெருகாத அக்காலத்தில், செட்டிநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், ஆயிரக்கணக்கானோர் மாட்டு வண்டிகளில் வந்து, சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயன்பெற்றனர்.

விழாவிற்கு வந்த அனைவருக்கும் வ.பழ.சா. குடும்பத்தார் இந்த மூன்று நாட்களும் விருந்துக்கு ஏற்பாடு செய்வதோடு, அவர்களது வண்டி மாடுகட்கும், வைக்கோல், தண்ணீர் முதலியவை வழங்கி, மூன்றுநாள் முழுச் செலவு செய்து, விழா நடத்தினர். **1910** களிலிருந்து அவர்கள் செய்த தமிழ்ப்பணி இது. சன்மார்க்க சபை ஆண்டு விழாவிற்கு வராத தமிழறிஞரோ, சைவ சித்தாந்த வித்தகரோ இல்லை எனக் கூறத்தக்க அளவு அனைத்துச் சான்றோர்களும் மேலைச்சிவபுரி விழாவிற்கு வந்துளர்.

சபையின் இரண்டாவது நோக்கம் கல்விப்பணி. **1909** இலேயே கணேசர் செந்தமிழ்த் தொடக்கப் பள்ளி எனப் பள்ளி ஒன்றும், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி எனக் கல்லூரி ஒன்றும் சபையால் தொடங்கப் பெற்றது. **1–7–81** முதல் தமிழ்மொழி வாயிலாக 'மழலையர் பள்ளி' ஒன்றையும் தொடங்கி நடத்தி வருகிறது. மேலைச்சிவபுரியில் அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்று அமைக்க ஆவன செய்து, அதற்குரிய நிலத்தையும் சன்மார்க்க சபை நன்கொடையாக அளித்துள்ளது.

சபையால் தொடங்கப் பெற்ற கணேசர் செந்தமிழ்க் கல்லூரி படிப்படியாக வளர்ந்து, இப்போது தமிழில் முதுகலைப் பட்டம், ஆய்வுப் பட்டம் ஆகியவற்றையும், மாலை நேர வகுப்புக்கள் வாயிலாகப் பிறதுறை இளங்கலைப் பட்டத்தையும் நடத்தும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தோடு இணைந்த, ஒரு கல்லூரியாக இயங்கி வருகிறது.

சபையின் மூன்றாவது நோக்கம் நூலகம் அமைத்தல். இப்பணியும் **1909** இலேயே தொடங்கப்பெற்று, தொல்காப்பியர் நூலகம் உருவாயிற்று. இப்போது இந்நூலகம் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் நூலகமாகச் செயல்பட்டு வருகிறது. கிடைத்தற்கரிய பழைய நூல்களும், பழைய இதழ்களின் தொகுதிகளும், புதிய நூல்களும், இதழ்களும் மாணவர்கட்குப் பயன்படும் வண்ணம் பேணி வரப்படும் இந்நூலகம், தமிழ்நாட்டில் தொல்காப்பியர் பெயரால் அமைந்த முதல் அமைப்பு ஆகும். நல்ல தமிழ் நூல்கள் பலவற்றைச் சபை பதிப்பித்து வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

அக்காலத்தில் தமிழறிஞர்கள் சன்மார்க்க சபையைப் 'பண்டிதமணி சபை' என்றே குறிப்பிடுவர். அந்த அளவு கதிரேசனாருக்கும் சபைக்கும் தொடர்பிருந்தது. அவர் கலந்து கொள்ளாமல் சபையின் எந்தவொரு விழாவும் நிகழ்ந்தது கிடையாது. அவருக்குப் 'பண்டிதமணி' எனும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்ததும் சன்மார்க்க சபையே. சபையின் 16 ஆவது ஆண்டு விழாவில், **1925** இல், டாக்டர் உவேசாமிநாத ஐயர் தலைமையில் இப்பட்டம் கதிரேசன் செட்டியாருக்கு வழங்கப் பெற்றது. ''சபையை நான் வளர்த்தேன் எனப் பலர் சொல்லுவார்கள். உண்மையில் சபைதான் என்னை வளர்த்தது'' எனப் பண்டிதமணி குறிப்பிடுவார்.

பண்டிதமணிக்குப் பின் வசுப. மாணிக்கனாரும் அவருக்குப் பின் தமிழண்ணலும் சபை வளர்ச்சியில் தமிழறிஞர் பங்கையும், வ.பழ.சா. குடும்பத்தார் நிருவாகப் பங்கையும் ஏற்றுச் செயல்பட்டுச் சபை தொடர்ந்து சிறந்த தொண்டு செய்யத் துணையாக உளர். 'சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக' என்ற குறிக்கோளோடு விளங்கும் சன்மார்க்க சபை தமிழ்நாட்டில் தொன்மையும் தொண்டும் சிறந்த ஓர் அமைப்பு. அதனைப் பற்றிய சோமலெ யின் மதிப்பீடு வருமாறு:

''எவ்வித ஆரவாரமும் இன்றி மொழிப்பணி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இடைவிடாது சபை நடந்து வருகிறது. செட்டிநாட்டில் இன்று காணும் தமிழ் அறிவுப் பெருக்கத்திற்கு இச்சபையே விளைநிலம் எனலாம். பல சங்கங்களும் கழகங்களும் செட்டிநாடு முழுவதும் தோன்றி, பணி செய்து வருவதற்கு இச்சபையே வழிகாட்டியாகும். நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் தமிழ் உணர்வுக்கு இச்சபை ஓர் எடுத்துக்காட்டாகும்.''

Koviloor Digital Library

சாத்தப்ப செட்டியார், பெரி.சோம., (29-9-1897 - 7-3-1950)

இளையாத்தங்குடி - ஒக்கூருடையார்
தேவகோட்டை
ஆலை அதிபர்

சண்முகநாதபுரத்தில் எஸ்.ஆர்.எம். சாத்தப்ப செட்டியார் – சிகப்பி ஆச்சியின் மகனாகப் பிறந்தார். 1–6–1908 அன்று தேவகோட்டை பெரி. சோமசுந்தரம் செட்டியார் – ஏகம்மை ஆச்சியால் பிள்ளை கூட்டிக் கொள்ளப்பட்டார்.

சோமசுந்தரம் செட்டியார் தென்னிந்தியாவில் முதன்முதலாக ஆலைத் தொழிலைத் தொடங்கிய இந்தியராவார். அவரிடம் தொழில் பழகிக் கொண்ட சாத்தப்ப செட்டியார், தம் தந்தையாருக்குப் பின் கோவை காளீசுவரா ஆலைப் பொறுப்பையும், தந்தையார் நடத்திய பிற ஆலைகள் அனைத்தின் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு திறம்பட நடத்தினார். மேலும் இவர் கோவையில் புதிதாக ஓர் ஆலையை வாங்கி, அதற்குத் தம் தந்தையார் பெயரை வைத்து, 'சோமசுந்தரம் ஆலை' என்று அழைத்து, அதனையும் சிறப்பாக நடத்தினார். தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கம் தொடங்கப்பெற்ற போது, அதன் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றினார்.

1933 இலேயே சென்னையில் ஒரு திரைப்பட ஸ்டுடியோ தொடங்கியவர் இவர். இவரது ஸ்டுடியோவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்கள் உருவாகி வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

தேவகோட்டையில் தமது இல்லத்தில் சீனிவாசப் பெருமாளுக்கு ஒரு கோவில் கட்டி 1943 இல் குடமுழுக்கு செய்தார். அங்கு நாள்தோறும் இரண்டு காலப்பூசை தொடர்ந்து நடைபெறுகிறது. பல்வேறு அறப்பணிகளை இவர் செய்துள்ளார். குறிப்பிடத்தக்கவை இரண்டு:

பெரியார் மாவட்டம் பெருந்துறையில் உள்ள காசநோய் மருத்துவமனைக்கு முக்கிய கட்டிடத்தைப் பெரும் செலவில் கட்டிக் கொடுத்திருப்பது ஒன்று. தாம் பிறந்த ஊரான சண்முகநாதபுரத்தில், தம்மைப் பெற்ற தந்தையார் பெயரில், எஸ்.ஆர்.எம். சாத்தப்ப செட்டியார், நடுநிலைப்பள்ளியை 13–11–1935 இல் தொடங்கியது மற்றொன்று. இப்பள்ளி இவர் மகன் காலத்தில் உயர்நிலைப் பள்ளியாக வளர்ந்தது.

ஆலைத்தொழிலிலும், கலைத்துறையிலும் முன்னோடியாக இருந்து சாதனை புரிந்த நகரத்தார் என்ற பெருமை இவருக்கு உண்டு.

சாந்திக் கலியாணம்

அறுபதாண்டு நிறைவு விழாவைச் சாந்தி என்று நகரத்தார் கொண்டாடுகின்றனர். சஷ்டியப்த பூர்த்தி, அறுபதுக்கறுபது, அறுபதாங் கலியாணம் என்பவை இவ்விழாவின் வேறு பெயர்கள். கோள் நிலைகளை நோக்கும் போது ஒருவர் பிறந்தகாலத்தில் அமைந்த ஆண்டு, மாதம், நட்சத்திரம், கிரகநிலை யாவும் அவருக்கு அறுபதாண்டு நிறைந்த மறுநாளில் அப்படியே அமைந்திருக்கும். ஆதலால் இதனைச் சிறப்பாகக் கொண்டாடுவது நகரத்தார் மரபு. தெய்வ நம்பிக்கையுடன் முன்னோர் வகுத்த 'சிஷ்டாசாரம்' என்னும் வழிமுறையைப் பின்பற்றிச் சஷ்டியப்த பூர்த்தி சாந்திக் கலியாணம் என்னும் அறுபதாண்டு நிறைவு மணிவிழாக் கொண்டாடப்படுகின்றது. ஆகமமுறை, வைதிக முறை என்னும் இருமுறைகளில் ஏதேனும் ஒருமுறையில் இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர்.

ஆகமமுறை, சிவாசாரியாராகிய குருக்கள் முன்னின்று நடத்திவைக்கும் சாந்தியாகும். வைதிக முறை, பஞ்சாங்கக்காரர் முன்னின்று நடத்துவதாகும். ஆகமமுறையில் மூன்று வேதிகைகள், மூன்று ஓமகுண்டங்கள், அமைக்கப்பட்டு 28 குடங்கள் (கலசம்) அல்லது 54 குடங்கள் வைக்கப்பட்டு சாந்தி நடைபெறும். வைதிக நெறியில் ஒரே மணையில் 64 குடங்கள் அல்லது 16 குடங்கள் வைத்து மூன்று ஓமகுண்டங்கள் அல்லது ஒரு ஓமகுண்டம் அமைத்துச் சாந்தி நடைபெறும். ஆகம முறையில் முதல்நாள் மறுநாள் (சாந்தி நாள்) இருநாட்களும் ஹோமம் பூர்ணாகுதி நடைபெறும். வைதிக முறையில் முதல்நாள் பாராயணம் மட்டுமே நிகழும். சாந்தியன்றுதான் ஹோமம் செய்து பூர்ணாகுதி நடைபெறும். ஆகமமுறையில் கும்பாபிடேகம் போலத் தெய்வங்களுக்கான ஹோமங்கள் நடைபெறும். வைதிக முறையில் மணிவிழா நாயகரின் ஆயுள் ஹோமம், நவகிரக ஹோமம், சாந்தி ஹோமம் ஆகியன நிகழும். புனிதநீர் கலசங்களில் நிரப்பப்பட்டு மணம் சேர்க்கப்பட்டு மணிவிழாத் தம்பதியர்க்கு மங்கல நீராட்டு நிகழ்வதும் மற்றொரு தம்பதியர்க்குத் திருமணம் செய்து வைத்தலும் பிறகு மங்கலநாண் அணிவித்து மாலைமாற்றுதலும் தானங்கள் கொடுத்தலும் இருநெறிக்கும் பொதுவானவை யாகும்.

சிவன், விஷ்ணு ஆகிய இருபெரும் கடவுளையும் நேர்ந்து கொண்டு காலகாலனாகிய அமிருதமிருத்யுஞ்ஜேச்வரனையும் அமிர்த கடேசுவரியையும் வழிபட்டு ஓமங்கள் செய்வது ஆகம முறையாகும்.

Koviloor Digital Library

இதில் முறையே

1. மகாசங்கல்பம்
2. அனுக்ஞை
3. விக்னேச்வரபூசை
4. கணபதி ஹோமம்
5. நவகிரக ஹோமம்
6. நாந்தி சோபனம்
7. லெட்சுமி பூசை
8. மிருத்தியுஞ்ஜெய ஹோமம்
9. மந்திர தீர்த்த அபிஷேகம்
10. தம்பதி பூஜை
11. திருமாங்கல்யதாரணம்

ஆகியவை நிகழும். மூன்று வேதிகைகள் அமைத்து மூன்றிலும் மொத்தம் 28 குடங்களில் திருமஞ்சன தீர்த்தம் நிரப்பி முறைப்படி வேதிகைகளில் அலங்காரம் செய்து தானியங்கள் பரப்பி கும்ப ஸ்தாபனம் செய்யப்பெறும். கங்கை முதலான புண்ணிய நதிகளின் தீர்த்தமும் திருமஞ்சன திரவியங்களும் கலந்து திருமஞ்சன தீர்த்தம் தயாரிக்க வேண்டும். மூன்று வேதிகைகளும் தெற்கு வடக்கில் வரிசையாக கிழக்கு நோக்கியதாக அமையும்.

தெற்குப்பக்க வேதிகை : 11 குடங்கள், நவகிரகங்கள் – 9, ராசி தேவதை – 1, காலாதி தேவதை – 1.

நடுவேதிகை (பிரதானம்) – 15 குடங்கள். அமிருத மிருத்யுஞ்ஜேசுவரர் – 1, அமிருத மிருத்யுஞ் ஜேசுவரி – 1, மார்க்கண்டேயர் – 1, கணபதி – 1, அஷ்டதிக்பாலர் – 8, துர்க்கை – 1. நந்தி – 1, பைரவர் – 1.

வடக்குப்பக்க வேதிகை : 2 குடங்கள் அல்லது 28 குடங்கள்.

பிரபவ முதல் அட்சய வரை உள்ள அறுபது ஆண்டுகளான சஷ்டிதேவிக்கு 1 குடம், எண்வகை இலக்குமியர் உள்ளிட்ட இருபத்தேழ்வர்க்கும் அஸ்வதி முதல் ரேவதி வரையுள்ள இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும் 1 குடம் ஆக 2 குடம். எல்லா நட்சத்திரங்களுக்கும் பொதுவாக ஒரு குடத்திற்குப்பதில் தனித்தனிக் குடம் வைத்தால் 26 குடம் கூடுதலாகும். அப்போது மொத்தம் 28 குடம் இடம் பெறும். ஆகம முறையில் இவ்வாறு 28 குடங்கள் அல்லது 54 குடங்கள் இடம்பெறும்.

தெய்வங்களுக்குரிய ஹோமங்களோடு பாராயணங்களும் நடைபெறும். ஸ்தோத்திரங்கள், நால்வேதம், திருமுறைகள் ஒதப்பெறும். இம்மங்கல நிகழ்ச்சியின் நடைமுறை :

முதல் நாள் காலை :

ஸ்நான சங்கல்பம்
தம்பதி ஸ்நானம்
விநாயகர் வழிபாடு (கோவிலில்)
மகாசங்கல்பம்
அனுக்ஞை
கணபதி ஹோமம்
நவகிரக ஹோமம்
நாந்தி சோபனம்
காலை நிகழ்ச்சிகள் நிறைவு.

முதல் நாள் மாலை :

லெட்சுமி பூசை
ஆசாரிய வர்ணம்
யாகபூசை தொடக்கம்
பூர்ணாகுதி
சோடசோபசார தீபாராதனை

மணிவிழா நாளில் : காலை.

யாகபூசை தொடக்கம்
மகாபூர்ணாகுதி
சோடசோபசார தீபாராதனை
யாகபூசை நிறைவு
மந்திர கலசாபிசேகம்
தம்பதிபூசை மங்கலநாண் அணிவித்தல்
ஆசிபெறலும் வழங்கலும், சிவாலய தரிசனம்.

வைதிகநெறிச் சாந்தியில் நடுவாசலில் கிழக்கு முகமாக ஒரே மணை அமைத்து அதில் 64 கலசம் அல்லது 16 கலசம் வைப்பார்கள். சாந்திக்கு முதல் நாள் காலை மணிவிழா மணமக்கள் சங்கல்பம் செய்து அனுக்ஞை செய்து ஆற்றில் அல்லது குளத்தில் நீராடி (இப்பொழுது வீட்டிலேயே குளிப்பதுண்டு) மகாகணபதியை வழிபாடு செய்து அர்ச்சனை செய்தல். பிறகு நாந்தி சோபனம் அனுக்ஞை, விக்னேஸ்வர பூசை, புண்ணியாஹவாசனம் செய்து நாந்தி சோபனத்திற்கு 9 அந்தணர்களை வரித்தல், பிறகு தீபலெட்சுமி பூசை செய்யப்படுகின்றது.

அன்றுமாலை அனுக்ஞை, புண்ணியாஹ வாசனம், தீபலெட்சுமி பூசை செய்து, கோதானம், தசதானம், வைஷ்ணவ சிரார்த்தம், கிரகப்ரீதி, முதலியவற்றைச் செய்து கோவிலிலிருந்து குருக்கள் மற்றும் அந்தணரை அழைத்து வந்து ஆசாரிய வர்ணம் (வேண்டி வரித்தல்) செய்து ஆச்சார்யர் மற்றும் ஜெபம் செய்யும் அந்தணர்க்கு வேட்டி துண்டு கொடுத்தல். பிறகு சஷ்டியப்த பூர்த்தி சாந்திக் கலசம் 64க்கும் தனியாக ஒரு கலசம் ஆயுள் தேவதையை எழுந்தருளச் செய்து வழிபாடு செய்து அர்ச்சனை செய்வர்.

Koviloor Digital Library

மணிவிழா நாயகரின் நட்சத்திரம் குடும்பத்தினரின் நட்சத்திரங்களைக் கேட்டுச் சங்கல்பம் செய்து பின்வரும் பாராயணங்களை ஜெபப் பிராமணர் செய்வார்கள்.

1. கணேச பஞ்சரத்னம்.
2. விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம்
3. இந்திராக்ஷி
4. சிவகவசம்
5. லெட்சுமி அஷ்டோத்திரம்
6. லெட்சுமி அஷ்டகம்
7. மார்க்கண்டேய ஸ்தோத்திரம்.

பாராயணங்கள் முடிந்தவுடன் நகரச் சிவன் கோவில் சிவாசாரியார் தீபாராதனை காண்பித்து திராவிட வேதம் என்று கூறியதும் தேவாரம் திருவாசகம் திருமுறைகள் பாடப்பெறும். நிறைவாகத் தீபாராதனை செய்து சிவாசாரியார் விபூதி பிரசாதம் வழங்குவார். மங்கல வாத்தியத்துடன் முதல் நாள் வழிபாடு நிறைவடையும்.

சாந்தியன்று காலையில் முதல்நாள் இரவு செய்த பாராயணங்களோடு ஆதித்ய ஹ்ருதயம், நவகிரஹ ஜெபம் முதலியவற்றையும் சேர்த்துப் பாராயணம் செய்வார்கள். பிறகு மணிவிழா நாயகர், அவரது மனைவி மற்றும் குடும்பத்தாரின் நட்சத்திரங்களைக் கேட்டு ஜெபப்பிராமணர் ஐந்து பேரை வைத்து ஆயுள் ஹோமம் செய்து பூர்ணாகுதி செய்வர். அடுத்து ஜெபப்பிராமணர் 10 பேரை வைத்து சாந்தி ஹோமம் செய்து பூர்ணாகுதி செய்வர். பின்பு நவகிரஹ ஹோமம் செய்து பூர்ணாகுதி செய்வர். இந்த மூன்று ஹோமங்கள் வைதிக நெறியில் மையமானவையாகும்.

பிறகு தீபாராதனை முடிந்து மணிவிழா நாயகர் குடும்பத்தாருடன் கலசங்களையும் ஹோம குண்டங்களையும் மும்முறை வலம் வந்து வழிபடுவர். நாயகர் துணைவியாருடன் பிரதான கலசமான சுவாமி அம்பாளுக்கு அர்ச்சனை செய்வர். பிறகு கலச தேவதைகளை யதாஸ்தானம் செய்வார்கள். அடுத்து பஞ்சதானம் என்னும் துர்தானங்கள் ஐந்தும் வழங்கப்படும்.

1. உப்பு
2. பருத்தி
3. அயதண்டம்
4. கருத்த கம்பளி
5. அயபாத்திரம். (சிறிய இருப்புச் சட்டியில் எண்ணெய் ஊற்றித் தானம் செய்வர்)

இந்தத் தானங்களைத் தெட்சணை தாம்பூலத்துடன் கொடுத்தபிறகு யாத்ராதானம் செய்ய வேண்டும்.

பிறகு மணிவிழா நாயகரையும் நாயகியையும் கோடிவேட்டி சேலையுடன் கிழக்கு முகமாக ஒரே நீள நாற்காலியில் உட்காரவைத்து மாலை போட்டு கையில் தேங்காயை இருவர்க்கும் கொடுத்து குடும்பத்தாரைப் பின்னால் இருக்கச் சொல்லி புண்ணியாஹ வாசனம் செய்த நீரையும் பிரதான கலச நீரையும் ஆசாரியரும் நகரச் சிவன்கோவில் சிவாசாரியாரும் தம்பதிகளுக்கு அபிடேகம் செய்வர். பிறகு பெரியவர்கள் தங்கள் மனைவியுடன் அபிடேகம் செய்தபின் கூடியுள்ள அனைவரும் அபிடேகம் செய்து வணங்கி வாழ்த்துவர். நிறைவாக மணிவிழா நாயகரின் புதல்வர்கள் தம் மனைவியருடன் வலம் வந்து தாய்தந்தைக்கு அபிடேகம் செய்வர். பிறகு நாயகியின் தாய்வீட்டார் பட்டுக் கொண்டுவந்த பட்டுச் சேலை முதலியவற்றை மணிவிழா நாயகியும் வேட்டி துண்டினை நாயகரும் கட்டிக் கொண்டுவந்து கிழக்கு முகமாக உட்காருவர். தீர்த்தம், விபூதி, சந்தனம், குங்குமம் பிரசாதங்களை வாங்கி அணிந்து கொள்வர். நெய் நிழல்தானம் செய்தபின் தம்பதிகள் தண்ணீரைத் தொட்டு கண்களைத் துடைத்துக் கொண்டு கண்ணாடியில் முகம் பார்ப்பார்கள்.

பிறகு தசதானம் என்னும் 10 வகைப் பொருள் தானம் வழங்கல், கோதுமை, பச்சரிசி, துவரை, பாசிப்பயறு, கொண்டைக்கடலை, மொச்சை, எள், உளுந்து, கொள்ளு ஆகிய ஒன்பது பொருட்களை நவகிரக தானமாக வழங்கல்; ஷட்தானம் என்னும் ஆறுவகைப் பொருளைத் தானமாகக் கொடுத்தல்; மகாதானம் என்னும் 20 வகைப் பொருட்களைத் தானமாக வழங்கல் முதலிய தானங்கள் செய்வார்கள்.

அடுத்துத் தம்பதி பூசை நடைபெறும். அந்தணத் தம்பதிகளைக் கிழக்கு முகமாக உட்கார வைத்து இருவருக்கும் புதுவேட்டி துண்டு சேலை முதலிய வழங்கி அணிந்து வரச் செய்வர். அவர்கட்குப் பூசை செய்து மணிவிழா நாயகர் திருமாங்கல்யத்தை எடுத்து அந்தணரிடம் கொடுக்க அவர் கெட்டி மேளத்துடன் தன் துணைவியாருக்குத் திருமாங்கல்யம் அணிவிப்பார். பிறகு தெட்சணை தாம்பூலத்துடன் கொடுத்து அவர்களிடம் ஆசிபெற்று அட்சதை விபூதி குங்குமம் பிரசாதம் பெற்றபின் மங்கல வாத்தியத்துடன் அத்தம்பதிகளை வாசல்வரை வழியனுப்பிவைப்பர்.

அதன்பிறகு சங்கல்பம் செய்து விக்னேஸ்வர பூசை செய்தல், திருமாங்கல்யப் பூசை செய்தல், பெரியோர்களிடம் ஆசி பெறுவதற்காகத் திருமாங்கல்யத்தைத் தாம்பூலத்தில் உள்ள மாலையுடன் கொடுத்தல், பிறகு கிரகப்பிரீதி செய்தல் நிகழும்.

Koviloor Digital Library

திருமாங்கல்யம் பெரியோர் ஆசிபெற்று வந்ததும் அவர் குடும்பத்து வழக்கப்படி மூத்த பெரியவர் எடுத்துக்கொடுக்க மணிவிழா நாயகர் அதைப் பெற்று அவர் துணைவியார் கழுத்தில் திருமாங்கல்யம் அணிவிப்பார். பிறகு மாலை மாற்றிக் கொள்வார்கள். பலதானம் செய்தபின் ஆசாரிய தட்சணை கொடுத்தல், சாதகாசார்ய தெட்சணை கொடுத்தல், சூரிய நமஸ்கார வகைகள் எட்டுக்கும் தெட்சணை கொடுத்தல் முடிவுற்றதும் சுவாமி பிரசாதம் பெற்றுக் கொள்வர். முன்னரே சாந்தி செய்து கொண்ட பெரியவர்கள் துணைவியாருடன் அமர்ந்திருக்க இவர்கள் விழுந்து வணங்கி விபூதி குங்குமம் பெற்றுக்கொள்வார்கள். அதன்பிறகு மணிவிழா நாயகரும் நாயகியும் அமர்ந்து இருந்து தம்மைவிட வயதில் சிறியார் தம்மை வணங்கும் போது அவர்களை வாழ்த்தித் திருநீறு குங்குமம் வழங்குவார்கள். விழுந்து வணங்கும்போதும் தம்பதியராக வணங்கித் திருநீறு பெறுவது மரபு.

நகரத்தார் சாந்தியில் முதல் நாள் உறவினர்க்கு வேட்டி சேலை வழங்குவது, மணிவிழா நாளன்று காலையில் மணிவிழா நாயகரின் மனைவியார் பிறந்த வீட்டிலிருந்து பட்டுச் சேலை வேட்டி தாலி, மாலை ஆகியவற்றோடு பட்டுக்கொண்டு வருதல் ஆகியவை குறிப்பிடத் தக்கவை ஆகும் மகன், மகள் ஆகியோரும் இந்நாளில் பட்டுக் கொண்டு வருகின்றனர். சாந்தி விழாவைத் தங்கள் செல்வ வளத்திற்கேற்ப ஆடம்பரமாகக் கொண்டாடு கின்றனர்.

சாந்தி சிதம்பரம், (15-4-1952)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
சமூகத் தொண்டர்

கானாடுகாத்தானைச் சேர்ந்த இவர் திருச்சி, திருவரங்கத்தில் வாழ்ந்து வருகிறார். கணவன், மனைவி இருவரும் சமூகத் தொண்டில் ஈடுபாடும், முனைப்பும் உடையவர்கள். பலமுறை இரத்ததானம் வழங்கியிருக்கும் இவர், தம் கணவரோடு இணைந்து எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாமும் நடத்தியிருக்கிறார்.

பெண்கள், குழந்தைகள் நலனுக்கு எதிராகவும், வரதட்சணைக் கொடுமைபற்றியும் வரும் முறையீடுகளை விசாரிக்கும், அரசு விசாரணைக் குழுவில் இவரை ஓர் உறுப்பினராகத் தமிழக அரசு அமர்த்தியுள்ளது. மேலும் உணவுப்பொருள் வழங்கு துறை, மற்றும் நுகர்வோருக்கான பொருள் உற்பத்தி ஆகியவற்றைக் கண்காணிக்கும் அரசுக்குழுவிலும் இவரைத் தமிழக அரசு உறுப்பினராக்கியுள்ளது.

சிங்கப்பூரில் நகரத்தார்

இப்போது தனிநாடாக விளங்குகின்ற சிங்கப்பூர், மலேயாவின் ஒரு பகுதியாக இருந்த காலந்தொட்டு நகரத்தார்க்குச் சிங்கப்பூர்த் தொடர்பு உண்டு. *1819* இல் தான் சிங்கப்பூரில் ஆங்கிலேயர் ஆட்சி அமைந்தது. அதற்குச் சில ஆண்டுகள் பின்னரே நகரத்தார்கள் லேவாதேவித் தொழிலுக்காகச் சிங்கப்பூர் செல்லத் தொடங்கினர். மலேயாவின் வளத்திற்கு எப்படி அடிப்படையாக நகரத்தாரின் நிதி உதவி அமைந்ததோ அதுபோலவே சிங்கப்பூரின் வளத்திற்கும் நகரத்தாரின் நிதியுதவி அடிப்படையாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற இடமெல்லாம் சைவமும் தமிழும் பரப்புவதை இயல்பாகக் கொண்ட நகரத்தார் சிங்கப்பூரிலும் அப்பணிகளைச் செம்மையாகச் செய்து வருகின்றனர். சிங்கப்பூர் டேங்க் ரோட்டில் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோவிலை *4-4-1859* இல் நகரத்தார்கள் கட்டியதாக அக்கோவிலின் கல்வெட்டுக் கூறுகிறது. இக்கோவிலின் ஒரு பகுதியாகச் சிவன்கோவிலும் அமைந்துள்ளது. இது *1878* இல் அமைக்கப்பட்டு *1886* இல் இக்கோவிலின் குடமுழுக்கு விழா நடைபெற்றது. இக்கோவிலில் ஈரடுக்குத் திருமண மண்டபம் ஒன்று *1983* இல் கட்டப்பெற்றுள்ளது. *1859, 1886, 1936, 1955, 1983, 1996* ஆகிய ஆண்டுகளில் இக்கோவிலுக்குக் குடமுழுக்கு விழா நிகழ்ந்துள்ளது. இக்கோவிலில் ஆண்டுமுழுவதும் பல்வேறு திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. தைப்பூசம், நவராத்திரி ஆகியவை மிகச்சிறப்பான விழாக்கள் ஆகும். தைப்பூசத் திருவிழாவில் அலகுக் காவடிகளும் பால் குடங்களும் சர்க்கரைக் காவடிகளும் பெருவாரியான அளவில் எடுக்கப்படுகின்றன. திருவிழா நாட்களில் அன்னதானம் சிறப்பாக நடைபெறும். இக்கோவிலில் நால்வர், சேக்கிழார், கோவிலூர் ஆண்டவர் ஆகிய அறுவர் குருபூசை ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. தங்கமயில் வாகனம், வெள்ளிக் குதிரைவாகனம், வெள்ளிரதம் ஆகியவற்றில் முருகப்பெருமான் திருவீதி எழுந்தருள்வார். ஒவ்வோராண்டும் தைப்பூசத்தை ஒட்டி மகமைக் கூட்டம் நடைபெறும். இங்கு தொழில் செய்யும் நகரத்தார்கள் கிட்டங்கிகளைச் சார்ந்தவர்களுள் ஒருவர் அக்கூட்டத்தில் கோவில் மேலாண்மைக் குழுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

தண்டாயுதபாணி கோவிலில் திருமுறைகளை நாள்தோறும் ஓதுவதற்காகக் காரைக்குடி முத்து அரு.சா.அரு. காவேரி ஆச்சி பெயரால் ஓர் அறக்கட்டளை அமைந்துள்ளது. இதன் வாயிலாக

Koviloor Digital Library

அறுபது ஆண்டுகளாகக் கோவிலில் திருமுறை ஓதுவதும் தேவார வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் சிங்கப்பூரில் நடைபெற்று வரும் திருமுறை மாநாட்டுக்கு இக்கோவிலார் தங்கள் திருமணமண்டபத்தைத் தந்துதவுகின்றனர். மேலும் திருமுறை ஓதும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்காக இக்கோவில் ஆண்டுதோறும் 200 வெள்ளி நன்கொடையாகக் கொடுத்து வருகிறது.

சிங்கப்பூர் அரசு தமிழைத் தம் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே தமிழ்மொழிக்கல்வி, தமிழ்வழிக்கல்வி என்ற இரண்டும் இங்கு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. இவ்விரு துறைகளிலும் நகரத்தார்கள் பெருந்தொண்டாற்றியுள்ளனர். நா. கருப்பையா, ச. தெய்வ நாயகம், சுப. திண்ணப்பன், மெ. திரு. அரசு, டாக்டர்.இராம. கருணாநிதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் மெ. திரு. அரசு வானொலி, தொலைக்காட்சி வாயிலாகவும் தமிழ்ப்பணி புரிந்தவராவார்.

சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் 'தமிழ்முரசு' நாளிதழின் துணை ஆசிரியராகக் கல்லுப்பட்டி மெ. சிதம்பரம் பல ஆண்டுகளும் கோனாபட்டு முருகு. சுப்பிரமணியன் 1954 முதல் 1962 வரையிலும் பணியாற்றியுள்ளனர்.

சைவமும் தமிழும் வளர்ப்பதோடு சமுதாயப் பணியிலும் சிங்கப்பூர் நகரத்தார்கள் முன்மாதிரியான பல செயல்களைச் செய்துள்ளனர். சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கம் (SINDA) என்ற அமைப்புக்கு 50000 வெள்ளியும் சிங்கப்பூர் போதை புழங்கிகளின் மறுவாழ்வு நலச்சங்கம் (SANA) அமைப்புக்கு 10000 வெள்ளியும் சிங்கப்பூர் இந்து மையக் கல்வி நிதிக்கு 1200 வெள்ளியும் நகரத்தார் தங்கள் தண்டாயுதபாணி கோவில் நிதியிலிருந்து வழங்கியுள்ளனர். சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம் வாயிலாகச் செட்டிநாட்டில் திருமணத்திற்கும் கல்விக்கும் நிதிஉதவி அளித்து வருகின்றனர்.

அரசியல் சார்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் நகரத்தார்கள் தொண்டாற்றி யுள்ளனர். அரிமழத்தைச் சேர்ந்த செல்லப்பா ராமசாமி நாடாளுமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்றச் செயலாளராகவும் பணியாற்றி யுள்ளார். பூலாங்குறிச்சியைச் சேர்ந்த வழக்குரைஞர் கா. சண்முகம் இப்போது நாடாளுமன்ற உறுப்பின ராகப் பணியாற்றி வருகிறார். செல்லப்பா ராமசாமி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுது சிங்கப்பூர்த் தமிழாசிரியர்களின் சம்பள உயர்விற்கு வழிவகுத்தார்.

தொடக்கத்தில் வட்டித் தொழிலுக்காகச் சென்ற நகரத்தார்கள் அங்கு சொத்துக்கள் பலவற்றை வாங்கினார்கள். சிங்கப்பூர் தனி நாடாகப் பிரிந்த பிறகு தனியார் வட்டிக் கடைகள் நடத்த இயலாத சூழலில் அவர்கள் தங்கள் சொத்துக்களின் வருமானத்தை நிருவகித்து வருகின்றனர். அடுத்த தலைமுறையைச் சேர்ந்த நகரத்தார் பெருமக்கள் மருத்துவம், பொறியியல், வழக்கறிஞர், கணக்குத் தணிக்கையாளர் ஆகிய தொழில்களின் அடிப்படையிலும் பல்வேறு அரசுத்துறைப் பணிகளிலும் சிங்கப்பூர் சென்று குடியேறியுளர். இப்போது ஏறத்தாழ 500 நகரத்தார் குடும்பங்கள் சிங்கப்பூரில் வாழ்கின்றன. நகரத்தாருக்குரிய தண்டாயுதபாணி கோவில் அல்லாமல் சிங்கப்பூர் இந்து அறநிலைய வாரியத்தின் கோவில்கள் பலவற்றிலும் அறங்காவலர் குழுத்தலைவர் களாகவும் உறுப்பினர்களாகவும் நகரத்தார்கள் பலரை அரசு நியமித்துள்ளது. கடல்கடந்து நகரத்தார் வாழும் நாடுகளுள் இன்று மிகுந்த வளத்தோடு நகரத்தார்கள் வாழ்கின்ற நாடாகச் சிங்கப்பூர் திகழ்கிறது.

சிங்காரம், சிவல்புரி, (17-6-1951)

மாத்தூர் - கண்ணூர்
கீழச்சிவல்பட்டி
கவிஞர், சோதிடர், இதழாளர்

நா.நா.கி. அழகப்ப செட்டியார் – அலர்மேலு ஆச்சியின் மகன். மதுரை எழுத்தாளர் மன்றம் நடத்திய கவிதைப் போட்டியிலும், தென் ஆர்க்காடு மாவட்ட எழுத்தாளர் மன்றம் மாநில அளவில் நடத்திய மகாத்மா காந்தி கவிதைப் போட்டியிலும் முதற்பரிசை வென்ற கவிஞர்.

சோதிடத் துறையிலும், எண் கணிதத் துறையிலும் பயிற்சி பெற்றுப் பணியாற்றி வருகிறார். 1994 ஜூலையில் திருச்செந்தூரில் நடைபெற்ற அனைத்திந்திய சோதிட மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அப்போது இவருக்குச் 'சோதிட வேந்தன்' என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

மதுரையிலிருந்து வெளிவரும் 'நகரத்தார் மலர்' இதழின் தொகுப்பாசிரியராக 1985 இலிருந்து 5 ஆண்டு காலம் பணியாற்றினார். அதன் பின்னரும் அவ்விதழில் 'சாதகம் உங்களுக்குச் சாதகமா', 'அம்மான் பதில்கள்' என்ற இரு பகுதிகளையும் இவர்தான் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார்.

Koviloor Digital Library

1992 இலிருந்து நகரத்தார் மலரின் குழு இதழாக ஓராண்டு காலம் வெளிவந்த 'நல்ல நேரம் வந்தாச்சு' என்ற சோதிட எண் கணித ஆன்மீக மாத இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

'அதிர்ஷ்டம் அழைக்கிறது', 'தையல்நாயகி பதிகம்', 'மகா பிரதோஷ மகிமை', 'அஷ்டலெக்ஷ்மி கவசம்', 'கிரகப்பெயர்ச்சி நூல்கள்', 'பயன் தரும் பட்சி சாஸ்திரம்' ஆகியவை இவரது நூல்களாகும்.

சிங்கார வடிவேலன், டாக்டர்.அர., (22-10-1937)

(புனைபெயர் - அரசி)
இலுப்பைக்குடி
கண்டனூர்
கவிஞர், பேராசிரியர்

அரங்கநாதன் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ் முதுகலைப்பட்டமும், அழகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சிப் பட்டமும் பெற்றார். மகா. பல்கலைக்கழகத்தில் 1978 இல் முனைவர் பட்டம் பெற்றார்.

அழகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மூன்றாண்டுகளும், அழகப்பா கல்லூரியில் எட்டு ஆண்டுகளும் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய பின் 1972 முதல் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் கல்விக்குழு உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். ம.கா. பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பாடத்திட்டக் குழுவின் தலைவராகவும் செயல்பட்டுள்ளார். 1986 இல் தமிழக அரசின் நல்லாசிரியர் விருதினைப் பெற்றார்.

சிறந்த மரபுக் கவிஞரான இவர் தமிழகம் முழுவதிலும் பல்வேறு கவியரங்கங்களில் பங்கேற்றும், தலைமை தாங்கியும் கவிதைகள் பாடியுள்ளார். பம்பாய், புது தில்லித் தமிழ்ச் சங்கங்களிலும், மலேசியா, சிங்கப்பூரிலும் இலக்கிய நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

1980 இல் புதுதில்லியில் நடந்த தேசிய கவி சம்மேளனத்தில் தமிழகத்தின் சார்பாகக் கலந்து கொண்டு கவிதை பாடியிருக்கிறார். பழநியப்பன் பதிப்பகம், வெற்றிவேல் அறக்கொடைப் பதிப்பகம் ஆகிய பதிப்பகங்களை நடத்தி அவற்றின் வாயிலாக 15 நூல்களுக்கும் மேலாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

சிதம்பரம், அழ., (30-6-1939)

மாத்தூர் - மண்ணூர்
கோட்டையூர்
ஆசிரியர் இயக்க அமைப்பாளர்

எஸ். அழகு – தெய்வானையின் மகன். அழகப்பா கல்லூரியில் நிலவியல் துறையில் இளம் அறிவியல் பட்டம் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1962 இல் பல்கலைக்கழகத்தின் இரண்டாம் இடச் சிறப்புத் தகுதியோடு முது அறிவியல் பட்டம் பெற்றார். 1963 முதல் அப்பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். கல்கத்தாவில் இந்திய நிலவியல் அளவைத் துறையினர் நடத்திய பயிற்சி வகுப்பிலும் சாகர் பல்கலைக்கழகம் நடத்திய கோடைப் பயிற்சிப் பள்ளியிலும் பங்கேற்றார்.

1971 இல் தொடங்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தில் [AUTA] தொடக்கத்திலிருந்தே இவருக்கு மிகுதியான ஈடுபாடு உண்டு. 1978 – 79 இல் சங்கப் பொருளாளராகப் பொறுப்பேற்ற இவர் 1981 முதல் பத்தாண்டுகள் சங்கத்தின் செயலராகப் பணியாற்றினார். இவர் பணியாற்றிய காலத்தில் சங்கம் பல்வேறு போராட்டங்களை நடத்தி ஆசிரியர்களுக்கும் பல்கலைக் கழக ஊழியர்களுக்கும் மிகுந்த நன்மைகளைப் பெற்றுத் தந்தது. 1981, 1987, 1994 ஆண்டுகளில் நடைபெற்ற போராட்டங்களில் பங்கேற்று இவர் சிறை சென்றுள்ளார்.

சிறந்த சொற்பொழிவாளரான இவர் பாரதி, அரவிந்தர் ஆகியோரிடம் மிகுந்த ஈடுபாடும் ஆன்மீக நாட்டமும் கொண்டவர். ஆசிரியர் இயக்கம் விரிந்த பார்வையையும் முழுமையான மனிதத்துவத்தையும் தமக்கு வழங்கியதாக இவர் குறிப்பிடுகிறார்.

சிதம்பரம், சித., (29-6-1939 - 16-1-1994)

மாத்தூர் - அரும்பாக்கூர்
காரைக்குடி
சட்டமன்ற உறுப்பினர்

நாசித. சிதம்பரம் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தவர். 1957 இல் தி.மு.கவில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார். காரைக்குடி நகர தி.மு.க. செயலர், தி.மு.க.வின் சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் போன்ற கழகப் பொறுப்புக்களில் இவர் பணியாற்றியுள்ளார்.

Koviloor Digital Library

1965 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுத் திருப்புத்தூர்ச் சிறைச்சாலையில் 15 நாட்கள் சிறைவைக்கப்பட்டார்.

1971 இல் காரைக்குடித் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். மீண்டும் 1980 இல் காரைக்குடிச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

1971 இல் ஒருமுறையும், 1986 இல் ஒருமுறையும் என இரு முறைகள் காரைக்குடி நகர் மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றுத் திறம்படப் பணியாற்றியுள்ளார். இவரது பணிக்காலத்தில் *1972* இல் தான் பாதுகாக்கப் பெற்ற குடிநீர்த் திட்டத்தைக் காரைக்குடி நகரில் விரிவுபடுத்தி, நகர் முழுவதற்கும் நல்ல குடிநீர் கிடைக்க வழிவகை செய்தார் என்பது காரை நகர் வரலாற்றில் நிலைத்து நிற்கும் உண்மை ஆகும்.

சொந்தமாகக் காரைக்குடியில் அரசு அச்சகம் என்ற அச்சகத்தை அமைத்துத் தொழில் புரிந்து வந்த சிதம்பரம், இலக்கியத் தொடர்பும் உடையவராக இருந்தார். காரைக்குடித் திருக்குறட்கழகத்தின் தலைவராகவும், கம்பன் கழக உறுப்பினராகவும் பணியாற்றியுள்ள இவர், தமிழ்த்தாய் கோவில் கட்டக் கலைஞரின் ஆட்சிக் காலத்தில் கழக அரசு நிதி உதவி செய்யத் தூண்டுகோலாக அமைந்தவரும் ஆவார்.

1957 இல் தி.மு.க.வில் சேர்ந்ததிலிருந்து தன் வாழ்நாளின் இறுதிக்காலம் வரை, உறுதியாக ஒரே கட்சியில் இருந்த அரசியல்வாதி சிதம்பரம். பல பதவிகளில் இருந்த காலத்திலும் காட்சிக்கு எளியராய்க் கடுஞ்சொல் இல்லாராய் நகரத்தார் நலன் பேணிய நல்ல அரசியல்வாதி.

சிதம்பரம், சுப., (14-6-1949)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
சமூகத் தொண்டர்

சா.சித.அரு. சுப்பிரமணியன் செட்டியாரின் மகன். சமூகத் தொண்டில் மிகுந்த ஈடுபாடு உடைய இவர் பலமுறை இரத்ததானம் செய்திருக்கிறார். சாலைப் பாதுகாப்பு, நுகர்வோர் நலன், மனித உரிமைகள் குறித்த கருத்தரங்குகளை நடத்தியுள்ளார்.

இவரது சமூகத் தொண்டுகளைப் பாராட்டி அகில உலக அரிமா சங்கத் தலைவர் இவருக்குச் சிறப்பு விருது வழங்கியிருக்கிறார். முன்னாள் தமிழக ஆளுநர் பி.சி. அலெக்சாண்டர் தமிழக அரசின் சிறப்பு விருதினை இவருக்கு வழங்கியுள்ளார்.

சாலைப்பாதுகாப்பு, நுகர்வோர் நலன், மனித உரிமைகள் பற்றிய விளக்கக் கையேடுகளைத் தயாரித்து வெளியிட்டுள்ள இவரைத் தமிழக அரசு, பொது விநியோகம் மற்றும் நுகர்வோர்களுக்காகத் தயாரிக்கப்படும் பொருள்களைக் கண்காணிக்கும் கண்காணிப்புக் குழுவில் உறுப்பினராக அமர்த்தியுள்ளது.

சிதம்பரம் செட்டியார், அ.க.அ.சித. அழ (7-6-1910)

மாத்தூர் - மண்ணூர்
கோட்டையூர்
கல்வியாளர்

வேந்தன்பட்டி சுப்பிரமணியன் செட்டியார் – தெய்வானை ஆச்சியின் மகன். கோட்டையூர் அழகப்ப செட்டியார் – அழகம்மை ஆச்சிக்குப் பிள்ளை வந்தவர். இராசா சர் அண்ணாமலை செட்டியார் மகள் உண்ணாமலை ஆச்சி இவரது துணைவியாவார். பர்மாவில் இவர் குடும்ப வணிகத்தைக் கவனிக்கச் சென்றபோது நகரத்தார்களுக்கு என்று இரங்கூன் மாநகராட்சி மன்றத்தில் ஒதுக்கப்பட்ட இடத்தில் இவர் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். கோட்டையூரில் 1965 இல் சிதம்பரம் செட்டியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியை நிறுவிச் சிறப்பாக நடத்தி வருகிறார். மாத்தூர் ஐநூற்றீசுவரர் கோவில் அறங் காவலர் குழுத் தலைவராகப் பதினைந்து ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இராய.சொ. நினைவு அறக் கட்டளையை நிறுவியுள்ளார். கோட்டையூரில் நகரத்தார்கள் உருவாக்க முன்வந்துள்ள விசுவேசுவரா மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு நாற்பது ஏக்கர் நிலத்தை நன்கொடையாக அளித்துள்ள இவர் அம்மருத்துவக் கல்லூரி ஸ்ரீ விசுவேசுவரர் அறக்கட்டளையின் அறங்காவலர் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

சிதம்பரம் செட்டியார், கோனூர் சமீன்தார், பெ.இராம. இராம. (1906-52)

இலுப்பைக்குடி
நற்சாந்துபட்டி
வள்ளல்

புலவர் பலருக்குப் புரவலராக இருந்த பெருமை உடையவர். இவர் எப்போதும் தமிழறிஞர்கள் புடைசூழவே இருப்பார். புதுக்கோட்டையில் 'இராமநிலையம்' என்ற தம்முடைய மாளிகையில் தமிழறிஞர்கள் தங்கியிருந்து தமிழாய்வு செய்ய வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்து மகிழ்வது

Koviloor Digital Library

இவரது இயல்பு. இவர்காலத் தமிழ்ப் பெரும்புலவர்களுள் இராமநிலையத்திற்கு வராத புலவரே இல்லை எனலாம்.

இவரது குடும்பத்தார் திருக்கொள்ளம்புதூரில் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். அங்குக் குடமுழுக்குவிழா நடத்தியபோது, இவர் சைவப்புலவர்களின் மாநாட்டையும், இலக்கியச் சொற்பொழிவுகளையும், கவியரங்கங்களையும் நடத்தினார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு இவர் பெரும் பொருள் உதவி செய்துள்ளார். தமிழிசைச் சங்கம், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை ஆகியவற்றுக்கும் தமிழ்த் தொண்டில் ஈடுபட்ட வேறு பல மன்றங் களுக்கும் இவர் பெரும்பொருள் வழங்கியுள்ளார்.

இவர் பண்டிதமணியின் நண்பர். அவரது நூல்கள் சில வெளிவரப் பொருளுதவி செய்திருக்கிறார். அவரது அறுபதாண்டு நிறைவு விழாவில் ஒரு மணி மலர் வெளிவரக் காரணமாக இருந்தவரும் இவரே. நாவலர் சோமசுந்தர பாரதியாரின் 'மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி' என்ற செய்யுள் நூல் இவரது பொருளுதவியால்தான் வெளியிடப்பட்டது.

ஈழத் தமிழறிஞர் விபுலானந்த அடிகளுக்கும், இவருக்கும் 1939 முதல் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இவரது இல்லத்திற்கு அடிக்கடி வந்து தங்கிய அடிகள் இவரது குலதெய்வத்தின் மீது பெருந்தேவபாணி ஒன்றைப் பாடியுள்ளார். இலங்கை வட்டவளையில் சிதம்பரம் செட்டியாருக்கு உட்ஸ்டாக் எஸ்டேட் என்ற தேயிலைத் தோட்டம் இருந்தது. அங்கும் இராமநிலையத்திலும் தங்கியிருந்தே விபுலானந்த அடிகள் 'யாழ் நூலை' எழுதி முடித்தார். அந்நூல் இவரது குடும்பத்தார் திருப்பணி செய்த திருக்கொள்ளம்புதூரில் 5.6.1947இல் அரங்கேற்றப் பெற்றது.

'யாழ்நூல்' எழுதும் காலத்தில் விபுலானந்த அடிகள் நோய்வாய்ப்பட்டார். சிதம்பரம் செட்டியார் பெரும்பொருள் செலவில் மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்தார். இவ்வாறு யாழ்நூல் உருவாகப் பல்லாற்றானும் உதவி, தம்செலவில் நூலைப் பதிப்பித்து வெளியிட்ட வள்ளல் சிதம்பரம் செட்டியார், அந்நூலின் படிகளை விற்றுப் பொருளீட்டிக் கொள்ளும் உரிமையைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கொடுத்தார்.

இவரது இலங்கை வட்டவளைத் தேயிலைத் தோட்டத்தில் தங்கியிருந்துதான் சோமலெ 'வளரும் தமிழ்' நூலை எழுதினார்.

தமிழ்ப் புலவர்களுக்கும், தமிழ் மாணவர் களுக்கும் சிதம்பரம் செட்டியார் வழங்கிய பொருளும், காட்டிய ஆதரவும் அவரைத் 'தமிழ் வள்ளல்' என வரலாற்றில் பெயர் பதித்து நிலைநிறுத்தும்.

சிதம்பரம் செட்டியார், மு.சித.மு., (2-8-1908 - 13-3-54)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
தொழிலதிபர்

சர். மு. சித. முத்தையா செட்டியாரின் மூத்தமகன். திருவாங்கூர் ரேயான் தொழிற் சாலையைத் தொடங்கி உலகச்சந்தையில் முதலிடம் பெறும் வண்ணம் சிறப்பாக நடத்தினார். 20.11.1936இல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியை நிறுவினார்; அந்நியச் செலாவணி வர்த்தகத்தை நோக்கமாகக் கொண்டு பல



மு.சித.மு. சிதம்பரம் செட்டியார்

வெளிநாடுகளில் மிகுந்த எண்ணிக்கையில் கிளைகளைத் திறந்தார். காப்பீட்டுத் துறையில் ஆர்வம் கொண்ட இவர் 'யுனைடெட் இந்தியா அஷ்யூரன்சு கம்பனி' என்ற ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தையும் யுனைடெட் இந்தியா ஃபையர் அண்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி, நியூ கார்டியன் இன்சூரன்ஸ் கம்பனி ஆகிய பொதுக் காப்பீட்டு நிறுவனங்களையும் தொடங்கி அவை நாட்டுடைமை யாக்கப்படும் வரை நடத்தி வந்தார்.

நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் உறுப்பினராகத் தொண்டாற்றியுள்ளார். சென்னை ரேஸ் கிளப்பின் ஸ்டுவர்டாகவும் தென்னிந்திய வர்த்தகசபையின் தலைவராகவும் (1938–39) தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பணியாற்றியுள்ளார்.

சென்னை புரசைவாக்கத்தில் தம் தந்தையார் நினைவாக எம்.சிடி. முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளியையும் தாயார் நினைவாக திருமதி எம்சிடி. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும் தொடங்கினார். தமது நாற்பத்தாறாவது வயதில் விமான விபத்தில் காலமான இவர் தாம் வாழ்ந்த குறைந்த ஆண்டுகளுக்குள் நிறைந்த சாதனைகளைச் செய்த பெருமைக்குரியவர்.

Koviloor Digital Library

சிதம்பரம் செட்டியார், வெ.ஆதி.மா.,

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார்
தேவகோட்டை
புலவர், தமிழ் வடமொழி அறிஞர்

நகரத்தார் மரபில் சாத்திர தோத்திரங்கள் கற்றுத் துறைபோகிய புலவர் பெருமக்களில் இவரும் ஒருவர். 1930ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றுள்ள 'விசுவநாதர் கோயில் திருப்பணி முறையீடு' என்னும் நூலில் 63 புராண நூல்கள் உள்ளிட்ட 139 தமிழ்நூல்கள், ஆகமங்கள் உள்ளிட்ட 23 வடமொழி நூல்களைப் பிரமாண மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார். வடமொழி சுலோகங்களைத் தமிழ் எழுத்திலும் அதன் கருத்தைத் தமிழிலும் கொடுத்துள்ளார்.

1. தேவகோட்டைக் கலங்காத கண்ட விநாயகர் விண்ணப்பமாலை
2. அமிஞ்சிக்கரை வரசித்தி விநாயகர் பதிகம்
3. தில்லைக் கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி
4. தில்லைச் சிவகாமியம்மை பதிகம்
5. காசி விசுவநாதர் கோயில்திருப்பணி முறையீடு
6. தில்லைக் கற்பக விநாயகர் சதகம்
7. தில்லைக் கற்பக விநாயகர் தோத்திரம் எழுபது

ஆகிய நூல்களை இவர் படைத்துள்ளார்.

'விசுவநாதர் கோயில் திருப்பணி முறையீடு' வரலாற்றுக் குறிப்புடையதாகவும் இவருடைய பரந்துபட்ட ஆழமான இலக்கண இலக்கியப் புலமையைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

சிதம்பரம், டாக்டர். இராம., (17-10-1948)

பிள்ளையார்பட்டி
ஆ. முத்துப்பட்டணம்
கல்வியாளர்

சி.ராம.நா.நா. இராமநாதன் செட்டியார் – அழகம்மை ஆச்சியின் மகன். வணிகவியல், சமூகவியல், தொலைதூரக் கல்வியியல், கல்வியியல் ஆகியவற்றில் முதுகலைப் பட்டங்கள் பெற்றுள்ள இவர் 'மரவள்ளிக் கிழங்கிலிருந்து உருவாகும் பொருட்களின் விற்பனை மேலாண்மை' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு வணிகவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். 1971இல் திருவேடகம் விவேகானந்தா கல்லூரியில் தம் ஆசிரியப் பணியைத் தொடங்கிய இவர் 1975 முதல் 15 ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பின் அழகப்பா பல்கலைக்கழகத்தில் வங்கி மேலாண்மையியல் துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார். கூடுதல் பொறுப்பாகப் பல்கலைக்கழகத் தேர்வுகட்டுப்பாடு அதிகாரியாகவும் இருந்து வருகிறார்.

வங்கிப் பணியிணைச் சந்தையிடுதல், கிராமப் புற வங்கியியல் சார்ந்த பல வங்கி மேலாண்மையியல் ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கில நாளிதழ்கள், பருவ இதழ்களில் எழுதியுள்ளார். காரைக்குடியைச் சுற்றியுள்ள கிராமப்புற இளைஞர்களுக்கு வங்கித் தேர்வு களுக்கான இலவசப் பயிற்சி வகுப்புக்களைக் காரைக்குடி சுழற்கழகத்தின் ஒத்துழைப்போடு நடத்தி வருகிறார். சிறந்த நூல்களை வெளிக்கொணரும் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக நிதி உதவிக்குழு 'வங்கிப் பணியிணைச் சந்தையிடுதல்' என்ற தலைப்பில் நூல் எழுத இவரைப் பணித்துள்ளது. கென்யா நாட்டில் உள்ள நைரோபி பல்கலைக்கழகம் வங்கி மேலாண்மையியல் பாடத்திட்டத்தினை வகுத்துத் தருமாறு இவரைக் கேட்டுக் கொண்டுள்ளது. 1997 செப்டம்பர் 5ஆம் நாள் தமிழக அரசு இவருக்கு நல்லாசிரியர் விருது வழங்கியது. இவர், அகில இந்திய மேலாண்மை மன்றம், அகில இந்தியக் கணக்கியல் மன்றம், ஆசியப் பசிபிக் நிதிமன்றம், அழகப்பா பல்கலைக்கழகப் பேரவை, ஆட்சிக்குழு ஆகியவற்றின் உறுப்பினர்.

சிதம்பரம், ப., (16-9-1945)

சூரக்குடி
கண்டனூர்
அரசியல்வாதி

லெசித.பழனியப்ப செட்டியார் – இலட்சுமி ஆச்சியின் மகன். இவர் இராசா சர் அண்ணாமலை செட்டியாரின் மகள் வழிப்பேரன். இந்தியாவில் சட்டக்கல்வியும் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் மேலாண்மையியல் உயர்கல்வியும் பெற்றவர். உயர்நீதி மன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற்றில் முதன்மைநிலை வழக்குரைஞராகத் திகழ்ந்தவர். இலக்கியச் சிந்தனை அமைப்பைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவர்.

காங்கிரஸ் பேரியக்கத்தில் இளம்வயதிலேயே தன்னை இணைத்துக் கொண்டு நாவன்மை மிக்க பேச்சாளராகத் திகழ்ந்தவர். சிறந்த எழுத்தாளர். ஜூனியர் விகடனில் இவர் எழுதிய அரசியல் தொடர் கட்டுரைகள் பலராலும் பாராட்டப் பெற்றவை. தேர்ந்த மொழி பெயர்ப்பாளர். இந்திரா காந்தி, இராஜீவ் காந்தி ஆகியோர் தமிழ்நாட்டில் உரை நிகழ்த்தியபோதெல்லாம் திறம்பட மொழி பெயர்த்துள்ளார். 1973இல் தமிழ்நாடு இளைஞர் காங்கிரசின் தலைவராகவும் 1976இல் தமிழ்நாடு காங்கிரசின் பொதுச் செயலாளராகவும் 1985இல் அனைத்திந்திய காங்கிரசின் இணைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

Koviloor Digital Library

1984இலிருந்து தொடர்ந்து சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று வருகிறார். அண்மையில் (1998) நடைபெற்ற தேர்தலிலும் வெற்றிபெற்றார்.



ப. சிதம்பரம்

1985இல் இராஜீவ் காந்தி அமைச்சரவையில் நிர்வாகச் சீர்திருத்தம் நிர்வாகப் பயிற்சி, மக்கள் குறைநீர்த்தல், ஓய்வூதியம், அரசுப்பணியாளர் துறைத் துணை அமைச்சராகவும் 1986 முதல் 1989 வரை இதே துறையின் இணை அமைச்சராகவும், உள்துறை இணை அமைச்சராகவும், பணி யாற்றினார். 1989இல் நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த போது பொதுக்கணக்குக் குழு, நிதித்துறை ஆலோசனைக்குழு, உள்ளிட்ட பல குழுக்களின் உறுப்பினராகத் திகழ்ந்தார்.

1991இல் பி.வி. நரசிம்மராவ் அமைச்சரவை யில் வணிகத்துறை இணை அமைச்சராகவும் நிறம்படப் பணியாற்றியுள்ளார். 1996இல் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி என்னும் புதிய மாநிலக் கட்சி தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்களில் இவரும் ஒருவர். மத்திய அரசின் ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் தேவகௌடா தலைமையிலும் தொடர்ந்து ஐ.கே. குஜ்ரால் தலைமையிலும் நிதியமைச்சராகப் பணியாற்றினார். 1997 பிப்ரவரியில் இவர் தயாரித்தளித்த முதல் முழுமையான வரவு செலவுத் திட்ட அறிக்கை அனைத்து அரசியல் கட்சிகளாலும் உலகெங்கும் உள்ள பொருளாதார வல்லுநர்களாலும் பாராட்டப் பெற்றது இவரது திறமைக்குத் தக்க சான்றாகும்.

இவர் இராஜீவ் காந்தியின் மிகநெருங்கிய நண்பர். இராஜீவ் காந்தி அறக்கட்டளையின் உறுப்பினர். பாரதிய வித்யா பவன் செயற்குழு, இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம், நீலச்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் சென்னைக் கிளைகளில் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். தம் தொகுதியாகிய சிவகங்கையில் கிராபைட் தொழிற்சாலை ஒன்று அமைவதற்குரிய அடிப்படைப் பணிகள் அனைத்தையும் செய்து முடித்துள்ளார். காரைக்குடியிலிருந்து பட்டுக்கோட்டை, மாயூரம் வழியே சென்னை செல்லும் விரைவுத் தொடர் வண்டிக்குக் 'கம்பன் எக்ஸ்பிரஸ்' என்ற பெயர் சூட்டச் செய்தார்.

ஆரவாரமில்லாத அரசியல் நடத்தும் மிகச்சிறந்த நாடாளுமன்றவாதி; பொருளியல் வல்லுநர்; அறிவுக்கூர்மை மிக்கவர்; நாட்டின் எதிர்காலம் குறித்த சிந்தனை ஆற்றலோடு செயல்திறமும் மிக்கவர்.

சிதம்பரம். பழ., (1929 - 6-11-1987)

இலுப்பைக்குடி
தேவகோட்டை
பதிப்பாளர்

பழநியப்ப செட்டியார் – லெட்சுமி ஆச்சியின் மகன். சின்ன அண்ணாமலையின் தூண்டுதலால் சென்னைக்கு வந்து பதிப்புத்துறையில் ஈடுபட்ட இவர் 1950இல் பாரதி பதிப்பகம் தொடங்கினார். பாரதி பதிப்பகம் என்ற பெயர் சூட்டிப் புதுக்கணக்கு எழுதித் தொடங்கி வைத்தவர் கல்கி ஆவார். கல்கி, இராஜாஜி, கலைஞர் கருணாநிதி, சுஜாதா ஆகியோரின் நூல்கள் உள்ளிட்ட 700க்கும் மேற்பட்ட நூல்களை இவர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். பொதுவாக 1000 படிகள் மட்டுமே அச்சிட்டு வெளியிட்டுக் கொண்டிருந்த பதிப்பகத் துறையில் 1200 படிகள் அச்சிடுவது என்ற முறை தோன்ற இவர் காரணமாவார். தமிழில் முதன்முதல் சாகித்திய அகாதமி பரிசு பெற்ற 'அலைஓசை' இவரது வெளியீடேயாகும். இன்று இவரது பாரதி பதிப்பகம் முன்னர் சாமிநாத சர்மா வாழ்ந்த இல்லத்தில் அமைந்துள்ளது.

சிதம்பரம் மு.அ., (12-10-1918)

இளையாத்தங்குடி, பட்டினசாமி
கானாடுகாத்தான்
தொழிலதிபர்

இராசா சர் அண்ணாமலை செட்டியார் – இராணி சீதை ஆச்சியின் மூன்றாவது மகன். சவுத் இந்தியா கார்ப்பரேசன் ஏஜன்சீஸ் லிமிடெட்டின் தொடக்க காலத் தலைவர். இப்பொழுது அதன் ஆலோசகர். இளம் வயதிலேயே இந்திய அலுமினியம் கம்பெனியின் இயக்குநராகச் செயல்திறம் காட்டியவர். தொடர்ந்து சர்க்கரை, எஃகு, ஆட்டோமொபைல், உரம், வங்கித் தொழில் என்று பல்வேறு துறைகளிலும், வெற்றி பெற்ற தொழில்

Koviloor Digital Library

முனைவர். ஆசியாவிலேயே மிகப்பெரிய இரசாயன உரத்தயாரிப்பு நிறுவனமாகிய ஸ்பிக் தூத்துக்குடியில் உருவாக முன்னோடியாக இருந்தவர். அதன் தலைவராக 20 ஆண்டுக்ள் பணியாற்றியவர். இப்போது அதன் இயக்குநர்.



மு.அ. சிதம்பரம்

1951 முதல் *1957* வரை தென்னிந்திய வர்த்தக சங்கத் தலைவராகப் பணியாற்றிய இவருடைய ஆலோசனையை மத்திய மாநில அரசுகள் வேண்டிப் பெற்றுள்ளன. 1955இல் சென்னை மாநகராட்சித் தலைவராகப் பணியாற்றியபோது, மக்களுக்குப் பாதுகாக்கப் பெற்ற தூய குடிநீர் கிடைக்க வழி செய்தார்.

விளையாட்டுத் துறையில் இளமையிலிருந்தே மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராகவும் அகில இந்திய டென்னிஸ் கழகத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். இவரது பெயராலேயே சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானம் அமைந்துள்ளது. சென்னை குதிரைப் பந்தயக் கழகத்தின் தலைவராகப் பல்லாண்டுகள் பணியாற்றியுள்ளார்.

படைவீரர்களின் நல்வாழ்வுத் திட்டங்களில் இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பாராட்டி இந்திய அரசு 'இந்தியன் டெரிடோரியல் ஆர்மி'யின் கௌரவக் கர்னல் என்ற விருதை இவருக்கு வழங்கிச் சிறப்பித்தது. சென்னையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் கௌரவச் சார்பாளராக நீண்டகாலம் தொண்டு செய்துள்ளார்.

தமிழிசை வளர்ச்சியில் மிகுந்த ஆர்வமுடைய இவர் தமிழிசைச் சங்கம் தொடங்கிய நாளிலிருந்து அதன் செயலராக இருந்து வருகிறார். ஆண்டு தோறும் பண்ணாராய்ச்சி மாநாட்டினையும், தமிழிசைப் பாடல்கள் போட்டியையும், தேவார மூவர் கலைவிழாவையும், முன்னின்று நடத்தி வருகிறார். இவரும் இவரது மைந்தர் முத்தையாவும் இணைந்து எம்.ஏ.சி. அறக்கட்டளையை நிறுவி அதன் வாயிலாக இராசா சர் அண்ணாமலை செட்டியார் நினைவுப் பரிசினை (த.க.) ஆண்டுதோறும் வழங்கித் தமிழ் இலக்கிய வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறார்கள்.

இவர் தம் தந்தையாரைப் போலவே சிறந்த தொழில் முனைவராகவும், நிருவாகியாகவும், மொழி, கலை, வளர்ச்சிக்குத் தொண்டு செய்பவராகவும் புகழ் பெற்று விளங்குகிறார்.

சிதம்பரம், வ.நா., (14-1-1935)

நேமங்கோவில்
இராங்கியம்
இதழாளர்

நாகப்ப செட்டியார் – பார்வதி ஆச்சியின் மகன். சென்னையிலுள்ள கமலா திரையரங்கின் உரிமையாளர். மதுரையிலிருந்து வெளிவரும் 'நகரத்தார் குரல்' (த.க.) மாத இதழின் ஆசிரியராவார். அவ்விதழில் பல தொடர் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

ஐயப்பன் தத்துவங்கள், புண்ணிய பூமியில் புனித யாத்திரை, அங்கயற் கண்ணியின் அற்புதங்கள், நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் ஆகியவை இவர் எழுதி வெளிவந்திருக்கும் நூல்கள்.

இராங்கியத்தில் வள்ளியப்பா தரும மருத்துவமனை என்ற பெயரில் ஒரு மருத்துவ மனையும் நடத்தி வருகிறார். 1981இல் நகரத்தார் நலஉரிமை மாநாட்டுச் செயலராக இருந்து காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் மாநாடு நடத்தினார்.

மூவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக்கழகத்தின் தலைவராகக் கடந்த 4 ஆண்டுகளாகச் செயலாற்றி வருகிறார். புதுக்கோட்டை மாவட்ட அறங்காவலர் நியமனக் குழுத் தலைவராக மூன்றாண்டுக்காலம் இருந்திருக்கிறார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவராகவும், தக்காராகவும் எட்டரை ஆண்டுகாலம் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். இவருடைய பணிக் காலத்தில் தமிழ் அருச்சனை மாநாட்டை நடத்தி, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தமிழ் அருச்சனையை இயல்பாக்கி, விரும்பிக் கேட்போருக்கு மட்டும் வடமொழி அருச்சனை செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். மீனாட்சி அம்மனுக்குத் தங்கத்தேர் செய்ய வழிவகை செய்ததோடு, அத்தேரைச் சித்திரை முதல்நாளும், தை முதல் நாளும் தமிழ்ப் புலவர்கள் இழுக்கவும் ஏற்பாடு செய்தது இவரது தமிழ் ஆர்வத்திற்குச் சான்றாகும்.

Koviloor Digital Library

இவருக்குத் திருமுருக கிருபானந்த வாரியார் 'மீனாட்சி திருமைந்தன்' என்ற விருதையும், குன்றக்குடி அடிகளார் 'கலைக் காவலர்' என்ற விருதையும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

சிதம்பரம், வி.,

பிள்ளையார்பட்டி
சொக்கநாதபுரம்
பொறியாளர்

பி.எஸ்.ஸி., பி.ஈ., எப்.ஐ.ஈ., எப்.ஐ.வி., ஆகிய பட்டங்களைப் பெற்ற இவர், மத்திய அரசின் துறைமுகப் பணியில் பொறியாளராகச் சேர்ந்தார். தொடக்கத்தில் 4 ஆண்டுகள் சென்னைத் துறைமுகத்தில் இளநிலைப் பொறியாளராகவும், பின்னர் 8 ஆண்டுகள் தூத்துக்குடித் துறைமுகத்தில் நிருவரகப் பொறியாளராகவும் பணியாற்றினார்.

1970 இல் மத்திய அரசுப் பணியிலிருந்து விலகி, அப்போது தொடங்கப்பெற்ற ஸ்பிக் நிறுவனத்தில் முதன்மைப் பொறியாளராகப் பொறுப்பேற்றார். நிறுவனம் தொடங்குவதற்குரிய பன்முகப் பணிகளுக்காக, அரசு அதிகாரிகள் பலரையும் கொண்டு அமைக்கப் பெற்ற செயற்குழுவின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியவர் இவர். 1992 இல் ஓய்வு பெறும் வரை ஸ்பிக் நிறுவனத்தில் முதன்மைப் பொறியாளராகப் பணியாற்றிய இவர் ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா, ஹாங்காங் போன்ற வெளிநாடுகள் பலவற்றிற்கும் பலமுறைகள் சென்று வந்தவர்.

தேவகோட்டையிலிருந்து ஆண்டுதோறும் திருச்செந்தூருக்கு நடைப்பயணம் மேற்கொள்ளும் நகரத்தார் குழுவினரை வரவேற்று, ஸ்பிக் வளாகத்தில் ஓரிரவு தங்கச் செய்து, உணவு வழங்கும் பணியினை 20 ஆண்டுகட்கு முன் தொடங்கி வைத்தார் இவர். அது இப்போதும் தொடர்கிறது.

சிதம்பரம், வெ., (6-9-1942)

மாத்தூர் - அரும்பாக்கூர்
கானாடுகாத்தான்
தொழிலதிபர்

க.வெ.சித. வெங்கடாசலஞ் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். இங்கிலாந்தில் தானியங்கி வாகன உற்பத்தித் துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ள இவர் இந்தியா ரேடியேட்டர்கள் நிறுவனத்தின் நிருவாக இயக்குநராகவும், துணைத் தலைவராகவும் பணிபுரிந்து வருகிறார். சென்னை தொழில் வணிகக் கழகத்தின் தலைவராகவும், இந்திய அமெரிக்க வணிகக் கழகத்தின் தென்மண்டல அமைப்பின் தலைவராகவும், இந்திய ஆஸ்திரேலிய வணிகக் கழகத்தின் தலைவராகவும், தொண்டு புரிந்துள்ளார். மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநராகவும், மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினராகவும், தமிழகத் தொழில் வளர்ச்சி மேம்படத் துணை செய்துள்ளார். இந்திராகாந்தி தேசிய ஒற்றுமைக்கான விருது பெற்றுள்ள இவர் குழந்தைகள் அறநிலைய மருத்துவமனை, ஒர்த் அறக்கட்டளை, சீடி அறக்கட்டளை ஆகியவற்றின் காப்பாளராகவும் சமூகத்துக்குத் தொண்டாற்றி வருகிறார். சுழற்குழுவின் மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இப்போது நெதர்லேண்ட் நாட்டின் கௌரவத் தூதராக அந்நாட்டரசால் நியமிக்கப் பெற்றுள்ளார். இது இவரது உலகளாவிய வணிகத் தொடர்புக்கும் சேவைத் திறத்துக்கும் கிடைத்த பரிசாகும்.

சிந்நயச் செட்டியார், வீர.லெ., (1855-1900)

மாத்தூர் - உறையூர்
தேவகோட்டை
புலவர், சைவ சித்தாந்த வித்தகர்

மேலவீட்டுச் சிந்நயச் செட்டியார் என்றழைக்கப்படும் இவர் லெட்சுமணன் செட்டியாரின் நான்காவது மகன். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரிடமும் தேவகோட்டை வன்றொண்டச் செட்டியாரிடமும் மாணவராகத் தமிழும் சைவசித்தாந்த சாத்திரங்களும் பாடம் கேட்டார். காரைக்குடி சொக்கலிங்க அய்யா உடன் படித்த மாணவர் ஆவார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையால் 'வித்வத் சிகாமணி' என்று பட்டம் வழங்கிப் பாராட்டப் பெற்றவர். பழுத்த தமிழ்ப்புலமையும் அருள்பழுத்த சமய ஞானமும் உடையவர். சேது சமஸ்தானப் புலவரும் தேவகோட்டை அழ.சுப. சுப்பிரமணியன் செட்டியாரும் இவரது மாணவர்கள். இவருடைய தூண்டுதலாலேயே தேவகோட்டை சிவாகமசங்கம் தொடங்கப் பெற்று, சுப்பிரமணியன் செட்டியார் அதைப் புரந்து போற்றி வந்தார்.

வள்ளல் பாண்டித்துரைத் தேவர் இவரது நெருங்கிய நண்பர். மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை வள்ளல் தோற்றுவிக்க இவரே காரணர்.

Koviloor Digital Library

நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாற்றை முதன் முதல் எழுதி வெளியிட்டவர் இவரே. துலாவூர்ச் செப்பேடுகளையும் கல்வெட்டுக்களையும் ஆதாரமாகக் கொண்டு அவ்வரலாற்றை எழுதினார். குன்றக்குடி மயின்மலைப் பிள்ளைத் தமிழ், திருவொற்றியூர்ப் புராணம், தேவைத் திரிபந்தாதி, சிலம்பைப் பதிற்றுப் பத்தந்தாதி, மதுரை மீனாட்சியம்மை பதிகம், காசியமக அந்தாதி, அருணைச் சிலேடை வெண்பாமாலை ஆகியன இவருக்கு அழியாப் புகழ் சேர்க்கும் நூல்கள். இவர் வாக்குப் பலிதம் உள்ளவர். இவரது பாடலால் ஆண் பனை காய்த்த அற்புத நிகழ்ச்சி இவர் வாழ்க்கையில் நடைபெற்றதாகக் கூறுவர்.

சிவநேசர் திருக்கூட்டம்

சொ. முருகப்பா தனவைசிய ஊழியர் சங்கத்திலிருந்து விலகியவுடன் 'காரைச் சிவனடியார் திருக் கூட்டம்' என்ற பெயரில் ஒரு அமைப்பைத் தாமே தலைவராக இருந்து தொடங்கினார். இவ்வமைப்பின் சார்பிலேயே 'குமரன்' (த.க.) மாத இதழையும் தொடங்கினார். இவ்வமைப்பின் இன்றியமையாத பணியாக நகரத்தார் ஊர்கள் தோறும் கோவில்களிலும் வீட்டுப்படைப்புக்களிலும் உயிர்ப்பலியைத் தடுக்கப் பிரச்சாரமும் போராட்டமும் நடத்தியிருக்கின்றார்கள். இவ்வமைப்பின் சார்பிலேயே திரு.வி.க. எழுதிய 'நாயன்மார் வரலாறு' முதன்முதலில் வெளியிடப் பெற்றது.

இந்தச் சூழலில் செட்டிநாட்டைச் சேர்ந்த சிவபூசைச் செல்வர்கள் பலர் சேர்ந்து காரைக்குடிச் சொக்கலிங்க அய்யா தலைமையில் 'சிவநேசர் திருக்கூட்டம்' என்ற அமைப்பை உருவாக்கினர். ருத்ரோத்காரி ஆவணி மாதம் 29 ஆம் நாள் (1923 செப்டம்பர்) பிள்ளையார்பட்டியில் இவ்வமைப்பின் தொடக்கவிழா நிகழ்ந்தது.

செட்டிநாட்டு ஊர்களில் அகரவரிசைப்படி ஒவ்வொரு மாதமும் பூர்வபட்ச பிரதோஷத்தன்று இக்கூட்டத்தார் சிவாலய தரிசனம் செய்து சைவப்பிரசங்கம் நிகழ்த்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆண்டு நிறைவு விழாவை 9 நகரக் கோவில்களில் அகர வரிசைப்படி வருடம் ஒரு கோவிலில் விநாயக சதுர்த்தியன்று கொண்டாடி வந்தனர்.

தலைச்சங்காட்டைச் சேர்ந்த சின்மயானந்த சுவாமிகள் காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தார் சிலையைக் கண்டெடுத்ததும், அவருக்கு விழா எடுக்க நினைத்துச் செட்டி நாட்டுக்கு வந்தபோது இத்திருக்கூட்டத்தாரைச் சந்தித்தே தம் வேண்டுகோளைத் தெரியப் படுத்தினார். இந்த அமைப்பினரும் அவர் வேண்டுகோளை ஏற்றுக் காவிரிப் பூம்பட்டினத்தில் பட்டினத்தார் அற்புதத் திருவிழாவைத் தொடங்கினர். இவ்வமைப்பின் உறுப்பினராயிருந்த கண்டனூர் நா.அரு. மகாதேவ காசி விசுவநாதன்செட்டியார் குடும்பத்தினர் தொடர்ந்து இவ்விழாவை நடத்தி வருகின்றனர்.

இவ்வமைப்பின் உறுப்பினரான பலவான் குடிஎயச் சேர்ந்த இராம.கு. இராமசாமிச் செட்டியார் 1927 இல் இவ்வமைப்பின் சார்பில் 'சிவநேசன்' (த.க.) என்ற வார இதழைத் தொடங்கினார். இவ்விதழ் நீண்டகாலம் அவரால் நடத்தப் பெற்றது.

தமிழும் சைவமும் வளர்க்கும் இயல்புடைய நகரத்தார்கள் அதற்கீாகவே தோற்றுவித்துப் பல ஆண்டுகள் சிறப்பாகத் தொண்டாற்றிய ஒரியக்கம் சிவநேசர் திருக்கூட்டம் ஆகும்.

சிவநேசன்

இப்பெயரில் வார இதழொன்று 1927இல் தொடங்கப்பெற்றது. 1932 இலிருந்து அது மாத இதழாக வெளிவந்தது. பத்தாண்டுகட்கும் மேல் தொடர்ந்து வெளிவந்தபின் நின்று போயிற்று. பலவான்குடியைச் சேர்ந்த இராம.கு. இராம. இராமசாமிச் செட்டியார், (த.க.) சிவநேசன் அச்சுக்கூடம் என்ற தமது சொந்த அச்சுக்கூடத்தில் அச்சிட்டு தாமே ஆசிரியராக இருந்து, இவ்விதழை நடத்தினார்.

வார இதழாக வெளிவந்த போது முழுத்தாள் அளவில் (Foolscap) எட்டுப் பக்கங்கள் வெளிவந்தது. பின்னர் மாத இதழாக வெளிவந்த போது புத்தக வடிவில் டெம்மி அளவில் 40 பக்கங்களுடன் வெளிவந்தது. தனி இதழ் விலை 3 அணா (19 காசுகள்); தனி இதழை அஞ்சல் வாயிலாகப் பெற்றால் விலை 4 அணா (25 காசுகள்). ஆண்டுக் கட்டணம் ரூ. 2.4.0. (இரண்டேகால் ரூபாய்).

முதலில் பலவான்குடியிலிருந்தே வெளிவந்த இந்த இதழ், பின்னர்த் தஞ்சாவூருக்குச் சற்று வடக்கே உள்ள திருத்தென்குடித் திட்டையிலிருந்து வெளிவந்தது. அப்போது இதழின் ஆண்டுக் கட்டணம் ரூ.1.8.0. (ஒன்றரை ரூபாய்) ஆகக் குறைக்கப் பெற்றிருக்கிறது.

"தக்கார் பலர் தமிழ் வளங்கருதி, சைவநலம் கருதி எழுதிய கட்டுரைகளைக் கொண்டு தரணி முழுவதும் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கச்

Koviloor Digital Library

செய்யும் தொண்டு சிவநேசன் தொண்டு'' என்று ஆசிரியர் குறிப்பிடுவது இவ்விதழின் நோக்கத்தைப் புலப்படுத்தும்.

தமிழ்நாட்டின் சைவசித்தாந்த வித்தகர்கள் பலரும் இவ்விதழில் கட்டுரைகள் எழுதியுளர். சாத்திர, இலக்கிய நூல்களின் உரைகள் சைவசித்தாந்த சமாசத் தலைமையுரைகள், மணிவாசக சங்கத் தலைமையுரைகள், நூல் மதிப்புரைகள் ஆகியவை இவ்விதழில் தொடர்ந்து வெளிவந்தன.

தரமான தாள், தெளிவான அச்சு, சிறந்த கட்டமைப்பு ஆகியவை இவ்விதழின் சிறப்புக்கள். சைவமும், தமிழும் வளர்க்க எழுபதாண்டுகட்கு முன்பே சிறந்த முறையில் இதழ் நடத்தியவர் ஒரு நகரத்தார் என்பது நினைந்து போற்றத்தக்கது.

சிவப்பிரகாசம், சோம., (14-6-1939)

சூரக்குடி
கீழச்சிவல்பட்டி
கவிஞர்

சோமசுந்தரம் செட்டியார் – கல்யாணி ஆச்சியின் இரண்டாவது மகன். தமிழில் புலவர் பட்டம், முதுகலைப்பட்டம், ஆசிரியர் பயிற்சிப் பட்டம் ஆகியவற்றைப் பெற்ற இவர் நாச்சியாபுரம் உயர்நிலைப் பள்ளியில் 25 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

சிறந்த மரபுக் கவிஞராகிய இவர் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கவியரங்கங்களில் பங்கேற்றுக் கவிதை பாடியுள்ளார். 'வரும் நூற்றாண்டே வா' எனும் கவிதை நூலை எழுதியுள்ளார்.

1964–65இல் தமிழகக் கல்லூரிகளுக்காகக் காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்மன்றம் நடத்திய கவிதைப் போட்டியில் இவர் முதற் பரிசு பெற்றார். 1993ஆம் ஆண்டு குன்றக்குடி விசாக விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் இவருக்குக் 'கவிஞர் கோ' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார். அதே ஆண்டில் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் நடத்திய கவிதைப்போட்டியில் முதற் பரிசு பெற்று, 'பொற்கிழிக் கவிஞர்' பட்டத்தையும் பெற்றார்.

1993–94இல் கொழும்புத் தமிழ்ச் சங்கம் கவிதைப் போட்டி நடத்தியது. உலகெங்கிலுமுள்ள 100 நாடுகளைச் சேர்ந்த 101 கவிஞர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் இவர் எழுதிய 'வருக பொற்காலம்' என்ற கவிதைக்கு முதற்பரிசு கிடைத்தது இவரது கவிதைச் சிறப்பிற்குச் சான்று கூறும்.

சிவராமன், டாக்டர். லெ., (23-9-1924)

சூரக்குடி
நடராசபுரம்
அறுவை மருத்துவர்

சா.சிவ.வீர. இலட்சுமணன் செட்டியார் – மெய்யம்மை ஆச்சியின் மகன். தொடக்கக் கல்வியை இலங்கையிலும், பர்மாவிலும் பெற்றார். 1942இல் தாயகம் திரும்பினார். 1944இல் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் வித்துவான் பட்டப்பிடிப்பில் சேர்ந்தார். ஆனால் பாதியில் அதிலிருந்து விலகி, தனிப் பயிற்சியில் பள்ளியிறுதி வகுப்புத் தேர்வெழுதி வெற்றி பெற்றார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இடைநிலைத் தேர்வில் வெற்றி பெற்றுச் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து 1953ஆம் ஆண்டில் எம்.பி.பி.எஸ்.பட்டம் பெற்றார்.

பிறகு இங்கிலாந்திற்குச் சென்று, அங்கு பல மருத்துவமனைகளில் அடுத்தடுத்துப் பணியாற்றிக் கொண்டே அறுவை மருத்துவச் சிறப்புப் பட்டமாகிய எப்.ஆர். சி.எஸ். படித்து 1960இல் தேர்ச்சி பெற்றார். 1961இல் இந்தியா திரும்பினார்.

அதுமுதல் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் அறுவை மருத்துவத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி 1983இல் ஓய்வு பெற்றார். 1964இல் தஞ்சாவூர் செல்வம் நகரில் 'சிவராம் மருத்துவ ஆதுரகம்' என்ற மருத்துவமனையைக் கட்டி, அறுவை மருத்துவம் செய்து வருகிறார்.

வெளிநாட்டு மருத்துவத் துறை இதழ்களில் பல ஆய்வுக்கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார். இவர் எழுதித் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கும் ''அறுவைச் சிகிச்சை நோய் நாடல்'' என்ற நூல் 1986இல் தமிழக அரசின் ஆயிரம் ரூபாய்ப் பரிசினை இவருக்குப் பெற்றுத் தந்தது.

இவர், சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்விக் குழுவிலும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் நிலைக் குழுவிலும் உறுப்பினராகப் பணியாற்றிய சிறப்புடையவர்.

சிவராமன், வீர., (20-7-1928)

நேமங்கோவில்
காரைக்குடி
பதிப்பாளர்

குப.சிவ. வீரப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். இவர் இளமையில் ஓவியம் வரைவதிலும், குழந்தைக் கவிதைகள், இலக்கியப் படைப்புக்கள் ஆகியவற்றிலும் ஆர்வம் கொண்டிருந்தார். இவரது கவிதைகள், கட்டுரைகள் ஆகியவை கல்கி, கோகுலம், அமுதசுரபி, தினமணி ஆகிய இதழ்களில் அவ்வப்போது வெளிவந்துள்ளன.

Koviloor Digital Library

*13–12–1954*இல் காரைக்குடியில் இவர் செல்வி பதிப்பகம் என்ற நூல் வெளியீட்டு நிறுவனத்தைத் தொடங்கினார். இன்று வரை நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அவற்றுள் குறிப்பிடத் தக்கவை சுத்தானந்த பாரதியின் 'மணிமேகலைக் காப்பியம்', டாக்டர் வ.சுப. மாணிக்கனாரின் 'இரட்டைக் காப்பியங்கள்', டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் 'தமிழர் திருமணத்தில் தாலி', டாக்டர், தமிழண்ணலின் 'தாலாட்டு' போன்றவை ஆகும்.

சிவலிங்கம் செட்டியார், வ.செ., (22-2-1912 - 23-8-95)

பிள்ளையார்பட்டி
பூலாங்குறிச்சி
கல்லூரி நிறுவுநர்

செட்டியப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். தொடக்கத்தில் இலங்கையிலும் மலாயாவிலும் இரப்பர்த் தோட்டத் தொழிலை மேற்கொண்டார். ஆந்திரா மாநிலம் நெல்லூர் மாவட்டத்தில் நூற்பாலை (1965), கீரனூரில் எண்ணெய், அரிசி ஆலைகள், சென்னையில் அபிராமி வளாகத் திரையரங்கங்கள் (1976) ஆகியவை இவர் தொடங்கிய உள்நாட்டு நிறுவனங்கள் ஆகும்.

காங்கிரஸ் கட்சியில் திருப்புத்தூர் வட்டத் தலைவராகவும் இராமநாதபுரம் மாவட்டத் துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்த இவர் 1968இல் நடைபெற்ற திருப்புத்தூர் அரசியல் மாநாட்டை முன்னின்று நடத்தினார். 1957இல் பூலாங்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1960இல் திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுத் திறம்படப் பணியாற்றினார்.

பூலாங்குறிச்சியில் வ.செ. மீனாட்சி ஆச்சி தொடக்கப் பள்ளி என்ற பள்ளியைக் கட்டி ஊராட்சி மன்றத்திடம் அன்பளிப்பாகக் கொடுத்தார். வ.செ. சிவலிங்கம் செட்டியார் அரசினர் கலைக்கல்லூரி பின்தங்கிய பகுதியாகிய பூலாங்குறிச்சியில் அமைவதற்கு இவர் 15 ஏக்கர் நிலமும் பெருந்தொகையும் நன்கொடையாகக் கொடுத்தார். ஆந்திர மாநிலம் சூலூர்ப் பேட்டையில் ஓர் அரசு கலைக்கல்லூரி அமைவதற்கு ஐந்து ஏக்கர் நிலமும் ஐந்து இலட்சம் ரூபாயும் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

சிவனடியான் செட்டியார், சிவ., (11-8-1923)

வைரவன் கோவில் - கழனிவாசலுடையார்
நற்சாந்துபட்டி
தொழிலதிபர்

சிவசாமிச் செட்டியார் – மீனாட்சி ஆச்சி மகன். இலயோலாக் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றவர். 1955இல் அரிகரன் & கோ என்ற தாள் வணிக நிறுவனத்தை வேறு சிலரோடு கூட்டாகத் தொடங்கினார். பல்வேறு ஆண்டுகளில் பல்வேறு நிறுவனங்களைத் தொடங்கி இப்போது ஏறத்தாழ 20 நிறுவனங்களை நடத்தி வருகின்றார். அவை பெரும்பாலும் தாள்வணிக நிறுவனங்களும் நிதி நிறுவனங்களும் ஆகும்.

*1963 – 64*இல் கோவை நகரத்தார் சங்கப் பொருளாளராகவும் 1970 முதல் 95 வரை கோவை தாள்வணிகர் சங்கத் தலைவராகவும் 1980 முதல் 1995 வரை கோவை வர்த்தக சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் தொண்டாற்றிய இவர் இப்போது (1997 முதல்) கோவை நகரத்தார் சங்கத் தலைவராக விளங்குகிறார்.

1987 இல் விசாலாட்சி – சிவனடியான் சாரிடபிள் டிரஸ்ட் என்ற அறக்கட்டளையைத் தொடங்கி ஆண்டுதோறும் ரூபாய் இரண்டு இலட்சம் படிப்பு மருத்துவம் மற்றும் திருமணங்களுக்காக நிதி உதவியாக வழங்கி வருகிறார். நற்சாந்துபட்டியில் கட்டப்பட்டுள்ள நகரத்தார் கல்யாண மண்டபத்திற்கு ரூபாய் மூன்று இலட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச் சைவ நெறிக்கழகம்

தேவகோட்டை பாலகவி சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் இராமநாதன் செட்டியாரிடம் விசேடம் முதலிய தீட்சைபெற்றுச் சிவபூசை செய்துவரும் அன்பர்கள் 1979ஆம் ஆண்டில் காரைக்குடி அறுபத்துமூவர் குருபூசை மடத்தில் நடைபெற்ற சிவநேசர் திருக்கூட்டச் சிவபூசை விழாவில் கூடியபொழுது இக்கழகத்தைத் தோற்றுவித்தனர்.

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரின் பிறந்த நாளாகிய ஒவ்வொரு மார்கழிச் சுவாதியிலும் அவர்களது நாண்மங்கல விழாவைச் சிவபூசை மாநாடாகக் கொண்டாடுவது, சிவபூசகர்கள் சேர்ந்து செய்யும் பூசையால் மக்களைச் சிவபூசை செய்யத் தூண்டுவது, தேசிகரின் நூல்களை அச்சுக்குக் கொண்டு வருவது, ஆகியவை இக்கழகத்தின் நோக்கங்களாகும்.

Koviloor Digital Library

திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்ட இக்கழகத்தின் கிளைகள் குளித்தலை, திருமயம், மதுரை, கொங்குமண்டலம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. முதல் மாநாடு 12–12–1980இல் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரின் 66 ஆவது பிறந்தநாளில் திருவானைக்காவில் நடைபெற்றது. தொடர்ந்து மதுரை, சிதம்பரம், திருவாரூர், திருவண்ணாமலை, திருக்காளத்தி முதலிய பல திருத்தலங்களில் மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

சிறாவயல்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ளது. குன்றக்குடி பிள்ளையார்பட்டி வழியாக கற்பகவிநாயகர் ஆலயத்திலிருந்து தெற்கே செல்லும் சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது.

வைரவன்கோவில், இலுப்பைக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய மூன்று கோவில்களைச் சேர்ந்த 115 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இலுப்பைக்குடியைச் சேர்ந்த க.மு.நா. மெய்யப்ப செட்டியார் குடும்பத்தாரால் திரிலோக நாயகி உடனாய தியாகராசர் திருக்கோவில் 1912 இல் கட்டிக் குடமுழுக்குச் செய்யப் பெற்றது. 1927 இல் இக்கோவில் நகரத்தார் பொதுவில் ஒப்படைக்கப் பெற்றது. நகரத்தார் 1927, 1960, 1979, 1988 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழாக்கள் நிகழ்த்தியுள்ளனர். நகரப் பொதுவில் தண்டாயுதபாணி கோவில் ஒன்றும் உள்ளது. இவ்வூர்ப் பிள்ளையார்பட்டி நகரத்தார் கட்டிய முத்துக்கருப்ப விநாயகர் கோவிலும் ஊருணியும் இப்போது பிள்ளையார்பட்டி நகரக்கோவில் நிருவாகத்தில் உள்ளன.

1926 இல் மு.கா. காசிவிசுவநாதன் செட்டியார் சரஸ்வதி வித்யாசாலை என்ற பெயரில் தொடங்கிய தொடக்கப்பள்ளி பின்னர் நகரப் பொதுவில் ஒப்படைக்கப்பெற்று 1948இல் சோமசுந்தரம் நடுநிலைப்பள்ளி என்ற பெயரில் அரசு உதவிபெறும் பள்ளி ஆயிற்று; தொடர்ந்து இப்பள்ளி நகரத்தார் நிருவாகத்தில் இருந்து வருகிறது. பிள்ளையார்பட்டியைச் சேர்ந்த வ.பழ.வ. குடும்பத்தினர் நன்கொடையாகக் கொடுத்த இடத்தில் அரசு மருத்துவமனை இயங்கிவருகிறது.

இவ்வூரில் வைரவன் கோவில் பங்காளிகள் மகிபாலன்பட்டி பங்காளிகளுடன் இணைந்து கருப்பர் படைப்பைப் படைத்து வருகின்றனர். இலுப்பைக்குடிப் பங்காளியினர் பகச்சால மூர்த்தி சிந்தாடி அம்மன் படைப்பையும் பிள்ளையார்பட்டிப் பங்காளியினர் அடைக்காத்தாள் கருப்பையா வள்ளியம்மை படைப்பையும் படைத்து வருகின்றனர். பிள்ளையார்பட்டியைச் சேர்ந்த வ.பழ.வ. குடும்பத்தினரும் இலுப்பைக்குடியைச் சேர்ந்த பெரி.மு. குடும்பத்தினரும் தத்தம் வீடுகளில் புரட்டாசி மாதம் இராமாயணம் படிப்பது வழக்கம். ஆண்டுதோறும் ஆடி மாதம் நாட்டார், நகரத்தார் இணைந்து தண்டாயுதபாணி கோவிலில் மகேசுவர பூசை நடத்தி அன்னதானம் செய்து வருகின்றனர்.

தமிழகத்திற்கு வந்த காந்தியடிகள் இருமுறை இவ்வூருக்கு வருகை புரிந்துள்ளார். காந்தியத்தில் ஈடுபாடு கொண்ட இவ்வூர் நகரத்தார்கள் காந்தி வாசகசாலை என்ற படிப்பகத்தை நீண்டகாலம் நடத்தி வந்தனர்.

சிறுகூடற்பட்டி

மேல வட்டகையைச்சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, வைரவன்பட்டி வழியாக 18 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய நான்கு நகரக்கோவில்களைச் சேர்ந்த 343 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குமாரப்பேட்டை ஊராட்சி மன்றத்தில் அடங்கிய ஒரு சிற்றூர்.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் என்ற நகரச்சிவன் கோவில் திருப்பணி முடிக்கப்பெற்று 1895இல் குடமுழுக்குச் செய்யப் பெற்றது. இவ்வூர் நாட்டார் நகரத்தாருக்குப் பொதுவான அழகு நாச்சியம்மன் கோவிலில் சித்திரை முதல் நாள் நடைபெறும் பால் குடம், மது எடுப்பு விழாக்களிலும், மலையரசியம்மன் கோவிலில் வைகாசி பௌர்ணமியன்று நடைபெறும் அபிடேக, ஆராதனையிலும் நகரத்தார் பங்கேற்பது மரபு. ஒரு குடிதண்ணீர் ஊருணி உள்ளிட்ட இரு ஊருணிகள் இவ்வூரில் உள.

இவ்வூர் ஆத.கு.பழ.சுப. குடும்பத்தினரால் தொடங்கப்பெற்ற 'கலைமகள் வித்தியாசாலை' இப்போது நகரத்தார் நிருவாகத்தில் நடந்து வருகிறது. இது ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள நடுநிலைப் பள்ளியாகும்.

இவ்வூர் வைரவன்கோவில் பங்காளிகள் தங்களுக்குரிய பொதுப்படைப்பாக அடைக் காத்தாள் படைப்பை ஆண்டுதோறும் ஆடிமாதம் படைத்து வருகின்றனர். மாத்தூர் கண்ணூர்ப் பிரிவைச் சேர்ந்தவர்கள் சிறுகூடற்பட்டியில்

Koviloor Digital Library

இல்லையெனினும், வேறு ஏழு ஊர்களைச் சேர்ந்த கண்ணூர்ப் பிரிவுப் பங்காளிகள் இவ்வூரில் வந்து நாராயணசாமி கோவில் படைப்பைப் படைத்து வருகின்றனர்.

பி. அளகாபுரி, கீழச்சிவல்பட்டி, சிறுகூடற்பட்டி, தேவகோட்டையைச் சேர்ந்த மாத்தூர் அரும்பாக்கூர்ப் பங்காளிகள் மாசி மாதம் தேவ கோட்டையில் கூடி நயினப்பையா படைப்பையும், கீழச்சிவல்பட்டி, சிறுகூடற்பட்டியைச் சேர்ந்த பிள்ளையார்பட்டிப் பங்காளிகள் மாசி மாதம் கீழச்சிவல்பட்டியில் கூடி நாகம்மை ஆயாள் படைப்பையும் படைத்து வருகின்றனர்.

இவ்வூர்ச் சிவன்கோவிலில் புரட்டாசி மாதம் *15* நாட்கள் இராமாயணம் படிக்கப்படுகிறது. கண்ணதாசன் இலக்கியப் பேரவை *1990*இலிருந்து இலக்கியப் பணி செய்து வருகிறது. இவ்வூரைச் சேர்ந்த சித. பெரியகருப்பன் செட்டியார் இ.தேராவில் பணி புரிந்தவராவார்.

சிறுவயல், உய்யக்கொண்டான்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடிக்கு வடமேற்கே 5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி ஆகிய நான்கு கோவில்களைச் சேர்ந்த *490* புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றமாகிய இவ்வூர் இருபகுதிகளாக அமைந்துள்ளது. வடக்குப் பகுதி உய்யக்கொண்டான் என்றும், தெற்குப் பகுதி சிறுவயல் என்றும் வழங்கப் படுகிறது. பொதுவாகப் பேச்சு வழக்கில் உய்யக்கொண்டான் சிறுவயல் என்றும் உ. சிறுவயல் என்றும் குறிப்பிடுவது மரபு.

இவ்வூரில் நகரத்தாருக்குரிய பொதுக் கோவிலாகப் பொன்னழகி அம்மன் கோவில் அமைந்துள்ளது. *1820* இல் திருப்பணி முடிந்து முதல் குடமுழுக்கு நிகழ்ந்த இக்கோவிலுக்கு அதன் பின் *1913, 1934, 1960, 1978, 1993* ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நிகழ்ந்துள.

சவுந்தரநாயகி அம்பாள் உடனாய ஐராவதீச்சுரர் கோவில் என்ற சிவன்கோவில் இளையாத்தங்குடி ஒக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த சா.மெ. இராம. பழனியப்ப செட்டியார் குடும்பத்தாரால் கட்டப் பெற்று, அவர்தம் வழிமுறையினரால் நிருவகிக்கப் பெற்று வருகிறது. *1861*இல் திருப்பணி முடிந்து குடமுழுக்குச் செய்யப் பெற்ற இக்கோவிலுக்கு *1867, 1921, 1926* ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நிகழ்ந்துள.

மாத்தூர் மணலூர்ப் பங்காளிகளால் திருப்பணி செய்யப் பெற்று, நிருவகிக்கப் பெற்றுவரும் சாலிப்பிள்ளையார் என வழங்கப்படும் ஐநூற்று விநாயகர் கோவிலும், வைரவன் கோவில் நகரத்தாரால் நிருவகிக்கப் பெற்று வரும் பக்தகணபதி கோவிலும், இலுப்பைக்குடி நகரத்தாரால் திருப்பணி செய்யப் பெற்ற ஐயனார் கோவிலும் இவ்வூரில் உள.

அம்மன் கோவில் ஊருணி வைரவன் கோவிலைச் சேர்ந்த பெரியணன் செட்டியார் குடும்பத்தாலும், சிவன்கோவில் ஊருணி இலுப்பைக்குடி நகரத்தாராலும் அமைக்கப் பெற்றவை ஆகும்.

சிவன்கோவிலால் இடம் நன்கொடையாக வழங்கப் பெற்று, தொடக்கநிலைச் செலவுகள் நகரத்தாரால் செய்யப் பெற்று, இப்போது அரசினரால் நடத்தப்பெறும் உயர்நிலைப் பள்ளி இவ்வூரில் இயங்கிவருகிறது. அம்மன்கோவில், சிவன்கோவில் ஆகியவற்றால் இடம் நன்கொடையாகக் கொடுக்கப் பெற்று, சொ.லெ. இலட்சுமணன் செட்டியாரால் கட்டப்பெற்று, இப்போது அரசு நிருவாகத்தில் இயங்கும் மருத்துவ மனை ஒன்றும் உள்ளது.

கடந்த முப்பது ஆண்டுகட்கும் மேலாக இலக்கியமன்றம் ஒன்று இவ்வூரில் ஆண்டுதோறும் வைகாசிமாதம், அம்மன்கோவில் திருவிழாவைஒட்டி இலக்கிய நிகழ்ச்சிகளைச் சிறப்பாகவும், தொடர்ந்தும் நடத்தி வருகிறது. இவ்வூர் மாத்தூர் மணலூர்ப் பிரிவைச் சேர்ந்த அரு.நாகப்பன் இந்த இலக்கிய மன்றத்தைத் தொடங்கி நடத்தி வருகிறார்.

இவ்வூர் இலுப்பைக்குடிப் பங்காளிகள் ஆண்டு தோறும் ஆடிமாதம் ஒரு பொதுப்படைப்பைப் படைத்து வருகின்றனர். இவ்வூர் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பங்காளிகள் கானாடுகாத்தான் க.வெ. குடும்பத்தாருடன் சேர்ந்து இவ்வூரில் ஆண்டு தோறும் ஆடி மாதம் மாங்கல்யாத்தாள் படைப்பைப் படைத்து வருகின்றனர்.

ஆத்தங்குடி, உ. சிறுவயல், சொக்கலிங்கம் புதூர், ஆ. முத்துப்பட்டணம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த மாத்தூர் மணலூர்ப் பங்காளிகள் இவ்வூரில் ஆண்டுதோறும் ஆடி மாதம் அழகாத்தாள் படைப்பைப் படைத்து வருகின்றனர். காரைக்குடி, சண்முகநாதபுரம், உ. சிறுவயல், விராமதி ஆகிய ஊர்களைச் சேர்ந்த இளையாத்தங்குடி ஒக்கூர்ப் பங்காளிகள்

Koviloor Digital Library

ஆண்டுதோறும் மாசி மாதம் முதல் புதன்கிழமை காரைக்குடியில் திருமாத்தாள் படைப்பைப் படைத்து வருகின்றனர்.

மாத்தூர் அரும்பாக்கூர் நகரத்தாரது தண்ணீர்ப் பந்தலில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் முழுவதும் இராமாயணம் படிக்கப்படுகிறது.

இளையாத்தங்குடி ஒக்கூருடையார்ப் பிரிவைச் சேர்ந்த மெ.சு. வகையார் தங்கள் மடத்தில் ஆண்டுதோறும் சமயகுரவர் நால்வர், சேக்கிழார் ஆகிய ஐவருக்கும் அவரவர் திருநட்சத்திரத்தன்று குருபூசையும், வைகாசி விசாகத்தன்று மகேசுவர பூசையும் நடத்தி வருகி ன்றனர்.

இதே பிரிவைச் சேர்ந்த சா.இராம. ப. குடும்பத்தார் ஆண்டுதோறும் ஆடிமாதம் திங்கட்கிழமை மகேசுவரபூசையும், செவ்வாய்க் கிழமை பொதுப்படைப்பும் நடத்தி வருகின்றனர்.

இவ்வூர் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பங்காளிகள், கானாடுகாத்தான் க.வெ. குடும்பத்தாருடன் இணைந்து குன்றக்குடிக் கீழரத வீதியில் ஒரு நகரத்தார் மடத்தை நடத்தி வருகின்றனர். இளையாத்தங்குடி ஒக்கூருடையார் பிரிவைச் சேர்ந்த இராமப.செ. குடும்பத்தார் திருவையாற்றில் ஒரு வேத பாடசாலையை நடத்தி வந்தனர்.

சிற்சபேசன், கண., (15-4-1934)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
தேவகோட்டை
தமிழ்ப்பேராசிரியர், நிதித்துறை ஆலோசகர்

தேவகோட்டைச் சிங்கப்பூர்ச் சேக்கப்ப செட்டியார் வீட்டில் செ.வீர. எ. கண. கண்ணப்ப செட்டியார் – லெட்சுமி ஆச்சியின் மகன். காரைக்குடி அழகப்பா கல்லூரி, சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆகியவற்றில் பயின்று முதுகலைப் பட்டம் பெற்றார். டாக்டர் மு.வ. டாக்டர் தெ.பொ.மீ., ஔவை துரைசாமிப் பிள்ளை ஆகிய பேராசிரியர்களால் மிகவும் பாராட்டப் பெற்ற மாணவராகத் திகழ்ந்தார்.

மதுரைத் தியாகராசர் கல்லூரி, சரஸ்வதி நாராயணன் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் மாணவர்கள் விரும்பிச் சுவைக்கும் வண்ணம் சிரிக்கச் சிரிக்கப் பாடம் சொல்வார். தமிழில் நகைச்சுவைப் பேச்சாளர்களுக்கு இவரே முன்னோடியாவார். நகைச்சுவைப் பேரரசர், நகைச்சுவை நாவலர் என்ற சிறப்புப் பட்டங்கள் பெற்றுள்ளார்.

நகரத்தார் குலத்தொழிலாகிய நிதித்துறையில் இவர் கவனம் சென்றதால் தமிழ்ப்பேராசிரியர் பணியை விட்டுவிலகி மதுரை வங்கியில் நிதி ஆலோசகர் ஆனார். அதன்பின் பல்வேறு நிதி நிறுவனங்களில் நிதி ஆலோசகராகத் திகழ்ந்தார். தற்போது குட்வில் வீட்டுவசதி நிதி நிறுவனம் தொடங்கிச் சிறப்புற நடத்தி வருகிறார்.

'கண்கொடுத்தவர்' என்னும் சிறுகதைத் தொகுப்பை எழுதி வெளியிட்டுள்ளார். கல்லூரியில் சிறந்த நாடக நடிகராகத் திகழ்ந்தார். சென்னைத் தொலைக்காட்சி தமிழகமெங்கும் ஒளிபரப்பை விரிவுபடுத்திய முதல் நாளில் இவர் தலைமையேற்று நடத்திய நகைச்சுவைப் பட்டிமண்டபம் மக்கள் மறக்கமுடியாத நகைச்சுவை விருந்து. இவர் மணிவிழாவில் மாண்புமிகு அமைச்சர் இராம. வீரப்பன், காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் ஏராளமான தமிழறிஞர்கள் கலந்து கொண்டு பாராட்டியமைக்குக் காரணம் அனைவரையும் கவர்ந்திழுக்கும் இவரது நகைச்சுவைப் பேச்சாற்றலேயாகும்.

சின்ன அண்ணாமலை (18-6-1920 - 18-6-1980)

இலுப்பைக்குடி
தேவகோட்டை
பதிப்பாளர், விடுதலைப் போராட்ட வீரர்

உய்யக்கொண்டான் சிறுவயலில் நாச்சியப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகனாகப் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் நாகப்பன், தேவகோட்டை கோவிலூரரார் வீட்டுக்குப் பிள்ளை வளரச் சென்றார். அங்கு இட்ட பெயர் அண்ணாமலை. அண்ணாமலை அரசர், திருவை அண்ணாமலை ஆகியோரிடமிருந்து இவரை இனம் பிரித்துக் காட்ட இராஜாஜி சூட்டிய பெயர் சின்ன அண்ணாமலை. அரசியல் மேடையில் சூட்டப்பட்ட இப்பெயரே நிலைத்தது.

ஒன்பதாவது வயதிலேயே காந்தியடிகளிடம் ஈடுபாடு கொண்ட இவர் காங்கிரஸ் மேடைப் பேச்சாளரானார். 1942இல் விடுதலை இயக்கப் போராட்டத்தில் தேவகோட்டையில் இவர் பங்கு குறிப்பிடத்தக்கது. திருவாடானைச் சிறையை உடைத்துத் தொண்டர்கள் இவரைத் தோளில் தூக்கி வலம்வந்த நிகழ்ச்சி வரலாற்றுச் சிறப்பு மிக்கது. அண்ணாமலையை உயிருடனோ பிணமாகவோ கொண்டுவருவோர்க்குப் பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படும் என அன்றைய ஆங்கில அரசு அறிவித்தது. தலைமறைவாகக் காசிக்குச் சென்றவர் தம் உறவினர்கள் காவல்துறையால் கொடுமைப்படுத்தப்படுவதை அறிந்து ஊருக்கு வந்து சரணடைந்தார்.

Koviloor Digital Library

நகைச்சுவை ததும்பப் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். சக்தி வை. கோவிந்தனைத் தொடர்ந்து தமிழ்ப் பதிப்புலகில் தமிழ்ப்பண்ணை தொடங்கி இத்துறையில் முன்னோடியாக விளங்கினார். புகழ்பெற்று விளங்கும் பல பதிப்பாளர்கள் இத்துறைக்கு



சின்ன அண்ணாமலை

வருவதற்கு இவரே காரணமாவார். நூலை அழகுற அச்சிட்டு வெளியிடுவதில் இவர் வல்லவர். இராஜாஜி, கல்கி, இரசிகமணி டி.கே.சி. போன்றோரின் நூல்கள் தமிழ்ப்பண்ணை வெளியீடாக வந்து நாடெங்கும் பாவின. எழுத்தாளர்களுக்குப் பங்கு உரிமைத் தொகை (ராயல்டி) கொடுக்கும் வழக்கத்தைத் தமிழ்ப் பதிப்புலகில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் இவரேயாவார்.

காந்தியடிகளின் சிலையை நடுவில் வைத்து அதைச் சுற்றிலும் நூல்களைக் காட்சியாக வைத்தார். கோவில் வழிபாடு போல வாசகர்கள் நூல் வழிபாடு செய்ய வைத்தார். புகழ்வாய்ந்த எழுத்தாளர்களின் படங்களைச் சேகரித்து அவற்றைக் கண்ணாடி போட்டு மாட்டி வைத்து வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார். கவியரசர் கண்ணதாசனுக்கு முதன்முதல் விழா எடுத்தவர் இவரேயாவார்.

'கல்கி' இதழில் இருநூற்றுக்கும் மேற்பட்ட நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இன்றையப் பிரச்சனை என்ற தலைப்பில் மாதம் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். 'பூட்டை உடையுங்கள்' என்ற நூலை எழுதியதற்காகச் சிறைத் தண்டனை பெற்றார். 'வங்கப்பஞ்சம்' நூல் எழுதியதற்காக இவருக்கும் எழுத்தாளர் சாவிக்கும் சிறைத்தண்டனை கிடைத்தது. 'சொன்னால் நம்ப மாட்டீர்கள்' இவரது நகைச்சுவைக் கட்டுரைத்தொகுப்பு நூல். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இவர் எழுதியுள்ளார்.

மகாத்மா காந்தியடிகளின் அனுமதியுடன் 'அரிசன்' இதழைத் தமிழில் இவர் வெளியிட்டார். சாவியுடன் இணைந்து 'வெள்ளிமணி' இதழை நடத்தினார். மாலதி, சங்கப்பலகை ஆகிய இதழ்களையும் சிலகாலம் நடத்தினார்.

தமிழ்த் திரைப்படங்களுக்குக் கதைவசனம் எழுதியுள்ளார். தங்கமலை ரகசியம் இவரது வெற்றிப்படமாகும். ஆயிரம் ரூபாய், கடவுளின் குழந்தைகள் போன்ற திரைப்படங்களை இவர் தயாரித்துள்ளார்.

தமது மணிவிழா நாளில் மங்கல நீராட்டு நிகழ்ச்சியின்போது, இவர் இவ்வுலகை நீத்தார். சிரிக்கச் சிரிக்கப் பேசி, சிரிக்கச் சிரிக்க எழுதி மற்றவர்களிடம் சிரிப்பை வரவழைத்தவர் எல்லோரும் சிரித்தபடி வாழ்த்தி வணங்கி மகிழும் வேளையிலேயே உயிர்துறந்தார்.

சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி

பள்ளத்தூர் உ.அ.பெரி.மு. அருணாசலம் செட்டியார் தன் மனைவி சீதாலெட்சுமி ஆச்சி பெயரால் 1962ஆம் ஆண்டு ஜூன் 18ஆம் நாளில் இக்கல்லூரியைத் தோற்றுவித்தார். 24 மாணவிகளுடன் இக்கல்லூரி தொடங்கப் பெற்றது. பள்ளத்தூரில் 1922ஆம் ஆண்டு 'அருணாசலம் செட்டியார் உயர்நிலைப் பள்ளி'யைத் தொடங்கி நடத்தி வந்தார். அக்கல்விப் பணியின் தொடர்ச்சியாகப் பின்தங்கிய இப்பகுதியில் மகளிர் உயர் கல்விக்காக இக்கல்லூரியைத் தொடங்கினார். நகரத்தார் நடத்திவரும் ஒரே மகளிர் கல்லூரி இதுவாகும்.

1962இல் புகுமுக வகுப்புகளுடன் தொடங்கப் பட்ட இக்கல்லூரியில் 1963இல் பி.ஏ. பொருளியல், 1965இல் பி.எஸ்சி வேதியியல், 1967இல் விலங்கியல், 1968இல் பி.ஏ. ஆங்கிலம், 1972இல் பி.எஸ்சி கணிதம், 1973இல் தாவரவியல், 1977இல் வணிகவியல் பட்ட வகுப்புக்களும் 1979இல் எம்.ஏ. ஆங்கிலம் 1983இல் எம்.எஸ்சி கணிதம் ஆகிய முதுகலைப்பட்ட வகுப்புக்களும் 1995இல் சுயநிதிக்கல்வி அடிப்படையில் கணிப்பொறி யியல், தொழில் நிருவாகவியல் (பி.பி.ஏ) பட்டவகுப்புக்களும் தொடங்கப்பெற்றன. இக்கல்லூரியில் பகுதி I மொழியாகத் தமிழோடு வடமொழியும் கற்பிக்கப்படுகின்றது. 1200 மாணவிகள் பயிலும் இக்கல்லூரி விடுதி வசதியோடு இப்பகுதியில் மகளிர் கல்வி வளர்ச்சிக்குத் தொண்டாற்றி வருகின்றது.

Koviloor Digital Library

சீனிவாசன், அழ.சா., (23-11-1923 - 30-7-77)

மாத்தூர் - அரும்பாக்கூர்
சிறுகூடற்பட்டி
திரைப்படத் தயாரிப்பாளர்

சாத்தப்ப செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். தொடக்கத்தில் சென்னையில் இருந்து வெளிவந்த 'சந்திரோதயம்' இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பின்னர் அறிஞர் அண்ணாவின் நட்பால் 'வேலைக்காரி' திரைப்படம் வாயிலாகத் திரைத்துறையில் நுழைந்தார். கலைவாணர் இயக்கத்தில் கலைஞர் கருணாநிதி கதை உரையாடலோடு உருவான 'பணம்' திரைப்படம் இவரது முதல் தயாரிப்பாகும். திருடாதே, அம்பிகாபதி, கந்தன்கருணை, சாரதா போன்ற மாபெரும் வெற்றிப் படங்களைத் தயாரித்த இவர் தமிழோடு இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் மொத்தம் நாற்பதுக்கும் மேற்பட்ட படங்களைத் தயாரித்துள்ளார்.

பரணி படப்பிடிப்பு நிறுவனத்தைக் குத்தகை ஒப்பந்த முறையில் நடத்திய இவர் சாரதா படப்பிடிப்பு நிலையத்தைச் சொந்தமாக நடத்தினார். 'திரைப்படங்களின் உலக உரிமையை வாங்குதல்' (World Negative Rights) என்ற முறையைத் திரைப்பட உலகில் ஏற்படுத்தியவர் இவரே.

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் தலைவராகத் தொடர்ந்து 13 ஆண்டுகள் பணியாற்றிய சிறப்பு இவருக்குண்டு. அனைத்திந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவராகவும், திரைப்படச் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவராகவும், மத்தியத் திரைப்படத் தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பொறுப்புக்கள் வகித்த இவர் பலமுறை இந்தியத் திரைப்படத் தூதுக்குழுக்களின் தலைமைப் பொறுப்பேற்று வெளிநாடுகள் பலவற்றுக்குச் சென்றுள்ளார். கவியரசர் கண்ணதாசனின் அண்ணனான இவர் திரைப் படத்துறையில் பல்வேறு அமைப்புக்களிலும் தலைமையேற்று அத்துறையை ஆட்சி செய்தார்.

சீனிவாசன் செட்டியார், இராம., (1916 - 31-3-1987)

வைரவன் கோவில் - தெய்வநாயகர் வகுப்பு
இராயவரம்
காந்தியவாதி

அருசா.இராமசாமிச் செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். சத்தி வை. கோவிந்தனின் இளவல். சிறந்த காந்தியவாதியான இவர் இராயவரத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கிராமக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்கி அதன் செயலராகவும், தலைவராகவும் நீண்ட காலம் பணியாற்றியவர். கூட்டுறவு இயக்க முன்னோடிகளில் ஒருவரான இவர், அக்கூட்டுறவுச் சங்கத்தில் அரிசனங்களைப் பெருமளவில் உறுப்பினராகச் சேர்த்து, அச்சங்கத்தில் கைக்குத்தல் அரிசி, நாட்டுச் செக்கு எண்ணெய் முதலியன தயாரித்துச் சிறப்பாக அச்சங்கத்தை நடத்தினார்.

இராயவரத்தில் காந்தியடிகளின் சிலையை நிறுவக் காரணராக அமைந்தவர். அரிசனக் குழந்தைகள் நலன்கருதிக் கிராமசேவா சங்கம் என்ற பள்ளியை நிறுவி, அப்போதே அக்குழந்தைகட்கு இலவச மதிய உணவு வழங்கினார்.

கம்பனடிப்பொடி சா. கணேசனாரின் நெருங்கிய நண்பராகிய இவர் தொடக்கத்தில் காங்கிரசிலும், பின்னர் சுதந்திராக் கட்சியிலும் உறுப்பினராகச் செயல்பட்டவர். காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய சிறப்பும் இவருக்கு உண்டு.

சீனுமோகன் (இயற்பெயர் : முத்துக்கருப்பன்) (24-5-1957).

மாத்தூர் - அரும்பாக்கூர்
கொத்தமங்கலம்
திரைப்பட, நாடக நடிகர்

எஸ்.எம்.ஆர்.எம்.எம். பெத்தாச்சிச் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். பச்சையப்பன் கல்லூரியில் பி.காம். பட்டம் பெற்று, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

கலைத்துறையில் ஆர்வம் கொண்டு பகுதிநேரப் பணியாக, நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். 1976 இல் குமாரி சச்சு குழுவினரின் 'சக்கரம் சுழல்கிறது' நாடகத்தில் முதன்முதலில் குறிப்பிடத்தக்க வேடத்தில் நடித்தார். பின்னர் கிரேசி மோகன் குழுவினரின் பல்வேறு நாடகங்களிலும், தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்து வருவதோடு 23 திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

கிரேசி மோகன், ஏ.வி.எம். சரவணன் ஆகிய இருவரால் தன் நடிப்புத்துறை வாய்ப்புக்கள் ஒளிமிகுந்தவையாக அமைகின்றன எனக் குறிப்பிடும் இவர் 1997 ஆம் ஆண்டில் மீடியா ஆர்ட்டிஸ்ட் எனும் அமைப்பினால் 'சிறந்த நகைச்சுவை நடிகர்' என்ற விருது வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றார்.

Koviloor Digital Library

திரைப்படத் துறையில் நகரத்தாரின் சாதனைகள் பல என்றாலும் நடிப்புத் துறையில் ஈடுபட்டுள்ள முதல் நகரத்தார் என்ற பெருமை இவரையே சேரும்.

சுந்தரம், டாக்டர். இராம., (1-4-1938)

மாத்தூர் - உறையூர்
அலவாக்கோட்டை
கல்வியாளர்

அரு. இராமநாதன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டமும், கேரளப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் முனைவர் பட்டமும், மலையாள மொழிப் பட்டயமும் பெற்றார். பின்னர் கேரளப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி உதவியாளராகவும், விரிவுரையாளராகவும் பத்தாண்டுகள் பணி யாற்றிய பின், மதுரை தியாகராசர் கல்லூரியில் இரண்டாண்டுகளும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஓராண்டும் விரிவுரை யாளராகப் பணியாற்றினார்.

1972 முதல் *1979* வரை ஏழாண்டுகள் போலந்தில் வார்சா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும், இந்திய இயல் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். மீண்டும் இரண்டு ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்.

*1981*இல் தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து, அங்கே அறிவியல் தமிழ் வளர்ச்சித்துறையின் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

தொழிற் சங்க உணர்வும், தீவிரமாகப் போராடும் இயல்பும் உடைய இவர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் இயக்கத்தை உருவாக்கி வளர்த்துள்ளார்.

அறிவியலில் தமிழ் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு பொறியியல், மருத்துவப் பாடநூல்களைத் தமிழில் உருவாக்கும் திட்டத்தின் கீழ் 27 நூல்கள் உருவாக இவர் துணை செய்துள்ளார். அறிவியல் கலைச்சொல் அகராதி ஒன்றைத் தமிழில் தயாரித்துள்ளார்.

அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 4 கருத்தரங்குகளை அனைத்திந்திய அளவில் நடத்தியுள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் பத்துக்கும் மேற்பட்ட கருத்தரங்குகளைத் திறம்பட நடத்தியுள்ளார்.

ஆய்வுப் போக்கில் ஏறத்தாழ நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும், மேலும் பத்துக்கு மேற்பட்ட நூல்களையும், போலிஷ் மொழியில் தமிழைப் பற்றிப் பல கட்டுரைகளையும் எழுதியுள்ள இவர் இணையாசிரியராக இருந்து, திருக்குறளைப் போலிஷ் மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார்.

இவர் எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்கவை வருமாறு : சாகித்திய அக்காதமியினர் வெளியிட்ட ''பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை'', நேஷனல் புக்டிரஸ்ட் வெளியிட்ட ''மூலிகைகள்'', தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்ட ''உடல் நலம்'', சென்னைத் தமிழ் நூலகம் வெளியிட்ட ''சொல் புதிது, சுவை புதிது''.

இவர் பதிப்பித்து வெளியிட்ட ''வளர்தமிழ் அறிவியல்'' என்ற நூலுக்குத் தமிழக அறிவியல் பேரவை *1993*இல் பரிசு வழங்கிச் சிறப்பித்தது.

'துறைதோறும் தமிழ் வளரத் துடித்தெழுந்து தொண்டு செய்வீர்' எனப் பாவேந்தர் விடுத்த அழைப்பிற்கேற்ப, புதிய அறிவியல் துறையில், தமிழ் வளர்க்கும் பணியினை ஆற்றலோடு செய்து வரும் நகரத்தார் இவர்.

சுந்தரம், டாக்டர். கரு., (25-7-1936)

இரணிக்கோவில்
நெற்குப்பை
தொழிலதிபர், இதழாளர்

பெரிய கருப்பன் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உயிர் வேதியியலில் பட்டம் பெற்றார்; இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் இன்ஸ்டிட்யூட் ஆப் டிரேட் அண்டு இன்டஸ்டிரீ நிறுவனத்தில் மருந்து தயாரிப்புத் துறையில் பட்டயப் படிப்புப் படித்தார். கல்கத்தாவில் உள்ள நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் ஆல்டர்னேடிவ் மெடிசன் அமைப்பு இவருக்கு டாக்டர் ஆப் நேச்சுரல் மெடிசன் எனும் பட்டத்தை வழங்கியது.

பன்னாட்டு நிறுவனமாகிய வையத் (WYETH) மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் மருந்து தயாரிப்பு மற்றும் விற்பனைத் துறையில் 14 ஆண்டுகள் பணியாற்றியுள்ள இவர், அந்தப் பட்டறிவின் அடிப்படையில் மதுரையில் ''ப்ளோரா லாபரட்டரீஸ்'' என்னும் ஆங்கில மருந்து தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கி நடத்தி வருகிறார்.

மேலும் செல்லமாக வளர்க்கும் விலங்குகட்கு உரிய உணவுப் பொருட்கள், மருந்துகள், நாய்ரொட்டி, நாய்ச்சோப்பு, நாய் ஷாம்பூ போன்றவற்றைத் தயாரிக்கும் ''ரோஸ் கென்னல் புராடக்ட்ஸ்'' என்னும் நிறுவனமும் இவருடையதே.

Koviloor Digital Library

1980ஆம் ஆண்டின் சிறந்த சிறுதொழில் மருந்து உற்பத்தியாளர் என இவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தியக் குடியரசுத் தலைவரால், 'உத்தியோக பத்ரா' விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார்.

இவ்வாறு சிறந்த தொழிலதிபராக விளங்கும் இவர் மதுரை மீடியா கிளப், மதுரை கென்னல் கிளப், மதுரை தெற்குச் சுழற்குழு, தல்லாகுளம் ஒய்.எம்.சி.ஏ., தமிழ்நாடு மருந்து உற்பத்தியாளர் சங்கம், இந்திய மருந்து தயாரிப்பாளர் சங்கம், மதுரை நடையாளர் சங்கம், இந்தியச் சிற்றிதழ்கள் கூட்டமைப்பு போன்ற அமைப்புக்களின் பல்வேறு நிருவாகப் பொறுப்புக்களில் இருந்து நிறம்படச் சமூகத் தொண்டும் ஆற்றி வருகிறார்.

நல்ல பேச்சாளரும், எழுத்தாளருமாகிய இவர் ஆங்கில மருந்து தயாரிப்பு, உடல் நலம், அறிவியல், தமிழ் வளர்ச்சி தொடர்பான பல கருத்தரங்குகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அளித்துள்ளார். பல கல்லூரிகளிலும் வானொலியிலும் பல தலைப்புக்களில் உரை நிகழ்த்தியுள்ளார்.

'உங்கள் உடல் நலம்' (த.க.) என்ற பெயரில் திங்கள் தோறும் வெளிவந்த தமிழ் உடல்நல அறிவியல் இதழின் ஆசிரியராகப் பணியாற்றி யுள்ளார். உடல்நலம் பதிப்பகம் என்ற பெயரில் ஒரு பதிப்பகம் நடத்தி அதன் வாயிலாக உடல் நலம் தொடர்புடைய பல நூல்களை வெளியிட்டும் வருகிறார்.

மருத்துவத்துறையிலும், மருந்து விற்பனைத் துறையிலும், நகரத்தார்கள் நிறைய இருக்கின்றனர். ஆனால் மருந்துத் தயாரிப்புத் துறையிலும் நகரத்தார் பங்கு இருக்கிறது என்பதற்கு இவர் நல்ல எடுத்துக்காட்டு ஆவார்.

சுந்தரம், டாக்டர். மெ., (21-11-1925 - 20-11-1991)

மாத்தூர் - மண்ணூர்
வேந்தன்பட்டி
கல்வியாளர்

புதுக்கோட்டை மாவட்டத்தின் தீவிர காங்கிரசுத் தலைவராக 1930களில் விளங்கிய மெய்யப்ப செட்டியாரின் மகன். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1957இல் எம்.லிட் பட்டமும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1961இல் டாக்டர் பட்டமும் பெற்றார்.

கோனாபட்டு சரசுவதி உயர்நிலைப் பள்ளி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை தியாகராசர் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம், சென்னை மாநிலக் கல்லூரி ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி 1984இல் ஓய்வு பெற்றார்.

சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்த இவர் தமிழகமெங்கும் பட்டிமன்றங்கள், கருத்தரங்குகள், கவியரங்கங்களில் பங்கேற்றுச் சிறப்பித்ததோடு, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டிருக்கிறார். ஈழம், மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

குமரன் (த.க.) தமிழ்நாடு (த.க.) ஆகிய இதழ்களில் பல கட்டுரைகள் எழுதியிருக்கும் இவர் தமிழ்ப்பாவை, செட்டிநாடு ஆகிய இதழ்களின் ஆசிரியராகவும், பணிபுரிந்திருக்கிறார். 6 நூல்கள் எழுதி யிருக்கிறார்.

இவர் 16–க்கும் மேற்பட்ட இந்திய, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு கொண்டு தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார். ஏறத்தாழ 7000 நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்திருக்கிறார்.

இவர், தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழக முதுநிலை மாணவர்களுக் கிடையே நடைபெற்ற ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் முதற் பரிசினைப் பெற்றிருக்கிறார். இவர் திரட்டிய நாட்டுப் புறப்பாடல்களில் 500 பாடல்களையும், சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளில் 100 கவிதைகளையும் இவர் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்துள்ளார்.

தமிழகப் புலவர் குழு உறுப்பினராகப் பொலிந்த இவர், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் குறட்பாக்களைப் பொறித்திட அமைத்த குழுவின் தலைவராகவும், தமிழகத்தில் தொழில் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளைத் தமிழாக்கம் செய்யும் மூவர் குழுவின் தலைவராகவும் திறம்படப் பணியாற்றியவர் ஆவார்.

Koviloor Digital Library

சுந்தரம், பொற்கிழிக் கவிஞர், சொ.சொ.மீ., (7-8-1943)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
தேவகோட்டை
வணிகவியல் பேராசிரியர், தமிழ்க் கவிஞர், சொற்பொழிவாளர்

சொர்ணலிங்கம் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். தேவகோட்டை நகரத்தார் உயர்நிலைப் பள்ளியிலும் காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும் சென்னையிலும், கல்விபயின்று வணிகவியல் முதுகலைப் பட்டம் பெற்றவர். பள்ளியில் பயிலும்போதே தேவகோட்டைத் தமிழிசைப் பள்ளி நாடகங்களில் பங்கு கொண்டு தமிழுணர்வு பெற்றவர். காரைக்குடியில் அழகப்பா கல்லூரிக் கலைக்கழகப் போட்டி களும் பேராசிரியர் வ.சுப. மாணிக்கனாரின் தொடர்பும் இவரது தமிழார்வத்தைப் பன்மடங்கு தூண்டியதால் தமிழறிவில் தலைமை சான்ற புலமை பெற்றார்.

பழநி அருள்மிகு பழநியாண்டவர் கல்லூரியில் பணியாற்றத் தொடங்கிய இவர், மதுரை சவுராட்டிரக் கல்லூரியில் வணிகவியல் துறையில் சேர்ந்து துறைத் தலைவராக விளங்குகிறார். மதுரை திருப்புகழ்சபை, பன்னிரு திருமுறை மன்றம் ஆகியவற்றில் தொடர்ந்து சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதோடு 'நாடெங்கும் இலக்கிய, சமயச் சொற்பொழிவுகளும் ஆற்றி வருகிறார்.

மதுரை நகரத்தார் சங்கத்தின் செயலராக 1979 முதல் பல ஆண்டுகள் செயலாற்றியுள்ளார். 1981இல் நகரத்தார் நல உரிமை மாநாட்டை நகரத்தார் இனம் எழுச்சிகொள்ளும் வகையில் சிறப்பாக நடத்த முன்னின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவர். வணிகவியல் துறையில் 5 ஆங்கிலப் பாடநூல்களும் கம்பெனிச் செயலர் பணிமுறை என்ற தமிழ் நூலும் வெளியிட் டுள்ளார். பண்டிதமணி பிள்ளைத்தமிழ், சந்திரசேகரர் திருநீறு விடுதூது ஆகியவை இவர் படைத்த கவிதை நூல்களாகும்.

1981இல் உலகத் தமிழ்மாநாட்டை ஒட்டி நடைபெற்ற கவிதைப் போட்டியில் 409 கவிஞர்கள் பங்கேற்ற வேளையில் அவர்களுள் முதல்வராக வென்று பொற்கிழிப் பரிசுபெற்று, பொற்கிழிக் கவிஞர் பட்டம் பெற்றார். சொல்லோவியர், திருமந்திரச் சொல்மணி, விரிவுரை வித்தகர் ஆகிய பட்டங்களைப் பல்வேறு இலக்கிய அமைப்புகள் இவருக்கு வழங்கிப் பாராட்டியுள்ளன.

சுந்தரம், லெ. (23-7-1938)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
ஒக்கூர்
இதழாளர்

நா. லெட்சுமணன் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். 'தமிழ்நாடு' நாளிதழிலும், வார இதழிலும் ஆசிரியத் துறையிலும், நிருவாகத் துறையிலும் 21 ஆண்டுகள் பணிபுரிந்திருக்கிறார். அப்போது 600–க்கும் மேற்பட்ட திரைப்படங்கட்கு விமரிசனங்கள் எழுதியிருக்கிறார்.

1982 முதல் 'நகரத்தார் குரல்' என்ற சமூக இலக்கிய மாத இதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். தம் சொந்தப் பெயரிலும், ஒக்கூரான், 'எல்லெஸ்' என்ற புனை பெயர் களிலும் நிறைய கட்டுரைகள் எழுதியுள்ளார்.

நகரத்தார் சமூகம் தொடர்பான செய்திகளைத் திரட்டிப் பதிவு செய்து வெளியிடுவதில் இவர் வல்லவர் என்பதைச் 'செய்திகள் வாசிப்பவர் சுந்தரம்' என்ற தலைப்பில் இவர் நகரத்தார் குரலில் எழுதிவரும் பகுதி புலப்படுத்தும்.

சுப்பிரமணியன், சு.இராம.பழ., (3-1-1926)

வைரவன் கோவில் - தெய்வநாயகர் வகுப்பு
பள்ளத்தூர்
தொழிலதிபர்

பழநியப்ப செட்டியார் – நாச்சம்மை ஆச்சியின் மகன். மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்றார். 1947ஆம் ஆண்டு தோல் ஏற்றுமதி வணிகராகத் தொழில் தொடங்கினார். உலகம் சுற்றிப் பல தொழிற்சாலைகளைப் பார்வையிட்ட அனுபவத்தால் 1964 ஆம் ஆண்டில் எஸ்.ஆர்.பி. டூல்ஸ் என்னும் வெட்டும் கருவிகள் செய்யும் தொழிற்சாலையைத் தொடங்கினார். மிட்சுபிர் என்னும் ஜப்பானிய நிறுவனத்தின் வழி காட்டுதலோடு இன்று சென்னையிலும் இராணிப்பேட்டையிலும் பெரிய தொழிற் சாலைகள் அமைத்துள்ளார். முதலாண்டில் ஒன்றரை லட்ச ரூபாய் அளவில் இருந்த விற்பனை இவரது அரிய உழைப்பால் 13 கோடியை எட்டிப் பிடித்துள்ளது; அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகட்கும் ஏற்றுமதி செய்கின்றார்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் கேட்டுக் கொண்டதற்காக 'இன்டர்கான்டினென்டல் லெதர்ஸ் லிமிடெட்' என்ற நிறுவனத்தை எடுத்து நடத்துகின்றார். இவர் ஏற்றுக் கொண்டது முதல் அந்நிறுவனம் இலாபம் ஈட்டி வருகிறது. பாரி நிறுவனத்தினரின் உதிரிப்பாகம் தயாரிக்கும் நிறுவனத்தையும் ஏற்று நடத்தி வருகிறார்.

Koviloor Digital Library

தென் இந்திய வர்த்தக சபைத் தலைவராகவும், சுழற்சங்கத்தின் தலைவராகவும் சமூகப் பணி புரிந்துள்ள இவர் துணைக் கருவிகள் உற்பத்திச் சங்கத்தின் தலைவரும் ஆவார். சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான இவர் சங்கத்தின் கட்டிட நிதிக்காகப் பெருந்தொகை நன்கொடையளித்துள்ளார். கோட்டையூர் விசுவேசுவரர் மருத்துவமனைக்காக எழுபத்தைந்து இலட்ச ரூபாய் நன்கொடை அளித்தமை இவருடைய சத்துவக்கும் இயல்பினை எடுத்துக்காட்டும். வைரவன் கோவில் நிருவாகக்குழுத் தலைவராகப் (1994–96) பொறுப்பேற்றிருந்த இவரது பதவிக்காலத்தில் பெரும்பொருள் நன்கொடை திரட்டி கோவிலைப் புதுப்பித்து குடமுழுக்கு விழா சிறப்புற நடைபெறக் காரணமாக இருந்தார்.

சுப்பிரமணியன் செட்டியார், அண., (15-2-1934 - 20-2-1994)

நேமங்கோவில்
இராங்கியம்
தொழிலதிபர், பள்ளி நிறுவுநர்

வயி.நா. அண்ணாமலை செட்டியார் – தெய்வானை ஆச்சியின் மகன். நகரத்தாருக்குரிய வழக்கமான தொழிலல்லாமல் புதிய தொழில் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர். இலட்சுமி சீவல் நிறுவனம் எனும் நிறுவனத்தைத் தொடங்கிச் சீவல் தயாரித்து, விற்பனை செய்யும் தொழிலைச் சிறப்பாக நடத்தியவர். பிளாஸ்டிக் தொழிற்சாலை தொடங்கியவர்களிலும் இவர் முதல் வரிசையர்.

நேமங்கோவில் குடமுழுக்கு விழாக்களில், நகர விருந்தைத் தம் சொந்தச் செலவில் தொடர்ந்து நடத்திய பெருமை உடையவர்.

தஞ்சையில் தம் மனைவியின் பெயரில் "கமலா சுப்பிரமணியம் மெட்ரிகுலேசன்" பள்ளியை நிறுவி, மிகப்பெரிய அளவில் கட்டடங்களைக் கட்டியுள்ளார். சிறந்த ஆசிரியர்களைப் பள்ளியில் பணியமர்த்தி, முதல்தரமான கல்வியை நல்கினார். சிறந்த நிருவாகியாதலால், பள்ளியை முன்மாதிரிப் பள்ளியாகத் திறம்பட நடத்தி, மாணவர் கல்வித்தரமும், ஒழுக்கமும் உயர அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்.

உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று அங்கெல்லாம் கல்வி நிலையங்கள் இயங்கும் முறையை நேரில் பார்த்து அவை போலவே பெரும் பொருட்செலவில் இப்பள்ளிகளை நிறுவினார். இப்போதும் இப்பள்ளிகள் இவரது மகன் சுப. வள்ளியப்பன் நிர்வாகத்தில் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன.

சுழற் கழகத்தில் ஆர்வத்தோடு பங்கேற்றுச் செயற்பட்ட உறுப்பினர். விருந்தோம்பலில் சிறந்து விளங்கியவர்.

இவரது கொடைத்திறனைப் பாராட்டி குன்றக்குடி அடிகளார் இவருக்கு 'பாரி வேள்' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

சுப்பிரமணியன் செட்டியார், பெ. பெரி. (21-9-1901 - 23-1-1975)

இளையாத்தங்குடி - ஒக்கூருடையார்
ஆவினிப்பட்டி
இதழாளர்

பெரியணஞ் செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். வட்டிக்கடைப் பணிக்காக இளம் வயதிலேயே கொழும்பு சென்றார். தமிழகச் செய்திகள் கொழும்பில் உள்ள தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தமிழக இதழ்களைத் தாமே வருத்தி அவற்றிலுள்ள சிறப்புச் செய்திகளைத் தொகுத்து 'வீரகேசரி' என்ற வார இதழாக 1930இல் வெளியிடத் தொடங்கினார். பின்னர் இது நாளிதழாக வெளிவந்தது. வீரகேசரி அச்சகம் என்ற பெயரில் சொந்த அச்சகத்தை 1956இல் தொடங்கினார். 1965இல் இவர் தாயகம் திரும்பியபோது அந்த இதழை இலங்கைத் தமிழர்களுக்கு விற்பனை செய்தார். இன்னும் இவ்விதழ் தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கிறது.

கிழக்காசிய நாடுகள் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து அந்த அனுபவங்களைத் தம் இதழில் பயணக் கட்டுரைகளாகத் தொடர்ந்து பல ஆண்டுகள் எழுதினார். இந்திய இலங்கைத் தமிழறிஞர்களை இணைக்கும் பாலமாக விளங்கிய இவர் ஈழத்தில் தமிழ் உணர்ச்சி பரவ உறுதுணையாக இருந்தார்.

சுப்பிரமணியன், சொக்கு., (28-10-1935)

இரணிக்கோவில்
கண்டனூர்
கவிஞர்

சி.ராம.சொ. குடும்பத்தில் சொக்கலிங்கஞ் செட்டியார் மகன். அழகப்பா கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்ற இவர் 1961இல் புதுதில்லியில் அனைத்திந்திய வானொலியில் பணியில் சேர்ந்தார். அதுமுதல் 1993இல் ஓய்வு பெறும் வரை வானொலி, தொலைக்காட்சி மற்றும் மாநில, மத்திய அரசுகளின் செய்தி விளம்பரத்துறையில் பல்வேறு பொறுப்புக்களில் பணியாற்றினார். அவ்வாறு பணியாற்றிய

Koviloor Digital Library

போது, மத்திய அரசால் வெளியிடப்பட்ட 'திட்டம்' எனும் மாதம் இருமுறை இதழின் ஆசிரியராகவும் சிலகாலம் பணிபுரிந்துள்ளார்.

இயல்பாக நல்ல கவிஞரான இவர் *1957, 1958* களில் முதுகலை படித்துக் கொண்டிருந்த போதே பல கவிதைப் போட்டிகளில் முதற் பரிசு பெற்ற சிறப்புடையவர். 'தமிழ் வளர் கதை' என்ற வில்லுப் பாட்டு நிகழ்ச்சியையும், 'வள்ளல் கவிக்கோவை' என்ற பெயரில் வள்ளல் அழகப்பரைப் பற்றிய இசை நிகழ்ச்சியையும் தயாரித்துத் தமிழகத்தில் பல இடங்களிலும் நடத்தியிருக்கிறார்.

மணித்திரள், அலைகள், உள்வெளிப்பயணம், நமக்குத் தொழில் கவிதை போன்ற கவிதை நூல்களை எழுதியுள்ள இவர், பெங்களூரில் ஆசிரமம் அமைத்து வாழ்ந்து வரும் திருச்சி சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை 'ஞானச்சுடர்' என்ற பெயரில் எழுதியுள்ளார்.

சுப்பிரமணியன், டாக்டர் சு., (2-5-1941)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
ஆ. தெற்கூர்
புற்றுநோய் மருத்துவர்

கா.மு.சுப. சுந்தரம் செட்டியார் – அமிர்தம் ஆச்சியின் மகன். ஆ. தெற்கூரில் பள்ளிக் கல்வியை முடித்த இவர் மருத்துவம் பயின்று பின்னர் புற்றுநோய் இயலில் சிறப்புப் பட்டம் பெற்றுள்ளார். சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்றபின் அரசு உதவித் தெர்கை பெற்று இலண்டன் இராயல் மார்ஸ்டன் மருத்துவ மனையில் *3* ஆண்டுகள் புற்றுநோய் மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சியும் இலண்டனில் ஜான்ஸ்டன் மாத்யூ கல்வி உதவி பெற்று 2 வருடங்கள் ஆய்வு செய்து மருத்துவ ஆராய்ச்சிப் பட்டமும் பெற்றுள்ளார். *1975*இல் எம்.ஆர்.சி.பி. (யு.கே.) என்னும் மிகுந்த சிறப்புடைய பட்டம் பெற்றுள்ளார்.

சென்னைப் பொது மருத்துவமனையில் *1971*ஆம் ஆண்டில் புற்றுநோய் மருத்துவத் துறையைத் தொடங்கியது இவரது குறிப்பிடத்தக்க சாதனையாகும். தொடர்ந்து அங்கு மூத்த மருத்துவராகப் பணியாற்றிவரும் இவர் இந்தியா விலேயே முதன்முதலாக இத்துறையில் தேர்ச்சி பெற்றுப் பேராசிரியராக விளங்குகிறார் என்பது நகரத்தார் சமூகத்துக்கே பெருஞ் சிறப்பாகும்.

புற்றுநோய் பற்றிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை உள்நாட்டு, வெளிநாட்டு மருத்துவ இதழ்களில் இவர் எழுதி வெளியிட்டுள்ளார். *1957*இல் பள்ளியிறுதித் தேர்வில் ஆ. தெற்கூர் விசாலாட்சி கலாசாலைப் பள்ளியில் முதல் மாணவனாகத் தேறிப் பரிசு பெற்றுள்ளார். *1960*ஆம் ஆண்டில் சென்னை மருத்துவக் கல்லூரித் தேர்வில் உடற்கூறு இயலில் சிறப்பாகத் தேறி இராமராவ் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். தொடர்ந்து இத்துறையில் ஆய்வு மேற்கொண்டு வரும் இவர் ஆயிரக்கணக்கான நோயாளிகளை மரணத்தின் பிடியினின்று மீட்டுக் காப்பாற்றியதால் அவர்களால் என்றும் போற்றப்படுகிறார்.

சுப்பிரமணியன், முருகு., (3-10-1925 - 10-4-1982)

பிள்ளையார்பட்டி
கோனாபட்டு
இதழாளர்

முருகப்ப செட்டியார் – சிவகாமி ஆச்சியின் மகன். பள்ளியிறுதி வகுப்புவரையே பயிலும் வாய்ப்புப் பெற்ற இவருக்கு எழுத்தார்வமும் தனித் தமிழார்வமும் பிறப்பியல்பாக இருந்தன. தன் வீட்டிலேயே 'இளந்தமிழன்' என்ற கையெழுத்து ஏடு ஒன்றை நடத்தினார். தன்மானக் கொள்கையும் தனித்தமிழ் நடையும் கொண்ட அவ்விதழ் பல இலட்சிய எழுத்தாளர்களை உருவாக்கிற்று. அந்நாளிலேயே பூப்பந்தாட்டம் போன்ற தூய தமிழ்ச் சொற்களை ஆங்கிலச் சொற்களுக்கு மாற்றாக அவ்விதழ் பயன்படுத்தியது.

பாரதிதாசனோடு இளமையிலேயே தொடர்பு கொண்ட இவர் பாரதிதாசனுக்காகவே 'பொன்னி' இதழைப் புதுக்கோட்டையில் தொடங்கி நடத்தினார். 'முரசொலி' பெரியண்ணனோடு கூட்டாக இவர் நடத்திய இவ்விதழ் திராவிட இயக்க இதழ்களின் முன்னோடியாகும். பிற இதழ்கள் தீபாவளி மலர்களே வெளியிட்ட அந்நாளில் தமிழர் திருநாள் பொங்கல் சிறப்பிதழ்கள் வெளியிட்டுப் புரட்சி படைத்தார். பாரதிதாசன் பரம்பரை என்ற கருத்துருவாக்கம் தோன்றவும் அதன்வழிச் செட்டிநாட்டில் பல கவிஞர்கள் தோன்றவும் இவரே நிலைக்களமாவார்.

*1953*இல் மலேசியா சென்ற இவர் 'தமிழ்நேசன்' துணை ஆசிரியராகவும் *1955* முதல் சிங்கப்பூர் 'தமிழ்முரசு' ஆசிரியராகவும் *1962* முதல் மீண்டும் 'தமிழ்நேசன்' இதழில் தலைமையாசிரியராகவும், தொண்டாற்றி மலேசியத் தமிழ் இதழ்களின் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தி அவற்றின் பெருவளர்ச்சிக்கு ஆதாரமானார். *1977*இல் 'புதிய சமுதாயம்' இதழைத் தொடங்கித் தாம் மறையும் வரையில் ஆசிரியப் பொறுப்பேற்று வெளியிட்டார். தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒரு பவுன் பரிசளித்துப் பவுன் சிறுகதைப் போட்டிகளை நடத்தி மலேசியத் தமிழ் இலக்கிய

Koviloor Digital Library

வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினார். இவர் எழுதிய தலையங்கங்கள் ஆணித்தரமானவை; தமிழர் வாழ்வு வளம் பெறப் போராடியவை. மலைநாட்டுக்கு இவர்செய்த தொண்டு மறக்க இயலாதது. முதல் உலகத் தமிழ் மாநாட்டில் இவர் சிறப்புச் சார்பாளராக கலந்து கொண்டார். சீர்திருத்த நோக்கும் புதுமை அவாவும் பொன்மனமும் சுதந்திரச் சிந்தனையும் படைத்த இவர் இதழியலில் தமக்கெனத் தனி முத்திரை பதித்தவர்.

சுப்பையா, இராம., (14-11-1908 - 21-5-97)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
காரைக்குடி
மேலவை உறுப்பினர்

அரிமழத்தில் பழனியப்ப செட்டியார் – சிட்டாளாச்சி மகனாகப் பிறந்தார். 1926இல் காரைக்குடி முத்துப்பட்டணத்தைச் சேர்ந்த அழ.சா. இராம.மு. இராமசாமி செட்டியார் – சிகப்பி ஆச்சிக்குப் பிள்ளை வந்தார். பிள்ளை வந்த இடத்தில் முத்துராமன் எனப் பெயரிடப் பெற்றாலும் இவரது முன்னைய பெயராகிய சுப்பையா என்பதே தொடர்ந்து வழங்கியது.

பிள்ளை வந்த இடத்தில் இவரது தமக்கை கணவராகிய சொ. முருகப்பாவின் உறவினால் இவருக்குச் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடும் தொடர்பும் ஏற்பட்டது. இவர் 1932இல் சுயமரியாதைக் கழக மாநாட்டையும் 1937இல் தமிழர் மாநாடு எனும் பெயரில் இந்தி எதிர்ப்பு மாநாட்டினையும் 1945இல் திராவிடர் கழக மாநாட்டினையும் காரைக்குடியில் பெருமுயற்சி யெடுத்து நடத்தினார். இவரது துணைவியார் விசாலாட்சி ஆச்சியும் இவரோடு இயக்கக் கூட்டங்களில் பங்குபெற்றார். நாகை சுயமரியாதைக் கழக மாநாட்டின் திறப்பாளர் விசாலாட்சி ஆச்சியார். இந்த அம்மையார் பல விதவை மறுமணங்களைத் தலைமையேற்று நடத்திவைத்துள்ளார்.

செட்டிநாட்டில் சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக அமைந்த இவரது இல்லத்திற்கு வராத சுயமரியாதை இயக்கத் தலைவர்களே இல்லை எனலாம். இவ்வில்லத்திற்கு மா. சிங்காரவேலர் 'சமதர்ம விலாஸ்' எனப் பெயரிட்டார்.

1949இல் தி.மு.க. தொடங்கப்பெற்ற பொழுது அறிஞர் அண்ணாவின் தலைமையை ஏற்று அக்கட்சியில் இணைந்தார். 1953இல் தி.மு.க. நடத்திய மும்முனைப் போராட்டத்தில் கல்லக்குடி இரயில் மறியலின் இரண்டாவது அணிக்குத் தலைமையேற்று மூன்று மாதம் சிறைத்தண்டனை பெற்றார். இயக்க ஈடுபாட்டுடன் 'நம்நாடு', 'தென்றல்' ஆகிய இதழ்களில் பணியாற்றினார். 1957இல் காரைக்குடிச் சட்டமன்றத் தொகுதியில் இராசா சர் முத்தையா செட்டியார், சா.கணேசன் ஆகியோரோடு போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்த இவர் 1972இல் சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்கப்பெற்று ஆறு ஆண்டுகள் பணியாற்றினார்.

காரைக்குடியில் 1953இல் 'திருக்குறட் கழகம்' தோற்றுவித்தவர்களுள் இவரும் ஒருவர். இவரது சமூகத் தொண்டைப் பாராட்டிப் பெரியார் விருது இவருக்கு வழங்கப்பெற்றது. 'நானும் எனது திராவிட இயக்க நினைவுகளும்' என்னும் இவரது நூல் செட்டிநாட்டில் இயக்கம் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறும் ஆவணமாகும்.

சுப்பையா செட்டியார். மு., (20-3-1906)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
தொழிலதிபர்

நாட்டரசன்கோட்டையில் வைரவன் செட்டியார் – சிகப்பி ஆச்சியின் மகனாகப் பிறந்தார். 1912இல் கானாடுகாத்தானில் முத்தையா செட்டியார் – பார்வதி ஆச்சி வீட்டிற்குப் பிள்ளை வளர வந்தார். 1922இல் கொழும்பு சென்று தமது குடும்ப வணிகத்தில் ஈடுபட்ட இவர் பர்மா, செய்கோன் நாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார். 1939 முதல் 1945 வரை இலங்கை அரசில் இந்தியச் சார்பாளராய் அங்கம் வகித்தார். 1941இல் இலங்கையில் இலங்கை இந்திய காங்கிரசைத் தோற்றுவித்தார். இப்போதும் 'தொழிலாளர் காங்கிரஸ்' கட்சியாக இலங்கை அரசியலில் இக்கட்சி முக்கியத்துவம் பெற்றுள்ளது. 1941–42ஆம் ஆண்டுகளில் கொழும்பு மாநகரத் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1931இல் அமெரிக்காவில் நடைபெற்ற அனைத்து நாடுகளின் வணிகர் சங்கக் கூட்டமைப்பின் மாநாட்டுக்கு இவரும் அ.மு.மு. முருகப்ப செட்டியாரும் இலங்கை வணிகர் சங்கச் சார்பாளர்களாகச் சென்று கலந்துகொண்டனர். பந்தயக் குதிரைகளை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். இவரது குதிரைகள் பல போட்டிகளில் வென்றுள்ளன. 1939இல் இவரது குதிரையே 'ஆளுநர் கோப்பை'யை வென்றது. தாம் பிறந்த ஊராகிய நாட்டரசன்கோட்டையில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை இவர் தோற்றுவித்தது, இவரது சமூகத் தொண்டில் குறிப்பிடத்தக்க பணியாகும்.

Koviloor Digital Library

சுப்பையா, டத்தோ., (13-3-1933)

சூரக்குடி
கல்லல்
நாடாளுமன்ற உறுப்பினர்

தேவராயன் செட்டியார் – பார்வதி ஆச்சியின் மகன். 1957இல் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். மலேசியாவில் தொழில் செய்து வருகிறார்.

1960இல் மலேசிய இந்தியன் காங்கிரசின் பினாங்கு கிளைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1963இலிருந்து 1970வரை வெல்லெஸ்லி மாவட்டத்தின் மத்திய ஆட்சி உறுப்பினராக அமர்த்தப்பெற்றார்.

1973இல் மலேசிய இந்தியன் காங்கிரசின் பினாங்கு மாநிலத் தலைவரானார். 1974, 1978, 1982 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து மூன்று முறை பினாங்கு மாநிலச் சட்டமன்ற உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பணிபுரிந்தார்.

1970இலிருந்து 1973வரை பினாங்கு இந்தியர் சங்கத் தலைவராகவும், 1975இல் பினாங்கு இந்து அறப்பணி வாரியத் தலைவராகவும் பணியாற்றினார். உலகின் பல நாடுகட்கும் மலேசிய அரசின் பேராளராக இவர் சென்று வந்துள்ளார்.

1971இல் கவியரசர் கண்ணதாசன் 'தமிழ்ச்சுடர்' என்ற பட்டத்தை இவருக்கு அளித்தார். செந்தமிழ்க் கலாநிலையம் 'திருவருட்செல்வர்' என்ற பட்டத்தை அளித்தது. மலேசிய அரசு 1982இல் டத்தோ என்ற பட்டத்தை அளித்தது.

இதுவரை நடைபெற்ற உலகத்தமிழ் மாநாடுகளிலெல்லாம் மலேசிய அரசின் பேராளராக இவர் தொடர்ந்து பங்கேற்றுள்ளார்.

'நினைவில் நின்ற ஜப்பான் பயணம்', 'நினைவில் நின்ற அமெரிக்கப் பயணம்' என்ற இரு நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

வெளிநாட்டில் சிறந்த நாடாளுமன்ற வாதியாக விளங்கும் நகரத்தார் இவர்.

சுப்பையா, டாக்டர். இராம., (1932 - 25-11-69)

இளையாத்தங்குடி
வேகுப்பட்டி
தமிழ் மொழியியல் அறிஞர், மொழிபெயர்ப்பாளர்

மலாயாவில் கோலக்கஞ்சார் என்னும் சிற்றூரில் ஆசிரியர் பணியாற்றிய இவர் தம்முயற்சியால் எம்.ஏ., பட்டமும் 'கீழ்ப்பேராவில் தமிழ்மொழி வழக்கு' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து இலண்டன் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டமும் பெற்றார். மலாயாப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும் பின்னர் இந்தியப் பகுதித் துறைத் தலைவராகவும் பணியாற்றினார்.

கோலாலம்பூரில் 1966இல் நடைபெற்ற முதலாம் உலகத் தமிழ்மாநாட்டில் இவருடைய பணி குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும்; மொழிபெயர்ப்புச் செயலராகவும் கண்காட்சிப் பகுதித் தலைவராகவும் தொண்டு செய்தார்; மொழியியல் தொடர்பான 4 கட்டுரைகள் படித்தார். தமிழ் மலேசியா என்னும் இவரது நூல் மலேயா சிங்கப்பூரில் வெளிவந்த தமிழ்நூல்களின் அட்டவணையாகும். பாரதியாரின் குயில் பாட்டையும் குறுந்தொகையில் சில பாடல் களையும் பத்துப்பாட்டில் சில பாடல்களையும் இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

'இக்காயட் ஸ்ரீ ராமா' என்னும் மலாய்மொழி இராமாயணத்தையும் மலாக்கா மன்னர்களின் வரலாற்றையும் மலாய் மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'மலாய்மொழி இலக்கணத்துக்கு ஓர் அறிமுகம்' எனும் இவரது நூல் நகரத்தார் சங்க நிதி உதவியால் வெளியிடப்பெற்றது. 'சிங்கப்பூர்க் கவிதைகள்' என்னும் ஆங்கிலத் திங்கள் ஏட்டின் ஆசிரியர் குழுவில் பணியாற்றி மலாய்க் கவிஞர்களின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

அமெரிக்காவில் மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தொடங்கத் திட்டங்கள் வகுத்துக் கொடுப்பதற்காக இவர் அழைக்கப்பட்டார். அதற்கான பாராட்டுவிழா முடிந்து திரும்பும்போது சாலை விபத்தில் தம் முப்பத்தேழாம் வயதில் உயிர்நீத்தார். தன் முயற்சியால் முன்னேறிய இவர் வாழ்க்கை இளைஞர்க்கு எடுத்துக்காட்டு.

சுப்பையா, மு.வெ., (2-2-1939)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
பள்ளத்தூர்
தொழிலதிபர்

அ.மு.மு. வெள்ளையன் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். தொழில் முயற்சி, நிருவாகத் துறையில் இலண்டனில் பயின்று பட்டம் பெற்றவர். டி.ஐ.ஏ (யு.கே) பட்டயமும் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் பி.எம்.டி பட்டமும் பெற்றுள்ளார். சென்னை ஈஐடி பாரி நிறுவனத்தின் துணைத் தலைவராகவும் மேலாண்மை இயக்குநராகவும் பொறுப்பு வகிக்கின்றார். ஆந்திரா உர ஆலை, எம்.எம்.

Koviloor Digital Library

முத்தையா ஆராய்ச்சி நிறுவனம் போன்ற 8 நிறுவனங்களின் தலைவராகவும் கொரமாண்டல் உர நிறுவனம், லெட்சுமி இயந்திர நிறுவனம், டிசிஎம். டயோடா, பிரீமியர் ஆட்டோமொபைல் போன்ற 11 நிறுவனங்களின் இயக்குநராகவும் திறம்படப் பணியாற்றி வருகிறார். தொழில் மேலாண்மை நிருவாகத்தில் மிகச் சிறந்தவர். புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்துத் தொழிலை வளர்ப்பதில் வல்லவர். பாரியின் காராமில்க் சாக்லேட்டும் பிற மிட்டாய்களும் தரத்தில் முன்னணியில் விளங்கிப் புகழ்பெற இவருடைய அயராத முயற்சியே காரணம். பணியாளர்களோடு களத்தில் இறங்கித் தோளோடு தோள் நின்று பணிபுரியும் மனிதாபிமானம் மிக்கவர். காட்பாடி ஒர்த் அறக்கட்டளை, அ.மு.மு. வெள்ளையன் செட்டியார் அறக்கட்டளை ஆகியவற்றின் உறுப்பினராகச் சமூகத் தொண்டு புரிந்து வருகிறார்.

சுயமரியாதை இயக்கத்தில் நகரத்தார்

பெரியார் ஈ.வெ.ரா. சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய பொழுது அவ்வியக்கம் செட்டிநாட்டுப் பகுதியில் பரவுவதற்கு நகரத்தார் பெருமக்கள் சிலர் காரணமாக அமைந்தனர். அவர்களுள் முதலாவதாகக் குறிப்பிடத்தக்கவர் கானாடுகாத்தானைச் சேர்ந்த வை.சு. சண்முகனார் (த.க.). இவர் தொடக்ககாலத்தில் இவ்வியக்கத்தின் பொருளாளராக இருந்து இயக்கத்தை வளர்த்தார். செட்டிநாட்டுப் பகுதியில் பொதுக் கூட்டத்திற்காக வந்த சுயமரியாதை இயக்கத் தலைவர்கள் அனைவரும் இவரது இன்பமாளிகையிலேயே தங்கினர். பெரியாருக்குத் தனது மகிழ்வுந்து ஒன்றை அந்நாளிலேயே நன்கொடையாக இவர் வழங்கினார். பாவேந்தர் பாரதிதாசன் நூல்கள் வெளிவருவதற்காகவே சில நகரத்தார்களின் துணையோடு முத்தமிழ் நிலையம் என்ற பதிப்பகத்தை உருவாக்கிய இவர் பாவேந்தரின் மூத்தமகள் சரசுவதியின் திருமணத்தையும் முன்னின்று நடத்திவைத்தார். மொத்தத்தில் இவர் இவ்வியக்கத்தின் புரவலராகவே திகழ்ந்தார்.

இவ்வரிசையில் அடுத்து இடம் பெறத்தக்கவர் சொ. முருகப்பர். (த.க.) காரைக்குடியில் பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் சுயமரியாதை இயக்க மாநில மாநாட்டை முன்னின்று வெற்றிகரமாக நடத்தினார். ஆற்றல் வாய்ந்த சொற்பொழிவாளரான இவர் செட்டிநாட்டுப் பகுதியில் மட்டுமல்லாமல் தமிழ்நாடெங்கும் நடைபெற்ற சுயமரியாதை இயக்கக் கூட்டங்களில் உரையாற்றி இவ்வியக்கக் கருத்துக்கள் நாடெங்கும் பரவத் துணைநின்றார். தொடக்கத்தில் பக்தி உணர்வோடு இவர் தொடங்கிய 'குமரன்' இதழ் (த.க.) பின்னாளில் சுயமரியாதை இயக்கக் கொள்கைபரப்பும் ஏடாகவே திகழ்ந்தது. இவர் தம் மனைவி மரகதவல்லி முருகப்பாவை ஆசிரியராகக் கொண்டு 'மாதர் மறுமணம்' என்ற இதழையும் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளுக்காக நடத்தினார். பேச்சாலும் எழுத்தாலும் கொள்கைப்பற்றாலும் சுயமரியாதை இயக்கத்தை இவர் வேரூன்றச் செய்தார்.

இவ்வரிசையில் அடுத்து வருபவர் காரைக்குடி இராம. சுப்பையா. சொ. முருகப்பாவின் உறவினராகவும், வை.சு.ச.வின் நண்பராகவும் அமைந்த காரணத்தால் தொடக்கத்திலிருந்தே இவர் இவ்வியக்கப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டார். இவர் தலைமைப் பதவியில் ஆர்வம் கொள்ளாது அடிமட்டத் தொண்டர்களோடு தொண்டராகப் பழகித் தம் உடலுழைப்பால் இவ்வியக்க வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். இவரது மனைவி விசாலாட்சி ஆச்சி நாகப்பட்டினத்தில் நடந்த சுயமரியாதை இயக்க மாநில மாநாட்டில் தொடக்கவுரை நிகழ்த்தினார். நகரத்தார் சமூகப்பெண் ஒருவர் இதுபோல் சமூக மறுமலர்ச்சி இயக்கத்தில் கலந்துகொண்டது அன்று மிகவும் புதுமையாகப் பேசப்பட்டது. இன்பமாளிகைக்கு அடுத்தபடியாக இவரது 'சமதர்ம இல்லம்' சுயமரியாதை இயக்கத் தோழர்களுக்கு விருந்தினர் மாளிகையாக விளங்கியது.

செட்டிநாட்டுப் பகுதிக்கு வெளியே சுயமரியாதை இயக்கத்தை வளர்த்த நகரத்தார் மேலைச் சிவபுரிப் புலவர் நா.மு. மாணிக்கம் (த.க.). தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், கடலூர்ப் பகுதிகளில் மேடைகளில் இவர் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை முழங்கினார். இயக்கத் தொடர்பு காரணமாகவே சிதம்பரத்தில் இவர் பார்த்துவந்த ஆசிரியப் பணியைத் துறக்க நேரிட்டது. பின்னர் பெரியாரின் 'குடியரசு' இதழில் முழுநேரப் பணியாளராகச் சேர்ந்து இயக்கக் கொள்கைகளைப் பரப்பினார்.

எல்லா அரசியல், சமூக மறுமலர்ச்சி இயக்கங்களிலும் நகரத்தாரின் பங்களிப்பு மிகுதியாகவே அமைந்துள்ளது. அவ்வாறே சுயமரியாதை இயக்க வரலாற்றிலும் நகரத்தாரின் பங்கு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

Koviloor Digital Library

சூரக்குடி


ஒன்பது நகரக் கோவில்களுள் ஒன்றான இத்திருக்கோவில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து 10கி.மீ. தொலைவில் கழனிவாசல் வழியாக நேமத்தான்பட்டி செல்லும் சாலையில் அமைந்துள்ளது.

இத்திருக்கோவிலில் அமர்ந்தருள் செய்யும்

இறைவன் : தேசிகநாதர்

இறைவி : ஆவுடைநாயகி

இக்கோவிலுக்கு 26.6.1898, 9.7.1943, 29.6.1952, 9.9.1973, 10.7.1994 ஆகிய நாட்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. ஊருணியும் நகரவிடுதியும் இங்கு உள்ளன.



சூரக்குடிக் கோவில்

சூரை மரங்கள் நிறைந்திருந்ததால் இக்கோவில் இப்பெயர் பெற்றது. இக்கோவில் கி.பி. 718இல் பாண்டிய மன்னனால் நகரத்தாருக்கு அளிக்கப் பெற்றது. இக்கோவிலார் இசைபிடிமானத்தில் ''கேரளசிங்கவள நாட்டில் சூரக்குடியான தேசிகநாராயணபுரத்தில் புகழ்வேண்டிய பாக்கம் உடையார்'' எனத் தம்மைக் குறிப்பிடுவர்.

இக்கோவில் நகரத்தார்கள் 1. அரண்மனை சிறுவயல் 2. ஆவினிப்பட்டி 3. கண்டரமாணிக்கம் 4. கண்டனூர் 5. கல்லல் 6. காரைக்குடி 7. காளையார் மங்கலம் 8. கீழச் சிவல்பட்டி 9. குருவிக் கொண்டான்பட்டி 10. சண்முகநாதபுரம் 11. செவ்வூர் 12. தேனிபட்டி 13. நடராசபுரம் 14. நாட்டரசன்கோட்டை 15. நெற்குப்பை 16. பட்டமங்கலம் 17. பள்ளத்தூர் 18. பனங்குடி 19. பனையப்பட்டி 20. பாகனேரி 21. புதுவயல் 22. பூலாங்குறிச்சி 23. மிதிலைப்பட்டி 24. விரையாச்சிலை 25. வேகுப்பட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்தம் புள்ளிகள் 1390.

இக்கோவில் புள்ளிகள் அதிகமாக வாழும் 10 ஊர்களைப் பட்டியலிட்டு ஒரு பிரிவுக்கு இரண்டு ஊர் வீதம் ஐந்து பிரிவுகளாக அமைத்துள்ளனர். அப்பிரிவுகள் :

1. கீழச்சிவல்பட்டி, காரைக்குடி.
2. கண்டனூர், வேகுப்பட்டி
3. நாட்டரசன்கோட்டை, கண்டரமாணிக்கம்
4. பள்ளத்தூர், செவ்வூர்
5. புதுவயல், அரண்மனை சிறுவயல்

ஒவ்வொரு பிரிவிலும் ஊருக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பெற்று ஓராண்டுக்கு ஒரு பிரிவு என்ற அடிப்படையில் இருவர் வீதம் கோவில் நிருவாகத்தைக் கவனித்து வருகின்றனர்.

ஒன்பது நகரக்கோவில்களுள் இத்திருக் கோவிலில் மட்டுமே அம்மன் நான்கு திருக்கைகளுடனும் மூன்று கண்களுடனும்

Koviloor Digital Library

காட்சி தருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கோவில் தட்சிணாமூர்த்தி சிற்பமும் பிற கோவில்களிலிருந்து வேறுபட்டுள்ளது. பொதுவாகத் தட்சிணாமூர்த்தியின் முதுகுப் பகுதியும் ஆலமரத்தின் தண்டுப்பகுதியும் சேர்ந்தே அமைந்திருக்கும். ஆனால் இங்குமட்டும் அவ்விரண்டும் தனித்தனியே தோன்றும் வண்ணம் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான நிலவறையும் நந்தி சிற்பத்திற்கு மேல் ஐந்து வளையங்களோடு கூடிய கல்சங்கிலியும் இக்கோவிலின் சிற்பச் சிறப்புக்களாகும்.

செட்டிநாடு (இதழ்)

இப்பெயரில் வார இதழ் ஒன்று 1930இலிருந்து வெளிவந்தது. காரைக்குடியைச் சேர்ந்தவரும் தஞ்சாவூர் நகர்மன்றத் தலைவராக இருந்தவருமான தஞ்சாவூர் சு.இராம. இராமநாதன் செட்டியாரும் காரைக்குடி ஆவி.பழ. சிதம்பரஞ் செட்டியாரும் சேர்ந்து இவ்விதழை முதலில் தஞ்சாவூரில் 1930 ஜூன் திங்களில் தொடங்கினர். இதன் ஆசிரியராக வரகூர் அ. சேசாத்திரி சர்மா பணியாற்றினார்.

நகரத்தார் நலன் கருதித் தொடங்கப்பெற்ற இவ்விதழ் 1931 ஏப்பிரல் முதல் காரைக்குடியிலிருந்து வெளிவந்தது. டெம்மி 1 X 4 அளவில் 8 பக்கங்கள் கொண்ட தனி இதழின் விலை ஓரணா (6 காசுகள்); வருடச்சந்தா உள்நாட்டுக்கு ரூபாய் ஐந்து. வெளிநாட்டுக்கு ரூபாய் ஆறு.

காரைக்குடியிலிருந்து வெளிவரத் தொடங்கிய பின் இவ்விதழ் நகரத்தார் பலரின் துணையையும் பெற்று ஒரு பிரைவேட் லிமிடெட் கம்பனியாக உருவாக்கப்பெற்றது. பண்டிதமணி, பேராசிரியர். லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், நாமக்கல் கவிஞர், கவிமணி, பாவேந்தர், இரா.பி. சேதுப்பிள்ளை, கா. அப்பாதுரையார், மு.வ., ஆகியோர் இவ்விதழில் தங்கள் இலக்கியப் படைப்புக்களை வெளியிட்டுள்ளனர்.

1952இல் சேசாத்திரி சர்மா ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். பாலகவி இராமநாதன் செட்டியார் ஆசிரியர் பொறுப்பையும் வெளியிடும் பொறுப்பையும் ஏற்று, பின்னர் சில ஆண்டுகள் இவ்விதழை நடத்தினார். அதன்பின் இதழ் நின்றுபோய் விட்டது.

செட்டிநாடு (ஊர்)

கானாடுகாத்தானுக்குத் தென்மேற்கே இரண்டு கிலோமீட்டர் தொலைவிலும், பள்ளத்தூருக்கு வடமேற்கே மூன்று கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ள ஊர். 1928இல் இப்பகுதியில் இருந்த காடுகளை அழித்து இதனைச் ‘செட்டிநாடு’ என்ற பெயருடைய குடியிருப்புப் பகுதியாக ஆக்கியவர் இராசா சர் மு. அண்ணாமலை செட்டியார்.

சென்னை – இராமேசுவரம் தொடர்வண்டிப் பாதையில் இவ்வூர் அமைந்துளது. இது ‘செட்டிநாடு’ என்ற பெயருடைய தொடர்வண்டி நிலையமாக இயங்குகிறது. விரைவு வண்டிகள் உட்பட அனைத்து வண்டிகளும் இந்நிலையத்தில் நின்று செல்கின்றன.

அண்ணாமலை செட்டியார் இவ்வூரில் ஒரு சிவன் கோவில் கட்டினார். மீனாட்சி சுந்தரரேசுவரர் கோவில் என்ற பெயருடைய இக்கோவிலின் முதல் குடமுழுக்கு 1951இலும், அடுத்த குடமுழுக்கு 1995இலும் நடைபெற்றன.

‘செட்டிநாடு’ என்ற பெயருடன் இவ்வூர் உருவாக்கப்பட்டிருப்பினும், நகரத்தார் வாழும் ஊர்கள் எனத் தொன்று தொட்டு 96 ஊர்கள் எண்ணப்படும்போதும், இப்போது அவை 75 எனக் கணக்கிடப்படும்போதும் அக்கணக்கினுள் இவ்வூர் சேர்ந்ததாகக் கணக்கிடப்படுவதில்லை. ஏனெனில் இதனைத் தங்கள் சொந்த ஊராகக் கொண்டு வாழும் நகரத்தார் குடும்பம் எதுவும் இங்கு இல்லை. அலுவல் காரணமாக இவ்வூரில் தற்காலிகமாகக் குடியிருப்போருள் சில நகரத்தார் குடும்பங்களும் உள்ளன. ஆனால் அவர்கள் சொந்த ஊர் 75 ஊர்களுள் வேறு ஏதேனும் ஒன்றாக இருக்கும். அவ்வூர்ப் புள்ளிக் கணக்கில் அவர்கள் இடம்பெற்றிருப்பர்.

இங்கு இராசா சர் அண்ணாமலை செட்டியார் நினைவு செட்டிநாடு அறக்குழுவினரால் 1956இல் தொடங்கப்பெற்ற அண்ணாமலை பல்தொழிற் கல்லூரி இயங்குகிறது. இது, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய கானாடுகாத்தான் ஊராட்சிமன்றத்தின் ஒரு பகுதி.

செட்டிநாடு (நிலப் பரப்பு)

செட்டிநாடு என்பது நகரத்தார்கள் வாழ்ந்து வரும் ஊர்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு நிலப்பகுதி. இப்போதைய வருவாய் மாவட்டங்களில் சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய இருமாவட்டங்களிலுமாக இந்நிலப்பகுதி பரவிக் கிடக்கிறது. தென்வடலாக ஏறத்தாழ ஐம்பது கிலோமீட்டரும், கீழ்மேலாக ஏறத்தாழ

Koviloor Digital Library

நாற்பது கிலோமீட்டரும் உடைய ஒரு செவ்வகமாக இந்நிலப்பகுதியைக் குறித்துக் காட்டலாம்.

நகரத்தார்கள் வாழ்ந்த ஊர்கள் 96 என்று தொன்றுதொட்டுச் சொல்லப்படுகிறது. ஆனால் 75 ஆண்டுகட்கு முன்னரே, 'ஊழியன்' இதழில் நகரத்தார்கள் வாழ்ந்த ஊர்கள் பட்டியலிடப்படும் போது 78 ஊர்கள்தான் அப்பட்டியலில் இடம்பெறுகின்றன. இப்போதோ அவை இன்னும் குறைந்து 75 ஊர்கள் ஆகிவிட்டன.

இந்த 75 ஊர்களை உள்ளடக்கிய செட்டிநாட்டுப் பகுதியின் எல்லைகள் பற்றி, முதன்முதலில் பூங்குன்றை வேலங்குடியில் நகரத்தார்கள் தங்களுக்குரிய சாதிமுறை நியாயங்களை முடிவு செய்யும்போது குறிப்பிட்டுள்ளர். அது வருமாறு :

''கடலுக்கு மேற்கு, பிரான்மலைக்குக் கிழக்கு, வைகைக்கு வடக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கு இந்நான்கெல்லைக்குட்பட்ட வேளாளர் பூமியாகிய இந்த நாட்டிலேயே குடியிருக்கிறது''.

இதே எல்லைகளை 18, 19ஆம் நூற்றாண்டு களில் வாழ்ந்த பாடுவார் முத்தப்பர் (து.க.) ஒரு வெண்பாவாக ஆக்கியபோது அவர்தான் இந்நிலப்பரப்பிற்குச் செட்டிநாடு என்ற பெயரைக் குறிப்பிடுகிறார். அவ்வெண்பா வருமாறு :

'வெள்ளாறது வடக்காமேற் குப்பிரான் மலையாந்
தெள்ளார் புனல்வைகை தெற்காகும் –
ஒள்ளியநீர்
எட்டிக் கடற்கிழக்கா மிஃதன்றோ நாட்டரண்சேர்
செட்டிநாட் டெல்லையெனச் செப்பு'.

நகரத்தார் வாழும் 75 ஊர்களைத் தவிர அதைவிட எண்ணிக்கை மிகுதியான வேறு ஊர்களும் இந்நிலப்பரப்பில் அடங்கியுள. அந்த 75 ஊர்களிலும் கூடப் பெரும்பாலான ஊர்களில் ஊரின் மொத்த மக்கள் தொகையில் நகரத்தார் அல்லாதாரே பெரும்பான்மையினர். அப்படி யிருந்தும் இந்நிலப்பரப்பிற்குச் 'செட்டிநாடு' என்ற பெயர் கடந்த இரு நூற்றாண்டுகளாக வழங்கி வருவது இச்சமூகத்தின் சிறப்பைக் காட்டும் வியப்புக்குரிய ஒரு செய்தியாகும். இது குறித்து நகரத்தாரியல் ஆய்வாளர் சோமலெ கீழ் வருமாறு குறிப்பிடுகிறார்:

''செட்டிநாட்டில் செட்டியார்கள் சிறுபான்மையோராக இருந்தும், கல்வி, பொருள் நிலை, செல்வாக்கு ஆகியவற்றில் 1950 வரை ஏனையோரைவிடச் சிறந்து விளங்கியதால் இப்பகுதி 'செட்டிநாடு' எனப் பெயர் பெற்றது போலும். தமிழகத்தில் வேறு எந்தப் பகுதியும் இவ்வாறு ஓர் இனத்தின் பெயரால் குறிப்பிடப் பெறவில்லை''.

செட்டிநாட்டின் பருவநிலையையும், நிலவளத்தையும் நோக்கினால் பொதுவாக இது ஒரு வறண்ட பூமியே ஆகும். ஆயினும் ஆண்டொன்றுக்குத் தென்கிழக்குப் பருவக் காற்றால் நாற்பது முதல் ஐம்பது சென்டிமீட்டர் மழையும், வடகிழக்குப் பருவக்காற்றால் ஐந்து முதல் பத்து சென்டிமீட்டர் மழையும் இப்பகுதிக்குக் கிடைக்கிறது. இங்கு ஆங்காங்கே சில சிற்றாறுகளும், சில கண்மாய்களும் உள்ளன. இவை மழைபெய்தால் மட்டுமே நீர் வளத்தோடு காணப்படுபவை. மற்றபடி பெரும்பாலும் கிணற்று நீர்ப்பாசனம்தான் இந்நிலப் பகுதியில் உளது.

இப்பகுதியில் விளைநிலப் பகுதி மிகக் குறைவே. பெரும்பாலும் கருவேல மரங்கள் தாமாகவே வளர்ந்து மண்டிக் கிடக்கும் தரிசு நிலங்களும், குடியிருப்புப் பகுதிகளுமே அதிகம். இப்பகுதியில் சில ஆலைகளும், சில இரசாயனத் தொழிற்சாலைகளும் உள. மற்றபடி இப்பகுதியில் உள்ள பெருநகரங்கள் வணிக நகரங்களே.


இப்பகுதியில் நகரத்தார்களைத் தவிர வாழ்வோர் முக்குலத்தோரின் ஒரு பிரிவினரான, தங்களைச் 'சேர்வைகாரர்கள்' என்றும் 'அம்பலம்' என்றும் குறிப்பிட்டுக் கொள்பவர்களான, கள்ளர் சமூகத்தவர் ஆவர். யாதவ குலத்தைச் சேர்ந்த 'கோனார்', 'இடையர்' எனும் சமூகத்தவரும் இந்நிலப் பகுதியில் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர்.

செட்டிநாட்டில் கல்விநிலை மிகச் சிறப்பாக உள்ளது. அழகப்பா பல்கலைக்கழகம், ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கலைக்கல்லூரி, அழகப்பா அரசினர் கலைக்கல்லூரி, பூலாங்குறிச்சி வி.சிவலிங்கம் செட்டியார் அரசினர் கலைக்கல்லூரி, ஸ்ரீசாரதா நிகேதன் மகளிர் கல்லூரி முதலிய கல்லூரிகளும், பல்வேறு மேல்நிலை, உயர்நிலைப்பள்ளிகளும் இப்பகுதியில் கல்விப்பணி ஆற்றி வருகின்றன.

நகரத்தார்கள் திருப்பணிச் செல்வர்களாகை யினால் செட்டிநாட்டுப் பகுதியில் திருக்கோவில் களும், சமயப் பணிகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. குன்றக்குடி, துலாவூர், பாதரக்குடி, கோவிலூர், காளையார்கோவில் ஆகிய இடங்களில் திருமடங்கள் சைவப் பணியாற்றி வருகின்றன.

இனி, இச்செட்டிநாட்டில் நகரத்தார் வாழும் 75 ஊர்களைப் பற்றிய செய்திகளைக் காணலாம். இவை, சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடி (27), சிவகங்கை (11), திருப்புத்தூர் (14), தேவகோட்டை (4) ஆகிய வருவாய் வட்டங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம் (19) வட்டத்திலுமாக அமைந்துள்ளன.

Koviloor Digital Library



தமிழகத்தில் செட்டிநாட்டின் அமைவிடம்

உள்ளாட்சி அமைப்பில் எடுத்துக்கொண்டால் இவ்வூர்களுள் காரைக்குடி, தேவகோட்டை இரண்டு மட்டும் நகராட்சி மன்றங்கள். ஏனைய 73 ஊர்களும் ஊராட்சி மன்றங்களே. அவை மொத்தம் 10 ஊராட்சி ஒன்றியங்களுள் அடங்கியுள. அவற்றுள் 3 ஊராட்சி ஒன்றியங்கள் நகரத்தார் ஊர்களாகிய அரிமழம், கல்லல், தேவகோட்டை ஆகியவற்றில் அமைந்துள. காரைக்குடி, தேவகோட்டை இரண்டும் வருவாய் வட்டத் தலைநகரங்களாகும். மேலும் தேவகோட்டை ஒரு கோட்டத் தலைமையிடமுமாகும்.

குன்றக்குடி மலையை மையப்பகுதியாக வைத்து, அதற்குக் கிழக்கே, மேற்கே, தெற்கே உள்ள நகரத்தார் ஊர்கள் கீழவட்டகை (3), மேலவட்டகை (11), தெற்கு வட்டகை (19) என வழங்கப்படுகின்றன. கீழப்பத்தூர் (4), மேலப்பத்தூர் (15), நீண்டகரைப் பிரிவு (1) என்பவை முன்னாள் புதுக்கோட்டைத் தனியரசுப் பகுதியில் இருக்கும் நகரத்தார் ஊர்கள். இந்த ஆறு வட்டகையிலும் அமையாத ஊர்கள் பதினாறூர் வட்டகை (22) எனக் குறிப்பிடப் படுகின்றன. இவ்வாறு 75 ஊர்களையும் 7 பிரிவாகப் பிரித்து வழங்குவது நகரத்தார் மரபு.

இந்த 75 ஊர்களின் பெயர்கள் முடியும் முடிநிலையை அடிப்படையாக வைத்து ஊர்ப் பெயர்களை வகை பிரித்துக் கவிஞர் அர.சிங்காரவடிவேலன் இரு வெண்பாக்கள் எழுதியுள்ளார். அவை :


கோட்டையிலே மூன்று குடிகளிலே ஆறாகும்
பாட்டைவளர் பட்டிஇரு பத்தாகும் –
நாட்டமிகும்
ஊர்பத்தாம் ஏரிகுளம் ஊருணிஒவ்
வொன்றாம்
சேர்வயல்கள் ஐந்தென்று செப்பு.

மங்கலம் மூன்று வரமொன்றே ஆறுபுரம்
திங்கள்வகை ஒவ்வொன்று சீர்புரிகள்
நான்கு
பிறஊர்கள் பத்து சிலைகுறிச்சி ஒன்றோடு
அறம் வளர்ப்பார் ஊரெழுபத் தைந்து.

இந்த 75 ஊர்களின் அகரவரிசைப் படுத்தப்பட்ட பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. ஊர்ப்பெயர், வட்டகை, வருவாய் வட்டம், அஞ்சல் குறியீட்டெண் என்ற வரிசையில் இப்பட்டியல் அமைகிறது.

1. அமராவதிபுதூர் – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630301.
2. அரண்மனை சிறுவயல் – தெற்கு வட்டகை – காரைக்குடி – 630305
3. அரிமழம் – கீழப்பத்தூர் – திருமயம் 622201
4. அரியக்குடி – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630202
5. அலவாக்கோட்டை – தெற்கு வட்டகை – சிவகங்கை – 630553
6. அளகாபுரி (கண்டனூர்) – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630106 (இதைக்கோட்டையூர் அளகாபுரி என்றும் குறிப்பிடுவதுண்டு.)
7. அளகாபுரி (நாட்டரசன்கோட்டை) – தெற்குவட்டகை – சிவகங்கை – 630561 (இதைக் கொல்லங்குடி அளகாபுரி என்றும் குறிப்பிடுவதுண்டு.)
8. அளகாபுரி (பில்லமங்கலம்) – மேலப்பத்தூர் – திருமயம் – 630205
9. ஆத்தங்குடி –பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630101
10. ஆத்திக்காடுதெற்கூர் – மேலவட்டகை – திருப்புத்தூர் – 630201
11. ஆவினிப்பட்டி – மேலவட்டகை – திருப்புத்தூர் – 630205
12. இராங்கியம் – மேலப்பத்தூர் – திருமயம் – 622409
13. இராயவரம் – கீழப்பத்தூர் – திருமயம் – 622506
14. இலட்சுமிபுரம் (கொத்தமங்கலம்) – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630105

Koviloor Digital Library



செட்டிநாடு ஊர்கள்

Koviloor Digital Library

15. இலட்சுமிபுரம் (விரையாச்சிலை) – மேலப்பத்தூர் – திருமயம் – 622412 (இதனை நெய்க்கோணம் இலட்சுமிபுரம் என்றும் குறிப்பிடுவதுண்டு.)
16. உலகம்பட்டி – மேலவட்டகை – திருப்புத்தூர் – 622410
17. ஒக்கூர் – தெற்குவட்டகை – சிவகங்கை – 630557
18. கடியாபட்டி – கீழப்பத்தூர் – திருமயம் – 622505
19. கண்டரமாணிக்கம் – தெற்குவட்டகை – திருப்புத்தூர் – 630204
20. கண்டவராயன்பட்டி – மேலவட்டகை – திருப்புத்தூர் – 630203
21. கண்டனூர் – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630104
22. கருங்குளம் – தெற்குவட்டகை – காரைக்குடி – 630615
23. கல்லல் – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630305
24. கல்லுப்பட்டி – பதினாறூர் வட்டகை – தேவகோட்டை – 630306
25. காரைக்குடி – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630001
26. காளையார்மங்கலம் – தெற்குவட்டகை – சிவகங்கை – 630557
27. கானாடுகாத்தான் – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630103
28. கீழச்சிவல்பட்டி – மேலவட்டகை – திருப்புத்தூர் – 630205
29. கீழப்பூங்குடி – தெற்கு வட்டகை – சிவகங்கை – 630552
30. குருவிக்கொண்டான்பட்டி – மேலப்பத்தூர் – திருமயம் – 622415
31. குழிபிறை – மேலப்பத்தூர் – திருமயம் – 622402
32. கொத்தமங்கலம் – பதினாறூர்வட்டகை – காரைக்குடி – 630105
33. கொப்பனாபட்டி – மேலப்பத்தூர் – திருமயம் – 622401
34. கோட்டையூர் – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630106
35. கோனாபட்டு – நீண்டகரைப்பிரிவு – திருமயம் – 622503
36. சக்கந்தி – தெற்குவட்டகை – சிவகங்கை – 630560
37. சண்முகநாதபுரம் – கீழவட்டகை – தேவகோட்டை – 630314
38. சிறாவயல் – பதினாறூர்வட்டகை – காரைக்குடி – 630214
39. சிறுகூடல்பட்டி – மேலவட்டகை – திருப்புத்தூர் – 630215
40. சிறுவயல் (உய்யக்கொண்டான்) – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630208
41. செம்பனூர் – தெற்கு வட்டகை – காரைக்குடி – 630313
42. செவ்வூர் – மேலவட்டகை – திருப்புத்தூர் – 622417
43. சொக்கநாதபுரம் – தெற்குவட்டகை – சிவகங்கை – 630313
44. சொக்கலிங்கம்புதூர் – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630101
45. சோழபுரம் – தெற்குவட்டகை – சிவகங்கை – 630503
46. தாணிச்சாவூருணி – கீழவட்டகை – தேவகோட்டை – 630314
47. தேவகோட்டை – கீழவட்டகை – தேவகோட்டை – 630302
48. தேனிபட்டி – கீழப்பத்தூர் – திருமயம் – 622202
49. நடராசபுரம் – தெற்குவட்டகை – காரைக்குடி – 630555
50. நற்சாந்துபட்டி – மேலப்பத்தூர் – திருமயம் – 622404
51. நாச்சியாபுரம் – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630207
52. நாட்டரசன்கோட்டை – தெற்குவட்டகை – சிவகங்கை – 630556
53. நெற்குப்பை – மேலவட்டகை – திருப்புத்தூர் – 622405
54. நேமத்தான்பட்டி – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630103
55. பட்டமங்கலம் – தெற்குவட்டகை – திருப்புத்தூர் – 630310
56. பலவான்குடி – பதினாறூர்வட்டகை – காரைக்குடி – 630208
57. பள்ளத்தூர் – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630107
58. பனங்குடி – தெற்கு வட்டகை – காரைக்குடி – 630555
59. பனையப்பட்டி – மேலப்பத்தூர் – திருமயம் – 622406
60. பாகனேரி – தெற்குவட்டகை – சிவகங்கை – 630558
61. புதுப்பட்டி – மேலப்பத்தூர் – திருமயம் – 622408

Koviloor Digital Library

62. புதுவயல் – பதினாறூர்வட்டகை – காரைக்குடி – 630108
63. பூலாங்குறிச்சி – மேலவட்டகை – திருப்புத்தூர் – 622413
64. மகிபாலன்பட்டி – மேலவட்டகை – திருப்புத்தூர் – 630217
65. மதகுபட்டி – தெற்குவட்டகை – சிவகங்கை – 630553
66. மானகிரி – பதினாறூர்வட்டகை – காரைக்குடி – 630307
67. மிதிலைப்பட்டி – மேலப்பத்தூர் – திருமயம் – 622409
68. முத்துப்பட்டணம் (ஆத்தங்குடி) – பதினாறூர் வட்டகை – காரைக்குடி – 630101
69. மேலைச்சிவபுரி – மேலப்பத்தூர் – திருமயம் – 622403
70. வலையபட்டி – மேலப்பத்தூர் – திருமயம் – 622411
71. விராமதி – மேலவட்டகை – திருப்புத்தூர் – 630212
72. விரையாச்சிலை – மேலப்பத்தூர் – திருமயம் – 622412
73. வெற்றியூர் – தெற்குவட்டகை – காரைக்குடி – 630305
74. வேகுப்பட்டி – மேலப்பத்தூர் – திருமயம் – 622408
75. வேந்தன்பட்டி – மேலப்பத்தூர் – திருமயம் – 622419

செந்தமிழன், சுப., (12-1-1950)

மாத்தூர் - உறையூர்
சோழபுரம்
இதழாளர்

இராம. சுப்பிரமணியன் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். சிவகங்கை அரசர் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்பொழுது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டார். பின்னர் விடாமுயற்சியுடன் தொடர்ந்து படித்து பி.ஏ. பட்டம் பெற்றார். பெற்றோர் இட்ட பெயராகிய 'சுப்ரமணிய'னைத் தமது தமிழுணர்வின் காரணமாகச் செந்தமிழன் எனச் சட்டப்படி மாற்றிக்கொண்டார். சென்னையிலிருந்து வெளிவந்த 'ஒன்றே முக்கால் பக்க ஏடு' என்னும் இதழில் சிலகாலம் பணியாற்றியபின் 1987இல் 'நகரத்தார் இதழ்' (து.க.) என்னும் மாத இதழைத் தொடங்கித் தொடர்ந்து நடத்தி வருகிறார். நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, சிவகங்கை நகர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் ஆகியன இவர் எழுதிய நூல்கள்.

செந்தமிழ் நிலையம்

கடியாபட்டியில் வைரவன் கோவில் பிள்ளையார் வகுப்பைச் சேர்ந்த ஆர்.எம்.எஸ். சுப்பையா செட்டியாரால் தொடங்கி நடத்தப் பெற்ற பதிப்பகம்.

பாரதிதாசன் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிட்டு அவற்றைத் தமிழ்நாடெங்கும் பரப்பிய பெருமை இப்பதிப்பகத்தைச் சாரும். பாவேந்தரின் நூல்களை வெளியிடும் உரிமையை முதன்முதலில் பெற்றிருந்தவர் தேவகோட்டையைச் சேர்ந்த முல்லை முத்தையா. அவரிடமிருந்து உரிமை முழுவதையும் செந்தமிழ் நிலையம் பெற்றுக்கொண்டது.

1. பாரதிதாசன் கவிதைகள் – முதல் தொகுதி
2. பாண்டியன் பரிசு
3. அழகின் சிரிப்பு
4. தமிழியக்கம்
5. காதல் நினைவுகள்
6. நல்ல தீர்ப்பு
7. அமைதி
8. குடும்பவிளக்கு.

ஆகிய 8 நூல்களையும் செந்தமிழ் நிலையம் வெளியிட்டுப் பல பதிப்புக்கள் அச்சிட்டது. இப்பதிப்பக உரிமையாளர் சுப்பையா செட்டியார் பாவேந்தர் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு அவை பரவுவதற்கு வகை செய்தவர்களில் முதல் வரிசையர்.

செம்பனூர்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல் வழியாக 27 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துளது.

இவ்வூரில் நேமங்கோவிலைச் சேர்ந்த 75 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

பழமையானதும் சிவகங்கை அரச குடும்பத்துக்கு உரியதுமான நித்தியகல்யாணி அம்பாள் உடனாய கண்டீசுவரர் கோவிலை இவ்வூர் கும.நா. குடும்பத்தார் திருப்பணி செய்து 27.4.1902இல் குடமுழுக்குச் செய்தனர். இப்போது இக்குடும்பத்தின் வழிவந்த கும.நா.சுப.நா. மாணிக்கம் செட்டியாரையே சிவகங்கை அறநிலையம் இக்கோவிலின் நிருவாக அறங்காவலராக ஆக்கியுளது.

நகரத்தாரால் கட்டப்பெற்று கும.நா.நா.சா.நா. குடும்பத்தாரால் நிருவகிக்கப்பெற்று வரும் ஐந்நூற்றீசுவரர் விநாயகர் கோவிலும்,

Koviloor Digital Library

ஊர்பொதுக் கோவிலான முத்து நாச்சியம்மன் கோவிலும், இவ்வூர் நகரத்தாராலும், தேவகோட்டை மெ.லெ.மெ. இராமநாதன் செட்டியாராலும் கட்டப்பெற்ற சுந்தரராசப் பெருமாள் கோவிலும் இவ்வூரில் உள. ஒரு குடிதண்ணீர் ஊருணி உளது.

சுப.கா. காசிவிசுவநாதன் செட்டியார் நன்கொடையாக வழங்கிய இடம், கட்டிடத்தில் மெய்யம்மை – காசி கழக உயர்நிலைப் பள்ளியையும், கும.நா.நா.சா.நா. குடும்பத்தார் நன்கொடையாக வழங்கிய இடம், கட்டிடத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் ஊராட்சிமன்றம் நடத்திவருகிறது.

செம்பனூர், கல்லல் நேமங்கோவில் பங்காளிகள் *4* ஆண்டுகட்கொருமுறை செம்பனூரில் கூடித் தீப்பாய்ந்த அம்மன் படைப்பை 7 நாள் பொதுப்படைப்பாகப் படைத்து வருகின்றனர்.

செல்லப்பன், க.அ., (ஜூலை, 1920)

இரணிக்கோவில்
அரிமழம்
பதிப்பாளர்

இராம.க. அடைக்கப்ப செட்டியார் – அழகம்மை ஆச்சியின் மகன். பாரிநிலையம் செல்லப்பன் என்ற பெயரால் தமிழகம் முழுவதும் புகழ்பெற்றவர். தமிழகத்தின் முன்னோடிப் பதிப்பாளர்களில் மூத்தவர். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, டாக்டர் மு.வ., அறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கு. ராசவேலு, வசுப. மாணிக்கனார் ஆகியோரின் நூல்களைத் தமிழகத்தின் பட்டி தொட்டியெங்கும் பரப்பிய பெருமை இவருக்குண்டு. இவரே எழுத்தாளராகச் சில நூல்கள் எழுதி வெளி யிட்டுள்ளார்.

*1946*இல் இவர் தொடங்கிய ‘பாரிநிலையம்’ ஏறத்தாழ *1000* நூல்களை வெளியிட்டுள்ளது. ‘உலகநாடுகள் வரிசை’ என இவர் வெளியிட்ட நூல்கள் புகழ்பெற்றவை. சென்னையில் தமிழறிஞர்கள் கூடும் இடமாகவும், திராவிட இயக்கத் தலைவர்கள் தொடக்க காலத்தில் கூடும் இடமாகவும் விளங்கிய பாரிநிலையம் திராவிட இயக்க வரலாற்றிலும் இடம்பெற்றுள்ளது. புத்தக வெளியீடு பற்றிய திரைப்படம் ஒன்றிலும் இவர் நடித்துள்ளார்.

காப்பித் தோட்டம், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிலும் முதலீடு செய்துள்ளார். விளம்பரம் இன்றிப் பிறருக்கு உதவுகின்ற இயல்புடையவர். கோவில்கள், பள்ளிகள், கல்லூரிகட்கு நிறையத் தருமம் செய்துள்ளார். எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை, பெருமை தரத்தக்க செயற்பாடு ஆகியவற்றின் மொத்த வடிவம் பாரிநிலையம் செல்லப்பன் ஆவார்.

செல்லப்பன், செ., (4-5-1922 - 7-11-1996)

இரணிக்கோவில்
அரிமழம்
பதிப்பாளர்

செல்லப்ப செட்டியார் – அடைக்கம்மை ஆச்சியின் மகன். இவரது உறவினர்களின் புத்தக வெளியீட்டு நிறுவனமான ஸ்டார் பிரசுரத்தின் சென்னைக் கிளையில் *1949*இலிருந்து பணியாற்றினார். ஓரிரு ஆண்டுகட்குப்பின், அந்நிறுவனத்தின் பங்குதாரரானார். *1953*இல் இந்நிறுவனத்தின் மதுரைக் கிளையைத் தொடங்கி நிருவகித்தார் செல்லப்பன்.

*1960*இல் ஸ்டார் பிரசுரத்திலிருந்து விலகிய செல்லப்பன், குழந்தையன் செட்டியாருடன் இணைந்து மீனாட்சி புத்தக நிலையம் எனும் புத்தக வெளியீட்டு நிறுவனத்தை மதுரையில் தொடங்கினார். பல ஆண்டுகட்குப் பின்னர் குழந்தையன் செட்டியார், மீனாட்சி புத்தக நிலையத்திலிருந்து விலகி ஐந்திணைப் பதிப்பகத்தைத் தொடங்கினார். மீனாட்சி புத்தக நிலையம் செல்லப்பனின் தனி நிறுவனமாயிற்று.

மீனாட்சி புத்தக நிலையத்தின் முதல் வெளியீடாக, டாக்டர் மொ.அ. துரை அரங்கசாமி எழுதிய ‘அன்பு நெறியே தமிழர் நெறி’ எனும் நூலை வெளியிட்டார் செல்லப்பன். தொடர்ந்து ஜெயகாந்தன், தொ.மு.சி. இரகுநாதன், தி. ஜானகிராமன், எஸ். இராமகிருட்டிணன், புதுமைப்பித்தன் ஆகியோர் நூல்களை மீனாட்சி புத்தக நிலையம் வெளியிட்டது.

மீனாட்சி புத்தக நிலைய வெளியீடுகளில், ஜெயகாந்தனின் ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’, தி. ஜானகிராமனின் ‘சக்தி வைத்தியம்’, தொ.மு.சி. இரகுநாதனின் ‘பாரதி காலமும் கருத்தும்’ ஆகிய நூல்களுக்குச் சாகித்திய அக்காதமி விருதும், ஜெயகாந்தனின் ‘சுந்தரகாண்டம்’ நூலுக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருதும் கிடைத்துள்ளன.

நூல் வெளியீட்டில் சிறப்புப் பெற்ற செல்லப்பன் சமூகத் தொண்டிலும் ஈடுபட்டார். *1956* முதல் *1958* வரை மதுரை நகரத்தார் சங்கச் செயலராகவும், *1973–74* இல் இராமநாதபுரம் வணிகக் கழகப் பொருளாளராகவும், *1976–77* இல் அதன் துணைத் தலைவராகவும், *1977–78* இல் மதுரை அரிமா சங்கத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

Koviloor Digital Library

செல்லப்பன், செ.மெ., (10-4-1931)

இளையாத்தங்குடி - கிண்கிணிக்கூருடையார் இராயவரம்

பதிப்பாளர், அரிமா ஆளுநர்

செ.மெ. மெய்யப்ப செட்டியார் – கண்ணம்மை ஆச்சியின் மகன். பழனியப்பா சகோதரர்கள் புத்தக நிலைய நிறுவுநராகவும் அரிமா மாவட்ட ஆளுநராகவும் தமிழ்த்தொண்டும் சமூகத் தொண்டும் செய்து புகழ்பெற்றுள்ளார். யுடிலிட்டி நிதி நிறுவனம், ஏசியன் அச்சகம் ஆகிய நிறுவனங்களின் தலைவர் ஆவார்.

1977–78ஆம் ஆண்டில் அரிமா மாவட்டம் 324Aயின் ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்தார். 14 அரிமா சங்கங்களைத் துவக்கியமை இவரது சாதனையாகும். கிராம ஏற்புத் திட்டத்தை அரிமா இயக்கத்தில் பரப்பினார். திருச்சிராப்பள்ளி நகரத்தார் சங்கத் தலைவராகவும் சமூகத் தொண்டு புரிந்துள்ளார். பிள்ளையார்பட்டியில் நகரத்தார் சங்கத்தின் சார்பாகக் கூட்டுத் திருமணங்கள் நிகழ இவர் முன்னின்று பணிசெய்தார். பாடநூல்களில் இவர் பல கட்டுரைகளும் ஆங்கிலத் துணைப்பாட நூல்களும் எழுதியுள்ளார்.

இவர் வெளியிட்ட பல நூல்கள் தமிழக அரசின் பாராட்டும் பரிசும் பெற்றுள்ளன. யுனெஸ்கோவின் சார்பான புத்தக வெளியீட்டுக் கருத்தரங்கில் இவர் பங்குகொண்டமை இவரது பதிப்புப் பணிக்குக் கிடைத்த பரிசாகும். அனைத்துலக அரிமா தலைவர் இவருடைய சமூகசேவையைப் பாராட்டிப் பல சிறப்பு விருதுகள் வழங்கியுள்ளார்.

செவ்வூர்

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர், கண்டவராயன்பட்டி வழியாக 40 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

சூரக்குடி, இரணிக்கோவில் ஆகிய 2 கோவில்களைச் சேர்ந்த 184 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இது, திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

நகரத்தார் ஸ்ரீ மீனாட்சி சொக்கலிங்கம் திருக்கோவில் நகரச் சிவன்கோவிலாகும். இங்குள்ள லிங்கம் புதுக்கோட்டை மாவட்டம் கொடும்பாளூரிலிருந்து செவ்வூர் முபெ.ராம. இராமநாதன் செட்டியாரால் கொண்டுவரப்பட்டு வாலஸ்தாபனத்தில் வைத்துப் பூசைகள் 1920 முதல் நடைபெற்றது. சுவாமி, அம்மன் கல்மண்டபம் இரண்டும் சொ.ராம. சொக்கலிங்கம் செட்டியாராலும் இதர மண்டபங்கள் நகரத்தார்களாலும் கட்டப்பெற்று 21–4–1932 அன்று முதற் குடமுழுக்கு விழா நடைபெற்றது. பின்னர் 31–5–1964, 11–11–84 ஆகிய நாட்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. சுப்பிரமணியர் கோவில் கும. இராமநாதன் செட்டியார் என்ற கதிரேசன் செட்டியாரால் கட்டப்பெற்று 40 ஆண்டுகளுக்கு முன் நகரத்தாரிடம் ஒப்புவிக்கப் பெற்றது. ரோட்டுப் பெருமாள் கோவில் என்னும் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் 1994இல் நகரத்தார்களால் திருப்பணி செய்யப்பெற்றது. சிவன்கோவில் எதிரில் மு.கும.பெரி. குடும்பத்தாரால் வெட்டப்பெற்ற ஊருணி உள்ளது.

சோணையன்கோவில் படைப்பு இவ்வூரில் சிறப்புப் பெற்ற படைப்பாகும். படைப்பு வீடு உள்ளது. இவ்வூர்ச் சூரக்குடிக் கோவிலாரும் பூலாங்குறிச்சி, வேகுப்பட்டி, மிதிலைப்பட்டி, பனையப்பட்டி, நெற்குப்பையிலுள்ள பங்காளிகளும் சேர்ந்து இரண்டு வருடத்துக்கு ஒருமுறை சித்திரை மாதம் கடைசி வெள்ளிக் கிழமையன்று நெற்குப்பை ஆற்றங்கரை யிலிருக்கும் ஓமக்காடய்யனான் கோவிலிலுள்ள சோணையன் கோவில் போய் அங்கே உள்ள தேவதைகளுக்கு அபிஷேகம் செய்தும் பலி கொடுத்தும் அன்று இரவு பூசை முடித்துக் கொண்டு ஊர்திரும்பி மூன்று நாள் படைப்பு நடத்துகின்றனர்.

மு.கும.பெரி.பழ. குடும்பத்தாரால் 8 நாட்கள் இராமாயணம் படிக்கப்படுகின்றது. சுப்பிரமணியர் கோவிலில் 2 ஆண்டுகட்கு ஒருமுறை மகேசுவர பூசை நடைபெறும். ரோட்டுப் பெருமாள் கோவிலில் புரட்டாசிச் சனிக்கிழமையன்று நகரத்தார் பொதுவில் அன்னதானம் செய்யப்படுகின்றது.

கும.பெரி. பழநியப்ப செட்டியார் குடும்பத் தாரால் பள்ளிக்கூடம் கட்டப்பட்டு அரசினர் பள்ளியாக பழநியப்பன் – சானகி ஆச்சி நடுநிலைப்பள்ளி என்ற பெயருடன் 1 முதல் 8 வகுப்புக்கள் வரை நடைபெற்று வருகின்றன.

ஆத்திரம்பட்டியிலும் மலம்பட்டியிலும் செ.இராம. குடும்பத்தார் பள்ளியும் கிணறும் அமைத்துள்ளனர். மு.கும.பெரி. சிதம்பரம் செட்டியார் நினைவைப் போற்றும் வகையில் அன்னார் மகன் இரத்தினம் என்ற பெரியகருப்பன் செட்டியார் தொடக்கப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டிக் கொடுத்துள்ளார். மலம்பட்டிப் பிள்ளையார்

Koviloor Digital Library

கோவில் குமஇராமநாதன் செட்டியாரால் கட்டப்பெற்றதாகும். பாடுவார் முத்தப்பர் செவ்வூரார்மீது சினங்கொண்டு முதலில் பாடியதாகவும் பின்பு அவரே அதை மாற்றிப் பாடியதாகவும் கர்ணபரம்பரைக் கதைகள் நிலவுகின்றன.

சென்னையில் ஆறுபடை வீடு

கானாடுகாத்தானைச் சேர்ந்த டாக்டர். அழகப்பா அழகப்பன், (துக) சென்னையில், ஒரே இடத்தில், முருகனின் ஆறுபடை வீடுகளையும் மக்கள் வணங்கி மகிழும் வண்ணம் கல் திருப்பணி செய்ய வேண்டும் என்று விரும்பினார். 1982 இல் காஞ்சி பரமாச்சார்ய சாமிகளிடம் தன் எண்ணத்தை வெளியிட்டார். அவரும் அருளாசி வழங்கினார்.

'ஆறுபடை வீடுகள் அறநிலை' ஒன்று அமைக்கப் பெற்றது. அழகப்பா அழகப்பன் அதன் தலைவர். பெசண்ட் நகரில் இடம் வாங்கி 29-1-1993 இல் பூமி பூசைசெய்து, ஆறுபடைவீடுகட்கு ஆறு கோவில்களும் நடுநாயகமாக நியூயார்க் மகா வல்லபகணபதி திருக்கோவிலும் உருவாக்கப் பெற்றன.

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை, கணபதி திருக்கோவில் ஆகியவற்றை, பத்ம ஸ்ரீ முத்தையா ஸ்தபதி உருவாக்கித் தர 23-1-1995 அன்று குடமுழுக்கு நிகழ்த்தப் பெற்றது.

ஆறுபடை வீடுகளையும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் வணங்கி மகிழும் வண்ணம் கற்கோவில் எழுப்பியுள்ளமை, நகரத்தார் ஆலயத் திருப்பணி வரலாற்றில், ஒரு குறிப்பிடத்தக்க புதிய திருப்பணி ஆகும்.

சேக்கிழார் விழா

சேக்கிழார் விழா 1947ஆம் ஆண்டு, சர்வசித்து வருடம் வைகாசித் திங்களில் தேவகோட்டையில் தொடங்கப்பெற்றது. தமிழகத்திலேயே தேவகோட்டை நகரச் சிவன்கோவிலில்தான் சேக்கிழார் பெருமானுக்குத் தனிக் கருவறையுடன் கூடிய சன்னதி அமைந்துள்ளது. சேக்கிழார் திருக்கோவிலுக்கு வாங்கப்பட்ட இடத்தில்தான் நகரச்சிவன் கோவிலே அமைந்துள்ளது. இலுப்பைக்குடிக் கோவிலைச் சார்ந்த தேவகோட்டை வன்றொண்டச் செட்டியார் சேக்கிழார் பெருமானிடத்துக் கொண்டிருந்த எல்லையற்ற அன்பினால் அப்பெருமானுக்குக் கோவில் கட்ட இடம் வாங்கி, அதற்கான மணி முதலியவற்றையும் தருவித்து வைத்திருந்தார். வார்ப்பு வேலையில் அந்தக் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த செய்கோனிலிருந்து வரவழைக்கப் பட்ட அந்த மணியில் 'சேக்கிழார் திருக்கோவில்' என்று பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. இன்று அந்த மணி தேவகோட்டை நகரச் சிவாலய மணியாகவுள்ளது.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடுவதற்காகவே வன்றொண்டச்செட்டியாரின் வேண்டுகோளை ஏற்றுத் தேவகோட்டைக்கு வந்து பிள்ளைத்தமிழ் பாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்நாளில் தேவகோட்டையில் நகரச் சிவன்கோவில் இல்லாததால் நகரவாசிகள் அனைவரும் கண்டதேவி, இரவுசேரிக் கோவில்களுக்குத்தான் சிவவழிபாட்டுக்குச் செல்லும்படியாக இருந்தது. தேவகோட்டை நகரத்தார் பெருமக்கள் பலர் நகரத்தில் சிவன்கோவில் இல்லாத குறையை அகற்ற வேண்டும் என்று கருதிச் சிற்பநூல் முறைப்படி சிவாலயம் நகரத்தின் ஈசான மூலையில் இருக்கவேண்டும்; ஆதலால் அதற்குத் தகுதியான இடம் சேக்கிழார் திருக்கோவிலுக்கு வாங்கிய இடமே என்று முடிவுசெய்து, வன்றொண்டரிடம் அந்த இடத்தை உரிய விலை பெற்றுக்கொண்டு சிவன்கோவிலுக்குத் தரவேண்டும் என்று கேட்டார்கள். வன்றொண்டர் அவர்களது விருப்பத்தை ஏற்று அந்த இடத்தைச் சிவன்கோவிலுக்கு விலைபெறாது தருவதாகவும் அதில் அமைக்கும் சிவன்கோவிலில் .சேக்கிழார் பெருமானுக்குத் தனிக் கருவறையுடன் ஒரு கோவில் அமைத்துக் கோவிலிலும் பரிவார மூர்த்திகளுக்குப் போல அல்லாமல் மூலத்தான மூர்த்திகளுக்குப் போல் எல்லாக் காலப் பூசைகளும் நடத்திவர ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்க, அதற்கு நகரத்தார் இசைவளித்துக் கோவிலைக் கட்டிக் குடமுழுக்குவிழாச் செய்வித்தார்கள். இத்திருக்கோவிலில் உள்ள சேக்கிழார் பெருமான் திருவுருவம் அவரது அவதாரத் தலமாகிய குன்றத்தூர் மலையிலிருந்து கொண்டுவந்த கல்லில் அமைக்கப்பெற்றது.

சேக்கிழாருக்கெனத் தனிக்கோவில் அமைக்கப்பட்டுள்ள தேவகோட்டை நகரச் சிவன்கோவிலில் சேக்கிழாருக்கு விழா எடுக்கச் சேக்கிழார் திருநாட் கழகம் 1947இல் தோற்றுவிக்கப்பெற்றது. இக்கழகத்திற்குத் தமிழ்வள்ளல் சேவு. மெய்யப்ப செட்டியார் தலைவராகவும் பாலகவி. இராமநாதன் செட்டியார் அமைச்சராகவும் வன்றொண்டர் பரம்பரையில் வந்த தமிழ்ப்புலவர் கரு.ராம.சோம. இராமநாதன் செட்டியார் செயலராகவும் இருந்து சேக்கிழார் விழாவைச் சிறப்புற நடத்தினார்கள். சேக்கிழார் விழா வைகாசி மாதம் திருவாதிரை

Koviloor Digital Library

நாளில் தொடங்கிப் பூச நாளில் நிறைவுபெறும். சேக்கிழார் பெருமான் முத்திபெற்ற வைகாசிப் பூச நாளே சேக்கிழார் திருநாளாகும். அன்று சேக்கிழார்பெருமான் அறுபான் மும்மை நாயன்மார்களுக்குச் சிறப்பான பூசனை வழிபாடுகளும் இரவில் பெரியபுராணத் திருமுறையுடன் வெள்ளி யானை வாகனத்தில் சேக்கிழார் பெருமான் திருவீதி உலாவும் நடைபெறும். மூன்று நாட்களும் சொற்பொழிவுகள், சமயவிரிவுரைகள் நிகழும். தொடக்கவிழா நாளில் திருத்தொண்டர் புராணத்துக்கு விளக்கவுரை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்திய சிவக்கவிமணி. சி.கே. சுப்பிரமணிய முதலியார் தலைமை தாங்கினார். அவரது உரை வெளியீட்டிற்குத் துணை செய்த மூவரில் பழனி ஈசான சிவாசாரியார் சேக்கிழார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்; பண்டிதமணி தொடக்க உரையாற்றினார்; இலக்கணம் முத்துக்குமரத் தம்பிரான் வாழ்த்துரை வழங்கினார்.

இடையில் சில ஆண்டுகள் நின்றுவிட்ட இவ்விழா 1990 முதல் லெ. அழகப்ப செட்டியார் தலைவராகவும் டாக்டர் சபா. அருணாசலம் செயலராகவும் சேது. அருணாசலம் பொருளாளராகவும் தொண்டாற்றும் சேக்கிழார் விழாக் குழுவினரால் தொடர்ந்து சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது.

சேது நாராயணன், டாக்டர். இராம., (6-3-1924)

சூரக்குடி
காளையார் மங்கலம்
கல்வியாளர்

உல.வ.வ. இராமநாதன் செட்டியார் – கண்ணாத்தாள் ஆச்சியின் மகன். இவர் பள்ளியிறுதியாண்டு வரை பர்மாவில் படித்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறைப் பட்டம் பெற்றார். இங்கிலாந்தில் மேற்படிப்பின் வாயிலாக டி.ஐ.சி. பட்டமும், ஆய்வு வாயிலாக எம்.எஸ்சி. பட்டமும் பெற்றார். உயர்கல்வி முழுவதற்கும் திறமைக்காக வழங்கப்பெறும் நிதி உதவி பெற்றுப் பயின்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தாம் பயின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1949இல் பொறியியல் துறை விரிவுரையாளராகச் சேர்ந்த இவர் 1990 வரை 41 ஆண்டுகள் பல்வேறு நிலைகளில் பணியாற்றினார். 23 ஆண்டுகள் சிவில் மற்றும் ஸ்டிரக்சுரல் பிரிவின் பேராசிரியராகப் பணியாற்றிய இவர், 1979 முதல் 8 ஆண்டுகள் பொறியியல் புல முதல்வராகப் பணியாற்றினார். 1985இல் சில மாதங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிகழ்நிலைத் துணை வேந்தராகப் பொறுப்பேற்றுச் செயலாற்றிய இவர் 1987 முதல் 1990 முடிய அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றினார்.

நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும் நடைபெற்ற பொறியியல் மற்றும் உயர்கல்வி குறித்த கருத்தரங்குகளில் பங்கேற்று, ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றைப் படைத்துள்ளார். கோலாலம்பூரில் நடைபெற்ற 6ஆவது உலகத் தமிழ்மாநாட்டில் ‘வளர் தமிழ்’ என்ற கட்டுரையை அளித்தார். பின்னர் இது நூல் வடிவில் வெளியிடப்பட்டது.

முன் அழுத்தம் பெற்ற கான்கிரீட் கம்பங்களின் திறனை மதிப்பிடுவதற்கு இவர் கண்டுபிடித்த சமன்பாட்டிற்குச் சேதுநாராயணன் சமன்பாடு என்று பெயர் வழங்கிப் பொறியியல் துறை சிறப்பித்துள்ளது. இயற்பியல் துறையில் ‘இராமன் எஃபெக்டு’ என ஒரு செயல்முறையை உருவாக்கியவர் சர்.சி.வி. இராமன். அதுபோலப் பொறியியல் துறையில் சேதுநாராயணன் சமன்பாட்டை உருவாக்கியவர் இவர்.

1983இல் தமிழக அரசு, பல்கலைக்கழக நல்லாசிரியர் விருதினை இவருக்கு வழங்கியது. 1989இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அதன் வைரவிழாவில் இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டமாகிய டி.லிட். பட்டத்தை வழங்கியது.

உயர்கல்வித் துறையிலும், பொறியியல் துறையிலும் சாதனைகள் படைத்த இவர், தம் சொந்த ஊரான காளையார்மங்கலத்தில் பல சமுதாயப் பணிகளையும் செய்துள்ளார். அவ்வூரிலுள்ள சிவன்கோவில், ஐயனார் கோவில், பூமாத்தாள் கோவில் ஆகிய மூன்று கோவில்களையும் புதுப்பித்துத் திருக்குட நன்னீராட்டு நடத்தியதில் பெரும் முயற்சி இவருடையதாகும். அவ்வூருக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமையவும் இவர் காரணம் ஆவார்.

தாம் பயின்ற பல்கலைக் கழகத்திலேயே, பல்லாண்டுகள் பணியாற்றி, படிப்படியாக உயர்ந்து, அப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்ற நிலையை அடைந்த தனிச்சிறப்புடைய நகரத்தார் இவர்.

Koviloor Digital Library

சேதுராமன், சி., (7-6-1930)

மாத்தூர் - அரும்பாக்கூர்
சொக்கநாதபுரம்
சட்டமன்ற உறுப்பினர்

இலங்கையில் பள்ளி இறுதி வகுப்புவரை கல்வி பயின்றவர். இளமையிலேயே தி.மு.க.வில் சேர்ந்து பொதுக்குழு உறுப்பினர் நிலைவரை வளர்ந்தவர். தி.மு.கவின் சார்பில் சொக்கநாதபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக ஒருமுறையும் காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியத் துணைத்தலைவராக ஒருமுறையும் இருந்துள்ளார். 1967இல் சிவகங்கைத் தொகுதியிலிருந்து சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

சொக்கநாதபுரம்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், செம்பனூர் வழியாக 32 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், பிள்ளையார்பட்டி ஆகிய 3 கோவில்களைச் சேர்ந்த 240 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

நகரத்தாருக்குரிய பொதுக்கோவிலாகக் கற்பக விநாயகர் கோவில் இவ்வூரில் அமைந்துள்ளது. சிவகங்கை மன்னர் குடும்ப அறநிலையத்திற்குச் சொந்தமான சிறுதேன் மொழியம்மை – திருக்கண்டீச்சுரர் கோவில் என்ற சிவன் கோவிலும் இவ்வூரில் உள்ளது. இக்கோவி லின் திருப்பணியை நகரத்தார்கள் செய்துளர். இக்கோவிலில் இறைவன் சன்னதி மேற்குப் பார்த்ததாக அமைந்திருக்கிறது. சிவன் கோவில் ஊருணி நகரத்தாரால் உருவாக்கப்பெற்றது.

இவ்வூரிலுள்ள நகரத்தார் மடத்தில் ஆண்டுதோறும் ஆடிமாதம் முதல் திங்கட்கிழமை வேற்பூசை செய்யப்படுகிறது. இளையாத்தங்குடி பட்டினசாமிப் பிரிவைச் சேர்ந்த நகரத்தார் ஒருவர் இல்லத்தில் (கீழவீடு) ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் 10 நாட்கள் இராமாயணம் படிக்கப்படுகிறது.

சொக்கலிங்க ஐயா, இராம., (8-8-1856 - 14-12-1930)

பிள்ளையார்பட்டி
காரைக்குடி
சைவசித்தாந்த வித்தகர்

காரைக்குடியில் யாழ்ப்பாணத்தார் வீட்டில் இராம.கு. இராமநாதன் செட்டியார் – முத்துக்கருப்பி ஆச்சியின் இரண்டாவது மகனாகத் தோன்றினார். தேவகோட்டை வன்றொண்டர் நாராயணன் செட்டியார், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், அவரது மருமகனாகிய பொன்னையாபிள்ளை, மதுரை ஐயா எனப் புகழ்பெற்ற காரைக்குடி அரு.மெ. மெய்யப்ப சுவாமிகள் ஆகியோரிடம் இலக்கண, இலக்கிய, சைவ சித்தாந்தப் பாடம் கேட்டுத் தேர்ந்தார்.

காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர வித்தியாசாலை தொடங்கப்படுவதற்கு முதல் முயற்சி செய்தவர்களில் சொக்கலிங்க ஐயாவும் ஒருவர். இவர் சிதம்பரத்தில் 1923இல் ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை என்ற சித்தாந்தக் கல்வி நிலையத்தை உருவாக்கினார்.

ஆச்சாள்புரம் எனப்படும் திருநல்லூர்ப் பெருமணத்தில் இவர் சில ஆண்டுகள் வாழ்ந்தார். அப்போது நகரத்தார்களின் பொருளுதவியோடு குருபூசைமடம், தேவாரபாடசாலை, ஆகம பாடசாலை, வேதபாடசாலை, பசுமடம், திருநந்தவனம் முதலியவற்றை அங்கு அமைத்தார்.

பெரியபுராணத்தின் நுட்பங்களை விரித்துரைத்துப் பாடம் சொல்லுவதில் இவர் வல்லவர். இவரிடம் சைவ சித்தாந்தப் பாடம் கேட்ட மாணவர்கள் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பண்டிதமணி, தமிழ்க்கடல், பாலகவி ஆகியோர்.

இவர் புராணம், பதிகம், மாலை, அந்தாதி, சிலேடை, வெண்பா, பிள்ளைத்தமிழ், சந்த விருத்தம், திருவூசல், மும்மணிக்கோவை முதலிய செய்யுள் நூல்களும், உரைநடை நூல்களுமாக 108 நூல்கள் எழுதியுள்ளார்.

கா.சு. பிள்ளையவர்கள் தம் இலக்கிய வரலாற்று நூலில் இவரைச் சிறப்பித்து எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சொக்கலிங்கம், இரா., (13-2-1959)

இலுப்பைக்குடி
பள்ளத்தூர்
அமைப்பாளர்

மதுரையில் விசயா பிரிண்டர்சு என்ற அச்சகத்தை நடத்திய கே. இராமன் – விசாலாட்சி ஆச்சியின் மூன்றாவது மகன். இவர் பள்ளி இறுதி வகுப்புவரை படித்தவர். தமது 15ஆவது வயதில் தந்தைக்குத் துணையாக அச்சுத்துறைக்கு வந்தவர்.

தமது 18ஆவது வயதில் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தார். அக்கட்சியின் போராட்டங்கள் பலவற்றில் பங்கேற்றுச் சிறைசென்றுள்ளார்.

1982 முதல் நகரத்தார் இளைஞர் சங்கத்தில் ஈடுபாட்டோடு செயல்படத் தொடங்கி, செயலர், துணைத்தலைவர், தலைவர் ஆகிய பொறுப்புக் களை ஏற்றுத் திறம்பட வழி நடத்தினார்.

Koviloor Digital Library

1986இலும், 1990இலும் மதுரையில் நகரத்தார் கையேடு வெளிவரப் பெரிதும் உழைத்தவர். 'நாநயா' என்ற அமைப்பு உருவாகப் பாடுபட்ட இவர் அதன் துணைத் தலைவருமாவார்.

1985இல் இவர் 'இளையர் இயக்க'த்தில் (ஜேஸீஸ்) உறுப்பினர் ஆனார். 1995 முதல் மதுரை நகரத்தார் சங்கச் செயலராகப் பணியாற்றினார்.

1990இல் மாநில ஜேஸீஸ் மாநாட்டில் மூன்று விருதுகளையும், 1991ஆம் ஆண்டு அமுதசுரபி கலைமன்றம் வழங்கிய சிறந்த சேவைக்கான விருதினையும், 1991இல் நகரத்தார் இளைஞர் தின விழாவில் சிறந்த நகரத்தார் இளைஞர் விருதினையும், 1994இல் தமிழ்நாடு நுகர்வோர் உரிமைக் கழகத்தின் விருதினையும் பெற்றுள்ள இவர், 'மனிதத் தேனீ', 'நட்புத் தென்றல்' என்ற பட்டங்களையும் பெற்றுள்ளார்.

காலத்தே செயல்படுவது, அனைவரையும் ஒருங்கிணைத்துச் செல்வது, இனப்பற்று, சுறுசுறுப்பு, சொன்னதைச் செய்யும் இயல்பு, பேச்சைவிடச் செயல்பாடுகளில் நம்பிக்கை ஆகிய இவரது தலைமைப் பண்புகள் இவர் வாழ்க்கையில் முன்னேறவும், இனத்தை முன்னேற்றப் பாடுபடவும் இவருக்குத் துணை செய்கின்றன.

சொக்கலிங்கம், கருமுத்து., சு. (29-4-1943 - 30-5-1997)

மாத்தூர் - மணலூர்
ஆ. தெற்கூர்
ஆலை அதிபர், திருப்பணிச் செல்வர்

கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் – அலமேலு ஆச்சியின் மகன். மின் பொறியியல் துறையில் பட்டம் பெற்றவர். அமெரிக்காவில் ஜெனரல் மோட்டார்ஸ் கார்ப்பரேசனில் நிருவாகப் பயிற்சியும் இயந்திரவியல் பயிற்சியும் பெற்றவர். சுவீடன் நாட்டுக் கோடக் நிறுவனத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர். மதுரை சிவகாமி நூற்பாலையின் நிருவாக இயக்குநர். மதுரையில் முன்னோடியாகக் கணிப்பொறி மையத்தைத் தம் வளாகத்தில் தொடங்கிப் புதுமைக்கு வழி காட்டியாக விளங்கியவர்.

இவர் நிருவாகப் பணிகட்கிடையே சிவத்தொண்டு புரிவதையே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்ட சிவநேயச் செல்வர் ஆவார். சிதம்பரம் அருள்மிகு நடராசப் பெருமாள் சிவகாமியம்மை ஆலயத்திருப்பணியை இருமுறை முன்னின்று செய்துள்ளார். மற்றும் திருவானைக்காவல், திருமயிலை, சிக்கல், சீர்காழி, திருக்கோலக்கா, திருவெண்காடு, திருச் சேய்ஞலூர், திருவாப்பாடி, திருவுத்தரகோச மங்கை, காவிரிப்பூம்பட்டினம் கோவில்களுக்கும் பெரும்பொருள் நன்கொடை வழங்கித் திருப்பணி செய்துள்ளார்.

சிதம்பரம் சபாநாயகர் திருக்கோவில் திருப்பணிக்குழு உபதலைவராகவும் விஸ்வ ஹிந்து பரீட்சத்தின் துணைத் தலைவராகவும் தொண்டாற்றியுள்ளார். நகரத்தார் ஆண்கள் குருபீடம் பாதரக்குடி சுவாமிகள் இவருக்கு 'அருட்பணி அண்ணல்' விருதும் மதுரை நகரத்தார் பக்திநெறி மன்றத்தார் 'திருப்பணிச் செம்மல்' என்ற விருதும் விசுவ இந்து பரீட்சத்தினர் 'தர்ம விபூசன்' விருதும் வழங்கி இவர் தொண்டினைச் சிறப்பித்துள்ளனர். சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் போல அண்மையில் வாழ்ந்த இறைபணியாளர் என்னும் புகழுடையார்.

சொக்கலிங்கம் செட்டியார், ஆறு.ஆ. இராம., (9-12-1900 - 8-2-1966)

மாத்தூர் - அரும்பாக்கூர்
காரைக்குடி
விடுதலைப் போராட்ட வீரர் - சட்டமன்ற உறுப்பினர்

ஆறு.ஆ. இராமநாதன் செட்டியார் – மெய்யம்மை ஆச்சியின் இரண்டாவது மகன். இவர் தம் இளவயதிலேயே தொழில் நிமித்தமாகச் சிங்கப்பூர் சென்றார். அங்குச் 'சேம்பர் ஆப் காமர்சி'ன் செயலராகவும், சாரண சங்கத்தின் தலைவராகவும், 'சிங்கப்பூர் தமிழர் இசைக் கழகத்'தின் தலைவராகவும் பணியாற்றிய போது இவரது பொது வாழ்க்கை தொடங்கியது.

1933ஆம் ஆண்டு காரைக்குடி மீ.சு. வித்தியாசாலையில் நடைபெற்ற செட்டிநாட்டுக் கதர் – சுதேசிப் பொருட்காட்சியின் வரவேற்புக் குழுத் தலைமைப் பொறுப்பை ஏற்றதன் வாயிலாகத் தேசிய விடுதலை இயக்கமாகிய காங்கிரசில் இவர் தம்மை இணைத்துக் கொண்டு, முனைப்புடன் செயல்படத் தொடங்கினார்.

அவ்வாண்டே இவர் காரைக்குடி நகராண்மைக் கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவர் தம் உறுப்பினர்ப் பணிக்காலத்தில் தம் சொந்தச் செலவில் காரைக்குடி – செக்காலையில் 'சொக்கலிங்கம் சுகாதார நிலையம்' என்ற நிலையத்தை 6–5–1937இல் அமைத்துக் கொடுத்தார். மேலும் நகராண்மைக் கழகம் நடத்திவரும் செவிட்டு ஊமைப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பத்து ஆண்டுகட்குத் தொடர்ந்து நாள்தோறும் காலை உணவினைத் தம் சொந்தச் செலவில் அளித்தார்.

Koviloor Digital Library

1942 ஆகஸ்டுப் போராட்டத்தின் போது சொக்கலிங்கம் செட்டியார் கைது செய்யப் பெற்று 2 ஆண்டுக்காலம் வேலூர்ச் சிறையிலும், ம.பி.யில் உள்ள அமராவதிச் சிறையிலும் தண்டனையைக் கழித்தார். அப்போது காமராசர், வி.வி.கிரி, எம். பக்தவத்சலம், டி.பிரகாசம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், என். சஞ்சிவரெட்டி ஆகிய தலைவர்களுடன் இவர் ஒரே சிறையில் அடைக்கப்பெற்றார்.

விடுதலை பெற்ற இந்தியாவில் நடைபெற்ற முதல் நகராட்சி மன்றத் தேர்தலில், காரைக்குடி நகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற இவர், போட்டியின்றி நகர் மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்று 1952 வரை அப்பணியைச் சிறப்புறச் செய்தார்.

அதுபோலவே குடியரசாட்சி அமைத்த இந்தியாவின் முதல் சட்டமன்றத் தேர்தலில் காரைக்குடியில் காங்கிரசு இயக்கத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றிபெற்று, 1952 முதல் 1957 முடியச் சட்டமன்ற உறுப்பினராகச் செம்மையாகப் பணிபுரிந்தார்.

இராசேந்திர பிரசாத், இராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராசர், முத்துராமலிங்கத் தேவர், வி.விகிரி, டி.பிரகாசம் போன்ற தேசிய இயக்கத் தலைவரனைவரும் காரைக்குடி வரும்போது, அவர்களைத் தம் விருந்தினராக ஏற்று, தம் இல்லமாகிய 'இராமவிலாசத்'தில் தங்கவைத்து விருந்தோம்பிய சிறப்பு இவருக்குண்டு.

காந்தியச் சிந்தனையும், சீர்திருத்த எண்ணங்களும் கொண்ட இவர் நகரத்தார் வரலாற்றில் குறிப்பிடத்தக்க செயல் ஒன்றைச் செய்துள்ளார். பெண்களைக் கடல்கடந்து அழைத்துச் செல்வதில்லை என்ற சாதி முறைக்கட்டுப்பாட்டை முதன் முதலில் உடைத்த சிலருள் இவரும் ஒருவர் என்பதே அது.

1928இல் முதன்முதலாக தேவகோட்டையைச் சேர்ந்த அ.வெ. தியாகராசா தம் மனைவியைப் பர்மாவிற்கு அழைத்துச் சென்றார். அப்படியும் அதற்குப் பின்னர் 5 ஆண்டுகளாக யாரும் அதனைப் பின்பற்றிச் செயல்படுத்தவில்லை.

1933இல் இவரும், காரைக்குடியைச் சேர்ந்த இவரது நண்பர் மெ.சு.தி. தண்ணீர்மலை செட்டியாரும் தத்தம் மனைவியருடன் சிங்கப்பூர் சென்றது நகரத்தார் வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்தது எனலாம். இதன் பின்னர்தான் குடும்பத்துடன் வெளிநாடு செல்லும் பழக்கம் நகரத்தாரிடையே வளர்ந்தது என்பதில் ஐயமில்லை.

தொடக்கம் முதல் பொது வாழ்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, விடுதலைப் போரில் சிறைசென்று, விடுதலை பெற்ற இந்தியாவில் காரைக்குடி நகர்மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய ஆற்றல் மறவர் இவர்.

சொக்கலிங்கம், டாக்டர். தே., (21-10-1941)

மாத்தூர் - கண்ணூருடையார்
பி. அளகாபுரி
நகரத்தாரியல் ஆய்வாளர்

தெ. கி. தேனப்ப செட்டியார் – சிகப்பி ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஓ.எல். பட்டமும், அழகப்பா கல்லூரியில் பயின்று தமிழ் முதுகலைப் பட்டமும் பெற்றவர். பிள்ளைத்தமிழ் நூல்கள் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். 1964இல் இருந்து அழகப்பா கல்லூரித் தமிழ்த் துறையில் பயிற்றுநராகவும், பின்னர் விரிவுரையாளராகவும் பணி யாற்றியவர். அழகப்பா பல்கலைக்கழகம் உருவானதிலிருந்து அப்பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகவும் பின்னர் இணைப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

சிறந்த நகரத்தாரியல் ஆய்வாளருள் ஒருவராகிய இவர், பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளைப் பல்வேறு மலர்களில் எழுதியுள்ளார். தனிநூல்களாகவும் பல எழுதியுள்ளார். அவற்றுள் குறிப்பிடத் தக்கவை:

1. பாடுவார் முத்தப்பர்
2. நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு
3. நாட்டுக்கோட்டை நகரத்தார் அறப்பணிகளும் வரலாறும்


சொக்கலிங்கம், தமிழ்க்கடல், இராய., (30-10-1898 - 30-9-1974)

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார்
காரைக்குடி
தமிழறிஞர்

இராய.சொ. இராயப்ப செட்டியார் – அழகம்மை ஆச்சியின் மூத்த மகனாகத் தோன்றினார். இவரது தந்தையாருக்குப் பாலக்காட்டில் வட்டிக்கடை இருந்த காரணத்தினால் இவர் தம் எட்டாவது வயது வரை பாலக்காட்டிலேயே படித்தார். பதின்மூன்றாவது வயதில் பர்மா சென்று பதினாறாம் வயதில் திரும்பினார்.

Koviloor Digital Library

காரைக்குடியில் சமூகசீர்திருத்தத் தந்தையாக விளங்கிய சொ. முருகப்பாவுடன் இணைந்து 1917இல் இந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவிப்பதில் பெரும் பங்காற்றினார். அச்சங்கத்தின் சார்பில் இயங்கிய இராமகிருஷ்ண கலாசாலையில் தமிழ் இலக்கண இலக்கியங் களைப் பண்டிதர் சு. சிதம்பர ஐயரிடம் கற்றார்.



தமிழ்க்கடல், இராய. சொக்கலிங்கம்

1919இல் சொ. முருகப்பாவுடன் இணைந்து தன வைசிய ஊழியர் சங்கத்தைத் தோற்று வித்தவர்களிலும் இராய.சொ. ஒருவராவார். அச்சங்கத்தின் சார்பில் இயங்கிய 'தனவைசிய ஊழியன்' எனும் வார இதழுக்கு முதல் பதின்மூன்று திங்கள் சொ. முருகப்பா ஆசிரியராக இருந்தார். அதன் பின்னர் 1920இல் இவர் அதன் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

சில ஆண்டுகட்குப் பின் தனவைசிய ஊழியர் சங்கத்திற்கும் இதழுக்கும் தொடர்பற்ற நிலை உருவானபோது, அவ்விதழைத் தம் உரிமை இதழாக்கி, பெயரை 'ஊழியன்' என மாற்றி, 20 ஆண்டுக்காலம், விடுதலைப் போராட்டத்தின் செட்டிநாட்டு இதழாக அதனை வீறுநடை போட வைத்த பெருமை இராய.சொ.வுக்கு உரியது.

இராய.சொ.வின் அரசியல் குரு திரு.வி.க எனலாம். நாட்டு விடுதலைப் போரில் முழுமூச்சாக ஈடுபட்டு, சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்று 9.1.1932இல், ஓராண்டுச் சிறைத்தண்டனை பெற்று, வேலூர்ச் சிறையில் அதனை அனுபவித்தார். நகரத்தார் சமூகத்தில் நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற முதல்வர் என்ற பெருமை இவருக்குண்டு.

இராய.சொ. காந்தியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். காந்தியடிகளைத் தம் தலைவராக மட்டுமின்றிக் கடவுளாகவே கருதியவர். 1934இல் காந்தியடிகள் செட்டிநாட்டில் சுற்றுப்பயணம் செய்தபோது இராய.சொ. வீட்டில் அவர் விருந்துண்டு பெருமைப்படுத்தினார். இதனைப் பற்றி இராய.சொ.,

''எம்மை ஆளுடை நாயகன் விருந்தினுக்கு இசைந்தான்''

''என் உள்ளக் கமலத்தே இடம்பெற்ற அத்திருப்பாததூளி என் சிறுகுடிலையும் புனிதமாக்கியது''

''காந்தியடிகளை விருந்தினராகப் பெறும் பேற்றை நான் பெற்றேன்''

என்று எழுதியுள்ளார்.

1938 முதல் 1941 வரை மூன்றாண்டுகள் காரைக்குடி நகரசபைத் தலைவராகப் பணியாற்றினார். அவர் பணிக்காலத்தில்தான், இப்போது காரைக்குடி அரசு மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கும் 'காந்திமாளிகை' என்ற கவினுறு கட்டிடம் நகரசபைக் கட்டிடமாகக் கட்டப்பெற்றது.

தம் வாழ்நாளின் பிற்பகுதியில் அரசியல், சமுதாயப் பணிகளிலிருந்து விலகி, நகரத்தாருக்கே உரிய முறையில், தமிழ்த்தொண்டு, சமயப் பணியில் இவர் ஈடுபடத் தொடங்கினார். காரைக்குடியில் இவரது பங்காளிகளில் ஒரு குடும்பத்தின் முன்னோர், கட்டி நிருவகித்து வந்த நாகநாதபுரம் சிவன் – பெருமாள் கோவில்களின் நிருவாகத்தை, அக்குடும்பத்தாரின் வேண்டு கோளுக்கிணங்கி ஏற்றுக் கொண்டார்.

இலட்சம் ரூபாய் நன்கொடை திரட்டி, ஆலயத் திருப்பணியும், குடமுழுக்கும் செய்தார். சேக்கிழாருக்கு இவ்வாலயத்தின் சார்பில் காரைக்குடியில் ஆண்டுதோறும் விழா எடுக்கும் மரபைத் தோற்றுவித்தார். தேவாரத் தலங்கள் 275இல் 269க்கும், ஆழ்வார் பாசுரங்கள் பெற்ற 108 திருப்பதிகளுள் 99க்கும் இருமுறை களுக்குமேல் சென்று வந்திருக்கிறார். இவ்வனுபவங்களைத் ''திருத்தலப் பயணம்'' என்ற விரிவான நூலாகவும் ஆக்கியிருக்கிறார்.

1962இல் அழகப்பா அறநிலையின் தாளாளராகப் பணியாற்றிய க.வெ.சித.வெ. வேங்கடாசலம் செட்டியாரின் விருப்பத்திற் கிணங்கி, அழகப்பா கலைக்கல்லூரியில் புதிதாகத் தொடங்கப் பெற்ற தமிழ் ஆராய்ச்சித் துறையின் கௌரவத் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அத்துறையின் சார்பில் இவர் உருவாக்கிய ஆய்வு நூல்களே 'கம்பனும் சிவனும்', 'வில்லியும் சிவனும்' என்ற அரிய நூல்கள்.

Koviloor Digital Library

1965ஆம் ஆண்டு இந்துமதாபிமான சங்கக் கட்டிடத்தில் மேல்மாடியினை 'இராய.சொ. உமையாள் மண்டபம்' எனத் தம் துணைவியார் பெயரில் அமைத்துக் கொடுத்தார். தமக்கு உரிமையாக இருந்த அமராவதிபுதூர்ச் சொத்துக்களை இந்துமதாபிமான சங்கத்தின் திருப்பணிக்கே நன்கொடையாக்கினார்.

இராய.சொ.வின் தமிழ்ப்புலமை வியக்கத் தக்கது. பழந்தமிழ்ப் பாடல்கள் அனைத்தும் அவருக்கு மனப்பாடமாகத் தெரியும். மேடையில் பேசும்போது, நூல்களின் துணையின்றிப் பாடல்களை எடுத்து மொழியும் திறமும், ஒரு நூலில் வரும் ஒரு தொடரை விளக்க முற்படும்போது அதற்கு இயைபான தொடர் வேறு எந்தெந்த நூல்களில் இருக்கிறது என்பதை அடுக்கிக் காட்டும் ஆற்றலும், மிக எளியோர்க்கும் புரியும் வண்ணம் பொருள் விளக்கம் கொடுக்கும் பாங்கும் கேட்போரை மெய்மறக்கச் செய்யும்.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியோடு அவர் புலமை நிறைவெய்தவில்லை. அவரே ஒரு மிகச் சிறந்த கவிஞர். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, காந்திய உணர்வு இவற்றோடு, காந்தியடிகளைப் பற்றித் தாம் பாடிய 901 பாடல்களையும் தொகுத்து, 'காந்தி கவிதை' என்ற தலைப்பில் 2.10.1969 அன்று, காந்தி நூற்றாண்டுவிழா நினைவாக வெளியிட்டார். இப்பாடல்கள் யாப்பில் மரபையும், கருத்தில் புதுமையையும் இணைத்துக் கற்போர் மனம் கவரும் வண்ணம் அமைந்தவையாகும்.

பழந்தமிழ் நூல்கள் பலவற்றைச் சந்தி, சீர் பிரித்து, தக்க குறிப்பும் எழுதிச் சிறப்புடன் பதிப்பித்து வெளியிட்ட பதிப்பாசிரியர் இவர். இவ்வாறு இவர் தொகுத்துப் பதிப்பித்த நூல்கள் முப்பதுக்கும் மேலாகும்.

இவரது தமிழ்ப்பற்றும், புலமையும் காரணமாக, இவர் தம் வாழ்நாள் முழுதும் அரிதின் முயன்று பலநூல்களைத் திரட்டித் தம் இல்லத்தில் சிறந்ததொரு நூலகத்தை உருவாக்கி வைத்திருந்தார். ஊழியன், குமரன், குமரி மலர், செந்தமிழ் போன்ற அக்காலத் தமிழ் இதழ்களின் கட்டுமானம் செய்யப் பெற்ற தொகுதிகளும் இந்நூலகத்தில் பேணிக் காக்கப் பெற்றன. தமக்குப் பின்னரும் இந்நூல்களும், இதழ்களும் தமிழுலகுக்குப் பயன்படவேண்டும் என விரும்பிய தமிழ்க் கடல் இந்நூலகத்தைத் தம் வாழ்நாளின் இறுதிப் பகுதியில் அழகப்பா கலைக்கல்லூரிக்கு வழங்கி மகிழ்ந்தார். இந்நூலகம் இப்போது அழகப்பா பல்கலைக் கழகத்தின் மைய நூலகத்தில் இணைக்கப்பட்டு ஆய்வாளர்கட்குப் பயன்தந்து கொண்டிருக்கிறது.

1958இல் இராய.சொ.வின் மணிவிழா வினைச் சிறப்பாகக் கொண்டாடிய இந்து மதாபிமான சங்கத்தார் அப்போது இவருக்கு வழங்கிப் போற்றிய பட்டமே 'தமிழ்க்கடல்' என்பது. 1961 ஜனவரியில் தமிழ்க் கடல், கடல் கடந்து பர்மா சென்றிருந்தபோது, இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார் தரும பரிபாலன சபை அவருக்கு அளித்துச் சிறப்பித்த பட்டம் 'சிவமணி' என்பது. 1963 ஏப்பிரலில் கோலாலம்பூர் சென்ற சிவமணிக்கு, அங்குள்ள அருள்நெறித் திருக்கூட்டத்தார் கொடுத்துக் கொண்டாடிய பட்டம் 'சிவம் பெருக்கும் சீலர்' என்பதாம். இவரது மறைவுக்குப் பின் 22.1.1984இல் இவரது திரு உருவச்சிலையைச் (கு.க.) சங்கக் கட்டிடத்திற்கு எதிரே நிறுவி இவர் நினைவைப் போற்றியது இந்து மதாபிமான சங்கம்.

தமிழ்நாட்டிலும், அயல்நாடுகளிலும் தமிழ்க்கடலின் சொல்லாற்றலும், நூலாற்றலும் பரவிக் கிடக்கின்றன. ''அரசியல் மேடையில் தித்திக்கும் தமிழைப் பரவச் செய்த பெருமை தமிழ்த்தென்றல் திரு.வி.க.வுக்கு அடுத்தபடியாகத் தமிழ்க்கடல் இராய.சொவுக்கு உரியது'' என்பார் சோமலெ. நினைவாற்றலில் தமிழ்க்கடலுக்கு நிகர் தமிழ்க்கடலே. ஒளிவு மறைவு இன்றிப் பட்டதைப் பட்டாங்கே கூறும் நேர்மையாளர் இவர். ''தமிழ்க்கடலார் காந்தியடிகளின் கொள்கை யெல்லாம் தம் வாழ்விற் பொய்யாது பின்பற்றியவர்'' என்பார் வ.சுப. மாணிக்கனார். ''சொக்கலிங்கனார் கல்வி கேள்வியுடையவர்; ஆராய்ச்சியாளர்; காய்தல் உவத்தலின்றி எதையும் சிந்தித்து முடிவு காண்பவர்'' என்பார் திரு.வி.க. ''இராய.சொ. அவர்கள் கடைசிக் காலத்தில் சேக்கிழாரைப் போல் சிவன்கோவில் திருப்பணியையும், ஐயரவர்களைப் போல் பழந்தமிழ் நூல்களையும், வள்ளலாரைப் போல் இந்துமதாபிமான சங்கத்தையும் பேணி வளர்த்தார்'' என்பார் குன்றக்குடி அடிகளார்.

இப்புகழாரங்கள் அனைத்திற்கும் உரிய தகுதியாளராக வாழ்ந்த தமிழ்க்கடல், சிவமணி, சிவம்பெருக்கும் சீலர், இராய. சொக்கலிங்கனார், நகரத்தார் சமூகத்தின் முதல் விடுதலைப் போராட்ட வீரர்; காந்தியவாதி; இதழாளர்; இனிய நாவலர், என்ற பல பெருமைகள் பொதிந்த ஒரு முன்னோடி ஆவார்.

Koviloor Digital Library

சொக்கலிங்கம், நீதிபதி. மெ., (24-3-1950)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
சண்முகநாதபுரம்
மாவட்ட நீதிபதி

மெ.நா. மெய்யப்ப செட்டியார் – முத்துக்கருப்பாயி ஆச்சியின் மகன். அழகப்பா கல்லூரியில் பொருளியல் பட்டப்படிப்பில் தங்கப்பதக்கம் வென்றவர். 1973இல் சென்னை சட்டக்கல்லூரியில் பயின்று காரைக்குடியில் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கினார். 1982இல் முகவை மாவட்டக் கூடுதல் குற்றத்துறை அரசு வழக்கறிஞராகத் தமிழக அரசு நியமித்தது. 1987இல் தமிழக அரசின் நேரடித்தேர்வு வாயிலாக மாவட்டக் குற்றவியல் நீதிபதியாகப் பொறுப்பேற்ற இவர் திருச்சி, சேலம், ஆகிய இடங்களில் பணியாற்றினார். 1994இல் சென்னை உயர்நீதிமன்றம் இவரைச் சென்னை மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவராக அமர்த்தியது.

சொக்கலிங்கம் புதூர்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து நகரசூரக்குடி வழியாக, 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

மாத்தூர், வைரவன் கோவில் ஆகிய இரு கோவில்களைச் சேர்ந்த 173 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். நகரத்தார் பேச்சு வழக்கில் சொக்கனேந்தல் என வழங்கப்படும் இவ்வூர் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய ஊராட்சிமன்றம்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற நகரச்சிவன் கோவில் உள்ளது. 1918இல் திருப்பணி செய்யப்பெற்ற கோவில். இக்கோவிலில் இவ்வூர் சு.கரு.சுப்பிரமணியன் செட்டியாரால் அமைக்கப்பெற்ற கல்யாண சுந்தரராசப் பெருமாள் – சீதேவி – பூதேவி சன்னதி அமைந்துள்ளது.

குடிநீருக்கு முனீசுவரன் கோவில் ஊருணியும், பிற தேவைகளுக்கு இராம. ப. அருணாசலம் செட்டியாரும், அழ.அழகப்ப செட்டியாரும் சேர்ந்து கட்டிக் கொடுத்த சிவகங்கை தீர்த்தம் என்ற ஊருணியும் பயன்படுகின்றன.

1918 அளவில் நகரப்பொதுவில், மாணிக்கவாசக வித்தியாசாலை என்ற பெயருடன் ஒரு பள்ளி நிறுவப்பெற்று 20 ஆண்டுகளுக்கும்மேல் நகரத்தார் நிருவாகத்தில் நடைபெற்றது. பின்னர் இது அரசிடம் ஒப்படைக்கப்பெற்று இப்போது அரசுப் பள்ளியாக நடைபெற்று வருகிறது.

வைரவன் கோவில் நகரத்தார் தை மாதம் அடைக்காத்தாள் படைப்பையும், மாத்தூர் நகரத்தார் உ. சிறுவயல் பங்காளிகளுடன் சேர்ந்து உ.சிறுவயலில் ஆடி மாதம் அழகாத்தாள் படைப்பையும் படைத்து வருகின்றனர்.

சொ. புதூர் நற்பணி மன்றம் என்ற நகரத்தார் அமைப்பு அண்மையில் உருவாக்கப்பட்டுச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. சக்தி என அழைக்கப்படும் இராம. முத்தையா இ.தே.ரா.வில் பணியாற்றியவர்.

பொற்றாலி வழங்குதல் எனும் விழா இவ்வூரில் அண்மைக் காலமாகச் சிறப்பாக நடந்துவரும் நிகழ்ச்சியாகும். ஆண்டுதோறும், ஆனி மாதத்தில் வளர்பிறைச் சுவாதி நட்சத்திரத்தன்று சிவன்கோவிலில் மீனாட்சி திருக்கல்யாணம் நிகழும். அப்போது அம்மனுக்குச் சாத்தப்படும் தாலியைத் தங்கள் செலவில் சாத்தி, திருக்கல்யாணம் முடிந்ததும், பெற்றுக் கொள்வதை இப்பகுதி மக்கள் பிரார்த்தனையாகச் செய்து கொள்கின்றனர். இவ்வூர் நகரத்தார் அதற்குரிய பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு, பிரார்த்தனையாளரிடம் தாலிக்குரிய விலையை மட்டும் பெற்றுக் கொண்டு, விழாவை நடத்தி அவர்களுக்குப் பொற்றாலியை வழங்குகின்றனர். அன்று விழாவிற்கு வருவோருக்கெல்லாம் இவ்வூர் இராம.முத்தையா (சக்தி)வும், அரு. முருகப்பனும் மதிய விருந்து வழங்குகின்றனர்.

சோமசுந்தரம், காசிஸ்ரீ, அரு., (14-8-1936)

வைரவன் கோவில் - பெரியவகுப்பு
தேவகோட்டை
கவிஞர், பதிப்பாளர்

அருசோ என்று மக்களால் போற்றி அழைக்கப்படும் இவர் புதுவயலில் முத்துராமன் செட்டியார் – மீனாட்சி ஆச்சி மகனாகப் பிறந்து தேவகோட்டையில் அருணாசலம் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சி குடும்பத்துக்குப் பிள்ளை வளர வந்தார். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ் பி.ஏ. வகுப்பில் சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேறி ஜி.யு.போப் தங்கப் பதக்கம் பரிசு பெற்றார். மதுரை வங்கியில் பணியாற்றிய இவர் மிகவிரும்பி ஆசிரியப் பணியைத் தேர்ந்தெடுத்துப் பணி செய்து கொண்டே தம் முயற்சியால் எம்.ஏ பட்டம் பெற்றார். சண்முகநாதபுரம் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றும்பொழுது விருப்ப ஓய்வு பெற்று முழுநேரத் தமிழ்த்தொண்டில் ஈடுபட்டார்.

Koviloor Digital Library

பொன்முடி பதிப்பகம் நடத்திவரும் இவர் கவிதை, கட்டுரை, திறனாய்வு, நாடகம், பயணநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என 150 நூல்கள் எழுதியுள்ளார். இவருடைய பாண்டிமாதேவி காப்பியம் 1974இல் மதுரை அருள்மிகு மீனாட்சி ஆலயப் போட்டியில் முதலிடம் பெற்று தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியால் இவருக்குப் பொற்கிழி வழங்கப்பெற்றது. சேக்சுபியரின் 12 நாடகங்களை இவர் மொழிபெயர்த்துள்ளார். பல கவியரங்குகளில் பங்குபெறும் இவர் எழுதிய அனைத்தையும் அச்சாக்கிப் புத்தக வடிவில் வரலாற்றுப் பதிவு செய்துவிடும் இயல்பினர். இவருடைய கவிதைகள் 'விரிகல் கவல்கேட்' எனும் பெயரில் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. இவர் எழுதிய 'அருள்மணியம்' கவிதைநாடகம் பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்கப்பெற்றுள்ளது. திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ், ஸ்ரீகுரு தெட்சணாமூர்த்தி பிள்ளைத்தமிழ், அன்னை மீனாட்சி அந்தாதி ஆகியவை இவர் படைத்துள்ள சிற்றிலக்கியங்கள் ஆகும்.

பயணம் செய்வதில் மிகுந்த விருப்பம் கொண்டவர். ஐரோப்பிய ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, சிங்கப்பூர் போன்ற பயணநூல்கள் இருபதை எழுதியுள்ளார். அறுபடை வீடுகளுக்கும் நடைப்பயணம் சென்று வந்தபின் 1983ஆம் ஆண்டில் இராமேசுவரத்திலிருந்து காசிக்கு ஒரு குழுவுக்குத் தலைமை தாங்கி நடைப்பயணம் சென்றுவந்தார். அப்போது பல அற்புதச் செயல்கள் நடைபெற்றமையை 'இராமேசுவரம் – காசி நடைப்பயணம்' என்ற இவரது நூல் விளக்குகிறது. இந்நூல் நிலவியல், வரலாறு, சமய அடிப்படைகள் கொண்டதாக அமைந்துள்ளது. இந்நூலை வழிகாட்டியாகக் கொண்டே ஐந்து குழுவினர் இராமேசுவரத்திலிருந்து காசிக்கு நடைப்பயணம் சென்றுவந்துள்ளனர். இந்நூல் தெலுங்கிலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது.

செட்டிநாட்டில் சமயமறுமலர்ச்சிக்கு முன்னோடியாகப் பணிபுரியும் அருசோ முயற்சியால் துலாவூர், பாதரக்குடி, கோவிலூர் மடங்களுக்கு இளைஞர்கள், ஆச்சிமார்கள் அதிகம்பேர் வருகின்றனர். கோவிலூரில் மாதந்தோறும் சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியும் பாதரக்குடியில் சிந்தனைச் சோலை நிகழ்ச்சியும் துலாவூரில் ஆண்டுதோறும் சமயப்பயிற்சி வகுப்பும் நடத்தி மடங்களை நோக்கி மக்கள் வர வழிவகுத்துள்ளார். முன்னோரின் தருமமாகிய கட்டமுருகப்ப செட்டியார் காட்டுத் தண்ணீர்ப் பந்தலில் நால்வர் குருபூசை தவறாது நடத்தி, அதனை நால்வர் கோவிலாகத் திருப்பணி செய்துள்ளார்.

பொற்கிழிக் கவிஞர் பட்டத்தோடு, குன்றக்குடி அடிகளார் பாரிவிழாவில் வழங்கிய 'கவிஞர்கோ' பட்டமும் பெற்றுள்ளார். உத்தரப்பிரதேச அரசு இவருக்குக் 'காசிஸ்ரீ' பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. அருசோ 'செட்டிநாட்டில் பக்தி மறுமலர்ச்சி இயக்கத்தின் ஊற்றுக்கண், கோவிலூர், பாதரக்குடி, துலாவூர் மடங்களில் பக்திப் பொழிவுகள் செழிக்கச் செய்யும் ஒருங்கிணைப்பாளர், சொல்லும் செயலும் ஒத்த உத்தமர், இளைஞர்களுக்கு வழிகாட்டி, கவிஞர், நூலாசிரியர், சொற்பொழிவாளர், அமைப்பாளர், பல்கலை வித்தகர்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

சோமசுந்தரம். சாண்டோ, லெ., (7-10-1899 - 1962)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கீழச்சிவல்பட்டி
மற்போர் வீரர்

லெட்சுமணன் செட்டியார் – சிகப்பி ஆச்சியின் மகன். நகரத்தார்களில் உடல்வலிமை பேணி அதற்காகப் பயிற்சி மேற்கொண்டு வெற்றி பெற்று 1925ஆம் ஆண்டை ஒட்டிய காலத்தில் புகழுடன் விளங்கியவர். அமெரிக்காவில் எர்லி–யீ–லீடர்மென் என்பாரை ஆசிரியராகக் கொண்டு நடைபெற்ற 'பிசிகல் கல்சர்' என்னும் உடலோம்பும் பயிற்சிப் பள்ளியில் அஞ்சல்வழிக் கல்வி மூலம் பயின்று வெற்றிபெற்ற மாணவர். அனுப்பப்பட்ட பயிற்சிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடித்து தவறாது மேற்கொண்டு அதனால் வலிமை பெற்ற தம் உருவப் படத்தை அனுப்பித் தங்கப் பதக்கம் பரிசுபெற்றார். அமராவதிபுதூரில் இவர் நிகழ்த்திய வீரவிளையாட்டுக்களை 1925 ஆகஸ்ட் 11ஆம் நாள் 'தனவைசிய ஊழியன்' எடுத்துக்காட்டியுள்ளது. 10பேர் ஒன்றாகக் கூடி இழுத்துவந்த இரும்புச் சங்கிலியை இவர் மிக எளிமையாக அறுத்து எறிந்தார். ஓடுகின்ற மோட்டார் காரைக் கயிற்றால் கட்டி இழுத்து நிறுத்தினார். அரை அங்குலக் கனமுள்ள பலகையில் கையினாலேயே ஆணி அடித்தார். இதுபோன்ற வியத்தகு உடல்வலிமை காட்டும் நிகழ்ச்சிகளைச் செட்டிநாட்டின் பலபகுதிகளிலும் நடத்திக்காட்டி இளைஞரிடையே உடல்வலிமை பெருக்கும் பயிற்சி ஆர்வத்தை ஏற்படுத்தினார். 'வலயமாநகர் வலம்புரி தேகப்பயிற்சிச்சாலை' போன்ற பல நிலையங்கள் தோன்ற இவர் தூண்டுகோலானார். 'பயிற்சியும் வலிமையும்' என உடலோம்பும் கலை குறித்து இவர் நூல் ஒன்று எழுதியுள்ளார்.

Koviloor Digital Library

சோமசுந்தரம் செட்டியார், பெரி., (4-1-1861 - 25-11-1929)

இளையாத்தங்குடி - ஒக்கூருடையார்
தேவகோட்டை
ஆலை அதிபர்

பெரிச்சியப்ப செட்டியார் – மெய்யம்மை ஆச்சியின் மகன். தென்னிந்தியாவில் முதன் முதலாக ஆலைத்தொழில் தொடங்கிய இந்தியர் என்ற வரலாற்றுச் சிறப்பு இவருக்கு உண்டு. 19–8–1899 இல் கேரளத்தில் மலபார் மாவட்டத்தில் கல்லாய் எனுமிடத்தில் இருந்த மலபார் நூற்பு நெசவாலையின் நிருவாகப் பொறுப்பை இவர் ஏற்றார். சில ஆண்டுகளில் அவ்வாலையைப் பெரும்லாபம் தரும் ஆலையாக மாற்றினார். அத்தொழில் துறை அறிவோடு, கோயம்புத்தூரில் 1906 ஆம் ஆண்டு காளீஸ்வரா மில் லிமிடெட் என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். 28–9–1910 இல் காளீசுவரா ஆலை தன் பணியைத் தொடங்கியது. இவ்விரு ஆலைகளையும் திறம்பட நடத்திய சோமசுந்தரரின் திறமையை மெச்சி, ஆங்கில அரசு இராவ் பகதூர், திவான் பகதூர் ஆகிய பட்டங்களை வழங்கியது.

கல்லாயில் பெண்களுக்கென ஒரு மருத்துவமனையையும், தேவகோட்டையில் ஒரு மகப்பேறு மருத்துவமனையையும் நிறுவினார். சென்னை மாகாணத்தின் முதல் சட்ட மேலவையில் உறுப்பினராக இருந்து பணியாற்றிய பெருமையும் இவருக்கு உண்டு.

பேரூரில் பட்டீசுவரர் கோவிலைப் பெரும் செலவில் புதுப்பித்து 1926 இல் குடமுழுக்கு நிகழ்த்தினார். திருநின்றவூர், 'இருதயாலய ஈசுவரர்' ஆலயத்தைப் புதுப்பித்துக் குடமுழுக்குவிழா நிகழ்த்தினார். காளையார்கோவிலில் மடம், நந்தவனம் முதலியன அமைத்தார்.

தமிழகத்தின் ஆலைத்தொழில் முன்னோடி என்ற தனிச்சிறப்பு, இவருக்குரியது.

சோமசுந்தரம் செட்டியார், பெரி.சோம.சா., (29-9-1933)

இளையாத்தங்குடி - ஒக்கூருடையார்
தேவகோட்டை
ஆலை அதிபர்

இராங்கியத்தில் பி.ஆர்.எல். பெரிய தம்பி செட்டியார் – கண்ணம்மை ஆச்சியின் மகனாகப் பிறந்தார். இவரது 17 ஆவது வயதில் தேவகோட்டை பெரி.சோம. சாத்தப்ப செட்டியாரின் மனைவி சீதை ஆச்சி இவரைப் பிள்ளை கூட்டிக் கொண்டார்.

தென்னிந்தியாவின் ஆலைத் தொழில் முன்னோடியான சோமசுந்தரம் செட்டியாரின் பேரனாக, தேவகோட்டையின் புகழ்மிக்க கள்ளிக்கோட்டையார் வீட்டிற்கு, பிள்ளை வந்த இவர், தம் பாட்டனார், தந்தையார் ஆகியோரின் அடிச் சுவட்டில் ஆலை நிருவாகப் பொறுப்புக்களை ஏற்றுத் திறம்பட நடத்தியதோடு பல புதிய ஆலைகளையும் நிறுவினார்.

காளீசுவரா ஆலையின் கிளை ஒன்றினைக் காளையார்கோவிலிலும், சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் என்ற ஆலையை மானாமதுரை அருகே முத்தனேந்தலிலும், நாடியம்பாள் நூற்பு ஆலையை அறந்தாங்கியிலும் தொடங்கிய இவர், வாலாசாபாத்தில் இருந்த 'பாலார்மில்'லை விலைக்கு வாங்கித் தம் தாயார் பெயரில் 'சீதை மில்ஸ்' எனப் பெயரிட்டு நடத்துகிறார்.

தம் பாட்டனார் திருப்பணி செய்த திருநின்றவூர் இருதயாலய ஈசுவரர் கோவிலுக்கு இவரும் இருமுறை குடமுழுக்கு விழா நடத்தியுள்ளார் (1962, 1993) காளையார்கோவில் சுவர்ண காளீசுவரர் கோவில் இராசகோபுரத்தைச் செப்பனிட்டுக் குடமுழுக்கு நிகழ்த்தியுள்ளார் (1959).

தம் தந்தையார் 'எஸ்.ஆர்எம். சாத்தப்ப செட்டியார் நடுநிலைப்பள்ளி' என்ற பெயரோடு சண்முகநாதபுரத்தில் தொடங்கி நடத்தி வந்த நடுநிலைப் பள்ளியை 'பி.எஸ். சாத்தப்ப செட்டியார் உயர்நிலைப்பள்ளி' என்ற பெயரோடு 1963 இல் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி அதனைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

தேவகோட்டையில் அரசு மருத்துவமனை அமைவதற்கு 1965 இல் ஒரு பெருந்தொகையை நன்கொடையாக வழங்கினார். அதனால் அமைந்த மருத்துவமனையே 'பி.எஸ். சாத்தப்ப செட்டியார் நினைவு அரசாங்க மருத்துவமனை' என்ற பெயரோடு இன்றும் தேவகோட்டையில் இயங்கிவருகிறது.

சோமசுந்தரம், பெரி., (12-5-1938 - 22-5-1997)

மாத்தூர் - உறையூர்
குழிபிறை
கல்வியாளர், எழுத்தாளர்

பெரியகருப்பஞ் செட்டியார் – பொன்னம்மாள் ஆச்சியின் மகன். குழிபிறை மேல்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் செட்டிநாட்டுப் பகுதியில் நாடகக்கலை வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றி யுள்ளார். 50க்கும் மேற்பட்ட குறு நாடகங்களையும் 30 முழுநேர நாடகங்களையும் இவர் படைத்துள்ளார். இப்பகுதியில் பல்வேறு ஊர்களில் இவருடைய நாடகங்கள் மேடையில்

Koviloor Digital Library

அரங்கேறியுள்ளன; இருபது நாடகங்கள் வானொலியில் ஒலிபரப்பப்பட்டுள்ளன. முப்பது சிறுகதைகளையும் மூன்று குறுநாவல்களையும் ஒரு நாவலையும் எழுதியுள்ள இவர் எழுத்துத் துறையில் முத்திரை பதித்துள்ளார். இவர் எழுதிய எம்.எல்.ஏ., என்ற நாவல் கலைமகள் நாவல் போட்டியில் முதற்பரிசு பெற்றது. இது இவரது எழுத்துக்குக் கிடைத்த அங்கீகாரமாகும். புதுக்கோட்டை மாவட்டக் கவியரசு கண்ணதாசன் மன்றச் செயற்குழு உறுப்பினராகவும், குழிபிறை மீனாட்சி இலக்கியக் கழக இணைச் செயலராகவும், குழிபிறை கவின் கலைமன்றக் கௌரவத் தலைவராகவும் இலக்கியப் பணிபுரிந்துள்ள இவர் 'இனிய எளிய தமிழில் இராமாயணம்' என்னும் உரைநடை நூலையும் எழுதியுள்ளார். இவரது கல்வித் தொண்டினைப் பாராட்டித் தமிழக அரசு 1994 இல் இவருக்கு நல்லாசிரியர் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

சோமலெ (11-2-1921 - 3-11-1986)

(இயற்பெயர் : இலக்குமணன், சோம.)

இளையாத்தங்குடி - கழனிவாசற்குடி.
நெற்குப்பை
நகரத்தார் இயல் ஆய்வாளர்

சோமசுந்தரம் செட்டியாரின் மகனான இவர். சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டமும், இதழியல் துறையில் பட்டயப் படிப்பும் பயின்றார். பின்னர் தம் குடும்பத்தினர் நடத்தி வந்த ஏற்றுமதி – இறக்குமதி வணிகத்தை நடத்தும் பொறுப்பை ஏற்றார். தம் தொழிலின் முன்னேற்றம் தொடர்பாக 1948 ஆகஸ்டு முதல் 1949 பிப்ரவரி வரை ஆறு திங்கள் வெளிநாடுகளில் விரிவான சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

பிரிட்டன், சுவீடன், ஜெர்மனி, செக்கோசு லோவேக்கியா, பிரான்சு, அயர்லாந்து, அமெரிக்கா, ஹவாய்த் தீவுகள், ஆஸ்திரேலியா, மலேசியா ஆகிய பல நாடுகளில் 65,000 கிலோ மீட்டருக்கும் அதிகமாகப் பயணம் செய்தார். "வணிகனாகச் சென்றேன். எழுத்தாளனாகத் திரும்பி வந்தேன்" என அவரே குறிப்பிடுவது போல, இந்த உலகச் சுற்றுப்பயணம் இவருள் இருந்த தகவல் சேர்க்கும் ஆற்றல், அவற்றை வகைப்படுத்தி, முறைப்படுத்தி நூலாக்கும் ஆய்வுத்திறன் ஆகியவற்றை வெளிக் கொணர்ந்தது என்று கூறினால் மிகையாகாது.

தொடக்கத்தில் சோம. இலக்குமணன் என்ற பெயரில் சில கட்டுரைகளையும், சில நூல்களையும் எழுதினார். ஆனால் நாளடைவில் சோமலெ. என்ற பெயரே இவரைச் சுட்டுவதாக எழுத்தாளர் மத்தியில் அமைந்தது.

'அமெரிக்காவைப் பார்' என்பது இவர் எழுதிய முதல் பயண இலக்கிய நூல். தொடர்ந்து 'நான் கண்ட வெளிநாட்டுக் காட்சிகள்', 'ஆஸ்திரேலியா வில் ஒரு மாதம்', 'என் பிரயாண நினைவுகள்', என இவரது பயண நூல்கள் பல வெளிவந்தன. பயண



சோமலெ

இலக்கியத்தைச் சுவையுடனும், பிறருக்குப் பயன்படும் செய்திக் களஞ்சியங்களாகவும் எழுதுவதில் இவர் மிகவும் சிறந்தவர். "சோமலெயின் பயண நூல்களைப் படித்த பின்னர்தான் எனக்கு அமெரிக்கா போக வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது" என டாக்டர் எம்எஸ். உதயமூர்த்தி குறிப்பிடுவது இவரது பயண இலக்கியத்தின் பயன்பாட்டுக்கு ஒரு நற்சான்றாகும்.

வெளிநாடுகளைப் பற்றி நூல்கள் எழுதிய சோமலெ, தம் தாய்நாட்டைப் பற்றியும் 'இமயம் முதல் குமரி வரை', 'நமது தலைநகரம்' என்ற நூல்களையும் தமிழகத்தின் 10 மாவட்டங்களைப் பற்றிய நூல்களையும் எழுதினார். இந்த நூல் ஒவ்வொன்றும் அந்தந்த மாவட்டத்தைப் பற்றிய கலைக்களஞ்சியமாகவே திகழ்கின்றது.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார், ஓ.பி. இராமசாமி ரெட்டியார் ஆகியோர் வாழ்க்கை வரலாறுகளையும் எழுதியுள்ளார்.

சென்னைப் பல்லைக்கழக வெளியீடான 'தமிழ் இதழ்கள்' என்னும் இவரது நூல், இதழியலில் சோமலெ பெற்றிருந்த ஆழ்ந்த அனுபவத்தை வெளிப்படுத்துகிறது.

கோவில் குடநீராட்டு மலர் என்றாலே அதனைச் சிறப்பாகப் பதிப்பிக்கும் திறனாளர் என இவர் இனம் காணப்பட்டார். அதன் விளைவாக, திருவண்ணாமலை, இராமேசுவரம் உள்ளிட்ட 12 ஆலயங்களின் குடநீராட்டு விழா மலர்கள் இவர் கைவண்ணத்தில் மலர்ந்துள.

Koviloor Digital Library

இப்பட்டறிவின் துணையோடு பிறந்த நாள் விழாமலர், நினைவு மலர் என்ற வகைகளில் பத்துக்கும் மேற்பட்ட மலர்களை இவர் பதிப்பித்திருக்கிறார். இவற்றால் இவருக்கு 'மலர் மன்னர்' சோமலெ எனப் பதிப்புலகத்தில் ஒரு பெயர் வழங்குகிறது.

இவ்வாறு பல்துறை நூல்கள் எழுதியும், பதிப்பித்தும் இலக்கியப் பணியாற்றிய சோமலெயின் இலக்கியச் சாதனை எனும் கோபுரத்தின் மணிமுடிகளாகத் திகழ்பவை மிகச் சிறந்த இரு ஆய்வு நூல்கள். அவை, 'வளரும் தமிழ்', 'செட்டிநாடும் செந்தமிழும்' என்பவை ஆகும். தமிழ் உரைநடையின் தோற்றம் முதல், நூல் வெளிவந்த நாள் வரையான தமிழ் உரைநடை வளர்ச்சி பற்றிய முறையான வரலாற்றுத் திறனாய்வு நூலாக அமைவது 'வளரும் தமிழ்'.

விருப்புவெறுப்பற்ற முறையில் திரட்டப் பெற்று, முறைப்படுத்தப்பெற்ற செய்திகளின் அடிப்படையில் செட்டிநாட்டின் தமிழ்ப் பணிபற்றி விரிவாக எழுதப்பெற்ற 'செட்டிநாடும் செந்தமிழும்' என்ற நூல் சோமலெயின் நகரத்தார் இயல் ஆய்வு அறிவின் ஆழத்தையும், நுண்மையையும் புலப்படுத்தும் ஒரு சிறந்த ஆவணமாகும்.

சோமலெ தம் வாழ்நாள் முழுவதும் சுதந்திரப் பறவையாகவே வாழ்ந்தார். எனினும் 1955 முதல் 1958 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மக்கள் தொடர்பு அலுவலராகவும், 1958 முதல் 1960 வரை அண்ணாமலை தொழில் நுட்பக் கல்லூரியின் நிருவாகியாகவும் பணியாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினராகவும் (1955 – 61), மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் (1965 – 71), தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் முதுநிலை ஆய்வாளராகவும், சாகித்திய அக்காதமிக்காகத் தமிழ் நூல்களின் பட்டியல் தயாரிக்கும் ஆய்வாளராகவும், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் (1965) பணியாற்றியுள்ளார்.

இவரது நூல்களைச் சாகித்திய அக்காதமி, தேசியப் புத்தக நிறுவனம், வரலாற்று ஆய்வு இந்தியக் கழகம் ஆகியவை வெளியிட்டும், பிறமொழிகளில் மொழிபெயர்த்தும் சிறப்பித்துள்ளன.

தமிழில் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களும், ஆங்கிலத்தில் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களும், இரு மொழிகளிலும் பல்வேறு கட்டுரைகளும் எழுதி இலக்கியப் பணி ஆற்றியுள்ள சோமலெ, உண்மைத் தரவுகளைத் திரட்டி, ஆய்வு நெறிப்படி அவற்றை முறைப்படுத்தி, கலைக்களஞ்சிய வகையில் நூல்கள் எழுதும் ஆய்வாளர் எனப் பொது நிலையிலும், குறிப்பாக நகரத்தார் இயல் ஆய்வை முறைப்படி செய்த முன்னோடி எனச் சிறப்பு நிலையிலும் என்றும் போற்றப்படுவார்.

'செட்டிநாடும் செந்தமிழும்' என்ற நூல் சோமலெயின் வாழ்க்கைச் சாதனையாகும். இவரது அறிவாற்றலையும், ஆளுமையையும் முழுமையாக விளக்கும் நிறைவான இந்நூல் இவருக்கு வரலாற்றில் நிலையான இடத்தையும், சிறந்த புகழையும் பெற்றுத் தந்துள்ளது.

சோமனாதன், வலம்புரி., (15-5-1928)

பிள்ளையார்பட்டி
வலையபட்டி
திரைப்படக் கலைஞர்

கே. இராமனாதன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சியின் மகன். இளம் வயதிலேயே திரைப்படத்துறையில் நுழைந்த இவர் ஏறத்தாழ 60 திரைப் படங்களுக்குக் கதை உரையாடல் எழுதியிருக்கிறார். அவற்றுள் குறிப்பிடத் தக்கவை, மங்கையர் திலகம், கானல் நீர், வானம்பாடி, பஞ்சவர்ணக் கிளி, பார் மகளே பார், லலிதா, துணைவி ஆகியவை. 12 கன்னடப் படங்களுக்கும் கதை, திரைக்கதை எழுதியிருப்பது இவரது மற்றுமொரு சாதனை.

லலிதா, துணைவி, துணையிருப்பாள் மீனாட்சி, சிவப்புக்கல் மூக்குத்தி ஆகிய நான்கு தமிழ்ப்படங்களை இயக்கியிருக்கும் வலம்புரி சோமனாதன், திருமணம், லலிதா, ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், துணைவி ஆகிய நான்கு படங்களின் தயாரிப்பாளரும் ஆவார்.

1982 இல் இவரது 'துணைவி' படத்திற்காகச் சிறந்த உரையாடல் ஆசிரியர் பரிசினை இவருக்கு வழங்கிய தமிழக அரசு, அப்படத்திற்கு ஒரு லட்ச ரூபாய் நிதி உதவியும் வழங்கியது. 1983 இல் தமிழக அரசு இவருக்குக் கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்தது.

இவரது 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்' 1985 இல் நடைபெற்ற மாஸ்கோ திரைப்பட விழாவில் இடம் பெற்றது.

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம், தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம், அனைத்திந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம், தமிழ்நாடு திரை அரங்குகள் சங்கம், அனைத்திந்தியத் திரைப்பட வர்த்தக சங்கம் ஆகியவற்றின் பல்வேறு பொறுப்புக்களைப் பல்வேறு கால கட்டங்களில் ஏற்றுச் சிறப்பான பணிபுரிந்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர்களுள் இவரும் ஒருவர்.

Koviloor Digital Library

சோமு, லெ., (17-9-1937)

இலுப்பைக்குடி
நற்சாந்துபட்டி
அமைப்பாளர்

புகழ்பெற்ற பெ.ராம. குடும்பத்தில், பெ.ராம.ராம. லெட்சுமணன் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். இவர் கோவையில் தொழில் செய்து வருகிறார். இயல்பாகவே இலக்கிய ஆர்வலரான இவர் மிகச் சிறந்த ஓர் அமைப்பாளர் ஆவார். எனவே, பல புதிய அமைப்புக்களை உருவாக்கியும், பல அமைப்புக்களின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டும் அவற்றின் வாயிலாகத் தமிழுக்கும், சைவத்திற்கும் நிறையத் தொண்டுகள் செய்து வருகிறார்.

கோயமுத்தூர் நகரத்தார் சங்கத்தில் பொறுப்பாளராக இருந்த போது, சங்கத்திற்குச் சொந்தக் கட்டிடம் உருவாகப் பெரிதும் காரணமாக இருந்தார். இலுப்பைக்குடிக் கோவில் குடமுழுக்கின் போது, அக்கோவில் அறங்காவலர் பொறுப்பில் இருந்த இவர், குடமுழுக்கு சிறக்கவும், மலர் நல்லமுறையில் வெளிவரவும் பெரிதும் துணை செய்தார்.

இவரது மூதாதையர் திருக்கொள்ளம்புதூர்க் கோவிலைத் திருப்பணி செய்துள்ளனர். அக்கோவிலுக்குத் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற முயற்சி எடுத்ததோடு, அவ்விழா நினைவாகப் பெ.ராம. குடும்பத் திருப்பணிகள் என்ற சிறந்த மலரொன்றையும் வெளியிட்டார்.

வள்ளலார் பாடல்களிலும், கண்ணதாசன் கவிதைகளிலும் மிக்க ஈடுபாடு கொண்ட சோமு, கோவை மாவட்ட சன்மார்க்க சங்கத் தலைவராகப் பணியாற்றியிருக்கிறார். கண்ணதாசன் விழாக்கள் பலவற்றை நடத்தி அவர் புகழைப் பரப்புவதைத் தம் குறிக்கோளாகக் கொண்டவர். கோவையில் சங்கப்பலகை என்ற அமைப்பை உருவாக்கி அதன் சார்பில் பல இலக்கியக் கூட்டங்களை நடத்தி வருகிறார்.

சொந்தமாகப் பெரியதொரு நூலகத்தைக் கோவையில் தம் இல்லத்தில் உருவாக்கி வருகிறார்.

சோலையப்பன், டாக்டர். அரு., (6-10-1946)

மாத்தூர் - அரும்பாக்கூர்
தேவகோட்டை
வேளாண்மை ஆராய்ச்சி அறிவியலாளர்

அருணோதயம் பதிப்பக நிறுவுநர் அருணன் – கல்யாணி ஆச்சியின் மகன். வேளாண்மை அறிவியல் துறையில், குறிப்பாகக் கரும்பு உற்பத்தியில் பூச்சிக் கட்டுப்பாடு ஆராய்ச்சியில் தொடர்ந்து உழைத்துப் புதிய நெறிகளைக் கண்டுபிடித்து 30க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டு அகில உலகப் புகழ் பெற்றுள்ளார்.

கரும்புப் பூச்சிகளை மருந்தடித்துக் கட்டுப்படுத்துவதால் ஏற்படும் சுற்றுச் சூழல் மாசுபடுதலைத் தடுக்க இவர் புதுவழி காட்டியுள்ளார். உயிரியல் தொழில் நுட்ப அறிவியல் முறையில் எதிரிப்பூச்சிகளைப் பெருமளவில் வளர்த்து வெளியிட்டுக் கரும்பில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி கரும்பு விளைச்சலைப் பன்மடங்கு பெருக்கலாம் என இந்தியாவில் முதன்முதலாக இவர் நிரூபித்துக் காட்டியுள்ளார்.

'ஒரு தாய் மக்கள்' முதலிய சிறுகதை நூல்களும் விந்தைமிகு வேளாண்மை, கரும்பிற்குப் பயிர்ப்பாதுகாப்பு, விவசாயக் களஞ்சியம் போன்ற வேளாண்மை நூல்களும் சில புதினங்களுமாக 48 நூல்கள் இவர் எழுதி வெளிவந்துள்ளன. மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 'மதுரக்கரும்பு' இதழின் பொறுப்பாசிரியராய்ப் பணியாற்றியுள்ளார். விவசாயக் களஞ்சியம், கரும்பிற்குப் பயிர்ப் பாதுகாப்புக் கையேடு ஆகிய இவரது நூல்கள் தமிழக அரசின் பரிசுபெற்றுள்ளன. வேளாண்மை விஞ்ஞானியாகக் காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பால் தேர்வு செய்யப்பட்டு 1982 ஆம் ஆண்டில் உலகநாடுகள் பலவற்றுக்கும் சென்று வந்துள்ளார். இவரது பி.எச்டி ஆய்வுக் கட்டுரைக்கு 1990 இல் சிறந்த ஆசிய விருதாகிய UWA விருது கிடைத்துள்ளது. தமிழ்நாடு அரசின் கரும்புப் பயிர்ப் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவின் செயலாளராகத் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் இவர் பணியாற்றியுள்ளமை இவரது ஆராய்ச்சி அறிவுத் திறனுக்குக் கிடைத்த பெருஞ் சிறப்பாகும்.

Koviloor Digital Library

சோழபுரம்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், செம்பனூர், சொக்கநாதபுரம், மதகுபட்டி, ஒக்கூர் வழியாக 40 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

மாத்தூர், பிள்ளையார்பட்டி ஆகிய இரு நகரக் கோவில்களைச் சேர்ந்த 26 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகிறார்கள். இது, சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இவ்வூரில் பழமையானதும், ஒக்கூர் சி.கரு. சி மற்றும் கி.கரு.சி.கரு. குடும்பத்தாரால் திருப்பணி செய்யப் பெற்றதுமான அறம் வளர்த்த நாயகி உடனான அருள்மொழிநாதர் கோவில் எனும் சிவன் கோவில் சிவகங்கை அரச குடும்ப நிருவாகத்தில் உள்ளது.

இவ்வூர் மாத்தூர் உறையூர்ப்பிரிவு நகரத்தாரின் குலதெய்வக் கோவிலாகத் தீப்பாய்ந்தாள் அம்மன் கோவில் ஒன்றும் உள்ளது. இப்பிரிவுப் பங்காளிகள் தங்கள் வீடுகளில் ஒவ்வொரு திருமணம் நிகழும் போதும் தீப்பாய்ந்தாள் படைப்பினைப் பொதுப் படைப்பாகப் படைத்து வருகின்றனர்.

இவ்வூர் நகரத்தார் தைப்பொங்கலன்று அம்மன் கோவிலில் பொங்கல் வைத்த பிறகே தத்தம் வீட்டில் பொங்கல் வைப்பது மரபு. இங்கு நடைபெறும் ஆனித்திருவிழாவில் ஏழாம் திருவிழா மண்டகப் படியினை சுப.க.அ. பொதுக் குடும்பத்தினர் செய்து வருகின்றனர்.

யோகி சுத்தானந்த பாரதியார் தவக்குடில் கட்டி வாழ்ந்த சோழபுரத்தில், அவர் பெயரால் நடைபெறும் உயர்நிலைப் பள்ளிக்கு சுப. க. அ. குடும்பத்தார் நிலம் நன்கொடையாக வழங்கியுள்ளர். இக்குடும்பத்தினரே காளையார்கோவிலில் சுகந்தவனப் பெருமாள் கோவிலை நிருவகித்தும் வருகின்றனர்.

இவ்வூரைச் சேர்ந்த சுபகண குடும்பத்தினர் 90 ஆண்டுகட்கு முன்னர்த் திருப்பரங்குன்றம் சரவணப் பொய்கைக்குக் கல்படித்துறை கட்டிக் கொடுத்துள்ளர். மேலும் இராமேசுவரம் கோவில் மூன்றாம் பிராகாரத்தில் நந்தவனம் அமைத்துக் கடந்த 90 ஆண்டுகளாக இறைவன் பூசைக்கு மலர் அளித்து வருகின்றனர். இவை இவ்வூர் நகரத்தார் செய்யும் குறிப்பிடத்தக்க சில அறப்பணிகளாம்.

டாக்டர். இராசா சர் அண்ணாமலை செட்டியார் பரிசு

தமிழ் எழுத்தாளர்களையும் தமிழில் புதியதுறை நூல்கள் தோன்றுவதையும் ஊக்குவிக்கும் வகையில் இப்பரிசு ஆண்டுதோறும் இராஜா சர் அண்ணாமலை செட்டியார் பிறந்த நாளாகிய செப்டம்பர் 30 ஆம் நாளில் வழங்கப்படுகிறது. அண்ணாமலை செட்டியாரின் புதல்வர் எம்.ஏ. சிதம்பரமும் அவரது மைந்தர் ஏ.சி. முத்தையாவும் ‘எம்.ஏ.சி. அறக்கொடை’யை நிறுவியுள்ளனர். பரிசு வழங்கும் ஆண்டிற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த தமிழ்நாவல் அல்லது இசை, நடனம், ஓவியம், சிற்பம் பற்றித் தமிழில் எழுதப்பட்ட நுண்கலை விளக்க நூல், தமிழக வரலாறு, தமிழ்ப்பண்பாடு, சிறந்த தமிழாராய்ச்சி நூல் ஆகியவற்றுள் ஒரு நூலை எழுதிய ஆசிரியருக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது. ஓராண்டு படைப்பிலக்கியத்திற்கும் அடுத்த ஆண்டு ஆராய்ச்சி மற்றும் புதியதுறை நூலுக்கும் என முறையே இப்பரிசு வழங்கப்பெறுகிறது. தொடக்கத்தில் பத்தாயிரம் ரூபாய் பரிசாக வழங்கப் பெற்றது. 1983 முதல் இருபதாயிரம் ரூபாய் பரிசு வழங்கப் பெறுகிறது. ஒவ்வோராண்டும் ஜனவரி முதல் நாளில் இப்பரிசுப் போட்டி பற்றிய அறிவிப்பு நாளிதழ்களில் வெளியிடப்படுகிறது.

இப்பரிசு முதன் முதலாக 1975 ஆம் ஆண்டு ‘எங்கே போகிறோம்?’ என்ற நாவலுக்காக அகிலனுக்கு வழங்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டில் அதுவரை தமிழில் வெளிவந்த சிறந்த நுண்கலை பற்றிய நூல்களை எழுதியவர்கள் என்ற முறையில் ‘கூத்தநூலு’க்காக திரு. சதுசு. யோகியாருக்கும் ‘யாழ் நூலு’க்காக விபுலானந்த அடிகளுக்கும் ‘பஞ்சமரபு’க்காகத் தெய்வ சிகாமணி கவுண்டருக்கும் ‘கருணாமிர்தசாகரம்’ நூலுக்காக ஆபிரகாம் பண்டிதருக்கும் வழங்கப் பெற்றது. நீல. பத்மநாபன், நா. பார்த்தசாரதி ஆகியோர் படைப்பிலக்கியத்திற்காகவும் மா.பா. குருசாமி ‘இதழியல்கலை’ வரலாற்று நூலுக்காகவும் வ. தேனப்பன் ‘ஒன்பது நகரக் கோவில்கள்’ ஆய்வு நூலுக்காகவும் இப்பரிசைப் பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். 1980 இல் கவியரசர் கண்ணதாசனுக்குச் சிறப்புப் பரிசாக இப்பரிசு வழங்கப் பெற்றது.

Koviloor Digital Library

தமிழண்ணல் (12-8-1928)

(இயற்பெயர் : பெரியகருப்பன், டாக்டர். இராம)

இளையாத்தங்குடி - கழனிவாசற்குடி
நெற்குப்பை
தமிழறிஞர்

முத்துராமன் செட்டியார் – பார்வதி ஆச்சியின் மகனாகப் பிறந்த இவர் இராமசாமி செட்டியார் கல்யாணி ஆச்சியின் வளர்ப்பு மகனாவார். மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியிலும், திருவையாறு அரசர் கல்லூரியிலும் பயின்று தமிழ் வித்துவான் பட்டம் பெற்றார். காரைக்குடி மீனாட்சி சுந்தரேசர் உயர்நிலைப் பள்ளியில் 1948 முதல் பதின்மூன்றாண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

ஆசிரியப்பணியின் போதே, தனியாகக் கற்றுச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இளங்கலை, முதுகலைப் பட்டங்களைப் பெற்றார். தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றதும் மதுரை, தியாகராசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக 1961 முதல் பத்தாண்டுகள் பணியாற்றினார்.

அப்பணிக் காலத்தில் 'சங்க இலக்கிய மரபுகள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து, முனைவர் பட்டம் பெற்றார். 1971 இல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். இணைப் பேராசிரியர் (1973), அஞ்சல் வழிக்கல்விப் பேராசிரியர் (1975), தமிழியல் துறைப் பேராசிரியர் (1980) எனப் படிப்படியாக உயர்ந்து மொழிப் புல ஒருங்கிணைப்பாளராகப் (1988) பணியாற்றி 1989 இல் ஓய்வு பெற்றார். பல்கலைக் கழக மானியக்குழு, ஓய்வு பெற்றவருக்கு அளிக்கும் சிறப்பு நிலைப்பேராசிரியர் பதவியை இரண்டாண்டுக்காலம் (1990 – 91) இவருக்கு அளித்தது.

சங்க இலக்கியம், ஒப்பிலக்கியம், ஆராய்ச்சி நெறிமுறையியல், இலக்கியத் திறனாய்வு, இலக்கணம், தமிழ் இலக்கிய வரலாறு, பயன்பாட்டு மொழியியல் போன்ற பல்வேறு துறைகளிலுமாக முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்; நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார்.

டாக்டர். மு.வ. வைப்போல, இவரும் ஆய்வறிஞராகவும், படைப்பாசிரியராகவும் ஒருங்கே திகழும் சிறப்புடையவர். சைவ சித்தாந்தத்தில் சிறப்பிடம் பெறும் வினைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எழுதிய 'நச்சு வளைய'மும் செட்டிநாட்டு வாழ்க்கை முறைகளை நடப்பியல் பாங்கில் சித்திரிக்கும் 'வாழ்வரசி'யும் புனைகதை உலகில் தனியிடம் பெறத்தக்க சிறப்புடைய நாவல்கள்.

இவர் சிறந்த கவிஞருமாவார். இவர் எழுதிய 'மாமதுரை மீனாட்சி' என்ற 101 அடிப்பாடல் 1973 இல் இவருக்குப் பொற்கிழிப் பரிசினைப் பெற்றுத் தந்தது.

பல்கலைக் கழக மானியக்குழு தமிழண்ணலை 1981 – 82 ஆம் கல்வி ஆண்டில் தேசியப் பேராசிரியராகத் தேர்வு செய்து சிறப்பித்தது. அவ்வாண்டில் இவர் இந்தியப் பல்கலைக் கழகங்கள் பலவற்றிற்கும் சென்று தமிழ்மொழி, இலக்கியம் பற்றிப் பலசொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். 1982 ஆம் ஆண்டில் இவர் சாகித்திய அக்காதமியின் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பத்தாண்டுகள் பணியாற்றியுள்ளார். 1985 முதல் ஆறு ஆண்டுகள் ஞானபீட விருதுக்குரிய தமிழ்மொழிக் கருத்துரைஞர் குழுவில் பணியாற்றினார்.

1983 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற உலக இந்து சமயக் கருத்தரங்கிலும், அதே ஆண்டு ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற, அனைத்துலக மானுட அறிவியல் கழக மாநாட்டுக் கருத்தரங்கிலும் இவர் ஆய்வுக் கட்டுரைகள் அளித்துள்ளார்.

தமிழகப் புலவர் குழுவின் உறுப்பினர். 1989 இல் தமிழக அரசு இவருக்குத் 'திரு.வி.க.விருது' வழங்கிச் சிறப்பித்தது.

'இந்து' நாளிதழில் 'உங்கள் ஆங்கிலத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற பகுதி வெளிவந்து கொண்டிருக்கிறது. அதே அடிப்படையில் 'தினமணி' நாளிதழில் தமிழண்ணல் 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்னும் தலைப்பில் தொடர்ந்து எழுதினார். அத்தொடர் தமிழ்கூறு நல்லுலகினால் மிகவும் போற்றி வரவேற்கப்பட்டது.

சிங்கப்பூரில் தமிழ்ப்பாட நூல்கள் உருவாக்குவதற்குரிய கருத்துரைஞராக இவரைச் சிங்கப்பூர் தேசிய வெளியீட்டாளர் குழுமம் அழைத்தது. அழைப்பையேற்றுச் சென்ற இவர் அப்பணியைச் சிறப்புற முடித்துத் திரும்பி யுள்ளார். தாம் பயின்ற கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் நிருவாகக்குழுத் தலைவரான பெருமையும் இவருக்குண்டு.

முயற்சி, தகுதி, பண்பு இவற்றால் வாழ்வில் உயர்ந்து, தமிழ்மொழிப் பற்றாளராகவும், அப்பற்றினைச் செயல் வடிவில் இடைவிடாது நிறைவேற்றிக் கொண்டிருக்கும் செயல் வீரராகவும் விளங்கும் தமிழ்மூதறிஞர் இவர்.

Koviloor Digital Library

தமிழிசை இயக்கம்

தமிழ் மொழிக்கு நகரத்தார் செய்துள்ள தொண்டுகளில் தமிழிசையைப் போற்றிக் காக்க இயக்கம் கண்டமை வரலாற்றுச் சிறப்புடையதாகும். இசையரங்குகளில் தமிழ்ப்பாட்டுக்கள் பாடப்படாமல் பிறமொழிப் பாடல்களே மேலாண்மை கொண்டபோது தமிழிசை மறையாமல் காக்கத் தமிழிசை இயக்கத்தை நகரத்தார் நடத்தினர். இராசா சர் அண்ணாமலை செட்டியார் முன்னெடுத்துச் சென்ற இவ்வியக்கத்தில் அவருக்குத் தோள்கொடுத்துச் செட்டிநாட்டில் தமிழிசை மாநாடுகளும் இசை அரங்குகளும் நடத்தப்பெற்றன. தமிழ்க்கலை வளர்ச்சிக்காகத் தோற்றுவிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரியில் தொடக்க காலத்தில் தெலுங்கு வடமொழி ஆங்கிலம் அறிந்திருக்கவேண்டும் என்றும் இசைக்குத் தமிழறிவு தேவையில்லை என்றும் இசைத் துறையாரால் பாடத்திட்டம் வகுக்கப்பட்டது. இது அண்ணாமலை செட்டியாரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட போது அவரது இதயத்தின் வெளிப்பாடாக எழுந்தது தமிழிசை இயக்கம்.

1936 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூட்டப்பட்ட இசை மாநாட்டில் தமிழிசை வளரவும் தமிழிசையில் புதிய பாடல்கள் தோன்றவும் வேண்டும் என்ற விருப்பம் தெரிவிக்கப்பட்டது. அவ்விருப்பும் எழுச்சியும் 1941 இல் (14–8–41 – 17–8–41) நான்கு நாள் நடைபெற்ற முதல் தமிழிசை மாநாடாகக் கால் கொண்டது. இம்மாநாட்டுக்கு இராசா சர் அண்ணாமலை செட்டியார் விடுத்த வாழ்த்துரையில் ''தாய்மொழியில் உள்ள பாடல்களை இசையரங்கு முடிவில்தான் பாடுவதென்று தள்ளிவைத்தல் தமிழ் நாட்டில் மட்டுமே காணப்படுகிறது. பிறமொழியில் உள்ள பாடல்களின் ஓசையைத்தான் தமிழர்கள் இப்போது அறிய முடிகின்றதேயன்றி முற்றிலும் பாட்டின் உணர்ச்சியுட் புகுந்து அனுபவிக்க முடிவதில்லை. முற்றிலும் தமிழ்ப்பாடலால் அமைந்த இசையரங்குகள் விரைவில் நடைபெறக் கூடும்'' என்று எழுதியிருந்தார். அதற்கு முன்னரே 16.11.1940 இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் தமிழிசை வளர்ச்சிக் கென்றே ரூபாய் பத்தாயிரம் அண்ணாமலையார் நன்கொடை வழங்கி யிருந்தார். பல்கலைக்கழக மாணவருள் சிறந்த தமிழிசைப் பாடல் பாடுபவர்க்குப் பரிசும் அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழிசை வளர்ச்சிக்கென அவர் வழங்கிய கொடையை மாநாடு பாராட்டியது.

அன்றைய பிரபல இதழ்கள் அனைத்தும் தமிழில் பாடவேண்டும் என்ற இயக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து எழுதின. இராசா சர் அண்ணாமலை செட்டியார் தாம் பேசும் கூட்டங்களில் எல்லாம் தமிழிசையை வலியுறுத்தியும் தமிழிசையை எதிர்ப்போரின் வாதங்கட்குப் பதில் கூறியும் பேசி வந்தார். இதனால் வீறு கொண்டெழுந்த செட்டிநாட்டு இளைஞர்கள் தமிழிசை இயக்கத்தில் முனைந்து பணியாற்றித் தமிழிசை பரவப் பணிசெய்ய முன்வந்தனர். தேவகோட்டையில் 1942 இல் தமிழிசை மாநாடு கூடியது. செட்டிநாட்டரசர், ரசிகமணி டி.கே.சி, கல்கி, டைகர் வரதாச்சாரியார் இன்னும் பல சான்றோர் உரையாற்றினர். எம்.எஸ். சுப்புலெட்சுமி உள்ளிட்ட இசைவாணர் அனைவருமே முழுவதும் தமிழ்ப்பாடலே பாடினர். அந்நாளில் ஐயாயிரம் பேருக்கு மேல் மூன்று நாட்களும் கூட்டம் திரண்டு வந்ததாம். செட்டிநாடே ஒருங்கு கூடியது போல் நகரத்தார் தமிழிசைக்கு அளித்த ஆதரவு கண்டு மனமகிழ்ந்த அண்ணாமலையார் ''தமிழ் இசையின் வளர்ச்சிக்காக இம்மாநகரில் இப்பொழுது கூட்டப் பெற்றிருக்கும் இம்மாநாடு தமிழ் மக்களுக்கு உண்டாகியிருக்கும் ஊக்கத்தையும் தமிழ் இசையில் அவர்களுக்குள்ள விருப்பத்தையும் நன்றாக விளக்கிக் காட்டுகிறது. செட்டிமார் நாட்டின் நடுவில் இப்போது கூடியுள்ள மாநாட்டைப் போலவே இன்னும் பல மாநாடுகள் தமிழ்நாடு முழுவதிலும் கூட்டித் தமிழ் மக்களுக்குத் தமிழ் இசையில் உள்ள ஆர்வத்தை யாவரும் அறியச் செய்யவேண்டும்'' என்று உரையாற்றினார்.

தேவகோட்டையில் தமிழிசைப்பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. மாநாடு சிறக்கவும் பள்ளி தோற்றுவிக்கவும் உழைத்த டி.ஆர். அருணாசலத்தை அனைவரும் பாராட்டினர். எல். இராமநாதன், நா. அண்ணாமலை முதலியோரும் நன்கு உழைத்தனர். தொடர்ந்து ஆத்தங்குடியிலும் தமிழிசை மாநாடு நடைபெற்றது தமிழிசைப் பள்ளியும் தொடங்கப் பட்டது. 30.12.42 இல் ஆத்தங்குடியில் நடைபெற்ற தமிழ் இசையரங்கை இராசா சர் அண்ணாமலை செட்டியார் தொடங்கிவைத்தார். குமரன் 1942 இல் தமிழிசைச் சிறப்பிதழ் வெளியிட்டது.

தமிழிசை வளர்ச்சிக்காக 30–9–41 இல் அண்ணாமலையார் இரண்டாம் நன்கொடையாக ரூ. 15000/ வழங்கினார். புதிய தமிழிசைப் பாடல்களை எழுதச் செய்து அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நூலாகத் தொகுத்து வெளியிட்டது. பாலகவி வே. இராமநாதன் செட்டியார் எழுதிய இசைப்பாடல்கள் தொகுப்பில் இடம் பெற்றன. பனையப்பட்டி வினைதீர்த்தான்

Koviloor Digital Library

செட்டியார் தமிழிசை வளர்ச்சிக்காகத் தமிழிசைப் பாடல்களால் முழு இசையரங்கு நிகழ்த்தத் தொடங்கினார். தமிழிசைப் பாடல் கழகக் கூட்டத்தில் 3–11–42 இல் பண்டிதமணி கதிரேசனார் 'பல்கலைக்கழகச் சார்பான கூட்டங்கள் எல்லாவற்றிலும் கடவுள் வாழ்த்து தமிழிலேயே பாடப்பட வேண்டும்' என ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். துணைவேந்தர் அதனை ஏற்றுக் கொண்ட செய்தி 7–11–42 இல் அறிவிக்கப்பட்டது.

பொதுமக்களிடையே குறிப்பாகச் செட்டி நாட்டில் தமிழிசை பொலிவுறத் தொடங்கியது. 10–9–43 இல் நடைபெற்ற வள்ளல் அழகப்பரின் செல்வமகள் உமையாள் இராமநாதன் திருமணத்தில் கோட்டையூரில் இயலிசை நாடகமாகிய முத்தமிழும் களிநடம் புரிந்தன. பல்லாயிரவர் கூடிய அத்திருமண விழாவில் இராசா சர் அண்ணாமலை செட்டியார், 'இந்தத் திருமணம் தமிழிசை இயக்கத்திற்குப் பேராதரவாக விளங்கியது. தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' என்று பாராட்டிப் பேசினார்.

தமிழிசை இயக்கத்தை எதிர்த்து ஆனந்தவிகடன் ஒரு கருத்துப்படம் வெளியிட்டது. தமிழிசை குறித்து மறுப்புக் கட்டுரையும் வெளிவந்தது. இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேலைச்சிவபுரி சன்மார்க்கசபை 12–1–44 இல் அ.வ. இராமநாதன் செட்டியார் தலைமையில் ஒரு கண்டனக் கூட்டம் நடத்தியது.

'தமிழிசைச் சங்கம்' 19–4–43 அன்று இராசா சர் அண்ணாமலை செட்டியார் தமிழறிஞருடன் கூடி ஆய்ந்து உருவாக்கிய அமைப்பாகும். இன்றுவரை மு.அ. சிதம்பரம் அவர்களின் வழிகாட்டுதலில் பண் ஆராய்ச்சி மாநாடு, தமிழிசைக்குப் பரிசளிப்பு ஆகியவற்றை இச்சங்கம் நடத்திவருகிறது. 21–10–52 இல் ராஜா அண்ணாமலை மன்றம் திறக்கப் பெற்றது. அங்கு அண்ணாமலை அரசர் சிலை 16–11–64 இல் நிறுவப்பட்டது. இராசா சர் முத்தையா செட்டியாரால் மதுரையில் தமிழிசைச் சங்கம் 21.1.1974 இல் தோற்றுவிக்கப் பெற்றது. ராஜா முத்தையா மன்றம் 1978 இல் கட்டப்பெற்றது. 1979 இல் முத்தைய வேளுக்குத் தமிழிசைக் காவலர் பட்டம் வழங்கப் பெற்றது.

25.3.1944 இல் இராசா சர் அண்ணாமலை செட்டியார் தன் வாழ்க்கைக் குறிக்கோளை விளக்கித் தன் கைப்பட எழுதிய குறிப்பில் 'தமிழ் நாடெங்கும் தமிழிசை முழங்க வேண்டும் என்பது எனது ஆவல்' எனக் குறிப்பிட்டுள்ளார். அவருடைய குறிக்கோள் நிறைவேற எழுந்த இயக்கத்தில் நகரத்தார்கள் இணைந்து வெற்றியீட்டினர் என்பதை வரலாறு என்றும் நினைவில் கொள்ளும்.

தமிழ்க்கடல் இராய.சொ. திருவுருவச் சிலை

தமிழ்க்கடல் இராய.சொ. காலமானதும், ஆண்டுதோறும் அவரது நினைவு நாளை இந்துமதாபிமான சங்கம் விழாவாகக் கொண்டாட வேண்டும் என்ற வேண்டுகோள் ஒன்றையும் அதற்குரிய வைப்பு நிதியாக ரூ 3500 ஐயும் இராயவரம். ப.வ.இராம. குழந்தையன் செட்டியார் சங்கத்திற்கு அளித்தார். அதன்படி ஆண்டுதோறும் நினைவுநாள் கொண்டாடிய சங்கத்தார் 1976 இல் அவரது திருவுருவச் சிலை ஒன்றை நிறுவுவதென முடிவெடுத்தனர்.

அச்சிலைக்கு ஆகும் செலவினைத் தாங்கள் ஏற்பதாகக் காரைக்குடி சா.நா.அ.சொ. அண்ணாமலை செட்டியார், கோட்டையூர் அ.க.அ.சித.அழ. சிதம்பரம் செட்டியார், இராயவரம் ப.வ.இராம. குழந்தையன் செட்டியார் ஆகிய மூவரும் இசைந்தனர். இவர்கள் மூவரும் தமிழ்க்கடல் வாழ்ந்த காலத்தில் அவர் ஆணையிட்ட நற்பணிகளுக்கெல்லாம் நிதி உதவி செய்து வந்த இயல்புடையவர்கள்.

சிலையைச் சங்கத்திற்கு எதிரே சிவன் கோவில் ஊருணியின் மேல் கரையில் அமைப்பதென முடிவெடுத்தனர். அதற்குரிய 20×20 சதுர நிலைத்தைத் தமிழக அரசு நன்கொடையாக அளித்தது. சிலையைச் சென்னை நந்தனம் ஆர். செகன்னாதன் எனும் சிற்பி வடித்துக் கொடுத்தார்.


சிலைதிறப்பு விழாவைச் சங்கம் தமது அறுபத்தாறாம் ஆண்டுவிழாவோடு இணைத்துப் பெரிய அளவில் நடத்தியது. சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம் தலைமையில், அறநிலையத் துறை அமைச்சர் இராம. வீரப்பன் சிலையைத் திறந்து வைத்தார். அப்போது உருவாக்கிய இராய.சொ. நினைவு மலரைக் குன்றக்குடி அடிகளார் வெளியிட்டார்.

நான்கடி உயரப் பீடத்தின்மீது கைத்தடியை ஊன்றிய வண்ணம் தமிழ்க்கடல் நிற்பது போல முழு உருவச்சிலையாக வடிக்கப் பெற்றிருப்ப தாகும் இச்சிலை. தமிழ்க்கடலின் திருவுருவச் சிலை, அவரால் வளர்க்கப்பெற்றதும், அவரை வளர்த்ததுமான இந்து மதாபிமான சங்கத்திற்கு எதிரே, அவரே கட்டிக் கொடுத்த இராய.சொ. உமையாள் மண்டபம் எனும் மேல்மாடி உள்ள சங்கக் கட்டிடத்தைப் பார்த்துக் கொண்டே நிற்பது மிகவும் பொருத்தமான ஓர் அமைப்பாகும். தமிழ்க் கடலின் நினைவைச் சங்கம் போற்றிய முறை நினைந்து பாராட்டி மகிழத்தக்கது.

Koviloor Digital Library

தமிழ்த்தாய் கோவில்

காரைக்குடியில் கம்பன் அடிப்பொடியின் சிந்தனையில் உருவாகிக் கம்பன் அறநிலையால் செயல்வடிவம் தரப்பட்டுக் கம்பன் மணிமண்டப வளாகத்தில் தமிழ்த்தாய் திருக்கோவில் அமைந்துள்ளது. 24.4.1975 இல் தமிழ்த்தாய் கோவிலுக்குக் கால்கோள் நாட்டிய தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தமிழக அரசின் சார்பில் இக்கோவிலுக்கு ரூபாய் ஐந்துலட்சம் வழங்கினார். பணிநிறைவெய்தும் தருவாயில் அப்போது மத்திய இணையமைச்சராயிருந்த ப. சிதம்பரம் முயற்சியால் தமிழக அரசு மேலும் ஐந்துலட்ச ரூபாயை இக்கோவிலுக்கு வழங்கியது.



தமிழ்த்தாய் கோவில்

ஆறுபட்டை, ஆறுநிலை, ஆறுவிமானங்கள் கொண்ட கோவிலாக மணிமண்டபத்திற்கு வலப்புறம் இது அமைந்துள்ளது. இதன் நடுவிமானத்தின் கீழ் தமிழ்த்தாய் வடக்கு நோக்கி மணிமண்டபத்தைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருக்கிறாள். வலப்புறம் அகத்தியரும் இடப்புறம் தொல்காப்பியரும் இடம்பெற்றுள்ளனர். சுற்றுக் கோவில்களாக வடகீழ்க் கோடியில் வள்ளுவர், தென்கோடியில் இளங்கோ, வடமேற்கோடியில் கம்பர் ஆகியோர் விமானங்கள் அமைந்துள்ளன.

தமிழ்த்தாய் சிலையைக் கம்பன் அடிப்பொடியும் மறைந்த சிற்ப கலாசாகரம் ம. வைத்திநாத ஸ்தபதியும் இணைந்து வடிவமைத்தனர். அச்சிலையைப் பற்றி ''நடராச மூர்த்திக்குப் பிறகு இம்மூர்த்தியே பல்லாற்றானும் கலை தத்துவம் விஞ்ஞானம் ஆகிய மூன்றின் கருத்துச் செறிவும் உடையது. எங்களைப் போன்ற ஸ்தபதிகளுக்கு இந்த இருமூர்த்திகளுந்தான் அற்புதப் பொருளாக உள்ளன'' என்று வைத்திநாத ஸ்தபதி குறிப்பிடுகிறார். இவர் தொடங்கிய கோவில் கட்டுமானப் பணியை இவர் மகனும் மாமல்லபுரம் சிற்பக்கல்லூரி முன்னாள் முதல்வருமான வை. கணபதி ஸ்தபதி நிறைவு செய்தார். இக்கோவிலுக்குக் கால்கோள் நாட்டிய கலைஞர் கருணாநிதியே 16.4.1993 இல் இதனைத் திறந்து வைத்தார்.

உலகிலேயே மொழியைத் தெய்வமாக்கிக் கோவில் கட்டவேண்டும் என்ற இலட்சியம் ஒரு நகரத்தார் சிந்தனையில்தான் முதன்முதலில் தோன்றியது. அந்த இலட்சியத்தை அவரது மறைவிற்குப் பின்னும் கம்பன் அறநிலையும் தமிழக அரசும் நிறைவேற்றியுள்ளன. கம்பன் அடிப்பொடி சா. கணேசனின் இலட்சியக்கனவு நனவாகிச் செட்டிநாட்டின் மையப் பகுதியாகிய காரைக்குடியில் கம்பன்மணிமண்டப வளாகத்தில் தமிழ்த்தாய் கோவிலாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது.

தமிழ்நாடு

கலைத்தந்தை கருமுத்து தியாகராசர் தோற்றுவித்த தமிழ் நாளிதழ் 'தமிழ்நாடு'. தமிழ்நாடு நாளேட்டின் முதல் இதழ் 20.10.1951 இல் வெளிவந்தது. மதுரையில் தொடங்கப்பட்ட இவ்விதழ் சில ஆண்டுகள் சென்னையிலிருந்தும் வெளிவந்தது. 1968 வரை 17 ஆண்டுகள் தமிழ்நாடு நாளிதழ் வெளிவந்தது. மீண்டும் 1973 இல் வார இதழாக வெளிவரத் தொடங்கி 1978 வரை வெளியிடப் பெற்றது.

முதல் இதழில் கருமுத்து தியாகராசர் தன் கையொப்பமிட்டுப் பின்வருமாறு இதழின் குறிக்கோளை விளக்கியுள்ளார்:

''தமிழ்நாடு'' என்னும் பெயர் பூண்டு இந் நாள் இதழ் இன்று வெளிவருகின்றது. 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி' எனப் பெருமைபெற்ற பழந்தமிழர் உரிமை, கலை, பண்பாடுகளைப் பாதுகாக்கத் தோன்றும் இவ்விதழைத் தமிழ்நாடு போற்றி வரவேற்கும் எனத் துணிந்து தொடங்குகின்றோம்''

இளமையிலேயே இலங்கைத் தமிழர்க்காகப் போர் தொடுத்த வலிமைவாய்ந்த அவரது எழுதுகோல் தமிழ்மொழி, தமிழர் பண்பாடு ஆகியவற்றைக் காக்கப் போர்தொடுக்கத் தமிழ்நாடு இதழ்த் தேரேறிப் புறப்பட்டது. தமிழ் நாளிதழோடு சேர்ந்து 'அப்சர்வர்' என்னும் ஆங்கில இதழையும் கலைத்தந்தை தொடங்கினார்.

Koviloor Digital Library

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் அரசியற் கலையறிஞர், எம். இரத்தினசாமி இரு இதழ்களுக்கும் பொறுப்பாசிரியர். கலைத் தந்தை நிருவாக ஆசிரியராகவும், கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார் 'தமிழ்நாடு' ஆசிரியராகவும் இருந்தார்கள்.

தமிழ்நாடு நாளிதழின் இனிய எளிய தூய தமிழ் நடை தமிழ் இதழ்களின் போக்கில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. தினமணி, மித்திரன் போன்ற இதழ்கள் தங்கள் தமிழ்நடையை ஓரளவு மாற்றிக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்த தமிழ்நாடு இதழ் ஒருசமயம் உயரளவாக 30000 படிகள் விற்பனை ஆயிற்று. இதழ்கள் அன்று பயன்படுத்தி வந்த பிறமொழிச் சொற்களுக்குரிய தூய தமிழ்ச்சொற்கள் அறிஞர்களால் ஆராய்ந்தறியப்பட்டு நாள்தோறும் புதிய புதிய சொற்கள் தமிழ்நாடு இதழில் வெளிவந்தன.

'குழு, வாரியம், வேட்பாளர், அமைச்சர், பேருந்து, ஓட்டுநர், நடத்துநர், ஆளுநர், நடுவண் அரசு, மாநில அரசு, அரசாணை, உரிமம், பணவிடைத்தாள், வட்டம், மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர், வருவாய்த்துறை, குற்றவியல் நீதிபதி, குடநீராட்டு, தொடர் கூட்டம், கூட்டத்தொடர்' போன்ற தூய தமிழ்ச் சொற்களைத் தமிழ்நாடு இதழ் பெரிதும் வழக்கில் கொண்டுவந்தது. இவ்வகையில் பிற நாளிதழ்களுக்கு முன்னோடியாக விளங்கியது.

தமிழ்நாடு இதழில் பணியாற்றிய எம்.எஸ்.பி. சண்முகம், கலையன்பன் சுப.இராமன், லெ. சுந்தரம் ஆகியோர் சிறந்த இதழாளர்களாகப் புகழ்பெற்றனர்.

நமது மாநிலம் சென்னை மாநிலம் என்று வழங்கப்பட்டு வந்தபோது 'தமிழ்நாடு' எனப் பெயர்மாற்றம் செய்ய வேண்டும் என்ற போராட்டத்திலும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் தமிழ்நாடு இதழ் முன்னின்று அஞ்சாமையுடன் அரசை எதிர்த்து, ஆணித் தரமான வாதங்களை முன் வைத்துத் தலையங்கங்கள் தீட்டியது. இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டுக் காவல்துறையின் தாக்குதலுக்கு ஆளாகிக் காயம்பட்டு இரத்தம் ஒழுகும் மாணவர்களின் புகைப்படத்தைத் தமிழ்நாடு இதழ் வெளியிட்டது. தியாகராசரின் தூய தமிழ்ப்பற்றுக்கும் அஞ்சாமைக்கும் இன்றும் சான்றாகத் திகழ்பவை தமிழ்நாடு இதழ்களாகும். இதழ் நடையின் வாயிலாகவும் எழுதிய செய்திகளாலும் தமிழ்நலம் காக்க இடையறாது போராடி வந்த தமிழ்நாடு நாளிதழ் தமிழ்இதழ்கள் வரலாற்றில் தனிமுத்திரையைப் பதித்துள்ளது.

தமிழ்நேசன்

கோலாலம்பூரில் **10.10.1924** இல் கி. நரசிம்ம அய்யங்காரால் இவ்விதழ் தொடங்கப்பெற்றது. தொடக்கத்தில் வார இதழாகவும் பின்னர் வாரம் இருமுறை, மும்முறையாகவும் வெளிவந்து **20.2.1937** முதல் நாளிதழாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழை **1946** ஆம் ஆண்டிலிருந்து வலையபட்டி மலையாண்டி செட்டியார் குடும்பத்தினர் நடத்தி வருகின்றனர். மலையாண்டி செட்டியாரின் மகன் நாகப்ப செட்டியார் இப்போது இதழைப் பதிப்பித்து வெளியிட்டு வருகிறார். **1947** முதல் **1952** வரை தமிழ்நேசன் நாளிதழின் ஆசிரியராகவும் இவரே பணிபுரிந்தார். **1953** ஆம் ஆண்டிலும் பின்னர் **1962** முதல் **1976** வரையிலும் முருகு சுப்பிரமணியன் தமிழ்நேசன் ஆசிரியராகப் பொறுப்பேற்றுச் சிறப்புடன் இதழை வளர்த்தார். இடையே மலையாண்டி செட்டியார் மாப்பிள்ளை புலவர் மு. சேதுராமன் ஆசிரியராகப் பணியாற்றினார்.

தரமாகப் பதிப்பிக்கப்பெற்று மிகச்சிறந்த அச்சமைப்புடனும் மிகுதியான பக்கங்களுடனும் இந்நாளிதழ் வெளிவருகிறது. தமிழ் எழுத்தாளர்களுக்கு ஊக்கமூட்டிப் பல்வேறு போட்டிகள் நடத்திச் சிறந்த சிறுகதைகளுக்குப் பவுன் பரிசு அளித்து எண்ணற்ற தமிழ் எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமை தமிழ் நேசனுக்கு உண்டு. தமிழர் பிரச்சனைகளுக்காகத் தமிழ்நேசன் தீட்டிய தலையங்கங்கள் காலத்தால் அழியாதவை. தமிழகத்தை விட்டு மலேசியாவில் வாழும் தமிழ்மக்களிடையே மொழி உணர்வை வளர்த்து மொழிப்பற்றை ஊட்டுவதாகவும், புலம்பெயர்ந்து வாழும் அம்மக்கள் நலனுக்குப் பாடுபடுவதாகவும் இவ்விதழ் திகழ்கின்றது.

தமிழ்வாணன் (22-5-1926 - 10-11-1977)

(இயற்பெயர் : இராமநாதன், லெ)

மாத்தூர் - மணலூர்
தேவகோட்டை
இதழாசிரியர்

இலட்சுமணன் செட்டியார் – பிச்சம்மை ஆச்சியின் மகன். தொடக்கத்தில் இவர் பெற்ற முறையான கல்வி பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி. பின்னாளில் இதழியல் மற்றும் எழுத்துத் துறைக்கு வந்த பின்னர், தாமாகவே அனைத்துத் துறைகளிலும் தம்மைத் தகுதிப்படுத்திக் கொண்டார். எனினும், சித்த மருத்துவத் துறையில் முறை சார்ந்த தேர்வுகள் எழுதி எம்.பி.எச்.எஸ்., ஏ.எம்.பி., பி.ஐ.எம். போன்ற பட்டங்களைப் பெற்றவர்.

2663

Koviloor Digital Library

தொடக்கத்தில் குழந்தைகளுக்காக எழுதத் தொடங்கிய இவர், தம் எழுத்துக்களை வெளியிட 'ஜில்ஜில் பதிப்பகம்' என ஒரு பதிப்பகத்தை 1940களின் தொடக்கத்தில் வானதி திருநாவுக்கரசு செட்டியாருடன் கூட்டாகத் தொடங்கி நடத்தினார். பின்னர் சக்தி காரியாலய உரிமையாளர் வை. கோவிந்தன் நடத்திய சிறுவர் இதழாகிய 'அணில்' இதழின் ஆசிரியர் பொறுப்பை 1944 இல் ஏற்றார். பின் இவருக்குக் 'குமுதம்' ஆசிரியர் எஸ்.ஏ.பி. அண்ணாமலையுடன் தொடர்பு ஏற்பட்டது.



தமிழ்வாணன்

எஸ்.ஏ.பி. இவரை ஆசிரியராகக் கொண்டு 1948 இல் 'கல்கண்டு' எனும் இதழைத் தொடங்கினார். இதழின் உரிமையாளர் எஸ்.ஏ.பி. எனினும், 'கல்கண்டு' நடத்தும் முழு உரிமையையும் தமிழ்வாணனுக்கே வழங்கி விட்டுத் தாம் தலையிடாமல் ஒதுங்கிக் கொண்டார். 1948 இல் இருந்து, தமிழ்வாணன் மறையும் வரை தொடர்ந்து 29 ஆண்டுகள் 'கல்கண்டு' இதழின் ஆசிரியராக இருந்து, அதனைத் திறம்பட நடத்தினார். 'தொடக்கத்தில் தமிழ்வாணன் செல்வாக்கால் கல்கண்டும், கல்கண்டு வாயிலாகக் குமுதமும் வளர்ந்தன' என்று சோமலெ. குறிப்பிடுவது இவரது வெற்றிக்குச் சான்று.

தமிழ் இதழ்களில் கேள்வி – பதில் பகுதியை முதன் முதலில் தொடங்கி, தமிழ் இளைஞர்களைக் கவரும் வண்ணம் சுவையுடன் அதனை நடத்திய பெருமை இவரைச் சாரும். கேள்விகளுக்கு இவர் தரும் பதில் அழுத்தமாகவும், நகைச்சுவையுடனும், வேடிக்கையாகவும் அமையும்.

இவர் 'கல்கண்டு' இதழின் ஆசிரியராக இருந்த காலம் முழுவதும், கல்கண்டின் 32 பக்கங்களையும், வாரந்தோறும், இவரே எழுதி வந்தார். மிகப் பின்னாட்களில், மிகச் சில பக்கங்கள் வேண்டுமானால் பிறர் எழுத்தில் வெளிவந்தன. ஓர் இதழை முழுமையாக ஒருவரே எழுதிப் பல ஆண்டுகள் தொடர்ந்து சுவையுடன் வெற்றிப்பாதையில் நடத்துவது வியத்தகு சாதனை.

உலகம் முழுவதிலும் உள்ள, பல்வேறு துறைகளையும் சார்ந்த செய்திகளைத் துணுக்குச் செய்திகளாக வெளியிட்டுத் 'தமிழ்வாணன் பாணி' என்ற ஒன்றை உருவாக்கினார். இவர் எழுதாத துறையோ, இலக்கிய வகையோ இல்லை என்று கூறலாம். துணுக்குகள், கேள்வி – பதில், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள் என அனைத்தையும் திறம்பட எழுதினார்.

குறிப்பாக நாவல் எழுதுவதில் இவர் மற்றொரு சாதனை ஏற்படுத்தியிருக்கிறார். 'சங்கர்லால்' என்ற துப்பறியும் நிபுணரை உருவாக்கித் தம் நாவல்கள் அனைத்திலும் உலவவிட்டார். 'கானன்டாயில்' உருவாக்கிய 'செர்லக் ஓம்சு' என்ற நிபுணரைப் பற்றி, அவரை வாழும் மனிதராகவே நினைத்து மக்கள் கடிதங்கள் எழுதியதைப் போல, சங்கர்லாலையும் பற்றித் தமிழ் இளைஞர்கள் நினைக்கும் வண்ணம் செய்தவர் தமிழ்வாணன்.

இவ்வாறு இதழியல் துறையில் பல்வேறு சாதனைகள் படைத்த தமிழ்வாணன், தம் நூல்களை வெளியிடுவதற்காக என்றே 1955 இல் மணிமேகலைப் பிரசுரம் என்ற பெயரில் ஒரு வெளியீட்டு நிலையத்தைத் தொடங்கினார். இன்று வரை 2000 நூல்களுக்கு மேல் வெளியிட்டுச் சாதனை படைத்த நிறுவனம் ஆகும் இது.

இராமநாதன் என்ற இயற்பெயருடைய இவருக்குத் தமிழ்வாணன் என்ற பெயரை வழங்கியவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆவார். இவரது எழுத்தில் காணப்பட்ட அனைத்துத் துறைகளிலுமான நுண்மாண் நுழைபுலத்தைப் பாராட்டி அருள்மொழி அரசு கிரிதாரி பிரசாத் 'அனைத்துத் துறை ஆற்றலாளர்' எனப் பொருள்படும் Master of All Subjects என்ற பட்டத்தை வழங்கினார்.

ஐநூறுக்கும் மேற்பட்ட நூல்களைப் பல்வேறு துறைகளிலுமாக இவர் எழுதியிருக்கிறார். உளவியல் அடிப்படையில் தனிமனித முன்னேற்றம் குறித்தும் தனிமனிதனின் குறை நிறை குறித்தும் இவர் எழுதியுள்ள நூல்கள் பல. எந்தத் துறையைப் பற்றி எழுதினாலும் படிப்பவருக்குப் புரியும் வண்ணம் எளிமையாகச் சிறுசிறு தொடர்களால் கவர்ச்சியாக எழுதும் ஆற்றலாளர் இவர்.

இவரது தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் இவருக்குரிய அடையாளங்கள் ஆகிவிட்டன. இவர் வாழ்ந்த காலத்தில் அஞ்சல் உறையில் முகவரி ஏதும் எழுதாமல் தொப்பியும் கறுப்புக்

Koviloor Digital Library

கண்ணாடியும் வரைந்து அஞ்சலில் சேர்த்துவிட்டால் அவ்வஞ்சல் உறை இவரைச் சென்று அடையும் அளவுக்கு இவை இவரது தனி அடையாளங்களாகத் திகழ்ந்தன. எனவே இன்றும் இவரது பிள்ளைகள் மணிமேகலைப் பிரசுரத்துக்குரிய அடையாள முத்திரையாக இவற்றையே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"துணிவே துணை" என்ற கொள்கையைப் பின்பற்றிய தமிழ்வாணன் அதனையே தம் நூல்களிலும் இதழிலும் குறிக்கோள் தொடராக இடம் பெறச் செய்தார். அவரது நூல்களைத் தொடர்ந்து படிக்கும் இளைஞர் உள்ளங்களில் இத்தொடரால் தன்னம்பிக்கையை வளரச் செய்தார்.

செய்திகள் தருவது, அறிவு வளர்ச்சி, பொழுது போக்கு என்ற மூன்று வகைகளிலும் கல்கண்டு இதழை வெற்றிக்கொடி நாட்டச் செய்த தமிழ்வாணன் நூல் வெளியீட்டிலும் நூல் விற்பனையிலும் மணிமேகலைப் பிரசுரத்தின் வாயிலாகப் புரட்சி செய்தவர் ஆவார்.

(பார்க்க : அணில், இரவி தமிழ்வாணன், கல்கண்டு, மணிமேகலை தமிழ்வாணன், லேனா தமிழ்வாணன்)

தர்ப்பணம் செய்தல்

இறந்தார்க்கு எள்ளும் தண்ணீரும் இறைத்து நீர்க்கடன் இயற்றுதலே தர்ப்பணம் ஆகும். நகரத்தார் சமூகத்தில் பஞ்சாங்கக்காரர் அமாவாசை தோறும் தர்ப்பணம் செய்பவர் இல்லத்துக்கு வந்து செய்துவைக்கும் வழக்கம் உள்ளது. தந்தையை இழந்தவர்கள் தர்ப்பணம் செய்யக் கடமைப்பட்டவர்கள். தாய் இறந்து தந்தையார் வாழ்ந்திருப்பின் தர்ப்பணம் செய்யும் வழக்கம் இல்லை. தாயார்க்குத் திதி கொடுத்தல் மட்டுமே உண்டு.

முதலில் பஞ்சாங்கக்காரர் தர்ப்பணம் செய்பவரின் (கர்த்தா) வலதுகை மோதிர விரலில் தர்ப்பைப் புல்லால் பவித்திரம் அணிவித்துச் சங்கல்பம் செய்து வைப்பார். வருடம், மாதம், அயனம், ருது, பட்சம் – திதி, வாரம், நட்சத்திரம் ஆகியவற்றைக் கூறி அமாவாசை தர்ப்பணம் செய்கிறேன் என்று பஞ்சாங்கக்காரர் சொல்வதைத் திருப்பிக் கூறிக் கர்த்தா சங்கல்பம் செய்கிறார். தர்ப்பைப் புல்லில் கட்டைப்புல் இரண்டு, இரண்டாகக் கிழக்கு மேற்கில் மூன்று புல்லும் நடுவிலே தெற்குப் பார்த்து நுனிப்புல்லாகிய கூர்ச்சம் அமையும் வண்ணம் போடுவர். தகப்பனார், பாட்டனார், முப்பாட்டனார் பேர் சொல்லி ஆவாகனம் செய்து எள்ளும் தண்ணீரும் தாம்பாளத்தில் விடுவர். பின்னர் கூர்ச்சத்தைப் பிரித்துப் போடவேண்டும். தர்ப்பணம் செய்து நிறைவெய்திய பிறகு பவித்திரத்தைக் கழற்றிவிடுவர். தாம்பாளத்தில் உள்ள எள், தண்ணீர், புல் ஆகியவற்றை ஊருணியில் அல்லது கிணற்றில் விடுவர். தந்தையை இழந்த மகன் தர்ப்பணம் செய்தபின்னரே சாப்பிடவேண்டும், விரதமிருந்து இரவில் பலகாரம் சாப்பிட வேண்டும் என்ற பழக்கமும் தந்தை உயிருடன் இருக்கும்பொழுது அமாவாசை அன்று இரவில் குழந்தைகள் பலகாரம் மட்டும் சாப்பிடக்கூடாது, கொஞ்சம் சோறாவது வாயில் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற பழக்கமும் நகரத்தார் சமூகத்தில் உள்ளன.

தனவணிகன்

1930 ஆம் ஆண்டில் கோட்டையூரில் இருந்து இந்த மாதஇதழ் வெளிவந்தது. இவ்விதழ் பற்றிய மதிப்புரை 'ஊழியன்' இதழில் காணப்படுகிறது. "இது தனவணிகப் பெருமக்கள் சமூக நலன் நாடி வெளிவரும் ஓர் தமிழ் மாதப் பத்திரிகை. இது அட்வகேட்ராமநாதன் செட்டியார், க.வீ.அழ. அழகப்ப செட்டியார், வி.ஆர்.எம். செட்டியார், ராம. ராமநாதன் செட்டியார், அரு. சோமசுந்தரம் செட்டியார், கருப்பஞ்செட்டியார் ஆகியோர் அடங்கப் பெற்ற ஓர் ஆசிரியர் கழகத்தாரால் நடத்தப்படுகிறது. சமூகத்தொண்டே முக்கிய நோக்கமாகக் கூறப்படினும் விரிந்த இலட்சியமும் அகன்ற உணர்வும் தாராளக் கொள்கைகளும் பத்திரிகையின் பல கட்டுரைகளிற் காணப் படுகின்றன" என ஊழியன் குறிப்பிடுகிறது. ஆசிரியப் பொறுப்பேற்றிருந்த அட்வகேட் ராமநாதன் செட்டியார் விலகிக் கொண்டபின் ஏ.கே. செட்டியார் ஆசிரியப் பொறுப்பேற்றார். இந்தியாவில் இவ்விதழ் நிறுத்தப்பட்டபின் பர்மா நகரத்தார் சங்கத்தினர் தனவணிகன் இதழை வாரந்தோறும் வெளியிட முன்வந்தனர். அவர்கள் அழைப்பின்பேரில் ஏ.கே. செட்டியார் அங்கு சென்று ஆசிரியப் பொறுப் பேற்றார். பர்மாவாழ் நகரத்தாரிடையே இவ்விதழ் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. 9–3–1933 முதல் பர்மாவிலிருந்து தனவணிகன் வெளிவந்தது. வெ. சாமிநாத சர்மா 1937 வரை இவ்விதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். தனவணிகன் வெளியிட்ட சங்கமலர்கள் போற்றிப் பாதுகாத்து வைக்கத் தக்க சிறப்பு உடையன. டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரும் தமிழ்ச்சான்றோர் பலரும் தனவணிகன் இதழ்களில் எழுதியுள்ளனர். கணக்குப் பரிசோதனை, இன்சூரன்ஸ் ஆகிய வணிகத் துறைகள் பற்றி 1936 இலேயே கட்டுரைகள் வெளியிட்ட ஒரே தமிழ் இதழ் என்ற சிறப்பு தனவணிகனுக்கு உண்டு. இந்த இதழ் 1941 வரை வெளிவந்தது.

Koviloor Digital Library

தனவைசிய நாட்டுத் தமிழ்க் கல்விக் கழகம்

கல்வித்தொண்டில் முன் நிற்கும் நகரத்தார்கள் தேசிய உணர்வையும் தமிழ் உணர்வையும் வளர்க்கும் வகையில் செட்டிநாட்டில் ஒரு பல்கலைக்கழகம் போன்ற அமைப்பையும் அதனோடு இணைந்த பல பள்ளிகளையும் தொடங்கத் திட்டமிட்டனர். 21-4-1925 இல் தனவைசிய நாட்டுத் தமிழ்க்கல்விக் கழகம் காணப்பெற்றது. தமிழ்க்கல்விச் சாலைகளைத் தனவைசிய நாட்டில் பல இடங்களிலும் நிறுவித் தமிழை வளர்ப்பதும், தமிழ்க்கல்வி வாயிலாகச் சமய அறிவு, நல்லொழுக்கம், நாட்டுப்பற்று ஆகியவற்றை வளர்ப்பதும் தலையாய நோக்கங்களாக இருந்தன. அடிமை இந்தியாவில் இருந்த ஆங்கிலக் கல்வி முறைக்கு மாற்றாக இக்கழகத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டனர். இராய.சொ. தலைவராகவும் சிறாவயல் மு. காசிவிசுவநாதன் செட்டியார் செயலாளராகவும் அ. புதூர் பிச. சுப்பிரமணியன் செட்டியார், தேவகோட்டை அ.வெ. தியாகராசா மற்றும் 13 பேர் உறுப்பினர்களாகவும் இக்கழகத்தை வளர்க்கத் தேர்வு செய்யப்பெற்றனர். மருதங்குடியில் காந்திபள்ளிக்கூடம் திறக்க ஏற்பாடு செய்யப் பெற்றது. பின்னர் சிறாவயல் சரசுவதி வித்தியாசாலை, அரண்மனை சிறுவயல் முத்தையா கலாசாலை, பாகனேரி முத்தையா கலாசாலை, காந்திநகர் காந்தி பெண் பாடசாலை, செயங்கொண்டபுரம் இராமநாதன் கலாசாலை, கண்டரமாணிக்கம் மெ.பெ.பெரி. தருமவித்தியா சாலை, இராயவரம் காந்தி பாடசாலை ஆகிய பாடசாலைகள், கழகச் சார்பில் நடைபெறலாயின. கொப்பனாபட்டி நகரத்தாரால் நடத்தப் பெற்ற மாணிக்கவாசக வித்தியாசாலையும் கல்விக் கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பெற்றது. அமராவதி புதூரில் தற்பொழுது நடைபெற்று வரும் குருகுலம் இக்கழகச் சார்பில் தொடங்கப்பட்டதேயாகும்.

தங்கும் விடுதியோடு இணைந்த இப் பள்ளிகளில் காலை 4 மணிக்கு மாணவர்கள் எழுந்து தேவாரம் திருவாசகம் பாரதி பாடல்கள் பாடி நாளைத் தொடங்குவராம். சிறாவயலில் சாண்டோ சோமசுந்தரம் செட்டியாரால் உடற்பயிற்சியும் கற்பிக்கப்பட்டது. நூற்புப் பயிற்சி, வள்ளுவர் கோவில், கடவுள் வழிபாடு இப்பள்ளிகளின் தனித்தன்மையாகும். செட்டிநாட்டுக் கல்விமுறை என்ற புதியகல்விக் கொள்கையை இக்கழகம் உருவாக்கியது. ஆனால் தொடர்ந்து இக்கோட்பாடு வெற்றிபெறுமாறு சூழ்நிலை அமையவில்லை. ஆயினும் கல்விப்பயிர் செழித்து வளர இது தூண்டுகோலாயிற்று.

தாணிச்சாவூருணி

கீழவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது. காரைக்குடி – தேவகோட்டைச் சாலையில் இராம்நகரில் இருந்து கண்டதேவிக்குச் செல்லும் கிளைச் சாலையில் இவ்வூர் உள்ளது. இவ்வூர் சொர்ண நாதபுரம் என்றும் வழங்கப் பெறுகிறது.

பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த 4 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டதேவி ஊராட்சி மன்றத்தில் இவ்வூரும் அடங்கும்.

முன்பு பிள்ளையார்பட்டி, மாத்தூர் ஆகிய இருகோவில்களையும் சேர்ந்த புள்ளிகள் பலர் (1953 இல் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் நூலின்படி 34 புள்ளிகள்) இவ்வூரில் வாழ்ந்து வந்தனர். 1824 இல் பிள்ளையார்பட்டிப் பங்காளிகள் தங்களுக்குப் பொதுவாகக் கற்பக முத்து விநாயகர் கோவிலையும் அதனைச் சார்ந்த தாணிச்சாவூருணியையும் அமைத்தனர்.

1960களில் இவ்வூரில் எழுந்த சில சிக்கல்களினால் இவ்வூர் நகரத்தார்களில் பெரும் பாலோர் காரைக்குடி அல்லது தேவகோட்டையில் குடியேறிவிட்டனர். 1967 இலிருந்து இந்த நான்கு புள்ளிகள் கொண்ட ஒரு குடும்பத்தினரே இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

கற்பகமுத்துவிநாயகர் கோவில் இவ்வூரைப் பூர்வீகமாகக் கொண்டவரும் இப்போது காரைக்குடியில் வாழ்ந்து வருபவரும் ஆகிய பிள்ளையார்பட்டி நகரத்தார் ஒருவரது நிருவாகத்தில் இருந்து வருகிறது. இப்போது இக்கோவிலின் திருப்பணி நடைபெற்று வருகிறது.

தாலாட்டு

ஆச்சிமார் பாடிய அழகிய தமிழ்க்கவிதைகள் தாலாட்டுப் பாடல்கள். இவை ஏட்டில் எழுதாக் கவிதைகள். மனத்தோட்டத்தில் பூத்த மகரந்தத் தேன்மலர்கள். எழுத்தெண்ணி இலக்கணம் பாராமல், காதில் கேட்கும் கவினுறு ஓசைச் சந்தத்தில் கணக்குட் பிழையாமல் கற்பனையோடு கலைநயம் மிகுந்தனவாய் ஆச்சியர் இயற்றிய பாடல்கள். பெரும்பாலும் மரபு வழியாக வயதில் முதிர்ந்த பெண்கள் பாட அவற்றைக் கேட்டு இளம்பெண்கள் பாடிப்பார்த்துத் தத்தம் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடி வழிவழியாக அடுத்த தலைமுறைக்கு வழங்கும் கவிதைச் சீதனம். ஓயாமல் இல்லத்தில் முழங்கும் திரைப்படப் பாடல்களின் தாக்கத்தால் வழிவழியாக வந்த

Koviloor Digital Library

தாலாட்டுப் பாடல் பழக்கம் இக்காலத்தில் குறைந்துவிட்டது நமது சமூகத்திற்கு ஒருவகைப் பண்பாட்டு இழப்பேயாகும்.

தாலாட்டுப் பாடல்கள் எளிய இனிய சொற்களால் இரண்டிரண்டு சீர்கள் வரும் வகையிலே அமைந்திருக்கும்.

ஆராரோ ஆரிரரோ
ஆரிரரோ என்கண்ணே
ஆரடித்தார் ஏனழுதாய்
அடித்தாரைச் சொல்லியழு

என இவ்வாறு இருசீர்களாகவும், மிக அருகி

மீன்பூக்க நிலவெரிக்க மின்னல்குளம் பெருக
மின்னலிலே காதவழி தம்பிநீ விளையாடி
வந்தாயோ
அச்சடிக்கப் பொன்விளைய ஆதிச்சர் உன்நாடு
வைத்திருக்கத் தந்தமகன் வாழுவான் நூறுகுடி

என்று நான்கு சீர்களாகவும் வரும்.

தாலாட்டுப் பாடல்களில் குலப்பெருமை, குடிச்சிறப்பு, தவம் செய்து பிள்ளை பெற்ற சிறப்பு, கடவுள் பற்றிய கதைகள், உறவுமுறைச் சிறப்புக்கள் முதலியன பொதுவாக இடம்பெறும்.

தவத்தால் விளைந்த தங்கமகன்

ஸ்ரீரங்கம் ஆடித்
திருப்பாற் கடலாடி
மாமாங்கம் ஆடி
மதுரைக் கடலாடிச்
சங்குமுகம் ஆடிச்
சாயாவனம் பார்த்து
முக்குளமும் ஆடி
முத்தி பெற்று வந்த கண்ணே

என ஒருதாய் பல்வேறு தீர்த்தமாடிப் புண்ணியப் பயனால் மகன் பிறந்த பெருமையைப் பாடுகிறாள்.

தெள்ளுதமிழ் வளர்த்த
தென்னவராம் பாண்டியர்க்குப்
பிள்ளைக்கலி தீர்த்த
பெருமானும் நீதானோ

என்றும்

வாடிய நாளெல்லாம் வருந்தித் தவமிருந்து
தேடிய நாள்தன்னில் செல்வமாய் வந்த
கண்ணோ
மலடி மலடியென்று வையகத்தார் ஏசாமல்
மலடி என்ற சொல்லை மாற்றப் பிறந்தாயோ

என்றும் தேடித் தவமிருந்து செல்வமகன் பெற்றதனைப் போற்றிப் பாடுகிறார்கள். இவ்வாறு பிறந்த குழந்தை தொட்டிலில் தூங்கும் அழகைப் பார்க்கப் பார்க்கத் தாய்க்குக் கற்பனை கரைபுரண்டோடுகிறது.

கரும்போ இனிதேனோ
கற்கண்டோ சர்க்கரையோ
சர்க்கரையோ முக்கனியோ
சாமி மருக்கொழுந்தோ
கொடிக்கால் மருக்கொழுந்தோ கண்ணம்மா
கோதைகையிற் பூச்சரமோ
சாதி மருக் கொழுந்தோ கண்ணம்மா
சாமி கொடுத்த பூச்சரமோ

என்று பெண் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுகிறாள் ஒரு தாய்.

ஆயிரம் முத்திலே - என் கண்ணே நீ
ஆராய்ந் தெடுத்த முத்தோ
தொண்ணூறு முத்திலே என் கண்ணே நீ
துணிந் தெடுத்த ஆணி முத்தோ
வைகை பெருகிவர
வார்ந்த மணல் ஊர்ந்துவர
ஊறிவந்த தண்ணியிலே
ஒட்டிவந்த கட்டி முத்தோ
பெருகிவந்த தண்ணியிலே
பின்னரைத்த சந்தனமோ
சந்தனமோ என் பொருளோ
சாமி தந்த தவப்பயனோ

என்று முத்தாக மணியாகப் பூவாகச் சந்தனமாக பிள்ளைகளைப் போற்றித் தாலாட்டுகின்றனர்.

குடிப்பெருமை குலப்பெருமை கூறல்

பரட்டைப் புளியமரம்
பந்தடிக்கும் நந்தவனம்
நந்தவனம் கண்திறந்து
நாலுவகைப் பூவெடுத்து
பூவெடுத்துப் பூசை பண்ணும்
புண்ணியவார் பேரேனோ....

என்றும்

வித்தகசாலை கட்டும்
வீமரோட பேரேனோ
பாடகசாலை கட்டும்
பாண்டியனார் பேரேனோ
குளிக்கக் குளமும் வெட்டிக்
கும்பிடவும் கோயில் கட்டி
அசராமல் அன்னமிடும்
அர்ச்சுனவார் பேரேனோ

என்றும்

முல்லைப்பூக் கட்டிடமாம்
முகப்பெல்லாம் உத்திரமாம்
முகப்பைத் திறந்துவிட்டால்
முல்லைப்பூ வாசனையாம்
உங்கள் ஐயா மூத்தவுக யோசனையாம்

என்று குழந்தை பிறந்த குலப்பெருமை குடிப்பெருமையைத் தாய் பாடுகிறாள்.

தெய்வக் கதைகள்

சொக்கருக்கு மீனாட்சி சோறு கொண்டுவரச் சற்று நேரம் கூடுதலாக ஆனதால் உண்ணும் நேரம் கடந்ததே என்றும் சோற்றில் கல்கிடக்கின்றதென்றும் நெல்கொண்டு எறிந்தாராம். மயங்கி விழுந்த மீனாள் அழுத குரல்

Koviloor Digital Library

கேட்டுத் 'தல்லாகுளம் விட்டுத் தமுக்கம் விட்டு, வையத்தில் உள்ளமட்டும் வரிசை கொடுத்தாராம்' மீனாளின் அண்ணனாகிய அழகர். இதே போல் வள்ளியை மணக்கவந்த வடிவேலன் மான்தேடிவந்த கதையையும், ஸ்ரீராமர் சீதையை மீட்டுவந்த கதையையும், அல்லி அர்ச்சுனர் கதையையும் தாலாட்டில் பாடும் மரபு உள்ளது.

தாய்வீட்டுப் பெருமை – உறவுநிலை

தன்னுடைய குழந்தைக்கு என்னென்ன சீர் தருவார்கள் தாய்வீட்டார் என்றும் அதிலும் குறிப்பாக அம்மான்மார் என்ன கொண்டு வருவார்கள் என்றும் எண்ணிஎண்ணி மகிழ்ந்து தாய்மார் பாடுவது மரபு.

"சங்கினால் பால் கொடுத்தால்
சந்தனவாய் நோகுமென்று
தங்கத்தினால் சங்குசெய்து
தருவார்கள் தாய்மாமன்"

என்றும்

அக்கரையின் சர்க்கரையும் அதிமதுரத் தென்னவட்டும்
கோடைப் பலாச்சுளையும் குலைசேர்ந்த மாங்கனியும்
போட்டு விளையாடப் பொன்னாலே அம்மானை
கட்டி விளையாடக் காசிச் சிண்டுமணி
வைத்து விளையாட வண்ணக் கிலுகிலுப்பை
ஓட்டி விளையாட ஒயிலா ரயில்வண்டி
சாதிக் களிப்பாக்கும் சங்குவெள்ளைச் சுண்ணாம்பும்
ஏலங் கிராம்பும் இளங்கொடிக்கால் வெற்றிலையும்
அத்தனையும் கொண்டு அறியவந்தார் அம்மான்மார்

என்றும் அம்மான்மார் தரும் சீரைப் பாடி மகிழ்வாள் தாய்

நகரத்தார் சமூகத்தின் மேன்மைநிலை, செல்வவளம், தெய்வபக்தி, கற்பனைவளம் ஆகியவற்றைத் தாலாட்டுப் பாடல்கள் காட்டுகின்றன.

திண்ணப்பன், டாக்டர். சுப., (19-6-1935)

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார்
தேவகோட்டை
தமிழ்ப் பேராசிரியர்

பள.தி. சுப்பிரமணியன் செட்டியார் – ஆனந்தவல்லி ஆச்சியின் மகன். பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ.யும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சீவகசிந்தாமணியின் மொழியமைப்புப் பற்றி ஆய்வு செய்து பி.எச்.டி பட்டமும் பெற்றவர். அதிராமபட்டினம் காதர்முகைதீன் கல்லூரியில் ஆசிரியப் பணி தொடங்கிய இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை (1960 – 67), மொழியியல் துறை (1967 – 69; 1972 – 79), மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை (1969 – 72; 1979 – 82), சிங்கப்பூர் தேசியக் கல்விக் கழகத்தின் நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் (1982 – 97) ஆகியவற்றில் தொடர்ந்து பணியாற்றியுள்ளார். தஞ்சைத் தமிழ்ப்பல்லைக்கழகம், கலிபோர்னியா பல்கலைக் கழகம், இலண்டனில் உள்ள கீழ்த்திசை மொழிக்கல்லூரி ஆகியவற்றில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகத்தின் தமிழ் மொழி பயிற்றுக் கருவிகள் உருவாக்கக் குழுவின் மதியுரைஞராகப் பணிபுரிந்துள்ளார்.

செந்தமிழும் நாப்பழக்கம் (3 தொகுதிகள்) சிங்கப்பூரில் தமிழ்மொழியும் இலக்கியமும், கணினியும் தமிழ் கற்பித்தலும் ஆகியவை இவரது நூல்கள். உலக அளவில் நடைபெறக்கூடிய பல்வேறு ஆய்வுக் கருத்தரங்குகளில் திறப்புரை ஆற்றியும் ஆய்வுக்கட்டுரைகள் அளித்தும் பங்கு பெற்றுள்ளார். இதுவரை நடைபெற்றுள்ள 9 உலகத்தமிழ் மாநாடுகளில் 8 மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரை அளித்த பெருமை இவரைச் சேரும். பல்வேறு பல்கலைக்கழகங்களின் முனைவர் பட்டத் தேர்வாளராக ஆய்வேடுகளை மதிப்பீடு செய்துள்ள இவர் பலருக்கு வழிகாட்டியாக இருந்து முனைவர் பட்டம் பெறத் துணை செய்துள்ளார்.

சிங்கப்பூரில் திருமுறை மாநாடு, திருக்குறள் விழா போன்றவற்றுக்கு மதியுரைஞராக இருந்து தமிழ்ப்பணி புரிகிறார். மாணவராக இருந்த பொழுதே சென்னை நகரத்தார் மாணவர் சங்கத்தின் செயலராகப் பொறுப்பேற்றுச் சங்கத்தைப் பதிவு செய்தவர் இவர். அதுபோலவே தென்னாற்காடு நகரத்தார் சங்கத்தையும் தொடக்க நிலைச் செயலராக இருந்து பதிவு செய்திருக்கிறார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நகரத்தார் ஆய்வுத் திட்டத்தின் செயலராக இருந்தார். மலேசியா தனவைசிய இளைஞர் சங்கத்தில் செயலராகப் பணியாற்றியுள்ளார். சிங்கப்பூரில் 'நகரத்தாரும் கோவிலும்' என்ற ஆய்வுக் கருத்தரங்கை முன்னின்று நடத்தியிருக்கிறார். நகரத்தார், நகரமலர் போன்ற நகரத்தார் இதழ்களிலும் பல்வேறு குடமுழுக்கு விழா மலர்களிலும் நகரத்தார் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அயல்நாட்டில் தமிழ்த்தொண்டு செய்வதோடு நகரத்தாரியல் ஆய்வுக்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்துவரும் பேராசிரியர் இவர்.

Koviloor Digital Library

திதி கொடுத்தல்

வளர்பிறை (சுக்கிலபட்சம்) தேய்பிறை (கிருட்டினபட்சம்) யில் எந்தத் திதியில் (நான்காம்நாள் சதுர்த்தி; ஐந்தாம் நாள் – பஞ்சமி) தாய் அல்லது தந்தை இறந்தாரோ ஒவ்வோராண்டும் அந்த மாதம் அந்தத் திதியில் ஆண்மக்கள் இறந்தவரின் நினைவைப் போற்றி அரிசி காய்கறி தானம் அளித்துப் பிண்டம் போட்டு வழிபடுவது 'திதிகொடுத்தல்' என்னும் சடங்காகும். திதி கொடுப்பவர் கர்த்தா ஆவார். செய்துவைப்பவர் உபாத்தியாயர் என்னும் பஞ்சாங்கக்காரர் ஆவார். கர்த்தாவை மணைப் பலகையில் உட்காரவைத்து, தர்ப்பைப் புல்லால் பவித்திரம் (மோதிரம்) அணிவித்து, பூணூல் அணிவித்து முதலில் சங்கல்பம் செய்துவைப்பார். நகரத்தார் இல்லங்களில் சிவப்புப்பட்டுப் பூணூல் பாதம் செதுக்கப்பட்ட காசித் தாம்பாளம் போன்றவை திதி கொடுப்பதற்காகவே மரபு வழியாகப் பேணி வைத்துக் கொள்ளப் பட்டிருக்கும். வர்ண கும்ப பூசை முதலிய தெய்வ வழிபாட்டின் போது பூணூலை இடது தோளில் இருந்து வலப்புறமும் பிண்டம் போடும்போது வலது தோளில் இருந்து இடதுபுறமும் அணிந்து கொள்வது மரபு. பஞ்சாங்கக்காரர் குடம், செம்பு ஆகியவற்றுக்கு நூல் சுற்றி மஞ்சளால் பிள்ளையார் பிடித்து கோமயம், பால், தயிர், தேன் ஆகியவற்றால் பஞ்சகவ்வியம் தயார் செய்து முன்னேற்பாடுகள் செய்வார். அதன்பிறகே சங்கல்பம் செய்துவைத்து, வாழையிலையில் அரிசி பரப்பி அதன்மேல் நீர் நிறைந்த கும்பம் அதன்மேல் மாவிலை தேங்காய் ஆகியவற்றையும் அதன்முன்னே மஞ்சளில் பிடித்த பிள்ளையாரை யும் வைத்து விக்னேஸ்வர பூசை, வர்ணகும்ப பூசை, பஞ்ச கவ்விய பூசை, தீபலெட்சுமி பூசை, பிதுர்கும்ப பூசை ஆகியவற்றைச் செய்துவைப்பார்.

நான்கு வாழை இலை போட்டு அரிசி, காய்கறிகள் வைத்து நான்கு அந்தணர்க்குத் தானம் அளித்துத் திதி கொடுப்பது மரபு. முதல் இலையில் உள்ளூர் நகரக்கோவில் குருக்கள் கிழக்கு முகமாக வீற்றிருப்பார். அவரை விஸ்வேதேவர் என்பது மரபு. பஞ்சாங்கக்காரர் வடக்கு முகமாக வீற்றிருப்பார். அது பிதுர்வர்ணம் ஸ்தானமாகும். ஆச்சாரியாரும் வடக்கு முகமாகவே வீற்றிருப்பார். அது காருண்ய பிதுர் ஸ்தானமாகும். மற்றொரு பஞ்சாங்கக்காரர் மேற்குமுகமாக வீற்றிருப்பார். அது மகாவிஷ்ணு ஸ்தானம் ஆகும். நால்வர் முன்பும் இலையில் அரிசி காய்கறி படைத்து அவர்களைத் தந்தை வடிவில் தாய் வடிவில் வந்து இப்பொருட்களை ஏற்று நிறைவெய்தி வாழ்த்துமாறு கர்த்தா வேண்டுவார். பாதத்தட்டில் வெற்றிலை பாக்கு வைத்து "இந்தச் சிரார்த்தத்தை காசியிலே கங்கையிலே வடபால விருட்சம் 108 திருப்பதியில் 1008 சிவாலயங்களில் ராமேஸ்வர புஷ்பவன காசியிலே செய்தால் எந்தப் பலன் உண்டாகுமோ அந்தப் பலனை அடியேனுக்குத் தந்து நன்மையைத் தந்து தீமையை விலக்கி ரட்சிக்க" என வேண்டி விஷ்ணு பாதத்தில் புஷ்பம் எள் தட்சணை வைத்து மனைவி நீர் விளாவக் கர்த்தா ஆச்சாரியன் பாதத்தில் வைத்து வணங்குவார்.

இறந்ததற்கு மறு ஆண்டு வரும் முதல் திதி தலைத் திதி அல்லது தலைத் திவசம் என்ற முறையில் சிறப்பாக நடத்தப்படும். உறவினர்கள், பங்காளிகள் ஆகியோரை அழைத்து, பஞ்சாங்கக்காரரையும், பிற அந்தணர்களையும் வீட்டிற்கு அழைத்து, விருந்து முதலியவற்றோடு தலைத்திதி நிகழும்.

அடுத்தடுத்த ஆண்டுகளில் வரும் திதி, இறந்தவரின் மகன் குடும்பத்தினரால் தங்கள் இல்லத்திலேயோ, பஞ்சங்கக்காரர் இல்லத் திலேயோ, ஏதாவது கோவிலிலேயோ கொடுக்கப்படுவதும் உண்டு.

ஒரு பாத்திரத்தில் அரிசி, உளுந்து, எள், வாழைப்பழம், தேன் ஆகியவற்றைக் கலந்து பிசைந்து மூன்று கூறாக்கி முந்தைய தலைமுறைகட்கு வைத்து எஞ்சியவற்றைச் சமமாக வைத்துப் பிண்டம் இட்டு அவற்றுக்குப் பூ சந்தனம் குங்குமம் சாத்தி இவற்றை ஒரு வாழை இலையில் வைத்துப் பாத்திரத்தில் இட்டு ஊருணியில் கொண்டுபோய் விடுவர். முன்னோர்க்குப் பசி தீர உணவு வழங்கல் இதன் பொருளாகும். ஆச்சாரிய தட்சணை கொடுத்துக் குருக்களிடம் திருநீறு பெற்றுக் கொள்ள வேண்டும். குழந்தை பிறத்தல், நெருங்கிய உறவினர் இறத்தல் ஆகிய தீண்டல்களால் திதி கொடுக்கஇயலாது போனால் புரட்டாசி மாளய பட்சத்தில் அத்திதி கொடுக்கப்படுவதுண்டு.

தியாகராசர் கல்வி நிறுவனங்கள்

ஆலைவேந்தராக விளங்கிய தியாகராசர் (து.க.) கல்வி வளர்ச்சிக்காக நல்கிய அறக்கொடைக ளுக்காகவே 'கலைத்தந்தை' எனப் போற்றிப் புகழப்பட்டார். "எந்தத் திக்கிலிருந்து மதுரைக்குள் நுழைந்தாலும் தியாகராசர் நிறுவிய ஆலையோ அவர் தொடங்கிய கல்லூரியோ நம்மை வரவேற்கும்" என்று சோமலெ குறிப்பிடுகிறார். தியாகராசரின் வாழ்க்கைப் பணிகளில் தொழில் ஆக்கத்திற்கு நிகராக இடம்பெற்று அவர்புகழை என்றென்றும் நிலைக்க வைத்திருப்பவை அவர் நிறுவிய கல்வி நிறுவனங்களே ஆகும். தமிழ் நாட்டுக் கல்வி வளர்ச்சிக்காகக் கோடி கொடுத்த

Koviloor Digital Library

கொடைஞர்களான அண்ணாமலை அரசர், வள்ளல் அழகப்பர் ஆகியோர் வரிசையில் தியாகராசரும் இடம் பெறுகிறார்.

தியாகராசர் கல்விக்காக ஐந்து அறக் கட்டளைகளை நிறுவியுள்ளார். 1944 இல் தியாகராசர் அறநிலை அமைக்கப் பெற்றது. இதற்குப் பல ஆலைகளில் பங்குகள் இருந்தன. 1948 இல் தியாகராசர் தரும வணிகம் உருவாக்கப்பெற்றது. இதன் வருவாய் அனைத்தும் கல்விக்கே செலவிடப்பட வேண்டும் என்று வரையறுக்கப் பெற்றிருந்தது. 1951 இல் 'தியாகராசர் கல்லூரி எண்டோமெண்ட் அறநிலை' தொடங்கப்பெற்றது. 1962 இல் 'தியாகராசர் அறப்பணிக்கழகம்' பதிவு செய்யப் பெற்றது. ஐந்தாவது அறக்கட்டளையாக தொழிற்கல்வி நிலையங்கள், வணிக மேலாண்மைக் கல்லூரி ஆகியவற்றின் செலவுகட்காக 'தியாகராசர் கல்வி அறநிலை' உருவாக்கப் பெற்றது.

11 பள்ளிகள், 4 கல்லூரிகள், 2 பல்தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவற்றைத் தியாகராசர் கல்வி அறநிலையங்கள் நிருவகித்து வந்தன. இவற்றுள் முதலாவதாகத் தொடங்கப்பெற்றது ஆ. தெற்கூரில் 1947 இல் நேரு பெருமகனாரால் திறந்து வைக்கப்பெற்ற விசாலாட்சி கலாசாலை உயர்நிலைப்பள்ளியாகும். இப்போது இது மேனிலைப்பள்ளி.

தியாகராசர் கல்வி நிலையங்களுள் மிகுபுகழ் பெற்றது தியாகராசர் கல்லூரி. மதுரையில் வைகையாற்றுக்கும் தெப்பக்குளத்துக்கும் இடையே அழகிய இயற்கைச் சூழலில் இக்கல்லூரி அமைந்துள்ளது. இராமநாதபுரம் சேதுபதி மன்னரின் மாளிகையை வாங்கி அதைக் கல்விக் கொடையாகக் கலைத்தந்தை வழங்கினார். எழில்வாய்ந்த புதிய கட்டடங்களும் நில அமைப்பிற்கேற்ப அங்கு கட்டப்பட்டுள்ளன. 1949 ஆம் ஆண்டு ஜூலை ஏழாம் நாள் இக்கல்லூரி தொடங்கப்பெற்றது. இக்கல்லூரி தென்மாவட்டங்களில் தமிழ் உணர்ச்சியை ஊட்டி வளர்த்த புகழ்வாய்ந்தது. இக்கல்லூரி வளர்த்த தமிழ் உணர்ச்சியில் உருவான பல இளைஞர்கள் பின்னாளில் தமிழக அரசியலில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றனர். 8 முதுகலைக் கல்வித் துறைகளும் ஆராய்ச்சித் துறைகளும் பல இளங்கலை அறிவியல் துறைகளும் கொண்டு ஆண்டுதோறும் 2000 மாணவர்கட்கு இக்கல்லூரி கல்விச் செல்வத்தை வழங்கி வருகின்றது. சைவ சித்தாந்த ஆராய்ச்சித் துறை இங்கு சிறப்புற இயங்கி வருகிறது. 1986 ஆம் ஆண்டு இக்கல்லூரி தன்னாட்சிக் கல்லூரி ஆகியது.

1956 இல் தோற்றுவிக்கப்பட்ட தியாகராசர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மதுரை மாவட்டத்தில் முதலாவது ஆசிரியப்பயிற்சிக் கல்லூரியாகும். தெப்பக்குளத்தின் மேற்குக் கரையில் அமைந்துள்ள இக்கல்லூரியின் உறுப்பாக நன்முறை மேல்நிலைப்பள்ளி ஒன்று இயங்கி வருகிறது.

கலைத்தந்தையின் கட்டிடக்கலை ஆர்வத் திற்கும் நுண்மாண் நுழைபுலத்திற்கும் சான்றாகத் திகழ்வது தியாகராசர் பொறியியற் கல்லூரி. திருப்பரங்குன்றம் மலைப்பகுதி நிலத்தில் கட்டிடம் கட்ட இயலாது எனப் பொறியாளர்கள் கூறியபோதும் கலைத்தந்தை தக்கசான்றுகளை எடுத்துக்காட்டி மலைச்சரிவின் நிலைக்கேற்ப அடுக்கடுக்காக அழகான கட்டடங்களைக் கட்டச் செய்தார். 1957 இல் தொடங்கப்பெற்ற இக்கல்லூரியில் கட்டடத் துறை, இயந்திரத்துறை, மின்சாரம் மற்றும் மின் அணுத்துறை, மின்அணு மற்றும் கணிப்பொறித் துறைகளில் பொறியியற் கல்வி கற்பிக்கப்படுகின்றது.

1961 இல் தொடங்கப்பெற்ற தியாகராசர் மேலாண்மைக் கல்லூரி மதுரை ஆண்டாள் புரத்தில் இயங்கிவருகிறது. எம்.பி.ஏ. பட்டப்படிப்பு முழுநேரம் மற்றும் பகுதிநேரப் படிப்பாக இங்கு கற்பிக்கப் பெறுகின்றது.

ஆ. தெற்கூரில் அமைந்துள்ள விசாலாட்சி பாலர் பள்ளி, விசாலாட்சி தொடக்கப்பள்ளி, விசாலாட்சி மகளிர் உயர்நிலைப்பள்ளி, விசாலாட்சி கலாசாலை மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றை இப்போது கருமுத்து. தி.சு. தியாகராசன் நிருவகித்து வருகிறார்.

மணப்பாறைப் பள்ளியையும், மதுரையில் உள்ள தியாகராசர் நன்முறை மேனிலைப்பள்ளி, தியாகராசர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தியாகராசர் மேலாண்மைக் கல்லூரி ஆகியவற்றையும் லாயல் நூற்பாலை நிருவாகிகள் கருமுத்து மா. தியாகராசனும் இராமசாமியும் நிருவகித்து வருகின்றனர்.

சேலத்தில் உள்ள தியாகராசர் பல்தொழிற் கல்லூரியை இராசேந்திரா நூற்பாலையின் நிருவாகியும் கருமுத்து தியாகராசஞ் செட்டியாரின் மாப்பிள்ளையும் ஆகிய சொக்கலிங்கம் செட்டியார் நிருவகித்து வருகிறார்.

மதுரையில் உள்ள தியாகராசர் கலைக் கல்லூரி, தியாகராசர் பொறியியல் கல்லூரி ஆகியவற்றைத் தியாகராசர் கல்லூரி அறநிலையின் அறங்காவலர் கருமுத்து. தி. கண்ணன் நிருவகித்து வருகிறார்.

கோனாபட்டில் சு.மு.இராம. முருகப்ப செட்டியார் குடும்பத்தாரால் தொடங்கி நடத்தப் பெற்ற சரசுவதி உயர்நிலைப்பள்ளி இடையில்

Koviloor Digital Library

சிலகாலம் தியாகராசர் கல்வி அறநிலையங்களின் பொறுப்பில் இருந்தது; பின்னர், தோற்றுவித்த குடும்பத்தாரிடமே ஒப்படைக்கப் பெற்றது.

பரவை தொடக்கப்பள்ளி, பசுமலை ஆதாரப் பள்ளி, வசந்தநகர் உயர்நிலைப் பள்ளி ஆகியவை இப்போதைய மீனாட்சி நூற்பாலை நிருவாகத்தாரிடம் இருந்து வருகின்றன.

அழகப்பா நகரில் உள்ள தியாகராசர் வித்தியாசாலையும், பல்தொழிற்பயிற்சிக் கல்லூரியும் கேரள அரசின் பொறுப்பில் உள்ளன.

தனிமனிதராகிய கருமுத்து தியாகராசர் கலைத்தந்தை என்னும் தம் பட்டத்திற்கேற்ப வாழ்நாள் முழுவதும் முயன்று தம் பெருங் கொடையால் உருவாக்கிய கல்விப் பேரரசின் அங்கங்களாகத் திகழும் இக்கல்வி நிறுவனங்கள் அவர்தம் இறவாப் புகழை என்றும் பரப்பும்.

தியாகராசன், க.மா., (27-5-1944)

மாத்தூர் - மணலூர்
ஆ. தெற்கூர்
வங்கியாளர்

கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார் – சிந்தாமணி ஆச்சியின் மகன். அமெரிக்காவில் உள்ள பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ., மற்றும் பிஎச்.டி. பட்டங்கள் பெற்றவர். ரோச் செஸ்டர் பல்கலைக் கழகத்தில் இரண்டாண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

லாயல் நூற்பாலையின் நிருவாக இயக்குநராகவும் தாமரை நூற்பாலையின் தலைவராகவும் இருந்த இவர் *1993* அக்டோபர் முதல் மதுரை வங்கியின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். அதன்பின் வங்கிக் கிளைகள் பெரும்பாலானவற்றைக் கணினி மயமாக்குதல் உள்ளிட்ட பல்வேறு நிருவாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வங்கியின் வருவாயைப் பெருக்கியதோடு மதுரை வங்கியின் புகழையும் உயர்த்தியுள்ளார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் தென்னிந்திய நூற்பாலை ஆய்வுக் கழகத்தின் (சித்ரா) ஆட்சிக்குழு உறுப்பினராகவும் இந்திய ஹங்கேரிய கூட்டுத் தொழிற் கழகத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றுத் தொண்டாற்றிய சிறப்பு இவருக்குண்டு.

கலைத் தந்தையின் பேரன் என்பதற்கேற்ப நவீனமுறைக் கற்சிற்பங்களை வடிக்கும் கைதேர்ந்த சிற்பியாகவும் இவர் திகழுகிறார்.

தியாகராசன் செட்டியார், கலைத்தந்தை கருமுத்து., (16-6-1893 - 29-7-1974)

மாத்தூர் - மணலூர்
ஆ. தெற்கூர்
கல்விக் கொடையாளர், ஆலை அரசர்

'கருங்குளத்தார் வீடு' எனப் புகழ்பெற்ற குடும்பத்தில் முத்துக்கருப்பன் செட்டியார் – வினைதீர்த்தாள் ஆச்சி ஆகியோரின் மகனாகத் தியாகராசர் தோன்றினார். ஆறு பெண்கள் நான்கு ஆண்கள் ஆகப் பத்து மக்கள் பிறந்த குடும்பத்தில் பத்தாவது பிள்ளையாகப் பிறந்தார்.



கருமுத்து தியாகராசன் செட்டியார்

புனர்பூச நட்சத்திரத்தில் மிதுன லக்கினத்தில் பிறந்த இவரது ஜாதகத்தில் ராகு, கேது தவிர ஏனைய ஏழு கோள்களும் ஒரே லக்கினத்தில் அமைந்திருந்தன. இதனை 'சப்த கிரக யோகம்' என்று கணித்துச் சொன்னவர்கள் 'இப்படியொரு ஜாதகத்தை இதுவரையில் கண்டதில்லை' என்றும் 'இவர் ஒன்று சாமியாராகப் போவார் அல்லது கோடீசுவரராக ஆவார்' என்றும் புகழ்ந்தனர். மலையாளம் தொட்டியத்துக் கருப்பர் இவர்களது குலதெய்வம். அத்தெய்வப் பெயராக இவரது அய்யாவுக்குக் கருப்பன்செட்டியார் எனப் பெயரிடப் பெற்றது. பட்டமங்கலம் இவர்களது ஊர். தந்தையார் முத்துக்கருப்பன் பட்டமங்கலத் தினின்று தம் ஆயாள்வீட்டு ஊராகிய ஆ. தெற்கூருக்கு வந்து குடியாகி வாழலானார். 'கருமுத்து' என்பது இவர்களது குடும்ப விலாசம் ஆயிற்று. அவ்விலாசத்தை உலகமெங்கும் பரவச் செய்தவர் கருமுத்து தியாகராசன் ஆவார்.

தெற்கூர் வெங்கட்ராமமையர் பள்ளியிலும் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்றார். ஒன்பதாம் வயதில் தந்தையை இழந்த தியாகராசரைச் சகோதரர்கள் இலங்கைக்கு

Koviloor Digital Library

அழைத்துச் சென்றனர். இலங்கையில் புனித தாமஸ் பள்ளி (Central College)யில் ஆங்கிலக் கல்வியும் ஈழத்துச் சித்தாந்தப் புலவர் சிற்கைலாச பிள்ளையிடம் தமிழும் சித்தாந்தப் பாடமும் பயின்றார். மதுரை வந்தபிறகு சுவாமி சைமன் என்னும் பிரெஞ்சு நாட்டுப் பாதிரியாரிடம் ஆங்கிலம் பயின்றார்.

எழுத்து வேட்கையும் இதழியல் துறையில் ஆர்வமும் இயல்பாகவே கொண்ட தியாகராசர் முதலில் இதழியல் துறையையே பணியாற்றத் தேர்ந்தெடுத்தார். 'மார்னிங் லீடர்' என்னும் ஆங்கில இதழில் செய்தியாளராகவும் துணை ஆசிரியராகவும் சேர்ந்தார். இலங்கையில் தோட்டத் தொழிலாளராகச் சென்ற ஒப்பந்தக் கூலிகளான இந்தியர் அனுபவித்த கொடுமைகள் ஏராளம். இந்தியர்க் கெதிராக இழைக்கப்பட்ட இன ஒதுக்கல் தீமைளை ஒழிக்க தியாகராசர் இதழ்வாயிலாகப் போராடினார். அவருடைய கண்டனக் கடிதங்களும் கவன ஈர்ப்புக் கட்டுரைகளும் பிரபலமான ஆங்கில இதழ்களில் வெளிவந்தன. அந்நாளில் மண்டபம் முகாமில் நோய்த் தடுப்புச் சோதனைக் காளாகும் இந்தியத் தொழிலாளர்க்குச் சேங்கொட்டையால் நெஞ்சில் சூடு போடுவார்கள். சேங்கொட்டைச் சூடு நெஞ்சில்பட்டதும் தீயாக எரியும்; தழும்பு பலகாலம் மறையாது; இது, காலகாலத்திற்கு அடிமைகள் எனப் பறைசாற்றும் முத்திரையாகும். ஆடுமாடுகள் போல மனிதர்க்குச் சூடுபோடும் இக் கொடுமை தியாகராசரின் போராட்டத்தால் நிறுத்தப்பட்டது. இந்தியத் தொழிலாளர்க்கு இலங்கையில் இழைக்கப்பட்ட தீமைகள் படிப்படியாகக் குறைந்தன. தியாகராசரைப் பத்திரிகைகள் பாராட்டின.

குஜராத்தைச் சேர்ந்த கல்யாணம்ஜி ராம்ஜி என்பார் மதுரையில் 'மீனாட்சி ஆலை' தொடங்க முன் வந்தார். இலங்கையில் ஜவுளி வணிகத்தில் ஈடுபட்டிருந்த அனுபவத்தால் தியாகராசரும் இந்த ஆலைத் தொடக்கப் பணிகளில் ஈடுபாடு கொண்டார். ராம்ஜி மதுரையில் தங்க விரும்பாததால் தியாகராசரிடம் ஆலையை ஒப்புவித்துச் சென்றுவிட்டார். முழுப் பொறுப்பையும் தியாகராசர் ஏற்றுக்கொண்டார். மீனாட்சி நூற்பாலை 1921 இல் இவருடைய பொறுப்பில் வந்ததும் அதற்குப் பங்குதாரர்களைச் சேர்க்கவும் முதலீட்டைப் பெருக்கவும் பருத்தி கொள்முதல் செய்யவும், எந்திரங்களால் நூற்கவும் அவர்பட்ட ஆரம்ப வேதனைகள் எண்ணத் தொலையாதவை. தொழிலாளர்க்கு வாரந்தோறும் சம்பளம் கொடுக்கச் செட்டிநாடு முழுதும் அலைந்து பொருள்திரட்டி வந்து உரியநேரத்தில் சம்பளம் தருவார். எத்தனையோ இடையூறுகள் வந்தபோதும் அவருக்குள் இருந்த ஏதோ ஒரு சக்தி அவரை உந்திக் கொண்டேயிருந்தது. சோதனைகளைச் சாதனைகளாக மாற்றினார். புதிய நூற்பு நெசவுக் கருவிகளைத் தம் ஆலையில் உள்ளூர் நிபுணர்களைக் கொண்டு வடிவமைத்து நிறுவினார். பருத்தி பயிரிடுவதை ஊக்குவித்து மதுரையின் சுற்றுப்புறப் பகுதிகளில் இருந்தே கொள்முதல் செய்யலானார். 1935 இல் கோவை சரோஜா ஆலை, 1945இல் மணப்பாறை தியாகராசர் ஆலை, சேலம் இராசேந்திரா ஆலை, 1953 இல் விருதுநகர் டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் கோவை கமலா ஆலை எனப் பல ஆலைகள் மீனாட்சி ஆலையோடு வந்து இணைந்தன. 1953 – 57 ஆண்டுகளில் சிலைமான் ருக்மணி ஆலை, பரவை மீனாட்சி ஆலை, தேனூர் சிவகாமி ஆலை, கப்பலூர் தியாகராசர் ஆலை ஆகியவற்றைப் புதிதாக உருவாக்கினார். கோவில்பட்டி லாயல் டெக்ஸ்டைல் மில்லும் இவர் கைக்கு வந்து சேர்ந்தது. பருத்தி பஞ்சு பிரிக்கும் பல தொழிற்சாலைகளையும் தியராகராசர் ஒப்புக் கொண்டார். ஆலை அரசர் என அனைவராலும் போற்றப்பட்ட தியாகராசர் நலிந்த பல ஆலைகளையும் எடுத்து நடத்த முன்வந்தார். கேரளாவில் உள்ள பார்வதிமில், விஜயமோகினி, லட்சுமி, அழகப்பா ஆலைகள் நமனசமுத்திரம் ஆலை ஆகியவை இவ்வாறு சேர்ந்தன. மொத்தம் 16 ஆலைகளை நிருவகித்து ஆலைத் தொழில் பேரரசையே நடத்தி வந்தார், கருமுத்து தியாகராசர்.

தொட்டதெலாம் பொன்னாகத் துலங்கச் செய்யும் தியாகராசரின் தொழில் திறனுக்கும் இராசிக்கும் அவர் தொடங்கி இன்று மிகச் சிறப்புடன் விளங்கும் மதுரை வங்கி ஒரு சான்றாகும். 1943 இல் மதுரை, மணப்பாறை, சேலம் ஆகிய ஊர்களில் 3 கிளைகள் ஆகத் தொடங்கிய மதுரை வங்கி இன்று 200க்கு மேற்பட்ட கிளைகளுடன் வளர்ந்துள்ளது. அதே ஆண்டில் இவர் தொடங்கிய மதுரை ஜெனரல் இன்சூரன்சு நிறுவனம் மிகச் சிறப்பாக நடைபெற்றுப் பின்னர் இந்திய ஆயுட்காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து விட்டது.

ஏறத்தாழ 3 கோடி ரூபாய்களைக் கல்விக்கென வழங்கி 20 கல்வி நிலையங்களைத் தியாகராசர் தொடங்கினார். இவற்றுள் முதலாவது 1947 இல் அவர் தம் சொந்த ஊரில் வாழ்க்கைத் துணைவியார் பெயரில் நிறுவிய ஸ்ரீ விசாலாட்சி கலாசாலையே ஆகும். மதுரையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்க வேண்டும் என்று பெருவிருப்பம் கொண்டிருந்த தியாகராசர் 1949 இல் தியாகராசர் கல்லூரியைத் தோற்றுவித்தார். தொடர்ந்து தியாகராசர்

Koviloor Digital Library

உயர்நிலைப்பள்ளிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, மேலாண்மை நிருவாகப் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றைத் தமது கல்விக் கொடையாக வழங்கியுள்ளார். தமது கல்வி நிறுவனங்களையும் மிக அழகான கட்டிடங்களால் பொலியச் செய்தார். சைவ உணவே அங்கு வழங்கப்படவேண்டும் என்ற கொள்கையைக் கண்டிப்புடன் உறுதியாகப் பின்பற்றினார்.

தியாகராசர் தமிழ்ப்பற்று மிக்கவர். நாள்தோறும் திருவாசகமும் திருக்குறளும் தவறாது உணர்ந்து ஓதி வந்தார். சங்க இலக்கியங்களைக் குறிப்பாகக் குறிஞ்சிப்பாட்டை அவர் முழுதும் மனப்பாடம் செய்திருந்தார். அவருடைய ஆழ்ந்த தமிழ்ப்பற்றின் காரணமாகவே பொருள் இழப்பையும் ஏற்றுக் கொண்டு கொள்கைப் பிடிப்புடன் 'தமிழ்நாடு' நாளிதழைப் பல்லாண்டுகள் நடத்தி வந்தார். மிகச் சிறந்த நூலகம் ஒன்றைத் தமது மாளிகையில் போற்றிக் காத்துவந்தார்.

ஆங்கிலம் தமிழ் இருமொழியிலும் நல்ல புலமை வாய்ந்தவர். சிறந்த மேடைப் பேச்சாளர். தமிழகத்தின் பல்வேறு மேடைகளில் தமிழ்மொழியின் சிறப்பு, சைவ சமயத்தின் மாண்பு ஆகியவை குறித்து ஆழமாகவும் அழுத்தமாகவும் உரையாற்றியுள்ளார். இராஜாஜி, பக்தவத்சலம் ஆகியோர் காலத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அரசின் அச்சுறுத்தலுக்கும் அஞ்சாது கிளர்ந்தெழுந்த வீரர் ஆவார். நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி, ஒளவை துரைசாமிப் பிள்ளை போன்ற புலவர்களுடன் நெருங்கிய நட்பு பூண்டு அவர்களுடன் உரையாடித் தமிழ் ஆய்வு மேற்கொள்வார்.

கலைத்தந்தை என்னும் பட்டம் அவருக்குப் பொருந்துவதைக் கலையுணர்வு சிறந்து விளங்கும் அவருடைய கட்டிடங்கள் உணர்த்துகின்றன. ஆலை, வளமனை, கல்லூரி எதுவாயினும் அவர் கட்டிய கட்டடம், "இது தியாகராசர் கட்டியது" எனப் பார்த்தவுடன் சொல்லக்கூடிய தனிச்சிறப்புடன் தியாகராச முத்திரையைக் காட்டிநிற்கும். அவரது கட்டிடங்களின் முகப்பு வாயில்கள் ஒரே மாதிரியாக அமைக்கப் பட்டிருக்கும். செதுக்கி இழைக்கப்பட்ட வெள்ளைக் கல் தூண்கள் இருபுறமும் கம்பீரமாக நிற்க, அவற்றில் வலுவான இரும்புக்கம்பிக் கதவுகள் இணைக்கப் பெற்றிருக்கும். அவற்றில் பித்தளைத் தகட்டில் யானைகளின் உருவம் பதிக்கப் பெற்றிருக்கும். சேர்மானக் கல்லில் வாழைத்தார் வடிவம், முந்திரிக்குலை, பன்னீர்ச்செம்பு, தாமரைப்பூ முதலியன செதுக்கப்பட்டிருக்கும்.

உள்வாயில் மரநிலைகளின் மேலே மீனாட்சி திருக்கல்யாண அர்த்த சிற்ப உருவம் பொருந்தியிருக்கும். புலியருவி வீழும் இவரது குற்றால மாளிகை கண்ணைக்கவரும் வண்ணக் கட்டிடக் கலைக்கும் தியாகராசரின் அழகுணர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாகும். அதைத் தமது விண்ணகரம் என்பார். அதற்கேற்ப அம்மாளிகையின் புல்தரையிலேயே இவர் இயற்கை எய்தினார்.

புதிய மதுரையின் சிற்பி தியாகராசரே ஆவார். மதுரையில் எப்பகுதியில் நுழைந்தாலும் அவரது ஆலைகளோ கல்விச்சாலைகளோ அங்கு நம்மை வரவேற்பதைக் காணலாம். கலைத் தந்தை தியாகராசர் கருமுத்து என்ற குடும்பப் பெயரைக் காலத்தால் அழிக்கமுடியாத வகையில் நகரத்தார் வரலாற்றிலும், தமிழ் மதுரை வரலாற்றிலும் தடம்பதித்துச் சென்றுள்ளார்.

தியாகராசா, அ.வெ., (1901 - . . .)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
தேவகோட்டை
ஆயுட்காப்பீட்டு இயக்கம் வளர்த்தவர்
எழுத்தாளர்

அ. வெங்கடாசலம் செட்டியார் – உமையாள ஆச்சியின் மகன். நகரத்தாரிடையே எழுச்சி ஊட்டிய இளைஞர் இயக்கமாகிய தனவைசிய ஊழியர் சங்கச் செயலாளராகத் தொண்டு புரிந்தார். மின் கருவிப் பொறியியல் கற்பதற்காக இலண்டன் சென்று வந்தார். ஆங்கில மொழி ஆற்றல் கைவரப் பெற்ற இவர் ஆங்கில இலக்கியங்களைப் படித்துச் சுவைத்துத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். லியோ டால்ஸ்டாய், பங்கிம் சந்திரர் ஆகியோரின் கதைகள் இவரால் தமிழாக்கம்பெற்று 'ஊழியன்' இதழில் வெளிவந்துள்ளன. பல்வேறு இதழ்களில் சிறுகதைகளும் எழுதியுள்ளார்.

முதன் முதலாக மனைவியை அழைத்துக் கொண்டு கப்பலேறிக் கடல்கடந்து அயல்நாடு சென்ற நகரத்தார் என்ற பெருமை இவருக்கு உண்டு. அந்நாளைய ஊழியன் இதழ் இதற்காக இவரைப் பாராட்டித் 'தனவணிகர் காதலியோடு கப்பல் ஏறுதல் என்ற புத்தம் புதுச் செயலை முதலில் செய்பவர் அ.வெ. தியாகராசா' என்று தலையங்கமே எழுதியுள்ளது.

தமிழகத்தில் செட்டிநாட்டுப் பகுதியில் ஆயுட்காப்பீட்டு இயக்கத்தைத் தோற்றுவித்து வளர்த்த முன்னோடி என்று இவரைக் கூறலாம். 'இன்சூரன்ஸ் தீனா' என்றே அனைவராலும் இவர் அறியப்பட்டார். தொடக்கத்தில் நேஷனல் இன்சூரன்சு கம்பெனியின் சிறப்பு முகவராக இருந்த இவர் அந்நாளில் சென்னையைவிடத்

Koviloor Digital Library

தேவகோட்டையில் அதிக எண்ணிக்கையில் ஆயுட்காப்பீடு செய்யச் செய்து பாராட்டப் பெற்றுள்ளார். பின்னர் 1935 இல் மிட்லண்ட் இன்சூரன்சு கம்பெனியைத் தாமே தொடங்கி மிகச் சிறப்புற நடத்தி வந்தார். அந்நாளில் இருந்த 185 நிறுவனங்களில் முதல் 5 இடத்துக்குள் இவரது நிறுவனம் வணிகத்தில் சிறந்துவிளங்கியது. ஆயுட்காப்பீடு தேசிய மயமாக்கப்பட்டபொழுது இவரது நிறுவனம் எல்.ஐ.சி.யோடு இணைந்தது.

திருக்குறட் கழகம்

திருக்குறளைப் பரப்பும் நோக்கத்தோடு காரைக்குடியில் 1953 இல் தொடங்கப் பெற்ற அமைப்பு. கண்டனூரைச் சேர்ந்த மு. தேனப்பன் என்ற பொறியியலாளர் தம் நண்பர்களோடு இணைந்து இக்கழகத்தைத் தோற்றுவித்தார். முனைவர் நாவலர் சோமசுந்தர பாரதியார் கழகத்தைத் தொடங்கிவைத்தார்.

ஆண்டுதோறும் மழலையர் வகுப்பு முதல் கல்லூரி மாணவர் வரை அனைத்துப் பிரிவினர்க்கும் தனித்தனியாகத் திருக்குறள் போட்டிகள் பலவற்றை நடத்திப் பரிசு வழங்கி வருகின்றது. தொடக்கத்தில் ஆண்டுதோறும் மூன்று நாட்கள் சிறப்பான முறையில் சிந்தனை அரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றோடு விழாப் பொலிவுற நடத்தப் பெற்றது. இப்போது ஒரு நாள் விழாவாக நடைபெறுகின்றது. இக்கழகத்தின் தலைவராக க.அழ.ராம. இராமசாமிச் செட்டியார் 25 ஆண்டுகளும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சித. சிதம்பரம் 15 ஆண்டுகளும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது இப்போது முனைவர் வெ.தெ. மாணிக்கம் இக்கழகத்தின் தலைவராவார்.

திருநாவுக்கரசு, வானதி ஏ., (12-8-1927)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
தேவகோட்டை
பதிப்பாளர்

ஏகப்ப செட்டியார் – காளியம்மை ஆச்சியின் மகன். இவர் சூட்டிக் கொண்ட புனை பெயர்கள் கல்கிதாசன், அரசு என்பன. தமிழ்ப்பண்ணையில் எழுத்தராகப் புத்தக உலக வாழ்க்கையைத் தொடங்கியவர். தியாகி இதழிலும், நவயுகப் பிரசுராலயத்திலும் ப்ணிபுரிந்துள்ளார்.

எழுத்தார்வம் இயல்பாகக் கொண்டு ஜில்ஜில், கோமாளி, மிட்டாய், வெண்ணிலா என்ற சிறுவர் இதழ்களை நடத்தியுள்ளார். 1955 இல் வானதி பதிப்பகத்தைத் தொடங்கினார். 'கங்கை புத்தக நிலையம்' இதன் துணை நிறுவனமாகும்.

தமிழ்ப் பதிப்புலகில் மணி முடியாகத் திகழும் வானதி பதிப்பகத்தின் வெற்றிக்கு இவரது அயராத உழைப்பே காரணமாகும். தரமான முறையில் தக்க நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுத் தமிழ்நூல்கள் விற்பனையில் பெருஞ் சாதனைகள் புரிந்துள்ளார். ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், ராஜாஜி, வாரியார், கண்ணதாசன், சாண்டில்யன், எம்எஸ். உதயமூர்த்தி ஆகியோரின் நூல்களைப் பல இலட்சம் தமிழ் மக்களின் இல்லங்களில் பரவச் செய்துள்ளார். சேக்கிழார் அடிச்சுவட்டில், செட்டிநாடும் செந்தமிழும் ஆகிய பெருநூல்கள் வெளியீடு, இவர் சமயத்திற்கும் சமூகத்திற்கும் செய்த தொண்டாகும். இலக்கியச் சிந்தனையோடு இணைந்து ஆண்டுதோறும் பரிசுபெறும் கதைகளைத் தொகுத்து வெளியிடுவது தற்காலத் தமிழ் வளர்ச்சிக்கு வானதி செய்துவரும் தலையாய பணியாகும். இதுவரை சற்றொப்ப 4000 நூல்கள் வெளிவந்துள்ளன.

'நினைக்க நினைக்க', 'சின்னத்தம்பியின் பெரிய உள்ளம்' முதலிய ஏழு நூல்களை இவர் எழுதியுள்ளார். புத்தக வித்தகர், சமய இலக்கியப் பிரகாசமணி என்பன இவருடைய தொண்டுக்குக் கிடைத்த பட்டங்களாகும். வானதி தமிழ் நூல்களின் ஜீவநதி; புதிய படைப்புக்களின் தாளகதி; புதிய கருத்துக்களின் உதிப்பகம் வானதி பதிப்பகம், வானதி திருநாவுக்கரசு தமிழ்ப்பதிப்புலகின் வெற்றியாளர் என்று தமிழ்ச்சான்றோர் இவரைப் பாராட்டுகின்றனர். பலநூல்கள் வெளியிட்டும், பல பதிப்புக்கள் கொண்டு வந்தும், விற்பனைலயப் பன்மடங்கு பெருக்கியும் புத்தக உலகில் பசுமைப்புரட்சி செய்தவர். புத்தக வெளியீட்டுப் பணியைத் தொழில் மயமாக்கியவர்.

திருப்பதி, வெ. (16-9-1948)

பிள்ளையார்பட்டி
காரைக்குடி
வங்கியாளர்

வெங்கடாசலம் செட்டியார் – அழகம்மை ஆச்சியின் மகன். அழகப்பா கல்லூரியில் வணிகவியல் பட்டமும், பின்னர் கணக்குத் தணிக்கையாளர் பட்டமும் மும்பை பஜாஜ் மேலாண்மையியல் நிறுவனத்தில் நிதி மேலாண்மைத்துறைப் பட்டமும் பெற்றவர். நியூவங்கி, ஆந்திர வங்கி ஆகியவற்றில் பணியாற்றிய பிறகு இந்தியத் தொழில் முதலீட்டுக் கழகத்தில் (ICICI) பணியில் சேர்ந்தார். அங்கு படிப்படியாக உயர்ந்து இப்போது அந்நிறுவனத்தின் பொது மேலாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

Koviloor Digital Library

திருவாதிரை

நகரத்தார் குடும்பங்களில் முன்னர் நடந்ததும், இப்போது நின்றுபோய்விட்டதுமான ஒரு சிறப்பு நிகழ்ச்சி. குடும்பத்தில் உள்ள பெண் மக்களுக்கு இச் சிறப்பு நிகழ்ச்சியும், ஆண்மக்களுக்குக் கார்த்திகைப் புதுமை எனும் சிறப்பு நிகழ்ச்சியும் நடத்துவது பழக்கம். இவ்விரு நிகழ்ச்சிகளின் நோக்கம் திருமண வயதில் தங்கள் வீட்டில் மணமகள் இருக்கிறாள் அல்லது மணமகன் இருக்கிறான் என்ற செய்தியை ஊரில் உள்ள அனைவர்க்கும் தெரிவிப்பதே ஆகும். அந்த அடிப்படையில் தான் இச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன, என்பது இவை இரண்டிற்கும் 'அரைக் கலியாணம்' என்ற பெயரும் வழங்கியமையால் உறுதியாகிறது.

பத்து வயதைத். தாண்டிய பெண்பிள்ளைகளுக்குத் திருவாதிரை செய்வது வழக்கம். இது மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று நடத்தப் பெறும். திருவாதிரை சிவபெருமானுக்குரிய விண்மீன் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சிறப்பு நிகழ்ச்சியன்று, நிகழ்ச்சியின் நாயகியாகிய பெண், மணக்கோலத்தில் அணிகள் செய்யப்பெற்று, தன்னையொத்த கன்னிப் பெண்கள் புடைசூழ, அருகில் உள்ள வீடுகட்குச் சென்று,

"ஆடி ஆடி வாரோம் அவரைக்காய் போடுங்கள்
பாடிப்பாடி வாரோம் பாடவரங்காய் போடுங்கள்
கூடிக்கூடி வாரோம் கொத்தவரங்காய்
போடுங்கள்"

என்று பாடி, தம் கைகளில் ஏந்திச் சென்ற பாத்திரத்தில் உணவுப் பொருட்களைப் பெற்றுத் திரும்புவர்.

மார்கழி நீராடல், திருப்பாவை, திருவெம்பாவைக் கருத்துக்களை அடிப்படை யாகக் கொண்டு இந்நிகழ்ச்சி அமைந்திருக்கலாம்; மேலும் மணிமேகலை 'ஆதிரை' என்ற நகரத்தார் மரபுக் கற்பரசியிடம் முதன்முதலாகப் பிச்சை பெற்றாள் என்ற 'மணிமேகலை' நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டும் அமைந்திருக்கலாம் என்பர் நகரத்தாரியல் ஆய்வறிஞர்கள்.

எவ்வாறாயினும், உறவினர்கள், பங்காளிகளை அழைத்து விருந்து நடத்திச் செய்யும் சிறப்பு நிகழ்ச்சிகள் பொருளாதாரக் காரணங்களினால் குறைக்கப்பட்டபோது நின்றுபோன சிறப்பு நிகழ்ச்சிகளில் திருவாதிரையும் ஒன்று.

திருவொற்றியூர்ப் பூசை

(வேல்வழிபாடும் மகேசுவர பூசையும்)

நகரத்தார் வழிபடும் தலங்களில் திருவொற்றியூர் சிறப்பிடம் பெறுகின்றது. சென்னையில் தொழில்செய்து வந்த நகரத்தார் திருவொற்றியூர் வடிவுடையம்மன் உடனாய தியாகராசர் கோவில் மாசி மாத அறுபத்துமூவர் திருவிழாவிற்குச் சென்று வழிபட்டு வந்தனர். அவர்கட்காக ஏறத்தாழ 200 ஆண்டுகட்கு முன் திருவொற்றியூரில் நகரவிடுதி அமைக்கப் பெற்றது. சென்னை பவளக்காரத் தெருவில் பழைய தெண்டாயுதபாணி கோவில் வீட்டில் தேவகோட்டையாரின் 16 கடைகள் இருந்தன. பின்னர்த் தோன்றிய புதுத் தெண்டாயுதபாணி கோவில் வீட்டில் காரைக்குடி அதைச் சூழ்ந்த ஊராரின் 15 கடைகள் இருந்தன. தேவகோட்டையார் கடையைச் சேர்ந்தவர்கள் திருவொற்றியூர் நகரவிடுதியை உருவாக்கி அங்கு திருவிழாக் காணவரும் நகரத்தாருக்குச் சோறு வடித்துப் போடத் தொடங்கினர். பின்பு பழைய தெண்டாயுதபாணி கோவில் வேலையும் இடும்பனையும் திருவொற்றியூர் நகரவிடுதிக்குக் கொண்டு சென்று மகேசுவர பூசை செய்து அன்னதானம் செய்யலாயினர்.

ஏறத்தாழ 165 ஆண்டுகட்கு முன் இப்பூசை தொடங்கியது. அதன்பிறகு சுமார் ஐந்து ஆண்டுகள் கழித்துக் காரைக்குடியார் கடையிலிருந்த புதுத்தெண்டாயுதபாணி கோவில் வேலையும் திருவொற்றியூர் கொண்டு சென்று இரு வேலுக்கும் பூசையிட்டு இரு இடும்பனுக்கும் பள்ளயம் போட்டுப் படைத்து மகேசுவர பூசை செய்து அன்னதானம் செய்வது தொடர்ந்தது. தொடக்க காலத்தில் மாட்டு வண்டியில்தான் வேலைக் கொண்டு போய்ப் பூசையிட்டனர். இப்பொழுது பிள்ளையார் சிறிய தேரிலும் தண்டாயுதபாணியும் இடும்பனும் பெரிய தேரிலும் எழுந்தருளித் திருவொற்றியூர் செல்கின்றனர். காரைக்குடியார் விடுதியிலும் இதுபோல இருதேர்கள் உள்ளன. தேவகோட்டையார் விடுதித்தேர் மரத்தேர். காரைக்குடியார் விடுதித்தேர் வெள்ளித்தேர் ஆகும்.

திருவொற்றியூர்க் கோவிலில் மகத்துக்கு முதல்நாள் ஆயில்யம் நாள் அன்று மகிழடி சேவை நடைபெறும். அதற்கு மூன்று நாள் முன்பாக இரு விடுதிகளிலிருந்தும் இரண்டிரண்டு தேர்கள் புறப்பட்டுச் செல்லும். ரெங்கோன் நகர விடுதியிலிருந்து சென்னைவாழ் நகரத்தார் குழுவினர் பலர் இரு தண்டாயுதபாணிக்கும் பட்டுக் கொண்டுவந்து சாத்துவர்.

Koviloor Digital Library

முதல் நாள் – மயில்வாகனத்தில் சுவாமி புறப்பாடு

இரண்டாவது நாள் – ராஜ அலங்காரம்

மூன்றாவது நாள் – மார்க்கண்டேய அலங்காரம்

நான்காம் நாள் – ராஜ அலங்காரம்

ஐந்தாம் நாள் – குதிரை வாகனத்தில் சுவாமி சென்னை புறப்படுதல்.

இரு தெண்டாயுதபாணிக்கும் ஒரே மாதிரி அலங்காரம் செய்து பக்கத்தில் பக்கத்தில் காட்சிதரச் செய்வர். முதல்நாள் காலை 9 மணிக்குச் சுவாமி சென்னையிலிருந்து புறப்படுவார். அட்டாங்க செட் எனப்படும் 3 பதக்கம், 4 பாசிமாலைகள், 1 காசுமாலை வைரத்தோடு மார்பின் இருபுறமும் வைரக் குமிழ் ஆகியவை அணிந்து சுவாமி புறப்படும் காட்சியும் மகத்தன்று இரவு நிலவொளியில் சென்னை திரும்பிவரும் காட்சியும் கண்கொள்ளா அழகுக்காட்சியாகும். ஏறத்தாழ 4000 பேர் சுவாமி போகும் போதும் வரும்போதும் பின்னால் நடந்து செல்வர். வழியெங்கும் லட்டு, மிட்டாய், பழச்சாறு, தண்ணீர் முதலியவற்றை நூற்றுக்கணக்கானோர் வழங்குவார்கள்.

முதல் நாள் – பானகபூசை – இரவு சாப்பாடு

2 ஆம் நாள் – காலை 4 மணி விநாயகப் பானை வைத்தல்; 11 மணிக்குக் கட்டியம் கூறிப் பூசையிட்டுச் சாப்பாடு; இரவுச் சாப்பாடு

3 ஆம் நாள் – மதியம் 11 மணி – சாப்பாடு – இரவுச்சாப்பாடு, தீபாராதனை.

4 ஆம் நாள் – காலை 4 மணி – விநாயகப் பானை வைத்தல் – 11 மணி – பூசை – கட்டியம் கூறிச் சாப்பாடு – 2மணி ஏலம் – இரவு – சாப்பாடு

5 ஆம் நாள் – காலை 11 மணி – சாப்பாடு – மதியம் 2 மணிக்குச் சுவாமி புறப்பட்டு இரவு நிலவொளியில் பவனிவந்து காலை 5 மணியளவில் சென்னை பவளக்காரத் தெரு சேரும்.

மகிழடி சேவையன்று திருவிழாவில் திருவொற்றியூர்ச் சுவாமியும் அம்பாளும் அறுபத்து மூவரும் புறப்பட்டு விடுதி முன் வந்து நிற்கும்போது பட்டுச் சாத்துவர்.

குழந்தை பிறக்க வேண்டிக்கொண்டவர்கள் கரும்புத் தொட்டில் கட்டுவார்கள். மாவிளக்கு வைப்பார்கள். சோற்றுக் காணிக்கை பணம் எழுதுவார்கள். இரு தெண்டாயுதபாணிக்கும் ஒரே மாதிரி இரு உண்டியலிலும் காணிக்கை செலுத்துவார்கள்.

நகரத்தார்களுக்கும் அப்பகுதி ஏழை மக்கட்கும் செய்யப்படும் அன்னதானத்தில் ஏறத்தாழ லட்சம் பேர் கலந்து கொள்வர். 85 மூட்டை அரிசி வடிக்கப்படுகின்றது. பணி செய்யும் ஏவலர்க்குக் கடைசி நாள் அரிசி அளந்து போடுவர். சென்னையில் கடை வைத்திருக்கும் நகரத்தார் தரும் மகமையாலும் நகரத்தார் ஏலம் எடுப்பதில் வரும் தொகையாலும் உண்டியல் வரவாலும் அரிசி மூட்டை போன்றவை தரும் உபயத்தாலும் இவ்விழா தொடர்ந்து சிறப்புற நடைபெறுகிறது. ஏறத்தாழ இவ்விழாவிற்கு ஆண்டுதோறும் 2½ இலட்சம் ரூபாய் செலவாகிறது. இதில் பாதித்தொகை ஏலத்தில் கிடைக்கிறது.

தேவகோட்டை பழைய தெண்டாயுதபாணி கோவில்காரர்கள் ஓராண்டும், காரைக்குடி புதிய தெண்டாயுதபாணி கோவில்காரர்கள் மறுஆண்டுமாக இவ்வாறு மாறி மாறித் திருவொற்றியூர் வேல்பூசை விழாவை நிருவகித்து நடத்தி வருகின்றார்கள். தேவகோட்டையார் விடுதியாகிய பழைய தெண்டாயுதபாணி கோவில் வீடு தேவகோட்டை அழ. சுப. பழ. திரு. சித. குடும்பத்தார், வி.கரு.சித. குடும்பத்தார் நிருவாகத்திலும் காரைக்குடியார் விடுதியாகிய புதிய தெண்டாயுதபாணி கோவில் வீடு கானாடு காத்தான் மு.சித.மு.மு. மற்றும் மு.சித.மு. பெத்தாச்சி செட்டியார் குடும்பத்தாரின் நிருவாகத்திலும் இருந்து வருகின்றன.

தீர்த்தம் குடித்தல்

நகரத்தார் குடும்பங்களில் மணமான பெண் தலைக் குழந்தைக்காகக் கருவுறும் போது நடைபெறும் ஒரு சிறப்பு நிகழ்ச்சி இது. கருவுற்றதிலிருந்து ஐந்தாவது அல்லது ஏழாவது மாதத்தில் இது நடத்தப்பெறும்.

தொடக்கத்தில், முதன்முதலாகக் கருவுற்றிருக்கும் பெண் என்ற அடிப்படையில், அவளது கரு நன்முறையில் வளரவும், மகப்பேறு எளிதாக அமையவும் தக்கவாறு, அப்பெண்ணுக்கு நாட்டுமருந்து இடித்துக்கொடுப்பது பழக்கமாக இருந்தது. அவ்வாறு மருந்து கொடுப்பதைப் பங்காளிகள் உறவினர்களை அழைத்து ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக நடத்தினர். அதற்கு 'மருந்து குடித்தல்' என்று பெயர். இப்போதும் பல குடும்பங்களில் இம்மரபு பின்பற்றப்படுகிறது. இந்நிகழ்ச்சியில், கருவுற்ற பெண்ணின் நாத்தனாரே அவளுக்கு மருந்து இடித்துக் கொடுப்பது மரபு.

காலப்போக்கில் உடல்நலம் தொடர்புடைய இந்நிகழ்ச்சி சமயத்தொடர்புடைய ஒரு சடங்காக மாறிப்போன நிலைதான் 'தீர்த்தம் குடித்தல்' எனும் சிறப்பு நிகழ்ச்சி. பெரும்பாலான நகரத்தார் குடும்பங்களில் இச்சமயச் சடங்கு நிகழ்ச்சியே இப்போது நடைபெறுகிறது.

Koviloor Digital Library

இதுவும் ஐந்து அல்லது ஏழாவது மாதத்தில் தான் நடைபெறுகிறது. குறித்த நாளன்று, குறித்த குடும்பத்தினரின் குலதெய்வம் இருக்கும் கோவிலுக்கோ, குறித்த குடும்பத்தாரின் பொதுப்படைப்புக்குரிய சாமி வீட்டிற்கோ, உறவினர், பங்காளிகளை அழைத்துக் கொண்டு செல்கின்றனர். அங்கே, அச்சாமியின் புனிதத் தீர்த்தத்தை நாத்தனார் மூன்று முறை கொடுக்க, தலைக் குழந்தைக்காகக் கருவுற்ற தாய் அதனைப் பெற்றுக் குடிப்பாள். இத்தீர்த்தம் கருவையும், மகப்பேற்றையும் நலமுடையதாக ஆக்கும் என்ற நம்பிக்கையே இச்சடங்கின் பின்னணி.

துலாவூர் மடம்

நகரத்தார் பெண்கள் குருபீடம் துலாவூர் நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனத் திருமடமாகும். இப்போது 29ஆவது மடாதிபதியாக ஞானப்பிரகாச தேசிக நிரம்ப அழகியர் அருளாட்சி செய்து வருகின்றார். துலாவூர் காரைக்குடியிலிருந்து குன்றக்குடி செல்லும் சாலையில் குன்றக்குடி ஊருக்குள் நுழையும் முன் மேற்கே செல்லும் கிளைச்சாலையில் 2 கி.மீ. தொலைவில் உள்ள அழகிய சிற்றூராகும். ஆறும் கண்மாயும் அழகிய சோலைகளும் நம்மை வரவேற்கும் துலாவூரில் ஊருக்குள் நுழைந்ததும் நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனத் திருமடம் அமைந்துள்ளது.

துலாவூர்க் கிராமம் நிரம்ப அழகிய தேசிகருக்குச் சவுந்தர பாண்டிய மன்னரால் கி.பி. 770 இல் அளிக்கப்பெற்றது. காவிரிப் பூம்பட்டினத்தில் நகரத்தார் வாழ்ந்த காலத்தில் வேளாளர் குலப்பெண்களை மணந்துகொள்ள வேண்டிய காலக் கட்டாயம் ஏற்பட்டபொழுது வேளாளர்களுடன் ஏற்பட்ட உடன்பாட்டின்படி வேளாள வம்சப் பெண்களாகிய ஆச்சிகளுக்கும் அவர்கள் வழிவரும் ஆச்சியருக்கும் வேளாளர் குல குருவாகிய ஆதி நிரம்ப அழகிய தேசிகரே உபதேசம் செய்யும் உரிமைபெற்றார். அவரது காலம் கி.பி. 567 – 627 ஆகும். அவருக்குப்பின் நமசிவாய தேசிகர் சத்திய ஞான தேசிகர், மங்களேசுவர தீட்சிதர் ஆகியோர் குருவாக இருந்தனர். அவர்களுக்குப்பின் சத்திய ஞானதேசிகர், சிதம்பர தேசிகர், மங்களேசுவர தேசிகர், உதயமூர்த்தி தேசிகர், பொன்னம்பல தேசிகர், ஞானப்பிரகாச தேசிகர் ஆகியோர் குருமூர்த்திகளாக இருந்து ஆச்சிமார்களுக்கு உபதேசம் செய்தனர். குருவாக இருந்த அனைவர்க்கும் நிரம்ப அழகிய தேசிகர் என்ற ஆதிகுருவின் பெயர் பட்டப் பெயராக வழங்கி வரலாயிற்று.

துலாவூர் மடாதிபதிகள் வரிசை :

1.	ஞானப் பிரகாச தேசிகர் கி.பி.	913 – 943
2.	சிவஞான தேசிகர்	943 – 971
3.	சபாபதி தேசிகர்	971 – 995
4.	பொன்னம்பல தேசிகர்	995 –1026
5.	பூரணசுந்தர தேசிகர்	1026 – 1058
6.	சபாபதி தேசிகர்	1058 – 1087
7.	பூரண சுந்தர தேசிகர்	1087 – 1115
8.	மாசிலாமணி தேசிகர்	1115 – 1167
9.	நடராஜ குருதேசிகர்	1167 – 1198
10.	மாசிலாமணி தேசிகர்	1198 – 1226
11.	உதயமூர்த்தி தேசிகர்	1226 – 1277
12.	சிதம்பர தேசிகர்	1277 – 1335
13.	சபாபதி தேசிகர்	1335 – 1388
14.	வடுகநாத தேசிகர்	1388 – 1417
15.	உதயமூர்த்தி தேசிகர்	1417 – 1449
16.	சத்தியஞான தேசிகர்	1449 – 1498
17.	தாண்டவேசுவர தேசிகர்	1498 – 1541
18.	சத்தியஞான தேசிகர்	1541 – 1597
19.	சிதம்பர தேசிகர்	1597 – 1629
20.	தாண்டவேசுவர தேசிகர்	1629 – 1684
21.	சாமிநாத தேசிகர்	1684 – 1735
22.	ஆபத்தோத்தாரண தேசிகர்	1735 – 1768
23.	வடுகநாத தேசிகர்	1768 – 1799
24.	ஆபத்தோத்தாரண தேசிகர்	1799 – 1828
25.	சத்திய ஞான தேசிகர்	1828 – 1860
26.	உதயமூர்த்தி தேசிகர்	1860 – 1880
27.	ஞானப்பிரகாச தேசிகர்	1880 – 1923
28.	பால உதயமூர்த்தி தேசிகர்	1923 – 1987
29.	ஞானப்பிரகாச தேசிகர் –	1987 முதல்

துலாவூர் மடத்தை ஞானப்பிரகாச தேசிகர் கி.பி. 913 இல் நிறுவினார். அவர் ஆதிகுருவின் பெயரில் நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம் என்றே மடத்துக்குப் பெயரிட்டார். பின்னர் ஆட்சிக்கு வந்த 18ஆவது குருவான சத்திய ஞானதேசிகர் 1541 முதல் 1597 முடிய 56 ஆண்டுகள் பட்டத்தில் இருந்திருக்கிறார். இவர் நிரம்ப அழகிய தேசிகர் என்ற ஆதிகுருவின் பெயராலேயே பிரபலம் அடைந்த மாபெரும் புலவர் ஆவார்.

''நிரம்பவழகிய தேசிகர் 16 ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர். தஞ்சாவூர் மாவட்டம் திருமறைக்காட்டில் பிறந்தார். பாண்டிய நாட்டில் துலாவூரில் வாழ்ந்தார். இவர் தமிழிலும் வடமொழியிலும் வல்லவர். இவர் மதுரையிலேயே தங்கி மாணவர்களுக்குச் சைவ சித்தாந்த நூல்களைக் கற்பித்தார். சேதுபதியால்

Koviloor Digital Library

பாராட்டப் பெற்றார். இவர் இயற்றிய சேதுபுராணம் இலக்கியச் செறிவுடையது. சொற்சுவை பொருட்சுவை மிக்கது. திருப்பரங்குன்றப் புராணம், திருவையாற்றுப் புராணம், திருஞானசம்பந்தர் மாலை என்னும் நூல்களும் இவர் இயற்றியனவே என்பர். திருவருட் பயனுக்கும் சிவஞான சித்தியாருக்கும் உரை எழுதியுள்ளார்'' என்பது தமிழ்க் கலைக் களஞ்சியம் தெரிவிக்கும் செய்தியாகும். இவர்காலம் முதல் நிரம்பவழகிய தேசிகர் என்ற பெயர் தமிழ்உலகில் புகழ்பெற்றது. டாக்டர் உ.வே. சாமிநாதையரின் தமிழாராய்ச்சிக்கு இம்மடம் ஏராளமான தமிழ்ச்சுவடிகளை அளித்து உதவியது. இன்றும் ஏராளமான தமிழ்ச்சுவடிகள் இத்திருமடத்தில் உள்ளன. இந்த நிரம்பவழகிய தேசிகராகிய பெரும்புலவரின் படம் இன்றும் இம்மடத்தில் காணப்படுகிறது.

இம்மடத்தின் 20ஆம் குருவாகிய தாண்டவேசுவர தேசிகர் காலத்தில் தமிழ் நாட்டில் முஸ்லீம் படையெடுப்புக்கள் நிகழ்ந்து கோவில்களும் மடங்களும் பெரிதும் பாதிக்கப் பட்டன. அக்காலத்தில் நவாபின் நோய் நீக்கி அஞ்ஞான இருளகற்றி இழந்த சொத்துக்களை நவாபிடமிருந்து மீண்டும் சாசனமாகப் பெற்ற பெருமை இந்த இருபதாவது குருவையே சேரும். துலாவூர் மடத்தின் சொத்துக்களை நவாப் உருதுமொழியில் எழுதிச் சாசனம் செய்து கொடுத்துள்ளார். இச்சாசனத்தை இன்றும் துலாவூர் மடத்தில் காணலாம்.

துலாவூர் மடம் சைவமடங்கள் பதினெட்டில் ஒன்று. துலாவூர் ஆதீனம் பெண்கள் குருபீடம் ஆகையால் இங்குள்ள மடாதிபதிகள் இல்லற நெறியினர். இம்மடத்தில் ஒரு சிறு கோவில் உள்ளது. அதில் ஸ்ரீ மங்களாம்பிகை சமேத ஸ்ரீ வாஞ்சீஸ்வர சுவாமி எழுந்தருளியுள்ளார். இத்தெய்வங்கட்கு மடாதிபதியே பூசை செய்வது மரபு. தினந்தோறும் இரண்டு காலப்பூசை நடந்து வருகிறது.

ஜமீன் ஒழிப்பால் துலாவூர் மடம் பொருளாதாரப் பற்றாக்குறையால் வாடிய நேரத்தில் நகரத்தார் ஆச்சிமார்கள் முயற்சியால் ஒருவருக்கு ரூ. 100 வீதம் வாங்கி வைப்பு நிதியாக்கி வட்டியில் நாட்பூசை தவறாது நிகழ்கிறது. தேவகோட்டை அழ.அரு.சோம. நாராயணன் செட்டியார் தலைவராகவும் கவிஞர் அரு.சோ. செயலராகவும் தொண்டாற்றும் துலாவூர் நகரத்தார் அறக்கட்டளை, நிதி திரட்டி வைப்பு நிதியாக்கித் துலாவூர் மடத்தைப் பேணி வருகின்றது. ஆண்டுதோறும் இவ்வறக்கட்டளை சைவசித்தாந்த இலக்கிய வகுப்பு ஒருவாரம் துலாவூரில் நடைபெறச் செய்துவருகிறது.

ஆதி நிரம்பிய அழகிய தேசிகராகிய குருமூர்த்திக்கு ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் பௌர்ணமிக்கு அடுத்த நாள் குருபூசை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தக் குருபூசையின் போது செட்டி நாட்டு ஆச்சிமார்கள் நூற்றுக்கணக்கில் கலந்துகொண்டு சோற்றுக் காணிக்கை எழுதிக் குருபூசை உணவு உண்கின்றனர். குருபூசை தினத்தன்று ஆதீனகர்த்தர் கொலுமண்டபத்தில் எழுந்தருளி ஆசி கூறுவது வழக்கம். அப்பொழுது பாதகாணிக்கை செலுத்துவது பக்தர்கள் மரபு.

கொலுமண்டபம் 1940 ஆம் ஆண்டில் கானாடுகாத்தான் சா.ராம.மு.ராம. சிட்டாள் ஆச்சியாலும் 1982 இல் அன்னாரது புதல்வர் இராமநாதன் செட்டியாராலும் திருப்பணி செய்யப் பெற்றது. பழுதுபட்ட மடத்தை கோட்டையூர் அ.க. அழ. சேதுக்கரசி ஆச்சி, கண்டனூர் நா.அ.ராமகா.ராம. உமையாள் ஆச்சி, காரைக்குடி நா. சீதை ஆச்சி ஆகியோர் முயற்சி செய்து ஆச்சிமார்களிடம் நிதி திரட்டிப் பழுதுபார்த்துப் புதுப்பித்தனர். துலாவூர் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகர் சிலையைக் காரைக்குடி அழகம்மை ஆச்சி செய்துவைத்துக் குடமுழுக்குச் செய்துள்ளார். துலாவூர் நுழைவாயிலில் தோரண வாயிலும் பேருந்து நிழற்குடையும் திருவருட் செல்வர்கள் இராம.ஏகப்பன், அழகி. அழகப்பன் ஆகியோரால் நிறுவப்பெற்றுள்ளன.

தென்றல்

கவியரசு கண்ணதாசன் தாமே ஆசிரியராக இருந்து வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு இதழ்களை நடத்தினார். அவற்றுள் 'தென்றல்' என்ற இலக்கிய வார இதழும் ஒன்று. 1954 இல் கவிஞரால் தொடங்கப்பெற்ற இவ்விதழ், சில ஆண்டுகள் தொடர்ந்து சிறப்பாக வெளிவந்தது.

"போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுவார் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்
அஞ்சேன்''

என்ற அடிகளைக் கவிஞர் இவ்விதழின் குறிக்கோள் அடிகளாக, முகப்புப் பக்கத்தில், இதழ்ப் பெயருக்குக் கீழே பொறித்து வெளியிட்டார்.

பழைய 'குமரன்' இலக்கிய இதழை அடியொற்றி இவ்விதழில் கவிஞர் ஈற்றடி கொடுத்து வெண்பாப் போட்டிகளைத் தொடர்ந்து நடத்தினார். அதன் வாயிலாகச் செட்டிநாட்டு இளைஞர் உலகில் ஒரு கவிஞர் பரம்பரையினையே உருவாக்கிய பெருமை இவ்விதழுக்கு உண்டு.

Koviloor Digital Library

தேவகோட்டை

கீழவட்டகையைச் சார்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து பதினாறு கிலோமீட்டர் தொலைவில் இராமேசுவரம் சாலையில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், இலுப்பைக்குடி, வேலங்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய எட்டுக் கோவில்களைச் சேர்ந்த 4120 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். செட்டிநாட்டில் உள்ள 75 நகரத்தார் ஊர்களில் நகரத்தார் மக்கள் தொகை அளவால் முதலிடம் பெறும் ஊர் இதுவாகும். இந்த எழுபத்தைந்து ஊர்களில் தேவகோட்டையும் காரைக்குடியும் மட்டுமே நகராட்சி மன்றங்களாகும். தேவகோட்டை நகராட்சி மன்றம் 1937 இல் அமைக்கப் பெற்றது.

இவ்வூர் நகரச்சிவன் கோவிலான மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலுக்கு 4–6–1888 இல் முதற் குடமுழுக்கு விழா நடைபெற்றது. தொடர்ந்து பல குடமுழுக்கு விழாக்கள் கண்ட இக்கோவிலுக்கு அண்மையில் ராஜகோபுரங்கள் அமைக்கப் பெற்று 10–2–1989 இல் குடமுழுக்கு விழா நடைபெற்றது. இக்கோவிலில் குன்றத்தூரிலிருந்து கொண்டு வரப்பட்ட கல்திருமேனியாலான சேக்கிழார் சன்னதி அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும். (பார்க்க : சேக்கிழார் விழா) இக்கோவிலில் கந்தர் சஷ்டி விழா மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது (பார்க்க : கந்தர்சஷ்டி விழாக்கழகம்) இச்சிவன் கோவில் மதுரைக் கோவில் போன்ற அமைப்புடையது.

இவ்வூரில் இளையாத்தங்குடி ஒக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த பள.செ. குடும்பத்தாரால் கட்டப்பெற்ற நித்யகல்யாணி கைலாசநாதர் கோவில் (20–1–1896), இலுப்பைக்குடிக் கோவிலைச் சேர்ந்த ஐந்து வீட்டாரில் மு.ராம.கி.லெ. குடும்பத்தாரால் கட்டப்பெற்ற இரவுசேரி மும்முடி நாதர் கோவில் (5–6–1922), நகரத்தார்கள் நிருவாகத்தில் இருக்கும் கோதண்டராமசாமி கோவில், ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவில், மாத்தூர் உறையூர்ப் பிரிவைச் சேர்ந்த மேலவீட்டார் கீழவீட்டார் குடும்பத்தில் தூங்கஞ் செட்டியாரால் கட்டப்பெற்ற சிலம்பணி விநாயகர் கோவில், வெள்ளையஞ் செட்டியாரால் கட்டப்பெற்ற வெள்ளையன் ஊருணிப் பிள்ளையார் (கலங்காத கண்டவிநாயகர்) கோவில் என வழங்கும் ஐந்நூற்றீசர் கோவில், இளையாத்தங்குடி கழனிவாசல்குடிப் பிரிவைச் சேர்ந்த பள.ராம. குடும்பத்தாரால் கட்டப்பெற்ற கருதாவூருணிப் பிள்ளையார் கோவில் (கைலாசவிநாயகர் கோவில்), மாத்தூர் மணலூர்ப் பிரிவைச் சேர்ந்த வள்ளியப்ப செட்டியார் வகையாரால் கட்டப்பெற்ற பிள்ளையார் கோவில், இளையாத்தங்குடிப் பெருமருதூருடையார் பிரிவைச் சேர்ந்த திண்ணப்ப செட்டியார் வகையாரால் கட்டப்பெற்ற திண்ணஞ் செட்டிப் பிள்ளையார் கோவில் (கைலாச விநாயகர்), இலுப்பைக்குடிக் கோவிலைச் சேர்ந்த ஐந்து வீட்டாரால் கட்டப் பெற்ற மந்திரமூர்த்தி விநாயகர் கோவில், நகரத்தார் பொதுவிலான பத்ரகாளியம்மன் கோவில், நகரத்தார் நிருவாகத்தில் இருந்துவரும் இரவுசேரிக் காளியம்மன் கோவில், ஊர்க்காவல் தெய்வமான கோட்டையம்மன் கோவில் ஆகியன உள்ளன; நகரத்தார் அமைத்துள்ள 10 ஊருணிகள் கோவில்களைச் சார்ந்து உள்ளன.

நகரத்தார் ஸ்ரீ மீனாட்சி வித்யா பரிபாலன சங்கம் இவ்வூர் நகரத்தாரால் அமைக்கப் பெற்று, அதன்சார்பில் 1921 இல் உயர்நிலைப்பள்ளி ஒன்று தொடங்கப் பெற்று அப்பள்ளி 1978 இல் மேல் நிலைப்பள்ளியாக உயர்த்தப்பெற்றுள்ளது. இச் சங்கத்தின் சார்பில் 1928 இல் தொடக்கப் பள்ளி ஒன்றும் தொடங்கி நடைபெற்று வருகிறது. இச்சங்கம் அ.ராம.அ.லெ.அ. குடும்பத்தார் அளித்த நன்கொடையால் பெத்தாளாச்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கியது. பெண்கல்வியை வளர்க்கும் நோக்கில் 1925 இல் வெ.அழ. அழகப்ப செட்டியாரால் சொர்ணமூர்த்தி பெண் பாடசாலை தொடங்கப்பட்டு நீண்டகாலம் நடைபெற்று வந்தது. சேவு.அ. அண்ணாமலை செட்டியார் நிறுவிய கல்வி அறநிலையின் சார்பாக 1970 இல் ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியும் 1973 இல் ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை மெட்ரிகுலேசன் பள்ளியும் தொடங்கப்பெற்று நடைபெற்று வருகின்றன. வைரம் மெட்ரிகுலேசன் பள்ளி, வைரம் தொழிற்பயிற்சிப் பள்ளி ஆகியவை சேவு. வடிவேல் செட்டியாரால் நிறுவப்பெற்ற ஆண்டாத்தாள் வடிவேலு கல்வி அறநிலையால் நிருவகிக்கப் பெற்று வருகின்றன. சோம. நாராயணன் செட்டியாரால் இராமகிருஷ்ணா நடுநிலைப் பள்ளியும், சேவு.அ. அருணாசலம் செட்டியார் குடும்பத்தாரால் சேர்மன் மாணிக்கவாசகம் செட்டியார் நடுநிலைப் பள்ளியும் நடத்தப் பெற்று வருகின்றன.

Koviloor Digital Library

இளையாத்தங்குடி ஒக்கூர்ப்பிரிவைச் சேர்ந்த பெரி.சோம. சாத்தப்ப செட்டியார் குடும்பத்தாரால் வழங்கப்பட்ட நன்கொடையைக் கொண்டு இவ்வூர் அரசு மருத்துவமனை கட்டப் பெற்றுள்ளது.

இவ்வூர் மாத்தூர் அரும்பாக்கூர்ப் பங்காளிகள் பி. அளகாபுரி, கீழச்சிவல்பட்டி, சிறுகூடற்பட்டி, ஆகிய ஊர்ப்பங்காளிகளுடன் இணைந்து ஆண்டுதோறும் மாசி மாதம் நைனப்பய்யா படைப்பையும், இலுப்பைக்குடிப் பங்காளிகளில் காரைக்குடியார் வகையினர் கண்டனூர்ப் பங்காளிகளுடன் சேர்ந்து ஆண்டுதோறும் தை மாதம் பழநியப்ப செட்டி கருப்பாத்தான் படைப்பையும் படைத்து வருகின்றனர். மாத்தூர் மணலூர்ப் பங்காளிகளில் ஒருவகையார் முத்தாத்தாள் படைப்பையும் இளையாத்தங்குடி ஒக்கூர்ப் பங்காளிகள் அடைக்காத்தாள் படைப்பையும், பெருமருதூர்த் திண்ணப்ப செட்டியார் வகைப் பங்காளிகள் திண்ணப்பையா, பழநியப்பையா படைப்பையும் படைத்து வருகிறார்கள்.

இவ்வூரில் பல நகரத்தார் குடும்பங்களில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப்பெற்று வருகிறது. கந்தர் சஷ்டி விழா, சேக்கிழார் விழா ஆகியவை இவ்வூரில் நகரத்தார்கள் நடத்தும் புகழ்மிக்க விழாக்கள். ஆவி.க. குடும்பத்தாரால் முன்பு பல ஆண்டுகள் திருக்குறள் விழா சிறப்பாக நடத்தப்பெற்று வந்தது.

தமிழிசை இயக்கத்தில் தேவகோட்டைக்குத் தனியிடம் உண்டு. 1942 இல் தமிழிசை இயக்க மாநாடு இங்கு சிறப்பாக நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாகத் தமிழிசைப் பள்ளி ஒன்று தொடங்கப்பெற்று நீண்டகாலம் முத்தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றி வந்தது.

விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் தேவகோட்டைக்குத் தனிச்சிறப்பு உண்டு. 1942 இல் நீதிமன்றம் எரிக்கப்பட்ட நிகழ்ச்சியால் தேவகோட்டையின் புகழ் உலகெங்கும் பரவியது. ஐ என் ஏ சொக்கலிங்கம் செட்டியாரும் வேறு சில நகரத்தார்களும் இ.தே.ரா.வில் பணி யாற்றியுள்ளனர்.

கோட்டையம்மன் முளைமேடைக்கு அருகில் உள்ள நகரப்பள்ளிக்கூடம் நகரத்தார் பொது இடமாகும். ஆடி மாதம் முதல் திங்கள் தொடங்கிப் பதினான்கு நாட்கள் கோட்டையம்மன் பொங்கல் திருவிழா முளைமேடையில் கோட்டையம்மனை எழுந்தருளச் செய்து நகரத்தாரால் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகிறது. குன்றக்குடி, பழநி செல்லும் தைப்பூசக் காவடிகள் நகரப்பள்ளிக்கூடத்தில் தான் கட்டப்பெற்றுப் பூசை செய்யப்பட்டுப் புறப்படுவது மரபு.

கட்ட முருகப்ப செட்டியார் குடும்பத்தாரால் கட்டப்பெற்ற காட்டுத் தண்ணீர்ப் பந்தல் நால்வர் குருபூசை மடம், இராம.மெ. வகையார் குருபூசை மடம், பள.செ. குடும்பத்தார் குருபூசைமடம், வெள்ளையனூருணி நகரத்தார் குருபூசைமடம் ஆகியவற்றில் நால்வர் குருபூசையும் சேக்கிழார் குருபூசையும் நடைபெற்று வருகின்றன. வயி.சுமு. குப்பாஞ் செட்டியார் என்ற சுப்பிரமணியஞ் செட்டியாரால் கட்டப்பெற்ற குருபூசை மடத்தில் குருபூசைகள் முன்பு நடைபெற்றன.

1916 இல் நகரத்தார்களால் தோற்றுவிக்கப் பெற்ற சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம் சிவாகம நூல்களை வெளியிட்டும் சைவசமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியும் அண்மைக் காலம் வரை தொண்டு செய்து வந்தது.

நகரத்தார் பொதுவில் ஆண்டு தோறும் மாசி மகத்தன்று நகரப்பள்ளிக் கூடத்திலும் இளையாத்தங்குடிப் பெருமருதூர்ப் பிரிவைச் சேர்ந்த திண்ணப்ப செட்டியார் வகையினரால் இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை தி.ராம. சாமி வீட்டிலும் வேல்பூசை நடைபெற்று வருகிறது. மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த நைனப்பய்யா செய்து வைத்த இரத்தினவேல் குன்றக்குடி நகரத்தார் அன்னதான மடத்தில் அருளாடியார் பொறுப்பில் உள்ளது. அவ்வேல் பழநிக் காவடிகளுடன் அருளாடியாரால் கொண்டு செல்லப் பெறுகிறது. இவ்வூரில் நடைபெறும் இரண்டு வேற்பூசைகளுக்கும் இவ்வேல் கொண்டு வரப்பட்டு இந்தவேலுக்கே பூசை நடைபெறுவது தனிச்சிறப்பாகும்.

கோவில்களுக்குத் திருப்பணி செய்வது என்பது நகரத்தார்களின் இரத்தத்தோடு கலந்த இயல்பு. அதில் தேவகோட்டையார்கள் முன்னிற்கின்றார்கள். அவர்கள் செய்த அறப்பணிகளுள் கோவில் திருப்பணிகள் மட்டுமே இங்கு பட்டியலிடப் பெற்றுள்ளன. இது தவிரப் பல தலங்களில் அவர்கள் நந்தவனம், வேத திருமுறைப் பாடசாலைகள், பசுமடங்கள், குருபூசை மடங்கள் ஆகியவற்றை அமைத்துள்ளார்கள்.

கோட்டைவயல், பிடாரநேந்தல், திருக்கழிப் பாலை, சீர்காழி, திருநின்றவூர், திருக்கடம்பூர், திரு இன்னம்பர், குத்தாலம், திருவீழிமிழலை, திருவாரூர், திருக்கரவீரம், திருப்பெருவேளூர், திரு இராப்பட்டீச்சுரம், மணற்கால், தனிச்சாத்தங்குடி, திருத்தண்டலை நீள்நெறி, திருவாடானை, திருநெல்வாயில் அரத்துறை, கூடலையாற்றூர்,

Koviloor Digital Library

திருவதிகை, திருநாவலூர், திருவெண்ணை நல்லூர் ஆகிய 22 தலங்களில் உள்ள சிவன் கோவில்களில் திருப்பணி செய்த குடும்பம் 'இரட்டையானாரூனா வீடு' எனக் குறிப்பிடப்படும் இராம.அரு. அரு. இராம. அரு. குடும்பம்.

வெளிமுத்தி, திருக்கோலக்கா, திரு அன்னியூர், திருமருகல், திருவெண்ணியூர், திருக்கோவலூர் ஆகிய ஆறு தலங்களில் மெசிதவயி. குடும்பத்தார் சிவன்கோவில் திருப்பணி செய்துள்ளார்கள்.

திருவைகல் மாடக்கோவில், திருத்திலதைப்பதி, அரிசில்கரைப் புத்தூர், திருக்கச்சி ஏகம்பம், திருவேட்டக்குடி ஆகிய ஐந்து தலங்களில் ராம.மெ.லெ. குடும்பத்தார் சிவன்கோவில் திருப்பணி செய்துள்ளார்கள்.

இராமேச்சுரம், திருக்கானப்பேர், திருப்பாண்டிக் கொடுமுடி ஆகிய தலங்களில் சிவன் கோவில்களிலும் உப்பூர் வெயிலுகந்த விநாயகர் கோவிலிலும் அள.அரு. குடும்பத்தார் திருப்பணி செய்துள்ளார்கள்.

திருத்தருமபுரம், திருவெண்டுறை, முத்துப் பேட்டை ஆகிய தலங்களில் அரு.அரு.சோம. குடும்பத்தார் சிவன்கோவில் திருப்பணி செய்துள்ளார்கள்.

திரு அகத்தியான்பள்ளி, திருக்காளத்தி, வளைகுளம் ஆகிய தலங்களில் மெ.அரு.நா. இராமநாதன் செட்டியார் சிவன்கோவில் திருப்பணி செய்துள்ளார்.

திருமயேந்திரப்பள்ளி, திரு அகத்தியான் பள்ளி ஆகிய தலங்களில் பழ. சோமசுந்தரம் செட்டியாரும் திருக்கஞ்சனூர் திருத்துருத்தி ஆகிய தலங்களில் இராம.அரு.இராம. வெங்கடாசலம் செட்டியாரும் திருச்சிராப்பள்ளி, திருவிளமர் ஆகிய தலங்களில் வீர.லெ. சிந்நயச் செட்டியாரும், திருச்சேறை, பொய்கை நல்லூர் ஆகிய தலங்களில் மெ.வ. குடும்பத்தாரும் திருப்பேரூர், திருநின்றவூர் ஆகிய தலங்களில் பெரி.சோமசா. குடும்பத்தாரும் எழுவங்கோட்டை, திருக்காறாயில் ஆகிய தலங்களில் முத்து.கரு. குடும்பத்தாரும், திருக்கடவாய்க்கரைப் புத்தூர், திரு இரும்பூளை ஆகிய தலங்களில் பள.செ. குடும்பத்தாரும் திருவெண்டுறை, திருக்கொள்ளிக்காடு ஆகிய தலங்களில் மெ. வகையாரும் சிவன்கோவில் திருப்பணி செய்துள்ளார்கள். பெரி.செ. குப்பாஞ்செட்டியார் திருக்குண்டையூர்ச் சிவன் கோவிலிலும் எழுவங்கோட்டைப் பிடாரியம்மன் கோவிலிலும் திருப்பணி செய்துள்ளார்.

திருவிடைமருதூரில் மெ.லெ.மெ.நா. இராமநாதன் செட்டியாரும் திருப்பள்ளியின் முக்கூடலில் அள.சுப.சு. குடும்பத்தாரும் திருப்புனவாயிலில் அள.சுப.பள. குடும்பத்தாரும் கோட்டூரில் தி.வெ. மாயாண்டி செட்டியாரும் திருவெண்காட்டில் மு.ராம.சுப. குடும்பத்தாரும் திருவையாற்றில் உ.ராம.மெ.சுப.சேவு. குடும்பத்தாரும் திருக்கடம்பந்துறையில் பள.அ. வெங்கடாசலம் செட்டியாரும் திருமூக்கீச்சுரத்தில் வீர.ராம.சித. முருகப்ப செட்டியாரும் மயிலாடுதுறையில் அள.வீர.பெ.வீர. வெங்கடாசலம் செட்டியாரும் திருத்தக்களூரில் மெ.ராம.அ. ராமநாதன் செட்டியாரும் திருநாகைக் காரோணத்தில் சி.பெரி.செ. மாயாண்டி செட்டியாரும் திருநெல்லிக்காவில் வீர.ராம.சு. சொக்கலிங்கஞ் செட்டியாரும் திருநாட்டியத்தான் குடியில் வெ.தெ. குடும்பத்தாரும் நாகை வெளிப்பாளையத்தில் கும.கரு.கரு முத்தையா செட்டியாரும் திருப்பூவணத்தில் உ.ராம.உ.மு. குடும்பத்தாரும் திருச்சுழியலில் தி.அ.சு. அண்ணாமலை செட்டியாரும் திருவெண்ணெய் மலையில் தி.சு.ப.பழ. முத்துக்கருப்பன் செட்டியாரும் திருத்துறையூரில் மு.ராம. நடேசன் செட்டியாரும் வன்பார்த்தான் பனங்காட்டூரில் பெரி.எ.சொ. மாணிக்கஞ் செட்டியாரும் திருமாற்பேற்றில் அள.வீர.சித. குடும்பத்தாரும், திருவிற்கோலத்தில் ராம.பெரி. பிச்சப்ப செட்டியாரும், திருவான்மியூரில், முரு.கி. ராமநாதன் செட்டியாரும் சிவன்கோவில் திருப்பணி செய்துள்ளனர்.

திருவியலூரில் கரு.மெ. கதிரேசன் செட்டியார், அ.ராம.அ.லெ. குடும்பத்தார் ஆகியோரும் திருத்தெளிச்சேரியில் சேவு.ராம. சேவுகஞ் செட்டியார், சேவு. ராம. அருணாசலம் செட்டியார் ஆகியோரும், திருவேடகத்தில் உ.ராம.மெ.சுப. பெரிய சேவுகஞ் செட்டியார், சின்னச் சேவுகஞ் செட்டியார், சேவு. மெய்யப்ப செட்டியார் ஆகியோரும் திருக்குற்றாலத்தில் வி.கரு.சித.சோம; பி.ச.அரு ஆகிய குடும்பத்தாரும் திருஉத்தரகோச மங்கையில் அள.அரு; அள.சித.லெ; அள.சுப.சு; ராம.அரு.அரு; சித.லெ. ராம ஆகிய குடும்பத்தார் களும் மதுரை இம்மையில் நன்மை தருவார் கோவிலில் மெ.ராம.அ; பள.சு. அருணாசலம் செட்டியார் ஆகிய குடும்பத்தார்களும் திருப்பணி செய்துள்ளனர்.

அள.அரு. பொதுவீடு, உமு.சுப. பொது வீடு, டிஆர். ஏ ஆர். மோகன் வீடு ஆகியவை கலைநயம் மிக்க வீடுகளாகும்.

Koviloor Digital Library

தேனப்பன், டாக்டர் வ., (28-10-1950)

மாத்தூர் - கண்ணூர்
பி. அளகாபுரி
நகரத்தார் ஆய்வாளர், எழுத்தாளர்

அ.தெ. வள்ளியப்ப செட்டியார் – சேது ஆச்சியின் மகன். திருப்பராய்த்துறையில் பள்ளிக் கல்வியும் மதுரை தியாகராசர் கல்லூரியில் முதுகலைப் பட்டப்படிப்பும் பயின்றார். கல்லூரி நாட்களில் கவின்கலை, நாடகம், எழுத்து எனப் பல்வேறு துறைகளில் திறமைகாட்டிப் பரிசுகள் பெற்றுள்ளார்.

தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்து வரும் இவர் 'ஒன்பது நகரக் கோயில்கள்' பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். அதற்காகத் தொல்லியல் பயிற்சியும் கல்வெட்டுப் படிக்கும் பயிற்சியும் பெற்றார். மைசூர் சென்று கல்வெட்டுக்களை ஆராய்ந்து செய்திகள் திரட்டிவந்தார். இவர் புகைப்படம் எடுப்பதிலும், 'வீடியோ' எடுப்பதிலும் வல்லவர்.

சிறந்த சிறுகதை எழுத்தாளர், நாவலாசிரியரான இவர் புகழ்பெற்ற அனைத்து இதழ்களிலும் எழுதியுள்ளார். 34 நூல்கள், வெளிவந்துள்ளன. 'இரயில் சிநேகங்கள்' சிறுகதை 'சாவி' வார இதழ் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றது. துப்பறியும் சிங்காரம், கணிப்பொறியின் கதை ஆகிய நூல்கள் குழந்தை எழுத்தாளர் சங்கப் பரிசுகளை வென்றுள்ளன. தொல்காப்பியர், கவிஞர் கண்ணதாசன் பற்றி இவர் எழுதியுள்ள திறனாய்வு நூல்கள் கல்லூரி நாட்களிலேயே பரிசு பெற்றுள்ளன. 'சங்க இலக்கியத்தில் இந்து சமயக் கருத்துக்கள்' என்னும் தலைப்பில் இவர் எழுதிய திறனாய்வுக் கட்டுரை காஞ்சி முனிவர் சங்கராச்சாரியார் பரிசு பெற்றதாகும். 'உயிர்காக்கும் மரங்கள்' சுற்றுச்சூழல் போட்டியில் பரிசு பெற்ற நூலாகும். 'நகரத்தார் வளர்த்த சிற்பக்கலை' என்னும் இவரது ஆய்வுத் திட்டத்திற்குத் தஞ்சைப் பல்கலைக்கழகம் மானியம் அளித்துப் போற்றியது. இவர் பெற்ற பரிசுகளில் ஒன்பது நகரக்கோயில்கள் ஆய்வு நூலுக்காகப் பெற்ற ராசா சர் அண்ணாமலை செட்டியார் விருது மணிமுடியாக அமைந்து இவருக்குப் பெரும்புகழ் சேர்க்கின்றது. இவர் எழுதிய 'அயல் மகரந்தங்கள்' சிறுகதைத் தொகுப்பு பல்கலைக்கழகப் பாடநூலாக வைக்கப் பெற்றது. இவரது சிறுகதைகளைப் பலர் ஆய்வு செய்து வருகின்றனர். சிரிக்கச் சிரிக்கப்பேசி, தேன்போல இனிக்கப் பழகும் இயல்புடைய இவர் நம்மின இளைஞர்க்கு உழைப்புக்கு வழி காட்டியாவார்.

தேனிபட்டி

கீழப்பத்தூரைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. காரைக்குடியிலிருந்து கண்டனூர், புதுவயல் வழியாக 27 கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூருக்குக் கழனிவாசல் என்ற மற்றொரு பெயரும் உண்டு.

இளையாத்தங்குடி, வைரவன் கோவில், சூரக்குடி, இரணிக்கோவில் ஆகிய 4 கோவில் களைச் சேர்ந்த 105 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூர் அரிமழம் ஒன்றியத்துக் குட்பட்ட காரமங்கலம் ஊராட்சியின் ஆட்சியில் உள்ளது.

அகத்தீசுவரர் அகிலாண்டேஸ்வரி கோவில் நகரச் சிவன்கோவிலாகும். இக்கோவிலுக்கு 1939, 1971 ஆம் ஆண்டுகளில் குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளன. வைரவன் கோவில் செல்லப்ப செட்டியார் வகையாரால் செல்வவிநாயகர் கோவிலும் இரணிக் கோவில் க.மு. வகையாரால் சிதம்பர விநாயகர் கோவிலும் கட்டப்பெற்றுள்ளன.

சிவன்கோவில் ஊருணி, வைரவன் கோவிலைச் சேர்ந்த செல்லப்ப செட்டியார் வகையாரால் வெட்டப் பெற்ற வடக்கு ஊருணி, நகரத்தார் நிருவாகத்தில் உள்ள சேங்கைப்பள்ளம் என்னும் குடிநீர் ஊருணி ஆகிய 3 ஊருணிகள் உள்ளன.

இவ்வூரில் 5 படைப்பு வீடுகள் உள்ளன. வைரவன் கோவில் செல்லஞ்செட்டி வகையினர் ஆண்டுதோறும் தை மாதத்தில் பொதுப் படைப்புப் படைக்கிறார்கள். வைரவன் கோவில் முருகப்ப செட்டியார் வகையினரும் சூரக்குடிப் பங்காளிகளும், ஆண்டுதோறும் படைக் கின்றார்கள். தேனிபட்டி தேவகோட்டை நகரத்தார்கள் கலந்துகொள்ளும் இரணிக்கோவில் படைப்பு வீடு, தேனிபட்டி, புதுவயல், க. அளகாபுரி நகரத்தார்கள் கலந்துகொள்ளும் இரணிக்கோவில் படைப்பு வீடு ஆகியவற்றிலும் ஆண்டுதோறும் பொதுப்படைப்பு நடைபெறும்.

வைரவன் கோவில் முருகப்ப செட்டியார் வகை வ.அ.உ.சுப. வீட்டிலும் ஆ.பழ.இராம.முரு. வீட்டிலும் முன்பு இராமாயணம் படிக்கப் பெற்றது. தனிப்பட்ட சில குடும்பங்களுக்குச் சொந்தமாக உள்ள குருபூசை மடத்தில் முன்னர் குருபூசை நடைபெற்றது.

இரணிக்கோவில் சி.செ. வகையினர் திருக்கழுக்குன்றத்தில் முன்பு பாடசாலை நடத்தி வந்தனர்.

Koviloor Digital Library

நகரச் சிவன்கோவில்

ஆழ்ந்த சைவப்பற்றுடைய நகரத்தார்கள் தங்கள் ஊர்தோறும் சிவன்கோவில் கட்டி வழிபடுவதைச் சமுதாயக் கடமையாக மேற்கொண்டனர். அவ்வாறு கோவில் கட்டும்பொழுது தனிப்பட்ட செல்வர்கள் கட்டாமல் அவ்வூர் நகரத்தார்கள் அனைவருக்கும் உரிமையும் பொறுப்பும் இருக்கும் வண்ணம் பொதுக் கோவில்களாகக் கட்டினர். அதனாலேயே இக்கோவில்களுக்கு நகரச் சிவன் கோவில் என்ற பெயர் ஏற்பட்டது.

நகரச் சிவன்கோவில்கள் வழிபாட்டுத் தலங்களாகச் செயல்படுவதோடு நின்றுவிடாமல் சமுதாய மையங்களாகவும் செயல்படுகின்றன. நகரத்தார் குடும்பங்களில் திருமணமான ஆடவர் புள்ளி என்று அழைக்கப்படுவார். ஒவ்வொரு நகரச் சிவன்கோவிலும் கோவிலைச் சார்ந்த குடிமக்களாகிய அந்தந்த ஊர்ப் புள்ளிகளின் கணக்கை நிருவகித்து வருகிறது. கோவிலின் நிருவாகச் செலவுகளுக்காக இந்தப் புள்ளிகளிடமிருந்து புள்ளிவரி வாங்கப்படுகிறது. முன்பெல்லாம் ஆண்டுதோறும் புள்ளிவரி வாங்கப்பட்டது. இப்போது ஒரு ஆண்மகன் திருமணமாகிப் புள்ளியாகப் பதிவுசெய்யப்படும் பொழுது மொத்தமாக ஒரு தொகை புள்ளிவரியாக வாங்கப்படுகின்றது. ஊர்ப் பொதுவிழா நகரச் சிவன்கோவிலால் நடத்தப்படும் பொழுது அதற்கென ஒரு தொகை புள்ளிவரியாக வாங்கப்படுகிறது.

நகரக்கூட்டம் நடைபெறும் மையமாக நகரச் சிவன்கோவில் விளங்குகிறது. ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட நாளில் நகரக்கூட்டம் நடைபெறுகிறது. எல்லா நகரத்தார்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்ற அறிவிப்பு தண்டல்காரன் வாயிலாக அனைத்துப் புள்ளிகளுக்கும் அனுப்பப் பெறுகின்றது. இயல்பான ஆண்டுக் கூட்டத்தைத் தவிரத் தேவை ஏற்படும் பொழுது நகரக்கூட்டம் கூட்டப்படுவதுண்டு. அனைத்து ஊர் நகரத்தார்களுக்கும் பொதுவான அமைப்புக்கள் அறக்கட்டளைகள் ஆகியவற்றுக்கு அந்தந்த ஊர்ச் சார்பாளர்கள் அந்தந்த ஊர் நகரக் கூட்டத்தில்தான் தேர்ந்தெடுக்கப்பெறு கின்றார்கள். நகரத்தார் வீடுகளில் தைப்பொங்கல் வைப்பதற்குரிய நல்ல நேரம் எது என்பதை அறிவிப்புப் பலகையில் எழுதிவைத்து நகரச் சிவன்கோவில்கள் உதவுகின்றன.

நகரத்தார் குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பணிபுரியும் நகரப்பணியாளர்களை நகரச் சிவன்கோவில்களே நியமித்து நிருவகித்து வருகின்றன. மேளகாரர், தண்டல்காரர், வெட்டியான் ஆகியோர் இப்பணியாளர்களாவர். கோவில் மேளகாரர் நகரத்தார் வீட்டு மங்கல நிகழ்ச்சிகளில் மேளம் வாசிப்பார். தண்டல்காரர் திருமணத்தில் சில சடங்குகளையும், இறப்பில் சில சடங்குகளையும் செய்துவைக்கும் பணியாளர் ஆவார். நகரத்தார் காவடியோடு செல்லும் போது இவர் பண்டாரம் என அழைக்கப்படுவார். நகரத்தார் மயானத்திற்குக் கொண்டுவரப்பட்ட இறந்தோர் உடலை எரியூட்டும் பணியாளர் வெட்டியான் ஆவார்.

திருமணத்தின்போது மாப்பிள்ளை, வெளியூராக இருப்பின் 'மாப்பிள்ளை அழைப்பு' பெரும்பாலான ஊர்களில் நகரச் சிவன்கோவில்களில் இருந்தே நடைபெறும். திருமணம், மணிவிழா போன்ற நிகழ்ச்சிகளுக்குத் தேவையான பொருட்களை (தலைப்பாகை, மகரி, மாதாரி, வேவுக்கடகம், திருப்பூட்டும் தட்டு, முளைப்பாரி, முக்காலி சாந்திக்குரிய வேள்விக் குடங்கள், சிவகண்டி மாலை) நகரச் சிவன்கோவில்கள் வாங்கி வைத்துக் கொண்டு தேவைப்படும் நகரத்தார்களுக்கு ஒரு சிறு தொகையைப் பெற்றுக் கொண்டு கொடுத்து உதவுகின்றன.

நகரமடம், நகரவிடுதி ஆகியவை அமைந்துள்ள ஊர்களில் அவற்றை நகரச் சிவன் கோவில்களே நிருவகிக்கின்றன. பல ஊர்களில் நகரச் சிவன்கோவில்களே வேற்பூசை அல்லது மகேசுவரபூசையை நடத்துகின்றன. பிள்ளையார் நோன்பன்று பொதுவில் இழை எடுத்துக் கொள்ளும் பழக்கம் உள்ள ஊர்களில் அதனை நகரச் சிவன்கோவிலே பொறுப்பேற்று நடத்துகின்றது. மகார் நோன்பன்று நகரத்தார் சிறுவர்கள் 'அம்பு போடுவதற்கு' உரிய ஏற்பாட்டை நகரச் சிவன்கோவிலே செய்கிறது.

நகரத்தார் மயானத்தைப் பெரும்பாலான ஊர்களில் நகரச் சிவன்கோவிலே நிருவகித்து வருகிறது. இறந்தோர் உடலை மயானத்திற்கு எடுத்துச் செல்வதற்குரிய சிவரதத்தை நகரச் சிவன் கோவில்களே கட்டணம் பெற்றுக் கொண்டு கொடுத்து உதவுகின்றன.

இவ்வாறு சமுதாய மையமாக விளங்குகின்ற நகரச் சிவன் கோவில்கள் 43 ஊர்களில் அமைந்துள்ளன. (பட்டியல் – I) நகரச் சிவன்கோவிலாக அமையாமல் நகரத்தார் பொதுவில் கட்டி நிருவகிக்கப்படும் பிள்ளையார் கோவில் அல்லது முருகன் கோவில் அல்லது அம்மன் கோவில் 25 ஊர்களில் மேற்கூறிய பொதுப்பணிகளைச் செய்து வருகின்றன. (பட்டியல் II) நகரக்கோவில் என்ற பொது அமைப்பு இல்லாமலேயே எஞ்சிய ஏழு ஊர்களில் இப்பொதுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. (பட்டியல் III)

Koviloor Digital Library

பட்டியல் – I

எண்	ஊர்	இறைவி – இறைவன் பெயர்	முதல் குடமுழுக்கு
1.	அமராவதிபுதூர்	வாழவந்த நாயகி - வந்தருளீசுவரர்	1908
2.	அரிமழம்	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1870
3.	அரியக்குடி	சுந்தர பரமேசுவரி - இரத்தினபுரீசுவரர்	1924
4.	அலவாக்கோட்டை	மீனாட்சி - சொக்கலிங்கர்	1924
5.	ஆத்தங்குடி	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1928
6.	ஆத்திக்காடு தெற்கூர்	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1907
7.	ஆவினிப்பட்டி	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1907
8.	இலட்சுமிபுரம் (கொத்தமங்கலம்)	மீனாட்சி - சொக்கலிங்கர்	1908
9.	இலட்சுமிபுரம் (விரையாச்சிலை)	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1921
10.	உலகம்பட்டி	உலகநாயகி - உலகநாதர்	1929
11.	கடியாபட்டி	பிரம்ம வித்தியாம்பாள் - பூமீசுவரர்	1893
12.	கண்டவராயன்பட்டி	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1903
13.	கண்டனூர்	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1892
14.	கருங்குளம்		1985
15.	காரைக்குடி	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1872
16.	காளையார் மங்கலம்	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1920
17.	கீழச்சீவல்பட்டி	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1877
18.	அளகாபுரி (பில்லமங்கலம்)	மீனாட்சி - சுந்தரேசுவரர்	
19.	குருவிக்கொண்டான்பட்டி	மீனாட்சி - சொக்கலிங்கர்	1932
20.	குழிபிறை	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1905
21.	கோட்டையூர்	மீனாட்சி - சோமசுந்தரர்	1940
22.	கோனாபட்டு	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1888
23.	சக்கந்தி	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1936
24.	சண்முகநாதபுரம்	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1879
25.	சிறாவயல்	திரிலோக நாயகி - தியாகராசர்	1912
26.	சிறுகூடற்பட்டி	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1895
27.	செவ்வூர்	மீனாட்சி - சொக்கலிங்கர்	1932
28.	சொக்கலிங்கம்புதூர்	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1918
29.	தேவகோட்டை	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1888
30.	தேனிபட்டி	அகிலாண்டேசுவரி - அகத்தீசுவரர்	1939
31.	நடராசபுரம்	பர்வதவர்த்தினி - இராமநாதசுவாமி	1922
32.	நற்சாந்துபட்டி	சிவகாமி - சிதம்பரேசுவரர்	1928
33.	பலவான்குடி	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1895
34	பள்ளத்தூர்	மீனாட்சி - சுந்தரேசுவரர்	1913
35.	பனையப்பட்டி	மீனாட்சி - சொக்கலிங்கர்	1977
36.	புதுப்பட்டி	புவனேசுவரி - பூலோகநாதர்	1951

Koviloor Digital Library

எண்	ஊர்	இறைவி – இறைவன் பெயர்	முதல் குடமுழுக்கு
37.	பூலாங்குறிச்சி		
38.	மதகுபட்டி	மீனாட்சி - சொக்கலிங்கர்	1935
39.	மிதிலைப்பட்டி	சிவயோகவல்லி பொய்யா மொழியம்மை - ஆவுடையநாதர்	1926
40.	மேலைச்சிவபுரி	மீனாட்சி - சொக்கலிங்கர்	1922
41.	வலையபட்டி	வடுவகிர் விழியாள் - வலம்புரிநாதர்	1892
42.	வேகுப்பட்டி	சிவகாமசுந்தரி - சிவலோகநாதர்	1924
43.	வேந்தன்பட்டி	மீனாட்சி - சொக்கலிங்கர்	1911

பட்டியல் – II

எண்	ஊர்	கோவில் பெயர்	முதல் குடமுழுக்கு
1.	அரண்மனை சிறுவயல்	சித்திவிநாயகர் கோவில்	-
2.	அளகாபுரி (கண்டனூர்)	அழகுவிநாயகர் கோவில்	-
3.	அளகாபுரி (நாட்டரசன்கோட்டை)	சித்திவிநாயகர் கோவில்	1927
4.	இராங்கியம்	சுப்பிரமணியசாமி கோவில்	-
5.	இராயவரம்	முத்துமாரியம்மன் கோவில்	1935
6.	ஒக்கூர்	சசிவர்ண விநாயகர்கோவில்	-
7.	கண்டரமாணிக்கம்	மாணிக்க நாச்சியம்மன் கோவில்	-
8.	கல்லல்	பிள்ளையார்கோவில்	-
*9.	கல்லுப்பட்டி	சுப்பிரமணியசாமி கோவில்	1936
10.	கானாடுகாத்தான்	சிதம்பரமூர்த்தி விநாயகர் கோவில்	-
11.	கொப்பனாபட்டி	முத்துவிநாயகர் கோவில்	1934
12.	சிறுவயல் (உய்யக்கொண்டான்)	பொன்னழகியம்மன் கோவில்	1820
13.	செம்பனூர்	ஐநூற்றீசுவரர் விநாயகர் கோவில்	-
14.	சொக்கநாதபுரம்	கற்பக விநாயகர் கோவில்	-
15.	தாணிச்சாவூருணி	கற்பக முத்துவிநாயகர் கோவில்	1824
16.	நாச்சியாபுரம்	நாச்சியாரம்மன் கோவில்	1918
17.	நெற்குப்பை	நகரசுப்பிரமணியசாமி கோவில்	1905
18.	நேமத்தான்பட்டி	நகரப்பிள்ளையார் கோவில்	1970
19.	பட்டமங்கலம்	தண்டாயுதபாணி கோவில்	-
20.	புதுவயல்	கைலாசவிநாயகர் கோவில்	-
21.	மகிபாலன்பட்டி	மங்கள விநாயகர் கோவில்	-
22.	மானகிரி	சுப்பிரமணியசாமி கோவில்	1982
23.	முத்துப்பட்டணம் (ஆத்தங்குடி)	உலக நாயகியம்மன் கோவில்	1890
24.	விராமதி	செல்வ விநாயகர் கோவில்	-
25.	விரையாச்சிலை	நகர சுப்பிரமணியசாமி கோவில்	1970

** (1938இல் நித்தியகல்யாணி கைலாசநாதர் கோவிலாக இது கட்டப்பெற்றது. இடையே சுப்பிரமணியசாமி கோவிலாக மாற்றியமைக்கப் பெற்றது. இப்போது (1998) மீண்டும் சிவன்கோவிலாகச் சீர்திருத்தி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.)*

Koviloor Digital Library

பட்டியல் – III

1. கீழப்பூங்குடி
2. கொத்தமங்கலம்
3. சோழபுரம்
4. நாட்டரசன்கோட்டை
5. பனங்குடி
6. பாகனேரி
7. வெற்றியூர்

நகரத்தாரும் அரசியலும்

இந்திய அரசியலில் காந்தியடிகளின் வருகைக்குப்பின் நகரத்தார்கள் அவரால் ஈர்க்கப்பட்டு அரசியலில் ஈடுபடத் தொடங்கினர். தொடக்கத்தில் காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களில் மட்டும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு கதர், மதுவிலக்கு, அரிசன முன்னேற்றம், காந்திய முறைக்கல்வி ஆகிய சமூக நிர்மாணப் பணிகளைச் சிறந்த முறையில் மேற்கொண்டனர். இவ்வகையில் கானாடு காத்தான் வை.சு. சண்முகனார், காரைக்குடி சொ. முருகப்பா, காந்தி மெய்யப்பர், ஆத்தங்குடி சுப்பையா செட்டியார், அமராவதிபுதூர் பிச்சப்பா சுப்பிரமணியன், மதகுபட்டி வேலாயுதஞ் செட்டியார், கண்டவராயன்பட்டி தொண்டர் அருணாசலம் ஆகியோர் குறிப்பிடத்தக்க நகரத்தார்கள் ஆவர். பல நகரத்தார்கள் தம் வாழ்நாள் முழுவதும் கதர் ஆடை அணிவதையே ஒரு நோன்பாகக் கொண்டனர். காந்தியடிகள் செட்டிநாட்டிற்கு வந்தபொழுது ஆச்சிமார் பலர் தம் நகைகள் உட்படப் பெருநிதியை அவரது நிர்மாணத் திட்டங்களுக்கு நன்கொடையாக வழங்கினர்.

காந்தியடிகளால் ஈர்க்கப்பட்டு அரசியலுக்கு வந்த நகரத்தார்களின் அடுத்த அணியினர் விடுதலைப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கேற்று, சிறைவாசம், தடியடி போன்ற பல இன்னல்களை ஏற்று நாட்டுக்கு உழைத்தனர். தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம், கம்பன் அடிப்பொடி சா. கணேசன், ஆறு. ஆ. இராம. சொக்கலிங்கம் செட்டியார், மெ.சு.தி. தண்ணீர்மலை செட்டியார், அழ.சுப.பள.சுப. திருநாவுக்கரசு செட்டியார், தே.இரா. அருணாசலம், சின்ன அண்ணாமலை, ஆர்ச் அண்ணாமலை, இராம. கருப்பஞ் செட்டியார், மெ. சி. மாணிக்க வாசகம், ஏகநாதன் ஆகியோர் இவ்வணியினரில் குறிப்பிடத் தக்கோர் ஆவர்.

நாடு விடுதலை பெற்றபின் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் போன்ற பதவிகளைக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பெற்று அப்பதவிகளின் வாயிலாக நாட்டுத் தொண்டாற்றிய நகரத்தார்கள் மூன்றாவது அணியினர். ஆறு.ஆ.ராம. சொக்கலிங்கம் செட்டியார், இராசா சர் முத்தையா செட்டியார் ஆகியோர் சட்டமன்ற உறுப்பினர்கள். வ.சொ.ராம. வள்ளியப்ப செட்டியார், வெ. வீர.நா.அரு. நாகப்ப செட்டியார், இரா. இராமநாதன் செட்டியார், ந. அருணசாலம் செட்டியார், ப. சிதம்பரம் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்கள். தஞ்சாவூர் சு.இராம. இராமநாதன் செட்டியார், சுபக.அ. இலட்சுமணன் செட்டியார் ஆகியோர் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள். ப. சிதம்பரம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மத்திய அரசில் துணை அமைச்சராகவும் இணை அமைச்சராகவும் தொண்டாற்றியுள்ளார்.

நாடு விடுதலை பெறுவதற்கு முன் தமிழ்நாட்டில் செல்வாக்குடைய கட்சியாக இருந்த நீதிக்கட்சியின் தொடக்ககாலத் தலைவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் ராசா சர் முத்தையா செட்டியார். அக்கட்சியின் சார்பாக அவர் சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராகவும் சட்டமன்ற எதிர்கட்சித் தலைவராகவும் தமிழக அரசின் அமைச்சராகவும் தொண்டாற்றி யுள்ளார்.

காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக இராஜாஜியால் ஈர்க்கப்பட்ட நகரத்தார் அணியினர் பெருமளவில் காங்கிரசில் இருந்தனர். இராஜாஜி காங்கிரசை விட்டு வெளியேறி, சுதந்திராக் கட்சியைத் தொடங்கிய போது அவர்களும் அக்கட்சியில் இணைந்தனர். இக்கட்சியின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கம்பன் அடிப்பொடி சா. கணேசனும் சா. மெய்யப்பனும் ஆவர். கம்பன் அடிப்பொடி இக்கட்சியின் சார்பில் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் தொண்டாற்றியுள்ளார்.

அறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியபோது அவரது பேச்சாற்றலாலும் எழுத்தாற்றலாலும் ஈர்க்கப்பட்டு அந்நாள் நகரத்தார் இளைஞர் பலர் அக்கட்சியில் இணைந்தனர். செட்டிநாட்டுப் பகுதியில் கட்சி வேரூன்றுவதற்கும் தழைத்து வளர்வதற்கும் தொண்டாற்றிய நகரத்தார்களுள் கவியரசர் கண்ணதாசன், இராம. சுப்பையா, தேவகோட்டை இராம. வெள்ளையன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களுள் கவியரசர் கட்சியின் முதல்நிலைத் தலைவர்கள் வரிசையில் ஒருவராகத் திகழ்ந்தவர். அவரது கவிதைகள் இக்கட்சியின் வளர்ச்சிக்கு மிகவும்

Koviloor Digital Library

உறுதுணையாக அமைந்தவையாகும். சி. சேதுராமன், சித. சிதம்பரம், இராம. நாராயணன் ஆகியோர் இக்கட்சி சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஆவர். இராம. சுப்பையா சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தொண்டாற்றியவர். சித. சிதம்பரம் காரைக்குடியிலும் இராம. வெள்ளையன் தேவகோட்டையிலும் நகர்மன்றத் தலைவராகப் பணியாற்றிய பொழுது இருநகரங்கட்கும் நற்பணிகள் பலவற்றைச் செய்துள்ளனர்.

தி.மு.க. விலிருந்து எம்.ஜி.ஆர். பிரிந்து அ.இ.அ.தி.மு.க. வைத் தொடங்கிய பொழுது நகரத்தார் பலர் அவ்வியக்கத்தில் இணைந்தனர். அவர்களுள் குழிபிறையைச் சேர்ந்த பாவாணன் தமது துடிப்பான மேடைப் பேச்சுக்களால் இக்கட்சியின் வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டவ ராவார். இக்கட்சியின் சார்பில் தமிழக அமைச்சராகத் தொண்டாற்றிய நகரத்தார் சே. இரகுபதி.

பல கட்சிகள் ஒன்றிணைந்து ஜனதாகட்சி உருவான பொழுது தமிழகத்தில் இக்கட்சியின் மாநில அளவிலான பொறுப்புக்களில் இருந்த நகரத்தார் பழ. கருப்பையா. மூப்பனார் தலைமையில் த.மா.கா. தொடங்கப் பெற்ற பொழுது அதில் இணைந்த ப. சிதம்பரம் இந்திய நிதியமைச்சராகத் தொண்டாற்றிய சிறப்புடையவ ராவார். இப்போது இவர் அக்கட்சி சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர். பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக மாநில அளவிலான செயற்குழு உறுப்பினர்களுள் கண்டனூரைச் சேர்ந்த சுப. பழநியப்பனும் ஒருவர்.

நகரத்தார்கள் இயல்பாக அமைதியான வாழ்க்கையை விரும்புபவர்கள்; அற உணர்வில் பிடிப்புள்ளவர்கள்; ஆரவாரத்தையும் விளம்பரத்தையும் விரும்பாதவர்கள். எனவே அவர்கள் நேரடி அரசியலில் மிகுதியாக ஈடுபடுவதில்லை. செட்டிநாட்டுப் பரப்பளவு குறைவு; மக்கள் தொகை எண்ணிக்கை மிகச் சிறிது; எனவே தேர்தலின் வெற்றிவாய்ப்பும் மிகக் குறைவு. இதுவும் நகரத்தார் நேரடி அரசியலில் மிகுதியாக ஈடுபடாமைக்கு ஒரு காரணமாகும். ஆனாலும் இவற்றை மீறி நேரடி அரசியலில் ஈடுபட்ட நகரத்தார்களின் பங்களிப்பு மிகச் சிறப்பாகவே அமைந்துள்ளது.

நாட்டு நடப்பை நன்கு அறிந்தவர்களாகவும் அரசியலில் கூர்ந்த அறிவைப் பெற்றவர்களாகவும் திகழும் நகரத்தார்கள் எப்போதும் சிறந்த அரசியல் பார்வையாளரும் விமர்சகரும் ஆவர்.

நகரத்தாரும் இராமகிருஷ்ணா இயக்கமும்

இயல்பாகவே ஆன்மீக நாட்டம் கொண்ட நகரத்தார் வங்கத்தில் தோன்றிய இராமகிருஷ்ணரும், அவர் சீடர் விவேகானந்தரும் இந்து சமய மறுமலர்ச்சிக்காக ஆற்றிய பணிகளையும், அதனைத் தொடர்ந்து இராமகிருஷ்ணா மடங்கள் நாடெங்கும் நிறுவப்பெற்று அது ஓர் இயக்கமாக உருவெடுத்ததையும் ஊன்றிக் கவனித்தனர். அவர்களுக்கும் அவ்வியக்கத்தில் ஈடுபாடு ஏற்பட்டது.

அதனால் சென்ற நூற்றாண்டின் இறுதியில் பொது வாழ்வில் முனைந்து நின்ற நகரத்தார்கள், தங்கள் பிள்ளைகளுக்கும் பொது நிறுவனங்களுக்கும் பெயர் வைக்கும் போது இராமகிருஷ்ணர், விவேகானந்தர் பெயர்களைச் சூட்டி, தங்கள் ஈடுபாட்டை வெளிப்படுத்தினர். காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தார் தாங்கள் தொடங்கிய கல்விநிலையத்திற்கு 'இராம கிருஷ்ணா கலாசாலை' என்றும், நூலகத்திற்கு 'விவேகானந்தா நூல்நிலையம்' என்றும் பெயரிட்டனர். ஆவினிப்பட்டியில் பழ.அ. வகையினர் தொடங்கிய பள்ளிக்கு 'விவேகானந்தா கல்விக் கழகம்' எனப் பெயரிட்டனர். இராயவரத்தில் அமைக்கப் பெற்ற நூலகத்திற்கு விவேகானந்தா வாசகசாலை என்று பெயர். இன்று இது அரசு கிளை நூலகமாகச் செயல்படுகிறது. இவை சில சான்றுகள்.

பின்னர் இராமகிருஷ்ணா மடங்களினால் நடத்தப் பெற்ற கல்வி நிறுவனங்களுக்குப் பொருளுதவி செய்தும், தங்கள் பிள்ளைகளைப் பெரும் எண்ணிக்கையில் சேர்த்தும் பேராதரவு நல்கினர். பெத்தாச்சி வள்ளல் சென்னை விவேகானந்தா கல்லூரிக்குப் பல இலட்ச ரூபாய்களை நன்கொடையாக வழங்கியுள்ளார். திருப்பராய்த்துறை, திருப்புனவாசல் ஆகிய இடங்களில் உள்ள இராமகிருஷ்ணா உயர்நிலைப் பள்ளிகளிலும், சென்னை, சோழவந்தான் ஆகிய இடங்களில் உள்ள விவேகானந்தா கல்லூரி களிலும் நகரத்தார் மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் சேர்க்கப் பெற்றுப் பயின்றுளர். சேலம் சாரதா கல்லூரியில் நகரத்தார் சமூகப் பெண்கள் மிகுதியாகப் பயின்றுள்ளனர்.

நகரத்தாருக்கு இராமகிருஷ்ணரிடமும், விவேகானந்தரிடமும் ஏற்பட்ட ஈர்ப்பைப் போலவே அன்னை சாரதாமணிதேவியின்பால் ஈர்ப்பு ஏற்பட்டது. எனவே, நகரத்தார் பெண்கள்

Koviloor Digital Library

பலருக்குச் சாரதா எனப் பெயரிட்டனர். ஜவஹர் நூற்பாலையின் நிறுவுநரான பள்ளத்தூர் மு.அ. பழநியப்ப செட்டியார் பெண்களுக்காக ஒரு சேவை நிலையத்தை பல இலட்ச ரூபாய் செலவில் தொடங்கிய போது "சாரதா சேவாசிரமம்" என்ற பெயரிலேயே தொடங்கி நடத்தினார். மேலும் அந்நிறுவன வளாகத்தில், ஜெயராம்பாடியில் உள்ள அன்னை சாரதாமந்திர் அமைப்பில், சாரதாதேவி கோவிலை உருவாக்க முழுநிதி உதவியும் செய்தவர், அந்நிறுவனத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றிய பழ.லெ. பழநியப்ப செட்டியார் என்பதும் நகரத்தாருக்குச் சாரதாமணிதேவியாரிடம் உள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்தும். அண்மைக்காலத்தில் மதுரையில் இராமகிருஷ்ணா மடத்திற்கு டாக்டர். சண்முகம் செட்டியார் மிகப்பெரிய அளவில் நிலமும், பொருளும் நன்கொடையாக அளித்திருப்பதோடு, அந்த இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு ஓர் அமைப்பை உருவாக்கி அவ்வியக்கக் கொள்கைகளைப் பரப்பி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தின் பொது வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்திய அனைத்து இயக்கங்களிலும் நகரத்தார் பங்களிப்பு இருந்து வந்திருப்பதைப் போலவே இராமகிருஷ்ணா இயக்கத்திலும் நகரத்தார் பங்களிப்பு கணிசமான அளவு உள்ளது என்பது வரலாற்றுண்மை.

நகரத்தாரும் கலைத்துறையும்

சிலப்பதிகார காலத்திலிருந்து நகரத்தார் கலைத்துறையில் ஈடுபாடும், திறமையும் பெற்றுக் கலைத்துறைப் புரவலராகவும், கலைஞர் களாகவும் விளங்கி வருகின்றனர். கோவலன் வாய்ப்பாட்டு, கருவி இசை முதலிய கலைகளில் ஆற்றலுடையவனாகவும், நாட்டியக் கலைப் புரவலனாகவும் விளங்கிய நிலையைச் சிலப்பதிகாரம் புலப்படுத்துகிறது. அதே மரபு இன்றளவும் தொடர்கிறது.

இசைக்கலை :

நகரத்தார் வீட்டுத் திருமணங்களிலும், சாந்தி, புதுமை போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளிலும், **1940** களில் புகழ்பெற்ற இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றமை நகரத்தார் இசைக்கலையைப் போற்றி வளர்த்ததனை நன்கு வெளிப்படுத்தும். பனையப்பட்டி வினைதீர்த்தான் செட்டியார், எஸ்.வி.எஸ். அழகப்பன், சங்கீதபூஷணம் சோம. இராமநாதன் செட்டியார், எம்.எல். வள்ளியம்மை ஆச்சி ஆகியோர் தமிழ்நாடெங்கும் மேடைக் கச்சேரிக்ள் நிகழ்த்திய சிறப்பு மிகு இசைக்கலைஞர்களாவர்.

தமிழிசையை வளர்த்த பெருமை இராசா.சர். அண்ணாமலை செட்டியாருக்கும், அவர் தலைமையில் செயல்பட்ட அனைத்து ஊர் நகரத்தார்களுக்கும் உரியது என்பது யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை.

கருவி இசைக் கலையிலும் நகரத்தார் ஆற்றல் காட்டியுள்ளர். பள்ளத்தூர் சித. இலட்சுமணன் மிகச் சிறந்த மிருதங்கக் கலைஞராவார். காரைக்குடி 'புளூட்' சோமசுந்தரம் செட்டியார் நல்ல புல்லாங்குழல் கலைஞராவார்.

நாதசுர இசையை வளர்த்த பெருமை நகரத்தாருக்கு மிகுதியும் உண்டு. தங்கள் வீட்டுச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் கோவில் விழாக்களிலும் சிறந்த நாதசுர இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது நகரத்தார் பழக்கமாகும். மேலும், காசி விசுவநாதர் கோவிலில் நாதசுரத்தை நாடோறும் இசைக்கச் செய்த சிறப்பும் நகரத்தாருக்கு உண்டு.

நகரத்தாரின் இசைக்கலை அறிவு நுட்பத்தை நன்கு உணர்ந்திருக்கும் தமிழக இசைக் கலைஞர்கள் செட்டிநாட்டுப் பகுதியில் இசைநிகழ்ச்சி நடத்தும்போது மிகுந்த கவனத்துடனும், ஈடுபாட்டுடனும் நடத்துவர் என்பது இசைஉலகு அறிந்த உண்மை.

நடனக்கலை :

நடனக்கலைக்கும் நகரத்தார் நீண்டகாலமாகப் புரவலராக இருந்து வந்துள்ளர். அவர்கள் வீட்டு விழாக்களிலும், அவர்கள் நிருவாகிகளாக இருக்கும் கோவில் விழாக்களிலும் சிறந்த நடன நிகழ்ச்சிகளை அமைத்து அப்பணியை அவர்கள் செய்து வருகின்றனர். நகரத்தார் பெண்கள் பலர் தம் இளவயதில் முறைப்படி நடனம் பயின்று, அரங்கேற்றம் நிகழ்த்தி, பல மேடை நிகழ்ச்சிகளும் நடத்தியுள்ளனர்; நடத்தி வருகின்றனர். ஆனால் திருமணமான நகரத்தார் மரபுப் பெண்கள் நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை என்பதை ஒரு எழுதப்பெறாத சமூக விதிமுறையாக ஏற்றுச் செயல்படுவதால் புகழ்பெற்ற நடனக்கலைஞர் என வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்பிடத்தை நகரத்தார் பெண்கள் யாரும் பெறவில்லை. தேவகோட்டை அரு. இலட்சுமணன் முறைப்படி நடனம் பயின்று, பலமேடை நடன நிகழ்ச்சிகளையும் நடத்திய கலைஞர்; மிகச் சிறந்த மயில் நடனக்கலைஞர் என்ற புகழைப் பெற்றவருமாவார்.

ஓவியக்கலை :

நகரத்தார்கள் ஓவியக்கலைப் புரவலர்கள் என்பதற்கு அவர் தம் வீடுகளில் போற்றிக் காக்கப் பெறும் புகழ் பெற்ற ராஜா ரவி வர்மாவின் ஓவியங்களே சிறந்த சான்றாகும். மேலும் பல நகரத்தார் இல்லங்களில் கலியாணக்

Koviloor Digital Library


கொட்டகை எனப்படும் ஹாலில் மேற்கூரையில் சிறந்த கலைநயம் மிக்க ஓவியங்கள் வரையப் பெற்றுள்ளதும் அவர்தம் ஓவியக்கலை ஈடுபாட்டைப் புலப்படுத்தும். அவ்வாறே ஒன்பது நகரக்கோவில்களுள் சிலவற்றிலும், நகரச்சிவன் கோவில்கள் பலவற்றிலும், மேற்கூரைகளிலும், சுவர்களிலும் இதிகாச, புராண ஓவியங்களை வரைய ஏற்பாடு செய்து காத்து வரும் பாங்கும் மற்றொரு சான்றாகத் திகழ்கின்றது.

நகரத்தார் பெண்களின் ஓவியக்கலைத்திறன் வெளிப்பாடே அவர்கள் இடும் கோலங்கள் எனலாம். குறிப்பாகத் திருமணவீடுகளிலும், பொங்கல் போன்ற சிறப்பு நாட்களிலும் அவர்கள் போடும் 'நடுவீட்டுக் கோலம்' என்பது அவர் தம் ஓவியக்கலைத்திறனை உலகுக்கு அடையாளம் காட்டும்.

சிற்பக்கலை :

நகரத்தார்கள் சிற்பக்கலைப் புரவலர்கள் என்பது நாடறிந்த உண்மை. அவர் தம் கோவில் திருப்பணிகள் இதற்குச் சான்றாக நிற்கின்றன. மேலும் நகரத்தார் இல்லங்களில் வெளிப்புறச் சுவர்களில் காணப்பெறும் சுதைச் சிற்பங்களும், நிலை, எழுதகம் ஆகியவற்றில் காணப்பெறும் கலைநயம் செறிந்த மரச்சிற்பங்களும் நகரத்தார் சிற்பக்கலை ஈடுபாட்டையும் அவர் தம் சுவை உணர்வையும், உலகறியப் பறைசாற்றி நிற்கின்றன.

நகரத்தாரில் சிற்பக்கலை நுணுக்கங்களைக் கற்றுணர்ந்த ஆற்றல்சால் கலைஞர்களும் உளர். கோவிலூர்த் திருக்கோவிலின் கல் திருப்பணியை நிறைவு செய்து முதல் குடமுழுக்குவிழாவைச் சிறப்பாக நிகழ்த்திய, திருக்களர் ஆண்டவர் எனப்



நடுவீட்டுக் கோலம்

நகரத்தார்களுள் சிறந்த ஓவியர்களும் உளர். தேவகோட்டை இராம. பழநியப்பன் உலகப் புகழ்பெற்ற ஓவியராவார். இப்போது அவர் லலிதகலா அக்காதமியின் மண்டல இணை இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். கண்டனூர் இராம. ஆவுடையப்பன் தஞ்சாவூர்ப்பாணி கண்ணாடி ஓவியங்கள் வரைவதில் மிகுந்த ஆற்றலுடையவர்;. பல்வேறு விருதுகளைப் பெற்றவர்.

பெயர்பெற்ற வீரப்ப சாமிகள் சிறந்த சிற்பி எனத் தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் எழுதுகிறார். கம்பன் அடிப்பொடி சிற்பக்கலை நுணுக்கங்களை அறிந்தவர் என்பதோடு வை. கணபதி ஸ்தபதியோடு இணைந்து சிற்பக்கலை குறித்து நூல்கள் எழுதியிருப்பவரும் ஆவார். மதுரை வங்கியின் இப்போதைய தலைவர் க.மா. தியாகராசன் நவீன சிற்பங்களை உருவாக்கும் ஆற்றல் மிகு கலைஞர்.

Koviloor Digital Library

நாடகக் கலை :

நுண்கலைகள் அனைத்தும் இணைந்து ஒரே கலைவடிவாக மலர்ந்துள்ளகலை நாடகக்கலை. அதனைப் புரந்த பெருமையும் நகரத்தார்க்கு உண்டு. அவர்கள் நிருவாகிகளாக இருக்கும் கோவில் விழாக்களில் மேடை நாடகங்களை (தெருக்கூத்து) ஏற்பாடு செய்து நடத்துகின்றனர். விழாக்களுக்கு நாடகம் அமைத்துத் தரும் நாடக அமைப்பாளர்களாகப் (கான்ட்ராக்டர்) பல நகரத்தார் பணி செய்து வருகின்றனர்.

சென்ற தலைமுறையில் சிறந்த நாடகக் குழுக்கள் பல தனித்து இயங்கி, நாடகக் கலையை வளர்த்து வந்தபோது செட்டிநாட்டுப் பகுதியில் 'வைரம் நாடக சபையை' உருவாக்கி, நீண்டகாலம் சிறப்பாக நடத்தி, மனோரமா போன்ற சிறந்த கலைஞர்களைக் கலை உலகிற்கு அளித்த பெருமை பள்ளத்தூர் வைரம். உ.அ. அருணாசலம் செட்டியாருக்குரியதாகும்.

நகரத்தாரில் சிறந்த நாடக ஆசிரியர்களாகத் திகழ்பவர்கள் அரு. இராமநாதனும், டாக்டர். ஆறு. அழகப்பனுமாவர். அரு. இராமநாதனின் 'இராஜாராஜ சோழன்' டி.கே.எஸ். சகோதரர்களாலும், டாக்டர். ஆறு. அழகப்பனின் 'திருமலை நாயக்கர்' ஹெரான் ராமசாமியாலும் தமிழகமெங்கும் நடத்தப்பெற்ற சிறப்பான நாடகங்களாகும்.

திரைப்படக்கலை :

நாடகக்கலையின் பரிணாம வளர்ச்சியாக உருவானகலை திரைப்படக்கலை. அக்கலையைத் தொடக்கத்திலிருந்தே புரந்தும், வளர்த்தும், அதன் அடித்தளமாக அமைபவர்கள் நகரத்தார்களே என்பது வரலாறு காட்டும் உண்மை. இத்துறையில் மூன்று நிலைகள் உள்ளன. திரைப்படத் தயாரிப்பு, திரைப்பட விநியோகம், திரைப்படங்களைத் திரையிடல் என்பன அவை.

இம்மூன்று நிலைகளிலும் நகரத்தார் பங்களிப்பு அளவிறந்ததாகும்.

திரைப்படங்களைத் திரையிடும் திரையரங்குகளைத் தமிழகமெங்கும் பல நகர்களில் நகரத்தார்கள் நடத்தி வருகின்றனர். அவற்றின் பட்டியல் (முழுமையான பட்டியலன்று) கீழே தரப்பட்டுள்ளது. ஊர்களின் அகர வரிசையில் பட்டியல் அமைகிறது.

ஈரோடு அபிராமி, உடுமலைப்பேட்டை கல்பனா, கரூர் திண்ணப்பா, கல்லல் NNL, காரைக்குடி இராம விலாசம், நடராசா, கோவை கங்கா, யமுனா, காவேரி, சிதம்பரம் லேனா, வடுகநாதன், சிவகங்கை ஸ்ரீராம், சென்னை அபிராமி, கமலா, காமதேனு, கிருஷ்ணவேணி, கெயிட்டி, சங்கம், பதுமம், தாம்பரம் வித்யா, திருச்சி சோனா, மீனா, திருவண்ணாமலை மீனாட்சி, பல்லாவரம் லெட்சுமி, புதுக்கோட்டை வெஸ்ட், மதுரை சக்தி, சிவம், வலையபட்டித் திரையரங்கு ஆகியவை நகரத்தார் திரையரங்கு களாகும்.

திரைப்பட விநியோகத் துறையிலும் நகரத்தார் பலர் முன்னோடியாகத் திகழ்ந்தனர். குறிப்பாகப் பிரிக்கப் பெறாத மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கும், திருச்சி, தஞ்சை மாவட்டங்களுக்கும், சென்னை மாநகருக்கும் உரிய விநியோகப் பணியைப் பெருமளவில் செய்த நிறுவனங்கள் நகரத்தார் நடத்திய நிறுவனங்களாகும்.

ஏ.வி.எம். லிமிடெட், ஏ.எல்.எஸ். பிலிம்ஸ், செட்டியார் பிலிம்ஸ், மெட்ராஸ் பிலிம்ஸ், வீயார் பிலிம்ஸ், அஜந்தா பிக்சர்ஸ், இராமநாதன் பிக்சர்ஸ், கிருஷ்ணா பிக்சர்ஸ், எம்.எல்.எம். மூவீஸ், வாணி பிலிம்ஸ் என்பவை இவ் வரிசையில் குறிப்பிடத்தக்க நிறுவனங்கள் ஆகும்.

திரைப்படத் தயாரிப்புத் துறையில் பல்வேறு உட்பிரிவுகள் உள்ளன. அவற்றுள் பெரும்பாலான பிரிவுகளில் நகரத்தார் பங்களிப்பு உள்ளது. படத்தயாரிப்புக்கு முதல் தேவை நிதி. அதனை உதவும், நிதி உதவியாளர்களாக (Financiers) நகரத்தார் பலர் நீண்டகாலமாகத் திரைஉலகில் இயங்கி வருகின்றனர்.

அடுத்து, படப்பிடிப்பு நிலையங்கள் (Studios). இத்துறையிலும் முன்னோடிகளாகவும் சிறந்த படப்பிடிப்பு நிலையங்களை உருவாக்கிப் படத் தயாரிப்பை ஊக்குவித்தவர்களாகவும் நகரத்தார்கள் விளங்கினர். நகரத்தார் படப்பிடிப்பு நிலையங்கள் ஏ.வி.எம். ஸ்டுடியோ, நெப்டியூன் ஸ்டுடியோ, நியூடோன் ஸ்டுடியோ, சியாமளா ஸ்டுடியோ, சாரதா ஸ்டுடியோ ஆகியவை.

திரைப்படத் தயாரிப்பில் சிறந்தவர்களாகவும், நிறையப்படங்கள் தயாரித்தவர்களாகவும், நகரத்தார்கள் பலர் திரை உலகில் உள்ளனர். ஏ.கே. செட்டியார் (காந்தி திரைப்படம்); மாத்ருபூமி திரைப்படம் தயாரித்த ஏஎல்.ஆர்எம். நிறுவன உரிமையாளர், ஏ.வி. மெய்யப்ப செட்டியார், பெரி.சோம. சாத்தப்ப செட்டியார், நியூடோன் இராமநாதன் செட்டியார், கிருஷ்ணாபிக்சர்ஸ் லேனா, சின்ன அண்ணாமலை, கவியரசர் கண்ணதாசன், வலம்புரி சோமநாதன், பஞ்சு அருணாசலம், வி.டி.அரசு, சடையப்ப செட்டியார், கே.என். சுப்பையா, கே.என்.சுப்பு, இராம. நாராயணன், மெ. சேவுகன் செட்டியார், மெ. மாணிக்கம் செட்டியார், பழ. கருப்பையா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

Koviloor Digital Library

திரைப்படங்கள் பலவற்றிற்குச் சிறந்த முறையில் கதை, உரையாடல் எழுதிய நகரத்தார்கள், சோமசுந்தரம் (மனிதன் திரைப்படம்), சின்ன அண்ணாமலை, அரு. இராமநாதன், தமிழ்வாணன், வலம்புரி சோமநாதன், காரைக்குடி நாராயணன் ஆகியோராவர். கதை, உரையாடலோடு பாடலும் எழுதிய சிறப்புடையவர்கள் கவியரசர் கண்ணதாசனும், பஞ்சு அருணாசலமும்.

திரைப்பட இயக்குநர்களாகவும் நகரத்தார் பலர் சிறந்து விளங்குகின்றனர். ஏ.வி. மெய்யப்ப செட்டியார், வலம்புரி சோமநாதன், வி.டி. அரசு, பஞ்சு அருணாசலம், எஸ்.பி. முத்துராமன், தேவராஜ் (அன்னக்கிளி திரைப்படம்), இராம. நாராயணன், காரைக்குடி நாராயணன், வசந்த், பழ. கருப்பையா, ஏ.எல்.எஸ். கண்ணப்பன் ஆகியோர் இத்துறையில் திறமை காட்டியவர் களாவர்.

படத்தயாரிப்பின் பிற தொழில் நுட்பத் துறைகளைப் பொறுத்த வரை நேமத்தான்பட்டி இராமனாதன் ஒலிப்பதிவுத் துறையில் பல தேசிய விருதுகள் பெற்றவராவர். படத்தொகுப்புத் துறையில் எஸ்பி. முத்துராமன் ஆற்றல் காட்டியவராவர்.

நடிப்புத் துறையில் நகரத்தார் பெரும் பங்களிப்பைச் செய்யவில்லையெனினும், அத்துறையிலும் அவர்கள் நுழையாமல் இல்லை. கவியரசர் கண்ணதாசன் 'கறுப்புப்பண'த்தில் முழுநீளப் பாத்திரம் ஒன்றை ஏற்றுச் சிறப்பாக நடித்தவராவார். அவர் மகன் கலைவாணன் கண்ணதாசன் ஒரு படத்தில் கதைத்தலைவனாக நடித்தவர். மேலைச்சிவபுரி ஜெயங்கொண்டான் பல படங்களில் துணைநடிகராக நடித்துள்ளார். இப்போது கொத்தமங்கலத்தைச் சேர்ந்த சீனுமோகன் நகைச்சுவை வேடங்களில் சிலபடங்களில் நடித்து வருகிறார்.

திரைப்படத்துறை தொடர்பாக அவ்வப்போது தமிழக அரசு அமைக்கும் பல குழுக்களில் பல பொறுப்புக்களில் பல நகரத்தார்கள் அமர்த்தப் பெற்றுச் சிறப்பாகப் பங்காற்றியுள்ளனர். வெளிநாட்டுக்கு அனுப்பிய குழுக்களில் இடம் பெற்று ரஷ்யா சென்று வந்தவர்கள் ஏ.எல். சீனிவாசன், வலம்புரி சோமநாதன், பஞ்சு அருணாசலம், எ.எல்.எஸ். கண்ணப்பன் ஆகியோராவர்.

இப்போது இயலிசை நாடகமன்றத்தின் தலைவராகத் தமிழக அரசு இராம. நாராயணனை அமர்த்தியுள்ளது.

கலைத்துறையில் சிறந்த பங்களிப்புச் செய்தவர்கட்குத் தமிழக அரசு வழங்கும் கலைமாமணி விருதினைப் பெற்ற நகரத்தார்கள் ஏ.எல். சீனிவாசன், கவியரசர் கண்ணதாசன், வலம்புரி சோமநாதன், வி.டி. அரசு, எஸ்.பி. முத்துராமன், இராம. நாராயணன், டாக்டர். ஆறு. அழகப்பன் ஆகியோர்.

தொலைக்காட்சித் தொடர் :

திரைப்படக்கலையின் அடுத்த கட்ட வளர்ச்சி, தொலைக்காட்சித் தொடர்கள். இத்துறையிலும் நகரத்தார் பங்களிப்பை நன்கு காண இயல்கிறது. செவன்த் சானல் என்ற நிறுவனத்தின் சார்பில் பல சிறந்த தொடர்களை உருவாக்கித் தந்து கொண்டிருப்பவர் மாணிக்கம் நாராயணன். அனுபவ் கம்யூனிகேஷன்ஸ் வாயிலாகப் பல சிறந்த தொடர்களை வழங்கி வருபவர் ஏ.எல்.எஸ். கண்ணப்பன்.

தமிழகத்தில், நுண்கலைத் துறைகள் அனைத்திலும் ஆற்றல் பெற்ற கலைஞர்களாக விளங்குவதோடு, கலைப் புரவலர்களாகவும், கலை ஆர்வலர்களாகவும், கலைச் சுவைஞர் களாகவும் நகரத்தார் செய்திருக்கும் பங்களிப்பு கலையுலக வரலாற்றில் தடம் பதித்த ஒன்றாகும்.

நகரத்தாரும் தமிழும்

சைவமும், தமிழும் தமதிரு கண்கள் என மதித்துப் போற்றி வருபவர்கள் நகரத்தார்கள். அவர்தம் தமிழ்ப் பற்றையும், தமிழ்த் தொண்டையும் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு சோமலெ. எழுதிய நூல் 'செட்டி நாடும் செந்தமிழும்'. நகரத்தார் தமிழ்ப் புலவர்களைப் புரக்கும் புரவலர்களாக இருந்தும், தாமே தமிழில் படைப்பாற்றலும், ஆய்வுத்திறனும் மிக்க தமிழறிஞராக மிளிர்ந்தும் தமிழ் வளர்த்துள்ளனர்; பரப்பியுள்ளனர். தொடர்ந்து அப்பணிகளைச் செய்து வருகின்றனர்.

தமிழ்க்கல்வி :

தமிழ்க் கல்விக்கு நகரத்தார் ஆற்றியிருக்கும் தொண்டு அளப்பரியது. தமிழ் இலக்கிய, இலக்கணங்களை மட்டும் பயிற்றுவிக்கும் தமிழ்க்கல்லூரிகள் செட்டிநாட்டுப் பகுதியில் இரண்டு உள. இரண்டுமே நகரத்தாரால் தோற்றுவிக்கப்பெற்றுச் சிறப்பாக நடத்திவரப் பெறுபவை.

மேலைச்சிவபுரி வ.பழ.சா. பழநியப்ப செட்டியாரும், அவர் தம்பி அண்ணாமலை செட்டியாரும் பண்டிதமணியின் கருத்துரைக் கேற்பத் தோற்றுவித்த கல்லூரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி (த.க.). காரைக்குடி இராம. பெரியகருப்பன், பண்டிதமணியின் மாணவர், மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் கருத்துரைக் கேற்பத் தோற்றுவித்த கல்லூரி இராமசாமி தமிழ்க் கல்லூரி (த.க.).

Koviloor Digital Library

செட்டிநாட்டுப் பகுதிக்கு வெளியே, பிறரால் தொடங்கி நடத்தப்பெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும், அதனால் நடத்தப் பெற்றுவரும் தமிழ்க் கல்லூரிக்கும் நகரத்தாராகிய பெத்தாச்சி வள்ளல் பெரும் பொருளுதவி செய்துள்ளார். மேலும் அவர், பாண்டித்துரைத் தேவரால் தொடங்கப் பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவராக நான்காண்டுகள் பணியாற்றியதோடு, அச்சங்கத்திற்கும் அதனால் நடத்தப் பெற்றுவரும் செந்தமிழ்க் கல்லூரிக்கும் பெரும் பொருளுதவியும் செய்துள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் சிறந்த தமிழறிஞர்களைப் பணியமர்த்தி அவர் வாயிலாகத் தமிழ்க்கல்வியை வளர்த்ததோடு, மொழியியல் துறையைத் தமிழகத்திலேயே முதன்முதலில் தோற்றுவித்து, அதனை உயராய்வு மையமாக உயர்த்தி, தமிழ்க்கல்வியை நவீனமயமாக்கிய பெருமையும் அண்ணாமலை அரசர் குடும்பத்திற்கு உரியது.

நூல் வெளியீடு :

தமிழ்ப் புலவர்களைப் புரந்து, அவர்தம் ஆற்றல்மிகு படைப்புக்கள் நூலாக வெளிவரப் பொருளுதவி செய்ததன் வாயிலாகத் தமிழ்ப்பணி செய்த நகரத்தார் பெருமக்கள் மிகப் பலராவர். மு. இராகவையங்காரின் 'சேரன் செங்குட்டுவன்' உள்ளிட்ட, பல புலவர்களின் பல நூல்கள் பெத்தாச்சி வள்ளலின் பொருளுதவியால்தான் வெளிவந்தன.

விபுலானந்த அடிகளைத் தம் இல்லத்தில் தங்கவைத்து, அவருக்கு மருத்துவ உதவி செய்து, அவர் 'யாழ்நூல்' எழுத ஏற்ற சூழலை உருவாக்கிக் கொடுத்து, அந்நூல் வெளிவரவும் பொருளுதவி செய்தவர் நற்சாந்துபட்டி பெ.இராம.இராம. சிதம்பரம் செட்டியார் ஆவார்.

பாரதியாரையும், பாரதிதாசனையும் புரந்த பெருமை வை. சு. சண்முகனாருக்குரியது. சுத்தானந்த பாரதியாரின் நூல்களை வெளியிடுவதற்காகவே 'அன்புநிலையம்' என்ற நிறுவனத்தையும், பாரதிதாசனின் நூல்களை வெளியிடுவதற்காகவே 'முத்தமிழ் நிலையம்', 'முல்லைப் பதிப்பகம்' ஆகிய நிறுவனங்களையும் நகரத்தார்கள் உருவாக்கினர் என்பது நினைவுகூரத்தக்கது.

தமிழ்ப்பதிப்பக உலகத்தில் தொடக்கம் முதல் இன்றுவரை முன்னோடியாகவும், முன்னணியினராகவும் நின்று தமிழ் பரப்புபவர்கள் நகரத்தார்களே. 'சக்தி' வை. கோவிந்தன், 'தமிழ்ப் பண்ணை' சின்ன அண்ணாமலை, 'முல்லை' முத்தையா ஆகிய மூவரும் பதிப்புத்துறை முன்னோடிகள். 1940களில் தரமான தமிழ் நூல்களைச் சிறந்த முறையில், குறைந்த விலையில் அச்சிட்டுத் தமிழ் பரப்பித் தொண்டாற்றியவர்கள்.

இவர்களை அடுத்துப் பதிப்புலகில் நுழைந்து இன்றுவரை சாதனைகள் படைத்து, முன்னணி வரிசையினராய், மொழித் தொண்டு செய்து வரும் நகரத்தார் பதிப்பகங்கள் அருணோதயம், இன்ப நிலையம், ஐந்திணைப் பதிப்பகம், தமிழ்ப் புத்தகாலயம், பழனியப்பா பிரதர்ஸ், பாரி நிலையம், பிரேமா பிரசுரம், மணிமேகலை பிரசுரம், மணிவாசகர் பதிப்பகம், மீனாட்சி புத்தக நிலையம், வள்ளுவர் பண்ணை, வானதி பதிப்பகம், ஸ்டார் பிரசுரம் ஆகியவை.

நூல் வெளியீட்டின் மற்றொரு கிளை மாணவர்க்கு, கல்வித் துணையாக அமையும் துணை நூல்களை வெளியிடுதல். இத்துறையிலும், முன்னோடியாக நிற்பவர் நகரத்தார்களே. தமிழ்ப்பாடநூலுக்குரிய துணைநூல் என்றாலே கோனார் துணை நூல்தான் என்று, ஒருகாலத்தில் கொடிகட்டிப் பறந்த 'கோனார் உரை நூலை'ப் பதிப்பித்து வெளியிட்டு மாணவருலகில் தமிழ்ப்பணி புரிந்தது பழநியப்பா பிரதர்ஸ் நிறுவனம்.

அதன் அடிச்சுவட்டில் தமிழ்ப் பாடத்திற்கு மட்டுமன்றிப் பள்ளிப் பாடங்கள் அனைத்திற்கும், வகுப்புக்கள் அனைத்திற்கும் உரிய துணை நூல்களை, 'வெற்றித் துணைவன்' என்ற பெயரில் பதிப்பித்து வெளியிட்டு, இன்றைய மாணவரிடையே கல்விப் பணியும், தமிழ்ப் பணியும் செய்து வருகிறது மணிவாசகர் பதிப்பகம்.

நூல் வெளியீட்டின் அடுத்த கட்டம் இதழ் நடத்தித் தமிழ் வளர்த்தலும், பரப்புதலும். இத்துறையிலும் நகரத்தார் முயற்சிகளும், சாதனைகளும் வியக்கத் தக்கவை. 1910களில் நகரத்தார் நடத்திய இதழ் 'வைசிய மித்திரன்'. 1920களில் நகரத்தார் நடத்திய இதழ்களாகிய 'ஊழியனும்'(த.க.), 'குமரனும்' (த.க.) தமிழ் இதழுலகின் தரமான முன்னோடிகள். 1940 களில் வெளிவந்த 'பொன்னி', 'சக்தி', 'காதல்' இதழ்களும் இவ்வரிசையில் இணையத்தக்க வரலாற்றுப் பெருமையுடையவை. இன்றைய இதழியல் உலகில் விற்பனைச் சிறப்பும், போட்டியை வென்று முன்னிற்கும் புகழும் உடைய இதழ்கள் 'குமுதமு'ம், 'கல்கண்டு'ம் நகரத்தார் நடத்தும் இதழ்களே.

அமைப்புக்கள் :

இலக்கிய அமைப்புக்களை ஏற்படுத்தி, அவற்றின் வாயிலாக ஆண்டுதோறும் விழாக்கள் நடத்தி, தமிழறிஞர், கவிஞர் பலரைப் பங்கேற்கச் செய்து தமிழ் பரப்புவது நகரத்தார் செய்த, செய்து வருகிற மற்றொரு தமிழ்ப்பணி. இவ்வகையில் குறிப்பிடத்தக்க சிறப்பான அமைப்புக்கள்,

Koviloor Digital Library

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை (1909), காரைக்குடி இந்து மதாபிமான சங்கம் (1917); காரைக்குடி கம்பன் கழகம் (1939), தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாக் கழகம் (1946), காரைக்குடி திருக்குறட் கழகம் (1953) ஆகியவை.

தமிழ் வளர்ச்சிக் கழகம் :

தமிழில் கலைக்களஞ்சியம் வெளியிடுவதையும், இன்னும் சில நோக்கங்களையும் கொண்டதாகத் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பு 1947 இல் உருவாக்கப் பெற்றது, இவ்வமைப்பில் இராசா சர். அண்ணாமலை செட்டியார், வள்ளல் அழகப்பர் ஆகிய இரு நகரத்தாரும் உறுப்பினராக இருந்து தமிழ்ப்பணி செய்துளர்.

மேலும், கலைக்களஞ்சிய வெளியீட்டிற்கென வள்ளல் அழகப்பர் ரூபாய் 10,001 நன்கொடையாக வழங்கினார் என்பதும் நினைந்து போற்றத்தக்கது. தமிழ் வளர்ச்சிக் கழகச் செயற்குழுவில் வள்ளல் அழகப்பரும், எஸ்.ஏ.பி. அண்ணாமலையும் உறுப்பினராக இடம் பெற்றனர். தமிழ் வளர்ச்சிக் கழகப் பொறுப்பாளர் குழுவில் இராசா சர். முத்தையா செட்டியார் இடம் பெற்றுத் தொண்டு செய்துள்ளார்.

அறக்கட்டளைகள் :

பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவி அவற்றின் வாயிலாகத் தமிழ்க் கல்வியையும், தமிழ் ஆய்வையும் வளர்த்த பெருமையும் நகரத்தாருக்கு உண்டு. வள்ளல் அழகப்பரின் முதற்கொடையே கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியக் கட்டில் நிறுவ வழங்கப்பெற்ற கொடைதான் என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை ஒன்றை உருவாக்க, மலேசியாவாழ் நகரத்தார் பல்கலைக் கழகத்திற்கு வழங்கிய நன்கொடையே அடிப்படையாக அமைந்தது. தமிழகப் பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும் ஆண்டுதோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ ஏற்பாடு செய்யும் வண்ணம் அறக்கட்டளைகளை நிறுவியுள்ள நகரத்தார்கள் பலராவர்.

தனிப்பட்ட அறக்கொடை அமைப்புக்களை நிறுவி அவற்றின் வாயிலாக ஆண்டுதோறும் சிறந்த இலக்கியப் படைப்பாளர்கட்கும், தமிழ் ஆய்வறிஞர்கட்கும் பெருந்தொகை பரிசாக வழங்கி அதன் வாயிலாகத் தமிழ் ஆர்வத்தையும், ஆய்வையும் ஊக்குவித்தல் நகரத்தார் செய்துவரும் மற்றொரு நற்பணி.

இவ்வகையில் குறிப்பிடத்தக்க அமைப்புக்கள், இலக்கியச் சிந்தனை, எம்.ஏ.சி. அறக்கொடை, இராசா சர் அண்ணாமலை அறக்கட்டளை, சரசுவதி நாராயணன் மணிவிழா அறக்கட்டளை ஆகியவை.

தமிழ்ப் பற்று :

நகரத்தாரின் தமிழ்ப்பற்று நாடறிந்த ஒன்று. அவர்தம் அன்றாடப் பேச்சு வழக்கிலேயே தனித்தமிழ்ச் சொற்களும், இலக்கியத் தமிழ்ச் சொற்களும் மிகுதியாக இடம் பெறுவது அனைவரும் அறிந்த ஒன்று. தம் தமிழ்ப் பற்று காரணமாக அவர்கள் தமிழகம் முழுவதிலும் நடைபெற்ற சில இயக்கங்களில் ஈடுபாடு கொண்டு முன்வரிசையில் நின்று தொண்டாற்றியுள்ளனர். அவை தனித்தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ் அருச்சனை இயக்கம், தில்லைத் திருமுறை இயக்கம் என்பனவாம்.

தனித்தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்ட அறிஞர்கள் மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், திரு.வி.க. போன்ற அனைவரும் செட்டிநாட்டோடும், நகரத்தார் வள்ளல்களோடும், நகரத்தார் தமிழறிஞர்களோடும் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதழியல் உலகில் தமது 'தமிழ்நாடு' நாளிதழ் வாயிலாகத் தனித்தமிழ்ச் சொற்களை வழக்கிற்குக் கொண்டு வந்த பெருமை கலைத்தந்தை கருமுத்து. தியாகராசருக்கு உரியதாகும்.

தமிழிசை இயக்கத்தைத் தலைமையேற்று நடத்தியவர் இராசா சர் அண்ணாமலை செட்டியார் என்பதும், அவ்வியக்க வளர்ச்சியில் நகரத்தார் பங்களிப்பு கணிசமானது என்பதும் வரலாற்றுண்மை.

தமிழ் அருச்சனைக்காக மதுரையில் பெரிய இயக்கத்தையே நடத்தியவர் பழ. கருப்பையா. மேலும், வ.நா. சிதம்பரம் செட்டியார் மதுரைக் கோவிலின் தக்காராக இருந்த போது தமிழ் அருச்சனையை இயல்பாக்கி, வடமொழி அருச்சனை வேண்டுவோருக்கு மட்டும் செய்யப்படும் என்று ஆணைபிறப்பித்தார்.

தில்லையில் தமிழ்த் திருமுறைகளை முன்னேற்றும் போராட்டத்தில் முனைவர் வ.சுப. மாணிக்கனார் முழுமூச்சாக ஈடுபட்டு வெற்றி ஈட்டினார் என்பது தில்லை நகரறிந்த செய்தி.

அண்மைக் காலத்தில் தொடக்கத்திலிருந்து கல்லூரி வரை தமிழ்வழிக் கல்வி வேண்டும் என்பதற்காகத் தலைநகரில் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழறிஞர் இயக்கத்தில் தமிழண்ணல், பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன் ஆகியோர் பங்கு பாராட்டப் பெறவேண்டிய ஒன்றாகும்.

Koviloor Digital Library

திருமுறை ஈடுபாடு :

நகரத்தாரின் தமிழ்ப்பற்று சைவப்பற்றோடு இணைந்த ஒன்று. எனவே, அவர்கள் பன்னிரு திருமுறையில் மிகுந்த பற்றும், ஈடுபாடும் கொண்டவர்கள். நீண்ட காலமாகவே தேவகோட்டையில் பல நகரத்தார் இல்லங்களில், ஓதுவாரைக் கொண்டு, தம் பிள்ளைகளுக்கு முறையான திருமுறைக் கல்வியையும், பயிற்சியையும் அளித்து வருவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். அண்மையில் காலமான பாகனேரி இராம. முத்துப் பழநியப்ப செட்டியார் (த.க.) திருமுறைகளைப் பரப்பவும், பயிற்றுவிக்கவும் செய்துள்ள பணிகள் பாராட்டுக்குரியவை. இப்போது திருமுறைக் கல்விக்கெனத் தனிக்கல்வி நிலையத்தைக் கோவிலூர்த் திருமடம் தொடங்கி நடத்தி வருகிறது.

தமிழறிஞர்கள் :

இவ்வாறு புரவலர்களாக இருந்தும், பல இயக்கங்களை உருவாக்கியும், அவற்றில் பங்கேற்றுச் செயல்பட்டும் தமிழ் வளர்த்த நகரத்தார்கள் தாங்களே தமிழறிஞர்களாக, புலவர்களாக, கவிஞர்களாக, சொற்பொழிவாளர் களாக அமைந்தும் தமிழ் வளர்த்துள்ளனர்; வளர்த்து வருகின்றனர்.

இளங்கோவடிகளே வணிகர் மரபைச் சேர்ந்தவராகத்தான் (அதாவது நகரத்தார் மரபைச் சேர்ந்தவராகத்தான்) இருக்க வேண்டும் என தொ.மு.சி. இரகுநாதன் 'இளங்கோவடிகள் யார்' என்ற தம் ஆய்வு நூலில் கூறுகிறார். ஆனாலும் அது கருத்து மாறுபாட்டுக்குரியது.

அனைவரும் ஏற்கும், காலத்தால் முந்திய, நகரத்தார் தமிழறிஞர் என்ற இடத்தைப் பதினோராம் திருமுறை பாடிய அருட்கவிப் பெருமக்களுள் இருவரான காரைக்காலம்மையாரும், பட்டினத்தடிகளும் பெறுகின்றனர்.

அதற்குப் பின் வாழ்ந்து, தமிழ்பரப்பி, மறைந்த நகரத்தார் தமிழறிஞர்கள் பாடுவார் முத்தப்பர், தேவகோட்டை வன்றொண்டச் செட்டியார், லெ. சிந்நயச் செட்டியார், அ. புதூர் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார், காரைக்குடி சொக்கலிங்கையா, பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், தமிழக்கடல் இராய. சொ., சொ. முருகப்பா, கம்பன் அடிப்பொடி சா. கணேசன், மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார், விரையாச்சிலை முரு.பழ. இரத்தினம் செட்டியார், டாக்டர். மெ. சுந்தரம் ஆகியோராவர்.

இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் நகரத்தார் தமிழறிஞர்களுள் பாலகவி. வே. இராமநாதன் செட்டியார், பேராசிரியர். லெ.பகரு. இராமநாதன் செட்டியார், தமிழண்ணல், டாக்டர் சுப. அண்ணாமலை, பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன், டாக்டர். சுப. திண்ணப்பன், டாக்டர். இராம. சுந்தரம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவராவர்.

தமிழ் எழுத்தாளர்களுள் நகரத்தார் மரபைச் சேர்ந்த சிறந்த எழுத்தாளர்களென சின்ன அண்ணாமலை, ஆறு. அழகப்பன், அரு. இராமநாதன், இராசகுமாரி நாகப்பன், எஸ்.ஏ.பி., ஏ.கே. செட்டியார், நாக. சண்முகம், லெ. சுந்தரம், தே. சொக்கலிங்கம், சோமலெ, தமிழ்வாணன், வ. தேனப்பன், அ.லெ. நடராசன், சி.என். நாச்சியப்பன், சொ. பனையப்ப செட்டியார், லேனா தமிழ்வாணன், வி.ஆர்.எம். செட்டியார் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

நகரத்தார் சமூகத்தைச் சார்ந்த சிறந்த தமிழ்க்கவிஞர்கள் பட்டியல் வருமாறு : கவியரசர் கண்ணதாசன், அழ. அண்ணாமலை, மு. அண்ணாமலை, சபா. அருணாசலம், இராம. இலட்சுமணன், செல்ல கணபதி, மா. கண்ணப்பன், குழ. கதிரேசன், சுப. கதிரேசன், சி. கல்யாண சுந்தரம், கனவுதாசன், தாலாட்டுக் கவிஞர் குமரப்பன், அர. சிங்கார வடிவேலன், சிவல்புரி சிங்காரம், சோம. சிவப்பிரகாசம், கதி. சுந்தரம், சொ.சொ.மீ. சுந்தரம், அரு. நாகப்பன், நாரா. நாச்சியப்பன், மேலை. பழநியப்பன், காசுமணியன், மீனவன், இராகவன் முத்து, ரெ. முத்துக்கணேசன், பழ. முத்து வீரப்பன், அழ. வள்ளியப்பா.

நகரத்தார் சமூகம் சார்ந்த சொற் பொழிவாளர்களுள் இப்போது மேடைப் பேச்சுக்களில் சாதனைபடைத்து வரும் சொற்பொழிவாளர்களென, வெ.சு. அழகப்பன், ப. இலட்சுமணன், உமையாள் முத்து, பழ. கருப்பையா, கல்யாணி சோலையப்பன், கவிதா ராணி, ப. சிதம்பரம், வ.நா. சிதம்பரம், கண. சிற்சபேசன், நா. சுப்பிரமணியன், அரு. சோமசுந்தரம், இராம. சௌந்தரவல்லி, பழ. பழநியப்பன், மு. பழநியப்பன், பாவாணன், பழ. முத்தப்பன், கரு. முத்தய்யா, மா. முத்துராமன், விசாலாட்சி சுப்பிரமணியன், சுப. வீரபாண்டியன், வே. வேலப்பன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் தமிழ் வளர்ப்பதற்குக் கடமைப் பட்டவர்கள் என்றாலும், அக்கடமையைச் சமூகம் முழுவதும் நன்கு உணர்ந்து கொண்டு, அன்றாடப் பேச்சு வழக்கிலிருந்து, புலமையாலும், புரக்கும் தன்மையாலும், அமைப்புத் திறமையாலும், ஆர்வ மிகுதியாலும் நகரத்தார் ஆற்றியிருக்கும் தமிழ் வளர்ச்சிப்பணி காலத்தால் அழியாமல், அவர் தம் பெருமைகள் பலவற்றிலும் சிறந்த முடிமணியாகத் திகழும் என்றால் மிகையாகாது.

Koviloor Digital Library

நகரத்தாரும் தொழில் துறையும்

நகரத்தார்கள் சோழநாட்டில் காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்த காலத்தில் வணிகர்களாகவே வாழ்ந்திருக்கின்றனர். சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், பட்டினத்தடிகள் வாழ்க்கை வரலாறு ஆகியவை நகரத்தார்கள் கடல்வழி கப்பலூர்ந்து அயல்நாடுகள் சென்று ஏற்றுமதி இறக்குமதி வணிகம் செய்வதைக் குலத்தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. சிலப்பதிகாரத்தில் மாசாத்துவான், மாநாய்கன், கோவலன், மணிமேகலையில் சாதுவன், பெரியபுராணத்தில் தனதத்தன், நிதிபதி, பரமதத்தன், இயற்பகை, ஆகியோரோடு பட்டினத்தாரும் வணிகம் மேற்கொண்ட நகரத்தார்கள். அவர்களது வணிகத்தில் நவரத்தின வணிகம் முதன்மை பெற்றிருந்தது.

சோழநாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்கு வந்தபிறகு நகரத்தார் மேற்கொண்ட தொழில்கள் பற்றிய குறிப்பு பூங்கொன்றை நாட்டு வேலங்குடிக் கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. நகரத்தார் நிர்ணயம் செய்த சாதிமுறை நியாயங்களுள் தொழில் துறை தொடர்பானவை வருமாறு :

"இரத்தினம், சுவர்ணம், பலசரக்கு முதலிய வியாபாரங்கள் செய்கிறது. சீவவதையான வியாபாரங்கள் செய்கிறதில்லை. வாய்மை தவறா மேலோர்களிடத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்கிறது. தருமவட்டி வாங்குகிறது. குதிரை வியாபாரமும் வெற்றிலை முதலிய அழுகற்சரக்கு வியாபாரமும் செய்யக்கூடாது.

"திருட்டு வியாபாரம் செய்யக்கூடாது."

இக்குறிப்பின் மூலம் வணிகத்தோடு, லேவாதேவித் தொழிலும் நகரத்தாருக்குரிய மரபுத் தொழிலாயிற்று என அறியலாம். தொழில் வணிகத்தில் அறம்பிறழக்கூடாது என்ற உணர்வு மேலோங்கியிருந்தது என்பதையும் இக்கல்வெட்டு உணர்த்துகிறது.

கி.பி. 1600 இல் எழுதப்பட்ட ஆவணமாகிய பழநி நடப்பு அட்டவணை நகரத்தார் செட்டிநாட்டுப் பகுதியிலிருந்து உப்பு வணிகத்திற்காகப் பழநி சென்றுவந்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

சென்ற நூற்றாண்டின் மையப்பகுதியில் இருந்து நகரத்தார் பர்மா, செய்கோன், இலங்கை, சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளில் வணிகத் தொடர்பு வைத்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அப்போது அவர்கள் செய்த ஏற்றுமதி வணிகத்தில் அரிசியும் நவதானியமும் முதன்மை பெற்றிருந்தன. ஏற்றுமதிக் கட்டணத்தில் கப்பல் நிறுவனங்களிடமிருந்து கமிஷன் பெறுவது தொடர்பாக நகரத்தார்கள் கையொப்பத்தோடு கூடிய 1883 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் நகலை 'ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர நூற்றாண்டு விழா மல'ரில் காணலாம்.

வணிகத்துக்காக வெளிநாடு சென்ற நகரத்தார்கள் அங்கெல்லாம் லேவாதேவித் தொழிலையும் மேற்கொண்டார்கள். இவ்விரண்டு தொழிலும் வளமாக நடந்த காலத்தில் அவர்கள் அங்கே சொத்துக்களையும் வாங்கத் தொடங்கினார்கள். எனவே வணிகம், லேவாதேவி, சொத்து நிருவாகம் ஆகியவை வெளிநாடுகளில் நகரத்தார் தொழில்களாக அமைந்தன.

இதே காலகட்டத்தில் உள்நாட்டிலும் பல்வேறு நகரங்களில் தொழில் வணிக நிறுவனங்களை நடத்தி வந்தனர். இரண்டாம் உலகப் போர் தொடங்கிய காலத்தில் நகரத்தாரின் வெளிநாட்டுத் தொடர்புகள் குறையத் தொடங்கின. பர்மா, வியட்நாம், இலங்கை ஆகிய நாடுகள் விடுதலை பெற்றவுடன் நகரத்தார் அங்கு தொழில் வணிகம் செய்ய இயலாத சூழல் உருவாயிற்று.

இதனைத் தொடர்ந்து நகரத்தாரின் தொழில் வணிக முயற்சிகள் அனைத்தும் பெருமளவில் உள்நாட்டிலேயே நிகழத் தொடங்கின. உள் நாட்டில் நகரத்தார் செய்த தொழில்களில் எண்ணிக்கையால் மிகுதியாக அமைந்தது வட்டிக்கடைகள் ஆகும். வட்டித் தொழிலின் பரிணாம வளர்ச்சியாக வங்கித் தொழிலையும் நகரத்தார் மேற்கொண்டனர். இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மதுரை வங்கி, காரைக்குடி வங்கி, செட்டிநாடு வங்கி ஆகியவை நகரத்தார் முயற்சியால் உருவான வங்கிகள் ஆகும். (பார்க்க : நகரத்தாரும் வங்கியியலும்) வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதும், நெருக்கடிநிலைக் காலத்தில் வட்டித் தொழில் தொடர்பாகக் கடுமையான சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டதும் வேறுவேறு புதிய தொழில்களில் நகரத்தார் ஈடுபடுவதற்குக் காரணங்களாக அமைந்தன.

இப்போது நகரத்தார் மேற்கொண்டிருக்கும் தொழில் வணிகங்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துதல்

2. கொள்முதல் செய்து வணிகம் செய்தல்

3. முதலீடு, மூளை உழைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்

4. தக்கபயிற்சி பெற்று நடத்தும் தொழில்கள் (Skilled Professions)

Koviloor Digital Library

இவற்றுள் முதல்வகையில் கனரகத் தொழில்களாகிய டி.ஐ. சைக்கிள் நிறுவனம், கார்போரண்டம் நிறுவனம், பாரி நிறுவனங்கள், ஸ்பிக் உரநிறுவனம், செட்டிநாடு சிமிண்ட், எஸ்.ஆர்.பி. டூல்ஸ் ஆகியவை முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவை. இவ்வகையில் அடுத்து இடம் பெறுபவை நூற்பாலைகள். தென்னிந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் சுதேசி நூற்பாலை நகரத்தாரால் நிறுவப்பட்டதாகும். கோவையில் 1906 இல் காளீஸ்வரா நூற்பாலையைத் தேவகோட்டை பெரி.சோமசுந்தரம் செட்டியார் தொடங்கினார். பின்னாளில் கலைத்தந்தை கருமுத்து தியாகராசர் ஆலைத் தொழிலில் தனிவரலாறு படைத்து ஒரே நேரத்தில் பதினாறு ஆலைகளை நிருவகித்தார். இப்போது நகரத்தார் நிருவாகத்தில் ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்ட நூற்பாலைகள் இயங்கி வருகின்றன.

அடுத்ததாகத் தோட்டத் தொழிலைக் குறிப்பிடலாம். குமுளியை ஒட்டிய மலைப்பகுதிகளில் ஏலக்காய்த் தோட்டங்களும் நாகர்கோவில், கேரளப்பகுதிகளில் இரப்பர், தேயிலைத் தோட்டங்களும் உதகை மலைப்பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களும் ஆனைமலை, குடகு, ஏற்காடு மலைப்பகுதிகளில் காப்பித் தோட்டங்களும் நகரத்தார்களுக்குச் சொந்தமானவை. நகரத்தார்கள் பெருமளவில் ஈடுபட்டிருக்கும் மற்றொரு துறை திரைப்படத் துறையாகும். இத்துறையில் முதல் முயற்சி மேற்கொண்டவர் காரைக்குடி ஆவி மெய்யப்ப செட்டியார் (ஏ.வி.எம்) ஆவார். இப்போது உற்பத்தி விநியோகம் திரையிடல் என எல்லா நிலைகளிலும் நகரத்தார் இத்துறையை வளப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (பார்க்க : நகரத்தாரும் கலைத் துறையும்)

இந்த வரிசையில் தோல் பொருட்கள் தயாரிக்கும் துறையை அடுத்துக் குறிப்பிடலாம். தோல் கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல், தோல் பொருட்கள் உற்பத்தி அவற்றை உள்நாட்டில் விற்றல், வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்தல் ஆகிய தோல்தொழில் தொடர்பான எல்லாத் துறைகளிலும் நகரத்தார் பங்கு குறிப்பிடத்தக்கது. இத்துறையில் முன்னோடியாகத் திகழ்ந்து இந்தியத் தோல் தொழில் வரலாற்றில் தடம்பதித்த நகரத்தார் மேலைச்சிவபுரி பத்மஸ்ரீ ஆ. நாகப்ப செட்டியார் ஆவார்.

நகரத்தார்கள் வெற்றி பெற்றுச் சிறப்புடன் இயங்கும் மற்றொரு துறை நூல்களை வெளியிடும் பதிப்பகத் துறையாகும். இவ்வகையில் முன்னோடிகள் சக்தி வை. கோவிந்தன், தமிழ்ப்பண்ணை சின்ன அண்ணாமலை, முல்லை முத்தையா ஆகியோராவர். இன்றும் இத்துறையில் நகரத்தார்கள் பலர் பெரு வெற்றியை ஈட்டிக் கொண்டிருக்கின்றார்கள். பதிப்புத் துறையின் மற்றொரு முகமாகிய இதழியல் துறையிலும் நகரத்தார் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. பல்வேறு காலகட்டங்களில் நகரத்தார் முயற்சியால் நூற்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன. (பார்க்க : நகரத்தார் இதழ்கள்) இத்துறையில் சாதனையாளர்கள் சக்தி வை. கோவிந்தன், குமுதம் எஸ்.ஏ.பி. அண்ணாமலை, கல்கண்டு தமிழ்வாணன் ஆகியோர் ஆவர். மாணவர்க்கு உதவும் வகையில் உரை நூல்கள் வெளியிடல் நூல் வெளியீட்டின் மற்றொரு கிளையாகும். இத்துறையில் கோனார் தமிழ் உரைகளை வெளியிட்டு வரும் பழநியப்பா சகோதரர்களும், வெற்றி உரை நூல்களை வெளியிட்டுவரும் பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பனும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப் படுத்தும் துறையில் நகரத்தார்கள் பலர் பல்வேறு சிறுதொழில் நிறுவனங்களை நடத்தி வருகின்றார்கள். கனரகத் தொழில் நிறுவனங்களைச் சார்ந்து அவற்றுக்குரிய துணைப் பொருட்களைத் தயாரித்துக் கொடுக்கும் நிறுவனங்களையும் நகரத்தார் பலர் நடத்தி வருகின்றனர்.

பொருள்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்வது என்ற அடிப்படையில் இயல்பிலேயே வணிகர்களான நகரத்தார்கள் மொத்த வணிகத்தையும் சில்லறை வணிகத்தையும் பெருமளவில் நடத்தி வருகின்றனர். மருந்து, மிதிவண்டி மற்றும் மிதிவண்டி உதிரிப் பொருட்கள், மின்பொருட்கள் ஆகியவற்றின் வணிகத்தில் ஈடுபட்டிருக்கும் நகரத்தார் எண்ணிக்கை மிக அதிகமாகும். எவர்சில்வர் பொருட்கள், தாள்வணிகம், வீட்டுபயோகப் பொருட்கள், (பர்னிச்சர், கிரைண்டர், மிக்சி) துணிமணிகள், ஆயத்த ஆடைகள், பனியன், தோல்பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், உரம் வேதிப் பொருட்கள், மளிகைப் பொருட்கள், நகைக்கடை, வைரம் நவமணிகள், ஏற்றுமதி இறக்குமதி, பிளாஸ்டிக் பொருட்கள், நுகர்பொருள் மொத்த வணிகம் ஆகியவை தமிழ் நாடெங்கும் நகரத்தார் ஈடுபட்டிருக்கும் வணிகத் துறைகளாகும்.

முதலீட்டால் நிர்வகிக்கும் தொழில் துறையில் முதலாவதாகக் குறிப்பிடத்தக்கது வட்டிக்கடை. கடுமையான சட்டங்களால் நகரத்தாரின் மரபுத் தொழிலான வட்டித் தொழில் இடையே சிறிதுகாலம் தளர்வுற்றிருந்தாலும் இப்போதும் நகரத்தார் பெருமளவில் ஈடுபட்டிருக்கும் ஒரு துறையாகவே இருந்து வருகிறது. இத்தொழிலின் காலத்திற்கேற்ற வளர்ச்சி மாற்றமே நிதி நிறுவனங்கள் மற்றும் சீட்டுக் கம்பெனிகள் ஆகும். இத்துறையிலும் நகரத்தார் மிகுதியாக ஈடுபட்டிருக்கின்றார்கள்.

Koviloor Digital Library

நிறுவனங்களின் பங்குகளை வாங்கி விற்கும் தரகு நிறுவனங்கள் நீண்டகாலமாக நகரத்தார்களால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. காப்பீட்டு நிறுவனங்களைத் தொடங்கி நடத்திய பெருமை நகரத்தார்களுக்கு உண்டு. தேவகோட்டை அ.வெ. தியாகராசா, கானாடுகாத்தான் மு.சிதமு. சிதம்பரம் செட்டியார், வள்ளல் அழகப்பர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். காப்பீட்டு நிறுவனங்கள் தேசிய மயமாக்கப்பட்ட பிறகு நகரத்தார்கள் பலர் முகவர்களாகத் தொழில் செய்து வருகின்றனர். இதுபோலவே அரசின் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கும் முகவர்களாகப் பணியாற்றி வருகிறார்கள்.

முதலீடு செய்து நடத்தப்படும் தொழில்களில் நகரத்தாரால் பெருமளவில் மேற்கொள்ளப் படுவது போக்குவரத்துத் தொழிலாகும். பேருந்துகள், சுற்றுலா ஊர்திகளை இயக்குதல், சரக்குந்துகள் இயக்குதல், பெரிய சரக்குந்து நிறுவனங்களின் முகவர்களாகத் தொழில் செய்தல், ஆகியவை இதில் அடங்கும். நுகர் பொருட்களை உற்பத்தியாளர்களிடமிருந்து வணிகர்களுக்குக் கொண்டு சேர்க்கும் முகவர்களாகவும் (C & F Agents) நகரத்தார்கள் தொழில் செய்கின்றனர்.

தங்கும் விடுதிகள், வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், பல துறை மருத்துவ மனைகள் (Poly clinic) ஆகியவற்றுக்கான கட்டிடங்களைக் கட்டி நிருவகித்து வருதல் நகரத்தாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில் துறைகளாகும். நிலங்கள் சொத்துக்கள் வாங்கி விற்கும் தரகு வணிகத்தில் (Real Estate) நகரத்தார்கள் பலர் ஈடுபட்டுள்ளனர்.

நெல், மாவு அரைவை ஆலைகள், அச்சகங்கள், தட்டெழுத்துப் பயிற்சி நிறுவனங்கள், புகைப்பட நிலையங்கள் ஆகிய தொழில்களை நீண்ட காலமாக நடத்திவரும் நகரத்தார்கள் காலத்திற்கேற்ற புதிய தொழில்களாகிய இசைப்பதிவு நிறுவனங்கள் (Musicals), ஒலிஒளிப் படநிறுவனங்கள் (வீடியோ), புகைப்பட நகல் நிறுவனங்கள் (Zerox), வெளியூர், வெளிநாட்டுத் தொலைபேசித் தொடர்பு நிறுவனங்கள் (S.T.D, I.S.D Booths), தூது அஞ்சல் நிறுவனங்கள் (Couriers), மருத்துவப் பரிசோதனை நிலையங்கள் (Clinical Laboratories, X - ray, Scaning Centres), கணிப்பொறிப் பயிற்சி மையங்கள் (Computer Centres) ஆகிய தொழில்களிலும் ஈடுபட்டு வெற்றியீட்டி வருகின்றனர்.

தக்கபயிற்சி பெற்றுத் தொழில் செய்பவர் களாகிய வழ்க்கறிஞர், கணக்குத் தணிக்கையாளர், மருத்துவர்களாகவும் நகரத்தார் பலர் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் தொழில் புரிந்து வருகின்றனர்.

உயர்கல்வி பெற்று மாத ஊதியத்திற்கு வேலைக்குச் செல்வதையே மிகுதியாக விரும்பும் இக்காலச் சூழலிலும் நகரத்தார் இளைஞரிடையே தொழில் முனைப்பு தொடர்ந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மரபை இறுக்கமாகப் பின்பற்றும் நகரத்தார் சமூகத்தினர் தொழில்துறைகளைப் பொறுத்தவரை மாறிவரும் காலத்திற்கேற்பப் புதிய புதிய துறைகளில் துணிந்து இறங்குகின்றனர். எத் தொழிலை மேற்கொண்டாலும் அறஉணர்வோடும் நாணயத்தோடும் நடந்து கொள்வதால் நகரத்தார் தொழில் முனைவோர்கள் சமுதாயத்தின் நன்மதிப்பைப் பெற்று விளங்குகிறார்கள்.

நகரத்தாரும் வங்கியியலும்

நகரத்தார் வரலாற்றில் வேலங்குடிக் கல்வெட்டுதான் ''பணம் கொடுக்கல் வாங்கல்'' என்ற தொழிலை நகரத்தார் மேற்கொண்டதாக முதன்முதலில் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டின் சாதிமுறை நியாயங்கள் செய்த காலம் குறித்துத் தெளிவான சான்று எதுவும் இல்லையென்றாலும் இதன் வேறொரு பகுதியில் இப்போது நகரத்தார் வாழும் செட்டிநாட்டு எல்லை குறிப்பிடப் படுவதால் எட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தான் இச்சாதி முறை நியாயங்கள் நிர்ண்யம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

பாண்டிநாட்டிற்கு வந்த பின் வணிகத்தோடு லேவாதேவியையும் தங்கள் தொழிலாகக் கொண்ட நகரத்தார் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு இலங்கை, வியட்நாம் (செய்கோன்), பர்மா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலெல்லாம் லேவாதேவித் தொழில் செய்யத் தொடங்கினர்.

இவ்வாறு வெளிநாடுகளில் தொடங்கப்பட்ட வட்டிக்கடைகள் வங்கி (Bank) என்றே பெயரிடப் பெற்றன. அதற்கேற்ப இன்றைய வங்கிகள் செய்யும் நிதிசார் பணிகள் அனைத்தையும் இந்நிறுவனங்கள் செய்தன. வைப்புநிதி பெறுதல், குறுகிய கால நீண்ட காலக் கடன் கொடுத்தல், உண்டியல் (Draft) வழங்குதலும் மாற்றுதலும், அந்நியச் செலாவணிப் பணிகள், சரக்கு விற்பனைத் தொகைப் பரிமாற்றம் (Bill discounting) முதலிய பணிகளை நகரத்தார் நிறுவனங்கள் செய்துவந்தன. 1920 இல் பர்மா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நகரத்தார் கடைகளின் மொத்த முதலீட்டுத்தொகை

Koviloor Digital Library

120 கோடி ரூபாய் என்று பர்மிய அரசாங்கம் நியமித்த ஒரு விசாரணைக் குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது.

இன்றைய வங்கிகளில் சேமிப்புக் கணக்குக்கு ஒரு வட்டிவிகிதம், வைப்பு நிதிகளுக்குக் கால அளவைப் பொறுத்து வேறுபடும் வட்டிவிகிதம், ஊழியருக்குக் கொடுக்கும் கடனுக்குக் குறைந்த வட்டி விகிதம், பிற கடன்களுக்குக் கடனின் தன்மையைப் பொறுத்து மாறுபடும் வட்டி விகிதங்கள் என வட்டிகணக்கிடும் முறையில் பல்வேறு வகைகள் இருப்பது போல நகரத்தார் வட்டிக்கடைகளிலும் மூன்று வகையான வட்டி கணக்கிடும் முறைகள் பின்பற்றப்பட்டன. அவை நடப்பு வட்டி, தவணை வட்டி, வியன் வட்டி என்பன.

நடப்பு வட்டி என்பது நகரத்தார்கள் தங்கள் கடைகளுக்குள் பரிமாறிக் கொள்ளும் தொகைக்குரிய வட்டியாகும். இது தனிவட்டி விகித முறையிலேயே கணக்கிடப்படும். இந்த நடப்பு வட்டி ஒவ்வொரு மாதமும் 16ஆம் தேதி இரவு இரங்கூன் கோவிலில் நடைபெறும் நகரத்தார் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

தவணைவட்டி என்பது குறிப்பிட்ட காலத் தவணை குறித்து (2 மாதம், 3 மாதம், 6 மாதம், ஒரு வருடம்) அந்தக் கால அளவில் வட்டியை அசலோடு சேர்த்துக் கணக்கிடும் கூட்டுவட்டி முறை. இந்தத் தவணை வட்டி இரங்கூன் நகரத்தார் கோவிலில் சனிக்கிழமை தோறும் காலையில் நடைபெறும் நகரத்தார் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

வியன்வட்டி என்பது நடப்புவட்டியை விடச் சிறிது கூடுதலான வட்டி விகிதம். ஆனால் தனிவட்டி முறையிலேயே இவ்வட்டி கணக்கிடப்படும்.

இதுபோலவே நகரத்தார் நிறுவனங்கள் வழங்கிய உண்டியல்களிலும் பலவகைகள் இருந்தன. குறிப்பிடத்தக்கவை தரிசன உண்டியல், நடப்பு உண்டியல், தவணை உண்டியல், சீதன உண்டியல் என்பன.

தரிசன உண்டியல் என்பது பார்த்தவுடன் பணம் கொடுக்கக்கூடிய உண்டியலாகும். உண்டியலில் குறிப்பிட்ட ஊரில் பணம் கொடுக்க வேண்டும் என்பதும் மூன்று நாட்களுக்குள் பணம் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் இவ்வகை உண்டியலின் நிபந்தனைகளாகும்.

நடப்பு உண்டியல் என்பது உண்டியல் வழங்கப்பட்ட நாளிலிருந்து அது மாற்றப்படும் நாள்வரை உள்ள காலத்திற்கு நடப்புவட்டி விகிதப்படி வட்டி சேர்த்துப் பணம் கொடுக்கப்பட வேண்டிய உண்டியலாகும்.

தவணை உண்டியல் என்பது உண்டியலில் குறிப்பிடப்பட்ட கால எல்லை (60 அல்லது 90 நாட்கள்) முடிந்தபிறகு அதற்குரிய பணத்தை வட்டியுடன் வழங்கும் உண்டியலாகும்.

சீதன உண்டியல் என்பது திருமணத்தின் பொழுது சீதனத் தொகைக்குப் பதிலாக எழுதிக் கொடுக்கப்படும் உண்டியலாகும். இவ்வுண்டியல் தொகைக்குத் தவணை முறையில் கூட்டு வட்டி கணக்கிடப்படும்.

இன்றைய வங்கித் தொழிலின் நிதிசார் பணிகளில் மற்றொன்று மறுகடன் வழங்குதலாகும் (Refinancing). இதனையும் நகரத்தார் வட்டிக் கடைகள் பெருமளவில் செய்திருக்கின்றன. "1920 களில் நகரத்தார் வட்டிக்கடைகள் இம்பீரியல் வங்கியிலிருந்தும் இந்தியன் வங்கியிலிருந்தும் பெருந்தொகைகளை மொத்தக் கடனாகப் பெற்று வெளிநாடுகளில் உள்ள தங்கள் கிளை வட்டிக் கடைகளின் மூலம் கடன் வழங்கப் பயன்படுத்திக் கொண்டன" என்று ஆர்.கே. சேசாத்திரி இந்தியன் வங்கி வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு வங்கித் தொழில் முன்னோடிகளாக நகரத்தார்கள் திகழ்ந்தமையால் இந்தியன் வங்கியைத் தொடங்குவதற்கு நகரத்தார்கள் பெருமளவில் காரணமாக இருந்தார்கள். "1907 இல் இந்தியன் வங்கியைத் தொடங்கியதிலும் அதைப் பல ஆண்டுகள் வழிநடத்திச் சென்றதிலும் நகரத்தார் பங்கு குறிப்பிடத்தக்கது" என்று ஆர்.கே. சேசாத்திரி எழுதுகிறார். 1921 இல் இம்பிரீயல் வங்கி உருவாக்கப்பட்டதில் இருந்து அதன் இயக்குநர் குழுவில் நகரத்தார்பலர் அரசாங்கத்தால் நியமிக்கப் பெற்றனர். 1936 இல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியை எம்.சிடி.எம். சிதம்பரம் செட்டியார் தொடங்கினார். கருமுத்து தியாகராசன் செட்டியார் 1943 இல் மதுரை வங்கியைத் தொடங்கினார். இவை தவிர பாங்க் ஆப் காரைக்குடி, செட்டிநாடு கமர்ஷியல் பேங்க், நாட்டுக்கோட்டை பேங்க், செட்டிநாடு பயோனியர் பேங்க், நகரத்தார் பேங்க், தஞ்சாவூர் பெர்மணன்ட் பேங்க் ஆகிய சிறு வங்கிகள் பலவும் நகரத்தார்களால் உருவாக்கப் பெற்றவையே. சிறுவங்கிகள் பெரும் வங்கிகளோடு இணைக்கப்பட்டு பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட சூழ்நிலையில் நகரத்தார் நிருவாகத்தில் தொடர்ந்து இருக்கும் வங்கி மதுரை வங்கியாகும்.

இன்றும் பெருமளவில் நகரத்தார்கள் நிதி நிறுவனங்களையும், சீட்டு நிறுவனங்களையும் நடத்தி வங்கிகள் செய்யும் நிதிசார் பணிகள் பெரும்பாலானவற்றைச் செய்து கொண்டிருக் கின்றனர்.

Koviloor Digital Library

நகரத்தார்கள் எந்தச் செயலில் இறங்கினாலும் அச்செயலுக்காகும் செலவுக்குரிய வட்டியைக் கணக்கிட்டுப் பார்ப்பது அவர்தம் பழக்கம். வங்கியியல் என்பது நகரத்தார்களின் குருதியோடு கலந்திருக்கின்ற ஒரு சமூக இயல்பாகும். இவ்வியல்பூக்கத்தால் நகரத்தார்கள் நடத்திய, நடத்தி வருகின்ற வங்கித் தொழில்கள் நாடுகளின் வளர்ச்சிக்கும் பொருளாதார வளத்திற்கும் துணை செய்கின்றன என்பது வரலாறு காட்டும் உண்மை.

நகரத்தார்

வேகுப்பட்டியைச் சேர்ந்த புலவர் நாக. சண்முகமும் (தக.) அவர் நண்பர் வழக்கறிஞர் எஸ்.பி.எல். பழநியப்பாவும் இணைந்து நடத்திய ஒரு மாத இதழ். புலவர் நாக. சண்முகத்தை ஆசிரியராகக் கொண்டு 1969 ஏப்பிரலில் தொடங்கப்பெற்ற இவ்விதழ் பத்து ஆண்டுகட்கு மேல் தொடர்ந்து வெளிவந்தது.

டெம்மி 1 × 8 அளவில், மாதம் தோறும் 48 பக்க அளவில் வெளியான இவ்விதழைப் பொறுத்தவரை, தனி இதழின் விலை இதழில் குறிப்பிடப்படவே இல்லை. ஆண்டுக்கட்டணம் ரூ. 3.50 ஆக முதல் ஆண்டு இருந்தது. இரண்டாம் ஆண்டுத் தொடக்கத்தில் (ஏப்பிரல், 1970) ஆண்டுக் கட்டணம் ரூ 6 ஆக உயர்த்தப்பெற்றது. ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ 101.

"இத்திங்கள் இதழ் நம் மரபினரின் நற்பணிகளையும் பல்வேறு சிறப்புக்களையும், இன்றையத் தலைமுறையினர் தெரிந்து கொள்ளவும், அத்தகைய நற்பணிகளை அவர்கள் செய்ய ஊக்கமூட்டவும் வரலாற்றின் துணையோடு பல்வேறு தலைப்புக்களில் பல பகுதிகளைத் தரத் திட்டமிட்டுள்ளது" என முதல் இதழின் தலையங்கப்பகுதி அறிவிக்கிறது. அந்த அடிச்சுவட்டிலேயே இது பத்தாண்டுகட்கு மேல் சிறப்பான பணியினை ஆற்றியது.

நகரத்தார் அழகியல்

நகரத்தார்கள் கலைகளை ஆதரிப்பவர்கள். நுண்கலைகளைப் போற்றுபவர்கள். கலைகளை ஈடுபாட்டுடன் ரசிப்பவர்களாதலின் தங்கள் படைப்புகளைக் கலை நயம் தோன்ற உருவாக்குவார்கள். செட்டிநாட்டில் ஊர்களே அழகு. ஊர்களில் தெருக்கள் அழகு. வீடுகளோ தனி அழகு. வீட்டின் நிலைகள் பேரழகு.

ஒவ்வொரு வீடும் கலைநயம் சார்ந்தவை. செட்டிநாட்டில் பயன்படுத்தப்படும் பொருள்கள் யாவும் கலைநுட்பம் செறிந்தவை. வீட்டு முன்றிலில் நாளும் இடும் கோலம் பல திறத்தன. பல வகையன. அவை பண்பாட்டுக் கோலங்கள். அது போலவே வீட்டில் விருந்து பரிமாறுவதிலும் தனி அழகு மிளிரும். இலைகளில் உணவைப் பரிமாறுவதில் தனி அழகு ஒளிரும்.

திருமண நாட்களில் பெண்ணுக்கு வைக்கும் சீர்வரிசையைப் பரப்பும் அழகு வேறு எங்கும் காண இயலாத பேரழகு. சிறிய, பெரிய பொருள்களை வகைப்படுத்தி, தொகைப்படுத்தி, சரியான இடங்களில் ஏற்ற பெற்றி அழகாக அடுக்கி வைப்பது செட்டிநாட்டுப் பெண்களுக்குக் கைவந்த கலை. சாமான் பரப்பும் கலையில் ஆச்சிமார்கள் சமர்த்திகள். காண்போர் கண்ணையும், கருத்தையும் கவரும் வகையில் கைவேலைப்பாடுகள் மிகுந்த புடவை சேலை துணிகளை வானவில்லின் வண்ணங்கள் போல வகைவகையாய்ப் பரப்பி விடுவார்கள்.

நகரத்தார் அழகியல் நாகரிகமானது; ஆரவாரமற்றது; அருவருப்பைத் தராதது; விகார உணர்ச்சியைத் தூண்டாத அழகு. பயன்படுத்தும் பை, தலையணை உறை, படுக்கை விரிப்பு, வரவேற்புத் துணி நூலிழையால் பூவேலை மிகுந்தவை.

செட்டிநாட்டுப் பெண்கள் கனமான காஞ்சிப் பட்டுடுத்தி காஞ்சிப்பட்டுக்குக் கௌரவம் சேர்ப்பார்கள். நகரத்தார் உண்ணும் அழகும், உடையுடுத்தும் அழகும் தனிச்சிறப்புடையவை. அவர்கள் அமைத்த கோயில்களின் அழகோ காவியச் சிறப்புடையவை.

அவர்கள் திருமண இல்லங்களில் அமைக்கும் மாவிலை தோரண அழகு மாட்சியுடையது. வேற்பூசையும் படைப்பும் வழிபாட்டில் நகரத்தார் அழகியல் உணர்வைக் காட்டும்.

நகரத்தார் அறப்பணிகள்

வணிக சமுதாயமாகிய நகரத்தார் சமுதாயம் பொருளீட்டுவதில் காட்டும் முனைப்பை அறப்பணிகள் ஆற்றுவதிலும் காட்டுவது தொன்றுதொட்டு வரும் வரலாற்று உண்மையாகும். கோவலன் தனது செல்வ வளத்தின் பெரும்பகுதியை அறப்பணிகளுக் காகவே செலவிட்டான் என மாடலமறையவன் வாயிலாக இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

தம் வருவாயில் ஒரு பகுதியை அறப்பணி களுக்காகவே ஒதுக்கிப் பல்வகையான அறப்பணிகளைச் செய்வது நகரத்தார் இயல்பாகும். இவ்வியல்பை உறுதிப்படுத்தும் ஆவணச் சான்றுகள் கி.பி. பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த பழநி அறப்பட்டயங்களும், பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்கத்தா வாழ் நகரத்தார்கள் தமக்குள் செய்து கொண்ட

Koviloor Digital Library

ஒப்பந்த முறியும் ஆகும். உப்புவிற்றுக் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியைப் பழநியாண்டவர் பூசைக்கும் அன்னதானம் செய்வதற்கும் செலவிடுவது என முடிவு செய்ததாகப் பழநி அறப்பட்டயம் கூறுகிறது. கப்பல் தரகின் ஒரு பகுதியைப் பொதுப்பணமாக உருவாக்கி அதன்மூலம் அறப்பணிகளைச் செய்வதென முடிவு செய்வதாகக் கல்கத்தா நகரத்தார்கள் ஒப்பந்தமுறி தெரிவிக்கிறது.

நகரத்தார் செய்துவரும் அறப்பணிகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். அவை 1. கோவில் திருப்பணிகளும் கோவில் சார் அறப்பணிகளும் 2. கல்வி அறப்பணிகள் 3. சமுதாய அறப்பணிகள்.

கோவில் திருப்பணிகள் :

மன்னர் பின்னோர் என அழைக்கப்பட்ட நகரத்தார்கள், முற்காலத்தில் மன்னர்கள் கட்டிய கோவில்கள் காலத்தால் சிதைவுற்றபோது பெரும் பொருட் செலவில் அக்கோவில்களில் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்யும் அறப்பணிகளால் அப்பெயரை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்கள். காசி முதல் கன்னியாகுமரி வரை புகழ்பெற்ற திருக்கோவில்கள், நாயன்மார்கள் ஆழ்வார்களால் பாடப்பெற்ற திருக்கோவில்கள் பெரும் பாலானவற்றில் நகரத்தார்கள் திருப்பணி செய்துள்ளார்கள். இவ்வகையில் 162 திருத்தலங்களில் நகரத்தார் செய்துள்ள அறப்பணிகள் குறித்த விவரமும் அவற்றுக்காகச் செலவிடப்பட்ட பொருள் அளவும் 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' நூலில் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியாரால் பதிவு செய்யப் பெற்றுள்ளன.

பழைய திருக்கோவில்களைப் புதுப்பித்ததோடு நகரத்தார்களே புதிய திருக்கோவில்கள் பலவற்றைக் கட்டியுள்ளனர். ஒன்பது நகரக் கோவில்களும் பாண்டிய மன்னனால் நகரத்தார்களுக்கு வழங்கப்பெற்றன என்று வரலாறு கூறுகிறது. ஆயினும் அக்கோவில்களை இன்றைய வடிவமைப்பில் கற்றளிகளாகக் கட்டியவர்கள் நகரத்தார்களே என்பதில் ஐயமில்லை. (பார்க்க : நகரத்தார் கட்டிடக்கலை – கோவில்கள்) அடுத்து நகரத்தார் புதிதாகக் கட்டிய கற்கோவில் கோவிலூர்த் திருக் கோவிலாகும்.

செட்டிநாட்டு ஊர்கள் எழுபத்தைந்தில் நாற்பத்தி மூன்று ஊர்களில் நகரத்தார் பொதுவில் 46 சிவன் கோவில்கள் கட்டியுள்ளார்கள். பத்து ஊர்களில் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் அல்லது பங்காளிகள் 11 சிவன்கோவில்களைக் கட்டியிருக்கிறார்கள். மூன்று ஊர்களில் நகரத்தார் பொதுவிலும் பதினைந்து ஊர்களில் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் பங்காளிகளுமாக மொத்தம் 20 பெருமாள் கோவில்களைக் கட்டியுள்ளார்கள். ஐந்து ஊர்களில் நகரத்தார் பொதுவில் 5 அம்மன் கோவில்களைக் கட்டியுள்ளனர். இவைதவிர, பத்தொன்பது ஊர்களில் நகரத்தார் பொதுவில் சுப்பிரமணிய சுவாமி கோவில் (5) அல்லது பிள்ளையார் கோவில்களைக் (14) கட்டியுள்ளனர். பெரும்பாலான ஊர்களில் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் அல்லது பங்காளிகள் பிள்ளையார் கோவில்களைப் பெருமளவில் கட்டியுள்ளார்கள்.

செட்டிநாட்டு ஊர்களை ஒட்டி அமைந்துள்ள ஊர்களிலும் பழுதடைந்த பழைய கோவில்களைப் புதுப்பித்தல், புதிய கோவில்களைக் கட்டுதல் ஆகிய அறப்பணிகளைச் செய்துள்ளார்கள். அவ்வகை அறப்பணிகளையும் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் தம்நூலில் பதிவு செய்துள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிநாடுகளுக்குச் சென்ற நகரத்தார்கள் இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, மொரீசியசு ஆகிய நாடுகளில் பழைய தமிழ்மன்னர்களால் கட்டப்பெற்ற சைவ, வைணவக் கோவில்களில் திருப்பணிகள் செய்துள்ளனர். மேலும் பர்மா, இந்தோசீனா, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் சுப்பிரமணியர், விநாயகர் கோவில்களைப் புதிதாகக் கட்டியுள்ளனர். இவைபற்றிய விவரங்களை 'அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள்' என்ற நூலில் சோமலெ பதிவு செய்துள்ளார். நகரத்தார்கள் தொழில் நிமித்தம் இந்தியாவில் வாழும் பிற ஊர்களிலும் மிகுந்த எண்ணிக்கையில் சிறுசிறு கோவில்கள் கட்டியுள்ளனர்.

கோவில்சார் அறப்பணிகள் :

புதிதாகக் கோவில்கட்டும் ஒவ்வொரு ஊரிலும் கோவிலுக்கு முன்னர் திருக்குளம் அமைப்பது நகரத்தார் இயல்பு. மேலும் கோவில் பூசைக்குரிய மலர்களை வழங்குவதற்காக நந்தவனம், அபிசேகப் பாலுக்காகப் பசுமடம், கோவில் பணியாளருக்குக் குடியிருப்பு, கோவிலைஒட்டி வேத ஆகம தேவாரப் பாடசாலைகள், குருபூசை மடங்கள், அன்னதான மடங்கள், சத்திரங்கள் ஆகியவற்றைப் பல்வேறு ஊர்களில் அமைத்து அவற்றைத் தொடர்ந்து நிருவகிப்பதற்காக நிதி ஏற்பாடுகளையும் செய்துள்ளனர்.

நகரத்தார்கள் தாங்கள் கட்டிய, திருப்பணி செய்த கோவில்கள் அனைத்திலும் இறைவன் இறைவியர்க்குரிய ஆபரணங்களையும் வாகனங் களையும் மரத்தேர், வெள்ளித்தேர், தங்கத்தேர்

Koviloor Digital Library

ஆகியவற்றையும் செய்து அவற்றைக் கோவில் நிருவாகப் பொறுப்பிலேயே ஒப்படைத்துள்ளார்கள். மேலும் வெளிநாடுகளில் அவர்கள் கட்டியுள்ள கோவில்களுக்கு வெள்ளி வாகனங்கள், தேர்கள் போன்றவற்றைச் செட்டிநாட்டிலேயே செய்து அந்தந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். பல கோவில்களில் குறிப்பிட்ட திருவிழா மண்டகப்படிகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். பல கோவில்களுக்கு மின்விளக்கு வசதியை நகரத்தார்கள் செய்து கொடுத்துள்ளனர். பழைய கோவில்களில் புதிய மண்டபங்களைப் பொலிவோடு அமைத்துக் கொடுத்துள்ளனர். இத்தகு அறப்பணிகள் பற்றிச் சிறுகூடற்பட்டி சுந்தரம் செட்டியார் மணிவிழா மலரில் டாக்டர் தே. சொக்கலிங்கம் விவரமான கட்டுரைகள் எழுதியுள்ளார்.

நகரத்தார் அறப்பணிகளில் காசி, திருவண்ணாமலை, சிதம்பரம், மதுரை ஆகிய தலங்களில் செய்துள்ள அறங்கள் குறிப்பிடத் தக்கவை. காசியில் 24-8-1868 முதல் விசுவேசுவரருக்குத் திருவனந்தல், உச்சிக்காலம், அர்த்தசாமம் ஆகிய முக்காலப்பூசைகளுக்குரிய பொருள் அனைத்தும் காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்திலிருந்து அனுப்பப் பெறுகின்றன. காசியிலுள்ள விசாலாட்சி கோவில் நகரத்தார்களால் புதிதாகக் கட்டப் பெற்றது. அக்கோவிலிலுள்ள திருவுருவச் சிலைகள் செட்டிநாட்டில் செய்யப்பெற்று அனுப்பி வைக்கப் பெற்றன. மேலே குறிப்பிட்ட கோவில்சார் அறப்பணிகள் அத்தனையும் திருவண்ணாமலை, சிதம்பரம், மதுரை ஆகிய ஊர்களில் செய்யப்பட்டுள்ளன. ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு முன்பே திருவண்ணாமலையில் முப்பத்தோரு இலட்சம் ரூபாய், மதுரையில் முப்பத்தெட்டு இலட்சம் ரூபாய், சிதம்பரத்தில் நாற்பத்து மூன்று இலட்சம் ரூபாய் இத்தகைய அறப்பணிகளுக்காக நகரத்தார்களால் செலவிடப் பெற்றுள்ளன. (பார்க்க : நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு - வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார்) அண்மையில் திருக்கடவூர் அபிராமியம்மை திருக்கோவிலில் மிகப்பெரிய முன் மண்டபம், அழகிய முகப்பு மண்டபம் ஆகியன அந்நாளையத் திருப்பணிபோல் மு.அ.சித.மு. குடும்பத்தாரால் அமைக்கப் பெற்றுள்ளன.

கல்வி அறப்பணிகள் :

கோவில்சார் அறப்பணிகளோடு கல்வி அறப்பணிகளையும் நகரத்தார் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து செய்து வருகின்றனர். தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையிலான கல்வி நிறுவனங்களை உருவாக்கிக் காத்து வருகின்றனர். சில இடங்களில் தாங்கள் பள்ளிகளைத் தொடங்கிப் பின்னர் அரசிடம் ஒப்படைத்துள்ளனர். வேறு சில இடங்களில் நன்கொடையாக ஒரு தொகை, இடம், கட்டிடம் போன்றவற்றைக் கொடுத்து அரசாங்கம் கல்விப்பணி செய்யத் துணை செய்துள்ளனர்.

செட்டிநாட்டு ஊர்கள் எழுபத்தைந்தனுள் ஆறு ஊர்களில் 6 தொடக்கப் பள்ளிகளை நகரத்தார் பொதுவில் நடத்திவருகின்றனர். இருபத்து நான்கு ஊர்களில் 26 தொடக்கப்பள்ளிகளைத் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் நடத்தி வருகின்றன. நான்கு ஊர்களில் 5 தொடக்கப்பள்ளிகள் நகரத்தார்களால் தொடங்கப்பெற்றுப் பின்னர் வேறு நிருவாகத்திற்கு மாறியுள்ளன.

நான்கு ஊர்களில் 4 நடுநிலைப் பள்ளிகளை நகரத்தார் பொதுவில் நடத்தி வருகின்றனர். பதினோரு ஊர்களில் 13 நடுநிலைப் பள்ளிகளைத் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் நடத்தி வருகின்றன.

ஏழு ஊர்களில் 7 உயர்நிலைப்பள்ளிகளை நகரத்தார் பொதுவில் நடத்திவருகின்றனர். பன்னிரண்டு ஊர்களில் 13 உயர்நிலைப் பள்ளிகளைத் தனிப்பட்ட நகரத்தார்கள் நடத்தி வருகின்றனர். இரண்டு ஊர்களில் 2 உயர்நிலைப் பள்ளிகள் நகரத்தார்களால் தொடங்கப்பெற்றுப் பின்னர் வேறு நிருவாகத்துக்கு மாறியுள்ளன.

மூன்று ஊர்களில் 3 மேல்நிலைப் பள்ளிகளை நகரத்தார் பொதுவில் நடத்தி வருகின்றனர். பதினாறு ஊர்களில் 19 மேல்நிலைப் பள்ளிகளைத் தனிப்பட்ட நகரத்தார்கள் நடத்தி வருகின்றனர். இரண்டு ஊர்களில் 2 மேல் நிலைப்பள்ளிகள் நகரத்தார்களால் தொடங்கப் பெற்றுப் பின்னர் வேறு நிருவாகத்துக்கு மாறியுள்ளன.

பள்ளத்தூர், மதுரை, தேவகோட்டை ஆகிய ஊர்களில் மூன்று கலைக் கல்லூரிகளை நகரத்தார் தொடங்கி நடத்தி வருகின்றனர். காரைக்குடியில் வள்ளல் அழகப்பர் தொடங்கிய கலைக்கல்லூரி இன்று அரசு நிருவாகத்தில் உள்ளது. பூலாங்குறிச்சியில் அரசு கலைக்கல்லூரி தொடங்குவதற்குச் சிவலிங்கம் செட்டியார் நன்கொடை கொடுத்துள்ளார். மேலைச் சிவபுரியிலும் காரைக்குடியிலும் இரண்டு தமிழ்க் கல்லூரிகளை நகரத்தார் தொடங்கி நடத்தி வருகின்றனர்.

நாட்டரசன்கோட்டை, தேவகோட்டை, கோனாபட்டு ஆகிய ஊர்களில் தொழிற்கல்விக் கூடங்களை (ஐ.டி.ஐ) நகரத்தார் தொடங்கி நடத்தி வருகின்றனர். நேமத்தான்பட்டியில் உடற்பயிற்சி மருத்துவ நிலையம் ஒன்றை ஒரு நகரத்தார்

Koviloor Digital Library

தொடங்கி நடத்தி வருகின்றார். அண்ணாமலைநகர், செட்டிநாடு, சேலம், மதுரை, இராயவரம் ஆகிய ஊர்களில் நகரத்தார்கள் பல்தொழிற் பயிற்சி நிலையங்களை நிறுவி நடத்தி வருகின்றனர். காரைக்குடியில் அழகப்பர் தொடங்கிய பல்தொழிற் பயிற்சி நிறுவனம், பொறியியற் கல்லூரி ஆகியவை அரசினராலும் உடற்பயிற்சிக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவை அழகப்பா பல்கலைக் கழகத்தாலும் நடத்தப்பட்டு வருகின்றன. மதுரையில் தியாகராசர் ஒரு கலைக் கல்லூரியையும் ஒரு பொறியியற் கல்லூரியையும் நிறுவியுள்ளார். அண்ணாமலை நகரில் இராசா சர் அண்ணாமலை செட்டியார் நிறுவிய அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அவரது வழித் தோன்றல்களின் மேற்பார்வையில் இயங்குகிறது.

செட்டிநாட்டில் மட்டுமின்றி நகரத்தார்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் கல்வி அறப்பணிகளைச் செய்து வருகின்றனர். இரங்கூனில் கம்பை தனவைசியர் கல்விக் கழகத்தை நிறுவி, மிகச் சிறந்த உயர்நிலைப் பள்ளி ஒன்றை நீண்டகாலம் நடத்தி வந்தனர். திருவாரூரில் ஒரு நடுநிலைப் பள்ளியையும் கோவை, சிதம்பரம், நீலகிரி, திருத்தணி, மணப்பாறை ஆகிய ஊர்களில் உயர்நிலைப் பள்ளிகளையும் சென்னை, மதுரை, மானாமதுரை, பொள்ளாச்சி, திருவண்ணாமலை ஆகிய ஊர்களில் மேல்நிலைப்பள்ளிகளையும் நகரத்தார்கள் நிறுவி நடத்தி வருகின்றனர்.

தனிப்பட்ட கல்வி நிறுவனங்களை நிறுவியதோடு அரசின் உயர்கல்வி அமைப்பாகிய பல்கலைக் கழகங்களில் பல்வேறு அறக்கட்டளைகள் அமைத்து அவற்றின் கல்விப்பணி வளர்ச்சியுற நகரத்தார் துணை செய்துள்ளனர். பர்மா, மலேசியா, சிங்கப்பூர், திருவனந்தபுரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில் இவ்வாறு அறக்கட்டளை களை அமைத்துள்ளனர்.

தமிழ்ப் புலவர்களை ஆதரித்தும் தமிழ் நூல்களை வெளியிட நிதி உதவி செய்தும் இலக்கியப் பரிசு அறக்கட்டளைகளை நிறுவியும் தமிழ்மொழி, கல்வி, ஆய்வு வளர்ச்சிக்கு நகரத்தார்கள் உதவி வருகின்றனர்.

நகரத்தார்கள் நிறுவிய கோவிலூர் மடம் இந்து சனாதனப் பல்கலைக் கழகம் ஒன்றை உருவாக்கும் பெருநோக்கத்தோடு, அதன் உறுப்புக்களாக நாதசுர இசைக் கல்லூரி, சிற்பக்கல்லூரி, திருமுறைக் கல்லூரி, வேதாகமக் கல்லூரி ஆகியவற்றைத் தொடங்கி நடத்தி வருகிறது.

சமுதாய அறப்பணிகள் :

நகரத்தார் தாம் ஈட்டிய பெருஞ்செல்வத்தின் ஒரு பகுதியைச் சமுதாய நன்மைக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற ஒப்புரவு நோக்கம் கொண்டவர்களாகத் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர். நாடு விடுதலை பெறுவதற்கு முன், சாலையமைத்தல், பாலம் கட்டுதல் போன்ற பணிகளைத் தனியார் செய்வதற்கு அரசு அனுமதித்தது. அப்போது செட்டிநாட்டுப் பகுதியில் தங்கள் ஊர்களை ஒட்டியும் தாங்கள் திருப்பணி செய்த ஊர்களை ஒட்டியும் நகரத்தார்கள் பலர் தங்கள் பொருட்செலவில் கற்சாலைகளையும் பாலங்களையும் அமைத் துள்ளனர். இவை பற்றிய விவரங்கள் ‘நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு’ எனும் நூலில் காணப்படுகின்றன. இத்தகைய பாலங்கள், சாலைகள் திறக்கப்பட்ட பொழுது அவைபற்றிய செய்திகள் ‘ஊழியன்’ இதழில் வெளிவந்துள்ளன.

மக்களின் ஆன்மீக அறிவு வளர்ச்சிக்காகக் கோவில்கள், கல்விநிலையங்களை நிறுவிய நகரத்தார்கள் மக்கள் உடற்பிணி போக்குதற்கு மருத்துவமனைகளை நிறுவுவதிலும் ஆர்வம் காட்டினர். செட்டிநாட்டில் பன்னிரண்டு ஊர்களில் 13 மருத்துவமனைகளைத் தனிப்பட்ட நகரத்தார்கள் தொடங்கி நடத்தி வருகிறார்கள். சில ஊர்களில் நகரத்தார்கள் தொடங்கிய மருத்துவமனைகளின் நிருவாகம் பின்னர் அரசிடம் ஒப்படைக்கப் பெற்றது. வேறு சில ஊர்களில் இடம், கட்டிடம், மருத்துவக் கருவிகள் போன்றவற்றை நகரத்தார்கள் நன்கொடையாகக் கொடுத்து அரசு மருத்துவமனை அமையத் துணை செய்துள்ளார்கள். இவ்விரு வகைகளிலுமாகச் செட்டிநாட்டிற்குள் இருபத்தொன்பது ஊர்களில் 32 மருத்துவமனைகள் இயங்கிக் கொண்டிருக் கின்றன.

நகரத்தார்கள் பல அறக்கட்டளைகளை அமைத்து அவற்றின் வாயிலாகக் கல்வி, திருமணம் ஆகியவற்றுக்கு நிதி உதவி வழங்கிவருகின்றனர். (பார்க்க : நகரத்தார் நிதிஉதவி அறக்கட்டளைகள்) சிறந்த சமூக சேவை செய்யும் நிறுவனங்களுக்கும், தனிமனிதர்களுக்கும் ஆண்டுதோறும் பரிசு வழங்கும் அறக்கட்டளைகளையும் நகரத்தார் அமைத்துள்ளனர்.

சமுதாய நன்மை கருதித் தத்தம் ஊர்களில் பூங்கா அமைத்தல், மின்சங்கு அமைத்தல், சாலைகளில் மின்விளக்குப் போடுதல், பயணியர் நிழற்குடை அமைத்தல், பொதுநூலகங்களுக்கு நூல்கள், நிதி நன்கொடை அளித்தல் போன்ற பல பொதுநலப் பணிகளை நகரத்தார்கள் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

Koviloor Digital Library

போக்குவரத்து வசதிகள் பெருகுவதற்கு முன்னர் மாட்டுவண்டி, குதிரைவண்டி முதலியவையே மிகுதியாக இருந்தமையால் அந்த விலங்குகளுக்குரிய தண்ணீர்த் தொட்டிகளைத் தத்தம் ஊரின் பொது இடங்களில் அமைத்து நகரத்தார்கள் சமுதாயத் தொண்டாற்றி உள்ளனர். பஞ்சகாலங்களில் கஞ்சித்தொட்டி அமைத்தல் போன்ற அறங்களையும் நகரத்தார்கள் செய்துள்ளனர்.

தமிழக மக்கள் தொகையில் நகரத்தார் சதவிகிதம் மிகக் குறைவே. ஆனால் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவர்கள் செய்துள்ள பல்வேறு வகையான அறப் பணிகளின் எண்ணிக்கையும் அவற்றுக்காக அவர்கள் செலவிட்ட பொருள் மதிப்பும் மிகப் பேரளவினதாகும். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பதை நன்கு புரிந்து கொண்டு தம் வாழ்வில் கடைப்பிடித்த நகரத்தார்கள், ஈத்துவக்கும் இன்பத்தை முழுமையாக அடைந்துள்ளனர்.

நகரத்தார் இதழ்

இப்பெயரில் மாத இதழ் ஒன்று 1987 ஜூன் முதல் வெளிவருகின்றது. தொடக்கத்தில் சிவகங்கையிலிருந்து வெளிவந்த இவ்விதழ் இப்போது மதுரையிலிருந்து வெளிவருகிறது. இதன் ஆசிரியரும் வெளியீட்டாளரும் சுப. செந்தமிழன் (த.க.) தொடக்கத்தில் தனி இதழ் விலை ஒன்றே முக்கால் ரூபாய். இப்போது (1998) தனி இதழ் விலை நான்கு ரூபாய் இருபத்தைந்து காசுகள். டெம்மி 1 × 8 அளவில் 28 பக்கங்கள் கொண்டதாக வெளிவருகிறது.

"தமிழ் நாடே வாழ்க - எம்
தாய்நாடே வாழ்க
அமிழ்தாகிய இயலிசை கூத்தென்னும்
தமிழாகிய உயிர்தழையும் விழுமிய
தமிழ்நாடே வாழ்க"

என்ற பாரதிதாசன் பாடலே இதழின் குறிக்கோள் தொடராகும். இவ்விதழ் ஒன்பது நகரக் கோவில் சிறப்பிதழ்கள், வட்டகைச் சிறப்பிதழ்கள், நகரத்தார் வாழும் ஊர்ச் சிறப்பிதழ்கள் போன்றவற்றை வெளியிட்டு நகரத்தார் சமூகச் செய்திகளைப் பரப்பியும் பதிவுசெய்தும் வருகின்றது.

நகரத்தார் இதழ்கள்

தமிழ் இதழ்களின் வெளியீட்டில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே நகரத்தார்கள் பெரிதும் ஈடுபாடு காட்டியிருக்கிறார்கள். இதழின் ஆசிரியர், வெளியீட்டாளர் என்ற இரு பொறுப்புக்களையும் அல்லது இரண்டில் ஒன்றை மட்டுமாவது ஒரு நகரத்தார் ஏற்று வெளியான தமிழ் இதழ்களின் பட்டியலைத் தயாரித்தால் நூற்றுக்கு மேற்பட்ட இதழ்கள் அப்பட்டியலில் இடம் பெறுகின்றன.

அவற்றுள் சில இப்போதும் வந்து கொண்டிருக்கின்றன. சில இப்போது வெளிவர வில்லையாயினும் வெளிவந்த காலத்து இதழ்த் தொகுதிகள் கிடைத்துள. அவ்வாறான இதழ்கள் பற்றிய செய்திகள் தனிக்கட்டுரைகளில் இடம் பெற்றுள.

அவ்வாறு தனிக்கட்டுரை அமைந்த இதழ்கள், தனிக்கட்டுரை எழுதுமளவு செய்திகள் திரட்ட இயலாத இதழ்கள் என இரண்டையும் இணைத்து ஒரு முழுமையான அகரவரிசைப் பட்டியலைக் கொடுப்பதே இங்கே செய்யப்பெற்றிருப்பது.

பட்டியல் கீழ்வரும் முறையில் அமைகிறது. முதலில், இதழ் பெயர்; அடுத்து, அது வெளிவந்த பருவமுறை (நாளிதழ், வாரஇதழ், மாதஇதழ் என்பது போல); அடுத்து, அது எங்கிருந்து வெளிவந்தது என்கின்ற இடம்; அடுத்து, அதில் பொறுப்பேற்றிருந்த நகரத்தார் பெயரும் அவர் என்ன பொறுப்பினை ஏற்றிருந்தார் என்ற விவரமும்; (அவர் பெயருக்குப் பின் அடைப்புக்குறிக்குள் 'ஆ' என்றிருந்தால் ஆசிரியர் பொறுப்பு மட்டும் எனப் பொருள். 'வெ' என்றிருந்தால் வெளியீட்டாளர் பொறுப்பு மட்டும் எனப்பொருள். 'ஆ' & 'வெ' என்றிருந்தால் இரு பொறுப்புக்களும் எனப்பொருள்). இயன்ற விடத்து, இதழ் வெளியான காலமும், அது பற்றித் தனிக் கட்டுரை உள்ளதா என்ற விவரமும் கொடுக்கப் பெற்றுள.

1. அணிகலம் – மாதஇதழ் – புதுக்கோட்டை – தேவகோட்டை கதிரேசன் செட்டியார் (ஆ. வெ.) 1941 முதல் 1949 வரை, தனிக்கட்டுரை
2. அணில் – மாதம் இருமுறை; பின்னர் வார இதழ் – சென்னை – வை. கோவிந்தன் (வெ.); தமிழ்வாணன் (ஆ) – 1944 முதல் சில ஆண்டுகள் – தனிக்கட்டுரை.
3. அமைச்சன் – மாத இதழ் – சென்னை – கண. இராமநாதன் (ஆ & வெ) – 1964 முதல் 1966 வரை – தனிக்கட்டுரை.
4. அருணன் – சென்னை – அருணோதயம் அருணன் (ஆ & வெ)
5. அருள் – மாத இதழ் – சென்னை – மணிமேகலை தமிழ்வாணன் (ஆ) – 1964 முதல் 1969 வரை.
6. அழகு – வேந்தன்பட்டி நா. பழநியப்பன் (வெ)
7. அனல் – மாத இதழ் – மதுரை – செவ்வூர் கரு. சிதம்பரம் (ஆ & வெ) – 1972 இல் – தனிக்கட்டுரை.

Koviloor Digital Library

8. ஆசை விகடன் – – மலேசியா – கல்லுப்பட்டி சுப. சிதம்பரம் (வெ)
9. ஆச்சி – மாதஇதழ் – சென்னை – தேவ கோட்டை மீ. பஞ்சநதம் (வெ) பள்ளத்தூர் பழ. அண்ணாமலை (சி.ஆ) – 1983 இல்.
10. இந்திரா – மாத இதழ் – செட்டிநாடு – இராம. பழநியப்ப செட்டியார் (ஆ) – 1940 முதல் சில ஆண்டுகள்
11. இலக்கிய உலகம் – பழநியப்பா பிரதர்ஸ் (வெ)
12. இளந்தமிழன் – மாதஇதழ் – – ஆத்தங்குடி முத்துப்பட்டணம் நாரா. நாச்சியப்பன் (ஆ & வெ) – 1972 முதல் 1975 வரை
13. இனமுழக்கம் – வாரஇதழ் – சென்னை – கல்லல் கண்ணப்பா வள்ளியப்பன் (வெ) – 1955 முதல் 1960 வரை – தனிக்கட்டுரை.
14. உங்க நேரம் – மாத இதழ் – மதுரை – கோட்டையூர் என். சிவசுப்பிரமணியன் (ஆ) மகிபாலன்பட்டி நாக. இராமசாமி (வெ) 1994 இல்.
15. உங்கள் உடல் நலம் – மாதஇதழ் – மதுரை – நெற்குப்பை டாக்டர் கே.ஆர். சுந்தரம் (ஆ & வெ) – தனிக்கட்டுரை.
16. ஊழியன் – வாரஇதழ் – காரைக்குடி – தமிழ்க்கடல்இராய. சொக்கலிங்கம் (ஆ & வெ) – 1920 முதல் 1940 வரை – தனிக்கட்டுரை.
17. எழில் – மாதஇதழ் – காரைக்குடி – தமிழண்ணல் (ஆ) – 1957-58.
18. எழுச்சி மலர் – முருகு. சுப்பிரமணியம் (வெ).
19. கடிதம் – நாளிதழ் – கண்ணதாசன் (ஆ & வெ)
20. கண்ணதாசன் – மாத இதழ் – சென்னை – கண்ணதாசன் (ஆ) – 1969 முதல் 1977 வரை – தனிக்கட்டுரை.
21. கதைக் கடல் – மாதஇதழ் – சென்னை – சக்தி வை. கோவிந்தன் (ஆ)
22. கலைமணி – சென்னை – அரு. இராமநாதன் (ஆ & வெ) – 1952 முதல்.
23. கல்கண்டு – வாரஇதழ் – சென்னை – எஸ்.ஏ.பி. (வெ) – தமிழ்வாணன் (ஆ) – 1948 முதல் – இப்போது ஜவஹர் பழநியப்பன் (வெ) – லேனா தமிழ்வாணன் (ஆ) – தனிக்கட்டுரை.
24. கற்பகம் – சென்னை – மேலைச்சிவபுரி சொ. பனையப்ப செட்டியார் (ஆ & வெ) – 1940 அளவில்.
25. காதல் – மாதஇதழ் – சென்னை – அரு. இராமநாதன் (ஆ & வெ) – 1947 முதல் – தனிக்கட்டுரை.
26. காந்திவழி – சென்னை – சக்தி வை. கோவிந்தன் (வெ)
27. காமதேனு – – சென்னை – மேலைச்சிவபுரி சொ. பனையப்ப செட்டியார் (ஆ & வெ) – 1940 அளவில்.
28. குமரன் – மாதஇதழ் – காரைக்குடி – சொ. முருகப்பா (ஆ & வெ) – 1922 முதல் சில ஆண்டுகள் – தனிக்கட்டுரை.
29. குமரன் – வாரஇதழ் – காரைக்குடி – சொ. முருகப்பா (ஆ & வெ) – 1923 முதல் 1948 வரை – தனிக்கட்டுரை.
30. குமரிமலர் – மாதஇதழ் – சென்னை – ஏ.கே. செட்டியார் (ஆ & வெ) 1943 முதல் 1983 வரை – தனிக்கட்டுரை.
31. குமுதம் – மாதஇதழ், பிறகு மாதம் இரு இதழ், பிறகு மாதம் மூன்று இதழ், பிறகு வார இதழ் – சென்னை கௌரவ ஆசிரியர் டாக்டர் ஆர்.எம். அழகப்ப செட்டியார் – எஸ்.ஏ.பி. (ஆ & வெ) 1947 முதல் – இப்போது ஜவகர் பழநியப்பன் (வெ) – தனிக்கட்டுரை.
32. கோகுலம் – மாதஇதழ் – சென்னை – குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா (கௌ. ஆ) – 1983 முதல் குழந்தைக் கவிஞர் காலமாகும் வரை.
33. கோமாளி – சென்னை – வானதி திருநாவுக்கரசு (ஆ)
34. சக்தி – மாதஇதழ் – சென்னை – வை. கோவிந்தன் (வெ) – 1939 முதல் 1950 வரை – தனிக்கட்டுரை.
35. சங்கப்பலகை – சென்னை – சின்ன அண்ணாமலை (வெ)
36. சங்கு – புதுக்கோட்டை – குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா (கௌ.ஆ) – 1944 முதல் 1951 வரை.
37. சண்டமாருதம் – நாளிதழ் – திருச்சி – சொ. முருகப்பா (ஆ & வெ) – 1932 இல்.
38. சண்டமாருதம் – சேலம் – கண்ணதாசன் (ஆ)
39. சந்திரோதயம் – வாரஇதழ் – (புதுக்கோட்டை பிறகு சென்னை) – மேலைச்சிவபுரி சொ. பனையப்ப செட்டியார் (ஆ & வெ) – 1936 முதல் சில ஆண்டுகள்.
40. சிட்டுக்குருவி – ஆறாவயல் நாக. முத்தையா
41. சிலம்பு – மாதஇதழ் – கோலாலம்பூர் – என்.எம்.என். மலையாண்டி செட்டியார் (வெ) – 1960இல் (ஆ).

Koviloor Digital Library

42. சிவநேசன் – வாரஇதழ் பின்னர் மாத இதழ் – பலவான்குடி – இராம.கு. இராமசாமிச் செட்டியார் (ஆ) – 1927 முதல் – தனிக்கட்டுரை.

43. சிறுவர் உலகம் – மாதஇதழ் – கொழும்பு – பெரி.மீ. சுந்தரம், சி.சே. பழநியப்பன் (வெ) – 1952 முதல்.

44. சுயராஜ்யம் – திங்கள் இருமுறை – சித்தூர்க்கொச்சி – கொத்தமங்கலம் எம்எஸ்.பி. சண்முகம் (ஆ).

45. செட்டிநாடு – வாரஇதழ் – தஞ்சாவூர் பின்னர் காரைக்குடி – காரைக்குடியைச் சேர்ந்த தஞ்சாவூர் இராமநாதன் செட்டியார் (வெ) – பாலகவி இராமநாதன் செட்டியார் (ஆ) – 1930 முதல் – தனிக்கட்டுரை.

46. செட்டிநாடு – மாதஇதழ் – சென்னை – டாக்டர் மெ.சுந்தரம் (சிறப்பு ஆசிரியர்) – 1971 முதல்

47. சோலை – மாதஇதழ் – கோலாலம்பூர் – பள்ளத்தூர் கா. இராமநாதன் செட்டியார் (ஆ & வெ) – 1952 முதல்

48. டமாரம் – வாரஇதழ் – புதுக்கோட்டை – குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா (கௌ.ஆ) சுப. சொக்கலிங்கம் (ஆ & வெ) – 1948 முதல்

49. தமிழன் குரல் – மாத இதழ் – சென்னை – இன்பநிலையம் சோம. சுவாமிநாதன் (வெ) – 1954 முதல்

50. தமிழ்க் கொடி – மாதஇதழ் – மலாக்கா – கடியாபட்டி உ.அரு. அருணாசலம் செட்டியார் (ஆ) – 1940 முதல் 1951 வரை.

51. தமிழ்நாடு – நாளிதழ் – மதுரை பின்னர் சென்னையிலும் – கலைத் தந்தை கருமுத்து. தியாகராசர் (வெ) – 1951 முதல் 20 ஆண்டுகள் – தனிக்கட்டுரை.

52. தமிழ் நேசன் – நாளிதழ் – கோலாலம்பூர் – வலையபட்டி மலையாண்டி செட்டியார் (வெ) 1946 முதல் – அவருக்குப் பின் அவர் மகன் நாகப்பன் (வெ) – முருகு சுப்பிரமணியன் (ஆ) – 1962 முதல் 1976 வரை.

53. தமிழ்ப்பாவை – வேந்தன்பட்டி மெ. சுந்தரம் (ஆ)

54. தமிழ்முரசு – நாளிதழ் – சிங்கப்பூர் – கல்லுப்பட்டி மெ. சிதம்பரம் (ஆ)

55. தமிழ்ஹரிஜன் – சென்னை – சின்ன அண்ணாமலை (வெ.)

56. தம்பி – விசுவநாதபுரம் கும.பெரியகருப்பன் செட்டியார் (வெ)

57. தர்மச்சுடர் – மாதஇதழ் – டாக்டர் சுப. முருகப்பன் (வெ) – 1985 முதல்

58. தனவணிகன் – மாதஇதழ் – கோட்டையூர் பின்னர் இரங்கூன் – ஏ.கே. செட்டியார் (ஆ) – 1930 முதல் – தனிக்கட்டுரை

59. திருமகள் – கடியாபட்டி – கண்ணதாசன் (ஆ) – 1944 இல்.

60. திருவருட்புனல் – மாதஇதழ் – காரைக்குடி – ஏ.ஆர். முத்துராமன் (ஆ) – 1982 முதல்

61. திருவருள் – மாதஇதழ் – சென்னை – மணி மேகலை தமிழ்வாணன் (ஆ) – 1973 முதல்

62. திரை ஒலி – கண்ணதாசன் (ஆ)

63. திரைக்கடல் – மலேசியா – கல்லுப்பட்டி சுப. சிதம்பரம் (வெ)

64. தினமணி – நாளிதழ் – சென்னை – நெற்குப்பை இராம.திரு. சம்பந்தம் (ஆ)

65. தென்றல் – வாரஇதழ் – சென்னை – கண்ணதாசன் (ஆ) – 1953 முதல் – தனிக்கட்டுரை.

66. தென்றல் திரை – நாளிதழ் – சென்னை - கண்ணதாசன் (ஆ)

67. நகரசபை – முல்லை முத்தையா (ஆ & வெ)

68. நகரத்தார் – மாதஇதழ் – சென்னை – வேகுப்பட்டி புலவர் நாக சண்முகம் (ஆ) – 1969 முதல் 10 ஆண்டுகள் – தனிக் கட்டுரை.

69. நகரத்தார் இதழ் – மாத இதழ் – மதுரை – சோழபுரம் சுப. செந்தமிழன் (ஆ & வெ) – 1987 முதல் – தனிக் கட்டுரை.

70. நகரத்தார் குரல் – மாதஇதழ் – மதுரை – இராங்கியம் வ.நா. சிதம்பரம் செட்டியார் (ஆ) – 1982 முதல் – தனிக்கட்டுரை

71. நகரத்தார் மலர் – மாதஇதழ் – மதுரை – கோனாபட்டு நா. இளங்கோவன் (ஆ & வெ) – 1976 முதல் – தனிக்கட்டுரை.

72. நகரமணம் – மன்னார்குடி – கீழச்சிவல்பட்டி அழ. கருப்பையா (ஆ & வெ).

73. நண்பன் – சென்னை – பாரிநிலையம் க.அ. செல்லப்பன் (வெ)

74. நமது நகரத்தார் – மாதஇதழ் – சென்னை ஏஎல். அழகப்பன் (ஆ) – 1996 முதல் – தனிக்கட்டுரை.

75. நல்லநேரம் வந்தாச்சு – மாதஇதழ் – மதுரை – சிவல்புரி சிங்காரம் (ஆ) – 1992 முதல் ஓராண்டு.

76. நவசக்தி – நாளிதழ் – சென்னை – கண்ணதாசன் (ஆ)

Koviloor Digital Library

77. நவமணி – மாதஇதழ் – பள்ளத்தூர் – சி.இராம. இராமநாதன் செட்டியார் (வெ) – 1930 இல்.

78. நற்பண்பு – மதுரை – தேவகோட்டை லெ. இராமையா (வெ)

79. நாடகக்கலை – மாதஇதழ் – சென்னை டாக்டர் ஆறு. அழகப்பன் (ஆ & வெ) – 1971 முதல் ஈராண்டுகள்

80. நாநயா – மாதஇதழ் – மதுரை – தேவகோட்டை கல்யாணசுந்தரம் (ஆ) – 1987 இல்.

81. பாப்பா – இராயவரம் இராம. தியாகராசன் (வெ)

82. பாப்பா மலர் – மாதஇதழ் – இராயவரம் – நேமத்தான்பட்டி முத்து நாராயணன் (ஆ & வெ) – 1942 முதல்.

83. பாலர் மலர் – மாதம் இருமுறை – புதுக்கோட்டை – குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா (கௌ. ஆ) – 1944 முதல்.

84. பிரேமரத்னம் – மாதஇதழ் – சென்னை – கண்டனூர் அரு. இராம. கண்ணப்பன் (ஆ)

85. புதிய சமுதாயம் – மாதஇதழ் – கோலாலம்பூர் – முருகு. சுப்பிரமணியம் (ஆ & வெ) – 1977 முதல்.

86. பூஞ்சோலை – சென்னை – குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா (கௌ.ஆ) – 1951 முதல் 1954 வரை.

87. பொன்மணி – மலேசியா – கல்லுப்பட்டி சுப. சிதம்பரம் (வெ)

88. பொன்னி – மாதஇதழ் பின்னர் மாதம் இருமுறை – புதுக்கோட்டை பின்னர் சென்னை – முருகு. சுப்பிரமணியம் (ஆ) – 1947 முதல் 1952 வரை – தனிக்கட்டுரை.

89. மங்கை – மாதஇதழ் – சென்னை – சக்தி வை. கோவிந்தன் (வெ)

90. மந்திரி – வாரஇதழ் பின்னர் மாதஇதழ் – சேலம் – பழ.லெ. பழநியப்பன் (ஆ & வெ) – 1951 முதல்.

91. மர்மக்கதை –சென்னை – அரு. இராமநாதன் (ஆ & வெ) – 1947 முதல் 1952 வரை.

92. மலைமகள் – ஈப்போ – ஆத்தங்குடி வி.எஸ். முத்தையா (ஆ)

93. மழலைமோகினி – மலேசியா – கல்லுப்பட்டி சுப. சிதம்பரம் (வெ)

94. மன்றம் – சென்னை – தேவகோட்டை இராம வெள்ளையன் (வெ)

95. மாலதி – சென்னை – சின்ன அண்ணாமலை (ஆ & வெ)

96. மாலைமதி – மாதஇதழ் பின்னர் வாரஇதழ் – சென்னை – எஸ்.ஏ.பி. (வெ) – இப்போது ஜவஹர் பழநியப்பன் (வெ).

97. மிட்டாய் – சென்னை – வானதி திருநாவுக்கரசு (ஆ)

98. முத்தம் – மாதஇதழ் – நேமத்தான்பட்டி – மெ.மு.நா.பழ. பழநியப்பன் (வெ) – 1950 இல்.

99. முத்து – ஆத்தங்குடி முத்துப்பட்டணம் நாரா. நாச்சியப்பன் (வெ) – 1948 இல்.

100. முருகு – வேந்தன்பட்டி நா. பழநியப்பன் (வெ)

101. முல்லை – மாதஇதழ் – சென்னை – முல்லை முத்தையா (ஆ & வெ)

102. மேதாவி – கண்ணதாசன் (ஆ)

103. வண்ணங்கள் – புதுச்சேரி பின்னர் சோழவந்தான் – கண்டனூர் சாந்தா சுப்பிரமணியன் (ஆ) – 1973 முதல்.

104. வாரச்செய்தி – வாரஇதழ் – காரைக்குடி – தி. நாராயணன் (ஆ) – 1950 முதல்.

105. வித்யாபானு – மாதஇதழ் – கோனாபட்டு – அரு. இராம. சுப்பிரமணியன் செட்டியார் (வெ)

106. விழி – மாதஇதழ் – மதுரை – செவ்வூர் கரு. சிதம்பரம் (வெ) – 1972 இல்.

107. வீரகேசரி – நாளிதழ் – கொழும்பு – ஆவினிப்பட்டி பெ.பெரி. சுப்பிரமணியன் செட்டியார் (ஆ & வெ) – 1930 முதல் 1960 வரை.

108. வெண்ணிலா – சென்னை – வானதி திருநாவுக்கரசு (ஆ)

109. வெள்ளிமணி – வாரஇதழ் – சென்னை – சின்ன அண்ணாமலை (வெ) – 1947 முதல்.

110. வைசிய மித்திரன் – வாரஇதழ் – தேவகோட்டை – இராமநாதன் செட்டியார் (வெ) – 1911 முதல் சில ஆண்டுகள்.

111. ஹிந்துஸ்தான் – சக்தி வை. கோவிந்தன் (வெ). 1938 முதல் 1941 வரை.

112. ஜில்ஜில் – மாதமிருமுறை சென்னை – வானதி திருநாவுக்கரசு (ஆ & வெ) 1948 முதல்.

113. ஜெமினி சினிமா – சென்னை – வேந்தன்பட்டி பழநியப்பன் இராமசாமி (வெ) – 1981 முதல்.

இவை தவிர, நகரத்தார் தொடர்புடைய இதழ்கள் எனச் சோமலெயால் சுட்டப்பெற்று,

Koviloor Digital Library

'செட்டிநாடும் செந்தமிழும்' நூலில் இடம் பெறுவனவும், அதே நேரத்தில் நகரத்தாரில் யார், என்ன பொறுப்பில் தொடர்பு கொண்டிருந்தார் என்ற செய்தி கிடைக்காதனவுமாக எட்டு இதழ்களின் பெயர்கள் உள. அவற்றையும் சேர்த்தால் பட்டியலின் மொத்த எண்ணிக்கை 121 ஆகிறது. அவை வருமாறு :

114. இன்பம்
115. கதம்பம்
116. சாக்லட்
117. சிட்டு
118. நவயுவன்
119. மகிழ்ச்சி
120. ஹநுமான்
121. ஜனமித்திரன்

இப்பட்டியலைப் பார்க்கும் யாரும், தமிழ் இதழ் உலகில் நகரத்தாரின் பங்கு மிகக் கணிசமானது என்பதைத் தெளிவாக உணரலாம். எண்ணிக்கை மிகுதி என்பது மட்டுமல்லாமல், இவற்றுள் பல இதழ்கள் தமிழ் இதழ் உலகில் சாதனை படைத்தவை என்பதும் இச்சமூகத்தின் தனிச்சிறப்புக்குச் சான்றாக அமையும் வரலாற்று உண்மை.

நகரத்தார் இயல் - ஆய்வு

நகரத்தார் சமூகத்தின் வரலாறு, பண்பாடு, தொழில், பிறநாட்டுக் குடியேற்றம் போன்றவற்றைப் பற்றிய பல்வேறு ஆய்வுகளும், அதன் விளைவான பல்வேறு நூல்களும், பல்வேறு காலகட்டங்களில் தோன்றியுள்ளன. அவை பற்றிய தனிக் குறிப்புக்கள் உரிய இடங்களில் இடம் பெற்றுள. அவற்றின் ஒரு தொகுப்பு இது.

நகரத்தார் வரலாறும், பண்பாடும்:

இதுபற்றி முதன் முதலில் (1909இல்) ஆய்வு மேற்கொண்டவர் எட்கார் தர்ஸ்டன் என்ற மேலைநாட்டு அறிஞர். 'தென்னிந்தியாவில் சாதிகளும் இனங்களும்' (Castes and Tribes of Southern India) என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் 7 தொகுதிகளாக வெளியான அவரது நூலில், நகரத்தார் பழக்க வழக்கங்கள் பற்றியும், பண்பாடு பற்றியும் தனியே 'நாட்டுக்கோட்டைச் செட்டியார்' என்ற தலைப்பில் பல செய்திகளைத் திரட்டித் தந்துள்ளார்.

தமிழில் நகரத்தார் வரலாறு குறித்து வெளிவந்த முதல்நூல் காரைக்குடி சொக்கலிங்க அய்யா எழுதிய 'நாட்டுக்கோட்டை நகரத்தார் எனும் மகுடதன வைசியரின் மரபு விளக்கம்' (1919) ஆகும்.

அடுத்து 1937 இல் 'செட்டிமார் நாட்டைப் பற்றி' (In Glimpses of Chettimar Nad) என்ற தலைப்பில் ஆங்கில நூலொன்றை எழுதிய 'நீல்கண் பெருமாள்' என்ற ஆய்வாளரைக் குறிப்பிடலாம். இந்நூலும் நகரத்தார் வரலாறு, பண்பாடு பற்றி விளக்கும் ஒரு நன் முயற்சியே ஆகும்.

தேவகோட்டையைச் சேர்ந்த வித்துவ சிகாமணி வீர.லெ. சிந்நயச் செட்டியார், பூங்குன்ற நாட்டு வேலங்குடிக் கல்வெட்டினையும், துலாவூர் மடத்துச் செப்பேட்டினையும் ஆதாரமாகக் கொண்டு 'நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம்' என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பின்னர் அந்நூலை அடிப்படையாக வைத்துக் கொண்டு மேலும் பல ஆய்வுக் குறிப்புக்களைச் சேர்த்தார், அமராவதி புதூரைச் சேர்ந்த வித்துவான் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார்.

அவர் தொகுத்து வைத்திருந்த ஆய்வுக் குறிப்புக்களைப் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் திருத்தியும், விளக்கியும் எழுதிய நூலையே 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற தலைப்பில் கானாடுகாத்தான் சா.இராம.மு.இராம. இராமநாதன் செட்டியார் 1953 இல் வெளியிட்டார்.

இதற்குப் பின்னர் இன்னும் விரிவாக வெளியான 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' நூலை உருவாக்கியவர், 'செட்டிநாடு' இதழின் ஆசிரியராக இருந்த வரகூர் அ. சேசாத்ரி சர்மா ஆவார்.


நகரத்தார் வரலாறும் பண்பாடும் பற்றிய ஆய்வு மதிப்புடைய மற்றொரு நூலை உருவாக்கியவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தராக இருந்த எஸ். சந்திரசேகர் ஆவார். 'தென்னிந்தியாவின் நகரத்தார்கள்' – (The Nagarathars of South India) என்ற தலைப்புடைய இந்த ஆங்கில நூலில், நகரத்தாரின் தெற்கு ஆசியத் தொடர்புகளையும் குறிப்பிட்டு விளக்குவது கூடுதல் சிறப்பு ஆகும்.

நகரக் கோவில்கள் :

நகரத்தார் கோவில் சார்ந்து வாழும் இயல்புடையவர்கள் என்ற ஒரு கூற்றை மட்டும் மையப்படுத்தி அந்தக் கோவில்களைப் பற்றியும் பல ஆய்வாளர்கள் ஆய்வு செய்து நூல் வெளியிட்டுள்ளர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர் மூவர்.

'ஒன்பது நகரக் கோவில்கள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்ற, பி.அளகாபுரியைச் சேர்ந்த வ. தேனப்பன் ஒருவர்.

Koviloor Digital Library



ஆத்தன்குடி
மீனாட்சி சுந்தரேசுவரர் சிவன் கோவில்

Koviloor Digital Library



நாட்டரசன் கோட்டை கண்ணாத்தள் கோயில்

Koviloor Digital Library




கோவிலூர் குளக்கரை மண்டபம்



இடபாரூடி ஓவியம்

இரணியூர்க் கோவில் - கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

Koviloor Digital Library



கழுத்துரு


Koviloor Digital Library



அரண்மனை உள்தோற்றம்




Koviloor Digital Library



நகரத்தார் கட்டடக்கலை

Koviloor Digital Library




பட்டமங்கலத்தில் எழுந்தருளியுள்ள
அஷ்டமாசித்தி தட்சிணாமூர்த்தி



வேந்தன்பட்டி ஸ்ரீநந்தி எம்பெருமான்

Koviloor Digital Library

தமிழ்நாடு மாவட்டங்கள்



Koviloor Digital Library

ஒன்பது நகரக்கோவில்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் தனியே ஆய்வு நூல்கள் எழுதியவர் மா. சந்திரமூர்த்தி. அண்மையில் விரிவான ஆய்வுசெய்து 'நகரத்தார்களின் குலதெய்வங்கள்' என்ற நூலை உருவாக்கியிருப்பவர் வேகுப்பட்டியைச் சேர்ந்த எஸ்.ஆர்.எம். பழநியப்பன்.

நகரத்தாரும் தமிழும்

இத்தலைப்பில் விரிவான ஆய்வு செய்து முதலில் 'செட்டிநாடும் தமிழும்' என்ற தலைப்பில் சிறு நூலொன்றை வெளியிட்டு, பின்னர் அதனையே விரிவுபடுத்திச் 'செட்டிநாடும் செந்தமிழும்' என்ற பெரியதொரு ஆய்வு நூலை வெளியிட்ட சோமலெ மிகச்சிறந்த நகரத்தார் இயல் ஆய்வாளர் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கும் உண்மை.

நகரத்தார் - பிற நாடுகளில் :

பிறநாடுகளில் குடியேறிய நகரத்தார் பற்றியும் பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்துள. குறிப்பிடத்தக்க முறையில் நூல் வடிவம் பெற்ற ஆய்வுகள் வருமாறு : பர்மாவில் நகரத்தார்கள் பற்றி ஆலன் மாஸ்டர் என்ற ஆங்கிலேயரின் ஆங்கில நூலின் தலைப்பு 'பர்மாவில் செட்டியார்கள் – குடியேறியோரின் பொருளியல் ஆய்வு' (Chettiars in Burma - An Economic Survey of Migrant Community) என்பதாம்.

மேற்கு ஜெர்மனியிலுள்ள பீலேஃபீல்டு பல்கலைக்கழகத்தின் டாக்டர் பட்டத்திற்காகச் செயராணி பாவாடைராயன் ஆய்வு செய்து வெளியிட்டிருக்கும் நூல் 'சிங்கப்பூர் செட்டியார்கள்' (Chettiars of Singapore) என்பதாம்.

சின்னப்பா அரசரத்தினம் எழுதியநூல் 'மலாயா சிங்கப்பூரில் இந்தியர்கள்' (Indians in Malaya of Singapore - 1970) என்பது. வீரசூரியா எழுதியநூல் 'இலங்கையில் வணிக வங்கியாளர் களாகிய நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்' (The Nattukkottai Chettiars - Merchant Bankers in Ceylon - 1973) என்பது.

பல்கலைக்கழக டாக்டர் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வேடுகள் வருமாறு.

1. Chestor L. Cooper - Money Lenders and the Economic Development of Lower Burma - an exploratory historical study of the role of Indian Chettiars - American University - Washington - 1959.

2. Philip Siegelman - Colonial Development and the Chettiars - A Study in Political Economic Ecology of Modern Burma - University of Minnesotta - 1962.

Ph.d. பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வேடு :

Raman Mahadevan - Origin and growth of entre-preneurship in the Nattukkottai Chettiar Community of Tamilnadu - (1880 - 1930). Jawaharlal Nehru University - Delhi - 1976.

நகரத்தார் - பல்திறக் கூறுகள்:

நகரத்தாரின் அறப்பணிகள் பற்றி ஆய்வு செய்து மதுரைப் பல்கலைக்கழக டாக்டர் பட்டத்திற்காக ஆய்வேடு அளித்திருப்பவர் காரைக்குடியைச் சேர்ந்த வள்ளியம்மை சொக்கலிங்கம் ஆவார்.

நகரத்தாரின் பல்வேறு திறன்கள் பற்றித் தனித்தனி நூல்கள் உருவாக்கும் நோக்கத்தில் ஆய்வு மேற்கொண்டு இதுவரை ஆறு நூல்களை வெளியிட்டிருப்பவர் பள்ளத்தூரைச் சேர்ந்த பழ. அண்ணாமலை. அவரது நூல்கள்,

நகரத்தார் திருமண நடைமுறை
செட்டிநாடு – ஊரும் பேரும்
நகரத்தார் கணக்கியல் முறை
நகரத்தார் – யார் எவர் – முதல் தொகுதி
நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும்
நீத்தார் கடன்.

இதே அடிப்படையில் நகரத்தார் வரலாறும், அறப்பணிகளும், சிறப்பான நகரத்தார் பற்றிய செய்திகளும் அடங்கிய 'நனிபுகழ் நகரத்தார்' என்ற நூலை ஆய்வுப் போக்கில் உருவாக்கி அளித்திருப்பவர் 'இனியவன்' என்ற புனை பெயரை உடைய வே. திருவரங்கம் ஆவார்.

நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த அன்புமீனாள் ஆவிச்சி 'நகரத்தார் ஒப்பாரி' பற்றி ஆய்வுசெய்து மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

அண்மையில் வெளிவந்துள்ள சிறந்த இரு ஆய்வு நூல்கள்.

1. David West Rudner - Caste and Capitalism in Colonial India - The Nattukkottai Chettiars - (1995)

2. Yuko Nishimura - Gender Kinship and Property Rights - Nagarathar Womanhood in South India - (1998)

தனிநூல்களாக எழுதாமல் ஆய்வு நூல்களில், கருத்தரங்குகளில், அல்லது இதழ்களில் நகரத்தார் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ள சிறந்த ஆய்வாளர்கள் வ.சுப. மாணிக்கனார், தமிழண்ணல், சுப. அண்ணாமலை,

Koviloor Digital Library

சுப. திண்ணப்பன், தே. சொக்கலிங்கம், நா. அழகப்பன் ஆகியோர்.

நகரத்தார் சமூகத்தைப் பற்றி இதுவரை வந்த குறிப்பிடத்தக்க ஆய்வுகள் மேலே காட்டப் பெற்றன. இன்னும் ஆய்வுக்குரிய செய்திகள் இச்சமூகத்தைப் பற்றி நிறையவே உள்ளன.

நகரத்தார் கட்டிடக்கலை - கோவில்கள்

"கோவில் பழுதா? கூப்பிடு செட்டியாரை" என்பது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வழங்கும் பழமொழியாகும். பாடல்பெற்ற கோவில்கள் அனைத்திலும் நகரத்தார் திருப்பணி செய்துள்ளனர். அதுபோல் பாண்டியநாட்டில் தாம் வாழத் தேர்ந்தெடுத்த பகுதிகளில் புதிய சிவன்கோவில்களையும் பிற கோவில்களையும் கட்டியுள்ளனர். பல்லவர் கலைப்பாணி, சோழர் கலைப்பாணி என்பது போல் கோவில் கட்டுவதில், நகரத்தாருக்கெனத் தனிப்பாணி உள்ளமையைக் காணமுடிகிறது.

நகரத்தார்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே பாண்டிய நாட்டில் கோவில் திருப்பணிகளில் ஈடுபட்டார்கள். எனினும் 19,20 ஆம் நூற்றாண்டுகளில் அவர்கள் செய்த திருப்பணிகள்தான் காலவாரியாக நூல்களில் பதிவு செய்யப்பெற்றுள்ளன. அரியக்குடியில் அமைந்துள்ள ஸ்ரீனிவாசப் பெருமாள் கோவில்தான் முதன்முதலில் கற்றளி செய்யப்பட்டது. கி.பி. 1818 ஆம் ஆண்டில் திருப்பணி முடிந்து முதற் குடமுழுக்கு நடந்துள்ளது. இரண்டாவதாக 1820 இல் உ. சிறுவயலில் பொன்னழகியம்மன் கோவில் திருப்பணி நடந்துள்ளது.

நகரத்தார் கோவில் சிற்பங்கள் வாஸ்து சாஸ்திரம், மயமதம், மானசாரம், சகளாதிகாரம், காசியப சிற்பம், சாரஸ்வதீய சித்ர தர்ம சாஸ்திரம், ப்ராஹ்மிய சித்ர கர்ம சாஸ்திரம், ஸ்ரீ தத்துவநிதி ஆகிய சிற்பநூல்கள் கூறுகின்ற இலக்கணப்படி காணப்படுகின்றன. நகரத்தார்கள் காமிகாகமம் காரணாகமம் ஆகிய ஆகம நூல்களின்படி கோவில் சிற்பங்களை அமைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

நகரத்தார்கள் நம்நாட்டில் பல பகுதிகளையும் வணிகம் காரணமாகச் சுற்றிப் பார்த்தபோது பல்வேறு கோவில் அமைப்புக்களையும் கூர்ந்து நோக்கியுள்ளனர். பல்லவர் சோழர் பாண்டியர் நாயக்கர் காலச் சிற்பக்கலைப் பாணிகளில் குறைகளை விடுத்து நிறைகளை ஏற்றுக்கொண்டு தமக்கெனத் தனிப்பாணியை வகுத்துக்கொண்டு கோவில்களை அமைத்தனர்.

கோவில் அமைப்பில் பள்ளப்பத்தி என்பது நகரத்தார் தனிப்பாணியாகும். கோவில் மண்டபங்களையும் மூலவர் பரிவார தேவர்களின் சிறிய ஆலயங்களையும் உயர்த்திக் கட்டித் திருச்சுற்றினை மட்டும் பள்ளமாக அமைத்துக் கட்டுவது பள்ளப்பத்தி என்னும் நகரத்தார்பாணிக் கோவில் அமைப்பாகும்.

சோழர்காலக் கோவில்களில் கருவறை விமானக்கோபுரங்கள் மிக உயரமாகவும் முன்வாயில் கோபுரம் உயரம் குறைவாகவும் இருக்கும். பாண்டியர் காலக் கோவில்களில் முன் ராஜகோபுரம் மிக உயரமாகவும் கருவறை விமானங்கள் உயரம் குறைவாகவும் அமைந்தன. பள்ளப்பத்தி முறையால் நகரத்தார்கள் கருவறைத் தளத்தை உயர்த்தி நிலைக்கோபுர உயரத்திற்குச் சமமாகக் கருவறை விமானங்களையும் அமைத்தனர். கோவிலுள் நுழைந்ததும் கொடிமரம், நந்திமேடை, பள்ளப் பிரகாரம், மேடையில் மகா மண்டபம் அர்த்த மண்டபம் கருவறை என நகரத்தார் கோவில் அமைப்பு அமைந்துள்ளது.

நகரத்தார் கோவில்களில் மேடைமீது கிழக்கு நோக்கிச் சிவபெருமான் சன்னதியும் அருகிலேயே தெற்குநோக்கி இறைவியின் சன்னதியும் அமைந்திருக்கும். சோழர்காலக் கோவில்களில் இறைவனுக்கும் இறைவிக்கும் தனித்தனி ஆலயங்களே அமைக்கப்பட்டன. இறைவன் கோவிலுக்கு இடப்புறம் இறைவி கோவில் அமையும். ஆனால் சிவன், சக்தி ஆகிய இருவரையும் ஒரே ஆலயத்துக்குள் பக்கம் பக்கமாக வீற்றிருக்கச் செய்தவர்கள் நகரத்தார்களே எனச் சிற்பக்கலை வல்லுனர் வை. கணபதி ஸ்தபதி குறிப்பிடுகின்றார். இது நகரத்தார்களின் தனிப்பாணியாகும். ஒன்பது நகரக்கோவில் களிலும் இதே பாணிதான் பின்பற்றப்பட்டுள்ளது. நகரத்தார் வாழும் ஊர்களில் கட்டப்பட்ட நகரச் சிவன்கோவில்களிலும் பெரும்பாலானவை இவ்வமைப்பிலேயே கட்டப்பட்டுள்ளன. சில ஊர்களில் மட்டும் மதுரை மீனாட்சியம்மன் கோவில் அமைப்பைப் பின்பற்றி இறைவன் இறைவியர்க்குத் தனித்தனிச் சன்னதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இறைவி இறைவனுக்கு வலப்புறத்தில் அமைவது இப்பாணி.

ஆகமங்களைத் தமிழில் மொழிபெயர்த்து எந்தெந்தத் தெய்வங்களை எங்கெங்கே அமைக்கவேண்டும் என்பதை அறிந்து

Koviloor Digital Library

நகரத்தார்கள் அமைத்துள்ளார்கள். கோவிலின் தென்மேற்கு மூலையில் சோமாஸ்கந்தர், விநாயகர், வடமேற்கு மூலையில் முருகப்பெருமான் மகாலெட்சுமி சன்னதியையும் அமைப்பது மரபு. தென்புறம் தெட்சணாமூர்த்திக்குத் தனி மண்டபமும் வடபுறம் சண்டிகேஸ்வரருக்குப் பல்லவர் பாணியில் ஒற்றைக் கற்றளிச் சிற்றாலயமும் அமைத்திருப்பர்.

கோவிலின் தல விருட்சங்களைப் போற்றி மேடையமைத்து வேலியிட்டு வழிபடுவர். தலவிருட்சம் தற்போது இல்லையெனில் அதுபோலக் கற்சிலை அமைத்து வழிபடுவர். வைரவன் கோவிலில் உள்ள அழிஞ்சிமரச் சிற்பமும் கீழச்சிவல்பட்டியில் உள்ள பலாமரச் சிற்பமும் இதற்குச் சான்றுகளாகும்.

சுவாமி கருவறையின் முன்பாக அர்த்த மண்டபத்தில் கண்ணாடிச் சிற்பம் அமைத்துள்ளமை நகரத்தார்களின் தனித்தன்மை களுள் ஒன்றாகும். இறைவனுக்குச் செய்யும் சோடச உபசாரங்களுள் கண்ணாடியும் ஒன்று. கண்ணாடியின் செப்புத் திரு உருவத்தைச் சுற்றிலும் சுடர்க் கருக்குகள் காணப்படுகின்றன. பீடத்தின் மேல் சுமார் 50 செ.மீ உள்ள தண்டுப்பகுதியும் அதன்மேல் வட்டக் கண்ணாடிச் சிற்பமும் உள்ளது. பிள்ளையார் பட்டியிலும் தேவகோட்டையிலும் மற்றும் சில நகரச் சிவன் கோவில்களிலும் மட்டுமே இத்தகைய கண்ணாடிச் சிற்பம் அமைந்துள்ளது.

தூண் சிற்பங்களிலும் நகரத்தாரின் தனித்தன்மை வெளிப்பட்டுத் தோன்றக் காணலாம். கீழச்சிவல்பட்டி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலில் உள்ள தூண்களில் 720 சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தேவ கோட்டையார் திருப்பணி செய்த திருவையாறு அறம்வளர்த்தநாயகி அம்மன் திருக்கோவில் முன்மண்டபத்தில் ஒவ்வொரு தூணிலும் நாற்புறமும் அழகிய சிற்பங்கள் உள்ளன. இலுப்பைக்குடிக் கோவிலில் ஒரு தூணில் 3 செ.மீ. சதுரத்திற்குள் செதுக்கப்பட்டுள்ள நுட்பமான விநாயகர் சிலை வியப்பிற் குரியதாகும். தூண்களை வைத்தே இது எந்தப் பாணியில் கட்டப்பட்டது என்று கூறலாம். கல்தூண் எட்டுப் பகுதிகளைக் கொண்டது. கால், பத்மபந்தம், கலசம், தாடி, குமுதம், கமலம், பலகை, போதிகை என எட்டுப் பகுதிகளும் பெயர் பெறும். தூணை உத்திரத்துடன் இணைக்கும் பகுதியைப் போதிகை என்பர். இப்போதிகை ஒவ்வொரு மன்னர்காலத்தும் வேறுவேறு மாற்றங்களைப் பெற்றுவந்தது. நகரத்தார்கள் கட்டிய கோவில்களில் போதிகையின் கீழ் ஒரு சிங்கத்தின் சிற்பம் கூடுதலாகக் காணப் படுகின்றது. நகரத்தார் சிங்கக் கொடியினை உடையவர்கள். அந்தச் சிங்கத்தைத் தூண் போதிகைகளின் கீழ் செதுக்கச் செய் திருக்கலாம்.

வைரவர் வழிபாட்டிற்கு நகரத்தார் கொடுக்கும் இன்றியமையாத் தன்மை சிறப்புடையது. கோவிலின் வடகிழக்கு மூலையில், பெரும்பாலும் முன்புற வாயிலின் அருகே வைரவர் சன்னதி அமைந்திருக்கும். நகரத்தார் கோவில்களில் செய்யப்படும் நாளின் முதல் வழிபாடாகிய திருவனந்தலில் வைரவருக்கே முதன்முதல் பூசை நடைபெறும். இரவு அர்த்தஜாமத்தின் போதும் நாளின் இறுதி வழிபாடாக வைரவருக்குத்தான் பூசை நடைபெறும். அப்பொழுது கோவிலின் சாவிகள் அனைத்தையும் வைரவரிடம் ஒப்படைத்து விடுகின்றனர். ஆகவே பிற கோவில்களில் அதிகமாகக் காணப்படாத வைரவர் சிற்பம் நகரத்தார் கோவில்கள் ஒவ்வொன்றிலும் இடம் பெற்றுள்ளது.

நகரத்தார் கட்டிடக் கலை - வீடுகள்

நாட்டுக்கோட்டை நகரத்தார் என்ற பெயருக்கேற்ப, கோட்டைகள் போல வீடுகள் கட்டி வாழ்வது இச்சமூகத்தின் இயல்பு. செட்டிநாட்டு ஊர்களில் நகரத்தார் வீடுகளின் முகப்புக்கள் முதல் வீதியிலிருந்தால் பின்கதவுகள் இரண்டாவது வீதியில் அமையும். இவ்வளவு நீளமாகக் கட்டப்பட்ட வீடுகளின் அகலமும் மிக விரிந்ததாகவே இருக்கும். பொதுவாக 160 அடி நீளமும் 60 அடி அகலமும் கொண்டவையாக வீடுகள் அமைந்துள்ளன.

இவ்வாறு பெரிய வீடுகள் கட்டிவாழத் தொடங்கியது சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் எனலாம். 1860ஐ ஒட்டிய ஆண்டுகளில் செய்கோன், பர்மா, இலங்கை, மலேசியா ஆகிய வெளிநாடுகளுக்கு வணிகம் செய்யச் சென்றனர். இதனால் அவர்களது பொருள்வளம் சிறந்ததும், பர்மா தேக்கு, செய்கோன் பூக்கற்கள், கண்ணாடிப் பொருள்கள் போன்ற கட்டுமானப் பொருள்களை வெளிநாடு களிலிருந்து கொண்டுவர வாய்ப்பு இருந்ததும் இவ்வாறு பெரிய வீடுகள் கட்டுவதற்குக் காரணமாக அமைந்தன.

செட்டிநாட்டில் இவ்வாறு வீடுகள் கட்டிய காலத்தை மூன்று கட்டங்களாகப் பகுக்கலாம். சென்ற நூற்றாண்டின் இறுதியில் வீடுகள்

Koviloor Digital Library

கட்டுவது தொடங்கப்பட்டாலும் பெருமளவில் வீடுகள் கட்டப்பட்ட காலம் 1900 முதல் 1920 வரையிலான ஆண்டுகள். முதல் உலகப் போரை ஒட்டிப் பல நகரத்தார் குடும்பங்களுக்கு வெளிநாட்டுத் தொடர்பு குறைந்ததால் 1920க்குப் பிறகு 1940 வரை வீடுகள் கட்டப்பட்டன என்றாலும் முந்தைய காலகட்டத்தைவிட எண்ணிக்கை குறைவேயாகும். 1940க்குப் பிறகு மிகப்பெரிய அளவில் வீடுகட்டும் போக்கு மாறி சிறிய அளவில் காலத்திற்கேற்ப நவீன முறைகளில் (Bungalow) வீடு கட்டும் பழக்கம் தோன்றியது.

முதல் இரண்டு காலகட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளை நகரத்தார் பாணி வீடுகள் என்று சொல்லலாம். நகரத்தார் பாணி வீடுகளின் அமைப்பு பெரும்பாலும் கீழ்க்கண்டவாறு இருக்கும்.

முகப்பு

வீதியிலிருந்து குறைந்தது 10 அடி உயரத்தில் வீட்டின் தளம் அமையுமாறு வீடுகள் கட்டப்பட்டிருக்கும். எனவே முகப்பு வாயில்கள் வரிசையாக நிறையப் படிகள் கொண்டதாக இருக்கும். முகப்பினுள் நுழைந்ததும் இடையே ஒரு நடைபாதையும் இருபுறமும் திறந்த வெளியும் அமைந்திருக்கும். அவற்றில் ஒரு பக்கத்தில் கிணறு இருக்கும். அடுத்து கீழ்ப்பத்தி இருபுறமும் அமைந்திருக்கும். அதனை ஒட்டி முகப்புத் திண்ணைகள் அல்லது பட்டகசாலைகள் (பட்டாலை) அமைந்திருக்கும். திண்ணைகள் 3 அடி உயரமுடையனவாகவும் பட்டகசாலைகள் ஒன்றரையடி உயரம் உடையனவாயும் இருக்கும். இருபுறத் திண்ணைகளிலும் அறைகள் அமைந்திருக்கும்.

முகப்பிலிருந்து வளவுக்குள் நுழையும் வாயிலில் பெரிய நிலையும் இரட்டை மரக்கதவுகளும் இருக்கும். இந்த நிலை கலையழகு மிக்க மரச் சிற்ப வேலைப்பாடு உடையதாக, நகரத்தார் தனித்தன்மையைக் காட்டும் வகையில் அமைந்திருக்கும். நிலையின் மேற்புறம் அமர்ந்த நிலையில் திருமகளும் இருபுறமும் மாலையேந்திய யானைகளும் யானைகளுக்கு இருபுறமும் வேறுசிற்பங்களும் புடைப்புச் சிற்பங்களாக அமைந்திருப்பது பெருவழக்கு. நிலையில் இருபுறமும் பக்கவாட்டில் எழுதகச் சிற்பங்களாக, குதிரைவீரர்கள், யானைகள், யாளிகள், தேர்கள், பூமாலைகள், பூங்கொடிகள் போன்றவற்றில் எவையேனும் அமைந்திருக்கும்.

வளவு :

நகரத்தார் வீடுகளில் மிகுந்த சிறப்பிடம் பெறும் பகுதி வளவு ஆகும். நடுவில் நல்ல நீள அகலத்தோடு கூடிய திறந்த வெளி முற்றம் இருக்கும். அதனைச் சுற்றியுள்ள பகுதி சுற்றுப்பத்தியாகும். நடுவாசல் தளத்திலிருந்து ஒன்றரை அடி உயரம் உள்ள சுற்றுப் பத்தியின் விளிம்பு (ஓரடி அகலம்) வெள்ளைக் கற்களால் அமைந்திருக்கும். இவ்விளிம்பில் மேற்கூரையைத் தாங்கும் தூண்கள் வரிசையாக அமைந்திருக்கும். சுற்றுப்பத்தியின் நீள்பகுதிகள் இரண்டிலும் வரிசையாக அறைகள் அமைந்திருக்கும். இவற்றை வளவு வீடுகள் என்றே நகரத்தார் குறிப்பிடுவர். இவை ஒற்றை அறைகளாக இருந்தால் ஒற்றை வீடுகள் என்றும் இரட்டை அறைகளாக இருந்தால் இரட்டை வீடுகள் என்றும் அழைக்கப்பெறும். சுற்றுப்பத்தியின் அகலப் பகுதியில் இருபுறமும் நடுவில் நடைபாதை விட்டுப் பட்டகசாலைகள் அமைந்திருக்கும். பட்டகசாலைகளிலும் அறைகள் இருக்கும். சுற்றுப்பத்தியின் நான்கு மூலைகளிலும் மாடிக்குச் செல்லும் படிக்கட்டுக்கள் அமைந்திருக்கும்.

வளவு வீடுகள் அக்குடும்பத்தைச் சேர்ந்த புள்ளிகளுக்குள் பங்குபிரித்துக் கொள்ளப் படுவதால், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பங்காளிகள் அனைவரும் ஒரு வளைவிற்குள் வாழ்ந்தனர் என்ற அடிப்படையில் உருவான வளைவு என்ற சொல்லே பின்னர் வளவு என மருவியது. குடும்பத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளின் போது இந்த வளவு நடுவாசலில்தான் முகூர்த்தக்கால் ஊன்றப்படும். சாந்தி சதாபிஷேகத்தின் பொழுது வாசலில்தான் மணை போடப்படும். தைப் பொங்கலன்று இவ்வாசலில்தான் கோலமிட்டுப் பொங்கலிடுவர். இறப்புச் சடங்குகளின் போது பந்தல் போடுவது, இறந்தவர் உடல் குளிப்பாட்டப் பெறுவது, பச்சை குத்துவது ஆகியவை இவ்வாசலிலேயே நடைபெறும். வளவு வீடுகளில் ஒன்றுதான் அக் குடும்பத்துக்குரிய சாமிவீடாகவும் வீட்டுப் படைப்புக்குரிய இடமாகவும் அமையும். அங்கு தான் படைப்புக்குரிய பேழைகள் கட்டியிருக்கும். திருமணத்தின் பொழுது மண மகளின் தந்தைக்குரிய வளவு வீடே கலியாண வீடாக அமையும். அந்த வீட்டுக்கெதிரில் வளவுச் சுற்றுப் பத்தியில் கலியாணமணை போடுவதும் அரசாணிக்கால் கட்டுவதும் இடம் பெறும். இவை நகரத்தார்பாணி வீட்டில் வளவுக்குரிய முதன்மையைப் புலப்படுத்தும்.

Koviloor Digital Library

கலியாணக் கொட்டகை :

வளவை அடுத்து, குறுக்கு வசத்தில் நீளமாக ஒரு கூடம் அமைந்திருக்கும். நடுவில் தூண்கள் அமைந்திருப்பதும் உண்டு. இது சிறப்பு நிகழ்ச்சிகளின் போது விருந்தளிக்கப் பயன்படுவதால் 'போஜனஹால்' என்று அழைக்கப்பெறும். பெரும்பாலான வீடுகளில் இந்தக் கூடத்தின் விதானம் கலைநயம் நிறைந்த வேலைப்பாடுகள் மிகுந்ததாக இருக்கும். சில வீடுகளில் இத்தகைய கூடங்கள் இரண்டு அமைந்திருக்கும். முகப்புக்கும் வளவுக்கும் இடையே ஒன்று, வளவை அடுத்து ஒன்று. முகப்பை அடுத்திருக்கும் கூடங்கள் கூடுதல் கலைநய வேலைப்பாடு அமைந்ததாக இருக்கும். சில வீடுகளில் இக்கூடத்தில் மேல்மாடங்களும் (Balcony) அமைந்திருக்கும். ஒற்றைக்கூடம் வளவின் வலப்புறம் அல்லது இடப்புறத்தில் நீளவாக்கில் அமைந்திருப்பதும் உண்டு.

இரண்டாம்கட்டு :

கலியாணக் கொட்டகையை அடுத்து வளவு போல நடுவில் ஒரு திறந்தவெளி முற்றமும் சுற்றுப்பத்தியும் உடையதாக இந்த இரண்டாம்கட்டு இருக்கும். வளவு போன்ற அமைப்பில் இரண்டாவதாக இக்கட்டு இருப்பதால் இதற்கு இரண்டாங்கட்டு என்று பெயர். இதன் சுற்றுப்பத்திகளில் ஏதேனும் ஒரு பக்கத்தில் அறைகள் அமைந்திருக்கும்.

அடுப்படி :

இரண்டாங்கட்டை அடுத்து, குறுக்கு வசத்தில் நீளமாக அமைந்திருக்கும். பிள்ளைகளின் திருமணத்திற்குப் பிறகு அவர்களை வேறுவைத்து, அவர்களுக்குத் தனி அடுப்படி அமைத்துக் கொடுப்பது மரபு. அத்தகு தனி அடுப்படிகள் இந்த ஒரே கூடத்தில் வரிசையாக அமைந்திருக்கும். சில வீடுகளில் அடுப்படியும் நடுவாசலும் சுற்றுப்பத்தியும் கொண்ட அமைப்பாக இருப்பதுண்டு. சுற்றுப்பத்திகளில் வரிசையாக அடுப்படிகள் அமைந்திருக்கும். இவ்வாறு அமையும் அடுப்படிகள் மூன்றாம்கட்டு என அழைக்கப்பெறும்.

அடுப்படிக்குப் பின்னால் தோட்டம் அமைந்திருக்கும். முற்காலத்தில் இவை மாடு, குதிரை கட்டும் இடமாகவும் பயன்பட்டன. முகப்பில் ஒரு கிணறு இருப்பதுபோக தோட்டத்திலும் ஒரு கிணறு இருக்கும். சிலவீடுகளில் முகப்பு வாசற்படிகளின் இருபுறமும் ஒட்டுத் திண்ணைகள் எனப்படும் சிறிய திண்ணைகள் இருக்கும். இத்திண்ணைகளில் தூண்கள் இருப்பதும் உண்டு. வீட்டுக்கு வெளியே வீதியில் மிகச் சில வீடுகளில் தகரக் கொட்டகைகள் அமைத்திருப்பதும் உண்டு.

வீட்டின் முன்புறத்தோற்றம் பொலிவாக அமைய இருபுறமும் சிங்கங்கள் அல்லது யானைகள், கலசங்கள், தேர்போன்ற அமைப்புக்கள், பறவைகள் சுதையால் அமைக்கப் பட்டிருக்கும்.

முகப்பு வாசற்படிகள், நடையில் ஏறும்படிகள், ஒருகட்டுக்கும் அடுத்த கட்டுக்கும் இடையில் அமையும் படிகள், வளவு வீடுகளின் படிகள் ஆகியவை அனைத்தும் வெள்ளைக் கற்களால் அமைந்திருக்கும். முகப்பு, வளவு ஆகியவற்றின் நடையும் சுற்றுப் பத்தியின் விளிம்புகளும் வெள்ளைக் கற்களால் அமைந்திருக்கும்.

திண்ணைகள் அவற்றின் பக்கச் சுவர்கள் ஆகியவை இத்தாலியப் பளிங்குக் கற்களால் அழகுபடுத்தப் பெற்றிருக்கும். வளவுச் சுற்றுப்பத்திகள் ஆத்தங்குடிக் கற்களால் அமைக்கப் பெற்றிருக்கும். வளவுச்சுற்றுப் பத்தியின் பக்கச் சுவர்கள், பட்டகசாலைச் சுவர்கள், பட்டக சாலை, சுற்றுப் பத்தித் தளங்கள் ஆகியவை மிகவும் வழுவழுப்பான பூச்சுவேலை உடையதாக இருக்கும். இதற்குப் பயன்படுத்திய கலவையை 'முத்துவெள்ளை' என்றும் அதில் சுண்ணாம்பு, கருப்பட்டி, முட்டை வெள்ளைக்கரு ஆகியவை கலந்திருந்ததாகவும் கூறுவர்.

தூண்கள் கருங்கல், வெள்ளைக்கல், மரம் ஆகியவற்றால் அமைந்திருக்கும். கருங்கல் தூண்கள் பளபளப்புடையனவாகவும் மற்ற தூண்கள் வேலைப்பாடுடையனவாகவும் அமைந்திருக்கும். வளவுச் சுற்றுப்பத்தித் தூண்களில் வாழைப்பூ அமைப்பு இருக்கும்.

நிலை, கதவு, ஜன்னல், ஜன்னல் கதவுகள் உத்தரங்கள் இவை அனைத்தும் பர்மா தேக்கு அல்லது தோதகத்தி மரங்களாலேயே அமைந்திருக்கும். வளவு வீடுகளின் நிலைகளும் சிலவீடுகளில் கலையழகு மிக்க வேலைப்பாடுகள் உடையதாக இருக்கும். வளவு வீடுகளின் கதவுகள் அகலமான ஒற்றைக் கதவுகளாகவே அமைந்திருக்கும். இரட்டை வீடுகளில் உள்வீட்டுக்குத் தனிநிலையும் கதவும் உண்டு.

மேற்கூரை அமைப்பைப் பொறுத்தவரை நாட்டு ஓடே பயன்படுத்தப்பெற்றது. நீண்ட கைகளின்மீது மரப்பலகைகள் அடித்து அவற்றின் மீது நாட்டு ஓடுகள் பரப்பப் பெற்றிருக்கும். வளவின் மேற்கூரை சாய்வு (Slope) அமைப்பு

Koviloor Digital Library

உடையதாக இருக்கும். நான்கு மூலைகளிலும் துத்தநாகத் தகரங்கள் அமைத்து மழைத்தண்ணீர் முற்றத்தில் வந்துவிழ வகை செய்திருப்பர். அத்தகரங்களுக்குக் கூடல்வாய்த் தகரம் என்று பெயர். நடுவாசல்களில் விழும் மழைத்தண்ணீர் தரைக்குக்கீழ் அமைக்கப்பட்ட கழிவு நீர்க் குழாய்கள் வழியாக முன்புறமோ பின்புறமோ வெளியேற்றப்படும். முன்புறத்தில் உள்ள தூம்புகள் கலைநயத்தோடு அமைந்திருக்கும்.


முகப்புத் திண்ணைகள், வளவுப்பட்டக சாலைகள், வளவு வீடுகள் ஆகியவற்றின் மேற்கூரைகள் மாடியினுடைய தளங்களாக அமையும். எனவே இக்கூரைகள் இன்றைய கான்கிரீட் கூரைகளைப் போல அமைக்கப் பெற்றிருக்கும். உத்தரங்கள், மரக்கைகள் ஆகியவற்றின் மீது சிவு செங்கற்களை ஒட்டுக்கற்களாக ஒட்டி இக்கூரையை அமைப்பர். குழாய் ஓடுகளும் பயன்படுத்தப்படுவது உண்டு.

வளவின் இரட்டை வீடுகளுக்கு மேலே அமையும் மாடித்தளம் நீண்ட பத்தி ஒன்றும் அறைகளும் உடையதாக அமையும். ஒற்றை வீடுகளின் மேல்மாடி நீள்கூடமாக மட்டும் அமையும். கலியாணக் கொட்டகைகளுக்கு மேலும் முகப்புத் திண்ணை, வளவுப் பட்டகசாலைகளுக்கு மேலும் உள்ள மாடித்தளங்கள் நீண்ட அகன்ற கூடங்களாக இருக்கும். சிலவீடுகளில் முகப்புத் திண்ணைகளுக்கு மேல் அமைந்துள்ள கூடம் வெளிப்புறச் சுவர் இல்லாமல் உப்பரிகை அமைப்பில் அமைந்திருக்கும்.

நகரத்தார்கள் இவ்வளவு பெரியவீடுகள் கட்டியதற்குக் காரணங்கள் பல. கூட்டுக்குடும்ப அமைப்பில் ஒவ்வொரு புள்ளிக்கும் தனித்தனியே வாழிடங்களும் சரக்கறைகளும் அடுப்படிகளும் தேவை. அவற்றை நிறைவு செய்யும் வண்ணம் இவ்வீடுகள் அமைந்துள்ளன. இரண்டாவதாக, பருவநிலை மாறுதல்கள் அனைத்திற்கும் ஏற்றமுறையில் வேறுவேறு பகுதிகளைக் கொண்டதாக இவ்வீடுகள் வடிவமைக்கப் பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் கூதிர்ப்பள்ளி, வேனிற்பள்ளி எனத் தனித்தனிப் பள்ளியறைகள் குறிப்பிடப்பெறுகின்றன. இந்தப் பெரியவீடுகளில் வளவுவீடு கூதிர்ப்பள்ளியாகவும் சுற்றுப்பத்தி களும் பட்டகசாலைகளும் வேனிற்பள்ளியாகவும் பயன்படுகின்றன. நகரத்தார் சமூகத்தில் அடிக்கடி குடும்பச்சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும். ஆகவே நிறையப்பேர் கலந்துகொள்ளும் வகையிலும் பெரிய விருந்துகள் நடத்தும் வகையிலும் தனித்தனிக் கட்டுகளைக் கொண்ட பெரிய வீடுகளைக் கட்டினர். நகரத்தார் இனத்தில் வீடுகள் அவர்களது சமூகக் கௌரவச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன.

நகரத்தார் குரல்

மதுரையிலிருந்து வெளிவரும், நகரத்தார் சமூக மாத இதழ். 1982 பிப்பிரவரியில் தொடங்கப் பெற்ற இந்த இதழின் ஆசிரியராகத் தொடக்கத்திலிருந்து இராங்கியத்தைச் சேர்ந்த வ.நா. சிதம்பரம் செட்டியார் பணியாற்றி வருகிறார். வெளியீட்டாளராகப் பனையப் பட்டியைச் சேர்ந்த சுப.அ. நடராசன் செட்டியார் இருந்தார். அவருக்குப் பின் அவரது மகன் நடராஜ் அண்ணாமலை வெளியிடுபவராக இருந்து வருகிறார். இதழ் தொடங்கும் போது கௌரவ ஆசிரியர் பொறுப்பினை ஏற்ற கண்டரமாணிக்கம் லெ. அழகுசுந்தரம் செட்டியார் தம் வாழ்நாளின் இறுதிவரை அப்பொறுப்பில் இருந்து வந்தார். தொடக்கத்திலிருந்தே ஒக்கூரைச் சேர்ந்த லெ. சுந்தரம் துணை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். எனினும் இதழில் துணை ஆசிரியர் என அவர் பெயர் 1988 இலிருந்து தான் அச்சாகி வருகிறது.


உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக. இலக்கிய மாத இதழ்)

நகரத்தார் குரல் (முகப்புப் பக்கம்)

தொடக்கத்தில் தனி இதழ் விலை ரூ. 1.25; ஆண்டுச் சந்தா ரூ 15 என இருந்தது. பின்னர் 1992 இலிருந்து தனி இதழ் விலை குறிக்கப்பெறாமல், ஆண்டுச் சந்தா ரூ 30, டெபாசிட் சந்தா ரூ 300 என ஆக்கப்பெற்றது. இப்போது ஆண்டுச் சந்தா ரூ 45 ஆகும்.

Koviloor Digital Library

''கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை''

என்ற வரிகளை முகப்புப் பக்கத்தில் குறிக்கோள் வரிகளாகத் தாங்கி வெளிவரும் இவ்விதழ் நகரத்தார் சமூகம் தொடர்பான இன்றியமையாத செய்திகள் அனைத்தின் பதிவு ஆவணமாகச் சிறந்த பணியாற்றி வருகிறது. டெம்மி 1 × 8 அளவில் மாதம் தோறும் 40 பக்க அளவில் வெளியாகும் இந்த இதழ் எதிர்காலத்தில் நகரத்தார் இயல் ஆய்வாளருக்குப் பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நகரத்தார் குலதெய்வங்கள்

கோவில் தழுவிய குடிகளாக வாழும் நகரத்தார்கள் ஒன்பது நகரக் கோவில்களில் தங்கள் கோவில், தங்கள் ஊரில் உள்ள நகரக் கோவில் ஆகியவற்றோடு ஒரு குலதெய்வக் கோவிலிலும் சென்று வழிபடுவதை மரபாகக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு நகரத்தார் குடும்பத்தாரும் தலைமுறை தலைமுறையாக ஒரு குறிப்பிட்ட கோவிலைக் குலதெய்வக் கோவிலாகக் கொண்டு அதனைச் சிறப்பு நிலையில் வழிபடுவர்.

குலதெய்வக் கோவில் வழிபாடு என்பது கீழ்க்கண்ட செயல்களுள் ஏதேனும் ஒன்றிரண்டை அல்லது சிலவற்றைத் தவறாமல் அக்குடும்பத்தினர் செய்து வருவதாகும்.

1. பிறக்கும் குழந்தைக்குக் குலதெய்வக் கோவிலில் பெயரிடுதல்

2. குழந்தைக்குக் காதுகுத்துதல்

3. முதல்முடி இறக்குதல்

4. முதன்முதலில் தொட்டில் கட்டுதல்

5. திருமணத்துக்குக் குலதெய்வக் கோவில் மாலையும் விபூதி பிரசாதமும் வர ஏற்பாடு செய்தல்

6. திருமணமான தம்பதிகளை முதலில் குலதெய்வக் கோவிலுக்கு அழைத்துச் செல்லுதல்

7. வீட்டுப்படைப்பு அல்லது பங்காளிகளின் பொதுப்படைப்பிற்குக் குலதெய்வக் கோவிலில் இருந்து தீர்த்தம் எடுத்து வருதல்.

8. காவடி எடுப்பவர்கள் அல்லது பாதயாத்திரை செல்பவர்கள் அதற்கு முன் குலதெய்வக் கோவிலில் சென்று வழிபட்டு வருதல்.

நகரத்தார்களின் குலதெய்வக் கோவில்கள் அனைத்தும் செட்டிநாட்டு எல்லைக்குள் அமைந்துள்ளன. குலதெய்வக் கோவிலை வழிபடும் நகரத்தார்கள் அதனை ஒட்டிய பகுதியிலேயே தொடக்கத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் பின்னர் பல்வேறு ஊர்களுக்கும் குடிபெயர்ந்திருக்க வேண்டும் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

அரியக்குடிச் சீனிவாசப் பெருமாளையும் குன்றக்குடி ஆறுமுகப் பெருமானையும் சில நகரத்தார் குடும்பத்தினர் குலதெய்வமாக வழிபடுகின்றனர் என்பதைத் தவிர ஏனைய குலதெய்வங்கள் அனைத்தும் சிறுதெய்வங் களாகவே காணப்படுகின்றன. பெரும்பாலும் அந்தணரல்லாதவர்களே இக்கோவில் பூசாரிகளாக அமைந்துள்ளனர்.

காவல் தெய்வங்களான ஐயனார், கருப்பர் ஆகியோரோடு அம்மனையும் நகரத்தார்கள் குலதெய்வங்களாகக் கொண்டுள்ளனர். அவை வேறுவேறு ஊர்களில் வேறுவேறு பெயர்களில் அமைந்துள்ளன. பெரும்பாலான கோவில்களில் குலதெய்வம் மூலவராக விளங்கச் சில கோவில்களில் மட்டும் குலதெய்வம் பரிவார தெய்வங்களில் ஒன்றாக விளங்குகிறது. சில குலதெய்வக்கோவில்களில் அதை வணங்குவோர் தங்கள் குடியிற் பிறந்த முன்னோரையும் பரிவார தெய்வமாக்கி வழிபடுகின்றனர். பெரும்பாலும் பெண்களே இவ்வாறு வழிபடப் பெறுகின்றனர். அத்தகைய தெய்வங்கள் தொடர்பான கதைகளிலும் ஒரு நாட்டுப்புறவியல் பொதுத்தன்மை காணப்படுகிறது. மாமியார் வீட்டிலிருந்து கோபத்தோடு புறப்பட்ட பெண் அல்லது பிள்ளைப் பேற்றுக்காகத் தாய்வீடு சென்றுகொண்டிருந்த பெண் வழியில் எதிர்பாராமல் உயிர்நீத்துக் குலதெய்வத்தோடு அணைந்து விட்டதாகக் கதை சொல்லப்படுகிறது.

அம்மன், ஐயனார், கருப்பர் என்ற தனித் தலைப்புக்களில் நகரத்தார் குலதெய்வங்களின் பட்டியல்கள் கீழே தரப்பட்டுள்ளன. எஸ்ஸாரெம் பழநியப்பன் தொகுத்த 'நகரத்தார்களின் குலதெய்வங்கள்' என்ற நூலின் அடிப்படை யிலேயே இத்தகவல்கள் அமைந்துள்ளன.

Koviloor Digital Library

அம்மன்

எண்	குலதெய்வம்	ஊர்	வழி
1.	அக்கினியாத்தாள் (நாச்சாத்தாள் - நகரத்தார் குடும்பப் பெண்)	புல்வாய் நாயகி அம்மன் கோவில், பாகனேரி	
2.	அங்காள பரமேஸ்வரி அம்மன்	இளையாத்தங்குடி	
3.	அங்காள பரமேஸ்வரி அம்மன்	தேக்காட்டூர்	நமனசமுத்திரம் - திருமயம் சாலையில் கிளைச்சாலை
4.	அங்காளபரமேஸ்வரி அம்மன்	அங்காளபரமேஸ்வரி குருநாதன் கோவில் நாட்டரசன்கோட்டை	
5.	அடைக்காலம் காத்த அம்மன்	வாணியங்குடி	நாட்டரசன்கோட்டை - நடராசபுரம் சாலையில் கிளைச்சாலை
6.	அடைக்கலம் காத்த அம்மன்	விரையாச்சிலை	
7.	அழகியநாச்சி அம்மன்	பொன்னமராவதி	
8.	அன்னபூரணி அம்மன்	வெற்றியூர்	
9.	உய்யவந்தாள்	சாக்கோட்டை	புதுவயல் அருகில்
10.	கண்ணுடைய நாயகி அம்மன்	நாட்டரசன்கோட்டை	
11.	காஞ்சிரங்குடிக்காளி	கருமலை சாஸ்தா ஐயனார் கோவில், கோனாபட்டு	
12.	காடேரி அம்பாள்	பெத்தபெருமாள் கோவில் கோவில்பட்டி	புதுவயல் - அறந்தாங்கிச் சாலையில் கிளைச்சாலை
13.	கிணற்றடிக் காளியம்மன்	கண்டவராயன்பட்டி	
14.	கோட்டநாச்சியார்	கத்தாளம்பட்டு	திருக்கோட்டியூர் - சிவகங்கைச் சாலையில் கிளைச்சாலை.
15.	தேனாட்சியம்மன்	சிறாவயல் புதூர்	சிறாவயல் அருகில்
16.	பரநாச்சியம்மன்	கருங்குளம்	
17.	பெரியநாயகி அம்மன்	அம்மாபட்டி	திருப்புத்தூர் - கீழச்சிவல் பட்டிச் சாலையில் கிளைச்சாலை
18.	பொக்கிஷக் கோட்டைக்காளி	கீழக்கோட்டை	கல்லல் - மதகுபட்டிச் சாலையில் கிளைச்சாலை
19.	மதுக்காரை நாச்சியம்மன்	செவலூர்	கொப்பனாபட்டி - குழிபிறைச் சாலையில் கிளைச்சாலை
20.	மாகாளி	உஞ்சனை	மாத்தூர் - சண்முகநாத புரம் சாலை
21.	முத்துமாரியம்மன்	கீரணிப்பட்டி	ஆவினிப்பட்டி - குருவிக் கொண்டான்பட்டிச் சாலையில் கிளைச்சாலை
22.	வடக்குவாசல் செல்லாயி அம்மன்	எழுவங்கோட்டை	தேவகோட்டை அருகில்
23.	வயல்நாச்சியம்மன்	வேலங்குடி	

Koviloor Digital Library

ஐயனார்

எண்	குலதெய்வம்	ஊர்	வழி
1.	அஞ்சாத பெருமாள் ஐயனார் (அழகாத்தாள் - நகரத்தார் பெண்)	சாலி	உ. சிறுவயல் - குன்றக்குடிச் சாலை
2.	அழகிய மெய்ய ஐயனார்	வீழநேரி	மதகுபட்டி - சிவகங்கைச் சாலையில் கிளைச்சாலை
3.	ஆதினமிளகி ஐயனார்	கீழக்கோட்டை	கல்லல் - மதகுபட்டிச் சாலையில் கிளைச்சாலை.
4.	ஆதினமிளகி ஐயனார்	நரியங்குடி	கருங்குளம் அருகில்
5.	ஆதினமிளகி ஐயனார் (செங்கிடாய்க் கருப்பர்)	மருதங்குடி	பிள்ளையார்பட்டி - சிறாவயல் சாலை
6.	ஆதினமிளகி ஐயனார் (அன்னக் கொடியாள் - நகரத்தார் பெண்)	மேலகுடி	காரைக்குடி - கல்லல் சாலையில் கிளைச்சாலை
7.	ஆரடி சாத்தையனார் (பதினெட்டாம்படிக் கருப்பர்)	கொறட்டி	பாதரக்குடி அருகில்
8.	ஆலத்தி ஐயனார்	பட்டமங்கலம்	
9.	உசிலுடை ஐயனார்	கூத்தாடி முத்துப் பெரிய நாயகி கோவில் தாழையூர்	தேவகோட்டை - சிறுவாச்சிச் சாலை
10.	ஓமக்காட்டு ஐயனார் (சோணையன்; ஆச்சியம்மன்- நகரத்தார் குலப்பெண்)	நெற்குப்பை	
11.	கக்கூருடைய ஐயனார்	காளையார்மங்கலம்	
12.	கடவுள் ஐயனார்	வளையன்வயல்	சாக்கோட்டை அருகில்
13.	கண்ணப்ப ஐயனார்	மணமேல்பட்டி	திருப்புத்தூர் அருகில்
14.	கரியமலை சாத்தையனார்	பட்டமங்கலம்	
15.	கருங்கமுடைய ஐயனார்	புளியங்குண்டுபட்டி	அரண்மனை சிறுவயல் அருகில்
16.	கருமுகிலுடைய ஐயனார்	காடநேரி (காடணி)	மதகுபட்டி - பாகனேரிச் சாலை
17.	கருவி ஐயனார்	கருவியபட்டி	வடகுடி அருகில்
18.	கரைமேல் அழகர் ஐயனார்	கானாடுகாத்தான்	
19.	கரைமேல் அழகர் ஐயனார்	தேக்காட்டூர்	நமனசமுத்திரம் - திருமயம் சாலையில் கிளைச்சாலை
20.	கலியுக மெய்ய ஐயனார்	புதுக்கோட்டை (சூரக்குளம்)	சிவகங்கைத் தொடர்வண்டி நிலையம் அருகில்
21.	கல்லுக்காடு ஐயனார் (காயாத்தாள் - நகரத்தார் குலப்பெண்)	கல்லுவயல்	திருமயம் - கீழச்சிவல்பட்டி சாலை
22.	களத்தீருடைய ஐயனார்	களத்திவயல்	அரண்மனை சிறுவயல் அருகில்

Koviloor Digital Library

23.	கள்ளணன் பிள்ளைப் பெருமாள் ஐயனார் (பூமணப் பிச்சாத்தாள் - நகரத்தார் குலப்பெண்)	கோனாபட்டு	
24.	காடப்ப ஐயனார்	ஆலத்திப்பட்டி	பலவான்குடி - கானாடு காத்தான் சாலையில் கிளைச்சாலை
25.	குருந்துடைய ஐயனார்	ஆதனூர்	நேமத்தான்பட்டி - கோனாபட்டுச் சாலையில் கிளைச்சாலை
26.	சந்திவீரப்பர்	ஆலத்திப்பட்டி	பலவான்குடி - கானாடு காத்தான் சாலையில் கிளைச்சாலை
27.	செவிட்டு ஐயனார்	அலவாக்கோட்டை	
28.	சேத்துமேல் செல்ல ஐயனார் (செட்டிக் கருப்பர்)	அரிமழம்	
29.	சேவாத்தாள் ஐயனார் (சேவாத்தாள் - நகரத்தார் குலப்பெண்)	காளையார்மங்கலம்	
30.	சேவுகப் பெருமாள் ஐயனார்	கத்தப்பட்டு	சொக்கநாதபுரம் - மதகு பட்டிச் சாலையில் கிளைச் சாலை
31.	சேவுகப்பெருமாள் ஐயனார்	கருவேல் குறிச்சி	திருக்கோட்டியூர் அருகில்
32.	சேவுகப்பெருமாள் ஐயனார்	சிங்கம்புணரி	திருப்புத்தூர் - திண்டுக்கல் சாலை
33.	சேவுகப்பெருமாள் ஐயனார்	செம்பனூர்	
34.	சோலையாண்டவர்	கொத்தரி	பள்ளத்தூர் அருகில்
35.	தருமசாத்தையனார் (சின்னியம்மத்தாள் - நகரத்தார் குலப்பெண்)	வெழுவூர்	பலவான்குடி - ஆத்தங்குடிச் சாலையில் கிளைச்சாலை
36.	தலைக்காவுடை ஐயனார்	செங்கீரை	அரிமழம் - இராயவரம் சாலை
37.	திட்டாணி ஐயனார்	நெய்வாசல்	கீழச்சிவல்பட்டி - குன்றக்குடிச் சாலையில் கிளைச்சாலை
38.	திருப்பேரையூர் நாகலிங்க தர்ம சாஸ்தா	சாத்தாங்கோவில் கண்ணன் கார்குடி	கடியாபட்டி - கொத்த மங்கலம் சாலை
39.	நெல்லியாண்டவர் ஐயனார்	வடகுடி	காரைக்குடி - பள்ளத்தூர்ச் சாலையில் கிளைச்சாலை
40.	பகச்சால மூர்த்தி ஐயனார்	இலங்குடி	மானகிரி - திருப்புத்தூர்ச் சாலை
41.	பஞ்சாட்சரமுடைய ஐயனார்	சூரக்குளம்	சிவகங்கைத் தொடர்வண்டி நிலையம் அருகில்

Koviloor Digital Library

42.	பணிச்சாருடைய ஐயனார்	செண்பகம் பேட்டை	கண்டவராயன்பட்டி - இரணியூர்ச் சாலை
43.	பனக்குடி சாத்தையனார் (நல்லிப் பாட்டி - நகரத்தார் குலப்பெண்)	தட்டட்டி	குன்றக்குடி அருகில்
44.	பனந்தமுடை ஐயனார்	செம்பொன்மாரி	தேவகோட்டை - சண்முக நாதபுரம் சாலை
45.	பனையுடை ஐயனார்	முனைசந்தை	நமனசமுத்திரம் - திருமயம் சாலையில் கிளைச்சாலை
46.	பாலைவிளத்த ஐயனார்	பள்ளத்தூர்	
47.	புலிக்குட்டி ஐயனார்	சாக்கவயல்	சாக்கோட்டை - ஏம்பல் சாலையில் கிளைச்சாலை
48.	பூசாரி உடைய ஐயனார்	அம்மாபட்டி	திருப்புத்தூர் - கீழச்சிவல் பட்டிச் சாலையில் கிளைச்சாலை
49.	பொய்சொல்லா மெய்ய ஐயனார்	காரைக்குடி	
50.	பொய் சொல்லா மெய்ய ஐயனார்	கொல்லங்குடி	காளையார் கோவில் - சிவகங்கைச் சாலை.
51.	பொய்சொல்லா மெய்ய ஐயனார்	மூலங்குடி	கொப்பனாபட்டி அருகில்
52.	மக்கமடை ஐயனார்	வைரவன்பட்டி	
53.	மங்களக் காட்டு ஐயனார் (அடக்கியாத்தாள் - நகரத்தார் குலப்பெண்)	ஏனாதி	மேலைச்சிவபுரி - பொன் னமராவதிச் சாலை
54.	மருதுடைய ஐயனார்	காடநேரி (காடணி)	மதகுபட்டி - பாகனேரிச் சாலை
55.	மருதூருடைய ஐயனார்	வெற்றியூர்	
56.	முத்து வெள்ளைச் சாத்தையனார்	காரிபட்டி	நேமத்தான்பட்டி - திருமயம் சாலையில் கிளைச்சாலை
57.	மேலக்காட்டு ஐயனார்	ரெண்டாவயல்	விரையாச்சிலை - பனையப்பட்டிச் சாலையில் கிளைச்சாலை
58.	வல்லடிகாரர் சுவாமி ஐயனார்	நைத்தாம்பட்டி	சிவகங்கை - மேலூர்ச் சாலையில் கிளைச்சாலை
59.	வள்ளிலிங்க ஐயனார் (அடைக்கம்மை ஆச்சி - நகரத்தார் குலப்பெண்)	துவார்	நெற்குப்பை - பொன் னமராவதிச் சாலையில் கிளைச்சாலை
60.	வெட்டுடைய ஐயனார்	வெட்டுடைய காளிகோவில் கொல்லங்குடி	காளையார்கோவில் - சிவகங்கைச் சாலை.
61.	வேங்கை ஐயனார்	சின்ன வேங்கா வயல்	சாக்கோட்டை அருகில்
62.	வையகளத்து ஐயனார் (உடையம்மை ஆச்சி - நகரத்தார் குலப்பெண்)	சுண்டைக்காடு	கண்டவராயன்பட்டி - செவ்வூர்ச் சாலையில் கிளைச்சாலை

Koviloor Digital Library

கருப்பர்

எண்	குலதெய்வம்	ஊர்	வழி
1.	உறங்காப்புளிக் கருப்பணசாமி (ஏகாத்தாள், அடக்கியாத்தாள், அலமேலு, தெய்வானை - நகரத்தார் பெண்கள்)	அங்காள பரமேஸ்வரி உறங்காப்புளிக் கருப்பண சுவாமி கோவில் இராங்கியம்	
2.	கட்டுச் சோற்றுக் கருப்பர்	ஆலத்திப்பட்டி	பலவான்குடி - கானாடு காத்தான் சாலையில் கிளைச்சாலை
3.	காட்டுக் கருப்பர்	எண்ணெயாட்டுப் பாறை	கீழச்சிவல்பட்டி - இளையாத்தங்குடிச் சாலையில் கிளைச்சாலை
4.	கொத்தங் கருப்பர்	கோட்டையூர்	
5.	கோட்டைக் கருப்பர்	திருப்புத்தூர்	
6.	சந்தனக் கருப்பையா	காளையார் மங்கலம்	
7.	சாக்கோட்டைக் கருப்பர்	சாக்கோட்டை	புதுவயல் அருகில்
8.	செட்டிக் கருப்பர்	அம்மாபட்டி	திருப்புத்தூர் - கீழச்சிவல் பட்டிச் சாலையில் கிளைச்சாலை
9.	திருமேனிக் கருப்பர்	சிறாவயல் புதூர்	சிறாவயல் அருகில்
10.	தேரடிக் கருப்பர்	கண்டதேவி	தேவகோட்டை - சண்முக நாதபுரம் சாலை
11.	நைனாத்தான் கருப்பையா	வடவன்பட்டி	மேலூர் - ஏரியூர்ச் சாலை
12.	பதினெட்டாம்படிக் கருப்பர்	அழகர்கோவில்	
13.	பதினெட்டாம்படிக் கருப்பர்	ஐயாபட்டி	திருப்புத்தூர் - மதுரைச் சாலையில் முறையூர்ச் சாலையில் கிளைச்சாலை
14.	பெரிய கருப்பணசாமி	காமாட்சியம்மன் கோவில் நாட்டரசன்கோட்டை	
15.	மஞ்சணத்திக் கருப்பர்	கொறட்டி	குன்றக்குடி அருகில்
16.	மந்திக் கருப்பர்	கோட்டூர் நயினார் கோவில்	தேவகோட்டை - கல்லல் சாலை
17.	மாசங் கருப்பர்	கொப்பனாபட்டி	
18.	முப்பலிக் கருப்பர்	வைரவன்பட்டி	
19.	முன்னோடிக் கருப்பர்	செங்கீரை	அரிமழம் - இராயவரம் சாலை
20.	வெற்றியூர்க் கருப்பர்	வெற்றியூர்	
21.	வேலங்குடிக் கருப்பர்	வேலங்குடி	கண்டவராயன்பட்டி - செவ்வூர்ச் சாலையில் கிளைச்சாலை
22.	வைகைக் கருப்பர்	கண்டனூர்	

Koviloor Digital Library

நகரத்தார் சங்கம்

தொழில் காரணமாக அல்லது வேலை காரணமாக நகரத்தார்கள் செட்டிநாட்டிற்கு வெளியே வாழ நேர்ந்தபோது, ஒரே ஊரில் வாழ்ந்த நகரத்தார் சமூகத்தினர் அனைவரும் சேர்ந்து, தங்கள் நலன்களைப் பாதுகாக்கவும், செட்டிநாட்டோடு தொடர்பு கொள்ளவும் ஓர் அமைப்பினை உருவாக்கிக் கொண்டனர்.

இவ்வாறான அமைப்புக்கள் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்கப்பெற்ற போது தனவைசியர் சங்கம், தனவைசிய வாலிபர் சங்கம் என்ற பெயர்களைப் பெற்றன. இந்நூற்றாண்டின் இடைப்பகுதியில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம் எனப் பெயர் பெறத் தொடங்கி, அதன் பின்னர் நகரத்தார் சங்கம், நகரத்தார் இளைஞர் சங்கம் என்ற பெயர்களைத் தாங்கிச் செயல் படுகின்றன.

இவை நகரத்தார் சமூகத்தின் வர்த்தகசபை யாகவும், அச்சமூகத்திற்குரிய ஆலயம் போன்றவற்றை நிருவகிக்கும் அறநிலையாகவும், அவர்களது பண்பாட்டு அமைப்பாகவும் செயல்படுகின்றன. குறிப்பாக, அண்மைக் காலத்தில் இச்சங்கங்கள் இளைஞர்கட்குக் கல்வி நிதி உதவியும், பெண்கள் திருமணத்திற்கு நிதி உதவியும், 'பிள்ளையார் நோன்பு' போன்ற நகரத்தார் விழாக்களை அச் சமூகத்தினர் ஓரிடத்தில் கொண்டாட உதவியும், பல ஊர்களில், தங்கும் வாய்ப்புடைய நகர விடுதிகளை உருவாக்கி நிருவகித்தும் திறம்படப் பணியாற்றி வருகின்றன.

உதகமண்டலம் நகரத்தார் சங்கம் 'குன்றின் குரல்' என்ற பெயரிலும், வடஅமெரிக்க நகரத்தார் சங்கம் 'நாணல்' என்ற பெயரிலும், உறுப்பினர்கட்குரிய தனிச்சுற்று இதழ்களை நடத்தி வருகின்றன.

இவ்வாறான நகரத்தார் சங்கங்கள் உருவாக்கப்பட்டு, இயங்கிக் கொண்டிருக்கும் ஊர்களின் பட்டியல் (ஊர்களின் அகர வரிசைப்படி) தரப்படுகிறது. வெளிநாடுகளில், வெளிமாநிலங்களில், தமிழ் நாட்டில், செட்டி நாட்டில் என நான்கு பகுதிகளாகப் பட்டியல் அமைகிறது.

வெளிநாடுகளில் சங்கங்கள் :

1. பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம், இரங்கூன்.

2. நாட்டுக்கோட்டை நகரத்தார் அறப்பணிக் கழகம், சிங்கப்பூர்.

3. ஐக்கிய அரபுநாடுகள் நகரத்தார் கூட்டமைப்பு, துபாய்.

4. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், தைப்பிங்கு.

5. வடஅமெரிக்க நகரத்தார் சங்கம், நியூயார்க்.

6. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், பினாங்கு.

7. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், மூவார்.

8. ஹாங்காங் நகரத்தார் சங்கம், ஹாங்காங்.

வெளிமாநிலங்களில் சங்கங்கள் :

1. நகரத்தார் சங்கம், கல்கத்தா.

2. ,, ,, செகந்திராபாத்து.

3. ,, ,, திருவனந்தபுரம்.

4. நகரத்தார் சமூகப் பண்பாட்டுச் சங்கம், பம்பாய்.

5. நகரத்தார் சங்கம், பாண்டிச்சேரி.

6. புதுவை மாநில நகரத்தார் சங்கம், புதுச்சேரி.

7. நகரத்தார் சங்கம், புதுதில்லி.

8. கர்நாடக நகரத்தார் சங்கம், பெங்களூர்.

9. கர்நாடக் நகரத்தார் நற்பணிப் பேரவை, பெங்களூர்.

10. நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம், போர்ட்பிளேயர்.

தமிழ்நாட்டில் சங்கங்கள்:

1. தென் ஆர்க்காடு நகரத்தார் சங்கம், அண்ணாமலை நகர்.

2. நகரத்தார் மன்றம், அம்பத்தூர்.

3. நகரத்தார் சங்கம், ஆவடி.

4. நகரத்தார் சங்கம், இராணிப்பேட்டை.

5. முகவை நகரத்தார் சங்கம், இராமநாதபுரம்.

6. நகரத்தார் இளைஞர் சங்கம், ஈரோடு.

7. நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம், ஈரோடு.

8. ,, ,, ,, உடுமலைப்பேட்டை

9. நகரத்தார்கள் சங்கம், உதகமண்டலம்.

10. நகரத்தார் சமூக நலச் சங்கம், ஒசூர்.

11. நகரத்தார் சங்கம், கடலூர்.

12. கம்பம் வட்டார நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம், கம்பம்.

13. நகரத்தார் சங்கம், கரூர்.

14. நகரத்தார் இளைஞர் சங்கம், கும்பகோணம்.

15. நகரத்தார் சங்கம், கும்பகோணம்.

16. ,, ,, குரோம்பேட்டை.

Koviloor Digital Library

17. நகரத்தார் இளைஞர் சங்கம், கோயம்புத்தூர்.

18. நகரத்தார் சங்கம், கோயம்புத்தூர்.

19. " " சமயநல்லூர், பரவை.

20. நகரத்தார் இளைஞர் சங்கம், சிதம்பரம்.

21. நகரத்தார் சங்கம், சிதம்பரம்.

22. " " சிவகங்கை.

23. " " சிவகாசி.

24. சென்னை நகர் வலையபட்டி நகரத்தார் சங்கம், சென்னை.

25. நகரத்தார் இளைஞர் வளர்ச்சிக்குழு, சென்னை.

26. நகரத்தார் ஐக்கிய சங்கம், சென்னை.

27. நகரத்தார் கலை பண்பாட்டுக் கழகம், சென்னை.

28. நகரத்தார் இளைஞர் சங்கம், சேலம்.

29. நகரத்தார் சங்கம், சேலம்.

30. " " தஞ்சாவூர்.

31. நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம், திண்டுக்கல்.

32. திருச்சிராப்பள்ளி கருணாநிதிநகர் ஸ்ரீ கற்பக விநாயகர் நகரத்தார்கள் சங்கம், திருச்சி.

33. நகரத்தார் இளைஞர் அணி, திருச்சி.

34. நகரத்தார் சங்கம், திருச்சி.

35. " " திருநெல்வேலி.

36. நகரத்தார் இளைஞர் சங்கம், திருப்பூர்.

37. நகரத்தார் சங்கம், திருப்பூர்.

38. நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம், திருவண்ணாமலை.

39. நகரத்தார் சங்கம், திருவாரூர்.

40. நகரத்தார் மன்றம், திருவான்மியூர்.

41. நகரத்தார் சங்கம், திருவொற்றியூர்.

42. " " தூத்துக்குடி.

43. " " நாகப்பட்டினம்.

44. நகரத்தார் இளைஞர் சங்கம், நெய்வேலி.

45. நகரத்தார் பண்பாட்டுக் கழகம், நெய்வேலி.

46. நகரத்தார் சங்கம், பட்டுக்கோட்டை.

47. நகரத்தார் இளைஞர் சங்கம், பழநி.

48. நகரத்தார் சங்கம், பழநி.

49. நகரத்தார் இளைஞர் சங்கம், பாகலூர்.

50. நகரத்தார் சங்கம், புதுக்கோட்டை.

51. " " பொள்ளாச்சி.

52. " " மணப்பாறை.

53. நகரத்தார் இளைஞர் சங்கம், மதுரை.

54. நகரத்தார் சங்கம், மதுரை.

55. நகரத்தார் பக்திநெறி மன்றம், மதுரை.

56. நகரத்தார் சங்கம், மதுரை வடக்கு.

57. நகரத்தார் சங்கம், மயிலாடுதுறை.

58. நகரத்தார் அறப்பணிக்கழகம், மன்னார்குடி.

59. நகரத்தார் இளைஞர் சங்கம், மன்னார்குடி.

60. நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம், மன்னார்குடி.

61. நகரத்தார் நற்பணி மன்றம், வடபழனி.

62. நகரத்தார் சங்கம், வளசரவாக்கம்.

63. " " விருத்தாசலம்

64. " " விழுப்புரம்.

65. " " வேலூர்.

66. " " ஸ்ரீ வில்லிபுத்தூர்.

செட்டிநாட்டில் சங்கங்கள் :

1. நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றம், அளகாபுரி (பி); கீழச்சிவல்பட்டி.

2. நகரத்தார் இளைஞர் சங்கம், ஆத்தங்குடி.

3. நகரத்தார் இளைஞர் குழு, கடியாபட்டி.

4. நகரத்தார் நற்பணி மன்றம், கண்டவராயன் பட்டி.

5. நகரத்தார் இளைஞர் சங்கம், கண்டனூர்.

6. நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றம், காரைக்குடி.

7. நகரத்தார் இளைஞர் சங்கம், சொக்கநாதபுரம்.

8. நகரத்தார் இளைஞர் சங்கம், தேவகோட்டை.

9. கழனிவர்சல் நகரத்தார் இளைஞர் சங்கம், தேனிபட்டி.

10. நகரத்தார் சங்கம், நற்சாந்துபட்டி.

11. நகரத்தார் இளைஞர் சங்கம், நெற்குப்பை.

12. நகரத்தார் இளைஞர் சங்கம், பள்ளத்தூர்.

13. நகரத்தார் சங்கம், பனையப்பட்டி.

14. நகரத்தார் இளைஞர் சங்கம், புதுவயல்.

15. " " மானகிரி.

16. " " முத்துப்பட்டணம் (ஆ).

Koviloor Digital Library

நகரத்தார் நிதிஉதவி அறக்கட்டளைகள்

நகரத்தார் சமூகத்தில் பொருளாதாரத்தால் நலிந்த குடும்பங்களின் பிள்ளைகள் கல்விக்கும் பெண்கள் திருமணத்திற்கும் நிதி உதவி செய்யும் அமைப்புக்கள் பல செட்டிநாட்டில் உள்ளன. தனிப்பட்ட முறையில் செல்வர்கள் தத்தம் குடும்ப அறக்கட்டளைகளிலிருந்து தங்கள் ஊர் நகரத்தார்களுக்கு உதவி வருகின்றனர். செட்டிநாட்டு அனைத்து ஊர் நகரத்தார் களிடமிருந்தும் விண்ணப்பங்கள் பெற்றுக் கல்விக்கும் பெண்கள் திருமணத்திற்கும் உதவிவரும் நகரத்தார் அறக்கட்டளைகளின் பட்டியல் கீழே உள்ளது.

1. இராமசாமி விசாலாட்சி அறநிலை, விசாலம் சிட்பண்ட்ஸ், பள்ளத்தூர்.

2. ஏ.எம்.எம் சாரிட்டிஸ் அறநிலை, சென்னை.

3. சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார் கள் அறப்பணிக் கழகம். 451 செக்காலைச் சாலை, காரைக்குடி.

4. தைப்பிங் நாட்டுக்கோட்டைச் செட்டியார் கள் அறப்பணிக் கழகம். ஐந்தாம் எண் சாலை, வலையபட்டி, 622 411.

5. நகரத்தார் ஐக்கிய சங்கம், 68, பவளக்காரத் தெரு, சென்னை 600 001.

6. பத்துபாகட் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக்கழகம், மெய்யப்பன் அம்பலம் தெரு, காரைக்குடி.

7. பிள்ளையார்பட்டிக் கற்பக விநாயகர் கோவில் நகரத்தார் அறநிலை. பிள்ளையார்பட்டி, 630 207.

8. பினாங்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார் கள் அறப்பணிக் கழகம், 450. செக்காலைச் சாலை, காரைக்குடி.

9. பேரா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், 450 செக்காலைச் சாலை, காரைக்குடி.

10. மூவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார் அறப்பணிக் கழகம், 15, மார்த்தாண்டபுரம் முதல்வீதி, புதுக்கோட்டை, 622 001.

11. வைரவன் கோவில் நகரத்தார் சங்கம், வைரவன்பட்டி, 630 215.

12. ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் அறப்பணிக்கழகம், சிவன்கோவில் மேற்கு வடம்போக்கித் தெரு, காரைக்குடி.

நகரத்தார் பெயர்கள்

நகரத்தார் சமூகத்தில் பிள்ளைகளுக்குப் பெயரிடுவதில் ஒரு மரபு பின்பற்றப்படுகிறது. பிள்ளையின் ஐயா அல்லது அப்பத்தாள் பெயர், ஆயாள்பெயர் எனக் குடும்ப முன்னோர் பெயரை இடுவர். அல்லது குலதெய்வத்தின் பெயரை இடுவர். இதுவே பழ மரபு. அண்மைக் காலமாகப் பிற நாகரிகத் தாக்கங்களின் விளைவாக, தங்கள் நோக்குக்கும் போக்குக்கும் ஏற்பப் பல புதிய பெயர்களைச் சில பெற்றோர் தங்கள் பிள்ளைகட்கு வழங்கி வருகின்றனர். ஆனால் அவர்களும்கூடத் தங்கள் குடும்ப மரபுப்படியான ஒரு பெயரைப் பிள்ளைக்கு இட்டுவிட்டு, கூப்பிடுவதற்கு மட்டுமே தங்கள் விருப்பப்படியான பெயரைப் பயன்படுத்து கின்றனர்.

இப்படிப் புதிதாகப் பயன்படுத்தப் பெறும் பெயர்களை நீக்கிவிட்டு, நகரத்தார் சமூகத்தினர் மரபாகப் பயன்படுத்தும் ஆண் மற்றும் பெண் பெயர்களைத் தொகுத்துப் பட்டியலிட்டால் இரு செய்திகள் சிறப்பாகத் தெரிய வருகின்றன. ஒன்று, நகரத்தார் பயன்படுத்தும் பெயர்கள் அனைத்தும் இறைத் தொடர்புடையவை; மற்றொன்று, அவற்றுள் மிகப் பெரும் பாலானவை தனித் தமிழில், நல்ல தமிழில் அமைந்த பெயர்கள்.

பட்டியலைக் கீழே காணலாம்.

ஆண் பெயர்கள் :

1. அங்கப்பன்
2. அடைக்கலவன்
3. அடைக்கப்பன்
4. அண்ணாமலை
5. அரங்கநாதன் (ரெங்கநாதன்)
6. அருணாசலம்
7. அழகப்பன்
8. அழகு சுந்தரம்
9. ஆண்டப்பன்
10. ஆண்டான்
11. ஆண்டியப்பன்
12. ஆதப்பன்
13. ஆதினமிளகியான்
14. ஆவிச்சி
15. ஆவுடையப்பன்
16. ஆவுடையான்
17. ஆறுமுகம்
18. இரத்தினம் (ரெத்தினம்)

Koviloor Digital Library

19. இராகவன் (ராகவன்)
20. இராக்கப்பன் (ராக்கப்பன்)
21. இராசகோபாலன் (ராஜகோபாலன்)
22. இராசாமணி (ராஜாமணி)
23. இராதாகிருட்டிணன் (ராதாகிருஷ்ணன்)
24. இராமகிருட்டிணன் (ராமகிருஷ்ணன்)
25. இராமசாமி (ராமசாமி)
26. இராமநாதன் (ராமநாதன்)
27. இராமன் (ராமன்)
28. இராமையா (ராமையா)
29. இராயப்பன் (ராயப்பன்)
30. இலக்குமணன் (லெக்ஷ்மணன்)
31. இளையபெருமாள்
32. உடையப்பன்
33. உத்தமன்
34. உலகப்பன்
35. ஏகப்பன்
36. ஏடகநாதன், ஏடகம்
37. ஐயப்பன்
38. கணபதி
39. கணேசன்
40. கண்ணப்பன்
41. கதிரேசன்
42. கருப்பாத்தான், கருப்பையா
43. காசி
44. காசிநாதன்
45. காசிவிசுவநாதன் (காசிவிஸ்வநாதன்)
46. காடப்பன்
47. காந்தி
48. காளத்திநாதன்
49. காளையப்பன்
50. கிருட்டிணப்பன் (கிருஷ்ணப்பன்)
51. கிருட்டிணன் (கிருஷ்ணன்)
52. குஞ்சான்
53. குட்டையன்
54. குப்பான்
55. குமரப்பன்
56. குழந்தையன்
57. கூராண்டான்
58. கைலாசம்
59. கோபாலன்
60. கோவிந்தன்
61. சக்தி (சத்தி)
62. சடையப்பன்
63. சண்முகம் (ஷண்முகம்)
64. சத்தியமூர்த்தி (சத்தியநாதன்)
65. சந்திரசேகரன்
66. சந்திரமௌலி
67. சபாபதி
68. சபாரெத்தினம்
69. சபேசன்
70. சம்பந்தம்
71. சாத்தப்பன்
72. சாத்தன்
73. சாமிநாதன்
74. சிங்காரம்
75. சிதம்பரம்
76. சிவசுப்பிரமணியன்
77. சிவஞானம்
78. சிவநேசன்
79. சிவப்பிரகாசம்
80. சிவராமன்
81. சிவலிங்கம்
82. சிவனடியான்
83. சிற்சபேசன்
84. சின்னக்கருப்பன்
85. சின்னான்
86. சின்னையா
87. சீனிவாசன் (ஸ்ரீநிவாசன்)
88. சுந்தரமூர்த்தி
89. சுந்தரம்
90. சுந்தரேசன்
91. சுப்பிரமணியன்
92. சுப்பையா
93. செகன்னாதன் (ஜெகன்னாதன்)
94. செட்டியப்பன்
95. செந்தில்நாதன்
96. செம்புலிங்கம் (ஜெம்புலிங்கம்)
97. செல்லப்பன்
98. செல்லம் (செல்வம்)
99. சேக்கப்பன்
100. சேது

Koviloor Digital Library

101. சேதுநாராயணன்
102. சேதுராமன்
103. சேவுகன்
104. சொக்கநாதன்
105. சொக்கலிங்கம்
106. சொக்கன்
107. சொக்கேசன்
108. சொக்கையா
109. சொர்ணநாதன் (ஸ்வர்ணநாதன்)
110. சொர்ணமூர்த்தி (ஸ்வர்ணமூர்த்தி)
111. சோமசுந்தரம்
112. சோமநாதன்
113. சோமு
114. சோமையா
115. சோலை
116. சோலையப்பன்
117. சோலையன்
118. ஞானசம்பந்தன்
119. தண்ணீர்மலை
120. தண்ணீர்மலையான்
121. திண்ணப்பன்
122. தியாகராசன் (தியாகராஜன்)
123. திருஞானசம்பந்தம்
124. திருஞானம்
125. திருநாவுக்கரசு
126. திருப்பதி
127. தீர்த்தப்பன்
128. தெய்வராயன் (தெய்வராஜன், தேவராயன், தேவராஜன்)
129. தேனப்பன்
130. நடராசன் (நடராஜன்)
131. நடேசன்
132. நல்லழகன்
133. நல்லான்
134. நாகப்பன்
135. நாச்சியப்பன்
136. நாராயணன்
137. பஞ்சநதன் (பஞ்சநாதன்)
138. பழநியப்பன்
139. பனையப்பன்
140. பிச்சப்பன்
141. பிச்சைக்குட்டி
142. பிரகதீசுவரன் (பிரஹதீஸ்வரன்)
143. பெத்தபெருமாள்
144. பெத்தாச்சி
145. பெரிச்சியப்பன்
146. பெரிய கருப்பன்
147. பெரியண்ணன் (பெரியணன்)
148. பெருமாள்
149. பொற்கொடியான்
150. மகாதேவன்
151. மகாலிங்கம்
152. மணி
153. மலையாண்டி
154. மாணிக்கம்
155. மாணிக்கவாசகம்
156. மாதவன்
157. மாயாண்டி
158. மீனாட்சி சுந்தரம் (மீனாக்ஷி சுந்தரம்)
159. முத்தப்பன்
160. முத்தழகப்பன்
161. முத்து
162. முத்துக்கணேசன்
163. முத்துக்கருப்பன்
164. முத்துக்கிருட்டிணன் (முத்துக்கிருஷ்ணன்)
165. முத்துநாச்சியப்பன்
166. முத்துநாராயணன்
167. முத்துப்பழநியப்பன்
168. முத்துமாணிக்கம்
169. முத்துராமன்
170. முத்துவீரப்பன்
171. முத்தையா
172. முருகப்பன்
173. முருகன்
174. மூக்கன்
175. மூக்கையா
176. மெய்யப்பன்
177. வடிவேலு
178. வடுகநாதன்
179. வள்ளியப்பன்
180. விசுவநாதன் (விஸ்வநாதன்)
181. வினைதீர்த்தான்
182. வீரப்பன்
183. வெங்கடாசலம் (வேங்கடாசலம்)

Koviloor Digital Library

184. வெள்ளையப்பன்
185. வெள்ளையன்
186. வேலப்பன்
187. வேலன்
188. வேலாயுதம்
189. வைத்தியநாதன்
190. வைரவன்

பெண் பெயர்கள் :

1. அகிலா
2. அகிலாண்டேசுவரி (அகிலாண்டேஸ்வரி)
3. அங்கயற்கண்ணி
4. அடைக்கம்மை
5. அரங்கநாயகி (ரெங்கநாயகி)
6. அலமேலு (அலர்மேலு)
7. அழகம்மை
8. அன்னபூரணி
9. அன்னம்
10. ஆண்டாத்தாள், ஆண்டாள்
11. ஆதம்மை
12. இந்திரா
13. இராக்காயி (ராக்காயி)
14. இராசாமணி (ராஜாமணி)
15. இராமாயி (ராமாயி)
16. இலட்சுமி (லெக்ஷ்மி)
17. இன்பவல்லி
18. உடையம்மை
19. உண்ணாமலை
20. உமா
21. உமாமகேசுவரி (உமாமகேஸ்வரி)
22. உமையாள்
23. உருக்குமணி (ருக்மணி)
24. உலகம்மை
25. உலகநாயகி (லோகநாயகி)
26. ஏகம்மை
27. ஒப்பிலாள்
28. கண்ணபுரம்
29. கண்ணம்மை
30. கண்ணாத்தாள்
31. கத்தூரி (கஸ்தூரி)
32. கமலா
33. கமலி
34. கருப்பாயி
35. கல்யாணி
36. கற்பகம்
37. கற்பகவல்லி
38. கனகம்
39. கனகவல்லி
40. காந்தி
41. காந்திமதி
42. காவேரி
43. காளியம்மை
44. குப்பாயி
45. குப்பி
46. கோகிலாம்பாள்
47. கோதை
48. கோமதி
49. கௌசல்யா
50. சகுந்தலா
51. சரசுவதி (சரஸ்வதி)
52. சரோசா (சரோஜா)
53. சாத்தம்மை
54. சாரதா
55. சானகி (ஜானகி)
56. சிகப்பி
57. சிட்டாள்
58. சிந்தாமணி
59. சிவகாமி
60. சீதாலட்சுமி (சீதாலெக்ஷ்மி)
61. சீதை
62. சுலோசனா
63. சூடிக்கொடுத்தாள்
64. செல்லம்மை
65. சேதுக்கரசி
66. சேவாள்
67. சொர்ணம் (ஸ்வர்ணம்)
68. சொர்ணலட்சுமி (ஸ்வர்ணலெக்ஷ்மி)
69. சொர்ணவல்லி (ஸ்வர்ணவல்லி)
70. சோகி
71. சோலை
72. சோலைச்சி
73. சௌந்தரநாயகி
74. சௌந்தரம்
75. சௌந்தரவல்லி
76. ஞானம்

Koviloor Digital Library

77. ஞானாம்பாள்
78. தமயந்தி
79. தருமாம்பாள்
80. தனலெட்சுமி (தனலெக்ஷ்மி)
81. திருநெல்லை
82. தில்லை
83. தெய்வானை
84. தேனம்மை
85. தையல்நாயகி
86. நல்லம்மை
87. நாகம்மை
88. நாச்சம்மை
89. நாச்சாள்
90. நீலா
91. பஞ்சவர்ணம்
92. பஞ்சு
93. பாகம்பிரியாள் (பாதம்பரியாள், பாதம்பெரியாள்)
94. பாப்பா
95. பார்வதி
96. பாலாம்பாள்
97. பிச்சம்மை
98. பெத்தாள்
99. பெரிச்சி
100. பெரியநாயகி
101. பெரியாள்
102. பொற்கொடியாள்
103. பொன்னம்மாள்
104. பொன்னழகி
105. பொன்னழகு
106. பொன்னி
107. மங்கை
108. மங்கையர்க்கரசி
109. மணி
110. மணிமேகலை
111. மாசிலாமணி
112. மாணிக்கம்
113. மாணிக்கவல்லி
114. மீனாட்சி (மீனாக்ஷி)
115. மீனாம்பாள்
116. மீனாள்
117. முத்தாத்தாள்
118. முத்தாயி
119. முத்தி
120. முத்து
121. முத்துக்கருப்பி
122. மெய்யம்மை
123. மேனகா
124. வசந்தாள்
125. வடிவாம்பாள்
126. வடிவு
127. வடிவுக்கரசி
128. வள்ளி
129. வள்ளியம்மை
130. விசாலாட்சி (விசாலாக்ஷி)
131. வினைதீர்த்தாள்

மேலே உள்ள பட்டியல்களை நோக்கினால், ஆண்பெயர்களில் 15 விழுக்காடும், பெண் பெயர்களில் 20 விழுக்காடும் மட்டுமே வடமொழிக் கலப்புடைய பெயர்கள் என்பதை அறியலாம். அவையும் இறைத்தொடர்பு காரணமாகவே வழக்கிற்குவந்தவை. (கிருஷ்ணன், விஸ்வநாதன், ஜானகி, உமாமகேஸ்வரி போன்றவை) மேலும் இப்பெயர்கள் தங்கள் இறைப்பற்றால் நகரத்தார்களால் தங்கள் பிள்ளைகட்கு இடப்பெற்றன என்றாலும், அப்பெயர்களைக் கூப்பிடும் பொழுது பெரும்பாலும், வடவொலியை நீக்கிக் கூப்பிடுவதே நகரத்தாரின் மரபாக இருந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நகரத்தார் சமூக மரபுப் பெயர்களுள் முருகன், மற்றும் சைவத் தொடர்புடைய பெயர்கள் மிகுதி. மேலும் பெயரின் பின்னொட்டாக 'அப்பன்' என இணைத்து வழங்கும் இயல்பு இச்சமூகத்தின் தனித் தன்மையாகும். அடைக்கப்பன், ஆண்டியப்பன், இராயப்பன், உடையப்பன், ஏகப்பன், காளையப்பன், குமரப்பன், சடையப்பன், சாத்தப்பன், செட்டியப்பன், சேக்கப்பன், சோலையப்பன், திண்ணப்பன், தேனப்பன், நாகப்பன், பழநியப்பன், பிச்சப்பன், பெரிச்சியப்பன், முருகப்பன், மெய்யப்பன், வள்ளியப்பன், வீரப்பன், வெள்ளையப்பன், வேலப்பன் போன்றவை இதனை உணர்த்தும்.

நகரத்தார் சமூகத்தின் மரபுப் பெயர்கள் அவர்தம் இறையன்பையும், தமிழ்ப்பற்றையும் உலகுக்குப் பறைசாற்றுவன.

Koviloor Digital Library

நகரத்தார் பேச்சுவழக்கு

உலகில் பெரும்பாலான மொழிகளில் எழுத்து வழக்கு, பேச்சுவழக்கு என இரு வழக்குகள் அமைந்திருக்கும் என்பது மொழிநூல் உண்மை. அவற்றுள் எழுத்து வழக்கு பொதுவான வழக்காக அமையும். பேச்சுவழக்கு வட்டாரத்துக்கு வட்டாரம் சமூகத்துக்குச் சமூகம் வேறுபடும். அந்த அடிப்படையில் செட்டிநாட்டுப் பகுதியில் குறிப்பாக நகரத்தாரால் பேசப்படும் பேச்சுத் தமிழ் தனித்தன்மைகளை உடையது. நகரத்தார் பேசும் தமிழைக் கொண்டே அவரை நகரத்தார் என எளிதில் பிறர் அறிவர்.

நகரத்தார் பேச்சு வழக்கில் வடசொற்களும், வடசொல் கலப்பும் ஒலிக்கலப்பும் மிகமிகக் குறைவாக இருக்கும். செட்டிநாட்டுப் பேச்சு வழக்கின் சிறப்பு இயல்பு இது. நகரத்தார் தமிழ் நல்ல தமிழ் என்றும் செட்டிநாட்டுத் தமிழ் செந்தமிழ் என்றும் மொழி இயலார் ஆராய்ந்து நிறுவியுள்ளனர். நெல்லைத் தமிழ், பாண்டிய நாட்டுத்தமிழ் எப்படித் தனித்து இனங்காண முடிகிறதோ அதுபோல செட்டிநாட்டுத் தமிழும் தன்னை இனங்காட்டிக் கொள்ளும். பழந்தமிழ்ச் சொற்கள் நகரத்தார் நாவில் பழகு தமிழ்ச் சொற்களாகவே விளங்கும். நகரத்தார் ஆண்பாற் பெண்பாற் பெயர்களும் நூற்றுக்கு நூறு நல்ல தமிழ்ப் பெயர்களாகவே அமையும். செந்தமிழ் சிவணிய நிலம் செட்டிநாடு. அவர்கள் பேசும் தமிழ் இயற்றமிழ், இலக்கியத் தமிழ்.

நகரத்தார் தம் பேச்சுவழக்கில் தனித்தமிழ்ச் சொற்களையே மிக அதிகமாகப் பயன்படுத்து கின்றனர். அவர்களது உறவுமுறைப் பெயர்கள் (த.க), உணவு வகைகள் (த.க), குடும்பச்சிறப்பு நிகழ்ச்சிகள் (த.க), அணிகலன்கள் (த.க) ஆகியவற்றின் பெயர்கள் பெரும்பாலும் தனித்தமிழ்ச் சொற்களாகவே அமைந்துள்ளமை இதற்குத் தக்க சான்றாகும்.

நல்ல இலக்கியச் சொற்கள் இவர்களது பேச்சு வழக்கில் இயல்பாகப் பயன்படுத்தப்படுவது மற்றொரு சிறப்பாகும். ஊருணி, உறங்குதல், ஏக்கறுதல் போன்ற திருக்குறள் சொற்கள் நகரத்தாரால் அன்றாடம் பயன்படுத்தப் படுகின்றன. பூமணம், வாழ்வரசி, காவணம் போன்ற இன்னும் பல இலக்கியச் சொற்கள் இப்பகுதியில் இன்றும் வழங்கி வருகின்றன.

கலைச் சொற்கள்

கலைச் சொல்லாக்க முறையில் ஒவ்வொரு துறையிலும் தனித்தனிப் பொருளைக் குறிக்கத் தனித்தனிச் சொற்களைப் பயன்படுத்தும் பழக்கம் நகரத்தார் பேச்சுத் தமிழில் நீண்ட காலமாகக் காணப்படும் சிறப்பு நிலையாகும். லேவாதேவி தொடர்பான நகரத்தார் கலைச்சொற்கள் வருமாறு :

கொண்டுவிக்கப் போதல் – லேவாதேவித் தொழிலுக்காகச் செல்லுதல்

தொலைக்குச் செல்லுதல் – வெளிநாடு செல்லுதல்

பெட்டியடி – லேவாதேவிக் கடை இருக்கும் இடம்

அடுத்தாள் – கடையில் எழுத்தர் பணி

கைபழகுதல் – தொழில் கற்றுக் கொள்ளுதல்

ஒரு கணக்கு – மூன்று ஆண்டுகள்

அடத்தி – கடைக்குச் சார்பாளர்

ஈரெட்டு – ஐயமாகச் செய்யப்படும் வணிகம்.

ஐந்தொகை – வரவு செலவு இருப்புக் கணக்கு. (Balance Sheet)

தன்னொத்துப் போதல் – இலாப நட்டம் இல்லாத வணிக நிலை.

வீட்டுப் பொருள்கள் குறித்த கலைச் சொற்கள் :

குறிச்சி – சாய்வு நாற்காலி

ஒலுகு – சாய்ந்து கொள்ளும் பெரிய தலையணை

திண்டு – நீளமான தலையணை

கொட்டான் – ஓலையில் செய்யப்பட்ட சிறியபெட்டி

வக்கூடு – கைப்பிடியோடு கூடிய ஓலைப்பெட்டி

பழப்பெட்டி – நடுத்தர அளவு ஓலைப்பெட்டி

கடகாம் – பெரிய அளவிலான ஓலைப் பெட்டி

வட்டி – உணவு உண்ணப் பயன்படும் தட்டு

கிண்ணி – கறிவகைகள் வைத்துக் கொள்ளும் சிறிய தட்டு

கும்பா – உணவுண்ணப் பயன்படும் கலம்.

போகிணி – தண்ணீர் முகக்கும் பாத்திரம் (தம்ளர்)

Koviloor Digital Library

சிலாத்தி – பொருள்களைச் சலிக்கப் பயன்படும் வலைத்தட்டு

சுளகு – புடைக்கும் ஓலைத்தட்டு (முறம்)

பணிக்கம் – எச்சில் கிண்ணம்

படுதா – திரை

மரவை – மரத்தட்டு

தடுக்கு – உட்காரப் பயன்படும் ஓலை அல்லது துணி இருக்கை

பாதாள கரண்டி – கிணற்றில் விழுந்த பொருள்களைத் தேடி எடுக்கப் பயன்படுத்தும் இரும்புக் கருவி.

குந்தாணி – உரல்.

பிறகலைச் சொற்கள் :

நடையன் – காலணி

தடுமன் – சளி, நீர்க்கோவை

நூலாம்படை – தூசி

புள்ளி – திருமணமான ஆண்மகன் (குடும்பம்)

உருவாஞ்சுருக்கு – எளிதில் அவிழ்க்கத் தக்க முடிச்சு

படுமுடிச்சு – எளிதில் அவிழ்க்க இயலாத முடிச்சு

தன்னைப் பேணி – சுயநலவாதி

இவ்வாறு கலைச் சொற்களைப் பயன் படுத்தும் பொழுது பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குவதிலும் நகரத்தார் சிறந்த மரபைப் பின்பற்றுகின்றனர். இயன்றால் தனித்தமிழ்ச் சொல்லை உருவாக்குவதும் இல்லையேல் தமிழ்ஒலி முறையில் அச் சொல்லையே அமைப்பதும் அவர்கள் பின்பற்றும் முறையாகும்.

பிரஸ் பட்டன் – அமுக்குப் பொத்தான்.

உல்லன் – கொச்சி நாய்க் கயிறு

டர்க்கி டவல் – தேங்காய்ப்பூத் துண்டு

கவுண்டர் பாயில் – அடிக்கட்டை

டிறாப்ட் – உண்டியல்

பஸ் ஸ்டாண்ட் – காரடி

ஹியரிங் – ஈரங்கி
கெட்டில் – கேத்தல் } அதே சொல்லைத் தமிழ் ஒலியாக்கிப் பயன்படுத்துதல்

சோப்பு – சவுக்காரம்.

மரபு

நகரத்தார் பேச்சுத் தமிழில் பல மரபுகள் காலங் காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்குப் போடப்படுவதைக் கொட்டகை என்றும் இழவு வீட்டில் போடப்படுவதை மட்டும் பந்தல் என்றும் குறிப்பிடுவர். அவ்வாறே மங்கல நிகழ்ச்சிக்குச் சென்று திரும்பும் போது 'போயிட்டு வரேன்' என்று சொல்லி விடைபெறும் நகரத்தார் இழவு வீட்டில் 'போறேன்' என்றுமட்டுமே சொல்லி விடைபெறுவர்.

சாமிவிளக்கு, குத்துவிளக்கு முதலியவற்றை அணைக்கச் சொல்லும் பொழுது 'விளக்கை மலையேற்று' என்றோ 'விளக்கை நல்லா வை' என்றோ சொல்வது மரபு. வெளியில் புறப்படுபவர்களிடம் 'எங்கே போறீங்க' என்று கேட்பது அபசகுனமாகையால் 'ரொம்பத் தூரமா?' என்று கேட்பார்கள்.

'சும்மா', 'குத்தமில்லை' போன்ற மரபுச் சொற்கள் இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப வேறுவேறு பொருள்களைத் தருகின்றன,

பிறர்மனம் புண்படாமல் பேசுகிற இயல்புடைய நகரத்தார்கள் அழகில்லாத பெண்ணை 'உள்ளது போல இருக்கிறாள்' என்றும் கறுப்பு நிறப் பெண்ணை 'மாநிறம் உடையவள்' என்றும் சொல்லுவார்கள்.

தனிச் சொல் வழக்கு

நகரத்தார் பேச்சுவழக்கில் மட்டும் இடம்பெறுகிற தனிச் சொற்களில் குறிப்பிடத்தக்க சில சொற்களும் அவற்றின் பொருளும் வருமாறு:

அழுத்தம் – சிக்கனம்

எதவா – கவனம், நிலைத் தாழ்வு

ஏவம் கேட்டல் – பிறர்க்காகப் பரிந்து பேசுதல்

ஒப்பினை – மன ஈடுபாடின்றிப் பேசுதல்

ஒள்ளத்தி – மிகச்சிறிய அளவில்

ஓவியம் – மிகச் சிறந்த பாராட்டு

கணிசம் – மிகுதியான அளவு

கருக்கடை – மிகுந்த கவனம்

குட்டி – வீட்டுவேலை செய்யும் சிறுமி

கூதரை – கவனமில்லாமல் செயல்படுபவர்

கூறு கெட்டவன் – அறிவில்லாதவன்

கைஆவல் – அவசரத் தேவைக்காக வைத்திருத்தல் (Reserve)

கொண்டி – போக்கிரி, பொல்லாதவன்

தாக்கல் – செய்தி

திருத்தம் – அழகாக

Koviloor Digital Library

மரப்பாச்சி போல சிட்டாட்டம் உருவிவிட்டது போல கொப்புப் போல	அழகிய பெண்

பெரும்படி – அழகற்ற

தொக்கடி – மிகக்குறைந்த விலையில் வாங்குதல்

தோது – செவ்வி

படுத்தடி – உண்மைக்கு மாறாக வல்லடி வழக்குப் பேசுதல்.

பணடி – தூய்மையற்றவன்

பாண்டல் – தூய்மையற்றவள்

பிருகபிடித்தல் – கெஞ்சுதல்

பெரியதனம் பேசுதல் – கடுமையாகப் பேசுதல்

மட்டுப்படுதல் – விளங்குதல்

மருக்கோளி – பைத்தியம், முட்டாள்

மாம்பூவாசனை – அனுசரித்துப் போதல்

மாறல் – வாயில்

மூதலித்தல் – மெய்ப்பித்தல்

மெனக் கெடுதல் – பிறிதொரு அலுவலைக் கவனியாது ஒன்றில் ஈடுபட்டுப் பார்த்தல்

மேலைக்கு – அடுத்த ஆண்டு

வறளி – பிடிவாதக்காரர்

வெள்ளனா – அதிகாலையில்

வெரசா – விரைவாக

பழங்காலந் தொட்டு இன்றுவரை மரபுவழியாக நல்லதமிழைப் பேசிவருவது நகரத்தாரின் இயல்பு. சொற்களைச் சிதைக்காமலும் ஒலிகளை மாற்றாமலும் பிறமொழிச் சொற்களைத் தமிழ் ஒலியாக்கியும் திருத்தமாகத் தமிழ்மொழியைப் பேசிவருவது நகரத்தாருக்கேயுரிய தனிச்சிறப்பாகும்.

நகரத்தார் மக்கள் தொகைக் கணக்கு

இயல்பாகவே கணக்குப் பார்ப்பதிலும் கணக்கைப் பேணி வைத்துக் கொள்வதிலும் அக்கறையுள்ள நகரத்தார்கள் தங்கள் மக்கள் தொகைக்கும் முறையான கணக்கைப் பேணிவைத்திருக்கின்ற மரபுடையவர்கள்.

நகரத்தார் சமூகத்தில் திருமணம் ஆன இளைஞர் புள்ளி என்று குறிப்பிடப்படுகிறார் புள்ளி என்ற கணக்கில் கணவன், மனைவி, அவர்களது திருமணம் ஆகாத குழந்தைகள் ஆகியோர் அடங்குவர். ஒவ்வொரு பிள்ளையும் திருமணம் ஆனபிறகு தனிப்புள்ளி ஆகிவிடுவர். மனைவியை இழந்த கணவனும் புள்ளி என்றே கணக்கிடப் பெறுவார். கணவனை இழந்த மனைவியைப் பொறுத்தவரை அவருக்குத் திருமணம் ஆகாத குழந்தை இருந்தால் அவரும் புள்ளி என்றே கணக்கிடப் பெறுவார்; திருமணம் ஆகாத பிள்ளைகள் இல்லையென்றால் அவர் அரைப்புள்ளி என்றே கணக்கிடப் பெறுவார். எனவே புள்ளிகளின் எண்ணிக்கையை வைத்து அதை மூன்று அல்லது நான்கால் பெருக்கி நகரத்தார் மக்கள் தொகையைக் கணக்கிட்டு விடலாம். இந்த அடிப்படையில் ஓர் இளைஞர் புள்ளியாக ஆகும்பொழுது அவர் பெயர் புள்ளி விவரக் கணக்குப் பதிவேட்டில் மூன்று இடங்களில் பதிவு பெறுகின்றது.

1. ஒன்பது நகரக் கோவிலில் அவர் சார்ந்துள்ள கோவிலில் உள்ள பதிவேடு.

2. செட்டிநாட்டு 75 ஊர்களில் அவரது ஊர்ச் சிவன்கோவிலில் (பொதுக்கோவிலில்) உள்ள பதிவேடு.

3. அவரது பங்காளிகள் வீட்டுச் சிறப்பு நிகழ்ச்சிகளில் எழுதப்படும் பணத்திருப்புப் பதிவேடு.

ஒன்பது நகரக்கோவில் பதிவேடு

ஒவ்வொரு திருமணத்தின் பொழுதும் நகரத்தார் குடும்பங்களில் அவர்கள் சார்ந்துள்ள நகரக் கோவிலில் பாக்கு வைத்துத் திருமணத்தைப் பதிவு செய்வர். இவ்வாறு பதிவு செய்யப்படும் திருமணம் ஆண்பிள்ளையின் திருமணமாக இருந்தால் அவர் அக்கோவிலின் புதிய புள்ளியாகப் பதிவு செய்யப்படுகிறார். பதிவு செய்யப்பட்ட புள்ளிகள் ஒவ்வொருவரிடமும் ஆண்டுதோறும் புள்ளி வரி வசூலிக்கும் பழக்கம் முன்னர் இருந்தது. கோவில் பணியாளர் ஒருவர் செட்டிநாட்டு ஊர்கள் அனைத்திற்கும் சென்று புள்ளி வரி வசூலித்து ஏற்புச் சீட்டும் கோவில் பிரசாதமாகப் பொரியும் கொடுத்துவிட்டுச் செல்வார். அவ்வாறு செல்லும் பொழுது ஒரு குடும்பத்தில் கணவன் – மனைவி இருவரும் இறந்திருந்தால் அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவருக்குரிய புள்ளிவரியைச் செலுத்தாமல் விவரத்தைச் சொல்லுவர். கோவில் பதிவேட்டில் அவர் பெயர் புள்ளிவிவரக் கணக்கிலிருந்து நீக்கப்பெறும். புள்ளிகளைச் சேர்த்தலும்

Koviloor Digital Library

நீக்குதலும் முறைப்படி செய்யப்பட்டதால் ஒன்பது கோவில் புள்ளி விவரக் கணக்கு துல்லியமாக அமைந்திருந்தது.

ஆனால் இப்போது ஆண்டுதோறும் புள்ளிவரி வசூலிப்பதற்குப் பதிலாகத் திருமணத்தில் ஒருவர் புள்ளி ஆகின்றபொழுதே ஆயுட்கட்டணம் போல ஒரு குறிப்பிட்ட தொகையைப் புள்ளிவரியாகப் பெற்றுக் கொண்டு விடுகின்றனர். இந்த வழக்கம் நடைமுறைக்கு வந்தபிறகு கோவில் பதிவேட்டில் சேர்த்தல் மட்டும் முறைப்படி நடக்கிறதே தவிர நீக்குதல் முறைப்படி நடக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இது புள்ளி விவரக் கணக்கின் துல்லியத்தைப் பாதிக்கிறது. எனவே நீக்குதலை முறைப்படி செய்வதற்கு ஒரு வழியை ஒன்பது நகரக் கோவில்கள் பின்பற்றுவது இன்றியமையாததாகும்.

நகரச்சிவன் கோவில் பதிவேடு

நகரச் சிவன்கோவில்களிலும் அவ்வூர்ப் புள்ளிகளுக்கு ஆண்டுதோறும் புள்ளிவரி வசூலிக்கும் பழக்கம் முன்பு இருந்தது. அப்பொழுது புள்ளி விவரக் கணக்கும் துல்லியமாக இருந்தது. இப்போது பல ஊர்களில், ஆயுள்கட்டணம் போல ஒருமுறை மட்டுமே புள்ளிவரி வசூலிக்கப்படுகிறது. சில ஊர்களில் அதுகூட முறையாகவும் முழுமையாகவும் நடைபெறுவதில்லை. ஆகவே நகரச்சிவன் கோவில் புள்ளிவிவரப் பதிவேடுகளைப் பொறுத்தவரை சேர்த்தல் நீக்குதல் இரண்டுமே பல ஊர்களில் முறையாக இல்லை.

சேர்த்தலை முறைப்படுத்துவதற்கு எளியவழி, ஒவ்வொரு திருமணமும் அக்குடும்பத்தார் சார்ந்த நகரக் கோவிலில் பதிவு செய்யப்படுவது போல, உள்ளூர் நகரச் சிவன்கோவிலிலும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதைக் கட்டாயம் ஆக்குவதேயாகும்.

நீக்குதலைப் பொறுத்தவரை பல ஊர்களில் மயானம், சொர்க்கரதம் ஆகியவை நகரச் சிவன் கோவில்களின் பொறுப்பில் இருப்பதால் தண்டல்காரர் மூலமாக இறப்பு கோவிலுக்குத் தெரியவருகிறது. ஆனால் புள்ளி விவரப் பதிவேட்டில் உரிய திருத்தம் செய்யப்படுகிறதா என்பது ஐயத்திற்குரியது. ஒவ்வொரு இறப்பும் நகரச் சிவன் கோவிலில் முறைப்படி பதிவு செய்யப்பட்டால் உரிய புள்ளியை அரைப் புள்ளியாக்க வேண்டுமா? நீக்கவேண்டுமா? என முடிவு செய்து கணக்கைப் பராமரிக்கலாம்.

பணத்திருப்பு

சேர்த்தலும் நீக்குதலும் முறைப்படி மேற்கொள்ளப்பட்டுப் புள்ளிவிவரக்கணக்கை இன்றளவும் துல்லியமாகப் பேணிவருபவை இப்பணத்திருப்பு ஏடுகள்தாம். திருமணத்திற்கு முதல்நாளே பங்காளி வீட்டு ஆண்கள் கூடியிருந்து அதற்கு முன்பு அதே பங்காளி வீட்டில் அண்மையில் எழுதப்பட்ட பணத்திருப்பு ஏட்டை அடிப்படையாக வைத்துக் கொண்டு, உரிய இடங்களில் சேர்த்தல் நீக்குதலைச் செய்து புதிய பணத்திருப்பு ஏட்டைத் தயார் செய்கிறார்கள். இந்த முறை தொடர்ந்து பின்பற்றப்பட்டால் புள்ளிவிவரக்கணக்கு துல்லியமாக அமையும்.

கணக்கெடுப்பு

தனித்தனியே ஒன்பது நகரக்கோவில்களிலும் உள்ளூர் நகரச் சிவன்கோவில்களிலும் கணக்குப் பதிவேடுகளில் உள்ள விவரங்களைத் திரட்டி மொத்த நகரத்தார் புள்ளிகளின் விவரத்தை வெளியிடும் பணி பலமுறை நடைபெற்றிருக்கிறது. குறிப்பிடத்தக்கவை மூன்று முறைகளாகும். துன்மதி ஆண்டில் (1921 – 22) 'ஊழியன்' இதழ் முதன்முதலாக இப்பணியைச் செய்தது. அப்போது அவ்விதழ் கொடுத்த கணக்கின்படி மொத்தப் புள்ளிகள் 9666. அடுத்து நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு நூல் எழுதிய வயிநாகரம். அ. இராமநாதன் செட்டியார் தம் நூலில் இக்கணக்குக் கொடுத்திருக்கிறார். அவர்கணக்குப்படி விரோதி ஆண்டில் (1950 – 51) மொத்தப் புள்ளிகள் 15176. மூன்றாவதாக, 1966 இல் சென்னை ஐக்கிய நகரத்தார்சங்கம் இப்பணியை மேற்கொண்டது. அச்சங்கம் கொடுத்த விவரப்படி மொத்தப்புள்ளிகள் 19724.

அண்மையில் (1996 – 97) நகரத்தார் கலைக்களஞ்சியத்திற்காக 75 ஊர்களுக்கும் நேரில் சென்று புள்ளிவிவரக் கணக்குத் திரட்டப் பெற்றது. அது குறித்த முழுமையான விவரப்பட்டியல்களும் ஊர்களின் மொத்தப் புள்ளிகள் பட்டியலும், ஒன்பது நகரக் கோவில் வாரியாக மொத்தப்புள்ளிகளின் பட்டியலும், சில பகுப்பாய்வு அட்டவணைகளும் கீழே தரப்பட்டுள்ளன. இக்கணக்கின்படி மொத்தப் புள்ளிகள் 31294. இந்த அடிப்படையில் நகரத்தார் மக்கள் தொகையை உத்தேசமாகக் கணக்கிட்டால் 1,25,000 என்று குறிப்பிடலாம்.

பட்டியல் I

75 ஊர்களில் 9 நகரக் கோவில் அடிப்படையில் புள்ளிகளின் எண்ணிக்கை

வரிசை எண்	ஊர்	இளையாத்தங்குடி	மாத்தூர்	வைரவன் கோவில்	நேமங்கோவில்	இலுப்பைக்குடி	சூரக்குடி	வேலங்குடி	இரணிக்கோவில்	பிள்ளையார்பட்டி	மொத்தம்
1	அமராவதி புதூர்	-	-	-	-	-	-	-	-	29	29
2	அரண்மனை சிறுவயல்	20	28	19	9	-	74	-	-	-	150
3	அரிமழம்	43	230	150	93	6	-	-	55	103	680
4	அரியக்குடி	26	-	140	-	-	-	-	-	-	166
5	அலவாக்கோட்டை	-	157	16	-	53	-	-	-	10	236
6	அளகாபுரி (கண்டனூர்)	49	2	39	-	-	-	-	37	12	139
7	அளகாபுரி (நாட்டரசன் கோட்டை)	65	-	-	-	-	-	-	-	-	65
8	அளகாபுரி (பில்லமங்கலம்) கீழச்சிவல்பட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது.										
9	ஆத்தங்குடி	70	141	134	-	-	-	-	-	99	444
10	ஆத்திக்காடு தெற்கூர்	89	278	23	-	-	-	-	14	-	404
11	ஆவினிப்பட்டி	91	104	23	-	-	5	-	-	11	234
12	இராங்கியம்	122	-	-	66	69	-	-	56	-	313
13	இராயவரம்	189	182	206					63	15	655
14	இலட்சுமிபுரம் (கொத்தமங்கலம்)	-	94	-	-	-	-	-	3	8	105
15	இலட்சுமிபுரம் (விரையாச்சிலை)	-	6	14	-	76	-	-	-	-	96
16	உலகம்பட்டி	100	35	4	36	-	-	-	8	18	201
17	ஒக்கூர்	27	-	25	-	77	-	-	-	-	129
18	கடியாபட்டி	149	40	265	-	11	-	-	249	4	718
19	கண்டரமாணிக்கம்	53	95	160	-	61	31	-	-	61	461
20	கண்டவராயன்பட்டி	276	90	62	-	-	-	-	-	92	520
21	கண்டனூர்	39	253	150	16	65	69	-	53	106	751
22	கருங்குளம்	9	6	14	-	-	-	17	16	-	62
23	கல்லல்	144	71	213	30	-	21	-	-	15	494
24	கல்லுப்பட்டி	80	60	-	-	-	-	-	-	100	240
25	காரைக்குடி	609	486	474	355	23	82	19	180	771	2999
26	காளையார் மங்கலம்	20	-	40	-	-	80	-	-	-	140
27	கானாடுகாத்தான்	144	147	9	72	-	-	-	73	-	445
28	கீழச்சிவல்பட்டி (பி. அளகாபுரியும் சேர்ந்தது)	60	358	157	30	-	217	-	53	93	968
29	கீழப்பூங்குடி	9	53	-	-	55	-	-	-	-	117
30	குருவிக்கொண்டான்பட்டி	42	34	18	-	-	55	-	56	45	250
31	குழிபிறை	202	265	35	-	70	-	-	50	26	648
32	கொத்தமங்கலம்	-	88	14	-	10	-	-	202	2	316
33	கொப்பனாபட்டி	7	-	20	-	-	-	-	320	-	347

Koviloor Digital Library

வரிசை எண்	ஊர்	இளையாத்தங்குடி	மாத்தூர்	வைரவன் கோவில்	நேமங்கோவில்	இலுப்பைக்குடி	சூரக்குடி	வேலங்குடி	இரணிக்கோவில்	பிள்ளையார்பட்டி	மொத்தம்
34	கோட்டையூர்	144	161	-	136	-	-	-	160	15	616
35	கோனாபட்டு	47	21	55	-	173	-	-	3	164	463
36	சக்கந்தி	26	-	-	-	-	-	-	-	-	26
37	சண்முகநாதபுரம்	251	154	-	3	-	5	-	-	13	426
38	சிறாவயல்	-	-	9	-	45	-	-	-	61	115
39	சிறுகூடற்பட்டி	25	185	100	-	-	-	-	-	33	343
40	சிறுவயல் (உய்யக்கொண்டான்)	80	201	121	-	90	-	-	-	-	492
41	செம்பனூர்	-	-	-	75	-	-	-	-	-	75
42	செவ்வூர்	-	-	-	-	-	172	-	12	-	184
43	சொக்கநாதபுரம்	66	134	-	-	-	-	-	-	42	242
44	சொக்கலிங்கம்புதூர்	-	52	121	-	-	-	-	-	-	173
45	சோழபுரம்	-	20	-	-	-	-	-	-	6	26
46	தாணிச்சாவூருணி	-	-	-	-	-	-	-	-	4	4
47	தேவகோட்டை	903	920	630	143	1030		7	247	240	4120
48	தேனிபட்டி	10	-	65	-	-	5	-	25	-	105
49	நடராசபுரம்	7	-	25	-	58	33	-	-	-	123
50	நற்சாந்துபட்டி	108	67	105	-	121	-	-	-	172	573
51	நாச்சியாபுரம்	2	-	29	-	185	-	-	-	94	310
52	நாட்டரசன் கோட்டை	342	179	42	-	-	62	-	53	80	758
53	நெற்குப்பை	236	11	9	94		42		209	23	624
54	நேமத்தான்பட்டி	21	20	80	-	45	-	-	70	-	236
55	பட்டமங்கலம்	29	37	-	-	7	50	3	-	10	136
56	பலவான்குடி	18	6	70	8	-	-	-	92	-	194
57	பள்ளத்தூர்	87	72	200	150	61	71	-	375	-	1016
58	பனங்குடி	1	-	3	-	15	2	-	-	-	21
59	பனையப்பட்டி	7	145	3	-	43	12	-	58	-	268
60	பாகனேரி	79	98	136	-	-	9	-	-	88	410
61	புதுப்பட்டி	187	-	236	-	17	-	-	-	-	440
62	புதுவயல்	248	12	129	-	7	97	-	92	-	585
63	பூலாங்குறிச்சி	20	-	76	-	45	50	-	19	100	310
64	மகிபாலன்பட்டி	87	11	58	-	-	-	-	-	-	156
65	மதகுபட்டி	88	59	23	-	-	-	-	-	-	170
66	மானகிரி	1	11	41	-	29	-	-	-	-	82
67	மிதிலைப்பட்டி	68	56	-	-	-	8	-	40	36	208
68	முத்துப்பட்டணம் (ஆத்தங்குடி)	45	110	9	-	-	-	-	-	69	233
69	மேலைச்சிவபுரி	55	-	101	120	-	-	-	16	160	452
70	வலையபட்டி	90	342	338	144	29	-	-	21	329	1293
71	விராமதி	146	-	16	-	-	-	-	-	-	162
72	விரையாச்சிலை	56	35	139	-	54	14	-	-	-	298
73	வெற்றியூர்	10	97	15	-	-	-	-	-	-	122
74	வேகுப்பட்டி	111	10	-	-	-	124	-	-	145	390
75	வேந்தன்பட்டி	108	281	61	177	88	-	-	77	-	792
	மொத்தம்	6543	6810	5469	1757	2718	1390	46	3057	3504	31294

Koviloor Digital Library

பட்டியல் II

64 ஊர்களில் உட்பிரிவுகளுடன் இளையாத்தங்குடிக் கோவில் புள்ளிகளின் எண்ணிக்கை

வரிசை எண்	ஊர்	ஒக்கூருடையார்	பட்டினசாமியார்	பெருமருதூருடையார்	கழனிவாசற்குடியார்	கிங்கிணிக்கூருடையார்	பேரசெந்தூருடையார்	சிறுசேத்தூருடையார்	பிரிவுக்குறிப்பு இல்லாதவை	மொத்தம்
1	அரண்மனை சிறுவயல்			10	8			2		20
2	அரிமழம்		38	5						43
3	அரியக்குடி			26						26
4	அளகாபுரி (கண்டனூர்)		49							49
5	அளகாபுரி (நாட்டரசன் கோட்டை)					65				65
6	அளகாபுரி (பில்லமங்கலம்) கீழச்சிவல்பட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது.									
7	ஆத்தங்குடி	30			40					70
8	ஆத்திக்காடு தெற்கூர்	80			9					89
9	ஆவினிப்பட்டி	75	16							91
10	இராங்கியம்	33			89					122
11	இராயவரம்		52		20	117				189
12	உலகம்பட்டி		85			15				100
13	ஒக்கூர்				27					27
14	கடியாபட்டி		19		130					149
15	கண்டரமாணிக்கம்			41	12					53
16	கண்டவராயன்பட்டி	62			214					276
17	கண்டனூர்			39						39
18	கருங்குளம்		1		8					9
19	கல்லல்	15	36		73	20				144
20	கல்லுப்பட்டி		30	50						80
21	காரைக்குடி	165	96	45	275	28				609
22	காளையார் மங்கலம்				20					20
23	கானாடுகாத்தான்		137		7					144
24	கீழச்சிவல்பட்டி (பி. அளகாபுரியும் சேர்ந்தது)								60	60
25	கீழப்பூங்குடி	8			1					9
26	குருவிக்கொண்டான்பட்டி	18			24					42
27	குழிபிறை			40	100	62				202
28	கொப்பனாபட்டி								7	7
29	கோட்டையூர்			104	40					144
30	கோனாபட்டு								47	47
31	சக்கந்தி						26			26
32	சண்முகநாதபுரம்	76	122	39	14					251
33	சிறுகூடற்பட்டி				25					25
34	சிறுவயல் (உய்யக் கொண்டான்)	80								80

Koviloor Digital Library

வரிசை எண்	ஊர்	ஏக்கூருடையார்	பட்டினசாமியார்	பெருமருதூருடையார்	கழனிவாசற்குடியார்	கிண்கிணிக்கூருடையார்	பேரசெந்தூருடையார்	சிறுசேத்தூருடையார்	பிரிவுக்குறிப்பு இல்லாதவை	மொத்தம்
35	சொக்கநாதபுரம்		16			50				66
36	தேவகோட்டை	321	84	426	40	32				903
37	தேனிபட்டி		10							10
38	நடராசபுரம்		7							7
39	நற்சாந்துபட்டி			108						108
40	நாச்சியாபுரம்				2					2
41	நாட்டரசன் கோட்டை		37		302	3				342
42	நெற்குப்பை	12	28		78	118				236
43	நேமத்தான்பட்டி				21					21
44	பட்டமங்கலம்		29							29
45	பலவான்குடி								18	18
46	பள்ளத்தூர்								87	87
47	பனங்குடி		1							1
48	பனையப்பட்டி				7					7
49	பாகனேரி				79					79
50	புதுப்பட்டி		187							187
51	புதுவயல்		152	63		33				248
52	பூலாங்குறிச்சி				20					20
53	மகிபாலன்பட்டி	81			6					87
54	மதகுபட்டி				6		82			88
55	மானகிரி	1								1
56	மிதிலைப்பட்டி				68					68
57	முத்துப்பட்டணம் (ஆத்தங்குடி)			45						45
58	மேலைச்சிவபுரி								55	55
59	வலையபட்டி								90	90
60	விராமதி	110	20	16						146
61	விரையாச்சிலை				56					56
62	வெற்றியூர்					10				10
63	வேகுப்பட்டி	58	9		44					111
64	வேந்தன்பட்டி	80	28							108
	மொத்தம்	1305	1289	1057	1865	553	108	2	364	6543

Koviloor Digital Library

பட்டியல் III

55 ஊர்களில் உட்பிரிவுகளுடன் மாத்தூர்க் கோவில் புள்ளிகளின் எண்ணிக்கை.

வரிசை எண்	ஊர்	உறையூர்	அரும்பாக்கூர்	மணலூர்	மண்ணூர்	கண்ணூர்	கருப்பூர்	குளத்தூர்	பிரிவுக்குறிப்பு இல்லாதவை	மொத்தம்
1	அரண்மனை சிறுவயல்			4			24			28
2	அரிமழம்		118	34		5	26	47		230
3	அலவாக்கோட்டை	94	49	7			7			157
4	அளகாபுரி (கண்டனூர்)								2	2
5	அளகாபுரி (பில்லமங்கலம்) கீழச்சிவல்பட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது.									
6	ஆத்தங்குடி		85	56						141
7	ஆத்திக்காடு தெற்கூர்		162	116						278
8	ஆவினிப்பட்டி							104		104
9	இராயவரம்		60	67		55				182
10	இலட்சுமிபுரம் (கொத்தமங்கலம்)	70					24			94
11	இலட்சுமிபுரம் (விரையாச்சிலை)				6					6
12	உலகம்பட்டி				28	7				35
13	கடியாபட்டி		39			1				40
14	கண்டரமாணிக்கம்			51			44			95
15	கண்டவராயன்பட்டி			90						90
16	கண்டனூர்	73	131	49						253
17	கருங்குளம்		6							6
18	கல்லல்		8				63			71
19	கல்லுப்பட்டி		30	30						60
20	காரைக்குடி	89	374	23						486
21	கானாடுகாத்தான்	4	69	74						147
22	கீழச்சிவல்பட்டி (பி.அளகாபுரியும் சேர்ந்தது)								358	358
23	கீழப்பூங்குடி	6	15				32			53
24	குருவிக்கொண்டான்பட்டி								34	34
25	குழிபிறை	111		154						265
26	கொத்தமங்கலம்		84				4			88
27	கோட்டையூர்		45		116					161
28	கோனாபட்டு			21						21
29	சண்முகநாதபுரம்	81	63	10						154
30	சிறுகூடற்பட்டி		185							185
31	சிறுவய்ல் (உய்யக்கொண்டான்)		65	136						201
32	சொக்கநாதபுரம்	12	69	53						134
33	சொக்கலிங்கம்புதூர்			52						52
34	சோழபுரம்	20								20
35	தேவகோட்டை	330	111	268	10	76	90	35		920

Koviloor Digital Library

வரிசை எண்	ஊர்	உறையூர்	அரும்பாக்கூர்	மணலூர்	மண்ணூர்	கண்ணூர்	கருப்பூர்	குளத்தூர்	பிரிவுகுறிப்பு இல்லாதவை	மொத்தம்
36	நற்சாந்துபட்டி								67	67
37	நாட்டரசன்கோட்டை		18	97			56	8		179
38	நெற்குப்பை								11	11
39	நேமத்தான்பட்டி								20	20
40	பட்டமங்கலம்			37						37
41	பலவான்குடி								6	6
42	பள்ளத்தூர்								72	72
43	பனையப்பட்டி	105						40		145
44	பாகனேரி	47		51						98
45	புதுவயல்			12						12
46	மகிபாலன்பட்டி			11						11
47	மதகுபட்டி	4	12				43			59
48	மானகிரி			11						11
49	மிதிலைப்பட்டி							56		56
50	முத்துப்பட்டணம் (ஆத்தங்குடி)		12	98						110
51	வலையபட்டி								342	342
52	விரையாச்சிலை				35					35
53	வெற்றியூர்		82				15			97
54	வேகுப்பட்டி				10					10
55	வேந்தன்பட்டி				281					281
	மொத்தம்	1046	1892	1612	486	144	428	290	912	6810

பட்டியல் IV

58 ஊர்களில் உட்பிரிவுகளுடன் வைரவன் கோவில் புள்ளிகளின் எண்ணிக்கை.

வரிசை எண்	ஊர்	சிறுகுளத்தூருடையார்			கழனிவாசலுடையார்	மருதேந்திரபுர முடையார்	பிரிவுக்குறிப்பு இல்லாதவை	மொத்தம்
		பெரிய வகுப்பு	தெய்வ நாயகர் வகுப்பு	பிள்ளை யார் வகுப்பு				
1	அரண்மனை சிறுவயல்						19	19
2	அரிமழம்	21	129					150
3	அரியக்குடி		140					140
4	அலவாக்கோட்டை						16	16
5	அளகாபுரி (கண்டனூர்)	39						39
6	அளகாபுரி (பில்லமங்கலம்) கீழச்சிவல்பட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது							
7	ஆத்தங்குடி						134	134
8	ஆத்திக்காடு தெற்கூர்						23	23
9	ஆவினிப்பட்டி						23	23
10	இராயவரம்		206					206
11	இலட்சுமிபுரம் (விரையாச்சிலை)						14	14
12	உலகம்பட்டி						4	4
13	ஒக்கூர்						25	25
14	கடியாபட்டி						265	265
15	கண்டரமாணிக்கம்						160	160
16	கண்டவராயன்பட்டி						62	62
17	கண்டனூர்	65	85					150
18	கருங்குளம்						14	14
19	கல்லல்	45		168				213
20	காரைக்குடி						474	474
21	காளையார் மங்கலம்						40	40
22	கானாடுகாத்தான்						9	9
23	கீழச்சிவல்பட்டி (பி. அளகாபுரியும் சேர்ந்தது)						157	157
24	குருவிக்கொண்டான்பட்டி						18	18
25	குழிபிறை						35	35
26	கொத்தமங்கலம்						14	14
27	கொப்பனாபட்டி						20	20
28	கோனாபட்டு		55					55
29	சிறாவயல்						9	9
30	சிறுகூடற்பட்டி						100	100
31	சிறுவயல் (உய்யக்கொண்டான்)						121	121
32	சொக்கலிங்கம் புதூர்						121	121
33	தேவகோட்டை						630	630

Koviloor Digital Library

வரிசை எண்	ஊர்	சிறுகுளத்தூருடையார்			கழனிவாசலுடையார்	மருதேந்திரபுர முடையார்	பிரிவுக்குறிப்பு இல்லாதவை	மொத்தம்
		பெரிய வகுப்பு	தெய்வ நாயகர் வகுப்பு	பிள்ளை யார் வகுப்பு				
34	தேனிபட்டி			65				65
35	நடராசபுரம்						25	25
36	நற்சாந்துபட்டி						105	105
37	நாச்சியாபுரம்						29	29
38	நாட்டரசன் கோட்டை						42	42
39	நெற்குப்பை						9	9
40	நேமத்தான்பட்டி						80	80
41	பலவான்குடி						70	70
42	பள்ளத்தூர்						200	200
43	பனங்குடி	3						3
44	பனையப்பட்டி						3	3
45	பாகனேரி						136	136
46	புதுப்பட்டி						236	236
47	புதுவயல்	69	60					129
48	பூலாங்குறிச்சி						76	76
49	மகிபாலன்பட்டி						58	58
50	மதகுபட்டி						23	23
51	மானகிரி			41				41
52	முத்துப்பட்டணம் (ஆத்தங்குடி)						9	9
53	மேலைச்சிவபுரி						101	101
54	வலையபட்டி						338	338
55	விராமதி						16	16
56	விரையாச்சிலை	93		46				139
57	வெற்றியூர்						15	15
58	வேந்தன்பட்டி						61	61
	மொத்தம்	335	675	320	-	-	4139	5469

Koviloor Digital Library

பட்டியல் – V

75 நகரத்தார் ஊர்களிலும் வாழும் புள்ளிகள் எண்ணிக்கை.

1. அமராவதி புதூர்	29
2. அரண்மனை சிறுவயல்	150
3. அரிமழம்	680
4. அரியக்குடி	166
5. அலவாக்கோட்டை	236
6. க. அளகாபுரி	139
7. நா. அளகாபுரி	65
8. பி. அளகாபுரி	430
9. ஆத்தங்குடி	444
10. ஆ. தெற்கூர்	404
11. ஆவினிப்பட்டி	234
12. இராங்கியம்	313
13. இராயவரம்	655
14. கொ. இலட்சுமிபுரம்	105
15. வி. இலட்சுமிபுரம்	96
16. உலகம்பட்டி	201
17. ஒக்கூர்	129
18. கடியாபட்டி	718
19. கண்டரமாணிக்கம்	461
20. கண்டவராயன்பட்டி	520
21. கண்டனூர்	751
22. கருங்குளம்	62
23. கல்லல்	494
24. கல்லுப்பட்டி	240
25. காரைக்குடி	2999
26. காளையார் மங்கலம்	140
27. கானாடுகாத்தான்	445
28. கீழச்சிவல்பட்டி	538
29. கீழப்பூங்குடி	117
30. குருவிக்கொண்டான்பட்டி	250
31. குழிபிறை	648
32. கொத்தமங்கலம்	316
33. கொப்பனாபட்டி	347
34. கோட்டையூர்	616
35. கோனாபட்டு	463
36. சக்கந்தி	26
37. சண்முகநாதபுரம்	426
38. சிறாவயல்	115
39. சிறுகூடற்பட்டி	343
40. உ. சிறுவயல்	492
41. செம்பனூர்	75
42. செவ்வூர்	184
43. சொக்கநாதபுரம்	242
44. சொ. புதூர்	173
45. சோழபுரம்	26
46. தாணிச்சாவூருணி	4
47. தேவகோட்டை	4120
48. தேனிபட்டி	105
49. நடராசபுரம்	123
50. நற்சாந்துபட்டி	573
51. நாச்சியாபுரம்	310
52. நாட்டரசன்கோட்டை	758
53. நெற்குப்பை	624
54. நேமத்தான்பட்டி	236
55. பட்டமங்கலம்	136
56. பலவான்குடி	194
57. பள்ளத்தூர்	1016
58. பனங்குடி	21
59. பனையப்பட்டி	268
60. பாகனேரி	410
61. புதுப்பட்டி	440
62. புதுவயல்	585
63. பூலாங்குறிச்சி	310
64. மகிபாலன்பட்டி	156
65. மதகுபட்டி	170
66. மானகிரி	82
67. மிதிலைப்பட்டி	208
68. ஆ. முத்துப்பட்டணம்	233
69. மேலைச்சிவபுரி	452
70. வலையபட்டி	1293
71. விராமதி	162
72. விரையாச்சிலை	298
73. வெற்றியூர்	122
74. வேகுப்பட்டி	390
75. வேந்தன்பட்டி	792
மொத்தம்	31294

பட்டியல் - VI

ஒன்பது நகரக்கோவில்கள் புள்ளிவிவரம்

இளையாத்தங்குடி [64 ஊர்களில்]	6543
மாத்தூர் [55 ஊர்களில்]	6810
வைரவன் கோவில் [58 ஊர்களில்]	5469
நேமங்கோவில் [20 ஊர்களில்]	1757
இலுப்பைக்குடி [31 ஊர்களில்]	2718
சூரக்குடி [25 ஊர்களில்]	1390
வேலங்குடி [4 ஊர்களில்]	46

Koviloor Digital Library

இரணிக்கோவில் [35 ஊர்களில்]	*3057*
பிள்ளையார்பட்டி [41 ஊர்களில்]	*3504*
	31294

பட்டியல் - VII

ஊர்களில் நகரக்கோவில் புள்ளிகள்

***1.** ஒருகோவில் புள்ளிகள் மட்டும் வாழும் ஊர்கள் – 5*

அமராவதிபுதூர், அளகாபுரி [நா], சக்கந்தி, செம்பனூர், தாணிச்சாவூருணி.

***2.** இரண்டு கோவில் புள்ளிகள் வாழும் ஊர்கள் – 5*

அரியக்குடி, செவ்வூர், சொ. புதூர், சோழபுரம், விராமதி

***3.** மூன்றுகோவில் புள்ளிகள் வாழும் ஊர்கள் – 13*

இலட்சுமிபுரம் [கொ], இலட்சுமிபுரம் [வி], ஒக்கூர், கல்லுப்பட்டி, காளையார்மங்கலம், கீழப்பூங்குடி, கொப்பனாபட்டி, சிறாவயல், சொக்கநாதபுரம், புதுப்பட்டி, மகிபாலன்பட்டி, மதகுபட்டி, வெற்றியூர்.

***4.** நான்கு கோவில் புள்ளிகள் வாழும் ஊர்கள் – 14*

அலவாக்கோட்டை, ஆத்தங்குடி, ஆ. தெற்கூர், இராங்கியம், கண்டவராயன்பட்டி, சிறுகூடற்பட்டி, உ. சிறுவயல், தேனிபட்டி, நடராசபுரம், நாச்சியாபுரம், பனங்குடி, மானகிரி, முத்துப் பட்டணம் [ஆ], வேகுப்பட்டி.

***5.** ஐந்துகோவில் புள்ளிகள் வாழும் ஊர்கள் – 16*

அ. சிறுவயல், அளகாபுரி [க], ஆவினிப்பட்டி, இராயவரம், கருங்குளம், கானாடுகாத்தான், கொத்தமங்கலம், கோட்டையூர், சண்முகநாதபுரம், நற்சாந்துபட்டி, நேமத்தான்பட்டி, பலவான்குடி, பாகனேரி, மிதிலைப்பட்டி, மேலைச்சிவபுரி, விரையாச்சிலை.

***6.** ஆறுகோவில் புள்ளிகள் வாழும் ஊர்கள் – 14.*

அளகாபுரி [பி], உலகம்பட்டி, கடியாபட்டி, கண்டரமாணிக்கம், கல்லல், குருவிக்கொண்டான் பட்டி, குழிபிறை, கோனாபட்டு, நாட்டரசன் கோட்டை, பட்டமங்கலம், பனையப்பட்டி, புதுவயல், பூலாங்குறிச்சி, வேந்தன்பட்டி.

***7.** ஏழுகோவில் புள்ளிகள் வாழும் ஊர்கள் – 5.*

அரிமழம், கீழச்சிவல்பட்டி, நெற்குப்பை, பள்ளத்தூர், வலையபட்டி.

***8.** எட்டுக் கோவில் புள்ளிகள் வாழும் ஊர்கள் – 2*

கண்டனூர், தேவகோட்டை

***9.** ஒன்பது கோவில் புள்ளிகளும் வாழும் ஊர் – 1*

காரைக்குடி.

பட்டியல் - VIII

புள்ளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊர்கள்.

(1) 100க்கும் குறைவான புள்ளிகள் வாழும் ஊர்கள் - 10

1.	தாணிச்சாவூருணி	*4*
2.	பனங்குடி	*21*
3.	சக்கந்தி	*26*
4.	சோழபுரம்	*26*
5.	அமராவதிபுதூர்	*29*
6.	கருங்குளம்	*62*
7.	அளகாபுரி [நா]	*65*
8.	செம்பனூர்	*75*
9.	மானகிரி	*82*
10.	இலட்சுமிபுரம் [வி]	*96*

(2) 100 முதல் 200 வரை புள்ளிகள் வாழும் ஊர்கள் - 18

11.	இலட்சுமிபுரம் [கொ]	*105*
12.	தேனிபட்டி	*105*
13.	சிறாவயல்	*115*
14.	கீழப்பூங்குடி	*117*
15.	வெற்றியூர்	*122*
16.	நடராசபுரம்	*123*
17.	ஒக்கூர்	*129*
18.	பட்டமங்கலம்	*136*
19.	அளகாபுரி [க]	*139*
20.	காளையார் மங்கலம்	*140*
21.	அ. சிறுவயல்	*150*
22.	மகிபாலன்பட்டி	*156*
23.	விராமதி	*162*
24.	அரியக்குடி	*166*
25.	மதகுபட்டி	*170*
26.	சொ. புதூர்	*173*
27.	செவ்வூர்	*184*
28.	பலவான்குடி	*194*

(3) 200 முதல் 300 வரை புள்ளிகள் வாழும் ஊர்கள் - 11.

29.	உலகம்பட்டி	*201*
30.	மிதிலைப்பட்டி	*208*
31.	முத்துப்பட்டணம் [ஆ]	*233*

Koviloor Digital Library

32. ஆவினிப்பட்டி 234
33. அலவாக்கோட்டை 236
34. நேமத்தான்பட்டி 236
35. கல்லுப்பட்டி 240
36. சொக்கநாதபுரம் 242
37. குருவிக் கொண்டான்பட்டி 250
38. பனையப்பட்டி 268
39. விரையாச்சிலை 298

(4) 300 முதல் 400 வரை புள்ளிகள் வாழும் ஊர்கள் - 7.

40. நாச்சியாபுரம் 310
41. பூலாங்குறிச்சி 310
42. இராங்கியம் 313
43. கொத்தமங்கலம் 316
44. சிறுகூடல்பட்டி 343
45. கொப்பனாபட்டி 347
46. வேகுப்பட்டி 390

(5) 400 முதல் 500 வரை புள்ளிகள் வாழும் ஊர்கள் - 12.

47. ஆ. தெற்கூர் 404
48. பாகனேரி 410
49. சண்முகநாதபுரம் 426
50. அளகாபுரி [பி] 430
51. புதுப்பட்டி 440
52. ஆத்தங்குடி 444
53. கானாடுகாத்தான் 445
54. மேலைச்சிவபுரி 452
55. கண்டரமாணிக்கம் 461
56. கோனாபட்டு 463
57. உ. சிறுவயல் 492
58. கல்லல் 494

(6) 500 முதல் 1000 வரை புள்ளிகள் வாழும் ஊர்கள் - 13.

59. கண்டவராயன்பட்டி 520
60. கீழச்சிவல்பட்டி 538
61. நற்சாந்துபட்டி 573
62. புதுவயல் 585
63. கோட்டையூர் 616
64. நெற்குப்பை 624
65. குழிபிறை 648
66. இராயவரம் 655
67. அரிமழம் 680
68. கடியாபட்டி 718
69. கண்டனூர் 751
70. நாட்டரசன்கோட்டை 758
71. வேந்தன்பட்டி 792

(7) 1000க்கு மேல் புள்ளிகள் வாழும் ஊர்கள் - 4.

72. பள்ளத்தூர் 1016
73. வலையபட்டி 1293
74. காரைக்குடி 2999
75. தேவகோட்டை 4120

நகரத்தார் மலர்

கோனாபட்டைச் சேர்ந்த நா. இளங்கோவன் தாமே ஆசிரியராக இருந்து, மதுரையிலிருந்து நடத்திவரும் மாத இதழ். 1976 செப்டம்பரில் 'நகர மலர்' என்ற பெயரோடு இதழைத் தொடங்கினார். 1980 ஏப்ரலில் 'நகரத்தார் மலர்' எனப் பெயரை மாற்றினார்.

'நகர மலர்' என்ற பெயரில் வெளிவரும் போது, 'நகர' என்ற சொல்லுக்கும் 'மலர்' என்ற சொல்லுக்கும் இடையே ஒரு குத்துவிளக்கும் அதனடியில் ஓர் ஏட்டுச் சுவடியும் உள்ளது போன்ற படம் அமையும். முகப்புப் பக்கத்தில்

'சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்'

என்ற குறள் இடம் பெற்று வந்தது. 'மாலை' என ஆண்டினையும், 'மலர்' எனத் திங்களையும் குறிப்பிட்டனர்.

'நகரத்தார் மலர்' எனப் பெயர் மாற்றியபின், 'நகரத்தார் மலர்' என்ற பெயருக்கு இடப்புறத்தே தாமரை மலரில் நிற்கும் இலக்குமிபடமும் அதன்கீழே சிறிய எழுத்துக்களில் நகரத்தார் மலர் என்ற பெயரும் அமைகிறது. 'கோயில்' என ஆண்டினையும், 'புள்ளி' எனத் திங்களையும் நகரத்தார் மரபு வெளிப்படும் வண்ணம் குறிப்பிடுவது இவ்விதழின் தனிச்சிறப்பாகும். தொடக்கத்தில் முகப்புப் பக்கத்தில்,

'விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்'

என்ற குறள் இடம் பெற்றது. ஆனால் 1983 இலிருந்து அது இடம் பெறவில்லை.

விலையைப் பொறுத்த வரை, தொடக்கத்தில் இருந்தே தனிஇதழ் விலை குறிப்பிடப்பெறுவது இல்லை. தொடக்கத்தில் ஆண்டுச் சந்தா ரூ.10 ஆக இருந்தது. 1983 இல் ஆண்டுச் சந்தா ரூ.12, டெபாசிட் சந்தா ரூ 150 என ஆயிற்று. 1991 இல் டெபாசிட்சந்தா என்பதற்குப் பதிலாக ஆயுள்சந்தா என மாற்றப்பட்டு ஆயுள் சந்தா ரூ 250 ஆக உயர்ந்தது. இப்போது (1997) ஆண்டு சந்தா ரூ 50 ஆகவும் ஆயுள்சந்தா ரூ 600 ஆகவும் உள்ளது.

Koviloor Digital Library

இந்த இதழும் நகரத்தார் சமூகம் தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தையும் வெளியிட்டுப் பதிவு செய்யும் அமைப்புடையதாக வெளிவருகிறது. எதிர்காலத்தில் நகரத்தார் இயல் ஆய்வாளர் கட்குப் பயன்படும் ஆவணமாக இவ்விதழ்த் தொகுதிகள் விளங்குகின்றன.

நகரத்தார் வரலாறு

நகரத்தார் வரலாறு பற்றி அச்சில் வெளிவந்த முதல்நூல் 1894 இல் வெளியிடப் பெற்ற 'தனவைசியராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம்' என்னும் நூலாகும். 'பூங்கொன்றை வேலங்குடிச் சிலாசாசனத்திற்கேற்பத் துள்ளாவூர் மடத்தில் இருந்த புத்தகத்தை வருவித்துத் தேவகோட்டை வீர.லெ. சிந்நயச் செட்டியார் பரிசோதித்து வைத்திருந்த பிரதிப்படி மெ.அள.அரு. இராமநாதச் செட்டியார், அள.அரு.ராம. அருணாசலச் செட்டியார் முதலானவர்கள் அனுமதியின் மீது தஞ்சாவூர் சதாவதானம் சுப்பிரமணிய அய்யரால் தஞ்சை தேசாபிமானி அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது' என்ற குறிப்போடு இந்நூல் வெளிவந்துள்ளது. இதன் இரண்டாவது பதிப்பு 1904 இல் வெளிவந்துள்ளது.

1911 இல் பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் சீர்திருத்தம் என்ற பெயரிலும் 1919 இல் காரைக்குடிச் சொக்கலிங்க அய்யா நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபு விளக்கம் என்ற பெயரிலும் நகரத்தார் வரலாற்றைத் தனித்தனி நூல்களாக எழுதியுள்ளனர். 1953 இல் வயிநாகரம் அ. இராமநாதஞ் செட்டியாரால் தொகுக்கப் பெற்றுப் பண்டிதமணியால் திருத்தி அமைக்கப் பெற்று வெளிவந்த நூல் 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு'. 1970 இல் வரகூர் அ. சேஷாத்திரி சர்மா எழுதிய 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' நூல் வடிவில் வந்தது.

இதற்குப்பின் நகரத்தாரியல் ஆய்வாளர்கள் பலர் இந்நூல்கள் கூறும் நகரத்தார் வரலாற்றின் தொன்மைப் பகுதிகள் பற்றிப் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றார்கள். அவற்றுள் குறிப்பிடத்தக்க கட்டுரைகள் கம்பன் அடிப்பொடி சா. கணேசனார், டாக்டர். வசுப. மாணிக்கனார், டாக்டர் சுப. அண்ணாமலை, டாக்டர். தே. சொக்கலிங்கம் ஆகியோரால் எழுதப் பெற்றவையாகும். இவற்றின் அடிப்படையில் நகரத்தாரின் தொன்மை வரலாற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

1. வரலாற்றுக்கு முந்திய காலம் (கி.மு. 2898 வரை)

''ஆதியில் வைசியர்கள் சம்புத்தீவில் நாகநாட்டில் சந்தியாபுரியில் குடியிருந்தனர்''. அப்போது சைவம் தழுவியவர்களாகவும் மரகத விநாயகரை வழிபடுபவர்களாகவும் நவமணி களை வணிகம் செய்பவர்களாகவும் மன்னருக்கு இணையான மரியாதைகளைப் பெறத் தக்கவர்களாகவும் வாழ்ந்தார்கள். இந்த நாகநாடு தக்காண பீடபூமியில் ஆந்திராவுக்கு அருகே இருந்திருக்க வேண்டும் என்றும் பின்னர் அது பூமியில் அழுந்தி அழிந்திருக்கவேண்டும் என்றும் வ.சுப. மாணிக்கனார் கருதுகிறார்.

2. தொல் பழங்காலம் (கி.மு. 2897 முதல் கி.மு. 790 வரை)

கலி ஆண்டு 204 இல் (கி.மு. 2897 இல்) நாகநாட்டு அரசனுடைய கொடுமை தாங்கமுடியாமல் வைசியர்கள் தொண்டை மண்டலத்திற்குக் காஞ்சிபுரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். காஞ்சிபுரத்து அரசன் அவர்களை வரவேற்று அவர்களுக்கு அரசமரியாதைகளைச் செய்து கோவில் மடம் இவற்றை அமைத்துக் கொள்வதற்கு நிலம் வழங்கினான். அவர்கள் அங்கே மரகத விநாயகரை வழிபட்டுக் கொண்டும் நவமணி வணிகத்தைத் தொடர்ந்து செய்து கொண்டும் கலி ஆண்டு 2311 (கி.மு. 790) வரை மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

3. பழங்காலம் (கி.மு. 789 முதல் கி.பி. 706 வரை)

கலி ஆண்டு 2312 இல் (கி.மு. 789) காஞ்சியை ஆண்ட பிரதாபராச மன்னன் வைசியர்களுக்கு நியாயமற்ற கடுமையான அபராதம் முதலிய தண்டனைகளை விதித்தான். இதனால் வைசியர்கள் அங்கிருந்து குடிபெயர்ந்து சோழநாட்டிற்கு வந்தார்கள். அப்போதைய அரசனாகிய மனுநீதிச் சோழன் இவர்களைத் தம் நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் கிழக்கு மேற்கு தெற்கு வீதிகளில் வாழ்ந்து வருமாறு வேண்டிக் கொண்டான். வைசியர்களுக்கு அவன் மூன்று தனிப்பெருமைகளை வழங்கினான். சோழ மன்னர்களுக்கு முடிசூட்டும் உரிமை, தங்களுக்கெனத் தனியே சிங்கக் கொடியை வைத்துக் கொள்கிற உரிமை, தாங்கள் வாழுகிற மாளிகையின் உச்சியில் தங்கக் கலசம் அமைத்துக் கொள்கின்ற உரிமை ஆகியவையே அவை. இவ்வுரிமைகளைப் பெற்றிருந்த நகரத்தார்கள் இரத்தின மகுட தனவைசியர்கள் என அழைக்கப்பட்டனர். மரகத விநாயகரைத் தொடர்ந்து வழிபட்டு வந்தனர்.

Koviloor Digital Library

கலி ஆண்டு 3775 இல் (கி.பி. 674) ஆட்சிக்கு வந்த பூவந்திச் சோழன் வைசியப் பெண்களைச் சிறைப்பிடித்தான். இதனால் வைசியர் எண்ணாயிரம் குடும்பத்தாரும் தங்களது 1502 ஆண்குழந்தைகளை மட்டும் ஆத்மநாத சாஸ்திரிகளிடம் ஒப்படைத்து விட்டுப் பிள்ளைகளை வளர்ப்பதற்கும் மரகத விநாயக பூசைக்காகவும் தங்கள் சொத்துக்கள் அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்கள்.

கலி ஆண்டு 3784 இல் (கி.பி. 683) வயது முதிர்ந்த பூவந்திச் சோழன் தன்மகன் இராஜபூஷணச் சோழனுக்கு வைசிய இளைஞர்கள் முடிசூட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அந்த இளைஞர்களோ 'திருமணமாகாத நாங்கள் முடிசூட்டத் தகுதியற்றவர்கள். திருமணம் செய்து கொள்ள எங்கள் குலத்தில் பெண்களே இல்லை' எனக் கூறினர். அரசன் ஈசான சிவாசாரியாரைக் கலந்தாலோசித்து வைசிய இளைஞர்கள் வெள்ளாளப் பெண்களை மணந்து கொள்ளலாம் என்று ஒரு தீர்வு கூறினான். வைசிய இளைஞர்கள் 'நாங்கள் வெள்ளாள இனத்தில் பெண் கொள்வோமே தவிரப் பிற்காலத்தில் எங்கள் பெண்களை வெள்ளாள இனத்தில் கொடுக்கமாட்டோம்' என்று குறிப்பிட்டனர். அரசன் வேளாளர்களை இதற்கிணங்கச் செய்தான். வேளாளர்கள் தங்கள் பெண்களுக்கும் வழிவரும் பெண்களுக்கும் தங்கள் குலகுருவே தீட்சை செய்து வைக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பெண் கொடுக்க ஒப்புக் கொண்டனர். கீழத்தெருவில் வாழ்ந்த ஏழு வழியினராகிய 502 வைசிய இளைஞர்கள் சோழிய வெள்ளாளப் பெண்களை மணந்து கொண்டனர். அப்பெண்களுக்குரிய குருவாக ஸ்ரீ வாஞ்சியத்தில் வாழ்ந்த நிரம்ப அழகிய குருக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

4. இடைக்காலம் : (கி.பி. 707 முதல் 1565 வரை)

கலி ஆண்டு 3808 இல் (கி.பி. 707) சவுந்தர பாண்டிய மன்னன் சோழநாடு சென்று ராஜபூஷணச் சோழனைச் சந்தித்து "கீர்த்தி பூஷண பாண்டியன் ஆட்சிக் காலத்தில் கடல்பெருகித் திருப்புவனம் வரை அழிந்து போயிற்று. அதற்குப் பிறகு 19 பாண்டியர் அரசாட்சிக் காலம் வரை நற்குடிகள் இல்லாதிருந்தது. இப்போது நற்குடிகள் வரவழைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நீங்களும் சில நற்குடிகளையும் வைசிய வணிகர்களையும் தரவேண்டும் என்று வேண்டிக் கொண்டான். சோழ மன்னன் இரத்தினதன மகுட வைசியரை அழைத்து அவர்களில் சிலரைப் பாண்டிநாட்டிற்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டான். ஆனால் அவர்கள் "நாங்கள் மூன்று தெருவாரும் எங்கே வாழ்ந்தாலும் ஒன்றாக வாழ்வோமே தவிர இங்கு சிலரும் அங்கு சிலருமாக வாழமாட்டோம்" என்று சொல்லிவிட்டனர். இதைக்கேட்ட சோழமன்னன் "நீங்கள் அனைவருமே பாண்டிநாடு செல்லுங்கள்" என்று சொல்லிவிட்டான். பாண்டிய மன்னன் தன்நாட்டில் அந்த வைசியர்களுக்குக் குடியிருக்க இடமும் கோவில் மடம் அமைத்துக் கொள்ள நிலங்களும் தருவதாக உறுதியளித்து அவர்களை அழைத்துக்கொண்டு பாண்டி நாட்டில் ஓங்காரக் குடியை அடைந்தான்.

சவுந்தரபாண்டியன் கடலுக்கு மேற்கும் பிரான்மலைக்குக் கிழக்கும் வைகையாற்றுக்கு வடக்கும் வெள்ளாற்றுக்குத் தெற்கும் ஆகிய நிலப்பகுதியை (இன்றையச் செட்டிநாட்டுப் பகுதியை) அவர்கள் குடியிருப்பதற்கும் கோவில் மடங்கள் முதலியன அமைத்துக் கொள்வதற்கும் கொடுத்தான். அரியூர் நகரம், பிரான் மலைக் கோவில், சுந்தர பட்டணம், அவ்வூர்க் கோவில், இளையாற்றங்குடி நகரம் அவ்வூர்க்கோவில் ஆகியவற்றையும் பாண்டியமன்னன் வைசியர்களுக்கு வழங்கினான்.

மூன்றுதெரு வைசிய இளைஞர்கள் தனித்தனியே மூன்று வெவ்வேறு வெள்ளாள குலப்பெண்களை மணந்து கொண்ட காரணத்தால் நாளடைவில் இவர்களால் ஒற்றுமையாக வாழ இயலவில்லை. எனவே காவிரிப்பூம்பட்டினத்தில் மேற்குத் தெருவில் வாழ்ந்த ஆறுவழி வைசியர்களுக்கு அரியூர் நகரத்தையும் பிரான்மலைக் கோவிலையும் வழங்குவதாகவும் தெற்குத் தெருவில் வாழ்ந்த நான்குவழி வைசியர்க்குச் சுந்தரபட்டினத்தையும் அவ்வூர்க் கோவிலையும் வழங்குவதாகவும் கீழத்தெருவில் வாழ்ந்த ஏழுவழி வைசியர்க்கு இளையாத்தங்குடி நகரத்தையும் அவ்வூர்க் கோவிலையும் வழங்குவதாகவும் மரகத விநாயகர் சிலை அரியூரார் பொறுப்பில் இருப்பதென்றும், அதற்குரிய வழிபாடு முதலியவை மூவருக்கும் பொதுவாக நடத்தப்படுவதென்றும் பேசி முடிவு செய்து கொண்டார்கள். இதன்பின் ஆறுவழியார் அரியூரார் என்றும் நான்கு வழியார் சுந்தரத்தார் என்றும் ஏழுவழியார் இளையாத்தங்குடி நகரத்தார் என்றும் நாட்டுக்கோட்டை நகரத்தார் என்றும் பெயர் பெற்றனர்.

நாளடைவில் ஏழு வழியாரிடையிலும் சில கருத்து வேறுபாடுகள் தோன்ற அவர்கள் தனித்தனிப் பிரிவினராகப் பிரிந்து சவுந்தர

Koviloor Digital Library

பாண்டியனைச் சந்தித்துத் தங்களுக்குத் தனித்தனிக் கோவில்கள் விட்டுத்தரப்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். பாண்டியனும் ஒப்புக்கொண்டு மாத்தூர், வைரவன்பட்டி (கி.பி. 712), இரணியூர், பிள்ளையார்பட்டி, நேமங்கோவில், இலுப்பைக்குடி (கி.பி. 714), சூரக்குடி, வேலங்குடி (கி.பி. 718) ஆகிய கோவில்களை வழங்கினான். இதுவே ஒன்பது நகரக்கோவில் உருவான வரலாறு.

கலி ஆண்டு 4262 (கி.பி. 1161) இல் பூங்கொன்றை நாட்டு வேலங்குடியில் மாணிக்கப் பெருந்தெருவில் வாழ்ந்துவந்த நேமங்கோவிலைச் சேர்ந்த இளநலமுடையான் முத்துவீரப்ப செட்டிமகன் அருணாசலம் என்பவருடைய ஐந்து வயது மகளான முத்துமீனாள் என்பவளை அப்பகுதிக்கு வேட்டைக்கு வந்த காருண்ய பாண்டிய ராசன் தன் தேரில் ஏற்றிக்கொண்டு தலைநகருக்குச் சென்றுவிட்டான். அதனை அறிந்த நகரத்தார்கள் கூட்டம் கூடிச் சிறை யெடுக்கப்பட்ட பெண்ணுக்குச் சாதிநியாயப் படியான முறையைச் செய்வதாக முடிவெடுத்துக் கொண்டு பாண்டிய மன்னனைச் சந்தித்து அப்பெண்ணை விட்டுவிடும்படி கேட்டுக் கொண்டனர். பாண்டிய மன்னன் ''உங்கள் பெண்ணென்று தெரிந்தால் தூக்கி வந்திருக்க மாட்டேன். அவளை உங்களிடம் ஒப்படைத்தால் நீங்கள் கொலை செய்து விடுவீர்கள் என்று சொல்லுகிறார்கள். அவ்வாறு நீங்கள் கொன்றதாகத் தெரிந்தால் அந்த ஒரு தலைக்கு எட்டுத்தலையும் எண்ணாயிரம் பொன்னும் உங்களிடத்து வாங்குவோம்'' என்று சொல்லி அப்பெண்ணை ஒப்படைத்தான்.

நகரத்தார்கள் அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு வரும் வழியிலேயே சாதி நியாய' முறைப்படி அப்பெண்ணைக் கொலை செய்து விட்டார்கள். இப்போது அரசனுடைய தண்டனைக்கு அவர்கள் தயாரானார்கள். அப்போது ஏழு வழிக்கு ஏழு தலை கொடுக்கலாம். பின்னும் ஒரு தலைக்கு என் செய்வது? என்ற கேள்வி எழுந்தது. அப்போது ஏழுவழியாரில் ஒருவழியாராகிய இளையாத்தங்குடி, இரணியூர், பிள்ளையார்பட்டி என்ற மூன்று கோவிலாரும் சேர்ந்து எங்கள் வழி ஒன்றாக இருந்தாலும் கோவில் மூன்றாக இருக்கிறதால் நாங்கள்தான் ஒரு தலை கூடுதலாகத் தரவேண்டும் என்று சொல்ல இளையாத்தங்குடிக் கோவிலின் ஒரு பிரிவினராகிய ஒக்கூருடையார் எழுந்து 'கூடுதலாகத் தரவேண்டிய ஒரு தலையை நாங்கள் தருகிறோம். கோவில் குருஸ்தானங்களில் விபூதி முதலிய சகல மரியாதைகளையும் எங்களுக்கு முதலில் செய்வதாய் நகரத்தார் ஒப்புக் கொள்ள வேண்டும்' என்று சொன்னார்கள் நகரத்தார் அதற்குச் சம்மதித்தார்கள். பின்பு எல்லோரும் அரசனையடைந்து 'எட்டுத்தலையும் எண்ணாயிரம் பொன்னும் கொண்டு வந்திருக்கிறோம்' என்று சொன்னார்கள். அரசன் மிகுந்த வருத்தமுற்று, ''ஒரு பெண்ணைக் கொன்ற பாவமே எனக்குப் போதும். நீங்கள் ஒன்றும் தரவேண்டாம். போய்வாருங்கள்'' என்று சொன்னான். நகரத்தாரும் திரும்பிவந்துவிட்டனர்.

கலி ஆண்டு 4389 (கி.பி. 1288) இல் நடந்த கலகத்தில் அரியூர்ப்பட்டணம் அழிந்து போயிற்று. அங்கிருந்த 64 வைசியக் குடும்பத்தினர் தப்பிச்சென்று மலையாள நாட்டை அடைந்து கோட்டாற்றங்கரையில் வாழத் தொடங்கினர். மரகத விநாயகருக்கு அவர்கள் கோவில்கட்டி வழிபாடு நிகழ்த்தி வருகின்றார்கள்.

கலி ஆண்டு 4644 (கி.பி. 1543) இல் நாட்டரசன்கோட்டையில் கலகம் ஏற்பட்டுக் கொள்ளையர்களால் சில நகரத்தார் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். நகரத்தார்கள் தங்கள் குருவைச் சந்தித்து அப்பெண்களைச் சாதிமுறை நியாயப்படி கொலைசெய்ய அனுமதி வேண்டினர். குருமார்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ஆனாலும் நகரத்தார் வற்புறுத்தவே அவர்கள் அனுமதி கொடுத்து விட்டு, காசிக்குக் கங்கா ஸ்நானத்திற்குப் போய்விட்டார்கள்.

நிரம்ப அழகிய குருக்கள் மட்டும் மூன்றாவது ஆண்டில் துலாவூருக்குத் திரும்பிவிட்டார். ஆனால் கலாமடம் குரு 12 ஆண்டுகள் வரை திரும்பவில்லை. எனவே நகரத்தாரில் சிலர் திருப்புனவாயிலில் இருந்த இராமநாத சுவாமிகளிடம் உபதேசம் பெற்றுக் கொண்டனர். 21 ஆண்டுகளுக்குப் பிறகு கலி ஆண்டு 4665 இல் (கி.பி. 1564) கலாமடம் குரு திரும்பிவந்து சேர்ந்தார். நகரத்தார்கள் அவரைச் சந்தித்து நடந்ததைக் கூறினர். அவர் இராமநாத சுவாமிகளிடம் தீட்சை பெற்றுக் கொண்டவர்கள் வமிச பரம்பரையராக அவர் பரம்பரையிலேயே தீட்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லி அவருக்குக் கனகபுரமாகிய இல்லஞ்சேரிப் பட்டணம் என்ற பாதரக்குடியில் மடாலயம் அளித்தார், அது முதல் நகரத்தார் ஆண்களுக்குக் கலாமடமும் பாதரக்குடி மடமும் பெண்களுக்குத் துலாவூர் மடம் என மூன்று குருஸ்தானங்கள் இருந்து வந்தன.

இத்தொன்மை வரலாற்றின் பின்நிகழ்வுகளாகக் குறிப்பிடத்தக்கவை வருமாறு :

Koviloor Digital Library

கி.பி. 1278 இல் இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி இருகோவில் பிரிவினரும் இளையாத்தங்குடிப் பிரிவிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டுத் தனித்தனிப் பங்காளிகளாக வாழ முடிவு செய்தனர். ஆயினும் இன்றுவரை அந்த இருபிரிவினரும் தமக்குள் திருமண உறவு கொள்வதில்லை.

கலாமடமும் பாதரக்குடியும் காலப்போக்கில் ஒன்றிணைந்து பாதரக்குடி மட்டுமே நகரத்தார் ஆண்கள் குருபீடமாக இப்போது விளங்குகிறது.

ஒன்பது கோவில்களை ஒட்டிய ஊர்ப் பகுதிகளில் மட்டும் வாழ்ந்த நகரத்தார் குடும்பங்கள் காலப்போக்கில் செட்டிநாட்டின் பல்வேறு ஊர்களுக்கும் பரவி 96 ஊர்களில் வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. இப்போது 75 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர்.

(பார்க்க : செட்டிநாடு, நிலப்பரப்பு)

நகரவிடுதி

தொடக்கத்தில் புகழ்பெற்ற திருத்தலங்களில் வழிபாட்டிற்காகச் செல்லும் நகரத்தார் சமூகத்தினர் குறைந்த செலவிலும், பாதுகாப்புடனும் தங்கும் பொருட்டு, தனிப்பட்ட நகரத்தார் குடும்பத்தினரோ, ஓரூரைச் சேர்ந்த நகரத்தாரோ, அத்தலத்தில் அல்லது அதனை யொட்டிய நகரங்களில் வாழும் நகரத்தார்களோ, சத்திரங்கள், மடங்கள், விடுதிகள் போன்றவற்றை அமைத்தனர்.

அவற்றின் பயன்பாட்டை நன்கு உணர்ந்த நகரத்தார், இந்நூற்றாண்டில், அண்மைக் காலத்தில், பெருநகரங்களிலெல்லாம், நகரத்தார் சங்கம் அமைத்த கையோடு, அச்சங்கத்தின் பொறுப்பில் ஒரு நகர விடுதியும் அமைத்து, அதனை நிருவகித்து வருகின்றனர். இவ்வாறான முறையில் அமைந்துள்ள நகர விடுதிகளின் பட்டியல், ஊர்களின் அகர வரிசையில், இங்கே தரப் பெறுகிறது.

1. நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம், அயோத்தியா.
2. ,, ,, அலகாபாத்து (பிரயாகை)
3. நகர விடுதி, இராமேசுவரம்.
4. நகரத்தார்கள் நகர மடம், எட்டுக்குடி.
5. நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம், கயா.
6. நகரத்தார் இல்லம், கல்கத்தா.
7. ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம், காசி.
8. நகர விடுதி, காரைக்குடி.
9. ,, ,, காவிரிப் பூம்பட்டினம்.
10. ,, ,, கோயம்புத்தூர்.
11. ,, ,, சிதம்பரம்
12. நகர மடம், சுவாமிமலை.
13. இரங்கூன் நகர விடுதி, சென்னை.
14. காரைக்குடியார் நகர விடுதி, சென்னை.
15. தேவகோட்டையார் நகர விடுதி, சென்னை.
16. நகரவிடுதி, தஞ்சாவூர்.
17. நகரச் சத்திரம், தலைக்காவேரி.
18. நகரமடம், தாரகேஸ்வரம்.
19. நகரவிடுதி, திருக்கடவூர்.
20. நகரவிடுதி, திருச்சி.
21. ,, ,, திருச்செந்தூர்.
22. ,, ,, திருத்தணி.
23. ,, ,, திருநெல்வேலி.
24. ,, ,, திருப்பரங்குன்றம்.
25. நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம், திருப்போரூர்.
26. நகரத்தார் ஓயா மடம், திருவண்ணாமலை.
27. மெ.க. அன்னசத்திரம், திருவண்ணாமலை.
28. நகரவிடுதி, திருவாரூர்.
29. நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம், திருவாலங்காடு.
30. நகரவிடுதி, திருவொற்றியூர்.
31. நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம், நாசிக்.
32. நகரத்தார் இராக்கால மடம், பழநி.
33. நகரவிடுதி, புதுக்கோட்டை.
34. ,, ,, பெரியநயினார் கோவில்
35. ,, ,, மதுரை.
36. நகர விடுதி, மயிலாடுதுறை.
37. ,, ,, மைலம்.
38. ,, ,, வைத்தீசுவரன் கோவில்.

நடராசபுரம்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், அ. சிறுவயல், சாத்தரசன்பட்டி வழியாக 32 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பனங்குடியிலிருந்து வந்த நகரத்தார்கள் இணைந்து உருவாக்கிய ஊரே நடராசபுரம் என்பர். இளையாத்தங்குடி, வைரவன் கோவில், இலுப்பைக்குடி, சூரக்குடி ஆகிய 4 நகரக் கோவில்களைச் சேர்ந்த 123 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

Koviloor Digital Library

இவ்வூரில் பர்வதவர்த்தினி உடனாய இராமநாதசாமி கோவில் என்ற நகரச்சிவன் கோவில் உள்ளது. இவ்வூரைச் சேர்ந்த சூரக்குடி நகரத்தார் ஒரு பிள்ளையார் கோவிலையும் அதனையொட்டி ஒரு குடி தண்ணீர் ஊருணியை யும் அமைத்துள்ளனர். இது தவிர 3 ஊருணிகள் இவ்வூரில் உள. மிளகாய்ச்சாமி சமாதி ஒன்றும் அதனைச் சார்ந்தமடம் ஒன்றும் நகரத்தார் நிருவாகத்தில் உள்ளன.

1950இல் முரு. இராம. இராம. குடும்பத்தால் தொடங்கப்பெற்ற இராமாயி நினைவு தொடக்கப் பள்ளியும், 1970 இல் முரு.இராம.இராம. விசாலாட்சி ஆச்சியால் தொடங்கப்பெற்ற இராமசாமி செட்டியார் நினைவு உயர்நிலைப் பள்ளியும் அவ்வக் குடும்பத்தாரால் நடத்தப் பெறுகின்றன.

தங்கராஜா என அழைக்கப்பெறும் முரு. இராம. சுப. இராம. இராமநாதன் செட்டியார் நிலமும், கட்டிடமும் நன்கொடையாகக் கொடுக்க அதில் அரசு மருத்துவமனை இயங்குகிறது.

இவ்வூரைச் சேர்ந்த டாக்டர்.லெ.சிவ. சிவசுப்பிரமணியன் தளவாய்புரத்தில் ஒரு காளியம்மன் கோவிலைக் கட்டி நிருவகித்து வருகிறார். இவ்வூர்த் தெப்பக்குளம் முத்து.உலசுப. சுப்பிரமணியன் செட்டியாரால் அமைக்கப் பெற்றது. இவ்வூரைச் சேர்ந்த முரு .இராம. இராம. குடும்பத்தினர் அருகிலுள்ள திருத்திப்பட்டி, புரச்சான்குளம் ஆகிய சிற்றூர்களில் ஊருணிகள் அமைத்துக் கொடுத்துளர்.

நடராசன், அ.லெ., (9-6-1909 - . . .)

ஆத்தங்குடி
எழுத்தாளர், பதிப்பாளர்

1941 இல் காரைக்குடியில் புதுமைப் பதிப்பகத்தைத் தொடங்கினார். டி.கே.சி. யினுடைய இராமாயணப் பதிப்பு, கல்கியின் முதல்நூல் ஆகியவற்றை வெளியிட்ட பெருமை இவருக்கு உண்டு. தொடர்ந்து இவர்களது நூல்களையும் ராஜாஜி, கவிமணி ஆகியோரது நூல்களையும் புதுமைப்பதிப்பகம் வெளியிட்டது.

வாழ்க்கை வரலாறுகள் எழுதுவதில் இவர் ஈடு இணையற்ற தனித்திறமை உடையவர். நபிகள் நாயகம், ஏசுநாதர், மகாவீரர், விவேகானந்தர், வள்ளலார் வரலாறுகளை இவர் எழுதியிருக் கிறார். ஏழைபங்காளன் லெனின் என்னும் நூலை எழுதியதற்காக இவருக்கு 'சோவியத்நாடு' வழங்கிய நேரு விருதும் உருசியாவில் சுற்றுப்பயணம் செய்யும் வாய்ப்பும் கிடைத்தன.

இவர் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளர். லின்யுடாங், வினோபா பாவே, முல்க்ராஜ் ஆனந்த் ஆகியோரின் நூல்களையும் மகாத்மா காந்தியடிகளின் 'மாணவர்க்கு', 'பெண்களுக்கு', 'நமது மொழிப் பிரச்சினை', 'பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள்' ஆகிய நூல்களையும் அழகு தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். மகாபாரதக் கதையைச் சுவையான தமிழ் உரைநடையில் வெளியிட்டுள்ளார். 'ஆயிரத்தொரு இரவுகள்' என்னும் அரபு நாட்டுக் கதைகளைப் பல தொகுதிகளாகத் தமிழில் தந்துள்ளார். இவரது பெயரை நாடறியச் செய்த நூலாக இது அமைந்துள்ளது.

தகுதி மிக்க நூல்களைத் தரமாகப் பதிப்பித்தவர், இணையற்ற வாழ்க்கை வரலாற்றாசிரியர், எளிய தமிழில் இனிய மொழிபெயர்ப்பாளர் என்பவை இவரது தனிச்சிறப்புக்களாகும்.

நடராசன் செட்டியார், ஆ., (4-7-1914)

வைரவன் கோவில்
வெற்றியூர்
இதழாளர்

ஆதப்பசெட்டியார் – கண்ணம்மை ஆச்சியின் மகன். இலங்கைக்கு இளமையில் சென்ற இவர் அங்கேயே கல்வி கற்று, தமிழ்ப்பற்று மிக்கவராக வீரகேசரி, குமரன், தனவணிகன் ஆகிய இதழ்களில் கதைகள் கட்டுரைகள் எழுதியுள்ளார். கவிஞர் கண்ணதாசனை ஆசிரியராகக் கொண்டு 'தென்றல்' இதழையும், தாமே ஆசிரியராக இருந்து 'முல்லை' வார இதழையும் நடத்தினார். மகாகவி பாரதியாரின் கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றை 'அக்னி முதலிய கவிதைகள், கட்டுரைகள்' என ஆங்கிலத்தில் வெளியிட் டுள்ளார். இவர் இப்போதும் சமூக வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு நகரத்தார் குரல், நகரத்தார் மலர் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டு எழுதி வருகிறார்.

நடைப்பயணம்

திருக்கோவில்களுக்கு விரதம் மேற்கொண்டு நடந்து சென்று வழிபடுவதே 'நடைப்பயணம்' ஆகும். கி.பி. 1600 ஆம் ஆண்டில் நெற்குப்பை குப்பா பிச்சஞ்செட்டி குமரப்பன் உப்பு வணிகம் மேற்கொண்டு பழநிக்கு நடந்து சென்றபோது வணிகம் நன்கு நடைபெற்றதால் ஆண்டுதோறும் நடந்து வந்து பழநியாண்டவருக்கு அன்ன தானமிட்டு வழிபடுவதாக வேண்டிக் கொண்டார். அதன்பின்னர் ஈசான சிவாசாரிய சுவாமிகள்

Koviloor Digital Library

ஆணையின்படி காவடிகட்டிக் கொண்டு நடந்து சென்று வழிபடலானார்கள். அன்று தொடங்கிய பழநி வழிநடைப் பயணம் ஏறத்தாழ நானூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்று ஆயிரக்கணக்கான மக்கள் வழிநடைப் பயணம் மேற்கொள்கின்றார்கள். (பார்க்க : பழநி நடைப்பயணம்)

தேவகோட்டை, காரைக்குடி மற்றும் சுற்றியுள்ள ஊர்களிலிருந்து ஆண்டுதோறும் தைப்பூசத்திற்கு முந்திய நாள் குன்றக்குடிக்குக் காவடி எடுத்துச் செல்பவர் பின்னால் மக்கள் நடைப்பயணம் சென்று வருவதும் பலநூறு ஆண்டுகளாகப் பழக்கத்தில் உள்ளது. சில நகரத்தார் குடும்பங்கள் ஆண்டுதோறும் தவறாமல் குன்றக்குடிக்குக் காவடி எடுத்துச் செல்கிறார்கள். காவடி எடுப்பவர்கள் மலையைச் சுற்றியுள்ள விடுதிகளில், நடைப்பயணம் வரும் உறவினர்கட்குச் சோறுவடித்துப் போடுவார்கள்.

கீழச்சிவல்பட்டியிலிருந்து புள்ளிருக்கு வேளூர் என்னும் வைத்தீசுவரன் கோவிலுக்கு விரதமிருந்து நடந்து சென்று வைத்தியநாதர், தையல் நாயகி, முத்துக்குமாரசாமி ஆகியோரை வழிபட்டு வருவது வைத்தீஸ்வரன் கோவில் நடைப்பயணம் ஆகும். ஒவ்வோராண்டும் கிரணிப்பட்டித் திருவிழா நிறைவுற்றதும் சித்திரை மாதம் முதல் புதன்கிழமை இரவு கீழச்சிவல்பட்டியில் பொங்கல் வைத்துத் திருநீறு பெற்றுக்கொண்டு, அங்கிருந்து சாமான்கள் ஏற்றிய வண்டிகள் பின்தொடர, மக்கள் நடந்து செல்வார்கள். செவ்வாய்க்கிழமை அதிகாலையில் வைத்தீஸ்வரன் கோவிலை அடைவார்கள். (பார்க்க : வைத்தீசுவரன் கோவில் நடைப்பயணம்)

ஆறுபடைவீடுகட்கும் தேவகோட்டையிலிருந்து சிறு சிறு குழுக்களாக மாதக் கார்த்திகைக்கு நடந்து செல்லும் வழக்கம் உள்ளது. மதுரை நகரவிடுதியிலிருந்து திருப்பரங்குன்றத்திற்குக் காவடி, பால்குடம் எடுப்பவரும் பின்தொடர்ந்து நடைப்பயணம் செல்வோரும் உளர்.

சென்னையில் தேவகோட்டையார் விடுதி, காரைக்குடியார் விடுதிகளிலிருந்து மாசி மகத்திற்குப் புறப்படும் முருகப் பெருமானைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் திருவொற்றியூருக்கு நடைப்பயணம் சென்று வருகிறார்கள்.

அந்நாளில் காசிக்கு நடந்து சென்றுதான் வழிபட்டுத் திரும்பவேண்டும். ஆனால் இன்றும் இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு நடைப் பயணமாக நகரத்தார்கள் சென்று வருகிறார்கள். 1983இல் அரு. சோமசுந்தரம், 1990 இல் வைரவன், 1997இல் காசிநாதன் தலைமையில் மூன்று குழுக்கள் காசி நடைப்பயணம் சென்று வந்துள்ளனர். அரு. சோமசுந்தரம் தனது அனுபவத்தை எழுதிய 'இராமேஸ்வரம் – காசி நடைப்பயணம்' என்ற நூலை வழிகாட்டியாகக் கொண்டே வேறு சில குழுக்கள் காசிக்குச் சென்று வந்துள்ளன.

சென்னை பவளக்காரத் தெரு விடுதியிலிருந்து திருத்தணி, திருப்போரூர், சிறுவாபுரி ஆகிய முருகன் திருத்தலங்களுக்கு நடைப்பயணம் சென்று வருகின்றார்கள். நாகப்பட்டினம் நகரத்தார் சித்ரா பௌர்ணமிக்கு எட்டுக்குடிக்கு முருகப்பெருமானை எழுந்தருளச் செய்து நடைப்பயணம் சென்று வருகிறார்கள். கோவை நகரத்தார் ஆண்டுதோறும் மார்கழி, தை மாதத்தில் பழநி வழிநடை பஜனை மேற்கொண்டு ஈச்சநாரி, போரூர் ஆகிய திருக்கோவில்களுக்கு நடைப் பயணம் சென்று வருகிறார்கள். நற்சாந்து பட்டியிலிருந்து மலைக்கோவிலுக்கு நடைப் பயணம் சென்று வருகிறார்கள். பொதுவாக நகரத்தார்கள் தாங்கள் வாழும் ஊர்களுக்கு அண்மையில் உள்ள முருகன் திருத்தலம், திருக்கோவில்களுக்கு நடந்து சென்று வழிபட்டு வருகின்றார்கள்.

வழிநடைப் பயணம் செல்வோர்க்கு வழியில் நகரத்தார் பெருமக்கள் ரொட்டி, மிட்டாய், பழங்கள், காப்பி, தேநீர், குளிர்பானங்கள், இளநீர், உணவுப்பொட்டலங்கள் வழங்குதல், சாப்பாடு போடுதல், பக்திப்பாடல் வழிநடைப் பயண நூல்களை அச்சிட்டு வழங்குதல் எனப் பல்வேறு வகைகளில் தொண்டு செய்து வருகிறார்கள். இந்நூல்களுக்கு நமது வணிகர்கள் விளம்பரம் நல்குகிறார்கள். இவ்வாறு தம்மை வருத்தி இறைவனை வழிபடச் செல்வதும் அவ்வாறு வழிபடச் செல்வோர்க்குப் பல்வேறு வகைகளில் தொண்டு செய்வதும் நகரத்தார் பண்பாட்டுச் சிறப்புக் கூறுகளாகும்.

நமது நகரத்தார்

அம்பத்தூரிலிருந்து வெளிவரும் மாதஇதழ். ஏஎல். அழகப்பன் இவ்விதழின் ஆசிரியர். டெம்மி அளவில் 30 பக்கங்கள் கொண்டது. தனி இதழின் விலை ரூபாய் நான்கு. 'வாய்மையை மதிப்போம், தூய்மையைத் துதிப்போம்' என்பதைக் குறிக்கோள் தொடராகக் கொண்டு வெளிவரும் இவ்விதழ் 1996 அக்டோபர் பதினைந்தாம் நாளில் தொடங்கப் பெற்றது. நகரத்தார் தொடர்பான செய்திகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து வெளியிடும் இவ்விதழில் இச்சமூகத்தின் பிரச்சினைகள் குறித்த தலையங்கங்களும் கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

Koviloor Digital Library

நற்சாந்துபட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து திருமயம், விரையாச் சிலை வழியாக 40 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய ஐந்து கோவில்களைச் சேர்ந்த 573 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். திருமலை சமுத்திரம் என்ற மற்றொரு பெயராலும் அறியப்படும் நற்சாந்துபட்டி, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

இங்கு சிவகாமி அம்பாள் உடனாய சிதம்பரேசுவரர் திருக்கோவில் என்ற நகரச்சிவன் கோவில் உள்ளது. 1928 இல் கட்டப்பெற்ற இக்கோவிலுக்கு 1928, 1972, 1991 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நடைபெற்றுள. இங்கு வைரவன் கோவில் பெரிய வகுப்பைச் சேர்ந்த நகரத்தார்களுக்குப் பொதுவான பழநியாண்டவர் திருக்கோவிலும், இளையாத்தங்குடி நகரத்தார்களில், வீ.மு.வீ.வீரப்ப செட்டியார் குடும்பத்தினரால் கட்டி நிருவகிக்கப் படும் வீரராகவப் பெருமாள் கோவிலும் உள. கோவில்களை ஒட்டி 3 ஊருணிகள் உள. நகரத்தார் பொதுவில் கட்டப்பட்ட கல்யாண மண்டபமும் இவ்வூரில் உளது.

அருகேயுள்ள கோட்டூரின் சுந்தரநாயகி அம்மன் 4 ஆண்டுகட்கொரு முறை நற்சாந்துபட்டிக்கு எழுந்தருளி 3 நாட்களுக்குப்பின் திரும்பும். அது போல அம்மன் கோவிலில் இருந்து நகரச்சிவன் கோவிலுக்கு வேல் எடுத்து வந்து நகரத்தார் நடத்தும் மகேசுவர பூசையும் 4 ஆண்டுகட்கொரு முறை சிறப்பாக நடைபெறுகிறது.

இவ்வூர் கு. இராம. குமரப்ப செட்டியார் 11-6-1954 இல் தம் தந்தையார் நினைவாக இராமநாதன் செட்டியார் நடுநிலைப் பள்ளியை நிறுவினார். இவரது மகன் கும. இராமநாதன் செட்டியார் 1958-59 இல் இதனை உயர்நிலைப் பள்ளியாகவும் 1988 இல் மேல்நிலைப் பள்ளியாகவும் உயர்த்தினார். மேலும் நகரப் பொதுவில் ஸ்ரீ சண்முக விலாச கலாசாலை என்ற தொடக்கப்பள்ளி ஒன்றும் நடத்தப் பெறுகிறது. கு. இராம. கும. குமரப்ப செட்டியார் கொடுத்த நன்கொடையுடன் தொடங்கப்பெற்ற ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும் இயங்குகிறது.

இங்கு சாமியாடிச் செட்டியார் எனப்பெயர் பெற்ற ஆண்டியப்ப செட்டியார் வீட்டில் 1843 முதல் 150 ஆண்டுகளாகப் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப்படுகிறது. மேலும் கம்பன்செட்டியார் வீடு, பெ.இராம. குடும்பத்தார் வீடு ஆகிய வீடுகளிலும் நூறு ஆண்டுகட்கும் மேலாக இராமாயணம் தொடர்ந்து படிக்கப்பட்டு வருகிறது.

இவ்வூரில் இளையாத்தங்குடி பெருமருதூருடையார் நகரத்தார் இலட்சுமி அப்பத்தாள் படைப்பு, உமையாள் ஆயாள் படைப்பு, நல்லி அப்பத்தாள் படைப்பு ஆகிய படைப்புக்களையும், மாத்தூர் உறையூர் நகரத்தார் வள்ளியப்பத்தாள் படைப்பையும், வைரவன் கோவில் நகரத்தாரில் கழனிவாசலுடையார்ப் பிரிவினர் சேவாத்தாள் படைப்பையும், பிள்ளையார்பட்டி நகரத்தார் அழகி அப்பத்தாள் படைப்பையும் தங்களுக்குரிய பொதுப் படைப்புக்களாகப் படைத்து வருகின்றனர். வைரவன் கோவில் பெரிய வகுப்பு நகரத்தார் தங்கள் பழநியாண்டவர் கோவிலில் ஆடிப்பூசை நடத்துகின்றனர்.

மேலும் நற்சாந்துபட்டி, இலட்சுமிபுரம் (வி), குடியாபட்டி, குருவிக்கொண்டான்பட்டி, நேமத்தான்பட்டி, பள்ளத்தூர், பனையப்பட்டி, புதுப்பட்டி, விரையாச்சிலை, வேந்தன்பட்டி ஆகிய பத்து ஊர்களிலும் வாழும் இலுப்பைக்குடி நகரத்தார், இரண்டாண்டுகட்கொரு முறை, படைத்து வரும் அடைக்கம்மை அப்பத்தாள் படைப்புக்குரிய கோவில் நற்சாந்துபட்டி யிலேயே அமைந்துள்ளது.

இவ்வூரைச் சேர்ந்த வீர. மாணிக்கம் செட்டியார், சித. சிதம்பரம் செட்டியார் ஆகியோர் இ.தே.ரா.வில் பணிபுரிந்துள்ளனர்.

இவ்வூரைச் சேர்ந்த பெ.இராம.பெ. குடும்பத்தார் திருக்கொள்ளம்பூதூரிலும், திருப்பேரையூரிலும் திருப்பணி செய்துள்ளர்.

நாகப்பசெட்டியார், பத்மஸ்ரீ ஆ., (6-8-1915 - 13-3-1982)

நேமங்கோவில்
மேலைச் சிவபுரி
தொழிலதிபர்

ஆண்டப்ப செட்டியார் – செல்லம்மை ஆச்சியின் மகன். 1948 இல் இந்தியா லெதர் கார்ப்பரேசன் என்ற நிறுவனத்தைத் தொடங்கி தோல் மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதி வணிகத்தை மேற்கொண்டார். படிப்படியாக வளர்ந்து 1964 இல் ரூபாய் ஏழரைக் கோடி மதிப்பிலான ஏற்றுமதி வணிகம் செய்து இந்தியாவில் முதல் இடத்தைப் பிடித்தார்.

Koviloor Digital Library

அதே ஆண்டில் தோல்பொருள் கண்காட்சிக் கழகம் அமைக்கப் பெற்றபோது இவர் அதன் முதல் தலைவரானார். இவரது வாழ்நாள் முழுவதும் இவரே அவ்வமைப்பின் தலைவராக இருந்து ஆண்டுதோறும் தோல் பொருள் கண்காட்சியைச் சென்னையில் சிறப்பாக நடத்தினார்.

1965இல் குரோம் லெதர் நிறுவனத்தை வாங்கி 1981 வரை திறம்பட நடத்தினார். சென்னை – நெல்லூர்ச் சாலையில் ஒரு தொழிற் பேட்டையைத் தொடங்கித் தோல் பொருள் உற்பத்தி இயந்திரங்களை இந்தியாவிலேயே தயாரித்தார்.

மத்தியத் தோல் ஆராய்ச்சிக் கழகம் சென்னையில் அமைவதற்குப் பெருமளவில் காரணமாக இருந்த இவர் அதன் நிர்வாக ஆலோசனைக் குழுவின் தலைவராகப் பணிபுரிந்தார். அவ்வளாகத்தில் தோல் அருங்காட்சியகம் அமைப்பதற்காகத் தாமே முன்னின்று ஒரு கட்டிடத்தைக் கட்டி நன்கொடையாக வழங்கினார். அக்கட்டிடத்தின் அருகே இவரது முழுஉருவச் சிலை ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது.

தோல் ஏற்றுமதி வளர்ச்சிக் கழகம், தென்னிந்திய ஏற்றுமதியாளர்கள் சங்கம், தோல், தோல்பொருட்கள் தொழில் வளர்ச்சிக் கழகம், தென்னிந்தியத் தொழில் வர்த்தகசபை (1966 – 68) ஆகிய அமைப்புக்களின் தலைவராகப் பணியாற்றிய சிறப்பு இவருக்குண்டு. எஸ்.ஆர்.பி. டூல்ஸ் நிறுவனத்தின் தலைவராகவும் இந்தியன் வங்கி, மதுரை வங்கி ஆகியவற்றின் இயக்குநராகவும் இருந்துள்ளார்.

மேலைச் சிவபுரியில் தாம் பயின்ற சன்மார்க்க சபையின் செயலராகவும், கல்லூரிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றிய இவர் அங்கு பயிலும் மாணவர்களுக்காக நாகப்பா மாணவர் இல்லம் என்ற விடுதியைக்கட்டி நன்கொடையாக வழங்கியுள்ளார்.

"இந்தியத் தோல் தொழிலை இலண்டனின் இரும்புப் பிடியிலிருந்து விடுவித்து உலகத் தோல் வணிக வரைபடத்தில் இந்தியாவிற்கு ஒரு நிலையான இடத்தைப் பெற்றுத் தந்தவர்" என இவரை 'ஐம்பதாண்டு இந்தியத் தோல் தொழில் வளர்ச்சி' என்னும் நூல் பாராட்டுகிறது. (பார்க்க : பத்மஸ்ரீ நாகப்ப செட்டியார் உருவச்சிலை)

நாகப்ப செட்டியார், வெ.வீர.நா. அரு., (25-12-1913 - 20-12-1980)

இளையாத்தங்குடி, பட்டினசாமி
கானாடுகாத்தான்
நாடாளுமன்ற உறுப்பினர்

அருணாசலம் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். 1947 முதல் 1952 வரை சென்னை மாகாண சட்டசபையில் மேலவை உறுப்பினராகவும், 1952 முதல் 1957 வரை காங்கிரஸ் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பொதுத் தொண்டு புரிந்துள்ளார். அரசியலில் இருந்த போதும் அதை வைத்துச் சுயலாபம் அடையமுயன்றதில்லை. அவருக்கு வழங்கப்பட்ட நூற்பாலை உரிமத்தை மற்றொருவருக்கு இலவசமாகவே வழங்கினார். சேவை மனப்பான்மையுடன் அரசியலில் பங்குபெற்று மக்களுக்குத் தொண்டாற்றினார்.

நாகப்பன், டாக்டர். கா., (11-3-1932)

பிள்ளையார்பட்டி
அரிமழம்
கல்வியாளர்

காசிச் செட்டியார் – பொற்கொடியாள் ஆச்சியின் மகன். கண்டனூரில் பள்ளிக்கல்வி கற்றபின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் ஆனர்சு பட்டவகுப்பில் 1954 இல் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அமெரிக்காவில் பொறியியல் துறையில் ஆராய்ச்சி மேற்கொண்டு 1965 இல் டாக்டர் பட்டம் பெற்றார். இவரது துணைவியார் மீனாட்சி நாகப்பன் கணிதத் துறைப் பேராசிரியர் ஆவார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும், சேலம் தியாகராசர் தொழில் நுட்பக் கல்லூரி முதல்வராகவும், தியாகராசர் பொறியியல் கல்லூரியில் மின்பொறியியல் துறைத் தலைவராகவும் பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்ற இவர், காலத்தின் போக்கை உணர்ந்து கணிப்பொறி அறிவியல் துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, அது தொடர்பான எல்லா மொழியும் கற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவரை விரும்பியழைக்க அங்கு கணிப்பொறி இயல் துறை இயக்குநராகச் சென்று அத்துறையை வளர்த்தார்.

1991 இல் அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப் பெற்று அங்கு அஞ்சல் வழிக்கல்வி தொடங்கிப் பலதுறைகளை

Koviloor Digital Library

விரிவாக்கி அப்பல்கலைக்கழக வளர்ச்சிக்குத் தொண்டாற்றினார். கணிப்பொறித் துறையில் நான்கு நூல்கள் எழுதியுள்ளார். 1987 – 88 ஆம் ஆண்டில் தமிழக அரசு இவருடைய கல்விப் பணியைப் பாராட்டி நல்லாசிரியர் விருது வழங்கியது.

நாகப்பன், டாக்டர். நா., (24-11-1951)

இலுப்பைக்குடி
நாச்சியாபுரம்
கண்மருத்துவர்

சொ. நாச்சியப்ப செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பி.எஸ்.சி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ் (1978), மதுரை அரவிந்த் கண் மருத்துவ மனையில் கண் மருத்துவம் தொடர்பான டி.ஓ. (1985), எம்.எஸ். (1989) ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.

அரவிந்த் கண் மருத்துவமனையில் 1983 முதல் 94 வரை பணியாற்றினார். அப்போது அம்மருத்துவ மனையால் அனுப்பப் பெற்று அமெரிக்காவில் கண் பிளாஸ்டிக் அறுவை மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றுத் திரும்பினார். அரவிந்த் மருத்துவமனையில் கண் பிளாஸ்டிக் அறுவை மருத்துவம் பற்றி ஒரு மாநாட்டையும் நடத்தியுள்ளார்.

1994 ஜூன் மாதம் முதல் காரைக்குடியில் ஆதித்ய நேத்ராலயா என்ற பெயரில் கண் மருத்துவமனையை நடத்திவருகிறார். கணிப்பொறி வழிப் பரிசோதனை, உட்குழிக் கண்ணாடி பொருத்துதல், கண்ணில் பிளாஸ்டிக் அறுவை மருத்துவம் செய்தல் ஆகியவை இவரது தனிச் சிறப்புக்களாகும்.

நாச்சாள் அண்ணாமலை, டாக்டர். (12-5-1953)

மாத்தூர் - மணலூர்
கண்டவராயன்பட்டி
மருத்துவர்

புதுப்பட்டியில் ப.இராம.ப. இராமநாதன் செட்டியார் – சேதுராமாயி ஆச்சியின் மகளாகப் பிறந்த இவர் கண்டவராயன்பட்டியில் கா. அண்ணாமலையை மணந்தார்.

எம்.டி.தேர்வில் அணைத்திந்திய அளவில் முதல் இடத்தில் தேர்வு பெற்ற இவர், இப்போது பெங்களூரில் உள்ள டாக்டர் அம்பேத்கார் மருத்துவக் கல்லூரியில் துணைப் பேராசிரியை ஆகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். பெங்களூரில் தாமே ஒரு மருத்துவமனை நடத்துவதோடு பல பெரிய மருத்துவமனைகளுக்குக் குறித்த நேரங்களில் சென்று மருத்துவ ஆலோசனை வழங்கியும் வருகிறார். 1991இல் நடைபெற்ற அனைத்திந்திய மருத்துவர் மாநாட்டில் இவரது ஆராய்ச்சிக்கட்டுரை ஒன்று அனைவராலும் பாராட்டப் பெற்றது.

நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த பெண் மருத்துவர் ஒருவர் வேறு மாநிலம் ஒன்றில் மருத்துவக்கல்லூரி ஆசிரியராகப் பணிபுரிந்து, பாராட்டுப் பெறுவது போற்றத்தக்கது.

நாச்சியப்பன், நாரா., (13-7-1927)

பிள்ளையார்பட்டி
ஆ. முத்துப்பட்டணம்
எழுத்தாளர், கவிஞர்

நாராயணன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சியின் மகனான இவர் பர்மாவில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் திருச்சி தேசியக் கல்லூரியில் உயர்கல்வியும் பெற்றவர்.

தமது 20 ஆவது வயதில் கல்லூரியில் பயிலும் காலத்திலேயே 'பொன்னி' இதழில் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர் என இவர் அறிமுகப்படுத்தப் பட்டார். அவரது ''மழை'' கவிதை இவ்வரிசையில் முதலாவது கவிதை என்பது குறிப்பிடத்தக்கது.

தந்தை பெரியார், பாரதிதாசன், அறிஞர் அண்ணா ஆகியோரிடம் ஈடுபாடு கொண்ட இவரது எழுத்துக்களில் பகுத்தறிவு மணம் கமழும். 1946 ஆம் ஆண்டில் ஆத்தங்குடியில் திராவிடர் கழகம் தொடங்கி, பாரதிதாசனை அழைத்து வந்தார். பர்மா திராவிட முன்னேற்றக் கழகத்தில் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய பொழுது பர்மா வந்த பெரியாரை வரவேற்று உடன்பயணம் சென்று 'பர்மாவில் பெரியார்' என்ற நூல் எழுதியுள்ளார். அண்ணாவின் நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார். 'முத்து' சிறுவர் இதழையும் 'இளந்தமிழன்' மாத இதழையும் சில ஆண்டுகள் நடத்தினார். 'பொன்னி' இதழில் துணையாசிரியராகப் பணியாற்றிய இவர் சிறுவர்களுக்கு ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். இவரது கவிதைகள் 2 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 'நான்கு பார்வையில் பாரதிதாசன்', 'குயிலும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலும்' என்பன இவரது திறனாய்வு நூல்கள்.

1990 இல் தமிழக அரசு வழங்கிய பாரதிதாசன் விருது, பாரதிதாசன் பரம்பரைக் கவிஞரான இவருக்குக் கிடைத்த அங்கீகாரமாகும். 1991 இல் சிறுவர் இலக்கியத்துக்கான தமிழக அரசின் பரிசையும் 'கீதை காட்டும் பாதை' என்னும் நூலுக்காக 1994 இல் சேலம் அறக்கட்டளைப் பரிசையும் பெற்றுள்ள இவர் ஏறத்தாழ 60 நூல்கள் படைத்துள்ளார்.

Koviloor Digital Library

நாச்சியாபுரம்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து மானகிரி வழியாக 13 கி.மீ. தொலைவில் உள்ளது. கம்பனூர் நாச்சியாபுரம் என்பதே பழைய வழக்கு.

இளையாத்தங்குடி, வைரவன்கோவில், இலுப்பைக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய 4 கோவில்களைச் சேர்ந்த 310 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

நாச்சியாரம்மன் கோவில் நகரப் பொதுக் கோவிலாகும். 24–6–1991 இல் குடமுழுக்குவிழா நடைபெற்றது. சித்திரைத் திருவிழாவும் நவராத்திரித் திருவிழாவும் கொண்டாடப் பெறுகின்றன. இலுப்பைக்குடியைச் சேர்ந்த சுப. இராம. இராம. குடும்பத்தார் உமாமகேசுவரர் கோவிலைக் கட்டியுள்ளனர். பிள்ளையார்பட்டிக் கோவிலாரான பெரி.மெ. கருப்பஞ்செட்டியாரால் கட்டப்பட்ட பிள்ளையார் கோவில், தண்டாயுதபாணி கோவில் ஆகியவை சிறிதுகாலம் நடுவிக்கோட்டையார் வீட்டு நிருவாகத்தில் இருந்து பின்னர் நகரப் பொதுவில் ஒப்படைக்கப் பெற்றன. தண்டாயுதபாணி கோவிலில் ஆடிக் கடைசி வெள்ளியன்று மகேசுவர பூசை நடைபெறும். அம்மன் கோவில் ஊருணி பழ. கண குடும்பத்தார் நிருவாகத்தில் உள்ளது. இது பழைய ஊருணி என்றும் சிவன்கோவில் ஊருணி புது ஊருணி என்றும் அழைக்கப்படுகின்றன.

65 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஜெயங்கொண்ட விநாயகர் தொடக்கப் பள்ளியும் 28 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் ஜெயங்கொண்ட விநாயகர் உயர்நிலைப்பள்ளியும் நகரத்தார் பொது நிருவாகத்தில் இயங்குகின்றன. சு.வி.நா. குடும்பத்தாரால் இடமும் கட்டிடமும் நன்கொடையாக வழங்கப்பட்ட மருத்துவமனை ஊராட்சி ஒன்றிய நிருவாகத்தில் உள்ளது.

இவ்வூரினரான கா.மு.வ. ஜெய்ஹிந்த் நாச்சியப்ப செட்டியார் இ.தே.ரா. வில் பணியாற்றியுள்ளார்.

கம்பனூர்ச் சிவன்கோவில் இலுப்பைக் குடியைச் சேர்ந்த பெரி.பெ. குடும்பத்தாரால் திருப்பணி செய்யப்பட்டு 1995 இல் குடமுழுக்கு நடைபெற்றது. இலுப்பைக்குடியைச் சேர்ந்த பெசு. குடும்பத்தாரும் வி. இராம. குடும்பத்தாரும் குன்றக்குடியில் மடம்கட்டி நிருவகித்து வருகின்றனர்.

நாட்டரசன்கோட்டை

தெற்குவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், அரண்மனை சிறுவயல், சாத்தரசன்பட்டி, நடராசபுரம் வழியாக 35 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, வைரவன்கோவில், மாத்தூர், சூரக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு கோவில்களைச் சேர்ந்த 758 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காளையார்கோவில் பேரூராட்சியின் ஆட்சியில் இவ்வூர் உள்ளது.

கரிகாலச் சோழீசுவரர் கோவில், வேங்கடேசப் பெருமாள் கோவில், கண்ணுடையம்மன் கோவில் ஆகிய பழமைவாய்ந்த இவ்வூர்க் கோவில்களில் நகரத்தார்கள் கௌரவக் கண்காணிப்பாளர், தக்காராகப் பணியாற்றி மேற்பார்வையிட்டு நிருவகிப்பதுடன் பல்வேறு அறக்கட்டளை களையும் ஏற்படுத்தியுள்ளனர். சூரக்குடிக் கோவில் பங்காளிகள் கட்டியுள்ள தீர்த்தார் குளம் தேசிக விநாயகர் கோவிலை அப்பங்காளிகள் நிருவகித்து வருகின்றனர். நகரமாளிகை (சாரணர் நிலையம்), ஐயாக்கள்மடம் ஆகியவை நகரத்தார் பொது அமைப்புக்களாகும்.

மாணிக்கவல்லி பகுதியில் வாழும் நகரத்தார் கட்டியுள்ளது மாணிக்கவிநாயகர் கோவிலாகும். மாத்தூர் மெ. நடராசன் செட்டியார் புதிதாகக் கல்யாணராமர் கோவில் கட்டியுள்ளார். பெரிய கருப்பண்ணசாமி கோவிலும் குருநாதன் கோவிலும் நகரத்தார்கள் வணங்கும் குலதெய்வக் கோவில்கள் ஆகும்.

இங்குள்ள கண்ணுடையம்மன் கோவில் புகழ் பெற்றது. இவ்வம்மன் மக்களால் கண்ணாத்தாள் என்றே அழைக்கப்படுகிறாள். கண்ணகியே இக்கண்ணாத்தாள் என்றும் கூறுகின்றனர். கண்தொடர்பான நோய்கள் தீர இவ்வம்மனை வேண்டிக் கொண்டு கண்மலர்கள் வாங்கிச் சாத்துவர். இக்கோவிலின் முகப்பு மண்டபமாகிய சொற்கட்டான் மணிமண்டபம் அழகிய சிற்பவேலைப்பாடுகள் நிறைந்தது. தைமாதத்தில் நகரத்தார்கள் அனைவரும் கூடிச் சீட்டுக் குலுக்கியெடுத்து அவ்வரிசைப்படி புள்ளிக்கு ஒரு அடுப்பு அமைத்துச் செவ்வாய்ப் பொங்கலை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். வைகாசி மாதம் நடைபெறும் கண்ணாத்தாள் வைகாசி விசாகத் திருவிழா இப்பகுதியில் பெரிய திருவிழா ஆகும். 12 ஆண்டுகட்கு ஒருமுறை எடுக்கப்படும் களியாட்டத் திருவிழா இவ்வூர் நகரத்தார்கள்

Koviloor Digital Library

ஊர்க்குடி மக்கட்குச் சிறப்புச் செய்யும் விழா ஆகும். களியாட்ட வீடு என்றே தனி வீடமைத்துக் கண்ணாத்தாள் படம் எழுதி விளக்கேற்றி மதுவடித்து வழிபடுதல் விழா நடைமுறையாகும். 40 ஆண்டுகட்குப் பின் 1995இல் களியாட்ட விழா இங்கு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. வேங்கடேசப் பெருமாள் கோவிலில் புரட்டாசி மாதம் திருப்பதியில் கொண்டாடப்படுவது போலப் பிரமோத்சவம் சிறப்பாக நடைபெறும். ஆச்சிமார்கள் திருவோண நட்சத்திரத்தில் தங்கக் கருட வாகனத்தில் பெருமாளை எழுந்தருளச் செய்து திருவிழா எடுக்கின்றனர். தேசிக விநாயகர் கோவில் சதுர்த்தி விழாவில் விநாயகர் புறப்பாடு சூரக்குடி நகரத்தாரால் நிகழ்கின்றது.

புதுஊருணி, மாணிக்கவல்லி ஊருணி, செங்கமலத்தான் ஊருணி, தீர்த்தார் குளம் ஊருணி, வீரகண்டான் ஊருணி, நாயன்மார் குளம், கம்பர் சமாதி ஊருணி ஆகியவை இவ்வூரிலுள்ள நீர்நிலைகளாகும்.

நாட்டரசன்கோட்டை, மதகுபட்டி, அலவாக் கோட்டை ஊர்களைச் சேர்ந்த மாத்தூர்க் கோவிலார் 2 அல்லது 3 ஆண்டுகட்கு ஒருமுறை சிவகாமியாத்தாள் படைப்பு என்ற பொதுப்படைப்பைப் படைத்து வருகின்றனர்.

1925 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ச. இராம. உயர்நிலைப்பள்ளி 1985 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்வு பெற்றது. இதை நிருவகித்துவரும் மாத்தூர்க் கோவில் ச. இராம. இராமநாதன் செட்டியார் குடும்பத்தினர் விசாலாட்சி வித்தியாசாலா என்னும் தொடக்கப்பள்ளியையும் நடத்தி வருகின்றனர். குப.இராம. இராமநாதன் செட்டியார் குடும்பத்தாரால் குப.இராம. தொடக்கப்பள்ளி 1930 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பெற்று வருகிறது. இவ்வூரிலிருந்து கானாடுகாத்தானுக்குப் பிள்ளைவளரச் சென்ற சுப்பையா செட்டியாரால் 1967 இல் உயர்நிலைப் பள்ளியாகத் தொடங்கப்பட்ட கானாடுகாத்தான் முத்தையா சுப்பையா செட்டியார் பெண்கள் பள்ளி 1982 இல் மேல்நிலைப் பள்ளியாக மாற்றப் பெற்றது. இப்பள்ளியை இளையாத்தங்குடிக் கோவிலைச் சேர்ந்த வி.கே.என். கண்ணப்பன் குடும்பத்தார் நிருவகித்து வருகின்றனர்.

வி.கே.என். குடும்பத்தார் வெள்ளையப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சி தாய்சேய் நலவிடுதியையும் நடத்தி வருகின்றனர்.

பாரதி இலவச வாசகசாலை இவ்வூரில் 75 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. கம்பன் பள்ளிப்படைக் கோவிலும், கம்பன் செய்யும், கம்பன் வாய்க்காலும் அமைந்துள்ள இவ்வூரில் காரைக்குடிக் கம்பன் கழகத்தார் கம்பன் விழா 4ஆம் நாள் நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றனர். கம்பன் பள்ளிப்படைக் கோவிலைக் கட்டிக் காத்துவந்த இளையாத்தங்குடிக் கோவிலைச் சேர்ந்த ஆ.வி.அரு.இராம. இராமநாதன் செட்டியார் கம்பர் இராம. என்றே அழைக்கப்படு கின்றார். இவ்வூர் வெ.கண.க.கண. கண்ணப்ப செட்டியார் விடுதலைப் போராட்டத் தியாகி. இவ்வூரில் வெ.க.அ. வகை விடுதியும் பெரி.அரு. கண்ணப்ப செட்டியார் சத்திரமும் வெ.கண. பசுமடமும் உள்ளன.

நாநயா

மதுரை நகரத்தார் இளைஞர் சங்கமும் காரைக்குடி இளைஞர்களும் இணைந்து 6–9–86 இல் காரைக்குடியில் ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினர். அதன் விளைவாக 18–1–87 இல் நகரத்தார் இளைஞர் சங்க நிருவாகிகள் பயிற்சிக் கருத்தரங்கு மதுரையில் நடைபெற்றது. அக்கருத்தரங்கின் நிறைவில் 'நாநயா' அமைப்பு தோற்றுவிக்கப்பெற்றது. Nattukottai Nagarathar Youth Association என்பதன் சுருக்கமாக நாநயா (NANAYA) என்ற பெயரை இவ்வமைப்புப் பெற்றது. மதுரையில் செயல் அலுவலகத்தைக் கொண்ட இவ்வமைப்பின் 5 இளைஞர்கள் தங்கள் முதல் செயல்திட்டமாக 4–4–87 முதல் 11–4–87 வரை நகரத்தார் வாழும் 75 ஊர்களுக்கும் ஒன்பது நகரக் கோவில்களுக்கும் மூன்று மடங்களுக்கும் பயணம் சென்று நாநயாவின் நோக்கங்களைப் பரப்பினர். நாநயா என்ற மாத இதழ் இவ்வமைப்பின் சார்பாக வெளிவந்தது. நகரத்தார் இளைஞர்களை ஒன்று திரட்டிச் சமூக வளர்ச்சியை ஊக்குவிக்கும் உயரிய நோக்கம் கொண்ட இவ்வமைப்பு ஏனோ தொடர்ந்து செயல்பட இயலவில்லை.

நாராயணன், இராம., (23-6-1948)

இளையாத்தங்குடி - ஒக்கூருடையார்
காரைக்குடி
திரைப்படத் துறை

எஸ்.பி. இராமநாதன் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மூன்றாவது மகன். இவருக்குத் திரைப்படத் துறையில் இருந்த ஆர்வம் காரணமாக, கல்வியை நிறுத்திவிட்டுச் சென்னை சென்றார். பல்வேறு முயற்சிகட்குப் பிறகு திரைப்படங்களுக்குக் கதை உரையாடல் எழுதத் தொடங்கினார். இவர் எழுதிய முதல் படம் 'ஆசை அறுபது நாள்'. பின், கதை உரையாடல் எழுதுவதோடு படத்தை இயக்கவும் தொடங்கினார். இவர் எழுதி இயக்கிய முதற்படம் 'சுமை'.

Koviloor Digital Library

பின்னர் தொடர்ந்து பல வெற்றிப்படங்களை இயக்கியதோடு, தாமே படங்கள் தயாரிக்கவும், வெவ்வேறு மொழிகளில் படங்களை இயக்கவும் தொடங்கினார். தமிழ், தெலுங்கு, கன்னடம், ஒரியா, வங்காளம், மராத்தி, குசராத்தி, போஜ்புரி ஆகிய 8 மொழிகளில் இதுவரை 100 படங்களுக்கு மேல் இயக்கியுள்ளது இவரது சாதனை.

1989 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தி.மு.கவின் சார்பில் போட்டியிட்டு, காரைக்குடிச் சட்டமன்ற உறுப்பினர் ஆனார். இவர் காரைக்குடித் தொகுதி உறுப்பினராக இருந்த போது தான், காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் மணிமண்டபத்திற்குக் கலைஞர் அடிக்கல் நாட்டி, அப்பணிகள் தொடங்கப் பெற்றன என்பது, அரசியல் சார்ந்து இவர் ஆற்றியுள்ள சமூகப் பணியாகும்.

தமிழக அரசு இவரை 'இயல் இசை நாடக மன்றத்'தின் தலைவராக அமர்த்தியுள்ளது. தமிழக அரசின் கலைமாமணிப் பட்டம் பெற்ற இவர், காரைக்குடிச் சுழற்குழுவுடன் இணைந்து, தேவகோட்டைச் சாலையில் ஒரு மருத்துவமனை அமைத்துக் கொடுத்திருப்பது இவரது தொண்டு ஆகும்.

தமிழ்த்திரை உலகில் தேவருக்குப்பின் விலங்குகளைப் பயன்படுத்தித் திரம்படப் படம் எடுக்கும் ஆற்றலாளர் இவர். குறைந்த செலவில், குறைந்த நாட்களில், குழந்தை நட்சத்திரம், விலங்குகள் இவற்றைப் பயன்படுத்தி, ஆன்மீகம் கலந்த கதைகளைத் திரைப்படமாக்கி வெற்றி காண்பது இவரது தனிப்பாணி.

நாராயணன், காரைக்குடி (23-6-1944)

பிள்ளையார்பட்டி
காரைக்குடி
திரைப்படத் துறை

இராம. இராமநாதன் செட்டியார் – சானகி ஆச்சியின் மகன். திரைப்படத் துறையிலிருந்த ஆர்வம் காரணமாகப் படிப்பை நிறுத்திவிட்டுச் சென்னை சென்ற இவர் பெருமுயற்சிக்குப் பின் படங்களுக்குக் கதை உரையாடல் எழுதத் தொடங்கினார். இவரது கதை உரையாடலில் 30 படங்களுக்கு மேல் வெளிவந்துள்ளன. மூதறிஞர் இராஜாஜியின் கதையும், குடியரசுத் தலைவர் பரிசு பெற்ற திரைப்படமும் ஆகிய 'திக்கற்ற பார்வதி'க்குத் திரைக்கதை, உரையாடல் இவர் எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் இவர் கதை, உரையாடல் எழுதிப் படங்களை இயக்கவும் தொடங்கினார். 5 படங்களை இயக்கியிருக்கும் இவரது படங்களுள் 'அச்சாணி' தமிழக அரசின் ஓர் இலட்ச ரூபாய்ப் பரிசினையும், கேரள அரசின் நற்சான்றிதழையும் பெற்றிருக்கிறது.

இப்போது இவர் மேடை நாடகங்களும், தொலைக்காட்சித் தொடர் நாடகங்களும் எழுதி இயக்கிக் கொண்டிருக்கிறார். 19 மேடை நாடகங்களும், 2 தொலைக்காட்சித் தொடர் நாடகங்களும் இதுவரை வந்துள்ளன.

நாராயணன் செட்டியார், சோம., (10-6-1931)

மாத்தூர், உறையூர்
தேவகோட்டை
அருட்பணியாளர்

அழ.அரு. சோமநாதன் செட்டியார் – சின்னம்மாள் ஆச்சியின் மகன். சென்னை இராமகிருஷ்ணா மிஷின் பள்ளியிலும் விவேகானந்தா கல்லூரியிலும் பயின்றதால் தமது இருபதாவது வயதில் தேவகோட்டையில் விவேகானந்தா வாசகசாலையைத் தொடங்கினார். நகரச் சிவன்கோவிலிலும் ஊரில் உள்ள பிற கோவில்களிலும் வாரவழிபாடு தவறாமல் நடத்திச் சின்னஞ் சிறுவரிடையே பக்தி உணர்வு கால் கொள்ளச் செய்து வருகிறார். தேவகோட்டையில் 'இராமகிருஷ்ணா வித்யாலயா' என்னும் நடுநிலைப் பள்ளியை 1954 ஆம் ஆண்டில் தொடங்கிச் சிறப்புற நடத்தி வருகின்றார்.

நகரத்தாரின் குருபீடங்களான பாதரக்குடி, துலாவூர் ஆகிய மடங்கள் மறுமலர்ச்சி பெற அறக்கட்டளை அமைத்துப் பெருந்தொகை திரட்டி அதன் வருவாயிலிருந்து மடங்களின் பணிகள் சிறப்புற நடைபெறவும் அங்கு சைவசமயக் கருத்தரங்குகள் முதலியன நடைபெறவும் இவரும் காசி ஸ்ரீ அரு. சோமசுந்தரமும் இணைந்து பாடுபட்டு வருகிறார்கள். தேவகோட்டை அருணாசலப் பொய்கைக் கரையில் ஒரு பிள்ளையார் கோவிலை அமைத்து முதன்முதலில் அதற்குக் குடமுழுக்கு நடத்திய இவர் தொடர்ந்து தேவகோட்டை நகரச் சிவன்கோவில், காளையார் கோவில், உத்தரகோச மங்கை, காவிரிப்பூம்பட்டினம் பல்லவனீச்சுரம், ராஜநாராயணப் பெருமாள் கோவில் ஆகிய கோவில்களின் குடமுழுக்கு நீராட்டு விழாவைத் தலைவராக இருந்து நடத்தி வைத்துள்ளார். தமது அறுபதாண்டு நிறைவு விழாவை உப்பூர் வெயிலுகந்த விநாயகர் கோவிலுக்குக் குடமுழுக்கு நீராட்டுவிழாவாக நடத்திக் கொண்டாடினார்.

Koviloor Digital Library

காளையார்கோவில் வேதாந்த மடத்தில் ஜமீந்தார் அருணாசல சுவாமிகள் குருபூசையை ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தி வருகிறார். இளமையில் விடுதலைப் போராட்டத்திலும் ஈடுபாடு கொண்டிருந்த இவர் கதரன்றி வேறு அணிவதில்லை. 'அண்ணா' என்றே அனைவரும் இவரை அழைப்பார்கள். தேவகோட்டையில் 'பிரவசன சபா' என்றொரு அமைப்பை நிறுவி ஆண்டுதோறும் சமயத் தொடர் சொற்பொழிவு நடைபெறச் செய்துவரும் இவர் பல்லாற்றானும் சமயம் வளரப் பாடுபட்டு வரும் சான்றோராவார்.

நாராயணன் செட்டியார், லெ., (17-11-1926)

பிள்ளையார்பட்டி
கண்டரமாணிக்கம்
தொழிலதிபர், கல்லூரி நிறுவுநர்

செ.சி.நா. இலட்சுமணன் செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் இரண்டாவது மகன். தம் இளமைக் கல்வியை இலங்கையில் பெற்ற இவர் திருச்சி தூய சூசையப்பர் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தவர்.

தொழிலதிபர் லெ. அழகுசுந்தரம் செட்டியாரின் இளவலான இவர், ஆலை அதிபர் கருமுத்து. தியாகராசனாரின் மாப்பிள்ளை ஆவார்.

மதுரை விசாலாட்சி ஆலை, திருத்தணி சரசுவதி ஆலை, ஆந்திராவில் நிந்தரா ஆலை, சேலத்தில் அகிலாண்டேசுவரி ஆலை ஆகிய ஆலைகளடங்கிய விசாலாட்சி ஆலைகள் குழுமத்தின் தலைவர். மணலூரில் ஒரு காகித ஆலையும், நீலகிரியில் தேயிலைத் தோட்டமும் இவரது பிறதொழில் நிறுவனங்களாகும்.

மதுரை விசாலாட்சி நகர், திருத்தணி சரசுவதி நகர், நீலகிரி கரும்பாலம் ஆகிய இடங்களில் மூன்று உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்கி நடத்தி வருகிறார். மதுரையில் 1966இல் சரசுவதி நாராயணன் கல்லூரியைத் தொடங்கி, இன்று அதனை ஒரு சிறந்த முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புக்கள் நிறைந்த கல்லூரியாக நடத்திக் கொண்டிருக்கிறார்.

மதுரை நகரத்தார் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினார். இவரது தலைமைப் பொறுப்புக் காலத்தில்தான் மதுரை நகரவிடுதி புதுப்பிக்கப் பெற்றுப் பொலிவு பெற்றது. மதுரைத் திருக்குறள் பேரவை, திருவருட் பேரவை, ஜாகிங் சங்கம், இந்துக்கள் கல்வி நிறுவனங்களின் நிருவாகத்தார் சங்கம் ஆகிய அமைப்புக்களின் தலைவராகவும் தொண்டு செய்து வருகிறார்.

நாராயணன் செட்டியார் அறக்கட்டளை, சரசுவதி நாராயணன் மணிவிழா அறக்கட்டளை ஆகியவற்றின் நிருவாக அறங்காவலர். தமிழ்நாடு தொழில் வர்த்தகக்குழுவின் மதுரைச் செயற்குழுவிலும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் தொழில் நிருவாகப் பாடத்திட்டக் குழுவிலும், வணிகப் பாடத் திட்டக்குழுவிலும் உறுப்பினராகச் செயல்பட்டு வருகிறார். மதுரைக் கண் வங்கிக் குழுவின் துணைத் தலைவராக இருக்கிறார்.

1971 முதல் 1974 வரை மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் அறங்காவலர் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த போது, 1974 இல் குடமுழுக்கினைச் சிறப்பாக நடத்தினார். 1959இல் மதுரைச் சுழற்குழுவின் தலைவராகவும், 1963 முதல் 1967 வரை தமிழ்நாடு தொழில் வணிகக் குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

1963இல் ஐக்கிய அரபுக்குடியரசிற்கு இந்திய அரசின் சார்பில் பருத்தித் தூதுக்குழு உறுப்பினராகச் சென்று வந்த இவர் தமது தொழில் தொடர்பாக உலகின் பெரும்பாலான நாடுகட்குப் பலமுறை சென்று வந்துள்ளார்.

ஆலைநிருவாகத்தில் தொழிலாளரும் பங்கேற்கும் வண்ணம் கூட்டு நிருவாகக் குழுவைத் தொடங்கிய முதல் ஆலை அதிபர் என்ற பெருமை இவருக்கு உண்டு. 1963 இல் தமிழக முதல்வர் பக்தவத்சலத்தால் இக்குழு விசாலாட்சி ஆலையில் தொடங்கப்பெற்றது.

சிந்தனையைத் தூண்டும் வண்ணம் பேசுவதில் ஆற்றல் மிக்க இவர் வானொலியில் பலமுறை சிறந்த உரைகளை நிகழ்த்தியுள்ளார்.

இவரது பொதுத் தொண்டுகளைப் பாராட்டும் வண்ணம் 1987 இல் துலாவூர் மடாதிபதி 'அறமனச் செம்மல்' என்ற பட்டத்தையும், 1989 ஆம் ஆண்டு குன்றக்குடி அடிகளார் 'அறநெறி அண்ணல்' என்ற பட்டத்தையும், 1990 ஆம் ஆண்டு மதுரைச் சுழற்குழுவினர் 'மதிப்புக்குரிய முதுநிலைக் குடிமகன்' என்ற பட்டத்தையும் இவருக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

நூற்றியெட்டுப் பிள்ளையார் கோவில்

நகரத்தார் பெண்கள் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் ஒரே இடத்தில் நிறையப் பிள்ளையார்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று வழிபடுவது வழக்கம். உள்ளூரிலேயே நிறையப் பிள்ளையார்களை வழிபடும் வண்ணம் ஒரு கோவில் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் காரைக்குடி அ.மு.க.மு.அழ.இராம. வள்ளியம்மை ஆச்சிக்கு எழுந்தது. தாமும் நிறைய நன்கொடை

Koviloor Digital Library

வழங்கியதோடு ஆச்சிமார்கள் பலரிடமும் நன்கொடை திரட்டி வள்ளியம்மை ஆச்சி நூற்றியெட்டுப் பிள்ளையார் கோவிலைக் கட்டச் செய்தார்.

காரைக்குடி நகரச்சிவன் கோவிலுக்குத் தென்புறம் ஊருணியின் கீழ்கரையில் இக்கோவில் அமைந்துள்ளது. ஐம்பது வலம்புரி விநாயகர், ஐம்பது இடம்புரி விநாயகர் ஆகியவற்றோடு சக்தி கணபதி, மகாகணபதி, சாம்ராஜ்ய கணபதி, நர்த்தன கணபதி, ஹேரம்ப கணபதி, விஜய கணபதி, சித்திபுத்தி கணபதி, லெட்சுமி கணபதி ஆகியவை 108 பிள்ளையார்களாகும். இவை கிழக்கு நோக்கிய இரண்டு வரிசைகளாக அமைந்துள்ளன. முன்வரிசையில் பக்கத்துக்கு இருபத்தைந்தாக 50 வலம்புரி விநாயகர்கள் அமைய நடுவில் பக்கத்துக்கு ஒன்றாக இரு நாகர்களோடு மூன்று விநாயகர்களும், பின் வரிசையில் பக்கத்துக்கு இருபத்தைந்தாக 50 இடம்புரி விநாயகர்கள் அமைய நடுவில் ஐந்து விநாயகர்களும் அமைந்துள்ளன. 16-3-1990 இல் இக்கோவிலின் முதல் குடமுழுக்கு விழா நடைபெற்றது. இந்தியாவிலேயே இதுபோல 108 விநாயகர்கள் அமைந்த தனித் திருக்கோவில் இல்லையென்று சொல்லுகின்றனர்.

நெற்குப்பை

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தின் வடக்கு எல்லையில் மணிமுத்தாற்றங்கரையில் அமைந்துள்ளது. காரைக்குடியிலிருந்து 40 கிலோமீட்டர் தொலைவில் திருப்புத்தூர் – பொன்னமராவதிச் சாலையில் இவ்வூர் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், சூரக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 7 கோவில்களைச் சேர்ந்த 624 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பேரூராட்சி மன்றமாகும்.

பழந்தமிழில் குப்பை என்பது குவியலைக் குறிக்கும். இவ்வூரில் நெற்குவியல்கள் மிகுதியாக இருந்த காரணத்தினால் இவ்வூருக்கு நெற்குப்பை எனப்பெயர் வந்ததாகக் கூறுவர். அதற்குச் சான்றாக, இவ்வூரில் முன்பு சில நெற் கிடங்குகள் இருந்தன.

நகரத்தாருக்குப் பொதுவாக இவ்வூரில் நகர சுப்பிரமணிய சுவாமி கோவில் அமைந்துள்ளது. 1905 இல் திருப்பணி முடித்துக் குடமுழுக்குச் செய்யப்பெற்ற இக்கோவிலுக்கு 1928, 1935, 1961, 1978, 1998 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நீராட்டு விழாக்கள் நிகழ்ந்துள. 1965 முதல் இக்கோவிலில் 7 ஆண்டுகட்கொருமுறை மகேசுவர பூசை நடத்தப் பெறுகிறது.

நேமங்கோவிலைச் சேர்ந்த பனையப்ப செட்டியார் குடும்பத்தாரால் கட்டி, நிருவகிக்கப் பெறும் மெய்ஞ்ஞான விநாயகர் கோவில், பழ.வெ. வெங்கடாசலம் செட்டியார் குடும்பத்தாரால் கட்டி, நிருவகிக்கப்பெறும் வேங்கடாசலப் பெருமாள் கோவில் ஆகியவையும் இவ்வூரில் உள. சிவகங்கை அரசர் குடும்ப அறநிலையத்துக்கு உரிய மரகதவல்லி உடனாய மனமொத்த கண்டீசுவரர் கோவிலும் இவ்வூரில் உள்ளது. இவ்வூரை அடுத்துள்ள பரியா மருதுபட்டியில் அமைந்துள்ள பார்வதி உடனாய பெரிய மருந்தீசர் கோவிலின் திருப்பணியை இவ்வூர் முரு.பழ. குடும்பத்தார் செய்துள்ளர்.

இவ்வூரில் பதினைந்து ஊருணிகள் உள. அவற்றுள் பனையப்ப செட்டியார் ஊருணி, செட்டி ஊருணி, மேல ஊருணி, நல்லூருணி ஆகிய நான்கு ஊருணிகள் நகரத்தார் குடும்பங்களால் ஏற்படுத்தப்பெற்றவை ஆகும்.

இராம. சா. சாத்தப்ப செட்டியார் குடும்பத்தாரால் இடமும், கட்டிடமும் நன்கொடை வழங்கப்பெற உருவான சாத்தப்பா அரசு உயர்நிலைப் பள்ளி 1956 இலிருந்து இவ்வூரில் இயங்கி வருகிறது. தி. கனகசபை செட்டியார், அ. கனகசபை செட்டியார் குடும்பங்களால் தொடங்கி, நிருவகிக்கப் பெற்றுவரும் தியாகராசன் அண்ணாமலை தொடக்கப்பள்ளியும் இவ்வூரில் உள்ளது.

நேமங்கோவிலைச் சேர்ந்த சுப.அ. பழநியப்ப செட்டியார் குடும்பத்தினர் தொடங்கிநடத்திய அலமேலு பழநியப்பா மருத்துவமனை இப்போது அரசினரால் நடத்தப் பெறுகிறது.

இராம. சா. மடம் என்ற பெயரில் இராமசா. குடும்பத்தாரால் 1877 இல் கட்டப்பெற்ற மடம் இன்றும் அக்குடும்பத்தாரின் வழிமுறையினரால் சிறப்பாக நிருவகிக்கப்பட்டு வருகிறது. முரு.பழ.மு.முரு.வினால் 1941 இல் கட்டிக் கொடுக்கப் பெற்ற நகரமடம் இப்போது நகரத்தார் பொது நிருவாகத்தில் இருந்து வருகிறது. தெ.சொ. சொக்கலிங்கம் செட்டியார் குடும்பத்தாரால் கடந்த 60 ஆண்டுகளாக ஆண்டுதோறும் மார்கழி மாதம் முத்தானந்த சாமிக்குக் குருபூசை நடத்தப்பட்டு வருகிறது.

ஆ. தெற்கூர், குருவிக்கொண்டான்பட்டி, நெற்குப்பை, வலையபட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த இரணிக்கோவில் பங்காளிகள் 5 ஆண்டுகட்கொருமுறை ஆவணி மாதம்

Koviloor Digital Library



ஆறுமுகச் செவ்வேள்


நேமம் - கி.பி. 18ஆம் நூற்றாண்டு

Koviloor Digital Library



காலசம்ஹாரமூர்த்தி
நேமம் - கி.பி. 18ஆம் நூற்றாண்டு

Koviloor Digital Library



சுவாமி விமானத் தோற்றம்,
நேமம் - நகரத்தார் காலம்



துவாரபாலகி செப்புத் திருமேனி
இரணியூர்க் கோவில்
கி.பி. 18ஆம் நூற்றாண்டு

Koviloor Digital Library



நால்வர் - திருநாவுக்கரசர், சுந்தரர், ஞானசம்பந்தர்,

மாணிக்கவாசகர் - செப்புத் திருமேனி

நேமம் - கி.பி. 18ஆம் நூற்றாண்டு

Koviloor Digital Library

இவ்வூரில் மாங்கல்ய்காரி அம்மன் படைப்பை 3 நாட்கள் படைத்து வருகின்றனர். நெற்குப்பை, வேந்தன்பட்டி ஊர்களைச் சேர்ந்த நேமங்கோவில் பங்காளிகள் இவ்வூரில் 2 ஆண்டுகட்கொரு முறை தைமாதம் உடையம்மைப் பாட்டி படைப்பை 3 நாட்கள் படைத்து வருகின்றனர்.

இவ்வூர் ந.பழ. குடும்பத்தாரும், முரு.பழ. குடும்பத்தாரும் தத்தம் இல்லத்தில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் 8 நாட்கள் இராமாயணம் படித்து வருகின்றனர்.


நகரத்தார் வரலாற்றில் இவ்வூருக்குத் தனிச்சிறப்பு ஒன்று உண்டு. நகரத்தார் ஆண்டுதோறும் மேற்கொள்ளும் பழநி நடைப்பயணம், காவடி எடுத்தல் ஆகிய மரபுகளை நானூறு ஆண்டுகட்கு முன் தொடங்கிவைத்த நேமங்கோவில் குப்பா பிச்சஞ்செட்டி குமாரன் குமரப்பன் இவ்வூரைச் சேர்ந்தவர் என்பதே அது.

நேமங்கோவில்

நகரக்கோவில்கள் ஒன்பதில் ஒன்றான இத்திருக்கோவில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து 12 கி.மீ தொலைவில் குன்றக்குடி, கீழச்சிவல்பட்டிச் சாலையில் அமைந்துள்ளது.

நியமம் என்னும் பெயரே நேமம் என மருவியது என்பர். நியமம் என்றால் 'தீது அகற்றல்', 'ஒழுக்கம் பேணுதல்' என்று ஒரு பொருளும் வணிகர்குழு என்று ஒரு பொருளும் கூறப்படுகின்றன. வாழ்வில் நல்லது செய்தலையே குறிக்கோளாகக் கொண்ட மக்கள் வழிபட்ட கோவில் நியமங்கோவில் ஆயிற்று என்பர். வணிகர் குழுவுக்கு அரசரால் அளிக்கப்பட்டதால் நியமங்கோவில் எனப் பெயர் பெற்றது என்பதே மிகவும் பொருத்தமுடையதாகும். இக்கோவில் கி.பி. 714 இல் பாண்டிய மன்னனால் நகரத்தாருக்கு அளிக்கப்பெற்றது. இக்கோவில் சார்ந்தோர் இசைபிடிமானத்தில் ''கேரளசிங்க வளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில் இளநலமுடையார்'' என்று தம்மைக் குறிப்பிடுவர்.

இக்கோவில் சார்ந்த நகரத்தார்கள் 1. அரண்மனை சிறுவயல் 2. அரிமழம் 3. பி. அளகாபுரி 4. இராங்கியம் 5. உலகம்பட்டி 6. கண்டனூர் 7. கல்லல் 8. காரைக்குடி 9. கானாடுகாத்தான் 10. கீழச்சிவல்பட்டி 11. கோட்டையூர் 12. சண்முகநாதபுரம் 13. செம்பனூர் 14. தேவகோட்டை 15. நெற்குப்பை 16. பலவான்குடி 17. பள்ளத்தூர் 18. மேலைச்சிவபுரி 19. வலையபட்டி 20. வேந்தன்பட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்தம் புள்ளிகள் 1757.



நேமங்கோவில்

Koviloor Digital Library

இத்திருக்கோவிலில் அமர்ந்தருள் செய்யும்

இறைவன் : செயங்கொண்ட சோழீசர்

இறைவி : சௌந்தர நாயகி.

இத்திருக்கோவிலுக்கு 23-5-1907, 5-2-1961, 3-2-1991 ஆகிய நாட்களில் குடமுழுக்கு விழாக்கள் நிகழ்ந்துள்ளன. நகரத்தார் வெட்டிய செட்டி ஊருணி இவ்வூரின் குடிநீர் ஊருணியாகும். திருக்கோவிலின் தென் திசையில் சோழகுல ஊருணியும் ஊருணியின் வடதிசையில் இருபடித்துறைகளுக்கு இடையே அமைந்துள்ள சோழகுல விநாயகர் கோவிலும் நகரவிடுதியும் இங்குள்ளன.

காரைக்குடியில் நான்கு வகையினர், கோட்டையூரில் மூன்று வகையினர், அரிமழம், தேவகோட்டை, நெற்குப்பை, பள்ளத்தூர், மேலைச்சிவபுரி, வலையபட்டி, வேந்தன்பட்டி ஆகிய ஏழு ஊர்களில் ஒவ்வொரு ஊருக்கும் இரண்டு வகையினர், இராங்கியம், கண்டனூர், கானாடுகாத்தான், கீழச்சிவல்பட்டி ஆகிய நான்கு ஊர்களில் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு வகையினர் என 25 வகையினர் கோவில் நிருவாகிகள் ஆவர். ஆண்டு ஒன்றுக்கு 5 நிருவாகிகள் எனச் சுற்றுமுறையில் இவர்கள் நிருவாகத்தைக் கவனித்து வருகின்றனர்.

பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் இக்கோவிலைச் செயங்கொண்ட சோழீசுவர முடைய நாயனார்கோவில் என்றும் இறைவனைக் "கேரள சிங்க வளநாட்டு அதளையூர் நாட்டுத் தேனாற்று உடையார் செயங்கொண்ட சோழீசுவரர்" என்றும் இறைவியைத் "திருக்காம கோட்ட நாச்சியார்" என்றும் குறிப்பிடுகின்றன.

நாராயண நடராசஞ் செட்டியார் எழுதிய "நேமங் கோவில் வரலாறு" என்ற நூலும் பாடுவார் முத்தப்பர் பாடிய செயங்கொண்டார் சதகமும் இக்கோவில் பற்றிய இலக்கியங்கள் ஆகும்.

தாமரைப்பீடத்தில் வலக்கையில் நீலோற்பல மலருடன் இடக்கையைத் தாழ்கையாக வைத்த நிலையில் அருள்பாலித்து நிற்கும் சௌந்தர நாயகி அம்மன் திருஉருவத்தை 1907 இல் நடந்த முதல் திருப்பணியின் போது நகரத்தார்கள் பிரதிட்டை செய்துள்ளனர். இத்திருப்பணிக்கு முந்திய அம்மன் திருஉருவம் இப்போதும் அம்மன் சன்னதியின் மேல்திசையில் காணப்படுகிறது. திருக்கோவிலின் இரண்டாம் பிரகாரத் திருமதிலின் பின்புறம் உருவமின்றிச் சக்திபீட வடிவில் நேமங்காளி வீற்றிருக்கிறாள். இக்காளி இப்பகுதியில் மிகவும் சீற்றமான தெய்வமாகக் கருதப்படுகிறது. காளிக்கு வைராவிகள் பூசை செய்து வருகின்றனர்.

நேமத்தான்பட்டி

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி – திருச்சி நெடுஞ்சாலையில் காரைக்குடியிலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, இரணிக்கோவில் ஆகிய ஐந்து கோவில்களைச் சேர்ந்த 236 புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கானாடுகாத்தான் பேரூராட்சி மன்றத்தின் ஆட்சியில் இவ்வூர் உள்ளது.

கொ. இலட்சுமிபுரம் அருகே உள்ள பெரிய கோவிலே இவ்வூருக்கும் சிவன்கோவிலாகும். பிள்ளையார் கோவில் 1970 இல் நகரத்தார்களால் திருப்பணி செய்யப் பெற்று நகரப் பொதுக் கோவிலாக இருந்து வருகிறது. செ.பெ. இராமசாமி செட்டியார் கட்டிய கருத்தான் செட்டியார் பிள்ளையார் கோவிலும், வைரவன்கோவில் சி.மெ. நகரத்தார் பார்வையில் உள்ள புது ஊருணிப் பிள்ளையார் கோவிலும், சி.வீ.நா.பழ. குடும்பத்தார் கட்டிய விசாலாட்சி ஊருணிப்பிள்ளையார் கோவிலும் பிற கோவில்களாகும். புது ஊருணியும் விசாலாட்சி ஊருணியும் குடிநீர்க் குளங்கள் ஆகும்.

அடைக்காத்தாள் படைப்பு ஆண்டுதோறும் ஆடிமாதம் 2 ஆவது புதன்கிழமை வைரவன் கோவில் சி.மெ. நகரத்தார்களால் படைக்கப் படுகின்றது. பெரியசாமிப் படைப்பு ஆண்டு தோறும் ஆடி மாதம் கடைசி வெள்ளியன்று அருகிலுள்ள நெய்வாசப்பட்டி கிராமத்தில் வைரவன்கோவில் மு.சி. வகையாரால் படைக்கப்படுகின்றது. பதினெட்டாம்படிக் கருப்பர் படைப்பு ஆண்டுதோறும் ஆடிமாதம் 3 ஆவது வெள்ளிக்கிழமை இளையாத்தங்குடிக் கழனிவாசற்குடி நகரத்தாரால் படைக்கப் படுகின்றது.

கருத்தான் செட்டியார் வீட்டில் க.பெ.சி.இராம. குடும்பத்தாரால் ஆண்டுதோறும் ஆவணி மாதம் விநாயகபுராணமும் புரட்டாசி மாதம் இராமாயணமும் ஐப்பசி மாதம் கந்தபுராணமும் படிக்கப்படுகின்றன. அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் வைரவன் கோவில் நகரத்தாரால் நால்வர் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது.

வைரவன் கோவிலைச் சேர்ந்த சி.வீ.நா. பழநியப்ப செட்டியாரால் 20-9-1926 இல் தோற்றுவிக்கப்பெற்ற திருநாவுக்கரசு வித்தியாசாலை அவரது பேரன்களால் இன்றும்

Koviloor Digital Library

சிறப்பாக நடத்தப் பெற்று வருகிறது. திருநாவுக்கரசர் நூல்நிலையம், மருணீக்கியார் இசையரங்கம் என இவ்வுயர்நிலைப் பள்ளி எங்கும் அப்பர் பெயரே இடம்பெற்றுள்ளது. இங்கு சைவமும் தமிழும் சிறப்பாகக் கற்பிக்கப்படுகின்றன.

இலுப்பைக்குடிக் கோவிலைச் சேர்ந்த சோம. வீரப்பா இ.தே.ரா.வில் பணியாற்றியுள்ளார்.

சி.வீ.நா.பழ. வகையினரால் வேதாரணியத்தில் தண்ணீர்ப்பந்தல் தருமம் நடைபெறுகிறது. அவளிவள் நல்லூர் கோவில் திருப்பணி செய்துள்ள மு.பெ. வகையார் ஆவுடையார் கோவிலில் சத்திரம் கட்டியுள்ளனர். தெ.மு.பழ குடும்பத்தினர் விராலிமலையிலும் அழகப்புத்தூர் என்னும் அரிசில்கரைப்புத்தூரில் படிக்காசு நாதர் கோவிலிலும் திருப்பணி செய்துள்ளனர்.

நேமத்தான்பட்டி தமிழார்வம் சிறந்து விளங்கிய ஊர். ப. நீலகண்டனை ஆசிரியராகக் கொண்டு நேமத்தான்பட்டி இராம. பழநியப்ப செட்டியாரால் 'இந்திரா' என்னும் இதழ் செட்டிநாட்டிலிருந்து வெளிவந்தது. இவ்வூர், முத்து நாராயணனை ஆசிரியராகக் கொண்டு 'பாப்பாமலர்' (1942) என்னும் சிறுவர் மாத இதழ் இராயவரத்திலிருந்து வெளிவந்தது. இங்கிருந்து 'முத்தம்' என்னும் இதழ் பழ. பழநியப்பனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. இவ்வூரிலுள்ள மூன்று வீதிகளும் அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோர் பெயர்களைக் கொண்டிருப்பதும் இவ்வூர்ப் பள்ளி திருநாவுக்கரசு பள்ளி எனப் பெயர் பெற்றிருப்பதும் இவ்வூர் நகரத்தாரின் ஆழ்ந்த சைவப்பற்றினை எடுத்துக்காட்டுகின்றன.

பஞ்சு அருணாசலம், (22-3-1941)

மாத்தூர் - அரும்பாக்கூர்
காரைக்குடி
திரைப்படத்துறை

கவியரசர் கண்ணதாசனின் அண்ணன், அரு. கண்ணப்ப செட்டியார் – தேனம்மை ஆச்சியின் மகன். பள்ளிப்படிப்போடு முறையான கல்வியை முடித்துக் கொண்ட இவர் திரைப்படத் துறையில் இருந்த • ஆர்வம் காரணமாகச் சென்னை சென்றார். கவியரசரிடம் உதவியாளராகப் பதினான்கு ஆண்டுகள் பணியாற்றினார்.

பின்னர் இவர் தனியே திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதத் தொடங்கினார். 'சாரதா'வில் இவரது முதல் பாடல் இடம் பெற்றது. தொடர்ந்து கதை, உரையாடல், பாடல்கள் எழுதினார். பிறகு படத் தயாரிப்பாளரானார். அண்மைக் காலத்தில் பட இயக்குநராகவும் ஆகியிருக்கிறார்.

நூறுபடங்களுக்கும் மேல் பாடல்கள் எழுதியிருக்கிறார். இவர் எழுதிய திரைப்படப் பாடல்கள் 500க்கும் மேலாகும். 25க்கும் மேற்பட்ட படங்களுக்குக் கதை, உரையாடல் எழுதியுள்ளார். இவர் தயாரித்த பல படங்கள் வெற்றிப் படங்களாகும். குறிப்பிடத்தக்கவை கல்யாணராமன், ஆறிலிருந்து அறுபதுவரை, எங்கேயோ கேட்ட குரல் போன்றவை.

தமிழக அரசு இவருக்குக் கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

பட்டப் பெயர்கள்

நகரத்தார் பண்பாட்டில் பட்டப்பெயர் சூட்டி அழைப்பது அவர்கட்குரிய சிறப்புக் கூறாகும். ஒரு குடும்பத்தை அல்லது ஒருவரை எளிதில் சுட்டி அடையாளம் கூறும் வகையில் அவரோடு தொடர்புடைய ஒரு பெயரைப் பட்டப்பெயராக வைத்து அழைப்பதுண்டு. குடும்பத்தின் பட்டப் பெயர் எனில் தொடர்ந்து வாரிசுகளுக்கு அப்பெயர் வழங்குவதுண்டு. சான்றாக, தேவகோட்டைத் 'தொண்டியார் வீடு' என்னும் பட்டம் பெற்ற குடும்பத்தைச் சார்ந்த மரபினரை, தொண்டி சுந்தரம், தொண்டி லெட்சுமணன் என்றே அழைப்பர். இடம் பெயர்தல், தொழில் செய்யும் ஊர், கல்வித்தகுதி, பண்புகள் காரணமாகப் பட்டப் பெயர் சூட்டப்படுவது இயல்பு.

குடிபெயர்ந்த வரலாறு கூறும் பட்டப் பெயர்கள் : செட்டிநாட்டின் 96 ஊர்களில் இன்று 75 ஊர்களே நகரத்தார் வாழும் ஊர்களாக உள்ளன. ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் குடிபெயர்ந்து வந்து வாழும் வழக்கம் உண்டு. இதனை வலசைவருதல் என்பர். வாரிவயல் என்பது 96 ஊர்களுள் ஒன்று. அங்கிருந்து காரைக்குடிக்கு வந்த ஏவி.எம். குடும்பத்தினர் வாரிவயலார் வீடு என்று அழைக்கப் பெறுகின்றனர். இவ்வாறே கருமுத்து குடும்பத்தினர் ஆ. தெற்கூரில் கருங்குளத்தார் வீடு என்றும், கல்வி வள்ளல் இராம. வீர. இராமசாமி செட்டியார் குடும்பத்தினர் காரைக்குடியில் சேந்தணியார் வீடு என்றும் அழைக்கப் பெறுகின்றனர். தேவகோட்டையில் மித்ரா வயலார் வீடு, ஆலம்பட்டார் வீடு, இராங்கியத்தார் வீடு, காரைக்குடியில் கிரணிப்பட்டியார் வீடு, சிவரக்கோட்டையார் வீடு என்பன இவ்வாறு பட்டப் பெயர்கள் பெற்றவையே ஆகும்.

தொழில், தொழில்செய் ஊர்களால் வந்த பட்டப்பெயர்கள் : இவ்வாறமைந்த பட்டப் பெயர்கள் செட்டிநாட்டில் மிகுதி. அரிக்கன் பழ, கம்பார் நா, ஈப்போ சொ, என்ற பட்டப்

Koviloor Digital Library

பெயர்கள் பர்மாவில் அரிக்கன், கம்பார், மலேயாவில் ஈப்போ ஆகிய ஊர்களில் தொழில் வணிகம் செய்தமையால் வந்த பெயர்களாகும். தேவகோட்டையிலும் காரைக்குடியிலும் காலி வீடு என அழைக்கப்படும் குடும்பங்கள் உள்ளன. காலி இலங்கையில் உள்ள ஊர். அங்கு தொழில் செய்தமையால் அவர்கள் அப்பெயர் பெற்றனர். கள்ளிக்கோட்டையில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆலை அமைத்தார் ஒரு நகரத்தார். அதனால் அவர் வழிவந்த குடும்பத்தினர் வாழும் வீடு தேவகோட்டையில் கள்ளிக்கோட்டையார் வீடு என அழைக்கப் பெறுகின்றது. தொண்டியில் உப்பளம் வைத்து வணிகம் செய்த குடும்பம் தொண்டியார் வீடு எனப் பெற்றது. இதே போல யாழ்ப்பாணத்தார் வீடு, தஞ்சாவூரார் வீடு, இடைப்பாடியார் வீடு, கரூரார் வீடு, பெர்லின் காசிச் செட்டியார் வீடு, காங்கேயத்தார் வீடு, பட்டணம் அழகப்ப செட்டியார் வீடு, அம்மாப்பேட்டையார் வீடு, பஞ்சாப் லெ. வீடு, ரெங்கோன் சேதுச் செட்டியார் வீடு, சிங்கப்பூர் சேக்கப்ப செட்டியார் வீடு எனப் பல பட்டப் பெயர்கள் வழங்கப் பெறுகின்றன. ஸ்பெயின் விமானப்படையில் சேர்ந்து பணிபுரிந்த வீரப்பா புதுவயலில் ஸ்பெயின் வீரப்பா எனவும் சொந்தமாக முதன்முதலில் விமானம் வைத்திருந்த கானாடுகாத்தான் அண்ணாமலை செட்டியார் ஏரோப்ளேன் அண்ணாமலை செட்டியார் என்றும் அழைக்கப்பட்டனர். வெளிநாட்டுக்குப் பணம் அனுப்ப உண்டியல் வழங்கிய கடை வைத்திருந்த குடும்பத்தார் உண்டியல் கடைக்காரர் வீடு என்றும் கடைக்காரர் வீடு என்றும் அழைக்கப்பட்டனர்.

கிராமத்தில் முதல் 'மிஷின்' நெல் அரைவை இயந்திரம்தான். ஆகவே இந்த ஆலை வைத்தவர் வீடு மிஷின்காரர் வீடு என்றும், உடையவர் மிஷின் சின்னையா செட்டியார் என்றும் அழைக்கப்படுவது வழக்கமாகி விட்டது. புகையிலைத் தோட்டம் வைத்திருந்தவர் வீடு 'புகையிலைக்காரர் வீடு' என்றும் புதுத் தோட்டத்தில் காபித்தோட்டம் வைத்திருந்தவர் 'புதுத்தோட்டம் ராம' என்றும் அழைக்கப் படுவதுண்டு. வைர வியாபாரம் செய்த ஒருவர் பள்ளத்தூரில் வைரம் அருணாசலம் செட்டியாராகவே பெயர் பெற்றார். பின்னர் அவர் நாடகத்துறைக்கு வந்தபோதும் இப்பெயரே நிலைத்தது. தமிழிசை இயக்கத்தில் ஈடுபட்டுக் கச்சேரி செய்த பனையப்பட்டி வினைதீர்த்தான் செட்டியார் 'பாகவதர்' என அழைக்கப்பட்டார். பாட்டுக் கச்சேரி செய்தவர் பாட்டுக்கவி ராமன் செட்டியார் என்றும் புல்லாங்குழல் வாசித்த சோமசுந்தரம் செட்டியார் 'புளூட் சோம' என்றும் அழைக்கப்பட்டனர். பாத்திரக்கடை வைத்தவர் வீட்டுக்குப் பாத்திரக்கடையார் வீடு எனப் பெயர் வந்ததும் உண்டு.

சுவீகாரம் வந்ததால் வழங்கும் ஊர்ப் பெயர்கள் : அரிமழத்திலிருந்து ஒருவர் நெற்குப்பைக்குச் சுவீகாரம் வந்ததால் 'அரிமழம் அழகப்பன்' எனப்பெயர் பெற்றார். இதுபோல் நூற்றுக்கணக்கான பெயர்கள் செட்டிநாட்டில் உள்ளன.

கொள்கையால் வந்த பட்டப்பெயர்கள் : மலேசியாவில் காந்தியடிகளைப் போன்றே தோற்றம் உடையவராக இருந்த தி.ஆ. முத்துப்பழநியப்ப செட்டியார், 'செட்டியார் காந்தி' என அழைக்கப்பெற்றார். அதேபோல் தேவகோட்டையில் நாராயணன் செட்டியார் 'காந்தி நாவன்னா' என்று அழைக்கப்பட்டார். காரைக்குடி செக்காலையில் காந்தியவாதியாகிய மெய்யப்பர் 'காந்திமெய்யப்பர்' என்று அழைக்கப்பட்டார்.

உருவத்தால் குணத்தால் வந்த பட்டப் பெயர்கள் : இன்பத்துறையில் எளியோரான வர்க்கு 'மைனர்' என்ற பட்டம் பெயருக்கு முன் வழங்கப்பெறும். பிடிவாதக் குணம் உள்ளவர்களுக்கு கல்வெட்டு, கறார் என்று பெயருக்கு முன் பட்டமும் நெட்டை, குட்டை ஆகிய உடல் அமைப்புக்கள் பெயருக்கு முன்னும் சேர்த்துச் சூட்டப்படும். அறநெறியில் நியாயவட்டி வாங்குவது நகரத்தார் குலமரபு. சிலர் நெறி தவறி நடந்து கடன் வாங்கியோர் சொத்தை எடுத்துக் கொள்வராயின் அவர் பெயருக்கு முன் 'அற்றிறுதி' (அத்திறுதி) என்ற பட்டம் சேர்ந்து விடும். சிவபூசை நெறி தவறாமல் செய்பவர்க்கு பூசை நடேசன் செட்டியார் என்று பெயர் வரும். ஆறுவிரல் அண்ணாமலை செட்டியார், தெற்றுப்பல் முருகப்ப செட்டியார் – இவை உடல் அமைப்பால் ஏற்பட்ட பெயர்களேயாகும். துணியைத் தூய வெள்ளையாகக் கட்டுவோர் பெயருக்கு முன் 'சலவைவேட்டி' என்ற பட்டமும் அதற்கு நேர்மாறான இயல்புடையவர்க்கு 'அழுக்குவேட்டி' என்ற பட்டமும் மக்களால் சூட்டப்பெறும்.

கிராமம் வாங்கியதால் வந்த பெயர்கள் : இராமநாதபுரம் மன்னரிடம் உரிமை பெற்று நிலவரி வசூலித்ததால் தேவகோட்டையில் புகழ்பெற்ற அழ.அரு. குடும்பத்தார் 'ஜமீந்தார் வீடு' என்றே அழைக்கப் பெறுகின்றனர். ரெட்டையம்பாடி கிராம உரிமை பெற்றவர் ரெட்டையம்பாடி ஜமீந்தார் என்றும் மைனர் இனாம் எஸ்டேட்டின் சிறிய

Koviloor Digital Library

பகுதியை வாங்கிய குடும்பத்தார் சின்ன மைனர் வீடு என்றும் பெரிய பகுதியை வாங்கியோர் பெரிய மைனர் வீடு என்றும் தேவகோட்டையில் பெயர் பெற்றுள்ளனர்.

பெத்தாச்சி வள்ளல் ஆண்டிபட்டி ஜமீந்தார் என்றும் நற்சாந்துபட்டி பெ.ராம.ராம. சிதம்பரம் செட்டியார் கோனூர் ஜமீந்தார் என்றும் அழைக்கப்பட்டனர்.

அறச்செயல்களால் வந்த பெயர்கள் : திருப்பணிகள், பசுமடம், நந்தவனம், தேவாரப் பாடசாலை, அன்னசத்திரம் முதலிய அறச்செயல்களைப் பல்வேறு ஊர்களில் மேற்கொண்ட காரணத்தால் பெயர்பெற்றவர்கள் செட்டிநாட்டில் ஏராளம். தேவகோட்டையில் சத்திரத்தார் வீடு, தண்ணீர்ப் பந்தலார் வீடு போன்ற பெயர்கள் இவ்வாறு வந்தன. பல ஊர்களில் பெருமாள் கோவிலார் வீடு, கார்த்திகை மடத்தார் வீடு, பசுமடத்தார் வீடு, பள்ளிக்கூடத்தார் வீடு போன்ற பெயர்கள் வழங்குகின்றன. ஏராளமான ஊர்களில் திருப்பணி செய்ததோடு பல்வேறு தர்மங்களும் செய்ததால் கடியாபட்டி முத்தையா செட்டியார் 'தர்மபூஷணம்' என்றே சிறப்புப் பட்டப்பெயர் பெற்றார்.

திருப்புனவாசலில் திருப்பணி செய்தவர்கள் திருப்புனவாசலார் வீடு என்றும் சீர்காழியில் அறம் செய்தோர் சீர்காழி ராம.வீடு என்றும் வழங்கப் பெறுகின்றனர். நாட்டரசன்கோட்டை கம்பர் சமாதியைப் பேணிப் புரந்து விழாக்கண்ட நகரத்தார் கம்பர் இராமநாதன் செட்டியார் என அழைக்கப் பெறுகின்றார். குழிபிறையில் கோவில் கட்டிய ஒருவர் கோவில் பெரிய கருப்பன் செட்டியார் என்றே அழைக்கப் பெறுகிறார். கோவிலில் பரம்பரை அறங்காவலராக இருப்பவர் வீட்டைக் காரியக்கார வீடு என்று அழைப்பர். பழநிக் காவடிகளை அழைத்துச் செல்லும் குடும்பத்தாருக்குக் கண்டனூரில் 'சாமியாடிச் செட்டியார் வீடு' என்றே பெயர்.

வீட்டால் அமைந்த பெயர்கள் : வீடு கட்டிய சிறப்பால் பலர் பெயர் பெற்றுள்ளனர். காரைக்குடியில் ஆயிரம் ஜன்னலார் வீடு, தேவகோட்டையில் கண்ணாடியார் வீடு, முகப்பில் சிங்கம் வைத்துக் கட்டியதால் காரைக்குடியில் சிங்கம் பழ. வீடு என்பன இவ்வாறமைந்தனவே. வீடு இருக்கும் திசையாலும் மேலவீடு, கீழவீடு, தெற்கு வீடு என வழங்கப்பெறும். வீட்டின்முன்னே வேனிற் கொட்டகை எப்போதும் இருந்தால் அது 'கொட்டகைக்காரர் வீடு' ஆகும். வீடு சந்தைக்கு அருகில் இருந்தால் அது சந்தைப் பேட்டையார் வீடு; வீட்டின்அருகே எண்ணெய்ச் செக்கு இருந்தால் அவர் வீடு செக்கடி ராம. வீடு. வீட்டின் முன்னே வைத்துள்ள மரங்களாலும் வாழைமரத்தார் வீடு, நெல்லிமரத்தார் வீடு வேப்பமரத்தார் வீடு எனப் பெயர் பெறும். ஒருவர் வீட்டில் புளியமரத்தில் கொக்குகள் நிறைய அடைந்ததால் அவர் வீடு கொக்குப் புளி, ராம. வீடு. ஒருவர் வீடு கட்டும்போது புதையல் எடுத்தார். ஆகவே அவர் வீடு, புதையலெடுத்த வீரப்பசெட்டியார் வீடு ஆயிற்று.

கல்வியால் புகழ்பெற்றோர் வீட்டைப் பாரிஸ்டர் வீடு, எம்ஏபிஎல் வீடு, புலவர் வீடு என்று அழைத்தனர். படிப்பை வைத்தே பட்டப் பெயர் வழங்குவதும் உண்டு. பி.ஏ. குமரப்ப செட்டியார், இன்டர் நாகப்ப செட்டியார் என்பன இவ்வாறு அமைந்தவை. விலாசங்களாலும் பட்டப்பெயர் வருவதுண்டு அமராவதி புதூரில் வயி.நாகுராம. குடும்பத்தாரை 'வயிநாகரம்' என்றே அழைப்பர். கண்டனூரில் சித.அரு. விலாசம் உள்ளவரை ஆங்கில எழுத்துக்களை வைத்து `STAR' அருணாசலம் செட்டியார் என்று அழைப்பர். இதேபோல் 'திரீ எஸ் வீடு' என்றும் 'இரட்டை ஆனாரூனா வீடு' என்றும் பெயர்கள் உள்ளன.

பொது இடங்களில் சொல்ல முடியாததாகவும் பட்டப்பெயருக்கு உரியவர் விரும்பாததாகவும் சில பெயர்கள் வைக்கப்படுவதுண்டு. ஊர்ப்பொதுக் கூட்டங்களில் அப்பெயர்களைப் பயன்படுத்துவதில்லை.

இவ்வாறு சூட்டப்பட்ட பெயர்கள் நகரத்தாரின் சொல்லாடல் திறனையும் வரலாற்று உணர்வையும் எதனையும் தனித்து அடையாளம் காணும் நுட்பமான மனநிலையையும் நகைச்சுவை உணர்வையும் விளக்குகின்றன. இப்பெயர்கள் காலங்காலமாக நிலைத்து வழங்கும் நிலைபேறுடையன.

பட்டமங்கலம்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது. காரைக்குடியிலிருந்து கல்லல் சாலையில் ஆலங்குடி அருகே பிரியும் விலக்குச் சாலையில் கண்டரமாணிக்கம் வழியே 24 கிலோமீட்டர் தொலைவில் இவ்வூர் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், இலுப்பைக்குடி, சூரக்குடி, வேலங்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு நகரக்கோவில்களைச் சேர்ந்த 136 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

Koviloor Digital Library

மணிமுத்தாற்றங்கரையில் அமைந்திருக்கும் இவ்வூர், செட்டி நாட்டு ஊர்களில், மாணிக்கவாசகர் பாடல் பெற்ற சிறப்புடைய ஒரே ஊராகும். இவ்வூரில் ஓர் ஆலமரத்தின் கீழ், கார்த்திகைப் பெண்டிர் அறுவருக்கும், சிவபெருமான், ஆசிரியனாக எழுந்தருளி, அட்டமாசித்திகளின் இயல்பினை அறிவித் தருளினான் என்ற செய்தியைத் திருவாசகத்தின் கீர்த்தித் திருவகவல்,

"பட்ட மங்கையிற் பாங்காய் இருந்தங்கு
அட்டமா சித்தி அருளிய அதுவும்"

எனக் குறிப்பிடுகிறது.

மீனாட்சி சுந்தரேசுவரருக்கும் அதற்கு வடபுறம், பெரிய பழைய ஆலமரத்தின் கீழ், கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கும், அட்டமா சித்தி அருளிய தெட்சணாமூர்த்திக்கும் இவ்வூர் அ.வீர. அடைக்கப்ப செட்டியாரால் (சூரக்குடி) கற்கோவில் திருப்பணி செய்யப்பெற்று **19-5-1930** இல் திருக்குட நன்னீராட்டு நிகழ்த்தப் பெற்றது. இப்போதும் இக்கோவில்கள் இவரது வழி முறையினரால் நிருவகிக்கப்பெறுகின்றன.

சிவகங்கை அரச குடும்பத்திற்குரிய அழகு சௌந்தரி அம்மன் கோவிலுக்கு, கண்டர மாணிக்கத்தைச் சேர்ந்த செ.சி.நா.லெ. நாராயணன் செட்டியார் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்து வைத்தார். இக்கோவிலுக்கும், அரச குடும்பத்தைச் சேர்ந்த மதியாத கண்ட விநாயகர் கோவிலுக்கும் கௌரவக் கண்காணிப்பாளராக இவ்வூரைச் சேர்ந்த அ.வீர.அ.வீர. அடைக்கப்ப செட்டியார், அரச குடும்பத்தால் அமர்த்தப் பெற்றுள்ளார்.

இவ்வூரில் நகரத்தாருக்குப் பொதுவான நகரமடமும், தண்டாயுதபாணி திருக்கோவிலும் உள்ளன. இங்கு ஆண்டுதோறும் மாசிக் கார்த்திகையில் நகரத்தாரால் மகேசுவர பூசை சிறப்பாக நடத்தப் பெற்று வருகிறது. இம்மடத்தைச் சார்ந்த இடத்தில் நகரத்தார் பொதுவில் ஒரு திருமணமண்டபம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வூரில் நான்கு ஊருணிகள் உள. அவற்றுள் பொற்றாமரைக் குளமும், குடி தண்ணீருக்குரிய தெப்பக்குளமும் மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் சார்ந்தவை. செட்டியார் ஊருணி என்பது இவ்வூர்ப் பிள்ளையார்பட்டிப் பங்காளிகட்கும், தலையான் ஊருணி என்பது இவ்வூர்ச் சூரக்குடிப் பங்காளிகட்கும் உரியவை.

மீனாட்சி சுந்தரர் கோவிலைக் கட்டிய அ.வீர. அடைக்கப்ப செட்டியார் **1944** இல் காலமானதும், அவருக்குச் சமாதி ஆலயம் அமைக்கப்பெற்று, நாள்தோறும் பூசைகளும், புரட்டாசிக் கார்த்திகை அன்று குரு பூசையும் அவரது வழிமுறையினரால் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன.

அ.வீர. அடைக்கப்ப செட்டியார் நன்கொடையாகக் கொடுத்த இடத்தில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி நடைபெற்று வருகிறது. கருங்குளத்தைச் சேர்ந்த அரங்கநாதன் செட்டியார் குடும்பத்தினர் வள்ளியம்மை ஆச்சி மேல்நிலைப் பள்ளியை இவ்வூரில் நடத்தி வருகின்றனர்.

இவ்வூரைச் சேர்ந்த அழ.மெ.சு. குடும்பத்தார் வைணவத் தலமாகிய திருக்கோட்டியூரிலும், அழ. மெ. சு. சி. சு. குடும்பத்தார் சிவத் தலமாகிய திருப்புத்தூரிலும் வேதபாடசாலை நடத்தி வந்தனர். **1987** இல் அ.வீர.அ.வீர. அடைக்கப்ப செட்டியார் இவ்வூரிலேயே ஸ்ரீ அட்டமாசித்தி வேத ஆகமப் பாடசாலையைத் தொடங்கி நடத்தி வருகிறார்.

பழம் பழுத்துக் கீழே விழுந்தால், மீண்டும், தானாகவே சென்று மரத்தில் ஒட்டிக் கொள்ளும் தனித்தன்மையுடைய ஏறழிஞ்சிமரம் ஒன்று இவ்வூரில் அட்டமாசித்தி ஆலமரத்தின் அருகே உள்ளது. செட்டிநாட்டில் அரிமழத்திலும், இவ்வூரிலுமே இம்மரம் காணப்படுகிறது.

பட்டினத்தார்

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த சிவநேசர், ஞானகலாம்பிகை அம்மையார் ஆகியோரின் மகன். பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவரது பெயர் திருவெண்காடர். நகரத்தார் வணிகமரபில் கோடிகோடிப் பொருள் தொகுத்து வாழ்ந்த இவர் துறவியானபின், இவருக்கு மக்கள் வழங்கிய பட்டினத்தார் எனும் பெயரே நிலைத்தது. பட்டினத்தடிகள் என்றும் குறிக்கப் பெறுகிறார்.

திருவெண்காடரின் இளமைப்பருவத்திலேயே தந்தையார் மறைந்தார். தாயார் ஞானகலாம்பிகை மகனைக் கல்வி கேள்விகளில் சிறந்தவராயும் ஒழுக்கநெறி நிற்கும் உயர்வுடையோராகவும் வளர்த்தார். இவர் ஒருநாள் திருவெண்காடு சென்று இறைவனை வணங்கி நிற்கும்போது ஒரு சிவனடியார் ஒரு சம்புடம் தந்து 'இதில் உள்ள சிவலிங்கத்தை வழிபாடு செய்து வருவாயாக' என்று கூறிச் சென்றார். அன்று முதல் சிவபூசை மேற்கொண்டார். திருவெண்காடருக்கு அவ்வூரிலுள்ள சிவசிதம்பரம் செட்டியார் மகளான சிவகலையைத் திருமணம் செய்து வைத்தனர். தம் வணிகத்தால் பெரும் பொருளீட்டி வாழ்ந்த இவர்கட்குப் பிள்ளையில்லாக் குறை பெருங்குறையாக இருந்தது.

Koviloor Digital Library

திருவிடைமருதூரில் வாழ்ந்த ஆதிசைவர் ஒருவரும் அவர் மனைவியும் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்து வரும் போது கோவில் திருக்குளத்தருகே வில்வமரத்தடியில் ஓர் அழகிய ஆண்மகவைக் கண்டெடுத்தனர். அக்குழந்தையை அதன் எடைக்குஎடை பொன் கொடுத்துத் திருவெண்காடர் மகன்மை கொண்டார். சுவீகாரம் கூட்டிக்கொண்ட அப்பிள்ளைக்கு மருதவாணன் எனப்பெயரிட்டுக் கணவனும் மனைவியும் தோள்மீதும் மார்மீதும் பாராட்டிச் சீராட்டி மிகுந்த பாசத்தோடு வளர்த்து வந்தனர். மருதவாணர் கல்வி கேள்விகளில் வல்லவராகி வணிகத்திலும் மணிகளை மதிப்பிடுவதிலும் மிக்க திறமை பெற்றுத் திகழ்ந்தார்.

குலத்தொழிலாகிய கடல்கடந்து செய்யும் வணிகம் மேற்கொண்டு தன்னொத்த இளைஞருடன் மருதவாணர் அயற்புலம் சென்றுவந்தார். பிற இளைஞரெல்லாம் பொன்னும் மணியும் கொண்டுவர மருதவாணர் எருமுட்டைகளையும், அவல்பொரி அடங்கிய சாக்குகளையும் கொண்டுவந்தார். உடன்வந்தோர் திருவெண்காடரிடம் 'உம் மகனுக்குச் சித்தம் திரிந்தது' என்றனர். இதுகேட்டுச் சினம்கொண்டு மகன் கொண்டுவந்த சாக்குமூட்டைகளைக் கண்ணுற்று அவற்றுள் ஒரு எருமுட்டையைத் தரையில் வீச அது பிளந்து அதனுள்ளே பொதித்து வைக்கப்பட்டிருந்த மணி தோன்றியது. அவல் பொரியினும் நவமணிகள் விரவியிருந்தன.

அறியாது மகன்மீது சினம் கொண்டோமே என எண்ணிய திருவெண்காடர் வீடுவந்து மனைவியிடம் மகன் எங்கே என்று வினவினார். 'மருதவாணர் இந்தப் பெட்டியை உங்களிடம் கொடுக்குமாறு சொல்லிப் போயினர்' என ஒரு சிறு பெட்டியைச் சிவகலையம்மை கொடுத்தார். அப்பெட்டியில் காதற்ற ஊசி ஒன்றும் ஓலை நறுக்கு ஒன்றும் இருந்தன. அவ்வோலையில் 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்ற உபதேச மொழி எழுதப்பட்டிருந்தது. இதைக் கண்ணுற்றதும் பொறிதட்டியது போல் திருவெண்காடரிடம் ஞானப்பேரொளி தோன்றியது. இதுநாள்வரை தம் மகனாயிருந்தவர் இடைமருதீசர் எனத்தெளிந்தார். அக்கணமே துறவு மேற்கொண்டார். தம்முடைய கோடிக் கணக்கான செல்வத்தை ஏழை எளியோர் கொள்ளத் திறந்துவிடுமாறு கணக்கரிடம் கூறிவிட்டு, பெருமாளிகையை விட்டு அப்பொழுதே வெளியேறினார்; துறவறம் மேற்கொண்டார். பசித்த போது பிச்சை யெடுத்துண்டார். ஊர்ப்பொது மன்றத்தில் தியானத்தில் அமர்ந்தார். ஆகவேதான் தாயுமானவர்

"அரிது அரிது பட்டினத்தடிகளைப் போல்
ஆரும் துறக்கை அரிது"

என்று பாடினார். இத்துறவு நிலை ஏன் என்று அந்நாட்டை ஆளும் மன்னவன் வந்து கேட்ட போது "நீ நிற்க நான் இருக்க" என்று இரத்தினச் சுருக்கமாக விடையிறுத்தார். மன்னவன் பதில் உரைக்க இயலாது சென்றான்.

திருவிடைமருதூர் கீழைக் கோபுர வாயிலிலே தங்கி இடைவிடாத தியானம் மேற்கொண்டார். எல்லாவற்றையும் துறந்த பட்டினத்தார் தாய்ப்பாசத்தால் தாயார்க்கு வாக்களித்தபடி ஞானகலாம்பிகை உயிர்நீத்த பொழுது அங்கு வந்து வாழைமட்டையில் அவர் உடலைக் கிடத்தி ஞானத்தீ வளர்த்து எரியூட்டினார்.

அப்பொழுது,

"அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் -
உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியமே
மானேஎன அழைத்த வாய்க்கு"

எனப் பட்டினத்தார் பாடினார் என்பர்.

தாய்க்குச் செய்யவேண்டிய கடமை நிறைவேறியதும் ஊர்ஊராகத் தலங்கள் தோறும் சென்று சிவபெருமானை வழிபட்டுப் பாடினார். சீர்காழியில் 'திருக்கழுமல மும்மணிக் கோவை', தில்லையில் 'கோயில் நான்மணிமாலை', காஞ்சிபுரத்தில் 'திருவேகம்பரந்தாதி', திருவொற்றியூரில் 'திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது', ஆகிய நூல்களை இயற்றினார். திருவிடைமருதூரில் இவர் பாடிய நூல் 'திருவிடை மருதூர் மும்மணிக் கோவை'யாகும். இவ்வைந்தும் பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. சில தனிப்பாடல்களும் இவர் பெயரில் வழங்குகின்றன.

திருவொற்றியூரில் சிவஞானம் பெற்ற இவர் ஒருநாள் ஏகாலியச் சிறுவர்க்கு விளையாட்டுக் காட்டுவதாய்க் கூறித் தம்மை ஒரு குழியிற் புதைக்கும்படி வேண்டினார். அவர்கள் புதைத்ததும் அச்சிறுவர்கள் வியப்புற இவர் வெளிப்பட்டுப் பக்கத்துக் குன்றின்மீது நின்றார். மறுமுறையும் புதைக்கும்படி இவர்கூற சிறுவர்கள் விளையாட்டென எண்ணிப் புதைத்தபோது அங்கேயே சிவலிங்கவடிவமாக முளைத்து நின்றார். இறைவனுடன் கலந்து சிவமேயாகி இலிங்கவடிவாக நின்ற பட்டினத்தடிகளை மக்கள் வணங்கித் தொழுதனர். இன்றும் அவரது பள்ளிப்படைக் கோவிலாகிய சமாதி திருவொற்றியூரில் உள்ளது. ஆடித்திங்கள் உத்திராடநாள் இவரது குருபூசை நாளாகும்.

Koviloor Digital Library

பட்டினத்தார் நகரத்தாரே என மெய்ப்பிக்கும் அகச்சான்றுகள் அவரது பாடல்களில் உள்ளன. பணத்திருப்பு பற்றிய குறிப்பும், ஆத்தாள், வரிசை இட்டுப் பாராமல் என்ற சொல்லாட்சிகளும் அவர் பாடல்களில் காணப்படுகின்றன.

இளையாத்தங்குடிக் கோவிலாரில் பட்டினசாமி என்ற ஒரு பிரிவு உண்டு. ஆண்டுதோறும் பட்டினத்தார் விழா காவிரிப் பூம்பட்டினம் பல்லவனீச்சுரம் நகரவிடுதியில் நகரத்தாரால் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகிறது.

திருவெண்காட்டில் புதைபொருள் ஆராய்ச்சியாளரால் கண்டெடுக்கப்பட்ட பட்டினத்தாரின் உருவச்சிலை ஐம்பொன்னால் செய்யப் பெற்றது. அது தஞ்சாவூர் சரபோஜி அரண்மனையில் உள்ள கலைக் கூடத்தில் உள்ளது. பட்டினத்தாரை வழிபடும் பழக்கம் அவர் மறைந்த காலத்திலேயே தொடங்கிவிட்டது என்பதற்கு இச்சிலை சான்றாகும்.

பட்டினத்தார் அற்புதத் திருவிழா

தலைச்சங்காட்டைச் சேர்ந்த சின்மயானந்த சுவாமிகள்தான் காவிரிப்பூம்பட்டினத்தில் கவனிப்பாரற்றிருந்த பட்டினத்தடிகள் திருவுருவச் சிலையைக் கண்டெடுத்தவர். பட்டினத்தாருக்கு வழிபாடுசெய்து விழாக் கொண்டாட வேண்டும் என்ற வேண்டுகோளோடு நகரத்தார்களை அணுகினார். செட்டிநாட்டுப் பகுதியில் ஆன்மீகத் தொண்டுகளை முன்னின்று நடத்திய சிவநேசர் திருக்கூட்டத்தார் இதனை ஏற்றுக்கொண்டு ஏறத்தாழ 1924 இல் காவிரிப்பூம்பட்டினத்தில் இவ்விழாவை நடத்தத் தொடங்கினர். இக்குழுவில் ஒருவராகிய கண்டனூர் நா.அரு. மகாதேவ காசி விசுவநாதன் செட்டியாரே பின்னாளில் இவ்விழாவை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1930 இல் இப்போது நகரவிடுதி அமைந்திருக்கும் இடத்தைப் பல்லவனீச்சரம் கோவில் நிருவாகத்திடமிருந்து வாங்கி நகரத்தார் நிதியுதவியோடு நகரவிடுதியை அவரே கட்டி முடித்தார். இப்பணிகளில் புதுவயல் சிகப்பி ஆச்சி, பள்ளத்தூர் மீனாட்சி ஆச்சி, கோனாபட்டு விசாலாட்சி ஆச்சி, நாணிச்சாவூருணி சிவகாமி ஆச்சி ஆகியோர் அவருக்கு உறுதுணையாக அமைந்தனர்.

மகாதேவ காசிவிசுவநாதன் செட்டியாருக்குப் பிறகு அவரது மூத்தமகன் நாச்சியப்ப செட்டியார், 1941 இலிருந்து இவ்விழாவை நடத்தினார். அவருக்குப் பின் அவர்தம்பி அருணாசலம் செட்டியார் இப்போது விழாவை நடத்திவருகிறார். 1947 முதல் காரைக்குடி பழ.தெ.லெ. அருணாசலம் செட்டியார் இவர்களுக்கு உறுதுணையாக இவ்விழாவை நடத்திவருகிறார். தொடர்ந்து ஐம்பதாண்டுகளாக இவ்விழாவில் கேட்போர் மனத்தில் பதியும் வண்ணம் நாடகப்பாணியில் பட்டினத்தடிகள் வரலாற்றை இவர் சொல்லிவருவது குறிப்பிடத்தக்கது.

சின்மயானந்த சுவாமிகள் கண்டெடுத்த பட்டினத்தடிகள் திருவுருவச்சிலையைப் பல்லவனீச்சுரம் கோவிலுக்குள் தேவகோட்டை சேவு.லெ.லெ. குடும்பத்தாரும் சேவு.லெ.ராம.நா. குடும்பத்தாரும் தனிக் கருவறை அமைத்து எழுந்தருளச் செய்துள்ளனர். ஆண்டுதோறும் ஆடி மாதம் உத்திராட நட்சத்திரத்தன்று பட்டினத்தார் அற்புதத் திருவிழா நிறைவு நிகழ்ச்சியாக இச்சன்னதியில் குருபூசை வழிபாடு நடைபெறும்.

ஆடிமாதம் உத்திராட நட்சத்திரம் பத்தாம் நாளாக அமையும் வண்ணம் விழா தொடங்கப்பெறும். முதல் நாளன்று வாஸ்து சாந்தி செய்து காப்புக்கட்டி விழாவைத் தொடங்குவர். பத்து நாள் விழாவில் அந்தந்த நாள் விழாவிற்கேற்பப் பட்டினத்தார் கதை பகுதிபகுதியாகப் பிரிக்கப்பெற்றுச் சொல்லப் பெறும். அந்தந்தக் கதைப்பகுதிக் கேற்பத் திருவுருவச் சிலைகள் எழுந்தருளல் நிகழும். பத்து நாட்களும் பெருந்திரளான நகரத்தார்கள் குறிப்பாக ஆச்சிமார்கள் விடுதியிலேயே தங்கி விழாவில் கலந்து கொள்வார்கள்.

விழா நடைமுறை

1 ஆம் நாள்	மாலை	பட்டினத்தார் திருஅவதாரம்
2 ஆம் நாள்	காலை	திருவெண்காடு செல்லல், உபதேசம் கேட்டல்
	மாலை	திருவெண்காட்டில் மணம் பேசி முடித்தல்
3 ஆம் நாள்	காலை	தண்ணீர் மந்திரம் சொல்லல்
	மாலை	காவிரிப்பூம் பட்டினம் திரும்புதல் – திருமணம்.
4 ஆம் நாள்	காலை	குழந்தைக்காகத் திருவிடைமருதூர் ஈசரிடம் வேண்டுதல்
	மாலை	எடைக்கு எடை பொன் கொடுத்துக் குழந்தையை வாங்குதல். மருதவாணன் எனப் பெயரிடுதல், காது

Koviloor Digital Library

		குத்துதல், தாலாட்டுதல்.
5 ஆம் நாள்	காலை	மருதவாணனைப் பள்ளியில் வைத்தல் மருதவாணன் மதிநுட்பம்
	மாலை	மருதவாணனை வணிகத்திற்குக் கப்பலில் அனுப்புதல் மருதவாணன் திரும்புதல் – பட்டினத்தார் துறவு.
6 ஆம் நாள்	மாலை	பட்டினத்தார் பிச்சையெடுத்தல்
7 ஆம் நாள்	மாலை	பட்டினத்தார் ஆத்தாள் இறப்பு – ஒப்பாரி – கொள்ளிவைத்தல்.
8 ஆம் நாள்	காலை	திருவாரூர்ப் பிள்ளையை எழுப்புதல்
	மாலை	பத்திரகிரியார் துறவு
9 ஆம் நாள்	மாலை	பத்திரகிரியார்க்கும் நாயடியார்க்கும் மோட்சம் கொடுத்தல்.
10 ஆம் நாள்	காலை	பட்டினத்தடிகள் குருபூசை
	மாலை	சிவசாயுச்சியம், பஞ்சமூர்த்தி புறப்பாடு.

பட்டினத்தாரின் சமாதித் திருக்கோவில் அமைந்துள்ள திருவொற்றியூரிலும் விழா நடத்தவேண்டும் என விரும்பிய நகரத்தார்கள் 'காவிரிப்பூம்பட்டினம் நகரத்தார் டிரஸ்ட்' என்ற அமைப்பின் வாயிலாக 1997 முதல் ஆவணி மாதம் மூன்று நாள் விழாவாக நடத்தி வருகின்றனர்.

பணத்திருப்பு

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் புதுமை, கார்த்திகைப் புதுமை, திருவாதிரை, திருமணம், சாந்தி போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பங்காளிகளும், தாயபிள்ளைகளும், தங்கள் வருகையைப் பதிவு செய்யும் வண்ணம், ஒரு தொகையை அடையாளமாக வழ்ங்குவர். அப்போது அவர் தம் பெயர்களும், பெயர்களுக்கெதிரே அவர்கள் வழங்கிய தொகையும் குறிக்கப் பெறும். இது பணம் எழுதுதல் எனப்படும். அவ்வாறு அக்காலத்தில் ஏடுகளில் எழுத்தாணியால் எழுதப்பெற்ற இப்பதிவேடு 'பணத்திருப்பு' எனப் பெற்றது.

இப்போது புதுமை முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுவதில்லை. கலியாணம், சாந்தி இரண்டிலும் இப்போதும் பணம் எழுதப்படுகிறது. ஆனால் இதற்கென அச்சகங்களில் தயாரித்து விற்கப்படும் சிறு நோட்டுப் புத்தகங்களில் எழுதப்படுகிறது. அப்புத்தகங்களின் அட்டையில் 'மொய்ப்பண ஏடு' என அச்சிடப் பெற்றுளது. என்றாலும், இப்போதும் பழைய தலைமுறையைச் சேர்ந்த நகரத்தார்கள் இதனைப் 'பணத்திருப்பு' என்றே குறிப்பிடுகின்றனர்.

ஒரு பணம் என்பது முன்னர் புழக்கத்தில் இருந்த 2 அணாவை (12 காசுகள்)க் குறிக்கும். பெரும்பாலும் பங்காளிகள் தம் வருகைக்கு அடையாளமாக ஒருபணம் எழுதுவதே பெருவழக்காக இருந்தமையால் இப்பழக்கத்திற்கே 'பணம் எழுதுதல்' என்ற பெயர் வழங்கியது போலும். அவ்வாறு எழுதப்பெற்ற பணத்தின் இருப்பைக் காட்டும் பதிவேடு பணத்து இருப்பு எனப்பொருள் தரும் 'பணத்திருப்பு' ஆகியிருத்தல் வேண்டும்.

இப்போது திருமண வீட்டில் மணவறைச் சடங்குகள் முடிந்த பின் பெண் வீட்டுப் பங்காளிகள் ஓரிடத்திலும், மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகள் மற்றோரிடத்திலும் உட்கார்ந்து தனித்தனியே பணம் எழுதுகின்றனர். அவர்கட்கிடையே ஒரு முக்காலி மீது ஒரு வெள்ளி அல்லது எவர்சில்வர் சட்டியில் சிறிது பால் ஊற்றி வைக்கப் பெற்றிருக்கும். அதில் வெற்றிலை கிள்ளிப் போடுவர். சங்கு ஊதப் பெறும். முதன் முதலில் மாப்பிள்ளை அல்லது பெண்ணின் தந்தை வழி ஐயா பெயர் படிக்கப்படும். அவர்களுக்குரிய பணம் இவ்வளவு எனச் சொல்லி அத்தொகை பாலினுள் போடப்பெறும். பிறகு பங்காளிகள் அனைவர் பெயரும், முதல் நாளே எழுதி வைக்கப் பெற்றிருக்கும் வரிசை முறையில் படிக்கப்பெறும். அதில் வந்திருப்போர் சார்பாகத் தொகைகள் வழங்கப்பெற்றுப் பதிவு செய்யப்பெறும்.

பங்காளிகள் பட்டியல் முடிந்ததும், இருதாள்களை விட்டுவிட்டுத் தாயபிள்ளைகள் பணம் எழுதத் தொடங்குவர். அதில் முதலாவதாக மாப்பிள்ளை அல்லது பெண்ணின் தாய்வழி ஐயா பெயர் எழுதப்பெறும். அப்போதும் சங்கு ஊதுவர். அவர்கள் மாப்பிள்ளை அல்லது பெண்ணின் தாயாரிடம் முன் கூட்டியே பேசி முடிவு செய்து வைத்திருக்கும் தொகையை (1001 பணம், 501 பணம் என ஒரு தொகை) மாமப்பணம் என அறிவித்து வழங்குவர். அது பதிவு செய்யப்பெறும்.

Koviloor Digital Library

பின்னர் தாயபிள்ளைகளில் வந்திருப்போர் அனைவரும் தாங்கள் விரும்பும் தொகைகளைப் பணம் எழுதுவர். இறுதியில் பணம் இருப்புக் கட்டிச் சரி பார்க்கப் பெற்ற பின் தொகை ஒரு சிவப்புப் பட்டுத் துணியில் முடியப்பெற்று, எலுமிச்சம் பழம், வெற்றிலை, பாக்கு, மலர் இவற்றுடன் ஒரு தாம்பாளத்தில் வைக்கப்பெற்று மாப்பிள்ளை அல்லது பெண்ணின் தந்தையிடம் ஒப்படைக்கப் பெறும்.

இது ஒரு சடங்கு போல நிகழ்ந்தாலும், இச்சடங்கின் ஆவணமாகிய பணத்திருப்பு நகரத்தார் சமுதாயத்தின் பல சிறப்பியல்புகளை உள்ளடக்கியதாகும். முதற்கண் பிற சமுதாயங்களில் இருக்கும் மொய் எழுதுதல் என்பது போல, திருமணவீட்டாரின் பொருள் வரவுக்குரிய பழக்கமாக இது நகரத்தார் சமுதாயத்தில் இல்லை. மாறாக இது ஒரு வருகைப் பதிவு போலவே பயன்படுகிறது. அவ்வாறே இது நீண்ட காலமாகப் பயன்பட்டிருக்கிறது என்பதைப் பதினோராம் திருமுறை உறுதி செய்கிறது. நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த பட்டினத்தடிகள் பாடிய 'கோயில் நான்மணிமாலை'யில் நான்காம் பாடலில் சிவபெருமான் திருமணத்துக்குச் சென்ற பட்டினத்தார் தம் வருகையைப் பதிவு செய்து கொள்ளும்படி ஒரு வேண்டுகோளை முன் வைக்கிறார்.

"உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள்
அமரர்முன் புகுந்து அறுகு சாத்திநின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன்"

என்பதே அவ்வேண்டுகோள். இங்கே பட்டினத்தார் குறிப்பிடும் 'தமர்' தான் வருகைபுரிந்த பங்காளிகளும், தாய பிள்ளைகளும். அவர் 'பெயர் எழுதிய வரி நெடும் புத்தகம்' தான் பணத்திருப்பு.

இனி, இப்பணத் திருப்பு எழுதப்பெறும் முறை இன்னும் பல சிறப்புக்களைக் காட்டுகிறது. திருமணத்திற்கு முதல் நாளே பங்காளிகள் அமர்ந்து பணத்திருப்பின் பங்காளிகள் பட்டியலைத் தயார் செய்து வைத்து விடுவார்கள். தாயபிள்ளைகளைப் பொறுத்தவரை பணம் எழுதும் நேரத்தில் யார் யார் கொண்டு வந்து பணம் கொடுத்து எழுதச் சொல்கிறார்களோ அவர்கள் பெயர்கள் அந்தவரிசையில் எழுதப் பெறும். ஆனால் பங்காளிகள் பட்டியல் அதற்கு முன்னதாக நிகழ்ந்த திருமண வீட்டிலிருந்து வாங்கிவரப்பட்ட பணத்திருப்பை மாதிரியாகக் கொண்டு புள்ளிகள் யாரும் விட்டுப் போகாமல் எழுதப்படும். எனவே, இப்பணத்திருப்பு, குறிப்பிட்ட பங்காளி வகையினரின் மக்கள் தொகைக் கணக்காகவும் பதிவாகிறது என்று கூறுவது தவறாகாது. திருமணத்தன்று இப்புள்ளிகளுள் வந்தவர்கள் பெயர்கட்கெதிரே பணம் வரவு வைக்கப் பெறும். மற்றவர் பெயர் சும்மா இருக்கும்.

அடுத்து, பணத்திருப்பில், பங்காளி என்றாலும், தாயபிள்ளைகள் என்றாலும், பெயர் எழுதுவதற்கு என ஒரு முறை பின்பற்றப்படுகிறது. அது நகரத்தார் சமுதாயத்தின் சம உரிமை, ஒத்த மதிப்பு என்ற கொள்கைகளை வெளிப்படுத்துவதாகவும், பழந்தமிழ் மரபைப் பின்பற்றுவதாகவும் அமைவது ஒரு சிறப்பு. அதாவது சங்க காலத்தில் 'உதியன் சேரன்' என்ற தொடர் உதியன் மகன் சேரன் என்ற பொருளைத் தரும். அது போலவே நகரத்தார் பணத்திருப்பில் 'இராமனாதன் செட்டி அழகப்பன்' என்ற தொடர் இராமனாதன் செட்டியார் மகன் அழகப்பன் என்ற பொருளைத் தரும். இவ்வாறு பழமரபில் எழுதுவதோடு சம உரிமை, ஒத்த மதிப்பு என்ற அடிப்படையில், குறிப்பிடப்படுபவர் எவ்வளவு பெரிய செல்வராயினும், எவ்வளவு பெரிய அறிஞராயினும், எவ்வளவு செல்வாக்கு உடையவராயினும், எத்தனை பட்டங்கள் பெற்றவராயினும், அவர்கள் பெயர் மேற்குறிப்பிட்ட முறையில் ஒரே மாதிரி – தந்தை பெயரும் அவர் பெயரும் என்ற அளவில் மட்டுமே இடம் பெறும். எடுத்துக்காட்டாக, இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் பெயர், 'முத்தையா செட்டி அண்ணாமலை' என்றும், பண்டிதமணி பெயர் 'முத்தையா செட்டி கதிரேசன்' என்றும் மட்டுமே குறிக்கப்பெறும். மேலும் பெரும் செல்வராயினும், இயல்பான வராயினும் அனைவரும் ஒரு குறிப்பிட்ட தொகையையே (அதுவும் அடையாளம் கருதி எழுதப் பெறும் சிறு தொகையையே) எழுதுவது என்ற மரபும் சமத்துவத்தை உறுதிப்படுத்துகிறது.

அடுத்து, பங்காளிகள் பட்டியல் எழுதப்பெறும் வரிசைமுறையும் சிறப்புக்குரியதே. திருமண வீட்டார் வீட்டுப் புள்ளிகள் முதலிலும், அடுத்து அந்தப் பங்காளி வகையில் வாரிசு முறைப்படி எந்தெந்த ஐயாக்கள் வீடு அடுத்தடுத்து வருமோ அதே வரிசையிலும்தான் பட்டியல் எழுதப்பெறும். ஒரு பொதுக் குடும்பத்தின் பட்டியல் எழுதப்படும்போது முதலில் மூத்தவர் பெயர்; அதனையடுத்து அவர் மக்களில் மூத்தவர் பெயர்; அதற்கடுத்து அவர் மகன், அதாவது முதலில் எழுதப்பெற்றவரின் பெயரன் திருமணமான புள்ளியாக இருந்தால் அவன் பெயர்; அதற்குப் பின்னர் முதலில் எழுதப்பெற்றவரின் இரண்டாவது மகன் இருந்தால் அவர்பெயரும், அவர் மகன் இருந்தால்

Koviloor Digital Library

அவர் பெயரும். இவற்றுக்கெல்லாம் பின்னரே முதலில் எழுதப்பெற்றவரின் தம்பி இருப்பின் அவர் பெயர் வரும். எனவே, பணத்திருப்பு குறிப்பிட்ட பங்காளிகளின் வாரிசு முறைப்படியான குடிவழியையும் பின்னோருக்கு உணர்த்தும் ஆவணமாக விளங்குகிறது.

சமுதாயக் கட்டுக் கோப்பிற்கும் பணத்திருப்பு உதவுகிறது. பணத்திருப்பில் பங்காளிகள் பட்டியலில் ஒருவர் பெயர் இடம் பெற வேண்டுமானால் அவர் 'புள்ளி' ஆக வேண்டும். அதாவது அவருக்குத் திருமணம் ஆக வேண்டும். அவ்வாறு புள்ளி ஆகிப் பட்டியலில் இடம் பெற்ற பின், செட்டியாரோ, ஆச்சியோ ஒருவர் காலமாகி ஒருவர் இருந்தாலும் அவர்கள் பெயர் பட்டியலில் தொடரும். இருவரும் காலமாகி விட்டால் அப்பெயர் அதற்குப் பின் எழுதப்பெறும் பணத்திருப்புகளில் இடம் பெறாது. ஓர் இளைஞனைப் புள்ளி என ஏற்றுக்கொள்ள அவனுக்குத் திருமணமாக வேண்டுமென்பதோடு, அத்திருமணம் நகரத்தார் மரபுப் பெண்ணோடு நிகழ வேண்டும் என்பதும் கட்டாயமாகும். எங்காவது ஓர் இளைஞன் வேறு சாதிப் பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டால், அவன் குடும்பத்தோடு திருமணத்திற்கு அழைக்கப்பெற்றாலும், கலந்து கொண்டாலும் அவன் பணம் எழுத இயலாது. ஏனெனில் பங்காளிவீட்டுப் பட்டியலில் அவன் பெயர் இடம் பெறாது.

இவ்வாறு பணத்திருப்பு என்பது மக்கள் தொகைக் கணக்காகவும், வருகைப் பதிவாகவும், ஒத்த உரிமையையும், சமத்துவத்தையும் உணர்த்துவதாகவும், குடிவழியைப் பின்னோர்க்கு அறிவுறுத்துவதாகவும், சமுதாயக் கட்டுக் கோப்பைப் பேணுவதாகவும் அமையும் ஒரு மிகச் சிறந்த ஆவணமாகும்.

பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் உருவச் சிலை

பண்டிதமணியின் சொந்த ஊராகிய மகிபாலன்பட்டியில் மங்கள விநாயகர் பள்ளிக்கு அருகே அவரது மார்பளவு உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. சிலை அமைப்பதற்குரிய இடத்தை அவ்வூர் ந.மு.மு. முத்தையா செட்டியார் குடும்பத்தினர் நன்கொடையாக வழங்கியுள்ளனர். 3–4–1974 அன்று இராசா சர் முத்தையா செட்டியார் தலைமையில் தமிழக முதல்வர் மு. கருணாநிதி சிலையைத் திறந்துவைத்தார். 'பண்டிதமணி திரு.மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் திருவுருவச்சிலை திறப்புவிழா மலர்' அமைச்சர் மாதவனால் வெளியிடப்பெற்றது.

பத்மஸ்ரீ நாகப்பசெட்டியார் உருவச்சிலை

இந்தியத் தோல்தொழில் துறையின் முடிசூடா மன்னராக விளங்கியவரும் மத்தியத் தோல் ஆராய்ச்சிக் கழகம் சென்னையில் அமையக் காரணமாக இருந்தவருமாகிய நாகப்ப செட்டியாரின் முழுஉருவச்சிலை தோல் ஆராய்ச்சிக் கழக வளாகத்தில் அமைந்துள்ளது. இதனை நாகப்ப செட்டியார் நினைவுக்குழு என்ற அமைப்பு நிறுவியது. அறுபத்தைந்தாயிரம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட ஆறடி உயர வெண்கலச் சிலையினைச் சிற்பக்கலை வல்லுநர் மணி நாகப்பா சிறப்பாக வடிவமைத்துள்ளார்.

தோல் அருங்காட்சியகத்திற்காக நாகப்ப செட்டியாரே வழங்கிய கட்டிடத்திற்கருகில், ஆராய்ச்சிக் கழகத்தின் நுழைவாயிலை நோக்கி நிற்பதுபோலச் சிலை அமைந்துள்ளது. இச்சிலை அமைந்துள்ள இடத்திலிருந்து விருந்தினர் இல்லம் நோக்கிச் செல்லும் சாலைக்கு நாகப்பா சாலை எனப் பெயர் சூட்டியுள்ளனர். 27–1–1988 இல் நடைபெற்ற சிலைத் திறப்பு விழாவிற்கு தோல் ஆராய்ச்சிக்கழக இயக்குநர் ஆர்.பி. மித்ரா தலைமையேற்றார். மத்திய உள்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் சிலையைத் திறந்து வைத்தார்.

பர்மாவில் நகரத்தார்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நகரத்தார்கள் பர்மாவில் லேவாதேவித் தொழிலைத் தொடங்கினர். பர்மாவின் கிழக்குப் பகுதியில் உள்ள மோல்மீனில் முதன்முதலில் குடியேறிய நகரத்தார்கள் நாளடைவில் பர்மா நாடெங்கும் குடியேறித் தொழில் செய்யத் தொடங்கினர். 1923 ஆம் ஆண்டில் எடுக்கப் பெற்ற ஒரு கணக்கின்படி ஏறத்தாழ 150 ஊர்களில் 1250 கடைகள் வைத்துத் தொழில் நடத்திய நகரத்தார் ஏறத்தாழ எழுபது கோடி ரூபாய் அளவுக்குக் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்ததாகத் தெரியவருகின்றது.

சென்ற இடமெல்லாம் சைவமும் தமிழும் வளர்க்கும் இயல்புடைய நகரத்தார்கள் பர்மாவிலும் இப்பணிகளைச் சிறப்பாகச் செய்தனர். பர்மாவில் 59 ஊர்களில் 62 கோவில்களை நகரத்தார்கள் கட்டியிருக்கிறார்கள். இவை அனைத்தும் திராவிடக் கட்டிடக் கலை முறையில் கட்டப் பெற்றவை. கோவில்களும் அவற்றைச் சார்ந்த நந்தவனங்களும் மடங்களும் மிகப்பெரிய அளவில் ஏற்படுத்தப் பெற்றன. ஒவ்வொரு ஊரிலும் ஆண்டுதோறும் ஒரு

Koviloor Digital Library

திருவிழா சிறப்பாக நடைபெற்று வந்தது. சித்ரா பௌர்ணமி, தைப்பூசம், பங்குனி உத்தரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பல ஊர்களில் திருவிழாவை ஒட்டி, சுவாமி உலாவருதல் சிறப்பாக நடைபெற்றது. இதற்காக வெள்ளி ரதங்களும் வெள்ளி வாகனங்களும் செட்டிநாட்டில் உருவாக்கப்பெற்றுப் பர்மாவுக்கு அனுப்பிவைக்கப்பெற்றன. இரங்கூன், ஈந்தட்டா, பாசியன், மோல்மீன், பக்கோ ஆகிய ஊர்களில் வெள்ளித்தேர் உலா மிகவும் பேர் பெற்றதாகும். பெரும்பாலான ஊர்களில் விழா நாட்களில் நகரத்தார்கள் அன்னதானம் நடத்தினர்.

நகரத்தார்கள் பர்மாவில் கோவில் கட்டிய 59 ஊர்கள் வருமாறு :

1. இரங்கூன்
2. பசுமந்தான்
3. கிமந்தான்
4. லேகூ
5. மோபி
6. தக்கி
7. அவுக்கான்
8. தொவுஞ்சை
9. லேப்பட்டான்
10. மீன்லா
11. அவுப்போ
12. சூப்பிங்கான்
13. சிக்கோம்
14. நத்தலின்
15. பவுண்டை
16. தேக்கோன்
17. புரோம்
18. ஈனாஞ்சான்
19. தயட்மியோ
20. ஈந்தட்டா
21. நத்தஞ்சான்
22. பாசியன்
23. மைனாங்
24. உவாக்கமா
25. மியாங்மியா
26. சூமங்கை
27. ஐமென்
28. பியாப்பம்
29. சைலா
30. டேரியா
31. தொந்தை
32. போக்கலை
33. மோல்மேன்சூன்
34. சைப்பி
35. சோசான்
36. மூப்பின்
37. எவுண்டம்
38. மவுஞ்சவுட்டான்
39. தோங்குவா
40. கட்டப்பினா
41. கையாங்
42. டாப்பின்
43. பக்கோ
44. தன்னப்பின்
45. சைட்டோ
46. சைக்கோ
47. தத்துவம்
48. சுவைச்சான்
49. மோல்மீன்
50. டையூ
51. நவுலியப்பன்
52. பென்விக்கோன்
53. பியூ
54. டாங்கோ
55. பின்மெனா
56. மீஞ்சான்
57. மாந்தளை
58. மணியுவா
59. மீன்பு

இவற்றுள் குறிப்பிடத்தக்கவை இரங்கூன் ஆறறை தண்டாயுதபாணி கோவில், பசுமந்தான் தண்டாயுதபாணி கோவில் ஆகியவை. ஆறறைக் கோவில் 1890 இலும் பசுமந்தான் கோவில் 1900 இலும் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இவ்விரு கோவில்களையும் நிருவாகம் செய்வதற்காக 1935 ஆம் ஆண்டு இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார் கோவில்களின் தர்மபரிபாலன சபை என்ற அமைப்பு உருவாக்கப் பெற்றது. கம்பையில் ஒரு நகரத்தார் மடத்தையும் இவ்வமைப்பே நிருவகித்து வருகிறது. பசுமந்தான் தண்டாயுதபாணி கோவில் 1942 இல் சப்பானியர் குண்டு வீச்சால் பழுதடைந்தது. நகரத்தார் மடத்தில் பாலாலயம் அமைத்து மூர்த்திகளை வைத்து வழிபாடு செய்து வந்தனர். 1963 ஆம் ஆண்டு இக்கோவில் திருப்பணி தொடங்கப்பெற்று 1964 ஆம் ஆண்டில் திருக்குட நீராட்டு விழா நடைபெற்றது. 1979 இல் மீண்டும் இக்கோவிலுக்குக் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

Koviloor Digital Library

பர்மா நகரத்தாரின் தமிழ்த் தொண்டில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கது கம்பைத் தனவைசியர் கல்விக் கழகம் (நுக.), அமைத்ததாகும். *1928* இல் தொடக்கப்பள்ளி ஒன்றைத் தொடங்கி *1930* இல் அதனை உயர்நிலைப் பள்ளியாக்கி *1950* வரை நடத்திவந்தனர். அதற்குப்பின்னரும் இக்கல்விக் கழகம் தன்னுடைய நிதியிலிருந்து நகரத்தார் மாணவ மாணவியருக்குக் கல்வி உதவித்தொகை வழங்கியும் தமிழகத்தில் இருந்து அறிஞர்களை வரவழைத்து விழாக்கள் நடத்தியும் தொடர்ந்து தொண்டு செய்து வந்தது. இரண்டாவது உலகப்போரின் போது இப்பள்ளிக் கட்டிடம் இ.தே.ரா. வின் பாலசேனா பயிற்சி நிலையமாகப் பயன்படுத்தப் பெற்றது.

இக்கல்விக் கழகத்தின் மற்றொரு சாதனை *14–11–1964* ஆம் நாளில் திருக்குறளைப் பர்மிய மொழியில் மொழி பெயர்த்து மூவாயிரம் படிகளை அன்பளிப்பாக வழங்கியதாகும்.

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம், அகிலபர்மா தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கம், ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டி ஆகியவை பர்மாவில் இரங்கூனைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவந்த நகரத்தார் பொது அமைப்புக்கள் ஆகும். (பார்க்க : ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மேலாண்மைக் கழகம்) *23–8–1923* இல் தொடங்கப் பெற்ற பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம் *1933* ஆம் ஆண்டு 'தனவணிகன்' என்ற வார இதழைத் தொடங்கி *1941* ஆம் ஆண்டு வரை நடத்தியது. இச்சங்கத்தின் வேண்டுதலை ஏற்றுப் பர்மிய அரசு பர்மியச் சட்டசபையிலும் இரங்கூன் மாநகராட்சி மன்றத்திலும் நகரத்தார்களுக்கு ஒவ்வோரிடம் ஒதுக்கிக் கொடுத்தது. பள்ளத்தூர் அ.மு.மு. வெள்ளையஞ் செட்டியார் சட்டசபை உறுப்பினராகவும் கோட்டையூர் அக.அ.சித.அழ. சிதம்பரம் செட்டியார் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றினர். *1929* இல் சங்கம் இரங்கூன் பல்கலைக் கழகத்திற்கு ஒரு லட்சம் ரூபாயை நன்கொடையாக வழங்கியது.

1953 இல் பர்மிய அரசு விவசாய நிலங்கள் முழுமையையும் தேசிய மயமாக்கிக் கொண்டது. இதனால் நகரத்தார் முதலீட்டுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. பர்மிய அரசு மிகக் குறைந்த அளவில் கொடுக்க ஒப்புக்கொண்ட நில இழப்பீட்டுத் தொகையையும் *1962* இல் பொறுப்பேற்றுக் கொண்ட புரட்சி அரசு நிறுத்திவிட்டது. இச்சூழலில் *1953* இலிருந்தே சன்னஞ்சன்னமாக வெளியேறத் தொடங்கிய நகரத்தார்கள் *1962*க்குப் பிறகு பெருமளவில் வெளியேறிவிட்டனர். இப்போது மிகச் சிலரே அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

ஏறத்தாழ *170* ஆண்டுகட்கு முன்பு போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்த காலத்தில் மிகுந்த தொலைவில் உள்ள பர்மாவிற்குத் தொல்லைகளை ஏற்றுத் துணிவோடு சென்ற நகரத்தார்கள், வங்கித் தொழில் இல்லாத காலத்தில் அவர்கள் சொந்தப் பொறுப்பில் வழங்கிய விவசாயக் கடன்கள்தான் பர்மிய நாட்டைச் செழிப்படையச் செய்தது என்பது மறுக்க முடியாத உண்மை. விடுதலை பெற்ற பர்மாவின் அரசியல்வாதிகள் மக்களிடத்தில் தவறான பிரச்சாரம் செய்து வட்டிக்கடை எதிர்ப்புணர்வைத் தூண்டி விட்டமையால் நகரத்தார் தாம் வளப்படுத்திய பர்மிய நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அங்கு நகரத்தார்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பு செட்டிநாட்டில் பல நகரத்தார் குடும்பங்களைப் பெருமளவில் பாதித்தது. செட்டிநாட்டின் பொருளாதார சமூக வாழ்க்கை அமைப்பில் பர்மாவின் இந்நிலை குறிப்பிடத்தக்க திருப்புமுனையாகும்.

பலவான்குடி

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து உ.சிறுவயல் வழியாக 9 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், இரணிக்கோவில் ஆகிய 5 கோவில்களைச் சேர்ந்த 200 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகிறார்கள். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற நகரச் சிவன்கோவில் அமைந்துள்ளது. *1895* ஆம் ஆண்டு திருப்பணி முடித்துக் குடமுழுக்குச் செய்யப்பெற்ற இக்கோவிலுக்கு *1940, 1958, 1975, 1990* ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழாக்கள் நிகழ்ந்துள.

அழ.கு. பழநியப்ப செட்டியாரால் திருப்பணியும், *1884* இல் குடமுழுக்கும் செய்யப் பெற்றதும், நகரத்தார்களால் திருமதில் கட்டப் பெற்றதுமான செங்கமலநாயகி அம்மன் கோவில் இவ்வூரில் உள்ளது. இராம.கு. குடும்பத்தார் அமைத்துள்ள குமர விநாயகர், நடராசர் கோவில்களும், திருவாசக பாடசாலையும், சேங்கைத் திருக்குளமும் உள்ளன.

Koviloor Digital Library

இரணிக்கோவில் நெ. குஞ்சான் செட்டியார் பங்காளிகள் அமைத்துள்ள குஞ்சர விநாயகர் கோவிலும், புது ஊருணியும் உள்ளன. இவ்வூரில் உள்ள குமாரகணபதி கோவிலையும், செட்டியார் ஊருணி எனும் குடிநீர்க் குளத்தையும் புதுவயல் வைரவன் கோவில் பங்காளிகள் அமைத்துள்ளனர். இவ்வூர் க.ப. குடும்பத்தார் அமைத்துள்ள இராயர் ஊருணியும் உள்ளது.

இவ்வூர் பழவீஇராம.இராமசாமி செட்டியார், நாச்சம்மை ஆச்சி நினைவாக 1971 – 72 இல் மகப்பேறு மருத்துவமனை ஒன்று கட்டி, கட்டிடம், இடம், கருவிகள் ஆகியவற்றுடன் அரசிடம் ஒப்படைத்து, இப்போது அது அரசு மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

மாத்தூர் கோவில் பங்காளிகள் ஆத்தங்குடி, தேவகோட்டைப் பங்காளிகளுடன் இணைந்து ஆண்டுதோறும் ஆடி மாதம் தேனாத்தாள் படைப்பையும், வைரவன் கோவில் வெ.வெ. கரையினர் க. அளகாபுரி, கொத்தமங்கலம், சிறாவயல், நாச்சியாபுரம், நேமத்தான்பட்டிப் பங்காளிகளுடன் இணைந்து ஆண்டு தோறும் ஆடி மாதம் பெரிய கருப்பணசாமி படைப்பையும் இரணிக்கோவில் பங்காளிகள் ஆண்டுதோறும் சித்திரை மாதம் ஆண்டாத்தாள் படைப்பையும் படைத்து வருகின்றனர். ஏழூர் இரணிக்கோவில் நகரத்தார் சேர்ந்து பள்ளத்தூரில் 3 ஆண்டுகட்கொரு முறை படைக்கும் அழகாத்தாள் படைப்பில் இவ்வூர் இரணிக் கோவில் பங்காளிகளும் கலந்து கொள்வர்.

இராம.கு. பொதுக் குடும்பத்தார் இவ்வூரில் கோவிந்தசாமி, சொக்கலிங்கசாமி சமாதிக் கோவில் கட்டுவித்து ஆண்டுதோறும் அவர்கள் குருபூசையோடு, நால்வர் குருபூசையும் நடத்தி வருகின்றனர். இவ்வூர் வெ.இராம. சுப்பையா செட்டியார் இதே ராவில் பணியாற்றியவர்.

பலவான்குடியை அடுத்துள்ள திருவேலங்குடியில் இவ்வூர் மு.மு.வீர. குடும்பத்தார் குமரேசவிநாயகர் கோவிலும், மண்டகப் படிக்கொட்டகையும், செட்டி ஊருணி என்ற குடிதண்ணீர் ஊருணியும் அமைத்துளர். அருகில் உள்ள ஆலத்துப்பட்டியில் இவ்வூர் சு.மெ. வகையினர் ஒரு பிள்ளையார் கோவில், குடிதண்ணீர் ஊருணி ஆகியவற்றையும், அதே ஊரில் மெவெ. குடும்பத்தார் ஒரு பிள்ளையார் கோவிலையும் கட்டியுளர்.

அருகில் உள்ள வெளுவூரில் இவ்வூர் நா.சா. சாமிநாதன் செட்டியார், வீ.சித. சிதம்பரம் செட்டியார், வீர.வீர. வீரப்பசெட்டியார் ஆகியோர் ஆலடி விநாயகர் கோவிலும், ஊருணியும் கட்டியுளர். பலவான்குடிக்கும் குன்றக்குடிக்குமிடையே தேனாற்றுப் பாலத்தை அடுத்து இவ்வூர் மு.ப. சிவராமன் செட்டியார் 1942 இல் பிரதிட்டை செய்த மதுநதி விநாயகருக்கு 1989 இல் இவ்வூர் மு.ப.சி. பழநியப்ப செட்டியார் கோவில் கட்டிக் குடமுழுக்குச் செய்துள்ளார்.

தேனாற்றை அடுத்து, பழனியாயி ஊருணியை இவ்வூர் ப.வ. குடும்பத்தார் அமைத்துளர். இக்குடும்பத்தார் ஆண்டு தோறும் தைப்பூசத் திருவிழாவின் 10 ஆம் மண்டகப் படியாகப் பழனியாயி ஊருணிக்கரையில் குன்றக்குடி சண்முகநாதப் பெருமானும், திருவேலங்குடிக் கந்தசாமியும் எழுந்தருளி நடைபெறும் தீர்த்தவாரியை நடத்தி வருகின்றனர். குன்றக்குடியில் கீழரதவீதியில் பலவான்குடி நகரத்தார் மடம் உள்ளது.

திருத்தென்குடித்திட்டை பசுபதீசுவரர்கோவில் திருப்பணியை இவ்வூர் இராம.கு. இராமசாமி செட்டியார் செய்துள்ளார். திருமறைக்காட்டில் இவ்வூர் வெ.சு. குடும்பத்தினர் ஏரிக்கரையில் படித்துறை கட்டி, பிள்ளையார் கோவிலும், தண்ணீர்ப்பந்தலும் அமைத்துளர். எட்டுக்குடியில் இவ்வூர், அ.கு.ப. குடும்ப முன்னோர் மடம், நந்தவனம் அமைத்து இராக்காலப் பூசை நடத்தி வந்துளர்.

இவ்வூர் கு.வெ. வெங்கடாசலம் செட்டியார் கல்கத்தா சிவன் கோவிலில் முருகப் பெருமானுக்குச் சலவைக் கல்மண்டபம் கட்டியுள்ளதோடு இராமநாதபுரத்தில் ஒரு சத்திரமும் கட்டியுள்ளார்.

மலேசியாவில் பந்தீன் என்ற ஊரில் இவ்வூர் மு.ப. சிவராமன் செட்டியார் 1940 இல் சித்தி விநாயகர் கோவில் கட்டிக் குடமுழுக்குச் செய்து அக்கோவிலைப் பந்தீன் நகரத்தாரிடம் ஒப்புவித்துள்ளார்.

பழநி நடைப்பயணம்

நகரத்தார் பண்பாட்டில் காவடி எடுத்து முருகனை வழிபடுதல் தனிச்சிறப்பு வாய்ந்த சமயவழிபாட்டு முறையாகும். கடும்விரதம் இருந்து நோன்பு நோற்று, பழநிக்கு நடந்து சென்று முருகப்பெருமானை வழிபடும் பழக்கம் ஏறத்தாழ 400 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. பழநிப் பாதயாத்திரை வரலாற்றைக் கூறும் ஆவணங்களாக நகரத்தார் அறப் பட்டயங்கள் (எட்டு) விளங்குகின்றன.

1. பழனிக்கோவில் நடப்பு அட்டவணை (கி.பி. 1600)
2. ஏழு நகரத்தார் தருமசாசனம் 1. (கி.பி. 1608)
3. ஏழு நகரத்தார் தருமசாசனம் 2. (கி.பி. 1766)

Koviloor Digital Library

4. ஏழு நகரத்தார் தருமசாசனம் 3. (கி.பி. 1788)

5. பிரான்மலை ஆதீனம் நடப்பு அட்டவணை (கி.பி. 1770)

6. ஆதீனம் பட்டாபிடேக அட்டவணை (கி.பி. 1610)

7. மடாலயத் தர்மசாசனம் (கி.பி. 1805)

8. நிரம்ப அழகிய தேசிகர் பட்டயம் (கி.பி. 1627)

பழநிக் கோவில் நடப்பு அட்டவணைப் பட்டயத்தில் நகரத்தார்கள் பழநி வேலாயுதசாமிக்குக் காவடி எடுத்த வரலாறு அன்றிருந்த வழக்குத் தமிழில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இளையாத்தங்குடி ஏழு நகரத்தார்களில் நேமங்கோவிலைச் சார்ந்த குப்பா பிச்சஞ் செட்டியார் குமாரர் குமரப்ப செட்டியார் என்பவர் பழநியாண்டவனைத் தரிசிக்கவும் பழநியில் உப்பு வியாபாரம் செய்யவும் எண்ணங் கொண்டு, தான் ஓர் உப்புக்கடகம் தூக்கிக் கொண்டு, மறவன் தேவன் என்பவன் தலையில் பத்துக் கடகம் வைத்துத் தூக்கிவரச் சொல்லி, சுப்பிரமணிய வேளான் என்பவனைச் சோறு வடித்துப் போடக் கூட்டிக் கொண்டு நெற்குப்பையிலிருந்து பழநிக்கு நடந்து சென்றார். பழநியில் ஆவணி மூல வீதிக்குக் கீழ்ப்புறம் தெய்வசிகாமணி பண்டாரத்தின் மகன் தெய்வ நாயக பண்டாரத்தின் மனையில் வந்திறங்கி உப்பு வியாபாரம் தொடங்கி ஒரு பணம் இலாபம் கிடைத்தால் அரைக்கால் பணம் (1/8பங்கு) மகமை எடுத்துவைத்தார். தெய்வநாயக பண்டாரத்தின் மனைவி பார்வதி அம்மாள் சோறு வடித்துப் போடப் பரதேசிகளுக்கும் சோறுபோட்டு எல்லோரும் சாப்பிட்டார்கள். பண்டாரம் மலையில் வழிபாடு செய்து வைத்தார். பண்டாரத்திற்கு ஒரு பணமும் பார்வதி அம்மாளுக்கு ஒரு பணமும் கொடுத்து அடுத்த மாதம் வருவதாகச் சொல்லிக் குமரப்ப செட்டியார் ஊர் திரும்பினார்.

இப்படியே அடுத்த மாதமும் வந்து வடித்துப் போட்டு வியாபாரம் செய்ய ஏழு பணம் சுவாமிக்குச் சேர்ந்து பத்து மாதங்களில் மொத்த மகமை எழுபத்திரண்டு பணம் ஆயிற்று. அடுத்த மாதம் சுவாமி பணத்துக்கும் உப்பு வாங்கிவர, அடைமழை பெய்து பழநியில் உப்புவிலை ஏறியிருந்த காரணத்தால் முதல் ஒரு பங்குக்கு இலாபம் இரண்டு பங்கு வந்தது. சுவாமி பணத்துக்கும் உப்பு வாங்கியதால் இந்த லாபம் என்று செட்டியார் மகிழ்ந்தார்.

இப்படி மூன்றாண்டுகள் நடக்க நான்காவது ஆண்டில் குமரப்ப செட்டியாரும் அவர்மனைவி சிட்டாள் ஆச்சியும் மாத்தூர்க் கோவில் உடையான் செட்டி கருப்பாத்தான், சூரக்குடிக் கோவில் குமரப்பன், இளையாத்தங்குடிக் கோவில் முத்துக்கருப்பன், வயிரவன் கோவில் வீரப்பன் ஆகியோரையும் பழநிக்கு அழைத்து வந்து வியாபாரமும் அன்னதானமும் செய்ய, செல்வம் பெருகிச் சுவாமி பணம் நூற்றி இருபது வராகன் ஆகியது.

இப்படி ஐந்தாண்டுகள் சென்றதும் இதையறிந்த கலாமடம் ஈசானிய சிவாசாரியார் தானும் பழநிக்கு வருவதாகக் கூறிப் பழநிக்கு வர, தைப்பூசத் திருநாளில் ஈசானிய சிவாசாரியார் பழநியாண்டவனை வழிபட்டு, 'அடுத்த ஆண்டு தைப்பூசத்திற்குக் காவடி கட்டிவரவேணும். நானும் வருகிறேன். இந்த ஸ்தலத்தைப்போல வேறு ஸ்தலத்தை ஈடுசொல்லக் கூடாது. நமக்கு அமைந்த பண்டாரத்தைப் போலக் கிடையாது' என்று கூறினார்.

அடுத்த ஆண்டு தெய்வநாயக பண்டாரம் காவடிகட்டி, குமரப்ப செட்டியார் தோளில் வைக்க நவமி திதி அசுவினி நட்சத்திரத்தன்று குருதேசிகரோடு காவடி புறப்பட்டது. உப்புச்செட்டி மக்கள் தூக்கிய காவடியில் முருகப் பெருமான் அலங்காரமாக வீற்றிருந்தான். காவடி சென்ற பாதை அட்டவணையில் கீழ்க்கண்டபடி குறிப்பிடப்பட்டுள்ளது.

"கண்டவராயன்பட்டியில் உதயாதி ஸ்நானம் செய்து சிவதவம் முடித்து மருதுத்தோப்பில் மத்தியானம் செய்து சிவபூசை முடித்து காவடிக்கும் சுவாமி சமையலில் அன்னமடுத்து தெய்வநாயக பண்டாரம் பூசைசெய்து துண்ணூறு வாங்கிக் கொண்டு யாவரும் சாப்பிட்டுச் சிங்கம் பிடாரியில் அந்தி முடித்து சேவுகப் பெருமாள் கோவிலில் சாகையும் வைத்து மறுதினம் வாரிச்சல ஊருணியில் உதயாதி ஸ்நானம் செய்து சிவதவம் முடித்து சம்சட்டியில் மத்தியானம் சிவபூசை காவடிப் பூசை போசனமும் செய்து கோவில்பட்டியில் சந்தியும் சாகையும் மறுதினம் உப்புநதியில் உதயாதி ஸ்நானமும் இடையன் குளத்தில் சிவபூசையும் காவடிப்பூசையும் போசனமும் திண்டுக்கல் அபிராமியம்மன் கோவிலில் சந்தியும் சாகையும், மறுதினம் மாங்கரைநதியில் உதயாதி ஸ்நானமும் சிவதவமும் பலக்கனூத்தில் சிவபூசையும் காவடிப்பூசையும் போஜனமும் இன்று பிரதோஜமானதால் சந்தியும் சாகையும் இந்த இடம், மறுதினம் நங்காஞ்சி நதி உதயஸ்நானம், சிவதவமும் சத்திரம் சிவபூசையும் காவடிப்பூசையும் போசனமும் ஆயிக்குடியில் பெருமாள் கோவிலில் சந்தியும் சாகையும் மறுதினம் இடும்பையா தீர்த்தத்தில் உதயஸ்நானம் சிவதவமும் மத்தியானம் சிவபூசை போசனம்

Koviloor Digital Library

செய்து தெய்வநாயக பண்டாரம் விசயகிரி வேலாயுத சின்னானப்ப நாயக்கர் துரைகளிடம் போய் ''எங்கள் குரு தேசிகர் வந்து இருக்கிறார்கள்'' என்று சொன்னவுடன் ''குரு தேசிகன் யார்?'' என்று கேட்க ''வேப்பம்பூ மாலை யணிந்தவர். அஷ்டலட்சுமி வாசல் உள்ள மடாதீனம் சிம்மாசனாதி மீனக்கொடி உடையார்; பகல் தீவட்டி உடையோர், வேதமொழி தவறாதவர், துவாதசிக் கட்டளை உடையவர், பாண்டிய மகாராசாவுக்குக் குரு தேசிகர், எங்கள் உப்புச்செட்டிகளுக்கும் குருதேசிகர், காவடியும் சுவாமியுமாக வந்திருக்கிறார், சுவாமியையும் காவடியையும் அழைத்து என் வீட்டில் வைத்தும் பழனிமலை வேலாயுத சுவாமியாருக்கு அபிஷேகம் நடக்கவேண்டி இருப்பதால் கோவில் வாத்யம் உடன் அழைத்துவரவேணும்'' என்று பண்டாரம் சொல்ல ''பாண்டியராசா குருதேசிகரை நாம் எதிர்கொண்டு அழைத்து வருவோம். பல்லக்குக் கட்டுக'' என்று மந்திரிக்கு உத்தரவுசெய்ய அது மேரைக்கிப் பல்லாக்குக்கட்டி, சகலவிருது வாத்தியத்துடன் தெய்வநாயக பண்டாரம் பழநியையா பிரசாதமும் தட்டில் வைத்துக் கொண்டு ராசா கூடவே இடும்பையா மலையடிவாரத்தில் இருக்கிற ஈசானிய சிவாசாரியார் திருவடியில் ராசா பாதக்கை இருபது பொன்வைத்து நமஸ்காரம் செய்ய ராசாவுக்கு ஆசிர்வாதம் செய்து ராசாவுக்கு இருப்பிடமும் கொடுத்து அனுக்கிரகம் செய்தார்.

இவ்வாறு இடும்பன் மலையடிவாரத்திற்கு வந்த காவடி அங்கிருந்து புறப்பட்டு சிவகிரி வலம் வந்து பழநிப் பட்டணத்தில் ஆவணி மூலவீதிக்குக் கிழக்கில் பண்டாரத்து வீட்டுக்கு வந்து சேர்ந்தது. மறுநாள் பரதேசிகள் ஐம்பத்தியொருவருக்கும் அந்தணர் ஐம்பத்தி யொருவருக்கும் அன்னமிட்டுப் பூசம் முதல் மூன்று நாள் வரை வடிச்சுப் போட்டு மகத்தன்று காவடி அபிஷேகமும் பழனிமலை வேலாயுதப் பெருமானுக்கு அபிஷேகமும் செய்து மறுநாள் அரசன் வேண்டுகோளின்படி அரண்மனைச் சாப்பாடு சாப்பிட்டு ஆண்டுதோறும் வாருங்கள் என அரசன் வேண்டி விடை கொடுக்க எல்லோரும் வீடு திரும்பினர். குருதேசிகர் ''புனர்பூசத்தன்று முருகனுக்குத் திருக்கல்யாணம் ஆனதால் அன்றைக்கும் பூசம் ஆயில்யம் மகம் ஆகிய மூன்று நாட்களுக்கும், அரசன் சாப்பாடு போடும், அதற்கு அடுத்த நாளுக்கும் ஆக ஐந்து நாட்களுக்கும் சேர்த்து மகேஸ்வர பூசை செய்ய வேண்டும்' என்றும் சொல்லித் திருநீறு கொடுத்தார்.''

இப்படி நான்காண்டுகள் நடந்தன. ஐந்தாம் ஆண்டில் குருதேசிகர் கூறியபடி குமரப்ப செட்டியார் காவடியோடு மேலும் ஐந்து காவடிகள் வந்தன. இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஏழுகோவில் நகரத்தாரும் சேர்ந்து இருபத்தைந்து காவடிகள் எடுத்தார்கள். காவடி ஒன்றுக்கு 2 1/8 பணமும் காவடி எடுத்தவனுக்கு ஒரு பணமும் ஆக மூன்றேயரைக்கால் பணம் எடுக்கப்பட்டு அபிஷேகங்கள் நடந்தன. சம்பட்டியில் குருதேசிகர் திருநீறு கொடுக்கும் போது இனம் ஒன்றுக்குக் கால்பணம் வீதம் வசூலிக்கப்பட்டு பழநியாண்டவன் மகமைநிதியில் சேர்க்கப்பட்டது.

அடுத்த ஆண்டில் கூட்டம் அதிகமாயிற்று. பகல்நேரம் மட்டுமே உணவு கொள்ளும் பழக்கத்தோடு காவடி எடுத்தவர்களில் பலருக்குப் பசி பொறுக்க முடியவில்லை. குமரப்ப செட்டியாரும் பசியோடு குருதேசிகரிடம் சொல்ல அன்றுமுதல் காவடிக்குப் பலகார நைவேத்தியம் செய்து சாப்பிடும் பழக்கம் குருநாதர் அருளால் உண்டாயிற்று.

அடுத்த ஆண்டில் குமரப்ப செட்டியார் மகன் குப்பாத்தானும் காவடி எடுத்து வந்தான். நான்காம் நாள் காவடி செலுத்தியபின் ஐந்தாம் நாள் பூசையைப் பிரம்புத்தடிக்குப் போடுமாறு குருதேசிகர் கூற அதன்படி நடந்தது. அதே ஆண்டில் சம்பட்டியில் இருக்கும் போது நந்தலிங்கம் நாயக்கர் வந்து தன்மனைவி தீராத வயிற்றுவலியால் துடிப்பதைக் குமரப்பரிடம் சொல்ல அவரும் ''பழநியப்பர் தீர்த்துப் போடுவார்'' என்றும் ''அந்தப்படி தீர்ந்தால் பழநியப்பருக்குப் பன்னிரண்டு பொன் கொடுக்கவேண்டும்'' என்றும் கூற ''ஆண்டு தோறும் தருகிறேன்'' என்று நாயக்கர் ஒப்புக் கொண்டார். குமரப்பர் விசிறி மரத்தடியில் இருந்து திருநீறு தந்து, ''ஒரு வருஷத்திற்குள் குணமாகும்'' என்று கூறினார். அந்தத் திருநீற்றை உட்கொண்ட அம்மையாருக்கு மூன்றுநாளில் வயிற்றுவலி தீர்ந்தது. அம்மையார் குமரப்பர் வீட்டுக்கு வந்து மூடு திரைக்குள் இருந்து ''செட்டியாரே என் வயிற்றுவலியை எப்படித் தீர்த்தாய்?'' என்று கேட்க ''பழநியப்பருடைய கிருபையால் ரொம்பவும் சவுக்கியம் ஆச்சுது அம்மாள்'' என்று சொல்ல ''அதற்குப் பழநியப்பருக்கு என்ன செய்கிறது?'' என்று கேட்க குமரப்பரும் ''இன்றிரவு நான் நினைத்துப் படுத்திருந்து அப்பால் சொல்லுகிறேன்'' என்றார். அன்றிரவு கனவில் முருகப் பெருமான் தோன்றி இரும்பு வேலாயுதம் பெரியதொன்றும் சிறியதொன்றும் செய்து கொடுக்கச் சொல்ல அதன்படி அம்மையார்

Koviloor Digital Library

செய்துவைத்தார். முருகன் கட்டளைப்படி பெரிய வேலாயுதம் தெய்வநாயக பண்டாரத்தின் மனைவி பார்வதி அம்மாள் வசம் கொடுக்கப்பட்டுக் காவடி வைத்திருக்கிற வீட்டில் வைக்கப்பட்டது. அன்றிரவு பார்வதி அம்மாள் கனவில் முருகன் தோன்றி ''சுக்கிரவாரம் இந்த வேலாயுதத்திற்கு வழிபாடு செய்தால் அஷ்டலெட்சுமியும் வந்திருப்பாள்'' என்றார். அதுமுதல் தெய்வநாயக பண்டாரத்தின் வீட்டில் மகப்பேறும் வளங்களும் பெருகிவந்தன. சிறிய வேலாயுதத்தைக் குமரப்ப செட்டியார் மனைவி சிட்டாளிடம் அனுப்பச் சொல்லி அவள் மகன் குப்பாத்தானுக்குப் புத்திரப் பேறுண்டாக முருகன் அருள் செய்தான். சுரநோய் வந்து வருந்திய ஆயக்குடி ஜமீந்தாருக்கு இவ்வேலை வழிபட்டதும் சுரநோய் தீர்ந்தது.

ஈசானிய சிவாசாரியார் கனவில் முருகன் கூறியபடி செப்பு வேலாயுதத்தையும் முருகன் தந்த திருநீற்றுப் பையையும் குருதேசிகருடைய மடிச்சீலைப் பையையும் குமரப்பரிடம் கொடுத்த குருதேசிகர் சம்பட்டியில் வேலுக்குப் பானக நைவேத்தியம் செய்து வைத்தார்.

இப்படிச் சில ஆண்டுகள் செல்ல குருதேசிகர் ஒரு வருஷம் ஆறாம்நாள் சந்தன அபிஷேகமும் அஞ்சாம்நாள் பத்தாம் திருநாள் மண்டகப்படியும் நடத்த இடம் வேண்டும் என்று பழநிக் கோவில் துரையிடம் கேட்க அதன்படி மாரியம்மன் கோவிலுக்கு முன் உள்ள இடம் கொடுக்கப் பட்டது. மண்டகப்படியில் பண்டாரத்துக்கு அரிதிப்பரிவட்டமும் குமரப்பருக்கு அலங்காரப் பரிவட்டமும் கட்டப்பட்டு முதல் மரியாதையும் தரப்பட்டது.

இதற்கடுத்த ஆண்டில் பண்டாரத்தின் வீட்டையே மடமாக வைத்துக் கொள்வது என்றும் ஆறுகால் சவுக்கையில் வேலாயுத சாமியை நிறுத்திப் பூசை செய்து குருதேசிகரைத் தென்புறத்தில் இருக்கச் செய்து வடபுறம் கூடத்தில் நகரத்தார் இருக்கவும் மேற்புறம் சாப்பாட்டிடமாக்கவும் ஏற்பாடு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டன. ஆண்டுதோறும் 250 பேருக்கு வடித்துப் போடுவதென்றும் பனிரெண்டு பேருக்குச் சாப்பாடும் பால் பொங்கலும் பார்வதியம்மாள் செய்ய வேண்டுமென்றும் மற்றவர்களுக்கு நகரத்தார் வடித்துப் போடுவதென்றும் தீர்மானித்தபடி செய்தார்கள். பண்டாரத்திற்குக் கட்டளைப் பணமும் புள்ளிக்காசும் படியரிசியும் தந்து 'மனை உன்னுடையது, தருமம் எங்களுடையது' என்று கூறி குருதேசிகர் முன் வாக்களித்தார்கள்.'' இவ்வாறு காவடி வரலாறும் நகரத்தார்களின் பக்திச் சிறப்பும் பழநியாண்டவன் அருள்புரிந்த திறமும் பழநிக்கோவில் அட்டவணை என்ற பட்டயத்தில் கூறப்பட்டுள்ளன.

அடுத்தபட்டயம் ஏழு நகரத்தார் தருமசாசனம். இதில் முதலாவது சாசனத்தில் தெய்வநாயக பண்டாரத்துக்கும் அன்னதான மடத்துத் திருவிழா பத்தாம்நாள் மண்டகப்படிக்கும் கொடுக்க வேண்டிய பொருட்கள், தீர்த்தமும் திருநீறும் கொடுக்க வேண்டிய மரியாதை வரிசைகள், ஏழு நகரத்தாரும் ஆறுகால் கூடத்தில் குமரப்பரைக் கும்பிட்டுத் திருநீறு வாங்கிக் கொள்ளுதல் குமரப்பன் சந்ததிக்கு முதல்வருடம் பட்டம் கட்டும் முறை ஆகிய விவரங்கள் உள்ளன. இரண்டாவது தருமசாசனத்தில் இரணிக்கோவில் பெ. குட்டையன் செட்டியார் அருளாடியாராக வரம்பெற்ற வரலாறு கூறப்படுகிறது. அவர்மீது அருள்வர அருளாடியாராக மாறி வைகாவூர் நாட்டு விசயகிரி வேலாயுதத் துரையவர்களுக்கு ஆண்குழந்தை பிறக்கும் என்று சொல்லியது, குன்றக்குடியில் பெரிய மருதுபாண்டியர் நினைத்த மூன்று வினாக்களுக்கும் விடைசொல்லியது, இதற்காக அருளாடியார்க்கு மருதரசர் கணையாழியும் யானைக் கொம்பும் தந்தது ஆகிய விவரங்கள் இதில் உள்ளன. விசயகிரித்துரையும் மருதரசரும் கூறியபடி இரணிக்கோவில் பெ. குட்டையன் செட்டியாருக்கு இரண்டாவது மரியாதை கொடுக்கப்பட்டது.

மூன்றாவது தருமசாசனம் பள்ளயத்துக்குக் கொடுக்க வேண்டிய பொருள் வரிசைகளைக் கூறுகிறது. இவற்றில் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கோடு, புகையிலையும், சுருட்டும் கூட வைக்கப்பட்டன. அன்னதான மடத்தில் கல்திருப்பணி நடந்தது. இதை வயிரவன் கோவில் வேலப்பசெட்டி வயிரவன் என்பவரிடத்தில் பொறுப்பாக ஒப்படைக்க அவரும் சிறப்பாகத் தொண்டாற்றினார். வாணம் தோண்டி வாணக்கல் மறுநாள் இறக்க வேண்டும் என்றிருந்த சமயத்தில் இறைவன் நேரில் தோன்றி ''வாணத்துக்கு மொங்கான் போட்டது போதாது'' என்று கூறினார். ''நாளை கல் இறக்க வேண்டுமே'' என்று வயிரவன் செட்டியார் கேட்க ''பூமி மட்டத்துக்கு மணலைக் கொட்டிப் பனிரெண்டு தண்ணீர்க் குடத்தையும் மொங்கான் மரத்தையும் வைத்திரு, நாளைக்குத் திட்டப்படி கல் இறக்கலாம்'' என்று முருகன் கூற அப்படியே செய்தார்கள். மறுநாள் காலையில் வாணங்களைப் பார்க்க இரண்டு முழம் இறங்கியிருந்தது. இத்தகைய பெருமைக்காக

Koviloor Digital Library

வயிரவன் கோவில் வேலப்பசெட்டி வயிரவன் செட்டியாருக்கு மூன்றாவது மரியாதை தரப்பட்ட செய்தியும் இச்சாசனத்தில் உள்ளது.

பிரான்மலை ஆதீனம் நடப்பு அட்டவணை யில் இரணிக்கோவில் குட்டையன் செட்டியார் திருவாவினன்குடியில் நடக்கிறபட்டு பரிவட்டச் செலவை ஏற்ற செய்தியும் சன்னிதானம் ஊருக்கு வரும்போது குட்டையன் செட்டியாருக்கு மூன்றாம் பட்டுப் பீதாம்பரம் தந்த செய்தியும் காணப்படுகின்றன.

ஆதீனம் பட்டாபிடேக அட்டவணையில் ஆதீனப் பட்டாபிடேகத்தில் இரண்டாவதாக ஈசான தேசிகர் மொழிந்தபடி குமரப்பன் பட்டுச் சாத்தும் செய்தி கூறப்பட்டுள்ளது.

மடாலயத் தரும சாசனத்தில் **1805** இல் நாகப்பப் பண்டாரத்து மகன் குழந்தைவேலுப் பண்டாரத்திற்கு ஏழு நகரத்தாரும் கொடுக்க வேண்டிய நடப்புக்கள் விவரத்தோடு அன்னதான மடத்தின் அருகில் வேறொரு மனை வாங்கி **39** கால் திருப்பணி செய்த செய்தியும் இடம் பெற்றுள்ளது.

நிரம்ப வழகிய தேசிகர் பட்டயத்தில் குன்றக்குடியிலும் நேமங்கோவில் குமரப்பருக்கு முதல் மரியாதை கொடுக்க ஒப்புக் கொண்ட செய்தி உள்ளது.

இப்பட்டயங்களில் உள்ள நடப்புக்கள் இன்றும் வழக்கத்தில் உள்ளன. நேமங்கோவில் குமரப்பன் வழிவந்தோரே நெற்குப்பை குபழ. வீட்டினர். இரணிக்கோவில் பெ. குட்டையன் வழிவந்தவரே கண்டனூர் குபசு. வீட்டார்கள். வயிரவன் கோவில் வேலப்பசெட்டி வயிரவன் வழியினரே காரைக்குடி கும.பெரி.பழ.சு. வீட்டார்கள் (அரண்மனைப் பொங்கல்)

இவ்வாறு சரித்திரச் சிறப்புடைய பழநி வழிநடைப் பயணத்தில் இன்று ஏராளமான நகரத்தார்களும் செட்டிநாட்டைச் சூழ்ந்துள்ள கிராம மக்களும் அதிக அளவில் பக்திப் பெருக்குடன் கலந்து கொள்கிறார்கள். குழந்தை வேலன் சன்னிதியிலிருந்து நடப்பவர்களும் அன்னதான மடத்திலிருந்து பால்குடம் காவடி எடுப்பவர்களும் எண்ணிக்கையில் பெருகி யுள்ளனர். இப்போதும் தேவகோட்டை, காரைக்குடி, கண்டனூர், பள்ளத்தூர் முதலிய ஊர்க்காவடிகள் குன்றக்குடியில் ஒன்றுகூடிக் கண்டனூர் அருளாடியார் வழி நடத்த பட்டயத்தில் கூறப்பட்டது போல நவமி திதியன்றே காவடியுடன் புறப்படுகிறார்கள்.

தேவகோட்டையிலிருந்து புறப்படும் பழநிப் பாதயாத்திரைப் பயணவிவரம்:

தேவகோட்டை நகரப்பள்ளிக் கூடத்தில் காவடி கட்டிவைத்து, வேல்காவடியைச் சீட்டுமூலம் தெரிவு செய்து தீபாராதனை காட்டி வழிபடுவார்கள். காவடி எடுப்பவர்கள் இல்லத்தில் அன்று இரவு அரோகரச் சாப்பாடு நடைபெறும். மறுநாள் நகர் வலம் வந்து அடுத்தநாள் காவடி புறப்படும்.

முதல் நாள் (அட்டமிதிதி) – பகல் ஊத்தாங்கிணறு – இரவு குன்றக்குடி

இரண்டாம் நாள் (நவமிதிதி) – பிற ஊர்க்காவடிகளுடன் குன்றக்குடியில் இருந்து புறப்படுதல் – பகல் கண்டவராயன் பட்டியில் கண்மாயில் காவடி நைவேத்தியம். இரவு மருதுபட்டித் தோப்பில் முதல்நாள் பூசை.

மூன்றாம் நாள் : காலை சிங்கம்புணரி கோவிலில் காவடி தங்குதல் – பகல் மணப்பச்சேரியில் காவடி நைவேத்தியம். நடந்து வருபவர்கள் வெள்ளாளபட்டி வழியாக வருதல். இரவு சமுத்திராபட்டியில் பூசை.

நான்காம் நாள் : காலை நத்தத்தில் வாணியர் பஜனைமடத்தில் பானக்பூசை. பகல் உப்பாற்றில் காவடி நைவேத்தியம். இரவு இடைச்சி மடத்தில் பூசை.

ஐந்தாம் நாள் : காலை திண்டுக்கல் அபிராமி அம்மன் கோவில் – பகல் ரெட்டியார் சத்திரத்தில் காவடி நைவேத்தியம் – இரவு நகரத்தார் ஊருணி என்கிற செம்மடைப் பட்டியில் ஊஞ்சல் – காவடிப்பூசை.

ஆறாம் நாள் : செம்மடைப்பட்டியில் பானகபூசை – பகல் ஒட்டன்சத்திரம் கடந்து குழந்தை வேலன் சன்னதியில் காவடி நைவேத்தியம் – இரவு அடையாள வேலைத் தரிசித்து சத்திரப்பட்டி சாலை கலிங்கப்பையா ஊருணியில் காவடிப்பூசை.

ஏழாம் நாள் : ஆயக்குடி பெருமாள் கோவிலில் பானகபூசை – பகல் இடும்பன் குளத்தில் நீராடி இடும்பன் மலைச்சரிவில் காவடி நைவேத்தியம். இரவு பழநி நகரத்தார் வரவேற்பு. அருளாடியார் அடிவாரத்தில் பிரம்பெடுத்து ஆடுதல். அன்னதான மடத்தில் முதல்நாள் பூசை.

எட்டாம் நாள் (பௌர்ணமிதிதி) – அன்னதான மடத்தில் இரண்டாம் நாள் பூசை.

ஒன்பதாம் நாள் : அன்னதான மடத்தில் மூன்றாம் நாள் பூசை.

பத்தாம் நாள் : அன்னதான மடத்தில் நான்காம் நாள் பூசை – மகம் நாளான இன்று பகல் 2 மணிக்கு மேல் புறப்பட்டு மலையில் காவடி செலுத்துதல்.

Koviloor Digital Library

*11*ஆம் நாள் : மடத்தில் ஐந்தாம் நாள் பூசை. தனியார் அபிஷேகங்கள்.

*12*ஆம் நாள் : அன்னதான மடத்தில் அடுப்படிப்பூசை – சுவாமி புறப்பாடு.

*13*ஆம் நாள் : மாலையில் சந்தனக் குழம்பு அபிஷேகம். பாத யாத்திரை சென்றவர்கள் விடைபெற்று ஊர் திரும்புதல்.

*14*ஆம் நாள் : இரவு ஆறுமணியளவில் காவடி விடை பெற்று ஊர் திரும்புதல்.

*15*ஆம் நாள் – காவடி வழி நடையாக ஊர் திரும்புதல். பகல் திண்டுக்கல் மலைக்கோட்டை ஐயப்பன் கோவிலில் பூசை.

*16*ஆம் நாள் – காவடி வழிநடையாக ஊர் திரும்புதல் – இரவு சமுத்திராபட்டியில் பானகபூசை.

*17*ஆம் நாள் – இரவு மருதுபட்டித் தோப்பில் பூசை.

*18*ஆம் நாள் – திருப்புத்தூர் வழியாகக் காலை 7 மணிக்குக் குன்றக்குடி வருதல். இரவு பூசை.

*19*ஆம் நாள் – குன்றக்குடியிலிருந்து புறப்பட்டுத் தேவகோட்டை வந்து சேர்தல்.

நெற்குப்பை, மேலைச்சிவபுரியிலிருந்து பழநிக்குப் பாதயாத்திரை செல்வோரும் காவடிகளும் தசமி திதியன்று புறப்படுவது வழக்கம். அவர்களுடைய காவடி புறப்பட்டுத் திரும்பிவரும் பயண நாட்கள் மொத்தம் 15 நாட்களாகும். மேலைச்சிவபுரியில் சக்தி வேலாயுத சுவாமிக்குச் சுப்பையா கோவிலில் சிறப்பாக விழா எடுக்கப்பெறும். புதுக்கோட்டைத் தொண்டைமான் அளித்த வேல் வழிபடப் படுகின்றது.

தேவகோட்டையில் சுமார் 160 ஆண்டுகளுக்கு முன் மாத்தூர், அரும்பாக்கூர் கோவில் நயினப்ப செட்டியார் குடும்பத்தினரால் செய்து வைக்கப்பட்டு, குன்றக்குடியில் நகரத்தார் பொது அன்னதான மடத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ள இரத்தினவேல் கண்டனூர் அருளாடியார் பொறுப்பில் இருந்து வருகிறது. பாதயாத்திரையின் போது விபூதிப் பையில் வைத்து அதற்கென்று உள்ள பெட்டியில் பாதுகாப்பாக வேல்வண்டியில் கொண்டு செல்கின்றனர். வழியிலும் பழநி அன்னதான மடத்திலும் இரத்தினவேலுக்கும் பூசையிட்டு வழிபடுகின்றனர்.

பழநிக்குப் பாதயாத்திரை செல்வோருக்கு வழிநெடுக, இளநீர், ரொட்டி, மிட்டாய், பழம், உணவுப் பொட்டலங்களை ஏராளமான நகரத்தார் வழங்குகின்றனர். குழந்தை வேலன் சன்னதியில் ரொட்டி மிட்டாய்கள் வாங்க வாங்க வந்து குவியும். வழிநடைப் பாடல்கள் நூல்களும் பலர் அச்சிட்டு இலவசமாக வழங்குகின்றனர்.

முதலில் மூவர் நடந்தனர். பின்னர் முப்பது பேர். முந்நூறு பேர் என்றாகி இன்று மூவாயிரம் மட்டுமல்ல பல்லாயிரக் கணக்கான மக்கள் பழநிக்கு நடந்து செல்கின்றனர். முருகவழி பாட்டுப் பக்தி வளர்ச்சிக்கு பாதயாத்திரை இயல்பாக உந்தும் ஓர் இயக்கம் என்றே கூறலாம்.

பழநியப்ப செட்டியார், செ.மெ., (15-2-1920)

இளையாத்தங்குடி - கிண்கிணிக் கூருடையார்
இராயவரம்
பதிப்பாளர், தொழிலதிபர்

செ. மெய்யப்ப செட்டியார் – கண்ணம்மை ஆச்சியின் மகன். பழநியப்பா சகோதரர்கள் புத்தக நிறுவனத்தோடு பேரிங் தயாரித்தல், ஓடு உருவாக்கல் ஆலைகளையும் நடத்தி வருகின்றார். உரைநூல் படிக்கும் பழக்கத்தைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தி வளர்த்தவர் இவரேயாவார். 'கோனார் படித்தவர் போனார் மேல்வகுப்புக்கு' என மாணவரிடையே பழமொழி உருவாகும் வண்ணம் புகழ்பெற்ற கோனார் உரைநூலைத் தமிழகம் எங்கும் பரவச் செய்தார்.

இலக்கியத் தொண்டாக நாமக்கல் கவிஞர் கவிதைகள், பாரதியார் கவிதைகள், திருக்குறள் உரை ஆகியவற்றை மலிவுப் பதிப்பாக வெளியிட்டுள்ளார். 'நாட்டுக்குழைத்த நல்லோர்' நூல்கள் வரலாற்றில் இடம்பெறும் நூல் வரிசையாகும். தமிழ்நாட்டில் குழந்தை எழுத்தாளர் சங்கம் தொடங்கக் காரணமாக இருந்து அதற்குத் தம் வீட்டிலேயே இடமளித்து அச்சங்கத்தை வளர்த்தார். பல குழந்தைக் கவிஞர்கள் உருவாக ஆதரவு நல்கியுள்ளார். செட்டிநாட்டில் பல கோவில் திருப்பணிகட்கு நன்கொடை வழங்கியும் நலிவுற்ற மாணவ மாணவியர்க்குக் கல்வி உதவித் தொகை வழங்கியும் சமூகத் தொண்டு செய்து வருகின்றார்.

தமிழ்நாடு அரசு, இந்திய அரசு, குழந்தை எழுத்தாளர் சங்கம், அனந்தாச்சாரி அறக்கட்டளை ஆகியோரால் சிறந்த பதிப்பாளர் எனப் பாராட்டப் பெற்றுப் பரிசுகளும் கேடயமும் பெற்றுள்ளார். தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தாரால் சிறந்த அச்சக உரிமையாளர் எனச் சிறப்பிக்கப்பெற்று அதற்காக 8–3–1993 அன்று நடைபெற்ற விழாவில் தமிழக முதல்வர் வழங்கிய பரிசைப் பெற்றுள்ளார். உரைவேந்தர் எனச் சிலரைக் கூறுவதுபோல் 'உரைநூல் பரப்பிய வேந்தர்' என இவரைப் புகழ்வது பொருத்தமாகும்.

Koviloor Digital Library

பழநியப்பன், இராம., (3-6-1957)

பிள்ளையார்பட்டி
தேவகோட்டை
பதிப்போவியக் கலைஞர்

கலையார்வம் மிக்க வெ.நா.மு. இராமநாதன் செட்டியார் பேரன். அவர் அளித்த ஊக்கத்தினாலும் தூண்டுதலாலும் இவர் ஓவியக்கலை பயின்று இன்று உலகப் புகழ் பெற்றுள்ளார். இவரது பெற்றோர் இராமநாதன் செட்டியார் – ஞானாம்பாள் ஆச்சி.

சென்னை ஓவியக்கல்லூரியில் பயின்று ஓவியத்தில் நுண்கலை டிப்ளமாவும், தொழில்முறை வடிவமைப்பு பதிப்போவியக் கலையில் மேல்நிலை டிப்ளமாவும் பெற்றுள்ளார். மற்ற கலைஞர்களிலிருந்து வேறுபட்டுச் சிந்தித்து, பிறர் பயன்படுத்தாத பொருள்களைப் பயன்படுத்தி, பதிப்போவியம் வரைந்ததால் இவர் உலகின் கவனத்தைக் கவர்ந்தார்.

1982 ஆம் ஆண்டிலிருந்து லலிதகலா அகாடமியில் பதிப்போவியப் பிரிவின் தலைவராகப் பணியாற்றி வந்த இவர் இப்போது அவ்வமைப்பின் மண்டலச் செயலாளராகச் சென்னையில் செயலாற்றி வருகிறார். 1993இல் புல்பிரைட் கல்வி நிதி உதவி, 1993–95இல் இந்திய அரசின் முதுநிலைக் கலைஞர் ஆய்வாளர் நிதிஉதவி ஆகியவற்றைப் பெற்று, பல்வேறு நாடுகளின் ஓவிய நிறுவனங்களுக்குச் சென்று ஓவியம் கற்பித்து வருவதோடு கண்காட்சியும் நடத்தியுள்ளார். அமெரிக்கா, ஹாலந்து நாடுகளில் இவரது படைப்புக்கள் மட்டுமே தனிக் க்ண்காட்சியாக வைக்கப் பெற்றன. மெக்சிகோ, கனடா, கியூபா, சிரியா, கொரியா, பின்லண்ட், தைவான், பிரான்சு, இங்கிலாந்து, ஜப்பான் நாடுகளின் கண்காட்சிகளிலும் இவரது படைப்புக்கள் இடம் பெற்றுள்ளன. 1985 இல் வெள்ளிப் பதக்கமும் 1986 இல் தேசியவிருதும் இவருக்கு வழங்கப்பட்டன. இவருடைய படைப்புக்கள் பிரிட்டிஷ் மியூசியம், அமெரிக்கன் காங்கிரஸ் நூலகம், அமெரிக்கா தாப்ரின் நிறுவனம், மற்றும் உலகப்புகழ்பெற்ற அருங்காட்சியகங்களில் இடம் பெற்றுள்ளன. 1996 டிசம்பரில் ரஸ்கின் ஓவிய நிறுவனமும் சார்லஸ் பாலஸ் நிறுவனமும் அமெரிக்காவில் இவருக்குச் சிறப்பு விருந்தளித்து இவரை வருகை ஓவியக்கலைஞர் (Visiting Artist) என நியமித்து இவரது ஓவியங்களுக்காகவே சிறப்புக் கண்காட்சி நடத்தி இவரைப் போற்றின. ஒரு இந்தியக் கலைஞருக்குக் கிடைத்த மாபெரும் கௌரவம் இதுவாகும்.

காலம் – வெளி – சூழல் குறித்த கலைரீதியான சிந்தனை இவரது சித்திரம், ஓவியம், அச்சுப்பதிவு ஆகிய அனைத்திலும் பதிவு செய்யப்படுகின்றன. பறக்கும் மனிதன், ஆவணங்கள், வெளி ஆகிய தலைப்புக்களில் அச்சுப்பதிவு ஓவிய வரிசைகளை இவர் படைத்துள்ளார். இவரது கலைப்படைப்புக் களில் அறிவியல், கணிதம், உளவியல், வரலாறு, பூகோள சாத்திரம் அனைத்தும் பங்கேற்கின்றன. எனவே இவரது கலையை அறிவியலின் கலை என உலகக் கலைஞர்கள் போற்றுகின்றனர். நகரத்தார் இளைஞராகிய இவர் தன்னுடைய தனித் தன்மையான கற்பனைப் படைப்புக்களால் உலகப்புகழ் பெற்ற ஓவியக் கலைஞராகத் திகழ்கின்றார்.

பழநியப்பன், இராமநாதன், (24-10-1932)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
புதுப்பட்டி
தொழிலதிபர்

1954 இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியற் பட்டப் படிப்பில் (பி.இ. ஆனர்சு) பல்கலைக்கழக முதல் மாணவராக வெற்றி பெற்றார். சிம்சன், எச்.எம்.டி., எஸ்.ஆர்.பி. டூல்ஸ் போன்ற நிறுவனங்களில் 30 ஆண்டுகட்கும் மேல், பல்வேறு நிலைகளில், பணியாற்றியுள்ளார். அப்பணிகள் தொடர்பாகப் பல ஆசிய, ஐரோப்பிய நாடுகட்கும் சென்று வந்துள்ள இவருக்குத் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, செருமானிய மொழிகள் நன்கு தெரியும்.

மத்திய அரசின் பொறியியற் கருவிகள் வளர்ச்சிக் குழுவிலும், மத்தியத் திட்டக்குழுவின் பொறியியற் கருவிப் பணிப்பிரிவிலும் உறுப்பினராகப் பணியாற்றியுள்ள இவர், தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திலும், அமெரிக்க வங்கியின் இந்தியப் பிரிவிலும் இயக்குநராகவும் செயலாற்றியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவை, ஆளவை மற்றும் தேர்வுக் குழுக்களில் உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்.

இப்போது செல்வின்சு நிறுவனங்கள் குழுமத்தின் தலைவராகவும், காபோமா, பென்டகன், பிரிமாக்ஸ், புரொடக்டிவிடி எலிமெண்ட்ஸ் ஆகிய தொழில் நிறுவனங்களின் இயக்குநராகவும், செட்டிநாடு சிமெண்ட், எஸ்.ஆர்.பி. டூல்ஸ், ஆசியன் பேரிங் போன்ற நிறுவனங்களின் இயக்குநர்களில் ஒருவராகவும் இருக்கிறார்.

Koviloor Digital Library

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் சென்னைக் கிளையிலும், தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகத்திலும் தேர்வுக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டுக் கொண்டிருக் கிறார்.

பழநியப்பன், இல., (23-6-1938)

வைரவன் கோவில் - பெரியவகுப்பு
கண்டரமாணிக்கம்
தொழிலாளர் நல அலுவலர்,
சமூகத் தொண்டர்

இலக்குவன் – சிவகாமியின் மகன். முதுகலை சமூகவியற் கல்வி கற்றவர். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் தொழிலாளர் நலம் பேணும் துறையை நிருவகித்து ஓய்வு பெற்றுள்ளார்.

கலை இலக்கியம் ஆன்மீகத் துறைகளில் ஈடுபட்டுப் பல அமைப்புக்களில் பணியாற்றி வருகிறார். இளங்கதிர் இலக்கிய வட்டம், விடியல் இலக்கிய வட்டம் ஆகியவற்றின் புரவலராகவும் அப்பர் அடிகள் அருட்பேரவை, பல்லவன் முத்தமிழ் மன்றம் ஆகியவற்றின் காப்பாள ராகவும் பொதுப்பணி செய்துவரும் இவர் சாயீ ஆன்மீக மையம், ஆன்மீகவிழிப்புணர்வு இயக்கம் ஆகியவற்றின் வாயிலாக மக்களிடம் சமய உணர்வை வளர்த்து வருகிறார்; வானொலி, தொலைக்காட்சியில் தொழிலாளர் நிகழ்ச்சிகள் வழங்கியுள்ளார். சமுதாய மறுமலர்ச்சியில் நெதுசு. அவர்களின் பங்கு, டாக்டரால் என் அழகை அதிகப்படுத்த முடியுமா? ஆகியன இவர் படைத்த நூல்கள். நல்ல பேச்சாளர்; நலமான எழுத்தாளர், சிறந்த மொழிபெயர்ப்பாளர், நன்னெறி கற்பிக்கும் சமயப் பரப்புநர் எனப் பல்திற ஆற்றல் கொண்டவர்.

பழநியப்பன், சுப., (14-4-1959)

மாத்தூர் - உறையூர்
கண்டனூர்
அரசியல்வாதி

சுப்பிரமணியன் செட்டியார் – கண்ணபுரம் ஆச்சியின் மகன். 1978 இல் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் சேர்ந்த இவர் பின்னர் பாரதீய ஜனதாக் கட்சியில் சேர்ந்து 1994 இல் திருச்சி நகரப் பாரதீய ஜனதா தலைவரானார். 1996 இலிருந்து அக்கட்சியின் திருச்சி மாவட்டத் தலைவராகப் பணியாற்றி வருகிறார். அக்கட்சியின் சார்பில் 1991 இல் சட்டமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டுள்ளார். பல்வேறு அரசியல் கட்சிகளில் நகரத்தார்களின் பங்கு இருந்தாலும் பாரதீய ஜனதாக் கட்சியில் மாவட்டத் தலைவர் என்னும் தனிச் சிறப்புடைய நகரத்தார் இவர்.

பழநியப்பன், சுப.சித., (15-3-1928)

நேமங்கோவில்
காரைக்குடி
கணக்குத் தணிக்கையாளர்

சுப. சிதம்பரம் செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். அழகப்பா கல்லூரியில் வணிகவியல் பட்டப்படிப்பும் சென்னையில் கணக்குத் தணிக்கையாளர் (FCA) படிப்பும் முடித்தவர். 1956இல் தனது சொந்தத் தணிக்கை நிறுவனத்தைத் தொடங்கி வரிவிதிப்பு, வரிசெலுத்துதல் ஆகியவை பற்றிப் பல்வேறு நிறுவனங்களுக்குச் சிறப்பாக ஆலோசனை அளித்து வருகிறார்.

செட்டிநாடு சிமிண்ட் ஆலை, துளசி நூற்பாலை ஆகிய நிறுவனங்களில் இயக்குநர்; கோவிலூர்த் திருமடத்தின் நிருவாக ஆலோசனைக்குழு உறுப்பினர். 'சென்னை மெட்ரோ' சுழற்கழகத்தின் நிறுவுநர் தலைவர்.

பழநியப்பன், சே.இராம., (31-3-1935)

இளையாத்தங்குடி
வேகுப்பட்டி
நகரத்தார் இயல் ஆய்வாளர்

மலேயாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய இராம. சுப்பையாவின் தம்பி. சேதுராமசாமிச் செட்டி யாரால் பிள்ளைகூட்டிக் கொள்ளப் பெற்றார்.

மலேசிய வானொலி, தொலைக்காட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற இவர் வானொலி இலக்கிய நாடகங்கள், சிறுகதைகள், மலைநாட்டுத் திருத்தலங்கள் என்ற சமயக் கட்டுரைத் தொடர் ஆகியவற்றை எழுதியுள்ளார். மலேசிய வானொலியில் இவரது 'விதியின் கரங்கள்' என்ற நாடகமும் தொலைக் காட்சியில் 'உடன்பிறப்பு' என்ற நாடகமும் தொடர்களாக ஒலி ஒளிபரப்பாகியிருக்கின்றன. திருமுறை வழிபாடு, நீ நாளும் நினை நெஞ்சே, தெய்வீகத் திருமணங்கள் என்பவை இவர் தொகுத்து வெளியிட்ட வழிபாட்டு நூல்களாகும். 'எஸ்ஸாரெம்' என்ற புனைபெயரிலேயே இவர் நூல்களைப் படைத்து வருகிறார்.

செட்டிநாட்டில் உள்ள குலதெய்வக் கோவில்கள் அனைத்திற்கும் நேரில்சென்று இவர் உருவாக்கிய 'நகரத்தார்களின் குலதெய்வங்கள்' எனும் நூல் அறிஞர்களால் பாராட்டப் பெற்றுள்ளது. தம் ஊராகிய வேகுப்பட்டி நகரச் சிவன்கோவிலில் திருமுறைக்குத் தனிச் சன்னதி அமைத்து வழிபடச் செய்துள்ள இவர் மலேசியாவிலும் திருமுறைகளைப் பரப்பும் தொண்டைத் திறம்படச் செய்து வருகிறார்.

Koviloor Digital Library

பழநியப்பன், டாக்டர். வெ., (9-7-1932)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
மகிபாலன்பட்டி
தமிழ்ப்பேராசிரியர்-இதழாளர்

குமு. வெங்கடாசலம் செட்டியார் – சிட்டாள் ஆச்சியின் இரண்டாவது மகன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி. பட்டங்கள் பெற்றவர். 1960முதல் 1964 முடிய ஐந்து ஆண்டுகள் 'தமிழ்நாடு' நாளிதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.

பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழியல் துறையில் சேர்ந்து 29 ஆண்டுகள் பணியாற்றி 1993இல் ஓய்வு பெற்றார். ஆயினும் தொடர்ந்து சிறப்பு நிலைப் பேராசிரியராக ஆய்வுப் பிரிவில் பணியாற்றி வருகிறார்.

இவர் ஆய்வுப் பிரிவுப் பணிக்காலத்தில் 6400 புலவர்களின் வரலாற்றை உள்ளடக்கியதாக வெளிவந்த 'தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் – நான்கு தொகுதிகளி'ன் ஆசிரியர் குழுவில் இவரும் ஒருவர். 'தமிழ் நூல்களில் பாட வேறுபாடுகள்' 'புகழேந்தியும் நளவெண்பாவும்' என்ற நூல்களைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளார்.

இவரது வழிகாட்டுதலில் மூவர் முனைவர் பட்டமும், முப்பதுக்கும் மேற்பட்டோர் எம்.பில் பட்டமும் பெற்றுள்ளனர்.

பழநியப்பன், ந. (2-12-1927)

இரணிக்கோவில்
கொப்பனாபட்டி
பதிப்பாளர்

கடியாபட்டியில் முத்தையாசெட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மூத்த மகனாகப் பிறந்த இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் இராமையா. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இடைநிலை வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது, இவரை 1947இல் கொப்பனாபட்டி நல்ல தம்பிச் செட்டியார் – விசாலாட்சி ஆச்சி குடும்பத்தினர் பிள்ளை கூட்டிக் கொண்டனர். அவர்கள் இவருக்கு இட்ட பெயரே பழநியப்பன்.

சொந்தமாகத் தொழிலில் ஈடுபட நினைந்த பழநியப்பன் தம் உறவினரான அரிமழம் க.அ. செல்லப்பனுடைய பாரி நிலையத்தில் 1949இல் பங்குதாரராகச் சேர்ந்தார். 1952ஆம் ஆண்டு பாரி நிலையத்திலிருந்து விலகி 'மலர் நிலையம்' என்ற புத்தக வெளியீட்டகத்தைத் தனியே தொடங்கினார். பாவேந்தர் பாரதிதாசன், அவர் மாணவர் வாணிதாசன் ஆகியோர் நூல்களை இவர் அதன் வாயிலாக வெளியிட்டார்.

1958இல் வள்ளுவர் பண்ணைப் பதிப்பகத்தைத் தொடங்கினார். இதன் முதல் நூலாகத் தமிழ்க்கடல், இராய. சொவின் 'வள்ளுவர் தந்த இன்பம்' எனும் நூலை வெளியிட்டார். கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தைத் தமிழாக்கம் செய்து வெளியிட்டதும், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் நூல்கள் பலவற்றைத் தமிழாக்கம் செய்து வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கவை.

500 நூல்களுக்கும் மேல் தம் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிட்டுச் சாதனை புரிந்துள்ள பழநியப்பன், தாமே சிறுவர்க்கான நூல்கள் மூன்றினை எழுதியுள்ளார். சென்னைப் பதிப்பாளர் சங்கத்தின் செயலாளராகப் பல்லாண்டுகள் பணியாற்றியுள்ளார்.

பல புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்திய பெருமையர். துணிவும், தெளிவும் உடைய இவர் சமூக முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை யுடையவர்.

பழநியப்பன், நீதிபதி. நா, (24-2-1933)

இளையாத்தங்குடி - கழனிவாசற்குடி
கல்லல்
நீதிபதி

வெளியாரியார் வீடு எனச் சிறப்புப் பெயர்பெற்ற குடும்பத்தில் நாச்சியப்ப செட்டியார் – கருப்பாயி ஆச்சியின் மூத்த மகன்.

திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் பட்டப்படிப்பினையும், சென்னை சட்டக் கல்லூரியில் சட்டத்தினையும் கற்றார். சென்னைப் பல்கலைக்கழகக் கூடைப்பந்து அணியில் இடம்பெற்று இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்ற பல போட்டிகளில் விளையாடிப் பரிசுகள் பெற்றுள்ளார். இவரைக் கூடைப் பந்தாட்டக் கழகம் முதல் தகுதி நடுவராக ஏற்றுக் கொண்டுள்ளது.

1955இல் சட்டக்கல்வியை முடித்து வழக்குரைஞராகப் பதிவு செய்து கொண்டு சென்னையிலும், சிவகங்கையிலும் தொழில் செய்தார். தமிழக அரசு 1974இல் இவரை நேரடியாக மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாகத் தேர்ந்தெடுத்தது. இவர் இப்பதவியில் கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் பணியாற்றினார்.

1979 முதல் நான்காண்டுகள் சென்னையில் விற்பனை வரிமேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவராகவும், பின்னர் சிறுகாரண வழக்குகள்

Koviloor Digital Library

நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், தொழில் தீர்ப்பாயம், சிறப்புத் தொழில் தீர்ப்பாயம் ஆகியவற்றின் தலைவராகவும் பணியாற்றி 1990இல் ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்ற பின்னரும் 1992 ஜூன்மாதம் சிதம்பரம் அண்ணாமலைநகர் காவல்நிலைய நிகழ்ச்சி குறித்த ஒருவர் விசாரணைக் குழுவாகத் தமிழக அரசினால் பணி அமர்த்தப்பட்டுச் செயற்பட்ட பெருமை இவருக்கு உண்டு.

நகரத்தார் சமூகத்தில் மாவட்ட நீதிபதியாகப் பணியமர்த்தப்பெற்ற முதல்வர் என்ற பெருமை இவரையே சாரும்.

பழநியப்பன், பழ., (19-4-1943)

இளையாத்தங்குடி - ஒக்கூருடையார்
காரைக்குடி
இலக்கியப்பணி

மெ. செ. அ. மெ. பழநியப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். அழகப்பா கலைக்கல்லூரியில் பட்டப்படிப்பினை முடித்தவர். இப்போது பாரதீய வித்தியா பவனில் மக்கள் தொடர்பு பற்றிய பயிற்சியினை மேற்கொண்டு வருகிறார்.

முருகப்பா தொழில் நிறுவனங்களின் பொது மேலாளராகப் பணியாற்றும் இவர் "டி.ஐசக்கரா", "டி.ஐகுழலோசை", "மக்கள் தொடர்பு இதழ்" ஆகிய இதழ்களின் ஆசிரியராகவும் இருந்து வருகிறார்.

அனைத்திந்திய மக்கள் தொடர்புக் குழுவின் சென்னைப் பிரிவின் தலைவராக நான்காண்டுகளும், தேசியக் குழுவின் உறுப்பினராகப் பத்தாண்டுகளும், தொண்டாற்றிய இவர் இப்போது இவ்வமைப்பின் அனைத்திந்தியத் தலைவராகப் பணிபுரிகிறார். அனைத்திந்திய மக்கள் தொடர்பு அதிகாரிகளின் 6ஆவது மாநாட்டை அமைப்புக்குழுத் தலைவராக இருந்து 1963இல் சென்னையில் சிறப்பாக நடத்தியுள்ளார். 'சமஸ்கிருத சங்கீத உத்சவம்' என வழங்கப்பெறும் ஒரு தேசிய இசை விழாவின் அமைப்பாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

காரைக்குடி மற்றும் சென்னைக் கம்பன் கழகங்களின் செயலராகச் சிறந்த முறையில் இலக்கியப் பணிசெய்து வருகிறார். கடந்த 21 ஆண்டுகளாகச் சென்னையில் ஆண்டுதோறும் மூன்று நாட்கள் கம்பன் விழாவைத் திறம்பட நடத்தி வருகிறார். சாகித்ய அக்காதமியுடன் இணைந்து 1989இல் அனைத்திந்திய இராமாயண மாநாடு ஒன்றை நடத்தியுள்ளார்.

'கம்பன் விசுவரூபம்', 'கம்பனிடம் கற்போம்', 'கம்பராமாயணச் சுருக்கம்' ஆகிய நூல்களையும் பல்வேறு இராமாயண ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். காரைக்குடிக் கம்பன் கழகத்தை நிறுவி, அதன் வாயிலாக, மரபு வழுவாத இலக்கிய விழாவைத் தொடர்ந்து நடத்திய கம்பனடிப்பொடி சா. கணேசனின் அடிச்சுவட்டில் காரைக்குடியிலும், நாட்டரசன் கோட்டையிலும் மரபு மாறாமல் தொடர்ந்து விழாவை நடத்திவரும் இவர் 'கம்பன் அடி சூடி' என்று புனைபெயர் வைத்துக் கொண்டிருக்கிறார் என்பது இவர் தம் இராமாயணப் பற்றைப் புலப்படுத்தும்.

பழநியப்பன், முத்து., (31-5-1949)

இளையாத்தங்குடி - ஒக்கூருடையார்
காரைக்குடி
சமூகத் தொண்டர்

முத்துக்கருப்பஞ் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். காரைக்குடியில் வீட்டு உபயோகப் பொருள் வணிகத்தையும் மருந்து மொத்த வணிகத்தையும் தொழிற்பேட்டையில் ஒரு தொழிற்சாலையையும் நடத்தி வருகிறார். காரைக்குடியில் பல்வேறு பொதுநல அமைப்புக்களில் பொறுப்புக்களை ஏற்றுத் தொண்டு செய்து வருகிறார். எந்தப் பொதுப்பணியிலும் முழுமையான ஈடுபாட்டுடன் செயல்படுவது இவரது தனிச்சிறப்பு.

காரைக்குடித் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கத் தலைவர்; தொழில் வணிகக் கழகத்தின் துணைத் தலைவர்; அண்ணா தமிழ்க் கழகம், திருக்குறட் கழகம் ஆகியவற்றின் செயற்குழு உறுப்பினர்; இந்து மதாபிமான சங்கம், சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார் அறப்பணிக் கழகம் ஆகியவற்றில் உறுப்பினர். இந்நகர் மீ.சு. மேல்நிலைப்பள்ளி பழைய மாணவர் சங்கச் செயலாளர். அப்பள்ளியின் நிருவாகக்குழு உறுப்பினர். காரைக்குடிச் சுழற் கழகத்தின் ஆலோசகர், முன்னாள் செயலர்; முன்னாள் தலைவர்.

மீ.சு. உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி ஆவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுள் இவரது பங்கு குறிப்பிடத்தக்கது. சுழற்கழகத்தில் சிறந்த செயலர், சிறந்த தலைவர் என்பவை உள்ளிட்ட 24 பரிசுகளை மாவட்ட ஆளுநரிடமிருந்தும் அகில உலகச் சுழற்குழு அமைப்பிடமிருந்தும் பெற்றுள்ளார். இவர் தலைவராக இருந்தபோது தேவகோட்டைச் சாலையில் 'டைரக்டர் இராம. நாராயணன் ரோட்டரி சுகாதாரமையம்' அமையக் காரணமாக இருந்து, இப்போது அதன் பொறுப்பாளராக இருந்து வருகிறார். இதன் வாயிலாக நாள்தோறும் நூற்றுக்கணக்கான ஏழைமக்கள் இலவச மருத்துவ உதவிபெற்று வருகின்றனர்.

Koviloor Digital Library

பழந்தேங்காய் கொடுத்தல்

நகரத்தார் பண்பாட்டில் திருவிழாக்கள் கொண்டாடுவதற்கும் அவ்வேளையில் மகளைத் திருமணம் செய்து கொடுத்த சம்பந்தி வீட்டார்க்குச் சிறப்புச் செய்வதற்கும் சான்றாகப் 'பழந்தேங்காய் கொடுத்தல்' நிகழ்ச்சி அமைந்துள்ளது. திருவிழாவில் உறவினர்கள் கூடி விருந்துண்டு மகிழ்வது நகரத்தார் இயல்பு. பொதுவாகத் திருவிழாக்கள் நடைபெறும்போது பெண்பிறந்த வீட்டார் தம் ஊர்த் திருவிழாவிற்குச் சம்பந்தி வீட்டாரை அழைப்பார்கள். வீட்டில் விருந்திட்டுச் சம்பந்தி வீட்டார்க்குத் தேங்காய் வாழைப்பழம் வெற்றிலைபாக்கு, முறைச்சீட்டில் குறிப்பிட்டிருந்தால் அதற்கான ரூபாய் ஆகியவற்றை வைத்துக் கொடுப்பது வழக்கம். பையன் (மாப்பிள்ளை) ஊரில் திருவிழா நடைபெற்றால் பெண்ணின் பெற்றோராகிய சம்பந்தியை விருந்துக்கழைத்து மகிழுவார்கள். ஆனால் அங்கும் பெண்ணைப் பெற்றவர்கள்தான் மாப்பிள்ளை வீட்டார்க்குப் பழந்தேங்காய் கொண்டு போய்க் கொடுப்பது வழக்கம். நகரத்தார் இனத்தில் ஆண்பிள்ளை பெற்றவர் வாங்கிக் கொள்ளுவதும் பெண்வீட்டார் கொடுப்பதுமே வழக்கம். மாப்பிள்ளை வீட்டார்க்குச் சிறப்புச் செய்வதே மரபு ஆகியது. கல்யாணத்தின் போது ஒருவருட முறை மூன்று வருட முறை என்று பேசிக் கொள்வதற்கேற்ப ஒரு வருடம் அல்லது மூன்று வருடங்களுக்குப் பழந்தேங்காய் கொடுக்கும் வழக்கம் உண்டு. ஆனால் இப்போது கல்யாணம் ஆன முதல் ஆண்டில் மட்டுமே பழந்தேங்காய் கொடுப்பது நிகழ்கின்றது.

பொதுவாக அம்மன் கோவில் திருவிழா, அல்லது சிவன்கோவில் திருவிழா அல்லது பக்கத்து ஊர்க் கோவில் திருவிழா ஆகியவற்றின் போது பழந்தேங்காய் கொடுப்பது வழக்கம். எடுத்துக்காட்டாக, காரைக்குடி பெண்பிறந்த வீடாக இருந்தால் அங்கு கொப்புடையம்மன் கோவில் தேர்த்திருவிழாவிற்குச் சம்பந்தி வீட்டாரை அழைத்து விருந்தோம்பிப் பழந் தேங்காய் கொடுப்பார்கள். தேவகோட்டையில் சிவன்கோவிலில் முன்பு திருவிழாக் கொண்டாடப்படாததால் கண்டதேவித் திருவிழாவிற்குப் பழந்தேங்காய் கொடுக்கும் வழக்கம் இருந்தது. அது இன்றும் தொடர்கிறது. அங்கு பெருமாள் கோவில் திருவிழாவிற்கும் பழந்தேங்காய் கொடுப்பதுண்டு. பி. அளகாபுரியில் அங்குள்ள அம்மன் திருவிழாவில் பழந்தேங்காய் கொடுப்பர். அதை ஒட்டியுள்ள விராமதியிலோ கீரணிப்பட்டித் திருவிழாவில் பழந்தேங்காய் கொடுப்பது வழக்கமாக உள்ளது.

உள்ளூரில் மாப்பிள்ளை வீடு இருந்தால் வீட்டிற்குத் தேங்காய்பழம் கொடுத்து விடுவது வழக்கம். வெளியூர்ச் சம்பந்தியாரைத் திருவிழா நடைபெறும் கோவிலுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள தண்ணீர்ப்பந்தலில் பழந்தேங்காய் கொடுப்பார்கள். வீட்டில் விருந்துண்ண வரும்போது அங்கேயே கொடுப்பதும் உண்டு. தேங்காய் வாழைப்பழத்தோடு வகைப்பழம் என மாம்பழம், ஆப்பிள் பழங்களும் வைத்துக் கொடுப்பதுண்டு. உறவினர் திருவிழாவில் கூடிக்களித்து உறவை வளர்ப்பதே பழந்தேங்காய் கொடுப்பதன் நோக்கமாகும்.

பள்ளத்தூர்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி – திருச்சி நெடுஞ்சாலையில் காரைக்குடியிலிருந்து பதினைந்து கிலோமீட்டரில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், இலுப்பைக்குடி, சூரக்குடி, இரணிக்கோவில் ஆகிய ஏழு கோவில்களைச் சேர்ந்த 1000 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் பேரூராட்சி மன்றம்.

இவ்வூரின் ஒவ்வொரு தெருவும் வடக்கே மேடாகவும், தெற்கே பள்ளமாகவும் அமைந்திருக்கிறது. இவ்வாறு பள்ளமான பகுதியில் இவ்வூர் அமைந்திருப்பதால் இதற்குப் பள்ளத்தூர் எனப் பெயர் வந்ததாகக் கூறுவர்.

இங்கு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் என்ற நகரச் சிவன் கோவிலும், நகரத்தார் கட்டி நிருவகித்து வரும் சௌந்தரராசப் பெருமாள் கோவிலும் அமைந்துள. 1913இல் திருப்பணி முடித்துக் குடமுழுக்குச் செய்யப் பெற்ற சிவன் கோவிலுக்கு 1931, 1939, 1956, 1973, 1990 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நிகழ்ந்துள. 1969இல் திருப்பணி முடித்துக் குடமுழுக்குச் செய்யப் பெற்ற பெருமாள் கோவிலுக்கு 1990இல் திருக்குட நன்னீராட்டு விழா நிகழ்ந்துளது.

தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்களால் அமைக்கப்பெற்ற கைலாச விநாயகர் கோவில், சத்திரத்துப் பிள்ளையார் கோவில், கந்தன் குளத்து விநாயகர் கோவில், கிழவன் செட்டி ஊருணிப் பிள்ளையார் கோவில் ஆகியவையும் இவ்வூரில் அமைந்துள. நகரச் சிவன் கோவில் ஊருணி குடி தண்ணீர் ஊருணியாக அமைந்திருக்க வேறு 4 ஊருணிகளும் இவ்வூரில் நகரத்தார்களால் அமைக்கப் பெற்றுள.

Koviloor Digital Library

இரணிக்கோவிலைச் சேர்ந்த சொ.மா.கரு. அண.கரு. குடும்பத்தரால் கடந்த 100 ஆண்டுகளாக நடத்தப்பெற்றுவரும் அழகம்மை ஆச்சி தொடக்கப் பள்ளி, மு.வெ. குடும்பத்தாரால் நடத்தப்பெறும் சீதை ஆச்சி நடுநிலைப்பள்ளி, சீதை ஆச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, இரணிக்கோவிலைச் சேர்ந்த உ.அ.பெரி.மு. அருணாசலம் செட்டியாரால் 1925இல் தொடங்கப்பெற்று, அவரது வழிமுறையினரால் நிருவகிக்கப்பெற்றுவரும் அருணாசலம் செட்டியார் மேல்நிலைப்பள்ளி, அன்னாரால் 1962இல் தொடங்கப் பெற்று அவரது வழிமுறையினரால் நிருவகிக்கப் பெற்றுவரும் சீதாலெட்சுமி ஆட்சி மகளிர் கல்லூரி ஆகியவை இவ்வூரின் கல்வி நிறுவனங்களாம். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நகரத்தார் மகளிர் கல்லூரி சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அ.மு.மு. குடும்பத்தினரால் கட்டி, நிருவகிக்கப்பெற்று வரும் அனைத்து வசதிகளும் உள்ள அ.மு.மு. மருத்துவமனை இவ்வூரில் இயங்கி வருகிறது.

இரணிக்கோவிலைச் சேர்ந்த முத்து வீரப்ப செட்டியார், நல்லழகப்ப செட்டியார் குடும்பத்தினரால் கட்டப்பெற்ற அழ. இராம. சத்திரம் இவ்வூரில் கடந்த 170 ஆண்டுகளாக நாள்தோறும் அன்னதானம் செய்து வருகிறது.

இவ்வூர் வைரவன் கோவில் தெய்வநாயகர் வகுப்புப் பங்காளிகள் நாச்சாத்தாள் படைப்பையும் நேமங்கோவில் பங்காளிகள் ஒருபொதுப் படைப்பையும், சூரக்குடிப் பங்காளிகள் ஒரு பொதுப் படைப்பையும் படைத்து வருகின்றனர்.

கடியாபட்டி, காரைக்குடி, கொத்தமங்கலம், கோட்டையூர், தேவகோட்டை, பலவான்குடி, பள்ளத்தூர், புதுவயல் ஆகிய ஊர்களைச் சேர்ந்த இரணிக்கோவில் பங்காளிகள் 3 ஆண்டுகட்கொரு முறை இவ்வூரில் கூடி அழகாத்தாள் படைப்பைப் படைத்து வருகின்றனர்.

ப.இராம.ப. குடும்பத்தார் ஒரு பூசையையும், வைரவன் கோவில் பங்காளிகள் ஒரு பூசையையும், இரணிக்கோவில் நல்லழகன் செட்டி வகையினர் ஒரு பூசையையும் ஆண்டுதோறும் தத்தமக்குச் சொந்தமான பூசை மடம் அல்லது சத்திரத்தில் நடத்தி அன்னதானம் செய்து வருகின்றனர்.

இவ்வூர் சொ.மு.அ.மெ. அருணாசலம் செட்டியார் திருவிற்குடிச் சிவன்கோவிலில் திருப்பணி செய்துள்ளார்.

பனங்குடி

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், அ.சிறுவயல், சாத்தரசம்பட்டி, நடராசபுரம் வழியாக 35 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, வைரவன்கோவில், இலுப்பைக்குடி, சூரக்குடி ஆகிய நான்கு நகரக்கோவில்களைச் சேர்ந்த 21 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இவ்வூரில் சிவன்கோவில் இல்லை. நாட்டார் நகரத்தாரால் திருப்பணி செய்யப்பெற்று, நகரத்தார் நிருவாகத்தில் இருக்கும் பெரியநாயகி அம்மன் கோவிலும், தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் கட்டிய பிள்ளையார் கோவிலும் உள்ளன. ஒரு குடிதண்ணீர் ஊருணி உள்ளது.

அம்மன் கோவிலில் ஆனி மாதம் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. நவராத்திரியின் போது 3 நாட்கள் நகரத்தார்கள் இலட்சார்ச்சனை நடத்துகின்றனர். ஆண்டுதோறும் தைமாதம் இரண்டாவது செவ்வாய்க் கிழமையன்று நகரத்தார்கள் செவ்வாய்ப் பொங்கல் வைக்கின்றனர்.

அம்மன் கோவிலின் அலங்கார மண்டபம் நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த பெரி.மு.அரு. கண்ணப்ப செட்டியாரால் கட்டப்பெற்றது. இவ்வூரைச் சேர்ந்த கா.சு.கா.சு. இராம. இராமநாதன் செட்டியார் அம்மன் கோவிலில் நந்தவனம் ஒன்றை அமைத்துப் பூசைக்கு மலர் அளித்து வருகிறார்.

பனையப்ப செட்டியார், சொ., (31-3-1904 - 9-2-1991)

நேமங்கோவில்
மேலைச்சிவபுரி
நாவலாசிரியர், இதழாளர்

சொக்கலிங்கம் செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். நெற்குப்பையில் பிறந்து சுவீகாரம் சென்றார். புதுக்கோட்டையிலிருந்து 1936ஆம் ஆண்டில் 'சந்திரோதயம்' இதழை ஆசிரியராக இருந்து நடத்தினார். இடையில் சிலகாலம் நின்றிருந்த இதழ் மீண்டும் சென்னையிலிருந்து வெளிவந்தது.

சாவி, வ.ரா. ஆகியோர் இவ்விதழில் பணியாற்றினர். கற்பகம், காமதேனு ஆகிய இதழ்களும் இவரால் வெளியிடப்பெற்றன.

Koviloor Digital Library

செட்டிநாட்டின் பழம்பெரும் எழுத்தாளரான இவர் காந்திமதி, மணிவாசகன், சண்முகநாதன், அமிர்தம், சந்திரசேகரன் ஆகிய ஐந்து நாவல்களை எழுதியுள்ளார். இந்திய விடுதலை இயக்கம் பற்றியும் காந்தியம் பற்றியும் முதன் முதலாகக் குறிப்பிடும் தமிழ்நாவல் இவருடைய 'காந்திமதி' நாவலேயாகும். கதைமாந்தர்கள் காந்தி, கதர், அகிம்சை பற்றி உரையாடுகின்றனர். சட்டசபைப் புறக்கணிப்பு பற்றிக் கதைத் தலைவன் சொற்பொழிவு நிகழ்த்து கின்றான். இவ்வாறு அன்றைய காலச்சூழலைப் படம் பிடித்துக் காட்டும் இலக்கியமாக இவரது படைப்புக்கள் விளங்குகின்றன. இவர் நிறைவாழ்வு வாழ்ந்த இலக்கியச் செல்வராவார்.

பனையப்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. காரைக்குடியிலிருந்து திருமயம், விரையாச்சிலை, இலட்சுமிபுரம் வழியாக 43 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, சூரக்குடி, இரணிக்கோவில் ஆகிய ஆறு கோவில்களைச் சேர்ந்த 268 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

மீனாட்சி சொக்கலிங்கம் கோவில் என்ற நகரச் சிவன் கோவில் உள்ளது. 1977இலும் 1991இலும் இக்கோவிலுக்குக் குடமுழுக்கு விழாக்கள் நிகழ்ந்துள்ளன. மாத்தூர் கோவில் உறையூர்ப் பிரிவு ஐந்து குடும்பத்தாருக்குப் பொதுவான சுப்பையா கோவிலும், சி.மு.மு. குடும்பத்தாருக்குரிய செட்டியூருணி முத்து விநாயகர் திருக்கோவிலும் அமைந்துள்ளன.

சி.மு.மு. அருணாசலம் செட்டியாரால் 1947இல் தொடங்கப்பெற்ற சி.மு. உயர்தர ஆரம்ப வித்தியாலயம், 1987இல் சி.மு.மு. அரு. அலமேலு அருணாசலம் நடுநிலைப்பள்ளி எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1988இல் பனையப்பட்டி நகரத்தார் சங்கம் இப்பள்ளி நிருவாகத்தை ஏற்றது. அவ்வாண்டே இது உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப் பெற்றது. தொடர்ந்து நகரத்தார் சங்க நிருவாகத்தில் நடந்து வருகிறது.

இவ்வூர்ச் சுப்பையாசாமி கோவிலில், இங்கிருந்து 9 கிலோமீட்டரில் உள்ள வையாபுரி முருகன் கோவிலிலிருந்து வேல் கொண்டு வந்து வைத்து வழிபடுகின்றனர். ஆண்டுதோறும் பங்குனி உத்தரத்திற்கு இங்கிருந்து காவடிகட்டி, வையாபுரிமலை சென்று காவடி செலுத்தி வருகின்றனர். மாசி மாதம் கார்த்திகையன்று பூசை நடத்தி அன்னதானம் செய்கின்றனர்.

இவ்வூரிலுள்ள கா.சுப. குடும்பத்துக்குரிய துவாதசி மடத்தில் 1887ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மாத்தூர் கோவில் உறையூர்ப் பிரிவைச் சேர்ந்த காரியக்காரர் குடும்பத்தாருக்குரிய சாதுக்கள் மடம் அண்மையில் திருமண மண்டபமாக ஆக்கப் பெற்றுள்ளது. இதில் ஒரு முருகன் கோவிலும் இருக்கிறது. இம்முருகனுக்கு இக்குடும்பத்தார் ஆண்டுதோறும் வைகாசி விசாகத்தன்று திருவிழா நடத்துகின்றனர்.

இரணிக்கோவில் பங்காளிகள் ஏகம்மை ஆயாள் படைப்பினைத் தங்களுக்குரிய பொதுப் படைப்பாகப் படைத்து வருகின்றனர். ஆண்டுதோறும் தைமாதம் முதல் வெள்ளிக் கிழமையும், திங்கட்கிழமையும் இப்படைப்பு நடைபெறுகிறது. மாத்தூர் குளத்தூர்ப் பங்காளிகளில் ஒரு பிரிவினர் ஆண்டுதோறும் ஆடிக்கார்த்திகையன்று பூசை நடத்துகின்றனர்.

அருகில் உள்ள கொன்னையூர் மாரியம்மன் கோவில் பூச்சொரிதலை இவ்வூரினர் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

இவ்வூரைச் சேர்ந்த பழ. மனோகரன் இ.தே.ரா.வில் பணிபுரிந்தவராவார்.

பாகனேரி

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், சொக்கநாதபுரம் வழியாக 30 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், சூரக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய ஐந்து நகரக்கோவில்களைச் சேர்ந்த 410 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

பாண்டியர் காலத்தில் கட்டப்பெற்ற கருணாகடாட்சி அம்மை உடனாகிய நீலகண்டீசுவரர் கோவில் என்ற சிவன் கோவில் இங்குளது. சிவகங்கை அரச குடும்பத்திற்குரிய இக்கோவில் இப்போது நகரத்தாரால் நிருவகிக்கப்படுகிறது.

நகரத்தார் 1935இல் திருப்பணி செய்த விண்ண வண்ணப்பெருமாள் கோவிலும் சிவகங்கை அரச குடும்பத்திற்கு உரியதே. இக்கோவிலும் இப்போது நகரத்தார் நிருவாகத்தில்தான் உள்ளது.

சிவகங்கை அரச குடும்பத்திற்குரிய புல்வநாயகி அம்மன் கோவிலுக்கு நகரத்தார் குடமுழுக்குச் செய்து வைத்தார்கள்.

Koviloor Digital Library

மாத்தூர் மணலூர் நகரத்தார்களால் கட்டி நிருவகிக்கப்பெறும் பாண்டி விநாயகர் கோவில், பெரி. அழ. மு. குடும்பத்தாரால் கட்டி நிருவகிக்கப் பெறும் முத்துவிநாயகர் கோவில், கண. அருணாசலம் செட்டியார் குடும்பத்தாரால் கட்டப்பெற்றுச் சுப.வே. மாணிக்கம் செட்டியாரால் புதுப்பிக்கப்பெற்ற அன்னதான செல்வவிநாயகர் கோவில் ஆகிய கோவில்களும் அவற்றைச் சார்ந்த ஊருணிகளும் இங்கே உள.

புல்வநாயகி அம்மனுக்கு ஆனி மாதம் நடைபெறும் தேர்த்திருவிழாவும் அதனையொட்டி நடைபெறும் மஞ்சுவிரட்டும் இவ்வூரின் பெரிய விழாக்களாகும். நகரத்தார் அனைவரும் சேர்ந்து ஆடி மாதம் முதல் வெள்ளிக்கிழமை மகேசுவர பூசை நடத்துகின்றனர். பிள்ளையார் நோன்பன்று அனைவரும் சிவன்கோவிலில் பொதுவாக இழையெடுத்துக் கொள்ளுவதும் அண்மைக் கால மரபு. தைமாதம் முதல் செவ்வாய்க்கிழமை நகரத்தார் அனைவரும் புல்வநாயகி அம்மன் கோவிலில் செவ்வாய்ப் பொங்கல் வைப்பது இவ்வூரின் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

இவ்வூர் பெரி. அழ. முத்துக்கருப்பன் செட்டியார் மகளும் ஒக்கூரில் வாழ்க்கைப் பட்டவருமான தெய்வானை ஆச்சி இடமும், கட்டிடமும் நன்கொடையாகக் கொடுக்க அங்கே தெய்வானை ஆச்சி அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி 1963இல் தொடங்கப்பெற்று நடைபெற்றுவருகிறது.

க்ண. அருணாசலம் செட்டியார் இடமும், கட்டிடமும் நன்கொடையாகக் கொடுக்க அங்கே கண. அருணாசலம் செட்டியார் அரசினர் மருத்துவமனை 1980இலிருந்து இயங்கிவருகிறது. பெரி.அழ.மு. குடும்பத்தார் 15 இலட்சம் ரூபாய் செலவில் தனியாக ஒரு மருத்துவமனை கட்டியிருக்கிறார்கள்.

இவ்வூர் பழைய வளவு, புதுவளவு என்ற இரு பகுதிகளை உடையது. பழைய வளவில் ஒரு நகரத்தார் மடமும், புது வளவில் ஒரு நகரத்தார் மாளிகையும் இருக்கின்றன. மாத்தூர் மணலூர் நகரத்தாருக்குரிய குருபூசை மடம் ஒன்றும் உள்ளது.

புல்வநாயகி அம்மன் கோவிலுக்குள் அக்கினியாத்தாள் என்ற பெயரில், நகரத்தார் முன்னோர் ஒருவருக்கு வழிபாடு நடைபெறுகிறது. ஆத்தங்குடி, கண்டனூர், காரைக்குடி ஆகிய ஊர்களைச் சேர்ந்த பிள்ளையார்பட்டி நகரத்தார் குடும்பங்களுடன் வந்து, அம்மன் கோவில் திருவிழாவில் 10ஆம் திருவிழா அன்று இரவு இவ் வழிபாட்டினை நடத்துகின்றனர். அவர்கட்குரிய அக்கினியாத்தாள் விடுதி ஒன்றும் அம்மன் கோவில் பின்புறம் இருக்கிறது.

சிவன்கோவில் முன் மண்டபத்தைக் குப்பான் செட்டியார் குடும்பத்தாரும், அம்மன் கோவில் முன் மண்டபத்தைத் திருமுறைக் காவலர் இராம. முத்துப்பழநியப்ப செட்டியாரும் கட்டிக் கொடுத்துள்ளனர்.


இவ்வூர் நகரத்தார் பனங்குடியில் ஒரு பிள்ளையார் கோவிலும், ஊருணியும் கட்டியுள்ளனர். இவ்வூரைச் சேர்ந்த சுப.வே.மா. தியாகராசன் செட்டியார் மதுரையை அடுத்த வில்லாபுரத்தில் ஒரு பிள்ளையார் கோவிலைக் கட்டி நிருவகித்து வருகிறார். இவ்வூர் பெரி.அழ.மு. குடும்பத்தார் வேதாரணியத்தில் ஒரு வேதபாட சாலையை நடத்தி வந்தனர். இவையெல்லாம் இவ்வூர் நகரத்தாரின் குறிப்பிடத்தக்க சில அறப்பணிகள்.

பாடுவார் முத்தப்பர் கோட்டம்

இலக்குமியை நகரத்தார் குடும்பங்களில் 'அன்றைக்கு வந்திட்ட அம்மா இலக்குமியே என்றைக்கும் நீங்கா திரு' எனப் பாடிய வாக்குப் பலிதத்தால் நகரத்தார் மக்கள் அனைவரிடமும் புகழ்பெற்ற பாடுவார் முத்தப்பருக்கு (து.க.) அவர் பிறந்த ஊராகிய கீழச்சிவல்பட்டி பி. அளகாபுரியில் அமைந்துள்ள நினைவிடமே பாடுவார் முத்தப்பர் கோட்டம். அமரர் சோமலெ இக்கோட்டத்தை இங்கிலாந்து ஸ்ட்ராபோர்டில் சேக்சுபியருக்கு அமைந்த நினைவிடம் போலச் சிறப்புமிக்க கலையகமாக உருவாக்க வேண்டும் என்று விரும்பினார். அவரது முயற்சியால் 8–9–1985 இல் பாடுவார் முத்தப்பர் கோட்ட அமைப்புக் குழு அமைக்கப் பெற்றது. 17–1–1986 இல் பல்வேறு ஊர் நகரத்தார்கள் இவ்வமைப்பின் வேண்டுகோளை ஏற்றுக் கூடினர். ஒரு வழிபாட்டு மண்டபம், நூல்நிலையம் ஆகியவற்றோடு பிற கட்டிடங்களும் கட்டத் திட்டம் வகுக்கப் பெற்றது. பாடுவார் முத்தப்பர் கோட்டம் வரன்முறைப்படுத்தப்பட்ட விதிகளோடு 25–3–86 அன்று சங்கங்கள் பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப்பெற்றது.

பாடுவார் முத்தப்பர் கோட்டம் சிறப்புமலர் 1989 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. இக்கோட்டத்தின் வாயிலாகப் பாடுவார் நூல்களை அச்சிட்டு வெளியிடும் முயற்சியின் தொடக்கமாக, 'செயங்கொண்டார் சதகம்' டாக்டர். சுப. அண்ணாமலை எழுதிய உரையுடன் 31–5–92 இல் வெளியிடப்பெற்றது. பாடுவார் முத்தப்பர் கோட்டம் கீழச்சிவல்பட்டியில் முத்தப்பர் மடம் இருந்த இடத்திலேயே கட்டப்பெற்று 7–9–97 அன்று திறந்து வைக்கப் பெற்றது.

Koviloor Digital Library



பாடுவார் முத்தப்பர் கோட்டம்

பாடுவார் முத்தப்பர் கோட்டம் அழகிய கலையரங்கமாக அமைந்துள்ளது. மேடையின் பின்புறம் ஆறுபட்டை வடிவிலான தேர் அமைப்பின் மையத்தில் உள்ள பீடத்தில் பாடுவார் முத்தப்பரின் முழு உருவச்சிலை அருள்வழங்கும் கோலத்தில் அமைந்துள்ளது. இக்கோட்டத்தை வ.நா. சிதம்பரம் செட்டியார் தலைமையில் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் திறந்துவைத்தார்.

காலத்தால் அழியாத கவிஞரை ஞாலம் மறவாது போற்றும் நாகரிகச் சின்னமாகப் பாடுவார் முத்தப்பர் கோட்டம் திகழ்கிறது.

பாதரக்குடி மடம்

நகரத்தார் ஆண்களின் உபதேச குருவில் ஒருவராகத் திருப்புனவாயில் இராமநாத சுவாமி ஏற்றுக் கொள்ளப்பட்ட பொழுது 1566இல் பாதரக்குடி மடம் தோற்றுவிக்கப்பெற்றது. அதுமுதல் கலாமடம் சுவாமிகளும் பாதரக்குடி சுவாமிகளும் நகரத்தார் ஆண்களுக்கு உபதேசம் செய்துவந்தனர். 1975இல் இந்த இரண்டு குருபீடங்களும் ஒன்றிணைக்கப்பட்டு இப்போது பாதரக்குடி சுவாமிகள் மட்டுமே நகரத்தார் உபதேச குருவாக விளங்குகிறார். பாதரக்குடி மடத்தில் திருப்புனவாசல் பழம்பதிநாதரே வழிபடு தெய்வமாக விளங்குகிறார்.

அந்தணர் மரபைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஒருவரே பட்டம் கட்டப்பெற்று இம்மடத்தின் தலைவராக வருவது மரபு. அவர் துறவு நெறியையே மேற்கொள்ளுவார். இம் மடாதிபதியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த சேனாபதி சுவாமிகள் குன்றக்குடி முருகப்பெருமானுக்கு வெள்ளி மயில்வாகனம் செய்து வைத்துள்ளார். இன்றும் அங்கு பங்குனி உத்தரத் திருவிழாவில் முதல் மரியாதை பாதரக்குடி ஆதீனத்திற்கே அளிக்கப்படுகின்றது. சேனாபதி சுவாமிகள் மீது கோவிலூர் ஆண்டவரும் பாடுவார் முத்தப்பரும் பாடல்கள் பாடியுள்ளனர்.

இம்மடத்தின் பன்னிரண்டாவது பட்டமாக, காமாட்சி சுந்தர தேசிகர் என்ற ரவீந்திர சுவாமிகள் 1975இல் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் பழம்பதிநாதர் மழலையர் பள்ளியைப் பாதரக்குடியில் 1994இல் நிறுவி நடத்தி வருகிறார். பாதரக்குடியில் சந்தோஷிமாதா கோவில் ஒன்றைக் கட்டிக் குடமுழுக்கு விழா நிகழ்த்தியுள்ளார். இம்மடத்தில் மாதந்தோறும் ஆன்மீகச் சோலை என்ற பெயரில் இலக்கிய நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஆண்டுதோறும் சுவாமிகளின் பிறந்தநாள், விழாவாகக் கொண்டாடப்பெறுகிறது. சிறந்த அறப்பணி செய்து வருபவர்கட்கு அவ்விழாவில் 'அருட்பணி அண்ணல்' பட்டம் வழங்கப் பெறுகிறது. இம்மடத்தின் நிருவாகத்தை, 'பாதரக்குடி நகர்த்தார் அறக்கட்டளை' நடத்தி வருகிறது.

Koviloor Digital Library

பாலசுப்பிரமணியன், லெ., (11-6-1952)

இரணிக்கோவில்
பள்ளத்தூர்
வங்கி ஊழியர் சங்க அமைப்பாளர்

வைரம் இலட்சுமணன் செட்டியார் – சிவகாமி ஆச்சியின் மகன். வைரம் நாடகசபை அருணாசலம் செட்டியாரின் பேரன்.

1972 இல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வேலையில் அமர்ந்தது முதல் வங்கி ஊழியர் சங்க நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். 1974 இல் கிளைச் செயலாளராகவும், 1976இல் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அனைத்திந்திய ஓவர்சீஸ் வங்கி ஊழியர் சம்மேளனத்தின் (AIOBEU) பொருளாளராக 1978இலும் துணைப் பொதுச் செயலாளராக 1980இலும் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1986இல் செயலராகவும் 1990இல் துணைத்தலைவராகவும் 1991இல் தலைவராகவும் உயர்பொறுப்புக்களை ஏற்றார். 1994ஆம் ஆண்டு தேசிய வங்கி ஊழியர் கூட்டமைப்பு சம்மேளனத்தின் (NCBE) தலைவரானார்.

13 இலட்சம் வங்கி ஊழியர்களின் சார்பாக ஊதியப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் உயர்நிலைக் குழுவில் உறுப்பினர். வங்கி ஊழியர் சம்மேளன நடவடிக்கை தொடர்பாக 3 மாதப் பயிற்சிக்கு ஆஸ்திரேலியாவிற்குச் சென்று வந்தவர். தொழிற் சங்கம் தொடர்பாக இலங்கை, ஹாங்காங், சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகட்குச் சென்று வந்துள்ளார்.

பிள்ளை கூட்டுதல்

உ. ராம. மெ. சுப. சேவு. அ. என்று தொடர்ந்து தலைமுறை விளக்கம் தோன்ற விலாசம் எழுதும் இயல்புடையவர்கள் நகரத்தார். அடுக்கிவரும் விலாசம் வாரிசு தொடர வேண்டும் என்ற எண்ணத்தையும் காட்டுகிறது. ஆண்மக்களைப் பெறாதவர்கள் தமக்கு வாரிசு வேண்டும் என்று தம்முடைய கோவில் சார்ந்த அதிலும் தம்முடைய பிரிவையே சார்ந்த, ஒரு குடும்பத்தில் பிறந்த ஆண்மகனைத் தமக்கு மகனாகப் பிள்ளை கூட்டிக் கொள்வர். இவ்வழக்கம் பிள்ளை கூட்டுதல் எனப்படும். பெண்மக்கள் இருந்தாலும் ஆண் மகன் ஒருவன் வேண்டும் எனப் பிள்ளை கூட்டிக் கொள்வார்கள்.

பிள்ளையில்லாத வீட்டில் ஆண்மகனைப் பிள்ளை கூட்டிக் கொள்ளும் வழக்கம் பிற சமூகத்தில் இருந்தாலும் அதற்கும் நகரத்தார் சமூகத்தின் சுவீகாரத்திற்கும் அடிப்படை வேறுபாடு உண்டு. பிற சமூகத்தில் சகோதரி மகனைக் கூடப் பிள்ளையாகக் கூட்டிக் கொள்வார்கள். எந்தவித உறவுமுறையும் இல்லாதவரையும் பிள்ளை கூட்டிக் கொள்வார்கள். பெண்களைக் கூடப் பிள்ளை கூட்டிக் கொள்வதுண்டு. ஆனால் நகரத்தார் சமூகத்தில் எப்பொழுதுமே சகோதர உறவு எனக் கருதப்படும் தங்கள் கோவிலில் தங்கள் உட்பிரிவைச் சேர்ந்த ஆண்மகனையே பிள்ளையாகக் கூட்டிக் கொள்வார்கள். பெண்களைச் சுவீகாரம் செய்துகொள்ளும் வழக்கம் நகரத்தாரிடம் இல்லை.

பிள்ளை கூட்டுதல் புதுமை போன்ற விழாவாக நடத்தப் பெறும். இதைச் சுவீகாரப் புதுமை என்றும் கூறுவதுண்டு. உள்ளூரிலோ வெளியூரிலோ பிள்ளை கூட்டினால் அந்தப் பிள்ளையைப் பிள்ளை கூட்டிக் கொள்பவர் ஊரில் பொதுக்கோவிலில் வைத்து அல்லது பங்காளி வீட்டில் வைத்து அங்கு பிள்ளை கூட்டிக் கொள்பவர் உற்றார் உறவினர் பங்காளிகளுடன் வந்து அழைத்துச் செல்வர். சரிகை வேட்டி, சட்டை, சங்கிலி, மோதிரம் முதலியவற்றைக் கூட்டிக் கொள்ளும் தகப்பனார் கொண்டு வந்து பிள்ளையை அணிந்து கொள்ளச் சொல்லி அழைத்துச் செல்வர். வீட்டுக்குச் சென்றதும் மங்கலச் சங்கு ஊதி, சிலேட்டு விளக்கு வைத்து ஆரத்தி எடுத்து அப்பத்தாள் அல்லது அத்தை பிள்ளையை வரவேற்பார்கள். பிள்ளை வருபவன் வீட்டுக்குள் வந்ததும், கூட்டிக் கொள்ளும் தாயின் பாதங்களைப் பாலால் கழுவி வணங்குவான். பின் தாய் பால் குவளையைக் கொடுப்பாள்; அதன் பின்பே தாய் – மகன் உறவு உறுதிப்படும். பிள்ளையின் பிறந்த இடத்து அம்மானாகிய மாமக்காரர் கூட்டிக் கொண்ட ஆத்தாவின் சகோதரரான மாமக்காரரிடம் பிள்ளையைக் கையைப் பிடித்துக் கொடுத்து ஒப்படைப்பார். புதுமையைப் போலவே ஆயாவீட்டார் மாமப்பணம் எழுதிக் கூடுவார்கள். ஆயாவீட்டிலிருந்து வைரத்தோடு முதலியவை பிள்ளைக்குத் தரப்படுவதும் உண்டு.

பிள்ளை வந்த பிறகு அந்த வீட்டிற்கேற்ற மரபுப்பெயர் பிள்ளைக்குச் சூட்டப்பெறும். கவிஞர் கண்ணதாசனுக்குப் பெற்றோர் இட்டபெயர் முத்தையா. பிள்ளை வந்த இடத்தில் அவர் பெயர் நாராயணன். பொற்கிழிக் கவிஞர். சோமசுந்தரத்திற்கு இப்பெயர் பிள்ளை வந்த இடத்தில் இட்ட பெயராகும். புதுவயலில் அவர் பிறந்த போது இட்டபெயர் வைரவன். பிள்ளையைப் பெற்ற வீட்டாரின் பங்காளிகளில்

Koviloor Digital Library

மூத்தோரும், கூட்டிக் கொண்ட பெற்றோரின் பங்காளிகளில் மூத்தோரும் இருந்து பிள்ளை கூட்டிக் கொண்ட முறி எழுதுவார்கள். ஈரிடத்துத் தந்தையரும் இருவீட்டுப் பங்காளிகளில் பெரியோரும் அதில் கைச்சாத்து இடுவர். இது பிள்ளை எழுதிக்கொள்ளுதல் என்று நடை முறையில் வழங்கப்படுகிறது. இந்நாளில் பிள்ளை கூட்டிக் கொண்டமைக்கான ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப் படுகிறது.

பிள்ளை கூட்டிக் கொள்ளுவதற்கு எழுதிக் கொள்ளும் முறி:

ஆங்கீரச வருடம் ஆவணி மாதம் 17ஆம் தேதி கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான ராசநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையான் ஆத்தங்குடி ஆ.ந.சிவ. சொக்கலிங்க செட்டி சுந்தரேசருக்குக் கோனாபட்டு பழ.சிவ. சிவலிங்கம் செட்டியார் மகன் ஆறுமுகம் என்ற பழனியப்பனை சுவீகாரப் புத்திரனாகக் கூட்டிக் கொண்டதினாலே மேற்படி சுந்தரேசனின் தேட்டு, ஆட்டு, நீட்டுப் பெட்டி, தெய்வ ஆதாயம், ஆஸ்தி பூஸ்தி சகலமும், மேற்படி மனைவி மீனாட்சியின் ஸ்ரீதனம் சீர்முறை நகைப்பணம் நகையாவற்றையும், மேற்படி பழனியப்பன் அடைந்து அனுபவித்துக் கொள்ளுகிறது. பள்ளத்தூர் சோலையப்பசெட்டி நாராயணன் வகையார் தாய் மாமனாக இருந்து மாமச்சடங்கு செய்து வருகிறது. இப்படிக்கு நகரத்தார் சொல்ல இது எழுதியது, கல்வாச நாட்டில் இளையாற்றக்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான ராசநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையான் ராமனாதன் செட்டி சிதம்பரம்.

பிள்ளை கூட்டிக் கொள்பவர் கையெழுத்து

பிள்ளை விடுபவர் கையெழுத்து ____________

பிள்ளை கூட்டிக் கொள்ளும் தாய்மாமன் கையெழுத்து ____________

பிள்ளை பிறந்த இடத்துத் தாய்மாமன் கையெழுத்து ____________

(ஆட்டு என்பது பூர்வீகச் சொத்துக்கள்

தேட்டு என்பது தான் சொந்தமாய்ச் சம்பாத்தியம் செய்தது.

நீட்டுப்பெட்டி என்பது முன்னோர்களுக்குப் படைக்கும் பேழை.

ஆஸ்திபூஸ்தி – நகைகள், ரொக்கம், நிலங்கள்)

பிள்ளையார் நோன்பு

தமிழ்நாட்டில் நகரத்தார் மட்டுமே கடைப்பிடித்துக் கொண்டாடும் விழா பிள்ளையார் நோன்பு. திருக்கார்த்திகையிலிருந்து 21ஆவது நாளில் சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் சேரும் நாளில் பிள்ளையார் நோன்பு கொண்டாடுவது வழக்கம். இழை எடுத்துக் கொள்ளுதல்தான் இதில் முதன்மை வாய்ந்த சடங்காகும்.

நெற்கதிர், ஆவாரம்பூ, கண்ணுப்பூளைப் பூ ஆகியவற்றைப் பந்தாகக் கட்டி வாயில் நிலையில் செருகிவைப்பதும் சாமி வீட்டுக்குள் வைத்து வணங்குவதும் இந்நோன்பின் தொடக்கமாக இப்பொழுது அமைந்துள்ளது. சாமி வீட்டில் சுவரில் தும்புபிடித்துக் கோலம் இடுவார்கள். சிறிய வெள்ளிப்பிள்ளையார் அல்லது பிடித்து வைத்த பிள்ளையார் வீற்றிருப்பார். வழக்கமாக ஏற்றும் வெள்ளிக் குத்து விளக்கோடு அகன்ற சிட்டி விளக்கு ஒன்றை நெய் ஊற்றிப் பிள்ளையார் நோன்பு விளக்காக ஏற்றுவார்கள். தேங்குழல் முறுக்கு மாவுருண்டை மணகோலம் முதலிய பலகாரங்களோடு முக்கியமாக எள்ளுருண்டை கடலை உருண்டை விநாயகர் முன் வைக்கப்படும். இவற்றோடு சுட்டு வைக்கும் பலகாரங்களாகிய பணியாரம் வடை போன்றவையும் இருக்கும். இவற்றுள் முக்கியமாகக் கருப்பட்டிப் பணியாரம் சுட்டு வைப்பார்கள். வெல்லப்பாகு சேர்த்த மாவில் இழை எடுக்கக் கெட்டியாக வைத்துக் கொண்டு, பிறகு மாவில் தண்ணீர் விட்டுக் கரைத்துக் கருப்பட்டிப் பணியாரம் சுடுவார்கள். ஆகவே இதை எச்சில் படுத்தக்கூடாது எனக் கருப்பட்டிப் பணியாரம் மட்டும் சாமி கும்பிடுமுன் பிள்ளைகளுக்குக்கூடச் சாப்பிடக் கொடுப்ப தில்லை. ஆனால் வடை பணியாரம் தரத் தடைசொல்வதில்லை.

21 இழைகள் கொண்ட நூலைச் சிறுசிறு துண்டுகளாக அளவாக நறுக்கி வைப்பார்கள். கோடி வேட்டி அல்லது துண்டிலிருந்து இழைநூல் எடுக்கப்படுவது வழக்கம். நகரப் பிள்ளையார் கோவில்களில் பங்காளிகளுக்கு இழைநூல் வழங்குவதும் உண்டு. வெல்லப்பாகு அல்லது திரட்டுப்பால் பாகில் சிறிது நெய் சேர்த்துக் கூம்பு போன்ற வடிவில் பிடித்து வைத்து அதில் திரிபோல நறுக்கிவைத்த நூல்இழை நடுவில் மேல்எழுந்து நிற்கும் வண்ணம் பிடிப்பார்கள். குடும்பத்தினர் எண்ணிக்கைக்கேற்ப 5,7 என இழை பிடித்து வைப்பதுண்டு. ஒற்றைப்படை எண்ணிக்கையில்தான் பிடித்து வைப்பது வழக்கம். குடும்பத் தலைவர் தடுக்கில் வந்து அமர்வார். வறுத்து வைக்கப்பட்ட எள்ளுப்பொரி நெல்லுப்பொரி ஆகியவற்றைத் தூவிப்

Koviloor Digital Library

பிள்ளையாரை வழிபடுவார். பிடித்து வைத்த இழையைப் பிள்ளையார் விளக்கில் ஏற்றித் தீப ஒளி அணையாமல் வாயில் போட்டுக் கொள்வார். இது பிள்ளையார் இழையாகும். பிறகு குடும்பத்தலைவர் தனக்குரிய இழையை எடுத்துக் கொள்வார். மற்றவர்களுக்கும் கூம்பு வடிவமான இழையை நெய்தோய்ந்த திரியை விளக்கில் காட்டி ஏற்றிக் கொடுப்பார். குடும்ப உறுப்பினர்கள் தலைவரை விழுந்து வணங்கி இழையைப் பெற்றுக் கொண்டு சுடர் அணையாமல் வாயில் போட்டுக் கொள்வர். 'ஒளி வடிவான இறைவனை நமக்குள்ளே எழுந்தருளச் செய்யும் செயல்' என இதற்குத் தத்துவ விளக்கம் அளிப்பர். இழை எடுத்துக்கொள்ளும் போது பெண்கள் மங்கலச் சங்கு ஊதுவர்.

முன்னாட்களில் முருகனுக்குரிய கார்த்திகைத் திருநாளின் மறுநாள் நோன்பு தொடங்கி மார்கழி வளர்பிறை சஷ்டி வரை இவ்விரதத்தை மேற்கொண்டு வந்தனர். முதல் 20 நாட்கள் ஒருவேளை மட்டுமே பலகாரம் சாப்பிட்டு நோன்பிருந்து 21ஆம் நாள் சஷ்டியன்று முழுப்பட்டினி நோன்பிருந்து விநாயகரை வழிபட்டு விரதத்தை நிறைவு செய்வது வழக்கமாக இருந்தது. விரத நாட்களைக் கணக்கிடும் வகையில் நாளுக்கு ஒரு நூல் இழை வீதம் 21 இழைகளை எண்ணி எடுத்து வைத்துள்ளனர். விரத நிறைவைக் கொண்டாட நிறையப் பலகாரங்கள் செய்தனர். இப்போது நோன்பு விரதம் நின்று விட்டது. நிறையப் பலகாரம் செய்துவைத்து வழிபட்டு இழை எடுத்துக் கொண்டபின்பு பலகாரம் சாப்பிடுவது நடைமுறையில் உள்ளது.

முன்னாட்களில் வளவுக்குள் பெரியவர்கள், பங்காளிப் பெரியவர்கள் வீடு வீடாக வந்து எல்லோர் வீட்டிலும் இழையெடுத்துக் கொடுக்கும் பழக்கம் இருந்ததாம். இப்போது செட்டிநாட்டுக்கு வெளியில் வாழும் நகரத்தார்கள் நகரத்தார் சங்கத்தில் கூடி அங்கு பெரியவர்கள் இழை எடுத்துக் கொடுக்க வாங்கிக் கொண்டு பிள்ளையார் நோன்பு கொண்டாடுகிறார்கள். பிள்ளையார் நோன்புப் பலகாரம் சங்கத்தில் பொதுவில் செய்து எல்லோரும் சாப்பிடு கின்றார்கள். செட்டிநாட்டிற்குள்ளும் தெற்கு வட்டகையைச் சேர்ந்த பல ஊர்களில் நகரத்தார்கள் கோவிலில் கூடிப் பொதுவாக இழையெடுத்துக் கொண்டு பிள்ளையார் நோன்பைக் கொண்டாடுகிறார்கள். வயிரவன் பட்டி நகர விடுதியில் ஆண்டுதோறும் பிள்ளையார் நோன்பு விழா சிறப்பாக நடைபெறுகிறது. பிற கோவில் நகரத்தாரும் அங்கு வந்து இழைஎடுத்துக் கொண்டு பலகாரம் சாப்பிட்டுப் பிள்ளையார் நோன்பு கொண்டாடு கின்றனர். கோவை நகரத்தார் சங்கம் கோவை வாழ் நகரத்தார்களுக்கு ஆவாரம்பூ கட்டிக் கொடுக்கும் தொண்டினைச் செய்து வருகிறது.

நகரத்தார் சமூகப் பண்பாட்டில் பிள்ளையார் நோன்பு அவர்களின் தனித்தன்மையைக் காட்டும் விழா ஆகும்

பிள்ளையார்பட்டி

ஒன்பது நகரக்கோவில்களில் ஒன்றான பிள்ளையார்பட்டி சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து 14 கி.மீ. தொலைவில் குன்றக்குடி வழியாக மதுரை செல்லும் சாலையில் அமைந்துள்ளது.

எக்காட்டூர், திருவீங்கைக்குடி, மருதங்குடி இராசநாராயணபுரம் என்பவை இவ்வூரின் பழைய பெயர்கள். குன்றில் குடையப்பட்ட குடைவரைக் கோவிலில் அமர்ந்து அருள் செய்யும் கற்பகப் பிள்ளையார் வழிபாடு இங்கு சிறப்புற்றதால் இது பிள்ளையார்பட்டி என வழங்கப்படுகிறது. இளையாத்தங்குடியைச் சேர்ந்த திருவேட்பூருடையார் என்ற சகோதரர்களில் இளையவர் வழியினர் இக்கோவிலைத் தங்களுக்குரிய தனிக்கோவிலாக 13ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்திக் கொண்டனர். மூத்தவர் வழியினரான இரணிக்கோவிலாரை இவர்கள் சகோதர உறவுடையவராக எண்ணு வதால் அவர்களோடு திருமணசம்பந்தம் செய்து கொள்வதில்லை. இக்கோவிலார் இசைபிடிமானத் தில் ''கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராசநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்'' என்று தம்மைக் குறிப்பிடுவர்.

இக்கோவில் நகரத்தார்கள் 1. அமராவதிபுதூர் 2. அரிமழம் 3. அலவாக்கோட்டை 4. க. அளகாபுரி 5. பி. அளகாபுரி 6. ஆத்தங்குடி 7. ஆவினிப்பட்டி 8. இராயவரம் 9. கொ. இலட்சுமிபுரம் 10. உலகம்பட்டி 11. கடியாபட்டி 12. கண்டரமாணிக்கம் 13. கண்டவராயன்பட்டி 14. கண்டனூர் 15. கல்லல் 16. கல்லுப்பட்டி 17. காரைக்குடி 18. கீழச்சிவல்பட்டி 19. குருவிக்கொண்டான்பட்டி 20. குழிபிறை 21. கொத்தமங்கலம் 22. கோட்டையூர் 23. கோனாபட்டு 24. சண்முகநாதபுரம் 25. சிறாவயல் 26. சிறுகூடற்பட்டி 27. சொக்கநாதபுரம் 28. சோழபுரம் 29. தேவகோட்டை 30. நற்சாந்துபட்டி 31. நாச்சியாபுரம் 32. நாட்டரசன் கோட்டை 33. நெற்குப்பை 34. பட்டமங்கலம் 35. பாகனேரி 36. பூலாங்குறிச்சி 37. மிதிலைப்பட்டி 38. ஆ.

Koviloor Digital Library

முத்துப்பட்டணம் 39. மேலைச்சிவபுரி 40. வலையபட்டி 41.வேகுப்பட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்தம் 3504 புள்ளிகள்.

பிற நகரக்கோவில்களைப் போல் அல்லாமல் இத்திருக்கோவிலில் 3 மூலவர்கள் அமர்ந்தருள் செய்யும் சிறப்பு உண்டு. இங்கு வழிபடப்பெறும் பெருமான்கள்:

தேசிகவிநாயகப் பிள்ளையார் என்ற கற்பகப்பிள்ளையார்

திருவீசர்

மருதீசர்

இறைவியர் : சிவகாமி

வாடாமலர் மங்கை

ஆ. முத்துப்பட்டணம் ஆகிய ஊர்களில் ஊருக்கு ஒரு குடும்பத்தினர் என 20 குடும்பத்தினர் 16 குழுவாக அமைக்கப்பட்டு ஆண்டுக்கு இரு குழுவினர் வீதம் நடப்புக் காரியக்காரர்களாகத் திருக்கோவில் நிருவாகத்தைக் கவனித்து வருகின்றனர்.

இக்கோவிலில் பதினொரு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அக்கல்வெட்டுக்கள் அனைத்தும் பிற்காலப் பாண்டியர் காலத்தவை. இவை இவ்வூரைக் கேரளசிங்க வளநாட்டுக் கீழ்க்குண்டாற்றுத் திருவீங்கைக்குடி என்றும் கேரளசிங்க வளநாட்டுக் கீழ்க்குண்டாற்று மருதங்குடி என்றும் மருதங்குடியான இராச நாராயணபுரம் என்றும் குறிப்பிடுகின்றன.



பிள்ளையார்பட்டிக் கோவில்

இத்திருக்கோவிலுக்கு 21-1-1899, 10-2-1928, 12-6-1933, 10-2-1951, 10-9-1976, 8-11-1992 ஆகிய நாட்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. இங்கு ஆண்களுக்கென ஒரு நகர விடுதியும் பெண் களுக்கென ஒரு நகரவிடுதியும் பிள்ளையார் சன்னதிக்கு எதிரே ஊருணியும் உள்ளன.

காரைக்குடியில் 8 குடும்பத்தினர், வலைய பட்டியில் 2 குடும்பத்தினர், அமராவதிபுதூர், அரிமழம், கண்டவராயன்பட்டி, கண்டனூர், குருவிக்கொண்டான்பட்டி, கோனாபட்டு, தேவகோட்டை, நற்சாந்துபட்டி, பூலாங்குறிச்சி, பிள்ளையாரைத் தேசி விநாயகப் பிள்ளையார் என்று குறிப்பிடுகின்றன. குடைவரைக் கோவில் சிவபெருமானைத் திருவீங்கைக்குடி மகாதேவர், திருவீங்கைக்குடி நாயனார், மருதங்குடியான இராசநாராயணபுரத்து உடையார், திருவீங்கைச் சுரமுடைய நாயனார் என்று குறிப்பிடுகின்றன. தனிக் கற்றளிக் கோவில் சிவபெருமானைத் திருமருதங்குடி நாயனார், மருதங்குடி நாயனார் என்று குறிப்பிடுகின்றன. இப்பெயர்களே மக்களால் திருவீசர், மருதீசர் என வழங்கப்படுகின்றன. கற்பகப் பிள்ளையாரைக் குடைவரைக் கோவிலில் புடைச் சிற்பமாக உருவாக்கிய கல்தச்சர் பற்றிய குறிப்பு

Koviloor Digital Library

குடைவரைக் கோவிலினுள் மேல்புறச் சுவரில் காணப்படுகிறது. இக்கல்வெட்டில் காணப்படும் எழுத்துக்களை வைத்து இது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டிருக்கலாம் எனக் கல்வெட்டறிஞர்கள் கருதுகின்றனர்.

இங்கு முன்னரே இருந்த குடைவரைக் கோவிலை இணைத்து நகரத்தார் கற்றளித் திருப்பணி செய்துள்ளனர். இரு கோவில்கள் இணைந்தமையால் இங்கு இரு இறைவரும் இரு இறைவியரும் கற்பகப் பிள்ளையாரும் முதன்மைத் தெய்வங்களாக வழிபடப் பெறுகின்றனர். குடைவரைக் கோவிலினுள் கிழக்கு நோக்கித் திருவீசர் திருவுருவும், கற்றளிக்கோவிலின் வடகிழக்குப் பகுதியில் தெற்குநோக்கிச் சிவகாமி அம்மன் கருவறையும் இராசகோபுரத்தை நோக்கும் வண்ணம் கிழக்கு முகமாக மருதீசர் கருவறையும் அருகில் தெற்குநோக்கி வாடாமலர் மங்கைக் கருவறையும் அமைந்துள்ளன.

இங்குள்ள பிள்ளையார் சிற்பம் மிக அரிய சிற்பமாகும். இரண்டே கைகளை உடைய பிள்ளையார் சிற்பம் இங்கும் ஆப்கானிஸ்தானத் திலும் தவிர உலகில் வேறெங்கும் இல்லை என்பர். வடக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் உள்ள பிள்ளையார் தம் வலக்கையில் சிவலிங்கத்தை ஏந்திப் பூசை செய்யும் அமைப்பும் அவரது தும்பிக்கை வலப்புறமாக வளைந் திருப்பதும் இச்சிற்பத்தின் தனித்தன்மைகளாகும். இங்குள்ள நடராசர் சிற்பம் ஐம்பொன்னால் ஆகியது. இந்நடராசரின் உடுக்கையில் தட்டினால் உடுக்கை ஒலியே உண்டாவது வியப்புக்குரியது.

மேற்குப் பிரகாரத்தில் இலிங்கவடிவில் செஞ்சடேச்சுவரர் திருவுருவும் அதற்கு எதிரே நந்தியும் பலிபீடமும் காணப்படுகின்றன. செஞ்சடேச்சுவரரை அடுத்து நின்ற திருக்கோலத்தில் சௌந்தர நாயகி திருவுருவும் அதன் எதிரே நந்தியும் காணப்படுகின்றன. இவை இப்பகுதியில் இருந்து மறைந்த பழைய சிவாலயத்திற்கு உரியனவாக இருத்தல் வேண்டும். இக்கோவிலின் தலவிருட்சமாகிய பழைய மருதமரத்தின் அடிப்பகுதி மேல்திருச்சுற்றின் வடபுறத்தில் பேணிவைக்கப் பெற்று வழிபடப் பெறுகிறது.

அலங்கார மண்டபச் சுவரில் வரையப் பெற்றுள்ள விநாயகர் ஓவியம் வியத்தகு சிறப்புடையது. அந்த ஓவியத்தின் எதிரே வலப்புறமோ இடப்புறமோ எங்கு நின்று பார்த்தாலும் விநாயகர் தலையைத் திருப்பாது கண்களை மட்டுமே திருப்பி நம்மையே பார்ப்பது போலத் தெரியும் வகையில் ஓவியர் வரைந்துள்ளார்.

இங்கு நடைபெறும் திருவிழாக்களில் மிகப் பெரியது சதுர்த்தி விழா ஆகும். காப்புக் கட்டிக் கொடியேற்றம் செய்து பத்துநாள் விழாவாக நடைபெறும் இது ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தியன்று நிறைவெய்தும். சதுர்த்திவிரதம் பிடித்த நகரத்தார்கள் விரதம் நிறுத்துவதற்கு இவ்விழாவின் போது இங்கு வருவர். நகரக் கோவில்களுள் நாள்தோறும் அதிக எண்ணிக்கை யில் மக்கள் வழிபடும் கோவில் இதுவேயாகும்.

பிள்ளையார்பட்டியில் சைவ ஆகமங்களையும் வேதங்களையும் அந்தணச் சிறுவர்களுக்குக் கற்பிக்கும் பள்ளி ஒன்று சிறப்பாக இயங்கி வருகிறது. இக்கோவில் சார்ந்தோர் இங்கு வந்து திருமணம் செய்தால் கோவில் நிருவாகம் அவர்களுக்கு ரூபாய் 2500 அன்பளிப்பாக வழங்குவதோடு திருமண விருந்துச் செலவினையும் ஏற்றுக் கொள்கிறது. திருச்சி நகரத்தார் சங்கம் இங்குதான் கூட்டுத் திருமணங்களைக் கோவில் நிருவாகத்தின் உதவியோடு தொடர்ந்து நடத்தி வருகின்றது.

கற்பகப் பிள்ளையார் படம் ஒட்டும் படமாகவும் சிறிய அளவு புகைப்படமாகவும் இந்தியா எங்கும் பரவியுள்ளது. தமிழக அரசு இக்கோவிலைச் சுற்றுலாத் தலமாக அறிவித் துள்ளது. கவியரசர் கண்ணதாசன் எழுதியுள்ள

அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெலாம் பெருக வேண்டின்
கற்பக மூர்த்தி தெய்வக்
களஞ்சியத் திருக்கை சென்று
பொற்பதம் பணிந்து பாரீர்
பொய்யில்லை கண்ட உண்மை

என்ற பாடல் கற்பகப் பிள்ளையாரின் பெருமையைக் கூறும் காலத்தால் அழியாத பாடலாகும்.

புதுப்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. பொன்னமராவதியை ஒட்டி இருப்பதால் பொன் புதுப்பட்டி என்றும் அழைக்கப்படுகிறது. காரைக்குடியிலிருந்து நெற்குப்பை பொன் னமராவதி வழியாக 44 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, இலுப்பைக்குடி, வைரவன் கோவில் ஆகிய 3 கோவில்களைச் சேர்ந்த 440 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், பொன்னமராவதித் தேர்வுநிலை ஊராட்சியில் புதுப்பட்டியும் இணைந்துள்ளது.

Koviloor Digital Library

ஸ்ரீ பூலோகநாதர் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மை திருக்கோவில் நகரச் சிவன் கோவிலாகும். 11-2-1951 அன்று முதல்குடமுழுக்கு விழா நடைபெற்றது. முன்புற மேல்தளம் அமைக்கப்பட்டு 5-2-1968 அன்றும், சுவாமி ராஜகோபுரமும் அம்மன் வாயில் கோபுரமும் அமைக்கப்பட்டு 29-4-82 அன்றும் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றன. ஸ்ரீ நிவாசப் பெருமாளுக்கும் பூதேவி ஸ்ரீதேவி அம்மையாருக்கும் சிவன்கோவிலில் சன்னதி அமைந்துள்ளது. ஊர் நடுவே தேரோடும் சாலையில் 100 ஆண்டுப் பழமை வாய்ந்த நகரத்தார் மடம் அமைந்துள்ளது.

வைரவன் கோவிலைச் சேர்ந்த மு.பெ.மு. சே. சேதுராமன் செட்டியார், மு.பெ.மெ. மெய்யப்ப செட்டியார், மெ.மு. முத்துக்கருப்பஞ் செட்டியார் குழந்தையன் செட்டியார், மெ.சிவ. முத்துக்கருப்பஞ்செட்டியார் ஆகியோரின் முன்னோர்கள் மலையா ஊருணியும் அதன்கரையில் கற்பகமூர்த்திப் பிள்ளையார் கோவிலும் சுப்பையா வெற்றிவேலாயுத சுவாமி கோவிலும், அமைத்துள்ளார்கள். ஆடிமாதம் சுப்பையா வெற்றிவேலாயுத சுவாமிக்கு நகரத்தார்கள் மகேஸ்வர பூசை செய்து வருகின்றனர். வீரஞ்செட்டி ஊருணிப் பிள்ளையார் கோவில், மடம், தருமக்கிணறு ஆகியவை இளையாத்தங்குடியாரான வீரப்பசெட்டியார், அவர்தம்பி காளியப்ப செட்டியார் ஆகியோரது தருமமாகும். புதுப்பட்டியில் உள்ள உடையபிராட்டி அம்மன் கோவில் இளையாத்தங்குடியாரான ப. வீர. கா. வீர. கா. கண்ணம்மை ஆச்சி செய்து வைத்த திருப்பணியாகும். காளியப்ப செட்டி சிதம்பரஞ் செட்டியார் வகையார், வீரப்ப செட்டி சுப்பிரமணியன் செட்டி வகையார், கருப்பஞ்செட்டி பழநியப்ப செட்டியார் வகையாரால் மாம்பழத்தான் ஊருணியும் பிள்ளையார் கோவிலும் மடமும் அமைக்கப் பெற்றுள்ளன. மு.பழ. வகைப் பங்காளிகள் சேங்கை ஊருணியைப் புதுப்பித்துக் கட்டியுள்ளனர். 100 வருடங்களுக்கு மேல் குடிதண்ணீர் ஊருணியாகப் பயன்படும் மெய்யஞ் செட்டி ஊருணி புதுப்பட்டி மெய்யன் செட்டியார் வகையாரால் உண்டாக்கப் பெற்றது.

நாக. இராம. இராமசாமி செட்டியாரால் இடமும் கட்டிடமும் நன்கொடையாக வழங்கப் பெற்ற நாகப்பசெட்டியார் நினைவு ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி அரசு நிருவாகத்தில் நடைபெற்று வருகிறது. வீர. காசிவிசுவநாதன் செட்டியார், நா.கும. பழநியப்பன் ஆகியோர் இ.தேராவில் பணிபுரிந்தவராவர்.

குப.சுப.மு.இராம. குடும்பத்தினரும், மு.பெ.மு, மு.பெ.மு.சே ஆகிய இரு குடும்பத்தார் சேர்ந்தும் இராமாயணம் படித்து வருகின்றனர்.

பொன்னமராவதிப் பெருமாள் கோவிலுக்கு ப. அ. அ. அண்ணாமலை செட்டியாரும் பொன்னமராவதிச் சிவன்கோவிலுக்குப் ப. இராம. வகையினரும் திருப்பணி செய்துள்ளனர். மூலங்குடிப் பெருமாள் கோவில் ப.ராம. ராமஞ்செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்று ப.ராம.சுப. முத்தையா செட்டியாரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. மூலங்குடிப் பொய் சொல்லா மெய்யர்கோவில், மூழிமலையான் சுப்பிரமணியர் கோவில் மடம் ஆகியவை குழ.மெ. வகையினர் தருமமாகும். சிக.மெ. சின்னக் கருப்பஞ் செட்டியார் சி.க.சுப. வகையினர் தேனிமலையில் கார்த்திகைமடம் அமைத்துள்ளனர்.

மு.பழ. வகையினர் தாங்கள் அமைத்த ஊருணிக் கரையில் பழநியப்பா பூங்கா, வானொலி அறை ஆகியவை அமைத்து வானொலிப் பெட்டியும் வாங்கி வைத்துத் தொண்டு செய்து வந்தனர். இப்போது இவை ஊராட்சி நிருவாகத்தில் உள்ளன. சிவ.மு. முத்தையா செட்டியாரால் 'கல்யாணி பெண்கள் தையல் பயிற்சி நிலையம்' நிறுவப்பட்டு இலவசமாகப் பெண்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.

புதுமை

நகரத்தார் வீடுகளில் பிறந்த முதல் ஆண்குழந்தை, முதல் பெண்குழந்தை ஆகியோரைக் கொண்டாடிய விழா புதுமையாகும். காப்புக்கட்டுப் புதுமை என்றும் இது அழைக்கப்படும். முதற் குழந்தை பிறந்த ஓராண்டில் புதுமைவிழா கொண்டாடப்பெறும். சில வீடுகளில் முதல் பெண் குழந்தை அடுத்துப் பிறந்த முதல் ஆண் குழந்தை இருவர்க்கும் சேர்த்துக் கொண்டாடப்பட்டபோது முதல் குழந்தைக்கு நான்கு ஆண்டுகள் அகவை நிறைந்திருக்கும். வீட்டில் புதிதாகப் பிறந்த குழந்தையை ஊருக்குக் காட்டி மகிழும் விழா ஆகையால் புதுமை எனப் பெயர் பெற்றிருக்கலாம். புதுமை கொண்டாடிய குழந்தைக்கு நான்கைந்து நாளில் முடி இறக்குவதும், விழாநாளில் அடையாளமாக ஒரு முடியை எடுப்பதும் வழக்கமாக இருந்தது. குழந்தைக்கு மாராப்புக் கட்டி மரவையில் வைத்துச் சுற்றுவதுதான் முக்கியமான சடங்காகும். மஞ்சள் நூலில் மார்பின் குறுக்கே கட்டுவதும் பின்னால் தங்கச் சங்கிலி போடுவதும் மாராப்புக் கட்டுதல் ஆகும். குழந்தையைத் திரைமறைவில்

Koviloor Digital Library

வைத்து அலங்காரம் செய்து மாராப்புக் கட்டி வெளியே நடுவாசலுக்குக் கொண்டு வந்து குழந்தையின் அத்தைமார்கள் குழந்தையை மரவையில் வைத்துச் சுற்றுவார்கள். புதுமைக்கு ரொட்டி மிட்டாய்ப் பை போட்டு வந்தவர்களுக்கெல்லாம் கொடுப்பது வழக்கம். செல்வர் வீட்டில் சடங்கு செய்த அத்தைமாருக்கு வெள்ளிக்கடகம் செய்து கொடுப்பதுண்டு. இப்பொழுது புதுமை விழா கொண்டாடப் பெறுவதில்லை.

புதுவயல்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி – அறந்தாங்கிச் சாலையில் காரைக்குடியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, சூரக்குடி, இரணிக்கோவில் ஆகிய ஆறு கோவில்களைச் சேர்ந்த 585 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பேரூராட்சி மன்றம்.

கைலாச விநாயகர் கோவில் இவ்வூர் நகரத்தார் பொதுக் கோவிலாக அமைந்துள்ளது. இக்கோவிலுக்கு 31–8–1995இல் குடமுழுக்கு விழா நடைபெற்றது. இளையாத்தங்குடி பட்டினசாமி பெ.ப.வி. குடும்பம், வைரவன்கோவில் எ.மு. குடும்பம் இரண்டும் சேர்ந்து அரங்கநாதப் பெருமாள் கோவிலைக் கட்டி நிருவகித்து வருகின்றனர். இரணிக்கோவில் அ.சு.பழ.வீர. இராம. குடும்பத்தார் சுந்தரராசப் பெருமாள் கோவிலைக் கட்டி நிருவகித்து வருகின்றனர். கைலாச விநாயகர் கோவில் ஊருணி இளையாத்தங்குடிப் பட்டினசாமி கரு. வடு. அறநிலையின் நிருவாகத்தில் உள்ளது.

இவ்வூர் நகரத்தார் 24–7–1922 இல் ஸ்ரீ சரஸ்வதி சங்கம் என்ற அமைப்பைத் தொடங்கினர். அதன் சார்பாக 1933 இல் ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை என்னும் பெண்கள் நடுநிலைப்பள்ளி தொடங்கப்பெற்றது. இப்போது இது பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக நகரத்தார் நிருவாகத்தில் இயங்கி வருகிறது. இளையாத்தங்குடிப் பட்டினசாமி வடு.மு. இராம. குடும்பத்தினர் முத்தையா மீனாட்சி ஆங்கில வழித் தொடக்கப் பள்ளியையும் வடு.மு. இராமநாதன் தொடக்கப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளையும் தொடங்கி நிருவகித்து வருகின்றனர்.

இளையாத்தங்குடிப் பெருமருதூருடையார்ப் பங்காளிகள் காரைக்குடிப் பங்காளிகளோடு இணைந்து ஒரு பொதுப்படைப்புப் படைத்து வருகின்றார்கள். வைரவன் கோவில் பெரிய வகுப்புப் பங்காளிகள், வைரவன்கோவில், தெய்வ நாயகர் வகுப்புப் பங்காளிகள், சூரக்குடிப் பங்காளிகள் ஆகியோர் தனித்தனியே தங்கள் பொதுப் படைப்பைப் படைத்து வருகின்றனர்.

இவ்வூரில் நகரத்தார் பொதுவில் எ.மு.சொ. மன்றம் அமைக்கப்பெற்றுள்ளது. இவ்வூர் நகரத்தாருக்குச் சாக்கோட்டையில் இரண்டு மடங்கள் இருக்கின்றன. அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் நால்வர் குருபூசையும் வேதாந்த மடத்தில் வைகாசி அனுஷத்தன்று புதுவயல் வீரப்பசுவாமி குருபூசையும் நடைபெறுகின்றன.

பூலாங்குறிச்சி

மேல வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடி யிலிருந்து திருப்புத்தூர், கண்டவராயன்பட்டி, செவ்வூர் வழியாக 42 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, வைரவன் கோவில், இலுப்பைக்குடி, சூரக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 6 கோவில்களைச் சேர்ந்த 310 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச்சேர்ந்த ஊராட்சி மன்றம்.

புது ஊருணி மேல்கரையில் பெரிய சுப, சின்ன சுப, இராம. ப.வ. வகையாரால் கட்டப்பட்ட பிள்ளையார் கோவில் நகரத்தார் பொதுவில் ஒப்படைக்கப்பட்டு இங்கு சுப்பிரமணியர், அம்பாள், சிவன், துர்க்கை சன்னதிகளுடன் நகரச்சிவன் கோவில் கட்டப்பட்டுள்ளது. வ.செ. வகையாரால் கட்டப்பட்டுள்ள மீனாட்சி சொக்கலிங்கம் கோவில் 70 ஆண்டுப் பழமையானது. 1994இல் குடமுழுக்கு நடைபெற்றது. அறநிலையத்துறைப் பொறுப்பில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலுக்கு நகரத்தார் முயற்சியால் குடமுழுக்கு விழா நடைபெற்றது. வெள்ளையன் செட்டியார் குடும்பத்தாரால் கட்டப்பட்ட பிள்ளையார் கோவிலும் உள்ளது.

ஊரின் வடபுறத்தில் பெரிய சுப. சின்ன சுப, ஆறுபேர் வீட்டைச் சேர்ந்தவர்கள் அமைத்த புது ஊருணியும் தென்புறத்தில் இராம.ப.வ. இராம குடும்பம் பெத்தபெருமாள் குடும்பத்தாரால் அமைக்கப் பெற்ற பழைய ஊருணியும் உள்ளன.

துவார் சென்று கும்பிடும் பிள்ளையார்பட்டிக் கோவில் பங்காளிகள் அடைக்காத்தாள் கோவில் வீட்டில் ஆண்டுக்கொருமுறை படைக்கிறார்கள். இலுப்பைக்குடிக் கோவில் வி.பழ.வி. வீட்டிலும் பிள்ளையார்பட்டிக் கோவில் அரு.சி.ராம.வ. வீட்டிலும் வ.சொ. ஆனந்தி ஆச்சி வீட்டிலும் 8 நாட்கள் இராமாயணம் படிக்கப்படும். மாங்குடியார் வீடு ஆண்டுதோறும் குருபூசை இடுகிறார்கள்.

Koviloor Digital Library

வ.செ. மீனாட்சி ஆச்சி தொடக்கப்பள்ளி வ.செ. குடும்ப நன்கொடையாகும். அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுப.சொ. குடும்பத்தார் கட்டிடம் கட்டித் தந்துள்ளனர். வ.செ. சிவலிங்கம் செட்டியாரிடம் இடமும் பணமும் நன்கொடையாகப் பெற்றுத் தமிழக அரசு வ.செ. சிவலிங்கம் செட்டியார் அரசினர் கலைக் கல்லூரியை அமைத்துள்ளது.

பிள்ளையார்பட்டிக் கோவில் வ.சொ. சொக்கலிங்கம் செட்டியார் – மீனாட்சி ஆச்சி ஆண்கள் மருத்துவமனைக்கு வ.சொ. குடும்பத்தார் கட்டிடம் கட்டிக் கொடுத்துள்ளனர். பெண்கள் மருத்துவமனை பிள்ளையார்பட்டிக் கோவில் வ.இராம. குடும்ப நன்கொடையாகும். வ.செ. சிவலிங்கம் செட்டியார் வீடு, பெரிய சுப வீடு, ராம.ப.ராம.ப. வீடு ஆகியவை கலையழகு மிக்க வீடுகளாகும்.

இவ்வூர்க் கல்வெட்டுக்கள் சில, தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுத் தமிழக வரலாற்றுக்கு உதவியுள்ளமையும் குறிப்பிடற்பாலது.

பெத்தாச்சி செட்டியார், வள்ளல். மு.சித. (1889 - 30-4-1924)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
கல்வி வள்ளல்

சா.ராம.மு. சிதம்பரம் செட்டியார் மகன். ஆண்டிப்பட்டி ஜமீந்தாராக விளங்கிய இவர் தமிழ்ப்பற்று மிக்கவர். தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ்ப்புலவர்க்கும் வாரி வழங்கிய வள்ளல். ஏறத்தாழ 35 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்த இவர் பல லட்ச ரூபாய்களைத் தமிழ்க் கொடையாக அளித்துள்ளார்.

பாண்டித்துரைத்தேவர் நிறுவிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவராக பெத்தாச்சி செட்டியார் 4 ஆண்டுகள் இருந்தார். அச்சங்கத்திற்குப் பல்லாயிரம் ரூபாய் பொருளுதவி செய்துள்ளார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் மூன்றாம் ஆண்டு, பன்னிரண்டாம் ஆண்டு விழாக்களில் இவர் தலைமை தாங்கியுள்ளார். 1923ஆம் ஆண்டில் கரந்தைத் தமிழ்ச் சங்கக் கட்டிடம் கட்ட, நிலம் வாங்க இவ்வள்ளல் பொருளுதவி செய்தார். தம் அரண்மனைப் புலவர் திருஞானசம்பந்தக் கவிராயரைத் தஞ்சையில் தங்கச் செய்து சங்கத்திற்கு வேண்டும் உதவிகளைச் செய்யுமாறு பணித்து அவருக்கான செலவுகளைத் தாமே ஏற்றுக் கொண்டார்; மிகுதியான தமிழ் நூல்களை வழங்கினார். அங்கு அவர் பெயரால் அமைந்த 'பெத்தாச்சி புகழ் நிலையம்' நூலகத்தை வள்ளல் மறைவிற்குப்பின் அவரது தமையனார் மு.சித. முத்தையா செட்டியார் திறந்து வைத்தார். அவ்விழாவில்

"எங்கள் சங்கத்தின் எழிற்புரவலனாய்
ஆயிரம் ஆயிரம் ஆயமாப் பொருளொடு
எண்ணில் அடங்கா தியல் நூலும்
பிறவும் அருளிய அறவுரு வாய
பெத்தாச்சி யாய நற்றமிழ் வள்ளல்"

என இவர் சங்கத்தால் போற்றிப் புகழப்பட்டார்.

பாளையங்கோட்டைச் சைவசபைக்கு பெத்தாச்சி வள்ளல் பெரும்பொருள் உதவி செய்துள்ளார். அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், மகாவித்துவான் மு. இராகவ ஐயங்கார், அரசஞ் சண்முகனாரின் மாணவர் ம. கோபாலகிருஷ்ணய்யர் ஆகியோர்க்குப் பொருளுதவிப் புரந்து வந்தார். இவருடைய கொடையில் பலநூல்கள் பதிப்பிக்கப்பெற்றன. இவருடைய பொருளுதவியால் வெளிவந்த 'சேரன் செங்குட்டுவன்' நூலின் முன்னுரையில் அதன் ஆசிரியர் "இந்நூலின் நாயகனான சேரர் பெருமான் வீற்றிருந்து ஆட்சி புரிந்த வஞ்சிமாநகரின் பரிபாலனத் தலைமை பூண்டுள்ள இப்பிரபுவுக்கு அவனது வரலாற்று நூலை ஆதரிக்கும் உரிமை இயல்பாக உண்டன்றோ" எனக் கருவூரில் வாழ்ந்த பெத்தாச்சிச் செட்டியாரைப் போற்றுகிறார். இவ்வள்ளல் 122 மாணவர்க்குத் திங்கள்தோறும் பொருள் அனுப்பி அவர்கள் கல்வி கற்க உதவி செய்தார். பாண்டிய மன்னர் தமிழ் வளர்த்தது போல் மன்னர் பின்னோராகிய நகரத்தாரில் அள்ளிக் கொடுத்துத் தமிழ் வளர்த்த வள்ளல் பெத்தாச்சி அண்ணல் ஆவார்.

திருச்சி தேசியக் கல்லூரிக்குப் பெருநிதியம் அளித்து அதன் தோற்றத்திற்கும் நிலை பேற்றிற்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தவர்.

சென்னை விவேகானந்தா கல்லூரிக்குப் பெருஞ் செல்வத்தைக் கொடையாகக் கொடுத்து இளையாத தமிழ்ப் புகழை ஈட்டிக் கொண்டவர்.

பெரியகருப்பன், இராம., (7-9-1930 - 10-4-1986)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
காரைக்குடி
கல்லூரி நிறுவுநர்

இராம.வீர. பெரியகருப்பன் செட்டியார்– மீனாட்சி ஆச்சியின் மகன். தம் பெரிய தந்தையும், காரைக்குடியின் கல்வி வள்ளலுமான இராம.வீர. இராமசாமி செட்டியார் – நாச்சம்மை ஆச்சியால் பிள்ளை கூட்டிக் கொள்ளப் பெற்றார்.

Koviloor Digital Library

தமிழ்ப்பற்றுமிக்க இவர் தம் இல்லங்கட்கெல்லாம் திருவிக. இல்லம், நீலாம்பிகை இல்லம், பாரதி நிலையம், விவேகானந்தர் இல்லம் எனப் பெயர் சூட்டியவர். 26–1–1964இல் தம் இல்லத்தில் இந்தியப் பல்தமிழ்க் கழகம் என்ற ஓர் அமைப்பைத் தொடங்கினார்.

இவ்வமைப்பே நாளடைவில் தமிழ்க் கல்லூரியாக உருமாற்றம் பெற்றது. தம் தந்தையார் பெயரால் 'இராமசாமி தமிழ்க் கல்லூரி'யை 18–6–1967இல் நிறுவினார். அதற்குரிய கட்டிடம் கட்ட்ப்பெற்று, இலுப்பைக்குடிச் சாலைக்குச் செல்லும்வரை, இக்கல்லூரி பெரிய கருப்பனாரது சொந்த இல்லம் ஒன்றில், கண்டனூர்ச் சாலையில் 25 ஆண்டுகள் இயங்கியது.

தமிழ்க் கல்லூரி நிறுவுநரான இப் பெருமகனார், மறைமலையடிகள் நூற்றாண்டு விழா நினைவாகப் பிள்ளைத் தமிழ்க் கவிதைப் போட்டி ஒன்றை நடத்தி 3,000 ரூபாய் பரிசு வழங்கியவராவார்.

வணிகம் தொடர்பாகச் சிங்கப்பூரில் வாழ்ந்த போது சிங்கப்பூர்த் தமிழ் இயக்கம், சிங்கப்பூர்த் தமிழர் சீர்திருத்தச் சங்கம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழ்ப் பணிகட்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார்.

தமிழ்நாட்டிலிருந்தும் பிறநாடுகளிலிருந்தும் சிங்கப்பூருக்கு வருகை புரியும், அல்லது சிங்கப்பூர் வழியாகச் செல்லும் தமிழறிஞர்களை வரவேற்று, விருந்தளித்து, உதவி புரிவது இவர்தம் இயல்பாகும்.

காரைக்குடியில் தமிழ்க் கல்லூரி ஒன்றை நிறுவிய இவர், தம் வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பற்றோடும், தமிழ் உணர்வோடும் வாழ்ந்த ஒரு தமிழ்த் தொண்டர் எனலாம்.

பெரியணன், அ., (13-10-1922)

இராயவரம்
கைத்தொழில் வினைஞர்

மலேசியாவில் தொடக்கக் கல்வி கற்ற இவர், கைத்தொழில் நுட்பங்களைக் கற்று, பனங் கருக்கு மட்டையிலிருந்து, கிராமக் கைத்தொழில் முறையில் தாள் தயாரிக்கும் தொழில் நுட்பத்தை 1941 – 42 இல் உருவாக்கினார். வைக்கோலைக் கொண்டு பிரம்புச் சாமான்கள், பிள்ளைக் கட்டில்கள் முதலியன உருவாக்கினார். கடியாபட்டிக்கும், இராயவரத்திற்கும் இடையில் ? மையாள்புரத்தில் இப்பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை 1948 இல் நிறுவப்பட்டு 1952 வரை நடைபெற்றது. இவர் அதில் பெரும் பங்காற்றினார்.

பின்னர்ச் செங்கல்பட்டுக்கு அருகிலும், ஆந்திரமாநிலம் இராசமுந்திரிக்கு அருகிலும், பழைய காகிதங்கள், தார் முதலியவற்றிலிருந்து கூரைத்தகடுகள் தயாரிக்கும் தொழில் நுட்பத்தை உருவாக்கி, பெருமளவில் கூரைத் தகடுகள் தயாரிக்க உதவினார்.

புதிய கைத்தொழில் நுட்பங்களை உருவாக்கிச் சாதனை படைத்த நகரத்தார் என்ற சிறப்புக் குரியவர் இவர்.

பெரியண்ணன், அரு., (18-8-1925 - 22-7-1994)

மாத்தூர் அரும்பாக்கூர்
ஆத்தங்குடி
இதழாளர்

அருணாசலம் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். 1943இல் முருகு சுப்பிரமணியன், ஆவினிப்பட்டி அ.பழ. பழநியப்ப செட்டியார் ஆகியோருடன் சேர்ந்து முத்தமிழ் நிலையம் என்னும் பதிப்பகத்தின் வாயிலாகப் பாரதிதாசனின் இசையமுது, இருண்ட வீடு ஆகிய நூல்களை வெளியிட்டிருக்கிறார். முருகு சுப்பிரமணியனை ஆசிரியராகக் கொண்டு 'பொன்னி' என்னும் மாத இதழை 1947இல் புதுக்கோட்டையில் தொடங்கினார். பின்னர் அதனைச் சென்னையிலிருந்து மாதம் இருமுறை இதழாக நடத்தினார். 'முரசொலி' இதழின் மேலாளராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்தினார். தம் இளம் வயதிலிருந்தே பகுத்தறிவு இயக்கத் தொடர்புடைய இவர் நெருக்கடி நிலைக் காலத்திலும் கலைஞர் கருணாநிதிக்குத் துணையாக இருந்து அவரது பாராட்டைப் பெற்றுள்ளார்.

பேறு கேட்டல்

பதினாறு வகைப் பேறுகளில் ஒன்று பிள்ளைப்பேறு. அந்த அடிப்படையில் ஒரு பெண்ணின் குழந்தைப் பேற்றுக்குத் துணை செய்வதைப் 'பேறு இடுதல்' என்றும், குழந்தைபெற்ற மகிழ்ச்சியை உறவினரும், பங்காளிகளும் வந்து கேட்டு மகிழ்வதைப் 'பேறு கேட்டல்' என்றும் வழங்குவது நகரத்தார் மரபு. ஆனால் இச் சொற்கள் ஆச்சிமார்களின் பேச்சு வழக்கில் இப்போது 'போரிடுதல்' என்றும், 'போரு கேட்டல்' என்றும் மருவி வழங்குகின்றன.

ஒரு வீட்டில் குழந்தை பிறந்தவுடன் அவர்கள் தம் உறவினர், பங்காளிகள் வீடுகட்குச் செய்தி சொல்லி அனுப்புவர். அன்று முதல் சில நாட்கள் உறவினர்களும் பங்காளிகளும் ஒவ்வொரு

Koviloor Digital Library

வராகக் குழந்தை பிறந்த வீட்டிற்கு வருவர். அப்போது அக்குடும்பத்தார் ரொட்டி, மூன்று நான்கு வகை மிட்டாய்கள், கற்கண்டு இவை வைக்கப்பெற்ற மிட்டாய்த் தட்டினை வைப்பர். வந்தவர்கள் 'பேரன் பிறந்திருக்கிறானே' என்றோ 'பேத்தி பிறந்திருக்கிறாளே' என்றோ கேட்டு விட்டு, மிட்டாய் ரொட்டி எடுத்துக் கொள்வர். பின்னர் சுவை நீரோ, காப்பியோ வழங்கப்பெறும். தொடர்ந்து வெற்றிலைத் தட்டு வைக்கப்பெறும். பேறு கேட்கவரும் பெண்களுக்குக் குங்குமம், பூ முதலியவையும் வழங்கப் பெறும்.

குழந்தைப் பேற்றைக் கேட்பதை பேறு கேட்டல் என வழங்கும் நகரத்தார் சமுதாயம், ஒரு பெண் பூப்படைவதைக் கேட்பதற்கும் இதே சொல்லையும், இதே நடைமுறையையும் வைத்திருப்பது வியப்புக்குரியது. பூப்படைந்த பெண்ணின் வீட்டிற்கு வரும் உறவினர்கள் அப்பெண்ணின் பெற்றோரைப் பார்த்துப் "பேரன் உண்டா?" எனப் பேறு கேட்பார்கள். ஒரு பெண் பூப்படைவது என்பது, அவள் தாய்மைப் பேற்றுக்குத் தகுதி அடைவதையே குறிக்கிறது என்ற ஆழமான உட்பொருள் இந் நடைமுறையால் நமக்குப் புரிகிறது. இவ்வாறு மொழியைப் பொருள் ஆழத்தோடு பயன்படுத்தும் மரபு நகரத்தாரிடையே வேரூன்றியிருக்கும் ஒரு நன்மரபாகும்.

குழந்தை பிறந்த அல்லது பெண் சமைந்த வீட்டினர் தாம் மிட்டாய்த் தட்டு வைக்கும் நாட்களுக்குள், தம் வீட்டிற்கு வந்து பேறு கேட்காத உறவினர், பங்காளி ஆகியோரிடம் மனவருத்தம் கொள்வர். எனவே, ஊரிலிருக்கும் அனைவரும் பேறு கேட்பது என்ற வழக்கம் நகரத்தார் குடும்பங்களில் இன்றும் நிலவி வருகிறது.

பொங்கற் பானை கொடுத்தல்

நகரத்தார் இனத்தைப் பொறுத்தவரை ஒரு பெண்ணுக்குரிய தாய் வீட்டுச் சீர்வரிசைகளில் இன்றியமையாததும், இறுதிவரை தொடர்ந்து வருவதுமாகிய சீர்வரிசை பொங்கற்பானை யாகும். கல்யாணம் ஆன முதலாண்டு தைப் பொங்கலுக்குச் சில நாட்கள் முன்பு, பொங்கற்பானை, பொங்கல் வைக்கப் புத்தரிசி, கரும்பு, வெல்லம், மஞ்சள் கொத்து, காய்கறி இவற்றோடு ஒரு தொகையையும் வைத்து இவற்றைப் பெண்ணின் தந்தையும் சகோதரனும் பெண்ணின் மாமியார் வீட்டுக்கு எடுத்துச் சென்று கொடுப்பர். அவர்களுக்கு அங்கே விருந்து நடைபெறும்.

அடுத்த இரண்டு ஆண்டுகட்கும் இதுபோலப் பொருள்கள் வாங்கியோ, இல்லையேல் அவற்றுக்கும் சேர்த்து ஒரு தொகையையோ, பெண்ணின் மாமியார் வீட்டிற்குக் கொண்டு போய்க் கொடுப்பர். இவ்வாறு முதல் மூன்றாண்டுகள் முடிந்த பின்னர், ஆண்டுதோறும் பொங்கற்பானை நேரடியாகப் பெண்ணிடம் கொடுக்கப் பெறும். தொடர்ந்து பொருள்கள் வாங்கிக் கொடுக்கும் குடும்பங்களும் உள்ளன. ஆனால், எல்லாக் குடும்பங்களிலும் உறுதியாகப் பொங்கற் பானைக்கு என ஒரு தொகை, பெண் வீடு உள்ளூரிலோ, அருகில் உள்ள ஊரிலோ இருந்தால் நேரிலும், தொலைவில் உள்ள ஊரில் இருந்தால் அஞ்சல் வாயிலாகவும் கொடுக்கப்படும். நேரில் பொங்கற்பானை கொடுக்கும் போது, பாக்குக்கு என ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ மகள் வீட்டார் திருப்பிக் கொடுப்பது வழக்கம்.

பெண் இறந்து விட்டால் கூட, மாப்பிள்ளை உயிரோடு இருக்கும் வரை, பொங்கற்பானைத் தொகை அவருக்கு அனுப்பி வைக்கப் பெறும். பெண்ணின் தந்தையார் காலத்திற்குப் பிறகு உடன் பிறந்தார்; அவர்களுக்குப் பின் அவர்தம் ஆண் மக்கள் எனத் தாய் வீட்டு வழி முறையினர் இந்தப் பொங்கற் பானை என்ற முறையினைப் பெண், மாப்பிள்ளை என்ற இருவரில் யாரேனும் ஒருவர் உயிருடன் இருக்கும் வரை தவறாது கொடுத்து வருவது நகரத்தார் இனப் பழக்கமாகும்.

பொதுப்படைப்பு

நகரத்தார் பண்பாட்டில் படைப்பு என்பது முன்னோரை வழிபடும் ஒரு இன்றியமையாத குடும்ப நிகழ்ச்சியாகும். வீட்டுப்படைப்பாக இருக்கும் படைப்பு, படைக்கப்படுகிறவரின் வாரிசு வழிமுறையினர் எண்ணிக்கை பெருகும்போது பங்காளிகள் அனைவரும் கூடிப் படைக்கும் பொதுப்படைப்பாக விரிவடைகிறது. அந்தப் பங்காளிகள் வெவ்வேறு ஊர்களில் குடியேறும் நிலை வரும்போது படைப்புக்காக மட்டும் அனைவரும் படைக்கப்படுபவர் வாழ்ந்த ஊரில் கூடிப் படைப்பை நடத்துவர். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட ஊர்ப்பங்காளிகள் ஓர் ஊரில் கூடிப் படைக்கும் பொதுப்படைப்புக்கள் மட்டும் இங்கு பட்டியலிடப் பெறுகின்றன. ஓர் ஊர்ப் பங்காளிகள் அளவிலான பொதுப் படைப்புக்கள் ஊர்கள் பற்றிய கட்டுரைகளில் ஆங்காங்கு தரப்பட்டுள்ளன.

ஒன்றுக்கு மேற்பட்ட ஊர்ப்பங்காளிகள் ஓர் ஊரில் கூடிப் படைக்கும் பொழுது அவ்வூரில் அப்படைப்புக்கென உள்ள பொதுப்படைப்பு வீட்டில் கூடிப் படைப்பர். படைக்கப்படுபவர்

Koviloor Digital Library

குலதெய்வக் கோவிலில் சிறுதெய்வமாக வழிபடப் பெறுபவராக இருந்தால் படைப்பு குல முன்னோருக்கும் குலதெய்வத்துக்கும் சேர்ந்ததாக அமைவதும் உண்டு. இப்படைப்பை ஒட்டிக் குலதெய்வக் கோவிலுக்குச் சென்று வழிபடுவதும் அங்கிருந்து தீர்த்தம் எடுத்து வருவதும் மரபு. இப்பொதுப் படைப்புக்களில் படைப்பு முடிந்ததும் ஏலம் சிறப்பாக நடைபெறும்; பிரசாதமாக நெய்ப்பணியாரம் புள்ளிகளைக் கணக்கிட்டு வழங்கப்பெறும்.

பின்வரும் வரிசை முறையில் படைப்பு விவரங்கள் தரப்பெற்றுள்ளன. வரிசை எண், படைப்பு நிகழும் ஊர், (அ) படைப்பின் பெயர் (ஆ) படைக்கும் பங்காளிகள், (இ) கலந்து கொள்ளும் ஊரினர் (ஈ) எத்தனை ஆண்டுகட்கு ஒருமுறை படைக்கப்படுகிறது என்ற விவரம்.

1. அரியக்குடி

அ.

ஆ. வைரவன் கோவில்

இ. அரியக்குடி, கண்டனூர்

ஈ. ஆண்டுக்கு ஒருமுறை

2. க. அளகாபுரி

அ. அக்கினியாத்தாள் படைப்பு

ஆ. பிள்ளையார்பட்டி

இ. அமராவதி புதூர், க. அளகாபுரி

ஈ.

3. க. அளகாபுரி

அ. ஆண்டாத்தாள் படைப்பு

ஆ. வைரவன்கோவில் பெரிய வகுப்பு

இ. க. அளகாபுரி, புதுவயல்

ஈ. ஆண்டுதோறும் வைகாசி மாதம்.

4. க. அளகாபுரி

அ. கருப்பர் படைப்பு

ஆ. இளையாத்தங்குடி பட்டினசாமி

இ. க. அளகாபுரி, காரைக்குடி, புதுவயல்

ஈ. ஆண்டுதோறும் ஆடி மாதம்.

5. க. அளகாபுரி

அ. நாச்சாத்தாள் படைப்பு

ஆ. இளையாத்தங்குடி பட்டினசாமி

இ. அரிமழம், க. அளகாபுரி, கானாடுகாத்தான், தேவகோட்டை, தேனிபட்டி, பலவான்குடி, பள்ளத்தூர்.

ஈ. ஆண்டு தோறும் ஆடி மாதம்

6. ஆத்தங்குடி

அ.

ஆ. வைரவன் கோவில், பிள்ளையார் வகுப்பு.

இ. ஆத்தங்குடி, கடியாபட்டி, சொ. புதூர், பள்ளத்தூர்

ஈ. ஆண்டுதோறும் ஆடி மாதம்

7. ஆவினிப்பட்டி

அ. குப்பியப்பத்தாள் படைப்பு

ஆ. மாத்தூர் குளத்தூர்

இ. ஆவினிப்பட்டி, தேவகோட்டை, வலையபட்டி,

ஈ. இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை ஆடிமாதம்

8. இராங்கியம்

அ. அடைக்காத்தாள் படைப்பு

ஆ. இலுப்பைக்குடி

இ. இராங்கியம், குழிபிறை, பனையப்பட்டி

ஈ. இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை ஆடிமாதம்

9. இராங்கியம்

அ. வளத்தியம்மன் படைப்பு

ஆ. இளையாத்தங்குடி, கழனிவாசல்குடி

இ. இராங்கியம், கண்டவராயன்பட்டி, குழிபிறை, கொப்பனாபட்டி, பூலாங்குறிச்சி, விரையாச்சிலை, வேகுப்பட்டி

ஈ. இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை ஆடி மாதம்

10. இராயவரம்

அ. காயாத்தாள் படைப்பு

ஆ. இரணிக் கோவில்

இ. இராயவரம், கொ. இலட்சுமிபுரம், கண்டனூர், கானாடுகாத்தான், கொத்தமங்கலம்.

ஈ. ஆண்டு தோறும் ஆடி மாதம்.

11. இராயவரம்

அ. செங்கிடாய்க் கருப்பர் படைப்பு

ஆ. இரணிக்கோவில்

இ. இராங்கியம், இராயவரம், உலகம்பட்டி, காரைக்குடி, குருவிக்கொண்டான்பட்டி, கொப்பனாபட்டி, செவ்வூர், மிதிலைப்பட்டி, வலையபட்டி

ஈ. இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை கார்த்திகை மாதம்.

12. இராயவரம்

அ. தெய்வானை அம்மன் படைப்பு

ஆ. இளையாத்தங்குடி கிண்கிணிக் கூருடையார்

இ. இராயவரம், கல்லல், தேவகோட்டை, நெற்குப்பை, புதுவயல்

ஈ. மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை ஆடிமாதம்.

13. கொ. இலட்சுமிபுரம்

அ. வடிவியாத்தாள் கருப்பையா படைப்பு

ஆ. மாத்தூர் கருப்பூர்

இ. கொ. இலட்சுமிபுரம், கொத்தமங்கலம், பள்ளத்தூர்

ஈ. ஆண்டுதோறும்

Koviloor Digital Library

14. வி. இலட்சுமிபுரம்
அ. பாட்டிமார் படைப்பு
ஆ. வைரவன் கோவில்
இ. வி. இலட்சுமிபுரம், புதுப்பட்டி, வலையபட்டி
ஈ. மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை.

15. உலகம்பட்டி
அ. மாங்கல்யகாரி படைப்பு
ஆ. நேமங்கோவில்
இ. உலகம்பட்டி, நெற்குப்பை
ஈ. மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை ஆடிமாதம்.

16. கண்டனூர்
அ. அக்கினியாத்தாள் படைப்பு
ஆ. பிள்ளையார்பட்டி
இ. ஆத்தங்குடி, கண்டனூர், கோட்டையூர்
ஈ. ஆண்டுதோறும் ஆடி மாதம்.

17. கருங்குளம்
அ. பதினெட்டாம்படிக் கருப்பர் படைப்பு
ஆ. இளையாத்தங்குடி கழனிவாசற்குடி
இ. கருங்குளம், நேமத்தான்பட்டி
ஈ. ஆண்டுதோறும் ஆடி மாதம்

18. காரைக்குடி
அ. அக்கினியாத்தாள் படைப்பு
ஆ. நேமங்கோவில்
இ. காரைக்குடி, தேவகோட்டை
ஈ.

19. காரைக்குடி
அ. திருமாத்தாள் படைப்பு
ஆ. இளையாத்தங்குடி ஒக்கூருடையார்
இ. காரைக்குடி, சண்முகநாதபுரம்,
உ. சிறுவயல், விராமதி
ஈ. ஆண்டுதோறும் மாசி மாதம்

20. கீழச்சிவல்பட்டி
அ. ஆண்டாத்தாள் படைப்பு
ஆ. வைரவன் கோவில்
இ. க. அளகாபுரி, பி. அளகாபுரி, கண்டனூர், கீழச்சிவல்பட்டி, தேவகோட்டை, புதுவயல்.
ஈ. மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை மாசி மாதம்.

21. கீழச்சிவல்பட்டி
அ. நாகம்மை ஆயாள் செங்கிடாய்க் கருப்பர் படைப்பு.
ஆ. பிள்ளையார்பட்டி
இ. கீழச்சிவல்பட்டி, சிறுகூடல்பட்டி
ஈ.

22. கொத்தமங்கலம்
அ. இராயாத்தாள் படைப்பு
ஆ. மாத்தூர் மணலூர்
இ. ஆத்தங்குடி, கொத்தமங்கலம், உ. சிறுவயல்
ஈ.

23. கொத்தமங்கலம்
அ. தாயாத்தாள் படைப்பு
ஆ. மாத்தூர், அரும்பாக்கூர்
இ. ஆத்தங்குடி, இராயவரம், கண்டனூர், கொத்தமங்கலம், கோட்டையூர்
ஈ. ஆண்டு தோறும்

24. கோட்டையூர்
அ. பூமணப் பிச்சாத்தாள் படைப்பு
ஆ. இளையாத்தங்குடி கழனிவாசல்குடி
இ. ஆத்தங்குடி, காரைக்குடி, கோட்டையூர், கோனாபட்டு, நேமத்தான்பட்டி, பள்ளத்தூர்.
ஈ. ஆண்டுதோறும் ஆடி மாதம்.

25. கோனாபட்டு
அ. பூமணப் பிச்சாத்தாள் படைப்பு
ஆ. பிள்ளையார்பட்டி
இ. ஆத்தங்குடி, கோனாபட்டு
ஈ. ஆண்டுதோறும் ஆடி மாதம்

26. சண்முகநாதபுரம்
அ.
ஆ. சூரக்குடி
இ. காரைக்குடி, சண்முகநாதபுரம்,
ஈ.

27. சிறாவயல்
அ. கருப்பர்படைப்பு
ஆ. வைரவன் கோவில்
இ. சிறாவயல், மகிபாலன்பட்டி
ஈ.

28. சிறுகூடற்பட்டி
அ. நாராயணசாமி படைப்பு
ஆ. மாத்தூர் கண்ணூர்
இ. பி. அளகாபுரி, இராயவரம், தேவகோட்டை
ஈ.

29. உ. சிறுவயல்
அ. அழகாத்தாள் படைப்பு
ஆ. மாத்தூர் மண்ணூர்
இ. ஆத்தங்குடி, உ. சிறுவயல், சொ. புதூர், ஆ. முத்துப்பட்டணம்,
ஈ. ஆண்டு தோறும் ஆடி மாதம்

Koviloor Digital Library

30. உ. சிறுவயல்

அ. மாங்கல்யாத்தாள் படைப்பு

ஆ. மாத்தூர் அரும்பாக்கூர்

இ. கானாடுகாத்தான், உ. சிறுவயல்

ஈ. ஆண்டுதோறும் ஆடி மாதம்.

31. செம்பனூர்

அ. தீப்பாய்ந்த அம்மன் படைப்பு

ஆ. நேமங்கோவில்

இ. கல்லல், செம்பனூர்

ஈ. நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை

32. செவ்வூர்

அ. சோணையன் கோவில் படைப்பு

ஆ. சூரக்குடி

இ. செவ்வூர், நெற்குப்பை, பனையப்பட்டி, பூலாங்குறிச்சி, மிதிலைப்பட்டி, வேகுப்பட்டி

ஈ. இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை சித்திரை மாதம்.

33. தேவகோட்டை

அ. நைனப்பய்யா படைப்பு

ஆ. மாத்தூர் அரும்பாக்கூர்

இ. பி. அளகாபுரி, கீழச்சிவல்பட்டி, சிறுகூடற்பட்டி, தேவகோட்டை

ஈ. ஆண்டுதோறும் மாசி மாதம்.

34. தேவகோட்டை

அ. பழநியப்ப செட்டி கருப்பாத்தான் படைப்பு

ஆ. இலுப்பைக்குடி

இ. கண்டனூர், தேவகோட்டை

ஈ. ஆண்டுதோறும் தைமாதம் முதல் வெள்ளி.

35. தேனிபட்டி

அ.

ஆ. இரணிக்கோவில்

இ. க. அளகாபுரி, தேனிபட்டி, புதுவயல்

ஈ.

36. தேனிபட்டி

அ.

ஆ. இரணிக்கோவில்

இ. தேவகோட்டை, தேனிபட்டி

ஈ.

37. நற்சாந்துபட்டி

அ. அடைக்கம்மை அப்பத்தாள் படைப்பு

ஆ. இலுப்பைக்குடி

இ. வி. இலட்சுமிபுரம், கடியாபட்டி, குருவிக்கொண்டான்பட்டி, நற்சாந்துபட்டி, நேமத்தான்பட்டி, பள்ளத்தூர், பனையப்பட்டி, புதுப்பட்டி, விரையாச்சிலை, வேந்தன்பட்டி.

ஈ. இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை.

38. நாட்டரசன்கோட்டை

அ. சிவகாமியாத்தாள் படைப்பு

ஆ. மாத்தூர்

இ. அலவாக்கோட்டை, நாட்டரசன் கோட்டை, மதகுபட்டி

ஈ. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை.

39. நெற்குப்பை

அ. உடையம்மைப்பாட்டி படைப்பு

ஆ. நேமங்கோவில்

இ. நெற்குப்பை, வேந்தன்பட்டி

ஈ. இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை தை மாதம்.

40. நெற்குப்பை

அ. மாங்கல்யகாரி அம்மன் படைப்பு

ஆ. இரணிக்கோவில்

இ. ஆ. தெற்கூர், குருவிக்கொண்டான்பட்டி, நெற்குப்பை, வலையபட்டி

ஈ. ஐந்தாண்டுகட்கு ஒருமுறை ஆவணி மாதம்.

41. பலவான்குடி

அ. தேனாத்தாள் படைப்பு

ஆ. மாத்தூர் அரும்பாக்கூர்

இ. ஆத்தங்குடி, தேவகோட்டை, பலவான்குடி

ஈ. ஆண்டுதோறும் ஆடி மாதம்.

42. பலவான்குடி

அ. பெரிய கருப்பண்ணசாமி படைப்பு

ஆ. வைரவன் கோவில்

இ. க. அளகாபுரி, கொத்தமங்கலம், சிறாவயல், நாச்சியாபுரம், நேமத்தான்பட்டி, பலவான்குடி.

ஈ. ஆண்டுதோறும் ஆடிமாதம்.

43. பள்ளத்தூர்

அ. அழகாத்தாள் படைப்பு

ஆ. இரணிக் கோவில்

இ. கடியாபட்டி, காரைக்குடி, கொத்தமங்கலம், கோட்டையூர், தேவகோட்டை, பலவான்குடி, பள்ளத்தூர், புதுவயல்

ஈ. மூன்று ஆண்டுகட்கு ஒரு முறை.

44. புதுவயல்

அ.

ஆ. இளையாத்தங்குடி பெருமருதூருடையார்

இ. காரைக்குடி, புதுவயல்

ஈ. ஆண்டு தோறும்

45. பொன்னமராவதி

அ. துர்க்கையம்மன் படைப்பு

ஆ. இளையாத்தங்குடி ஒக்கூருடையார்

இ. இராங்கியம், வலையபட்டி

ஈ. ஐந்தாண்டுகட்கு ஒருமுறை ஆடிமாதம்.

Koviloor Digital Library

46. மகிபாலன்பட்டி

அ. கருப்பர்படைப்பு

ஆ. வைரவன் கோவில்

இ. கண்டவராயன்பட்டி, சிறாவயல், சிறுகூடற்பட்டி, புதுப்பட்டி, மகிபாலன்பட்டி

ஈ. ஆண்டுதோறும் ஆடி அல்லது தை மாதம்

47. ஆ. முத்துப்பட்டணம்

அ.

ஆ. பிள்ளையார்பட்டி

இ. ஆத்தங்குடி, ஆத்தங்குடி முத்துப்பட்டணம்

ஈ.

பொள்ளாச்சித் தமிழிசைச் சங்கம்

நகரத்தார் கலைத்தொண்டுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வது பொள்ளாச்சித் தமிழிசைச் சங்கம். சென்னை நகருக்கு வெளியே தமிழகத்தில் சிறப்புற இடையறாது கலைப்பணி செய்து புகழ் பெற்றுள்ளது இச்சங்கமேயாகும். தேவகோட்டை இராம. வெள்ளையப்பன் 25 ஆண்டுகள் தொடர்ந்து செயலராகத் தளராத முயற்சியுடன் முன்னின்று நடத்தும் இச்சங்கம் வெள்ளிவிழாவை 1995இல் கொண்டாடியது. உமுசுபலெ. அழகப்ப செட்டியார் இதன் துணைத்தலைவர். பொள்ளாச்சி வள்ளல் மகாலிங்கம் இவர்களது முயற்சிக்கு உறுதுணையாக அள்ளிக் கொடுத்துத் தமிழிசையும் நாடகக் கலையும் வளரப் பேருதவி செய்து வருகிறார்.

1970ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் நாள் இச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இசை, நடனம், நாடக நிகழ்ச்சிகள் தவறாது நடைபெறுகின்றன. வழக்கமாக ஒரு சங்கத்தின் ஐந்தாண்டு வளர்ச்சியை அறிந்த பின்னரே உதவி செய்யும் தமிழ்நாடு இயல்இசை நாடகமன்றம் இச்சங்கத்தின் ஓராண்டு வளர்ச்சியைக் கண்டு அடுத்த ஆண்டே நிதிஉதவி அளித்தது குறிப்பிடத்தக்கது. 1986இல் தமிழ்நாடு இயல்இசை நாடகமன்றம் சிறந்த சபாவிற்கான விருதினை இச்சங்கத்திற்கு வழங்கியது. 1990 அக்டோபரில் சென்னை மயிலாப்பூர் அகாடமி பொள்ளாச்சித் தமிழிசைச் சங்கத்தைச் சிறந்த 'புறநகர் சபா' எனத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கிப் பாராட்டியது.

1973ஆம் ஆண்டில் பெரியசாமித்தூரன் தமிழிசைப் பாடல்கள் சங்கத்தால் வெளியிடப் பட்டன. தமிழிசைத் தென்றல் என்னும் திங்கள் இதழ் சங்கத்தால் நடத்தப்பட்டது. அழகிய ஆண்டு மலர்களும் தவறாது வெளிவருகின்றன. சங்கத்தின் சார்பாகத் தமிழிசைப்பள்ளி, பொள்ளாச்சி இலக்கியக் கழகம், பொள்ளாச்சித் திரைப்படக் கழகம் ஆகியன தமிழ்க்கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகின்றன. 1985ஆம் ஆண்டில் நகரின் மையச் சாலையில் மகாத்மா காந்தி வெண்கலச் சிலையை நிறுவி ஒரு அரிசனச் சிறுமியைக் கொண்டு சங்கம் திறந்து வைத்துள்ளது. 1986இலிருந்து ஆண்டுதோறும் தொடர்ந்து நாட்டியவிழா நடத்தி இந்தியாவின் புகழ்பெற்ற நடனக் கலைஞர்கள் அனைவரும் பொள்ளாச்சிக்கு வந்து கூடுமாறு செய்வது சங்கத்தின் கலைப்பணிச் சாதனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். செல்லும் இடத்தி லெல்லாம் கோவில் திருப்பணி செய்த நகரத்தார் காலத்திற்கேற்பக் கலைப்பணி மேற் கொள்வதற்கு இச்சங்கம் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

பொன்னி

இவ்விதழ் 1947இல் புதுக்கோட்டையில் தொடங்கப்பட்டது. முருகு சுப்பிரமணியனும், அரு. பெரியண்ணனும் இணைந்து தொடங்கிய இவ்விதழின் ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் ஆவார். தொடக்கத்தில் திங்கள் இதழாக வெளிவந்தது; பின்னர் சென்னையிலிருந்து திங்கள் இருமுறை இதழாக வெளியிடப்பட்டது.

'பொன்னி' தமிழ் இதழ்உலகில் புதிய வழிகாட்டியாகத் தனிமுத்திரை படைத்த இதழாகும். புதிய எழுத்தாளர் பலரைத் தமிழகத்திற்கு இவ்விதழ் உருவாக்கித் தந்துள்ளது. பாரதிதாசன் கவிதைகளை நாடெங்கும் பரப்பிய பொன்னி இதழ் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களை அறிமுகப்படுத்தியது. வாணிதாசன், சுரதா, மு. அண்ணாமலை, வே. அண்ணாமலை, சாமி. பழநியப்பன், கதி. சுந்தரம், வே. சேதுராமன், நாக. முத்தையா, நாரா. நாச்சியப்பன், முடியரசன், சிவனடியான் ஆகியோர் இவ்வகையில் பொன்னியில் கவிதை படைத்தவர்கள் ஆவர். தீபாவளி மலர்களையே மற்ற இதழ்கள் சிறப்புற வெளியிட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் மலர்களைப் பொன்னி இதழ் வெளியிட்டுப் புரட்சி செய்தது. பொன்னி வெளியிட்ட பொங்கல் மலர்கள் தனித்தமிழ் இயக்கம் வேரூன்ற உதவின. அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றோரின் கதை கட்டுரைகள் பொன்னி இதழ்களில் இடம்பெற்றன. திராவிட இயக்கத் தலைவர்களின் வண்ணப்படங்களையும் பொன்னி பொங்கல் மலரில் அழகுற அச்சிட்டு வெளியிட்டனர். சின்னஞ்சிறு அச்சகத்தை வைத்துக் கொண்டு பொன்னி இதழ் செய்த பெரிய சாதனை எனத் திறனாய்வாளர்கள் பொன்னி வெளியிட்ட

Koviloor Digital Library

சிறப்பு மலர்களைப் பாராட்டுகின்றனர். 1950க்குப் பிறகு சென்னை பொன்னியின் நிருவாகியாகப் பாகனேரி மு. நாராயணன் செட்டியார் பொறுப்பேற்றார். திராவிட இயக்க இதழ்களுக்கும் பொங்கல் மலர்களுக்கும் முன்னோடி 'பொன்னி' இதழேயாகும்.

மகளிர் இல்லம்

அமராவதிபுதூரில் சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பாவும் மரகதவல்லியும் இணைந்து நடத்திய நிறுவனம். இளம் கைம்பெண்களுக்குக் கல்வி கற்பித்து, கைத்தொழில்களில் பயிற்சிதந்து, வாய்ப்பிருந்தால் மறுமணமும் செய்து வைக்கும் நோக்கத்துடன் 10-4-1938இல் இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பெற்றது. இதன் சார்பில் மரகதவல்லி முருகப்பாவை ஆசிரியராகக் கொண்டு 'மாதர்மறுமணம்' என்ற திங்கள் இதழ் ஒன்றும் வெளிவந்தது. பின்னர் இங்கு மழலையர் பள்ளி ஒன்றும் தொடங்கப்பெற்றது.

இவ்வளாகத்தில் சொ. முருகப்பாவின் மார்பளவு உருவச்சிலை நிறுவப்பெற்றுள்ளது. சொ. முருகப்பாவுக்குப் பின்னரும் தொடர்ந்து மரகதவல்லி அம்மையாரால் நடத்தப்பட்ட இந்நிறுவனம் அம்மையார் காலத்திற்குப் பிறகு செயல்படாமல் இருந்தது. 8-10-1986இல் இவ்வளாகத்தை வாங்கிக் கொண்ட பள்ளத்தூர் மு.அ. பழநியப்ப செட்டியார் குடும்பத்தினர் தாம் பள்ளத்தூரில் நடத்தி வந்த ஸ்ரீ சாரதா சேவாசிரமம் என்ற மகளிர் சேவை நிறுவனத்தை இவ்வளாகத்துக்கு மாற்றினர். இந்தச் சேவை நிறுவனத்தின் நிருவாகம் 1994இல் சேலம் ஸ்ரீ சாரதா சமிதியிடம் ஒப்படைக்கப் பெற்றது. புதிய நிருவாகம் இவ்வளாகத்தில் ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரியைத் தொடங்கி நடத்தி வருகிறது. சொ. முருகப்பாவின் மனத்தில் ஆழப்பதிந்திருந்த பெண்கள் முன்னேற்றம் என்னும் இலட்சியம் இவ்வளாகத்தில் பெண்கள் உயர்கல்வி மையம் அமைவதன் மூலம் நிறைவேறியுள்ளது.

மகிபாலன்பட்டி

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர், கண்டவராயன்பட்டி வழியாக 36 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில் ஆகிய 3 கோவில்களைச் சேர்ந்த 156 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

நூறு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த மங்கள விநாயகர் கோவில் நகரப் பொதுக் கோவிலாகும். சித்தி விநாயகர் கோவிலும் சுப்பையா கோவிலும் உள்ளன. பூங்குன்றை குடகுமலை விநாயகர் தருமலிங்கம் கோவில் சிசா. குடும்பத்தாரின் நிருவாகத்தில் உள்ளது. நகரத்தாருக்கும் ஊராருக்கும் பொதுவான பூங்குன்ற நாயகி அம்மன் கோவிலில் சித்திரைப் பௌர்ணமிப் பூத்திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறும். ஒக்கூர் நகரத்தார் வெட்டிய ஐயர் ஊருணி என்னும் குடிநீர் ஊருணியும் அம்மன் கோவில் சேங்கை ஊருணியும் நீர்நிலைகளாம். சித்தி விநாயகர் கோவில் பெரி. கா. காசிச் செட்டியாரால் கட்டப்பெற்று ஒக்கூர் நகரத்தார் நிருவாகத்தில் உள்ளது. இக்கோவில் இப்போது இங்குள்ள ஒக்கூர் நகரத்தாரால் சிவன் கோவிலாகத் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

கருப்பர் படைப்பு, சிறாவயல், சிறுகூடற்பட்டி, கண்டவராயன்பட்டி, புதுப்பட்டி, மகிபாலன் பட்டி ஆகிய 5 ஊர் வைரவன் கோவிலாரால் ஆடி அல்லது தை மாதத்தில் 3 நாள் படைக்கப்பெறும். 140 ஆண்டுகட்கு மேலாக சி. இராம வீட்டில் புரட்டாசி மாதம் 8 நாட்கள் இராமாயணம் படித்தல் நடைபெறுகிறது.

நகரத்தார் தொடங்கி நடத்திய மங்கள விநாயகர் பள்ளி இப்பொழுது ஊராட்சி மன்றப் பள்ளியாக நடைபெறுகிறது. இவ்வூரினரான நா. விசுவநாதன் இ.தே. ராவில் பணியாற்றியுள்ளார்.

இவ்வூரிலிருந்து தேவகோட்டைக்குப் பிள்ளை வளரச் சென்ற அ.கண. வீரப்ப செட்டியார் கண்டவராயன்பட்டியிலிருந்து மகிபாலன் பட்டிக்குக் கல்சாலை அமைத்துக் கொடுத்துள்ளார். இச்சாலை 10-2-1924இல் தேவகோட்டை பள.செ. லெட்சுமணன் செட்டியாரால் திறந்து வைக்கப் பெற்றது.

இங்குள்ள தெய்வங்களுக்குப் பூங்குன்றப் பெயர் இருப்பதாலும், பூங்குன்றை குடகுமலை விநாயகர் கோவிலில் உள்ள கல்வெட்டு, 'பூங்குன்ற வளநாடு' பற்றிக் குறிப்பதாலும் இவ்வூர் சங்க காலக் கணியன் பூங்குன்றனாருடன் தொடர்பு படுத்திக் கூறப்படுகிறது.

மகிபாலன்பட்டியில் பண்டிதமணி மு. கதிரேசனாரின் திருஉருவச் சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மங்கையர்க்கரசி மன்றம்

சைவத்திற்குப் பெருந் தொண்டாற்றிய மங்கையர்க்கரசியின் பெயரால் பள்ளத்தூரில் நகரத்தார் சமூகப் பெண்கள் தோற்றுவித்து நடத்திவரும் அமைப்பு. சமயம் வளர்த்து, குலப்பெருமை காக்கும் நோக்கத்துடன் 1978ஆம்

Koviloor Digital Library

ஆண்டு அ.மு.மு.அரு. இலக்குமி ஆச்சி தலைமையில் இது தொடங்கப் பெற்றது.

ஆண்டுதோறும் ஆடிமாதம் முதல் வெள்ளிக்கிழமை சிவன்கோவிலில் மகாலெட்சுமி சன்னதியில் திருவிளக்கு வழிபாடும் நவராத்திரியின் பொழுது பெருமாள் கோவிலில் இராமாயணச் சொற்பொழிவுகளும் சிவராத்திரி யன்று சிவன் கோவிலில் இலக்கிய நிகழ்ச்சியும் நடத்தி வருகின்றனர். ஆண்டுதோறும் பள்ளத்தூரில் பள்ளியிறுதி வகுப்பில் சிறந்த மதிப்பெண் பெறும் நகரத்தார் மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கி வருகின்றனர். இப்போதைய பள்ளத்தூர்ப் பேரூராட்சி மன்றத் தலைவர் உமையாளாச்சி தொடக்கத்திலிருந்தே இம்மன்றத்தின் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகள் குறிப்பிடத்தக்கவை.

மணி, பி.எல்.எஸ்., (இயற்பெயர் : பழ. சுப்பிரமணியன்) (24-7-1927)

பிள்ளையார்பட்டி
கோனாபட்டு
இதழாளர்

பழநியப்ப செட்டியார் – முத்தாயி ஆச்சியின் மகன். அழகப்பா கல்லூரியில் பி.எஸ்சி. பட்டம் பெற்றவர். மதுரையிலும் சென்னையிலும் 'தமிழ்நாடு' நாளிதழின் விற்பனைப் பிரிவில் பணியாற்றினார். பின்னர் சிங்கப்பூரில் 'தமிழ் முரசு' உதவியாசிரியராகவும் வானொலி அறிவிப்பாளராகவும் பணியாற்றினார். மீண்டும் தாயகம் திரும்பியபொழுது பெங்களூரில் 'தினச்சுடர்' இதழின் நிருவாகியாகப் பணியாற்றினார்.

ஒரு யூத நிறுவனத்தில் பணிமேற்கொண்டு 1969இல் அமெரிக்கா சென்றார். அங்கு நியூயார்க் தமிழ்ச் சங்கத்தில் 1971இல் பொருளாளராகவும் பின்னர் சில ஆண்டுகள் தலைவராகவும் செயலராகவும் தொடர்ந்து பொறுப்புக்களை ஏற்றுத் தொண்டாற்றினார். 1985இல் தாயகம் திரும்பிய இவர் பாடுவார் முத்தப்பர் கோட்ட மலர்க்குழுவில் இடம்பெற்றிருந்தார்.

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையாரின் மாணவரான இவர் கோனாபட்டு இளைஞர் ஒற்றுமைக் கழகத் துணைச்செயலாளராக இருந்தபொழுது கையெழுத்து ஏடு நடத்தியும் 'தமிழர்க்கு' என்ற பெயரில் காலணா விலையில் பல சிறுநூல்களை வெளியிட்டும் அப்பகுதியில் தமிழ் உணர்வை வளர்த்தவராவார்.

மணிமேகலை தமிழ்வாணன் (21-12-1933 - 14-9-1994)

மாத்தூர் - மணலூர்
தேவகோட்டை
இதழாளர்

இந்து மதாபிமான சங்கம், தனவைசிய ஊழியர் சங்கம், மகளிர் இல்லம் போன்ற அமைப்புக்களை உருவாக்குவதிலும், நிருவகிப்பதிலும், சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பாவிற்கு உறுதுணையாக இருந்த, அமராவதிபுதூரைச் சேர்ந்த பிச்சப்பா சுப்பிரமணியன் – அழகம்மை ஆச்சியின் மகள்.

கொப்பனாபட்டி கலைமகள் கல்லூரியில் பயின்று கலைச்செல்வி பட்டம் பெற்றார். 'கல்கண்டு' ஆசிரியர் தமிழ்வாணனுக்கும் இவருக்கும் திருமணம் நிகழ்ந்த பின் 1964இல் தொடங்கப் பெற்று 1969 வரை வெளிவந்த 'அருள்' மாத இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

பின்னர் 1970 முதல் 1974 வரை வெளிவந்த ''திருவருள்'' மாத இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்தினார். நகரத்தாரில் இதழாளர்கள் மிகுதி எனினும், நகரத்தார் பெண்களும் இதழாளர்களாகச் சிறப்பெய்தியிருப் பதற்கு இவர் நல்ல சான்றாவார்.

'உருகுது நெஞ்சம் பெருகுது கண்ணீர்' என்ற நாவலையும் இவர் எழுதியுள்ளார்.

மதகுபட்டி

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து கல்லல், செம்பனூர் வழியாக 35 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூருக்குச் சொக்கலிங்கபுரம் என்ற பெயரும் வழங்குகிறது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில் ஆகிய 3 கோவில்களைச் சேர்ந்த 170 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தினுள் அடங்கும் ஊராட்சி மன்றம்.

இவ்வூரில் மீனாட்சி சொக்கலிங்கர் திருக்கோவில் என்ற பெயருடைய நகரச் சிவன் கோவில் உள்ளது. 1935இல் திருப்பணி முடித்துக் குடமுழுக்குச் செய்யப் பெற்ற இக்கோவிலுக்கு 1995இல் திருக்குட நன்னீராட்டு நிகழ்ந்தது.

மதுரை மாவட்டத்தில் உள்ள அழகிச்சிபட்டி, கொட்டாணிப்பட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வந்த நகரத்தார்கள் ஒன்று சேர்ந்து 1902 இல் இவ்வூரை உருவாக்கிக் கொண்டதாகவும், அதற்குக் காரணராக அமைந்தவர் காங்கிரசு

Koviloor Digital Library

வேலாயுதஞ் செட்டியார் எனப் பெயர் பெற்ற கா. கண. க. வேலாயுதஞ் செட்டியாரே என்றும் மதகுபட்டி சொக்கலிங்கர் கோவில் குடமுழுக்கு விழா மலர் கூறுகிறது.

இவ்வூரில் சீனிவாசப் பெருமாள் கோவில், மாணிக்க விநாயகர் கோவில், தலூதாளைக் காளியம்மன் கோவில் ஆகியவையும் அமைந்துள.

இரு ஆண்டுக்கொருமுறை வல்லடியார் கோவில் திருவிழாவில் வெள்ளிக்கிழமை பொங்கல் வைப்பதும், ஆண்டுதோறும் சித்திரை 2ஆவது செவ்வாயன்று செவ்வாய்ப் பொங்கல் வைப்பதும், நகரத்தார் பங்கேற்கும் திருவிழாக்களாம். பிள்ளையார் நோன்பன்று நகரத்தார் அனைவரும் நகரச்சிவன் கோவிலில் இழை எடுத்துக் கொள்வது இவ்வூரில் அன்மைக் காலமாக நிகழ்ந்து வருகிறது.

மாத்தூர் அரும்பாக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த உல.செ.சு. இராம. இராமசாமி செட்டியார் குடும்பத்தாரால் 1950இல் தொடங்கப் பெற்ற கற்பகமாதா நடுநிலைப் பள்ளி இவ்வூரில் இயங்கி வருகிறது. இவ்வூரிலுள்ள அரசு ஆயுர்வேத மருத்துவமனைக்கு இளையாத்தங்குடி பேரசெந்தூருடையார்ப் பிரிவைச் சேர்ந்த சுப. கண. சுப. மு. வள்ளியம்மை ஆச்சி இடமும் கட்டிடமும் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்ப் புத்தகாலயம் கண. முத்தையா, க.வே. அரங்கநாதன் செட்டியார், சுபசுப. இலட்சுமணன் செட்டியார் ஆகியோர் இ.தே.ரா.வில் பணியாற்றியவர்களாவர்.

மத்திய மின் வேதியியல் ஆய்வுக் கூடம் (CECRI)

வள்ளல் அழகப்பரின் இடையறா முயற்சியாலும் பெரும் கொடையாலும் காரைக்குடியில் நிறுவப்பட்ட ஆய்வுக் கூடம். இதற்கென 300 ஏக்கர் நிலத்தையும் பதினைந்து இலட்ச ரூபாயையும் நன்கொடையாக அழகப்பர் நல்கினார். 14–1–1953இல் இந்த ஆய்வுக்கூடம் டாக்டர் இராதாகிருட்டிணனால் திறந்துவைக்கப் பெற்றது.

அறிவியல் தொழில் ஆய்வுக் குழுவின் நிர்வாகத்தின் கீழ் அமைந்துள்ள இது உலகிலேயே மின் வேதியியல் தொடர்பான மிகப்பெரிய ஆய்வுக் கூடங்களுள் ஒன்று. ஒன்பது உட்பிரிவுகளையும் ஒரு சிறந்த நூலகத்தையும் ஒரு கணிப்பொறி மையத்தையும் ஒரு பணிமனையையும் கொண்டு இயங்கும் இதற்கு நான்கு விரிவாக்க மையங்கள் கொச்சி, தூத்துக்குடி, மண்டபம், சென்னை ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

மின்வேதியியல் தொடர்பான புதிய ஆய்வுகளை மேற்கொண்டு அதன் விளைவான கண்டுபிடிப்புக்களின் உற்பத்தி உரிமையை விற்பனை செய்து தொழில் வளர்ச்சிக்கு உதவுதல், தொழில் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குதல், தொழிற்சாலை மற்றும் கல்வி நிறுவனங்களுக்குரிய முறையில் பாடத்திட்டங்கள் அமைத்து 27 வகையான தொழிற்கல்வி வகுப்புக்களை நடத்தி வருதல் ஆகியவை இதன் பணிகளாகும்.

இந்தியாவின் உயராய்வு மையங்களில் ஒன்று செட்டிநாட்டில் அமைவதற்கு நகரத்தார் ஒருவரின் நன்கொடையே காரணமாக அமைந்தது என்பது நினைந்து போற்றுதற்குரியது.

மலேசியாவில் நகரத்தார்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கீழைக்கடல் பகுதியில் உள்ள மலேயா நாட்டிற்கு நகரத்தார்கள் கொடுக்கல் வாங்கல் தொழில் புரியச் சென்றனர். மலேயாவை வளப்படுத்திய ரப்பர்த் தோட்டங்களை உருவாக்குதற்குத் தோட்ட உரிமையாளர்களுக்குப் பெருமளவில் பணஉதவி செய்தவர்கள் நகரத்தார்களே. முதன் முதலில் இவர்கள் மலாக்காவிலேயே குடியேறினார்கள். பின்னர் பினாங்கு, ஈப்போ, கிள்ளான், மூவார், தாப்பா, பேரா, அலோர்ஸ்டார், தைப்பிங், சிரம்பான் போன்ற பிற பகுதிகளிலும் சென்று தொழிலைப் பெருக்கினர்.

தாம் சென்ற இடங்களிலெல்லாம் சைவத்தையும் தமிழையும் பரப்பும் இயல்புடைய நகரத்தார் மலேயாவிலும் அப்பணிகளைத் திறம்படச் செய்தனர். பதினைந்து ஊர்களில் தண்டாயுதபாணி கோவிலை நகரத்தார்கள் கட்டியிருக்கின்றார்கள். இக்கோவில்களெல்லாம் திராவிடக் கட்டிடக்கலைப் பாணியில் கட்டப்பெற்றவை. பினாங்கில் சிவன்கோவிலும் சிரம்பானில் செல்வவிநாயகர் கோவிலும் மலாக்காவில் பொய்யாத விநாயகர் கோவிலும் மற்றவர்களால் கட்டப்பெற்று நகரத்தார்களிடம் ஒப்படைக்கப் பெற்றுள்ளன. இக்கோவில்களில் ஒவ்வொரு ஊரில் ஒரு திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விழாக்களின் போது வெள்ளிரதத்தில் சுவாமி உலா வருவதும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவதும் நடைபெறுவதோடு தமிழகத்தின் முருகத் தலங்களில் நடைபெறுவது போலக் காவடி எடுத்தல் முதலியவை சிறப்பாக நடைபெறுகின்றன. கோவில்களிலேயே நகரத்தார்களின் சமுதாயக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. மிக அரிதாக நகரத்தார் திருமணங்களும் இக்கோவில்களில் நடைபெறுவதுண்டு.

Koviloor Digital Library

நகரத்தார்கள் கட்டியுள்ள தண்டாயுதபாணி கோவில்களும் அங்கு நடைபெறும் சிறப்பான திருவிழாவும் பட்டியலிடப்பட்டுள்ளன.

அலோர்ஸ்டார்	-	மாசிமகம்
ஈப்போ	-	வைகாசி விசாகம்
கிள்ளான்	-	திருக்கார்த்திகை
கூலிம்	-	தைப்பூசம்
கோலாலம்பூர்	-	பங்குனி உத்தரம்
சாவி	-	சித்ரா பௌர்ணமி
சுங்குரும்பை	-	பங்குனி உத்தரம்
தாப்பா	-	வைகாசி விசாகம்
தெலுக்கான்சன்	-	சித்ரா பௌர்ணமி
தைப்பிங்	-	ஆடிவேல்
பத்துபகாட்	-	வைகாசி விசாகம்
பினாங்கு	-	தைப்பூசம்
மலாக்கா	-	மாசிமகம்
மூவார்	-	திருக்கார்த்திகை
வாலாப்பூர்	-	வைகாசி விசாகம்

மலேயா நகரத்தார்கள் செய்த தமிழ்ப்பணி பலதிறப்படும். கடியாபட்டி உ. அரு. அருணாசலஞ் செட்டியாரும் பள்ளத்தூர் கா. இராமநாதன் செட்டியாரும் இணைந்து உருவாக்கிய தமிழ்ப்பண்ணை என்னும் அமைப்பு மலேயாவில் தமிழ்க் கல்வியைப் பரப்பியதோடு தமிழ்விழாக்களையும் சிறப்பாக நடத்தித் தமிழ் உணர்வை வளர்த்தது. இவ்வமைப்பே திருக்குறளின் மலாய் மொழிபெயர்ப்பு வெளிவருவதற்கும் காரணமாக இருந்தது.

நகரத்தார்கள் மலேயாவில் தமிழ் இதழ்கள் பலவற்றை நடத்தினர். உ.அரு. அருணாசலம் செட்டியார் 'தமிழ்க் கொடி' என்னும் மாத இதழையும், கா. இராமநாதன் செட்டியார் 'சோலை' என்னும் மாத இதழையும், வலையபட்டி மலையாண்டி செட்டியார் 'தமிழ்நேசன்' நாளிதழையும், என்.எம்.என். மலையாண்டி செட்டியார் 'சிலம்பு' என்னும் மாத இதழையும், முருகு சுப்பிரமணியன் 'புதிய சமுதாயம்' என்னும் இருவார இதழையும் பல்வேறு கால கட்டங்களில் நடத்தித் தமிழ்த்தொண்டு செய்தனர்.

மலேயா வாழ் நகரத்தார்கள் தரமான தமிழ் நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார்கள். அந்த வரிசையில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்க நூல் ஆத்தங்குடி பெ.நா. முத்துப் பழநியப்ப செட்டியார் ஆக்கிய 'மலாயாவின் தோற்றம்' என்னும் நூலாகும். 1938இல் சரியான சான்றாதாரங் களோடு மலேயா நாட்டின் வரலாற்றையும் அந்நாட்டின் வளர்ச்சியில் நகரத்தார் பங்கையும் திரம்பட இவர் தொகுத்துத் தர உ.அரு. அருணாசலம் செட்டியார் நூல் வடிவாக்கித் தந்துள்ளார். சுப. நாராயணன், முருகு சுப்பிரமணியன், கா. இராமநாதன், முரு. பழ. இரத்தினஞ்செட்டியார், ரெ. இராமசாமி, டாக்டர் இராம. சுப்பையா ஆகியோரது நூல்களும் குறிப்பிடத்தக்கன. (பார்க்க – இவர்களைப் பற்றிய தனிக்கட்டுரைகள்)

நகரத்தார்கள் தாங்கள் தொழில் செய்த ஊர்களில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கங்களை அமைத்துக் கொண்டனர். இவற்றுள் முதல் சங்கம் 1931இல் கோலாலம்பூரில் அகில மலேயா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம் என்ற பெயரில் அமைக்கப் பெற்றது. மற்ற ஊர்களில் அமைந்த சங்கங்கள் இச்சங்கத்தின் கிளைச் சங்கங்களாக இயங்கின. இச்சங்கங்களின் சார்பில் தமிழ்க்கல்வி வளர்க்கப் பல பணிகள் செய்து வருகின்றனர். இச்சங்கங்களின் சார்பில் அறக்கட்டளைகளை அமைத்துச் செட்டிநாட்டில் இளைஞர்களின் கல்விக்கும் பெண்களின் திருமணத்திற்கும் நிதிஉதவி செய்து வருகின்றனர்.

மலேசியப் பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வியல் துறையில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் அறக்கட்டளை என்னும் அமைப்பை நிறுவியுள்ளனர். பல கருத்தரங்குகளை நடத்திப் பல தமிழ் நூல்களை இவ்வறக்கட்டளை வெளியிட்டுள்ளது. மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தப் பேராசிரியக் கட்டில் அமைக்க நகரத்தார்கள் தங்கள் முயற்சியால் மலேசியா வாழ் தமிழர்களிடம் நிதி திரட்டித் தந்தமை குறிப்பிடத்தக்க பணியாகும். மலேயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வியல் துறைத் தலைவராக வேகுப்பட்டி இராம. சுப்பையாவும் தமிழ்த்துறையில் சுப. திண்ணப்பன், இலக்குமி மீனாட்சிசுந்தரம் ஆகியோரும், கல்வியியல் துறையில் அழ. இராமையாவும், தாவரவியல் துறையில் வி.மு. பழநியப்பனும் பணியாற்றி யுள்ளனர். வேகுப்பட்டியைச் சேர்ந்த எஸ்ஸாரெம் பழநியப்பன் பன்னிரு திருமுறைகளைப் பற்பல வழிபாட்டு நூல்களாக வெளியிட்டுப் பரப்பிவருகிறார்.

மலேசியா அரசு வழங்கிவரும் கௌரவ பட்டங்களாகிய ஜே.பி, டத்தோ, டான்ஸ்ரீ ஆகிய பட்டங்களை நகரத்தார் பெருமக்களில் பலர் பெற்றிருக்கிறார்கள். சென்ற இடங்களிலெல்லாம் நகரத்தார்கள் தம் சமுதாயத் தொண்டினால் சிறப்பெய்துகிறார்கள் என்பதற்கு இது சான்றாகும்.

இலங்கை, பர்மா ஆகிய நாடுகளோடு நகரத்தாருக்குள்ள தொடர்பு முற்றிலும் அற்றுப்போன சூழலில் மலேசியாவோடு இன்றும் தொடர்பு இருந்து வருகிறது. செட்டிநாட்டின் பொருளாதார வளத்தில் மலேசியத் தொடர்புக்குக் கணிசமான பங்குண்டு.

Koviloor Digital Library

மாணிக்கம் செட்டியார், வெ.கரு.வே. (2-7-1914 -15-12-1995)

பிள்ளையார்பட்டி
பாகனேரி
கொடையாளர்

வேலாயுதம் செட்டியாரின் மகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றவர். 1937 முதல் 1944 வரை, பர்மாவில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்க மேலாளராய்ப் பணியாற்றியவர். பாகனேரியில் ஊராட்சி மன்றத் தலைவராகப் பணிபுரிந்துள்ளார்.

1975இல் காசி நகரவிடுதியில் தங்கும் அறை ஒன்றைத் தம் சொந்தச் செலவில் கட்டிக் கொடுத்துள்ளார். 1990இல் மதுரை நகரவிடுதியைப் புதுப்பிக்கும் பணி தொடங்க நினைத்தபோது, ரூபாய் 1,11,111 (ஒரு லட்சத்துப் பதினோராயிரத்து நூற்றுப் பதினொன்று) ஐ முதல் நன்கொடையாக அளித்தார். அதனடிப்படையில் மதுரை நகரத்தார் சங்கம் புதுப்பித்துக் கட்டிய மதுரை நகரவிடுதியின் கீழ்த்தளமாகிய பெரிய அரங்கிற்குப் பாகனேரி மாணிக்கம் உண்ணாமலை அரங்கம் எனப் பெயர் சூட்டியது. மதுரை பக்தி நெறி மன்றத்தினர் இவருக்குத் திருப்பணிச் செம்மல் என்ற பட்டத்தை வழங்கினர்.

மாணிக்கம், டாக்டர். வெ.தே., (14-10-1933)

இரணிக்கோவில்
காரைக்குடி
தமிழ்ப் பேராசிரியர்

வேந்தன்பட்டியில் கதிரேசன் என்ற கருப்பன் செட்டியார் – இராமாமிர்தம் ஆச்சியின் மகனாகப் பிறந்தார். காரைக்குடி வெ.தேனப்ப செட்டியார் – இலக்குமி ஆச்சியால் பிள்ளை கூட்டிக் கொள்ளப் பெற்றார்.

அழகப்பா கல்லூரியில் தமிழ் முதுகலை பயின்று 1962 ஆம் ஆண்டு தேர்வில் மாநிலத்திலேயே முதலாவதாகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கம் பரிசு பெற்றார். 1969இல் 'தமிழ் இலக்கியத்தில் மருதத்திணை' எனும் ஆய்வுக்காக டாக்டர் பட்டம் பெற்றார்.

1970 முதல் காஞ்சிபுரம் பச்சையப்பர் கல்லூரியிலும் 1977 முதல் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசியராகப் பணியாற்றி 1992இல் ஒய்வு பெற்றார்.

இவரது ஆய்வு வழிகாட்டுதலில் 30 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளர். பல்வேறு பல்கலைக் கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளில் பாடத்திட்டக்குழு, செயற்குழு ஆகியவற்றில் உறுப்பினராகப் பணியாற்றியவர்.

50க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைப் பல்வேறு அரங்குகளில் வழங்கியுள்ளார். முதல், இரண்டாம் மற்றும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடுகளில் பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ளார்.

பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் சென்னை மாணவருக்கு ஆண்டுதோறும் ரூபாய் 1001 வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

சைவத்தில் ஈடுபாடுடைய இவர், அப்பர் முத்தி அடைந்த திருப்புகலூரில் பசுமடம் நடத்தி வருகிறார்.

தம் மகள் திருமணத்தின் போது சீர்வரிசைகளில் தமிழ் நூல் தொகுதிகளையும் இடம் பெறச் செய்தார்.

காரைக்குடித் திருக்குறட் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, இடையே நின்று போயிருந்த "குறள் விழா" மீண்டும் நடைபெற ஏற்பாடு செய்தார். இவர், ஆழமான புலமையும், சான்றாண்மையுமுள்ள தமிழ்ப் பேராசிரியர்.

மாணிக்கம், புலவர் நா.மு., (26-9-1916 - 26-12-1995)

நேமங்கோவில்
மேலைச்சிவபுரி
இதழாளர்

1941இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் பட்டம் பெற்றார். அதுமுதல் 1947 வரை சிதம்பரம் இராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். தம் இளமைக் காலத்தில் இருந்தே பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட இவர் 'மாவீரன் மாணிக்கம்" என்ற அடைமொழியோடு அவ்வியக்கத்தின் மேடைப் பேச்சாளராகத் திகழ்ந்தார். கடலூர் விழுப்புரம் மாவட்டங்களில் பகுத்தறிவு இயக்கம் அழுத்தமாகக் காலூன்றவும் விரிந்து பரவவும் இவர் பெருமளவில் காரணமாக இருந்தார். 1946இல் தந்தை பெரியார் தலைமையில் இவரது திருமணம் நடைபெற்றது. இயக்கப் பற்றுக் காரணமாகவே இவர் பள்ளி ஆசிரியர் பணியைத் துறக்க நேரிட்டது. இவர் பணியில் இருந்த காலத்தில் சிதம்பரத்தில் இளங்கோ மன்றத்தைத் தோற்றுவித்து அதன் தலைவராக

Koviloor Digital Library

ஏழாண்டுக்காலம் பணியாற்றினார். தென்னார்க்காடு மாவட்டத் தமிழாசிரியர் கழகத்தையும் உருவாக்கினார். சிதம்பரம் தமிழ்க் கழகச் செயலாளராக ஈராண்டுகள் பணியாற்றியுள்ளார்.

பள்ளி ஆசிரியர் பணியைத் துறந்தபின் 1948இல் 'குடியரசு' இதழின் அச்சக நிர்வாகியாகவும் பணியாற்றிய இவர் 1967இல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சித்தமருத்துவத் துறை ஆகியவற்றில் பணியாற்றி 1979 இல் ஓய்வு பெற்றார். தாம் மறைந்தபின் தம் கண்களைத் தானமாகக் கொடுக்கச் செய்த சிறப்பு இவருக்குண்டு.

செட்டிநாட்டுப் பகுதியில் சில நகரத்தார்கள் பகுத்தறிவு இயக்கத்தை வளர்த்துள்ளனர்; ஆனால் செட்டிநாட்டுக்கு வெளியே இருந்து கொண்டு அப்பகுதியில் பகுத்தறிவு இயக்கம் வளரத் தொண்டாற்றிய பெருமை இவருக்குண்டு.

மாணிக்கவாசகம், கருமுத்து. தி., (17-6-1920 - 13-10-1980)

மாத்தூர் - மணலூர்
ஆ. தெற்கூர்
இதழாசிரியர், தமிழ் ஆய்வாளர்

கருமுத்துத் தியாகராசர் – விசாலாட்சி ஆச்சியின் மகன். புலவர் வரதநஞ்சையபிள்ளை, மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் திருநாராயண அய்யங்கார் ஆகியோரிடம் தமிழ்கற்றார். பண்டிதமணி, அரசன் சண்முகனார் தொடர்பால் தமிழ் ஆய்வு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டார். தந்தையார் தொடங்கிய 'தமிழ்நாடு' இதழின் ஆசிரியராக அவ்விதழை மிகச்சிறப்புற வெளியிட்டார். தம் பெயரின் முதல் எழுத்தோடு, மனைவி சிந்தாமணி ஆச்சியின் பெயர் முதல் எழுத்தையும் சேர்த்து 'மாசி' என்ற புனைபெயரில், நாரணன் விளையாட்டு, செந்தமிழ்ப்பாவை, சப்பான் செலவு, பஞ்சாலைத் தொழில், வான்புகழ் வள்ளுவர் ஆகிய பல்வேறு நூல்களைப் படைத்துள்ளார். கம்பராமாயணத்தை ஆழ்ந்து கற்ற இவர், ''இராமன் திராவிடன், இராவணன் ஆரியன்'' எனப் புதிய கோணத்தில் ஆய்வு செய்து நூல் எழுதியுள்ளார். தமிழ் எழுத்தாளர் சங்கம், பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் சுழற்குழுச் சங்க மாவட்ட ஆளுநராகவும் தொண்டாற்றியுள்ளார். இவரது மணிவிழா நினைவாகப் பேராசிரியர் க. குழந்தைநாதன் எழுதிய 'கலைத்தந்தை கருமுத்து தியாகராசர்' என்னும் நூல் வெளியிடப் பெற்றது. இருபத்தெட்டு ஆண்டுகள் தமிழ்நாடு நாளிதழின் ஆசிரியராகவும், மிகச்சிறந்த தமிழாராய்ச்சியாளராகவும் இத்தமிழ்ச் செல்வர் விளங்கினார்.

மாணிக்கனார், டாக்டர். வ.சுப., (17-4-1917 - 24-4-1989)

வைரவன் கோவில்
மேலைச்சிவபுரி
கல்வியாளர், தமிழறிஞர்

சுப்பையா செட்டியார் – தெய்வானை ஆச்சியின் மகனாகத் தோன்றினார். இளமையில் பெற்றோரை இழந்து, பாட்டனாரால் வளர்க்கப் பெற்ற இவர், பர்மாவிற்குச் சென்று பணிபுரிந்தார். பின் அப்பணியைத் துறந்து தாயகம் திரும்பிப் பண்டிதமணி கதிரேசனார் உதவியால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் வகுப்பில் பயின்று, வகுப்பிலேயே முதன் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.



டாக்டர் வ.சுப. மாணிக்கனார்

ஏழாண்டுகள் அப்பல்கலைக் கழகத்திலேயே தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். அப்போதே தனியாகப் படித்துப் பி.ஓ.எல்., எம்.ஏ.பட்டங்களைப் பெற்றார். 'தமிழில் வினைச் சொற்கள்' என்ற ஆய்விற்கு எம்.ஓ.எல். பட்டமும், 'சங்க இலக்கியத்தில் அகத்திணை' என்ற ஆய்விற்குப் பி.எச்.டி. பட்டமும் பெற்றார்.

1948இலிருந்து காரைக்குடி அழகப்பா கல்லூரியில் இருபதாண்டுகள் பணியாற்றினார். தொடக்கத்தில் தமிழ் விரிவுரையாளராக இருந்த இவர், பின்னர் தமிழ்ப் பேராசிரியராகவும், 1963 முதல் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றினார். மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று தமிழ்த்துறைத் தலைவராகவும், இந்திய மொழிப் புல முதன்மையராகவும் பத்தாண்டுகள் தொண்டாற்றினார். 1979 முதல் 1982 வரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் புணிபுரிந்தார்.

இவரது பதவிக்காலத்தில்தான் கல்விக்குழு, பேரவை ஆகியவற்றின் நிகழ்ச்சிகளைத் தமிழில் வெளியிடத் தொடங்கினர். பட்டச் சான்றுகளில்

Koviloor Digital Library

தமிழும் இடம்பெறச் செய்தார். பண்டிதமணி அரங்கினைக் கட்டுவதற்கும், பண்டிதமணி நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசும், வேறு பல அமைப்புக்களும் சிறப்பாகக் கொண்டாடு வதற்கும், இவரே காரணமாக அமைந்தார் என்றால் மிகையாகாது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனது பொன் விழாவில் 1979இல் இவருக்கு டிலிட் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. குன்றக்குடி ஆதீனம் 'முதுபெரும் புலவர்' எனும் பட்டத்தையும் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை 'செம்மல்' எனும் பட்டத்தையும் நல்கின.

இவர் திருவனந்தபுரத்தின் மொழியியற்கழக ஆய்வு முதியராகவும், தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொல்காப்பியத் தகைஞராகவும் 1982க்குப் பிறகு பணிசெய்தார். திருவனந்தபுரத்தில் தமிழ் யாப்பு வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார். தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்காகத் தொல்காப்பியத்துக்குப் புத்துரை விளக்கம் எழுதினார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் தொடக்க நிலையில் செயல்முறைகளை வகுக்க அமைக்கப் பெற்ற வல்லுநர் குழுவின் தலைவராக இருந்தும், தமிழகப் புலவர்குழு, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், மேலைச்சிவபுரி சன் மார்க்கசபையைச் சார்ந்த கணேசர் செந்தமிழ்க் கல்லூரி ஆகிய அமைப்புக்களின் தலைவராக இருந்தும் இவர் ஆற்றிய தமிழ்ப் பணிகள் மிகப் பல. தில்லையில் அம்பலத்தின்கண் நின்று திருமுறைகள் ஓதி வழிபடப் பெற வேண்டும் என்பதற்காகப் போராட்டம் நடத்தி வென்றவர்.

உலகத் தமிழ் மாநாடுகள் உள்ளிட்ட பல்வேறு ஆய்வு மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் பங்கேற்றும், தலைமை தாங்கியும் ஆய்வுக் கருத்துக்களை வெளியிட்ட இவர், சென்னை, அண்ணாமலை, மதுரை, பாரதிதாசன் வெங்கடேசுவரா பல்கலைக்கழகங்களில் அறக் கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

வள்ளல் அழகப்பரின் வாழ்க்கை வரலாற்றை வெண்பாக்களால் வெளியிடும் 'கொடை விளக்கு', 'மனைவியின் உரிமை', 'நெல்லிக்கனி' முதலிய 4 நாடகங்கள், 'கம்பர்', 'வள்ளுவம்', 'தொல்காப்பியப் புதுமை', 'தமிழ்க்காதல்' முதலிய ஆய்வு நூல்கள் என இருபதுக்கும் மேற்பட்ட சிறந்த நூல்களை எழுதியவர். இவரது 'கம்பர்' எனும் நூல் தமிழக அரசின் பரிசு பெற்ற நூலாகும். இவர் கையாளும் தமிழ்நடை தனிச்சிறப்புடையதாகும். ''உரைநடையில் புதுத்தடம் காட்டுபவர். உவமை நடையும், சுருக்க நடையும், பல்வேறு முடிவு நடையும் இவருடைய தமிழ் நடையை வளம் செய்து தனி நடையாளராகக் காட்டுகின்றன'' என மணிவாசகர் பதிப்பக வெளியீடு ஒன்றில் கூறப்பட்டிருப்பது இவர் நடைக்குப் பொருத்தமான பாராட்டாகும்.

தமிழ்ப் பற்றுமிக்க இவர் எழுதத் தொடங்கும் போது பிள்ளையார் சுழிக்குப் பதிலாகத் 'த' என்று எழுதித் தொடங்குவார். 'த' தமிழைக் குறிக்கும். தம் மக்களுக்கெல்லாம் தொல்காப்பியன், பூங்குன்றன், பாரி, தென்றல், மாதரி, பொற்றொடி எனத் தமிழ்ப் பெயர்களைச் சூட்டியவர். தமிழ்வழிக் கல்வியியக்கம் அமைத்துத் தமிழகமெங்கும் நடத்தியவர். தனித்தமிழ் ஆக்கத்திற்குத் தாமே புதிய சொற்களைப் படைத்து எல்லா நிலையிலும் எங்கும் தமிழ் வளர ஓய்வின்றி உழைத்தவர். எக்கலையையும் தமிழ்ப்படுத்தலாம் எனும் அழுத்தமான கொள்கையர்.

இவர் எளிய தோற்றமும், உயரிய நோக்கமும் கொண்ட பழுத்த தமிழறிஞர்; சிறந்த சிந்தனையாளர்; இந்நூற்றாண்டின் பிற்பகுதியில், இத்தலைமுறையில் தமிழ்ப் பணிக்காகவே வாழ்ந்து மறைந்த மூதறிஞர் என இவர் பற்றித் தமிழக வரலாறு சுட்டும்.

மாத்தூர்

ஒன்பது நகரக் கோவில்களுள் ஒன்றான இத்திருக்கோவில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து இலுப்பைக்குடி வழியாகச் செல்லும் சாலையில் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

கி.பி. 712 ஆம் ஆண்டில் இக்கோவில் பாண்டிய மன்னனால் நகரத்தாருக்கு அளிக்கப் பெற்றது. இலுப்பைக்குடிப் புராணத்தில் இடம்பெறும் ஒரு பழங்கதை, கொங்கணச் சித்தர் இரசவாதத்தால் உருவாக்கிய தங்கத்தின் மாற்று உரைத்துப் பார்த்த ஊர் ஆகையால் இவ்வூர் மாற்றூர் எனப் பெயர் பெற்றது எனக் கூறுகிறது. பின்னர் இது மருவி மாத்தூர் என ஆயிற்று. இக்கோவில் சார்ந்தோர் இசைபிடிமானத்தில் ''கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்'' என்று தொடங்கித் தமது உட்பிரிவைக் குறிப்பிடுவர். இக்கோவிலில் ஏழு உட்பிரிவுகள் உள்ளன. அவை :

1. உறையூருடையார்
2. அரும்பாக்கூருடையார்
3. மணலூருடையார்
4. மண்ணூருடையார்
5. கண்ணூருடையார்
6. கருப்பூருடையார்
7. குளத்தூருடையார்

Koviloor Digital Library

இளையாத்தங்குடி நகரத்தார்களைப் போலவே இவர்களும் சமூக உறவில் ஒவ்வொரு உட்பிரிவும் ஒரு தனிக்கோவில் போலவே நடந்து கொள்வர்.


இக்கோவில் சார்ந்த நகரத்தார்கள் 1. அரண்மனை சிறுவயல் 2. அரிமழம் 3. அலவாக்கோட்டை 4. க. அளகாபுரி 5. பி. அளகாபுரி 6. ஆத்தங்குடி 7. ஆ. தெற்கூர் 8. ஆவினிப்பட்டி 9. இராயவரம் 10. கொ. இலட்சுமிபுரம் 11. வி. இலட்சுமிபுரம் 12. உலகம்பட்டி 13. கடியாபட்டி 14. கண்டர மாணிக்கம் 15. கண்டவராயன்பட்டி 16. கண்டனூர் 17. கருங்குளம் 18. கல்லல் 19. கல்லுப்பட்டி 20. காரைக்குடி 21. கானாடுகாத்தான் 22. கீழச்சிவல்பட்டி 23. கீழப்பூங்குடி 24. குருவிக் கொண்டான்பட்டி 25. குழிபிறை 26. கொத்தமங்கலம் 27. கோட்டையூர் 28. கோனாபட்டு 29. சண்முகநாதபுரம் 30. சிறுகூடற்பட்டி 31. உ. சிறுவயல் 32. சொக்கநாதபுரம் 33. சொக்கலிங்கம்புதூர் 34. சோழபுரம் 35. தேவகோட்டை 36. நற்சாந்துபட்டி 37. நாட்டரசன் கோட்டை 38. நெற்குப்பை 39. நேமத்தான்பட்டி 40. பட்டமங்கலம் 41. பலவான்குடி 42. பள்ளத்தூர் 43. பனையப்பட்டி 44. பாகனேரி 45. புதுவயல் 46. மகிபாலன்பட்டி 47. மதகுபட்டி 48. மானகிரி 49. மிதிலைப்பட்டி 50. ஆ. முத்துப்பட்டணம் 51. வலையபட்டி 52. விரையாச்சிலை 53. வெற்றியூர் 54. வேகுப்பட்டி 55. வேந்தன்பட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்தம் 6810 புள்ளிகள்.

இத்திருக்கோவிலில் அமர்ந்தருள் செய்யும்

இறைவன் : ஐநாற்றீசர்

இறைவி : பெரியநாயகி

இத்திருக்கோவிலுக்கு 2–2–1949, 1–7–1974, 19–8–1988 ஆகிய நாட்களில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நடைபெற்றுள்ளன. இங்கு இரு பெரிய நகரவிடுதிகளும் ஊருணியும் ஊருணியின் வடகரையில் கலங்காத கண்டவிநாயகர் கோவிலும் அமைந்துள்ளன.



மாத்தூர்க் கோவில்

மாத்தூர்க் கோவிலின் பிரகாரத்தில் மேல்திசையில் வரதராசப் பெருமாள் நிலமகள் திருமகளோடு நின்ற கோலத்தில் காட்சிதரும் சன்னதி அமைந்துள்ளது. இது இக்கோவிலின் தனிச்சிறப்பாகும். இங்கு தலவிருட்சம் மகிழ மரமாகும். இராச கோபுர வாயிலில் உள்ள இரு நிலைக் கால்களிலும் பல்வேறு முனிவர்களின் சிலைகளோடு இராம கிருஷ்ணர் விவேகானந்தர் இரமணமகரிஷி ஆகியோர் சிலைகளும் வடிக்கப் பெற்றுள்ளன.

Koviloor Digital Library

மானகிரி

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடிக்கு மேற்கே 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி ஆகிய நான்கு கோவில்களைச் சேர்ந்த 80 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தளக்காவூர் ஊராட்சி மன்றத்தின் ஒரு பகுதி.

இங்கு நகரத்தாருக்குப் பொதுவான சுப்பிரமணியசாமி கோவில் அமைந்துள்ளது. 1982இல் திருப்பணி முடித்துக் குடமுழுக்கும், பின்னர் 1994இல் ஒரு குடமுழுக்கும் செய்யப் பெற்றது. ஆண்டுதோறும் வைகாசி மாதம் கடைசி வெள்ளிக்கிழமை இங்கு நகரத்தார் பொதுவில் மகேசுவர பூசை நடத்தி அன்னதானம் செய்து வருகின்றனர். இக்கோவிலில் நவக்கிரகங்கள் கல்யாணக் கோலத்தில் தம்பதி சமேதராக அமைந்திருப்பது இக்கோவிலின் தனிச் சிறப்பு. எனவே, இக்கோவிலில் சனிப்பெயர்ச்சி இரண்டரை ஆண்டுகட்கொரு முறை சிறப்பான விழாவாகக் கொண்டாடப் பெறுகிறது. நகரத்தார் கட்டி நிருவகிக்கும் சக்தி விநாயகர் கோவிலும் இவ்வூரில் உள்ளது.

தளக்காவூர் அதளநாயகி அம்மன் கோவில் திருப்பணி இவ்வூர் லெ.அரு.லெ. குடும்பத்தாரால் செய்யப் பெற்றது. அக்கோவிலில் ஆண்டு தோறும் சித்திரைமாதம் நடைபெறும் 10 நாள் திருவிழாவில் 5,6,7,10 ஆகிய நான்கு நாள் மண்டகப் படிகள் இவ்வூர் நகரத்தாரால் செய்யப்படுகின்றன.

இவ்வூர்க் குடிதண்ணீர்க் குளமாகிய சக்தி விநாயகர் கோவில் ஊருணி சி.நா.நா. குடும்பத்தாராலும், தளக்காவூர்ப் பிள்ளையார் கோவில் ஊருணி இவ்வூர் கலு. வயி. வயிரவன் செட்டியார் மற்றும் நாச்சியாபுரம் சி.வி.நா. நாச்சியப்ப செட்டியாராலும் அமைக்கப் பெற்றவை.

இவ்வூரில் லெ. அருணாசலம் செட்டியாரால் 1928இல் தொடங்கப்பெற்று அவர்தம் வழி முறையினரால் நிருவகிக்கப் பெற்று வரும் லெ.அரு. நடுநிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இராம. க. இராமசாமி செட்டியாரால் கட்டப்பெற்ற மகப்பேறு மருத்துவமனை ஒன்றும் இயங்கி வருகிறது.

இவ்வூரில் சுப்பிரமணியசாமி கோவிலில் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப் பெறுகிறது. ஆண்டுதோறும் ஆடி மாதம் மூன்றாவது புதன்கிழமை தேனாத்தாள் படைப்பு படைக்கப்படுகிறது.

இவ்வூர் அரு.குடும்பத்தார் இராசபாளையம் அருகே கரிவலம்வந்த நல்லூரில் ஒரு சிவன் கோவிலும் அக்கோவிலுக்கு என ஒரு பசுமடமும் கட்டியுள்ளர்.

மிதிலைப்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து குன்றக்குடி, கீழச்சிவல்பட்டி, இராங்கியம் வழியாகச் செவ்வூர் செல்லும் சாலையில் 30 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், சூரக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 5 கோவில்களைச் சேர்ந்த 208 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

சிவயோகவல்லி, பொய்யாமொழியம்மை ஆகியோருடன் உடனாய ஆவுடையநாதர் கோவில் நகரச் சிவன்கோவிலாகும். 1926இல் கட்டப் பெற்ற இக்கோவிலுக்குக் கல்திருப்பணி செய்யப்பட்டு 29–1–1940இல் முதற்குடமுழுக்கு விழா நடைபெற்றது. பின்னர் 17–3–1957, 2–2–1984 ஆகிய நாட்களில் குடமுழுக்கு விழாக்கள் நிகழ்ந்துள. சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலும் ஊருணியும் இரணிக்கோவில் வெ.மு. குடும்பத்தாராலும் சித்தி விநாயகர் கோவிலும் ஊருணியும் மாத்தூர் குளத்தூரைச் சேர்ந்த க.ள.அ. குடும்பத்தாராலும் சிறுகாட்சி விநாயகர் கோவில் பிள்ளையார்பட்டி மு.வயி.வயி. குடும்பத்தாராலும் பொய்யாமொழி விநாயகர் கோவிலும் ஆவுடையார் ஊருணியும் மாத்தூர் குளத்தூர் நா. பழ. சித. மு. குடும்பத்தாராலும் வரதராசப் பெருமாள் கோவிலும் ஊருணியும் இளையாத்தங்குடிக் கழனிவாசல் பழ.சுப. சுப்பையா செட்டியாராலும் கட்டப் பெற்றன. சிவன்கோவிலில் தை மாதம் இரண்டாம் தேதி சுவாமி புறப்பாடு நடைபெறும்.

இளையாத்தங்குடிக் கழனிவாசற்குடியார், மாத்தூர் குளத்தூரார், மாத்தூர் குளத்தூரில் க.யெ. ஐயாக்கள் வீடு படைக்கும் 3 பொதுப் படைப்புக்கள் இவ்வூரில் நடைபெறுகின்றன. கழனிவாசற்குடியார் படைப்பு வீட்டில் தெண்டாயுதபாணிக்கும், படைக்கப்படும் பெண் தெய்வத்திற்கும் தனித்தனி அறைகள் உள்ளன. பொங்கலன்று பங்காளிகள் இங்கு கூடிப் பொங்கல் வைத்த பிறகே தத்தம் வீடுகளில் பொங்கல் வைப்பர்.

Koviloor Digital Library

புரட்டாசி மாதம் சிவன்கோவிலில் நகரத்தார்களால் இராமாயணம் படிக்கப்படுகிறது. மாத்தூர் குளத்தூரைச் சேர்ந்த கு.யெ. அ. இராம. இராமன் செட்டியார் மனைவி மீனாட்சி ஆச்சியும் ஆத.சோ. சேதுச் செட்டியாரும் அமைத்துள்ள குருபூசை மடத்தில் நால்வர் குருபூசை நடைபெற்றது.

ந.பழ.சித.மு.ந. நல்லகருப்பஞ் செட்டியாரால் 1979இல் தொடங்கப்பெற்ற சிவலிங்கம் மீனாட்சி தொடக்கப் பள்ளி ஒன்றியப் பள்ளியாக நடைபெறுகிறது. சிவயோகபுரத்தில் மு.வயி. கரு.ராம. இராமசாமி செட்டியாரால் இடம் கட்டிடம் நன்கொடை அளிக்கப் பெற்றுத் தொடங்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி உள்ளது.

குன்றக்குடியில் உள்ள மிதிலைப்பட்டி நகரத்தார் மடம் வெ.மு. குடும்பத்தார் நிருவாகத்தில் உள்ளது. இரணிக்கோவில் பழ.ப. வகையினர் மிதிலைப்பட்டியில் நந்தவனமும், மாத்தூர் குளத்தூர் கஎ.பழகப. குடும்பத்தார் இங்கு பசுமடமும் மாத்தூர் குளத்தூர் ந.பழ. குடும்பத்தார் திருக்கோளக்குடியில் குடைவரைப் பிள்ளையார் கோவில் குடிநீர் ஊருணியும் அமைத்துத் தருமம் செய்துள்ளனர்.

மீனவன், (8-12-1940)

(இயற்பெயர் : மீனாட்சி சுந்தரம், நா)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
கண்டரமாணிக்கம்
கவிஞர்

சுப.நா. நாச்சியப்பன் – விசாலாட்சி ஆச்சியின் மகன். மயிலம் தமிழ்க் கல்லூரியில் பயின்று புதுவயல் இராமநாதன் செட்டியார் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றியவர்.

சிறந்த மரபுக்கவிஞர். அழகிய சந்தங்கள் பாடுவதில் வல்லவர். மாதவ மேகலை, மின்மினி ஆகிய காப்பியங்களையும் கம்பன் பிள்ளைத்தமிழ் நூலையும் இயற்றியுள்ளார்.

பல்லாண்டுகள் காரைக்குடி இந்து மாதாபிமான சங்கத்தின் செயலராகப் பொதுத் தொண்டு புரிந்துள்ள இவர் தமிழ் எழுத்தாளர் சங்கம் சிவகங்கை மாவட்டக் கிளையின் தலைவராகவும் அரிமா சங்கத்தில் பல்வேறு நிலைகளிலும் பொறுப்பு வகித்து வருகிறார்.

காப்பியப் போட்டியில் மாதவ மேகலைக்கு முதற்பரிசும் பினாங்குப் போட்டியில் கம்பன் பிள்ளைத் தமிழ் நூலுக்கு முதற்பரிசும் அமுதசுரபி இதழ் நடத்திய காப்பியப் போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளார். குன்றக்குடி ஆதீனம் 'கவிஞர்கோ' விருதும் சேக்கிழார் பொற்பதக்கமும் அளித்துப் பாராட்டியுள்ளது. திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கப் போட்டியில் வென்று 'பொற்கிழிக் கவிஞர்' பட்டம் பெற்றார். 'காப்பியக் கவிஞர்' பட்டம் இராமசாமி தமிழ்க்கல்லூரியினர் வழங்கியதாகும். இவர், மரபு மாறாது கவிதை பாடும் செந்தமிழ்ச் சந்தக் கவிஞர்.

மீனாட்சிசுந்தரம், சொ.சொ., (1-11-1944)

வைரவன் கோவில் - பெரியவகுப்பு
தேவகோட்டை
இந்திய ஆட்சிப்பணி அதிகாரி (IAS)

சொர்ணலிங்கம் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகனாகிய இவர் சென்னை லயோலா கல்லூரியில் கணிதவியல் முது அறிவியல் பட்டம் பெற்றவர். 1968ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணித் தேர்வில் கர்நாடக மாநிலப் பிரிவில் வெற்றி பெற்றார். இவர் பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரத்தின் தம்பி.

கர்நாடக மாநிலம் சிக்பல்லபூரில் துணை ஆணையராகப் பணி தொடங்கிய இவர் அங்கு பல்வேறு மாவட்டங்களில் துணை ஆட்சியராகப் பணியாற்றியுள்ளார். கர்நாடக மாநிலத்தின் முதன்மைத் தொழிலான பட்டுப்பூச்சி வளர்ப்பு வாரியத்தின் இயக்குநராகவும் பட்டுநெசவு உற்பத்தித் துறையின் இயக்குநராகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். கர்நாடகப் பால்வளத்துறை இயக்குநராகவும், ஊரக வளர்ச்சித்துறைச் செயலராகவும் பணி புரிந்துள்ளார். மத்திய அரசின் அழைப்பினால் புதுதில்லியில் வேளாண்மை அமைச்சில் பால்வளத்துறை வளர்ச்சித் தொழில் நுட்பத் துறையில் இணை இயக்குநராகப் பொறுப்பேற்றுச் சிறப்புறப் பணிபுரிந்துள்ளார். 1995 ஏப்பிரல் முதல் கர்நாடக மாநில முதலமைச்சரின் முதன்மைச் செயலராகவும் தேவகௌடா தலைமை அமைச்சரானது முதல் தலைமை அமைச்சரின் செயலகத்திலும் பணி யாற்றியுள்ளார். இவருக்கு அளிக்கப் பட்டுள்ள இப்பொறுப்பு இவரது ஆட்சித் திறமையையும் அறிவு நுட்பத்தையும் உணர்த்தும் சான்றாகும்.

பிரிட்டனின் சசெக்ஸ் பல்கலைக் கழகத்தில் வருகைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். பட்டுப்புழு வளர்ப்பு, மாவட்ட நிருவாகத்தில் திட்டமிடல், பஞ்சாயத்து ராஜ் நிறுவன அமைப்புக்கள், இந்திய மல்பெரி பட்டுக்கு இங்கிலாந்து அங்காடி போன்ற பல்வேறு தலைப்புக்களில் உலக அளவில் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் கலந்து கொண்டு கட்டுரை படித்துள்ளார். இத்தாலி,

Koviloor Digital Library

வெனிசு, இலண்டன் அமெரிக்கா ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாடுகளில் இந்தியாவின் சார்பாகக் கலந்து கொண்டுள்ளார். 'வளர்ந்து வரும் நாடுகளில் பரவல்முறை' இவர் எழுதியுள்ள ஆய்வு நூலாகும். உலகம் சுற்றிய நகரத்தாராக இந்திய ஆட்சிப் பணித்துறையில் இவர் புகழ் பெற்று விளங்குகிறார்.

மீனாட்சி, டாக்டர். அரு., (30-3-1944)

பிள்ளையார்பட்டி
நற்சாந்துபட்டி
கணிதவியல் பேராசிரியர்

பனையப்பட்டி சி.மு.மு. அருணாசலம் செட்டியார் – அலமேலு ஆச்சியின் மகள். பேராசிரியர் பெரி. கற்பகக் கணபதியின் வாழ்க்கைத் துணைவியார். கணிதத்தில் பி.எச்டி. பட்டம் பெற்ற இவர் 1960–70இல் கனடா வாட்டர்லூ பல்கலைக் கழகத்தின் படிப்புதவி பெற்று ஆராய்ச்சி மேற்கொண்டார். 1981இல் அதே பல்கலைக் கழகத்தால் வருகைப் பேராசிரியராக நியமிக்கப் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் புலத்தில் கணித இயல்துறைத் தலைவராகப் பணியாற்றும் இவர் உலகில் பல்வேறு நாடுகளின் ஆய்வு இதழ்களில் அறுபது கட்டுரைகள் எழுதியுள்ளார். கனடா, அமெரிக்கா, ஸ்பெயின், இங்கிலாந்து எனப் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ளார். இவரது வழிகாட்டுதலில் மூவர் பி.எச்டி பட்டமும் முப்பதுபேர் எம்.பில் பட்டமும் பெற்றுள்ளனர்.

மீனாள் பழநியப்பன் (20.10.1963)

வைரவன் கோவில்
விரையாச்சிலை
நீதிபதி

காரைக்குடியில் மேலக்கொறட்டியார் வீட்டில் நா.நா.மு. நாராயணன் செட்டியார் – உண்ணாமலை ஆச்சியின் மகளாகப் பிறந்து, விரையாச்சிலையில் மு.பழ.சே. பழநியப்பனின் மனைவியாக 1991இல் வாழ்க்கைப்பட்டவர்.

மதுரை பாத்திமா கல்லூரியில் விலங்கியல் பட்டம் பெற்றபின், மதுரை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலேயே முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கம் பரிசு பெற்றார்.

ஏழாண்டுகள் மதுரை, சென்னை, கோவை ஆகிய பெருநகரங்களில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1994இல் நீதித்துறை நடுவர் பணிக்கு நடைபெற்ற நேர்முகத் தேர்வில் தேர்வு செய்யப் பெற்று, கோவையில் 3ஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்ற நடுவராகப் பொறுப்பேற்றார். இப்போது 2ஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்ற நடுவராகக் கோவையில் பணியாற்றி வருகிறார்.

நகரத்தார் சமூகப் பெண்கள் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுப்பெயரும், புகழும் பெற்றுத் தங்களுக்கும் சமூகத்திற்கும் சிறப்புச் சேர்ப்பது என்ற வரிசையில் நீதித்துறையில் புகுந்து, உயர்பதவி பெறும் முதல் ஆச்சியாகத் திகழும் சிறப்பு இவருக்குரியது.

மீனு சுப்பையா., (19-2-1974)

வைரவன் கோவில் - பிள்ளையார் வகுப்பு
பள்ளத்தூர்
வைர ஆய்வியல் வல்லுநர்

சோம. சுப்பையா செட்டியார் – தமிழரசி ஆச்சியின் மகள். நகரத்தார் சமூகப் பெண்களில், மிகவும் வித்தியாசமாக வைரம் பற்றி ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டு அதில் பல பட்டங்கள் பெற்றவர். அமெரிக்காவில் நியூயார்க் நகரில் வைரம் பற்றிய ஆய்வில் பட்டம் பெற்ற இவர் நவரத்தினக் கற்கள் ஆய்வில் டிப்ளமா (D.G.) பெற்றுள்ளார். பம்பாயில் நகைள் வடிவமைப்புப் பயிற்சி பெற்றவர். இந்திய நவரத்தினஇயல் அரங்கத்தின் (F.F.I.G.) பட்டமும் பெற்றுள்ளார்.

இப்போது சென்னையில் தனிப்பட்ட முறையில் வைர நகை வடிவமைப்புச் செய்து விற்பனை செய்து கொண்டிருக்கிறார்.

FICCI மகளிர் அமைப்பிலும் சென்னை பிரசிடென்ஸி சுழற்குழுவிலும் உறுப்பினர். வேறுபட்ட கல்வியைப் பயின்றாலும் அதிலும் புகழ் பெற்று விளங்கும் நகரத்தார் பெண் இவர்.

முத்தப்ப செட்டியார், பாடுவார் (1750 - 21-10-1823)

நேமங்கோவில்
அளகாபுரி (பில்லமங்கலம்)
புலவர்

அழகப்ப செட்டியார் – இலட்சுமி ஆச்சியின் மகனாகக் கருவிலேயே திருஉடையவராகத் தோன்றினார். மிதிலைப்பட்டிக் கவிராயர் குடும்பத் தொடர்பினாலும் இயல்பான தமிழ் ஆர்வத்தினாலும் கவிதை பாடும் ஆற்றல் கைவரப் பெற்றவராக விளங்கினார். கவிபாடும் ஆற்றலோடு பாடும் வாக்குப் பலிக்கும் தெய்வ அருளுடையவராகவும் திகழ்ந்தார். எனவே இவரை அனைவரும் பாடுவார் என்று அழைத்தனர்.

Koviloor Digital Library

இவரது வாக்குப் பலித்தை விளக்கும் அற்புத நிகழ்ச்சிகள் பல நடைபெற்றதாகக் கூறுவர். முதன் முதலில் இவர் உப்பு விற்கச் சந்தைக்குச் சென்ற போது ஆயக்காரன் தடுத்துத் தீர்வைப் பணம் தரவேண்டும் என்று கேட்டான். இவர் தன்னிடமிருந்த பணத்திற்கு உப்பு வாங்கிவிட்ட தால் இவரிடம் பணம் இல்லை. உப்பை விற்றுப் பணம் தருவதாகச் சொன்னார். ஆயக்காரன் ஒத்துக் கொள்ளவில்லை. முதல் வணிக முயற்சி தடைப்படுகின்றதே என்ற இவருடைய சினம் செந்தமிழ் வசைப்பாட்டாகப் பிறந்தது.

தாயைக் கேட்டோர் பணம் வாங்கிச்
சந்தை தேடி உப்பளந்து
மேயப் போகும் பசுவைப் போல்
மேற்கே நாடிப் போகுங்கால்
தோயப் போட்டு வழி மறித்தான்
தோசி முகத்துச் சிவராமன்
ஆயக்காரன் அவன் இல்லம்
அடியோடு எரிந்து அழிந்திடவே

என்று இவர் பாடிய அன்றே அந்த ஆயக்காரன் வீடு தீப்பற்றி எரிந்ததாம். ஊரில் இவரது வாக்குப்பலிதம் எங்கும் பரவியது.

வெண்பாப்புலிக் கவிராயருக்கும் முத்தப் பருக்கும் போட்டி வந்த ஒரு கதை. கவிராயர் ஒரு வெண்பாவைப் பாடி ஆட்டுக்கடாவின் தலையில் வைக்க ஆட்டுக்கடாவின் தலை வெடித்துச் சிதறியது. கண்களில் கண்ணீர்வடிய முத்தப்பர் ஒரு பாடலைப்பாடி, தலை பிளவுண்ட இடத்தில் திருநீறுபூசி முருகப் பெருமானை வணங்கி ஆட்டின் மேல் வைத்தார். பிளந்து வெடித்த தலை மீண்டும் வந்து ஒட்டிக் கொண்டது. கவிராயரே மகிழ்ந்து இவரைப் பாராட்டிப் பாடினார். பாதரக்குடியில் வீற்றிருந்த கலாமடம் சேனாபதி சுவாமிகள் முத்தப்பரை ஆருயிர் நண்பராகக் கொண்டார். குன்றக்குடித் திருவிழாவின் போது சேனாபதியார் வேண்டுகோளுக்கு ஏற்ப மழை பொழியவும், அதுவே அளவு மீறிப் பொழிந்த பொழுது மீண்டும் மழை நிற்கவும் முத்தப்பர் பாடியருளினார். அவருடைய ஏவல்வழி இயற்கை நின்றது எனில் அது முத்தப்பரின் இயற்றமிழ் ஆற்றலை எடுத்தியம்புகின்றது.

பாடுவார் பாடியுள்ள நூல்கள் :

1. திருமுக விலாசம்
2. நகரவாழ்த்து
3. செயங்கொண்டார் சதகம்
4. உச்சினி மாகாளியம்மன் துதி
5. தல்லாகுளம் கருப்பர் அகவல்
6. மருதம் பிள்ளையார் பதிகம்
7. கிரணிப்பட்டி முத்துமாரியம்மன் பதிகம்
8. குன்றக்குடி முருகன் பதிகம்
9. பழநியாண்டவர் பதிகம்
10. இராங்கியம் கருப்பர் குதிரையடி.

இவற்றுள் செயங்கொண்டார் சதகம் நேமங்கோவில் சோழீசரைப் போற்றி வணங்கும் நூலாகும். ஒவ்வொரு பாடலிலும் பழமொழி, புராணக்கதைக் கருத்து ஒன்று விளக்கப் பட்டுள்ளது. பாடுவாரின் பரந்துபட்ட கேள்வி நூலறிவை இச்சதக இலக்கியம் நமக்கு உணர்த்துகிறது.

நகரத்தார் வரலாற்றை அறியத் துணைபுரியும் நூல்கள் திருமுக விலாசம், நகர வாழ்த்து ஆகியவை. முருகப் பெருமானை யழைத்து ஊனையூர்ப் பண்டாரம் குறையிரக்க, முருகன் நகரத்தார் பெருமைகளையும் சிறப்பையும் கூறி, பண்டாரத்திற்குத் திருமுகம் கொடுத்து நகரத்தாரிடம் அனுப்ப, நகரத்தார் அவனுக்குப் பொருள் உதவி செய்த நிகழ்ச்சிகளைக் கூறும் வகையில் திருமுக விலாசத்தை முத்தப்பர் பாடியுள்ளார்.

"இருநிதியம்
நாடறியப் பூவுலகில் நான்முந்திரி தேடிக்
கோடி யளிக்கும் கொடையாளர் - தேடிநிதி
மாயேஸ்வரர் பூசை மாறாது அரிபூசை
சேயோர் மும்மூர்த்தி பிரதிஷ்டை யொடு - மாயாத
ஊரணிகள் கூபம் இவை உண்டுபண்ணி
மிக்கதர்மம்
தாரணியிற் செய்திட்ட சற்புருடர் -வாரஞ்
சிகரத்தில் ஏற்றிவைத்த தீபம்போல் ஏழு
நகரத்தார் எல்லாம் நமதடியார்"

என்று முருகப்பெருமானே நகரத்தார் சிறப்பைப் பண்டாரத்திடம் கூறுவதாகப் பாடுவார் முத்தப்பர் பாடுகிறார். நகர வாழ்த்து நகரத்தார் திருமணச் சடங்குகளை விளக்கிக் கூறும் நூலாகும். அவர் காலத்தில் மாப்பிள்ளையே பெண் கழுத்தில் தாலிகட்டும் வழக்கம் இருந்ததனைப் புலவர் சுட்டிக்காட்டுகிறார். இடையில் இவ்வழக்கம் மாறி மீண்டும் பாடுவார் காலம் போல மாப்பிள்ளை தானே பெண்ணுக்குத் தாலிகட்டும் வழக்கம் வந்துள்ளது. நகரத்தார் மரபை நாம் உணரப்

Koviloor Digital Library

பாடுவார் பாடல்கள் துணை செய்கின்றன. தன்னைப் பற்றிய மேக நோயினின்று விடுபட விநாயகனை வேண்டிப் பாடிய பாடல்களே மருதம் பிள்ளையார் பதிகம் என்னும் நூலாகும். எழுபத்து மூன்று ஆண்டுகள் இவ்வுலகில் நிறைவாழ்வு வாழ்ந்த பாடுவார் தம் கவிதைகளாலும், வாக்கு வன்மையாலும் இன்றும் இறவாது வாழ்கின்றார். இவர் பெயரால் கீழச்சிவல்பட்டியில் அமைந்துள்ள கோட்டத்தில் ஆண்டுதோறும் குருபூசை கொண்டாடப் பெறுகிறது.

பாடுவாரை நகரத்தார் பெருமக்கள் போற்றிக் கொண்டாடுகின்றனர்.

"காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடு கட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்
வீடுகட்கு
அன்றைக்கு வந்தளங்கள் அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு"

என இவர் பாடிய பாடல் பெரும்பாலான நகரத்தார் வீடுகளில் இடம் பெற்றிருக்கக் காணலாம். (பார்க்க : பாடுவார் முத்தப்பர் கோட்டம்)

முத்தப்பன், டாக்டர். பழ., (17-5-1945)

வைரவன் கோவில் - தெய்வநாயகர் வகுப்பு
புதுவயல்
கல்வியாளர்

பழநியப்ப செட்டியார் – இலக்குமி ஆச்சியின் மகன். புலவர் பட்டமும் எம்.ஏ. பட்டமும் சைவ சித்தாந்தத்தில் ஆய்வு செய்து டாக்டர் பட்டமும் பெற்றவர். மயிலம் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் முதல்வராகிக் கல்லூரியைச் சிறப்புற நடத்தி வருகிறார். கல்லூரியில் இலக்கியச் சிந்தனை ஆய்வு அரங்குகள் திங்கள் தோறும் இவரது ஊக்குவித்தலால் நடைபெற்று வருகின்றன.

புதுவயல் ஸ்ரீசரசுவதி சங்கத்தின் செயலராகவும் பொன்னமராவதி கம்பன்கழக இணைச் செயலாளராகவும் தொண்டு புரிந்து வருகிறார். 100க்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ள இவர் சிந்து இலக்கியம், திருமுறைகளில் அகக் கோட்பாடு, பெரிய புராணத்தில் மனித நேயம், முப்பொருள் இயல்பு முதலிய அரிய 6 ஆய்வு நூல்கள் படைத்துள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி ஆதீனம் 'தமிழாகரர்' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது. இவர் சிறந்த சொற் பொழிவாளரும் ஆவார்.

முத்துக் கணேசன், ரெ., (20-8-1927)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு
காரைக்குடி
கவிஞர் - நூலாசிரியர்

வெ.பெரி.சா. அரங்கநாதன் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். இவர் படித்த முறையான கல்வி பள்ளி இறுதி வகுப்புவரை மட்டுமே. ஆயினும் தாமே படித்தும் தக்காரொடு பழகியும் தமிழ்ப்புலமை கைவரப் பெற்றவர்.

அமெரிக்காவிலுள்ள அரிசோனா பல்கலைக் கழகம் இவரது புலமையைப் பாராட்டி 1984இல் டாக்டர் பட்டம் வழங்கியது. அதே ஆண்டில் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சிவகங்கை மாவட்டக்கிளை 'கவிச்செம்மல்' என்ற பட்டத்தை வழங்கியது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் 1989இல் 'கவிஞர்கோ' என்ற பட்டத்தை அளித்தார்.

1972 முதல் காரைக்குடி அரிமா சங்கத்தில் பணியாற்றிய இவர் 1984இல் காரைக்குடி அரிமா சங்கத் தலைவராகவும் 1986இல் 324பி அரிமா மாவட்டத் தலைவராகவும் தொண்டாற்றி யுள்ளார்.

1987இல் தம் மணிவிழாவின் போது இவர் ஒரு நகரத்தார் குலப்பெண்ணுக்குத் திருமணம் செய்து வைத்தார். மேலும் தம் மணிவிழா நினைவாகக் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் "டாக்டர் ரெ.மு. மணிவிழா அறக்கட்டளை" நிறுவியுள்ளார். மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் முதுகலைத் தேர்வில் கல்லூரி முதன்மை பெறும் மாணவர்க்கு ஆண்டுதோறும் பரிசு வழங்குகிறார். 'வெ.பெரி.சா. அறக்கட்டளை' நிறுவி அதன் வாயிலாகக் கல்வி மற்றும் திருமண நிதியுதவி வழங்கி வருகிறார்.

கவிஞராகவும், கட்டுரையாசிரியராகவும், உரையாசிரியராகவும் விளங்கும் இவர் 4 கவிதை நூல்களையும், இரு கட்டுரை நூல்களையும் படைத்துள்ளதோடு, நான்கு உரை நூல்களையும் மூன்று தொகுப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இவரது நல்லுரை வெண்பா என்ற நூலுக்குக் கவிமணி மதிப்புரை வழங்கிப் பாராட்டியுள்ளார். அந்நூலை வி.ஆர்.எம். செட்டியார் "ருபீஸ் ஆப் விஸ்டம்" என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். சைவப்பற்று மிக்க இவர் பாடல்பெற்ற சிவத்தலங்கள் தோறும் சென்று, தலத்துக்கு ஒரு வெண்பா பாடியுள்ளார். இதுவரை 150 தலங்களுக்குச் சென்றுள்ள சிறப்புடையவர்.

"டாக்டர் முத்துக்கணேசன் படைப்பாளர், உரையாசிரியர், கட்டுரையாளர் என்ற தமிழ் நலங்கள் வாய்ந்தவர்— சங்கப் புலவர்கள் போலத் தொழிலொடு தமிழையும் போற்றுபவர்" என இவரைப் பாராட்டுவார் வ.சுப. மாணிக்கனார்.

Koviloor Digital Library

முத்துக்கருப்பன், டாக்டர் வீர., (15-10-1934)

இரணிக்கோவில்

பலவான்குடி

கல்வியாளர், அறிவியலறிஞர்

மு. மு. வீர. வீரப்ப செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விலங்கியல் கற்று அங்கேயே விரிவுரை யாளராக 1957இல் கல்விப் பணியைத் தொடங்கினார். அமெரிக்கா விஸ்கான்சின் பல்கலைக்கழகத்திற்கு 1961இல் சென்று ஆய்வு செய்து 1965இல் முனைவர் பட்டம் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அமெரிக்க நாட்டு நிதி உதவியுடன் நோய்த் தடுப்பாற்றலியல் (Immunology) ஆராய்ச்சிப் பணியைத் தொடங்கினார். 1970இல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் துறைத்தலைவராகப் பொறுப்பேற்று நோய்த் தடுப்பாற்றலியலில் முதுகலைப் பட்டப்படிப்பை இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொடங்கினார். இவரது வழிகாட்டுதலில் இத்துறையில் 25 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போது பல்கலைக் கழகப் பண உதவிக் குழுவுக்கும் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கும் இடையே இணைப்பு அதிகாரியாக இவர் ஆற்றியபணி பலராலும் பாராட்டப்படுகிறது. பல தொண்டு நிறுவனங்கள், வெளிநாட்டு அமைப்புக்கள் வாயிலாக நிதி உதவி பெற்றுத் தொழுநோய், டைபாய்டு நோய்களைத் தடுப்பதற்கான அடிப்படைத் தடுப்பாற்றலியலில் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். 'கண் விழித்திரையில் ஏன் இரத்தக் குழாய்கள் அதிகமாக வளர்கின்றன' என்பதுபற்றி ஆய்வு மேற்கொண்டு இவர் கண்டுபிடித்துள்ள முடிவுகட்காக அகில இந்திய அளவில் பாராட்டப்பட்டுப் பல விருதுகள், பட்டங்கள் பெற்றுள்ளார். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகப் பணியாற்றிய இவர் புதிய பாடத்திட்டங்கள், ஆராய்ச்சி மையங்கள், தொலைதூரக் கல்வி விரிவாக்கம், கணிப்பொறி விரிவாக்கம் மூலமாக அப்பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றினார்.

முத்துப்பட்டணம் (ஆத்தங்குடி)

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து உ. சிறுவயல், பலவான்குடி வழியாக 13 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

காரைக்குடியின் ஓர் உட்பகுதி முத்துப் பட்டணம் என வழங்கி வருகிறது. அதனின்றும் வேறுபடுத்துவதற்காக இவ்வூரின் பெயரோடு, இதனை அடுத்துள்ள ஊரின் பெயரை இணைத்து ஆத்தங்குடி முத்துப்பட்டணம் அல்லது ஆ. முத்துப் பட்டணம் என வழங்கப்படுகிறது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 4 கோவில்களைச் சேர்ந்த 230 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இவ்வூராட்சி மன்றம் ப. முத்துப்பட்டணம் என வழங்கப்படுகிறது. அருகில் உள்ள பழகினிப்பட்டி என்ற சிற்றூரின் பெயர் சேர்ந்து இப் பெயர் வழங்குகிறது.

இங்கு நகரத்தாருக்குப் பொதுவான உலக நாயகி அம்மன் கோவில் உளது. 1890இல் திருப்பணி முடித்துக் குடமுழுக்குச் செய்யப் பெற்றது. இளையாத்தங்குடி பெருமருதூருடை யார்ப் பங்காளிகள் பிள்ளையார் கோவிலையும், மாத்தூர்ப் பங்காளிகளில் சு.நா. வகையினர் ஐநூற்று விநாயகர் கோவிலையும் கட்டியுள்ளர்.

இவ்வூர் அம்மன் கோவில் ஊருணி குடிநீர்க் குளமாகும். இளையாத்தங்குடிப் பெருமருதூ ருடையார்ப் பங்காளிகள் உடையான் செட்டி ஊருணியை அமைத்துள்ளர்.

இவ்வூர் மாத்தூர் மணலூர்ப் பங்காளிகள் வைகாசி மாதம் ஒரு பொதுப் படைப்பையும், ஆத்தங்குடியிலும் இவ்வூரிலும் உள்ள பிள்ளையார்பட்டியினர் இணைந்து ஒரு பொதுப் படைப்பினையும் படைத்து வருகின்றனர்.

இவ்வூரைச் சேர்ந்த பெ.மு. சுப்பையா செட்டியார், இராம. அழ. இராமசாமி செட்டியார், இராம. அழ. அருணாசலம் செட்டியார் ஆகியோர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற நகரத்தார்களாவர்.

இவ்வூர் சி.இராம.நா.நா. இராமநாதன் செட்டியார் குடும்பத்தார் இவ்வூரில் ஒரு பசுமடத்தையும் சித.மு.நா.இராம. குடும்பத்தார் பிள்ளையார்பட்டியில் துவாதசி மடத்தையும் தண்ணீர்ப் பந்தலையும் நடத்தி வருகின்றனர்.

Koviloor Digital Library

முத்துப்பழநியப்ப செட்டியார், இராம. (9-4-1914 - 22-12-1996)

பிள்ளையார்பட்டி
பாகனேரி
ஆன்மீகத்துறை

இராமன் செட்டியார் – கண்ணம்மை ஆச்சியின் மகன். மதுரை மங்கையர்க்கரசி ஆலை நிருவாகி. சைவசமயத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டு திருமுறை பரப்புவதையும் திருமுறை ஓதுவார்களைப் புரப்பதையும் தம் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு தொண்டாற்றியவர். எந்தக் கோவிலில் குடமுழுக்கு விழா நடந்தாலும் அங்கு தம் செலவில் ஓதுவார்களை அனுப்பித் திருமுறை பரவச் செய்வதே இவர் மேற்கொண்ட தலையாய திருத்தொண்டாகும். மதுரை பன்னிரு திருமுறை மன்றத்திற்குப் பலவகையிலும் உதவிபுரிந்துள்ள இவர் அதன் வாயிலாக இலவச நூல் வெளியீடுகள் வெளியிட்டுள்ளார். திருமுறைக் காவலர், திருமுறைச் செம்மல், அறநெறி அண்ணல் ஆகியன இவர் தொண்டினைப் பாராட்டி இவருக்கு வழங்கப் பட்டுள்ள பட்டங்களாகும். மன்னர் பின்னோராகிய நகரத்தார் இனத்துச் சிவநெறிச் செல்வராகிய இவர் மன்னரைப் போலத் திருமுறைவாணர்களைப் போற்றிப் புரந்து வந்தது பாராட்டுக்குரியது.

முத்துமாணிக்கம், லெ.மு.மு., (6-11-1933)

மாத்தூர் - மணலூர்
தேவகோட்டை
சமூகத் தொண்டர்

லெ.மு. முத்தையா செட்டியார் – சிகப்பி ஆச்சியின் மகன். மின்வாரியத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். 'பழம் நீ பாதயாத்திரைக்குழு' என்ற அமைப்பை *1980* இல் தொடங்கி ஆண்டுதோறும் பழம்நீ என்ற பக்திப்பாடல் தொகுப்புநூலை வெளியிடுவதோடு, கூட்டு வழிபாடு, கவியரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறார். இவ்வமைப்பு பழம்நீ அறக்கட்டளை என்ற பெயரால் *1993* இல் பதிவு செய்யப்பட்டது. இவரே இதன் நிருவாக அறங்காவலர். இவ்வமைப்பின் வாயிலாகத் தைப்பூசத்தில் பழநி நடைப்பயணம் செல்லுவார்க்கு இலவச மருத்துவ உதவி செய்யப்படுகிறது.

மதுரை நகரத்தார் சங்கத்தில் இருமுறை செயலராகப் பணியாற்றி இப்பொழுது பொருளாளராகப் பணியாற்றிக் கொண்டிருக் கிறார். மதுரையிலிருந்து திருப்பரங்குன்றத்திற்கு ஆவணிக் கார்த்திகைக்குப் பால் குடமும் காவடியும் எடுத்துச் செல்லுதல் கடந்த *15* ஆண்டுகளாக நகரத்தார் சங்கத்தால் நடத்தப் பெறுகிறது. இதனைத் தொடங்குவதற்குக் காரணமாக இருந்தவர்களுள் இவரும் ஒருவர்.

மாத்தூர்க் கோவில் செயற்குழு உறுப்பின ராகவும் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத் துணைச் செயலராகவும் விளங்கும் இவர் நகரத்தார் பொதுப்பணிகளில் முன்னின்று செயல்படும் திறமையான அமைப்பாளர் ஆவார்.

முத்துராமன், அண்ணாமலை (26-11-1944)

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார்
நற்சாந்துபட்டி
ஆலைநிருவாகி

அண்ணாமலை செட்டியாரின் மகன். சென்னை அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரியில் பி.டெக். பட்டம் பெற்றவர். ஆங்கிலோ பிரெஞ்சு நிறுவனம், பிரீமியர் மில்ஸ், நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேசன் ஆகியவற்றில் பல பொறுப்புக்களில் பல ஆண்டுகள் பணியாற்றி, இப்போது ஸ்ரீ வெங்கடேசா மில்லில் உதவி நிருவாகியாகப் பணியாற்றி வருகிறார்.

முத்துராமன், சுப., (7-4-1935)

இயைாத்தங்குடி - பட்டினசாமி
காரைக்குடி
திரைப்பட இயக்குநர்

சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க காலத்தில் அதில் ஈடுபட்டவரும் முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினருமான இராம. சுப்பையா – விசாலாட்சி ஆச்சியின் மூத்த மகன். பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தபின் கவியரசர் கண்ணதாசன் நடத்திய 'தென்றல்' இதழில் 2 ஆண்டுகள் பணியாற்றினார்.

*1957*இல் ஏ.வி.எம். திரைப்படத் தொழிற் கூடத்தில் படத்தொகுப்புத் துறையில் சேர்ந்தார். தொகுப்புத் துறையின் தொழில் நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்தபின் ஏவி.எம். நிறுவனத்தின் திரைப் படங்களில், உதவி இயக்குநராகப் பணியாற்றினார்.

ஏ.சி. திருலோகசந்தர் இயக்கிய பல படங்களுக்கு உதவி இயக்குநராகச் செயல்பட்ட இவர் அவரைத் தம் குருநாதர் எனப் போற்றுகிறார். *1973*இல் 'கனிமுத்துப் பாப்பா' என்ற படத்தை இவரே இயக்கித் தமிழ்த்திரைப்பட இயக்குநராகப் பரிணமித்தார்.

Koviloor Digital Library

இதுவரை 75 திரைப்படங்களையும் ஐந்து தொலைக்காட்சித் தொடர்களையும் இயக்கியுள்ளார். இவர் இயக்கிய படங்களுள் சில 25 வாரங்கள் ஓடிச் சாதனை புரிந்துள. பல படங்கள் 100 நாட்கள் ஓடி வெற்றி பெற்றுள. எனவே, தமிழ்த்திரை உலகில் வெற்றிப் பட இயக்குநர்களில் ஒருவராகவே இவர் கருதப்படுகிறார்.

இவருக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது. இவரது 'ஆறிலிருந்து அறுபது வரை' படத்திற்காகத் தமிழக அரசு இவருக்குச் சிறந்த இயக்குநர் விருது வழங்கியது. இவரது 'புவனா ஒரு கேள்விக்குறி', 'ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது' ஆகிய படங்களுக்காகப் பம்பாய் பிலிம்பேர் இதழ் இவருக்கு இருமுறை சிறந்த இயக்குநர் பரிசு வழங்கியுள்ளது.

சமுதாயச் சீர்திருத்தக் குடும்பத்தில் பிறந்த கலைத்துறை வித்தகர் என இவரைக் குறிப்பிடலாம்.

முத்துராமன், வை., (27-9-1955)

மாத்தூர் - மண்ணூர்
வேந்தன்பட்டி
புகைப்படக் கலைஞர்

வைத்தியநாதன் செட்டியார் – சொர்ணம் ஆச்சியின் மகன். மதுரைக் கல்லூரியில் பி.காம். பட்டம் பெற்ற இவர் கோவையில் நகரத்தார் மரபுத் தொழிலான கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வருகிறார். புகைப்படங்கள் எடுப்பதில் ஆர்வம் கொண்டவர். பதினான்கு வயதில் ஒரு புகைப்படக் கருவி வாங்கிப் படம் எடுக்கத் தொடங்கிய இவர் ஆர்வத்தினால் அக்கலையில் திறமையை வளர்த்துக் கொண்டு தேர்ச்சி பெற்றார். இவர் எடுத்த புகைப்படங்கள் உலக அளவில் பாராட்டும் பரிசும் பெற்றுள்ளன.

உருசிய நாட்டில் நடைபெற்ற இந்தியக் கலைவிழாக் கண்காட்சியில் இடம் பெறத்தக்க புகைப்படங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற போட்டியில் இவர் எடுத்தனுப்பிய 'மஞ்சுவிரட்டு' புகைப்படம் 5000 ரூபாய் பரிசு பெற்றது. டோக்கியோவில் நிக்கான் புகைப்படக் கருவி நிறுவனம் நடத்திய போட்டியில் 45000 படங்கள் கலந்து கொண்டன. இவரனுப்பிய நிழற்படம் நான்காம் பரிசு பெற்றது. வைசியா வங்கியின் வைரவிழாப் புகைப்படப் போட்டி, இந்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சகம் நடத்திய பெண்கள் முன்னேற்றம் தொடர்பான போட்டிகளிலும் இவர் பங்கு பெற்றுப் பரிசுகள் வென்றுள்ளார். 1994இல் ஜிண்டால் புகைப்பட நிறுவனத்தினர் சென்னையில் நடத்திய போட்டியில் முதல் இரு பரிசுகளை இவரே வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

'ஃபிரண்ட்லைன்' போன்ற உலகின் மிகச் சிறந்த பல்வேறு இதழ்களில் இவர் எடுத்த நிழற்படங்கள் இடம் பெற்றுள்ளன. இவர் இக்கலையைத் தொழிலாகக் கொள்ளவில்லை. கலை கலைக்காகவே எனத் தன் மன மகிழ்ச்சிக்காக மற்றவரிடமிருந்து வேறுபட்டுத் தனித்தன்மைவாய்ந்த செயல் நிகழ்வுப்படங்கள் (action photos) எடுக்கும் திறமைமிக்க கலைஞராக இவர் திகழ்கிறார்.

முத்தையா, அ.சி., (15-2-1941)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
தொழிலதிபர்

மு.அ. சிதம்பரம் செட்டியார் – ஒப்பிலாள் ஆச்சியின் மகன். பொறியலில் பட்டமும் அமெரிக்காவில் நிர்வாகவியல் கல்விப்பட்டமும் பெற்றவர். தந்தையைப் போலவே மிகச் சிறந்த தொழிலதிபர். பல்வேறு தொழில் நிறுவனங்களின் தலைவராக இயங்கிக் கொண்டிருக்கும் இவர் இந்தியாவின் முன்னணித்



அ.சி. முத்தையா

தொழிலதிபர்களில் ஒருவராவார். உலகப்புகழ் பெற்ற ஸ்பிக் நிறுவனத்தின் பெருவளர்ச்சிக்கு இவரது திட்டமிடுதலும் நிருவாகத் திறனுமே காரணம் ஆகும். பர்ஸ்ட் லீசிங் கம்பனி, ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ், சவுத் இந்தியா கார்ப்பரேசன் ஏஜன்சீஸ் போன்றவை இவர் சார்ந்துள்ள நிறுவனங்களில் குறிப்பிடத் தக்கவையாகும்.

தமிழிசை, கோவில் திருப்பணிகள், விளையாட்டுத்துறை ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டு நிறைய நன்கொடைகள் வழங்கியுள்ளார். திருக்கடவூர் அபிராமி அம்மன் ஆலயத்தில் மாபெரும் முன்மண்டபத் திருப்பணி செய்துள்ளமை காலத்தால் அழியாத புகழை

Koviloor Digital Library

இவருக்கு நல்கும். வைத்தீசுவரன் கோவில் திருப்பணிக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்றுத் தொண்டு செய்து வருகிறார். பரமாச்சார்யார் சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் காலத்திலிருந்தே காஞ்சி மடத்தோடு இவர் குடும்பத்திற்கு நெருங்கிய தொடர்பு உண்டு. இவர் தமது தந்தையாரோடு சேர்ந்து எம்.ஏ.சி. அறக்கொடையை நிறுவிச் சிறந்த தமிழ் நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசளித்து வருகிறார்.

முத்தையா, இராம., (1-10-1919)

மாத்தூர் - அரும்பாக்கூர்
பி. அளகாபுரி
வங்கியாளர்

இராமநாதன் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். பொருளியல் துறையில் பி.ஏ. பட்டம் பெற்றவர். 1943இல் இந்தியன் வங்கியில் எழுத்தராகப் பணியில் சேர்ந்த இவர் தம் ஆற்றலாலும் முயற்சியாலும் படிப்படியாக உயர்ந்து 1974இல் உதவிப் பொதுமேலாளர் ஆனார். 1976இலிருந்து 1983வரை மதுரை வங்கியின் தலைவராகச் சிறப்பான முறையில் பணியாற்றினார். அப்போது தென்மண்டலத் தனியார் வங்கிகளின் பணியாளர் பயிற்சிக் கல்லூரித் தலைவராக 3 ஆண்டுகள் நியமிக்கப் பெற்றார்.

கீழச்சிவல்பட்டியில் இயங்கிவந்த ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு இவரது முயற்சி பெரிதும் காரணமாகும். அங்கு அமைந்துள்ள பாடுவார் முத்தப்பர் கோட்டத்தின் அமைப்புக் குழுவின் தலைவராகத் தொண்டு செய்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராக விளங்குகிறார்.

முத்தையா, கண., (24-5-1913 - 12-11-1997)

இளையாத்தங்குடி - பேரசெந்தூருடையார்
மதகுபட்டி
பதிப்பாளர், எழுத்தாளர்

நா. கண்ணப்பசெட்டியார் – உண்ணாமலை ஆச்சியின் மகன். இளமையிலே பர்மாவில் தொழில் பழகச் சென்று அங்கு செட்டியார் இளைஞர் சங்கத் தலைவராகவும் நகரத்தார் கல்விக் கழகச் செயலாளராகவும் சமூகத் தொண்டாற்றியுள்ளார். இந்திய தேசிய இராணுவத்தில் இரண்டாவது லெப்டினண்டாக மூன்று ஆண்டுகள் பணிபுரிந்த சிறப்புடையார். ஆகவே கட்டுப்பாட்டோடு கூடிய, தெளிவான கொள்கை, எளிமையான தூய கதராடை, குறைந்த பேச்சு, விரைந்த செயலாற்றல் இவரது இயல்புகள் ஆயின.

எளிய வாழ்வு உயர்ந்த சிந்தனை என்பதை இலட்சியமாகக் கொண்டிருந்த இவர் ராகுலசாங் கிருத்தியாயனின் 'வால்காவிலிருந்து கங்கை வரை', 'பொதுவுடைமை தான் என்ன?' ஆகிய நூல்களை மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றில் இந்நூல்கள் இவருக்கு நிலையானதொரு இடத்தைத் தந்துள்ளன.

1946இல் தமிழ்ப் புத்தகாலயத்தைச் சென்னையில் தொடங்கினார். அகிலன், ராஜம் கிருஷ்ணன், நா. பார்த்தசாரதி, வையாபுரிப் பிள்ளை ஆகியோரின் படைப்புக் களைத் தொடர்ந்து வெளியிட்டதுடன் பல புதிய எழுத்தாளர்களையும் அறிமுகப் படுத்தியுள்ளார். இவரது வெளியீடுகள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் இளங்கலை, முதுகலை வகுப்புகட்குப் பாடமாக வைக்கப்பெற்றுள்ளன. தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும், தமிழ்ப் பதிப்பாளர் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ள இவர் தமிழ்ப்பதிப்புலகில் தரமான வெளியீடுகளால் தனக்கென ஓர் தனியிடத்தைப் பெற்றுள்ளார்.

முத்தையா, சு., (13-4-1930)

இளையாத்தங்குடி, பட்டினசாமி
கானாடுகாத்தான்
எழுத்தாளர், இதழாளர், வரலாற்று ஆய்வாளர்

வெ.வீர.நா.மு. சுப்பையா செட்டியார் – சிட்டாள் ஆச்சியின் மகன். இலங்கையிலும் அமெரிக்காவிலும் கல்வி கற்றுப் பொறியியலில் இளநிலைப் பட்டமும் பன்னாட்டு நடப்பியலில் முதுநிலைப் பட்டமும் பெற்றவர்.

தமது இருபத்தோராம் வயதில் இலங்கை டைம்ஸ் இதழ்க் குழுவில் சேர்ந்து அயல்நாட்டுச் செய்தியாசிரியர், செய்திக் கட்டுரைகளின் ஆசிரியர், ஞாயிறு டைம்ஸ் சிறப்பிதழ் பொறுப்பாளர் எனப் பல்வேறு நிலைகளில் சிறப்பாகப் பணியாற்றினார். இலண்டன் நியூஸ் கிராணிகள், இலண்டன் டெய்லி மெயில் ஆகிய இதழ்களின் இலங்கைச் செய்தியாளராகவும், பணியாற்றினார். 'தி அப்சர்வர்' இதழுக்காக இலங்கையிலும் இந்தியாவிலும் பணியாற்றித் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளார்.

Koviloor Digital Library

சென்னை டி.டி. மேப்ஸ் பதிப்பக நிறுவனத்தில் பணியாற்றுகையில் இவரது திறமை உலகறிய ஒளிவிடும் ஞாயிறு எனப்புகழ் ஈட்டியது. பல்வேறு வகை உலகப்படங்கள், ஆண்டுதோறும் வெளியாகும் 15க்கும் மேற்பட்ட நூல்கள், சுற்றுலா வழிகாட்டி நூல்களை மிகத் தரமாக அச்சிட்டு வெளியிட்டு உலகப்புகழ் பெற்றார்.

சென்னை நகரம்பற்றி வரலாற்று நோக்கில் ஆய்வு செய்து சிறப்பான நூல்களை இவர் படைத்துள்ளார். 'கண்டுபிடிக்கப்பட்ட சென்னை', 'சென்னை – பழைய புதிய கதைகள்', 'சென்னை – கவரும் மாநகரம்', 'பாரியின் கதை', 'சென்னை – கடந்தகாலமும் நிகழ்காலமும்' போன்ற உலகப்புகழ் பெற்ற நூல்களின் ஆசிரியர். இந்தியத் தோட்டத் தொழில் குறித்து இவர் எழுதியுள்ள நூல் பொருளாதாரம் மற்றும் வரலாற்று அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டு மிகச் செம்மையாக எழுதப்பெற்ற காலக்கணிப்பு நூலாகும். ஆக்ஸ்போர்டு நிறுவனத்துக்காக உலகப்படப் புத்தகங்களும், பள்ளி நிலவியல் நூல்களும் இவர் தொகுத்துத் தந்துள்ளார்.

இதழியல் துறையிலும் அச்சுக்கலைத் தொழில் நுட்பத்திலும் முன்னோடியாக விளங்கும் இவர் பாரதிய வித்யாபவனில் இதழியலும் கிண்டி பொறியியல் கல்லூரி, அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் அச்சுக் கலைத் தொழில் நுட்பமும் கற்பித்து வருவதோடு அத்துறைப் பாடங்கள் வகுக்கும் ஆலோசகராகவும் விளங்குகிறார். சென்னை மாநில அச்சுக்கலைப் பள்ளியின் கல்விக் குழுவிலும் உறுப்பினராவார்.

சென்னை அச்சக லித்தோ உரிமையாளர்கள் சங்கத்தில் பல்வேறு நிலைகளில் பொறுப்பு மேற்கொண்டு வழிகாட்டியுள்ள இவர், அனைத்திந்திய மாஸ்டர் அச்சக நிறுவனங்களின் கூட்டமைப்பிலும் சென்னை நூல்பதிப்பாளர் விற்பனையாளர் சங்கத்திலும் இந்தியப் புவியியல் கழகத்திலும் உறுப்பினராவார். இதழியல் எழுத்துவன்மை, அச்சுக்கலைத் தொழில் நுட்பம், ஆராய்ச்சி நுண்ணறிவு, தொகுப்புக் கலைத்தேர்ச்சி எனப் பன்முகத் திறமைகொண்ட இவர் உலகப்படங்கள் வெளியிடும் கலையில் மேல்நாட்டினர் வியந்து பாராட்டும் மேன்மை கொண்டவராகத் திகழ்கின்றார்.

முத்தையா செட்டியார், சர். மு.சித., (8-2-1887 - 20-7-1929)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
வங்கியாளர்

இராசா சர் அண்ணாமலை செட்டியாரின் தமையனார் சிதம்பரம் செட்டியாரின் மகன். இவரது தம்பி புகழ்பெற்ற பெத்தாச்சி வள்ளலாவார்.

சென்னை நகரின் செரீபாக 1921 முதல் இரண்டாண்டுகள் பணியாற்றிய இவர் இந்தியன் வங்கியின் தொடக்க கால இயக்குநர்களுள் ஒருவர். ஆங்கிலேய அரசு இவருக்கு 1916இல் இராவ் பகதூர் பட்டமும் 1922இல் 'சர்' பட்டமும் வழங்கிச் சிறப்பித்தது.

1920 முதல் மூன்றாண்டுகள் சென்னைச் சட்டமன்ற மேலவையிலும், 1923 முதல் மூன்றாண்டுகள் சட்டப்பேரவையிலும் உறுப்பினராகத் திகழ்ந்தார்.

தென்னிந்திய வர்த்தக சபையின் தலைவராகவும், சென்னை பங்குச் சந்தையின் தலைவராகவும் பணியாற்றியுள்ள இவர் சென்னை – செங்கற்பட்டுச் சாரணர் இயக்கத் தலைவராகவும், பச்சையப்பர் அறநிலை உறுப்பினராகவும் தொண்டாற்றியுள்ளார்.

முத்தையா செட்டியார், டாக்டர் இராசா சர். மு.அ., (5-8-1905 - 12-5-1984)


இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
கல்வியாளர்

இராசா சர் அண்ணாமலை செட்டியார் – சீதை ஆச்சியின் மகன். சென்னை அரசினர் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்ற இவர், தந்தையாரைப் போலவே நுட்பமான அறிவும் நிருவாகத் திறனும் படைத்தவர். பிறர்க்கு உதவும் தாராளமும் விருந்தோம்புதலும் இவரது உயர்பண்புகள்.

இளமையில் பொதுவாழ்வில் ஈடுபாடு கொண்ட இவர் 1932இல் சென்னை மாநகராட்சியின் முதல் மேயராகப் பதவி வகித்தார். 1934–35ஆம் ஆண்டிற்கும் மீண்டும் இவரே மேயராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றமை இவரது செயலாற்றலை விளக்கும். அப்போது இவர் தமிழகத்தின் முதல் வானொலி நிலையத்தைச் சென்னை மாநகராட்சி தொடங்குவதற்குக் காரணமாக அமைந்தார். 1931ஆம் ஆண்டு சென்னை சட்டசபையில்

Koviloor Digital Library

நீதிக்கட்சிக் கொறடாவாகவும், 1936–37இல் பொப்பிலி அரசரின் அமைச்சரவையில் சென்னை மாநிலக் கல்வி, உள்ளாட்சி, சுகாதார அமைச்சராகவும் பதவி வகித்தார். இவரது தந்தையார் அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தராகவும் இவர் கல்வியமைச்சர் என்ற முறையில் சென்னைப் பல்கலைக்கழக இணைவேந்தராகவும் ஒரே நேரத்தில் விளங்கியமை குறிப்பிடத்தக்கது.



டாக்டர் இராசா சர் முத்தையா செட்டியார்

1937இல் மீண்டும் கே.வி. ரெட்டியின் அமைச்சரவையில் இவர் அறநிலையப் பாதுகாப்புத் துறை அமைச்சராக விளங்கினார். இராஜாஜி மந்திரிசபை அமைத்தபோது இவர் எதிர்க்கட்சித் தலைவராகச் சிறப்புறப் பணிபுரிந்தார். 31 ஆண்டுகள் சட்டமன்றப் பேரவை, மேலவைகளில் உறுப்பினராகத் தொண்டாற்றிய சிறப்பு இவருக்குண்டு. காங்கிரஸ் கட்சியில் இருந்தபோதும் இந்தி எதிர்ப்பில் மிகுந்த ஆர்வம் காட்டி கி.ஆ.பெ. விசுவநாதம் போன்றோருடன் மூன்றுமைல் நடந்து ஊர்வலம் சென்றார்.

1948 முதல் 1984 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராக இருந்தபோது விவசாய மேற்படிப்பு, கடல் உயிரியல், மொழியியல், பல்மருத்துவம், எம்.பி.ஏ. போன்ற புதிய துறைகளை உருவாக்கினார். தந்தையின் எண்ணம்போல் பல்கலைக் கழகத்தை பல்வேறு நிலைகளிலும் விரிவாக்கி வளர்த்தார்.

வர்த்தகத் துறையிலும் மிகச்சிறந்து விளங்கிய இவர் மதுரை நூற்பாலையின் தலைவராகவும் அகில இந்திய வர்த்தக சபைத் தலைவராகவும் விளங்கினார். செட்டிநாடு சிமிண்ட் ஆலையை நிறுவினார். 1968இல் இந்தியன் வங்கி தேசிய மயமாக்கப்படும்வரை அதன் தலைவராகவும் அதற்கும் முன் இம்பீரியல் வங்கி இயக்குநராகவும் தொண்டாற்றிய காலத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெற வழி வகுத்துள்ளார்

தந்தையாரைப் போலவே இவரும் தமிழிசையைப் போற்றி வளர்த்தார். சென்னையில் ராஜா அண்ணாமலை மன்றம், ராணி சீதை மன்றம், மதுரையில் ராஜா முத்தையா மன்றம் ஆகிய அரங்குகளை உருவாக்கித் தமிழ் இசை வளர்ச்சிக்கு வழிவகுத்தார். சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் இவருக்கு டாக்டர் பட்டம் அளித்துப் போற்றியுள்ளன. 'பத்மபூஷண்', 'தமிழிசைக் காவலர்' ஆகிய விருதுகளை மத்திய, மாநில அரசுகள் வழங்கியுள்ளன.

விருந்தோம்பல் இராசா சர் முத்தையா செட்டியாரின் தலையாய பண்பாகும். நாளும் இவரது வளமனையில் விருந்தினர் கூட்டம் நிறைந்திருக்கும். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் இயல்பு மாறாதவர் என இவரை எல்லோரும் போற்றுவர். சென்னை மாநகராட்சி வளாகத்தில் ஒன்றும், அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்றும், மதுரை ராஜா முத்தையா மன்ற வளாகத்தில் ஒன்றும் என இவரது உருவச்சிலைகள் மூன்று தமிழகத்தில் அமைந்துள்ளன.

இவரது உருவப்படம் பொறித்த நினைவு அஞ்சல் தலையை 21.12.1987 அன்று மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் வெளியிட்டார்.

எல்லோரும் விரும்பும் எளிய இனிய இயல்புடையவராய் விளங்கிய இராசா சர் முத்தையா செட்டியாரை வங்கியாளரும் கல்வியாளரும் வணிகரும் தமிழறிஞரும் எனப் பல திறத்தாரும் போற்றி வாழ்த்துகின்றனர்.

முத்தையா செட்டியார், திவான் பகதூர், தர்மபூசணம், தீ.நா., (27-7-1883 - 5-9-1936)

வைரவன்கோவில் - தெய்வநாயகர் வகுப்பு

கடியாபட்டி

வள்ளல்

தீ.நாச்சியப்ப செட்டியார் – உமையாள் ஆச்சியின் மகன். இவரது தந்தையார் திருப்பாதிரிப்புலியூர்க் கோவில் திருப்பணி செய்தவர். அவரை அடியொற்றி இவரும் தம் வாழ்நாளில் 32 இலட்சம் ரூபாய்களை அறப்பணிகளுக்காகச் செலவிட்டுள்ளார். 1924இல் திருவருட்பாவைப் பிழையற்ற நல்ல பதிப்பாகப் பதிப்பித்து, படி ஒன்று 30 ரூபாய் மதிப்பில் வெளியிடப்பெற்ற 2000 படிகளையும் அன்பளிப்பாகக் கொடுத்துத் திருவருட்பாவைப் பரப்பினார்.

Koviloor Digital Library

புதுக்கோட்டை அரசர், இவர் நீதிமன்றங்களுக்கு நேரில் வரவேண்டிய அவசியமில்லை என அறிவித்து, இவரைச் சிறப்பித்ததோடு, 1913இல் இவரைத் தம் அரசின் மேலவை உறுப்பினராகவும் அமர்த்திக் கொண்டார்.

திருப்பாதிரிப்புலியூர் அறநிலைய உறுப்பினராகப் பணியாற்றிய இவர் அவ்வூரில் தமிழ்ப் பாடசாலை ஒன்றையும், திருமயத்தில் சத்தியமூர்த்தி உயர்நிலைப் பள்ளியையும் நிறுவினார். தமிழ்த் தாத்தா டாக்டர் உவேசாவின் நூல்கள் சில வெளிவருவதற்குப் பெரும் பொருளுதவி செய்த இவர் நாகை நீலலோசனி இதழுக்கும், சென்னை இரசிக இரஞ்சனி சபைக்கும் புரவலராகத் திகழ்ந்தார்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் நகரத்தார் மரபில் தோன்றிய பெருவள்ளல்களுள், தருமபூசணம் பட்டம் பெற்ற இவர் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

முத்தையா, முல்லை. பழ., (7-6-1920)

மாத்தூர், கண்ணூர்
தேவகோட்டை
எழுத்தாளர், பதிப்பாளர்

பழநியப்பர் – மனோன்மணி ஆச்சியின் மகன்: தாய்வழி அய்யா அஷ்டாவதானம் சிவ சுப்பிரமணியன் செட்டியார்; தந்தைவழி அய்யா புலவர் நாகப்ப செட்டியார். எனவே வழிவழி வந்த தமிழ்ப்புலமையும் ஆர்வமும் எழுத்து, பதிப்புத் துறையில் இவரை ஆட்படுத்தின. சக்தி வை.கோவிந்தனோடு இணைந்து புத்தக உலகில் காலடி வைத்து 1944 இல் பாரதிதாசன் கவிதைகளை வெளியிடுவதற்காகவே ஒரு பதிப்பகம் தொடங்கினார். அக்கவிஞருக்காகவே இவர் நடத்திய திங்கள் இதழ் 'முல்லை'. கவிஞர் அழைத்த முல்லை முத்தையா என்னும் பெயரே இவரது சிறப்புப் பெயராயிற்று. இவரது பதிப்பகம் முல்லைப் பதிப்பகம்.

பாரதிதாசனுடைய முதல் கவிதை நூலை இவர் வெளியிட்டார். பின்னரே பாரி நிலையத்திற்குப் பாரதிதாசன் நூல்கள் 'விற்பனை உரிமை' யை வழங்கினார். தமிழ்ப்புத்தக உலகில் விற்பனை உரிமை என்ற வழக்கத்தையும் சொற்றொடரையும் இவர் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். புரட்சிக் கவிஞரின் ஆற்றலை நன்குணர்ந்து தமிழகத்துக்கு அடையாளம் காட்டியவர் இவரே எனலாம். கவிஞர் வாழ்க்கையிலே நடந்த சுவையான நிகழ்ச்சிகளைப் 'பாரதிதாசன் வாழ்க்கையிலே' என்ற நூலாகவும் அவரது கவியாற்றலைப் 'பாவேந்தர் பாரதிதாசன் பெருமை', 'பார் புகழும் பாரதிதாசன்' என இரு நூல்களாகவும் தொகுத்து வெளியிட்டுள்ளார். 'பாரதியார் பாமணிகள்' மற்றும் நாமக்கல் கவிஞரின் கவிதைகளான 'கவிஞர் களஞ்சியம்' ஆகியவையும் இவரது தொகுப்பு நூல்களாகும். 1942இல் சென்னையில் அனைத்துக் கட்சியினரையும் அழைத்து மாநாடு கூட்டிப் பாரதிதாசனுக்கு நிதி வழங்க ஏற்பாடு செய்தார்.

பதிப்புத்துறையிலும் இவர் பல புதுமைகளைச் செய்துள்ளார். மதுவிலக்குப் பற்றிய இராஜாஜியின் நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிட்டார். இராஜாஜி, க. அன்பழகன், சிரஞ்சீவி, கோவை அய்யாமுத்து, க. ராஜாராம் ஆகியோரின் முதல் நூல்களை வெளியிட்ட பெருமை இவருக்குரியது. விக்கிரமாதித்தன் கதைகள், பாரதியார் கதைகள், பாரதியாரின் பகவத்கீதை, காதம்பரி, 1001 இரவுகள், வீட்டு வைத்தியம், போன்ற நூல்களை மலிவுப் பதிப்பாக வெளியிட்டார். சேக்சுபியர் கதைகளையும் உலகப் புகழ்பெற்ற அன்னாகரீனா, அம்மா, மேடம் பவாரி, நாநா, குற்றமும் தண்டனையும் முதலிய நூல்களையும், தாமே மொழி பெயர்த்து வெளியிட்டார். தமிழிசைக்கு ஆதரவாகச் சான்றோர் பலரின் எழுத்துக்களைத் திரட்டி ''எது இசை'' என்ற நூலையும் ''தமிழை வளர்ப்பது எப்படி?'' என்ற நூலையும் வெளியிட்டார். பஞ்சாயத்து நிருவாகம், நகரசபையும் பொதுமக்களும் என இவர் வெளியிட்ட நூல்கள் இவ்வகையில் தமிழில் முதன்முதலாக வெளிவந்தவையாகும். புகழ்பெற்ற எழுத்தாளர் டாக்டர். எம்.எஸ். உதயமூர்த்தியை முதன் முதல் நூல் எழுதத் தூண்டி அவரது நூல்களையும் 1961இல் முதலாவதாக வெளியிட்டவர் இவரேயாவர்.

பாவேந்தர் நூல்களை முதன்முதல் வெளியிட்டமைக்காகத் தமிழக அரசு 1979இல் பொன்னாடை போர்த்திப் பரிசளித்தது. 1990இல் பாரதிதாசன் பல்கலைக் கழகமும் தமிழக அரசும் இணைந்து எடுத்த பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் பொன்னாடை அணிவித்து, பத்தாயிரம் ரூபாய் பரிசும் விருதும் அளித்து அரசு இவரைச் சிறப்பித்தது. குளித்தலை காசு. நினைவு இலக்கியக் கழகம் 'பாவேந்தர் சீர்பரவுவார்' என இவருக்கு விருது வழங்கிப் போற்றியது. 1985இல் தமிழக அரசு 'திருக்குறள்நெறித் தோன்றல்' என்ற விருதும் 1993இல் வள்ளுவர் வழி வாசகர் வட்டம் ''திருவள்ளுவர் சீர்பரவுவார்'' என்ற விருதும் அளித்துப் பாராட்டியுள்ளன. திறமை எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து அவர்தம் புகழ் பரப்பி ஏணியாய் விளங்கிய முல்லை முத்தையா தேர்ந்த தொகுப்பாளர்; சிறந்த எழுத்தாளர்; கூர்த்த நோக்குடைய திறனாய்வாளர்;

Koviloor Digital Library

நல்ல நூல்களின் பதிப்பாளர். நகரத்தார் ஆய்வாளர் சோமலெ ''தமிழ் நூல்கள் இன்றுபல துறைகளில் வெளிவருகின்றன. கவர்ச்சியாகவும் அழகாகவும் அச்சிடப்பெறுகின்றன. இந்த நிலையை உருவாக்கியவர்கள் மூவர் – வை.கோ., சின்ன அண்ணாமலை, முல்லை முத்தையா'' என முன்னோடிகள் மூவரில் ஒருவராக இவரைப் பாராட்டுவது, வசிட்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெற்றது போலாகும்.

முத்தையா, ரோஜா,
(14-6-1926 - 4-6-1992)

நேமங்கோவில்
கோட்டையூர்
நூல்நிலையக் காப்பாளர்

தந்தையார் மு.பெ.மு.ராம.மு. இராமநாதன் செட்டியார். சென்னையில் இவர்'ரோஜா ஆர்ட்ஸ்' என்ற பெயரில் ஓவியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். அப்போது சென்னை மூர்மார்க்கெட்டில் கிடைத்த அரிய பழைய புத்தகங்களை வாங்கிச் சேர்ப்பதும் படிப்பதும் இவர் பொழுது போக்காகும். பின்னர் புத்தகங்கள் வாங்கிச் சேகரிப்பது, படிப்பது, நூலகம் உருவாக்குவது, பொருள் அகரவரிசை முதலியவற்றால் படித்த நூல்களில் உள்ள செய்திகளைத் தொகுப்பதே இவரது வாழ்க்கைக் குறிக்கோளாயிற்று. ஓவிய நிறுவனத்தின் பெயர் இவரோடு ஒட்டிக் கொள்ள 'ரோஜா முத்தையா' ஆனார்.



ரோஜா முத்தையா

1965இல் கோட்டையூரில் ஒரு வீடு கட்டி அந்த வீட்டையே மாபெரும் நூலகமாக உருவாக்கினார். அரிய புத்தகங்கள் எங்கெங்கு கிடைக்குமோ அங்கங்கு தேடிச்சென்று என்ன விலையானாலும் கொடுத்து வாங்கித் தமது நூலகத்தில் சேர்த்து விடுவார். காரைக்குடி சென்றால் தம்மிடம் உள்ள பணம் முழுவதற்கும் புத்தகங்கள் வாங்கிவிட்டுச் சாப்பிடாமல் கூட நடந்தே கோட்டையூருக்கு வந்துவிடுவாராம். 35000 புத்தகங்களையும் 60,000 இதழ்களையும் சேகரித்துத் தமது நூலகத்தில் இவர் பாதுகாத்து வைத்திருந்தார். கடந்த 15ப வருடங்களில் வெளிவந்திருந்த திருமணப் பத்திரிகைகள், நாடக நோட்டீசுகள், பல்வேறு விளம்பரங்கள், வர்த்தமானப் பத்திரங்கள், செக்குகள், ஸ்டாம்பு பேப்பர்கள், உண்டியல்கள் ஆகியவற்றையும் சேர்த்து வைத்திருந்தார். நகரத்தார் தொடர்பான நூல்கள், ஆவணங்கள் ஆகியவை 3000க்கு மேல் இவருடைய தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. 1857ஆம் ஆண்டில் ஜி.யு. போப் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட இலக்கண நூல், 1879இல் வெளியான 'இலண்டன்-பாரிஸ் நகரங்களின் விநோத சரித்திரம், டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் முதன் முதலாகப் பதிப்பித்த, ஸ்ரீ மத்தியார்ச்சுன மான்மியம் ஸ்ரீ ஏகநாயக ரூசல் (1885) போன்ற பழைய அரியநூல்கள் இவரது நூலகத்தில் இருந்தன. உலகில் மிகச்சிறந்த மியூசியங்களும், நூலகங்களும், இவரிடம் கூடுதலாக இருந்த சில அரிய புத்தங்களை வாங்கிச் சேகரித்து வைத்துள்ளன.

உலகத்தின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் இருந்தும் ஆராய்ச்சியாளர்கள் கோட்டையூருக்கு வந்து இவருடைய நூலகத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். ஆனந்தவிகடன் இவரது படத்துடன் அட்டை வெளியிட்டு, 'புத்தகங்களே என் உயிர்' என்ற சிறப்புக் கட்டுரை வெளியிட்டு இவரைச் சிறப்பித்தது. தமிழக அரசு 'ரெங்கநாதன் நினைவுப் பரிசை' வழங்கி இவரைப் போற்றியது. ''புத்தகங்கள் சேகரிப்பது கஷ்டமே அல்ல. சேகரித்த புத்தகங்களைப் பத்திரமாக வைத்துக் கொள்வது, ஒழுங்குபடுத்துவது, அவற்றை நல்ல விதமாக உபயோகப்படுத்துவது இவையே முக்கியம். மேலும், அவை பூச்சிகளாலும், கரையான்களாலும் எலிகளாலும் சேதப்படாமல் காப்பாற்றியாக வேண்டும். ஒரு நல்ல புத்தகம் காப்பாற்றப்படவில்லையானால் அது ஒரு தேசிய நஷ்டம் என்பதில் கருத்து வேறுபாடே இருக்க முடியாது'' என ஒரு பேட்டியில் கூறிய ரோஜா முத்தையா தமக்குப் பின்னரும் தமது புத்தகங்கள் பாதுகாக்கப்பட்டு உலகுக்குப் பயன்பட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் வாழ்ந்தார். அவரது உயர்ந்த குறிக்கோள் இன்று நிறைவேறியுள்ளது. அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகம் இவரது நூலகத்தை வாங்கி, சென்னை முகப்பேரில் அதற்காக ஒரு புதிய கட்டிடம் கட்டி 'ரோஜா முத்தையா நினைவு ஆராய்ச்சி நூலகம்' என இவரது நூல்களைப் போற்றிப் பாதுகாத்து வருகிறது.

Koviloor Digital Library

முருகப்ப செட்டியார், அ.மு.மு., (22-1-1902 - 31-10-1965)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
பள்ளத்தூர்
தொழிலதிபர்

திவான்பகதூர் அ.மு. முருகப்ப செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். தம் தந்தையார் பர்மா, மலேயா, இலங்கை ஆகிய நாடுகளில் நடத்தி வந்த குடும்பத் தொழிலை நிருவகித்து அனுபவம் பெற்ற இவர் இரண்டாம் உலகப்போருக்குப் பின் மாறிவந்த சூழ்நிலைக்



அ.மு.மு. முருகப்ப செட்டியார்

கேற்பப் புதிய புதிய தொழில்களைத் தொடங்க ஆர்வம் கொண்டார். 1951இல் இங்கிலாந்து நிறுவனத்துடன் இணைந்து அம்பத்தூரில் ஹெர்குலிஸ், பி.எஸ்.ஏ., பிலிப்ஸ் சைக்கிள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையைத் தொடங்கினார். பின்னர் அமெரிக்காவிலுள்ள கார்போரண்டம், இங்கிலாந்திலுள்ள யுனிவர்சல் கிரைண்டிங் நிறுவனங்களுடன் சேர்ந்து கார்போரண்டம் யுனிவர்சல் தொழிற்சாலையைத் திருவொற்றியூரில் தொடங்கினார். இரு நிறுவனங்களாலும் இவர் உலகப்புகழ்பெற்ற தொழிலதிபரானார். சிறு கிராமங்களாயிருந்த அம்பத்தூர், திருவொற்றியூர் ஆகியவற்றின் இன்றைய விரிவான வளர்ச்சிக்கு இவரே காரணமாவார். ரப்பர் கம்பெனி, ஏற்றுமதி, கட்டிட நிர்மாணம் ஆகிய தொழில்களிலும் ஈடுபட்ட இவர் பல்வேறு நிறுவனங்களில் இயக்குநராயிருந்தார்.

ஸ்டேட்பேங்க் ஆப் இந்தியா, பேங்க் ஆப் இந்தியா ஆகியவற்றில் இயக்குநராகவும் ஆயுட் காப்பீட்டு நிறுவனம், முதலீட்டுக்குழு, தமிழகத் தொழில் வளர்ச்சிக்குழு, இந்திய அரசுத் தொழில் வளர்ச்சிக்குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும் பணியாற்றினார். தென்னிந்திய வணிகக் குழுத் தலைவர் (1949–50), இந்தியத் தொழில் வணிகக் கூட்டு நிறுவனங்களின் தலைவர் (1960–61), சென்னை வணிகக் குழுவின் முதல் இந்தியத் தலைவர் (1965) எனப் பல்வேறு அமைப்புக் களின் வாயிலாக இந்தியத் தொழில் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராகவும் அனைத்திந்திய தொழிற் கல்விக் குழு உறுப்பினராகவும், கல்வித் தொண்டு புரிந்துள்ள இவர் முருகப்ப செட்டியார் நினைவுப் பல்தொழிற்கல்லூரி, வெள்ளையன் செட்டியார் மேல்நிலைப் பள்ளி, இராமசாமி முதலியார் உயர்நிலைப்பள்ளி ஆகிய கல்விக் கூடங்களை நிறுவி வளர்த்தார். இவரது தந்தையார் பள்ளத்தூரில் தொடங்கிய இலவச மருத்துவ மனையை இவர் தொடர்ந்து சிறப்புற நடத்தியதோடு அம்பத்தூரில் நவீன வசதிகளுடன் சர். ஐவன் ஸ்டெட்போர்டு மருத்துவ மனையையும் நிறுவினார். தொழில் விரிவு தொடர்பாக அமெரிக்கா சென்று திரும்பும் போது இலண்டனில் தம் அறுபத்து மூன்றாம் வயதில் உயிர்நீத்தார். தொழிற் சாலைகள், கல்விக்கூடங்கள், மருத்துவமனைகள் நிறுவி, சென்னை மாநகரப் பெருவளர்ச்சிக்கு இவரும் தமது பங்களிப்பைச் சிறப்பாகச் செய்துள்ளார்.

முருகப்பன், டாக்டர். சுப., (10-1-1953)

வைரவன் கோவில்
அரண்மனை சிறுவயல்
மருத்துவர், இதழாசிரியர்

சுப்பிரமணியன் செட்டியார் – கண்ணம்மை ஆச்சியின் மகன். மனநோய் மருத்துவரான இவர் சமூகத்தொண்டு நோக்கோடு அரண்மனை சிறுவயலிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் ஆண்டுதோறும் முகாம் நடத்தி இலவசமாக மருத்துவம் செய்து வருகிறார். 1993ஆம் ஆண்டில் திருக்கைலாய மலைக்கு யாத்திரை சென்று வந்தார். 'தர்மச்சுடர்' இதழை ஐந்தாண்டுகள் பொறுப்பேற்று நடத்தியுள்ளார். பல்வேறு இதழ்களில் இவர் எழுதிய ஆன்மீக மருத்துவக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

Koviloor Digital Library


முருகப்பா, சீர்திருத்தச் செம்மல், சொ., (21-8-1893 - 20-6-1956)

பிள்ளையார்பட்டி

காரைக்குடி

சமூக சீர்திருத்தவாதி, இதழாளர், தமிழறிஞர்

சி.சொ. சொக்கலிங்கம் செட்டியார் – விசாலாட்சி ஆச்சியின் மகன். நகரத்தார் சமூகத்தில் சீர்திருத்தம் தேவை என இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிந்திக்கத் தொடங்கிய மிகச் சிலருள் செயல்வேகமும் கொண்ட செம்மல். இவருடைய புனைபெயர் 'அஞ்சா நெஞ்சன்'.



சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா

10–9–1917இல் தம்மோடு ஒத்த கருத்துடைய இளைஞர் சிலரை இணைத்துக் கொண்டு காரைக்குடியில் இந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவித்தார். பின்னர் அச்சங்க உறுப்பினர்களுள் தெரிந்தெடுத்த சிலரோடு சேர்ந்து 11–9–1919இல் தனவைசிய ஊழியர் சங்கத்தைத் தொடங்கினார்.

அச்சங்கத்தின் சார்பில் தாமே ஆசிரியராக இருந்து 'தனவைசிய ஊழியன்' என்ற இதழை 8–9–1920இல் தொடங்கினார். இவரது பெரு முயற்சியல்தான் 15–7–1921இல் இந்நூற் றாண்டின் முதற் கூட்டமாக 96 ஊர் நகரத்தார் கூட்டம் நடத்தப் பெற்றது.

பின்னர்ச் சில காரணங்களினால் தனவைசிய ஊழியன் இதழின் ஆசிரியர் பொறுப்பைத் தமிழ்க்கடல் இராய.சொ.விடம் ஒப்படைத்ததோடு, தாமும் தனவைசிய ஊழியர் சங்கத்திலிருந்து விலகினார். 17–3–1922இல் காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தைத் தொடங்கினார்.

அந்த அமைப்பின் சார்பில் மே, 1922இல் 'குமரன்' எனும் மாத இதழைத் தாமே ஆசிரியராக இருந்து தொடங்கினார். சில ஆண்டுகளே வெளிவந்தாலும் சிறப்பான இலக்கிய இதழாக வெளிவந்த பெருமை குமரனுக்கு உண்டு. பிறகு அதே பெயரில் 22–8–1923இல் குமரன் வார இதழைத் தொடங்கி 25 ஆண்டுகளுக்கும் மேல் தொடர்ந்து நடத்தினார்.

தொடக்கத்தில் காந்தியடிகளால் ஈர்க்கப் பெற்று, காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்து, விடுதலைப் போரில் வேகம் காட்டிய இவர், பின்னர் பெரியார் ஈ.வெ.ரா.வின் தன்மானக் கொள்கைகளாலும் சீர்திருத்தக் கருத்துக்களாலும் கவரப்பெற்று, சுயமரியாதை இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டு, செட்டிநாட்டில் அவ்வியக்கத்தைப் பரப்பப் பெரிதும் துணை நின்றார்.

அந்த இயக்கத்தின் கொள்கைகளில் ஒன்றான கைம்பெண் மறுமணத்தைப் பற்றிப் பட்டுக்கோட்டையில் ஒரு கூட்டத்தில் இவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, மரகதவல்லி என்ற இளம் விதவை மேடைக்கு வந்து, "பேச்சாளர், கணவனை இழந்த பின் வயதுக்கு வந்த கைம்பெண்ணான என்னை மறுமணம் செய்து கொள்வாரா?" என்று கேட்டார். உடனே இவர் திருமணத்திற்கு இசைவளித்தார்.

29–6–1929இல் தந்தை பெரியார் தலைமையில் முருகப்பனார் – மரகதவல்லி திருமணம் திருப்பரங்குன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. இளம் கைம்பெண்களின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு, அமராவதிபுதூரில் முருகப்பா – மரகதவல்லி தம்பதியர் 'மகளிர் இல்லம்' (த.க.) ஒன்றைத் தொடங்கி நடத்தினர்.

1932இல் புதுக்கோட்டையிலிருந்து 'சண்ட மாருதம்' என்ற நாளிதழை நடத்தி, சென்னைக்கு வெளியே இருந்து தமிழில் முதல் நாளிதழ் நடத்திய பெருமையுடையவர் என்ற சிறப்பையும் பெற்றார்.

முருகப்பனார் தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் கம்பராமாயணத்திற்குச் செம்பதிப்புக் கொணரும் பணியில் தலைப்பட்டார். 'இராமகாதை' என்ற பெயரில் இப்பதிப்பின் இரு பகுதிகள் வெளிவந்தன. இராமகாதைக்குரிய முன்னுரைபோல, இவர் 'கம்பர் காவியம் – அதன் நிலை விளக்கம்' எனும் நூலை இயற்றினார். 'கம்பராமாயணச் சீரழிவை வெளிப்படுத்தும் அரிய ஆராய்ச்சி நூல்' என அதனைப் பாராட்டுவார் சோமலெ.

பண்டிதமணியின் முன்னுரை, பேராசிரியர் வையாபுரியாரின் அணிந்துரை ஆகியவற்றோடு இராமகாதை–பாலகாண்டம் 1953இலும் தமிழ்க் கடலின் அணிந்துரையுடன் இராமகாதை – அயோத்தியா காண்டம் 1956இலும் வெளி வந்தன.

Koviloor Digital Library

தம் வாழ்நாள் முழுவதும் சமூக சீர்திருத்தத்திற்காகப் பாடுபட்ட முருகப்பனார் செட்டிநாட்டு 'இராசா ராம் மோகன் ராய்' எனப் புகழ்ப்பெற்றார். இதழாளராக இவர் ஆற்றிய பணி மிக உயர்ந்தது. தமிழிசை இயக்கத்திலும், ஜீவகாருண்யப் பிரசாரத்திலும் ஈடுபட்டுச் செட்டிநாடு முழுவதும் இக்கொள்கைகளின்பால் இளைஞரை ஈர்த்தார். காந்தியத்தையும் தந்தை பெரியாரின் தன்மானக் கொள்கைகளையும் செட்டிநாடெங்கும் பரப்பிய முருகப்பனார் தம் வாழ்நாளின் இறுதிப் பகுதியில் கம்பன் புகழ் பரப்பும் பணியில் ஈடுபட்டுச் சிறந்தார்.

பல்துறை வித்தகராகச் செட்டி நாட்டில் காரைக்குடியில் தோன்றிய மும்மணிகளுள் (சொ.முரு; இராய.சொ; சா.க.,) இவர் முதல்வர்; மூத்தவர்; மற்ற இருவரின் உருவாக்கத்தில் உதவியவர்.

முன்னெழுத்துக்கள் (விலாசம்)

நகரத்தார் சமூகத்தினர் தம் பெயருக்கு முன் பயன்படுத்தும் நீளமான முன்னெழுத்துக்கள் அல்லது விலாசம் பிற சமூகத்தினரை வியக்க வைக்கும் ஒன்றாகும். இந்த முன்னெழுத்து முறை எப்படி வழிவழியாக வருகிறது என்பதைக் காணலாம்.

பொதுவாக மனிதர்களின் பெயரைச் சுருக்கிக் குறிப்பிடுவது உலக வழக்கு, 'அழகப்பன்' 'அழகு' எனப்படுவதும், 'நாச்சியப்பன்' 'நாச்சு' ஆவதும் நாம் பார்க்கும் சான்றுகள். நகரத்தார் சமூகத்தில் இன்னும் சுருக்கி, ஒவ்வொருபெயரையும் முதல் இரு எழுத்துக்களால் மட்டும் குறிப்பிடுவதே மரபாகி விட்டது.

'அருணாசலம்', 'அரு' என்றும், 'அழகப்பன்', 'அழ' என்றும் குறிப்பிடப்படுவர். ஓரெழுத்து மட்டும் பயன்படுத்துவதாயின் இருவரையும் 'அ' என்று குறிப்பிட வேண்டும். அப்பொழுது 'அ' என்றால் அருணாசலமா? அழகப்பனா? என்பது தெளிவாகத் தெரியாது. இதனால் தான் நகரத்தார் பெயரைச் சுருக்கி முன்னெழுத்துக்களாகப் பயன்படுத்தும்போது இரு எழுத்துக்களைப் பயன்படுத்துகின்றனர்.

பெயரின் இரண்டாவது எழுத்து மெய்யெழுத்தாக அமைந்திருக்குமாயின் அதனை அந்த எழுத்தோடு அகரம் சேர்த்து உயிர்மெய்யாக்கிப் பயன்படுத்துவது நகரத்தார் மரபு. இவ்வகையில் 'அண்ணாமலை', 'அண' ஆவார். 'கண்ணப்பன்', 'கண' ஆவார்.

'அழகப்பன்' – 'அழ' என முன்னெழுத்து அமைவதால் அதை 'அள' என மாற்றுவதுண்டு. ஆனாலும் அளகப்பன் என எழுதுவதில்லை.

இந்த மரபு இவரது மகன் பெயரைச் சுட்டும் போது, அவருக்குரிய முன்னெழுத்திலும் பின்பற்றப்படுவதால், பெரும்பாலும் நகரத்தார்களின் முன்னெழுத்துக்கள் இரண்டெழுத்துக்களால் ஆனதாகவே அமைந்திருப்பதைக் காணலாம். இப்போது அருணாசலம் மகன் அழகப்பன், அரு. அழகப்பன் ஆகிவிடுவார். அவர் பெயரைச் சுருக்கமாகக் குறிப்பிடும்போதும் அரு.அழ. என்றே குறிப்பிடுவர்.

முன்னெழுத்துக்களைப் பேச்சில் ''ஆனா – ஆவன்னா'' சாரியை சேர்த்து, பானா, சாவன்னா என இவ்வாறு வழங்குவது குறில் நெடில் தெளிவு கருதியதாகும்.

நகரக் கோவில்களுக்கும், நகரத்தார் நிறுவிய சத்திரங்களுக்குங்கூட முன்னெழுத்து மரபு உண்டு. நெற்குப்பை சுப்பிரமணிய சுவாமி கோவில் நெசுப. ஆகிப் பாத்திரபண்டங்களில் பெயர் பொறிக்கப்படும்.

முற்காலத்தில் நகரத்தார்கள் பர்மா, மலேயா, இலங்கை போன்ற இடங்களில் தொழில் நிறுவனங்கள் (வட்டிக்கடை) தொடங்கியபோது அவற்றிற்குத் தனியே பெயர்களை வைப்பதில்லை. மாறாக அதனைத் தொடங்கும் நகரத்தாரின் சுருக்க முன்னெழுத்துக்களே கடைப் பெயராக அமையும். சின்னாஞ் செட்டியார் மகன் முத்தையா செட்டியார் கடை தொடங்கினால் அது சி.மு. எனப் பெயர் பெறும். அவர் மகன் அருணாசலம் அதன் உரிமையாளராகும்போது, அவர் முந்திய எழுத்துக்களை விட்டுவிடாமல் சி.மு.அரு. எனப் பெயரை விரித்துக் கொள்வார். இதனால், முன்னெழுத்துக்கள் கூடிக்கொண்டே செல்கின்றன.

அக்காலத்தில் அக்கடையில் மேலாளராக இருப்பவரும் கடை தொடர்பான ஆவணங்களில் அதே முன்னெழுத்துக்களைப் பயன்படுத்திக் கையெழுத்திடுவது என ஒரு மரபு இருந்தது. இப்போது அம்மரபு இல்லை.

தொழில் நிறுவனம் அடுத்தடுத்த தலைமுறையினருக்கு உரிமையாகும் போது, இந்நிறுவனம் பழைமைத் தொடர்புடையது என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு, பழைய முன்னெழுத்துக்களை விட்டுவிடாமல் அவற்றோடு தம் முன்னெழுத்தையும் சேர்த்துக் கொள்வதால், இதன் நீளம் சில நேரங்களில் ஐந்து அல்லது ஆறு தலைமுறையினரின் பெயர்களுக்குரியதாக நீண்டு விடுவதுண்டு.

இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. நகரத்தார் சமூகத்தில் மரபு வழிப்பட்டனவாக வழக்கில் இருக்கும் பெயர்கள் குறைவு. எனவே ஒரு பெயரை உடையவர்கள் ஓர் ஊரில்

Koviloor Digital Library

நிறையவே இருப்பர். தந்தை பெயரால் வேறுபடுபவர் சிலராக இருக்க, சிலர் அந்த நிலையிலும், வேறுபடவில்லையானால், தாத்தாவின் முன்னெழுத்தும் சேர்ந்தால் தான் அவர் மற்றவரிடமிருந்து வேறுபடுத்தப்படுவார்.


இக்காரணங்களினால்தான் நகரத்தாரின் முன்னெழுத்துக்கள் நீள்கின்றன. ஆனால் அதிலே ஒரு நன்மையும் இருக்கிறது. இத்தலைமுறையினர் ஐந்து அல்லது ஆறுதலைமுறை வரையான தம் முன்னோர்களைப் பெயரளவிலாவது அறிந்து கொள்கின்றனரல்லவா?

சான்றாகச் சில நீண்ட முன்னெழுத்துக்கள் உ. இராம. மெ. சுப. சேவு. அண. திருநாவுக்கரசு செட்டியார் (6 தலைமுறை); சா. இராம. மு. அ. மு. இராமசாமி செட்டியார் (5 தலைமுறை); க. வீ. அழ. இராம. அழகப்ப செட்டியார் (4 தலை முறை); கரு. முத்து தி. சு. சொக்கலிங்கம் செட்டியார் (4 தலைமுறை).

மெய்யப்ப செட்டியார், ஆவி., (22-7-1907 - 9-8-1979)

பிள்ளையார்பட்டி
காரைக்குடி
திரைப்படத் தயாரிப்பாளர்

ஏவிஎம். எனத் திரையுலகில் புகழ்பெற்ற இவர் ஆவிச்சி செட்டியார் – இலட்சுமி ஆச்சியின் மகன். இவரது இளம் வயதிலேயே தம் தந்தையாரால் காரைக்குடியில் நடத்தப் பெற்ற ஏவி அன் சன்ஸ்



ஆவி. மெய்யப்ப செட்டியார்

பொறுப்பை ஏற்பதற்காகப் பள்ளிப் படிப்பைக் கைவிட நேர்ந்தது. பல்பொருள் அங்காடியாக இருந்த ஏவி அன் சன்சில் இவர் பொறுப் பேற்றதும் இசைத்தட்டு விற்பனைக்கு முதன்மை கொடுத்தார். தொடர்ந்து தாமே இசைத் தட்டுக்களைத் தயாரிக்கும் நோக்கத்தில் சென்னையில் சரஸ்வதி ஸ்டோர்சை நிறுவினார்.

1934இல் சரஸ்வதி சவுண்ட் புரொடக்ஷன் என்னும் பெயரில் ஒரு படத் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கினார். சென்னையில் படப்பிடிப்பு நிலையங்கள் இல்லாத சூழலில் கல்கத்தா சென்று அல்லி அர்ச்சுனா, ரத்னாவளி திரைப்படங்களைத் தயாரித்தார். பின்னர் பிரகதி பிக்சர்ஸ் என்ற பெயரில் 1937இல் 'நந்தகுமார்' படத்தைப் புனாவில் தயாரித்தார். இம்மூன்று படங்களும் தோல்வியைத் தழுவினாலும் மனம் தளராமல் சென்னையில் தாமே பிரகதி ஸ்டுடியோ படப்பிடிப்பு நிலையத்தை நிறுவி அதில் பல படங்களைத் தயாரித்தார். அவற்றுள் ஒன்றான புகழ்பெற்ற நகைச்சுவைப் படமாகிய 'சபாபதி'யையும் 'ஸ்ரீ வள்ளி'யையும் அவரே இயக்கினார். தம் படப்பிடிப்பு நிலையத்தைத் தேவகோட்டைச்சாலைத் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகே நிறுவியபோது ஏவிஎம் ஸ்டுடியோ எனப் பெயரிட்டார். அதில் 'நாமிருவர்', 'வேதாள உலகம்' ஆகிய படங்களைத் தயாரித்தார். மீண்டும் 1947இல் சென்னை திரும்பி ஏவிஎம் ஸ்டுடியோவை வடபழநியில் நிறுவினார். அங்கு எடுக்கப்பட்ட முதல்படம் 'வாழ்க்கை'. தொடர்ந்து அவர் எடுத்த படங்கள் அனைத்தும் வெற்றி பெற்றுத் திரையுலகில் அவர்தம் புகழைப் பரப்பின.

சுராஜ்மல் அன் சன்ஸ் என்ற நிறுவனத்திட மிருந்து பாரதியார் பாடல்களுக் குரிய உரிமையைப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கினார். பிறகு தமிழக அரசு பாரதியார் பாடல்களை நாட்டுடைமையாக்க முனைந்த பொழுது பணம் எதுவும் பெறாமல் பாரதியார் பாடல்களின் உரிமையை நாட்டுடைமையாக்க இசைந்தார். இனிய இசையமைப்பில் சிறந்த பாடகர்களின் குரலில் பாரதி பாடல்களைத் திரைப்படங்களில் ஒலிக்கச் செய்தும், பின்னர் உரிமையை நாட்டுக்கு வழங்கியும் பாரதி பாடல்களை இவர் பட்டிதொட்டி எங்கும் பரவச் செய்தார்.

சென்னைக் கம்பன் கழகத்தின் புரவலர்களுள் ஒருவர். குழந்தை இலக்கிய வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த குழந்தை இலக்கியத்துக்கு ஏவிஎம் தங்கப்பதக்கம் வழங்கக் குழந்தை எழுத்தாளர் சங்கத்திற்கு நிதியளித்துள்ளார். ஆண்டுதோறும் கம்பன் விழாவும் இலக்கியச் சிந்தனை ஆண்டு விழாவும் நடைபெறத் தமது ஏவிஎம் இராஜேசுவரி கல்யாண மண்டபத்தைக் கட்டணம் பெறாமல் வழங்க ஏற்பாடு செய்துள்ளார். கம்பன் கழகம் சார்பில் ஏவிஎம் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஆண்டுதோறும் நிகழ வைப்புத் தொகை அளித்துள்ளார்.

Koviloor Digital Library

ஏவிஎம் அறநிலையின் சார்பாக ஏவிஎம் பாலர்பள்ளி, ஆவிச்சி உயர்நிலைப்பள்ளி, மருத்துவமனை ஆகியவற்றைச் சென்னையில் நிறுவியுள்ளார். உயர்நிலைப் பள்ளி இப்பொழுது மேனிலைப் பள்ளியாக உயர்ந்துள்ளது.

தேசிய இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் தம் படங்களின் வாயிலாகக் காந்திபுகழ் பரப்பினார். காரைக்குடிக்கு மகாத்மா காந்தி வந்த பொழுது அவர் சுற்றுப் பயணத்தில் பயன்படுத்திக் கொள்ளத் தம் புதிய காரை வழங்கினார். வாழ்நாள் முழுவதும் கதரே அணிந்து வந்தார்.

இந்தியில் வெளிவந்திருந்த மகாத்மாகாந்தி பற்றிய செய்திப் படத்தின் தமிழ்ப் பதிப்பைத் தம் சொந்தச் செலவில் எடுத்து நாட்டுக்கு அளித்தார்.

திரையுலக மேதை என்று அழைக்கப்படும் ஏவிஎம் மக்கள் மனமறிந்து காலந்தோறும் தொடர்ந்து வெற்றிப் படங்களையே அளித்த வித்தகராவார். மாறிவரும் காலத்திற்கேற்பப் புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதலும், துறைதோறும் புதிய கலைஞர்களை அறிமுகப்படுத்துதலும் இவரது வெற்றியின் பின்னணியாகும். அதே வேளையில் பல திறமையுள்ள கலைஞர்களைத் தம் நிறுவனத்தில் தொடர்ந்து பணியாற்றச் செய்து ஆதரித்தவர். இவர் அறிமுகப்படுத்திய கலைஞர்களுள் டி.ஆர். மகாலிங்கம், வைஜயந்திமாலா, கமலஹாசன், திருலோகசந்தர், எஸ். பி. முத்துராமன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். தமிழ்ப்படங்களோடு பிறமொழிப் படங்களையும் தயாரித்த இவர் தமது 'ஹம்பஞ்சி ஏக்டால்கே' என்ற இந்திப் படத்துக்காகக் குடியரசுத்தலைவர் விருதினைப் பெற்றார். ஏவிஎம் நிறுவனத்தோடு ஒத்த புகழ்பெற்ற பல திரைப்பட நிறுவனங்கள் தொடர்ந்து செயற்பட இயலாமல் முடங்கிவிட்ட நிலையிலும் பொன்விழாக்கண்ட ஏவிஎம் நிறுவனம் இன்னும் தொடர்ந்து வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருப்பதற்கு மெய்யப்பர் இட்ட அடித்தளமே காரணம் ஆகும்.

மெய்யப்ப செட்டியார், காந்தி, மெ. இராம. (6-9-1886 - 30-4-1957)

வைரவன் கோவில்
காரைக்குடி
காந்தியவாதி

இராமநாதன் செட்டியார் – கருப்பாயி ஆச்சியின் மகன். இளமையிலேயே காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, காந்தியத் தொண்டரானார். வாழ்நாள் முழுவதும் இவரும், இவரது குடும்ப உறுப்பினரனைவரும் கதராடையே அணிந்தனர்.

செக்காலையில் இவர் வாழ்ந்த வீட்டிற்குக் காந்தி விலாசு என்று பெயரிட்டார். தம் இரண்டாவது மகனுக்குக் காந்தி என்றும், தம் முதல் மகளுக்கு காந்திமதி என்றும் பெயரிட்டார். தம் தந்தையார், தாயார் இருவருக்கும் சிரார்த்தம் செய்வதற்குப் பதிலாகச் செக்காலையில் தம் வீட்டில் இராமநாதன் கலாசாலை என்ற பெயரில் ஒன்றும், கழனிவாசலில் காந்தி கலாசாலை என்ற பெயரில் ஒன்றும் என இரு பள்ளிகள் தொடங்கி நடத்தியமை இவரது சீர்திருத்தப் போக்கிற்குச் சான்றாகும்.

இந்து மதாபிமான சங்கத்தின் தொடக்கத்தி லிருந்து அதனோடு தொடர்பு கொண்ட இவர், தனவைசிய ஊழியர் சங்கத்தில் பல ஆண்டுகள் செயலராகப் பணியாற்றியுள்ளார். 1927இல் காந்தியடிகள் காரைக்குடி வந்தபோது, இவர்தம் இல்லத்திற்கு வந்து சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வ.உ.சிதம்பரனார் கப்பல் நிறுவனம் தொடங்குதல் பொருட்டு நிதி திரட்டிய போது அதற்கு ரூபாய் 2,000 வழங்கினார். நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்திற்கு 30,000 ரூபாயும் 60 பவுன் தங்கமும் வழங்கினார். தமது மணிவிழா நினைவாக இந்து மதாபிமான சங்கத்திற்குக் கட்டிட நிதியாக இவர் கொடுத்த ரூ. 3,000, அச்சங்கத்தார் மேலும் நிதி திரட்டி, இப்போதைய கட்டிடத்தைக் கட்டி முடிக்க ஊக்குதலாக அமைந்தது. பெண் கல்விக்காக மிகவும் பாடுபட்ட இவர் கொப்பனாபட்டி கலைமகள் கல்வி நிறுவனத்திற்குப் பல்லாற்றானும் துணை நின்றார். அங்கு பயின்ற ஏழை மகளிர் பலருக்குக் கல்வி, உணவு இவற்றுக்காக நிதி உதவியும் செய்தார்.

''தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, நூல் நூற்றல், பெண் முன்னேற்றம், அரிசன முன்னேற்றம், சமயப் பொதுமை, இன்முறை என்ற காந்தியங்களை முறையாகக் கடைப்பிடித்து, ஊர் முதல் நாடுவரை நல்லன எல்லாவற்றுக்கும் தொண்டு செய்து, தோள் கொடுத்த தமிழ்ப் பெரியவர் காந்தி மெய்யப்பர்'' என இவரைப்பற்றி வசுப. மாணிக்கனார் கூறுவது இவரது பெருமையைப் புலப்படுத்தும்.

Koviloor Digital Library

மெய்யப்ப செட்டியார், தமிழ் வள்ளல், சேவு., (11-5-1910 - 9-3-1967)

நேமங்கோவில்
தேவகோட்டை
திருப்பணியாளர், தமிழ்ச்சான்றோர்

சின்னச்சேவுகன் செட்டியார் – முத்துக் கருப்பி ஆச்சியின் மகன். தம் இளவயதில் தந்தையாரை இழந்த மெய்ப்பர் தமது பெருமுயற்சியால் குடும்பத்தின் செல்வவளம் பெருக்கிச் சைவத்திற்கும் தமிழுக்கும் அள்ளியள்ளிக் கொடுத்தார். தந்தையார் தொடங்கிய திருவையாற்று அம்மன் கோவில் திருப்பணியை மிகச்சிறப்புற நிறைவேற்றி 1937ஆம் ஆண்டில் குடமுழுக்கு நீராட்டு விழாவை நடத்தினார்.

தூத்துக்குடி சித்தாந்த சிகாமணி முத்தையாபிள்ளையிடம் இலக்கணமும் சக்திவேற் பிள்ளையிடம் இலக்கியங்களும் கற்றார். தமிழ்ப்புலவர்களிடம் பேரன்பு கொண்ட இவரைச் சூழ்ந்து எப்போதும் தமிழ்ப்புலவர்கள் இருப்பர். அவர்களோடு கலந்துரையாடித் தாமும் கவிதைகள் இயற்றுவார். வெளியூர்த் தமிழ்ப்புலவர்களும் உதவி கேட்டு இவருக்குக் கடிதங்கள் எழுதுவர். நாள்தோறும் வரும் கடிதங்கட்கு உடனடியாக உதவி செய்வார்.

பழநி ஈசான சிவாசாரியாரிடம் சிவதீட்சை பெற்ற மேனா, தமிழ்க்கடல் இராய.சொ.முதலான பலர் சிவதீட்சை பெற ஆற்றுப்படுத்தி அவர்கட்குப் பூசைப்பொருட்களை வாங்கி வழங்கினார். பல ஊர்களில் சிவபூசை மாநாடுகளை நடத்தியுள்ளார். சைவமடங்களின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்துள்ள இவரால் பலர் மடங்களில் தமிழ்க்கல்வி பெற்றுள்ளனர். குன்றக்குடி அடிகளாரைக் குன்றக்குடி மடத்திற்கு அழைத்து வந்து தமிழார்வம் கொள்ளச் செய்து அவரைப் புகழ்பெறச் செய்தவர் மெய்யப்பரேயாவார். அதனால் குன்றக்குடி அடிகளார் இராசா சர் முத்தையா செட்டியார் தலைமையில் 'தமிழ்வள்ளல்' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினார்.

1940 முதல் 27 ஆண்டுகள் தம்வாழ்நாள் இறுதிவரை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இயக்குநராக இருந்தார். இவரால் இப்பகுதியினர் பலர் இவ்வங்கியில் பணியமர்த்தப் பெற்றனர். தேவகோட்டையில் சேக்கிழார் விழாத் தொடங்கக் காரணமாக இருந்த மெய்யப்பர் சிவாகம' சங்கத்தின் புரவலராகத் திகழ்ந்தார். திருவையாறு அறம்வளர்த்த நாயகி பதிகம், கருதாவூருணி ஸ்ரீ கைலாச விநாயகர் நான்மணி மாலை, குன்றை நகர்க் குமரன் போற்றிப்பதிகம், சிவபூசை முறை அநுட்டான விதி முதலாகிய 13 நூல்களை இவர் இயற்றியுள்ளார். மகா சிவராத்திரியன்று சிவனை வழிபடும் நிலையில் இவ்வுலகை நீத்து இறைவன் திருவடிப்பேற்றை எய்திய சிறப்பே இவரது சிவபூசைக்கும் செந்தமிழ்ப் பற்றுக்கும் கிடைத்த பரிசாகும்.

மெய்யப்பன், சா., (14-3-1924)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
புதுவயல்
சட்டமன்ற உறுப்பினர்

சாத்தப்ப செட்டியார் மகன். சென்னை சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்றவர். 1950 முதல் வழக்குரைஞராகத் தேவகோட்டையில் தொழில் செய்தவர். அங்கு அரசாங்கக் குற்ற விசாரணைக் கூட்டு வழக்கறிஞராக ஆறு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். சுதந்திரா கட்சியின் சார்பில் 1967இல் காரைக்குடித் தொகுதியிலிருந்து சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

மெய்யப்பன், பதிப்புச் செம்மல், டாக்டர் ச. (21-6-1933)

வைரவன் கோவில் - பிள்ளையார் வகுப்பு
கடியாபட்டி
தமிழறிஞர், பதிப்பாளர்

குங்கிலியம் பழ. சண்முகனார் – மீனாட்சி ஆச்சியின் மூத்த மகனான இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சத்தியமூர்த்தி. தமது தனித் தமிழ் ஆர்வம் காரணமாக இவர் இப்பெயரை மெய்யப்பன் என மாற்றிக் கொண்டார்.

அழகப்பா கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பயின்று 1957இல் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றார். அந்த ஆண்டே அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் சேர்ந்தார். 36 ஆண்டுகள் தொடர்ந்து ஆசிரியப் பணி ஆற்றி 1993இல் ஓய்வு பெற்றார்.

இவர் 1961இல் மணிவாசகர் நூலகம் என்னும் நூல்வெளியீட்டு நிறுவனத்தைத் தொடங்கினார். கடந்த 38 ஆண்டுகளில் 650க்கும் மேற்பட்ட அருமையான நூல்களை இந் நிறுவனத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளார்.

1976இல் 'வெற்றித் துணைவன்' என்ற பெயரில் பள்ளி மாணவர்கட்குரிய வழிகாட்டி நூல்களை அனைத்துப் பாடங்களுக்கும் வெளியிடத் தொடங்கினார். இப்போது வெற்றி, தென்றல், சுடர், தாமரை என்ற பெயர்களில் வெளியாகும் வழிகாட்டி நூல்கள் மூன்றாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை ஆண்டொன்றுக்குப் பல இலட்சம் படிகள் விற்பனையாகின்றன.

Koviloor Digital Library

இப்போது தாள் வணிகம், நிதி நிறுவனம், முதலீட்டு நிறுவனம் என 10 நிறுவனங்களைத் திறம்பட நடத்தி வருகிறார்.

சிறந்த முறையில் பாடம் நடத்தும் நல்லாசிரியர் எனப் பெயர் பெற்ற இவர் 16 நூல்கள் எழுதியுள்ளார். 'தாகூர்' எனும் நூல் தமிழக அரசின் பரிசு பெற்ற நூலாகும். 'தில்லைத் திருக்கோவில்' எனும் இவரது நூல் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழி பெயர்க்கப் பெற்ற சிறப்புடையது.

பதிப்பு இவரது தொழில் மட்டுமன்று; ஆய்வும் அதுவே. 'நூறு ஆண்டுகளில் தமிழ் நூல் பதிப்பு முறை' என்ற தலைப்பில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். இவர் பதிப்பித்து வெளியான நூல்களில் 40க்கும் மேற்பட்டவை பல்வேறு பரிசுகளைப் பெற்றவை என்பது இவரது பதிப்பாற்றலை உணர்த்தும்.

எந்த நூலையும் செம்பதிப்பாகக் கொணர வேண்டும் என்ற குறிக்கோள் உடையவர். அகராதி வரிசை, சிற்றிலக்கிய வரிசை, திருக்குறள் வரிசை, திருக்கோவில் வரிசை, நகரத்தார் கோவில் வரிசை, உலக நூல் வரிசை என வரிசை நூல்களைத் திட்டமிட்டு வெளிக் கொணர்வது இவரது இயல்பு.

கொடை மனம் கொண்ட இவர் அண்ணாமலை, அழகப்பா, புதுவை, தஞ்சை, திருவேங்கடவன் ஆகிய பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட 16க்கும் மேற்பட்ட அமைப்புக்களில் அறக்கட்டளைகளை நிறுவியுள்ளார்.

மிக அதிகமாகப் பயணம் செய்யும் இயல்புடையவர். "வாரியார் சுவாமிகளுக்கு அடுத்தபடியாக அதிகமாகப் பயணம் செய்பவர் அண்ணன் ச.மெ.தான் என நினைக்கிறேன்" என்று லேனா தமிழ்வாணன் குறிப்பிடுகிறார். தமிழ்நாட்டில் இவர் செல்லாத ஊரில்லை எனலாம். வடநாட்டிலும் காசி, கல்கத்தா, பம்பாய், புதுதில்லி என விரிவாகப் பயணம் செய்துள்ள இவர் மலேசியா, சிங்கப்பூர், கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள், மொரீசியசு, தென் ஆப்பிரிக்கா ஆகிய வெளிநாடுகளுக்கும் சென்று வந்துள்ளார்.

பயிலும் நாள்தொட்டு நூல்களைச் சொந்தமாக வாங்கும் இயல்புடையவர். ஏறத்தாழ 12,000 நூல்களுக்கு மேல் வாங்கிச் சேர்த்து வைத்திருக்கிறார். தம் பதிப்பகம் வாயிலாக நூல் வெளியிட நூலாசிரியர்களை அமர்த்தும் போது அவர்கட்கு வேண்டிய மூல நூல்கள், துணை நூல்களை இவரே வழங்குவார்.

இருபதாம் நூற்றாண்டில் முன்னுரை இலக்கியம், அணிந்துரை இலக்கியம், பதிப்புரை இலக்கியம் ஆகியவை புதிதாகக் கிளைத்துள்ள இலக்கிய வகைகள். 'மெய்யப்பனார் பதிப்புரைகள் எனக் கொத்தாக வெளியிடத்தக்க அளவுக்கு இவரது பதிப்புரைகள் அனைத்தும் ஆராய்ச்சிப் பதிப்புரைகள். நூலுள் நுழைய அவை கோபுர வாயில்கள்' என ஊரனடிகள் இவரது பதிப்புரைகளைப் பாராட்டுகிறார். இவர் நானூறுக்கு மேற்பட்ட பதிப்புரைகள் எழுதிய சிறப்புடையவர்.

தமிழே தமிழகத்தின் ஆட்சிமொழி என்ற நிலை ஏற்படவேண்டும் எனத் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமையில் 17–5–1993இல் சென்னையில் போராட்டம் நடத்திய போது இவரும் பங்கேற்று சிறை சென்றார். தில்லைத் திருவம்பலத்தில் தமிழ்த் திருமுறைகளை ஏற்ற வ.சுப. மாணிக்கனார் தலைமையில் நடந்த போராட்டத்திலும் இவர் பங்கேற்றார். தமிழகப் புலவர் குழுவின் துணைத் தலைவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினராக உள்ளார்.

இவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு 'மெய்யப்பர் கும்மி' என்ற நூலை அரிமதி தென்னகன் எழுதியுள்ளார். இவரது வாழ்க்கை வரலாற்றை மது.ச. விமலானந்தம் சிறப்பான முறையில் எழுதியுள்ளார்.

இவருக்குத் 'தமிழவேள்' என்ற விருதினைக் குன்றக்குடி அடிகளாரும், 'அறமனச் செம்மல்' என்ற விருதினை துலாவூர் ஆதீனமும் அளித்துள்ளனர். குளித்தலை கா.சு.பிள்ளை இலக்கியக் குழு 'தமிழ் நெறிக் காவலர்' என்ற விருதினை வழங்கியுள்ளது.

மொழி உணர்வு, சமூக உணர்வு, தொழில் உணர்வு என்ற மும்மை உணர்வுகளோடு முறையான வாழ்க்கை நடத்தும் எளிய பண்பாளர் இவர்.

மேலைச் சிவபுரி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக் குடியிலிருந்து திருப்புத்தூர், கண்டவராயன்பட்டி, ஆ. தெற்கூர், வேந்தன்பட்டி வழியாக 44 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, வைரவன் கோவில், நேமங்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 4 கோவில்களைச் சேர்ந்த 452 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

Koviloor Digital Library

மீனாட்சி சொக்கலிங்கர் கோவில் நகரச் சிவன் கோவிலாகும். 14–6–1922இல் முதல் குடமுழுக்கு விழாவும் பின்னர் 27–1–1947, 9–7–1962ஆகிய நாட்களில் குடமுழுக்கு விழாக்களும் நடைபெற்றன. 1990இல் மீண்டும் திருப்பணி தொடங்கப் பெற்றுக் கோவில் புதிய அமைப்புடன் கட்டப்பெற்று 19–8–1994இல் குடமுழுக்கு விழா நடைபெற்றது. மதுரைக் கோவிலைப் போன்றே திகழும் இக்கோவிலில் மதுரையிற் போலவே ஆவணி மூலத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த முத்தப்ப செட்டியார் வகையாரால் சக்தி வேலாயுதசாமி கோவில் என்னும் சுப்பையா கோவில் கட்டப்பட்டது. இங்கிருந்து தை மாதம் கார்த்திகையன்று காவடிகள் பழநிக்குப் புறப்படும். இவ்வூரில் உள்ள 3 ஊருணிகளில் 2 குடிநீர்க் குளங்களாகும்.

பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த முருகப்ப செட்டியார் வகையாரால் பிச்சாத்தாள் படைப்பும் நேமங்கோவில் பங்காளிகளால் சின்னம்மாள் படைப்பும் படைக்கப்படுகின்றன. சன்மார்க்க சபையும் வள்ளுவர் மன்றமும் தமிழ் விழாக்கள் நடத்துகின்றன. இராமர் கோவிலில் இராமாயணம் படிக்கப்படுகிறது. சன்மார்க்க சபையில் நால்வர் குருபூசையும் தொடர்ந்து சிறப்பாக நடைபெறுகின்றன.

செட்டிநாட்டில் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ள சன்மார்க்க சபை பண்டிதமணியின் தூண்டுதலால் வ.பழ.சா. பழநியப்ப செட்டியார், வ.பழசா. அண்ணாமலை செட்டியார் ஆகியோரால் 1909இல் தோற்றுவிக்கப் பெற்றது. இதனைச் சார்ந்த கல்வி நிறுவனங்கள் கணேசர் மழலையர் பள்ளி, கணேசர் தொடக்கப் பள்ளி, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மாலைநேரக் கல்லூரி ஆகியவையாம். அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு முருகமணி. முரு. பழநியப்ப செட்டியார் 25,000 ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார். இவ்வூரினரான சாமிநாதன் செட்டியார், இராம. ஆறுமுகம் செட்டியார் ஆகியோர் இ.தே. ராவில் பணியாற்றியுள்ளனர்.


பழநி வழிநடைப் பயணத்தில் மேலைச் சிவபுரியும் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. பிடாரம்பட்டி என்னும் ஊரில் வாழ்ந்திருந்த பிள்ளையார்பட்டிக் கோவில் முத்தப்ப செட்டியாரை மேலைச்சிவபுரி சேர்வைகாரரும் ஊராரும் தம்மூரில் வந்து வாழ்ந்திருக்குமாறு அழைத்தனர். அவ்வண்ணம் இங்கு வந்து வசித்த சாமியாடி முத்தப்ப செட்டியார் ஆண்டுதோறும் தைமாதம் கார்த்திகையன்று காவடி கட்டிப் பழநிக்கு நடந்து சென்று வருவார். புதுக்கோட்டை மன்னருக்கு ஆண்வாரிசு இல்லாத குறை முத்தப்பர் அருள்வாக்கால் நீங்கியது. மகன் பிறந்த மகிழ்ச்சியில் மன்னர் விருப்பப்படி தாமிரவேல் செய்து முத்தப்பரிடம் கொடுத்தார். தொண்டைமான் திருமுக ஓலையின்படி இவ்வேலுக்கும் பழநி அன்னதான மடம் ஆறுகால் சவுக்கையில் அபிஷேகமும் முத்தப்பருக்குப் பரிவட்ட மரியாதையும் நடைபெற்றன. இன்றும் முத்தப்பர் வழிமுறையினர் அத்தாமிர வேலை ஏந்தியே பழநிக்குக் காவடி கட்டிச் சென்று வருகின்றனர். வேல் திரும்பி ஊருக்கு வரும் நாளில் சக்தி வேலாயுத சாமி கோவிலில் வேல் பூசையும், அன்னதானமும் நடைபெறும். பெருந்திரளாக மக்கள் கூடி வழிபடுகின்றனர்.

ராஜா அண்ணாமலை மன்றம்

1943இல் தோற்றுவிக்கப் பெற்ற தமிழிசைச் சங்கத்திற்குச் சென்னையில் நிலையான ஒரு கலையரங்கம் தேவை எனக் கருதி 1948இல் மறைந்த தமிழிசைச் சங்கத் தலைவராகிய இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பெயரில் ஒரு மாமன்றத்தை உருவாக்கினர். இம்முயற்சியில் ஆர்.கே. சண்முகம் செட்டியார், இராஜா சர். முத்தையா செட்டியார், மு.அ. சிதம்பரம் செட்டியார் ஆகியோர் முனைந்து செயல் பட்டனர். 1950இல் அரசு இடம் ஒதுக்கித் தந்தது. இராஜா சர் முத்தையா செட்டியார் தம் குடும்பச் சார்பில் ஒரு இலட்சரூபாய் வழங்க எஞ்சிய தொகை நன்கொடையாகத் திரட்டப்பெற்று, 8 இலட்ச ரூபாய் செலவில் இரண்டு ஆண்டுகளில் கட்டிடப் பணி நிறைவெய்தியது. 21–10–1952 இல் இம்மன்றத்தின் திறப்பு விழா நடைபெற்றது. விழாப் பேருரை ராஜாஜியால் நிகழ்த்தப் பெற்றது. விழாத்தலைமை யேற்றவர் ரா.பி. சேதுப்பிள்ளை.

தமிழிசைச் சங்கத்தின் அலுவலகமும் தமிழிசைக் கல்லூரியும் இம்மன்றத்தில் இயங்குகின்றன. ஆண்டுதோறும் பண்ணாராய்ச்சி மாநாடும், தேவார திருவாசகத் தமிழிசைப் பாடற் போட்டிகளும் இம்மன்றத்தில் நிகழுகின்றன. 1–11–1956இல் இம்மன்றத்தில் இசைக்கருவி நிலையம் ஒன்று திறக்கப் பெற்றது.

Koviloor Digital Library



ராஜா அண்ணாமலை மன்றம்

அருமை மிக்க, பயன்படுத்தத் தக்க இசைக் கருவிகள் இங்கு தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. மன்றத்தின் முகப்பில் இராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் உருவச்சிலை நிறுவப் பெற்றுள்ளது. தமிழிசை இயக்க வரலாற்றில் சிறந்த சாதனையாகிய இம்மன்றம் தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவித்த அண்ணாமலை அரசர்க்கு அழியாத நினைவுச் சின்னமாகும்.



ராஜா முத்தையா மன்றம்

Koviloor Digital Library

ராஜா முத்தையா மன்றம்

சென்னைத் தமிழிசைச் சங்கம் ராஜா அண்ணாமலை மன்றத்தை உருவாக்கியதைப் போல மதுரைத் தமிழிசைச் சங்கம் ராஜா முத்தையா மன்றத்தை உருவாக்கியது. 1974 இல் தொடங்கப் பெற்ற மதுரைத் தமிழிசைச் சங்கம் தனக்கெனக் கலையரங்கோடு கூடிய அலுவலகக் கட்டிட வளாகத்தை அமைக்க முற்பட்டது. இப்பணிக்குத் தமிழக அரசு இரண்டரை ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்கியது. அங்கு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி 24-4-1975 இல் இம்மன்றத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

வடக்கிலிருந்து மதுரை நகருக்குள் நுழையும் நுழைவாயிலில் நீதிமன்றக் கட்டிடங்களுக்கு எதிரே இம்மன்றம் அமைந்துள்ளது. இது இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. முதலில் ஒரு வரவேற்பு மண்டபமும் அதனை அடுத்து ஒரு கலையரங்கமும் அமைந்துள்ளன. வர ''வற்பு மண்டபம் 80' X 35' அளவுடையது. இதவ. சுவர்கள் செட்டிநாட்டுக் கட்டிடக் கலைப் பாணியில் வழுவழுப்பான முத்து வெள்ளைப் பூச்சுடையவை. இதன் தாழ்வாரத்தில் கலை நயத்தோடு கூடிய ராஜஸ்தான் சலவைக்கல் தூண்கள் எட்டு அமைக்கப்பட்டுள்ளன. எண்பது அடி நீளக் கற்படிகள் அமைந்துள்ளன.

கலையரங்கம் மக்கள் அமரும் பகுதி, நிகழ்ச்சி மேடை என இரு பகுதிகளைக் கொண்டது. மக்கள் அமரும் பகுதி 110' X 80' என்ற அளவுடையது. 1100 இருக்கைகள் கொண்டது. முழுமையும் குளிர்சாதன வசதி செய்யப் பெற்றது. நிகழ்ச்சி மேடை 50' X 50' என்ற அளவில் மிகப்பெரிய மேடையாக அமைந்துள்ளது. கலையரங்கத்தின் இரு புறங்களிலும் 100 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட தாழ்வாரங்கள் அமைந்துள்ளன.

இம்மன்றத்தின் வரவேற்பு மண்டபத்தின் இருபுறங்களிலும் உள்ள அறைகளிலும் மேல் இரு தளங்களிலும் தமிழிசைச் சங்க அலுவலகம், இசைக்கல்லூரி, இசைக் காட்சிச் சாலை, இசை நூலகம் ஆகியவை அமைந்துள்ளன. கலையரங்கில் ஆண்டுதோறும் மார்ச் மாதம் தமிழிசைச் சங்க ஆண்டுவிழா ஒரு வார காலம் இயல், இசை, நாடக விழாக்களாக நடைபெற்று வருகிறது. இம்மன்ற வளாகத்தில் மதுரை தமிழிசைச் சங்க நிறுவுநர் இராசா சர். முத்தையா செட்டியாரின் முழு உருவச்சிலை அமைக்கப் பெற்றுள்ளது.

லேனா தமிழ்வாணன் (1-2-1954)
(இயற்பெயர் : இலட்சுமணன், இராம)

மாத்தூர் - மணலூர்
தேவகோட்டை
இதழாசிரியர்

புகழ்பெற்ற எழுத்தாளர் தமிழ்வாணன் - மணிமேகலையின் மூத்த மகன். பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டமும், இதழியலில் பட்டயமும் பெற்றவர். சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போது, தந்தையார் காலமானதால், 'கல்கண்டு' உதவி ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொள்ள நேர்ந்தது. எனவே சட்டக் கல்வியைக் கைவிட்டார்.

1948இலிருந்து 1977 வரை கல்கண்டின் ஆசிரியராகத் திகழ்ந்தவர் தமிழ்வாணன். 10-11-1977இல் அவர் காலமானதும் அவர் மகன் லேனா தமிழ்வாணனுக்கு எஸ்.ஏ.பி. அந்தப் பொறுப்பை வழங்கினார். கல்கண்டு இதழைத் தயாரிப்பதில் தமிழ்வாணனுக்கு வழங்கப்பட்டதைப் போன்ற குறுக்கீடற்ற முழு உரிமையை இவருக்கும் வழங்கினாலும், எஸ்.ஏ.பி. இவருக்கு உதவி ஆசிரியர் என்ற பணிப் பெயரையே வழங்கினார். அன்றுமுதல் தாம் காலமாகும் வரை கல்கண்டு ஆசிரியர் பொறுப்பையும் எஸ்.ஏ.பி.யே ஏற்றார்.

உதவி ஆசிரியர் என்ற பொறுப்போடு ஆனால், குறுக்கீடற்ற முழு உரிமையோடு, கல்கண்டு இதழை 18-11-1977இல் நடத்தத் தொடங்கிய லேனா தமிழ்வாணன் அதில் காண்பித்த ஆற்றலின் விளைவாக, எஸ்.ஏ.பி.யின் மறைவிற்குப் பிறகு 1994இல் 'குமுதம்' இதழுக்கும் அவர் உதவி ஆசிரியர் ஆக்கப்பட்டிருக்கிறார்.

இவ்வாறு சிறந்த இதழாசிரியராக இலங்கும் லேனா தம் தந்தையார் உருவாக்கிய மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழுவின் தலைவராகவும் இருக்கிறார். 45 எழுத்தாளர்களைக் கொண்ட இந்த ஆசிரியர் குழுவின் நூல்களை, தமது வெளியீட்டகத்தின் வாயிலாக, ஆண்டொன்றுக்கு 90 நூல்கள் என்ற கணக்கில் கடந்த பத்தாண்டுகட்கும் மேலாகத் தொடர்ந்து வெளியிட்டுச் சாதனை படைத்து வருகிறார்.

கடந்த 15 ஆண்டுகளில் இவர் தனியாக எழுதிய நூல்கள் 40க்கும் அதிகம். அவை பல்வேறு துறைகள் பற்றியவை; பல்வேறு இலக்கிய வகையில் அமைந்தவை.

இவர் பச்சையப்பன் கல்லூரி, இலயோலாக் கல்லூரி, இராணி மேரிக் கல்லூரி, அண்ணா ஆதர்சப் பெண்கள் கல்லூரி போன்ற கல்லூரிகளில் இதழியல் துறையின் பகுதி நேரப் பேராசிரியராகப் பொறுப்பேற்று இதழியல் வகுப்புக்கள் நடத்துகிறார்.

Koviloor Digital Library

இவர் மிகச்சிறந்த மேடைப் பேச்சாளரும் ஆவார். இவரைப் பேச அழைக்கும் வெளிநாட்டு அமைப்புக்கள் பலப்பல. அந்த அழைப்புக்களை ஏற்று, உலகின் பெரும்பாலான நாடுகட்குச் சென்று வந்துள்ளார். இவரது நூல்கள் தன்னாட்சிக் கல்லூரிகள் சிலவற்றில் பாடமாக வைக்கப் பெற்றுள. சென்னைப்பல்கலைக் கழகத்தில் சில ஆராய்ச்சி மாணவர்கள் இவரது படைப்புக்கள் குறித்து ஆய்வு மேற்கொள்கிறார்கள்.

சிறந்த இளம் இதழாளர் என்ற விருதினை **1982** இல் சென்னை வி.ஜி.பி. பண்பாட்டுக் கழகமும், **1984** இல் தேவகோட்டை ஜேசீஸ் இயக்கமும் **1991** இல் வேளாங்கண்ணி கல்வி நிலையமும் இவருக்கு வழங்கின. தமிழகத்தின் சிறந்த இதழாளர் என **1992–93** இல் இவர் தேர்ந்தெடுக்கப் பட்டு, இராஜீவ் காந்தி விருதைப் பெற்றார்.

சிறந்த இளைஞர் என்ற பட்டத்தை **1984**இல் சரசுவதி வித்யாலயா நிறுவனமும், **1988**இல் புதுக்கோட்டைச் சுழற்குழுவும், **1990**இல் பூந்தமல்லி அரிமா சங்கமும் வழங்கிச் சிறப்பித்தன. காஞ்சி மாடாதிபதி ஜெயேந்திரரால் சிறந்த எழுத்தாளருக்குரிய 'இலக்கியச் சிந்தனாமணி' எனும் பட்டம் இவருக்கு **1–1–1995**இல் வழங்கப்பட்டது. இவர் எழுதிய 'ஒரு பத்திரிகை யாளனின் மேலை நாட்டுப் பயண அனுபவங்கள்' எனும் நூலுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் **1987**இல் ஐயாயிரம் ரூபாய் பரிசு வழங்கியுள்ளது.

இங்கிலாந்தின் வானொலிக் கழகமாகிய பி.பி.சி யின் 'தமிழோசை' பகுதியில் கடந்த மூன்று ஆண்டு களாகத் தொடர்ந்து நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறார்.

சிறப்பாக உடை அணிவதில் தனிக்கவனம் செலுத்தும் இவர், நேரம் தவறாமையையும், இனிமையாகப் பழகும் இயல்பினையும் உடையவர்; சிறந்த இதழாசிரியர்; நல்ல பேச்சாளர்; கடினமாக உழைப்பவர்; பல்துறை நூல்களைப் படைத்துத் தருபவர்; மொத்தத்தில் ஒரு பெரும் சாதனையாளர்.

வசந்த் (14-12-1960)

(இயற்பெயர் : சின்னவீரப்பன், சோம)

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார்

தேவகோட்டை

திரைப்பட இயக்குநர்

சித. சோமையா செட்டியார் – சிவகாமி ஆச்சியின் மகன். இளமையிலேயே எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்ட இவர் குமுதம், ஆனந்த விகடன், கல்கி, அமுதசுரபி போன்ற இதழ்களில் 50க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசினையும் அமுத சுரபிச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசினையும் பெற்றுள்ளார்.

திரைப்படத் துறையில் ஆர்வம் ஏற்பட்டு, அதில் நுழையும் போது, இவர் இயக்குநர் சிகரம் கே. பாலச்சந்தரிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்தார். அவரிடம் பல படங்களிற் பணியாற்றிப் பெற்ற பயிற்சியின் விளைவாகக் 'கேளடி கண்மணி' என்ற திரைப்படத்தை முதன் முதலில் கதை உரையாடல் எழுதி இயக்கினார்.

அப்படம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. அதற்குச் சினிமா எக்ஸ்பிரஸ், பிலிம்பேர், சினிமா ரசிகர் சங்கம், தமிழக அரசு ஆகியவற்றின் **1990**ஆம் ஆண்டிற்கான சிறந்த படத்திற்குரிய பரிசுகள் கிடைத்தன.

அடுத்து இவர் இயக்கி வெளிவந்த 'நீ பாதி நான் பாதி' திரைப்படத்திற்கும் சினிமா எக்ஸ்பிரஸ், பிலிம்பேர் விருதுகள் கிடைத்தன. ராணி – லக்ஸ் வழங்கிய சிறந்த இயக்குநர் விருது, சினிமா எக்ஸ்பிரஸ் வழங்கிய சிறந்த புதுமுக இயக்குநர் விருது ஆகியவற்றையும் பெற்றவர் வசந்த். இவர் இயக்கி வெளிவந்துள்ள 'ஆசை' திரைப்படத்தையும் இதழ்கள் பாராட்டி எழுதியுள்ளன. தொடர்ந்து புதுப்படங்களை இயக்கிக் கொண்டிருக்கும் இவ்விளைஞர், நகரத்தார் சமூகத்திலிருந்து திரைப்படத்துறையில் புகுந்து பெயரும் புகழும் பெற்றவர் வரிசையில் அண்மையில் இடம் பெற்றவர் ஆவார்.

வடிவேலு, அழ., (18-11-1938)

மாத்தூர் - உறையூர்

தேவகோட்டை

தொழிலதிபர்

அழகப்ப செட்டியாரின் மகன். சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். **1969**இல் மெர்க்கண்டைல் கிரடிட் கார்ப்பரேசனின் பொது மேலாளராகப் பதவியேற்றார். வங்கியல்லாத தனியார் நிறுவனம் ஒன்று கிரடிட் கார்டு வழங்கும் முறையை முதன் முதலில் செயல்படுத்தினார். அது இப்பொழுது 'மெர்கார்டு' என்னும் தனிநிறுவனமாக விளங்குகிறது. உலகிற் பெரிய கிரடிட் கார்டு நிறுவனமாகிய மாஸ்டர் கார்டு இண்டர் நேஷனல் நிறுவனத்தோடு இணைந்து மெர்கார்டின் செயல்பாட்டை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறார். தென்னிந்திய வர்த்தக சபையில் **1996–97** ஆண்டுக்குரிய தலைவராகப் பணியாற்றியிருக்கிறார். பல தொழில் நிறுவனங்களில் தலைவராகவும், இயக்குநராகவும் பணியாற்றிக் கொண்டிருக்கும் இவர் எம்.ஏ.சி. அறக்கொடை, தமிழிசைச்சங்கம் ஆகியவற்றிலும் உறுப்பினராக விளங்குகிறார்.

Koviloor Digital Library

வலையபட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில அமைந்துள்ளது. காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர், கண்ட வராயன்பட்டி, ஆ. தெற்கூர், நெற்குப்பை, பொன்னமராவதி வழியாக 48 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், இலுப்பைக்குடி, இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி ஆகிய 7 கோவில்களைச் சேர்ந்த 1300 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். புள்ளிகள் எண்ணிக்கையில் தேவகோட்டை, காரைக்குடியை அடுத்து மூன்றாவது இடத்தைப் பெறும் இவ்வூர் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பொன்னமராவதித் தேர்வு நிலை ஊராட்சி மன்றத்தின் ஒரு பகுதியாகும்.

மலையாண்டி சாமிகோவில் இவ்வூர் நகரத்தார்களின் பொதுக்கோவிலாகும். பொதுவாக முருகன்தான் மலையாண்டி என அழைக்கப் பெறுவது இயல்பு. ஆனால் இங்கு மலையாண்டியாக மலைமீது கோவில் கொண்டிருப்பவர் விநாயகராவார். இன்றும் விநாயகருக்கே முதன்மையளிக்கப் பெறும் இக்கோவில் 1892ஆம் ஆண்டு வடுவகிர் விழியாள் உடனாய வலம்புரிநாதர் கோவில் கொள்ளும் சிவன் கோவிலாகத் திருப்பணி செய்யப் பெற்று முதல் குடமுழுக்கும் நிகழ்ந்தது. பின்னர் 1916, 1941, 1978, 1993 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நிகழ்ந்துள.

இக்கோவில் வளாகத்திலேயே இவ்வூர் மு.இராம. செந்தில்நாதன் செட்டியாரால் கட்டிக் கொடுக்கப் பெற்ற வரதராசப் பெருமாள் கோவிலும், ஐயப்ப பக்தர்களால் கட்டிக் கொடுக்கப் பெற்ற ஐயப்பன் கோவிலும் இப்போது நகரத்தார் நிருவாகத்தில் உள.

க.சா. அண்ணாமலை செட்டியாரால் கட்டப் பெற்ற லெட்சுமி விநாயகர் கோவில், ஊருணி ஆகியவையும், அ.மு. நாகப்ப செட்டியாரால் கட்டப் பெற்ற சித்தி விநாயகர் கோவில், ஊருணி ஆகியவையும் இவ்வூரில் உள்ள தனியார் கோவில்களாம். வடு.வகையினர் வையாபுரி ஊருணி எனும் குடிநீர்க் குளத்தையும் ந. இராம. வகையினர் அடைக்கன் ஊருணியையும் அமைத்துளர்.

நா.மு. இராம. குடும்பத்தாரால் 1920இல் தொடங்கப் பெற்ற சித்தி விநாயகர் செந்தமிழ்க் கலாசாலை, வயி.வ. வடுகநாதன் செட்டியார் குடும்பத்தாரால் 1930இல் தொடங்கப்பெற்ற அலர்மேலு ஆரம்பப் பாடசாலை ஆகியவை இவ்வூர்த் தொடக்கப் பள்ளிகளாம். குப.ச. பழநியப்ப செட்டியார் குடும்பத்தாரால் கட்டி நிருவகிக்கப் பெற்றுவரும் பழநியப்பா நடுநிலைப் பள்ளி இவ்வூரின் நடுநிலைப் பள்ளியாகும். வடு. வகையினரால் 1944இல் தொடங்கப் பெற்ற வடுகநாதன் மேல்நிலைப்பள்ளியும், வி.எஸ்.டி. குடும்பத்தாரால் தொடங்கப் பெற்ற வி.எஸ்.டி. சிதம்பரம் மெட்ரிகுலேசன் பள்ளியும் இவ்வூரில் இயங்கி வருகின்றன.

ந. இராம. அ. பெரியகருப்பன் செட்டியார் குடும்பத்தால் இடமும், கட்டிடங்களும் நன்கொடையாக வழங்கப் பெற்று, அரசால் நிருவகிக்கப்படும் பாப்பாயி ஆச்சி மருத்துவ மனை இவ்வூரில் உள்ளது.

மாத்தூர் மணலூர்ப் பிரிவைச்சேர்ந்த க.மு.அ. சின்னையா செட்டியார் 1940இல் கட்டி நகரத்தாரிடம் ஒப்படைத்த நகரவிடுதியும் அ. இராம. அண்ணாமலை செட்டியார் மனைவி கல்யாணி ஆச்சி 1968இல் கட்டி நகரத்தாரிடம் ஒப்படைத்த கல்யாண மண்டபமும் இப்போது நகரத்தார் நிருவாகத்தில் உள.

இவ்வூர் மாத்தூர் மணலூர்ப் பங்காளிகள் பாப்பாத்தி அம்மாள் படைப்பையும், பிள்ளையார்பட்டிப் பங்காளிகள் ஒரு பொதுப் படைப்பையும் படைத்து வருகின்றனர். பல ஊர்களைச் சேர்ந்த இளையாத்தங்குடி ஒக்கூருடையார்ப் பங்காளிகள் இணைந்து பொன்னமராவதியில் படைக்கும் துர்க்கையம்மன் படைப்பில் இவ்வூர் ஒக்கூருடையார்ப் பங்காளிகளும் கலந்து கொள்கின்றனர்.

புரட்டாசி மாதம் நகரத்தார் பொதுவில் வையாபுரி ஊருணி வடகரை மேலமடத்தில் 15 நாட்களும், சங்கரன் குண்டு ஊருணி வடகரையில் ஒரு வாரமும் இராமாயணம் படிக்கப்படுகிறது. ஐப்பசி மாதம் மலையாண்டி கோவிலிலும், சங்கரன் குண்டு ஊருணி வடகரையிலும், அடைக்கன் ஊருணிக் கீழ்க்கரைப் பிள்ளையார் கோவிலிலும் காவிரிப் புராணம் படிக்கப்படுகிறது.

கேஎம். பி. குமரப்செட்டியார் குடும்பத்தார் 1923இல் கட்டிய பசுமடம் இவ்வூரில் இன்றும்அவர் வழிமுறையினரால் நடத்தப் படுகிறது. பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த கு.கா.கு. முத்துக்கருப்பன் செட்டியார் கந்தர்சஷ்டி விழா மண்டபம் கட்டியிருக்கிறார். வ.கரு. சபாபதி செட்டியார் குடும்பத்தினர் ஒரு கார்த்திகை மடத்தையும் கு.சுப. வகையினர் ஒரு கார்த்திகை மடத்தையும் நடத்தி வருகின்றனர். இம்மடங்களில் மாதந்தோறும் கார்த்திகையன்று அன்னதானம் செய்யப்படுகிறது.

Koviloor Digital Library

இவ்வூர் சிவ.அ. குடும்பத்தார் பொன்னமராவதியில் வெள்ளைப் பிள்ளையார் கோவிலையும், லெ.கா.லெ. குடும்பத்தார் பொன்னமராவதி மேலைச் சிவபுரிச் சாலையிலுள்ள சின்னக் காம்பட்டியில் முத்துவிநாயகர் கோவிலையும் கட்டியுளர்.

இவ்வூர்ப் பிள்ளையார்பட்டி நகரத்தார்கள் இவ்வூருக்கு அருகே உள்ள கேசராபட்டியில் செல்வமுத்து விநாயகர் கோவிலையும் ஊருணியையும் அமைத்துளர். இவ்வூர் அ.நா. அண்ணாமலை செட்டியார் கடந்த 20 ஆண்டுகளாகக் காசியில் ஒரு பசுமடத்தை நடத்தி வருகிறார்.

வல்லநாட்டான், அ., (20-7-1936)

பிள்ளையார்பட்டி
கண்டவராயன்பட்டி
எழுத்தாளர், இதழாளர்

தொண்டர் நா. அருணாசலம் செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். 'தமிழ்நாடு' நாளிதழிலும் வார இதழிலும் 1956 முதல் 1979 வரை துணை ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார். 'பறவைகளைப் பாருங்கள்' என்னும் நூலை எழுதியுள்ள இவர் இமயம் காப்போம், ஸ்ரீ வல்லநாட்டுக் கருப்பையா காவடிச் சிந்து ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். பறவைகளைப் பற்றி இவர் எழுதியுள்ள ஆங்கிலக் கட்டுரைகள் 1954, 1955இல் பரிசுகள் பெற்றுள்ளன. இவர் அகில இந்திய வானொலிக்கு மதுரை மாவட்டச் செய்தியாளராகவும் பணியாற்றியுள்ளார். இப்போது 'நகரத்தார் குரலி'ல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

வள்ளி அண்ணாமலை

இளையாத்தங்குடி- பட்டினசாமி
புதுவயல்
சமூகத்தொண்டர்

கண்டனூர் வீர.ராம. வீரப்ப செட்டியார் – அன்னபூரணி ஆச்சியின் மகள். புதுவயல் வடு.மு. இராம.மு. அண்ணாமலை செட்டியாரின் மனைவி. மனையியல் பட்டம் பெற்றவர். 1983இல் பெண்களை மட்டுமே உறுப்பினராகக் கொண்ட மதுரை மீனாட்சி ஜூனியர் சேம்பர் சங்கம் உருவாகக் காரணமாக அமைந்தார். 1984இல் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அப்போது இந்தியா முழுவதும் உள்ள அமைப்புகளுள் சிறந்த தலைவர் என்ற விருதையும், பல நல்ல திட்டங்களை நிறைவேற்றியதற்காக மேலும் ஏழு விருதுகளையும் பெற்றுச் சாதனை புரிந்தார். 1985இல் ஜேசிஸ் மகளிர் அணியிலும் இளைஞர் அணியிலும் இயக்குநராக இருந்தார். இந்திய அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் துறையிலிருந்து அளிக்கும் விருதுகளைத் தேர்வு செய்யும் குழுவில் 1986 முதல் 88 வரை மூன்றாண்டுகள் உறுப்பினராக இருந்தார். 1986இல் மதுரை மாவட்டக் குழந்தைகள் நலச் சங்கத்தின் கௌரவச் செயலராகத் தமிழக அரசால் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து சமூகத் தொண்டுகள் ஆற்றி வருகிறார்.

வள்ளி, சேவு.,

மாத்தூர் - உறையூர்
ஆறாவயல்
மெதுபொம்மை, கண்ணாடி ஓவியக் கலைஞர்

மதுரையில் ஓரியண்ட் மருத்துவமனையை நிறுவியுள்ள டாக்டர் சேவுகஞ் செட்டியாரின் துணைவியார். சென்னையில் வசித்தபோது மெது பொம்மைகள் செய்யக் கற்றுக் கொண்ட இவர் ஓர் ஓவியரிடத்தில் கண்ணாடி ஓவியம் வரையவும் கற்றுக் கொண்டார். இன்று பலருக்கும் இக்கலைகளைக் கற்பிக்கும் வகுப்புக்களைத் தம் இல்லத்திலேயே நடத்தி வருகிறார். காலையில் பெயிண்டிங், மாலையில் பொம்மை செய்தல் வகுப்புக்களை நடத்தும் இவரிடம் காரைக்குடி, விருதுநகர் போன்ற ஊர்களில் இருந்தும் பல பெண்கள் வந்து பயிற்சி பெறுகிறார்கள். தடுக்குப் பின்னுதல், பெட்டி முடைதல் போன்ற கலைகளில் வல்லவரான ஆச்சியர் போலக் காலத்திற்கேற்ப இவர் இப்புதிய கலைகளைக் கற்றுப் பிறருக்கும் கற்பித்து வருகிறார்.

வள்ளி சொக்கலிங்கம், டாக்டர், (10-11-1950)

பிள்ளையார்பட்டி
காரைக்குடி
நகரத்தாரியல் ஆய்வாளர்

கானாடுகாத்தானில் பிறந்து காரைக்குடி கி. சொக்கலிங்கத்தின் வாழ்க்கைத் துணைவி ஆனவர். எம்.ஏ.பி.எட்., டி.இ.ஏ., பட்டங்கள் பெற்ற இவர் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியில் 20 ஆண்டுகளாக விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் குறுகிய கால ஆய்வுத் திட்டத்தின் கீழ் 'சிற்பக்கலையின் சிறப்பும் சிற்பக்கலைக்கு முகவையின் பங்கும்' என்ற ஆய்வைச் செய்துள்ளார். இவர் எழுதிய 'திருப்பத்தூர்' என்னும் நூல் தொல்பொருள் ஆய்வுத் துறையால் வெளியிடப் பெற்றுள்ளது. நகரத்தாரின் அறப்பணிகள் என்ற தலைப்பில் ஆய்வு செய்து மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில்

Koviloor Digital Library

முனைவர் பட்டம் பெற்றுள்ளார். சிற்பக்கலை, கல்வெட்டு, நகரத்தார்கள் தொடர்பான பல கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார்.

வள்ளியப்ப செட்டியார், இராம., (16-11-1916)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கருங்குளம்
ஆன்மீக நெறியாளர்

எஸ்விஎஸ். இராமசாமி செட்டியாரின் மகன். தம் இளவயதிலேயே நகரத்தார் கடைகளில் பணியாற்ற இலங்கை சென்ற இவர் அங்கு ஆன்மீக நெறியில் மிகுந்த நாட்டம் செலுத்தினார். 22–11–1958இல் இலங்கையில் நடைபெற்ற உலகச் சமயங்களின் மாநாட்டில் ஆர்வத்துடன் பணியாற்றினார். 1960இல் கொழும்பில் அரவிந்தர் சங்கத்தை நிறுவிப் பல ஆண்டுகள் அச்சங்கத்தின் செயலராகப் பணியாற்றினார். இலங்கை இராமகிருஷ்ணாமடம், அனைத்துலகப் புத்த தியான நிலையம், தெய்வ வாழ்க்கைச் சங்கம் ஆகியவற்றில் உறுப்பினராக இருந்துள்ளார்.

1990க்குப் பிறகு தாயகம் திரும்பிய இவர் காரைக்குடி கழனிவாசல் சாலையில் 'மாதவநிலையம்' என்ற ஆசிரமத்தை நிறுவி நடத்தி வருகிறார். அழகப்பா பல்கலைக் கழகத்தில் 'யோகி அரவிந்தர் சொற்பொழிவு அறக்கட்டளை'' ஒன்றையும் 'ஆன்மீகச் சொற்பொழிவு அறக்கட்டளை, ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளார். மேலும் அப்பல்கலைக்கழக நூலகத்திற்கு ரூ.7500 மதிப்புள்ள அரவிந்தர் பற்றிய நூல்களை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

வள்ளியப்பன், அ., (10-10-1935)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
இந்திய ஆட்சிப் பணி அதிகாரி (IAS)

சா.வெ.அரு.அழ. அழகப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சியின் மகன். அரசியல், பொது நிருவாகத் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றபின் 1960ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்றார். ஆந்திர மாநிலத்தில் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் பயிற்சி ஆட்சியாளராகப் பொறுப்பேற்றார். பின்னர் சித்தூர் மாவட்ட ஆட்சியராகவும் மாவட்ட நீதிபதியாகவும் பணியாற்றினார். ஆந்திர அரசின் வேளாண்மை, தொழில், கூட்டுறவு, வனங்கள், போக்குவரத்து முதலிய பலதுறைகளின் செயலராகச் சிறப்பாகப் பணியாற்றினார். திருப்பதி திருமலைக் கோவில்களின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் திருப்பதி வெங்கடேசுவரர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராகவும் தொண்டாற்றி யுள்ளார். சிங்கரேணி நிலக்கரிச் சுரங்க நிறுவனத்தின் தலைவர், மேலாண்மை இயக்குநராகத் திறம்பட நிருவகித்துள்ளார்.

மத்திய அரசின் பாதுகாப்புத் துறையில் இணைச் செயலராகப் புதுதில்லியிலும், நெருக்கடி நிலையின்போது ஆளுநர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் செய்தி இதழ்கள், செய்தித் தகவல் தொடர்பு சாதனங்களின் பல்வேறு துறைகட்குத் தணிக்கை மேலதிகாரியாகவும் பணியாற்றியமை இவருடைய தனிச்சிறப்பாகும். திருப்பதிப் பல்கலைக்கழகத்தில் 'நுகர்வோர் நலன்களைப் பாதுகாத்தல்' என்னும் தலைப்பில் பி.எச்டி பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளார். கூட்டுறவுத் தொழில்வளர்ச்சி, நிதி திட்டமிடல் ஆகிய துறைகளில் ஆந்திர மாநில வளர்ச்சிக்கு இவர் ஆற்றியுள்ள தொண்டு சிறப்பாகப் போற்றப்படத் தக்கதாகும். இவர் 1993 அக்டோபரில் பணி யிலிருந்து ஓய்வு பெற்றார். நகரத்தாரில் இந்திய ஆட்சிப்பணித் தேர்வெழுதி வெற்றி பெற்று நாட்டு வளர்ச்சிக்குப் பணிபுரிந்துள்ள மூவரில் இவரும் ஒருவர் என்பது நினைந்து போற்றத்தக்கதாகும்.

வள்ளியப்பன், கண்ணப்பா, (22-10-1935)

இளையாத்தங்குடி - கழனிவாசற்குடி
கல்லல்
அரசியல்வாதி

கண்ணப்ப செட்டியார் – தேனம்மை ஆச்சியின் மகன். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே அரசியலில் ஈடுபட்டுத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் முழுமூச்சுடன் பணியாற்றியதால் இடைநிலை வகுப்புக்கு மேல் கல்வியைத் தொடர இயலாநிலை ஏற்பட்டது. 1949 முதல் 1960 வரை தி.மு.க. பொதுக்குழு உறுப்பினராக விளங்கிய இவர், 1960 ஏப்பிரலில் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தார். இப்போது மீண்டும் தி.மு.க. உறுப்பினராக விளங்குகிறார். 1970 முதல் 76 வரை ஏழாண்டுகள் இராமநாதபுரம் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தொண்டாற்றிய சிறப்புடையவர். 1960 முதல் 1976 வரை கல்லல் ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1970 முதல் 1976 வரை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும், தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியுள்ளார். 1971இல் சிவகங்கைத் தொகுதி நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டார்.

Koviloor Digital Library

தன்னை உருவாக்கியவர் தந்தை பெரியார் என்றும் உலகறியச் செய்தவர் பேரறிஞர் அண்ணா என்றும் தம் அரசியல் பேராசான் பெருந்தலைவர் காமராசர் என்றும் நன்றிபாராட்டும் இவர் திராவிட இயக்கத்திற்காக 'இனமுழக்கம்' என்னும் வார இதழை நடத்தினார். காவியக் கழகம் என்ற தனது பதிப்பகத்தின் வாயிலாக 1958 இல் கவிஞர் கண்ணதாசனின் முதலிரு கவிதைத் தொகுதிகளையும், மாங்கனி, வேலங்குடித் திருவிழா நூல்களையும் வெளியிட்ட பெருமை படைத்தவர். அரசியலில் ஈடுபட்டுள்ள மிகச்சில நகரத்தாரில் கண்ணப்பா வள்ளியப்பன் குறிப்பிடத்தக்க அரசியல் முன்னோடியாவார்.

வள்ளியப்பா, குழந்தைக் கவிஞர், அழ. (7-11-1922 - 16-3-1989)

மாத்தூர் - கண்ணூர்
இராயவரம்
குழந்தைக் கவிஞர்

அழகப்ப செட்டியார் – உமையாள் ஆச்சியின் மகன். தமது 13ஆவது வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். 1940இல் வை. கோவிந்தனது 'சக்தி' காரியாலயத்தில் காசாளராகப் பணியில் சேர்ந்தார். இவரது இயல்பான எழுத்தார்வம் அச்சூழலில் வளர்ந்து பெருகியது. தமக்கெனத் தனித்துறையாகக் குழந்தை இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு கவிதைகள், கதைகள் எழுதினார்.



அழ. வள்ளியப்பா

1941இல் இந்தியன் வங்கியில் பணியாற்றச் சென்றபிறகும் எழுத்துப்பணியை விடாமல் தொடர்ந்தார். தம் வீட்டுக்கு அருகில் வாழ்ந்த குழந்தைகளை வாரத்தில் ஒருநாள் தம்வீட்டில் கூடச்செய்து கதை சொல்லுவார். கவிதைகள் எழுதிப் பாடிக் காட்டுவார். அவர்களையும் கதை கவிதைகள் சொல்லச் செய்வார். இவ்வாறு குழந்தைகளோடு பழகிப் பழகி அவர்களுக்காக எழுதும் கலை கைவரப்பெற்றார்.

இவரது முதல் நூல் ''மலரும் உள்ளம்'' 1944இல் வெளிவந்தது. குழந்தை இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறும் இந்நூல் இவரை மிகச்சிறந்த குழந்தை எழுத்தாளராக அடையாளம் காட்டியது.

பாலும் பழமும் ஏனம்மா
பசியே இல்லை எனக் கூறிச்
சீலச் சிறுவர் சிறுமியர்கள்
சிறந்த **மலரும் உள்ளம்** இதைக்
காலை மாலை என்றென்றும்
கற்று மகிழச் செய்யும் இந்திர
ஜாலக் கவிஞன் வள்ளியப்பன்
தழைத்து வாழ்க வாழ்கவே

எனக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இந்நூலைப் பாராட்டிப் பாடியுள்ளமை சிறப்புக்குரியதாகும். தொடர்ந்து ஏறத்தாழ 50 நூல்கள் எழுதியுள்ளார். இவற்றுள் 'பர்மா ரமணி', 'அம்மாவும் அத்தையும்' போன்ற கதைநூல்களும் 'பெரியோர் வாழ்வினிலே', 'கதை சொன்னவர் கதை' (3 தொகுதிகள்) போன்ற வாழ்க்கை வரலாற்று நூல்களும் 'பாட்டிலே காந்தி கதை', 'ஈசாப் கதைப் பாடல்கள்', 'மலரும் உள்ளம்' (2 தொகுதிகள்) போன்ற கவிதை நூல்களும் குறிப்பிடத்தக்கவை.

1944 முதல் 1951 வரை புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த பாலர்மலர், டமாரம், சங்கு ஆகியவற்றின் ஆசிரியராகவும் இருந்தார். பின்னர் பூஞ்சோலை, கோகுலம் இதழ்களும் சிறப்பாக வெளிவரச் செய்தார். தமிழில் குழந்தை இலக்கியம் வளர்ந்து தழைத்திட 1950இல் இவர் தொடங்கிய 'குழந்தை எழுத்தாளர் சங்கம்' இவரது வாழ்க்கைச் சாதனையாகும். இவர் உயிரோடிருந்தவரை இவரது இல்லத்திலேயே இச்சங்கம் இயங்கியது. இன்றும் நேரு பிறந்த நாளைக் குழந்தை இலக்கிய நாளாகக் கொண்டாடும் இச்சங்கம் பல்வேறு போட்டிகளை நடத்திப் பரிசளித்து வருகிறது.

'தென்மொழிகள் புத்தக டிரஸ்டு' என்ற நிறுவனம் தொடங்கப்பட்ட போது 1957 முதல் 1962 வரை அதன் தலைவராக இவர் ஆற்றிய பணிகள் மிகச் சிறப்பானவை. 1962 இல் பாரதி கண்காட்சி அமைப்பாளராகவும் 1966 இல் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் தொண்டாற்றினார். 'வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' என்னும் தலைப்பில் 1970 இல் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் 1981 இல்

Koviloor Digital Library

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டிலும் ஆய்வுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். 'தென்னாட்டு நதிகள்' என்னும் இவரது நூல் 14 மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது.

இவர் எழுதிய பலநூல்கள் தமிழக அரசு, மத்திய அரசு ஆகியவற்றின் பரிசுகளைப் பெற்றுள்ளன. 1961இல் இவருக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் வெள்ளிக் கேடயம் வழங்கிப் பாராட்டினார். இவர் குழந்தை இலக்கியத்துக்கு ஆற்றிய தொண்டினைப் பாராட்டி மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 1982இல் தமிழ்ப் பேரவைச் செம்மல் விருது வழங்கியதோடு பொற்பதக்கமும் பொன்னாடையும் அணிவித்துப் பாராட்டியது.

எம்.பில்., பி.எச்டி., பட்டங்களுக்காகப் பலர் இவருடைய படைப்புக்களை ஆய்வு செய்து வருகின்றனர். இவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பூவண்ணன் நூலாக எழுதியுள்ளார்.

''இதுவரையில் குழந்தைகளுக்காகவே பாடிய ஒரு கவிஞரைத் தமிழகம் கண்டதில்லை. அதனால்தான் குழந்தைகளும் பெற்றோரும் ஒரே குரலில் 'குழந்தைக் கவிஞர்' என்று வள்ளியப்பாவைப் போற்றிப் புகழுகின்றனர். குழந்தைக் கவிஞர் தாம் பாடல்கள் எழுதுவதோடு பிறரையும் பாடத் தூண்டியிருக்கிறார். அவருடைய பாடல்களைப் பார்த்துப் படித்து அவற்றைப்போல எழுதப் பலர் விரும்பினார்கள், எழுதினார்கள். பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை என்பதைப் போல நாட்டில் 'குழந்தைக் கவிஞர் பரம்பரை' ஒன்றும் உருவாகி வருகிறது'', எனக் 'குழந்தை இலக்கிய வரலாறு' நூல் இவரது பணிகளை மதிப்பீடு செய்கிறது. குழந்தை எழுத்தாளர் சங்கத்தையும் குழந்தைக் கவிஞர் பரம்பரையையும் உருவாக்கி வளர்த்தமை வள்ளியப்பா எட்டிப்பிடித்த இமாலயச் சாதனை ஆகும்.

வள்ளுவர் மன்றம்

இலக்கிய விழாக்களில் முதன்மை பெற்ற கம்பன் விழாவை அடுத்துச் செட்டிநாட்டில் காரைக்குடி, தேவகோட்டை முதலிய ஊர்களில் குறள்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. வள்ளுவரைப் போற்றும் முயற்சியாக மேலைச்சிவபுரியில் 1956இல் வள்ளுவர் மன்றம் தோற்றுவிக்கப்பட்டது. அவ்வூரினரான வ.சுப. மாணிக்கனாரின் 'வள்ளுவம்' நூலும் 'குறட்காதலு'ம் இம்மன்றம் தோன்றத் தூண்டுதலாக விளங்கின. இன்றும் வ.சுப. குடும்பத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா போன்றோர் இம்மன்ற வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டு உழைத்து வருகின்றனர். புலவர் நாக. சண்முகத்தைத் தலைவராகக் கொண்டு மா. முத்துராமன், சித. சுப்பிரமணியன் ஆகியோரும் அவரது நண்பர்களும் இம்மன்றத்தைத் தோற்றுவித்தனர்.

மன்றத்திற்குக் கட்டடத்திறப்பு விழா 10–3–1974இல் நடைபெற்றது. 21–5–1981இல் இம்மன்றத்தின் வெள்ளிவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நாள், வார, திங்கள் இதழ்களை மக்கள் படிப்பதற்காக இம்மன்றம் படிப்பகம் ஒன்றை நடத்தி ஊரின் அறிவு வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்குகிறது. ஆண்டுதோறும் மாட்டுப் பொங்கல் நாளில் வள்ளுவரைப் போற்றும் வகையில் சிறப்பாக விழாக் கொண்டாடப் பெறுகின்றது. நீதி நூல்களில் மாணவ மாணவியர்க்குப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு. வள்ளுவம் பரப்பிய வ.சுப. மாணிக்கனாரை ஈன்றும் வள்ளுவர் மன்றம் கண்டு விழா எடுத்தும் வளர்புகழ் படைத்தது மேலைச்சிவபுரி.

வன்றொண்டச் செட்டியார், (இயற்பெயர் : நாராயணன் செட்டியார்)

இலுப்பைக்குடி
தேவகோட்டை
சைவசமயச் சான்றோர்

ஐந்து வீட்டார் மரபில் முத்துராமன் செட்டியார் மகனாகத் தோன்றினார். அம்மை நோயால் இளமையிலேயே கண்பார்வை இழந்தார். தமிழ் இலக்கண இலக்கியங்கள், சைவ சித்தாந்த நூல்களைக் கற்கவேண்டும் என்ற ஆசையால் இலங்கை நல்லூர் ஆறுமுக நாவலரிடம் சென்றார். இவரது உறுப்பு ஊனத்தைக் கருதி அவர் பாடஞ்சொல்ல மறுத்துவிட்டார். இவர் தமது முயற்சியில் தளராமல் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அணுகினார். அவர் இவரது ஆர்வத்தையும் முயற்சியையும் பாராட்டிப் பல்வேறு தமிழ் இலக்கிய இலக்கண, சைவ சித்தாந்த சாத்திர நூல்களைப் பாடஞ் சொன்னார். மிகுந்த நினைவாற்றல் கொண்ட வன்றொண்டர் ஒரு முறை கேட்டதைப் பின்னர் மறப்பதில்லை. பல்லாயிரம் பாடல்கள் அவருக்கு மனப்பாடம். இவரது நினைவாற்றலை உ.வே.சா. தமது வாழ்க்கை வரலாற்று நூலில் போற்றி எடுத்துரைக்கிறார். வேம்பத்தூர் பிச்சுவையர், சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், சொக்கலிங்க

Koviloor Digital Library

அய்யா, சிந்நயச் செட்டியார் ஆகியோர் வன்றொண்டரிடம் பாடங்கேட்டவர்களாவர். 'சிவஞான போத லகு வசனம்' என்ற நூலை இவர் படைத்துள்ளார்.

சைவத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்ட இவர் சமயதீட்சை பெற்றுச் சைவானுட்டானத்தைச் செய்து வந்தார். இவருக்கிருந்த கண்மறைவு அடுத்த தீட்சைகளைப் பெற்றுக் கொள்ள இடங்கொடுக்காதபடியால் நாள்தோறும் விநாயகர் அகவல், சிவபுராணம், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா ஆகிய நூல்களைப் பாராயணம் செய்து விநாயகர் கோவிலில் 108 முறை வலம் வந்து 108 முறை கீழே விழுந்து வணங்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார். அதன் பின்னரே சாப்பிடுவது இவர் வழக்கம். இதை நேரில் கண்டறிந்த திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் மேலகரம் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் இவரை வன்றொண்டர் என அழைத்துப் பாராட்டினார்.

திருத்தொண்டர் புராணத்தை ஆசிரியரிடம் பாடம் கேட்டு அத்தனை பாடல்களையும் நினைவிற் கொண்டிருந்ததுடன் சேக்கிழார் பெருமானிடத்தும் வன்றொண்டர் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார். சேக்கிழார் பெருமானுக்கு ஒரு திருக்கோவில் கட்ட வேண்டுமெனத் திட்டமிட்டு இடம் வாங்கி அக்கோவிலுக்கான மணி முதலியவற்றையும் வரவழைத்தார். அவர் வாங்கிய இடத்தில்தான் இன்றைய தேவகோட்டை நகரச்சிவன் கோவில் அமைந்துள்ளது. (பார்க்க : சேக்கிழார் விழா)

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையைக் கொண்டு சேக்கிழார் பெருமானுக்கு ஒரு பிள்ளைத்தமிழ் செய்து வாங்க வேண்டும் என்று எண்ணி அக்கருத்தை அவரிடம் தெரிவிக்க அவர் அதனை மகிழ்ந்து ஏற்றுச் செட்டிநாட்டுக்கு 1874 ஜூன் மாதத்தில் வந்து சில மாதங்கள் தங்கிச் சேக்கிழார் பிள்ளைத்தமிழ், குரைமாநகர்ப் புராணம், கோவிலூர்ப் புராணம், கண்டதேவிப் புராணம், வீரவனப்புராணம் முதலியவற்றை இயற்றித் தந்தார். சேக்கிழார் பிள்ளைத் தமிழைச் செந்தமிழுக்கு அணி சேர்க்கும் வகையில் பிள்ளையவர்கள் இயற்றக் காரணமாக இருந்தவர் வன்றொண்டச் செட்டியாரே யாவார்.

கண்பார்வை மறைந்தும் கற்பன கற்றும் கற்பித்தும் வாழ்ந்தவர் வன்றொண்டர்.

வி.ஆர்.எம். செட்டியார், (5-7-1900 - 22-8-1969)

(இயற்பெயர் : வீர. முத்துக் கருப்பன் செட்டியார்)

பிள்ளையார்பட்டி
காரைக்குடி
எழுத்தாளர் - பதிப்பாளர்

வீரப்பசெட்டியார் – இலட்சுமி ஆச்சியின் மகன். திருச்சி தேசியக் கல்லூரியில் பேராசிரியர் சாரநாதனிடம் பயின்று ஆங்கில இலக்கியத்தில் பி.ஏ. பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமை பெற்றவர்.

மொழிபெயர்ப்புக் கலையிலும் திறனாய்வுத் துறையிலும் முன்னோடியான இவர் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். தமிழிலிலிருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் என இரு வகையிலும் அரிய மொழிபெயர்ப்பு நூல்களை உருவாக்கியுள்ளார். ஷெல்லி, ஆஸ்கார் ஒயில்ட் ஆகியோர் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டதோடு அவர்களைப் பற்றிய சிறந்த திறனாய்வு நூல்களையும் எழுதியுள்ளார்.

இரவீந்திரநாத தாகூரின் இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடுடைய இவர் 1929 இல் செய்கோனில் அவரது சொற்பொழிவுகள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தார். இதனால் இவருடன் பழகி இவர்பால் அன்புகொண்ட தாகூர் தமது கீதாஞ்சலியைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் உரிமையை இவருக்கு வழங்கினார். அவ்வாறே முதலில் கீதாஞ்சலியையும் அடுத்தடுத்துத் தாகூரின் பல்வேறு நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். தாகூரைத் தமிழ்உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சேரும்.

இவர் எழுதிய ஆங்கிலக் கவிதைகளின் தொகுப்பு நூல் இலண்டனில் வெளியிடப் பெற்றுப் பல பதிப்புக்கள் விற்பனையாகி யுள்ளன. நல்ல கவிதைகளைத் தாம் சுவைத்து மகிழ்ந்ததோடு பிறரும் அவற்றைச் சுவைத்து இன்புற வேண்டும் என்ற நோக்கத்தோடு திறனாய்வு நூல்கள் பலவற்றைப் படைத்துள்ள இவர் திறனாய்வுக் கொள்கைகளைத் தமிழுக்கு அறிமுகப் படுத்தியவராவார். அவ்வகையில் இவரது இலக்கிய விருந்து, நான்கு கவிமணிகள், கட்டுரைக் கரும்பு என்பவை குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

Koviloor Digital Library

ஸ்டார் பிரசுரம் என்ற பதிப்பகத்தைத் தொடங்கி அதன் வாயிலாகச் சிறந்த தமிழ்நூல்கள் பலவற்றை வெளியிட்டு இளம் எழுத்தாளர் பலரை ஊக்குவித்துள்ளார். தமது பேராசிரியர் சாரநாதன் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். இவருடைய அழகான கையெழுத்தே கவிதை, கலைகளில் ஈடுபாடுகொண்ட இவரது அழகுணர்ச்சியைப் புலப்படுத்துவதாகக் கூறுவர்.

இக்கால இலக்கியத்தில் படைப்பாளராகவும் பதிப்பாளராகவும் திறனாய்வாளராகவும் சிறந்து விளங்கிய இவர் நகரத்தாரில் குறிப்பிடத்தக்க இலக்கியவாதி ஆவார்.

விசுவநாதன், இராம., (27-1-1932)

இளையாத்தங்குடி - கிண்கிணிக் கூருடையார்
நெற்குப்பை
தமிழ் ஆர்வலர்

பெரி.இராம. இராமநாதன் செட்டியார் – சிட்டாள் ஆச்சியின் மகன். அழகப்பா கலைக் கல்லூரியில் பயின்று இளம் அறிவியல் பட்டம் பெற்றவர். திருவாவடுதுறை ஆதீனத்தின் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தின் மூலம் தேர்வு எழுதி முதல் வகுப்புச் சான்றிதழ் பெற்றவர்.

1954 முதல் *1974* வரை கலைத்தந்தை கருமுத்து தியாகராசரின் நூற்பு, நெசவு ஆலைகளில் எழுத்தராகச் சேர்ந்து, நிருவாக அதிகாரி நிலை வரை படிப்படியாக உயர்ந்தவர். *1974*இல் ஓய்வு பெற்றபின் பருத்திநூல் வணிகம் தொடங்கிக் 'கங்கை காவேரி வணிகத் தொடர்பு' என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

தமிழ் ஆர்வலராகிய இவர் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் அறக்கொடை நிறுவி, செம்மல் வ.சுப. மாணிக்கனார் நினைவைப் போற்றும் சொற்பொழிவுகள் *1990* முதல் நிகழ ஏற்பாடு செய்துள்ளார். மீ. கந்தசாமிப்புலவர் நினைவாக ஆண்டு தோறும் திருவள்ளுவர் கழகத்தில் ஏழிளந்தமிழ் எழுத்துப்போட்டி நடத்தி வருகிறார். 'ஏழிளந் தமிழ்' என்ற நூலைப் பல்லாயிரம் படிகள் அச்சிட்டுப் பள்ளிக் குழந்தைகட்கு அன்பளிப்பாக வழங்கி வருகிறார். ''சான்றோர் சூழல்'' என்ற அமைப்பின் சார்பில், மாதம் தோறும் இலக்கிய உணர்வாளர் கூட்டம் நடத்தி வருகிறார்.

1993 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித்* துறை இவருக்கு 'வணிகத் தமிழ் ஆர்வலர்' என்ற பட்டம் வழங்கிப் பாராட்டியுள்ளது.

விடுதலைப் போராட்டத்தில் நகரத்தார்

தெய்வ பக்தி மிகுந்த நகரத்தார்கள் தேசபக்தி நிறைந்தவர்களாகவும் திகழ்ந்தார்கள் என்பதை விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் ஆற்றியபங்கு தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. செய்வன திருந்தச் செய்யும் இயல்புடையவர்கள் நகரத்தார்கள். முனைப்போடு முழு ஈடுபாட்டோடு, பொதுப் பணிகளில் ஈடுபடும் நகரத்தார்கள் நாட்டு விடுதலைப் போராட்டத்திலும் முனைப்போடும் முழுஈடுபாட்டோடும் பங்குகொண்டு சிறப்புப் பெற்றனர்.

காந்தியடிகள் இந்திய விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமையேற்ற பிறகு நாடெங்கும் மாபெரும் எழுச்சி தோன்றியதுபோல் செட்டிநாட்டிலும் ஆயிரக்கணக்கான மக்கள், குறிப்பாக நகரத்தார்கள் காந்தியடிகளால் ஈர்க்கப்பட்டார்கள். நகரத்தார் பலர் கதர் உடுத்தலானார்கள்; பெண்களும் கதர் அணிந்தனர். காந்தி எனும் பெயரை மகனுக்கும் காந்திமதி எனும் பெயரை மகளுக்கும் பல நகரத்தார்கள் பெயராக இட்டு அழைத்து மகிழ்ந்தனர். சிலர் ஆண்குழந்தைக்கு மோகன் என்ற பெயரையும் பெண்குழந்தைக்குக் கஸ்தூரி எனக் காந்தியடிகளின் மனைவியார் பெயரையும் இடுவதில் பெருமை கொண்டனர். பலர் கடிதத் தாள்களில், கடித உறைகளில் காந்தியடிகள் படத்தை அச்சிட்டுப் பயன்படுத்தினர். மாத்தூர், இரணிக்கோவில் ஆகிய நகரக் கோவில்களிலும் கூடக் காந்தியடிகள் சிற்பம் இடம் பெற்றுள்ளது.

23.9.1927 அன்று மகாத்மா காந்தி காரைக்குடிக்கு காந்தி மெய்யப்பர் இல்லத்துக்கு வருகைதந்தார். மெய்யப்பர் மனைவி நாச்சம்மை காந்தியடிகளுக்குக் கதர்மாலை அணிவித்து 100 ரூபாய் கதர் நிதி அளித்தார். காந்தியடிகள் காரைக்குடி, தேவகோட்டை, அமராவதிபுதூர், பாகனேரி போன்ற ஊர்களில் பொதுக் கூட்டங்களில் பேசியபோது ஏராளமான ஆண்களும் பெண்களும் நிதி நல்கினார்கள். பெண்கள் தாங்கள் அணிந்திருந்த காப்பு, மோதிரம் போன்ற நகைகளையும் கழற்றிக் கொடுத்தனர். தேவகோட்டை முருகன் ஆசிரியர் தாமே நூற்று வழங்கிய மிக மென்மையான கதராடையைக் காரைக்குடிப் பொதுக் கூட்டத்தில் காந்தியடிகள் ஏலம் விட்டபோது வை.சு. சண்முகம் செட்டியார் அதனை 1000 ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தார். பாகனேரிப் பொதுக்

Koviloor Digital Library

கூட்டத்தில் காந்தியடிகள் ஏலம் விட்ட மகாத்மா காந்தி படத்தை மெய்யப்பர் 80 ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தார். அ. புதூரில் பிச்சப்பா சுப்பிரமணியத்தின் மகள் தன்னுடைய தங்கச் சங்கிலியைக் காந்தியடிகளிடம் நிதியாகக் கொடுத்தாள். இவ்வாறு ஆண்களும் பெண்களும் காந்தியடிகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டு ஏராளமான நிதிஉதவி வழங்கினர். அ. புதூரில் இராய.சொ. இல்லத்தில் காந்தியடிகள் சிறிதுநேரம் தங்கியபோது 'என்ன மாதவம் செய்தது இச்சிறு குடில்' எனும் வில்லிபாரதத் தொடரை வரவேற்பு வளைவில் எழுதியிருந்தமை இன்றும் செட்டிநாட்டில் பலரால் பேசப்படுகிறது. காந்தியடிகள் வருகைக்குப்பின் நகரத்தார்கள் மிகுந்த ஆர்வத்துடன் விடுதலை இயக்கப் போராட்டப் பணிகளில் ஈடுபட்டனர்.

செட்டிநாட்டுப் பகுதியில் விடுதலை இயக்க உணர்வு வேரூன்றி வளர்வதற்கு நகரத்தார் நடத்திய இதழ்களும் பெரும் பங்காற்றி யிருக்கின்றன. செட்டிநாட்டு இதழ்களின் முன்னோடியாகத் தேவகோட்டையில் இராமநாதன் செட்டியாரால் தொடங்கப்பெற்ற 'வைசிய மித்திரன்' இதழ் விடுதலை இயக்கம் செட்டிநாட்டில் கால்கொள்ளப் பெரிதும் துணையாய் அமைந்து, செய்திகளை வெளியிட்டும் தலையங்கம் எழுதியும் வந்தது. ஆங்கில அரசுக்கு எதிராகச் செயல்பட்டதாக வைசிய மித்திரன் அச்சகமும் அந்த இதழின் ஜாமீன் தொகையும் பறிமுதல் செய்யப்பட்டன. அதனை அடுத்து 'ஊழியன்' (த.க.) இதழில் இராய.சொ. தீட்டிய கனல்க்கும் தலையங்கங்கள் இப்பகுதியில் தேசிய உணர்வைக் கொழுந்து விட்டெரியச் செய்தன. விடுதலை இயக்க இதழ்களில் ஊழியன் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

விடுதலைப் போராட்ட உணர்வின் காரணமாகப் பல்வேறு சங்கங்கள், சுதேசிப் பள்ளிகள் நகரத்தார்களால் தோற்றுவிக்கப் பெற்றன. அவற்றுள் முதன்மையானது காரைக்குடி இந்து மதாபிமான சங்கம் (த.க.) ராய.சொ, சொ. முருகப்பாவோடு தேசிய உணர்வுள்ள இளைஞர்களும் இணைந்து 1917 இல் இச்சங்கத்தைத் தோற்றுவித்தனர். மகாகவி பாரதியார் இச்சங்கத்தில் வந்து உரையாற்றி யுள்ளார். பாரதியாரால் இச்சங்கம் பாடப் பெற்றுள்ளது. திரு.வி.க, சுப்பிரமணிய சிவா, வ.உ.சி. போன்ற தலைவர்கள் பலர் வந்து இச்சங்கத்தில் உரையாற்றியுள்ளனர். இதுபோல வேந்தன்பட்டியில் திருவள்ளுவர் வாசகசாலை, நாட்டரசன்கோட்டையில் பாரதி வாசகசாலை, தேவகோட்டையில் சரஸ்வதி வாசகசாலை ஆகிய பல சங்கங்கள் இப்பகுதியில் விடுதலைப் போராட்ட உணர்வை வளர்த்துள்ளன. செட்டிநாட்டு ஊர்கள் பெரும்பாலானவற்றில் இத்தகைய அமைப்புக்கள் தோற்றுவிக்கப் பெற்றன. காந்தியக் கல்வி முறையை வளர்க்க வேண்டிச் செட்டிநாட்டில் நகரத்தார்கள் "தனவைசிய நாட்டுத் தமிழ்க்கல்விக் கழகம்" (த.க.) என்ற, பல்கலைக்கழகம் போன்ற ஒரு கல்வி அமைப்பைத் தோற்றுவித்தனர். இக்கழகத்தின் சார்பாகச் செக்காலை மெய்யப்ப செட்டியார் 'கலைமகள் கலாசாலை' என்ற ஒரு பள்ளியை அவரது வீட்டிலேயே நடத்திவந்தார். அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பல பள்ளிகளுள் இன்றும் நடைபெறும் பள்ளிகள், அமராவதி புதூரில் நடைபெற்று வரும் குருகுலம், காந்தி சமதர்மப்பாடசாலை ஆகிய பள்ளிகளாகும். இவை அந்நாளில் சிறுவர் சிறுமியரிடையே தேசிய உணர்வைத் தட்டி எழுப்பின.

நேரடியாகப் போராட்டத்தில் ஈடுபடாமல் நிதி கொடுத்தல், நிர்மாணப் பணிகளுக்கு ஆதரவளித்து வளர்த்தல் என்ற வகையில் நகரத்தார் பலர் விடுதலை இயக்கப் போராட்டத்திற்கு உதவி செய்தனர். பல நகரத்தார்கள் தங்கள் மேற்பார்வையிலிருந்த ஆலயங்களை காந்தியடிகளின் வேண்டுகோளை ஏற்று ஹரிஜனங்களுக்காகத் திறந்து விட்டனர். செட்டிநாட்டில் இவ்வாறு ஹரிஜனங்களுக்காகத் திறந்துவிடப்பட்ட முதற்கோவில் காரைக்குடி மெ.செ. குடும்பத்தினரின் பிள்ளையார் கோவிலாகும்.

காங்கிரசில் உறுப்பினராகச் சேர்ந்து அந்த இயக்கத்தின் வழியே காந்தியக் கொள்கை களைப் பரப்பிப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் காந்தி மெய்யப்பர், வை.சு. சண்முகனார், இராய. சொக்கலிங்கனார், கம்பனடிப்பொடி சா. கணேசன், தேவகோட்டை சின்ன அண்ணாமலை, ஆர்ச் அண்ணாமலை, ஏகநாதன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இன்னும் ஏராளமான நகரத்தார்கள் காங்கிரசில் சேர்ந்து இயக்கத்தில் ஈடுபட்டனர்.

காந்தி மெய்யப்பர் போன்றோர் நேரடியாகப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைப்படவில்லை. ஆனால் காங்கிரஸ் பணிகளுக்காகத் தீவிரமாக உழைத்தார்கள். ஹரிஜனங்களுக்காக மெய்யப்பர் தன்வீட்டில் ஒரு பள்ளியை நடத்தி அதில் சாதிமத வேறுபாடின்றி அனைவரும் பயிலச் செய்தார். கொப்பனாபட்டிக் கலைமகள் கல்லூரியின் புரவலராகிப் பெண்கல்வியை வளர்த்தார். இவரும் இவரது மனைவியும் தாமே நூற்று அந்நூலைக்

Koviloor Digital Library

கொடுத்துப் பெற்ற கதராடைகளையே அணிந்து கொண்டார்கள். 1936 ஜனவரியில் காரைக்குடியில் நடந்த காங்கிரசு மாகாண அரசியல் மாநாட்டுக்குக் காந்தி மெய்யப்பர் வரவேற்புக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார். காந்தியத் தொண்டர்களுக்கும் தேசிய இயக்கத்துக்கும் புரவலராக விளங்கிய வை.சு. சண்முகனார் தாம் காந்தியடிகளிடமிருந்து ஏலத்தில் எடுத்த கதர்த்துணியைக் கண்ணாடிச் சட்டமிட்டுத் தம் வீட்டில் காட்சிப் பொருளாக வைத்திருந்தார். பாகனேரி வேலாயுதம் செட்டியார் நிர்மாணப் பணிகளைத் தூண்டி வளர்த்ததோடு தாம் வாழ்நாள் முழுதும் கதரே அணிந்து வாழ்ந்தார். அமராவதி புதூரில் பிச்சப்பா சுப்பிரமணியம் காந்தி பெண்கள் பாடசாலை நடத்தி வந்ததோடு நூற்பு இயக்கத்தையும் வளர்த்தார். வேந்தன்பட்டிச் சொக்கலிங்கம் செட்டியார் சிறப்பாகக் கதர் நூற்றமைக்காக காந்தியடிகளால் பாராட்டப் பெற்றார். அவர் ஏராளமான பெண்களுக்குக் கதர்நூற்றல், துணி நெய்தல் ஆகியவற்றைக் கற்பித்தார். செட்டிநாட்டில் ஆண்களும், பெண்களும் பலர் அந்நாள் முதல் வாழ்நாள் முழுவதும் கதர் அணிவதையே விரதமாகக் கொண்டனர். கம்பன் அடிப்பொடி சா. கணேசன் காந்தியடிகளைப் பின்பற்றி சட்டை அணிவதையே தவிர்த்து விட்டார். பள்ளத்தூர் சுப. அருணாசலம் செட்டியார் தம் வாழ்நாள் முழுவதும் சட்டை அணியாமலே வாழ்ந்த காந்தியவாதி ஆவார். இவ்வாறு உணர்வு பூர்வமாக விடுதலை இயக்கத்தில் ஒன்றிய நகரத்தார் பலராவர்.

நேரடியாக விடுதலை இயக்கப் போராட்டங் களில் கலந்து கொண்டு சிறைத்தண்டனை முதலிய துன்பங்களை அனுபவித்த நகரத்தார்கள் பலராவர். அவர்களுள் இராய. சொக்கலிங்கனார், கம்பனடிப்பொடி சா. கணேசன், ஆறு.ஆ.ராம. சொக்கலிங்கம் செட்டியார், தே. இரா. அருணாசலம் செட்டியார், சின்ன அண்ணாமலை, திருநாவுக்கரசு செட்டியார், ஆர்ச் அண்ணாமலை, ஏகநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1941 தனிநபர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் சா. கணேசன் சென்னை வரை போலீசாரின் கைகளில் அகப்படாமல் நடந்தே சென்று தனிநபர் சத்தியாகிரகத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.

1942 போராட்டத்தில் செட்டிநாட்டின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். தேவகோட்டையில் நீதிமன்றம் கொளுத்தப் பட்டது. அதில் ஈடுபட்டதாக திருநாவுக்கரசு செட்டியார், சின்ன அண்ணாமலை போன்றோர் திருவாடானைக் கிளைச் சிறையில் அடைத்து வைக்கப்பட்ட போது மக்கள் கூட்டம் கிளர்ந்தெழுந்து, சிறையை உடைத்து அவர்களை விடுவித்தது. காரைக்குடியில் 1942 போராட்டத்தின்போது ஜப்பான் நாட்டுச் செய்திகளை வானொலியில் கேட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டு ஆறு.ஆ.ராம. சொக்கலிங்கம் செட்டியார் கைது செய்யப்பட்டார். 1942 போராட்டத்தில் நகரத்தார்களின் தீவிரப் பங்கினை அன்றைய்த் தமிழகமே புகழ்ந்து போற்றியது.

இவ்வாறு விடுதலை இயக்கப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைப்பட்டோரின் பட்டியல் வருமாறு : (விடுதலைப் போராட்ட வீரர்கள் யார்? எவர்? Who is Who? of Freedom fighters (Tamil Nadu) என்ற நூலில் உள்ளபடி இந்த விவரங்கள் தரப்பட்டுள்ளன.)

1. அருணாசலம் தே.இரா., (26–11–15); தந்தையார் : எஸ். இராமநாதன் செட்டியார் தேவகோட்டை மைனர் வீட்டைச் சேர்ந்தவர். 1941 தனிநபர் சத்தியாகிரகப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு 6 மாதம் சிறைத் தண்டனையும் 1000 ரூபாய் அபராதமும் விதிக்கப் பெற்றார். 1942 போராட்டத்தில் மீண்டும் கைதாகி 1 ஆண்டு 3 மாதம் சிறைத்தண்டனை பெற்றார். மதுரை அலிப்புரம், வேலூர், தஞ்சை சிறைகளில் அடைக்கப்பட்டார்.

2. அண்ணாமலை. இராம.; தந்தையார் இராமசாமி செட்டியார். சொந்த ஊர் தேவகோட்டை. 1942 போராட்டத்தில் கைது செய்யப்பட்டுப் பெல்லாரி சிறையில் 3 ஆண்டுகள் தண்டனை அனுபவித்தார்.

3. அன்பு நாச்சியப்ப செட்டியார். சோ. (1918); தந்தையார் சோமசுந்தரம் செட்டியார், சொந்த ஊர் கண்டனூர். 1941 தனிநபர் சத்தியாக்கிரகத்தில் கைது, ஆறுமாதம் தண்டனை. பெல்லாரி, அலிப்புரம் சிறைகளில் இருந்தார்.

4. இராமநாதன். கதி., (1921); தந்தையார் கதிரேசன் செட்டியார், அரு.லெ.வீடு, தேவகோட்டை. 1942 போராட்டத்தில் கைது, இரண்டு ஆண்டுகள் எட்டு மாதம் சிறைத் தண்டனை. மதுரை அலிப்புரம் சிறைகள்.

5. இலக்குமணன். இரா., (1917); தந்தையார் இராமசாமி செட்டியார். சொந்த ஊர் தேவகோட்டை. 1941, 1942 போராட்டங்களில் கைது. 8 ஆண்டுகள் சிறைத் தண்டனை. அலிப்புரம் மதுரைச் சிறைகள்.

6. இலக்குமணன் செட்டியார் என்ற தினமணிச் செட்டியார் (10.8.1916); தந்தையார் இராமநாதன் செட்டியார். சொந்த ஊர் தேவகோட்டை. 1942 இயக்கத்தில் கைது, 3 ஆண்டு 8 மாதம் 3 நாள் சிறைத்தண்டனை. மதுரை, அலிப்புரம் சிறைகள்.

Koviloor Digital Library

7. ஏகநாதன் (1916); தந்தையார் சொர்ணலிங்கம். சொந்த ஊர் தேவகோட்டை. 1942 போராட்டத்தில் கைது 7 ஆண்டு சிறைத்தண்டனை. மதுரை அலிப்புரம், வெல்லெஸ்லி சானடோரியம் சிறைகள்.

8. கணேசன் சா., (6–6–1908); தந்தையார் சாமிநாதன் செட்டியார்; சொந்த ஊர் காரைக்குடி. 1928 முதல் பல போராட்டங்கள்; 1941, 1942இல் கைது. 1941 இல் 4 மாதம், 1942 இல் 2 ஆண்டு சிறைத்தண்டனை. அலிப்புரம் சிறை.

9. கருப்பஞ்செட்டி. இராம (1916); சொந்த ஊர் காரைக்குடி. 1941, 1942 போராட்டங்களில் கைது. 7 ஆண்டு 9 மாதம் சிறைத்தண்டனை. வேலூர் அலிப்புரம், திருச்சி சிறைகள்.

10. கருப்பஞ்செட்டி. இராம. (1917); தந்தையார் இராமசாமி செட்டியார். சொந்த ஊர் காரைக்குடி. 1940 போர் எதிர்ப்புப் பிரசாரத்திற்காகக் கைது. 9 மாதம் சிறை. 1942 இயக்கத்தில் கைது. 18 மாதம் சிறைத்தண்டனை. பெல்லாரி அலிப்புரம் சிறைகள்.

11. கருமுத்து சிவலிங்கம் செட்டியார் (1900); தந்தையார் அருணாசலம் செட்டியார். தனிநபர் சத்தியாக்கிரகம், 1941 இல் கைது. 4 மாதம் சிறைத்தண்டனை. அலிப்புரம் சிறை.

12. குமரப்பா. ஏ.; சொந்த ஊர் பூலாங்குறிச்சி. 1942 இயக்கத்தில் கைது. 2 ஆண்டு சிறைத் தண்டனை.

13. சிதம்பரம். சோம., (1911); சொந்தஊர் பள்ளத்தூர். 1932 சட்டமறுப்பு இயக்கத்தில் கைது. 8 மாதம் தண்டனை. மதுரை திருச்சி சிறைகள்.

14. சுப்பிரமணியன். இரா., (1910); தந்தையார் இராமநாதன் செட்டியார். சொந்த ஊர் கண்டனூர். 1930, 1942 இயக்கங்களில் கைது. 7 1/2 மாதம் சிறை. திருப்பத்தூர், வெளிப் பாளையம் சிறைகள்.

15. சுப்பையா செட்டியார், பழ., (1918); தந்தையார் பழநியப்ப செட்டியார். சொந்த ஊர் காரைக்குடி. 1942 இல் கைது. 4 மாதம் 12 நாள் சிறை. அலிப்புரம் சிறை.

16. சொக்கலிங்கம். இரா., (9–2–1900); தந்தையார் இராமநாதன் செட்டியார். சொந்த ஊர் காரைக்குடி. 1942 இல் கைது. 20 நாள் சிறை. வேலூர்ச் சிறை.

17. சொக்கலிங்கம், தமிழ்க்கடல், ராய., (30–10–1898); சொந்த ஊர் காரைக்குடி. 1932 சட்டமறுப்பு இயக்கத்தில் கைது. ஒராண்டுச் சிறை. மதுரை, திருச்சி, வேலூர்ச் சிறைகள்.

18. தண்ணீர் மலையான் செட்டியார். மெ.சித. (5–8–1901); சொந்த ஊர் காரைக்குடி. 1930 அந்நியத் துணி எரிப்பு, கள்ளுக்கடை மறியல். 1942 போராட்டங்களில் கைது.

19. திருநாவுக்கரசு, அழசுப.பழசுப., (1915); தந்தையார் சுப்பிரமணியன் செட்டியார். சொந்த ஊர் தேவகோட்டை. 1941 தனிநபர் சத்தியாக்கிரகம், 1942 இயக்கத்தில் கைது. 8 ஆண்டு 9 மாதம் சிறை. அலிப்புரம், வெல்லெஸ்லி சானடோரியம், மதுரை சிறைகள்.

20. நாராயணன் செட்டியார். இராம., (1893); சொந்த ஊர் தேவகோட்டை. அந்நியத் துணிப் புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியல் போராட்டங் களில் கைது.

21. மாணிக்கம் செட்டியார், (12–6–1918); தந்தையார் சுப்பையாசெட்டியார், பூலாங்குறிச்சி. 1942 இயக்கத்தில் கைது. 2 ஆண்டு 6 மாதம் சிறைத்தண்டனை.

22. மாணிக்கம். மெ.செ.மெ., (1912); சொந்த ஊர் தேவகோட்டை. 1930 உப்புச் சத்தியாக்கிரகம், 1931 சட்டமறுப்பு இயக்கம், கைது. 6 மாதம் சிறைத்தண்டனை. சென்னை சிறை.

23. மீனாட்சி சுந்தரம், (1916); சொந்த ஊர் தேவகோட்டை. 1932 இயக்கத்தில் கைது.

24. மெய்யப்ப செட்டியார், (23–8–1915) சொந்த ஊர் காரைக்குடி. 1932 சட்டமறுப்பு இயக்கத்தில் கைது.

25. வள்ளியப்பா. க., (1912); தந்தையார் கண்ணப்ப செட்டியார், சொந்த ஊர் நாட்டரசன் கோட்டை. 1941, 1942 போராட்டங்களில் கைது.

26. வேலாயுதம் செட்டியார் (25–1–1923) சொந்த ஊர் பாகனேரி. 1942 இயக்கத்தில் கைது. சிவகங்கைச் சிறை.

விமான ஓட்டிகள்

எத்துறையிலும் கால்வைத்து முத்திரை பதித்து முன்னோடியாக விளங்கிய பெருமை நகரத்தார்களுக்கு உண்டு. பழமையைப் போற்றும் பண்புடைய நகரத்தார் புதுமையை வரவேற்கவும் முன்னணியில் நிற்பார்கள். 1925–1930ஆம் ஆண்டுகளிலேயே தமிழகத்தில் விமானம் ஓட்டியவர்கள் நகரத்தார் இளைஞர்களாவர். கானாடுகாத்தான் சா.அ.ராம. அண்ணாமலை செட்டியார் ஜெர்மனியின் தலைநகரான பெர்லினில் விமானம் ஒட்டக் கற்றுக் கொண்டு 1928இல் சொந்தமாக ஒரு விமானமும் வாங்கி ஒட்டி வந்தார். 1930இல் அவ்விமானத்தில் அவர் கானாடுகாத்தானுக்குப் பறந்து வந்தார்.

Koviloor Digital Library

சென்னையிலேயே விமானம் ஓட்டக் கற்றுக் கொண்டு முதல்வகுப்பு விமான ஓட்டி என்ற சான்றிதழும் 1930இல் பெற்றவர் காரைக்குடி நா.புதூர் வெ. ராம. ஆ. ஆவுடையப்ப செட்டியார். தம் இருபதாவது வயதில் இச்சாதனையை இவர் நிகழ்த்தினார். இந்தியாவிலேயே இவ்வளவு இளம் வயதில் இத்தகைய சாதனை நிகழ்த்தியவர் இவர் ஒருவரே எனப் பாராட்டப் பெற்றார். இவர் சொந்தமாக "பிளாக் பர்ன் புளூ பேர்டு" என்னும் விமானம் வாங்கியிருந்தார். வள்ளல் அழகப்பரும் விமானம் ஓட்டும் பயிற்சி பெற்றவராவார்.

இவர்கள் பயண விமானங்களைச் செலுத்தும் பயிற்சி பெற்றவர்கள். விமானப் படையிலேயே சேர்ந்து போர் விமானங்களை இயக்கும் ஆற்றலும் பெற்றவர் ஒருவர் நகரத்தாரினத்தில் இருந்தார். அவர்தான் புதுவயலைச் சேர்ந்த ஸ்பெயின் வீரப்ப செட்டியார். 1936இல் ஸ்பெயினில் நடைபெற்ற உள்நாட்டுச் சண்டையில் கலந்து கொண்டு விமானம் ஓட்டிய இவரது திறமையைப் பண்டித நேரு புகழ்ந்து பாராட்டியுள்ளார். நகரத்தார்களின் முயற்சிக்கும் முன்னோடியாக விளங்கும் முனைப்புக்கும் அறிவியல் தொழில் நுட்பம் கற்கும் ஆர்வத்திற்கும் இந்நால்வரும் என்றும் சான்றாக விளங்குவர்.

வியத்நாமில் நகரத்தார்

இந்தோ – சீனா என்ற பெயரில் பிரஞ்சு ஆட்சியில் சில நூற்றாண்டுகள் இருந்த நாட்டின் ஒருபகுதி வியத்நாம் ஆகும். தென் வியத்நாமின் தலைநகரம் செய்கோன். ஏறத்தாழ 1850இல் கொண்டுவிற்கும் தொழிலுக்காக நகரத்தார்கள் செய்கோன் சென்றனர். இரண்டாம் உலகப்போருக்குப் பின் தனி உரிமை பெற்ற இந்தோ சீனா நான்கு தனிநாடுகளாகப் பிரிந்தது. அதில்ஒன்றான தெற்கு வியத்நாம் வடக்கு வியத்நாமோடு இணைவதைத் தடுக்கும் வகையில் அமெரிக்கா போரில் ஈடுபட்டது. அப்போர் தொடங்கியதிலிருந்தே நகரத்தார் செய்கோன் தொடர்பு குறையத் தொடங்கியது. போரின் முடிவில் இரு வியத்நாமும் இணைந்தபின் நகரத்தார் முற்றிலும் செய்கோனிலிருந்து வெளியேறிவிட்டனர்.

நகரத்தார்கள் செய்கோனில் வாழ்ந்த காலத்தில் ஏறத்தாழ 1880ஆம் ஆண்டு அளவில் செய்கோனில் தண்டாயுதபாணி கோவில் கட்டினர். இக்கோவிலில் நாள்தோறும் நான்கு கால்ப் பூசையும் ஆண்டுதோறும் திருக்கார்த்திகை, தைப்பூசம் போன்ற திருவிழாக்களும் நால்வர் குருபூசையும் சிறப்பாக நடைபெற்றன. தைப்பூச நாளில் சுவாமி நகர்வலம் வருவதற்காக 1930ஆம் ஆண்டு அளவில் ஒரு வெள்ளித்தேர் செட்டிநாட்டில் செய்யப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டது.

இங்கு வாழ்ந்த கீழச்சிவல்பட்டியைச் சேர்ந்த பெரி.சுப. சேதுராமன் செட்டியார் தமிழ்ப் பாடல்கள் பலவற்றைப் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார். இவர் முயற்சியால் திருவள்ளுவர் மலர் ஒன்றும் வியத்நாமில் வெளியாயிற்று. திருக்குறளை வியத்நாம் மொழியில் மொழி பெயர்க்கவும் இவரே காரணமாக அமைந்தார்.

விராமதி

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில், குன்றக்குடி, நேமம் வழியாகக் காரைக்குடியிலிருந்து 24 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, வைரவன் கோவில் ஆகிய இரு கோவில்களைச் சேர்ந்த162 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

செல்வவிநாயகர் கோவில் நகரத்தார் பொதுக் கோவிலாகும். 3 குடிநீர் ஊருணிகள் உள்ளன. இளையாத்தங்குடி ஒக்கூரார் தண்டாயுதபாணி சாமி வீட்டில் மகேசுவரர் இடும்பன் பூசையும் மூதாதையர் படைப்பும் நடத்தி வருகின்றனர். இங்கு வைகாசியில் திங்கள், புதன், வியாழன் ஆகிய ஏதாவதொரு கிழமையில் வள்ளியம்மை ஆயாள் படைப்பு நடைபெறும் காரைக்குடி, உ. சிறுவயல், சண்முகநாதபுரம், விராமதியைச் சேர்ந்த ஒக்கூர் நகரத்தார்கள் காரைக்குடியில் திருமாத்தாள் படைப்புப் படைத்து வருகின்றனர். ஒக்கூராரில் ஒருவகையினர் தைமாதத்தில் சாத்தம்மை ஆயா படைப்புப் படைத்து வருகின்றனர்.

1934இல் ஒக்கூர்ப் பிரிவைச் சேர்ந்த சு.வே.கதி. குடும்பத்தால் தொடங்கப்பட்ட சு.வே.கதி. சிகப்பி ஆச்சி வித்தியாசாலை தொடக்கப் பள்ளியாக அக்குடும்பத்தின் வழிமுறையினரால் நடத்தப்பட்டு வருகின்றது.

இவ்வூரினரான வெ.நா. நடராசன் செட்டியார், வெ.நா. நாராயணன் செட்டியார் ஆகியோர் இ.தே.ராவில் பணிபுரிந்துள்ளனர். பசுமடம் ஒக்கூர் சாத்தம்மை ஆயா படைப்புப் பங்காளிகளாலும், ந.மு. நந்தவனம் ஒக்கூராரில் ஒரு வகையாராலும் அமைக்கப் பெற்று நடந்து வருகின்றன.

Koviloor Digital Library

விரையாச்சிலை

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. காரைக்குடியிலிருந்து திருமயம், வி. இலட்சுமிபுரம் வழியாக 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், இலுப்பைக்குடி, சூரக்குடி ஆகிய 5 கோவில்களைச் சேர்ந்த 300 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இங்கு சுப்பிரமணியசாமி கோவில் நகரத்தார்களின் பொதுக் கோவிலாகும். முரு. இராம. முத்தையா செட்டியாரும், மு.பழ. முத்தழகப்ப செட்டியாரும் இக்கோவிலைக் கட்டி 1970இல் குடமுழுக்கு நிகழ்த்தி, பின்னர் கோவிலை நகரத்தாரிடம் ஒப்படைத்தனர். 1992 இல் நகரத்தார் குடமுழுக்கு நிகழ்த்தியுள்ளர்.

வைரவன் கோவில் பெரிய வகுப்பைச் சேர்ந்த மு.பழமு. குடும்பத்தார் கட்டி, நிருவகிக்கும் செட்டி ஊருணி பிள்ளையார் கோவில், இலுப்பைக்குடிக் கோவிலைச் சேர்ந்த வெ.லெ.வெ. குடும்பத்தார் கட்டி நிருவகிக்கும் இலட்சுமி விநாயகர் கோவில், நா.அசிதகா. முத்துச் செட்டியார் குடும்பத்தால் கட்டி நிருவகிக்கப்படும் சித்தி விநாயகர் கோவில், மாணிக்கம் செட்டியார் வகையினரால் கட்டி நிருவகிக்கப்படும் பிள்ளையார் கோவில், வைரவன் கோவில் நகரத்தார்களால் நிருவகிக்கப்படும் இடும்பன் கோவில், வெள்ளையஞ் செட்டியார் குடும்பத்தால் நிருவகிக்கப்படும் அங்காள பரமேசுவரி அம்மன் கோவில், வைரவன் கோவிலைச் சேர்ந்த முரு.இராம.மு. இராமன் செட்டியார் குடும்பத்தால் கட்டி நிருவகிக்கப்பெறும் ஆட்கொண்டான் பிள்ளையார் கோவில் ஆகியவையும் இவ்வூரில் உள.

புதுக்கோட்டைத் திருக்கோவில்கள் அற நிலையத்தைச் சேர்ந்த உய்யவந்த அம்பாள் உடனாய வில்வவனேசுவரர் கோவில் என்ற சிவன் கோவில் இவ்வூரில் உளது. அக்கோவிலில் சுப்பிரமணியர் சன்னதிக் கோபுரத்தை மு. பழநியப்ப செட்டியார் கட்டிக் கொடுத்துள்ளார்.

ஊர்ப் பொதுக் கோவிலாகிய மது அடைக்கலம் காத்த அம்பாள் கோவிலின் முன் மண்டபத்தையும் சிவன் கோவில் ஊருணியையும் வயி.லெ. இலட்சுமணன் செட்டியார் அமைத்துக் கொடுத்துள்ளார். செட்டி ஊருணி, பூசைக்குண்டு ஆகிய இரு ஊருணிகள் நகரத்தார் நிருவாகத்தில் உள.

வைரவன் கோவிலைச் சேர்ந்த பெரி. மெய்யப்ப செட்டியார் ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டி 1889 இல் அதனைப் புதுக்கோட்டை அரசிடம் ஒப்படைத்தார். 1952 வரை புதுக்கோட்டை அரசரால் நடத்தப் பெற்ற அப்பள்ளி நிருவாகத்தை 1952இல் மீண்டும் மெய்யப்ப செட்டியாரே ஏற்று, புதிய கட்டிடங்கள் கட்டி 1962 இல் அதனை பெரி.மெ.நடுநிலைப் பள்ளி என்ற பெயரில் நடுநிலைப் பள்ளியாக உயர்த்தினார். இப்போது அப்பள்ளி அவர்தம் வழிமுறையினரால் நடத்தப்படுகிறது.

மு.சித. குடும்பத்தார், பெரி.மெ. குடும்பத்தார், கா.வெசுப. குடும்பத்தார் ஆகியோர் இல்லங்களில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் இராமாயணம் படிக்கப்படுகிறது. வைரவன் கோவில் பிள்ளையார் வகுப்புப் பங்காளிகள் கடந்த 70 ஆண்டுகளாக ஆண்டு தோறும் மாசி மாதம் மகேசுவர பூசையும், சுப்பையா கோவில் பூசையும் நடத்தி அன்னதானம் செய்து வருகிறார்கள். ஆ.இராம. குடும்பத்தார் குருபூசை மடம் கட்டி ஆண்டுதோறும் குருபூசை நடத்தி வருகின்றனர். மு.இராம.மு. குடும்பத்தார் மடம் ஒன்று கட்டியுளர். இலுப்பைக்குடிப் பங்காளிகள் மது அடைக்கலம் காத்த அம்பாள் கோவிலின் திருவிழாவில் பத்தாம் திருவிழா மண்டகப் படியை நடத்தி வருகின்றனர். இதற்காகவே அவர்கள் ஒரு மண்டகப் படிக் கட்டிடம் கட்டி வைத்துளர்.

இவ்வூர் மு. பழநியப்ப செட்டியார் இவ்வூரிலிருந்து பனையப்பட்டி செல்லும் சாலையை அமைத்து, நீண்ட நாட்கள் தாமே நிருவகித்து, பின்னர் அரசிடம் ஒப்படைத்தார். அழ.பெரி. இராமன் செட்டியார் நற்சாந்து பட்டியை அடுத்த கோட்டூரில் சுந்தரலெட்சுமி விநாயகர் கோவிலைக் கட்டியுள்ளார். அ.செ. முத்தையா செட்டியார் குடும்பத்தார் மலையக் கோவிலில் அன்னதான மடம் கட்டி நடத்தி வருகிறார்கள்.

வினைதீர்த்தான் செட்டியார்,
(17-1-1911 - 12-6-1980)

இரணிக்கோவில்
பனையப்பட்டி
இசைக் கலைஞர்

தம் இளவயதிலிருந்தே இசையில் ஈடுபாடு கொண்ட இவர் அரியக்குடி இராமாநுச அய்யங்கார், திருவையாறு சுப்பையாபிள்ளை, செம்மங்குடி சீனிவாச அய்யர் ஆகியோரிடம் இசை பயின்றார்.

1937இல் காரைக்குடியில் தன்னுடைய முதல் மேடைக் கச்சேரியை நிகழ்த்தினார். அது முதல் பத்தாண்டுகள் இசையுலகில் புகழ்பெற்ற பாடகராகத் திகழ்ந்தார். இக்கால கட்டத்தில்

Koviloor Digital Library

மைசூர் சௌடையா, பாலக்காடு மணி போன்ற நாடறிந்த கலைஞர்கள் இவருக்குப் பக்கவாத்தியம் வாசித்துள்ளனர். தமிழிசை இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட இவர் தமிழிசை மாநாடுகள் பலவற்றிலும் இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். தேவகோட்டையில் 1942இல் தமிழிசைப் பள்ளி தொடங்கப்பட்ட பொழுது இவர் விழாவில் கலந்து கொண்டு பள்ளியைத் தொடங்கி வைத்தார். இவரது வீட்டுக்குப் பாகவதர் வீடு என்ற பெயர் இன்றும் வழங்குகிறது.

வீட்டுப் படைப்பு

காலம்சென்ற தமது முன்னோரின் நினைவைப் போற்றி அவர்கள் பசிதீரச் சோறு படைப்பது, வழிபடுவது என்ற முறையில் வீட்டில் பாட்டையா, பாட்டி, அய்யா, அப்பத்தா ஆகியோருக்குப் படைக்கின்றனர். தாய் தந்தையருக்குச் சுட்டு வைத்துக் கும்பிடுவது அல்லது பால்பழம் வைத்துக் கும்பிடுவது என்று தொடங்கிப் பின்னர் படைப்பது உண்டு.

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சிர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல்

என்பது தொல்காப்பிய நூற்பா. இதில் இடம் பெறும் பெரும்படை என்ற தொடர் இறந்தோரைத் தெய்வமாக்கி நடத்தும் படைப்போடு தொடர்புடையது என்பர் ஆய்வறிஞர்.

படைப்புக்குரியவருக்கு வேட்டி, துண்டு, உருமால் துண்டு, ஜபமாலை, சேலை ஆகியவற்றை ஒரு ஓலைப் பெட்டியில் வைத்துப் 'பேழை' என்று, அதனைப் படைக்கும் வளவு வீட்டிற்குள் உத்தரத்தில் அல்லது ஒரு வளையத்தில் கட்டி வைத்திருப்பர். வெள்ளிக்கிழமை விளக்கேற்றும் போது அப்பேழைக்குப் பூப்போட்டு வழிபடுவர். பொதுவாகப் புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகளில்தான் படைப்பர். சில வீடுகளில் ஆண்டுதோறும் படைப்பார்கள். வீட்டில் திருமணம், சாந்தி போன்ற விழாக்களை ஒட்டிப் படைப்பதும் உண்டு. படைப்பு அன்று தம்குல தெய்வக் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து வழிபட்டுத் தீர்த்தம் கொண்டு வருதலும் திருநீறு பெற்றுக் கொண்டு வருதலும் உண்டு.

அதற்கும் முன்னதாகப் படைப்பு அன்று காலையில் விதைப்புக் கொடுப்பதும் உண்டு. ஊர் வேளார் வீட்டில் விதைப்பு நெல் கொடுத்தால் அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டு திருநீறு கொடுப்பார்கள். அதைக் கொண்டு வந்து வீட்டில் உள்ள விபூதிமடலில் போட்டு வைப்பார்கள். படைப்பின் பொழுது விழுந்து கும்பிட்டு அந்தத் திருநீற்றைப் பூசிக்கொள்ளுவார்கள். மதியம் இரண்டு மணி அளவில் வீட்டு ஆண்கள் பேழையை அவிழ்த்து ஊருணிக்குக் கொண்டு சென்று அல்லது வீட்டுக் கிணற்று நீரிலேயே அலசிப் பிழிந்து காயப்போட்டு மடித்து வைப்பார் கள். துணிகளைக் காயவைக்கும் பொழுது அவை கீழே விழுந்துவிட்டால் அவற்றை மறுபடியும் அலச வேண்டும். காயப்போட்ட துணிகளின் குறுக்கே செல்லக் கூடாது என்பது மரபு.

அதே வேளையில் பெண்கள் படைக்கும் வீட்டின் வெளியே உள்ள பத்தியில் மண்பரப்பி அதற்குமேல் அடுப்புக்களை வைத்து விறகடுப்பில் சமையல் செய்வார்கள். சுவை பார்க்காமல் எச்சில் படாமல் பயபக்தியுடன் சமைப்பார்கள். வாழைக்காய்ப் பொறியல், பலாக்காய்ப் பொறியல், அவரைக்காய்ப் பொறியல், புடலங்காய்க் கூட்டு, வெண்டைக்காய்ப் பச்சடி, கத்திரிக்காய்க் குழம்பு, கருணைக்கிழங்குக் குழம்பு, பரங்கிக்காய்க் கெட்டிக் குழம்பு, மாங்காய்ப் பச்சடி ஆகியவற்றோடு கற்கண்டு வடை, உளுந்து வடை, பாற்சோறு, பாயாசம் வைப்பது பெருவழக்கு. பாற்சோறு கட்டாயமாகும். அதுவே பிரசாதம்.

இரவு ஏழு மணியளவில் ஆண்கள் காய்ந்த வேட்டி சேலை ஆகியவற்றைக் கொய்து, விசிறி மடிப்புப் போல மடித்து, நுனியில் ஒரு முடிச்சிட்டுப் பெரியவர்கள் கட்டிக் கொள்ளுவது போல வைப்பார்கள். தலைப்பாகை போலவே உருமால் துண்டு கட்டி வைக்கப் பெறும். இவ்வாறன்றித் துணிகளை அடுக்காக ஒன்றின்மேல் ஒன்றாக வைத்துப் படைப்பதும் உண்டு. அவற்றுக்குச் சந்தனம் குங்குமம் வைப்பார்கள். கவுடு, சிவகண்டிமாலை, கழுத்துரு, தாலி, மோதிரம், கால்மிஞ்சி போன்ற நகைகளையும் அத்துணிகளோடு வைத்து வழிபடுவதுண்டு.

யாருக்குப் படைக்கிறோமோ அவர்கள் விரும்பிப் பயன்படுத்திய சுருட்டு, புகையிலை போன்ற பொருட்களும் வைத்துப் படைக்கப்படும். இவற்றோடு பால், பழம், சிறிய செம்பில் எண்ணெய், அரைத்த சீயக்காய் உருண்டை, அரைத்த மஞ்சள் உருண்டை ஆகியவையும் வைத்திருப்பார்கள். யாருக்குப் படைக்கிறோமோ அவர்கள் படம் இருந்தால் நடுவில் வைத்து மாலை போட்டு ஊதுவத்தி ஏற்றி, சாம்பிராணி நறுமணப்புகை கமழ வைப்பார்கள். அந்த அறையே தெய்வீக மணம் கமழும். எதிரில் இலைகள் போட்டு அவற்றில் அனைத்து வெஞ்சனமும் பரிமாறி, சோறுபோட்டு, பருப்பு

Koviloor Digital Library

நெய் ஊற்றி, தீர்த்தத்தால் நீர்விளாவி, நைவேத்தியம் செய்து, கற்பூரம் காட்டி வழிபடுவார்கள். வாரிசு வயது முறைப்படி முதலில் ஆண்களும் பின்னர் பெண்களும் மிகுந்த பக்தியுடன் விழுந்து வணங்கி நெற்றியில் திருநீறு குங்குமம் இட்டுக் கொள்வர். படைத்த இலைகளில் பெரியவர்கள் சாப்பிடுவார்கள். பின்னர் அனைவரும் சாப்பிட்ட பிறகு படைத்த பால் எல்லோருக்கும் வழங்கப்பெறும். படைத்துச் சாப்பிட்ட இலையை வீதியில் கொண்டு போய் எறிவதில்லை. பழங்காலத்தில் மண்ணை வெட்டிப் போட்டு மூடிவிடுவார்களாம். இப்போது மறுநாள் வெளியில் போடுகிறார்கள்.

படைத்த வீட்டுக்கதவை இரவு சாத்திப்பூட்டி விட்டால் மறுநாள் காலைதான் திறப்பார்கள். சில வீடுகளில் மறுநாள் காலையில் நீர்ச்சோற்றுப் படைப்புப் படைப்பார்கள். முதல்நாள் வடித்த சாதத்தில் தண்ணீர் ஊற்றி வெங்காயம் நறுக்கிப் போட்டு எலுமிச்சங்காய் ஊறுகாய் சேர்த்துப் பிசைந்து படைப்பார்கள். கத்தரிக்காய்க் கூட்டு வைப்பார்கள். பல காய்களோடு துவரம்பருப்பு அரைத்துப் பிசைந்து மரக்கறிக்காய்த் தோசை சுட்டு நீர்ச்சோற்றோடு சேர்த்துப் படைப்பார்கள். பேச்சுவழக்கில் இதை நெய்ச்சோற்றுப் படைப்பு என்கிறார்கள். இரவு கொய்து வைத்த துணிகளை மறுபடி எடுத்து உதறிக் காயப்போட்டு மடித்துப் பேழைக்குள் வைத்துக் கட்டிவிடுவார்கள். ஒவ்வொரு படைப்பின்போதும் உறவினர்கள் புதிய துணிகளைப் பேழையோடு சேர்த்து வைத்து வழிபடுவர். பழைய துணிகள் எதுவும் கோரைபட்டிருந்தால் (கிழிசல்) அவற்றை எடுத்துவிடுவார்கள்.

அப்படி இல்லையென்றாலும் பேழையின் கொள்ளளவு கருதிப் புதியதுணிகள் வைக்கும் போது முன்பு வைத்த துணிகளை எடுத்து விடுவது வழக்கம். பேழையிலிருந்து எடுக்கப்படும் துணிகளை முன்னர் யார் வைத்தார்களோ அவர்கள் எடுத்துக் கொள்வது பெருவழக்கு. பேழையைப் பழையபடி முன்னிருந்தது போல வீட்டுக்குள் கட்டி விடுவார்கள்.

மகன் வழியினர்தான் படைப்பது பொது வழக்கு. பெண் வழியினர் வேண்டிக் கொண்டு தாய் வீட்டில் வந்து படைப்பதுண்டு. தொடர்ந்து சில ஆண்டுகள் படைக்காவிட்டால், யார் மேலாவது சாமிவந்து, 'எனக்குப் பசிக்கிறது, படையுங்கள்' என்று சொல்வதுண்டு என நம்புகிறார்கள். ஆகவே தவறாமல் படைத்து வழிபடுவது பெரும்பாலோர் வழக்கமாகும்.

வெங்கடாசலம் செட்டியார், க.வெ. சித., (21-10-1906 - 27-7-1972)

மாத்தூர், அரும்பாக்கூர்
கானாடுகாத்தான்
கல்வியாளர்

சிதம்பரஞ் செட்டியார் – தெய்வானை ஆச்சியின் மகன். 1955ஆம் ஆண்டில் வள்ளல் அழகப்பர் இவரை அழகப்பா அறநிலையக் குழுவின் செயலாளர் ஆக்கினார். வள்ளல் அழகப்பரின் மறைவுக்குப் பின்னும் அழகப்பர் கல்வி நிறுவனங்களைத் தம் வாழ்நாள் முழுவதும் கட்டிக்காத்து அழகப்பர் பெயரால் ஒரு பல்கலைக்கழகம் உருவாக அடித்தளம் அமைத்தார்.

1936 முதல் 1938 வரை வடக்கு இராமநாதபுரம் மாவட்ட உள்ளாட்சிக் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணி புரிந்தார். ஆங்கிலேய அரசு இவருக்கு 1940இல் இராவ்பகதூர் பட்டத்தையும் 1943இல் திவான்பகதூர் பட்டத்தையும் வழங்கியது. 1947இல் நாடு விடுதலை பெற்றதும் இப்பட்டங்களை இவர் துறந்துவிட்டார். 1942இல் மலேயா, பர்மாவிலிருந்து வெளியேறிய நகரத்தார்கள் சார்பில் அரசாங்கத்தைச் சந்தித்துப் பேசிய குழுவின் தலைவராகப் பொறுப்பேற்று அரசு நகரத்தார்க்குச் சாதகமான முடிவு எடுக்கும் வகையில் செயலாற்றினார்.

இவர் செயலராகப் பணியாற்றிய பொழுது 1962இல் அழகப்பா கலைக் கல்லூரியில் இராய.சொ.வின் தலைமையில் தமிழ் ஆய்வு மையத்தைத் தொடங்கினார். அதன் வாயிலாகக் கம்பனும் சிவனும், வில்லியும் சிவனும் என இரு நூல்கள் வெளிவரக் காரணமாக அமைந்தார். 1965–66இல் 367 சைவ, வைணவத் திருத்தலங்களுக்கு இராய.சொ.வையும் அழைத்துக் கொண்டு சென்று அப்பயண அனுபவத்தைத் திருத்தலப் பயணம் எனும் நூலாகத் தம் மணி விழாவில் அச்சிட்டு வழங்கினார். இவர் நிறுவிய அறக்கட்டளை இராமேசுவரத்தில் தங்கும் விடுதிகளைக் கட்டியுள்ளது.

வெள்ளையப்பன், இராம., (1-8-1944)

இளையாத்தங்குடி - பெருமருதூர்
தேவகோட்டை
கலை ஆர்வலர்

ப.இராம.செ.இராம. இராமநாதஞ் செட்டியார் – சின்னவள்ளியம்மை ஆச்சியின் மகன். பி.டெக். பட்டம் பெற்று பின்னி ஆலையில் பணி புரிந்துவந்த இவர், 1968இல், தந்தையார் மறைவுக்குப்பின் பொள்ளாச்சியில் குடும்பத் தொழிலான லேவா தேவித் தொழிலைக் கவனித்து வருகிறார்.

Koviloor Digital Library

1970இல் பொள்ளாச்சி தமிழிசைச் சங்கத்தை உருவாக்கி, அதன் செயலாளராகச் சிறப்பாகப் பணியாற்றி வரும் இவர் இசை நாட்டியப் பள்ளி ஒன்றையும் நிறுவியுள்ளார். மதுரை தமிழிசைச் சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

1983–84இல் தேவகோட்டை கந்தர்சஷ்டி விழாத் தலைவராக இருந்த இவர் இப்போது பாரதியார் பல்கலைக்கழகத்தில் கலை–கலாச் சாரத்திற்கான செனெட் உறுப்பினராக உள்ளார்.

சென்னையில் முன்பு நகரத்தார் மாணவர் சங்கத்தின் செயலராகவும், தலைவராகவும் விளங்கிய இவர், சமூகப் பெரியோர்களிடம் நிதி உதவி பெற்று, மாணவ, மாணவிகட்குக் கடனுதவி வழங்கியுள்ளார்.

அரிமா சங்கத்தில் மாவட்டத்தலைவர், வட்டாரத் தலைவர் மற்றும் துணை ஆளுநர் பொறுப்புக்களை வகித்துள்ளார். பொள்ளாச்சி ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவில், ஸ்ரீஐயப்பன் கோவில், கருப்பராயன் கோவில் ஆகியவற்றின் திருப்பணிகளை ஏற்று நிறைவேற்றியுள்ளார்.

இராஜா சர் அண்ணாமலை செட்டியார் குடும்பத்தினர் சென்னை, மதுரை நகர்களில் நிறுவிய தமிழிசைச் சங்கங்களைப் போலவே, பொள்ளாச்சி தமிழிசைச் சங்கத்தை நிறுவிச் சிறப்பாக நடத்தி வரும் பெருமை வெள்ளையப்பனைச் சாரும்.

வெள்ளையன் செட்டியார், அ.மு.மு., (7-7-1905 - 18-12-1945)

இளையாத்தங்குடி - பட்டினசாமி
பள்ளத்தூர்
தொழிலதிபர்

திவான்பகதூர் அ.மு. முருகப்ப செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன். இளமையிலேயே பர்மா சென்று தமது பொதுக்குடும்ப வணிகத்தை நிருவகித்து வந்தார். பர்மாவில் வாழ்ந்த நகரத்தார்பால் அக்கறை கொண்டு உழைத்தமையால் பர்மா அரசு இவரைச் சட்டசபையில் நகரத்தார்களின் சார்பாளராக 1931இல் நியமித்தது. பர்மா பிரிவினைக்குப் பின் ஏற்பட்ட முதல் மக்கள் அவைக்கு நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தின் சார்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பல்வேறு அரசு குழுக்களிலும், பர்மா இந்தியர் நலக் குழுவிலும், பர்மா குடியேற்றக் குழுவிலும் உறுப்பினராகப் பணியாற்றினார். பர்மா இந்திய வர்த்தகசபையின் துணைத் தலைவராகத் தேர்வு செய்யப் பெற்றார். இவற்றின் வாயிலாகப் பர்மா வாழ் இந்தியர்க்குப் பல்வேறு உதவிகள் செய்தார். பர்மா, ஜப்பான், சீனா மொழிகளிலும் இவர் வல்லவர். உலகப்போர் காரணமாகப் பர்மாவை விட்டு இந்தியா வந்தாலும் தற்காலிகமாக சிம்லாவில் அமைந்திருந்த பர்மியக் குடியேற்ற அரசின் செயற்பாடுகளிலும் பர்மா இந்தியர் குழு உறுப்பினர் என்ற வகையில் இவர் பங்கு கொண்டிருந்தார். போருக்குப் பின் பர்மாவில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்புப் பணிகள் தொடர்பாகவும், பர்மாவில் இந்தியர் விட்டு விட்டு வந்த சொத்து விவரங்கள் பற்றியும் அறிக்கைகள் தரும் குழுவில் சேர்ந்து பணி செய்யுமாறு பர்மியக் குடியேற்ற அரசு இவரை வேண்டிக் கொண்டது. அப்பணிகளுக்காகப் பர்மா சென்று பணிகள் நிறைவுற்ற நிலையில் தமது நாற்பதாம் வயதில் மரணமடைந்தார். இவர் பெயரால் ஒரு மேல்நிலைப் பள்ளி திருவொற்றியூரில் அ.மு.மு. அறக் கட்டளையால் நடத்தப் பெறுகிறது. 1974முதல் சென்னை – செங்கற்பட்டு மாவட்டப் பள்ளி மாணவ மாணவியர்க்காக வெள்ளையன் செட்டியார் நினைவாகப் பேச்சுப் போட்டி நடத்திப் பொற்பதக்கம் வழங்கப்படுகின்றது.

வெற்றியூர்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடி யிலிருந்து கல்லல், அரண்மனை சிறுவயல் வழியாகக் காளையார் கோவில் சாலையில் உள்ள சாத்தரசம்பட்டி விலக்கில் பிரிந்து சென்றால் 30 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது.

இயைாத்தங்குடி, மாத்தூர், வைரவன்கோவில் ஆகிய 3 கோவில்களைச் சேர்ந்த 122 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

இந்து அறநிலையத்துறையால் நிருவகிக்கப் படும் சௌந்தரநாயகி உடனாய அருந்தீசுவரர் கோவில், அன்னபூரணி அம்மன் கோவில் ஆகியவற்றில் நகரத்தார் திருப்பணி செய்துள்ளனர். மாத்தூரைச் சேர்ந்த இராம.மு.; இராம.சோம. குடும்பத்தார் காளை விநாயகர் கோவிலைக கட்டியுள்ளனர். நகரத்தாருக்குப் பொதுவான நகரமடத்தில் ஆடிப்பூசை சிறப்பாக நடைபெறுகிறது. பிள்ளையார் கோவில் ஊருணி நகரத்தாரால் வெட்டப் பெற்றதாகும்.

காளையார்கோவிலில் அரு. தெய்வராயன், இராமமு. இராம. குடும்பத்தார் விபூதி மடம் வைத்துக் கோவிலுக்கு நாள்தோறும் விபூதி கொடுத்து வருவதோடு, 8ஆம் திருவிழாவன்று வருபவர் அனைவர்க்கும் விபூதிப் பை வழங்குகின்றனர்.

Koviloor Digital Library

வேகுப்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர், கண்டவராயன்பட்டி, செவ்வூர், பூலாங்குறிச்சி வழியாக 45 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், சூரக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய 4 கோவில்களைச் சேர்ந்த 390 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

சிவகாம சுந்தரி உடனாய சிவலோக நாதர்கோவில் இவ்வூர் நகரச்சிவன் கோவிலாகும். 1924இல் முதல் குடமுழுக்கு நடைபெற்ற இக்கோவிலின் கல்திருப்பணி இவ்வூர் சி.இராம. பொதுக் குடும்பத்தால் செய்யப் பெற்றது. 1976, 1991 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டுக்கள் நிகழ்ந்துள. இக்கோவிலில் பன்னிரு திருமுறைகளுக்கு ஒரு சன்னதி அமைக்கப் பெற்றிருப்பது தனிச் சிறப்பாகும். நகரத்தாருக்குப் பொதுவாகச் சுப்பையா கோவில் ஒன்றும் உள்ளது. 1986இல் இக்கோவிலின் குடமுழுக்கு நிகழ்ந்துள்ளது.

நகரத்தார் இளைஞர்களால் 1975இல் கட்டப் பெற்று நகரத்தார் நிருவாகத்தில் இருக்கும் ஐயப்பன் கோவிலும், இவ்வூரில் உள்ளது. ஊர்ப் பொதுக் கோவிலாகிய ஏனமாரியம்மன் கோவில் திருப்பணியை 1944இல் சி.பழ.இராம. குடும்பத்தாரும், கும.கு.இராம. குடும்பத்தாரும் செய்துளர். இக்கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் நடைபெறும் பூத்திருவிழா நகரத்தாரால் நடத்தப் பெறுகிறது.

இவ்வூரிலுள்ள நகரத்தார் ஊருணி வேகுப்பட்டி நகரத்தாராலும், மெய்யஞ் செட்டி ஊருணி புதுப்பட்டி நகரத்தாராலும் அமைக்கப் பெற்றவை.

ஆ.பழ. குமரப்ப செட்டியாரால் 1920இல் தொடங்கப் பெற்ற சிவகாம சுந்தரி செந்தமிழ்ப் பாடசாலை இவ்வூரில் உள்ள தொடக்கப் பள்ளியாகும். இவ்வூரில் ஆறு நகரத்தார் வீடுகளில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் 8 நாட்கள் இராமாயணம் படிக்கப்படுகிறது.

இவ்வூர் அழ.மு.செ. இராம. வள்ளியப்ப செட்டியார் இ.தே.ரா.வில் பணியாற்றியவராவார். இவ்வூர் சி.பழ. இராமநாதன் செட்டியார் மணமேற்பட்டியில் கண்ணப்ப ஐயனார் கோவிலைக் கட்டியுள்ளார்.

வேந்தன்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர், ஆ. தெற்கூர், நெற்குப்பை வழியாக 46 கி.மீ. தொலைவில் உள்ளது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் கோவில், நேமங்கோவில், இலுப்பைக்குடி, இரணிக்கோவில் ஆகிய 6 கோவில்களைச் சேர்ந்த 792 புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றம்.

மீனாட்சி சொக்கலிங்கேசுவரர் கோவில் நகரச் சிவன் கோவிலாகும். முதற்குடமுழுக்கு 12-11-1911 இல் நடைபெற்றது. பின்னர் 14-6-1922, 25-1-1931, 14-11-1948, 12-9-1973, 18-5-1983, 26-1-1996 ஆகிய நாட்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. தண்டபாணி கோவிலும் நகரத்தார் பொதுக் கோவிலாகும். 1911க்கு முன் சுப்பையா கோவிலில் இருந்து வந்த நகரமடம் இப்போது தனிக் கட்டிடத்தில் இயங்குகிறது. துர்க்கைச் செட்டி வகையாரால் துர்க்கைச் செட்டிப் பிள்ளையார் கோவிலும் ஆறுமுகம் செட்டி வகையாரால் ஆறுமுகஞ் செட்டிப் பிள்ளையார் கோவிலும் கட்டப் பெற்றுள்ளன. மாப்படைத்தான் பிள்ளையார் கோவில் இவ்வூர் இலுப்பைக்குடி நகரத்தார்கள் கட்டியதாகும்.

பழைய ஊருணி நகரத்தார் பொது ஊருணியாகும். ஆறுமுகம் செட்டி ஊருணி, மாப்படைத்தான் ஊருணி, துர்க்கைச் செட்டி ஊருணி ஆகியவையும் உள்ளன.

மாத்தூர் பி.அழ. படையல் வீட்டில் பாப்பாத்தி அம்மாள் படைப்புப் படைக்கின்றனர். 3 ஆண்டுகட்கு ஒருமுறை மூலங்குடி சென்று 2 நாள் படைப்புப் படைப்பர். மாத்தூர் மு.அ.செ. படையல் வீட்டில் ஒரு பொதுப் படைப்பும் இலுப்பைக்குடிக் கோவிலாரால் ஒரு பொதுப் படைப்பும் படைக்கப்படுகின்றன.

இவ்வூரில் திருவள்ளுவர் வாசகசாலை 13-4-1927 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பழமையான இலக்கிய அமைப்பாகும். புதுமை, காப்புக்கட்டு, நாட்களில் விழாக் கொண்டாடும் குடும்பத்தார் வாசகசாலைக்கு நன்கொடை கொடுக்கும் வழக்கம் இருந்தது. விடுதலைப் போராட்டத்தில் இவ்வாசகசாலையின் பங்கு குறிப்பிடத்தக்கது. துக.லெ. கண்ணப்பன், து.க. குமரப்பன் ஆகியோர் இ.தே.ராவில் பணியாற்றியுள்ளனர்.

Koviloor Digital Library

நகரத்தார் பொதுவில் பிள்ளையார் கோவிலில் 8 நாட்கள் இராமாயணம் படிக்கும் வழக்கம் உண்டு. ஆறுமுகஞ் செட்டிப் பிள்ளையார் கோவிலிலும் மு.அ.செ.பழ. வீட்டிலும் இராமாயணம் படிக்கப்படுகிறது.

நகரத்தார் பொது நிருவாகத்தில் உள்ள நகரத்தார் தொடக்கப் பள்ளிக்கு லெ.நா. சொக்கலிங்கம் செட்டியார் கட்டிடம் கட்டிக் கொடுத்துள்ளார்.

திருக்களம்பூர் வைத்தியநாத சுவாமி கோவில்திருப்பணி பழ.மெ. குடும்பத்தாரால் செய்யப் பெற்றது. அப்பன் திருப்பதியில் நாக. இராமன் செட்டியார் சிவன்கோவில் திருப்பணி செய்துள்ளார். பழநியப்பன் இராமசாமி அடையாறு அஷ்டலெட்சுமி கோவிலுக்கு யானை வாங்கிக் கொடுத்துள்ளார். வேந்தன்பட்டியில் மு. ராம. இராமசாமி செட்டியார் குடும்பத்தார் பசுமடம் வைத்துள்ளனர். வேந்தன்பட்டியில் சுப. நாகப்ப செட்டியார் கார்த்திகைமடம் கட்டி மாதக் கார்த்திகைதோறும் அன்னதானம் செய்து வருகிறார். இலுப்பைக்குடி கோவிலைச் சேர்ந்த பெரி.சோம.பெரி. சிவலிங்கம் செட்டியார் குடும்பத்தார் கல்யாணமண்டபம் கட்டி நகரப் பொதுவுக்கு நன்கொடையாக அளித்துள்ளனர்.

சென்னை வாழ் வேந்தன்பட்டி நகரத்தார்கள் வேந்தன்பட்டியில் பொதுநலமன்றம் அமைத்துச் சமூக உணர்வுடன் கல்யாணநிதி, கல்வி உதவி நிதி அளித்து வருகின்றனர். இம்மன்றம் 21–5–1983இல் தொடங்கப் பெற்றது.

வேந்தன்பட்டிக்குத் தனிச்சிறப்புச் சேர்ப்பது இங்கு நகரச்சிவன் கோவிலில் உள்ள நெய் நந்தியாகும். நந்தீசருக்குச் சாத்தப்பட்ட நெய் எத்தனை நாட்கள் ஆனாலும் ஈ, எறும்பு மொய்ப்பதில்லை. பிரதோஷ நாட்களில் நந்தியை வழிபடப் பல்வேறு நகரத்தார் ஊர்களினின்றும் மக்கள் பெருந்திரளாக இங்கு வருகின்றனர். சனிப்பிரதோஷம் என்றால் மாபெரும் பக்தர் கூட்டம் திரளும். இந்நந்தியும் இங்குள்ள சிவலிங்கமும் கொடும்பாளூரில் இருந்து கொண்டுவரப்பட்டவை எனக் கூறுகின்றனர்.

வேலங்குடி

ஒன்பது நகரக் கோவில்களுள் ஒன்றான இத் திருக்கோவில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி யிலிருந்து ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில் காரைக்குடி – திருச்சி சாலையில் அமைந்துள்ளது.

வேலமரங்கள் மிகுதியாக இருந்ததனால் இப்பெயர் பெற்றது. இக்கோவிலைப் பாண்டிய மன்னன் நகரத்தார்களுக்குக் கி.பி. 718 இல் அளித்தான். இக்கோவில் நகரத்தார்கள் "கேரள சிங்க வள நாடாகிய பாலையூர் நாட்டில் வேலங்குடியான தேசிக நாராயணபுரத்தில் கழனி நல்லூருடையார்'' எனத் தம்மைக் குறிப்பிடு கின்றனர்.



வேலங்குடிக் கோவில்

இக்கோவில் சார்ந்த நகரத்தார் 1. கருங்குளம், 2. காரைக்குடி 3. தேவகோட்டை 4. பட்டமங்கலம் ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்தம் 46 புள்ளிகள்.

இக்கோவிலில் அமர்ந்தருள் செய்யும்

இறைவன் : கண்டீசுவரர்

இறைவி : காமாட்சியம்மை

இத்திருக்கோவிலுக்கு 18–6–1937இல் திருக்குட நன்னீராட்டு விழா நிகழ்ந்துள்ளது. கோவிலுக்குத் தென்புறம் ஊருணியும் ஊருணியின் மேல்கரையில் தேசிக நாராயணப் பெருமாள் கோவிலும் தெட்சணாமூர்த்தி கோவிலும் அமைந்துள்ளன.

இக்கோவில் சார்ந்த புள்ளிகள் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்குக் குருவின் சாபமே காரணம் என்று ஒரு கர்ணபரம்பரைக் கதை நிலவுகிறது. அச்சாபத்திலிருந்து விடுபடும் வழியாகத் தெட்சணாமூர்த்திக்கு ஒரு தனிக்கோவில் எழுப்புமாறு காஞ்சி சங்கராச்சாரியார் கூறியதன் அடிப்படையில் இங்கு தெட்சணாமூர்த்திக்குத் தனிக்கோவில் கட்டியுள்ளனர். நடராச சபையில் நடராசருக்கு அருகே உபதேச குரு கையில் வைத்திருந்த தண்டம் ஒன்றும் வைத்து வழிபடப் பெறுகிறது.

Koviloor Digital Library

வேவு

திருமணச் சடங்குகளில் வேவு இறக்குதல் என்பதும் ஒன்று. பெண்ணின் தாய்வீட்டார் உணவுப் பொருள்களைத் தலைச்சுமையாகக் கொண்டு வந்து மகள் வீட்டில் கொடுக்க மகள் வீட்டார் இறக்கிக் கொள்வர். முன்னாளில் சமைத்த உணவாகவே கொண்டு வரப்பட்டதால் வெந்த பொருள்களைக் கொண்டு வந்து இறக்குதல் என்ற பொருளில் வேவு இறக்குதல் என்ற பெயர் உருவாகியிருக்கலாம். வேள் என்றால் விருப்பம்; விருப்பத்துடன் கொடுக்கப்படும் பொருள் 'வேள்வு' எனப் பெயர்பெற்று 'வேவு' என மருவியிருக்கலாம்.

பொதுவாகக் கடகாம் ஒன்றில் பச்சரிசி, கத்தரிக்காய், தேங்காய் ஆகியவற்றை வைத்துப் பெண்ணின் தந்தை மற்றும் சகோதர முறையுடையவர்கள் ஒவ்வொருவராகத் தலைச்சுமையாக ஏந்தி வருவது போல் பிடித்துக் கொள்ள மாப்பிள்ளை வீட்டைச்சேர்ந்த பெண்கள் ஒவ்வொருவராக இறக்கிக் கொள்வார்கள். வீட்டின் வளவு நடையில் சிலேட்டு விளக்கை வைத்து வேவு இறக்கும் சடங்கு நடைபெறும். ஒவ்வொரு முறை வேவுக் கடகாத்தை இறக்கிய பிறகும் திருமண வீட்டிற்குள் அதனைக் கொண்டு போய் வைத்துத் திரும்ப எடுத்து வருவர். ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என ஒற்றைப் படையில் எண்ணிக்கை அமையும் வண்ணம் வேவு இறக்குவர். தொடக்க காலத்தில் ஓலைக் கடகாத்தில் வேவு இறக்கினர். பின்பு வெள்ளிக் கடகாம், எவர்சில்வர் கடகாம் ஆகியவற்றிலும் வேவு இறக்குகின்றனர்.

கலியாணவேவு, பால்வேவு, பொங்கல்வேவு, என்பவை திருமணத்தில் இறக்கப்படும் வேவுகள். சில பகுதிகளில் முதல்நாள் சீர்வைக்கச் செல்லும் பொழுதும், மற்ற பகுதிகளில் திருமணத்தன்று காலையிலும் கல்யாண வேவு இறக்கப்படும். மாப்பிள்ளை வீட்டில் பெண் அழைத்துக் கொண்டு போய் விட்ட பிறகு பால்வேவு, பொங்கல்வேவு இறக்கப்படும். பால்வேவு இறக்கும் பொழுது கடகாத்தில் வழக்கமான வேவுப் பொருள்களோடு பெண்வீட்டிலிருந்து எடுத்து வரப்பட்ட பால்செம்பும் இடம் பெற்றிருக்கும். வேய்தல் என்பது கூரையின் மீது பரப்புதல்; அல்லது சூடுதல் எனப் பொருள்படும். அம்முறையில் "வேய்வு" என்ற சொல் தலைச்சுமையாகக் கொண்டு செல்வது என்ற பொருளில் வழங்கியிருந்து அது வேவு என மருவியிருக்கலாம். வேவுச் சடங்கில் தலைச்சுமை முக்கியம்.

மணமகன் அல்லது மணமகள் தலைப்பிள்ளையாக இருந்தால் மாமவேவு இறக்கப்படும். தலைப்பிள்ளையின் ஆயாள் வீட்டினர் பங்காளிகளுடன் மேளதாளத்தோடு திருமண வீட்டிற்கு வேவு கொண்டு வருவர். சில பகுதிகளில் முதல்நாள் இரவிலும் மற்ற பகுதிகளில் திருமணத்தன்று காலையிலும் இவ்வேவு இறக்கப்படும். மாமவேவுக்கென்று சிறப்பு விருந்து ஏற்பாடு செய்யப்படுவதும் உண்டு.

ஒரு குடும்பத்தில் தலைப்பிள்ளை பிறந்தவுடன் அப்பிள்ளையின் ஆயாள் வீட்டினர் பிள்ளையைப் பார்க்க வரும்போது வழக்கம் போல உணவுப் பொருள்களோடு அப்பிள்ளை விளையாடுவதற்குரிய விளையாட்டுப் பொருள்களையும் தலைச்சுமையாகக் கொண்டு வந்து கொடுப்பது அக்கால மரபு. எனவே இதற்கு விளையாட்டுப் பெட்டி வேவு என்று பெயர். இப்போது வழக்கமான வேவுப் பொருட்களை வைத்தே இந்த வேவும் இறக்கப்படுகிறது. சில பகுதிகளில் பிறந்தபிள்ளையையும் தாயையும் அப்பத்தாள் வீட்டுக்கு அழைத்து வந்து விடுகின்ற நாளிலேயே இந்த வேவும் இறக்கப்படுகின்றது. மற்ற பகுதிகளில் அப்பத்தாள் வீட்டில் நிகழும் வேறு திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளை ஒட்டி ஒருநாள் விளையாட்டுப் பெட்டி வேவு இறக்கப்படுகின்றது.

வேறு வைத்தல் என்னும் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும் பொழுது வேறுவைத்த வேவு இறக்கப்படும்.

பெண்ணுக்குத் தாய்வீட்டினர் செய்யும் சிறப்பை வேவு இறக்கும் சடங்கு உணர்த்துகிறது.

வேறுவைத்தல்

நகரத்தார் குடும்பத்தில் கலியாணமான ஆண்மகனைக் குடும்பத் தலைவனாக்கி அவன் மனைவியோடு மனையறம்படுத்துவது 'வேறுவைத்தல்' ஆகும். திருமணத்தின் பொழுது ஒரு வருட முறை, மூன்று வருட முறை என்று பேசிக் கொள்ளுவார்கள். ஆகவே ஓராண்டின் பின் அல்லது மூன்றாண்டுகளின் பின் அதே வீட்டிற்குள்ளேயே மகனையும் மருமகளையும் தனியொரு குடும்பமாக வைத்து வடித்துண்ணச் செய்வது வேறு வைத்தல் ஆகும். மகன் குடும்பத்திற்குத் தாயார் பித்தளைக் குடம், சட்டி, செம்பு, விளக்கு, தடுக்கு, கொஞ்சம் அரிசி, மளிகைப் பொருட்களைக் கொடுப்பார்கள். தனியே ஒரு பொங்கல் வைத்து வேவு இறக்கி வேறுவைப்பார்கள். மகனின் மாமியார் (மனைவியின் தாயார்) வீட்டிலிருந்து அரிசி பருப்புக்காகப் பணம் கொடுப்பார்கள். சில வீடுகளில் மருமகளுக்குக் கலியாணத்தின் பொழுது வைத்த சேலை முதலியவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு ஓரிரண்டு பட்டுச்சேலைகள், பிள்ளைகள் இருந்தால் துண்டு

Koviloor Digital Library

வைத்துக் கொடுப்பார்கள். வேறு வைக்கும் நாளில் கத்திரிக்காய்க் குழம்பு, வாழைக்காய் பொரியல், பருப்பு இம்மூன்றையும் சமைப்பர். மணமகளுக்குச் சமையல் செலவுகளுக்காக ஆண்டொன்றுக்கு 200 ரூபாயும், இரண்டு பொதி நெல்லும், மணமகளிடம் மணமகனின் தாய் தந்தையார் வழங்குவர். இத்தொகைக்கு 'வருஷத்துப் போகம்' அல்லது 'பொதி போடுதல்' என்று பெயர்.

ஆண்மகனுக்குக் குடும்பத்தலைவன் என்ற பொறுப்பு வரவேண்டும் என்பதற்காகவும், அவன் குடும்பத்தை அவனே நடத்திச் செல்லவேண்டும், அதற்காகப் பொருள் ஈட்டவேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு வரவேண்டும் என்பதற்காகவும் வேறுவைத்தல் என்று மகனையும் மருமகளையும் வேறே வைப்பது நகரத்தார் சமூகத்தின் பண்பாட்டைக் காட்டுகிறது. சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகியைத் தனிக்குடும்பமாக்கிய மனையறம் படுத்த காதையை இளங்கோவடிகள் பாடுவதன் வாயிலாக இரண்டாயிரம் ஆண்டுகட்கும் முன்பிருந்தே நகரத்தார் சமூகத்தில் இந்தப் பண்பாடு நிலவிவருவதை அறிகிறோம்.

வேற்பூசை

தமிழும் சைவமும் தமது இரு கண்கள் எனப் போற்றும் நகரத்தார்கள் முருகன் வழிபாட்டில் முன்னிற்பவர்கள். முருகன் வழிபாட்டிலும் அவனுடைய வேல்வழிபாடே சிறப்பாக நகரத்தார்களால் மேற்கொள்ளப் பெறுகின்றது. நகரத்தார்கள் அயல்நாடு செல்ல நேர்ந்த போது 'செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை' என்று வேலையே தங்களுக்குத் துணையாக எடுத்துச் சென்று அந்த வேலையே அங்கு நிறுவித் 'தண்டாயுதபாணி வீடு' என்று பெயரிட்டு அங்கேயே தம் கடைகளை நடத்தினர். இரங்கூனில் 'ஆறறைவீடு' இவ்வாறு அமைந்தது. 'வேலுக்குப் பூசையிடும் வேள் வணிகர் வீடு' என்ற தொடர் வழக்கும் நகரத்தாரது வேல்வழிபாட்டுச் சிறப்பை உணர்த்தும்.

இம்மரபையொட்டி நகரத்தார் ஊர்களில் வேல்பூசை அல்லது மகேஸ்வரபூசை என்ற பெயர்களில் வேலுக்குப் பூசையிட்டு மக்களுக்கு அன்னதானம் வழங்குவது நடைபெற்று வருகிறது. அந்தந்த ஊர்பற்றிய கட்டுரைகளில் வேற்பூசை பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது. திருவொற்றியூரில் நிகழும் வேற்பூசைபற்றித் தனிக்கட்டுரை உள்ளது. நகரத்தார் பண்பாட்டில் சிறப்பிடம் பெறும் வேற்பூசை பற்றிய விவரப்பட்டியல் பின்வரும் முறையில் தொகுத்துத் தரப்படுகின்றது.

முதலில் வேற்பூசை நடைபெறும் ஊர், அடுத்து வேற்பூசை நடைபெறும் இடம், மூன்றாவதாகப் பூசையிடுவோர் யாரென்ற குறிப்பு, இறுதியாகப் பூசை எப்பொழுது நடைபெறுகிறது என்ற குறிப்பு எனும் வரிசை முறையில் செய்திகள் அமைந்துள்ளன.

1. அரண்மனை சிறுவயல் – சித்திவிநாயகர் கோவில் – நகரத்தார் பொது – ஆடி முதல் வெள்ளி.

2. அரிமழம் – முருகன் கோவில் – நகரத்தார் பொது – தைப்பூசம்.

3. அரிமழம் – ... – பிள்ளையார்பட்டிப் பங்காளிகள் – ஆடிமாதம்.

4. அரிமழம் – ... – மாத்தூர்ப் பங்காளிகள் – ஆடிமாதம் திங்கட்கிழமை.

5. அலவாக்கோட்டை – நகரமடம் – நகரத்தார் பொது – ஆடி முதல் வெள்ளி.

6. இராயவரம் – ... – இளையாத்தங்குடிக் கிண்கிணிக்கூர்ப் பங்காளிகள் – ஆடிமாதம்.

7. இராயவரம் – ... – வெ.மு. வகைப் பங்காளிகள் – ஆடிமாதம்.

8. உலகம்பட்டி – ஞானியார் மடம் – நகரத்தார் பொது – தைப்பூசம்.

9. ஒக்கூர் – ... – சி.கரு.சி; சி.கரு.ஆ குடும்பத்தார் – சித்திரை முதல் வெள்ளி.

10. கடியாபட்டி – மு.சி.அழ. அன்னசத்திரம் – இரணிக்கோவில் பங்காளிகள் (பள்ளத்தூர் அழகாத்தாள் படைப்புப் பங்காளிகள்) ஆடிமாதம் மூன்று நாட்கள்.

11. கடியாபட்டி – ... – இரணிக்கோவில் கு.தெ. வகையார் – ... –

12. கடியாபட்டி – ... – இரணிக்கோவில் மு.நா. வகையார் – ... –

13. கடியாபட்டி – ... – இளையாத்தங்குடி கழனிவாசல்குடி – ஆ.சா. வகை – ... –

14. கடியாபட்டி – ... – இளையாத்தங்குடி – கழனிவாசல்குடி – ஆ.பெ. வகை – ... –

15. கடியாபட்டி – ... – மாத்தூர் உ.ராம. சிதமு. வகையார் – ... –

16. கடியாபட்டி – ... – வைரவன்கோவில் உ.ராம.நா.லெ. வகையார் – ... –

17. கடியாபட்டி – ... – வைரவன் கோவில் தீ.சொ. வகையார் – ... –

18. கடியாபட்டி – ... – வைரவன் கோவில், பி.கு. வகையார், – ... –

19. கண்டனூர் – ... – குப.சுப.சு.சுப. குடும்பத்தார் – மாசி மாதம்.

Koviloor Digital Library

20. கண்டனூர் – ... – சி.ராம. குடும்பம் – ஆடிமாதம் –

21. கீழச்சிவல்பட்டி – அழகாத்தாள் கோவில் வீடு – சூரக்குடிப் பங்காளிகள் – ஆடி வெள்ளி.

22. குழிபிறை – சுப்பையா கோவில் – ... – நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை.

23. குன்றக்குடி – அடிவாரம் அன்னதான மடம் – நகரத்தார் பொது – சித்திரை மாதம்.

24. கொத்தமங்கலம் – ... – இரணிக்கோவில் பங்காளிகள் (இராயவரம் படைப்புப் பங்காளிகள்) – சித்திரை மாதம்

25. கொத்தமங்கலம் – ... – இரணிக்கோவில் பங்காளிகள் (பள்ளத்தூர்ப் படைப்புப் பங்காளிகள்) – சித்திரைமாதம்.

26. கோட்டையூர் – ... – இளையாத்தங்குடி பெருமருதூருடையார்ப் பங்காளிகள் – ஆடிமாதம்.

27. சிறாவயல் – தண்டாயுதபாணி கோவில் – நாட்டார் நகரத்தார் சேர்ந்து – ஆடிமாதம்.

28. உ. சிறுவயல் – மெ.சு. மடம் – இளையாத்தங்குடி ஒக்கூருடையார்ப் பங்காளிகள் – வைகாசி விசாகம்.

29. உ. சிறுவயல் – ... – சா.ராம.ப. குடும்பம் – ஆடிமாதம் திங்கட்கிழமை.

30. செவ்வூர் – சுப்பிரமணியர் கோவில் – நகரத்தார் பொது – இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை –

31. சென்னை அம்பத்தூர் – ... – அம்பத்தூர் நகரத்தார் – ஆடி ஞாயிறு.

32. சென்னை – பவளக்காரத் தெரு பழைய தெண்டாயுதபாணி வீடு – மாதக் கார்த்திகை தோறும் –

33. சொக்கநாதபுரம் – நகரத்தார் மடம் – நகரத்தார் பொது – ஆடிமாதம் திங்கட்கிழமை.

34. திருப்பரங்குன்றம் – நகரவிடுதி – நகரத்தார் – ஆடிக்கார்த்திகை.

35. திருவொற்றியூர் – நகரவிடுதி – நகரத்தார் – மாசி மகம்.

36. தேவகோட்டை – நகரப்பள்ளிக்கூடம் – நகரத்தார் பொது – மாசி மகம்.

37. தேவகோட்டை – தி.ராம. சாமி வீடு – இளையாத்தங்குடிப் பெருமருதூருடையார் தி. வகைப் பங்காளிகள் – இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மூன்று நாள் பூசை –

38. நற்சாந்துபட்டி – நகரச் சிவன்கோவில் – நகரத்தார் பொது – நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை.

39. நற்சாந்துபட்டி – பழநியாண்டவர் கோவில் – வைரவன் கோவில் பெரிய வகுப்புப் பங்காளிகள் – ஆடிமாதம்.

40. நாச்சியாபுரம் – தண்டாயுதபாணி கோவில் – நகரத்தார் பொது – ஆடிவெள்ளி.

41. நெற்குப்பை – நகர சுப்பிரமணியசாமி கோவில் – நகரத்தார் பொது – ஏழு ஆண்டுகட்கு ஒருமுறை –

42. நேமத்தான்பட்டி – ... – நகரத்தார் – ...

43. பட்டமங்கலம் – தண்டாயுதபாணி கோவில் – நகரத்தார் பொது – மாசிக் கார்த்திகை.

44. பள்ளத்தூர் – அன்னசத்திரம் – இரணிக்கோவில் நல்லழகஞ் செட்டி வகை – ... –

45. பள்ளத்தூர் – பூசைமடம் – ப.ராம.ப. குடும்பம் – ... –

46. பள்ளத்தூர் – பூசைமடம் – வைரவன்கோவில் பங்காளிகள் – ... –

47. பனையப்பட்டி – சுப்பையாசாமி கோவில் – மாத்தூர் உறையூர் ஐந்து குடும்பத்தார் – மாசிக் கார்த்திகை.

48. பனையப்பட்டி – ... – மாத்தூர்க் குளத்தூர்ப் பங்காளிகள் – ஆடிக்கார்த்திகை.

49. பாகனேரி – நகரமடம் – நகரத்தார் பொது – ஆடிவெள்ளி.

50. புதுப்பட்டி – சுப்பையா வெற்றி வேலாயுதசாமி கோவில் – நகரத்தார் பொது – ஆடிமாதம்.

51. மானகிரி – நகர சுப்பிரமணியசாமி கோவில் – நகரத்தார் பொது – வைகாசி வெள்ளி.

52. மேலைச் சிவபுரி – சக்தி வேலாயுத சாமி கோவில் – முத்தப்ப செட்டி வழி முறையினர் – பழநிக் காவடி திரும்பி வரும்நாள்.

53. விராமதி – தண்டாயுதபாணி சாமி வீடு – இளையாத்தங்குடி ஒக்கூர்ப் பங்காளிகள் – வைகாசி மாதம்.

54. விரையாச்சிலை – சுப்பையா கோவில் – வைரவன் கோவில் பிள்ளையார் வகுப்புப் பங்காளிகள் – மாசிமதம்.

55. வெற்றியூர் – நகரமடம் – நகரத்தார் பொது – ஆடிமாதம்.

Koviloor Digital Library

வை.சு.ச. நினைவு மையம்

சமூக சீர்திருத்தவாதியும் தமிழ்ப்புரவலருமான வை.சு. சண்முகனாரின் (சு.க.) நினைவாக அவர் மகள் பார்வதி நடராசன் ஓர் அறக்கட்டளையை நிறுவினார். கானாடுகாத்தானில் சண்முகனார் வாழ்ந்த இன்ப இல்லத்தின் வளாகத்தில் அமைந்துள்ள இந்நினைவு மையம் அவ்வறக் கட்டளையால் ஏற்படுத்தப் பெற்றது. இம்மையத்தில் சண்முகனார் நூல்நிலையம் அமைந்துள்ளது. 31–5–1993 அன்று முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் இந்நினைவு மையத்தைத் திறந்து வைத்தார்.

வைத்தீசுவரன் கோவில் நடைப்பயணம்

மயிலாடுதுறைக்கு அண்மையில் உள்ள புள்ளிருக்குவேளூர் மக்களால் வைத்தீசுவரன் கோவில் என அழைக்கப்படுகிறது. அருள்மிகு வைத்தியநாதர், தையல்நாயகி, செல்வமுத்துக் குமாரசுவாமி ஆகிய தெய்வங்களைக் கீழச்சிவல்பட்டி, பி. அளகாபுரியைச் சார்ந்த மாத்தூர்க் கண்ணூருடையார்ப் பிரிவினரும் வைரவன் கோவிலாரும் மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவினரும் கொண்டாடி வழிபட்டு வந்தனர். அத்தெய்வங்கட்கென வீட்டில் உண்டியல் வைத்து ஆண்டுக்கொருமுறை வண்டிகட்டிக் கொண்டு வைத்தீசுவரன் கோவில் சென்று அவ்வுண்டியல் தொகையைக் காணிக்கையாகச் செலுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவ்வாறு வண்டிப் பயணமாகச் செல்வது ஏறத்தாழ 200 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுவருகிறது.

மாத்தூர்க் கண்ணூருடையார்ப் பிரிவைச் சேர்ந்த க.தெ.நா. அங்கப்ப செட்டியார் வைத்தீசுவரன் கோவிலுக்கு நடைப்பயணமாகச் செல்வது என வேண்டிக் கொண்டு வண்டியுடன் நடந்து சென்றார். அவரைப் பின்பற்றிப் பலர் நடக்கத் தொடங்கியதால் ஆண்டுதோறும் வண்டிப் பயணத்தோடு நடைப்பயணமும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தொடக்கத்தில் கீழச்சிவல்பட்டி, பி. அளகாபுரி நகரத்தார்கள் மட்டும் பங்கேற்ற இந்நடைப் பயணத்தில் இப்போது அனைத்து ஊர் நகரத்தார்களும் மிகுதியான எண்ணிக்கையில் கலந்துகொள் கிறார்கள்.

வண்டிகளும் நடைப்பயணம் செல்லும் அன்பர்களும் சித்திரை மாதம் முதல் புதன்கிழமையன்று நள்ளிரவு ஒரு மணிக்குக் கீழச்சிவல்பட்டி பி. அளகாபுரியிலிருந்து புறப்படுவர். மறுநாள் காலை புதுக்கோட்டை சேர்ந்து அங்கு தங்குவர். இப்பயணம் முழுவதுமே பகலில் ஓய்வெடுத்தலும் இரவில் பயணமும் என்ற முறையில் நடைபெறும். வெளியூர் நகரத்தார்கள் கீழச்சிவல்பட்டி பி. அளகாபுரி வந்து பயணம் தொடங்குவதே மரபு. அவ்வாறு வர இயலாதவர்கள் வியாழன் மாலையில் புதுக்கோட்டை வந்து அன்று இரவு 8 மணிக்கு மச்சுவாடியிலிருந்து புறப்படுவோருடன் இணைந்து கொள்வர். இந்நடைப்பயணம் ஆறு இரவுகள் நடைபெறும். செவ்வாய்க்கிழமை அதிகாலை வைத்தீசுவரன் கோவில் போய்ச் சேர்வர். அங்கு மூன்று நாட்கள் தங்கி வழிபடுவது மரபு.

நடைப்பயணம் மேற்கொண்டவர்கள் சுவாமி தெரிசனம் முடிந்ததும் தங்கள் ஊர் திரும்புவர். வண்டி கட்டிச் சென்றவர்கள் மூன்று நாள் தங்கிய பிறகு வெள்ளிக்கிழமை மதியம் புறப்பட்டு அடுத்த புதன்கிழமை காலை பில்லமங்கலம் சேர்வர். அங்குள்ள ஆவிக்கரை ஐயனார் கோவிலில் வழிபட்ட பின்னரே தத்தம் வீடு திரும்புவர்.

வண்டிப்பயணம் நடைப்பயணம் மேற் கொள்பவர்கள் வைத்தீசுவரன்கோவில் நகரமடத்தில் மகமை எழுதுவது மரபு. இம்மகமை வரவை அடிப்படையாக வைத்து நகரத்தார் சார்பில் பசுமடம் தொடங்கப்பெற்றது. இன்றும் இம்மடத்திலிருந்து கோவில் அபிஷேகத்திற்குப் பால் அனுப்பப் பெறுகிறது.

பழநி நடைப்பயணம் போலவே நகரத்தார் பண்பாட்டில் இந்நடைப்பயணமும் சிறப்பிடம் பெறுகிறது. இன்று ஏராளமான மக்கள் கலந்து கொள்ளுகின்றனர். இப்பயணத்தில் நடந்து செல்வோர்க்கு வழியில் உணவுப் பொட்டலங்கள், காப்பி, குளிர்பானங்கள், பழங்கள் முதலியவற்றை வழங்குவதிலும் நகரத்தார்கள் முன்னிற்கின்றார்கள். வழிநடைப் பக்திப்பாடல்களையும் அச்சிட்டுப் பலர் வழங்கி வருகின்றார்கள்.

வைரவன் கோவில்

ஒன்பது நகரக்கோவில்களுள் ஒன்றான இத்திருக்கோவில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து குன்றக்குடி வழியாக மதுரை செல்லும் சாலையில் 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

இக்கோவிலில் வைரவர் வழிபாடு சிறப்பிடம் பெறுவதால் இவ்வூர் வைரவன்பட்டி என்றும் இக்கோவில் வைரவன் கோவில் என்றும் இங்குள்ள ஊருணி வைரவதீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

Koviloor Digital Library


இக்கோவில் கி.பி. 712 ஆம் ஆண்டில் பாண்டிய மன்னனால் நகரத்தாருக்கு அளிக்கப் பெற்றது. இக்கோவில் நகரத்தார் "கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான வீரபாண்டிய புரத்தில்" என்று தொடங்கித் தம் உட்பிரிவுகளைக் குறிப்பிடுகின்றனர். இக்கோவில் மூன்று உட்பிரிவுகளை உடையது. அவை :

1. சிறு குளத்தூருடையார்
2. கழனிவாசலுடையார்
3. மருதேந்திரபுரமுடையார்

இவற்றுள் சிறுகுளத்தூருடையார் என்னும் உட்பிரிவு மூன்று வகுப்புக்களைக் கொண்டது. அவை :

1. பெரிய வகுப்பு
2. தெய்வநாயகர் வகுப்பு (தெய்யனார் வகுப்பு)
3. பிள்ளையார் வகுப்பு

இக்கோவிலைச் சேர்ந்த நகரத்தார் 1. அரண்மனை சிறுவயல் 2. அரிமழம் 3. அரியக்குடி 4. அலவாக்கோட்டை 5. க. அளகாபுரி 6. பி. அளகாபுரி 7. ஆத்தங்குடி 8. ஆ. தெற்கூர் 9. ஆவினிப்பட்டி 10. இராயவரம் 11. வி. இலட்சுமிபுரம் 12. உலகம்பட்டி 13. ஒக்கூர் 14. கடியாபட்டி 15. கண்டரமாணிக்கம் 16. கண்டவராயன்பட்டி 17. கண்டனூர் 18. கருங்குளம் 19. கல்லல் 20. காரைக்குடி 21. காளையார் மங்கலம் 22. கானாடுகாத்தான் 23. கீழச்சிவல்பட்டி 24. குருவிக்கொண்டான்பட்டி 25. குழிபிறை 26. கொத்தமங்கலம் 27. கொப்பனாபட்டி 28. கோனாபட்டு 29. சிறாவயல் 30. சிறுகூடற்பட்டி 31. உ. சிறுவயல் 32. சொக்கலிங்கம் புதூர் 33. தேவகோட்டை 34. தேனிபட்டி 35. நடராசபுரம் 36. நற்சாந்துபட்டி 37. நாச்சியாபுரம் 38. நாட்டரசன் கோட்டை 39. நெற்குப்பை 40. நேமத்தான்பட்டி



வைரவன் கோவில்

இக்கோவில் நகரத்தார் பிள்ளை கூட்டும் பொழுது தத்தம் உட்பிரிவு வகுப்புக்களில் இருந்தே கூட்டிக்கொள்ளுகின்றனர். ஆனால் திருமணம் செய்யும் பொழுது வைரவன் கோவிலை ஒரே கோவிலாகக் கருதுவதால் இவர்கள் இளையாத்தங்குடி, மாத்தூர்க் கோவிலாரைப்போல ஒரு உட்பிரிவினர் மற்ற உட்பிரிவினரோடு திருமண சம்பந்தம் செய்து கொள்வதில்லை.

41. பலவான்குடி 42. பள்ளத்தூர் 43. பனங்குடி 44. பனையப்பட்டி 45. பாகனேரி 46. புதுப்பட்டி 47. புதுவயல் 48. பூலாங்குறிச்சி 49. மகிபாலன் பட்டி 50. மதகுபட்டி 51. மானகிரி 52. ஆ. முத்துப் பட்டணம் 53. மேலைச்சிவபுரி 54. வலையபட்டி 55. விராமதி 56. விரையாச்சிலை 57. வெற்றியூர் 58. வேந்தன்பட்டி ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்தம் 5469 புள்ளிகள்.

Koviloor Digital Library

இத்திருக்கோவிலில் அமர்ந்தருள் செய்யும்
இறைவன் : வளரொளி நாதர்
இறைவி : வடிவுடையம்மை.

இத்திருக்கோவிலுக்கு 1894, 1907, 1928, 1959, 1982, 1996 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நடைபெற்றுள்ளன.

இக்கோவில் இராசகோபுரத்தின் தென் கிழக்குப் பகுதியில் வெளிப்பிள்ளையார் கோவிலும் வடகிழக்குப் பகுதியில் முப்பலிக் கருப்பர் கோவிலும் கோவிலுக்கு நேர் எதிரே ஓர் ஊருணியும் கோவிலுக்குத் தென்மேற்கே 'வைரவ தீர்த்தம்' என்னும் ஊருணியும் நகரவிடுதியும் கோவிலின் எதிரே நவீனவசதிகள் அனைத்தும் அமைந்த 6 குடில்களும் அமைந்துள்ளன.

1980 ஆம் ஆண்டு வைரவன்கோவில் புள்ளிகள் அனைவரையும் பேரவை உறுப்பினராகக் கொண்ட வைரவன் கோவில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கம் அமைக்கப் பெற்றது. அச்சங்கத்தில் செயற்குழு மற்றும் உபகுழுவினர் மூன்றாண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப் பெறுகின்றனர். இவர்களே திருக்கோவில் நிருவாகத்தைக் கவனித்து வருகின்றனர்.

இக்கோவிலைப்பற்றிச் சேந்தங்குடி நடராச கவிராயர் வைரவன் கோவில் புராணம், 'வடிவுடையம்மை பிள்ளைத் தமிழ்' ஆகிய நூல்களை எழுதியுள்ளார். மற்ற திருக்கோவில்களில் அம்மன் சன்னதி அமைந்துள்ள இடத்தில் இங்கு வைரவர் சன்னதியும் அதை அடுத்து அம்மன் சன்னதியும் அமைந்துள்ளன. இக்கோவில் திருச்சுற்றின் வட மேற்கில் அமைந்துள்ள சண்டிகேசுவரர் சிற்றாலயம் தனிச் சிறப்புடையது. இது மகாபலிபுரத்தில் உள்ளது போல ஒற்றைக் கற்றளிக் கோவிலாகும். இவ்வூருக்கு அருகே உள்ள வைரவன்பட்டி மலையிலிருந்து ஏறத்தாழ 20 டன் எடையுள்ள பெருங்கல்லை வெட்டி எடுத்து வந்து அதனைக் குடைந்து சிற்றாலயம் ஆக்கியுள்ளனர். அந்தக் கல் எடுக்கப்பட்ட இடத்தில் ஏற்பட்ட பள்ளத்திற்கு இன்றும் சண்டிகேசுவரர் பள்ளம் என்ற பெயர் வழங்கி வருகிறது.

இக்கோவிலின் தல விருட்சம் ஏறழிஞ்சி மரம் ஆகும். எனவே வடதிசைத் திருச்சுற்றில் அழிஞ்சி மரத்தின் கற்சிற்பம் வழிபாட்டுக்குரியதாக அமைந்திருக்கிறது. வைரவர் சன்னதிக்கு முன்பாகத் தெய்யனாஞ் செட்டியாரின் (தெய்வநாயகஞ் செட்டியார்) சதாசேவைச் சிற்பம் அமைந்துள்ளது.

கொடிமரத்திற்கு எதிரே உள்ள முதல் திருச்சுற்றில் வடமேற்கூரையில் வைரவன் கோவில் தலபுராண ஓவியங்கள் 37 தொடர் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. தென்மேற் கூரையில் இராமன் பிறப்பு முதல் அனுமன் சீதையைக் காண்பது வரையான 43 இராமாயணக்காட்சி ஓவியங்கள் தொடர் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. நகர விடுதியின் மையமண்டபத்தில் மேல்மாடங்களில் தசாவதாரக் காட்சிகளும் மகாபாரதக் காட்சிகளும் அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பெற்றுள்ளன.

சம்பா சஷ்டி விழா திருக்கார்த்திகையன்று தொடங்கி 21 நாட்கள் சிறப்பாக நடைபெறும். விழா நிறைவுநாள் நகரத்தார்களுக்கேயுரிய பிள்ளையார் நோன்புத் திருநாள் ஆகும். அன்று இக்கோவில் நகரவிடுதியில் வரும் நகரத்தார் அனைவருக்கும் இழையெடுத்துக் கொடுத்து விருந்தளிப்பது வழக்கம். நகரக்கோவில்களில் பிள்ளையார் நோன்பு இங்கு மட்டுமே சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

வைரவன்பட்டிக் கோவில் நிருவாகத்திற்காக அமைக்கப்பட்ட வைரவன்கோவில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கம் இக்கோவிலைச் சேர்ந்த நகரத்தார் மாணவர்களுக்குப் பள்ளி, கல்லூரிக் கட்டணம் கட்டுதல், பாடநூல்கள் வாங்க நிதி உதவி செய்தல் ஆகியவற்றோடு விடுதியில் தங்கி உணவுண்டு தங்கள் கல்லூரிக் கல்வியைத் தொடரவும் வாய்ப்பளிக்கின்றது. காரைக்குடி, திருப்புத்தூர்க் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அவர்களுக்குச் சங்கமே போக்குவரத்துக் கட்டணமும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

ஜெயங்கொண்டான், க., (14-1-1939)

நேமங்கோவில்
மேலைச்சிவபுரி
எழுத்தாளர்

எம்.ஏ. பட்டம் பெற்ற இவர் 1962இல் சென்னை வானொலியில் தமிழ் அறிவிப்பாளராகப் பணிதொடங்கினார். நல்ல குரல்வளம் மிக்க இவர் சிறந்த ஒலிபரப்பாளர், தேர்ந்த வர்ணனையாளர். வானொலியில் நூற்றுக்கும் மேற்பட்ட உரைச்சித்திரங்கள் சிறுகதைகள் நாடகங்கள் எழுதி ஒலிபரப்பி யிருக்கின்றார். தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் செய்திப்படங்களில் பதினைந்து ஆண்டுகட்கு மேலாக வர்ணனையாளராகப் பணியாற்றியுள்ளார். இந்திய வானொலி அறிவிப்பாளர் கழகத்தின் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி கிளையின் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

Koviloor Digital Library

குழந்தைகட்கான நூல்கள் பலவற்றையும் நாடகங்களையும் எழுதி நூலாக வெளியிட்டுள்ள இவர் பொற்காசு என்னும் நூலுக்கு 1976இல் ஏவிஎம் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். வானொலி, மேடை நாடகங்களில் நடித்துள்ள இவர் ஏறத்தாழ 75 திரைப்படங்களிலும் நடித்துள்ளார். மணமகளே வா போன்ற சில திரைப்படங்களுக்கு இணை இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். இவர் திருவான்மியூர் நகரத்தார் சங்கத் தலைவராகவும் தொண்டு செய்துள்ளார்.

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் (மானேஜிங் சொசைடி) மேலாண்மைக் கழகம்

சிவபெருமானிடத்து ஆழ்ந்த பக்தி கொண்ட நகரத்தார்கள் கல்கத்தாவில் பெரும் அளவில் வணிகம் செய்து வந்தனர். 1801 முதல் அரிசி முதலிய பொருள்களை ஏற்றுமதி செய்து வணிகம் பெருக்கிச் செல்வ வளத்தோடும் செல்வாக் கோடும் திகழ்ந்தனர். கப்பல் கம்பனிகள் நகரத்தார்களுக்கு ஆண்டு இறுதியில் கப்பல் கேள்வித்தொகையில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுத்தனர். இவ்வாறு கிடைத்த ரிபேட் தொகையைப் பொதுநிதியாக வைத்திருந்து காசியில் தருமத்திற்குச் செலவிடுவதென்று கல்கத்தா நகரத்தார் முடிவு செய்தனர்.

தம் வாழ்நாளில் காசி சென்று வழிபட்டு வருவதை நகரத்தார் வாழ்வின் புனிதப் பணியாகக் கருதுகின்றனர். இராமேசுவரத்தி லிருந்து கோடித்தீர்த்தம் எடுத்துக்கொண்டு நகரத்தார் ஆண்களும் பெண்களும் காசிக்குச் சென்று விசுவநாதருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டு வருவது வழக்கம். அந்நாளில் காசிப்பயணம் கடுமையானதாக இருந்தது. ஆகவே பலர் சேர்ந்து காசியாத்திரையை மேற்கொள்வதும் கூடியவரை சிவராத்திரியன்று காசியில் இருக்குமாறு பயணம் அமைத்துக் கொள்வதும் நகரத்தார்களின் வழக்கமாக இருந்து வந்தது.

இவ்வாறு வரும் நகரத்தாருக்கு உதவும் வகையிலும், தாங்களும் சிவராத்திரியன்று விசுவநாதருக்கு அபிஷேகம் செய்து வழிபடும் வகையிலும் கல்கத்தா நகரத்தார்கள் காசியில் அறம் செய்ய முடிவு செய்தனர். தொடக்கத்தில் குமரகுருபரர் மடத்தில் சில காலமும் பின்னர் தற்காலிகமாக வேறு ஓர் இடத்திலும் இருந்து கொண்டு கல்கத்தா நகரத்தார்கள் சிவராத்திரி போன்ற திருவிழாக்களில் விசுவேசுவரருக்கு அபிஷேகங்கள் நடத்தவும் ஏழைகளுக்கு அமுது படைக்கவும் ஏற்பாடு செய்கனர்.

இவ்வாறு 50 ஆண்டுகள் அபிஷேகம் அன்னதானம் முதலியன நடைபெற்றன. பின்னர் இந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடம் விலைக்கு வாங்கப்பெற்றது. 1863இல் ருத்ரோத்காரி ஆவணி 10ஆம் நாளில் அந்த மடம் சில பகுதிகள் புதுப்பிக்கப்பெற்றும் பெரும்பகுதி புதிதாகக் கட்டப்பெற்றும் நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் என்ற பெயரில் தொடங்கப் பெற்றது. அன்றுமுதல் விடுதியிலுள்ள விசுவேசுவரர், விசாலாட்சி, அன்னபூரணி, துண்டிவிநாயகர், காலபைரவர் ஆகிய மூர்த்திகளுக்கு நாள்தோறும் பூசைகள் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றன. சத்திரத்தின் முக்கியப் பணிகளுள் ஒன்றாக நாள்தோறும் அன்னதானம் செய்யப் பெறுகிறது. 24-8-1868 முதல் விசுவேசுவரருக்குத் திருவனந்தல் உச்சிக்காலம் அர்த்தசாமம் ஆகிய முக்காலப் பூசைகளுக்குரிய பொருள் அனைத்தும் காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்திலிருந்து நாள்தோறும் அனுப்பப் பெறுகின்றன. இதனைச் சம்போ கொண்டு போதல் என்பர்.

கல்கத்தாவில் வணிகம் புரிந்த நகரத்தார்களின் செல்வவளம் பெருகப் பெருக அவர்கள் மேற்கொண்ட அறப்பணிகளும் விரிவடை யலாயின. கல்கத்தா, காளிகாட், பிரயாகை, அயோத்தி, கயை, தாடகேசுவரம், கோதாவரி ஆகிய தலங்களில் கட்டிடங்கள் கட்டி அங்கேயுள்ள சத்திரங்கள் நன்கு நடைபெறவும் மூர்த்திகளைப் பிரதிட்டை செய்யவும் பூசை முதலிய தெய்வப் பணிகள் செம்மையாய் நடைபெறவும் மூலதனம் வைத்தனர். இதே காலத்தில் பம்பாய் நகரத்தார்கள் நாசிக் பஞ்சவடியில் சத்திரங்கள் நிறுவி தண்டாயுதபாணி திருவுருவத்தைப் பிரதிட்டை செய்தனர். நாசிக் பஞ்சவடி சத்திரம் பம்பாய் நகரத்தார்களின் மேற்பார்வையிலும் மற்ற சத்திரங்கள் கல்கத்தா நகரத்தார்களின் மேற்பார்வையிலும் இயங்கி வந்தன.

காலப் போக்கில் கல்கத்தாவில் நகரத்தார்களின் கடைகள் எண்ணிக்கையில் குறைந்தன. பல கடைகள் கல்கத்தாவிலிருந்து இரங்கூனுக்கு மாற்றப் பெற்றன. கடல்கடந்து சென்றாலும் காசி விசுவேசுவரரை அவர்கள் மறக்கவில்லை. 1925ஆம் ஆண்டுக்குப் பின் இரங்கூன் நகரத்தார்கள் காசிச் சத்திரத்திற்கு மகமை எழுதினர். பிறகு இரங்கூன் நகரத்தார்களுடைய மேற்பார்வையில் காசி முதலிய சத்திரங்களின் ஆட்சி நடைபெறத் தொடங்கியது. இந்த ஆட்சிமுறை இன்னும்

Koviloor Digital Library

சிறப்பாக விளங்குவதற்காக 1934ஆம் ஆண்டில் இரங்கூன் நகரத்தார்கள் கூடி ஒரு 'சொசைடி'யை உருவாக்கினர்.

10–9–1934இல் பவ ஆண்டு ஆவணி 25ம் தேதி 'ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைடி' இரங்கூன் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பெற்றது. அப்போது வெளியிடப்பெற்ற தொடக்க அறிக்கை இக்கழகத்தின் குறிக்கோள்களைத் தெளிவாகக் கூறுகிறது.

ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர நிர்வாக சபையின் 'மெமோராண்டம் ஆப் அசோசியேசன்' என்னும் தொடக்க அறிக்கை

1. இச்சபை ''ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர நிர்வாக சபை'' என்றழைக்கப்படும்.

2. இதன்பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இரங்கூன் மொகல்வீதி 74ஆவது இலக்கமிட்ட கட்டிடத்திலுள்ள பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கக் காரியாலயத்தில் இருக்கும்.

3. சபையின் நோக்கங்கள் :

(எ) இந்தியாவிலும் பர்மாவிலும் காசி நகரச் சத்திர ஸ்தாபனங்கள் என்று வழங்கப்பட்டு காசி, அயோத்தி, கயா, பிரயாகை, தாடகேச்சுவரம், கோதாவரி முதலிய ஸ்தலங்களில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் தர்ம ஸ்தாபனங்களைக் கண்காணித்து நடப்பித்துப் பராமரித்து வருதல்.

(பி) வட இந்தியாவுக்கு யாத்திரையாகச் செல்லும் எல்லா நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கும் வேண்டிய சௌகரியங் களைச் செய்து கொடுத்தல்; காசியிலுள்ள ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரர் கோயிலிலும் மேற்கண்ட ஊர்களில் இருக்கும் தேவாலயங்களிலும் தினசரி பூசை மற்றும் மத சம்பந்தமான காரியங்களை நடத்துதல்; அல்லது நடத்தி வைத்தல்.

(சி) வட இந்தியாவிற்கு யாத்திரையாகப் போகும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு அன்னவர்களால் ஏற்படுத்தப்பட்ட இடங்களிலும் சத்திரங்களிலும் விடுதி கொடுத்து வசதிகள் செய்து கொடுத்தல்.

(டி) நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சார்பாகச் சகல சடங்குகளையும் கிரியைகளையும் நடத்தி வைத்தலும் அன்னவர்களுக்கு வட இந்தியாவில் இருந்தும் வேறு இடங்களிலிருந்தும் அவ்விதமான சடங்குகளுக்கு சம்பந்தப்பட்ட எல்லாப் பொருளையும் வஸ்துக்களையும் அனுப்புதலும்.

(இ) ஸ்ரீ காசி நகரச் சத்திரத்திற்காக அதன் நிர்வாகத்திற்கும் அதை நீடித்து நடத்துவதற்கும் அல்லது மேற்கொண்டு சொத்தைச் சம்பாதிப்பதற்கும் வேண்டிய நிதி அல்லது மூலதனம் நன்கொடை வகையராவைப் பொதுவாக வசூல் செய்தலும் சிறப்பாக எல்லா இடங்களிலுமுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார் கடைகளிடம் இருந்தும் தனி நபர்களிடம் இருந்தும் குறிப்பிட்ட விகிதங்கள் பிரகாரம் மகமையை வசூல் செய்தலும் அவ்விதம் கிடைக்கும் பணங்களைத் தகுந்த முறையில் வட்டிக்குப் போட்டு வைத்தலும்

(எப்) ஸ்ரீ காசி நகரச் சத்திரத்தின் சொத்துக்களைக் காரியக்கமிட்டியோ பொதுச் சபையோ தீர்மானம் செய்தால் விற்கலாம்.

மேலும் அவ்வறிக்கையில் தலைவர், உபதலைவர், காரியதரிசி, 4 உறுப்பினர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இரங்கூன் நகரத்தார்கள் தண்டாயுதபாணி கோயிலுக்குத் தைப்பூச் மகமை எழுதி வருவதோடு காசிச் சத்திரத்துக்கு ரூ. 1000க்கு அரைக்கால் (1/8) வீதம் ஆண்டுதோறும் மகமை எழுதி வருவ தென்றும், பர்மாவில் நாட்டுப்புறங்களில் உள்ள நகரத்தார்களை ரூ. 1000க்கு வீசம் (1/16) வீதம் மகமை எழுதச் செய்வதென்றும் தீர்மானித்தனர்.

நகரத்தார் பலருடைய வேண்டுகோளுக் கிணங்க நிருவாக சபையார் நாசிக் பஞ்சவடி நகரச் சத்திரம் கார்த்திகைச் சுவாமி கோவில் ஆகியவற்றையும் ஒப்புக்கொண்டு 1940 முதல் நடத்திவருகிறார்கள்.

1942இல் பர்மா ஜப்பானியர் ஆட்சிக் குட்பட்டபோது இந்தியாவில் இருந்த நகரத்தார்கள் சபையையும் சத்திரங்களையும் பணம் அனுப்பிப் பாதுகாத்து நடத்தினர்.

போர் முடிவுற்ற பிறகு 8–6–1953இல் இரங்கூன் நகரத்தார்கள் கூடித் தலைவர் செயலர் இதர உறுப்பினர்களைத் தேர்வுசெய்து மீண்டும் செயல்படத் தொடங்கினர். மலாயா, சிங்கப்பூர் நாடுகளில் நன்கொடை திரட்டி நிதி பெருக்கினர். 1955இல் காசியிலுள்ள கட்டிடங்கள் பழுதுபார்த்துப் புதுப்பிக்கப் பெற்றன. 7–11–60இல் இந்தியாவில் மேலாண்மைக் கழகத்தைப் பதிவு செய்வதென முடிவு செய்தனர். 11–2–62இல் காசி நகரேசுவரர் கோவில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. மீண்டும் 1994இல் அண்மையில் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

Koviloor Digital Library

இந்தியாவில் பதிவுசெய்யப்பட்ட பிறகு செட்டிநாட்டின் ஒவ்வொரு ஊரிலும் 200 புள்ளிகளுக்கு ஒருவர் வீதம் பொதுக்குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவோர் கோவிலூரில் கூடித் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். மூன்றாண்டுகட்கு ஒருமுறை இத்தேர்தல் நிகழ்கின்றது. பொதுக்குழுவில் வரவு செலவுத் திட்டம் நகரத்தார்கள் பார்வைக்கு வைக்கப் பெறுகின்றது. சென்னை பவளக்காரத் தெருவிலுள்ள ரெங்கோன் நகரவிடுதி, காரைக்குடியிலுள்ள நகரவிடுதி ஆகியவற்றை இக்குழு நிருவகித்து வருகிறது.

நாள்தோறும் பயன்படாத சில பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த பெருந்தொகையை வைப்புத் தொகையாக வைத்து அதனின்று வரும் வருமானத்தில் நகரத்தார் பெண்கள் திருமணத்திற்கு 3500 ரூபாயும், மாணவர் கல்விக்கு நிதி உதவியும் வழங்கி வருகின்றனர். உருவாக்கிய சான்றோரின் உயர்ந்த உள்ளத்திற் கேற்ப ஆல்போல் தழைத்து மேலாண்மைக் கழகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

ஸ்ரீ சாரதா சேவாசிரமம்

ஸ்ரீ சாரதாமணி தேவியார், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியோரின் இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு, மகளிருக்காக, ஸ்ரீ சாரதா சேவாசிரமம் என்ற அமைப்பு பள்ளத்தூரில் 1977 இல் தொடங்கப்பெற்றது. இதன் நிறுவுநர் பள்ளத்தூர், இரணிக் கோவிலைச் சேர்ந்த மு.அ. பழநியப்ப செட்டியார். தொடக்கத்திலிருந்து ஆசிரமத்திற்குரிய முழுச் செலவும், பழநியப்ப செட்டியாரும், அவர் மக்களும் தங்கள் அறநிலையத்திலிருந்து அளித்த நன்கொடையினாலேயே நடைபெற்றன. இவ்வகையில் அவர்கள் அளித்த நன்கொடை ரூபாய் பதின்மூன்று இலட்சங்களாகும்.

பள்ளத்தூர் அ.மு. தெருவில், சொந்தக் கட்டிடத்தில் தொடங்கப்பெற்ற ஆசிரமத்தின் நோக்கங்கள், மகளிரை வாழ்வாங்கு வாழ வைத்தலும், கைத்தொழில்களைக் கற்பித்தலும், சேவை மனப்பான்மையை ஊட்டிச் சேவையில் ஈடுபடுத்துதலும் ஆகும். மேற்படிப்பிற்குச் செல்ல இயலாத கன்னியர்க்கும், கணவனால் கைவிடப் பெற்றோருக்கும், உறுப்புக் குறைபட்டவர்கட்கும், இளம் கைம்பெண்கட்கும் ஆசிரமம் புகலிடமாக உள்ளது. அவர்களுக்கு அச்சுவேலை, நூல் நூற்றல், துணி நெய்தல், அப்பளம் செய்தல், சோப்பு செய்தல் முதலியவற்றில் பயிற்சி அளித்து வந்தது.

சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பாவுக்குச் சொந்தமான அமராவதிபுதூர் மகளிர் இல்லம் அறநிலையை ஆசிரமம் 8–10–1986 இல் ஏற்றுக் கொண்டு, தம் தலைமை அலுவலகத்தை அ.புதூருக்கு மாற்றியது.

அன்னை சாரதா தேவியார் பிறந்த ஊரான, மேற்கு வங்கத்தில் உள்ள ஜெயராம்பாடி சிற்றூரில் அமைந்திருக்கும் 'மாத்திர்மந்திர்' போல, அதே அளவிலும், அமைப்பிலும், இந்த ஆசிரம வளாகத்தில் அன்னைக்கு ஆலயம் ஒன்றை எழுப்பத் திட்டமிட்டார், ஆசிரமம் தொடங்கியதிலிருந்து, அதன் செயலாளராகப் பணியாற்றும், பள்ளத்தூரைச் சேர்ந்த வைரவன் கோவில் நகரத்தார் பழ.லெ. பழநியப்ப செட்டியார்.

அவரும், அவர்தம் குடும்பத்தாரும் கொடுத்த நன்கொடை ரூபாய் எட்டு இலட்சத்தில் 'சாரதாமந்திர்' என்ற பெயரில் அந்த ஆலயம் கட்டப் பெற்று 5–5–1992 இல் நிறைவெய்தியது.

'ஸ்ரீ சாரதா பாலமந்திர்' என்ற பெயரில் ஆங்கில மழலையர் பள்ளி ஒன்று ஆசிரமத்தால் 20–10–1987 இல் தொடங்கப்பெற்றது. 1993 இல் இது ''ஸ்ரீ சாரதா வித்யாலயா மெட்ரிகுலேசன் பள்ளி' எனப்பெயர் மாற்றம் செய்யப் பெற்று நடத்தப்பெற்று வருகிறது.

நூற்பு நெசவுப் பிரிவுகள், தீப்பெட்டிப் பிரிவு, அப்பளப் பிரிவு, சோப்பு உற்பத்திப் பிரிவு ஆகிய உற்பத்திப் பிரிவுகள் வருவாய்ச் சிறப்போடு நடைபெறாததால், அவற்றை ஆசிரமம், சர்வோதய சங்கங்களிடம் ஒப்படைத்து விட்டது.

மெட்ரிக்குலேசன் பள்ளி, அச்சுப்பள்ளி, ஐ.டி.ஐ., சாரதா மந்திர் ஆகியவை அடங்கிய ஸ்ரீ சாரதா சேவாசிரமத்தின் நிருவாகப் பொறுப்பு, 'சேலம் ஸ்ரீ சாரதா சமிதி'யிடம் 1994 இல் ஒப்படைக்கப் பெற்றது.

புதிய நிருவாகம், ஆசிரம வளாகத்தில் 'ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரி'க்கு 19–8–1996 அன்று அடிக்கல் நாட்டியது. 1997 – 98 கல்வியாண்டில் கல்லூரி தொடங்கப் பெற்றது.

நிருவாகம் மாறினாலும் பழ.லெ. பழநியப்ப செட்டியார் தொடர்ந்து ஆசிரமச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

மகளிர் நலத்திற்காகச் சென்ற தலைமுறையில் சொ. முருகப்பாவினால் தொடங்கப்பெற்ற 'மகளிர் இல்ல' வளாகத்தில், இத்தலைமுறையைச் சேர்ந்த மு.அ. பழநியப்ப செட்டியாரால் நிறுவப் பெற்ற ஸ்ரீ சாரதா சேவாசிரமம் நிலைபெற்று மகளிர் மேம்பாட்டைச் செயற்படுத்தி வருகிறது.

Koviloor Digital Library

ஸ்ரீ சேவுகன் - அண்ணாமலை கல்லூரி

திருவையாற்றுத் திருப்பணியால் புகழ்பெற்ற குடும்பத்தில் பிறந்த சேவு. அண்ணாமலை செட்டியார் தமது சொந்த ஊராகிய தேவகோட்டைக்களித்த பெரிய நன்கொடை ஸ்ரீ சேவுகன் – அண்ணாமலை கல்லூரியாகும். கல்வித்துறையில் பின்தங்கியிருந்த தேவகோட்டை வட்டத்தில் இக்கல்லூரி தொடங்கப்பெற்றதால் ஆயிரக்கணக்கான ஏழை எளிய மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்புப் பெற்றுப் பட்டம் பெற்றுள்ளனர்.

ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை அற நிலையத்தின் சார்பில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் கீழ் 1970 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5 ஆம் நாள் இக்கல்லூரி தொடங்கப்பெற்றது. அமைச்சர் செ. மாதவன் தலைமையில் அமைச்சர் நெடுஞ்செழியன் இக்கல்லூரியைத் தொடங்கிவைத்தார். தொடக்கத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிய கல்லூரி 1972 ஜூலை 12 ஆம் நாள் இப்போது கல்லூரி அமைந்துள்ள பரந்துவிரிந்த வளாகத்தில் கட்டப்பெற்ற சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றப்பெற்றது. காரைக்குடியிலிருந்து தேவகோட்டை செல்லும் சாலையில் ஊரின் நுழைவாயிலில் வலதுபுறம் செல்லும் கிளைச்சாலையில் இக்கல்லூரி அமைந்துள்ளது. கிளைச்சாலைத் தொடக்கத்தில் நிறுவுநர் மணிவிழா நினைவு வளைவு கல்லூரிப் பெயர்தாங்கிப் பொலிவுடன் நிற்கின்றது.

இக்கல்லூரியில் தமிழ் இலக்கியம், ஆங்கில இலக்கியம், பொருளியல் ஆகிய பி.ஏ. பட்டப்படிப்பு வகுப்புக்களும் கணிதம், விலங்கியல், வேதியியல், இயற்பியல், கணிப்பொறியியல் ஆகிய பி.எஸ்சி அறிவியல் பட்ட வகுப்புக்களும் பி.காம் வணிகவியல் பட்டப்படிப்பு வகுப்பும் உள்ளன. இதழியல், காந்தியச் சிந்தனை சான்றிதழ், பட்டயப்படிப்பும் பகுதி நேரமாகக் கற்பிக்கப் பெறுகின்றன. இருபாலாரும் இக்கல்லூரியில் பயில்கின்றனர் 1995 இல் இக்கல்லூரி வெள்ளிவிழாவைக் கொண்டாடியது.

ஸ்ரீ விசுவேசுவரர் முதியோர் இல்லம்

திருச்சி நகரத்தார் சங்கம் கோவிலூர்த் திருமடத்தின் துணையோடு நகரத்தார் சமூகத்தில் வயது முதிர்ந்தவர்களைப் பராமரிப்பதற்காக உருவாக்கிய அமைப்பு. 14–7–1991 இல் காரைக்குடியில் கோவிலூர் மடாதிபதி காசிவிசுவநாத ஞானதேசிகர் இவ்வில்லத்தைத் தொடங்கி வைத்தார். 6–10–1991 முதல் நிருவாக வசதிகட்காக இவ்வில்லம் திருச்சிக்கு மாற்றப் பெற்றது. இவ்வில்லத்தின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளப் பெருமளவில் முதியோர்கள் முன்வராததால் இவ்வமைப்பு எதிர்பார்த்த அளவு வளர்ச்சி பெறவில்லை.

ஸ்ரீ விசுவேசுவரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

28–1–1985 இல் சென்னையில் நகரத்தார் பெருமக்கள் கூடிச் செட்டிநாட்டுப் பகுதியில் நகரத்தார் நிருவாகத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றும் மருத்துவமனை ஒன்றும் அமைக்க முடிவெடுத்தனர். அதற்காக ஸ்ரீ விசுவேசுவரர் அறக்கட்டளை என்ற அமைப்பொன்றை நிறுவினர். திட்டத்தின் முதல்கட்டமாகக் கோட்டையூர் அ.க.அ.சித.அழ. சிதம்பரஞ் செட்டியார் நன்கொடையாக வழங்கிய நாற்பது ஏக்கர் நிலத்தில் மருத்துவமனை அமைக்கப் பெற்றது. காரைக்குடியிலிருந்து திருச்சி செல்லும் புறவழிச் சாலையில் கோட்டையூர் தொடர் வண்டி நிலையத்திற்கு அருகில் இம்மருத்துவ மனை அமைந்துள்ளது. அனைத்து நவீன மருத்துவ வசதிகளையும் கொண்ட இந்த மருத்துவமனையை நடத்திவரும் அறக்கட்டளை எதிர்காலத்தில் விசுவேசுவரா மருத்துவக் கல்லூரியையும் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

Koviloor Digital Library

பிற்சேர்க்கை

நாகப்பன், அரு. (11-4-1946)

இரணிக்கோவில்
கடியாபட்டி
வங்கியாளர்

அரு.நா. அருணாசலம் செட்டியார் – மங்களம் ஆச்சியின் மகன். அழகப்பா கல்லூரியில் பிஎஸ்சி. பட்டம் பெற்றபின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று எம்எஸ்சி. பட்டம் பெற்றார். இந்தியன் வங்கியில் பயிற்சி நிலை அதிகாரியாகத் தேர்வு பெற்று 1970இல் அவ்வங்கியில் சேர்ந்தார். பல்வேறு பதவிகளில் பணியாற்றி, படிப்படியாக உயர்ந்து இப்போது வங்கியின் தலைமை மேலாளராக விளங்குகிறார்.

கல்கத்தா, கௌஹாத்தி, மும்பை முதலிய நகரங்களில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி, நிர்வாக அனுபவம் பெற்று, தமது கடுமையான உழைப்பினால் உயர்ந்தவர். அங்கெல்லாம் வங்கியின் சீர்மைக்கும் செழுமைக்கும் தம் பங்களிப்பை நல்கியவர்.

வங்கிப் பணி குறித்து உயர்கல்விக்கும் பயிற்சிக்குமாக இவர் சிங்கப்பூர் மற்றும் பல அரேபிய, ஆப்பிரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று பயண அனுபவங்கள் பெற்றவர்.

அடக்கமானவர், எளிமையானவர், பல்வகை சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றுக்கு எளிதாகத் தீர்வு காண்பதில் வல்லவர்.

நகரத்தார்களின் பெருமுயற்சியாலும் முதலீட்டாலும் தோற்றுவிக்கப்பட்ட இந்தியன் வங்கியில் வழிவழியாக நகரத்தார் பெற்ற தலைமைச் சிறப்பைத் தம் உழைப்பாலும் நேர்மைக் குணத்தாலும் இவர் பெற்று உயர்ந்துள்ளார்.

விசுவநாதன், அ. (29-5-1947)

இலுப்பைக்குடி
கோனாபட்டு
வங்கியாளர்

திருப்பணி, அறப்பணி, தமிழ்க்கல்வி முதலியவற்றில் சிறந்து விளங்கும் குடும்பத்தில், பெ.சித.வி. அண்ணாமலை செட்டியார் – அலமேலு ஆச்சியின் மகனாகப் பிறந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் பி.ஈ. பட்டம் பெற்ற இவர் 1970 இல் இந்தியன் வங்கிப் பணியில் சேர்ந்தார். கடந்த 28 ஆண்டுகளில் பல்வேறு நிலைகளில் பல ஊர்களிலும் பணியாற்றி இப்போது இந்த் பாங்க் ஹவுசிங் லிட்–இல் நிர்வாக இயக்குநராக உயர்ந்துள்ளார்.

பெருகிவரும் வீட்டுத் தேவைகளைக் கருதி, பொதுமக்களுக்கு எளிய வகையில் நிதி உதவும் இந்த நிறுவனத்தின் தலைவராக இவர் சிறப்புடன் பணியாற்றுகிறார்.

இலண்டனில் பிராட்போர்ட் பல்கலைக் கழகத்தில் வங்கியியல் குறித்து சிறப்புப் பயிற்சி பெற்ற இவர் அமெரிக்கா சென்று அங்கு வாழும் இந்தியர்களிடம் இந்தியன் வங்கியின் சிறப்புத் திட்டங்களை விளக்கிக் கூறி, தாயகத்தில் தொழில்கள் தொடங்க வலியுறுத்தினார். பலரோடும் கலந்து பழகும் பண்பினால் இவர் வங்கிக்குப் பல வழிகளிலும் சிறப்புச் சேர்த்துள்ளார்.

சுழற்கழகத்திலும் ஈடுபாடு உடையவர். சென்னை பல்லவா சுழற்கழகத்தில் தலைவராகவும் (1996–1997) அதன்பின் அக்கழகத்தின் பிறஉயர் பதவிகளிலும் பணியாற்றியுள்ளார்.

முயற்சி திருவினையாக்கும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுடைய இவர் படிப்படியாக உயர்ந்து இன்று உயர்பதவி ஏற்றுள்ளார்.

திருநாவுக்கரசு, மெ., (1923 - 1995)

மாத்தூர் - மண்ணூர்
வேந்தன்பட்டி
தமிழ் பரப்புநர்

காங்கிரஸ் கட்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த மெய்யப்ப செட்டியாரின் மகன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்ற இவர் கண்டனூர் சிட்டாள் ஆச்சி நினைவு உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். மொழிப் பற்றுமிக்க இவர், மாணவர் உள்ளங்கவர்ந்த நல்லாசிரியராக விளங்கினார் 'இமயத்தின் எல்லை கண்ட எந்தமிழ் என்றும் வாழ்க' என்ற முழக்கத்தை எழுப்பி எங்கும் பரப்பினார். செந்நாப் புலவரான இவரிடம் பயின்ற மாணவர்கள் பின்னாளில் உயர் பதவிகள் எய்தினர்.

இவர் பிறகு மலேசியா சென்று வானொலி நிலையத்தில் உயர் பதவி ஏற்றபோது சைவத்தையும் தமிழையும் பரப்புவதில் முழுக்கவனம் செலுத்தினார். அலை கடலுக்கு அப்பாலும் தமிழோசை பரவ வழி வகுத்தார். முக்கியமாக, திருக்குறளை மலைநாடு முழுவதும் பல ஆண்டுகள் இடையறாது பரப்பிய பெருமை இவருக்கு உண்டு. பிறகு சிங்கப்பூர் வானொலியிலும் பணியாற்றினார். அதன்பின் சிங்கப்பூர் அரசின் பண்பாட்டு மையத்தின் செயலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

Koviloor Digital Library

இளமை முதற்கொண்டு மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரை வழிகாட்டியாகக் கொண்டிருந்தார். காந்திய வழியில் வாழ்க்கை நடத்தி, சைவத்திற்கும் தமிழுக்கும் இவர் ஆற்றிய பணிகளுக்காக சிங்கப்பூர்த் தமிழர்கள் இவருக்குத் 'தமிழ்ச் சான்றோர்' எனப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர்.

கண்ணப்பன், மா. (25-5-1938)

மாத்தூர் - அரும்பாக்கூர்
காரைக்குடி
கவிஞர்

புகழ்பெற்ற முத்துவிலாஸ் குடும்பத்தில் சி.ப.சித. மாணிக்கம் செட்டியார் – உமையாள் ஆச்சியின் மகனாகப் பிறந்தார்.

பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்ற இவர் காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார். மிகுந்த நகைச்சுவையுடன் சொற்பொழிவாற்ற வல்லவர். பல நூல்களின் ஆசிரியர். அவற்றுள் 'குட்டி' என்னும் நூல் பலராலும் பாராட்டப்படுகிறது. இந்நூல் வட்டார இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் தனிப்பண்பு கொண்டது. தமிழிசைப் பாமாலை, குழந்தைப் பாடல்கள் என்பன பிறநூல்கள். நல்லாசிரியராய், நல்ல கவிஞராய், நல்ல சொற்பொழிவாளராய், நல்ல நண்பராய் விளங்குபவர்.

கண்ணதாசனின் பற்றாளரான இவரை அக்கவியரசர் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

மலேசியாவுக்குப் பலமுறை பயணம் செய்து அனுபவம் பெற்றுத் திரும்பியுள்ள இவர், புதுக்கோட்டையில் மான்டிசோரி பள்ளி தொடங்கிச் சிறந்த முறையில் நடத்தி வருகிறார்.

நகரத்தாரின் பெருமை

உலகமெலாம் நகரத்தார் செய்தசேவை
உயர்கோயில் எழுப்பியது மட்டும்அன்று
இலகுதமிழ் மென்மேலும் ஓங்கச்செய்தார்
இணையிலாக் கல்விக்கே அடிக்கல்லானார்
மலையளவு பொருள்தந்தார் அறத்தைக்காக்க
மக்களைப்போல் கடவுளுக்கும் பங்குவைத்தார்
நிலையுயர்ந்து நின்றவர்கள் இன்றுதாழ்ந்தார்
நேரத்தால் மறுபடியும் எழுந்துநிற்பார்
காளத்தி தன்னிலவர் அறம்தொடங்கி
கன்னியா குமரிவரை தொடர்ந்து செல்லும்
நாளெத் தனைவென்ற போதும்அன்னார்
நற்பெயரை மனிதகுலம் புகழ்ந்துபாடும்
தாளத்தில் தவறாமல்ந டனம்ஆடி
தனைக்காத்துத் தாய்காக்கும் நகரத்தார்கள்
நீள்சுற்றம் எந்நாளும் நிறைந்துவாழ நீயருள்வாய்
மீனாட்சி நெஞ்சத்தாயே!

கவியரசு கண்ணதாசன்

Koviloor Digital Library

பின்னிணைப்புக்கள்

நகரத்தார்கள் வாழும் ஊர்கள் : தொலைவும் வழியும்

வரிசை எண்	ஊர்	அஞ்சல் குறியீட்டு எண்	காரைக்குடியில் இருந்து தொலைவு	காரைக்குடியிலிருந்து செல்லும் வழி
1.	அமராவதிபுதூர்	630 301	7 கி.மீ	தேவகோட்டைச் சாலையில்
2.	அரண்மனை சிறுவயல்	630 305	26 கி.மீ.	கோவிலூர், மானகிரி, கல்லல் வழியாக
3.	அரிமழம்	622 201	33 கி.மீ.	பள்ளத்தூர், கொத்தமங்கலம் வழியாக
4.	அரியக்குடி	630 202	5 கி.மீ.	தென்கிழக்கில்
5.	அலவாக்கோட்டை	630 564	35 கி.மீ	கோவிலூர், மானகிரி, கல்லல், செம்பனூர், மதகுபட்டி வழியாக
6.	அளகாபுரி (கண்டனூர்)	630 106	10 கி.மீ	கோட்டையூர் வழியாக, அறந்தாங்கிச் சாலையில்
7.	அளகாபுரி (நாட்டரசன்கோட்டை)	630 561	42 கி.மீ.	கோவிலூர், மானகிரி, கல்லல், அரண்மனை சிறுவயல், சாத்தரசன்பட்டி வழியாக நாட்டரசன்கோட்டையை அடைந்து, அங்கிருந்து காளையார்கோவில் சாலையில்
8.	அளகாபுரி (பில்லமங்கலம்)	630 205	24 கி.மீ.	கோவிலூர், பாதரக்குடி, குன்றக்குடி, நேமம் வழியாக
9.	ஆத்தங்குடி	630 101	13 கி.மீ	உ. சிறுவயல், ஆத்தங்குடி முத்துப்பட்டணம் வழியாக.
10.	ஆத்திக்காடு தெற்கூர்	630 201	34 கி.மீ	திருப்புத்தூரை அடைந்து அங்கிருந்து பொன்னமராவதிச் சாலையில்.
11.	ஆவினிப்பட்டி	630 205	30 கி.மீ.	கோவிலூர், பாதரக்குடி, குன்றக்குடி, நேமம், பி. அளகாபுரி, கீழச்சிவல்பட்டி, இளையாத்தங்குடி, வழியாக.
12.	இராங்கியம்	622 409	36 கி.மீ.	கோவிலூர், பாதரக்குடி, குன்றக்குடி, நேமம், பி. அளகாபுரி, கீழச்சிவல்பட்டி, இளையாத்தங்குடி, ஆவினிப்பட்டி, குருவிக் கொண்டான்பட்டி வழியாக.
13.	இராயவரம்	622 506	26 கி.மீ.	பள்ளத்தூர், கொத்தமங்கலம் வழியாக.
14.	இலட்சுமிபுரம் (கொத்தமங்கலம்)	630 105	20 கி.மீ.	பள்ளத்தூரிலிருந்து கிளைச்சாலையில்.
15.	இலட்சுமிபுரம் (வி)	622 412	38 கி.மீ.	திருமயத்தை அடைந்து அங்கிருந்து கிளைச்சாலையில்

Koviloor Digital Library

வரிசை எண்	ஊர்	அஞ்சல் குறியீட்டு எண்	காரைக்குடியில் இருந்து தொலைவு	காரைக்குடியிலிருந்து செல்லும் வழி
16.	உலகம்பட்டி	622 410	54 கி.மீ.	திருப்புத்தூர், நெற்குப்பை, பொன்னமராவதி வழியாக.
17.	ஒக்கூர்	630 557	36 கி.மீ.	கல்லல் வழியாக மதகுபட்டியை அடைந்து அங்கிருந்து சிவகங்கைச் சாலையில்.
18.	கடியாபட்டி	622 505	25 கி.மீ.	பள்ளத்தூர், கொத்தமங்கலம் வழியாக.
19.	கண்டரமாணிக்கம்	630 204	16 கி.மீ.	கல்லல் சாலையில் ஆலங்குடிக்கு அருகே பிரியும் கிளைச் சாலையில்.
20.	கண்டவராயன்பட்டி	630 203	30 கி.மீ.	திருப்புத்தூரை அடைந்து அங்கிருந்து பொன்னமராவதிச் சாலையில்.
21.	கண்டனூர்	630 104	13 கி.மீ.	கோட்டையூர், அளகாபுரி வழியாக அறந்தாங்கிச் சாலையில்
22.	கருங்குளம்	630204	27 கி.மீ.	கல்லல் சாலையில் ஆலங்குடிக்கு அருகே பிரியும் கிளைச் சாலையில் கண்டர மாணிக்கம், பட்டமங்கலம் வழியாக.
23.	கல்லல்	630 305	18 கி.மீ.	கோவிலூர், மானகிரி வழியாக.
24.	கல்லுப்பட்டி	603 306	10 கி.மீ	தேவகோட்டைச் சாலையில் அமராவதி புதூர் தாண்டியதும் வலப்புறம் கிளைச்சாலையில்.
25.	காரைக்குடி	630 001		
26.	காளையார் மங்கலம்	630 557	40 கி.மீ.	கல்லல் வழியாக மதகுபட்டியை அடைந்து அங்கிருந்து சிவகங்கைச் சாலையில் இடப்புறம் கிளைச்சாலையில்.
27.	கானாடுகாத்தான்	630 103	16 கி.மீ.	கோட்டையூர், பள்ளத்தூர் வழியாகத் திருச்சிச் சாலையில்.
28.	கீழச்சிவல்பட்டி	630 205	24 கி.மீ.	கோவிலூர், பாதரக்குடி, குன்றக்குடி, நேமம் வழியாக.
29.	கீழப்பூங்குடி	630 552	40 கி.மீ.	கல்லல், மதகுபட்டி வழியாக ஒக்கூரை அடைந்து அங்கிருந்து மேலூர்ச் சாலையில்.
30.	குருவிக் கொண்டான்பட்டி	622 415	33 கி.மீ.	குன்றக்குடி, நேமம், கீழச்சிவல்பட்டி, ஆவினிப்பட்டி வழியாக.

Koviloor Digital Library

வரிசை எண்	ஊர்	அஞ்சல் குறியீட்டு எண்	காரைக்குடியில் இருந்து தொலைவு	காரைக்குடியிலிருந்து செல்லும் வழி
31.	குழிபிறை	622 402	45 கி.மீ.	திருமயத்தை அடைந்து அங்கிருந்து கிளைச்சாலையில் இலட்சுமிபுரம், விரையாச்சிலை பனையப்பட்டி வழியாக.
32.	கொத்தமங்கலம்	630 105	21 கி.மீ.	பள்ளத்தூர், இலட்சுமிபுரம் வழியாக.
33.	கொப்பனாபட்டி	622 401	55 கி.மீ.	திருப்புத்தூர், பொன்னமராவதி வழியாகப் பொன்னமராவதி புதுக்கோட்டைச் சாலையில்.
34.	கோட்டையூர்	630 106	8 கி.மீ.	திருச்சிச் சாலையில்.
35.	கோனாபட்டு	622 503	15 கி.மீ.	உ. சிறுவயல், ஆ. முத்துப்பட்டணம், ஆத்தங்குடி வழியாக.
36.	சக்கந்தி	630 560	56 கி.மீ.	கல்லல், அ. சிறுவயல், சாத்தரசன்பட்டி, நாட்டரசன்கோட்டை வழியாகச் சிவகங்கையை அடைந்து, அங்கிருந்து மேலூர்ச் சாலையில்.
37.	சண்முகநாதபுரம்	630 314	10 கி.மீ.	தேவகோட்டைச் சாலையில் அமராவதி புதூர் தாண்டிய பிறகு இடப்புறம் கிளைச்சாலையில்
38.	சிறாவயல்	630 214	14 கி.மீ.	மானகிரி வழியாகத் திருப்புத்தூர்ச் சாலையில் நாச்சியாபுரம் விலக்கைத் தாண்டியதும், வலப்புறம் கிளைச்சாலையில்.
39.	சிறுகூடற்பட்டி	630 215	18 கி.மீ.	குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, வைரவன்பட்டி வழியாக.
40.	சிறுவயல் (உய்யக்கொண்டான்)	630 208	5 கி.மீ.	கழனிவாசல் வழியாக வடமேற்கில்.
41.	செம்பனூர்	630 313	27 கி.மீ.	கல்லலை அடைந்து அங்கிருந்து மதகுபட்டிச் சாலையில்.
42.	செவ்வூர்	622 417	40 கி.மீ.	திருப்புத்தூர், கண்டவராயன்பட்டி வழியாக.
43.	சொக்கநாதபுரம்	630 313	32 கி.மீ.	கல்லலை அடைந்து அங்கிருந்து மதகுபட்டிச் சாலையில்.
44.	சொக்கலிங்கம் புதூர்	630 101	9 கி.மீ.	கழனிவாசல், நகர சூரக்குடி வழியாக.
45.	சோழபுரம்	630 553	44 கி.மீ.	கல்லல் வழியாக மதகுபட்டியை அடைந்து அங்கிருந்து சிவகங்கைச் சாலையில்.

Koviloor Digital Library

வரிசை எண்	ஊர்	அஞ்சல் குறியீட்டு எண்	காரைக்குடியில் இருந்து தொலைவு	காரைக்குடியிலிருந்து செல்லும் வழி
46	தாணிச்சாவூருணி	630 314	16 கி.மீ.	காரைக்குடி தேவகோட்டைச் சாலையில் இராம்நகரில் இருந்து கண்டதேவி செல்லும் கிளைச்சாலையில்.
47.	தேவகோட்டை	630 302	16 கி.மீ.	இராமேசுவரம் சாலையில்.
48.	தேனிபட்டி	622 202	32 கி.மீ.	கோட்டையூர், அளகாபுரி, கண்டனூர், புதுவயல் வழியாக.
49.	நடராசபுரம்	630 555	32 கி.மீ.	கல்லல், அ. சிறுவயல், சாத்தரசன்பட்டி, நடராசபுரம் விலக்கு வழியாக.
50.	நற்சாந்துபட்டி	622 404	42 கி.மீ.	திருமயம், வி. இலட்சுமிபுரம் வழியாக.
51.	நாச்சியாபுரம்	630 207	12 கி.மீ.	மானகிரி வழியாகத் திருப்புத்தூர்ச் சாலையில் நாச்சியாபுரம் விலக்கு வழியாக.
52.	நாட்டரசன்கோட்டை	630 556	38 கி.மீ.	கல்லல், அரண்மனை சிறுவயல், சாத்தரசன்பட்டி வழியாக.
53.	நெற்குப்பை	622 405	40 கி.மீ.	திருப்புத்தூரை அடைந்து அங்கிருந்து' பொன்னமராவதிச் சாலையில்.
54.	நேமத்தான்பட்டி	630 103	18 கி.மீ.	திருச்சிச் சாலையில்
55.	பட்டமங்கலம்	630 310	24 கி.மீ.	கல்லல் சாலையில் ஆலங்குடிக்கு அருகே பிரியும் கிளைச் சாலையில் கண்டரமாணிக்கம் வழியாக.
56.	பலவான்குடி	630 208	9 கி.மீ.	உ. சிறுவயல் வழியாக.
57.	பள்ளத்தூர்	630 107	15 கி.மீ.	திருச்சிச் சாலையில்.
58.	பனங்குடி	630 555	35 கி.மீ.	கல்லல், அ. சிறுவயல், சாத்தரசன்பட்டி, நடராசபுரம் வழியாக.
59.	பனையப்பட்டி	622 406	43 கி.மீ.	திருமயம், வி. இலட்சுமிபுரம், விரையாச்சிலை வழியாக.
60.	பாகனேரி	630 558	29 கி.மீ.	கல்லல் வழியாகச் சொக்கநாதபுரத்தை அடைந்து அங்கிருந்து சிவகங்கைச் சாலையில்.

Koviloor Digital Library

வரிசை எண்	ஊர்	அஞ்சல் குறியீட்டு எண்	காரைக்குடியில் இருந்து தொலைவு	காரைக்குடியிலிருந்து செல்லும் வழி
61.	புதுப்பட்டி	622 408	44 கி.மீ.	திருப்புத்தூர், பொன்னமராவதி வழியாக.
62.	புதுவயல்	630 108	16 கி.மீ.	கோட்டையூர், அளகாபுரி, கண்டனூர் வழியாக அறந்தாங்கிச் சாலையில்
63.	பூலாங்குறிச்சி	622 413	42 கி.மீ.	திருப்புத்தூர், கண்டவராயன்பட்டி, செவ்வூர் வழியாக.
64.	மகிபாலன்பட்டி	630 217	36 கி.மீ.	திருப்புத்தூர், கண்டவராயன்பட்டி வழியாக.
65.	மதகுபட்டி	630 553	35 கி.மீ.	கல்லல், செம்பனூர், சொக்கநாதபுரம் வழியாக.
66.	மானகிரி	630 307	6 கி.மீ.	கோவிலூர், நாச்சியாபுரம் சாலையில்
67.	மிதிலைப்பட்டி	622 409	38 கி.மீ.	குன்றக்குடி, நேமம், கீழச்சிவல்பட்டி, இராங்கியம் வழியாக.
68.	முத்துப்பட்டணம் (ஆ)	630 101	13 கி.மீ.	உ. சிறுவயல் வழியாக.
69.	மேலைச்சிவபுரி	622 403	46 கி.மீ.	திருப்புத்தூர் வழியாக நெற்குப்பையை அடைந்து அங்கிருந்து கிளைச்சாலையில் இடப்புறம்.
70,	வலையபட்டி	622 411	48 கி.மீ.	திருப்புத்தூர், பொன்னமராவதி வழியாக.
71.	விராமதி	630 212	24 கி.மீ.	குன்றக்குடி, நேமம், கீழச்சிவல்பட்டி வழியாக.
72.	விரையாச்சலை	622 412	40 கி.மீ.	திருமயம், வி. இலட்சுமிபுரம் வழியாக.
73.	வெற்றியூர்	630 305	30 கி.மீ.	கல்லல் வழியாக அரண்மனை சிறுவயலை அடைந்து, அங்கிருந்து காளையார் கோவில் சாலையில் வெற்றியூர் விலக்கு வழியாக.
74.	வேகுப்பட்டி	622 408	45 கி.மீ.	திருப்புத்தூர், கண்டவராயன்பட்டி, செவ்வூர், பூலாங்குறிச்சி வழியாக.
75.	வேந்தன்பட்டி	622 419	45 கி.மீ.	திருப்புத்தூர் வழியாக நெற்குப்பையை அடைந்து அங்கிருந்து கிளைச் சாலையில் இடப்புறம்.

Koviloor Digital Library

கருவி நூற்பட்டியல்

அகரம் – ஆலமரம் – அகரம், சிவகங்கை, டிசம். 1983.

அண்ணாமலை, டாக்டர், சுப., தேவகோட்டை சிவஸ்ரீ தத் புருஷதேசிகர் மணிவிழாமலர், தேவகோட்டை, ஜனவரி. 1975.

அண்ணாமலை பழ., செட்டிநாடு ஊரும் பேரும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், டிசம். 1986.

அண்ணாமலை. பழ., நகரத்தார் கணக்கியல் முறை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பிப். 1988.

,, நகரத்தார் திருமண நடைமுறை, பள்ளத்தூர், 1984.

,, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், பாரி நிலையம், சென்னை, டிசம். 1994.

,, நகரத்தார் யார்? எவர்? முதல் தொகுதி, சென்னை, டிசம். 1991.

,, நீத்தார் கடன், திருவொற்றியூர் நகரத்தார் சங்கம், சென்னை, அக். 1997.

அருணோதயம், அருணோதயம் அருணன் எழுபதாவது பிறந்ததின விழா, அறிஞர்களின் கருத்துரைகள். அருணோதயம், சென்னை. 3–1–1994.

அழகப்பன் எம்., நகரத்தார் திருமண நிகழ்ச்சிகள், ஒ. சிறுவயல்.

அழகப்பன், டாக்டர். ஆறு., அண்ணாமலை அரசருக்கு அன்பு மலர்கள், 1980.

அழகப்பன் டாக்டர். வெசு., [ப.ஆ.] கவிச்செம்மல், அரிமா. டாக்டர் ரெ.மு. மணிவிழா மலர், காரைக்குடி இலக்கியக் கழகம், காரைக்குடி 14–9–1987.

ஆனந்தன் பி.என்., வள்ளுவர் பண்ணை பழநியப்பன் அறுபது, கொப்பனாபட்டி, 28–11–1987.

இந்தியப்பண்பாடு ஆராய்ச்சி நிறுவனம், கோவிலூர்க் கொற்றவாளீசர் திருக் கோவில், கோவிலூர் ஆதீனகர்த்தர்கள், இ.ப.ஆ. நிறுவனம், சென்னை.

இந்துமதாபிமான சங்கம், இராய.சொ. நினைவு மலர், இ.ம. சங்கம், காரைக்குடி, 22–1–1984.

இந்துமதாபிமான சங்கம், பொன்விழா மலர், இ.ம. சங்கம், காரைக்குடி 9–9–1967.

இராதாகிருஷ்ணன் டிஆர்., [மொ.பெ.ஆ] டாக்டர். அழகப்ப செட்டியாரவர்களின் கட்டுரைகள், சொற்பொழிவுகள், கடிதங்கள், டாக்டர் அழகப்ப செட்டியார் கல்வி அறக்கட்டளை, காரைக்குடி, 6–4–1995.

இராதா தியாகராசன், ஆலை அரசர் கருமுத்து தியாகராசர். வானதி பதிப்பகம், சென்னை – 17, பிப்ரவரி 1994.

இராமசாமி செட்டியார் இராம.உ., ஸ்ரீமத் சொக்கலிங்க அய்யா அவர்கள் சரித்திரம், காரைக்குடி. 1964.

இராமநாதன் செட்டியார், பேராசிரியர். லெ.ப.கரு., [ப.ஆ] டாக்டர் இராஜா சர் முத்தையா செட்டியார் – ராணி லேடி மெய்யம்மை ஆச்சி அறுபதாம் ஆண்டு நிறைவு விழா மலர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், அண்ணாமலை நகர், 14–11–1965.

இராமநாதன் செட்டியார், வித்துவான், வயிநாகரம், அ., [தொ. ஆ] நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, சென்னை, 1953.

இளங்குமரன் இரா., தமிழிசை இயக்கம், மணிவாசகர் பதிப்பகம் சென்னை, டிசம்பர், 1993.

இனியவன், நனிபுகழ் நகரத்தார், ஒளவை மன்றம், சென்னை, டிசம். 1990.

எஸ்ஸாரெம் [தொ.ஆ] நகரத்தார்களின் குல தெய்வங்கள், கோலாலம்பூர், அக். 1997.

கணேசன், கம்பனடிப்பொடி. சா., கட்டுரைக் களஞ்சியம், கம்பன் கழகம், காரைக்குடி, 1988.

,, பிள்ளையார்பட்டித் தலவரலாறு, பிள்ளையார் பட்டிக் கற்பகவிநாயகர் நகரத்தார் அறநிலை, பிள்ளையார்பட்டி, 1983.

கண்ணப்பன் மு. பழ., திருமுறைப் புரவலர் பாகனேரி இராம. முத்துப்பழநியப்ப செட்டியார் 83வது ஆண்டு நிறைவு நினைவு மலர். மதுரை, 22–6–1997.

Koviloor Digital Library

கண்ணன், பேராசிரியர், சீனி, மணிவிழா மலர், கண்டரமாணிக்கம், 11–2–1986.

கதிரேசன் செட்டியார், சு.கதி., புதிய வட்டிக்கணக்குப் புத்தகம், 1928.

காந்தி மெ., காந்திமெய்யப்பர் நூற்றாண்டு விழா மலர் காரைக்குடி, 5–9–1986.

குப்புசாமி. எஸ்., அருணோதயம் அருணன் 60வது பிறந்த நாள்விழா சிறப்பு வெளியீடு, வெற்றி அச்சகம், சென்னை. 25–12–1983.

குழந்தைநாதன், பேராசிரியர் சு., கலைத்தந்தை கருமுத்து தியாகராசர், கருமுத்து, தி. மாணிக்க வாசகனார் மணிவிழாக்குழு, மதுரை – ஜூலை. 1980.

" கோடிகொடுத்த கொடைஞன்.

கோபால் கிருஷ்ண காந்தி, [ப.ஆ] இந்திய விவரச் சுவடி – தமிழ்நாடு, புதுக்கோட்டை மாவட்டம், தமிழ் நாடு அரசு, 1993.

சண்முகம் சுப., செட்டிநாட்டில் தமிழ் வழக்கு, சென்னை 1990.

சந்திரமூர்த்தி மா., இரணியூர்க் கோயில், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 5–7–1990.

" சூரக்குடிக் கோயில், " 10–7–1994

" நேமம் கோயில் " 3–2–1991

" பிள்ளையார்பட்டி " நவம். 1992

" மாத்தூர் கோயில் " 15–8–1988

" வயிரவன் கோயில் " 9–2–1996.

நீதியரசர் இலக்குவன், அரு., இரணிக்கோவில், நூல் அணிந்துரை.

சரவணன். எம்., முயற்சி திருவினையாக்கும், ஏவி.எம். புரொடக்ஷன்ஸ், சென்னை, 11–10–1995.

சிதம்பரம். சித., [ப.ஆ.] காவிரிப்பூம்பட்டினம் அருள்மிகு பட்டினத்தார் அற்புதத் திருவிழாப் பணியில் காரைக்குடி பழ.தெ.லெ. அருணாசலம் செட்டியார் அவர்களின் ஐம்பதாம் ஆண்டு பொன்விழாச் சிறப்புமலர் 16–8–1997.

சுப்பிரமணியம், வி.எஸ்பி., தமிழகத்தில் நகரத்தார் வணிகப் பெருமக்கள் சிறப்புமலர், பனையப்பட்டி, 1995.

சுப்பிரமணியன் செட்டியார். கு.பழ.சு.பழ., நகரத்தார் அறப்பட்டயங்கள், நெற்குப்பை, 1992.

சேஷாத்ரி சர்மா, வரகூர், அ., நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, வானதி பதிப்பகம், சென்னை ஆகஸ்ட் 1970.

சைவசித்தாந்த மகாசமாசம், சித்தாந்த வித்தகர். புலவர் மாமணி. முரு.பழ. இரத்தினம் செட்டியார் மணிவிழாச் சிறப்புமலர், சைவ சித்தாந்த மகா சமாசம், சென்னை 12–9–1981.

சொக்கலிங்கம். டாக்டர். தே., நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் அறப்பணிகளும் வரலாறும், பார்வதி பதிப்பகம், காரைக்குடி. ஆக. 1997.

" பாடுவார் முத்தப்பர் " செப். 1988.

சோமசுந்தரன், பொற்கிழிக் கவிஞர். காசிஸ்ரீ அரு., [ப.ஆ.] லெ.கதிரேசன் செட்டியார் முத்துவிழா மலர், தேவகோட்டை, 16–10–1986.

" P.S.S. சோமசுந்தரம் செட்டியார் – மீனாட்சி ஆச்சி மணிவிழா மலர், தேவகோட்டை, 26–9–1993.

சோமலெ, அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள், சோமு நூலகம், சென்னை, மார்ச் 1979.

" இராமநாதபுரம் மாவட்டம், பாரி நிலையம், சென்னை, மே. 1972.

" செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, டிசம் 1984.

" செட்டிநாடும் தமிழும், பாரிநிலையம், சென்னை, டிசம். 1954.

தமிழண்ணல் டாக்டர்., மதுரை நகரவிடுதி – புதிய கட்டிடத் திறப்பு விழா – சிறப்புமலர், மதுரை நகரத்தார் சங்கம், 1994.

திருநாவுக்கரசு, வானதி., வெற்றிப் படிகள், வானதி பதிப்பகம், சென்னை, ஜூலை 1997.

தெட்சிணாமூர்த்தி. உ., [தொ. ஆ.] உ.ராம.மெ.சு. செ.சேவு. மெய்யப்ப செட்டியார் – உமையாள் ஆச்சி மணிவிழா மலர், தேவகோட்டை, 26–1–1981.

தென்னகனார், புலவரேறு. அரிமதி. தேவகோட்டை முத்து. கரு. மு. லெட்சுமணன் செட்டியார் – சிவகாமி ஆச்சி மணிவிழா மலர், தேவகோட்டை, 29–12–1992.

தேனப்பன், டாக்டர்.வ. ஒன்பது நகரக் கோயில்கள், தேன் வள்ளியம்மை பதிப்பகம், தேவகோட்டை, டிசம். 1990.

Koviloor Digital Library

நடராஜன், இளவரசன், வணிகர் வரலாறு, சுந்தர சுகுமார் பதிப்பகம், கீழச்சிவல்பட்டி, 1959.

பத்மநாபன், என்.ஆர்., தேசபக்தர் ராம. சொக்கலிங்கனார் மணிவிழாமலர், நேருசங்கம், காரைக்குடி, 1961.

பழநியப்பன், அழ, நகரத்தார் திருமணம், கையேடு. தேவகோட்டை, ஏப்ரல் 1991.

பழனியப்பா பிரதர்ஸ், இவரைப்பற்றி,

பாலுசாமி, பேராசிரியர், டாக்டர். நா., [ப.ஆ.] வாழ்வியற் களஞ்சியம், [12 தொகுதிகள்] தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

பெரியசாமித் தூரன், ம.ப., [ப.ஆ.] கலைக்களஞ்சியம் [10 தொகுதிகள்] தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை.

மணிவாசகர் நூலகம், கல்லல் நீதிபதி நா. பழனியப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சி மணிவிழா மலர், மணிவாசகர் நூலகம், சென்னை. 21–2–1993.

மயில்வாகனன், சிதம்பரம், சிதம்பரம் பெருமக்கள், தில்லைத் தமிழ்ச்சங்கம், சிதம்பரம், மார்ச் 1994,

மாணிக்கம். டாக்டர். ந. [ப.ஆ.] சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பவளவிழாச் சிறப்புமலர், தேவகோட்டை, 23–12–1989.

மாரியப்பன், பேராசிரியர், ஈ.வே., [ப.ஆ] தமிழாகரர் டாக்டர். சுப. அண்ணாமலை மணிவிழாச் சிறப்பு மலர், மதுரை, 13–10–1989.

மீரா, பேராசிரியர் [ப.ஆ.] பேராசிரியர். டாக்டர். தமிழண்ணல் மணிவிழா மலர், மதுரை. 7–10–1989.

மீனாட்சி சோமசுந்தரம், மெ., [ப.ஆ.] டாக்டர் ச. மெய்யப்பன் – மீனாட்சி ஆச்சி மணிவிழா மலர். இராமச்சந்திரபுரம், 16–7–1993.

முடியரசன், கவியரசு (தொ.ஆ); சீர்திருத்தச் செம்மல் வை.சு. சன்முகனார், வானதி பதிப்பகம், சென்னை, ஆகஸ்ட் – 1990.

முத்தப்பன், புலவர் பழ. முத்தமிழ்ச் செல்வர் ரெ. இராமசாமி மணிவிழா மலர்; கண்டனூர்; 7–8–1980.

முத்துப்பழநியப்ப செட்டியார், பெ.நா.மு., மலாயாவின் தோற்றம்; பினாங்கு; 1938.

முத்தையா, கண., குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கியப்பணி வெள்ளிவிழா மலர். 22–11–1970.

மெய்யப்பன், ஏ.வி., எனது வாழ்க்கை அநுபவங்கள், வானதி பதிப்பகம், சென்னை, மார்ச், 1974.

மெய்யப்பன், ச., சோமலெ; வெற்றி குரூப் நிறுவனங்கள், சென்னை; ஆக்ஸ்டு, 1988.

" டாக்டர் மு.அ.மு. இராமசாமி – சிகப்பி ஆச்சி அவர்கள் மணிவிழா மாலை; மணிவாசகர் நூலகம்; சென்னை, 28–9–1991.

" தமிழ்நாட்டை வளப்படுத்திய சமூகம்., மணிவாசகர் பதிப்பகம், சென்னை; அக்டோபர், 1997.

" நற்சாந்துபட்டி சாமியாடி செட்டியார் வீடு. மணிவாசகர் - பதிப்பகம், சென்னை, 16–10–1993.

" பொற்கிழிக் கவிஞர், காசி ஸ்ரீ. அரு.சோமசுந்தரன் – நீலா மணி விழா மலர்; பொன்முடி பதிப்பகம்; காரைக்குடி; 12–8–1996.

மெய்யம்மை பதிப்பகம்; இராமசாமி செட்டியார் ஆயிரம் பிறை விழா மலர். மெய்யம்மை பதிப்பகம்; காரைக்குடி – 1982.

ரங்கராஜன், ரா.கி., எடிட்டர். எஸ்.ஏ.பி., வானதி பதிப்பகம், சென்னை, ஜூன், 1995.

ராமசாமி, டாக்டர் அ. [ப.ஆ.]; இந்தியவிவரச்சுவடி – தமிழ்நாடு – இராமநாதபுரம் மாவட்டம்; தமிழ்நாடு அரசு, 1990.

ராய.சொ. [ப.ஆ.]., மெ.க. அன்னசத்திரம், திருவண்ணாமலை நூற்றாண்டு விழா மலர்; திருவண்ணாமலை 15–11–1972.

லெட்சுமணன், ஏ.ஆர்., சிவாகமோக்த சஷ்டியப்த பூர்த்தி சாந்தி கல்யாணத்தின் செய்முறைகள். தேவகோட்டை 21–10–1989.

லேனா தமிழ்வாணன் [ப.ஆ.]., இராமநாதபுரம் மாவட்டம். மணிமேகலைப் பிரசுரம்; சென்னை, 1987.

" பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம். " 1987.

" புதுக்கோட்டை மாவட்டம் " 1986.

Koviloor Digital Library

விமலானந்தம், பேராசிரியர். மது. ச., குங்கிலியம் சண்முகனார், மணிவாசகர் பதிப்பகம், சென்னை – ஜூலை, *1997.*

" பதிப்புச் செம்மல் முனைவர் ச. மெய்யப்பனார் தமிழியக்கம், சிதம்பரம், ஆகஸ்டு, *1993.*

ஜனானுகூல அச்சுக் கூடம்; தீ.நா. நாச்சியப்ப செட்டியார். ஜனானுகூல அச்சுக்கூடம்; திருச்சிராப்பள்ளி, *1–10–1925.*

ஸ்ரீநிவாசன் செட்டியார், சித.வெ.முரு.அரு., நகரத்தார் திருமணம் – கையேடு. காரைக்குடி *21–10–1991.*

Gowrishankar, M. (Editor); **Annamalai University Golden Jubilee Record**. Annamalai University; December, 1979.

Madras Tricentenary Celebration Committee; **The Madras Tricentenary Commemoration Volume,** Asia Educational Services; New Delhi; 1994.

Manickam, Dr.V.S.P., **Collected Papers**. Karaikudi, 1978.

Nagarajan K., **Dr. Rajah Sir Muthiah Chettiar - A Biography**; Annamalai University; 1989.

Nishimura, Yuko; **Gender, Kinship & Property Rights Nagarathar Womanhood in South India**. Oxford University Press; Delhi, 1998.

Rudner, David West., **Caste and Capitalism in Colonial India - The Nattukottai Chettiars,** Munshiram Manoharlal Publishers Pvt Ltd. New Delhi, 1995.

Sankaran. S; **Five Decades of Leather,** Indian Leather; Madras.

Seshadri, R.K., **A Swadeshi Bank from South India.** Indian Bank; Madras; 1982.

திருப்பணியால் சிறப்புப் பெற்றோம்

எண்ணத் தொலையாத எத்தனையோ கோவில்களை(க்)
கண்ணில் இருத்திக் கலையோடு காத்துவந்தோம்
காசி நகரத்துக் கடவுளரைப் பேச வைத்தால்
காவிரிப்பூம் பட்டினத்தார் கலையுணர்ச்சி தோன்றவரும்
மாசற்ற பொன்னும் மணிவயிரம் ரத்தினமும்
தூசென்று எண்ணித் தூக்கிக் கொடுத்துவந்தோம்
பண்டைத் தமிழ்மரபைப் பண்போடு காத்துவந்தோம்
அண்டை நிலங்கள்நம் ஆண்டவனை ஊன்றிவைத்தோம்
காசிவிசா லாட்சி மதுரைமீ னாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன்னகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக்கோ புரத்தழகும்
அண்ணா மலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அமர்ந்திருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட் டைவளர்த்த நகரத்தார் அல்லேமோ!

கவியரசு கண்ணதாசன்

Koviloor Digital Library

வகைப்படுத்தப் பெற்ற அகர நிரல்

I இதழ்கள்

அணிகலம் 1
அணில் 3
அமைச்சன் 12
அனல் 31
இன முழக்கம் 72
உங்கள் உடல்நலம் 72
ஊழியன் 83
கண்ணதாசன் 101
கல்கண்டு 118
காதல் 124
குமரன் [மாத இதழ்] 139
குமரன் [வார இதழ்] 139
குமரி மலர் 140
குமுதம் 141
சக்தி 160
சிவநேசன் 183
செட்டிநாடு [இதழ்] 200
தமிழ்நாடு 225
தமிழ்நேசன் 226
தனவணிகன் 228
தென்றல் 241
நகரத்தார் 262
நகரத்தார் இதழ் 266
நகரத்தார் இதழ்கள் 266
நகரத்தார் குரல் 276
நகரத்தார் மலர் 304
நமது நகரத்தார் 310
பொன்னி 360

II ஊர்கள்

அமராவதி புதூர் 11
அரண்மனை சிறுவயல் 12
அரிமழம் 13
அரியக்குடி 14
அலவாக்கோட்டை 21
அளகாபுரி, கண்டனூர் 28
அளகாபுரி, நாட்டரசன் கோட்டை 29
அளகாபுரி, பில்லமங்கலம் 30
ஆத்தங்குடி 32
ஆத்திக்காடு தெற்கூர் 33
ஆவினிப்பட்டி 34
இணைப்பு ஊர்கள் 38
இரணிக்கோவில் 42
இராங்கியம் 45
இராயவரம் 59
இலட்சுமிபுரம், கொத்தமங்கலம் 64
இலட்சுமிபுரம், விரையாச்சிலை 65
இலுப்பைக்குடி 65
இளையாத்தங்குடி 71
உலகம்பட்டி 77
ஒக்கூர் 87
கடியாபட்டி 91
கண்டரமாணிக்கம் 95
கண்டவராயன்பட்டி 95
கண்டனூர் 96
கருங்குளம் 108
கல்லல் 119
கல்லுப்பட்டி 119
காரைக்குடி 127
காளையார் மங்கலம் 131
கானாடுகாத்தான் 131
கீழச்சிவல்பட்டி 133
கீழப்பூங்குடி 134
குருவிக்கொண்டான்பட்டி 145
குழிபிறை 145
குன்றக்குடி 146
கொத்தமங்கலம் 149
கொப்பனாபட்டி 149
கோட்டையூர் 151
கோனாபட்டு 159

Koviloor Digital Library

சக்கந்தி 160
சண்முகநாதபுரம் 162
சிறாவயல் 186
சிறுகூடற்பட்டி 186
சிறுவயல், உய்யக்கொண்டான் 187
சூரக்குடி 199
செட்டிநாடு [ஊர்] 200
செட்டிநாடு [நிலப்பரப்பு] 200
செம்பனூர் 205
செவ்வூர் 207
சொக்கநாதபுரம் 210
சொக்கலிங்கம்புதூர் 215
சோழபுரம் 221
தாணிச்சாவூருணி 229
தேவகோட்டை 242
தேனிபட்டி 245
நடராசபுரம் 308
நற்சாந்துபட்டி 311
நாச்சியாபுரம் 314
நாட்டரசன்கோட்டை 314
நெற்குப்பை 318
நேமங்கோவில் 319
நேமத்தான்பட்டி 320
பட்டமங்கலம் 323
பலவான்குடி 331
பள்ளத்தூர் 342
பனங்குடி 343
பனையப்பட்டி 344
பாகனேரி 344
பிள்ளையார்பட்டி 349
புதுப்பட்டி 351
புதுவயல் 353
பூலாங்குறிச்சி 353
மகிபாலன்பட்டி 361
மதகுபட்டி 362
மாத்தூர் 367
மானகிரி 369
மிதிலைப்பட்டி 369
முத்துப்பட்டணம், ஆத்தங்குடி 374
மேலைச்சிவபுரி 388
வலையபட்டி 393
விராமதி 403
விரையாச்சிலை 404
வெற்றியூர் 407
வேகுப்பட்டி 408
வேந்தன்பட்டி 408
வேலங்குடி 409
வைரவன்கோவில் 413

III நிறுவனங்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 9
அழகப்பா கல்வி நிறுவனங்கள் 26
அழகப்பா பல்கலைக்கழகம் 27
அன்பு நிலையம் 31
இந்துமதாபிமான சங்கம் 39
இராமசாமி தமிழ்க்கல்லூரி 50
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி 92
கந்தர் சஷ்டி விழாக் கழகம் 105
கம்பன் கழகம் 106
கம்பை தனவைசியர் கல்விக் கழகம் 107
கவிமணி மன்றம் 120
கா.செ. வேதாந்த மடாலயம் 124
குருகுலம் 142
கோவிலூர்த் திருமடம் 154
சரசுவதி நாராயணன் கல்லூரி 169
சன்மார்க்க சபை 169
சிவநேசர் திருக்கூட்டம் 183
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச் சைவநெறிக் கழகம் 185
சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி 189
செந்தமிழ் நிலையம் 205
தனவைசிய நாட்டுத் தமிழ்க் கல்விக் கழகம் 229
தியாகராசர் கல்வி நிறுவனங்கள் 232
திருக்குறட் கழகம் 237
துலாவூர் மடம் 240
நாநயா 315
பாதரக்குடி மடம் 346
பொள்ளாச்சித் தமிழிசைச் சங்கம் 360

Koviloor Digital Library

மகளிர் இல்லம் 361

மங்கையர்க்கரசி மன்றம் 361

மத்திய மின்வேதியியல் ஆய்வுக் கூடம் 363

வள்ளுவர் மன்றம் 397

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகம் 416

ஸ்ரீ சாரதா சேவாசிரமம் 418

ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி 419

ஸ்ரீ விசுவேசுவரர் முதியோர் இல்லம் 419

ஸ்ரீ விசுவேசுவரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 419

IV நினைவுச் சிறப்புக்கள்

அழகப்பா நகர் 26

இயற்பகை நாயனார் விழா 41

இராசா சர் அண்ணாமலை செட்டியார் உருவச் சிலை 46

இராசா சர் அண்ணாமலை செட்டியார் நினைவு அஞ்சல்தலை 46

இராசா சர் அண்ணாமலை செட்டியார் பிறந்த நாள் பரிசு 46

இராசா சர் முத்தையா செட்டியார் உருவச்சிலை 46

இராசா சர் முத்தையா செட்டியார் நினைவு_அஞ்சல்தலை 47

இராசா சர் முத்தையா செட்டியார் பிறந்த நாள் நினைவுப் பரிசு 47

இராணி மெய்யம்மை ஆச்சி பரிசு 47

இலக்கியச் சிந்தனை 60

கம்பன் சமாதி 107

கம்பன் மணிமண்டபம் 107

கவியரசர் கண்ணதாசன் உருவச் சிலை 120

கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம் 120

குமார ராஜா மு.அ.மு. முத்தையா செட்டியார் பிறந்த நாள் நினைவுப் பரிசு 141

கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் அதிட்டானம் 150

கோவை நாட்டுக்கோட்டை நகரத்தார் தர்மநிதி 159

சரசுவதி நாராயணன் மணிவிழா அறக்கட்டளைப் பரிசு 169

சேக்கிழார் விழா 208

டாக்டர். இராசா. சர் அண்ணாமலை செட்டியார் பரிசு 221

தமிழ்க்கடல் இராய.சொ. திருஉருவச் சிலை 224

தமிழ்த்தாய் கோவில் 225

பட்டினத்தார் அற்புதத் திருவிழா 326

பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் உருவச் சிலை 329

பத்மஸ்ரீ நாகப்ப செட்டியார் உருவச்சிலை 329

பாடுவார் முத்தப்பர் கோட்டம் 345

ராஜா அண்ணாமலை மன்றம் 389

ராஜா முத்தையா மன்றம் 391

வை.சு.ச. நினைவு மையம் 413

V பண்பாடும் வரலாறும்

அணிகள் 1

அமெரிக்காவில் நகரத்தார் 11

இசைபிடிமானம் 36

இந்திய தேசிய இராணுவத்தில் நகரத்தார் 39

இராமாயணம் படித்தல் 58

இலங்கையில் நகரத்தார் 62

இழவு கூட்டுதல் 67

உணவு வகைகள் 73

உபதேசம் கேட்டல் 75

உறவுமுறைப் பெயர்கள் 78

ஐம்பத்தொன்பது சாந்தி 87

ஒப்பாரி 88

கலியாணம் 110

கழுத்துரு 121

காய்ச்சி ஊற்றுதல் 125

கார்த்திகைப் புதுமை 130

கிலுக்கி எடுப்பு 133

குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகள் 135

குருபூசை மடங்கள் 142

கூட்டுத் திருமணங்கள் 148

கொப்பி கொட்டுதல் 150

சடங்கு கழித்தல் 162

சதாபிஷேகம் 167

சாந்திக் கலியாணம் 171

சிங்கப்பூரில் நகரத்தார் 174

சுயமரியாதை இயக்கத்தில் நகரத்தார் 198

Koviloor Digital Library

சென்னையில் ஆறுபடைவீடு 208
தமிழிசை இயக்கம் 223
தர்ப்பணம் செய்தல் 228
தாலாட்டு 229
திதி கொடுத்தல் 232
திருவாதிரை 238
திருவொற்றியூர்ப் பூசை 238
தீர்த்தம் குடித்தல் 239
நகரச் சிவன் கோவில் 246
நகரத்தாரும் அரசியலும் 249
நகரத்தாரும் இராமகிருஷ்ணா இயக்கமும் 250
நகரத்தாரும் கலைத்துறையும் 251
நகரத்தாரும் தமிழும் 254
நகரத்தாரும் தொழில்துறையும் 258
நகரத்தாரும் வங்கியியலும் 260
நகரத்தார் அழகியல் 262
நகரத்தார் அறப்பணிகள் 262
நகரத்தார் இயல் – ஆய்வு 270
நகரத்தார் கட்டிடக் கலை – கோவில்கள் 272
நகரத்தார் கட்டிடக் கலை – வீடுகள் 273
நகரத்தார் குலதெய்வங்கள் 277
நகரத்தார் சங்கம் 283
நகரத்தார் நிதிஉதவி அறக்கட்டளைகள் 285
நகரத்தார் பெயர்கள் 285
நகரத்தார் பேச்சுவழக்கு 290
நகரத்தார் மக்கள்தொகைக் கணக்கு 292
நகரத்தார் வரலாறு 305
நகர விடுதி 308
நடைப்பயணம் 309
நூற்றியெட்டுப் பிள்ளையார் கோவில் 317
பட்டப் பெயர்கள் 321
பணத்திருப்பு 327
பர்மாவில் நகரத்தார் 329
பழநி நடைப்பயணம் 332
பழந்தேங்காய் கொடுத்தல் 342
பிள்ளை கூட்டுதல் 347
பிள்ளையார் நோன்பு 348
புதுமை 352
பேறுகேட்டல் 355
பொங்கற்பானை கொடுத்தல் 356
பொதுப்படைப்பு 356
மலேசியாவில் நகரத்தார் 363
முன்னெழுத்துக்கள் (விலாசம்) 384
விடுதலைப் போராட்டத்தில் நகரத்தார் 399
விமான ஓட்டிகள் 402
வியத்நாமில் நகரத்தார் 402
வீட்டுப் படைப்பு 405
வேவு 410
வேறு வைத்தல் 410
வேற்பூசை 411
வைத்தீசுவரன் கோவில் நடைப்பயணம் 413

VI பெருமக்கள்

அடைக்கலவன், பெரி. மெ. 1
அண்ணாமலை, காந்தி. அரு. 3
அண்ணாமலை, சுப. 3
அண்ணாமலை செட்டியார், அரு. 3
அண்ணாமலை செட்டியார், இராம. 4
அண்ணாமலை செட்டியார், சேவு 4
அண்ணாமலை செட்டியார்,
டாக்டர். இராசா சர் மு. 5
அண்ணாமலை செட்டியார்,
டிரோசன். சா. இராம. சித. 6
அண்ணாமலை, டாக்டர். அழகு. 7
அண்ணாமலை, டாக்டர். சுப. 7
அண்ணாமலை, டாக்டர். ந. 7
அண்ணாமலை, நடராஜ் 8
அண்ணாமலை, நாக. 8
அண்ணாமலை, பழ. 9
அண்ணாமலை, மு. 10
அரங்கநாதன் செட்டியார், இராம. 12
அருணாசலம், அ. 15
அருணாசலம், அ.மு.மு. 16
அருணாசலம், சுப. 16
அருணாசலம் செட்டியார், உ. 16
அருணாசலம் செட்டியார், உ.அ.பெரி.மு. 17
அருணாசலம் செட்டியார், ந. 17
அருணாசலம் செட்டியார். வைரம்.உ.அ. 18
அருணாசலம், தே. இரா. 18

Koviloor Digital Library

அருணாசலம், தொண்டர். நா. 19
அருணாசலம், மு. 19
அருணாசலம், மு.வெ. 19
அருணோதயம் அருணன் 20
அழகப்ப செட்டியார், அ.லெ.அழ. 21
அழகப்ப செட்டியார், டாக்டர். இராம. 21
அழகப்பன், அ. 23
அழகப்பன், எஸ்.வி.எஸ். 23
அழகப்பன், சுப. 24
அழகப்பன், டாக்டர். அழகப்பா 24
அழகப்பன், டாக்டர் ஆறு. 24
அழகப்பன், டாக்டர் சித. 25
அழகப்பன், டாக்டர். வெ.சு. 25
அழகப்பன், மு.அ. 25
அழகப்பன், மு.வெ.மு. 25
அழகுசுந்தரம் செட்டியார், லெ. 28
அஸ்வின் சிதம்பரம், மு. 32
ஆண்டியப்பன், டாக்டர். அண. 32
ஆவிச்சி செட்டியார், ஆவி.க.மெ. 34
ஆவுடையப்பன், இராம. 35
ஆனந்த நடராசன், ரெ. 35
இயற்பகை நாயனார் 41
இரகுபதி, சே. 42
இரத்தினம் செட்டியார், முரு.பழ. 44
இரவி தமிழ்வாணன் 44
இராகவன், டாக்டர் மீ. 45
இராமசாமி, அரு. 47
இராமசாமி செட்டியார், இராம.கு. 48
இராமசாமி செட்டியார், இராம.வீர. 48
இராமசாமி செட்டியார், சி.இராம. 49
இராமசாமி செட்டியார், திவான்பகதூர், மு. 49
இராமசாமி, டாக்டர்.மு.அ.மு. 49
இராமசாமி, டாக்டர்.மு.பெரி.மு. 50
இராமசாமி, ரெ. 51
இராமநாதன், அரு. 51
இராமநாதன், எஸ்.பி. 52
இராமநர்தன், கண 52
இராமநாதன், சங்கீத பூஷணம், சோம. 52
இராமநாதன், சிவ. 53
இராமநாதன், சுப. 53
இராமநாதன் செட்டியார், இரா. 53
இராமநாதன் செட்டியார், கா. 54
இராமநாதன் செட்டியார், தஞ்சாவூர். சு. இராம. 54
இராமநாதன் செட்டியார், நியூடோன். இளை. 55
இராமநாதன் செட்டியார், பாலகவி. வே. 55
இராமநாதன் செட்டியார், பேராசிரியர் லெ.ப.கரு. 56
இராமநாதன் செட்டியார், வயிநாகரம். அ. 57
இராமநாதன், டாக்டர். பெரி. 57
இலக்குமணச் செட்டியார், கவிராயர். பெரி. 61
இலக்குமணன், நீதியரசர்.அரு. 61
இலட்சுமணன், அரு. 62
இலட்சுமணன், அரு. 63
இலட்சுமணன், சித. 63
இலட்சுமணன் செட்டியார், சுப.க.அ. 63
இலட்சுமணன், ப. 64
இலட்சுமணன், மு. 64
இலட்சுமணன், லெ.நா. 64
இளங்கோவன், நா. 70
இளவரசு, சோம. 70
உமையாள் இராமநாதன் 77
எஸ்.ஏ.பி. 84
ஏகப்பன், இராம. 85
ஏ.கே. செட்டியார். 86
கணபதி, செல்ல. 92
கணபதி, சொ. 92
கணேசன், கம்பன் அடிப்பொடி சா. 93
கண்ணகி 98
கண்ணதாசன், கவியரசர் 99
கண்ணப்பன், அழகி. 101
கண்ணப்பன், சொ. 101
கண்ணப்பன், டாக்டர்.நா.நா. 102
கண்ணப்பன், லெ. [V.K.N. கண்ணப்பன்] 102
கதிரேசன், அ.மு. 103
கதிரேசன், குழ. 103
கதிரேசன், சு. 103
கதிரேசன் செட்டியார், பண்டிதமணி. மு. 104

Koviloor Digital Library

கதிரேசன் செட்டியார், லெ. 105
கருணாநிதி, டாக்டர். இராம. 109
கருப்பஞ்செட்டியார், ஐயா. 109
கருப்பையா, பழ. 109
கல்யாணி, சேவு. 119
கற்பகக் கணபதி, டாக்டர். பெரி. 122
காசிச் செட்டியார், சுப. 122
காசிவிசுவநாதன் செட்டியார், மு. 122
காசிவிசுவநாதன், வீர. 123
கா.சு. மணியன் 124
காரைக்காலம்மையார் 125
கிருஷ்ணன், சோனா. 132
கிருஷ்ணன், லெ. 132
குமரப்பன், சே. 138
குழந்தையன் செட்டியார், பவ.இராம. 145
கோவலன் 153
கோவிந்தன், சக்தி.வை. 153
சண்முகம், எம்.எஸ்.பி. 163
சண்முகம், சுப. 163
சண்முகம், நாக. 164
சண்முகனார், குங்கிலியம். பழ. 164
சண்முகனார், சீர்திருத்தச் செம்மல் வை.சு. 165
சத்தியமூர்த்தி, ஏ. 167
சந்திரமௌலி, அழ. 168
சபாபதி, சுப. 168
சபாரத்தினம், டாக்டர். பழ. 168
சபாரத்தினம், லெ. 168
சம்பந்தம், இராமதிரு. 168
சாத்தப்ப செட்டியார், பெரி.சோம. 171
சாந்தி சிதம்பரம் 174
சிங்காரம், சிவல்புரி 175
சிங்கார வடிவேலன், டாக்டர். அர. 176
சிதம்பரம், அழ. 176
சிதம்பரம், சித. 176
சிதம்பரம், சுப. 177
சிதம்பரம் செட்டியார், அ.க. அசித. அழ. 177
சிதம்பரம் செட்டியார், கோனூர் சமீன்தார். பெ.இராம. இராம. 177
சிதம்பரம் செட்டியார், மு.சிதமு. 178
சிதம்பரம் செட்டியார், வெ. ஆதி.மா. 179
சிதம்பரம், டாக்டர். இராம. 179
சிதம்பரம், ப. 179
சிதம்பரம், பழ. 180
சிதம்பரம், மு.அ. 180
சிதம்பரம், வ.நா. 181
சிதம்பரம், வி. 182
சிதம்பரம், வெ. 182
சிந்நயச் செட்டியார், வீர.லெ. 182
சிவப்பிரகாசம், சோம. 184
சிவராமன், டாக்டர். லெ. 184
சிவராமன், வீர. 184
சிவலிங்கம் செட்டியார், வ.செ. 185
சிவனடியான் செட்டியார், சிவ. 185
சிற்சபேசன், கண. 188
சின்ன அண்ணாமலை. 188
சீனிவாசன், அழ.சா. 190
சீனிவாசன் செட்டியார், இராம. 190
சீனுமோகன் 190
சுந்தரம், டாக்டர். இராம. 191
சுந்தரம், டாக்டர். கரு. 191
சுந்தரம், டாக்டர்.மெ. 192
சுந்தரம், பொற்கிழிக் கவிஞர். சொ.சொ.மீ. 193
சுந்தரம், லெ. 193
சுப்பிரமணியன், சு. இராம. பழ. 193
சுப்பிரமணியன் செட்டியார், அண. 194
சுப்பிரமணியன் செட்டியார், பெ. பெரி. 194
சுப்பிரமணியன், சொக்கு 194
சுப்பிரமணியன், டாக்டர்.சு. 195
சுப்பிரமணியன், முருகு. 195
சுப்பையா, இராம. 196
சுப்பையா செட்டியார், மு. 196
சுப்பையா, டத்தோ. 197
சுப்பையா, டாக்டர். இராம. 197
சுப்பையா, மு.வெ. 198
செந்தமிழன், சுப. 205
செல்லப்பன், க.அ. 206
செல்லப்பன், செ. 206
செல்லப்பன், செ.மெ. 207

Koviloor Digital Library

சேது நாராயணன், டாக்டர் இராம. 209
சேதுராமன், சி. 210
சொக்கலிங்க ஐயா. இராம. 210
சொக்கலிங்கம், இரா. 210
சொக்கலிங்கம், கரு.முத்து.சு. 211
சொக்கலிங்கம் செட்டியார்,
ஆறு.ஆ. இராம. 211
சொக்கலிங்கம், டாக்டர்.தே. 212
சொக்கலிங்கம், தமிழ்க்கடல். இராய. 212
சொக்கலிங்கம், நீதிபதி.மெ. 215
சோமசுந்தரம், காசிஸ்ரீ, அரு. 215
சோமசுந்தரம், சாண்டோ. லெ. 216
சோமசுந்தரம் செட்டியார், பெரி. 217
சோமசுந்தரம் செட்டியார், பெரி.சோம.சா. 217
சோமசுந்தரம், பெரி. 217
சோமலெ. 218
சோமனாதன், வலம்புரி. 219
சோமு.லெ. 220
சோலையப்பன், டாக்டர்.அரு. 220
தமிழண்ணல் 222
தமிழ்வாணன் 226
திண்ணப்பன், டாக்டர்.சுப. 231
தியாகராசன், க.மா. 234
தியாகராசன் செட்டியார்,
கலைத்தந்தை கரு.முத்து. 234
தியாகராசா, அ.வெ. 236
திருநாவுக்கரசு, வானதி.ஏ. 237
திருப்பதி, வெ. 237
தேனப்பன், டாக்டர்.வ. 245
நடராசன், அ.லெ. 309
நடராசன் செட்டியார், ஆ. 309
நாகப்ப செட்டியார், பத்மஸ்ரீ. ஆ. 311
நாகப்ப செட்டியார், வெ.வீர.நா.அரு. 312
நாகப்பன், டாக்டர். கா. 312
நாகப்பன், டாக்டர். நா. 313
நாச்சாள் அண்ணாமலை, டாக்டர். 313
நாச்சியப்பன், நாரா. 313
நாராயணன், இராம. 315
நாராயணன், காரைக்குடி. 316
நாராயணன் செட்டியார், சோம. 316
நாராயணன் செட்டியார், லெ. 317
பஞ்சு அருணாசலம் 321
பட்டினத்தார் 324
பழநியப்ப செட்டியார், செ.மெ. 337
பழநியப்பன், இராம. 338
பழநியப்பன், இராமநாதன் 338
பழநியப்பன், இல. 339
பழநியப்பன், சுப. 339
பழநியப்பன், சுப.சித. 339
பழநியப்பன், சே. இராம. 339
பழநியப்பன், டாக்டர். வெ. 340
பழநியப்பன், ந. 340
பழநியப்பன், நீதிபதி. நா. 340
பழநியப்பன், பழ. 341
பழநியப்பன், முத்து. 341
பனையப்ப செட்டியார், சொ. 343
பால சுப்பிரமணியன், லெ. 347
பெத்தாச்சி செட்டியார், வள்ளல் மு.சித. 354
பெரிய கருப்பன், இராம. 354
பெரியணன், அ. 355
பெரியண்ணன், அரு 355
மணி, பி.எல்.எஸ். 362
மணிமேகலை தமிழ்வாணன் 362
மாணிக்கம் செட்டியார், வெ.கரு.வே. 365
மாணிக்கம், டாக்டர்.வெ.தே. 365
மாணிக்கம், புலவர், நா.மு. 365
மாணிக்கவாசகம், கரு.முத்து.தி. 366
மாணிக்கனார், டாக்டர் வ.சுப. 366
மீனவன் 370
மீனாட்சி சுந்தரம், சொ. சொ. 370
மீனாட்சி, டாக்டர். அரு. 371
மீனாள் பழநியப்பன் 371
மீனு சுப்பையா 371
முத்தப்ப செட்டியார், பாடுவார் 371
முத்தப்பன், டாக்டர். பழ. 373
முத்துக்கணேசன், ரெ. 373
முத்துக்கருப்பன், டாக்டர். வீர. 374
முத்துப்பழநியப்ப செட்டியார், இராம. 375

Koviloor Digital Library

முத்துமாணிக்கம், லெ.மு.மு. 375
முத்துராமன், அண்ணாமலை 375
முத்துராமன், சுப. 375
முத்தையா, வை. 376
முத்தையா, அ.சி. 376
முத்தையா, இராம. 377
முத்தையா, கண. 377
முத்தையா, சு. 377
முத்தையா செட்டியார், சர்.மு.சித. 378
முத்தையா செட்டியார், டாக்டர். இராசா. சர். மு. அ. 378
முத்தையா செட்டியார், திவான் பகதூர், தர்ம பூஷணம், தீ. நா. 379
முத்தையா, முல்லை. பழ. 380
முத்தையா, ரோஜா 381
முருகப்ப செட்டியார், அ.மு.மு. 382
முருகப்பன், டாக்டர். சுப. 382
முருகப்பா, சீர்திருத்தச் செம்மல். சொ. 383
மெய்யப்ப செட்டியார், ஆவி. 385
மெய்யப்ப செட்டியார், காந்தி. மெ. இராம. 386
மெய்யப்ப செட்டியார், தமிழ் வள்ளல். சேவு. 387
மெய்யப்பன், சா. 387
மெய்யப்பன், பதிப்புச் செம்மல். டாக்டர். ச. 387
லேனா தமிழ்வாணன் 391
வசந்த் 392
வடிவேலு, அழ. 392
வல்லநாட்டான், அ. 394
வள்ளி அண்ணாமலை, 394
வள்ளி, சேவு. 394
வள்ளி சொக்கலிங்கம், டாக்டர். 394
வள்ளியப்ப செட்டியார், இராம. 395
வள்ளியப்பன், அ. 395
வள்ளியப்பன், கண்ணப்பா 395
வள்ளியப்பா, குழந்தைக் கவிஞர். அழ. 396
வன்றொண்டச் செட்டியார் 397
வி.ஆர்.எம். செட்டியார் 398
விசுவநாதன், இராம. 399
வினைதீர்த்தான் செட்டியார் 404
வெங்கடாசலம் செட்டியார், க.வெ.சி.த. 406
வெள்ளையப்பன், இராம. 407
வெள்ளையன் செட்டியார், அ.மு.மு. 407
ஜெயங்கொண்டான், க. 415

நகரத்தார் பெருமக்களுள் அருளாளர் ஐவர்

இயற்பகை நாயனார் – 41
கண்ணகி – 98
காரைக்காலம்மையார் – 125
பட்டினத்தார் – 324
முத்தப்ப செட்டியார், பாடுவார் – 371

நமது குலம் நலங்காணப் போரிடுவோம்

பர்மா நிலத்தில் பச்சைவயல் முகங்காட்ட
பச்சை வயலிடையே பச்சரிசி சிரித்திருக்க
அத்தனையும் பொன்னாக ஆக்கிப் படைத்தவர்கள்
நம்மவரே என்றால் நாட்டோர் மறுப்பதில்லை.
ஆனாலும் நம்மவர்கள் அடக்கத்தால் இன்றுவரை
தாமாகத் தம்மை தலை தூக்கிக் கொண்டதில்லை
இன்று விழித்துவிட்டோம். எல்லோரும் ஒன்றுபட்டோம்!
ஒன்று சமுதாயம் என்றுவரும் நாள்வரையும்
தத்தமது சாதியினைச் சாதியினர் போற்றுமட்டும்
சபையில் முழக்கிடுவோர் சாதிக்க வாழுமட்டும்
நாமும் நமதுகுலம் நலங்காணப் போரிடுவோம்
நகரத்தார் நவஉலகை நாளைக்கே நாம்சமைப்போம்!

– கவியரசு கண்ணதாசன்

Koviloor Digital Library

பின்னிணைப்பு

உயர்வு, சிறப்பு, விருது

அண்ணாமலை, டாக்டர். சுப. (ப. 7)

இராசா சர் முத்தையா செட்டியார் பிறந்த நாள் நினைவுப் பரிசு, 5-8-1999 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் முன்னாள் அமைச்சர் க. இராசாராம் அவர்களால் வழங்கப்பெற்றது.

அருணாசலம், அ.மு.மு. (ப. 16)

ஸ்காட்லாந்து நாட்டில் உள்ள Institute of Management Development எனும் நிறுவனம் வழங்கும் சர்வதேச விருது IMD. மூன்று தலைமுறைகளுக்கும் மேலாக ஒரே குடும்பத்தினரால் திறம்பட நிருவகிக்கப் பெறும் தொழில் நிறுவனங்களுக்கு இவ்விருது வழங்கப்பெறுகிறது. இதுவரை மேற்கத்திய நாட்டு நிறுவனங்களுக்கே வழங்கப்பெற்று வந்த இவ்விருது கடந்த ஆண்டு (2001இல்) முருகப்பா குழும நிறுவனங்கட்கு வழங்கப்பெற்றது. இந்தியாவில் IMD விருதினைப் பெறும் முதல் நிறுவனம் நகரத்தார் குடும்ப நிறுவனம் என்பது நினைந்து மகிழத்தக்கது.

ஆவுடையப்பன், இராம. (ப. 35)

25-11-2000 அன்று தமிழ்நாடு அரசு இவருக்குக் கலைமாமணி பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

இராமசாமி, டாக்டர். மு.அ.மு. (ப. 49)

கல்வி, தொழில், விளையாட்டு, கலை மற்றும் பண்பாட்டுத் துறைகளில் இவர் ஆற்றிய தொண்டுகளைப் பாராட்டி, அண்ணா பல்கலைக்கழகம் 7-9-2001 அன்று இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

இலக்குமணன், நீதியரசர், அரு. (ப. 61)

29-5-1999இல் இராஜஸ்தான் மாநிலத் தலைமை நீதிபதியாக ஜெய்ப்பூரில் பொறுப்பேற்றார். 1-11-2001 முதல் ஆந்திர மாநிலத்தின் தலைமை நீதிபதியாக ஹைதராபாத்தில் பணியாற்றி வருகிறார்.

சொக்கலிங்கம், நீதியரசர். மெ. (ப. 215)



இவர் செப்டம்பர், 2000 இல் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப் பெற்றுள்ளார். நகரத்தார் சமூகத்தில் 1990இல் நீதியரசர் அரு. இலக்குமணன் உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியமர்த்தப் பெற்றதை அடுத்து, அந்த உயர்பதவியைப் பெறும் இரண்டாமவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழண்ணல் (ப. 222)

சாகித்திய அகாதமியைப் போல, அரசு சார்ந்த இலக்கிய அமைப்பு ஒன்றை உருவாக்க நினைத்த தமிழக அரசு "குறள் பீடம்" என்ற அமைப்பை உருவாக்கியது. அதன் தலைவராகத் தமிழக முதல்வரும், துணைத்தலைவராக மொழியறிஞர் ஒருவரும் அமைவர் என்பது அவ்வமைப்பின் விதி முறைகளாகும். அந்த அடிப்படையில் தமிழக அரசு, இவரைத் தேர்ந்தெடுத்து, குறள் பீடத்தின் முதல் துணைத் தலைவராகப் பணியமர்த்தியது. இது இவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமைக்கும், அறிவார்ந்த தமிழ்ப் பற்றிற்கும் கிடைத்த அங்கீகாரமும், சிறப்பும் ஆகும்.

தமிழ் வழிக் கல்வியை மழலையர் வகுப்பிலிருந்து கட்டாயமாக்க வேண்டும்

Koviloor Digital Library

என்ற கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ச் சான்றோர்கள் சென்னையில் உண்ணாநோன்பு இருந்த போது, அதற்குத் தலைமையேற்று உண்ணாநோன்பு இருந்த சிறப்பும் இவருக்குரியது.

முத்தையா, அ.சி. (ப. 376)

1999 செப்டம்பர் முதல் *2001* செப்டம்பர் முடிய, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட சிறப்புடையவர்.

மெய்யப்பன், பதிப்புச் செம்மல் டாக்டர் ச. (ப. 387)

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை தன் *90* ஆவது ஆண்டு முத்து விழாவில் இவருக்கு *21-8-1999* அன்று "செந்தமிழ் மணி" பட்டம் வழங்கியது.

கோவை நன்னெறிக் கழகம் *24-10-1999* அன்று "தமிழ் நெறிச் செம்மல்" பட்டம் வழங்கியது.

புதுதில்லியில் உள்ள அனைத்திந்தியத் தொழில் வளர்ச்சிக் கழகம் (All India Business Development Association) *2000* ஆண்டுக்கான தேசிய வளர்ச்சி விருதினை (National Growth Award, *2000*) *27-4-2001* அன்று இவருக்கு வழங்கிச் சிறப்பித்தது.

திருச்சி தமிழ்ச் சங்கம் 'மீனாட்சி சுந்தரம் பிள்ளை விருதினை" *28-7-2001* இல் வழங்கியது.

தருமபுர ஆதீனம் "செந்தமிழ்க் காவலர்" பட்டத்தை *28-8-2001* அன்று வழங்கியது.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் இராமதாசு அவர்களால் நிறுவப் பெற்ற "பொங்கு தமிழ் அறக்கட்டளை" *25-2-2002* அன்று இவரைப்பாராட்டிச் சிறப்பித்தது.

தமிழக அரசு "குறள் பீடம்" அமைத்த பொழுது இவரை அதில் ஓர் உறுப்பி னராக நியமித்தது.

காரைக்குடி கம்பன் கழகம் தன் அறங்காவலர் குழுவில் இவரை ஓர் உறுப்பினராக ஆக்கிச் சிறப்பித்துள்ளது.

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியின் பாடத் திட்டக்குழு உறுப்பினராக நியமிக்கப் பெற்றுள்ளார்.

1999 சனவரியில் தொடங்கப்பெற்ற இரு திங்கள் இதழ் வள்ளுவம். ஆய்வு நோக்கில் வெளிவரும் இந்த இதழின் சிறப்பாசிரியர் இவர்.

மெய்யப்பன் தமிழாய்வகத்தை (த.க) *2000* அக்டோபரில் நிறுவியது இவரது வாழ்க்கைச் சாதனையாகும்.

வெள்ளையப்பன், இராம (ப. 406)

தமிழக அரசு இவருக்கு *25-11-2000* அன்று கலைமாமணி பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

சேர்க்கை - புதிய கட்டுரைகள்

அண்ணாமலை நகரில் ஐயப்பன் கோவில்



அண்ணாமலை பல்கலைக்கழக இணை வேந்தர் டாக்டர். மு.அ.மு. இராமசாமி ஐயப்பன் அறநிலை என்ற ஓர் அமைப்பை நிறுவினார். அந்த அறநிலை அண்ணாமலை நகரில் மருத்துவக் கல்லூரிக்கும் மருத்துவ மனைக்கும் இடையே அமைந்துள்ள பரந்து விரிந்த நிலப்பரப்பில் ஐயப்பன் கோவிலை அமைத்துள்ளது.

29-1-2001 அன்று முதல் குடமுழுக்கு விழா சீரோடும், சிறப்போடும் நடை பெற்றது. சென்னை வடசபரி ஆலயத்தை உருவாக்கிய மு.அ.மு. இராமசாமி அவர்கள் இத்திருக்கோவிலைச் சிறப்பாக அமைத்துள்ளார்கள். இறைவழிபாட்டிற் குரிய இயற்கைச் சூழல் : வேலைப்பாடுமிக்க தோரண வாயில்; பூக்கள் மலர்ந்த சோலை, முறைப்படி பூசைகள், ஆன்மீகச் சொற் பொழிவுகட்காக, அருகில் ஒரு சமுதாயக் கூடம். கேரளாவில் உள்ளது போல

Koviloor Digital Library

ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதி சிறப்பு அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

இங்கு பூசனை வழிபாடுகட்கு வரும் பக்தர் கூட்டம் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. கல்விக் கோவிலில் கடவுளுக்கு ஒரு திருக்கோவில். ஐயப்ப பக்தர்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

அண்ணாமலை, வே., (16-9-1925)

பிள்ளையார்பட்டி
வலையபட்டி
தமிழ்ப்பேராசிரியர்

வேங்கடாசலம் செட்டியார் - தெய்வானை ஆச்சி மகன். தமிழ்வள்ளல் சேவு. மெய்யப்ப செட்டியார் உதவியால் வித்துவான், பி.லிட்., எம்.ஏ. பட்டம் பெற்றவர். விருதுநகர், கே.வி. சாலை உயர்நிலைப்பள்ளி, கண்டனூர் சிட்டாள் ஆச்சி உயர்நிலைப்பள்ளி, தேவகோட்டை நகரத்தார் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றியவர். 1984இல் ஓய்வு பெற்றபின் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற் புலத்தில் நான்காண்டுகள் ஆய்வு மேற்கொண்டு சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம் தொகுத்தார். இது இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. தமிழ்ச் சுவை, தேமதுரத் தமிழ், கவிதைச் செல்வம் போன்றவை இவர் எழுதிய பிற நூல்கள்.

ஆச்சி வந்தாச்சு

மதுரையிலிருந்து வெளிவரும் நகரத்தார் சமூக மாத இதழ். 2000 ஆவது ஆண்டு செப்டம்பர்த் திங்களில் தொடங்கப் பெற்ற இவ்விதழ் மாதந் தோறும் 15ஆம் நாள் வெளிவருகிறது.

நாச்சியார்புரம் நா. பழனியப்பன். இதன் ஆசிரியர், வெளியீட்டாளர், உரிமையாளர் ஆவார். டிசம்பர், 2000 இதழிலிருந்து துணை ஆசிரியர் பொறுப் பினை 'எல்லெஸ்' என அழைக்கப்பெறும் ஒக்கூர் எல். சுந்தரம் ஏற்றுள்ளார். பிப்ரவரி, 2001 முதல் சிறப்பாசிரியர் என உ. சிறுவயல் மக்கள் கவிஞர் அரு. நாகப்பன் பெயரைத் தாங்கி வருகிறது.

தொடக்கத்தில் தனி இதழின் விலை குறிப்பிடப் படவில்லை. ஆண்டுச் சந்தா ரூ. 150.00. வெளிநாட்டுச் சந்தா ரூ. 600.00 என மட்டும் குறிப்பிடப்பெற்றது. ஏப்ரல், 2001 இதழ் முதல், விலை ரூ. 12.50; ஆண்டுச் சந்தா ரூ. 150.00 எனக் குறிப்பிடப்படுகிறது.

அட்டையில் தமிழ் இலக்கிய மாத இதழ் எனக் குறிப்பிடப்படுகிறது. முகப்புப் பக்கத்தில் மேல் இடப்புற மூலையில் ஒரு வட்டத்திற்குள் கற்பக விநாயகர் படமும், அதற்கு மேலே, 'எண்ணம்போல் வாழ்வு' என்பதும், கீழே 'முயற்சி திருவினையாக்கும்' என்பதும் இதழின் இலச்சினையாக அமைகின்றன.

"உங்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு தனித்திறமை இருக்கிறது. அதை வெளிக் கொண்டு வருவதும், வாழ்க்கைத் துணை தேடுவோம் வாரீர் என்ற தலைப்பில் திருமணச் சேவையும், சமுதாயப் பணி ஆற்றுவதும் எங்கள் இதழின் முக்கிய நோக்கம் ஆகும்" என முதல் இதழின் தலையங்கம் அறிவிக்கிறது.

டெம்மி 1 x 8 அளவில் மாதம் தோறும் 64 பக்கங்களுடன் வெளிவந்த இதழ் இப்போது 72 பக்கங்களுடன் வெளி வருகிறது. நகரத்தார் சமூகம் தொடர்பான இன்றியமையாத செய்திகளின் பதிவு ஆவணமாக இவ்விதழ் இலங்குகிறது.

ஆர்த்தி, இரா. (28-6-1981)

இரணிக் கோவில்
இராயவரம்
விளையாட்டு வீராங்கனை

சே. இராமசாமி செட்டியார் - அலமேலு ஆச்சியின் மகள். தனது ஒன்பதாவது வயதில் சதுரங்கம் விளையாடத் தொடங்கினார். பின்வரும் போட்டிகளில் தேசிய அளவில் வெற்றி பெற்றுள்ளார்.

1993 - பாலக்காடு - *12* வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு

1995 - மும்பை - *14* வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு

1995 - திருச்சூர் - *16* வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு

1998 - பிகானீர் - *18* வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு

1999 - இம்பால் - *18* வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவு.

Koviloor Digital Library

1997இல் 16வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் ஆசியச் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். 1999இல் 18 வயதிற்குட் பட்ட பெண்கள் பிரிவில் உலகச் சாம்பியன் பட்டம் வென்று 'பெண்கள் சர்வதேச மாஸ்டர்' விருதைப் பெற்றார். பல்கலைக் கழகங்கட்கு இடையேயான போட்டியில் இவரை உறுப்பினராகக் கொண்ட சென்னைப் பல்கலைக்கழகக் குழு முதலிடம் பெற்றது.

அறிவுக்கூர்மையோடு விளையாட வேண்டிய சதுரங்க விளையாட்டில் உலக அளவில் வீராங்கனையாகத் திகழும் முதல் நகரத்தார் பெண்ணாவார் இவர்.

இராம் மோகன், அழகப்பா. (11-5-1939)

மாத்தூர் - அரும்பாக்கூர்
கானாடு காத்தான்
சமூகத்தொண்டர்

அழகப்பசெட்டியார் மகன். அமெரிக்கா வில் பொறியியல் பட்டம் பெற்றவர். சிகாகோ மார்கன் ஸ்டேன்லி நிறுவனத்தில் உயர் பதவியாளர். உலகத் தமிழ்மொழி அறக்கட்டளையை நிறுவியவர். தமிழ் மூலமும் ஆங்கில மொழிபெயர்ப்பும் விளக்கப் படங்களும் அடங்கிய திருக்குறள் பதிப்பு ஒன்றைப் பைபிள் போலவே மிகச் சிறப்பாக வடிவமைத்து 2000 ஆவது ஆண்டில் செம்பதிப்பாக வெளியிட்டுள்ளார்.

தமிழ் இசையைப் புத்தாக்கம் செய்யும் முயற்சியில் திருக்குறள், சங்க இலக்கியம் ஆகியவற்றின் தேர்ந்தெடுத்த பாடல்களைத் தமிழ்ப்பண் முறைப்படி பாடச்செய்து குறுந்தகடுகளாக வெளியிட்டுள்ளார்.

தமிழ்வட்டம் எனும் பெயரில் உலகெங்கும் உள்ள முக்கிய நகரங்களில் ஒரு நூலகமும் வாசகர் அரங்கும் கொண்ட வள்ளுவர் கல்வி மையங்களை அமைக்கத் திட்டமிட்டு மூன்று மையங்களைத் தொடங்கியுள்ளார். சிறந்த அறிவியல் நூல்களைத் தமிழில் வெளியிடும் திட்டத்தில் ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய ஆங்கில நூலைக் 'காலம் ஒரு வரலாற்றுச் சுருக்கம்' எனும் தமிழ்நூலாக வெளி யிட்டுள்ளார். வடஅமெரிக்கா, கனடா தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு இவரது பத்தாண்டுத் தமிழ்ச்சமூகச் சேவையைப் பாராட்டிச் சிறப்பித்துள்ளது.

வெளிநாட்டில் வாழ்ந்து வேறு துறையில் பணியாற்றினாலும் துறை தோறும் துறைதோறும் தமிழுக்குத் தொண்டு செய்யத் தொடர்ந்து பாடுபட்டு வரும் தமிழ்த்தொண்டர் இவர்.

கண்ணதாசன் நினைவு இல்லம்

சிறுகூடற்பட்டியில் கவியரசு கண்ணதாசன் பிறந்து வளர்ந்த இல்லத்தை அவரது நினைவு இல்லமாக அமைத்து அதன் திறப்புவிழா 24-6-2001 அன்று நடை பெற்றது. இதற்கான முழுமுயற்சியை எடுத்துச் செயல்படுத்தியவர். கவியரசரின் தமையனார் அழ. சீனிவாசனின் மகனான அழ.சீ. கண்ணப்பன் ஆவார். ஊரின் மையப்பகுதியில் கவியரசரது மார்பளவு உருவச்சிலையும் திறந்து வைக்கப்பெற்றது.

கவியரசர் பிறந்து வளர்ந்த வீடு அப்போது எப்படியிருந்ததோ அதேபோல மீட்டுருவாக்கம் செய்யப்பெற்றுள்ளது. அவர் பள்ளியில் பயன்படுத்திய புத்தகங்கள் நோட்டுக்கள் அவர் கைப்பட எழுதிய கடிதங்கள் போன்றவை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு கவியரசர் நினைவாகக் கவியரசர் கண்ணதாசன் மணிமண்ட பத்தைக் காரைக்குடியில் அமைத்துள்ளது. அவரது குடும்பத்தினர் அவர் பிறந்து வளர்ந்த இல்லத்தை நினைவு இல்லமாக அமைத்துள்ளனர்.

கருப்பன் செட்டியார், நா. (20-4-1927)

இலுப்பைக்குடி
கீழப்பூங்குடி
பொறியியல் வல்லுநர் - நிர்வாகி

கூ.கரு.நா. சித. நாராயணன் செட்டியார் - விசாலாட்சி ஆச்சியின் மகன். அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் இயந்திரப் பொறியியல் பட்டமும், சென்னை ஐ.ஐ.டி.யில் தொழிற்சாலைப் பொறியியல் பட்டயமும் பெற்றவர்.

1949இல் தமிழ்நாடு அரசுப் பொதுப் பணித்துறையில் பொறியாளராகப் பணி தொடங்கினார். 1957இல் நெய்வேலி பழுப்பு நிலக்கரி வாரியத்திற்கு இவரது பணி மாற்றப்பெற்றது. அங்கு படிப்படியாக உயர்ந்த இவர், நிருவாக இயக்குநராகச் சில ஆண்டுகள் பணியாற்றி 1985இல் ஓய்வு

Koviloor Digital Library

பெற்றார். அவ்வாரியத்தில் பணியாள ராகச் சேர்ந்து, நிருவாகக்குழு வரை உயர்வு பெற்ற முதல் பணியாளர் என்ற சிறப்பு இவருக்குரியது. இவர் நிருவாக இயக்கு நராகப் பணியாற்றிய காலத்தில் பழுப்பு நிலக்கரி வாரியம் இந்தியப் பொதுத்துறை நிறுவனங்களில் உயர் வரிசை நிறுவனமாக உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் ம.கா. பல்கலைக் கழகத்தின் மேலாண்மைத் துறையிலும், தொழில் முனைவோர் கல்விமையத்திலும் அழைப்புப் பேராசிரி யராகப் பணியாற்றி வருகிறார்.

இந்திய ஸ்டேட் வங்கியில் தொழில் நுணுக்க ஆலோசனைக் குழு உறுப்பின ராகவும், மதுரை வங்கியில் இயக்குநராக வும் பணியாற்றியுள்ளார்.

மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து, ஹாலந்து, டென்மார்க், பிரான்சு, ஆஸ்திரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகட்குப் பலமுறை தொழில் பயணம் மேற்கொண்டவர்.

இந்தியப் பொதுத்துறை நிறுவனங் களுள் ஒன்றில் உயர்பதவி வகித்து அதன் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் துணை நின்று, குறிப்பிடத்தக்க சிறப்பினைப் பெறச் செய்த இவரது ஆற்றல் பலராலும் போற்றப்படுகிறது.

கிருஷ்ணன், டாக்டர். நா. (23-10-1954)

மாத்தூர் - மண்ணூர்
கோட்டையூர்
கண் மருத்துவர்

மெ.நா. நாராயணன் செட்டியார் - உண்ணாமலை ஆச்சி மகன் இவர் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இளநிலை மருத்துவப் (*1973 - 79*) பட்டம் (M.B.,B.S.) பெற்றார். பொது மருத்துவம் மற்றும் அவசர இருதய மருத்துவத்தில் பயிற்சி பெற்று வந்த இவர் தன் தாயார் கண் நோயினால் பாதிக்கப் பட்டதைத் தொடர்ந்து கண்மருத்துவத்தில் ஆர்வம் கொண்டு ஸ்டான்லி மருத்துவ மனை (*1983-84*) மற்றும் திருச்சி ஜோசப் கண் மருத்துவமனை (*1985-86*)இல் பயிற்சி மேற்கொண்டார். இளநிலை (Diploma) மற்றும் முதுநிலைக் (Post - Graduate Degree) கண் மருத்துவப் பட்டத்தை மைசூர் பல்கலைக்கழக ஜே.ஜே.எம். மருத்துவக் கல்லூரியில் (*1986-1988*) பெற்றார்.

சங்கர நேத்ராலயாவில் (*1989-1994*) கண் மருத்துவ ஆலோசகரானார். (Consultant) கண்நீர் அழுத்த நோய் (Glaucoma) மற்றும் லேசர் மருத்துவ முறையில் சிறப்புப் பயிற்சி (Fellowship) பெற்று அந்தத் துறையில் சிறப்பு அறுவை மருத்துவ நிபுணராகச் சங்கர நேத்ராலயாவில் பணியாற்றினார். அங்கு பணியாற்றுகையில் Quality control, research ethical committe உறுப்பினராகப் பணி யாற்றும் வாய்ப்பு கிட்டியது. இளநிலை, முதுநிலை மற்றும் F.R.C.S. (Edin) கண்மருத்துவ மேற்படிப்புக்கான சங்கர நேத்ராலயாவின் ஆசிரியர் குழுவில் (Teaching Faculty) உறுப்பினராகப் பணியாற்றினார்.

*1989*இல் புது டில்லியில் அகில இந்திய கண் டாக்டர்கள் மகாநாட்டில் Recent Advances in Diagnosis of Glaucoma என்ற தலைப்பில் "Nerve Fibre Layer Evaluation" என்பதைப் பற்றி ஆற்றிய சொற்பொழிவு கண் நீர் அழுத்த நோய் வரும் முன் கண்டுபிடிப்பது எப்படி என்ற புதிய நவீன யுக்தியை முதன்முறையாக இந்தியாவில் அனைவரும் எளிதில் அறிந்து கொள்ளச் செய்வதாக அமைநத்து.

1990 Mitomycin-C-in Recalcitrent glaucoma என்ற ஆராய்ச்சி (Clinical Research) American Academy of Ophthalmology-யால் சிறந்த ஆராய்ச்சிக்கான விருதைப் பெற்றது. இதுவே American Academy of Opthalmology யால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதல் இந்திய ஆராய்ச்சிக் கட்டுரையாகும்.

*1992*இல் கண் நீர் அழுத்த நோய் பற்றிய இவரது கட்டுரை சிங்கப்பூரில் சிங்கப்பூர் நேஷனல் கண் மையத்தில் (Singapore National Eye Centre) நடந்த கருத்தரங்கில் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கான விருதைப் பெற்றது.

சிறந்த மருத்துவருக்கான தன்வந்திரி விருது இவருக்குச்சுகர் மார்க்கண்டேயன் மருத்துவ ஆராய்ச்சி மையத்தால் வழங்கப்பட்டது.

Koviloor Digital Library

ப்ரண்ட் லைன் கண் மருத்துவமனையை ஏழு ஆண்டுகளாக நடத்தி வருகிறார். நவீன கண் அறுவை மருத்துவமும் லேசர் முறை மருத்துவமும் திறமையாகச் செய்து வரும் இவர் மாதந்தோறும் இறுதி ஞாயிற்றுக் கிழமை அன்று வசதியற்றவர்களுக்கு இலவச கண் சிகிச்சை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி

பல ஊர்களைச் சேர்ந்த திருச்சியில் வாழும் நகரத்தார்கள் இணைந்து உருவாக்கியது செட்டிநாடு கல்வி அறக்கட்டளை.

செட்டிநாடு கல்வி அறக்கட்டளை யினரால், செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி 2000-2001 ஆம் கல்வி ஆண்டில் ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பெற்றது. கல்லூரியின் தொடக்க விழா 7-9-2000 அன்று நடைபெற்றது. மாநில அமைச்சர் கே.என்.நேரு கல்லூரியினைத் தொடக்கி வைத்தார்.

அறக்கட்டளையில் அறுபதிற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையாகவும், ரூ. ஐம்பதாயிரம் வட்டியில்லாக் கடனாகவும் அளித்துள்ளார்கள். செட்டி நாடு கல்வி அறக்கட்டளை மற்றும் செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரியின் நிர்வாகக் குழுவினராகக் கீழ்க்கண்டவர்கள் சிறப்புறப் பணியாற்றி வருகின்றார்கள்.

SP. காசி செட்டியார், தலைவர் (ராயவரம்),

M. செல்லப்பன், துணைத்தலைவர் (ராயவரம்),

AR. அண்ணாமலை செட்டியார், துணைத்தலைவர் (பள்ளத்தூர்),

M. அடைக்கலவன், செயலாளர் (விராச்சிலை),

RM. அழகப்பன், இணைச் செயலாளர் (கோட்டையூர்),

L.N. லெட்சுமணன், பொருளாளர் (வேந்தன்பட்டி).

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் PR. கற்பககணபதி அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கிய முதல் ஆண்டில் B.Com., B.Sc., (Com. Science) மற்றும் B.C.A. ஆகிய வகுப்புகள் இருந்தன. அடுத்த ஆண்டிலேயே B.Sc., (IT) மற்றும் M.S. (Information, Technology) பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் தொடங்கப் பெற்றன. இருபத்தைந்திற்கு மேற்பட்ட ஆசிரிய, ஆசிரியைகள் சிறப்புறப் பணி யாற்றி வருகின்றனர்.

திருச்சி மாநகரின் மையப்பகுதியான கண்டோன்மெண்ட் பகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரிக்குத் திருச்சி மாநகருக்குட்பட்ட பிராட்டியூர் என்ற இடத்தில் நான்கரை ஏக்கர் நிலம் வாங்கப் பெற்றுள்ளது. விரைவில் கட்டட வேலைகள் தொடங்கப்பெற உள்ளன. புதிதாக B.B.A., B.Sc., (Maths) வகுப்புகளும் இந்த ஆண்டிலேயே தொடங்க பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் அனுமதி கோரப் பெற்றுள்ளது.

நகரத்தார்களின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிக்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

சென்னையில் ஐயப்பன் கோவில்

இராசா சர் குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர். மு.அ.மு. இராமசாமி அவர்கள் ஆண்டு தோறும் சபரிமலை சென்று வழிபட்டு வந்த நேரத்தில், சென்னை யிலேயே ஓர் ஐயப்பன் கோவிலைக் கட்டவேண்டும் என்ற விருப்பம் அவருக்கு ஏற்பட்டது. ஐயப்பசாமி கோவில் அறநிலை ஒன்றை உருவாக்கினார். அந்த அறநிலை, இராசா அண்ணாமலை புரத்தில், அடையாறு அரண்மனை என அழைக்கப்பெறும் இராசா சர் குடும்ப இல்லத்திற்கு அருகே 3 ஏக்கர் நிலப் பரப்பில் ஐயப்பன் ஆலயத்தை எழுப்பியது.

நாகராஜா, கன்னிமூலை கணபதி, பஞ்சமாதா, பெரிய கருப்பசாமி, சின்னக் கருப்பர் ஆகியோருக்குத் தனித்தனிச் சன்னதிகள் உள. மையத்தில் 18 படிகளுடன் கூடிய ஐயப்பன் திருக்கோவில், சபரிமலை யில் உள்ள ஆலயத்தின் மாதிரியாகவே வடிவமைக்கப் பெற்றுள்ளது.

கோவில் கட்டுமானப் பணிகள் நிறைவுற்று, முதல் குடமுழுக்கு 29-1-1982 இல் நடைபெற்றது. அன்று முதல்

Koviloor Digital Library

நாள்தோறும் ஆறுகாலப் பூசை நடைபெற்று வருகிறது.

இது வடசபரி என அழைக்கப்படுகிறது. சபரிக்குச் செல்ல இயலாத எளிய மக்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை இங்கே வந்து நிறைவேற்றுகின்றனர். சென்னை வாழ் ஐயப்ப பக்தர்களுக்கு இக்கோவில் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

நகரத்தார் ஆலயத்திருப்பணி வரலாற்றில் இது ஒரு குறிப்பிடத்தக்க திருப்பணி யாகும்.

சென்னையில் முதியோர் இல்லம்:

துவார் அருள்மிகு வள்ளிநாயக சுவாமி திருக்கோவிலில் உள்ள அருள்மிகு அடைக் கம்மையைக் குலதெய்வமாக வணங்குகிற வர்கள் 32 ஊர்களைச் சேர்ந்த நகரத்தார்கள். அவர்களுள் பணி காரணமாகச் சென்னையில் வாழ்ந்து கொண்டிருக்கும், பல்வேறு ஊர்களைச் சேர்ந்த 60 புள்ளிகள் இணைந்து அடைக்காத்தாள் நற்பணி மன்றம் என்ற அமைப்பை உருவாக்கினர். அந்த அமைப்பின் சார்பில், நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த முதியோர்களைப் பராமரிக்க ஒரு முதியோர் இல்லத்தைச் சென்னையில் நடத்தி வருகின்றனர்.

நற்பணி மன்ற உறுப்பினரான சொக்கலிங்கம்புதூர் கே. ஆர். சுப்பையா, தமக்குச் சொந்தமான இல்லத்தை வாடகை இல்லாமல், தந்துதவ முன்வந்தார். வளசர வாக்கம் பழநியப்பா நகரில் உள்ள இந்த இல்லத்தில் 21-11-2000 அன்று முதியோர் இல்லம் தொடங்கப்பெற்றது.

இவ்வில்லத்தில் உறைவோரின் உணவுத் தேவைக்கான அரிசியை, நற்பணி மன்ற உறுப்பினர் நெற்குப்பை வைரவன் நன்கொடையாகத் தந்து வருகிறார். பொருள் நன்கொடையும் பலர் செய்துளர். கண்டர மாணிக்கம் உலகப்ப செட்டியார் இதற்காக ரூபாய் ஒரு லட்சம் நன்கொடை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தங்க வரும் நகரத்தார் சமூக முதியோரும், அவர்தம் உறவினரும் சுய மரியாதை குறையாமல் தங்க விரும்புவர் என்ற காரணத்தினால், ஒருவர் தங்கவேண்டு மானால், திரும்பப் பெறத்தக்க வைப்பு நிதியாக ரூபாய் ஆயிரமும் மாதந்தோறும் கட்டணமாக ரூபாய் 300உம் செலுத்த வேண்டுமென விதி அமைத்துள்ளனர்.

இப்போது இவ்வில்லத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட முதியோர்கள் (இருபாலாரும்) தங்கியிருக்கிறார்கள். கடந்த ஒன்றரை யாண்டுக் காலமாக இவ்வில்லம் நல்ல முறையில் சமுதாயத் தொண்டாற்றி வருகிறது.

சோலையப்பன், கதி.சோ. (22-3-1940)

இரணிக்கோவில்
பள்ளத்தூர்
குழுமச் செயலாளர்

கதி.சோலையப்ப செட்டியார் நாச்சம்மை ஆச்சியின் மகன். பி.காம்; டி.பி.எம்; ஏ.சி.எஸ். ஆகிய பட்டங்களைப் பெற்ற இவர் நகரத்தார் சமூகத்தில் இருந்து குழுமச் செயலாளராக (Company Secretary)த்தகுதி பெற்ற முதல் செயலாளர் ஆவார். குழுமச் செயலாளர்களின் இந்திய நிறுவனத்தின் சேலப் பிரிவின் தலைவர் இவர். (Salem Chapter of Institute of Company Secretaries of India) சேலம் கவியரசர் கண்ணதாசன் நற்பணி மன்றச் செயலாளராகவும் இருந்து வருகிறார்.

தியாகராசன், டாக்டர். க. (10-7-1941)

வைரவன் கோவில்
மகிபாலன்பட்டி
தமிழ்ப்பேராசிரியர்

மகாமகோபாத்தியாய பண்டிதமணி. மு. கதிரேசன் செட்டியார் மீனாட்சி ஆச்சியின் மகன். 1964 இல் எம்.ஒ. எல் பட்டம் பெற்ற இவர், "பண்டிதமணியின் தமிழ்ப்பணி" என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு 1989 இல் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் முனைவர் பட்டம் பெற்றார். இவரது ஆய்வேடு நூலாக வெளி வந்துள்ளது.

இவர் அண்ணாமலை பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் 1964ஆம் ஆண்டு விரிவுரையாளராகப் பணி தொடங்கினார். படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று 1999 இல் துறைத்தலைவர் மற்றும் புல முதன்மையர் ஆக உயர்ந்தார்; அண்ணா மலை பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராகவும் உள்ளார்.

Koviloor Digital Library

நகரத்தார் பெருமக்கள் வாழ்க்கை வரலாறு

பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் நூல் வடிவம் பெறுவது பின்வரும் தலைமுறையினருக்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டுதலாகவும் அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் என்பர். அத்தகு தலைமைச் சிறப்பும் வழிகாட்டும் பண்புகளும் உள்ளவர்தம் வாழ்க்கை வரலாற்று நூல்களே இலக்கிய உலகில் நிலை பெறுகின்றன.

நகரத்தார் பெருமக்களுள் பதிவுசெய்யத் தக்க சிறப்பான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் பலர். அவர்களுள் 25 பெருமக்களுடைய வாழ்க்கை வரலாறுகள் நூல்வடிவம் பெற்று உலவுகின்றன. ஒரு சிறிய சமூகத்தைச் சேர்ந்த மக்களுள் இந்த அளவு மிகுதியான எண்ணிக்கையில் வாழ்க்கை வரலாற்று நூல்கள் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அது நகரத்தார்களின் தலைமைப் பண்பையும் சாதனைச் சிறப்பையும் புலப்படுத்தும்.

வாழ்க்கை வரலாற்று நூல்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. வரலாற்று நாயகர் பெயர், நூலாசிரியர் பெயர், நூலின் தலைப்பு, வெளியீட்டாளர், வெளியான ஆண்டு விவரங்கள் தரப்பட்டுள்ளன. வரலாற்று நாயகரின் பெயர் அகர வரிசைப்படி பட்டியல் அமைந்துள்ளது.

1. அண்ணாமலை செட்டியார், டாக்டர். இராசா. சர். மு - இராமநாதன் செட்டியார், லெப.கரு - அண்ணாமலை அரசர் - வெள்ளையன் பதிப்பகம்.
2. அண்ணாமலை செட்டியார், டாக்டர். இராசா. சர். மு - சுத்தானந்த பாரதி - அண்ணாமலை அரசர்.
3. அண்ணாமலை செட்டியார், டாக்டர். இராசா. சர். மு. - Nagarajan, K - Raja Sir Annamalai Chettiar - Annamalai University 1983.
4. அருணாசலம், மு.வெ. - Chensal Rao, P- Recalling MV - Vellayan Chettiar Trust - November, 1997
5. அழகப்ப செட்டியார், டாக்டர். இராம - குழந்தைநாதன், சு - கோடிகொடுத்த கொடைஞன் - மணிவாசகர் பதிப்பகம் - 9.4.2000
6. அழகப்ப செட்டியார், டாக்டர். இராம - சோமசுந்தரம் அரு - வள்ளல் அழகப்பர் - பொன்முடி பதிப்பகம்.
7. இராமசாமி. டாக்டர். மு.அ.மு. - தேனப்பன். வ - வெற்றிச் செல்வர் - தேன்வள்ளியம்மை பதிப்பகம் - 1991.
8. இராமநாதன் செட்டியார், பேராசிரியர், லெ.ப.கரு - இளவரசு, சோம - லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் - முத்தையா நிலையம்.
9. எஸ்.ஏ.பி. - ரங்கராஜன், ரா.கி - எடிட்டர் எ.ஸ்.ஏ.பி - வானதி பதிப்பகம் - ஜூன், 1995.
10. ஏ.கே. செட்டியார் - கந்தசாமி, சா - ஏ.கே. செட்டியார் - சாகித்ய அகாதமி - 2000
11. கண்ணதாசன், கவியரசர் - தன் வரலாறு- வனவாசம், மனவாசம் - வானதி பதிப்பகம்.
12. கதிரேசன் செட்டியார், பண்டிதமணி, மு - சோம. லெ - பண்டிதமணி - பூம்புகார் பதிப்பகம்.
13. கதிரேசன் செட்டியார், பண்டிதமணி, மு - முடியரசன் - ஊன்றுகோல் - சன்மார்க்க சபை - நூற்றாண்டுவிழா வெளியீடு - 1981.
14. சண்முகனார், குங்கிலியம், பழ - விமலானந்தம், மது. ச. - குங்கிலியம் சண்முகனார் - மணிவாசகர் பதிப்பகம். 17-7-1997
15. சண்முகனார், சீர்திருத்தச் செம்மல், வை.சு. - முடியரசன் - சீர்திருத்தச் செம்மல் வை.சு. சண்முகனார் - வானதி பதிப்பகம் - ஆகஸ்டு, 1990.
16. சுப்பையா. இராம - தன்வரலாறு - நானும் எனது திராவிட இயக்க நினைவுகளும் - தமிழ்ப் பண்ணை - நவம்பர், 1985.

Koviloor Digital Library

17. சேது. நாராயணன், டாக்டர், இராம - தன்வரலாறு - என்கதை - மணிவாசகர் பதிப்பகம் - மார்ச், 2001.

18. சொக்கலிங்கம், தமிழ்க்கடல். இராய - சுப்பு ரெட்டியார், ந - தமிழ்க்கடல் ராயசொ - மணிவாசகர் பதிப்பகம் - 1998.

19. சோம. லெ - நிர்மலா மோகன் - சோம. லெ - சாகித்ய அகாதமி.

20. சோம.லெ - மெய்யப்பன், ச - சோம.லெ - மணிவாசகர் பதிப்பகம் - 1988.

21. தமிழ்வாணன் - லியோ -மணிமேகலைப் பிரசுரம்.

22. தியாகராசன் செட்டியார், கலைத் தந்தை கருமுத்து - இராதா. தியாகராசன் - ஆலை அரசர் கருமுத்து தியாகராசர் - வானதி பதிப்பகம் - 17-2-1994.

23. தியாகராசன் செட்டியார், கலைத் தந்தை கருமுத்து - குழந்தைநாதன், சு - கலைத் தந்தை கருமுத்து. தியாகராசர் - கருமுத்து தி. மாணிக்க வாசகனார் மணிவிழாக் குழு - ஜூலை, 1980.

24. திருநாவுக்கரசு, வானதி. ஏ - தன் வரலாறு - வெற்றிப்படிகள் - வானதி பதிப்பகம் ஜூலை, 1997

25. பழநியப்ப செட்டியார். செ. மெ - செல்ல கணபதி - வானம் வசப்படும் - பழநியப்பா பிரதர்ஸ்.

26. மாணிக்கனார், டாக்டர். வ.சுப - சாரங்கபாணி, இரா- மாணிக்கச் செம்மல் மணிவாசகர் பதிப்பகம் - அக்டோபர், 1997.

27. மாணிக்கனார், டாக்டர். வ.சுப - மெய்யப்பன், ச - மாணிக்கனார் வாழ்வும் பணியும் - மணிவாசகர் பதிப்பகம் - 1989.

28. மாணிக்கனார், டாக்டர். வ.சுப - மோகன், இரா - வ.சுப. மாணிக்கம் - சாகித்ய அகாதமி, 1999.

29. முத்தப்ப செட்டியார், பாடுவார் - சொக்கலிங்கம், டாக்டர். தே - பாடுவார் முத்தப்பர் - பார்வதி பதிப்பகம் - ஆகஸ்டு, 1997.

30. முத்தையா, சுண - தன்வரலாறு - முடிவுகளே தொடக்கமாக - தமிழ்ப் புத்தகாலயம் - டிசம்பர், 1997.

31. முத்தையா செட்டியார், டாக்டர். இராசா. சர். மு. அ - அழகப்பன், ஆறு அறவிளக்கு அரசர் முத்தையா - வானதி பதிப்பகம் - 1983.

32. முத்தையா செட்டியார், டாக்டர். இராசா. சர். மு. அ - Nagarajan K - Dr. Raja Sir Muthiah Chettiar - A Biography - Annamalai University - 1989.

33. மெய்யப்ப செட்டியார், ஆவி - தன்வரலாறு - எனது வாழ்க்கை அனுபவங்கள் - வானதி பதிப்பகம் - மார்ச், 1974.

34. வள்ளியப்பா, குழந்தைக் கவிஞர். அழ., பூவண்ணன் - குழந்தைக் கவிஞரின் கதை - மணிவாசகர் பதிப்பகம் - 28-12-2001.

மங்கையர்க்கரசி ஆச்சி

...

கோனாபட்டு
கொடையாளர்

பள்ளத்தூரைச் சேர்ந்த சைவசித்தாந்தப் பேரறிஞர் கா. இராமனாதன் செட்டியார் மகள். கணிதத்தில் முது அறிவியல் பட்டம் பெற்று, சேலம் சாரதா கல்லூரியில் பேராசிரியையாகப் பணியாற்றியவர். தமது சென்னை இல்லத்தைத் திருச்சி நகரத்தார் அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

மீனா முத்தையா, குமாரராணி

இளையாத்தங்குடி - பட்டினசாமி
கானாடுகாத்தான்
கல்விச்சாலை நிறுவுநர்

செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியாரின் மூத்த மகன் முத்தையா அவர்களின் மனைவி. சென்னை அடையாறு பகுதியில் செட்டிநாடு வித்தியாசிரமம் எனும் மிகச் சிறந்த கல்வி நிறுவனத்தை நிறுவியுள்ளார்.

மெட்ரிகுலேசன் பள்ளியாக இது தொடங்கப்பெற்றது. இப்போது கல்லூரியாக உயர்த்தப்பெற்றுள்ளது. சென்னை நகரத்தில் முதல் தரமான கல்வி நிறுவனங்களில் குறிப்பிடத்தக்கதாக இது விளங்குகிறது.

Koviloor Digital Library

தஞ்சாவூர்க்கலைப்பள்ளி எனும் பெயரில் ஓவியப் பள்ளி ஒன்றையும் தொடங்கித் திறம்பட நடத்தி வருகிறார்.

அண்மையில் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் கலை தொடர்பான ஆய்வுக்காக முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

அரசின் கல்விக்குழுவில் உறுப்பினராக, அயல் நாடுகள் பலவற்றுக்குச் சென்று வந்துள்ளார்.

முடிவெடுப்பதிலும், வினை முடிப்பதிலும் வல்லவராகிய இவர் சிறந்த கல்வி நிருவாகி (Educational Administrator) யாகத் திகழ்கிறார்.

முத்தையா, டாக்டர். முரு. (9-7-1934)

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார்
கோட்டையூர்
மருத்துவர்

இராம. முருகப்ப செட்டியார் உமையாள் ஆச்சி மகன். மதுரை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்ட ஆண்டில் அங்கு பயின்று 1959இல் எம்.பி.பி.எஸ். பட்டமும் பின்னர் எம்.எஸ். பட்டமும் பெற்றவர். அரசு மருத்துவராகப் பணியாற்றி அறுவை மருத்துவப் பேராசிரியராக ஓய்வு பெற்றவர்.

செந்தில் முடநீக்கியல் ஆய்வு அறுவை மருத்துவ மையத்தை மதுரையில் நிறுவி நடத்திவருகிறார். இவர் மகன் அழகப்பன் முடநீக்கியல் மருத்துவப்பட்டம் பெற்று இம்மையத்தில் பணியாற்றுகிறார்.

காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத் தலைவராகவும் (1998-2001) அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கல்விக்குழு, ஆட்சிக்குழு உறுப்பின ராகவும் (1992-1998) இருந்தவர்.

இவரது முன்னோர் கோவிலூரில் வேதபாடசாலை நிறுவியுள்ளனர். கோவிலூர் ஆதீனகர்த்தர் அமைத்துள்ள நகரத்தார் கல்வி உதவிநிதி அறக்கட்டளையில் இவர் ஓர் அறங்காவலர்.

மெய்யப்பன் தமிழாய்வகம்

பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன் இளமைக் காலந்தொட்டு நூல்களை வாங்கித் தொகுக்கும் இயல்புடையவர் அவ்வாறு தொகுத்த நூல்கள் முறையாகப் பாதுகாக்கப்படுவதோடு தமிழ் ஆய்வாளர் களுக்குப் பயன்படவும் வேண்டும் என எண்ணினார். இதற்காக மெய்யப்பன் அறக்கட்டளையை நிறுவினார். இந்த அறக்கட்டளையின் ஒரு சிறப்பம்சமாக மெய்யப்பன் தமிழாய்வகம் உருவாயிற்று.

13-4-2000 அன்று மெய்யப்பன் தமிழாய்வகம் முறைப்படி பதிவு செய்யப் பெற்றது. இதற்காகவே சிதம்பரத்தில் கட்டப்பெற்ற புதிய கட்டிடத்தை சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் பொற்கோ 2000 அக்டோபரில் திறந்துவைத்தார். நூலகத்தை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் க.ப. அறவாணன் திறந்துவைத்தார்.

ஆய்வகத்தின் நோக்கம் :

1. இந்த நூற்றாண்டில் நடந்த ஆய்வு களைப் பதிவுசெய்வது
2. பல்கலைக்கழக ஆய்வேடுகளை வகைப் படுத்திப் பதிவு செய்வது
3. ஆராய்ச்சித் தடங்களை அடையாளம் காட்டுவது.
4. ஆராய்ச்சிமுடிவுகளை ஆவணப் படுத்துவது.
5. ஆராய்ச்சியின் வளர்ச்சி நிலைகளை உறுதி செய்வதும் இனிவரும் ஆய்வு களுக்கு அடித்தளம் அமைப்பதும்.

இப்பணிகளோடு அரிய ஆய்வு நூல்களை வெளியிடும் பணியையும் மேற்கொண்டு இதுவரை 52 நூல்களை வெளியிட்டுள்ளது.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை நூற்றாண்டுவிழாக் கருத்தரங்கினை இவ்வாய்வகம் சிறப்பாக நடத்தியது. இப்போது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு இணைந்து சிவப்பிரகாசர் நூற்றாண்டுவிழாக் கருத்தரங்கை நடத்த உள்ளது.

இக்கட்டிடம் 110 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்டது. இந்த ஆய்வு மையத்தில் பெரிய நூலகக் கட்டிடமும், படிப்பறைகளும், ஆய்வாளர்கள் தங்கு வதற்கான நவீன வசதிகளோடு கூடிய தங்கும் அறைகளும் அமைந்துள்ளன.

Koviloor Digital Library



இந்த ஆய்வகத்தின் நூலகத்தில் தமிழ் நூல்கள் 16,000, ஆங்கில நூல்கள் 2,000, வாழ்க்கை வரலாற்று நூல்கள் 1,500, ஆய்வுக்கோவை நூல்கள் 2,000, அச்சான ஆய்வேடுகள் 125, தட்டச்சுச் செய்யப் பெற்ற ஆய்வேடுகள் 75, அகராதி வகைகள் 60, வார, மாத இதழ்கள் 60, கலைக் களஞ்சிய வகைகள் 25 ஆகியவை உள்ளன.

உள்நாட்டிலிருந்தும், அயல் நாட்டி லிருந்தும் பேராசிரியர்களும், ஆய்வாளர் களும் பெருமளவில் இவ்வாய்வகத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். தமிழகத்தில் ஆய்வுப்பணி செய்யும் முதலாவது தனியார் ஆய்வுநிறுவனம் என்ற சிறப்புக்குரியது இவ்வாய்வகம்.

வள்ளியப்பா இலக்கிய வட்டம்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப் பாவால் உருவாக்கப் பெற்ற குழந்தைக் கவிஞர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் கவிஞர் செல்ல. கணபதி (த.க)யும், டாக்டர். பூவண்ணனும். இவர்கள் இருவரும் சேர்ந்து 28-11-1993அன்று வள்ளியப்பா இலக்கிய வட்டம் எனும் அமைப்பைத் தொடங்கினர்.

குழந்தை இலக்கியத்தை ஊக்குவித்து வளர்த்தல், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் இலக்கியத்தைப் பரப்புதல், குழந்தை எழுத்தாளர்களைப் பாராட்டிச் சிறப்பித்தல் என்பன இவ்வமைப்பின் நோக்கங்கள்.

அமைப்பாளர் இருவரையும், அவர்களால் மூன்றாண்டுகட்கொருமுறை நியமிக்கப் படும் ஆலோசகர்கள் அறுவரையும் கொண்டது இவ்வமைப்பு. இது ஓர் அறநிலை (Trust) ஆகப் பதிவு செய்யப் பெற்றுள்ளது.

வள்ளியப்பா இலக்கியவட்டம் ஆண்டு தோறும் வெவ்வேறு ஊர்களில் வள்ளியப்பா கலைஇலக்கியப் பெருவிழாவினை நடத்தி வருகிறது. இவ்விழாவில் சிறந்த குழந்தை எழுத்தாளருக்கு "வள்ளியப்பா இலக்கிய விருது", சிறந்த பதிப்பகத்தாருக்கு "வள்ளியப்பா பதிப்பாளர் விருது", குழந்தைகள் கலைப்போட்டியில் அதிக மதிப்பெண் பெறும் பள்ளிக்கு "வள்ளியப்பா கலைவிருது" ஆகிய விருதுகள் ஆண்டு தோறும் வழங்கப்பெறுகின்றன.

குழந்தைஇலக்கிய வரலாற்றில் குறிப் பிடத்தக்க தொண்டினைச் செய்து வரும் அமைப்பு இது.

Koviloor Digital Library

சேர்க்கை - செய்திகள்

உணவு வகைகள் (ப. 73)

சமையல் முறைகளில் ஒரு தனி முறையாக, செட்டிநாட்டுச் சமையல் முறை ஏற்கப்பட்டுள்ளது. செட்டிநாட்டுச் சமையல் முறைகளை விளக்கும் நூல்கள் பத்துக்கும் மேல் வெளிவந்துள்ளன.

சென்னை, கோவை போன்ற பெரு நகரங்களில் பல உணவுவிடுதிகளின் பெயர்ப்பலகைகள் 'செட்டிநாடு மெஸ்', 'செட்டி நாட்டுச் சமையல்' என்பது போன்ற பெயர்களைக் கொண்டு நிற்பது, வாடிக்கையாளர்களை ஈர்க்கப் பயன்படும் உத்தியாகவும் அமைந்துள்ளது.

நட்சத்திர உணவு விடுதிகளிலும், அண்மைக் காலமாகச் செட்டிநாட்டு உணவு வகைகள் என விவர அட்டையிலேயே தனியாகக் குறிப்பிட்டுச் சில உணவுவகைகள் வழங்கப் பட்டு வருகின்றன. அசைவ உணவு இவற்றுள் சிறப்பிடம் பெறுகிறது.

மரபுவழிப்பட்ட, உடல்நலத்திற்கு ஊறு விளைவிக்காத, தனித்தன்மைவாய்ந்த, சமையல் கலைநுட்பத்தோடு கூடிய சுவை யான உணவுவகைகள் என்ற அங்கிகாரம் செட்டிநாட்டு உணவுவகைகளுக்குக் கிடைத்துள்ளது.

கோவிலூர்த் திருமடம் (ப. 154)

தவத்திரு. நாச்சியப்ப ஞான தேசிக சாமிகள் தாம் ஆதீனகர்த்தராக ஆனவுடன், "சனாதன தரும உலகப் பல்கலைக்கழகம்" தொடங்கக் கருதி, அதன் உறுப்புக்களாகத் திருமுறைக் கல்லூரி, நாதசுர இசைக் கல்லூரி, வேத ஆகமக் கல்லூரி ஆகிய வற்றைத் தாம் பொறுப்பிற்கு வந்த 1995ஆம் ஆண்டே தொடங்கினார். அவற்றைத் தொடர்ந்து சிற்பக் கல்லூரி, தேர்வாகனக் கல்லூரி, திரு ஆபரணக் கல்லூரி, ஆலய அலங்காரக் கலைப்பொருள் கல்லூரி ஆகியவற்றையும் தொடங்கியுள்ளார்.

இவர் நிறுவத் திட்டமிட்டுள்ள பல்கலைக்கழகத்தின் இன்றியமையாத புலங்கள் எனக் கீழ்வருவனவற்றை வரை யறுத்துள்ளார்.

1. கோவில் சார்ந்த இந்தியப் புராதனக் கலைகளும், அறிவியலும்.
2. கோவில் சார்ந்த பழங்கால இசைக்கலை.
3. கோவில் சார்ந்த பழங்கால நடனக்கலை.
4. கோவில் சார்ந்த மரபுவழிப்பட்ட சிற்பக்கலை.
5. பழங்கால நூல்கள் (வேதம், ஆகமம், சில்பசாத்திரம்)
6. தற்சார்புடைய மருத்துவக்கலை (சித்தா, ஆயுர்வேதம், யூனானி).

இப்புலங்களைச் சார்ந்து இயங்கும் துணைப் புலங்களாக,

1. கணிப்பொறித் தொழில் நுணுக்கம்.
2. அச்சு மற்றும் பதிப்புக்கலை
3. கலைகளும் கைத்தொழில் துறைகளும்

ஆகியவற்றையும் உருவாக்கத் திட்ட மிட்டுள்ளார்.

கோவிலூர்த் திருமடத்திற்கு முன்னரே பதினொரு கிளைமடங்கள் உள்ளன. இப்போதைய ஆதீனகர்த்தர் புதிதாக மூன்று கிளைமடங்களை உருவாக்கி யுள்ளார். சென்னை மேற்கு மாம்பலத்தில் ஒரு கிளை மடத்தை 21-2-1999 அன்று சொந்தக் கட்டிடத்தில் தொடங்கினார்.

வடநாட்டுத் திருத்தலப் பயணம் செல்லும் நகரத்தார் வசதிக்காக, ரிஷி கேசத்தில் சுவாமி தயானந்த சரசுவதி. அவர்களின் விடுதிக்குப் பக்கத்தில் கிளைமடம் ஒன்றைக் கட்டியுள்ளார். இம்மடத்தில் நவீன வசதிகளோடு கூடிய 42 அறைகளும், பெரிய வழிபாட்டுக் கூடமும், கணபதி ஆலயமும் அமைந்துள்ளன. இங்கு தங்குவோர்க்கு உணவு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இங்கு வேதாந்தப் பாடம் 3 ஆண்டுப் படிப்பாக நடத்தப் பெறுகிறது.

சுவாமிகள் 3ஆவது கிளை மடத்தை அமெரிக்காவில் நிறுவத் திட்டமிட்டு, நியூயார்க்கிலிருந்து 41 கல் தொலைவில் உள்ள வார்த்விக் எனும் இடத்தில் 40 ஏக்கர் நிலம் வாங்கிக் கட்டிடப் பணிகளைத் தொடங்கியுள்ளார்கள். இம்மடத்தில்

Koviloor Digital Library

சிதம்பரம் நடராசர் ஆலயத்தின் மாதிரி ஆலயம் (Replica) ஒன்றை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளார்கள்.

சங்க இலக்கியம் உள்ளிட்ட பழந்தமிழ் நூல்களை உரையுடன் கூடிய செம் பதிப்புக்களாக வெளியிட்டு வருகிறார். குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அனைத்து ஊர் நகரத்தார் கூட்டங்களைக் கூட்டவும் ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

தவத்திரு. நாச்சியப்ப ஞானதேசிகரின் அருளாட்சிக் காலத்தில் கோவிலூர்த் திருமடம் புதிய பொலிவு பெற்றுத் தம் பழைய மரபுப்படி நகரத்தார் சமூகத் தலைமையிடமாகவும் திகழத் தொடங்கி யுள்ளது.

சென்னையில் ஆறுபடை வீடு (ப. 208)

29-1-1993இல் பூமி பூசை செய்யப் பெற்றது. ஆறுபடை வீடுகட்கு ஆறு கோவில்களும், நடுநாயகமாக நியூயார்க் மகாவல்லப கணபதி திருக்கோவிலும் உருவாக்குவது திட்டம். அவை நிறைவுற்றதும் வளாகத்தில் கட்டிடங்களின் அமைப்பு 'ஷட்கோணம்' என வடமொழியில் குறிப் பிடப்படும் ஆறு முனை நட்சத்திரத்தைப் போல அமையும்.

1995இல் வேலைகள் தொடங்கப் பெற்றன. 1996 இல் முதலில் சுவாமி மலைத் திருக்கோவில் நிறைவுற்றது. 1998இல் பழநியாண்டவர், திருத்தணி சுப்பிரமணியர் கோவில்களும், மகாவல்லப கணபதி திருக்கோவிலும் நிறைவுற்றன. மகாவல்லப கணபதி ஆலயத்திற்கு அமைக்கப் பெற்றுள்ள மகாமண்டபம் 16 தூண்களை உடையது. அத்தூண்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கணபதி சிற்பம் அமைந்திருப்பது அம்மண்டபத்தின் தனிச்சிறப்பாகும்.

திருப்பரங்குன்றம், பழமுதிர் சோலை, திருச்செந்தூர் ஆலயங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. பொதுவாக அவ்வத் தலங்களில் மூலவர் கருவறை எவ்வாறு அமைந்துள்ளதோ, அவ்வாறே, அவ்வத் திசை நோக்கியே அந்தந்த ஆலயங்கள் அமைக்கப்பெற்றுள; அமைக்கப்பெற்றும் வருகின்றன. பழமுதிர் சோலை ஆலயத்தை ஒரு வேல் வடிவில் உருவாக்கி வருகின்றனர். இந்த ஆலயத்தில் சிவன், அம்பாள், திருமால் ஆகியோர் முருகனுடன் இருக்கும் வண்ணம் கருவறை அமைய இருக்கிறது.

இவ்வாலயங்கள் நிறைவுற்ற பின், இராச கோபுரம், கொடி மரம், நுழைவாயிலுக் கருகே வைரவர் சன்னதி ஆகியவை அமைய உள. அனைத்தும் நிறைவுற்ற பின், ஒரே நாளில், ஒரே வளாகத்தில் ஆறுபடை வீடுகளையும் வணங்கி மகிழும் வண்ணம் கற்கோவில் எழுப்பியமை, நகரத்தார் ஆலயத் திருப்பணி வரலாற்றில் குறிப்பிடத் தக்க பணியாக நின்று நிலவும்.

நகரத்தார் அறப்பணிகள் (ப. 262)

கல்வி அறப்பணிகள்

கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரை அரசு நிறுவனங்கள், அரசு உதவி பெறும் தனியார் நிறுவனங்கள் என்ற இரு பிரிவு களே முன்னர் இயங்கி வந்தன. இந்த இரு பிரிவுகளிலும் நகரத்தார் பங்களிப்பு முன்கட்டுரையில் தொகுத்துத் தரப் பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் சுயநிதிக்கல்வி நிறுவனங்கள் என மூன்றாவது ஒரு பிரிவு உருவாகியுள்ளது. இப்பிரிவிலும் நகரத்தார் பங்களிப்பு உள்ளது. நகரத்தார் நிர்வாகத்தில் உள்ள சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. நிறுவனங்கள் அமைந்துள்ள ஊர்ப்பெயர்களின் அகர வரிசையில் பட்டியல் அமைந்துள்ளது.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் :

1. அழகப்பா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி.
2. கம்பன் கற்பகம் மெட்ரிகுலேசன் மேல் நிலைப்பள்ளி, காரைக்குடி.
3. கலைவாணி மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி.
4. மருதமலையான் மெட்ரிகுலேசன் மேல் நிலைப்பள்ளி, காரைக்குடி.
5. வைரவர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி.
6. முத்தையா அழகப்பா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, கோட்டையூர்.

Koviloor Digital Library

7. பிருந்தாவன் கல்விக்கழக மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, கோயமுத்தூர்.
8. செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, சென்னை.
9. கமலா சிவசுப்பிரமணியம் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர்.
10. வைரம் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, தேவகோட்டை
11. ஸ்ரீசேவுகன் அண்ணாமலை மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, தேவகோட்டை.
12. வைரம் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை.
13. டால்பின் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, மதுரை.
14. சிதம்பரம் செட்டியார் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, வலையபட்டி.

தொழிற்கல்வி நிறுவனங்கள் :

1 சுப்பிரமணியன் பாலிடெக்னிக், இராயவரம்.
2. வைரம் தொழிற்பயிற்சி நிலையம் (ITI), தேவகோட்டை.
3. சத்தியமூர்த்தி &மோகன் தொழிற் பயிற்சி நிலையம் (ITI), நாட்டரசன் கோட்டை.

சார்மருத்துவக் கல்லூரி :

1. அல்ட்ரா நிறுவனங்கள் - மதுரை

கலைஅறிவியல் கல்லூரிகள் :

1. செட்டிநாடு வித்தியாசிரமம், சென்னை.
2. செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி, திருச்சி (த.க).
3. ஜே.ஜே. கலை அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை.

பொறியியல் கல்லூரிகள் :

1. சண்முகநாதன் பொறியியற் கல்லூரி, அரசம்பட்டி, திருமயம்.
2. கற்பக விநாயகர் பொறியியற் கல்லூரி, சென்னை.
3. வெங்கடேஸ்வரா பொறியியற் கல்லூரி, சென்னை.

நகரத்தார் இதழ்கள் (ப. 266)

1. ஆச்சி வந்தாச்சு - மாத இதழ் - மதுரை - நாச்சியார்புரம். நா. பழநியப்பன் (ஆ&வெ) - 2000 செப்டம்பர் முதல் வெளிவருகிறது (த.க).
2. தெய்வம் பேசுகிறது - மாத இதழ் - சென்னை - எஸ்.பி. மெய்யப்பன் (பொறுப்பாசிரியர் & வெ) - 2001 பிப்ரவரி முதல் வெளிவருகிறது.
3. வள்ளுவம் - இருதிங்கள் இதழ் - திருமுதுகுன்றம் - பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன் (சிறப்பாசிரியர்) - 1999 சனவரி முதல் வெளிவருகிறது.

நகரத்தார் இயல் ஆய்வு (ப. 270)


நகரத்தார் வரலாறும் பண்பாடும்

நகரத்தார் வரலாறும் பண்பாடும் பற்றி அண்மையில் வெளிவந்துள்ள ஆங்கில நூல் "The Chettiar Heritage'. இதன் ஆசிரியர்கள் சு. முத்தையா, (த.க.பக். 377) மீனாட்சி மெய்யப்பன், விசாலாட்சி ராமசாமி ஆகியோர். இதில் இடம்பெற்றுள்ள புகைப் படங்களை எடுத்திருப்பவர் வை. முத்து ராமன் (த.க.பக். 376).

நகரத்தார் மரபுகளையும் பண்பாட்டையும் மையப்படுத்தி அவை தொடர்பான செய்திகள் அனைத்தையும் பளிச்சிடும் புகைப்படங்கள் வாயிலாகச் சொல்லி இருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு. "செய்தி சுருக்கமானது. அவற்றைப் படங்களின் வாயிலாகச் சொல்லுவதற்கே நாங்கள் முதன்மை கொடுத்திருக்கிறோம். கலை வண்ணம் மிளிர்கின்ற 800 புகைப்படங் களே இந்நூலின் உயிர்நாடி" என ஆசிரியர்கள் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளனர்.

பட்டினத்தார் அற்புதத் திருவிழா, ஒன்பது நகரக்கோவில்கள், நகரச்சிவன் கோவில்கள், குலதெய்வக் கோவில்கள், கல்வி நிறுவனங்கள், நகரத்தார் வீடுகள்,

Koviloor Digital Library



அங்குள்ள மரச் சிற்பங்கள், ஓவியங்கள், நகரத்தார் பயன்படுத்தும் நகை, பாத்திரம், பட்டுச்சேலை, தடுக்கு போன்ற கைவினைப் பொருட்கள், பிறப்பு முதல் இறப்பு வரையான சடங்குகள், பொதுப் படைப்பு, பிள்ளையார் நோன்பு, மகார் நோன்பு போன்ற அனைத்துப் பண்பாட்டுச் செய்தி களையும் உயிர்த்தன்மையுள்ள புகைப் படங்களின் துணையோடு தொகுத்துச் சொல்லியிருக்கும் இந்நூல் நன்கு திட்ட மிடப்பட்ட முயற்சிக்கு ஒரு சிறந்த சான்றாகும்.

சீரோடும், சிறப்போடும் வாழும் சமூகத்தின் மரபுநிலை பிறழாத வாழ்க்கை முறைகளை வண்ணப் படங்கள் வாயிலாகத் தொகுத்துத் தரும் அரிய பெரிய முயற்சி; சமூகவியல் ஆய்வுக்கு அடிப்படை ஆவணம் : படங்கள் ஒவ்வொன்றும் பேசும் பொற் சித்திரம் : பேணிக் காக்க வேண்டிய பெருநூல்.

நகரத்தார் கட்டிடக் கலை - வீடுகள் (ப. 273)

சென்னையை அடுத்துள்ள முட்டுக் காட்டில் "தட்சிணச் சித்திரா" என்ற பெயரில் ஒரு பண்பாட்டு மையக் காட்சியகம் அமைந்துள்ளது. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களின் வீடுகள் மற்றும் கலைப் பொருள்களின் காட்சியகம் இது. அங்கே தமிழ்நாட்டுப் பகுதியில், நகரத்தார் வீடு ஒன்று, செட்டிநாட்டிலிருந்து பிரித்துக் கொண்டு வரப்பெற்று, அப்படியே வடிவமைக்கப் பெற்று, காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள மரபுநிலை மாறாத வீடுகள் என்றால், நகரத்தார் வீட்டிற்கு ஒரு தனியிடம் உண்டு என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

ராஜா அண்ணாமலை மன்றம் (ப. 389)

ராஜா அண்ணாமலை மன்றத்தில் இயங்கிவரும் தமிழிசைக் கல்லூரியைத் தமிழ்நாடு தொழிற்கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனமாக 1998-99 முதல் தமிழக அரசு அங்கீகரித்துள்ளது.

Koviloor Digital Library

மறைந்தவர்கள்

அண்ணாமலை செட்டியார், சேவு (ப.4) 12-3-1999

அருணாசலம், அ.மு.மு. (ப.16)

இராமநாதன் செட்டியார், பாலகவி. வே. (ப. 55) 15-2-1999

கதிரேசன், அ.மு. (ப. 103)

கிருஷ்ணன், சோனா (ப. 132) 26-10-2001

சபாபதி, சுப. (ப. 168)

சிதம்பரம், மு.அ. (ப. 180) 19-1-2000

சோமு,லெ (ப. 220) 7-3-2000

நாகப்பன், டாக்டர்.கா. (ப. 312) 15-5-1999

முத்தையா, முல்லை.பழ. (ப. 380)

வள்ளியப்ப செட்டியார், இராம. (ப. 395)

மாற்றம்

கதிரேசன், சு. (ப. 103)

மதுரைவங்கி 2001இல் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியுடன் இணைக்கப்பெற்ற பிறகு, இவர் அந்த வங்கியின் துணைத்தலைவர் (Vice- President) *என்ற பதவிப் பெயரோடு, அவ்வங்கியால் நடத்தப் பெறும் வங்கி அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் முதல்வராக, மும்பையில் பணியாற்றுகிறார்.*

சபாரெத்தினம், லெ. (ப. 168)

இவர் செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேசன் பொறுப்புக்களில் இருந்து விலகி ஐ.சி.எல். சுகர் லிமிட்டெட் நிறுவனத்தில் தலைமை நிருவாக அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்; இந்தியா சிமிண்ட்ஸ், இந்தியன் ஆயில் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் இயக்குநர்.

சுந்தரம், லெ. (ப. 193)

இவர் இப்போது மதுரையிலிருந்து வெளிவரும் ‘ஆச்சி வந்தாச்சு’ இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

நகரத்தாரும் வங்கியியலும் (ப. 260)

நகரத்தார் தொடங்கிய பல சிறு வங்கிகள் பெருவங்கிகளோடு இணைக்கப் பெற்றன. அந்த வரிசையில், நகரத்தாரால் தொடங்கப்பெற்று, நகரத்தார் நிருவாகத்திலேயே தொடர்ந்து இருந்து வந்த ஒரே ஒரு வங்கியான மதுரை வங்கியும் 9-3-2001இல் ஐ. சி. ஐ.சி.ஐ. வங்கியோடு இணைக்கப் பெற்றது. (இந்த வங்கி, பாரத ஸ்டேட் வங்கிக்கு அடுத்தபடி, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய வங்கியாகும்) இதனால், வங்கித் தொழில் முன்னோடிகளாகத் தென்னிந்திய அளவில் சிறப்புப் பெற்ற நகரத்தார் சமூகத்தினரின் நிருவாகத்தில் இப்போது வங்கி எதுவும் இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

நகரத்தார் குரல் (ப. 276)

இந்த இதழ் ‘தனவணிகன்’ எனப் பெயர் மாற்றம் செய்யப்பெற்று (2000 செப்டம்பர் முதல்) வெளிவருகிறது. தொடர்ந்து இராங்கியம் வ.நா.சிதம்பரம் செட்டியார் இதன் ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும் இருந்து வருகிறார். இதழ் உள்ளடக்கம், அமைப்பு ஆகியவற்றில் முன்னைவிடச் சிறப்பாக வெளிவருகிறது.

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் – வீடுகட்கு
அன்றைக்கு வந்தளங்கள் அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு

– பாடுவார் முத்தப்பர்

KOVILOOR ANDAVAR
A. No. 26653

Koviloor Digital Library